ஸ்ரீமத் வால்மீகி
ராமாயணம்
பால காண்டம்

தேதியூர் [illegible]ப்ரஹ்மண்ய சாஸ்த்ரியள்.

உ

ஸ்ரீராமஜயம்

ஸ்ரீமத் வால்மீகி

ராமாயணம்

பால காண்டம்

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள்
ஸ்ரீ மடம் வித்வானும், தர்ம ப்ரசாரகரும்,
ஸ்ரீ ஜகத்குரு ச்ருங்கேரி மடம் ஸநாதன தர்ம ப்ரசாரகரும்,
சாஸ்த்ரரத்னம், வேத மூர்த்தி, கவிகுஞ்சரம், வித்யாவாக்பதி,
வேதாந்த தத்வ மஹோபதேசகர் முதலான அநேக பிருதுகளால்
அலங்கரிக்கப்பட்டவருமான

ப்ரும்மஸ்ரீ

தேதியூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்த்ரியள்

அவர்களால் எழுதப்பட்டது.

1941

All Rights Reserved.

FIRST EDITION

1941

விலை ரூ. 6.

Printed & Published by

K Kylasam Iyer

at GIRI PRESS

TRIPLICANE, MADRAS

குறிப்பு:

என் உபந்யாஸங்களை பல தடவைகளில் கேட்டு பரமானந்தத்தை யடைந்த நண்பர்கள் பலர் இவ்வித வெளியீட்டை ப்ரசுரப்படுத்த இச்சித்த போதிலும் ஸ்வயமாக இக்கார்யத்தைச் செய்ய நான் சக்தியற்றவன் என்பதை உணர்ந்து ம-ா-ா-ஸ்ரீ கிரி ப்ரஸ் கைலாஸமய்யர் அவர்கள் இந்த ப்ரசுரத்தை மேற்கொண்டது ஓர் அத்ருஷ்டம் என்றே சொல்லவேண்டும். எழுதப்படும் விஷயங்கள் ஸ்ரீமத் ராமாயணத்திலுள்ள அரும்பெரும் தத்வங்களின் வ்யங்க்யமான விசாரணையும், சர்ச்சையுமே என்பது நண்பர்கள் அறிவார்கள். இம்மாதிரி புத்தகங்கள் அபூர்வமென்றே எனக்கு வந்துள்ள பல கடிதங்கள் மூலம் அறிகிறேன். தற்பொழுது பாலகாண்டத்தை ஸகலரும் வாங்கி ஆதரவளிப்பதிலேயே மேற்கொண்டு ஸ்ரீமத் ராமாயணத்தைப் பூர்ணமாக வெளியிட ஊக்கம் த்ருடமாய் எற்படும்.

திருவல்லிக்கேணி, 6—8—41 } ஆசிரியர்.

விக்ஞாபனம் :

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்திற்கு அத்யத்புதமான விஷய தானம் செய்துவரும் ப்ருஹ்மஸ்ரீ சாஸ்த்ர ரத்னம் தேதியூர் ஸுப்ரமண்ய சாஸ்த்ரியள் அவர்களின் பாண்டித்யத்தைப் பற்றியும், போதனசக்தியைப் பற்றியும் நான் எழுதவேண்டிய அவசியமில்லை; அவைகள் ஸ்வப்ரஸித்தமானவைகள். அவர்கள் லோகோபகாரமான இக்கார்யத்தில் ப்ரவர்த்தித்திருப்பதில் எனக்கும் ஒரு கைங்கர்யத்தைச் செய்ய ஸமயம் நேர்ந்தது பெரும் பாக்யமென்றே கருதுகிறேன். ஸ்ரீமத்ராமாயணம் மட்டுமல்ல இன்னம் பல அறிய க்ரந்தங்களை இதேமுறையில் அவர்களுடைய பத்ராதிபத்யத்தின் கீழ் வெளியிட பூர்ண ஆவலுள்ளவனாக இருக்கிறேன்.

ஆஸ்திகர்கள் இந்த ஸத்கார்யத்திற்கு பூர்ண ஆதரவளிப்பார்கள் என்று த்ருடமாக நம்புகிறேன்.

இப்பாலகாண்டத்தில் பிழைதிருத்தம் சேர்க்க நேர்ந்தது மிகவும் வ்யஸனிக்கத் தக்கது; நேயர்கள் இதைப் பாராட்டமாட்டார்கள் என்றும் நம்புகிறேன். இனிவரும் புத்தகங்களில் கூடுமானவரை பிழை ஏற்படாதிருக்க ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது.

திருவல்லிக்கேணி, 6—8—41 } பதிப்பாளர்.

உ

ஸ்ரீராமஜயம்.

முகவுரை.

ஆஸ்திக சிகாமணிகளே !

ஈச்வரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட, இப் ப்ரபஞ்சத்தில் க்ஷேமாபிவ்ருத்திக்கு மூலகாரணமோ, ஸநாதன தர்மம்தான் என்பது, லோகத்திலும் ப்ரஸித்தமானது, சாஸ்த்ரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

सहयज्ञाः प्रजास्सृष्ट्वा पुरोवाच प्रजापतिः ।
अनेन प्रसविष्यध्वं एषवोऽस्त्विष्टकामधुक् ॥

𑌸𑌹𑌯𑌜𑍍𑌞𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌸𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑍁𑌰𑍋𑌵𑌾𑌚 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃 ।
𑌅𑌨𑍇𑌨 𑌪𑍍𑌰𑌸𑌵𑌿𑌷𑍍𑌯𑌧𑍍𑌵𑌂 𑌏𑌷𑌵𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍 ॥

ஸஹயக்ஞா: ப்ராஜா: ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதி: ।
அநேந ப்ரஸவிஷ்யத்வம் ஏஷவோஸ்த்விஷ்டகாமதுக் ॥

என்று பகவத் கீதையில் சொல்லியிருப்பதும் வித்வத்ஜனங்களால் அறியக்கூடும். ஸுகத்தை விரும்புகிறவன், தர்மத்தைத்தான் கைகொள்ள வேண்டும். அந்த தர்மமோ, தற்காலத்தில் கால தோஷத்தால் ஆங்காங்கு குறைந்து கொண்டு வருவதும் அதனால் ப்ராணிகளுக்கு ஏற்படும் க்ஷேமக் குறைவும் ப்ரத்யக்ஷமானது. இக்காலத்தில், நமது தர்மத்தை நாம் ஸரியாக அனுஷ்டித்து வந்தால், அனுபவிக்கப்படும் கஷ்டங்கள் யாதொன்றும் ஸமீபத்தில் அண்டாது. அந்த தர்மத்தை போதிக்கும் பண்டிதர்களிடமும்,

சாஸ்த்ரங்களிலும் ப்ராணிகளுக்கு ச்ரத்தையும் குறைந்து விட்டது. ஸமூஹதர்மத்தையும், வ்யஷ்டியான தர்மத்தையும் அடியோடு அழித்துவிட முயற்சிக்கும் துர்ஜனங்களும் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டு வருகிறார்கள். இப் புண்ய பூமியான, பாரதவர்ஷம் இருந்துவரும் துர் அவஸ் தையை நினைத்தால் எந்த ஆஸ்திகனும் வருத்தமடையாமல் இருக்கமுடியாது. ஸகல தர்மத்திற்கும் மூலபூதமான விவா ஹம் முதலான தர்மங்கள் சாஸ்த்ரீகமில்லாமல், ஐச்சிகமாக ஏற்பட்டுவிட்டது. வர்ண பேதங்களோ, ஆச்ரம பேதங் களோ, கனவுபோல் ஆகிவிட்டது.

இந்த ஸந்தர்ப்பத்தில் நமது தர்மத்தை உத்தாரணம் செய்துவைக்க முன்வரும் பெரியார்களுக்கும் ஆதரவு இல் லாமல் ஏற்பட்டுவிட்டது. தர்ம ப்ரசாரம் என்றாலே ஜனங் கள் பரிஹாஸம் செய்கிறார்கள். நமது முன்னோர்களோ, மற்ற எந்த ரிஷிகளோ, நமது ஸமூஹத்திற்கு தர்ம தேவதை யைத்தான் **பெரிய நிதியாக** கருதியிருக்கிறார்கள். தர்மத்திற்கு விரோதமாக கிடைக்கும் ப்ரம்மபட்டத்தையும் நமது முன் னோர்கள் துச்சமாகத்தான் நினைத்திருக்கிறார்கள். எந்த லாபத் தை நாம் எதிர்பார்த்தாலும் நமது தர்மத்துக்கு விரோதமில் லாததான உபாயத்தை அவலம்பித்தால்தான் அந்த லாபத்தை அடைய முடியுமன்னியில், தர்மத்தை அனுதரவு செய்து, மற்ற எந்த உபாயத்தைக் கைகொண்டாலும் இவர்கள் எதிர்பார்த்த லாபத்தை அடையமுடியாது என்பது திண் ணம். இந்த தர்மத்தின் பெருமையை ப்ரகாசப் படுத்தும் இதிஹாஸ புராணங்களுக்குள் “**ஸ்ரீமத் ராமாயணம்**” என்பது ஓர் பெரிய இதிஹாஸ ரத்னமாகும். தர்மத்தினுடைய மேன் மையைத்தான் கதை என்ற வ்யாஜத்தால் ஒவ்வொரு ஸந்தர்ப்பங்களிலும், இந்த இதிஹாஸமானது போதிக்கிறது. இந்த இதிஹாஸத்திற்குக் கதாநாயகனான ஸ்ரீராமனே, தர் மத்திற்கு விரோதமாக ராஜ்யஸ்ரீ தன் கைக்கு எட்டி னாலும், அதை துச்சமாக நினைத்துவிட்டு, தர்மபரனாகவே இருந்துவந்தார் என்று தெரிகிறது.

नाहं अर्थपरोदेवि लोकमावस्तुं उत्सहे ।
विद्धिमां ऋषिभिस्तुल्यं केवलं धर्ममाश्रितं ॥

𑌨𑌾𑌹𑌂 𑌅𑌰𑍍𑌥𑌪𑌰𑍋𑌦𑍇𑌵𑌿 𑌲𑍋𑌕𑌮𑌾𑌵𑌸𑍍𑌤𑍁𑌮𑍁𑌤𑍍𑌸𑌹𑍇 ।
𑌵𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌂 𑌋𑌷𑌿𑌭𑌿𑌸𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌂 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌧𑌰𑍍𑌮𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌂 ॥

நாஹம் அர்த்தபரோதேவி லோகமாவஸ்து முத்ஸஹே ।
வித்திமாம் ரிஷிபிஸ்துல்யம் கேவலம் தர்மமாச்ரிதம் ॥

என்று ஸ்ரீராமன், கைகேயி தேவியிடம் சொல்கிறார். "ஹே தேவி நான் ராஜ்யத்தில் இச்சை உள்ளவனாகவும், அதை ஒரு புருஷார்த்தமாகவும் நினைத்து இந்த லோகத்தில் இருப்பதற்கு உத்ஸாஹமுள்ளவனல்ல. தர்மத்தையே சரணமடைந்தவனாக நீ நினைக்க வேண்டும். ரிஷிகளைப் போல் இருப்பதில்தான் எனக்கு உத்ஸாஹம்" என்று மேற்சொன்ன ச்லோகத்தின் தாத்பர்யமாகும். இவ்விதமாக தர்மத்தின் பெருமை இருக்க, இந்த தர்மத்தை கைவிட்டு, கேவலம் அர்த்தபரர்களாக தேசத்தில் ஈடுபட்டவர்கள்போல் நடித்துவரும் சில ப்ராக்ருத ஜனங்களால் ஸநாதன தர்மத்திற்கு வந்திருக்கும் கேடுகள் நிவ்ருத்தி செய்துகொள்ளக் கூடாத நிலைமையில் இருந்து வருகிறது. அதற்குக் காரணமோ, நாம் ஸத்ஸங்க மூலமாக தர்ம தத்வத்தை அறிந்து நமது மதத்தின் பெருமையைக் காப்பாற்றாமல் கை விட்டதேதான் ஆகும்.

ஸத்புருஷாளுடைய ஸம்பந்தமில்லாத காரணத்தால் தான் துராசாரம் மேலிடுகிறதென்றும், தர்ம வ்யதிக்ரமம் ஏற்படுகிறதென்றும் ஸ்ரீமத் ராமாயணத்திலேயே "ஸுந்தர காண்டத்தில்" ஸீதாதேவியானவள் ராவணனைப் பார்த்து

इहसन्तो नवा सन्ति सतोवानानु वर्तसे ।
तथाहि विपरीताते बुद्धिः आचारवर्जिता ॥

𑌇𑌹𑌸𑌨𑍍𑌤𑍋 𑌨𑌵𑌾 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌸𑌤𑍋𑌵𑌾𑌨𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌸𑍇 ।
𑌤𑌥𑌾𑌹𑌿 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾𑌤𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌆𑌚𑌾𑌰𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾 ॥

இஹஸந்தோ நவாஸந்தி ஸதோவாநாநு வர்த்தஸே ।
ததாஹி விபரீதாதே புத்தி: ஆசாரவர்ஜிதா ॥

என்று சொல்லுகிருள். ஸஜ்ஜனங்களை அழைத்து அவர்கள் மூலம் தர்மரஹஸ்யத்தை தெரிந்துகொள்ளும் ஆசை உள்ள வர்களும் விரளமாக ஆகிவிட்டது. ஸஜ்ஜனங்களாக ப்ர வ்ருத்தித்தாலும் அவர்களை பொருட்படுத்துகிற ஆஸ்திகர் களும் இல்லை. இவ்விதமாக இருந்துவரும் நிலையில், ஜனங்க ளுக்கும், ஸத்புருஷாளுக்கும் ஸாக்ஷாத் ஸம்பந்தம் ஏற்பட முடியாதபோனாலும் அந்த ஸத்புருஷர்கள் மூலமாக லோகத் தின் நன்மையை உத்தேசித்து ப்ரகாசப் படுத்தப்பட்ட தர்ம ரஹஸ்யங்களை புஸ்தக ரூபமாக அச்சிட்டு அதைப் படித்தா வது ஸஜ்ஜனங்கள் தர்ம ரஹஸ்யங்களை தெரிந்துகொள்வ தின் மூலம் மதப் பயிற்சியை அடைவார்கள் என்ற எண் ணத்துடன் திருவல்லிக்கேணி "கிரி ப்ரஸ்" ப்ரோப்ரைடர் **ஸ்ரீ கைலாஸமய்யர்** ப்ரவ்ருத்தித்திருக்கிருர். அந்த தர்ம ரஹஸ்யத்தை வெளிப்படுத்தும் வ்யாஸங்களும், ஆகாச புரா ணம்போல் ஆகக்கூடாது என்று நினைத்து, அந்த தர்ம தத் வங்களையே முக்யமாக ப்ரகாசப் படுத்துவதற்காக ஏற்பட்ட "ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்" என்ற க்ரந்தத்தை முக்ய ப்ரமாணமாக அவலம்பித்து அதிலுள்ள கதாதோரணையை அனுஸரித்து தர்மங்களை வெளிப்படுத்த வேண்டுமென்றும் மேற்படியார் முயற்சித்து பரம உத்ஸாஹத்துடன் ஸ்ரீமத் ராமாயணத்தை காண்டம் காண்டமாக புஸ்தக ரூபமாக ப்ரசுரம் செய்வார். அதற்கு சாஸ்த்ரீயமான மார்க்கத்திற்கு விரோதமில்லாமல் வால்மீகி ராமாயணத்திற்கு, வாச்யமர் யாதையையும், வ்யங்க்ய மர்யாதையையும் அவலம்பித்து, இனிய தமிழ் நடையில், கதையை எழுதிக்கொடுத்து உதவி செய்ய ப்ரம்மஸ்ரீ **சாஸ்த்ர ரத்னம் தேதியூர் ஸுப்ரமண்ய சாஸ்த்ரியளவர்கள்,** உத்ஸாஹமுள்ளவராக இருந்து வரு கிருர்கள். மேற்படி சாஸ்த்ரியளவர்களின் வைதுஷ்யத் தைப் பற்றியும், வாக் விலாஸத்தைப் பற்றியும், ப்ரக்ருதத் தில் எழுதவேண்டியது யாதொன்றுமே யில்லை. தமிழ் நாட்-

டில் அவர்களுடைய வாக் விலாஸத்தை அனுபவிக்காத ஜனங்கள் மிகவும் குறைந்தவர்களே. ஆகையால் ரொம்ப வும் ப்ரஸித்தி பெற்ற வித்வானுடைய உதவியால் "ஸ்ரீமத் ராமாயணம்" ப்ரகாசமாகிறபடியால், இந்துக் கள் ஒவ்வொருவரும் மேற்படி புஸ்தகத்தை வாங்கி அதைப்படித்து தர்ம விசேஷங்களைத் தெரிந்துகொண்டு மதத்தின் பெருமையை தெரிந்துகொள்ள வேண்டியது அவச்யமாகும். இந்த புஸ்தகம் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியின் ஓர் ரூபமென்றே கருதவும். ஒவ்வொரு க்ரஹத்திலும் இது ஒரு நிதிபோல் இருந்துவந்தால் அந்த க்ரஹத்தில் லக்ஷ்மீ கடாக்ஷமும் அதன்மூலம் ஸர்வவிதமான ஸௌபாக்யமும் ஏற்படுமென்பதில் ஆக்ஷேபணையே யில்லை.

रामः (𑌰𑌾𑌮𑌃) (ராம:)

என்ற பதத்திற்கு,

रमायाः अयं = रामः

𑌰𑌮𑌾𑌯𑌾𑌃 𑌅𑌯𑌂 = 𑌰𑌾𑌮𑌃

ரமாயா: அயம் = ராம:

என்ற ஸமாஸத்தை அனுஸரித்து, ரமை என்ற லக்ஷ்மிக்கு பந்துவான விஷ்ணு என்று அர்த்தம் தெரிகிறபடியால், லக்ஷ்மி இருக்கக்கூடிய இடத்தில் மஹாவிஷ்ணுவின் கடாக்ஷம் ஏற்படுகிறது.

रमैव रामा रामायाः अयनं = रामायणम्

𑌰𑌮𑍈𑌵 𑌰𑌾𑌮𑌾 𑌰𑌾𑌮𑌾𑌯𑌾𑌃 𑌅𑌯𑌨𑌂 = 𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌮𑍍

ரமைவ ராமா ராமாயா: அயநம் = ராமாயணம்

என்ற ஸமாஸத்தை அனுஸரித்து புஸ்தகத்தின் பெயரை கவனித்தாலோ, லக்ஷ்மிக்கு இருப்பிடம் ராமாயணம் என்று தெரிகிறது.. இப்புஸ்தகம் இருக்கக்கூடிய இடத்தில் லக்ஷ்மி

யினுடைய வாஸம், லக்ஷ்மி இருக்குமிடத்தில் விஷ்ணுவின் வாஸம், அவ்விருவருடைய வாஸத்தால் ஸர்வ ஸௌபாக்யத்தின் அபிவ்ருத்தி என்றதைக் கருதி ஒவ்வொருவரும் இப் புஸ்தகத்தை தவறுமல் வாங்கி, தன் தன் ஜன்ம ஸாபல்யத்தை அடைவதோடும்கூட, லோகத்தின் ஸ்திதிக்கு மூலகாரணமான ஸநாதன தர்ம தத்வத்தை ப்ரகாசிக்கச் செய்யும் இந்த தர்ம கைங்கர்யமானது தீர்க்கமாக நடக்கும் விஷயத்தில் ஆஸ்திக மஹா ஜனங்கள் ஆசீர்வாதபுரஸ்ஸரமாக தன்னுல் செய்யக்கூடிய லௌகிக, வைதிகமான உதவியைச் செய்து உபகரிக்க வேண்டுமாக ப்ரார்த்திக்கப்படுகிறது.

எம். ஸுப்ரமண்ய அய்யர்,
ரிடயர்டு டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ்.
6—3—41.

ஸ்ரீ ம த் ரா மா ய ண ம்

(பாலகாண்டம்)

விஷயக் குறிப்பு

நெ.	விஷயம்	பக்கங்கள்
1	ராமாயணத்தின் ஆதிகாரணம் ...	1 - 15
2	நாரதமஹர்ஷியினிடம் வால்மீகி ப்ரச்னம் (தபஸ்வாத்யாய ச்லோக விசாரம்) ...	16 - 34
3	ஸங்க்ஷேப ராமாயணம் ...	34 - 58
4	வக்த்ரு வைலக்ஷண்யம் (க்ரந்த கர்த்தாவின் மஹிமை) மாநிஷாத ச்லோக விசாரம் ...	59 - 102
5	வால்மீகி ராமாயண ஆரம்பம் செய்தது (உத்தம காவ்ய ரசனை) ...	103 - 111
6	விஷய வைலக்ஷண்யம் (சரித்ர மஹிமை) ...	112 - 116
7	ப்ரபந்த வைலக்ஷண்யம் - அத்துடன் குசலவாள்கானம்	117 - 140
8	ராமாவதார தேசவர்ணனம் ...	141 - 148
9	ஷை பஹிரங்கமான உபாயம் (அச்வமேதயாக ஆரம்பம்) ...	149 - 154
10	புத்ரகாமேஷ்டியாகம், ரிச்ய ச்ருங்க மஹிமை ...	155 - 173
11	விஷ்ணுவை ப்ரார்த்திப்பது, அக்னியிலிருந்து தேவ புருஷன் பாயஸம் கொடுப்பது - பாயஸதானம் - தேவதைகளின் அவதாரம். ...	174 - 186
12	ஸ்ரீராமாவதாரம் :— அதன் மஹிமை ...	187 - 218
13	ஷை விசாரம் நாம மஹிமை - தசரதர் ஸந்தோஷம் ...	219 - 270

நெ.	விஷயம்.	பக்கங்கள்.
14	விச்வாமித்ராகமனம் - ஸம்பாஷணை	... 271 - 287
15	ஸ்ரீராம மஹிமை -	... 288 - 317
16	தசரத வசனம் - விச்வாமித்ர வாதம் - ஸ்ரீராம லக்ஷ்மணர்களை அனுப்புவது	... 318 - 338
17	விச்வாமித்ரரின் உபதேசம் - காமாச்ரமம் செல்லல்	.. 339 - 355
18	தாடகாவதம் :— ஷை விசாரம் - அஸ்த்ர ப்ரதானம் - ஸித்தாச்ரமம் - அதன் மஹிமை	... 356 - 404
19	விச்வாமித்ரயாகம் - ஆசீர்வாதம் - மிதிலைக்கு ப்ரயாணம் - குசவம்ச விவரணம்	... 405 - 426
20	கங்காவதரணம் - குமார ஸம்பவம் - பகீரதன் மஹிமை	427 - 476
21	அம்ருதமதனம் - ஸப்தமருத்துக்களின் உத்பத்தி	... 477 - 492
22	அஹல்யா சாபவிமோசனம், அதன் விசாரம்	... 493 - 525
23	மிதிலா நகர கமனம் - ஜனக ஸ்தோத்ரம் - சதாநந்த விச்வாமித்ர அன்யோன்ய ஸல்லாபம் - வஸிஷ்ட விச்வாமித்ர ப்ரபாவம் - த்ரிசங்கு மஹிமை - ஸ்வர்கா ரோஹணம் - விச்வாமித்ரர் ப்ரும்மரிஷி பட்டம்	... 526 - 608
24	ஜனகராஜ ப்ரார்த்தனை - ராம தனுர்தர்சனம் - தனுர் பங்கம் - ஸீதாகல்யாண மஹோத்ஸவம் - விவாஹ, பாணிக்ரஹண தர்மவிசாரம் ஸீதா பதார்த்த விசாரம்	... 609 - 676
25	ஸீதா விவாஹ மஹோத்ஸவ விசாரம்	... 677 - 707
26	பரசுராம கர்வபங்கம்-பரசுராம தேஜஸ்ஸம்யோகம்	... 707 - 726
27	ராமனும் ஸீதையும் அயோத்தியில் ஸுகானுபவானந்தம் அடைந்த விசாரம் - பாலகாண்ட ஸமாப்தி	... 726 - 746

वामे भूमिसुता पुरश्च हनुमान् पश्चात्सुमित्रसुतः
शत्रुघ्नो भरतश्च पार्श्वदलयोः वाय्वादि कोणेषु च ।
सुग्रीवश्च विभीषणश्च युवराट् तारासुतो जाम्बवान्
मध्ये नीलसरोजकोमलरुचिं रामं भजे श्यामलम् ॥

உ

ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீமத் ராமாயணம்

பாலகாண்டம்

यमिह कारुणिकं शरणं गतोप्यरिसहोदर आप महत्पदम् ।
तमहमाशु हरिं परमाश्रये जनकजाङ्क अनन्त सुकाकृतिं ॥

[illegible]
[illegible]

யமிஹ காருணிகம் சரணம் கதோப்யரி ஸஹோதர ஆபமஹத்பதம் ।
தமஹமாசு ஹரிம் பரமாச்ரயே ஜனகஜாங்கம் அநந்த ஸுகாக்ருதிம் ॥

वैकुण्ठेतु परेलोके श्रियासार्धं जगत्पतिः ।
आस्ते विष्णुः अचिन्त्यात्मा भक्तैः भागवतैः सह ॥

[illegible]
[illegible]

வைகுண்டேது பரேலோகே ச்ரியாஸார்த்தம் ஜகத்பதி: ।
ஆஸ்தே விஷ்ணு: அசிந்த்யாத்மா பக்தை: பாகவதை: ஸஹ ॥

ஸகலமான கல்யாண குணங்களோடு கூடினவனுயும், ஸர்வேச்வரனுயும் உள்ள ஸாக்ஷாத் மஹா விஷ்ணுவானவர் லக்ஷ்மிதேவியோடு கூடவும் பாகவதோத்தமாளோடு கூடவும், அபராஜிதமான வைகுண்டத்தில் மணிமயமான மண்டபத் தில் பரமாநந்தத்துடன் விளங்கி வருகிறுர் என்பது ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களால் ப்ரஸித்தமாக தெரிகிறது. அவ்வித மஹிமையுள்ள பரமாத்மாவுக்கு ஸம்ஸாரமாகிய

1

கடலில் மூழ்கித் தபித்துக்கொண்டிருக்கும் ஜீவகோடிகளிடம் நிகரற்ற ஒரு கருணை ஏற்பட்டது. அதாவது ஜன்மமரண ரூபமான ஸம்ஸாரமாகிய பெரிய கடலில் தனது குழந்தைகளான ஜீவர்கள் மூழ்கிக்கொண்டு தபித்து வருகிறார்களே இந்த குழந்தைகளான ஜீவர்களை ம்ருத்யுவாகிய வாளைமீன் அடிக்கடி சாப்பிட்டுக்கொண்டும் வருகிறதே. இவர்கள் கரையேறி சுகத்தையடைய வழியை ஒன்று நாம் கற்பிக்க வேண்டாமா. நாம் உதாஸீனமாக யிருந்தால் நமக்கு இந்த ஸமயத்தில் அழகு அல்ல என்று நினைத்து ஸாக்ஷாத் பகவானான விஷ்ணு உத்தமமான மானிட சரீரம் என்ற தோணிகளை ஸம்ஸாரமாகிய கடலில் வீசி எறிந்து இந்த ஜீவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தோணியில் ஏறிக் கொண்டு கரையேறி ஸுகமாக வாழட்டும் என்று அநுகூலம் செய்தார்.

அப்படிச் செய்தும், இந்த ஜீவர்கள் விவேகமில்லாத காரணத்தால் அந்த உத்தமமான மானிட சரீரமென்ற தோணியை அடைந்தும் கரையேறி ஸுகத்தை அனுபவிக்கத் தெரியாமல் அந்த தோணியுடன் ஸ்திரீ முதலான விஷயங்களாகிய சுழலில் போய் அகப்பட்டுக்கொண்டு கஷ்டப்படுகிறார்கள். பிறகும் கருணை மூர்த்தியான பகவான், 'அஹோ! மானிட சரீரமாகிய தோணியை கொடுத்தும் இந்த ஜீவர்கள் அதினால் கரையேறாமல் கஷ்டப்படுகிறார்களே' என்று பரிதபித்துக் கொண்டு ஜீவகோடிகளைப்பார்த்து தான் முறையிட்டுக் சொல்வதற்கு ஆரம்பித்தார், "ஹே ஜீவர்களே! இந்த மானிட சரீரம் எவ்வளவோ ஜன்மாக்களில் செய்த ஸுக்ருதத்தால் அடையவேண்டியதாக ஆகும். அதை வீணாக விஷய ஸுகத்திற்காக உபயோகிக்கக்கூடாது. விஷய ஸுகத்தை அநுபவிப்பதற்கு மானிட சரீரம்தான் வேண்டுமென்ற நியமமுமில்லை. ம்ருக பக்ஷிகளுடைய சரீரத்தை எடுத்துக்கொண்டாலும் விஷய ஸுகத்தை ரொம்பவும் நன்றாய் அநுபவிக்கக் கூடும்".

"ஆகையால் இந்த மானிட சரீரத்தை விஷய ஸுகத்தை அநுபவிப்பதற்காக உபயோகப்படுத்தாமல் மோக்ஷத்தை யடைவதற்கே செலவழிக்க வேண்டும். நீங்கள் இந்த அகாத மான ஸம்ஸார ஸமுத்திரத்தில் மூழ்கிக்கொண்டு தபிக்கிறீர் களே! ம்ருத்யு என்ற திமிங்கிலமும் உங்களை அடிக்கடி சாப் பிட்டுக்கொண்டு வருகிறதே என்று நினைத்து கருணை யுடன் நீங்கள் கரையேறுவதற்கு இந்த மானிட சரீரமாகிய தோணியை நான் கொடுத்தேன். அதை நீங்கள் நல்ல வழி யில் உபயோகப்படுத்திக் கொள்ளாமல் விஷயமாகிய சுழலில் போய் நீங்கள் அகப்பட்டுக்கொண்டு முழுகிக் கஷ்டத்தை யடைகிறீர்கள். விஷயமார்க்கத்தில் போகாமல் கர்ம மார்க்க வழியாகவோ, உபாஸனமார்க்க வழியாகவோ, ஞானமார்க்க வழியாகவோ இந்த மானிட சரீரமாகிய தோணியை விட்டுக் கொண்டு வந்தால் ஸுகமாகக் கரையேறி க்ஷேமத்தை யடை யலாம்" என்று கருணையுடன் பகவான் ஜீவகோடிகளுக்கு உபதேசித்தார்.

அந்த உபதேசத்தைத்தான் வேதம் என்று சொல்லுவார் கள். வேதத்திலும் மோக்ஷத்திற்கு, ஸன்மார்க்கத்தை போ திப்பதும், துர்மார்க்கத்தில் போகாதே என்று சொல்லுவதும், ஸன்மார்க்கம் இன்னது, துன்மார்க்கம் இன்னது, என்றுதான் கூறப்பட்டிருக்கின்றன. அந்த வேத ரூபமான பகவத் வசனத்தையும் நன்ருய் இன்னதுதான் அர்த்தம் என்று தெரிந்துகொள்ளாமல் ஜீவகோடிகள் திண்டாடினுர்கள். சில ஜீவர்கள் அந்த உபதேச வசனமாகிய வேதத்திற்கு என்ன அர்த்தம் என்றே தெரிந்துகொள்ளாமல் கஷ்டப்பட்டார்கள். சில ஜீவர்கள் பகவானுடைய எண்ணத்திற்கு விபரீதமான அர்த்தத்தை வைத்துக்கொண்டு விபரீதமான எண்ணத்தை தெரிந்துகொண்டார்கள். சில ஜீவர்கள் அர்த்தத்தை தெரிந்துகொண்டாலும் அது ஸரியா, ஸரியல்லவா, என்ற ஸம்சயத்துடன் கூடினவர்களாக கஷ்டப்பட்டார்கள். பகவா னே, இந்த ஜீவகோடிகளுக்கு மானிட சரீரமாகிய தோணியை

கொடுத்தும் ப்ரயோஜனமில்லாமலாகிவிட்டது. விதி நிஷேத ரூபமான வேதத்தை ப்ரகாசம் செய்தும் பயனற்றதாக ஆகிவிட்டது. இனி நாமே போய் ஸம்ஸாரமாகிய சமுத்ரத்தில் மூழ்கிக் கிடக்கும் ஜீவகோடிகளை கைதூக்கி கரையேற்றி விடுவதுதான் நமது கருணைக்கு பொருத்தமானது என்று நினைத்து, ஸம்ஸாரமாகிய சமுத்ரத்தினின்றும் கரையேறி மோக்ஷ ஸுகத்தை யடைவதற்கு அந்தரங்க ஸாதனமான மானிட சரீரமாகிய தோணியை அடைந்தவர்கள் அந்த ஸம்ஸார சமுத்ரத்தில் தோணியை விட்டுக்கொண்டுபோகும் வழியாகிய கர்மயோகத்தையும், பக்தியோகத்தையும், ஞான யோகத்தையும், தானே அனுஷ்டித்துக்காட்டி, ஜீவ கோடிகளை அனுஷ்டிக்கும்படி வற்புறுத்துவதான உத்தேசத்துடனும், அநேக நாளாக தன்னுடைய சரணாரவிந்தத்தை ஆராதித்து வருகிறவராயும், ஸூர்யகுலத்தில் பிறந்து அங்காங்கு பரமதார்மிக மஹாராஜா என்று ப்ரஸித்தியடைந்தவராயும் உள்ள தசரத சக்ரவர்த்தியினுடைய மனோரதத்தை பூர்த்தி செய்யவேண்டிய ஆவலுடனும், இந்த புண்ய பூமியில் ஸாக்ஷாத் லக்ஷ்மீபதியான நாராயணன் தனது ஸ்வரூபத்தை நான்கு பாகமாக பிரித்துக்கொண்டு திரு அவதாரம் செய்தார்.

அதிலும், தசரத சக்ரவர்த்தியினுடைய முதல் மனைவியாயும், மஹா புண்யவதியாயும், பதிவ்ரதாசிரோமணியாயுமுள்ள கௌஸல்யாதேவியினிடத்தில் தனது பாதி அம்சத்தினால் ராம ரூபமாக அவதரித்து, லோகத்தில் தர்மத்தைஅழித்து வந்த ராவணனையும் வதித்து பித்ருவாக்ய பரிபாலனம் முதலான ஸாமன்ய தர்மத்தை தான் அநுஷ்டித்துக்காட்டி, ஜீவகோடிகளுக்கு கர்மயோகத்தில் அபிருசியை உண்டு பண்ணினார். அதுபோல், தசரதமஹாராஜனுடைய இரண்டாவது மஹிஷியான ஸுமித்ராதேவியிடம் தனது கால் அம்சத்தால் லக்ஷ்மணஸ்வாமியினுடைய ரூபமாக அவதாரம் செய்து, தான் பகவானான ஸ்ரீராமனிடத்தில் சேஷபூதனாகவுமிருந்து கொண்டு, பகவானுக்குத்தான் சேஷபூதனாயிருக்கும் தன்மை

யான விசேஷ தர்மத்தையும் அநுஷ்டித்துக்காட்டினூர். அது போலவே, தசரத மஹாராஜனுடைய மூன்ருவது மனைவியான கைகேயிதேவியிடம் தனது அரைக்கால் அம்சத்தால் பரதஸ்வாமி ரூபமாக அவதரித்து, கந்தர்வாளேயும் ஜயித்து, பகவானுன ஸ்ரீராமனுக்கு தான் பரதந்த்ரனுயிருக்கும் தன்மையான தர்மத்தையும், அப்படியே மற்ருெரு அரைக்கால் அம்சத்தால் தசரத மஹாராஜாவின் இரண்டாவது மஹிஷியான ஸுமித்ரா தேவியிடத்திலேயே சத்ருக்னஸ்வாமி ரூபமாக அவதரித்து, பாகவதாளுக்கு தான் சேஷமாகயிருக்கும் தன்மையென்ற தர்மத்தையும் தான் அனுஷ்டித்து லோகத்தில் ஸ்தாபனம் செய்தார்.

ஸ்ரீ ராமன் ஸாக்ஷாத் சேஷியான வஸ்து, லக்ஷ்மண ஸ்வாமி பகவானுக்கு சேஷமான வஸ்து. பரதஸ்வாமி பகவானுக்கு பரதந்த்ரமான வஸ்து, சத்ருக்னஸ்வாமி பாகவத சேஷமான வஸ்து என்ற ப்ரகாரம் சேஷித்வம், பகவத் சேஷத்வம், பகவத் பரதந்த்ரத்வம், பாகவத சேஷத்வம் என்ற நாலு விதமான ஸித்தாந்த ரக்ஸ்யமும் பகவானுடைய அவதாரத்தால் ஸூசிக்கப்பட்டது. இதுதான் விசிஷ்டாத்வைதிகளுடைய ஸித்தாந்தப் ப்ரகாரம் ஸ்ரீராமாவதாரத்தினுடைய ரகஸ்யமான தத்வம்.

இவ்விதம் பரம கருணு மூர்த்தியான ஸாக்ஷாத் ஸ்ரீ தேவி, பூதேவி, நீளாதேவி, என்ற மூன்று தேவிகளுக்கும் பதியான மஹாவிஷ்ணு இந்த பூலோகத்தில் அவதரித்து யோகிகளுக்கும், புலப்படாததான தனது திவ்ய சரணுர விந்தத்தால், இந்த பூமண்டலத்தை அலங்கரித்துவந்தார். இது விசிஷ்டாத்வைதிகளின் ஸித்தாந்தமாகும்.

அத்வைத ஸித்தாந்த ப்ரகாரம் ஸ்ரீ ராமாவதாரத்தினுடைய ரகஸ்யமும் அடியில்கண்டவாறு தெரிந்துகொள்ளத்தகுந்தது. **ராமாயணம்** என்ற பதத்தின் அர்த்தத்தை முதலாகி அறியவும். ராஜயோகிகளுடைய மனதில் ஒரு

பெரிய ஆநந்த வடிவாகவும், பரம் ஜோதிஸ்ஸாகவும் விளங்கி அதனால் அவர்களை ஆநந்திக்கும்படி செய்கிற பரம்பொருளே ராமரென்று சொல்லப்படும். அந்த பரம்பொருளை நாம் ப்ரத் யக்ஷமாக பார்ப்பதற்கு உபாயமானது எந்த நூலில் சொல்லப் பட்டிருக்கின்றதோ, அந்த நூல் தான் ராமாயணமாகும். பரப்ரம்மத்தை யறிந்தால்த் தான் மோக்ஷம் என்று வேதங் களில் கூறப்பட்டிருக்கின்றன.

அந்த பரப்ரம்மத்தை அறியவோ லோகத்தை பார்க்கும் கண் போதாது. ஞானக்கண்ணே அதற்கு வேண்டும். ஞானக்கண்ணை யடைய ப்ராணிகளுடைய முயற்சியே இல்லா மல் இருந்துகொண்டு வருகிறது. இப்படி யிருக்கும் பொழுது ப்ரம்மத்தை அறிவது என்றதோ, மோக்ஷத்தை யடைவது என்றதோ, முன்காலத்தில் இல்லாமலே ஆகிவிட் டது. அப்படி யிருக்கும்பொழுது, அந்த பரம்பொருளாகிய பரப்ரம்மமே ப்ராணிகளுக்கு தன்னை பார்க்கும் ஞானக் கண்ணில்லாமல் போனாலும், லோகத்தை பார்க்கும் லௌ கிகமான கண்ணிருக்கிறபடியால் அந்தக் கண்ணிற்கே நாமும் புலப்படும்படி திவ்யமங்கள விக்ரஹத்தோடு இந்த பூமியில் அவதரிப்போம் என்ற எண்ணத்துடன், அந்த பரப்ரம்மமா னது இந்த பூமண்டலத்தில் அவதரித்தது. அதுதான் ராமா வதாரமாகும். வேதத்திற்கு ப்ரம்மம் பொருளானதினாலும், அந்த வேதமானது சப்தரூபமானதினால், சப்தமாகிய ஒரு ராஜ புருஷனுக்கு லக்ஷணை, வ்யஞ்சனை, சக்தி, என்று மூன்று பட்டமகிஷிகள் ஏற்பட்டிருப்பதாலும், சப்த புருஷனுக்கு லக்ஷணை யென்ற முதல் மகிஷியினிடத்தில் பிறக்கும் சைதன் யமானது (அதாவது லக்ஷணையினால் வேத சப்தத்தால் போ திக்கப்படும் சைதன்யமானது) ப்ரம்மமென்றும், சக்தியாகிற மகிஷியினிடத்தில் சப்த புருஷனுக்கு பிறந்த சைதன்ய மென்ற பிள்ளை ஈச்வரனென்றும், வ்யஞ்சனையினிடத்தில் சப்தபுருஷனுக்கு பிறந்த இரண்டு சைதன்யமாகிய பிள்ளை களான ஒன்றுக்கு கூடஸ்தனென்றும், மற்றொன்றுக்கு ஜீவ

னென்றும் நான்குவிதமாக பிரிக்கப்பட்டு ப்ரம்மம், ஈச்வரன், கூடஸ்தன், ஜீவன் என்று நான்கு தத்வங்கள் வேதாந்தங் களில் விளங்கி வருகிறது, வேதாந்திகளுக்கு தெரிந்ததே.

இதனும் ப்ரம்மம் ஒன்று என்ற ஸித்தாந்தம் போய் விடாது. ஆகாசம் ஒன்ருனுலும் மேகத்தில் ஸம்பந்தப்பட்ட ஆகாசத்தை மேகாகாசமென்றும், ஜலத்தில் ஸம்பந்தப்பட்ட ஆகாசத்தை ஜலாகாசமென்றும், குடத்தில் ஸம்பந்தப்பட்ட ஆகாசத்தை குடாகாசமென்றும்,ஒன்றிலும் ஸம்பந்தப்படாத ஆகாசத்தை மகாகாசமென்றும், நாலுவிதமாக பிரிக்கப்படுவ தால் ஆகாசம் ஒன்று என்ற ஸித்தாந்தம் போய்விடுமா?

அதுபோல் மாயையில் ஸம்பந்தப்பட்ட சைதன்யத்தை ஈச்வரனென்றும், அந்தக்கரணத்தில் ஸம்பந்தப்பட்ட சைதன்யத்தை ஜீவனென்றும், சரீரத்தில் ஸம்பந்தப்பட்ட சைதன்யத்தை கூடஸ்தனென்றும், ஒரு உபாதியிலும் ஸம்பந் தப்படாத சைதன்யத்தை ப்ரம்மமென்றும் சொல்லுவதினுல், ப்ரம்மம் ஒன்று என்ற ஸிந்தாந்தத்திற்கு குறைவு ஏற்படாது. இந்த நான்கு சைதன்யம்தான் ராமன், லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன் என்று நான்கு ராஜகுமாரர்களாக பூமியில் அவதரித்தார்களென்பது ஸித்தாந்தம்.

இந்த நான்கு சைதன்யங்களும் ஒன்ருகச் சேர்ந்த அகண்டமான ப்ரம்மத்தை சொல்லும் வேதமானது, பூர்வ பாகம், உத்தரபாகம் என்று இரண்டு வகையாக பிரிக்கப் பட்டிருக்கிறது. கர்ம காண்டம் பூர்வபாகமாகவும், ஞான கண்டம் உத்தரபாகமாகவும் ஆகும். அதில் கர்மகாண்டம் வால்மீகி மஹர்ஷியின் திருவாக்கினின்றும் சப்த ப்ரம்மரூப மான ராமாயண நூலாக பூமண்டலத்தில் அவதரித்தது. ஞான காண்ட ரூபமான உத்தரபாகமான வேதம் ஸூர்ய வம்சத்தில் பிறந்து ப்ரஸித்தனுய் விளங்கிவந்த அஜமஹா ராஜாவினுடைய பிள்ளையான தசரத சக்ரவர்த்தி ரூபமாக அவதரித்தது.

அதாவது, கர்மகாண்டமானது இராமாயணமாகவும், ஞானகாண்டம் தசரத சக்ரவர்த்தியாகவும் ஆவிர்ப்பவித்தது என்பதே உண்மையான அர்த்தம்.

ஞானகாண்டமாகிற வேதமும், சப்த ரூபமானதினுல் சப்த புருஷனுக்கு லக்ஷணே, வ்யஞ்சனே, சக்தி என்று மூன்று மனைவிகள் உண்டென்று முன்பே சொல்லியிருக்கிறோம். அதை யனுஸரித்து ஞானகாண்டமாகிய வேதமென்ற சப்த புருஷன் தசரத சக்ரவர்த்தியாக உருவமெடுத்து அவதரித்த வுடன், அந்த சப்த புருஷனுடைய மனைவிகளான மூவருள், லக்ஷணே கௌஸல்யாதேவியாகவும் வ்யஞ்சனே ஸுமித்ரா தேவியாகவும், சக்தி கைகேயியாகவும் அவதரித்து அவதார காலத்திலும் அந்த தசரதருக்கு தாங்களும் மனைவிகளாகவே யிருந்துவந்தார்கள்.

லக்ஷணேயின் ஸ்வபாவமோ சப்தத்திற்கு ஸொந்தமான அர்த்தம் எதுவோ அதை மறைத்து, அந்த ஸொந்த அர்த்தத் தோடு ஸம்பந்தப்பட்ட மற்றொரு அர்த்தத்தை சொல்லும்படி அந்த சப்தத்தை ஏவும் தன்மையுள்ளது. "கங்கையில் ஒரு பெரிய க்ராமம் இருக்கிறது." என்று சொல்லுகிற இடத்தில் "கங்கை" என்ற சப்தத்திற்கு "ப்ரவாகம்" என்றது ஸொந்த அர்த்தமானுலும், அந்த ஸொந்த அர்த்தத்தில் பெரிய க்ராமம் இருக்க ந்யாயமில்லாததான ந்யாயத்தை அவலம் பித்து ஸொந்த அர்த்தத்தை மறைத்து ஸொந்த அர்த்தமாகிய ப்ரவாஹத்தோடு ஒட்டின கரையை சொல்லும்படி கங்கை யென்ற சப்தத்தை லக்ஷணேயானது ஏவுகிறது. இதை லக்ஷ ணேக்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளவும்.

இந்த லக்ஷணேயினுடைய ஸ்வபாவத்தை கௌஸல்யா தேவியிடம் நன்றாய் பார்க்கலாம். அதாவது தனது பிள்ளை யான ஸ்ரீராமன் காட்டிற்கு ப்ரயாணமாகும்பொழுது "நீ போகக்கூடாது" என்ற தனது மனோ ரதத்தை வெளிக்காட் டாமலே அதை ஒட்டி "நீ போகும் அரண்யத்திற்கு என்னை

யும் அழைத்துப்போக வேண்டும். நானும் வருகிறேன்" என்று மாத்ரம் சொன்னாள். அந்த இடத்தில் தன் எண்ணத்தை மறைத்து, அதை ஒட்டின அர்த்தத்தைச் சொன்னாள் என்பது ஸித்தமாகிறது. இது லக்ஷணையின் ஸ்வபாவமில்லையா? அதனால் லக்ஷணை தான் கௌஸல்யா தேவியாக அவதரித்திருக்கிறாள் என்பது ஸித்தமாகிறது.

அதுபோல், சக்தியானது சப்தத்திற்கு ஸொந்த அர்த்தத்தைத்தான் ப்ரகாசப்படுத்தும். கைகேயி தேவியும் தன் ஸொந்த பிள்ளைக்கு ராஜ்யாபிஷேகமென்ன, இராமனுக்கு வனவாஸமென்ன, இவைகளை மாத்ரம் ப்ரகாசப்படுத்தினாளே தவிர, மற்றது எது எப்படிப்போனாலென்ன என்று இருந்துவிட்டாள். இது சக்தியின் ஸ்வபாவம். அதனால் சக்தியே கைகேயி தேவி என்று தெரிகிறது.

அதுபோல் வ்யஞ்சனையானது இரண்டு அர்த்தம் சொல்லும்படி சப்தத்தை ஏவும். அந்த இரண்டு அர்த்தம் ஸொந்தமான அர்த்தம்தான். அதாவது, ஒரு ப்ராந்த புருஷனைப் பார்த்து மஹா ஜனங்களுடைய ஸபையில் "இவாள் ரொம்ப பெரியவாள்" என்று ஒருவன் சொல்கிறான். அந்த இடத்தில் வ்யஞ்சனா வ்ருத்தியை உபயோகித்துக்கொள்ள வேண்டும். அதாவது அந்த இடத்தில் ப்ராந்த புருஷனுக்கு தன்னை இவர் பெரியவர் என்று சொல்லுகிறார் என்ற ஸந்தோஷத்தை உண்டுபண்ணுகிறது. அன்னியர்களுக்கு இவன் முட்டாள் என்ற அர்த்தத்தை உண்டுபண்ணுகிறது. இரண்டுவிதமான அர்த்தம் ஏற்படுகிறது. அதுபோல் ஸுமித்ராதேவியும் கௌஸல்யா தேவிக்கு சொல்லுங்காலத்தில் ராமனைப்பற்றி இராமனை ஒரு ராஜபுத்ரன் என்று தோன்றும்படியாகவும் மஹான்களுக்கு ப்ரமம் என்று தோன்றுபடியாகவும் இரண்டு அர்த்தம் தோன்றும்படியான பேச்சையே பேசியிருக்கிறாள். ஸுமித்ரையினுடைய வார்த்தையால் "கௌஸல்யா தேவியின் துக்க நிவ்ருத்தி" என்ற அர்த்தமும் ஸீதை லக்ஷ்மணன்

முதலானவர்களுக்கு "இராமன் பின்னோடு அரண்யத்திற்கு போவதற்கு உத்ஸாஹ அபிவ்ருத்தி" என்ற அர்த்தமும் ஏற்படுகிறது. இதுதான் வ்யஞ்சனவ்ருத்தியின் ஸ்வபாவம்.

அதனால் வ்யஞ்சன வ்ருத்தியே ஸௌமித்ரா தேவியாக அவதரித்திருக்கிறாள் என்று தெரிகிறது.

மேலும் லக்ஷ்யார்த்தமும் ஒன்றுதான், சக்த்யார்த்தமும் ஒன்றுதான். வ்யங்க்யார்த்தம் இரண்டு உண்டு. அது ப்ரக்ருதத்தில் ரொம்பவும் பொருத்தமாயிருக்கிறது. கௌஸல்யா தேவி லக்ஷணையானதால் அவளிடத்தில் பிறந்த பிள்ளை ஒருவனே. கைகேயி தேவியானவள் சக்தியானதால் அவளிடத்தில் பிறந்த பிள்ளை ஒருவனே. ஸௌமித்ராதேவியானவள் வ்யஞ்சனையானதால் அவளிடத்தில் பிறந்த பிள்ளைகள் இருவர்கள்.

ஆகையால் பூர்வ பாகமாகிய வேதமே ராமாயணம். உத்தர பாகமாகிய வேதமே தசரத சக்ரவர்த்தி. லக்ஷணையே கௌஸல்யா தேவி. வ்யஞ்சனையே ஸௌமித்ராதேவி. சக்தியே கைகேயிதேவி. இராமனேமகாகாசம்போலொத்தபரப்ரம்மம். பரதனே மேகாகாசம்போலொத்த ஈச்வரன். லக்ஷ்மணனே கடாகாசம்போலொத்த கூடஸ்த சைதன்யம். சத்ருக்னனே ஜலாகாசம்போலொத்த ஜீவன். ஜீவன் ஸம்ஸாரியான காரணத்தால் ஈச்வரனை அனுஸரிக்கவேண்டிய முறையை அனுஸரித்து ஈச்வர தத்வமான பரதஸ்வாமியை ஜீவதத்வமாகிய சத்ருக்னன் அனுஸரித்தான். கூடஸ்தன் அஸம்ஸாரியான காரணத்தால், லக்ஷ்யமான ப்ரம்மத்தை அனுஸரிக்க வேண்டிய முறையை அனுஸரித்து, கூடஸ்த தத்வமாகிய லக்ஷ்மணன் ப்ரம்ம தத்துவமாகிய இராமனை அனுஸரித்தான். உலகத்தை பரிபாலிக்கிறவன் ஈச்வரனானதால், ஈசுவர தத்வமாகிய பரதனுக்கு ராஜ்யத்தை கைகேயிதேவி விரும்பினாள். ப்ரம்ம தத்வம் நிர்குணமாயும் நிர்தர்மகமாயும் சுத்தமானதினாலும் ப்ரம்ம தத்வமாகிய ராமனுக்கு ராஜ்ய

பரணம் உசிதமா என்று நினைத்து அதை கைகேயிதேவி தடுத்தாள். அத்வைத ஸித்தாந்த ப்ரகாரம் முமுக்ஷுக்கள் தெரிந்துகொள்ளவேண்டிய ஸ்ரீ ராமாவதாரத்தின் தத்வம் இதுவே.

இவ்விதம் அபூர்வமான தத்வங்களை ப்ரகாசப்படுத்தும் ஸ்ரீ ராம சரித்ரத்தை வருங்காலத்திற்கு, உபயோகப்படும்படியும், ஸர்வஜனங்களுக்கும் ஹிதத்தை செய்யவும் ப்ரும்மாவானவர், 100 கோடி ச்லோகங்களால், ஒரு பெரிய ப்ரபந்தமாகச்செய்து ஆனந்தத்தை அடைந்தார். அந்த ராமாம்ருதகதையானது பூலோகத்தில் உள்ள மனுஷ்ய கோடிகளுக்கும் உபயோகப்படும்படி எண்ணி, தனது ப்ரிய புத்ரனை நாரதமஹர்ஷியினிடம் அந்த ராம சரித்ரத்தை உபதேசித்தார். நார்தரோ, ஆங்காங்கு பூலோகத்தில் ஸஞ்சாரம் செய்து, தாரக ப்ரம்மமாகிய ஸ்ரீ ராமனுடைய சரித்ரத்தை உபதேசம் செய்வதற்கு ஸரியான பாத்ரம் யார் என்று தேடினார். சித்ரகூட பர்வதத்திற்கு ஸமீபத்தில் வால்மீகி மஹர்ஷியை நாரதர் பார்த்து, அவருடைய தபஸ்ஸால் ஸந்தோஷமடைந்து, தாரக மந்த்ரமாகிய ஸ்ரீ ராமநாம மந்த்ர ஜபத்தால் சுத்தமான மனதோடுகூடியவர், அத்துடன், மஹா தபஸ்வி, ராம சரித்ரத்தை உபதேசம் செய்ய ஸரியான பாத்ரம், என்று தீர்மானித்தார். அந்த வால்மீகி மஹர்ஷியினுடைய மஹத்வமும் ப்ரம்மாண்ட புராணத்தில் ரொம்பவும் மேலாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

தேவர்களுக்குள் வருணன் ப்ரம்ம வித்தையில் ரொம்பவும் பயிற்சியடைந்தவன். அந்த வருணனுக்கு, ப்ருகு என்ற ஒரு புத்ரன் மானஸமாக ஏற்பட்டான். அந்த ப்ருகுவுக்கு, ப்ருந்தை என்ற ஸ்த்ரீயினிடத்தில், இந்த வால்மீகி மஹர்ஷியும், அஸுரகுருவான சுக்ராசார்யருமான இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். வால்மீகி என்ற பெயர் தபஸ்ஸினால் பின்பு ஏற்பட்டது. ப்ருகுவானவர் இந்த வால்மீகி மஹர்ஷி பிறந்தவுடன் தனது முகத்திற்கும், இந்த குழந்தை

யின் முகத்திற்கும் ஸாம்யம் இல்லாமல், வைலக்ஷண்யம் உள்ளதைப் பார்த்தார். ஆனால், நாரத மஹர்ஷியினுடைய அருகில் அந்த ப்ருந்தையானவன் தாரக மந்த்ரமான ஸ்ரீ ராம ஷடக்ஷரி மந்த்ரத்தை உபதேசம் செய்துகொண்டு ஜபம் செய்து கொண்டுவரும் மத்தியில், வால்மீகி என்று சொல்லப் படும் இக்குழந்தை பிறந்ததால், அந்த ப்ருந்தை என்றவள் குருத்யானத்திலேயே ஈடுபட்டவளானதால்,

गर्भंबिभर्ति सदृशं पुरुषस्य तस्य

𑌗𑌰𑍍𑌭𑌂 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿 𑌸𑌦𑍃𑌶𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯

கர்பம்பிபர்தி ஸத்ருசம் புருஷஸ்ய தஸ்ய

என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து, ஸ்த்ரீகள் எந்த நினைவாக இருக்கிறார்களோ, அதற்கு ஸமானமான உருவமுள்ள புத்ரனை உண்டுபண்ணுகிறார்கள் என்ற அர்த்தத்தால், ராம மந்த்ர ஜப காலத்தில், நாரதராகிய தன் குருவின் த்யானம் ப்ருந்தைக்கு அதிகமாக இருந்ததால், வால்மீகி என்று சொல் லப்படும் இக்குழந்தையின் முகமும், நாரத மஹர்ஷியின் ஜாடையாக இருந்ததால், ப்ருகு மஹர்ஷிக்கு ப்ருந்தையிடத் தில் காரணமில்லாமல் ஸந்தேகம் ஏற்பட்டு, அவளிடத்தில் பிறந்த இக்குழந்தையை அரண்யத்தில் கொண்டுபோய் போட்டுவிட்டார். அந்த அரண்யத்திலோ வேடர்கள் ஸஞ் சாரம் அதிகமாக உண்டு. ஓர் தினம், ஹிம்ஸகன் என்ற ஒரு வேட ராஜனுடைய த்ருஷ்டியில் அக்குழந்தை ஒரு மரத் தடியில் தென்பட்டு, அந்த ராஜனுக்கும் குழந்தைகள் இல்லாத காரணத்தால், அவனால் க்ரஹிக்கப்பட்டு, அவ னுடைய குலத்திலேயே அக்குழந்தை வளர்ந்து வந்தது. வேடர்களுடையநடத்தைகளும், ஸ்வபாவங்களும் மேலிட்டு தான் ரிஷி புத்ரன் என்பதை தெரிந்துகொள்ள காரண மில்லாததால், அரண்யத்தில் பக்ஷிகளையும் ம்ருகங்களையும் ஹிம்ஸைசெய்து மாம்ஸபோஜனாதிகளால் சரீரத்தை ரக்ஷித் துக் கொண்டும், கால க்ரமேண, பெரிய குடும்பியாகவும்

ஏற்பட்டு விட்டான். குடும்ப ரக்ஷணத்தில் ரொம்பவும் ச்ரமத்தை அடைந்து, மார்க்கங்களில் செல்லும் ஜனங்களை ஹிம்ஸைசெய்து, அவர்களிடம் இருக்கும் தனுதிகளை அப ஹரித்து குடும்ப ரக்ஷணம் செய்யும்படி கஷ்டம் நேர்ந்து விட்டது.

இவ்வித மிருக்கும்பொழுது, ஒரு தினம் ஜீவன் முக்தர் களான ஸப்தரிஷிகள் மார்க்கத்தில் ஸஞ்சாரம் செய்து கொண்டுபோனுர்கள். இந்த வேடனுடைய கண்ணிலும் அவர்கள் தென்பட்டார்கள். அவர்களேயும் இவன் வழக்கம் போல் ஹிம்ஸை செய்ய ஆரம்பித்தான். அந்த ரிஷிகளோ அவ்வேடனேப் பார்த்து, "எதற்காக நீ எங்களை ஹிம்ஸிக் கின்ருய், எங்களிடம் தனம் ஒன்றுமில்லை, ஆனுல் நாங்கள் சொல்வதை நீ அனுஷ்டித்தால், தபோமஹிமையால் அள வற்ற தனத்தை ச்ருஷ்டித்து உனக்கு நாங்கள் தருகிறோம்" என்று சொன்னுர்கள். இவ்வேடனும் பரமஸந்தோஷத்துடன் "ஸ்வாமி! அவ்விதமே நான் செய்கிறேன். யாதுசெய்ய வேணும்" என்று கேட்டான். மஹர்ஷிகளும் வேடனேப் பார்த்து "நீ உன் குடிசைக்குச் சென்று உன் குடும்பத்தார் களை நோக்கி, ஒரு கேள்வி கேட்கவேண்டும். அதாவது, நான் மார்க்கத்தில் அநேக ப்ராணிகளை ஹிம்ஸை செய்து தனத்தை அபஹரித்து உங்களை ரக்ஷிக்கிறேனே, அப்பாபத்திற்கு நீங்கள் பங்கு எடுத்துக்கொள்வீர்களா என்று கேட்க வேண்டும். அதற்கு அவர்கள் என்ன பதில் சொல்லுகிருர் கள் என்பதையும் எங்களிடம் நீ சொல்லவேண்டும், பிறகு உனக்குவேண்டிய பொருளைத் தருகிறோம்." என்று ரிஷிகள் சொன்னுர்கள். அதைக்கேட்டு வேடனும் குடிசைக்கு அவஸரமாக ஓடி, தன் பந்துக்களிடம் மேற்சொன்ன கேள்வியைக் கேட்டான். அதற்கு அவர்கள் பதில் அளித் ததோ "நீ செய்த புண்யத்தில்த்தான் எங்களுக்கு பங்கு உண்டே தவிர, பாபத்தில் யாதொரு பங்கும் கிடையாது" என்ருர்கள். உடன் அவன் மஹாகுலத்தில் பிறந்த புண்யவசத்

தால் பரம வைராக்யம் ஏற்பட்டு குடும்பத்தையும் விட்டு விட்டு, ஸப்த ரிஷிகளை நோக்கி ஓடிவந்து, அவர்கள் காலில் விழுந்து, "மஹர்ஷிகளே! எனக்கு பொருளே வேண்டாம், நான் இவ்வளவு காலமாக, ப்ராணிகளை ஹிம்ஸித்து, குடும்பத்தை ரக்ஷித்த பாபத்திற்கு, குடும்பத்தார்கள் பங்கு எடுத்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். புண்யத்திற்கு மாத்ரம், பங்கு உண்டாம், இதென்ன அக்ரமம்! ஆகையால் இனிமேல் எனக்கு, குடும்பவாஸனையே இல்லை. என் ஜன்மா கடைத்தேறுவதற்கு எனக்கு ஏதாவது உபதேசம் செய்ய வேண்டும்" என்று ப்ரார்த்தித்தான். மஹர்ஷிகளும் அவனுடைய அதிகாரத்தை அனுஸரித்து மரங்களால் சூழப்பட்ட காடுகளில் அவனுக்கு ஸஞ்சாரம் அதிகமானதினால் மரா என்று இரண்டு அக்ஷரத்தை உபதேசித்து, "இதை நாங்கள் போய் திரும்பிவருகிறவரை, ஜபம் செய்துகொண்டுவா" என்று சொல்லிவிட்டு ஸப்த ரிஷிகள் மறைந்து விட்டார்கள்.

அந்த வேடனும் மரா மரா என்று அநேக வர்ஷங்கள் ஜபம் செய்துகொண்டு வந்தான். ஆஹாராதிகள் ஒன்றும் செய்யாமலும், இரவு பகல் என்ற வித்யாஸம் இல்லாமலும் ஜபம் செய்துகொண்டுவந்த காரணத்தால் மரா மரா என்ற சப்தமானது ராம, ராம என்ற தாரக மந்த்ரமாக மாறி, அந்த வேடனை பரம சுத்தமாக செய்துவைக்கும் சக்தி உள்ளதாக ஆகிவிட்டது. இவ்விதமான தபஸ்ஸில் அந்த வேடன் பகு வருஷங்களாக ஈடுபட்டிருந்தான். அவ்வேடனுடைய சரீர முழுமையும் மண்புற்று வைத்து பெரிய மண்ணால் கட்டப்பட்ட ஒரு முட்டுப்போல் ஆகி, அதில் செடி கொடிகளும் முளைத்து, ஒரு பெரிய அலங்காரமாக ஆகிவிட்டது.

ஸப்த ரிஷிகள் வெகு காலம் சென்ற பிறகு அங்கு வந்தார்கள். அந்த மண்புற்றுக்குள் ராம, ராம என்ற தாரக மந்த்ரத்தை ச்ரவணம் செய்து, நாம் இதற்குமுன் உபதேசம் செய்த வேடனின் ஸமாதி இது என்று தீர்மானித்தார்கள்.

உடன் தன்து கருணுத்ருஷ்டியினுல் அவ்வேடனே பெரிய வித்வாஞக செய்ய எத்தனம் செய்து, அந்த மண்புற்றை கரைக்க வருணபகவானே அழைத்தார்கள். வருண பகவானும் முன் சொன்னபடி, தன் வம்சத்தில் பிறந்த குழந்தை என்ற காரணத்தாலும், ஸப்தரிஷிகளுடைய ப்ரார்த்தனேயினுலும் பரம உத்ஸாகத்துடன் ப்ரளயகால வர்ஷம்போல் வர்ஷித்தான். அவ்வர்ஷத்தில் மண்புற்றுகள் எல்லாம் கரைந்து திவ்யமான தேஜஸ்ஸால், பத்து திக்குகளேயும் ப்ரகாசம் செய்து வைக்கும் மஹிமையோடு, **தாரக** மந்த்ர ஜபம் செய்த அந்த மஹா புருஷன் விளங்கி வந்தான். ஸப்தரிஷிகளும் தங்கள் கருணு கடாக்ஷத்தால் ஸர்வக்ஞத்வம் என்ற மஹிமையை அவருக்குக் கொடுத்து, ஞானத்ருஷ்டியினுல் ஸர்வகலேகளிலும் ஸ்வதந்த்ரராக அவரை செய்தார்கள். வல்மீகம் என்ற சப்தத்தால் மண்புற்றுனது சொல்லப்படும். அதிலிருந்து இம் மஹர்ஷி வெளிவந்தவரானதால் வால்மீகி மஹர்ஷி என்றும், **ப்ரசேதா:** என்ற சப்தத்தால் சொல்லப்படும் வருணன் மூலம் மண்புற்றுகரைந்து வெளியில் தென்பட்டதால், ப்ராசேதஸ் என்றும், ப்ருகுமஹர்ஷியின் வம்சத்தில் உதித்த காரணத்தால், பார்கவர் என்றும், ப்ரக்ருதத்தில் உள்ள வால்மீகி மஹர்ஷி சொல்லப்படுவார். ராம என்ற தாரக மந்த்ரத்தை அநேக வர்ஷங்கள் ஜபம் செய்து அதனுல் சுத்தமான ஹ்ருதயத்தோடு கூடினவராயும், மஹா தபஸ்வியாயும், தாரக மந்த்ரத்தினுடைய, அர்த்தத்தை தெரிந்துகொள்ள பரமகுருவை எதிர்பார்க்கிறவராயும், இருந்து வந்தார்.

இந்த விஷயத்தை நாரத மஹர்ஷியானவர் தெரிந்து கொண்டு, இந்த வால்மீகி மஹர்ஷிமூலமாக ஸ்ரீராம சரித்ரத்தை பூலோகத்தில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன், நாரத மஹர்ஷியானவர் வால்மீகி மஹர்ஷியின் ஆச்ரமத்துக்கு வந்து சேர்ந்தார். வால்மீகி மஹர்ஷியும், நாரத மஹர்ஷியை, சாஸ்த்ரப்ரகாரம் பூஜித்து, அவருடைய பரம அனுக்ரஹத்தால், ஸ்ரீராமசந்த்ரமூர்த்தியினுடைய பரம

தத்வத்தை தெரிந்துகொண்டார். பிறகு, நாரத மஹர்ஷியி ஞல் வால்மீகி மஹர்ஷி தெரிந்துகொண்ட ராமசரித்ரமோ, வேதார்த்தத்தை ப்ரகாசம் செய்வதற்கு அனுகூலமான ஒரு ஆதாரமான நூல் என்று வால்மீகி மஹர்ஷி தீர்மானித் தார். அர்த்தமே எந்த சாஸ்த்ரத்தில் ப்ரதானமாகச் சொல் லப்படுமோ, (அதாவது, சப்தம் குறைவாகவும், அர்த்தம் அதிகமாகவும்) அதை **ஸுஹ்ருத் ஸம்ஹிதை, இதிஹாஸம்** என் றும் மஹான்கள் சொல்வார்கள். இந்த ராமசரித்ரத்தில் அவ்விதம் காணப்படுகிறபடியால், இதற்கும் ஸுஹ்ருத் ஸம் ஹிதை, இதிஹாஸம் என்ற நாமகரணத்தைச் செய்ய வால் மீகி மஹர்ஷி முயற்சித்தார். அத்துடன், சப்தத்திற்கு **வாச் யார்த்தம்** என்றும், **வ்யங்க்யார்த்தம்** என்றும், இரண்டுவகை உண்டு. சப்தத்தை கேட்ட மாத்ரத்தில் மேலாகத் தோன் றும்பொருளை **வாச்யார்த்தம்** என்றும், அதற்குள் ஸூசனையாகத் தோன்றும் பொருள் **வ்யங்க்யார்த்தம்** என்றும் சொல்லப்படும். அதற்கு உதாஹரணமோ, இந்த ஸ்ரீமத் ரர்மாயணத்தி லேயே, ஸுந்தரகாண்டத்தில் ஸீதையைப்பார்த்து, ராவணன்

कामयेत्वां विशालाक्षि

காமயெக்வாம் விஶாலாக்ஷி

காமயேத்வாம் விசாலாக்ஷி

என்று சொல்கிருன். அதற்கு, ஆபாதமாகத் தோன்றும் பொருளோ: உன்னை நான் ஆசைப்படுகிறேன் என்றதேதான் ஆகும். **कां अये** (காம், அயே) என்று பதத்தை பிரித்துக் கொண்டால், ஹே தாயே! உன் குழந்தையான என்னை நீ தள்ளிவிட்டால், மற்ற யாரை நான் சரணமடைவேன். தாயாரால் தள்ளப்பட்ட குழந்தையை, மற்றவர்கள் எவ்வி தம் ரக்ஷிப்பார்கள், என்ற பொருள் வ்யங்க்யமாக முன் சொன்ன வாக்யத்தால்தோன்றுகிறது. ஒவ்வொரு பதத்திலும் பதங்களுடைய கூட்டமான வாக்யத்திலும் ஒவ்வொருச்லோ கங்களிலும் இந்தவ்யங்க்யமான பொருள் தனித் தனியாக பாஸிக்கும். இந்த ஸ்ரீமத் ராமாயணத்திலோ, பதத்திலுள்ள

வ்யங்க்யமோ, வாக்யத்திலுள்ள வ்யங்க்யமோ, ப்ரபந்தத்தி லுள்ள வ்யங்க்யமோ, அளவிடமுடியாமல் பாஸிக்கின்றன. மஹாவித்வான்களால்த்தான் அதை அறியமுடியும். வாச்ய மான அர்த்தத்தை அதிக்ரமித்து வ்யங்க்யமான அர்த்தம் உயர்ந்ததாகவும் அபூர்வமாகவும் எந்த சாஸ்த்ரத்தில் தோன்றுகிறதோ, அதற்கு **காந்தாஸம்ஹிதை**, உத்தம காவ்யம் என்று வித்வான்கள் வ்யவஹரிக்கின்றார்கள். இந்த ஸ்ரீமத் ராமாயணத்திலும் அந்த லக்ஷணங்கள் அதிகமாக இருப்பதி னுல், இந்த நூலுக்கும் காந்தா ஸம்ஹிதை உத்தம காவ்யம் என்ற பெயரையும், நாமகரணம் செய்ய வால்மீகி மஹர்ஷி முயற்சித்தார். ஸ்ரீமத் ராமாயணத்திற்கு **ஸுஹ்ருத்ஸம்ஹிதை, இதிஹாஸம், காந்தாஸம்ஹிதை, ஆதிகாவ்யம்,** என்ற அநேக கார ணப் பெயர்கள், ஏற்பட்டது. அத்துடன், முக்யமாக இக் காவ்யத்தில், மனுஷ்யனுடைய சரித்ரத்தைச் சொல்ல வில்லை. மனுஷ்யனைப்போல் நடித்து அக்ஞர்களை மோஹிக் கச் செய்யும் **தாரக** ப்ரம்மமாகிய ஸ்ரீராமனுடைய பரதத் வத்தை போதிக்கும் காரணத்தால், **ஸத்காவ்யம்** என்னும் ஒரு உயர்ந்த நாமாவானது ஸ்ரீமத் ராமாயணத்திற்கு உண்டு. இவ்விதமஹிமை உள்ள இந்த ஸ்ரீராம சரித்ரத்தை பூலோ கத்தில் ப்ரபந்தரூபமாக ப்ரசுரப்படுத்த எண்ணங்கொண்ட வால்மீகி மஹர்ஷியானவர், தன்னுடைய எண்ணம் நிறை வேறுவதற்கும், தான் செய்யும் ப்ரபந்தமானது சந்த்ர ஸூர் யாள் உள்ளவரையிலும் லோகத்தில் ப்ரசாரத்தை அடைவ தற்கும் **தாரக** ப்ரம்மமாகிய ஸ்ரீராமசந்த்ரமூர்த்தியின் அனுக்ர ஹத்தையே முக்யமான உபாயம் என்று கருதி, அந்த ப்ரம் மத்தினுடைய அனுஸந்தானம் என்ற மங்களா சரணத்தை முதல் ச்லோகத்தால் செய்து கொள்கிறுர் :—

तपःस्वाध्यायनिरतं तपस्वी वाग्विदां वरं ।
नारदं परिपप्रच्छ वाल्मीकिः मुनिपुंगवं ॥

தவஃஸ்வாத்யாய நிரதம் தவஸ்வீ வாக்விதாம் வரம் ।
நாரதம் பரிபப்ரச்ச வால்மீகி: முனிபுங்கவம் ॥

தபஸ்வாத்யாய நிரதம் தபஸ்வீ வாக்விதாம்வரம் ।
நாரதம் பரிபப்ரச்ச வால்மீகி : முனி புங்கவம் ॥

இந்த ச்லோகத்தால் இஷ்ட தேவதையின் நமஸ்காரமும், குரு நமஸ்காரமும், க்ரந்தத்தின் ஆரம்பத்தில் பரம மங்கள மாக சொல்லப்படுகிறது.

आचार्याद्धैव विद्या विदिता साधिष्ठं प्रापत् । आचार्यवान् पुरुषो वेद ॥

𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌧𑍈𑌵 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌵𑌿𑌦𑌿𑌤𑌾 𑌸𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑌤𑍍 ।
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌵𑍇𑌦 ॥

ஆசார்யாத்தைவ வித்யா விதிதா ஸாதிஷ்டம் ப்ராபத் ।
ஆசார்யவாந் புருஷோ வேத ॥

என்ற ச்ருதியால், குருமுகமாக ஸம்பாதிக்கப்பட்ட வித்யை தான் பலத்தைக் கொடுக்குமென்றும், குருவை அடைந்த வன்தான், பரப்ரம்மத்தை அறிவான் என்றும், தாத்பர்யம் விளங்குகிறபடியால், குரு நமஸ்காரத்தைச் சொல்லும் வ்யா ஜத்தால் ஆசார்யனுடைய லக்ஷணமும், இந்த ச்லோகத்தில் அடங்கிய இரண்டாவது வேற்றுமையுடன் கூடின பதங்க ளால் சொல்லப்படுகிறது. இந்த ச்லோகத்திலுள்ள பதங்க ளுக்குள்,

तपस्वाध्यायनिरतं 𑌤𑌪𑌃𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑌿𑌰𑌤𑌂 தபஸ்வாத்யாய நிரதம்

என்ற பதமானது முதல் பதமாகும். அதில், **தபஸ்** என்ற பதத்தால் சாந்த்ராயணம் முதலானவ்ரதானுஷ்டானமும், **ஸ்வாத்யாய** : என்ற பதத்தால் வேதமும், பொருளாக விளங்கு கிறபடியால், அந்த இரண்டிலும் மிகவும் ஆஸக்தி உள்ள வனே, ஆசார்யபதவிக்கு அர்ஹனாக ஆகிறான் என்ற தாத் பர்யமானது வெளியாகிறது.

तपो विद्या च विप्रस्य निःश्रेयसकरं परम् ।
तपसा कल्मषं हन्ति विद्यया ज्ञानमश्नुते ॥

𑌤𑌪𑍋𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌚 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑌂 𑌪𑌰𑌮𑍍 ।
𑌤𑌪𑌸𑌾 𑌕𑌲𑍍𑌮𑌷𑌂𑌹𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ॥

தபோவித்யாச விப்ரஸ்ய நிச்ரேயஸகரம் பரம் ।
தபஸா கல்மஷம்ஹந்தி வித்யயா ஞானமச்நுதே ॥

என்ற மனுஸ்ம்ருதியை அனுஸரித்து ப்ராம்மணனுக்கு வேதாத்யயனமும், சாந்த்ராயணம் முதலான வ்ரதானுஷ்டானமும், ரொம்பவும் அவச்யமானது. இந்த இரண்டும்தான் ப்ராம்மண ஜாதிக்கு மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியது. சாந்த்ராயணம் முதலான வ்ரதானுஷ்டானங்களால் ஸகல பாபங்களும் நசிக்கிறது. வேதத்தால் மோக்ஷ ஸாதனமான ஞானத்தை அடைகிறான். இவ்வித தாத்பர்யத்தை மேற் சொன்ன மனுஸ்ம்ருதி ப்ரசாரப்படுத்துகிறபடியால், ப்ராம் மண ஜாதியில் பிறந்தவனுக்கே, அதிலும் ஆசார்ய ஸ்தானத் தில் அமர்ந்திருக்கப் பட்டவனுக்கு, சாந்த்ராயணம் முதலான வ்ரதானுஷ்டானமும், பரிபூர்ணமாக ஸ்வசாகாத்யயனமும் முக்யமான லக்ஷணமென்று தெரியவருகிறது. இதனால் ஆசார்யன் வேத ஸம்பன்னனாக இருக்கவேண்டும் என்பது வெளியாகிறது. தவிரவும்,

'तप' आलोचने '𑌤𑌪' 𑌆𑌲𑍋𑌚𑌨𑍇 தப ஆலோசனே

என்ற ஸூத்ரத்தாலும்,

यस्यज्ञानमयंतपः 𑌯𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌂 𑌤𑌪𑌃 யஸ்ய ஞானமயம் தப:

என்ற ச்ருதியினாலும், **தபஸ்** என்ற பதத்தால் ஞானயோக மென்றும், **ஸ்வாத்யாய:** என்ற பதத்தால் வேதமென்றும் அர்த்தம் ப்ரகாசிக்கிறபடியால், வேதாத்யயனம் செய்து, ஆத்மஞானத்தை ஸம்பாதித்தவனே, ஆசார்யனாக ஆகக் கூடும். அதில்,

स्वाध्यायात् योगमासीत योगात् स्वाद्यायमावसेत् ।
स्वाध्याय योगसंपत्या गमिष्यति परांगतिं ॥

𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌤𑍍 𑌯𑍋𑌗𑌮𑌾𑌸𑍀𑌤 𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌮𑌾𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯 𑌯𑍋𑌗𑌸𑌂𑌪𑌤𑍍𑌯𑌾 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌪𑌰𑌾𑌂𑌗𑌤𑌿𑌂 ॥

ஸ்வாத்யாயாத் யோகமாஸீத யோகாத் ஸ்வாத்யாய மாவஸேத் ।
ஸ்வாத்யாய யோகஸம்பத்யா கமிஷ்யதி பராம்கதிம் ॥

என்ற சாஸ்த்ரமே ப்ரமாணமாகும். வேதாத்யயனம் செய்த பிறகு, ஆத்மஞானத்தை ஸம்பாதிப்பதும், அந்த ஞானயோக பலத்தால், வேதத்தின் அர்த்தத்தை நிர்ணயம் செய்யும் சக்தியும், எந்த ப்ராம்மணனுக்கு இருந்து வருகிறதோ, அப் ப்ராம்மணன் "ஸ்வாத்யாயயோக ஸம்பன்னன்", அவன் மோக்ஷத்தை அடைகிறுன், என்பதே மேல் காட்டிய வசனத்தின் தாத்பர்யமாகும். இதனுல் ஞானஸம்பத்தியும் ஆசார்யனுக்கு ஒரு லக்ஷணமாகுமென்பது வெளியாகிறது. தவிர,

तपोहि स्वाध्यायः 𑌤𑌪𑍋𑌹𑌿 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 தபோஹி ஸ்வாத்யாய:

என்ற ச்ருதியால், தப: என்றதால் வேதமும், **ஸ்வாத்யாய: வேத ஜபயோ:** என்ற வசனத்தால், **ஸ்வாத்யாய:** என்ற பதத்தால் ஜபம் என்ற பொருளும் வெளியாகிறபடியால், தினந்தோறும் வேதானுவசனமென்ற ப்ரஹ்மயக்ஞ ப்ரச்னம் தவருமல் எந்த ப்ராம்மணனிடத்தில் இருந்து வருகிறதோ, அவன் தான் ஆசார்யனுக ஆக அர்ஹனுவான். இதனுல் வேதார்த்த கர்மானுஷ்டானமும் ஆசார்யனுடைய லக்ஷணம் என்பது வெளியாகிறது. தினந்தோறும் ப்ராம்மணன் ப்ரம்மயக்ஞ ப்ரச்னம் சொல்லியே தீரவேண்டும், தவறக்கூடாது என்பதில்,

स्वाध्यायान्माप्रमदः । वेदमेव जपेन्नित्यम् ॥

𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌨𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌮𑌦𑌃। 𑌵𑍇𑌦𑌮𑍇𑌵 𑌜𑌪𑍇𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 ॥

ஸ்வாத்யாயான்மா ப்ரமத: । வேதமேவ ஜபேந்நித்யம் ॥

என்ற சாஸ்த்ரமேப்ரமாணமாகும். ப்ரம்மயக்ஞ ப்ரச்னம் தவறக்கூடாது என்பதே மேற்கண்ட சாஸ்த்ரத்தின் அர்த்தம்.

तपोब्रह्म, ब्रह्मैतत् उपास्स्व

𑌤𑌪𑍋𑌬𑍍𑌰𑌹𑍍𑌮, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌤𑌤𑍍 𑌉𑌪𑌾𑌸𑍍𑌸𑍍𑌵

தபோப்ரம்ம, ப்ரம்மைதத், உபாஸ்வ

என்ற ச்ருதியினுல், தப: என்பதினுல் ப்ரப்ரம்மமும், ஸ்வாத்யாய: என்ற பதத்தால், அந்த பரப்ரம்மத்தை ப்ரகாசப்படுத்தும் வேதாந்தங்களும் (உபநிஷத்துக்கள்) பொருளாக வெளியாகிறபடியால், வேதாந்தங்களிலும், மஹாபண்டிதனுக இருக்கும் ப்ராம்மணன் தான், ஆசார்யனுக ஆகுவான். தான் வேதாந்த சாஸ்த்ரத்தைப் படித்து, சிஷ்யர்களுக்கு அதை போதித்து வருவதும் ஆசார்யனுடைய லக்ஷணங்களில் ஓர் முக்ய லக்ஷணமாகிறது. அதில்,

स्वाध्याय प्रवचनाभ्यां नप्रमदितव्यम्

𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌪𑍍𑌰𑌮𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌮𑍍

ஸ்வாத்யாய ப்ரவசனுப்யாம் நப்ரமதிதவ்யம்

என்ற சாஸ்த்ரமே ப்ராமணமாகும். வேதாந்த நூல்களைப் படிப்பதிலோ, அந்த தத்வங்களை சிஷ்யர்களுக்கு போதிப்பதிலோ, ரொம்பவும் ஜாகரூகனுக இருக்கவேண்டுமென்பதே மேற்காட்டிய சாஸ்த்ரத்தின் கருத்தாகும். இதனுல் ஆசார்யனுக இருப்பவன் ப்ரம்மநிஷ்டனுகவும் இருக்க வேண்டுமென்பது வெளியாகிறது. தவிரவும்,

आसन्नब्रह्मणः तस्य तपसां उत्तमं तपः

प्रथमं छन्दसां अङ्गं आहुः व्याकरणं बुधाः

𑌆𑌸𑌨𑍍𑌨𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌤𑌪𑌸𑌾𑌂 𑌉𑌤𑍍𑌤𑌮𑌂 𑌤𑌪𑌃 ।
𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌛𑌨𑍍𑌦𑌸𑌾𑌂 𑌅𑌙𑍍𑌗𑌮𑍍 𑌆𑌹𑍁𑌃 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌂 𑌬𑍁𑌧𑌾𑌃

ஆஸந்நம் ப்ரம்மண: தஸ்ய தபஸாம் உத்தமம் தப:
ப்ரதமம்சந்தஸாம் அங்கம் ஆஹு: வ்யாகரணம் புதா:

என்ற சாஸ்த்ரத்தில், **தப:** என்ற பதத்தால் வேதங்களுக்கு முக்யமான அங்கங்களான வ்யாகரண சாஸ்த்ரமென்பது வெளியாகிறது. வேத புருஷனை பார்ப்பதற்கு வ்யாகரணமே முக்யமான உபாயமென்றும், இந்த வ்யாகரணமும், தபஸ்ஸுகளுக்குள் மேலான தபஸ் என்றும், மேற்காட்டிய சாஸ்த்ரத்தின் தாத்பர்யமாகும். வ்யாகரணம் என்ற அங்கத்தைச் சொல்வதினுல், **சீக்ஷா** சாஸ்த்ரம், **கல்ப** ஸூத்ரம், **சந்தஸ்** என்ற சாஸ்த்ரம், **நிருக்தம்** என்ற சாஸ்த்ரம், **ஜோதிஸ்** சாஸ்த்ரம், என்ற மற்ற வேதாங்கங்களையும், க்ரஹித்துக்கொள்ளவேண்டும். ஆகையால், **தப:** என்ற பதத்தால் வ்யாகரணம் முதலான ஆறு அங்கங்கள் என்ற பொருள் வெளியாகிறது. **ஸ்வாத்யாய:** என்ற பதத்தாலோ, வேதமென்ற அர்த்தம்தான். அங்கங்களோடு சேர்த்து வேதத்தை பூர்ணமாக அத்யயனம் செய்த ப்ராம்மணன் தான், ஆசார்யனுக ஆக முடியுமென்பது தெரிகிறது. இதனுல் ஸாங்க வேதாத்யயனம் என்ற லக்ஷணமும் சொல்லப்படுகிறது.

तपःस्वाध्यायनिरतं 𑌤𑌪𑌃𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑌿𑌰𑌤𑌂 **தப:ஸ்வாத்யாயநிரதம்**
என்ற பதத்தை,

तपःस्वः अध्यायः 𑌤𑌪𑌃𑌸𑍍𑌵𑌃 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 **தப:ஸ்வ: அத்யாய:**

என்று பிரித்துக்கொண்டு அர்த்தத்தை கவனிக்கவும்:

तपः स्वं यस्यासौ = तपःस्वः

தவ꞉ ஸ்வம் யஸ்யாஸௌ = தவ꞉ஸ்வ꞉

தப: ஸ்வம் யஸ்யாஸௌ=தப:ஸ்வ:

என்ற ஸமாஸத்தால், தபஸ்ஸையே ஸொத்தாக உடைத் தானவன் என்ற தாத்பர்யம் தெரிகிறது.

अध्याय: அத்யாய꞉ அத்யாய:

என்றால், வேதம் என்றுதான் அர்த்தம். இதனால் வேதாத்ய யனம் செய்து மஹா தபஸ்வியாக இருப்பவனே, ஆசார்ய னாக ஆகமுடியும். ஞானமென்ற அர்த்தத்தையோ, இந்த்ரி யங்களுடைய நிக்ரஹம் என்ற அர்த்தத்தையோ, வெளிப் படுத்தும் தப: என்ற பதத்திலிருந்து வெளியாகும் அர்த்த மான தப:ஸ்ஸைத் தவிர, மற்றபொருள் முதலானதுகளை தன் ஸொத்தாக நினைக்காத மஹாவிரக்தனே, ஆசார்யன் அன்று அறியவும். இதனால் வைராக்யம் என்ற லக்ஷணமும் வெளியாகிறது.

तप: தவ: தப:

என்பதனால் பரப்ரம்மம் என்றபொருள் வெளியாகிறது. ஸ்வாத்யாய: என்பதனால் வேதமென்பதே. ஆகிலும் தபோ மயமான ஸ்வாத்யாயம் (ஈச்வரஸ்வரூபமான வேதம்), அதா வது, பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் எந்த வேதத்தைத் தன் ஸ்வ ரூபமாகச் சொல்லியிருக்கிறாரோ, அந்த வேதம் 'ஸாமவேதம்' என்பது, தபஸ் வாத்யாய: என்ற பதத்தால் சொல்லப்படு கிறது. இதில்,

वेदानां सामवेदोऽस्मि வேதாநாம் ஸாமவேதோஸ்மி

வேதாநாம் ஸாமவேதோஸ்மி

என்ற பகவத்கீதா வசனமே ப்ரமாணமாகும்.

निरतं நிரதம் நிரதம்

என்ற பதத்தால் ப்ரக்ருதத்திலும், மேற்சொன்ன எல்லா பர்யாயங்களிலும் ஆஸக்தி உள்ளவன் என்ற பொருளை அறி

யவும். (அதாவது ஈடுபட்டவன் என்று அர்த்தம்) ஸாமவேத நிரதன் என்றதே பொருளாகும். இதனால் **தத்வமஸி** என்ற மஹாவாக்யம் உபதேசவாக்யமானதால், இந்த உபதேச வாக்யம் ஸாமவேதத்தில், சாந்தோக்ய உபநிஷத்தில் உள்ள தானதால், உபதேசத்தை செய்வதற்கு ஏற்பட்ட ஆசார்ய னும், ஸாமவேதியாகவே இருக்கவேண்டும் என்பது முக்ய மான கருத்தாகும். இதனால் வேறு சாகையில் சேர்ந்த ப்ராம் மணர்கள் ஆசார்யனாக ஆக முடியாது என்று சொன்னதாக கருதக்கூடாது. அந்நிய சாகாத்யாயிகளும், ஸ்வசாகையை அத்யயனம் செய்த பிற்பாடு, ஸாமசாகையும், பூர்ணமாக அத்யயனம் செய்தவர்களாக இருந்தால்த்தான் ஆசார்யனாக ஆகமுடியும் என்பது வெளியாகிறது. இதனால் ஸாம வேதாத்யயனம், ஆசார்யனின் லக்ஷணத்தில் ஒரு முக்ய லக்ஷணமாகும். இவ்விதம் **தபஸ்வாத்யாய நிரதம்** என்ற பதத் தால் வெளிப்படுத்தப்பட்ட ஆசார்ய லக்ஷணங்களில் ஒன்றுகூட குறையாமல் பரிபூர்ணமான லக்ஷணங்களால் அலங்கரிக்கப்பட்ட நாரத மஹர்ஷி வால்மீகி மஹர்ஷிக்கு, குருவாகக் கிடைத்தார். இதற்கு, வால்மீகி மஹர்ஷியினு டைய பெரிய தபஸ்ஸே காரணமாகும். மேற்காட்டிய, **தபஸ்வாத்யாய நிரதம்** என்ற ச்லோகத்தில் **நாரதம்** என்ற விசேஷ்யமான பதத்திற்கு, "தபஸ்வாத்யாயநிரதம்" என்ற பதம் விசேஷணமாகையால், அந்த விசேஷணவாசகமான பதத்தால் விசேஷ்யவாசகமான **நாரதம்** என்ற பதத்தால் வெளிப்படுத்தப்படுகிற நாரத மஹர்ஷியினுடைய மஹத்வ மானது சொல்லப்பட்டது.

இவ்விதம் வேதாத்யயனம் என்ற முக்ய லக்ஷணமானது முதல் பதத்தால் தெரிவிக்கப்பட்டது.

यदधीतं अविज्ञातं निगदेनैव शब्द्यते ।

अनग्नाविव शुष्कैधो नतज्ज्वलति कर्हिचित् ।

𑌯𑌦𑌧𑍀𑌤𑌂 𑌅𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌨𑌿𑌗𑌦𑍇𑌨𑍈𑌵 𑌶𑌬𑍍𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌅𑌨𑌗𑍍𑌨𑌾𑌵𑌿𑌵 𑌶𑍁𑌷𑍍𑌕𑍈𑌧𑍋 𑌨 𑌤𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌤𑌿 𑌕𑌰𑍍𑌹𑌿𑌚𑌿𑌤𑍍 ।

யததீதம் அவிக்ஞாதம் நிகதேனைவ சப்த்யதே ।
அநக்னுவிவ சுஷ்கைதோ நதஜ்வலதிகர்ஹிசித் ॥

என்ற சாஸ்த்ரத்தால், பொருள் தெரியாமல் சப்தத்தால் மாத்ரம் வேதத்தை அத்யயனம் செய்தால், அது பயனற்றதாகும். காய்ந்த ஸமித்துக்களை அக்னியில் போடாமல், ஜலத்தில் போட்டால், அது எப்படி ப்ரகாசிக்காதோ, அதுபோல்த் தான் அர்த்தஞானமாகிற அக்னியின் ஸம்பந்தமில்லாத கேவல வேதாத்யயனம் சோபிக்காது. இந்த தோஷம் ஆசார்யனி டத்தில் இருக்கக்கூடாது. ப்ரக்ருதத்தில் ஆசார்ய புருஷனை, நாரத மஹர்ஷியிடம் இந்த தோஷம் இல்லை என்பதைக் காட்டுவதற்கு

नारदं 𑌨𑌾𑌰𑌦𑌂 **நாரதம்**

என்ற பதத்திற்கு

वाग्विदांवरं 𑌵𑌾𑌗𑍍𑌵𑌿𑌦𑌾𑌂𑌵𑌰𑌂 **வாக்விதாம்வரம்**

என்று மற்றொரு விசேஷணம் ஏற்பட்டிருக்கிறது. வாக் என்றால் வேதமென்றே அர்த்தமாகும். அந்த வேதத்தின் அர்த்தத்தை அறிந்தவர்கள் **வாக்வித:** என்று சொல்லப்படு வார்கள். அவர்களுக்குள் இந்த நாரத மஹர்ஷியானவர் ரொம்பவும் முதன்மையானவர் என்ற அர்த்தத்தை

वाग्विदांवरं 𑌵𑌾𑌗𑍍𑌵𑌿𑌦𑌾𑌂𑌵𑌰𑌂 **வாக்விதாம்வரம்**

என்ற பதத்தால் அறியவும். தவிரவும்,

वाग्विदः 𑌵𑌾𑌗𑍍𑌵𑌿𑌦𑌃 **வாக்வித:**

என்ற பதத்தால், தான் மனதில் நினைத்து, சொல்லவேண்டு மென்ற இச்சைக்கு விஷயமான பொருளை மாத்ரம் ப்ரகாசப்

படுத்தக்கூடிய சப்தங்கள் எவ்வளவு தேவையோ, அவ்வளவு சப்தங்களை மாத்ரம், சிஷ்யனிடத்தில் உபயோகப்படுத்துகிற வர்கள்,

वाग्विद: வாக்3விதஃ **வாக்வித:**

என்ற பதத்தால் சொல்லப்படுவார்கள்.

ப்ரக்ருதத்திற்கு உபயோகமில்லாமல், வீண் சப்தங்களை உபயோகப்படுத்தாதவர்கள் என்று அதன் பொருளாகும். அவர்களுக்குள், ப்ரக்ருதத்திலுள்ள நாரதமஹர்ஷியானவர் மிகவும் உயர்ந்தவராக விளங்குகிறுர் என்றும் மேற்படி பதத் தால் பொருள் வெளியாகிறது. அதனுல் சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்வதில் ரொம்பவும் அனுபவித்து சொல்கிறவர் என்பது அதன் கருத்தாகும்.

வாக் என்ருல் ஸரஸ்வதிதேவி என்ற அர்த்தத்தை அறியவும்.

विद्लृ लाभे வித்3ல்ருʼ லாபே4 **வித்ல் லாபே**

என்ற ஸூத்ரத்தால், ஸரஸ்வதி தேவியினுல் புத்ரர்களாக அடையப்பட்ட **மரீசி** முதலான மஹர்ஷிகள் என்ற பொருள் வெளியாகிறது. அதில் இந்த நாரத மஹர்ஷியும் ஸரஸ்வதி யின் புத்ரர்தான். **வாக்வித:** என்றதால் ஸரஸ்வதி தேவியின் புத்ரர்கள் என்று பொருள். **वरं** என்பதனுல் அவர்களுக் குள் ச்ரேஷ்டன் என்ற தாத்பர்யம். நாரத மஹர்ஷி பக வத் பக்தியில் ரொம்பவும் ஈடுபட்டவரானதினுல், ஸரஸ்வதி யினுடைய மற்ற பிள்ளைகளைக் காட்டிலும், இவர் ஸரஸ்வதி தேவிக்கு ரொம்பவும் ப்ரேம புத்ரன் என்பது வெளியாகி றது. ஆசார்யனுக இருப்பவன் நல்ல வம்சத்தில் உதித்தவ னுக இருக்கவேண்டும். ஸகல வித்தைகளுக்கும் மூல தேவதையான ஸரஸ்வதி தேவிக்கு ப்ரேமபுத்ரனுன இந்த

மஹர்ஷியினிடம் நல்ல வம்சத்தில் இவர் பிறந்தவர் என்றதனால் ஏற்பட்ட ஆபிஜாத்யத்தை சொல்லவும் வேண்டுமா!

तपस्वाध्याय निरतं 𑌤𑌪𑌃𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯 𑌨𑌿𑌰𑌤𑌂 தபஸ்வாத்யாய நிரதம்

என்பதினால் வித்யையும், வாக் **விதாம்வரம்** என்பதினால் குலமும், சொல்லப்பட்டதாக ஆகிறது.

அத்துடன், நாரத மஹர்ஷிக்கு **முனிபுங்கவம்** என்ற மற்றொரு விசேஷணமும் இந்த ச்லோகத்தில் இருந்து வருகிறது. **முனி**கள் என்றால் எப்பொழுதும் ப்ரம்ம தத்வத்தை மனதில் த்யானம் செய்துகொண்டு ஸமாதியில் இருந்து வருகிறவர்கள் என்று சொல்லப்படும். அவர்களுக்குள் இவர் **புங்கவர்**—ச்ரேஷ்டர் என்றதனால் அடிக்கடி நாரத மஹர்ஷியானவர் **நிர்விகல்பக** ஸமாதியில் அமர்ந்துகொண்டு ப்ரம்ம ஸ்வரூபத்தை ப்ரத்யக்ஷமாக அனுபவிக்கக்கூடிய சக்தி உள்ளவர் என்பதும் வெளியாகிறது. இதனால் இவர் மஹா ஸமாஹிதர், ராஜயோகி என்பதை அறியவும்.

अभिजन विद्या समुदेतं समाहितं संस्कर्तारं ईप्सेत्

𑌅𑌭𑌿𑌜𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌸𑌮𑍁𑌦𑍇𑌤𑌂 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌂 𑌸𑌂𑌸𑍍𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂
𑌈𑌪𑍍𑌸𑍇𑌤𑍍

அபிஜன வித்யாஸமுதேதம் ஸமாஹிதம் ஸம்ஸ்கர்தாரம் ஈப்ஸேத்

என்று ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் சொல்லியபடி, மஹா குலத்தில் பிறப்பு, உயர்ந்த வித்யை, ராஜயோகம், இதுகளோடு கூடினவனைத்தான் குருவாக அண்டவேண்டும், என்ற ஸகல லக்ஷணங்களும் நாரத மஹர்ஷியினிடம் ரொம்பவும் பொருத்தமாக இருந்து வருகிறது.

அத்துடன், **தபஸ்வாத்யாய நிரதம்** என்ற விசேஷணத்தால் வேதாந்த ச்ரவணமும், **வாக்விதாம்வரம்** என்ற விசேஷணத்தால் மனனமும், **முனிபுங்கவம்** என்ற விசேஷணத்தால் நிதித்

யாஸனமும் வெளியாகிறபடியால், ச்ரவண, மனன, நிதித்யாஸனம் செய்து ப்ரம்ம ஸாக்ஷாத்காரத்தை அடைந்தவர் என்றும் வெளியாகிறது.

नारदं நாரதம் என்ற பதமானது விசேஷ்யத்தை போதிக்கும் பதமாகும். நரங் என்ருல் மனிதர்கள். மனிதர்களுக்கு ஈச்வர ஸ்வரூபத்தை மறைக்கும் அக்ஞானமானது (மாயையானது) நாரம் என்ற பதத்தால் சொல்லப்படும்.

दो अवखण्डने 𑌦𑍋 𑌅𑌵𑌖𑌣𑍍𑌡𑌨𑍇 தோ அவகண்டனே

என்ற தாதுவால் அந்த மனிதர்களுடைய அக்ஞானத்தை தனது த்ருஷ்டியினுல் நிவ்ருத்தி செய்யும் சக்தி உள்ளவர் என்ற பொருள் நாரத: என்ற பதத்தால் வெளியாகிறது. அதில்,

नारदो नाशयन् एति नृणां अज्ञानजं तमः

𑌨𑌾𑌰𑌦𑍋 𑌨𑌾𑌶𑌯𑌨𑍍 𑌏𑌤𑌿 𑌨𑍃𑌣𑌾𑌂 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌂 𑌤𑌮𑌃

நாரதோ நாசயங் எதி ந்ருணும் அக்ஞானஜம் தம:

என்ற நாரதீய புராணவசனே ப்ரமாணமாகும். ப்ராணிகளுடைய அக்ஞானத்தை நிவ்ருத்தி செய்துகொண்டே இந்த நாரத மஹர்ஷியானவர் லோகஸஞ்சாரம் செய்து வருகிருர் என்று இந்த ச்லோகத்தின் பொருளாகும். நரன் என்ருல்,

नरतीति नरःप्रोक्तः परमात्मा सनातनः

𑌨𑌰𑌤𑍀𑌤𑌿 𑌨𑌰𑌃𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌨𑌾𑌤𑌨𑌃

நரதீதி நர:ப்ரோக்த: பரமாத்மா ஸனுதன:

என்பதினுல் ப்ரம்மமென்றே அர்த்தம் வெளியாகிறது.

नरति नयति 𑌨𑌰𑌤𑌿 𑌨𑌯𑌤𑌿 நரதி நயதி

அந்தந்த ஜீவன்களை அவரவர்கள் செய்த கர்ம பலத்தை அனுபவிக்கும்படி நயிப்பிக்கிறவர் என்று அர்த்தமாகிறது.

இவ்விதம் நர: என்றதால் சொல்லப்பட்ட பரப்ரம்மத்தினுடைய ஞானத்தை நாரம் என்று அறியவும். இதனால் ப்ரம்மஞானத்தை दा (தா) கொடுக்கிறவர் (உபதேசிக்கிறவர்) என்றும் நாரத: என்றபதத்திற்கு பொருள்.

गुशब्दः अन्धकारःस्यात् रुशब्दः तन्निरोधकः
अन्धकार निरोधित्वात् गुरुरित्यभिधीयते

𑌗𑍁𑌶𑌬𑍍𑌦𑌃 𑌅𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌃𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌰𑍁𑌶𑌬𑍍𑌦𑌃 𑌤𑌨𑍍𑌨𑌿𑌰𑍋𑌧𑌕𑌃
𑌅𑌨𑍍𑌧𑌕𑌾𑌰 𑌨𑌿𑌰𑍋𑌧𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌗𑍁𑌰𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇

குசப்த: அந்தகார:ஸ்யாத், ருசப்த: தந்நிரோதக:
அந்தகார நிரோதித்வாத் குருரித்யபிதீயதே

என்ற வசனத்தால் "கு" என்ற அக்ஷரத்தால் சொல்லப்பட்ட அக்ஞானத்தை "ரு" என்ற சப்தத்தால் நிவ்ருத்தி செய்கிறவனே குரு என்று சொல்லப்படுவான் என்ற பொருள் ப்ரகாசிக்கின்றது. இந்த தாத்பர்யம் நாரத: என்ற பதத்தில் அடங்கியிருப்பதினால், நாரத மஹர்ஷியா முன் சொன்னபடி குருவுக்கும் குரு என்பதில் யாதொரு ஸந்தேஹமுமேனவர் இல்லை. இவ்விதம் ஆசார்ய லக்ஷண பரிபூர்த்தியை நாரத மஹர்ஷியினிடத்தில் அறிந்து கொள்ளவும்.

ராமசரித்ரத்தை உபதேசம் செய்யக்கூடிய பரமாசார்யனுடைய லக்ஷணங்கள் முன் சொல்லப்பட்டது. சிஷ்யனுடைய லக்ஷணத்தையும் அறியவும்.

ப்ரக்ருதத்தில் வால்மீகி மஹர்ஷியே சிஷ்யனாக சொல்லப்படுவார். அவருக்கு தபஸ்வீ என்ற விசேஷணமானது முதல் ச்லோகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

तपः अस्य अस्तीति तपस्वी

𑌤𑌪𑌃 𑌅𑌸𑍍𑌯 𑌅𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌤𑌪𑌸𑍍𑌵𑍀

தப: அஸ்ய அஸ்தீதி தபஸ்வீ

தபஸ் என்ருல் ஸர்வஸங்க பரித்யாகம் என்ற ஸந்யாஸ மாகும்.

तस्मात् न्यासं एषां तपसां अतिरिक्तमाहुः

𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌸𑌮𑍇𑌷𑌾𑌂𑌤𑌪𑌸𑌾𑌮𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌮𑌾𑌹𑍁𑌃

தஸ்மாந்யாஸாமேஷாந்தபஸாமதிரிக்தமாஹு:

என்ற ச்ருதியினுல் ஸர்வஸங்க பரித்யாகியே, தபஸ்விகளுக்குள் முக்யமான தபஸ்வி என்று தெரிகிறது. ஸர்வஸங்க் பரித்யாகமாகிற ந்யாஸமோ சரணுகதியில் பர்யவஸானத்தை அடையும். சரணுகதிதான் ப்ரணிபாதம் என்று சொல்லப் படும்.

तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया ।

𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌪𑍍𑌰𑌣𑌿𑌪𑌾𑌤𑍇𑌨 𑌪𑌰𑌿𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍇𑌨 𑌸𑍇𑌵𑌯𑌾 ।

தத்வித்தி ப்ரணிபாதேன பரிப்ரச்னேன ஸேவயா ।

என்ற பகவத்கீதா வாக்யத்தால் ப்ரணிபாதம் என்ற ஸாஷ்டாங்க நமஸ்காரம், தத்வத்தை விநயத்துடன், உபதேசிக்க வேண்டும் என்ற ப்ரார்த்தனே, உபதேச ஸமயத்தை அனுஸரித்து குருவை ஸேவித்துக்கொண்டு இருப்பது என்ற சிஷ்ய லக்ஷணமும் சொல்லப்படுகிறது. இவைகள் வால்மீகி மஹர்ஷியினிடத்தில் இருந்துவருகிறதென்பதை **தபஸ்வீ** என்ற பதமானது ப்ரகாசப் படுத்துகிறது. **வால்மீகி:** என்ற பதத்தால் இந்த மஹர்ஷியைச் சொன்னதிலிருந்து, ராம மந்த்ரத்தை, இவர் ஜபம் செய்துகொண்டு வரும் காலத்தில் வல்மீக மென்ற புற்றுகள் சரீரத்தில் வ்யாபரித்ததாலும், அதை இம்மஹர்ஷி லக்ஷ்யம் செய்யாமல், தாரக மந்த்ர ஜபத்திலேயே, த்ருடமான மனதுள்ளவராக இருந்ததினுல், பரம வைராக்யம் இவரிடத்தில் இருந்துவருகிற தென்பதும் வெளியாகிறது. வைராக்யத்திற்கு காரணமான விவேக மில்லாமல், வைராக்யம் ஏற்படுவதற்கு ஸம்பவம் இல்லாததினுல்,

விவேகமும் இம் மஹர்ஷியிடம் இருந்து வருகிறது. **சமம், தமம், திதிக்ஷை, உபரதி, ச்ரத்தை,** ஸமாதானம் என்ற ஆறு குணங்களும், அதாவது சமாதிஷட்கஸம்பத்தியும் இவரிடம் இருந்து வருகிறதென்பது **வால்மீகி** என்ற பதத்தாலேயே வெளியாகிறது. முமுக்ஷுத்வம் என்ற நான்காவது ஸாதனமோ, இவரிடத்தில் ஸித்தமானது. இதனல் நித்யா, அநித்ய வஸ்து விவேகம், இஹ அமுத்ரார்த்த பல போகவிராகம், சமாதிஷட்கஸம்பத்தி, முமுக்ஷுத்வம் என்ற ஸாதன சதுஷ்டய ஸம்பத்தி மஹர்ஷியினிடம் குடியிருந்து வருகிறதென்பதும் **வால்மீகி:** என்ற பதத்தால் வெளியாகிறது.

இவ்விதம் தபஸ்வியான வால்மீகி மஹர்ஷி, தபஸ்வாத்யாய நிரதராயும், வாக்விதாம்வரராயும் முனிபுங்கவராயும் உள்ள நாரதர் என்ற பரமகுருவை **பரிபப்ரச்ச,** விசேஷமாக ப்ரச்னம் செய்தார் என்று ச்லோகத்தில் அடங்கிய ஸகல பதங்களின் தாத்பர்ய ஸங்க்ரஹார்த்தத்தை அறிந்துகொள்ளவும். இந்த ச்லோகத்தால் குருநமஸ்காரம் என்பது ஸ்பஷ்டமாக ஆகிவிட்டது. இஷ்டதேவதாநமஸ்காரமோ, தாரக ப்ரும்மமான ஸ்ரீராமனைச் சொல்லும் தப: என்ற சப்த ப்ரயோகத்தால் ப்ரம்மானுஸந்தானம் என்ற இஷ்டதேவதா நமஸ்காரமானது ஏற்பட்டுவிட்டது. இல்லாவிடில்,

तपःस्वाध्यायनिरतं தவஸ்வாத்யாயநிரதம் தப:ஸ்வாத்யாய நிரதம்

என்ற முதல் வாக்யத்தை

तपः, स्वाध्याय, निरतं தவ: ஸ்வாத்யாய, நிரதம்.

தப: ஸ்வாத்யாய, நிரதம்

என்று மூன்று பதங்களாகப் பிரித்துக்கொள்ளவும்.

निरतं நிரதம் நிரதம்

என்ற பதத்தால் நிரதிசயமான ஆநந்த ஸ்வரூபம்.

तपः 𑌤𑌪𑌃 தப: என்ருல்

तपोब्रह्मेतिव्यजानात् 𑌤𑌪𑍋𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿𑌵𑍍𑌯𑌜𑌾𑌨𑌾𑌤𑍍

தபோப்ரஹ்மேதிவ்யஜாநாத்

என்ற சாஸ்த்ரத்தால் ப்ரம்மம் என்று சொல்லப்படும்.

स्वाध्याय, सुष्ठु अध्याय स्वाध्याय

𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯, 𑌸𑍁𑌷𑍍𑌠𑍁 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯

ஸ்வாத்யாய, ஸுஷ்டு அத்யாய ஸ்வாத்யாய

நன்ருக த்யானம் செய்துகொண்டு என்ற அர்த்தம் வெளியாகிறது. இதனுல் நிரதிசய ஆனந்த ஸ்வரூபமாயும், ஞான ஸ்வரூபமாயும் உள்ள தாரக ப்ரம்மத்தை நன்ருக த்யானம் செய்துகொண்டு வால்மீகி மஹர்ஷியானவர், நாரத மஹர்ஷியை ப்ரச்னம் பண்ணினுர் என்ற தாத்பர்யம் ஏற்படுகிறபடியால், இஷ்டதேவதா நமஸ்காராத்மகமான மங்களமும் ஆசரிக்கப்பட்டதாகவே ஆகிவிட்டது.

परिपप्रच्छ 𑌪𑌰𑌿𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛 பரிபப்ரச்ச

என்பதினுல் விசேஷமாக கேட்டார் என்று சொல்லப்பட்டது. விசேஷமென்ருல் நாரதரை பூஜை செய்து பிறகு ப்ரச்னம் செய்தார். परि (பரி) என்ற பதத்திற்கு பூஜித்து என்று அர்த்தம். ஸ்ரீமத் ராமாயணமானது காயத்ரி என்ற மஹா மந்த்ரத்தின் அக்ஷர ஸங்க்யையை அனுஸரித்து 24,000 க்ரந்தமாக ஏற்பட்டதினுல், முதல் காயத்ரியின் அக்ஷரத்திற்கு, அதாவது त (த) காரத்திற்கு வ்யாக்யான ரூபமான, முதல் ஆயிரம் ச்லோகத்தின் ஆரம்பத்தில் 𑌤 காரத்தை ப்ரயோகம் செய்யவேண்டுமென்று நினைத்து ப்ரம்மத்தைச் சொல்லும் சப்தங்கள் அநேகங்களிருந்தாலும்,

"தப" சப்தத்தை முதலில் ப்ரயோகம் செய்து, க்ரந்தத்தின் ஆரம்பத்தில் त (த) காரமானது உபயோகப்படுத்தப்பட்டது. त (த) என்ற அக்ஷரத்தை சொல்கிறவனே, கேட்கிறவனே, இவ்விருவர்களுக்கும் அந்த त (த) காரமானது, துக்க ஸம்பந்தமில்லாத ஸௌஹத்தையே கொடுக்கிறது என்று त (த) காரத்தின் மஹிமையானது மாத்ருகாவர்ணத்தின் பெருமையைச் சொல்லும் சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு;

वस्तुलाभकरो णस्तु तकारस्सौख्यदायकः

வஸ்துலாபகரோ ணஸ்து தகாரஸ்ஸௌக்யதாயக:

வஸ்துலாபகரொ ணஸ்து தகாரஸ்ஸௌக்யதாயக:

என்ற சாஸ்த்ரமே ப்ரமாணமாகும். ण (ண) காரமானது அபூர்வ வஸ்துவின் லாபத்தைக் கொடுக்குமென்றும், त (த) காரமானது ஸௌக்யத்தைக் கொடுக்குமென்றும் அந்த சாஸ்த்ரத்தின் தாத்பர்யம். ஸாஹித்ய சூடாமணி என்ற க்ரந்தத்திலும்,

तकारो विघ्ननाशकः தகாரொ விக்னநாசக: **தகாரொ விக்நநாசக:**

என்று त (த) என்ற அக்ஷரத்தை உச்சரித்தால் ஸகல விக்னங்களும் நசிக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அத்துடன் त (த) காரமானது ஜலம் என்ற இரண்டாவது மஹா பூதத்தில் சேர்ந்தது. त (த) காரம் என்ற அக்ஷரத்திற்கு ப்ரஹஸ்பதி பகவானே தேவதையாவார். அதனால் त (த) காரத்தைப்போல் ஸௌஹத்தை கொடுக்கக்கூடிய வஸ்து வேறொன்றுமே யில்லை. இந்த மாத்ருகா வர்ணங்களை அறியாதவர்களுக்கு கவிதா சாதுர்யம் ஏற்பட ந்யாயமில்லை. ஸர்வஜகத்திற்கும் காரணமான பஞ்ச பூதங்களில் உத்பத்தி ஸ்தானீமானதினால், அந்த அக்ஷரங்களை மாத்ருகா வர்ணங்

கள் என்று சொல்லப்படுகிறது. அதில் क (க) வர்கமானது ஸூர்யனென்றும், च (ச) வர்கமானது சுக்ராசார்யாளென்றும், ट (ட) வர்கமானது புதன் என்றும், त (த) வர்கமானது ப்ரஹஸ்பதி என்றும், प (ப) வர்கமானது சனீச்வரன் என்றும், य (ய) வர்கமானது சந்த்ரன் என்றும், ष (ஷ) வர்கமானது அங்காரகனென்றும், ஏழு நவக்ரஹங்களும் மாத்ருகா வர்ணங்களில் அடங்கி இருக்கிறது. ராகுவும்கேதுவும் ஆஸுர க்ரஹமானதினால், தேவாளுடைய ஜாதியைச் சேர்ந்த மாத்ருகா வர்ணங்களில், அவ்விருவர்களுக்கு ப்ரவேசமில்லை. எல்லாவர்கங்களிலும் त (த) வர்கம் தேவகுருவானதினாலும், குருவின் அனுக்ரஹத்தைக்கொண்டு தான் ஸகல புருஷார்த்தங்களும் ஸித்திக்க வேண்டும் என்றதினாலும், ஸகல புருஷார்த்தங்களுக்கும் காரணமான त (த) என்ற அக்ஷரத்தால் மஹாமந்த்ரமான காயத்ரியின் ஆரம்பம் ஏற்பட்டது. அதே காயத்ரியின் அர்த்தத்தை, ஸ்ரீமத் ராமாயணம் ப்ரசாரப்படுத்துகிறதென்பதை விளக்க, ஸ்ரீமத் ராமாயணத்தின் ஆரம்பத்திலும் त (த) காரமானது உபயோகப்படுத்தப்பட்டது. காயத்ரிக்கும் ஸ்ரீமத் ராமாயணத்திற்கும் பொருள் ஒன்றானதினால் ராமாயணத்தில் ஒரு ச்லோகத்தின் ஒரு பதத்தைப் படித்தாலும், அதின் அர்த்தத்தைக் கேட்டாலும் காயத்ரி மஹா மந்த்ரத்தை விதிவத்தாக ஜபம் செய்த புண்யத்தை அடையலாம் என்பது ஸித்தமானது.

முன்சொன்ன ப்ரகாரம் வால்மீகி மஹர்ஷி, நாரத மஹர்ஷி இவ்விருவர்களின் ஸ்வரூபத்தைச் சொன்னதினால் சிஷ்ய ஜனங்களாலும், ஆசார்ய புருஷனாலும் நடந்துகொள்ளப்பட வேண்டிய ப்ரகாரம் வெளியாகிறதினால், அவ்விதமே குருவும் சிஷ்யனும் நடந்துகொள்ள வேண்டும் என்பது ஸித்தமாகிறது.

வால்மீகி மஹர்ஷியானவர் நாரத மஹர்ஷி என்ற பரமகுருவை சாஸ்த்ரப்ரகாரம் ஆச்ரயித்து விசேஷமாக ப்ரிச்னம்

செய்தார் என்று சொல்லப்பட்டது. அந்த ப்ரச்னத்தின் ப்ரகாரமானது, "இந்த பூலோகத்தில் இக்காலத்தில் அளவிட முடியாததான கல்யாண குணங்களால் அலங்கரிக்கப்பட்ட மஹாபுருஷன் யாராவது உண்டா? அப்படியானுல் அவன் யார்? அக்குணங்களிலும் வீர்யம், தர்மதத்வஞானம், உபகாரத்தை அறிவது, ஸத்யத்தைக் கைகொள்வது, அண்டினவனை ரக்ஷிப்பதில் த்ருடமான ஸங்கல்பம், ஸதாசாரஸம்பத்தி, தேககாந்தி, அஸூயை இல்லாமலிருத்தல், தேவாளும் யுத்த்தில் எதிரில் நிற்க பயப்படக்கூடிய பராக்ரமம், ஸர்வ பூதங்களுக்கும் நன்மையைச் செய்யும் ஸ்வபாவம், பெரிய பாண்டித்யம், எவ்வித கார்யத்தையும் செய்யும் ஸாமர்த்ய விசேஷம், பார்க்கப் பார்க்க திகட்டாத ஸௌந்தர்யம், இந்த்ரிய நிக்ரஹம், பொறுமை, முதலான குணங்கள் நிறைந்த மஹா புருஷன் யார்" என்றே வால்மீகி மஹர்ஷியின் ப்ரச்னத்தின் அபிப்ராயமாகும். இந்த குணங்கள் சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட உத்தமகுணங்களாகும். இக்குணங்கள் எந்த மஹா புருஷனிடத்தில் நிறைந்திருக்கிறதோ, அவன் மஹா விஷ்ணு என்பதில் ஆக்ஷேபணையே யில்லை. "இக்ஷ்வாகு வம்சத்தில் தசரத சக்ரவர்த்தியின் குமாரனுக அவதரித்து விளங்கும் ஸ்ரீராமனிடத்தில் மேற்காட்டிய கல்யாண குணங்களோ, மற்ற ப்ரக்ருதத்தில் சொல்லப்படாத ஹிரண்யச்மச்ருத்வம் முதலான குணங்களோ இருந்துவருகிறபடியால் ஸ்ரீராமன் விஷ்ணுவாகத்தான் இருக்கவேண்டுமென்று என் புத்தியில் தோன்றுகிறது. விஷ்ணுதானு? அல்லது ப்ரும்மா, ருத்ரன், முதலான தேவர்களுக்குள் யாராவது ஒரு தேவனு? மனிதனுயிருப்பதற்கு ந்யாயமில்லை. இந்த ஸந்தேஹத்தை எனக்கு நிவ்ருத்தி செய்து, க்ருதார்த்தனுகச் செய்யவேண்டும்" என்று வால்மீகி மஹர்ஷி நாரதரைக் கேட்டார்.

நாரதரோ,

इक्ष्वाकुवंशप्रभवः रामो नाम जनैः श्रुतः

ஜக்ஷ்வாகுவம்ஶப்ரபவ: ராமோ நாம ஜனை: ஶ்ருத:

இக்ஷ்வாகுவம்சப்ரபவ: ராமொநாம ஜநை: ச்ருத:

என்ற ச்லோகம்முதல் தத்வோபதேசம் செய்ய ஆரம்பிக்கிறார். வால்மீகி மஹர்ஷியைப் பார்த்து "ஹே மஹர்ஷே,

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थान मधर्मस्य तदात्मानं सृजाम्यहं ॥

𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத ।
அப்யுத்தான மதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம் ॥

என்ற சாஸ்த்ரத்தால் "துக்கத்திற்குக் காரணமான அதர்மம்மேலிட்டு தர்மத்திற்கு கொஞ்சம் குறைவு வரும் போது, நான் அவதரிக்கிறேன்" என்று பகவான் ப்ரதிக்ஞை செய்த ப்ரகாரம், இக்ஷ்வாகு வம்சத்தில் அவதரித்து ராமன், ராமன் என்று ஜனங்களால் கொண்டாடப்படும் புருஷன், மஹாவிஷ்ணுதான். ப்ரம்மா, ருத்ரன் முதலான தேவனல்ல. அவர்களுக்கும் மேலான மஹாவிஷ்ணுதான். ஜனகர் முதலான அநேக தார்மிகர்களான ராஜாக்களின் வம்சம் இருக்கும்பொழுது, இக்ஷ்வாகு வம்சத்தில் அவதரித்ததினுலேயே, ராமன் மஹாவிஷ்ணுதான் என்று தெரிகிறது. இக்ஷ்வாகு மஹாராஜாவோ, அநேக காலம் மஹாவிஷ்ணுவை ஆராதித்து அவருக்கு மஹாவிஷ்ணுவே ப்ரத்யக்ஷமாக தர்சனம் கொடுத்து, இக்ஷ்வாகு மஹாராஜாவும், விஷ்ணுவின் ப்ரஸாதத்தால் மஹாவிஷ்ணுவின் மூர்த்தி விசேஷமாகிய, "ரங்கநாத மூர்த்தம்" என்ற அபூர்வமான ஒரு சாளக்ராமத்தையும் விஷ்ணு நேரில் கொடுத்து பெற்றுக்கொண்டார். விஷ்ணுவும், "உன் வம்சத்தில் நானும் அவதரிக்கிறேன்" என்று வாக்களித்தார் என்ற கதையானது விஷ்ணு புராணத்தில் ப்ரஸித்தமாகத் தெரிகிறது. இதை அனுஸரித்தால் இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்து விளங்கும் ராமன், விஷ்ணு

தான் என்பதில் யாருக்கும் ஸந்தேஹம் ஏற்படாது. தாட கையை ஸம்ஹாரம் செய்தது, ஸுபாகு மாரீசன் என்ற இரண்டு ராக்ஷஸர்களைக் கொன்றது, விச்வாமித்ரரின் யக் ஞத்தை ரக்ஷித்தது, அஹல்யாதேவியை சாபத்தினின்றும் விமோசனம் செய்துவைத்தது, பரமசிவனுடைய வில்லை முறித்தது, பரசுராமரின் கர்வத்தைக் குறைத்தது, ஏழு ஸால வ்ருக்ஷங்களை ஒரே அம்பால் அடித்தது, மஹா பராக்ரமசாலி யான வாலியைக் கொன்றது, சமுத்ரத்தில் அணை கட்டியது, ராவணனுடைய மூலபலங்களோடு அஸஹாயனாக யுத்தம் செய்து ஜயித்தது, கொல்லமுடியாத ராவணனைக் கொன் றது, முதலான சரித்ரங்களைக் கவனித்தால் ஸ்ரீராமன் மஹா விஷ்ணுதான் என்பதில் ஆக்ஷேபணையே யிராது. ஜராமர ணம் இல்லாமலிருக்கும் தன்மை, அபூர்வமான சக்தி விசே ஷத்தோடு அலங்கரிக்கப்பட்டதன்மை, ஸ்வயமாக, அந்ய ஸஹாயமில்லாமல் எல்லா கார்யத்திலும் முன்நின்று ப்ரகா சிக்கும் மஹிமை, அளவற்ற ஆநந்தத்தை அடைந்து கொண் டிருப்பது ஸர்வஜகத்திற்கும் யஜமானனாகத் தான் இருப்பது, ஸர்வக்ஞனாக இருப்பது, சட்டத்திற்கு உள்பட்டுத் தான் நடப்பது, சாஸ்த்ரார்த்தத்தை அழகாகத் தான் பேசுவது, அபூர்வமான சோபையோடு கூடிக் கொண்டிருப்பது, ஸகல சத்ருக்களையும் அடியோடு ஒழிக்கும் ஸாமர்த்யத்தோடு கூடி னது, விசாலமாயும் உயர்ந்ததாயும் உள்ள தோளாப்பட்டைக ளோடு கூடின சரீரத்தால் அலங்கரிக்கப்பட்டிருப்பது, திரண்டு உருண்ட இரு அழகான கைகளோடு கூடியிருப்பது, சங்கம்போல் வெளுப்பாயும், மூன்று ரேகையோடு கூடின கழுத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் வைபவம், அழகான இருகன்ன ப்ரதேசத்தோடு கூடியிருப்பது, விசாலமான மார் போடு கூடினது, பயங்கரமான வில்லோடு கூடினது, மாம்ஸ பிண்டத்தால் மறைபட்ட மார்புஎலும்போடு கூடியிருப்பது, காமக்ரோதாதிகளை ஜயிப்பது, அழகான தலை, அழகான நெற்றி ப்ரதேசம், நிகரில்லாத பராக்ரமம் முதலான வைப வங்களால் கூடியிருப்பது முதலான ஒவ்வொரு குணங்

களேயும் கவனிக்கும்பொழுது ராமன் மஹாவிஷ்ணுதான் என்பதில் ஸந்தேஹமே ஏற்பட ந்யாயமில்லை.

இவ்விதமான மஹிமை உள்ள ஸ்ரீராமனுக்கு, தசரத சக்ரவர்த்தியான தகப்பனர் யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்ய இச்சித்தார். அவருடைய மனேவியான கைகேயி தேவி, தசரதரால் தனக்கு முன் கொடுக்கப்பட்ட இரண்டு வரனேயும் நினைத்துக்கொண்டு, தன் பிள்ளேயான பரதனுக்கு பட்டாபிஷேகத்தை ஒரு வரமுகவும், ஸ்ரீராமனுக்கு அரண்ய வாஸத்தை மற்றெரு வரமுகவும் யாசித்தாள். தசரத சக்ர வர்த்தியும் ஸத்யம் தவறக்கூடாது என்று பயந்து, ஸ்ரீராமனே அரண்யம் செல்லும்படி கட்டளேயிட்டார். ராமனும் பிதா வின் வாக்யத்தை பரிபாலனம் செய்வது முக்யதர்மமென்று நினேத்து, கைகேயி தேவிக்கு ப்ரியத்தைச் செய்யும் உத்தே சத்துடன் அரண்யம் சென்றூர். ஸௌமித்ரையின் புத்ரனை லக்ஷ்மண ஸ்வாமியும்,

ज्येष्ठ भ्राता पितृसमः ஜ்யேஷ்ட ப்ராதா பித்ருஸம:

ஜ்யேஷ்ட ப்ராதா பித்ருஸம:

என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து ராமனேடு அரண்யம் சென்றூர். ஜனக மஹாராஜாவின் புத்ரியான ஸீதா தேவி என்ற ராமனின் பார்யையும், பாதிவ்ருத்ய தர்மத்திற்குக் கட் டுப்பட்டு, ராமனே விட்டு பிரிந்திருக்க மனமில்லாமல், சந்த் ரனே அனுஸரித்து ரோஹிணி போகிறதுபோல், ராமனே அனுஸரித்து அரண்யம் சென்றுள்.

இம்மூவரும் அரண்யம் புறப்பட்டுப் போகும் ஸமயத் தில், பட்டணத்தில் உள்ள ஜனங்களும், தசரத சக்ரவர்த்தி யும், ராமனேப் பிரிந்திருக்க மனமில்லாமல் கொஞ்சதூரம் பின்னேடு அனுஸரித்து ஓடினூர்கள். ஆகிலும், அது ஸாத் யப்படாமல் நின்றுவிட்டார்கள். ராமனே, லக்ஷ்மண னேடும், ஸீதையோடும், கங்கையின் கரையிலிருக்கும் ச்ருங்க பேரிபுரம் என்ற நகரம்வரையில் ரதத்தில் ஏறிக்கொண்டு

போனாலும், ச்ருங்கபேரிபுரம் சென்றவுடன், ரதத்தைத் திரும்பி அயோத்திக்கே கொண்டுபோகும்படி, ஸாரதியான ஸுமந்த்ரருக்குக் கட்டளையிட்டார். பிறகு, குஹனுக்கு அனுக்ரஹம் செய்துவிட்டு, குஹனுல் கொண்டுவரப்பட்ட ஓடத்தில் ஏறிக்கொண்டு கங்கையின் தென்கரைக்கு வந்து, அநேக நதிகள், நதங்கள் இவைகளையும் தாண்டிவிட்டு, பரத்வாஜாச்ரமத்தில், ப்ரத்வாஜ மஹர்ஷியையும் தர்சனம் செய்து, அவருடைய உத்ரவினல் சித்ரகூட பர்வதத்தில் ஓர் ஆச்ரமம் நிர்மாணம் செய்துகொண்டு, ஸுகமாக ராமன் லக்ஷ்மணன் ஸீதை இம்மூவர்களும் வஸித்தார்கள். ராமன் சித்ரகூட பர்வதத்தில் வஸிக்கும் காலத்தில் தசரத சக்ரவர்த்தி ராமனைவிட்டு பிரிந்திருக்கும் துக்கத்தாலேயே, மனம் வர வர தளர்ந்து உயிரையும் இழந்து ஸ்வர்கலோகம் சென்ருர். பிறகு வஸிஷ்டர் முதலான மஹர்ஷிகள், பரதனை ராஜ்ய பரிபாலனம் செய்யும்படி வற்புறுத்தியும், பரதஸ்வாமியானவர் ஸ்ரீராம சரணாரவிந்தத்திலுள்ள பக்தியின் பெருமையால், மறுத்துவிட்டார். உடன் ஸகல ஸேனைகளுடன் சித்ரகூட பர்வதம் வந்து ஸ்ரீராமனை ராஜ்யத்திற்கு, வினயத்துடன் பரதஸ்வாமி அழைத்தார். ஆகிலும், ஸ்ரீராமன் பித்ருவாக்ய பரிபாலனம் என்ற தர்மத்தில் ஈடுபட்டவரானதினுல், தான் ராஜ்யத்திற்கு வரமுடியாதென்று சொல்லிவிட்டு, தனது இரு 'பாதுகைகளை' பரதஸ்வாமியிடம் கொடுத்து, "இப்பாதுகை மூலமாக நீதான் ராஜ்யபரிபாலனம் செய்துவர வேண்டு" மென்ருர். பரத ஸ்வாமியும் ஸ்ரீராமனுடைய உத்தரவை சிரஸால் வஹித்து அயோத்திக்கு வந்து ஸ்ரீராமன் இல்லாமல் அயோத்தியில் இருக்க மனமில்லாமல், அயோத்திக்கு ஸமீபத்திலுள்ள நந்திக்ராமத்தில் பாதுகையிடம் இக்ஷ்வாகு வம்ச ராஜ்யஸ்ரீயை அபிஷேகம் செய்து, ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார். ஸ்ரீராமர் என்று வருவார் என்ற ஆவேசத்தாலேயே, இராத்தூக்கமில்லாமலும், ஆஹாராதிகள் இல்லாமலும், பதினன்கு வருஷங்கள் என்று முடியும் என்று தபித்து வந்தார்.

ஸ்ரீராமனே, சித்ரகூடத்தை விட்டு பரதன் சென்ற வுடன், 'இனி நாம் இங்கு இருக்கக்கூடாது. ஜனங்களுக்கோ நாம் இருக்குமிடம் தெரிந்துவிட்டது. அடிக்கடி ஜனங்கள் இங்கு வருவார்கள்' என்று நினைத்து சித்ரகூட பர்வதத்தி லிருந்து தண்டகாரண்யம் என்ற பெரிய காட்டில் ஸஞ்சரிக்க ஆரம்பித்தார். அக்காட்டில் ப்ரவேசித்தவுடன், விராதன் என்ற ஒரு ராக்ஷஸனைக் கொன்று, பிறகு சரபங்க மஹர்ஷியை தர்சனம் செய்தார். சுதிஷ்ண மஹர்ஷி, அகஸ்த்ய மஹர்ஷி யின் தம்பியான இத்மவாஹர் என்ற மஹர்ஷி, இவர்களை தர் சனம் செய்துகொண்டு, க்ரமமாக அகஸ்த்ய மஹர்ஷியின் ஆச்ரமம் சென்று அகஸ்த்யரை தர்சனம் செய்தார். அகஸ்த் யரோ, தனது ஆச்ரமத்தில் ஸ்ரீராமனை வரவேற்று, விதிவத் தாக பூஜித்து, தனது ஆச்ரமத்தில் வெகு காலமாக ரக்ஷிக் கப்பட்டு வந்த அபூர்வமான ஒரு வில்லையும், கத்தியையும், பாணங்களால் நிரம்பிய இரு அம்பராத்தூணியையும்ஸ்ரீராம னுக்குக் கொடுத்து அனுக்ரஹம் செய்தார். பிறகு அகஸ்த்ய ருடைய உத்ரவால் கோதாவரி நதி தீரத்தில் ஐந்து வடவ்ரு க்ஷங்களால் அலங்கரிக்கப்பட்ட ஸ்தானத்தில், (பஞ்சவடி என்ற இடத்தில்)ஆச்ரம நிர்மாணம் செய்துகொண்டு ஸுகஹ மாக வஸித்துவந்தார்கள். இந்த ஸந்தர்ப்பத்தில் அநேக மஹர்ஷிகள், ராக்ஷஸர்கள் மூலமாக தங்களுக்கு ஏற்பட்ட குறைகளைத் தெரிவித்துக்கொண்டு, ஸ்ரீராமன் மூலமாக தங் களது ஸௌக்யத்தை எதிர்பார்த்தார்கள். ஸ்ரீராமனும் மஹர்ஷிகளுக்கு எதிரில் ராக்ஷஸர்களை வதம் செய்து, மஹர் ஷிகளுக்கு ஸௌக்யத்தைக் செய்வதற்கே தனது அவதார மென்று ப்ரதிக்ஞை செய்தார். உடன், சூர்பணகை என்ற ராக்ஷஸ ஸ்த்ரீயானவள் ராமனிடமும், லக்ஷ்மணனிடமும் ஆபாஸமான சேஷ்டையைச் செய்ததினால், ராமனால் காது, மூக்குகள் அறுபட்டு மானபங்கப்படுத்தப்பட்டாள். சூர்ப ணகையின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு, அவளுடைய ஸஹோதரர்களான கரன், தூஷணன், த்ரிசிரஸ் என்ற மூவர் களும் 14000, கால்படை ஸேனைகளுடன் ஸ்ரீராமனுடன்

போர் செய்ய எதிர்த்துவந்தார்கள். ஸ்ரீராமனும் லக்ஷ்மண னைக்கூட ஸஹாயமாக எதிர்பார்க்காமல், ஒரே முஹூர்த்தத் தில் 14,000 ராக்ஷஸப்படைகளோடுகூட கர தூஷண த்ரி சிரஸ் என்ற மூன்று பேர்களையும் வதம் செய்தார். இதைக் கேட்ட ராவணன் மஹா கோபங்கொண்டு ராமனை எப்படி யாவது ஜயிக்க மாரீசனை ஸஹாயமாக எதிர்பார்த்தான். மாரீசன் ஸ்ரீராமனிடம் விரோதம் வேண்டாமென்று எவ்வள வோ, சொல்லியும், ராவணன் கேட்கவில்லை. மாரீசனையும் ப்லாத்காரம் செய்தான். மாரீசனும் நிர்பந்தத்திற்கு உட் பட்டு இணங்கினான். ராவணனும் மாரீசனை அழைத்துக் கொண்டு, மாரீசனை மாயையினால் மான்போல் வேஷம் தரித் துக் கொள்ளச்சொல்லி, ஸீதையை ப்ரலோபப்படுத்தி ராம னையும் லக்ஷ்மணனையும், ஸீதையைவிட்டு வெகுதூரம் வஞ்ச னையினால் இழுத்துக்கொண்டு போகும்படி செய்தான். ஸ்ரீ ராமன் மாரீசனை ராக்ஷஸன் என்று தெரிந்துகொண்டு அவனை வதித்து மாரீசன் மாண்டாலும், முன்பு மாரீசனை அனுஸரித்து ராமன் செல்ல, ராமனைத் தேடி லக்ஷ்மணன் செல்ல, இருவர்களும் ஆச்ரமத்தில் இல்லாமல் போகும்படி நேர்ந்தது. ஸீதை தனியாக இருந்தாள். இந்த ஸந்தர்ப்பத் தை தெரிந்துகொண்டு, ராவணன் ஸீதையை அபஹரித்தான்.

ஸீதைக்கு ரக்ஷகனாக ஸமீபத்திலுள்ள வடவ்ருக்ஷத்தில் இருந்துவந்த ஜடாயுஸ் என்ற பக்ஷி ராஜனையும் கொன்று விட்டு ராவணன் ஸீதையுடன் லங்கா நகரம் சென்றான். பிறகு ராமன் மாரீசனைக் கொன்றுவிட்டு லக்ஷ்மணனோடுகூட ஆச்ரமத்திற்கு திரும்பிவந்து, ஆச்ரமத்தில் ஸீதையைக் காணாமல் ஸீதையைத் தேடிக்கொண்டு போகும் ஸமயத்தில் தனது ஆச்ரமத்தைப் பாதுகாத்துவந்த ஜடாயுஸ்ஸானது ம்ருதப்ராயமாக பூமியில் சுருண்டுகிடப்பதைப் பார்த்து, பக வானான ஸ்ரீராமன் ஜடாயுஸ் மூலமாக ராவணன் ஸீதையை அபஹரித்துக் கொண்டுபோன விஷயத்தைத் தெரிந்து கொண்டு, ஜடாயுஸ்ஸானது இவ்விஷயத்தை ஸ்ரீராமனிடத்

தில் சொன்னவுடன், ப்ராணனைவிட்டுவிட்டதானதால், ஜடாயுஸ்ஸுக்கு ராமனே தகனம் செய்து ஸ்வர்க்க பதவியைக் கொடுத்துவிட்டு ஒவ்வொரு மார்க்கமாக ஆரண்யத்தில் ஸீதையை தேடிவந்தார். இந்த ஸந்தர்ப்பத்தில் கபந்தன் என்ற ராக்ஷஸனைக் கண்டு அவனையும் வதித்தார். ஸ்ரீராமனுடைய பாணத்தால் கொல்லப்பட்டு ராமனாலேயே தகனம் செய்யப்பட்ட கபந்தனும் ஸ்வர்க்கலோகம் சென்றான். போகும் பொழுது, சபரி என்ற ஓர் பக்திமதியான ஸ்த்ரீயை ராமனுக்குத் தெரிவித்து, "அந்த அம்மாளின் ஆச்ரமம் ஸமீபத்தில் இருக்கிறது, அங்கு சென்று அவளுக்கு தர்சனம் கொடுக்க வேண்டு"மென்று ப்ரார்த்தித்துக் கொண்டான். அப்படியே ராமனும், லக்ஷ்மணனுடன் சபரியின் ஆச்ரமம் சென்று சபரிக்கு மோக்ஷத்தை அளித்துவிட்டு, பம்பா தீரத்தில் ஹனுமானுடன் ஸங்கமத்தை அடைந்தார். ஹனுமான் மூலமாக, ஸுக்ரீவனோடுகூட அக்னிஸாக்ஷிகமாக ஸக்யம் செய்து கொண்டு, தன் வ்ருத்தாந்தத்தை ஸுக்ரீவனிடம் தெரிவித்தார். ஸுக்ரீவனும், பரமஸந்தோஷத்துடன் தான் பம்பா தீரத்திலுள்ளரிச்யச்ருங்கபர்வதத்தின் சிகரத்தில் வஸித்துவருவதற்கு காரணமான, வாலியின் விரோதத்தை ஆதிமுதல் ராமனுக்குச் சொன்னான். ராமன், வாலியை வதித்து கிஷ்கிந்தையில் ஸுக்ரீவனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து வைப்பதாக ப்ரதிக்ஞை செய்தார். ஸுக்ரீவனும், ராவணனைக் கொன்று ஸீதையை ராமனுடைய வசத்தில் கொண்டுவந்து சேர்க்க, தான் ஸஹாயம் செய்வதாக ப்ரதிக்ஞை செய்தான். ஆனால், ஸுக்ரீவன், வாலியைக் கொல்ல ஸ்ரீராமனுக்கு சக்தி உண்டோ இல்லையோ என்று ஸந்தேஹப்பட்டு வாலியின் பலத்தை ராமனிடத்தில் வர்ணித்து, ராகவனின் பராக்ரமத்தை பரீக்ஷிப்பதற்கு யத்னம் செய்தான். துந்துபி என்ற ஓர் அஸுரன் வாலியுடன் யுத்தம் செய்த காலத்தில் எருமையின் ரூபத்தை க்ரஹித்துக்கொண்டு, பர்வதாகாரமாக இருந்துவந்தான். வாலியோ துந்துபி என்ற அஸுரனைக் கொன்று, வெகு

தூரத்திற்கப்பால், ரொம்பவும் அலக்ஷ்யமாக தூக்கி எறிந்தான். அச்சரீரமானது, ரிச்யச்ருங்க பர்வதத்தின் ஸமீபத்தில், தற்காலத்திலும் இருந்து வந்ததுது. ஸுக்ரீவன் ராமனைப் பார்த்து "இந்த பெரிய பூதத்தைத் தங்களால் புரட்ட முடியுமா! அப்படியானுல் வாலியைக் கொல்லும் பலம் தங்களுக்கு இருக்கிறதென்று நான் நம்புவேன்" என்று சொன்னுன். ராமனும், உடன் தன் இடதுகால் கட்டை விரலின் நுனியால், அம்மஹாபூதத்தை தூக்கி வீசி எறிந்தார். அது 100 மைலுக்கப்பால் போய் விழுந்தது. வாலியோ இந்த அஸுரனை தனது முழுகாலால் தூக்கி எறிந்தான். 200 வில் அடி தூரம்தான் அது சென்று விழுந்தது. ராமனே முழுக்காலை உபயோகப்படுத்தவில்லை. பாதத்தில் உள்ள கட்டைவிரலை மாத்ரம் உபயோகப்படுத்தினர். ஆனுல் 100 மைல் தூரத்திற்கப்பால் போய் விழுந்தது. இதனுல் வாலியைக் காட்டிலும் ராமன் எவ்வளவோ பலத்தில் மேலானவர் என்பதை அறிந்துகொள்ளலாம். ஸுக்ரீவனுடைய மனதில் அவ்வெண்ணம் உதிக்கவில்லை.

பிறகும், ராமனுடைய பலத்தில் ஸந்தேஹம்தான் உண்டாயிற்று. "ராமா, வாலி வெகு வர்ஷங்கள் யுத்தம் செய்து ரொம்ப ச்ரமத்தை அடைந்திருக்கும்பொழுது, இம்மஹாபூதத்தை காலால் தூக்கி எறிந்தான். அப்பொழுதோ இம்மஹாபூதம் மாம்ஸக் கொழுப்புடனும், ரத்தத்தோடும் த்ருடமாக இருந்தது. இப்பொழுது வெகுகாலமாக வெய்யிலில் உலர்ந்துபோனதால் எலும்பு மாத்ரம்தான் மிச்சம். நீயும், ச்ரமமில்லாமல் இருக்கும் தருணம். இதனுல் நீ தூக்கி எறிந்ததினின்றும் வாலியைக் காட்டிலும், நீ பலவான் என்று நான் எப்படி நம்புவேன்" என்ருன் ஸுக்ரீவன். இவ்விதம் சொல்லிவிட்டு ஸமீபத்தில் உள்ள ஏழு பனைமரங்களை ராமனுக்குக் காட்டினுன். "அவ்வேழு வ்ருக்ஷங்களும் யுகக் கணக்காக இருந்துவருகின்றன. எவ்விதமான மஹா

பராக்ரமசாலிகளாலும், அவ்விருக்ஷங்களை பேதிக்க முடியவில்லை. நீ அவ்விருக்ஷங்களை பேதித்துவிட்டால், உன் பலத்தில் எனக்கு ஸம்சயம் ஏற்படாது" என்றான். ராமனும் அக்னிஸாக்ஷிகமாக செய்துகொண்ட ஸ்நேஹ பாவத்தை ஒட்டி, ஸுக்ரீவனுக்கு தன் பலத்தில் நம்பிக்கை உண்டாகும்படி செய்வதற்காக ஒரே பாணத்தை அந்த ஏழு வ்ருக்ஷங்களிலும் ப்ரயோகம் செய்தார். அந்த பாணமானது ஏழு வ்ருக்ஷங்களையும் சின்னபின்னமாகச் செய்துவிட்டு ஸமீபத்தில் உள்ள மலைகளையும் பின்னமாக்கியது. பாதாளலோகம்வரை சென்று, மறுபடியும் திரும்பிவந்து, ஸ்ரீராமனுடைய அம்பராத்தூணியில் தானாகவே ப்ரவேசித்துக்கொண்டது. அதைப் பார்த்த ஸுக்ரீவனுக்கு உண்டான ஆநந்தத்தைச் சொல்லி முடியாது. ராமனை மஹாபலிஷ்டன் என்று தீர்மானித்து விட்டான். ராமனுக்கு எதிரில் வாலி நிற்க முடியாதென்ற எண்ணத்தைக் கைகொண்டு, ராமனுடன் கிஷ்கிந்தை சென்று, வாலியை ஸிம்ஹநாதத்தால் யுத்தத்திற்கு அழைத்தான். வாலியும் அதைக்கேட்டு பரமகோபத்துடன் யுத்தத்திற்கு கிளம்பிவந்தான். தாரை என்ற அவன் தர்மபத்னியோ, "ஸுக்ரீவன் இவ்வளவு கம்பீரமாகவும் தைர்யமாகவும் தங்களை யுத்தத்திற்கு அழைக்கமாட்டான். யாரோ மஹா புருஷனுடைய ஆச்ரயம் ஸுக்ரீவனுக்கு இருப்பதாக தெரிகிறது. ஆகையால் இதுஸமயம் யுத்தத்திற்கு போகவேண்டா" மென்று வெகு ப்ரகாரமாகத் தடுத்தாள். வாலியோ மஹாவீரனானதினால் அந்த ஸ்த்ரீயின் வார்த்தையைக் கேட்காமல்,தாரையை ஸமாதானம் செய்துவிட்டு யுத்தத்திற்குக் கிளம்பிவந்தான். ராமனும் ஸுக்ரீவனுக்குச் செய்த ப்ரதிக்ஞையை ரக்ஷிப்பதற்காக ஒரே பாணத்தால் வாலியைக் கொன்றார். ஸுக்ரீவனையும் கிஷ்கிந்தையில் ராஜ்யாபிஷேகம் செய்துவைத்து அரசனாகச் செய்தார்.

பிறகு ஸுக்ரீவன், ராமன் தனது ப்ரதிக்ஞையை நிறைவேற்றிவிட்டார், இனி, நமது ப்ரதிக்ஞையைக்

க்காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன், அங்காங்கு மலைகளிலும் காடுகளிலும் வசித்துவரும் வானரங்களை அழைத்து நான்கு திக்குகளிலும் ஸீதையைத் தேட கூட்டம் கூட்டமாக வானரஸேனைகளை அனுப்பினான். தெற்கு திக்கை நோக்கிவந்த வானரஸேனைகளில் முக்ய மாயும், பலவானுமாயுமுள்ள ஹனுமானானவர் ஜடாயுஸ் ஸின் ப்ராதாவான "ஸம்பாதி"யின் வார்த்தை யால், 1000 மைலுக்கப்பால் நடு ஸமுத்ரத்தில் இருக்கும், ராவணனால் பரிபாலிக்கப்பட்டு வரும் லங்கா நக ரம் சென்று, அந்த நகரத்தில், அசோகவனமென்ற உத்யான வனத்தில், ராமனை விட்டு பிரிந்திருக்கும் காரணத்தால், பரம துக்கத்துடன் விளங்கிவரும் ஸீதையைக் கண்டார். தான் ராமதூதன் என்று ஸீதையிடம் சொல்லி, ஸீதைக்கு தன் னிடம் நம்பிக்கை ஏற்பட, ராமனாலேயே தன்னிடம் கொடுக் கப்பட்ட "ராம" என்ற அக்ஷரங்களால் அலங்கரிக்கப்பட்ட முத்ரமோதிரத்தைக் கொடுத்து, ஸீதைக்கு நம்பிக்கையை உண்டுபண்ணி, ராமன் நம்புவதற்காக ஸீதையினிடமிருந்து திவ்ய சூடாமணியையும் பெற்றுக்கொண்டு, ஸீதாதேவியை ஸமாதானப்படுத்திவிட்டு "அதிசீக்ரமாக ஸ்ரீராமனுடைய ஆளுகையில் இருக்கும் கிஷ்கிந்தை என்ற ராஜ்யத்திற்கு அதிபதியான ஸுக்ரீவனுடைய வானர ஸேனைகள் கூட்டம் கூட்டங்களாக லங்காநகரத்தை சூழ்ந்துகொண்டு ராவணனை யும் பரிஜனங்களோடுகூட ஒழித்துவிட்டு தங்களுக்கு பரம ஸௌபாக்யம் உண்டாகும்படி, நல்லகாலம் வரப்போகி றது, தாங்கள் இருக்கும் இடம் தெரியாததால்தான் இவ் வளவு காலம் விளம்பம் ஏற்பட்டது" என்று சொல்லி ஸீதையை ஆச்வாஸப் படுத்திவிட்டு, ராமனுடைய ஸமீபம் திரும்பிப்போக யத்னம் செய்தார். ராவணனுக்கும் தான் வந்து போன விஷயம் தெரியவேண்டுமென்ற எண்ணத் துடன் ! அசோகவனத்தை முழுமையும் ஸீதை இருக்கும் "சிம்சுபா" வ்ருக்ஷம் ஒன்றை மாத்ரம் மீதியாக வைத்துவிட்டு மற்ற எல்லாவற்றையும் அழித்துவிட்டு லங்கா நகரத்தின்

முக்யமான கோட்டைவாசலின் கோபுரத்தில் ஏறிக்கொண்டு "ராமன் ஸர்வோத்க்ருஷ்டனாக விளங்கி வருகிறான்" என்று ராமனுடைய ப்ரசம்ஸையை கோஷித்துக்கொண்டு விளங்கி வந்தார். ஆஞ்சனேயஸ்வாமியைப் பிடித்து காராக்ரஹத்தில் அடைக்க 80,000 ராக்ஷஸஸேனைகள் வந்தன. அவர்களை அக்கோபுரத்திலுள்ள தூணாக நிறுத்தியிருப்பவைகளை பிடுங்கிக்கொண்டு ஒரே அடியில் த்வம்ஸம் செய்துவிட்டார். பிறகு ஐந்து முக்யமான ஸேனா நாயகர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களையும் வதித்தார். பிறகு வந்த ஏழு மந்த்ரிகளின் குமாரர்களையும் கொன்றார். பிறகு ராவணனுடைய இரண்டாவது குமாரனான அக்ஷய குமாரன் போர் செய்ய வந்தான். அவனுடன் சில காலம் வேடிக்கையாக யுத்தம் செய்துவிட்டு அவனையும் கொன்றார். பிறகு இந்த்ரஜித் வந்தான். ஹனுமாரோடு வெகு காலம் யுத்தம் செய்து அவரைக்கொல்ல முடியாதென்று தெரிந்து, ப்ரம்மாஸ்த்ர ப்ரயோகம் செய்து அவரைக் கட்டினான். ஹனுமாரும் ப்ரம்மாவின் வரத்தால், ப்ரம்மாஸ்த்ரத்திற்கு கட்டுப்படக் கூடாதவரானாலும், ராவணனைப் பார்த்து சில வார்த்தைகள் சொல்லவேண்டுமென்ற இச்சையால், ப்ரம்மாஸ்த்ரத்திற்கு கட்டுப்பட்டவர்போல் நடித்து வந்தார். இந்த்ரஜித்தும், ராக்ஷஸ துருப்புகளுடன் ஆஞ்சனேயரை பாசங்களால் கட்டி ராவணனுடைய ஸந்நிதிக்கு கொண்டுபோனான்.

ஆஞ்சனேய ஸ்வாமியோ, ராவணனை த்ருணமாக நினைத்து "ராவணா! நீ ப்ரும்மாவின் வம்சத்தில் பிறந்தால் என்ன, வேத சாஸ்த்ரங்களைப் படித்து என்ன ப்ரயோஜனம்! செய்கிற கர்மானுஷ்டானங்கள் எல்லாம் நிஷ்பலம் தான். "பரதாரகமனம்" என்ற கடோரபாபம் தொலைந்தாலல்லவா, நீ க்ஷேமத்தை அடைவாய். லோகமாதாவான ஸீதையினிடத்தில் உன் விஷமம் செல்லுமா. அவளை அபஹரித்ததே மஹா பாபம். ராமனுடைய ஸந்நிதியில் ஸீதையைக் கொண்டு விட்டு, ராமனை சரணாகதி செய்து, மன்னிப்

புக் கேட்டுக்கொண்டால்தான், நீ க்ஷேமத்தை அடைய
லாம். இல்லாவிடில் ராக்ஷஸப் பூண்டே அழிந்துவிடும்''
என்று கர்ஜித்தார். ராவணன் பரம கோபத்தை அடைந்து
ஹனுமாரைச் கொல்வதற்கு ஆக்ஞாபனம் செய்துவிட்டான்.
விபீஷணஸ்வாமி பரமபக்த சிரோமணியானதால், ஆஞ்ச
னேயரின் மஹிமையை அறிந்து அவரிடத்தில் அபசாரம்
செய்ய ஆரம்பித்தால் இப்பொழுதே ராவணன் குலத்துடன்
நாசத்தை அடைவான் என்ற எண்ணத்தை உள்ளுக்குள்
வைத்துக்கொண்டு, தூதர்களை வதம் செய்யக்கூடாது, தண்
டித்து விட்டுவிட வேண்டும் என்று ஸமாதானம் செய்தார்.
ராவணனும் விபீஷணருடைய வார்த்தைக்கு இணங்கி தூத
புருஷர்களை வதிக்கக்கூடாது என்பதை தானும் அறிந்தவ
னதால், அந்த ஸங்கல்பத்தை விட்டு, வானரங்களுக்கு
வால் முக்யமானதினால், வாலில் நெருப்பை வைத்து பொசுக்க
ஆக்ஞாபித்தான். அதைக் கேட்ட ஆஞ்சனேயர் அது
தனக்கு அனுகூலம்தான் என்று ஸந்தோஷப்பட்டார். ராவ
ணனுடைய ஆக்ஞைக்கு இணங்கி ராக்ஷஸர்களும் ஆஞ்ச
னேயரின் வாலில் துணிகளைச் சுற்றி, எண்ணெயில் நனைத்து
தீயை வைத்தார்கள். ப்ரளய காலாக்னிபோல் எரிந்தது.
ராஜவீதியில் பேரீ வாத்யங்களுடன், ஆஞ்சனேய ஸ்வாமியை
கயிற்றால்கட்டி இழுத்துக்கொண்டு வேடிக்கை செய்தார்கள்.
கொஞ்சதூரம் சென்றவுடன் மஹா புருஷனான ஆஞ்சனேய
ஸ்வாமி அணிமா என்ற ஸித்தியை அனுஸரித்து, தனது உரு
வத்தை மிகவும் சிறியதாகச் செய்துகொண்டார். உடன்
கட்டுகள் எல்லாம் தளர்ந்துவிட்டது. ராக்ஷஸர்களை வஞ்
சித்துவிட்டு, மணிக்கூண்டுமேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்
தார். ஒவ்வொரு ராக்ஷஸர்களின் வீடுகளிலும், தீயை வைத்
துச் சாம்பலாக ஆக்கி, லங்கா நகரம் முழுமையும் தீக்கிரை
யாகச் செய்துவிட்டார். ஸீதை இருக்குமிடம், விபீஷண
ஸ்வாமியின் க்ருஹம் இந்த இரண்டு ஸ்தானம்தான், அக்னி
யால் ஆக்ரமிக்கப்படாததான இடம். இவ்விதம் லங்கையை
எரித்துவிட்டு, ஸமுத்ரத்தில் வால் நெருப்பையும் அணைத்து

விட்டு, மறுபடியும் ஸீதையிடம் சென்று, ஸீதை ஸௌக்ய மாக இருப்பதைக் கண்டு ஆனந்தித்து விடைபெற்றுக் கொண்டு ராமரிடம் வந்து சேர்ந்தார். உடன் ராமனும் ஆஞ்சனேயரைக் கண்டு ஸீதையின் வ்ருத்தாந்தத்தைச் சொல்லவேணுமென்று கேட்க, ஆஞ்சனேய ஸ்வாமியும் அஞ்சலீபந்தத்துடன் ஸீதையின் வ்ருத்தாந்தத்தை ஆரம்ப முதல் சொல்லி, ஸீதையால் கொடுக்கப்பட்ட சூடாமணியையும் ஸ்ரீராமனிடம் கொடுத்து ஸீதையினுடைய விரஹதுக்கத்தையும் சொன்னார்.

இந்த ஸந்தர்ப்பத்தில், லங்கா நகரத்தில் ராவணன் மந்த்ராலோசனை செய்து, விபீஷணஸ்வாமியினுடைய அபிப்ராயம் தனது அபிப்ராயத்திற்கு ஒத்து இல்லாததால் ராவணனால் ராஜ்யத்தைவிட்டு போகலாம் என்று தள்ளப்பட்டு, விபீஷண ஸ்வாமி நான்கு ராக்ஷஸர்களுடன் ராமனிடம் வந்து, ராமனை ச்ரணாகதி செய்து, ராமகோஷ்டியில் சேர்ந்துகொண்டார். ராமன், லக்ஷ்மணன், விபீஷண ஸ்வாமி, ஸுக்ரீவன், ஆஞ்சனேயர், வானரஸேனை இவைகளுடன் லங்கா நகரம் சென்று ராவணனோடு போர்செய்யும் உத்தேசத்துடன் புறப்பட்டு ஸமுத்ரதீரம் வந்து சேர்ந்தார். ஸமுத்ர ராஜனை தனக்கு வழி விடும்படி ப்ரார்த்தித்துக் கொண்டார். ஸமுத்ர ராஜனோ, அஹங்காரத்தால் ராமனுக்கெதிரில் வராமலே இருந்தார். ராமன் பரம கோபம் கொண்டு, உக்ரமான பாணங்களால் ஸமுத்ர ஜலத்தை சோஷிக்கச் செய்ய யத்னம் செய்தார். பிறகு ஸமுத்ர ராஜன் பயந்து ராமனுக்கு ப்ரத்யக்ஷமாக தன் ஸ்வரூபத்தைக் காட்டி "வானரஸேனைகள் மூலமாக அணைபோடச் சொன்னால் நான் அதற்குக் கட்டுப்பட்டு நிற்கிறேன். அணையை கரைக்கவில்லை" என்று ப்ரார்த்தித்துக் கேட்டுக் கொண்டார். ஸ்ரீராமனும் அதற்கு ஸம்மதித்து நளன் என்ற வானர ராஜனை, அணைபோடுவதில் ப்ரதான கார்ய நிர்வாஹகனாக நியமித்து வானர ஸேனைகள் மூலமாக ஸமுத்ரத்தில்

அணைகட்ட ஏற்பாடு செய்தார். அணைகட்டியவுடன், அந்த மார்க்கமாக, எல்லோரும் லங்காநகரம் சென்று, வானர ஸேனைகளால் லங்காநகரத்தை ஆக்ரமிக்கும்படி ஸ்ரீராமன் கட்டளையிட்டுவிட்டு, பெரிய யுத்தம் ஆரம்பிக்கும்படி செய்தார். அந்த யுத்தத்தில் ராவணனை அவன் பந்துமித்ர வர்க்கங்களோடு வதம் செய்தார். ராவணனைக் கொன்றுவிட்டு ஸீதாதேவியை தான் அடைந்தார். ஆகிலும், ஸீதாதேவியானவள் பத்துமாத காலம் ராவணனுடைய நகரத்தில் இருந்துவந்த காரணத்தால் தான் சேர்த்துக்கொள்ள ஸந்தேஹப்படுவதுபோல் மஹாஜனங்களின் நடுவில் நடித்துக்காட்டினார். ஸீதாதேவியோ, அவ்வார்த்தையைக் கேட்க ஸஹிக்க முடியாமல் கண்ணீர் ஜலத்தை பெருக விட்டுக்கொண்டு அக்னியை வளர்த்து அதில் ப்ரவேசம் செய்துவிட்டாள். அக்னிபகவானே, ஸீதையை க்ரஹித்துக்கொண்டு ராமனிடம் வந்து, "ஸீதை பரமசுத்தை" என்று சொல்லி ராமனிடம் அர்ப்பணம் செய்தார். அக்னிப்ரவேசம் செய்ததற்குப் பிறகு ஸீதையை ராமன் க்ரஹித்துக் கொண்டார் என்ற ஆச்சர்யமான ராமனுடைய செய்கையை, தேவாள் ரிஷிகள் எல்லோரும் கேட்டு ஸந்தோஷித்து, ப்ரும்மா, ருத்ரன் முதலிய தேவகணங்கள், ரிஷி கணங்கள் எல்லோரும் ராமனுடைய ஸமீபம் சென்று ராமனுடைய பரதத்வத்தை விளக்கி ஸ்தோத்ரம் செய்து, ராமனை பூஜித்தார்கள். ராமனும் தேவர்களின் பூஜையை ஏற்றுக்கொண்டு லங்காநகரத்தில் விபீஷணஸ்வாமியை ராஜ்யாபிஷேகம் செய்து அரசனாக ஸ்தாபனம் செய்தார்.

பிறகு தான் அவதரித்த கார்யம் நிறைவேறிவிட்டதென்று ஸந்தோஷமடைந்தார். யுத்தத்தில் ராக்ஷஸர்களுடைய பாணங்களால் அடிபட்டு ஜீவன் இல்லாமல் கீழ் விழுந்துகிடக்கும் வானரஸேனைகளை, தேவதைகள் மூலமாக அம்ருதத்தால் உஜ்ஜீவிக்கச் செய்து ஸகல பரிவாரங்களுடன் புஷ்பக விமானத்தில் ஏறிக்கொண்டு அயோத்திக்குப் புறப்பட்டார். அயோத்திக்கு வரும்

பொழுது பரத்வாஜாச்ரமத்தில் தான் இருந்துகொண்டு, பரத ஸ்வாமியின் பக்தி விசேஷத்தைப் பரிசோதிக்க ஆஞ்சனேய ஸ்வாமியை முன்பு அனுப்பினார். அங்கு ஆஞ்சனேயர், “பதினான்கு ஸம்வத்ஸரம் முடிந்துவிட்டது, இன்னமும் என்னமோ ராமன் வரவில்லை, நாளை காலையில் அக்னிப்ரவேசம் செய்து விடுகிறது” என்ற ஊக்கத்துடன் இருக்கும் பரதஸ்வாமியின் பக்தி விசேஷத்தை பார்த்து பரம ஸந்தோஷமடைந்து பரத ஸ்வாமிக்கு ஸமமாக பக்தனோ, ப்ராதாவோ லோகத்திலேயே மற்றொருவன் இல்லை என்று தீர்மானித்தார். இதை ராமனிடம் வந்து தெரிவித்தவுடன் சீக்கிரமாக ராமன் நந்திக்ராமம் சென்றார். ராம லக்ஷ்மணர்கள், பரத சத்ருக்னரோடு கூட சேர்ந்து ஆனந்திப்பதையோ, பரத சத்ருக்னர்கள், ராம லக்ஷ்மணரோடுகூட ஆனந்திப்பதையோ அளவிட முடியாது. நந்திக்ராமத்திலேயே ஜடாவிஸர்ஜனம் முதலியவைகள் செய்துவிட்டு ப்ராதாக்களோடு, புஷ்பக விமானத்தில் ஏறிக்கொண்டு ஸீதா ஸமேதராக ஸ்ரீராமன் அயோத்தி சென்று, வஸிஷ்டாதிகளாலேயும், நகரத்திலுள்ள ஜனங்களாலேயும், பூஜிக்கப்பட்டு நல்ல முஹூர்த்தத்தில் ஸீதையோடு கூட ஸ்ரீராமன் இக்ஷ்வாகுவம்சராஜ்யஸ்ரீயை அபிஷேகம் செய்துகொண்டு, ராஜாதிராஜனாக, செங்கோல் பிடித்து, அயோத்தியில் திவ்ய ஸிம்ஹாஸனத்தில் விளங்கி வந்தார். ராமன் இவ்விதம் ராஜ்ய பரிபாலனம் செய்துவரும் காலத்தில், ப்ரஜைகள் மேன்மேலும் ஸௌக்யத்தையே அடைந்து வந்தார்கள். தர்மச்ரத்தை உள்ளவர்களாகவும், சரீர ஸம்பந்தமான ரோகமோ, மானஸிகமான ரோகமோ இதுகள் இல்லாமல் ப்ரஜைகள் விளங்கி வந்தார்கள். துர்பிக்ஷம் என்ற சப்தமே இல்லாமலிருந்து வந்தது. புத்ரன் மரித்து பிதாக்ருத்யம் செய்வது என்பதேயில்லை. விதவை என்ற ஸ்த்ரீயே இல்லை. எல்லா ஸ்த்ரீகளும் பதிவ்ரதையாகவே இருந்தார்கள்.

அக்னி ஸம்பந்தமான பயமோ, ஜல ஸம்பந்தமான பயமோ, வாயுவினால் ஏற்படும் ரோகமோ,

ஜ்வராதிகளோ, பசியினால் ஒருவன் கஷ்டப்பட்டான் என்பதோ, ஒருவன் வீட்டில் மற்றொருவன் திருடினான் என்பதோ, இந்த உபத்ரவங்கள் யாதொன்றுமே யில்லை. ராஜ்யங்களோ, தேசங்களோ, க்ராமங்களோ, எல்லா ப்ரதேசத்திலும், தனத்தின் செழிப்பையும், தான்யங்களுடைய செழிப்பையும் அளவிடமுடியாது. ஸகல ப்ரஜைகளும் ஸந்துஷ்டர்களாகவே இருந்தார்கள். ராமன் ராஜ்யபரிபாலனம் செய்தது த்ரேதாயுகமானாலும் க்ருதயுகமாகத்தான் இருந்தது. ராமனும் நூற்றுக்கணக்காக அச்வமேதயாகம் செய்தார். வித்வான்களுக்கு கொடுத்த ஸன்மானாதிகளோ, தங்கமயங்கள்தான். எண்ணிக்கையில் அகப்படாதது. கோடிக்கணக்காக கோதானம் செய்தார். ராமனுக்கு ப்ராம்மண விச்வாஸமோ அளவிடமுடியாம லிருந்துவந்தது. ராஜாங்கங்களை அநேக தேசங்களாகப் பிரித்து அநேக ராஜாக்கள் ஆளவேண்டுமென்ற எண்ணத்துடன், ஆங்காங்கு ஸ்தாபனம் செய்ததும் அளவிற்கு அகப்படாததே. ப்ராம்மணன், க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன் என்ற நான்கு வர்ணங்களையும் அவரவர்கள் ஸ்வதர்மத்தை விட்டு நழுவாமலிருக்கும்படி பாதுகாத்து வந்தார். பதினோராயிரம் வர்ஷம் அயோத்தியில் செங்கோல்பிடித்து ராஜ்யபரிபாலனம் செய்தார். இந்த ராம சரித்ரத்தைப்போல் மனிதர்களை, தாபத்தினின்று பரிசுத்தம் செய்துவைக்கும் உபாயம் வேறொன்றுமே இல்லை. ப்ரம்மஹத்யாதி பாபங்களையும் போக்கடிக்கும். அச்வமேதம் முதலான யாகத்தின் புண்யத்தையும் கொடுக்கும். இச்சரித்ரம் வேதத்திற்கு ஸமானமானது. இதை எவன் படிக்கிறானோ அவன் ஸகல பாபங்களிலிருந்தும் விமுக்தனாக ஆகிறான். தீர்க்கமான ஆயுளைக் கொடுக்கக்கூடியது இச்சரித்ரம் ஒன்றுதான். இதைப் படிக்கிறவன், பந்து வர்க்கங்களோடு, அநேக காலம் திவ்ய போகங்களை அனுபவித்துக் கொண்டு பூலோகத்தில் வாழ்ந்துவிட்டு, பிறகு வைகுண்டத்திலும் நித்யஸூரிகளுடைய பதவியைத்தான் கைப்பற்றிக் கொண்டு, ஸகல தேவர்களாலும் பூஜிக்கப்படுகிறான்.

पठन्द्विजो वागृषभत्वमीयात्स्यात्क्षत्रियो भूमिपतित्वमीयात् ।
वणिग्जनः पण्यफलत्वमीयाज्जनश्च शूद्रोऽपि महत्वमीयात् ॥

𑌪𑌠𑌨𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑍋 𑌵𑌾𑌗𑍃𑌷𑌭𑌤𑍍𑌵𑌮𑍀𑌯𑌾𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍋
𑌭𑍂𑌮𑌿𑌪𑌤𑌿𑌤𑍍𑌵𑌮𑍀𑌯𑌾𑌤𑍍 ।
𑌵𑌣𑌿𑌗𑍍𑌜𑌨𑌃 𑌪𑌣𑍍𑌯𑌫𑌲𑌤𑍍𑌵𑌮𑍀𑌯𑌾𑌜𑍍𑌜𑌨𑌶𑍍𑌚 𑌶𑍂𑌦𑍍𑌰𑍋𑌽𑌪𑌿
𑌮𑌹𑌤𑍍𑌵𑌮𑍀𑌯𑌾𑌤𑍍 ॥

**படந்த்விஜோ வாக்ரிஷபத்வமீயாத் ஸ்யாத்க்ஷத்ரியோ பூமிபதித்வ
மீயாத் ।**
**வணிக்ஜன: பண்யபலத்வமீயாஜ்ஜனச்ச சூத்ரோபி மஹத்வ
மீயாத் ॥**

இந்த ராமசரித்ரத்தில் ப்ராம்மணன், க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன் என்ற நான்கு வர்ணங்களில் உட்பட்டவர்களுக்குத் தான் பாராயணம் செய்வதில் அதிகாரம் ஏற்படும். மற்ற "ஸங்கரஜாதி"யில் சேர்ந்தவர்களுக்கு படனத்திலோ, ச்ரவணத்திலோ அதிகாரம் கிடையாது என்பதையும் மேற்கண்ட ச்லோகத்தால் கவி ப்ரகாசப்படுத்துகிறுர். இந்த ச்லோகத்திலுள்ள,

स्यात् 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 **ஸ்யாத்** என்ற பதமானது **यदि** 𑌯𑌦𑌿 யதி என்ற பதத்தின் அர்த்தத்தில் உபயோகப்படுத்திக்கொள்ளப் படுகிறது. த்விஜனுனவன் (ப்ராம்மணன்) இந்த பாலராமாயணத்தை தினந்தோறும் படித்துவருவானேயானுல், அப்ப்ராம்மணன் வாக்விலாஸத்தால் லோகமுழுமையும் தன் வசமாக்கிக்கொள்ளும் ஸாமர்த்யமுள்ளவனுக ஆகிறுன். அவனுடைய வாக்கானது மதுரமாயும், ஸரளமாயும், ஆச்சர்யமான அர்த்தத்தை ப்ரகாசப்படுத்துகிறதாயும், கேட்கும் ஜனங்களின் மனதை கவரச் செய்து அதனுல் லோகத்திலேயே தான் ஓர் பெரிய மஹாத்மாவாக விளங்கக்கூடும் தன்மையை அடைகிறுன். வேதங்களிலோ, வ்யாகரணம் முதலான அங்கங்களிலோ, மற்ற எந்த சாஸ்த்ரங்களிலோ, இயற்கையாகவே பெரிய பாண்டித்யத்தை அடைந்தும் விளங்குகிறுன்.

க்ஷத்ரியன் இப்பாலராமாயணத்தை தினந்தோறும் படித்துவரும் பக்ஷத்தில், அகண்ட-பூமண்டலத்திற்கே, பெரிய ஸார்வபௌமனாக ஆகிருன். சின்ன அரசன் பெரிய அரசனாக ஆகுவதற்கு பாலராமாயண படனமே முக்யமான உபாயமாகும்.

வணிக்ஜனம் என்று சொல்லப்படுகிற வைச்யன் இப்பாலராமாயணத்தை தினந்தோறும் பாராயணம் செய்துவரும் பக்ஷத்தில், தான் க்ரயம் செய்வதில் அதிகமான லாபத்தையும், தான் பிறர்களிடமிருந்துவாங்கும் ஸாமான்களுக்கு ரொம்பவும் குறைந்த தனத்தை கொடுத்து வாங்கியதால், நல்ல லாபத்தையும், அடைகிருன். அதாவது வைச்யர்களுக்கு வ்யாபாரமே ஸ்வாபாவிக தர்மமானதினுல், பாலராமாயணத்தை தினந்தோறும் பாராயணம் செய்துவரும் வைச்யனே, சுமார் ரூபாய் ஆயிரம் கொடுத்து வாங்கிய ஸாமான்களை, ஒன்றுக்கு நூறு மடங்கு அதிகமான விலைக்கு விற்கும் படியான ஸந்தர்ப்பம் நேர்ந்து கோடீச்வரனாக ஆகிருன்.

சூத்ரனானவன், இப்பாலராமாயணத்தை தினந்தோறும் பாராயணம் செய்துவரும் பக்ஷத்தில், தன் ஜாதிக்குள் மேன்மையான பதவியை அடைந்து, தன் ஜாதிக்குத் தான் ஒரு ஈச்வரன் மாதிரி ஆகிருன்.

स्यात् ஸ்யாத் என்ற சப்தத்திற்கு, यदि யதி என்ற அர்த்தத்தை ஒப்புக்கொண்டு மேற்சொன்னபடி தாத்பர்யம் விவரிக்கப்பட்டது. स्यात् ஸ்யாத் என்ற பதத்திற்கு அல்பம் என்றும் பொருளுண்டு. அதாவது சிறிய மனிதனும், இப்பாலராமாயண பாராயணத்தால் பூஜ்யனாக ஆகிருன். ஸம்ஸ்க்ருத ஞானமில்லாத ப்ராம்மணனும் வித்வானாக ஆகிவிடுகிருன். சின்ன தேசத்திற்கு அதிபதியான; அரசனும் ஸார்வபௌமனாக ஆகிவிடுகிருன். சிறிய வ்யாபாரம் செய்கிற வைச்யனும் பெரிய கப்பல் வ்யாபாரத்திலும் ப்ரஸித்தி பெற்றவனாக ஆகிருன். மூடனான சூத்ரனும் தன் ஜாதியில் த்வஜம்போல் ப்ரகாசிக்க வல்ல

வனுக ஆகிருன் என்ற தாத்பர்யமும் மேற்கண்ட ச்லோகத்தால் வெளியாகிறது. ஸம்க்ஷேபராமாயண பாராயணத்தின் மஹிமையை வர்ணித்து முடியாது. स्यात् 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ஸ்யாத் என்ற பதத்திற்கு, कथंचित् 𑌕𑌥𑌂𑌚𑌿𑌤𑍍 கதம்சித் என்ற பதத்தின் பொருளையும் உபயோகப்படுத்தலாம். அதாவது **எப்படியாவது** என்பதே அதன் பொருளாகும். ஆசாரத்தோடு கூடினவனுனுலும், துராசாரத்திலேயே மூழ்கினவனுனுலும், போஜனம் செய்த பிற்பாடோ, முந்தியோ சுத்தமான தேசத்தை ஆச்ரயித்தாலும், அசுத்தமான தேசத்திலிருந்தாலும், ஸம்க்ஷேப ராமாயணத்தை தன் ஸெளகர்யம்போல் அல்பமாக பாராயணம் செய்தாலும் மேற்சொன்ன பலன்களை அந்தந்த வர்ணத்திலுள்ளவர்கள் அடைகிருர்கள் என்பதும் स्यात् 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ஸ்யாத் என்ற பதத்தால் வெளியாகிறது. தவிர, स्यात् 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ஸ்யாத் என்ற பதத்திற்கு सत्तां लभते 𑌸𑌤𑍍𑌤𑌾𑌂 𑌲𑌭𑌤𑍇 ஸத்தாம் லபதே

உயிரை தீர்க்கமாக அடைகிருன் என்றும் பொருளுண்டு. இதனுல் ஸம்க்ஷேபராமாயணத்தைப் பாராயணம் செய்கிறவர்கள், அவரவர்களுக்குச் சொன்ன பலத்தை அடைவதோடும்கூட, தீர்க்கமான ஆயுளையும் அடைகிருர்கள் என்பது ப்ரகாசிக்கிறது. சிரஞ்சீவியாக இருப்பதற்கும் பாலராமாயண பாராயணமே பெரிய ரஸாயனமாக ஆகிறது,

श्रावये चतुरो वर्णान् कृत्वा ब्राह्मणं अग्रतः

𑌶𑍍𑌰𑌾𑌵𑌯𑍇 𑌚𑌤𑍁𑌰𑍋 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑍍 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌅𑌗𑍍𑌰𑌤𑌃

ச்ராவயே ச்சதுரோ வர்ணுன் க்ருத்வா ப்ராஹ்மண மக்ரத:

என்ற ஸ்ம்ருதியால் ப்ராம்மணனை எதிரில் வைத்துக்கொண்டு நான்கு வர்ணங்களில் பிறந்தவர்களுக்கும், இதிஹாஸபுராணங்களை ச்ரவணம் செய்துவைக்கவேண்டும் என்ற தாத்பர்யம் வெளியாகிறது. இதனுல் சூத்ரனுக்கு ச்ரவணத்தில் அதிகாரம் உண்டுதான். படனத்தில் அதிகார

மில்லையென்று தெரிகிறது. அவ்விதம் சாஸ்த்ரமிருக்கும் பொழுது,

जनश्च शूद्रोपि महत्वमीयात्

𑌜𑌨𑌶𑍍𑌚 𑌶𑍂𑌦𑍍𑌰𑍋𑌪𑌿 𑌮𑌹𑌤𑍍𑌵𑌮𑍀𑌯𑌾𑌤𑍍

ஜந்ச சூத்ரோபி மஹத்வமீயாத்

என்றதால் சூத்ரன் இந்த ஸம்க்ஷேபராமாயணத்தைப் படித்தால், தன் ஜாதிகளுக்குள் பெரியவனாக ஆகிறான் என்று "பலம்" சொல்லப்பட்டிருக்கிறதே? மேற்சொன்ன ஸ்ம்ருதியினாலோ, சூத்ரன் இதிஹாஸபுராணங்களை ஸ்வயமாக படிக்கக்கூடாது. ஸ்ரீமத்ராமாயணத்தையோ, இதிஹாஸரத்னம் என்று முன்பு கூறப்பட்டது. இதை எவ்விதம் சூத்ரன் படிக்கலாம் என்ற ஸம்சயம் ஏற்படக்கூடும். அதை வால்மீகி மஹர்ஷிக்கு நாரத மஹர்ஷி ராம தத்வத்தை உபதேசம் செய்யும் ஸந்தர்ப்பத்தில், சூத்ரனையும் ராமாயணத்தை படிப்பதில் அதிகாரிதான் என்று சொல்லி இருப்பதினால், இம்மஹர்ஷியின் வசனமே, பெரிய ப்ரமாணமாகுமென்று அறிந்து அதை நிவ்ருத்தி செய்துகொள்ள வேண்டும்.

ஸூத மஹாமுனிவரை, பெரிய பௌராணிகோத்தமராக சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அவரோ, "ரதகார:" என்ற ஜாதியில் சேர்ந்தவர். (ராஜாக்களுக்கு ரதங்களை நிர்மாணம் செய்துகொடுக்கும் ஜாதியாகும்.) ப்ராம்மணனுக்கு ராஜஸ்த்ரீயினிடத்தில் பிறந்த ஜாதியை "ரதகார" ஜாதியென்று மனுமுதலானவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த ஜாதியானது "அனுலோமஸங்கரஜாதி" என்று சொல்லப்படும். அந்தந்த வர்ணத்திலுள்ள ஸ்த்ரீகளிடம், அந்தந்தவர்ணத்திலுள்ள புருஷர்களுக்கு விதிவத்தான ஸம்ஸ்காரங்கள் ஆகி, பிறந்திருக்கும் குழந்தைகளே அந்தந்த வர்ணத்தில் சேர்ந்தவர்களாக ஆகுவார்கள்.

அவ்விதமுள்ள நான்கு வர்ணங்களில் பிறந்தவர்களில், அதிலும் ப்ராம்மணர்களுக்குத்தான், இதிஹாஸபுராணங்

களை உபதேசம் செய்வதில் அதிகாரம் உண்டு என்று சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றன. மேற்சொன்ன ஸூதரோ "ஸங்கர" ஜாதியில் பிறந்தவர் என்று சொன்னோம். அவருக்கு இதிஹாஸம், புராணம் முதலான ஸகலசாஸ்த்ரங்களையும் உபதேசம் செய்வதற்கு ஆசார்யபதவியானது, ஸகல ரிஷிகளாலும், அனுமோதிக்கப்பட்டிருக்கிறது. வ்யாஸ பகவானுக்கு அவர் முக்ய சிஷ்யனுகுவார். அதனால், ஈச்வர துல்யாளான மஹர்ஷிகள் போகிற மார்க்கம் தர்மத்திற்கு கொஞ்சமேனும் விரோதமில்லாததுதான் என்றதை ஆஸ்திகர்கள் ச்ரத்தையுடன் நம்பவேண்டும்.

धर्मशास्त्र रथारूढाः वेदखड्गधराः द्विजाः ।
लीलार्थमपि यद्ब्रूयुः सधर्मः परमः स्मृतः ॥

𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌰𑌥𑌾𑌰𑍂𑌢𑌾𑌃 𑌵𑍇𑌦𑌖𑌡𑍍𑌗𑌧𑌰𑌾𑌃 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃 ।
𑌲𑍀𑌲𑌾𑌰𑍍𑌥𑌮𑌪𑌿 𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑍂𑌯𑍁𑌃 𑌸𑌧𑌰𑍍𑌮𑌃 𑌪𑌰𑌮𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃

தர்மசாஸ்த்ர ரதாரூடா: வேதகட்கதரா: த்விஜா:
லீலார்த்தமபி யத்ப்ரூயு: ஸதர்ம: பரம: ஸ்ம்ருத:

என்ற வசனமே முன் சொன்னதில் ப்ரமாணமாகும். ஓர் அரசன் செங்கோலைக் கையில்பிடித்துக்கொண்டு ரதாரூடனுகவும் இருந்து ப்ரஜைகளைப் பார்த்து எவ்விதம் கட்டளையிட்டாலும், அது கொஞ்சமேனும் நீதிக்கு விருத்தமாக ஆகாதோ, அதுபோல் வேதமாகிய ரதத்தில் ஏறிக்கொண்டு தர்மசாஸ்த்ரமாகிய செங்கோலைக் கையில்பிடித்துச்கொண்டு ரிஷிகள் வேடிக்கையாகப் பேசினுலும்கூட அதை தர்மமென்றே அறிவதுதான் ஆஸ்திகர்களுக்கு ஸ்வதர்மமாகும் என்பதே மேற்சொன்ன வசனத்தின் தாத்பர்யம். மஹர்ஷிகள் போகும் ஸூக்ஷ்ம மார்க்கத்தை பாமர ஜனங்கள் கண்டு பிடிக்கமுடியாது. ஆகையால் ரிஷி வசனமானது வேதத்திற்கு ஸமானமாகவே ஆகும். ரிஷி வசனத்தின் பலத்தால் "ரதகார" ஜாதியில் சேர்ந்த ஸூதரானவர் இதிஹாஸ புராணங்களை ப்ரவசனம் செய்வதில் வக்தாவாக ஆனதுபோல், ப்ரக்ருதத்திலும்,

जनश्च शूद्रोपि महत्व मीयात् ।

𑌜𑌨𑌶𑍍𑌚 𑌶𑍂𑌦𑍍𑌰𑍋𑌪𑌿 𑌮𑌹𑌤𑍍𑌵 𑌮𑍀𑌯𑌾𑌤𑍍 ।

ஜனச்ச சூத்ரோபி மஹத்வ மீயாத் ।

என்ற ரிஷி வசனத்தால், சூத்ர ஜாதியில் பிறந்தவனுக்கும் ஸம்க்ஷேப ராமாயணத்தைப் படிப்பதில் அதிகாரம் உண்டு தான். ஆஸ்திகர்கள் இதை ஆக்ஷேபிக்க முன்வரமாட்டார்கள்.

ஸர்வக்ஞரான மஹர்ஷிகள் வசனம் என்ற ப்ரமாணம் இருக்கும் பக்ஷத்தில், எதை எப்படி அவர்கள் ஒப்புக்கொண்டாலும் அதை அப்படியே தர்மம்தான் என்று ஆஸ்திகர்கள் ஒப்புக்கொள்ளவே வேண்டும். அப்படிச் சொன்னவர்கள் ரிஷிகளா, ரிஷிகளின் லக்ஷணங்கள் பொருந்தியிருக்கிறதா, என்பதை முன்பு விசாரித்துத் தீர்மானம் செய்த பிற்பாடு, அவர்கள் வசனத்திற்கு ப்ராமாண்யத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். அன்னியில், ரிஷிபோல் நடித்துக் காட்டி லோகத்தை மோசம் செய்யும் ஸ்வபாவமுள்ள போலியான ரிஷிகளுடைய வசனமோ, அனுஷ்டானமோ, ப்ரமாணமாக ஆகாது.

ப்ரக்ருதத்திலுள்ள, நாரத மஹர்ஷியைப் போலவோ, வால்மீகி மஹர்ஷியைப் போலவோ, ஸமான வைபவமுள்ள மஹர்ஷிகள் மற்றொருவரைச் சொல்ல முடியாது என்பது ப்ரஸித்தமானது. அம்மஹானுபாவர்கள் ஸம்க்ஷேப ராமாயணத்தை சூத்ரனும் படிக்கலாமென்று சொல்லியிருக்கும் பொழுது மற்றவர்களுக்கு என்ன ஆக்ஷேபணை ஏற்படும்? ஆகையால் ஸம்க்ஷேப ராமாயணத்தை மாத்ரம் சூத்ரனும் படிக்கலாம். விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணத்தில் சூத்ரனுக்கு அதிகாரம் கொடுத்ததுபோல் ஸம்க்ஷேபராமாயண பாராயணத்திலும் சூத்ரனுக்கு அதிகாரமுண்டு.

वेदान्तगो ब्राह्मणः स्यात् क्षत्रियो विजयीभवेत् ।

वैश्यो धनसमृद्धः स्यात् शूद्रः सुखमवाप्नुयात् ।

𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌗𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍋
𑌵𑌿𑌜𑌯𑍀 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌵𑍈𑌶𑍍𑌯𑍋 𑌧𑌨𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌶𑍂𑌦𑍍𑌰𑌃 𑌸𑍁𑌖𑌮𑌵𑌾
𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ॥

வேதாந்தகோ ப்ராஹ்மண: ஸ்யாத் க்ஷத்ரியோ விஜயீபவேத் ।
வைச்யோ தநஸம்ருத்த: ஸ்யாத் சூத்ர: ஸுகமவாப்நுயாத் ॥

என்று விஷ்ணு ஸகஸ்ரநாமத்தில் உள்ள பல ச்ருதி வசனத்தை ஆஸ்திகர்கள் அறியக்கூடும். அதுபோல் தான் ப்ரக்ருதத்தில், ஸம்க்ஷேப ராமாயணத்தில் உள்ள நியமம், ரிஷிவசன ப்ராமாண்யத்தால் ஏற்பட்டது.

இல்லாவிடில், ஸ்ரீமத் ராமாயணம் "வேதோபப்ரம்மண" மானதினுல் அதாவது வேதார்த்தத்தை அறிய ஸ்ரீமத் ராமாயணத்தை ஸஹாயமாக வைத்துக்கொண்டால்தான் முடியும் என்று ஏற்படுகிறபடியால், வேதாத்யயனத்தில் சூத்ரனுக்கு அதிகாரம் இல்லாததுபோல் ஸ்ரீமத் ராமாயண படனத்திலும், சூத்ரனுக்கு அதிகாரம் இல்லை என்பதுதான் ஸமஞ்சஸமாகும். சில வித்வான்கள் இவ்விதம் தான் இந்த ச்லோகத்திற்கு அர்த்தம் செய்துகொள்வார்கள், ச்ரவணத்தாலேயே மஹா பலத்தை அடையலாம். ச்ரவணத்திலோ சூத்ரனுக்கு அதிகாரத்தை ஒருவராலும் தடுக்கமுடியாது. அவ்விதமிருக்கும்பொழுது படன ச்ரமத்தை அவர்களுக்கு எதற்காகக் கொடுக்கவேண்டும்! என்று சிலர்களுக்குத் தோன்றினுல், "படந்" என்ற பதத்தை ப்ராம்மணன் க்ஷத்ரியன், வைச்யன், என்ற மூவர்களிடம் மாத்ரம் அந்வயித்துக் கொண்டு "**சூத்ர**" என்றயிடத்தில் "**ச்ருந்வந்**" என்ற பதத்தை அத்யாஹாரம் செய்துகொண்டு ச்லோகார்த்தத்தை அறியவும்.

त (த) காரத்தில் ஆரம்பித்து **यात्** (யாத்) என்று ஸமாப்தி செய்திருப்பதினுல், காயத்ரிதான் ஸம்க்ஷேப ராமாயணம் என்றும் நன்ருக விளங்குகிறது.

இரண்டாவது ஸர்கம்.

வக்த்ரு வைலக்ஷண்யம்.

பரம கருணா மூர்த்தியான வால்மீகி மஹர்ஷியானவர், நாரத மஹர்ஷியால் தனக்குச் சுருக்கமாக உபதேசிக்கப் பட்ட ஸ்ரீராம சரித்ரத்தை விஸ்தாரமாக வெளிப்படுத்த எண்ணங்கொண்டு, தான் அதற்கு ஸரியான அதிகாரி தான் என்பதை வெளிப்படுத்த கதையை ஆரம்பிக்கிறார். லோகத்தில், ப்ரபந்தத்திற்கு பெரிய கௌரவம், அதைச் சொல்லும் வக்தாவின் பெருமையாலும், அப் ப்ரபந்தத்தி னுடைய ரீதியாலும், அப் ப்ரபந்தத்தில் சொல்லப்படும் விஷ யத்தின் மஹிமையாலும், ஏற்படக்கூடும். வக்தாவின் மஹா த்வம், ப்ரபந்தத்தின் மஹத்வம், அதில் சொல்லப்படும் விஷ யத்தின் மஹத்வம், இம்மூன்றும் எந்த க்ரந்தத்தில் உள் ளதோ, அதைத்தான் சிஷ்டர்கள் ஆதரிப்பார்கள். ஆகை யால் இந்த ராமசரித்ரமென்ற ப்ரபந்தத்திலும் அம்மூன்று விதமான மஹத்வம் இருக்கிறது என்பதை ப்ரகாசப்படுத்த, இரண்டாவது ஸர்கத்தில் வக்தாவினுடைய மஹத்வத்தை காட்டுகிறார்.

வக்தா பரம ஆப்தனாக இருக்கவேண்டும். 'ஆப்தன்' என்றால் சாஸ்த்ரத்தின் உண்மையைத் தெரிந்துகொண்டு அவ்விதமே அனுபவத்திலும் இருப்பவனே. "பரம ஆப் தன்" என்றால், அத்துடன் தேவதா விசேஷத்தை ப்ரத் யக்ஷமாகப் பார்த்து, அந்த தேவதையினுடைய அனுக்ர ஹத்தால், வர ப்ரஸாதத்தை அடைந்து சாஸ்த்ரத்தின் உண் மையையும் அறிந்து, அந்த உண்மையை சிஷ்யர்களுக்கு போதிக்கும் வல்லமை உள்ளவனே. அம்மஹானுபாவனால் செய்யப்படும் ப்ரபந்தங்கள்தான் ச்ரேயஸ்ஸை விரும் பும் ஜனங்களால் ஆதரிக்கத்தகுந்ததாக ஆகும். ப்ரக்ருதத் திலுள்ள, ஸ்ரீராமசரித்ரம் என்ற ப்ரபந்தத்திற்கு, கர்த்தா

வான வால்மீகி மஹர்ஷியோ, "பரம ஆப்தன்" என்பதில் ஸந்தேஹமேயில்லை. நாரத மஹர்ஷியின் உபதேசத்திற்குப் பிறகும், ப்ரம்மாவே வால்மீகி மஹர்ஷியின் ஆச்ரமத்திற்கு வந்து, வால்மீகி மஹர்ஷிக்கு அபூர்வமான வரப்ரஸாதங்களைச் செய்ததாகத் தெரிகிறது. இதனால், தேவதையின் வரப்ரஸாதத்தை வால்மீகி மஹர்ஷி அடைந்தவராக ஆகிறார்.

ராமனுடைய சரித்ரத்தில், எந்தெந்த கதை என்னென்ன தாத்பர்யங்கள் உள்ளதாக ஏற்பட்டதோ, அந்தந்த கதைகளை அப்படியப்படியே, ஸமாதியில் ஞான சக்ஷுஸ்ஸால் அறிந்து, அவ்விதம் அறிந்தபடியே இக்ரந்தத்தில் சொல்லியிருக்கிறார். அதனால், "பரம ஆப்தன்" என்பதற்கு வால்மீகி மஹர்ஷியையே முதல் உதாஹரணமாகச் சொல்லவேண்டும். லோகத்திலும் வால்மீகி மஹர்ஷியால் இயற்றப்பட்ட ஸ்ரீமத் ராமாயணத்தின் பாராயணாதிகளை, ச்ரேயஸ்ஸை விரும்பும் ஜனங்கள் ஆதரிப்பதுபோல், மற்ற **ரகுவம்சம், மாகம்** முதலான காவ்யங்களுக்கு இவ்வித பூஜ்யதை இல்லை என்பது ப்ரஸித்தம். இந்த க்ரந்தத்தைச் செய்தவர்களும் மஹாகவிகள் தான். காளிதாஸன் முதலான கவிகள் மஹாவித்வான்களல்லவா. பராசக்தியை உபாஸித்து வரப்ரஸாதத்தை அடைந்தவர்களே. ஆகிலும் ப்ரக்ருதத்திலுள்ள வால்மீகி மஹர்ஷிக்கு ஸமானமாக அவர்கள் ஆகமாட்டார்கள்தான். மற்ற க்ரந்தகர்த்தாக்களைப்போல் வால்மீகி மஹர்ஷியைச் சொல்லமுடியாது. இம்மஹர்ஷி லோகவிலக்ஷணமான க்ரந்தகர்த்தா என்று **வக்த்ரு** வைலக்ஷண்யமானது இரண்டாவது ஸர்கத்தில் சொல்லப்படுகிறது.

அதாவது, நாரத மஹர்ஷியின் உபதேசத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு வால்மீகி மஹர்ஷியானவர், தனது குருவான நாரத மஹர்ஷியை விதிவத்தாக பூஜித்து நமஸ்காரம் செய்துவிட்டு, குருவினிடம் சிஷ்யன் நடந்துகொள்ள வேண்டிய ப்ரகாரம் நடந்து கொண்டார். நாரத மஹர்ஷியும் வால்மீகி மஹர்ஷியின் பக்தியைப் பார்த்து ஸந்தோஷமடைந்து,

அவருக்கு பரிபூர்ணமான ஆசீர்வாதத்தைச் செய்துவிட்டு, வால்மீகி மஹர்ஷியின் பரமபக்தியை ப்ரம்மாவினிடம் தெரிவிப்பதற்காக, ப்ரம்மலோகம் சென்றுர். வால்மீகி மஹர்ஷியோ, தனது குருவான நாரத மஹர்ஷி ப்ரம்மலோகம் சென்ற பிறகு, மாத்யான்ஹிக காலம் வந்துவிட்டபடியால், மாத்யான்ஹிக ஸ்நாநம் செய்து, அனுஷ்டானம் செய்வதற்காக கங்கைக்கு ஸமீபத்திலுள்ள "**தமஸா**" என்ற நதிக்குச் சென்றுர். அவருடைய சிஷ்யனுன **பரத்வாஜனும்**, வால்மீகி மஹர்ஷியைப் பின்தொடர்ந்து, ஸ்நாநவஸ்த்ரம், கலசம் முதலியவைகளை எடுத்துக்கொண்டு சென்றுன். மஹர்ஷியானவர், "**தமஸா**" என்ற நதிக்கரையில் நின்றுகொண்டு, ஜலத்தினுடைய நைர்மல்யத்தைப் பார்த்து ஸந்தோஷத்துடன் "பரத்வாஜா, ஹே சிஷ்யா! இந்த நதிஜலம் எவ்வளவு நிர்மலமாக இருக்கிறது பார்த்தாயா, ப்ரம்மநிஷ்டனுடைய மனதுபோல் அதிஸ்வச்சமாக இருந்து வருகிறது. இறங்கி ஸ்நாநம் செய்யும் துறையிலும், சேறு முதலானதுகள் இல்லை. ஆகையால், இந்த தீர்த்தத்திலேயே நான் ஸ்நாநம் செய்யப்போகிறேன், குடத்தைக் கீழே வை, ஸ்நான வஸ்த்ரத்தை கொண்டுவா" என்றுர். அதைக் கேட்ட பரத்வாஜன் என்ற சிஷ்யனும், குருவின் ஆக்ஞையை அனுஸரித்து ஸ்நாநத்திற்கு அர்ஹமான மரையுருவியை குருவின் கையில் கொடுத்தான். மஹர்ஷியும் சிஷ்யனிட மிருந்து மரையுருவியை வாங்கிக் கொண்டு சற்றுநேரம் நதியின்கரையின் ஸமீபத்திலுள்ள வனங்களையும் பார்த்துக்கொண்டு உலாத்தி வந்தார்.

கொஞ்ச ஸமீபத்தில் அந்தவனத்தில் ஒரு ஆச்சர்யமான ஸம்பவம் நடந்தது. அந்த வனத்தில், **க்ரௌஞ்ச** பக்ஷிகள் (வலியன் குருவி) அதிகம் உண்டு. கிளியைப்போல் அழகான ஜாதியைச் சேர்ந்தது. அப்பக்ஷிகளில், ஒரு ஆண் பக்ஷியும், பெண் பக்ஷியும், ஸௌரதஸௌஹத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும்பொழுது, பக்ஷியை அடித்து புஜிக்கும் ஸ்வபாவமுள்ள வேடன் ஒருவன், ஸமீபம் வந்து, க்ரீடையின் நடுவில் ஆண்பக்ஷியை அடித்துக் கொன்றுவிட்டான். பெண் பக்ஷி,

மரித்த தன் பர்த்தாவான ஆண்பக்ஷியைப் பார்த்து ரொம்ப வும் கஷ்டப்பட்டு கதறிற்று. இந்த வ்ருத்தாந்தம் மஹர்ஷி யின் கண்ணாலும் பார்க்கப்பட்டது, காதாலும் பெண் பக்ஷி யின் அழுகை சப்தமும் கேட்கப்பட்டது.

இதைப் பார்த்த மஹர்ஷியின் மனதில் “**ஹா கஷ்டம்**” என்று கருணை உதித்தது. காருண்யம் என்ற குணத்தின் பெரு மையை அறிந்த மஹானுபாவனானதினால், இவ்வேடன் செய் தது பெரிய பாபம் என்று தீர்மானித்தும், கதறுகிற பெண் பக்ஷியைப் பார்த்து துக்கப்பட்டும், ஆண்பக்ஷியை அடித்த வேடனைப் பார்த்து பரமகோபத்துடன் சாபமிட்டார். அதாவது:—

मानिषाद प्रतिष्ठां त्वमगमः शाश्वतीस्समाः ।
यत्क्रौञ्चमिथुनादेकमवधीः काममोहितम् ॥

𑌮𑌾𑌨𑌿𑌷𑌾𑌦 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌤𑍍𑌵𑌮𑌗𑌮𑌃 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍀𑌸𑍍𑌸𑌮𑌾𑌃 ।
𑌯𑌤𑍍𑌕𑍍𑌰𑍌𑌞𑍍𑌚𑌮𑌿𑌥𑌨𑌾𑌦𑍇𑌕𑌮𑌵𑌧𑍀𑌃 𑌕𑌾𑌮𑌮𑍋𑌹𑌿𑌤𑌮𑍍 ॥

மாநிஷாத ப்ரதிஷ்டாம் த்வமகம: சாச்வதீஸ்ஸமா: ।
யத்க்ரௌஞ்ச மிதுநாதேகமவதீ: காமமோஹிதம் ॥

“ஹே வேடனே நீ, அநேக வர்ஷங்கள், ஸ்திதியை (ஜீவிக் கும் தன்மையை) அடையமாட்டாய். அல்பாயுஸ்ஸாகப் போய்விடுவாய். ஏனென்றால், அஹிம்ஸையைக் கைகொண்ட என்னைப்போலொத்த ரிஷிகளுக் கெதிரில், ஆண் பக்ஷியும் பெண் பக்ஷியும் ரமித்துக்கொண்டிருக்கும்பொழுது, ரதிக்ரீ டையில் பரவசமான ஆண் பக்ஷியை நீ அடித்து கொன்றது மஹாபாபமாகும். அப்பாபத்தால் இனி நீ அதிகம் ஜீவிக்க மாட்டாய். அந்த பக்ஷியானது, தன் மனைவியை அலர விட்டு விட்டு எப்படி ப்ராணனை விட்டதோ, அதுபோல் நீயும், உன் மனைவியையும் கதற விட்டு விட்டு சாகப் போகிறாய்” என் பதே சாபத்தின் ஸாரமாகும். இந்த ச்லோகத்தால் அமங் களமான தாத்பர்யம் வெளியாயிற்று. வால்மீகி மஹர்ஷியோ,

நாரத மஹர்ஷி என்ற பரம குருவினிடத்தில் "**தாரக**" ப்ரம்மதத்வத்தை உபதேசம் செய்துகொண்டு, அச்சரித்ரத்தை விஸ்தாரமான ப்ரபந்தரூபமாகச் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் இருந்துவரும் ஸமயமாகும். நாரத மஹர்ஷியோ ப்ரம்மாவிடம் சென்று வால்மீகி மஹர்ஷியினுடைய ராமபக்தியின் பெருமையைப் பற்றி அபாரமாக வர்ணித்து வருகிறார். ப்ரம்மாவோ, பரமஸந்தோஷத்துடன், வால்மீகி மஹர்ஷியின் விஷயத்தில் ப்ரஸன்னராக இருந்து வருகிறார். இந்த ஸ்மயத்தில், க்ரந்த ஆரம்பத்தில், வால்மீகி மஹர்ஷியின் முகத்திலிருந்து இவ்விதம் அமங்களமான தாத்பர்யமுள்ள ச்லோகம் வருமா என்பதை வித்வான்கள் ஊஹிக்க வேண்டும்.

இது அமங்கள ச்லோகமல்ல; பரம மங்களமான ச்லோகமே. ராமாயணம் என்ற ப்ரபந்தத்திற்கு இதே "**நாந்தி**" ச்லோகமாகும். நாரத மஹர்ஷி, ப்ரம்மாவிடம் வால்மீகி மஹர்ஷியின் ராம பக்தியை வர்ணித்து வரும்பொழுது, அதை ஸமீபத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்த, ஸரஸ்வதி தேவியானவள், பரம ஸந்தோஷத்தால் பரவசத்தை அடைந்து, **தாரக** ப்ரம்மமாகிய ஸ்ரீராமனுடைய கல்யாண குணங்களை வர்ணிப்பதற்காக யத்னம் செய்த வால்மீகி மஹர்ஷிக்கு, நாம் உதவி செய்யாதபோனால், நமக்கு, **வாக்தேவி, வித்யா அதிதேவதை, ஸரஸ்வதி,** என்ற பெயர்கள் எப்படி ஸித்திக்கும். ராமனே மஹாவிஷ்ணு. நமது பர்த்தாவான ப்ரம்மாவோ, விஷ்ணுவின் நாபிகமலத்தினின்றும் உண்டானவர். ஆகையால் விஷ்ணு நமக்கு மாமனார். அவருடைய குணானுவர்ணனத்தில் நாம் உதவி செய்தாலல்லவா நமக்கு ச்ரேயஸ் ஏற்படும் என்ற எண்ணத்துடன், ஸம்ப்ரமத்தோடு ப்ரம்மாவினிடம்கூட சொல்லிக்கொள்ளாமல், வெகுவேகமாக வால்மீகி மஹர்ஷியின் முகாரவிந்தத்தினின்று மேற்சொன்ன ச்லோக ரூபமாக ஸாக்ஷாத் ஸரஸ்வதி தேவியே வெளியில் ப்ரகாசித்தாள். இந்த ச்லோகம் ஸரஸ்வதி தேவியின் சரீரமாகும். இந்த ச்லோகத்தை பூஜிக்கிறவர்களே

ஸரஸ்வதி தேவியை ஆராதிக்கிறவர்களாக ஆகி, ஸரஸ்வதியின் கடாக்ஷத்திற்கு பாத்ரபூதாளாக ஆகிருர்கள். இதனுல் இந்த ச்லோகம் மங்களாசீர்வாதமான ச்லோகமாகும். ஸம்பூர்ணமான ராமாயணத்தின் அர்த்தம் முழுமையும் இந்த ச்லோகத்தில் அடக்கப்பட்டிருக்கிறது.

பூர்வாசார்யர்கள் அவ்விதமேதான் வர்ணிக்கிருர்கள். அதாவது, இந்த ச்லோகத்தில் निषाद (𑌨𑌿𑌷𑌾𑌦) (நிஷாத) என்ற பதமானது முதல் வேற்றுமையில் ஸம்போதனமாக ஆகும். அதாவது, ஒருவனைக் குறிப்பிட்டுக் கூப்பிடுவதாகும்.

निषीदति अस्मिन् इति निषादः

𑌨𑌿𑌷𑍀𑌦𑌤𑌿 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌷𑌾𑌦𑌃

நிஷீததி அஸ்மிந் இதி நிஷாத:

என்ற ஸமாஸத்தால், வஸிக்கும் ஸ்தானம் என்ற பொருள் வெளியாகிறது. मा (𑌮𑌾) (மா) என்ற பதத்தால் லக்ஷ்மீதேவி என்பதை அறியவும். निषाद (𑌨𑌿𑌷𑌾𑌦) (நிஷாத) என்ற பதத்தோடு मा (𑌮𑌾) (மா) என்ற பதமும் சேர்ந்து ஒரு பதமாக ஆகிறது

मायाः निषादः मानिषादः

𑌮𑌾𑌯𑌾𑌃 𑌨𑌿𑌷𑌾𑌦𑌃 𑌮𑌾𑌨𑌿𑌷𑌾𑌦𑌃

மாயா: நிஷாத: மாநிஷாத:

என்ற ஸமாஸத்தால், லக்ஷ்மீதேவிக்கு இருப்பிடமான மஹாவிஷ்ணு என்ற தாத்பர்யம் ப்ரகாசிக்கிறது. அந்த பதத்தை "**ஸம்போதனப்ரதமை**" என்று முன்பு சொன்னதினுல், हे मानिषाद (𑌹𑍇 𑌮𑌾𑌨𑌿𑌷𑌾𑌦) (ஹே மானிஷாத) லக்ஷ்மீபதியான ஹே மஹாவிஷ்ணுவே, என்பது அதன் அர்த்தமாகும். வால்மீகி மஹர்ஷியானவர் ப்ரக்ருத கதையில் கதாநாயகனை ஸ்ரீராமனையே "ஹே லக்ஷ்மீபதே, ஹே ஸ்ரீநிவாஸா, ஹே ஸீதாபதே" என்று அழைத்து ப்ரார்த்திக்கிருர். "அநேக காலம் நீ இப்பூலோகத்திலேயே ப்ரதிஷ்டையை அடைய

வேண்டும். உன்னுடைய மஹாத்ம்யமானது சந்த்ரஸூர் யாள் உள்ளவரையிலும், பூலோகத்தில் ஆங்காங்கு ப்ரகாசத்தை அடைந்துகொண்டிருக்கவேண்டும். நீயும் அவதார கார்யம் ஆகிவிட்டதென்று நினைத்து வைகுண்டம் போகக் கூடாது. இப்பூலோகத்திலேயே, நீ அநேக காலங்கள் ஸ்திரமாக வஸித்துக்கொண்டு வரவேண்டும். இப்பூலோகத்தில் நீ செய்திருக்கும் நன்மையை அறிந்த ஜனங்கள் உன்னை பூலோகத்தை விட்டுப்போக ஸம்மதிப்பார்களா? நீ செய்த நன்மையையோ, ஆதிசேஷனாலும் வர்ணித்து முடியாது," என்று வால்மீகி மஹர்ஷி ப்ரார்த்திக்கிறார்.

ப்ரக்ருதமான வ்யங்க்யார்த்தத்தில் **क्रौञ्चमिथुनं** (க்ரௌஞ்சமிதுநம்) (க்ரௌஞ்ச மிதுனம்) என்ற பதத்தால் ராவணன் என்ற ராக்ஷஸனும், மண்டோதரி என்ற ராக்ஷஸ ஸ்த்ரீயும் சேர்ந்திருக்கும் "த்வந்த்வம்" என்பதே அர்த்தமாகும்.

क्रुञ्चगति कौटिल्याल्पीभावयोः

க்ருஞ்சகதி கௌடில்யால்பீபாவயோ:

க்ருஞ்சகதி கௌடில்யால்பீபாவயோ:

என்ற தாதுவினால், ஸன்மார்க்கத்தில் போகாமல், குமார்க்கத்தில் போய்க்கொண்டு, மஹர்ஷிகளையும், தர்ம தேவதையையும் ஹிம்ஸித்து வருகிற துஷ்ட ஜாதியில் பிறந்த ராக்ஷஸர்கள், "க்ரௌஞ்ச" பதத்தால் சொல்லப்படுவார்கள். "மண்டோதரி என்ற ராக்ஷஸ ஸ்த்ரீயோடு, போகத்தை அனுபவித்து வரும் ராவணன், மண்டோதரி முதலான ராக்ஷஸ ஸ்த்ரீகள் போதாமல், மன்மதனால் மோஹிக்கப்பட்டு உன் தர்ம பத்னியான ஸீதாதேவியையும் அபஹரித்தான். அவ்விதமான தௌஷ்ட்யத்தைச் செய்த ராவணனை நீ கொன்று மஹர்ஷிகளுக்கும் தர்ம தேவதைக்கும், ஆனந்தத்தை உண்டு பண்ணி லோகத்தையே உத்தாரணம் செய்தாய். உன்னுடைய தர்மபத்னியை அபஹரித்துச் சென்றதற்காக ராவணனை நீ கொன்றாய் என்பது மட்டுமல்ல. 'ராவணன், லோகத்திலேயே பதிவ்ரதா ஸ்த்ரீகளின் கற்பை

அழித்து ரிஷி ஜனங்களையும் ஹிம்ஸித்து மஹா பாபியாக இருந்துவருகிறான்; அவனை கொன்று எங்களுக்கு அபயத்தைக் கொடுக்கவேண்டும்' என்ற ப்ரகாரம் சரணாகதியடைந்து ப்ரார்த்தித்துக்கொண்ட தேவர்கள், ரிஷிகள் இவர்களுடைய வார்த்தையை ருஜுப்படுத்த, (ராஜபுருஷர்கள் வெகு காலமாக திருடன் என்று ஸந்தேஹப்பட்ட மனிதனுடைய சௌர்யத்தை ப்ரத்யக்ஷமாகக் கண்டுபிடிக்க, அந்த திருடனுடைய ஸமீபத்திலேயே ஒரு வஸ்துவை வைத்துவிட்டு, தான் அப்பால் மறைந்துகொண்டு பிறகு அந்த திருடன் அந்த வஸ்துவை அபஹரித்ததும், அவனைப் பிடித்து தண்டிப்பதுபோல்) நீயும் அழகில் சிறந்த ஸீதாதேவியை, ஆச்ரமத்தில் தனியாக வைத்துவிட்டது போலும், நீயும் உன் தம்பியும் அப்பால் மறைந்திருக்கும் பொழுது ராவணன் ஸீதையை அபஹரித்ததும், உடன் நீ தேவர்களும் ரிஷிகளும், ராவணனுடைய தௌஷ்ட்யத்தைச் சொன்னது வாஸ்தவம்தான் என்று தீர்மானித்து, ராவணனை வதித்துவிட்டாய். லோகத்தின் க்ஷேமத்திற்காகத் தான் அவனை நீ வதம் செய்தாய். உனக்கு அதனால் யாதொரு விதமான ப்ரயோஜனமுமில்லை. நீ இவ்விதம் நடித்துக் காட்டாதபோனால் ஸீதையின் அருகில் ராவணன் வரமுடியுமா. பதிவ்ரதா சிரோமணியானதினால், கெட்ட எண்ணமுள்ள ராவணனை பஸ்மமாகச் செய்துவிடுவாள். ஆகையால், நீங்கள் ஒருவருக்கொருவர், ராவணனை குற்றவாளியாக்க, செய்துகொண்ட தந்த்ரம்தான். ஆனாலும் லோகத்திற்கு பரமக்ஷேமம் ஏற்பட்டுவிட்டது. இவ்விதமான நன்மையை லோகத்திற்குச் செய்து ரக்ஷித்த உன்னை விட்டுப்பிரிய ஒரு ப்ராணியும் ஸம்மதிக்காது. ஆகையால் இப்பூலோகத்திலேயே இன்னமும் ஜயலக்ஷ்மியோடுகூட ஸர்வோத்க்ருஷ்டனாக, நீ அநேக காலம் விளங்கிக்கொண்டு, தர்ம தேவதையை செழிக்கச் செய்யவேண்டும் என்று எனது ப்ரார்த்தனை" என மேற்சொன்ன ச்லோகத்திற்கு வ்யங்க்ய மரியாதையாக பொருள் விளங்குகிறது.

தவிர, கதா நாயகனுன ஸீதாபதியான ஸ்ரீராமசந்த்ர மூர்த்தியினுடைய ஸ்மரணமும் "**மாநிஷாத**" என்ற பதத்தால் ஏற்படுகிறபடியால், இஷ்டதேவதா ஸ்மரணம் என்ற மங்களமும் ப்ரபந்தத்தின் ஆரம்பத்தில் செய்யப்பட்டதாக ஆகிறது. இந்த ச்லோகம் "**நாந்தி**" (மங்கள) ச்லோகமானதினுல்,

काव्यार्थ सूचनं कैश्चित् नान्द्यामेव निरूप्यते

𑌕𑌾𑌵𑍍𑌯𑌾𑌰𑍍𑌥 𑌸𑍂𑌚𑌨𑌂 𑌕𑍈𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌨𑌾𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌮𑍇𑌵 𑌨𑌿𑌰𑍂𑌪𑍍𑌯𑌤𑍇

காவ்யார்த்த ஸூசநம் கைச்சித் நாந்த்யாமேவ நிரூப்யதே

என்ற வசனத்தை அனுஸரித்து, காவ்யத்தினுடைய ஸம்பூர்ணமான அர்த்தமும், "நாந்தி" ச்லோகத்தில் அடங்கி இருக்கவேண்டுமென்று தெரிகிறபடியால், ஆதிகாவ்யமான **ராமாயணத்தின்** ஸம்பூர்ண அர்த்தமும் இந்த ச்லோகத்தில் அடங்கி இருக்கிறது. ஸ்ரீமத் ராமாயணத்தை ஸப்த (ஏழு) காண்டமாகப் பிரித்திருக்கிருர்கள். அதில் பாலகாண்டமே முதல் காண்டமாகும்.

वेदवेद्ये परेपुंसि जाते दशरथात्मजे ।
वेदः प्राचेतसादासीत् साक्षाद्रामायणात्मना ॥

𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑍍𑌯𑍇 𑌪𑌰𑍇𑌪𑍁𑌂𑌸𑌿 𑌜𑌾𑌤𑍇 𑌦𑌶𑌰𑌥𑌾𑌤𑍍𑌮𑌜𑍇 ।
𑌵𑍇𑌦𑌃 𑌪𑍍𑌰𑌾𑌚𑍇𑌤𑌸𑌾𑌦𑌾𑌸𑍀𑌤𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ॥

வேதவேத்யே பரேபும்ஸி ஜாதே தசரதாத்மஜே ।
வேத: ப்ராசேதஸாதாஸீத்ஸாக்ஷாத் ராமாயணுத்மநா ॥

என்ற சாஸ்த்ரத்தால் வேதத்தின் பொருளான பரப்ரம்மமே, ராமன் என்ற திருநாமத்துடன், பூலோகத்தில் தசரத சக்ரவர்த்தியினுடைய புத்ரனுக அவதரித்தவுடன், வேதம் சப்த ராசியானதினுல், பொருள் இல்லாத சப்தம் ப்ரயோஜனமற்றதென்று நினைத்து, அந்த வேதமே வால்மீகி மஹர்ஷியின் வாக்கிலிருந்து ராமாயண ரூபமாக வெளிவந்தது என்று

முன்பே கூறப்பட்டது. அதை அனுஸரித்து, வேதமே ராமாயணமானதினுல், வேதத்தில் உள்ள "காண்டம்" என்ற விபாகத்தை அனுஸரித்து ராமாயணத்திலும் "காண்டம்" என்ற விபாகம் ஏற்பட்டது. क अण्ड (க அண்ட) (க அண்டம்) என்ற இரண்டு பதம் काण्ड (காண்டம்) என்பதில் அடங்கி இருக்கிறது. क (க) என்ற பதத்திற்கு துக்க ஸம்பந்தமில்லாத ஆனந்தமென்பது அர்த்தமாகும். அண்டம் என்பதற்கு லோகம் என்று அர்த்தம். உலகத்தில் பரம ஸௌக்யத்தை அடைவதற்கு வழியை எந்த இடத்தில் சொல்லப்படுகிறதோ அதற்கு காண்டம் என்று வ்யவஹாரம் ஏற்படுகிறது.

ப்ரக்ருதத்தில் "பாலாள்" என்ற சப்தத்தால், ஆத்மஞானமில்லாத அவித்வத் ஜனங்கள் என்று சொல்லப்படும். अज्ञंहिबालमित्याहुः (அஜ்ஞம்ஹிபாலமித்யாஹு:) (அஞ்ஞம்ஹிபால மித்யாஹு:) என்றதனுல் ஆத்ம ஸ்வரூபத்தை அறியாதவர்கள் வயதில் முதிர்ந்தவர்களானுலும் அவர்கள் குழந்தைகள் தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த அவித்வான்களுக்கும் பரம ஸௌக்யத்தை (மோக்ஷானந்தத்தை) அடைய இந்த லோகத்தில் உபாயங்கள் இன்னதுதான் என்பதை விளக்கிக் காட்டுகிறபடியால், முதல் காண்டத்திற்கு பாலகாண்டம் என்று பெயர் ஏற்பட்டது. அந்த உபாயங்களோ பாலகாண்டத்தில் வித்வான்களுக்குப் புலப்படும். அதாவது புண்யகுலத்தில் பிறப்பது. இக்ஷ்வாகு வம்சத்தைப்போல் வேறு பெரிய வம்சமொன்று லோகத்தில் இருக்கிறதென்று சொல்லவும் முடியாது. தசரத சக்ரவர்த்தியைப்போல் புண்யவானுன மற்ருெரு அரசன் இருக்கின்ருன் என்றும் சொல்லமுடியாது. அம்மஹானுபாவனின் வம்சத்தில் ஸ்ரீராமன் அவதரித்ததினுல், ஜனங்களுக்கு "ஹே ஜனங்களே, மோக்ஷானந்தத்தை அடைய விரும்பினுல் தவம் செய்து புண்ய குலத்தில் பிறக்க

வேண்டு” மென்பதை ஸ்வானுஷ்டானமூலம் காட்டினர்.

இரண்டாவதோ, மஹாபுருஷ ஸம்ச்ரயமாகும். விச்வாமித்ர மஹர்ஷியைப்போல் இனி வேறு ஒருவரையும் மஹாத்மாவாகச் சொல்லமுடியாது.

दुर्लभं त्रयमेवैतत् देवानुग्रह हेतुकं ।
मनुष्यत्वं मुमुक्षुत्वं महापुरुष संश्रयः ॥

𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌂 𑌤𑍍𑌰𑌯𑌮𑍇𑌵𑍈𑌤𑌤𑍍 𑌦𑍇𑌵𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹 𑌹𑍇𑌤𑍁𑌕𑌂 ।
𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌤𑍍𑌵𑌂 𑌮𑌹𑌾𑌪𑍁𑌰𑍁𑌷 𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌃 ॥

துர்லபம் த்ரயமெவைதத் தேவாநுக்ரஹ ஹெதுகம் ।
மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷ ஸம்ச்ரய: ॥

என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து ஈச்வரனை ப்ரத்யக்ஷமாகப் பார்க்க மானிடப்பிறப்பு, மோக்ஷத்தை அடையவேண்டுமென்ற ஆசை, மஹாபுருஷாளுடைய ஸம்ச்ரயம், இம்மூன்றுதான் முக்ய உபாயமாகுமென்று தெரிகிறது. அதிலும் மஹாபுருஷ ஸம்ச்ரயம் ஸாமான்யமாகக் கிடைக்காது. மஹாபுண்யத்தால்தான் கிடைக்கும். தசரத சக்ரவர்த்தி முன் சொன்ன ப்ரகாரம் மஹாபுருஷனுனாலும் க்ஷத்ரியனானதினுல் ஆசார்ய ஸ்தானத்தில் வீற்றிருக்க சாஸ்த்ரரீதியாக அதிகாரம் இல்லாததினுல், விச்வாமித்ரர் என்ற ப்ராம்மணோத்தமரை ஸ்ரீ ராமன் அண்டினர். வஸிஷ்ட மஹர்ஷி ப்ராம்மணனானதினுல் ஆசர்ய பதவியை வஹிக்க அதிகாரமுண்டு. ஆனாலும் ராஜத்வாரத்தில் ஸம்பந்த மிருப்பதினுல் ‘நமது ராஜபுத்ரன் ராமன்’, என்று சிக்ஷிக்க பீதியை அடைவார். அக்காரணத்தால் விச்வாமித்ர மஹர்ஷியை பரம குருவாக அண்டி தனது அனுஷ்டானத்தால் அக்ஞ ஜனங்களுக்கு மோக்ஷானந்தத்தை அடைய மஹாபுருஷ ஸம்ச்ரயம் முக்யமான உபாயமாகுமென்பதை ப்ரகாசப்படுத்தினர்.

மூன்ருவதோ, நல்ல குலத்தில் பிறந்த கன்னிகையை விவாஹ விதிப்படி அனுஸரித்து பாணிக்ரஹண மூலமாக க்ரஹித்துக்கொண்டு கார்ஹஸ்த்ய தர்மத்தை அனுஷ்டித்து

வருவது என்பதை ப்ரகாசப்படுத்தினுர், ஸீதா தேவியை விவாஹம் செய்துகொண்டு. அந்த ஸீதா பரிணயம் என்ற கதையோடு பாலகாண்டமானது சற்றேரக்குறைய ஸமாப்தி அடைகிறது. பாலகாண்டத்தில் முக்யமாக ஸீதாகல்யாணம்தான் பொருளாகும்.

நாந்தி ச்லோகத்திலோ **"மானிஷாத"** என்ற பதத்தில் **"மா"** என்றதினுல் லக்ஷ்மிதேவியும் **"நிஷாத"** என்றதினுல் அவளுக்கு இருப்பிடமான விஷ்ணுவும் வெளியாகிறது என்று சொல்லப்பட்டதினுல்,

राघवत्वे भवेत्सीता रुक्मिणी कृष्ण जन्मनि

𑌰𑌾𑌘𑌵𑌤𑍍𑌵𑍇 𑌭𑌵𑍇𑌤𑍍𑌸𑍀𑌤𑌾 𑌰𑍁𑌕𑍍𑌮𑌿𑌣𑍀 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿

ராகவத்வெ பவேத்ஸீதா ருக்மிணீ க்ருஷ்ண ஜன்மநி

என்ற வசனத்தால், விஷ்ணு ராமாவதாரம் செய்யும்பொழுது, லக்ஷ்மியே ஸீதையாக அவதரிக்கின்ருள் என்று தெரிகிறபடியால், ப்ரக்ருதத்தில், **"மானிஷாத"** என்ற பதத்திற்கு "ஸீதாபதி" என்றே அர்த்தம் சொல்ல வேண்டும். ஆகையால் ஸீதாகல்யாணத்தில் பர்யவஸானத்தை அடைகிற **பாலகாண்ட** கதையானது **"மானிஷாத"** என்ற பதத்தால் ஸூசிப்பிக்கப்படுகிறது.

प्रतिष्ठान्त्वं अगमः (𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍍𑌤𑍍𑌵𑌂 𑌅𑌗𑌮𑌃) (**ப்ரதிஷ்டாந்த்வம் அகம:**) என்பதினுல் தர்ம ப்ரதிஷ்டையை ஸூசிப்பிக்கும் அயோத்யாகாண்ட கதை சொல்லப்படுகிறது. அதாவது,

योद्धुं रोद्धुं अर्हा योध्या न योध्या अयोध्या

𑌯𑍋𑌦𑍍𑌧𑍁𑌂 𑌰𑍋𑌦𑍍𑌧𑍁𑌂 𑌅𑌰𑍍𑌹𑌾 𑌯𑍋𑌧𑍍𑌯𑌾 𑌨𑌯𑍋𑌧𑍍𑌯𑌾 𑌅𑌯𑍋𑌧𑍍𑌯𑌾

யோத்தும் ரோத்தும் அர்ஹா யோத்யா நயோத்யா அயோத்யா

என்ற ஸமாஸத்தால், யமபயமில்லாத நகரத்திற்கு **"அயோத்தி"** என்று பெயர் ஏற்பட்டது. யமனுல் அங்குள்ளவர்கள் பீடிக்கப்பட மாட்டார்கள். யமனும் அங்குள்ளவர்களிடம் போக

மாட்டான். அந்த நகரியானது **"அயோத்தி"** என்ற பதத்தால் . சொல்லப்படும், முக்தி ஸ்ரீநகரியாகும். அல்லது வைகுண்டம் என்ற நகரமாகும். அந்த நகரத்தில், நித்ய ஸூரிகளான பாகவதோத்தமர்கள் அனுபவிக்கும் ப்ரமானந்தத்தை, இந்த லோகத்திற்குள் ப்ராணிகள் எங்கிருந்தாலும் அனுபவிக்கக்கூடிய பாக்யமானது எந்த உபாயத்தால் ஏற்படுமோ, அந்த உபாயத்தைச் சொல்லும் காண்டமே, **"அயோத்யா"** காண்டமாகும். அதாவது, வைகுண்டம் போகாமலே, இப்பூலோகத்திலேயே இருந்துகொண்டு, வைகுண்டத்திலுள்ள ஸுகத்தை அனுபவிப்பதற்கு மார்க்கத்தைக் காட்டுகிறபடியால், இரண்டாவது காண்டத்திற்கு 'அயோத்யா' காண்டமெனப் பெயர் ஏற்பட்டது. அந்த காண்டத்தில் ஸ்ரீராமசந்த்ரமூர்த்தியானவர், தன்னுடைய அனுஷ்டானமூலமாக தர்மப்ரதிஷ்டை செய்தார். **தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம்**, என்ற நான்குவிதமான புருஷார்த்தங்களுக்குள், **மோக்ஷம்** என்ற புருஷார்த்தமே மேலான புருஷார்த்தமாகும். அம்மோக்ஷத்தை அடைவதற்கு தர்மமே அந்தரங்க உபாயம். அர்த்தமும் காமமும் லோகத்திலுள்ள புருஷார்த்தங்களாக ஆகும். அர்த்த காமங்களைப் பற்றி வேதம் ஒன்றும் சொல்லவேயில்லை. ஆகையால் மோக்ஷம் என்ற பரம புருஷார்த்தத்தை அடையவேண்டுமென்ற விருப்பமுள்ளவன், பாமர ஜனங்களுக்கு பெரிதுபோல் தோன்றுகிற அர்த்தத்தையும் காமத்தையும் துச்சமாகத் தள்ளிவிட்டு, தர்மமென்ற புருஷார்த்தத்தையே சரணமடைய வேண்டும். அந்த தர்மத்திலும், **ஸாமான்ய தர்மம், விசேஷ தர்மம்**, என்று இருவகை உண்டு. அதிகாரியைக் குறிப்பிட்டு, தேச காலத்தையும் முன்னிட்டு, ஒரு நிமித்தத்தையும் ஒட்டி, சாஸ்த்ரத்தில் சொல்லப்படும் தர்மமானது **விசேஷ தர்ம** மாகும். அதிகார நியமமில்லாமலும், தேசகாலநிமித்த நியமமில்லாமலும், ப்ராணி ஸாமான்யத்திற்கு பொதுவாக ஏற்பட்ட தர்மம் **ஸாமான்ய தர்ம** மாகும். அவைகளோ, **அஹிம்ஸை, ஸத்யம், தயை,** முதலானவைகளே.

இது ஆந்தரமான ஸாமான்ய தர்மமாகும். பாஹ்யமான ஸாமான்ய தர்மமோ,

जीवतोः वाक्यकरणात् प्रत्यब्दं भूरि भोजनात् ।
गयायां पिण्डदानाच्च त्रिभिः पुत्रस्य पुत्रता ॥

𑌜𑍀𑌵𑌤𑍋𑌃 𑌵𑌾𑌕𑍍𑌯𑌕𑌰𑌣𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌬𑍍𑌦𑌂 𑌭𑍂𑌰𑌿 𑌭𑍋𑌜𑌨𑌾𑌤𑍍 ।
𑌗𑌯𑌾𑌯𑌾𑌂 𑌪𑌿𑌣𑍍𑌡𑌦𑌾𑌨𑌾𑌚𑍍𑌚 𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑍁𑌤𑍍𑌰𑌤𑌾 ॥

ஜீவதோ: வாக்யகரணாத் ப்ரத்யப்தம் பூரி போஜநாத்
கயாயாம் பிண்டதானச்ச த்ரிபி: புத்ரஸ்ய புத்ரதா

என்ற வசனத்தால், தாய் தகப்பன் ஜீவிக்கும் காலத்தில் அவர்களுடைய ஆக்ஞை ப்ரகாரம் நடந்துகொள்வது, அவர்கள் மரித்த பிற்பாடு, மரித்த தினத்தில், ச்ராத்தம் என்ற ஸத்கர்மாவினால் அவர்களை த்ருப்திசெய்து வைப்பது, தனது ஜீவதசைக்குள் கயாக்ஷேத்ரம் சென்று, அவர்களுடைய முக்திக்காக, அங்குள்ள வட வ்ருக்ஷத்தினடியில் ச்ராத்தம் செய்து பிண்டம்போடுவது, இம்மூன்று தர்மங்களும், ஸாமான்ய தர்மத்தில் பாஹ்ய தர்மமாகும். இம்மூன்று தர்மங்களையும் செய்த புத்ரன்தான் "புத்ரன்" என்ற சப்தத்திற்கு பொருத்தமாக ஆகிறான்.

पुन्नाम्नः नरकात त्रायत इति पुत्रः

𑌪𑍁𑌨𑍍𑌨𑌾𑌮𑍍𑌨𑌃 𑌨𑌰𑌕𑌾𑌤𑍍 𑌤𑍍𑌰𑌾𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌪𑍁𑌤𑍍𑌰𑌃

புன்நாம்ந: நரகாத் த்ராயதஇதி புத்ர:

என்ற ஸமாஸத்தால், 'புத்' என்ற சப்தத்திற்கு, நரகம் என்ற அர்த்தமாகும். அதாவது துக்கம் என்பதே அதன் பொருள். தாய் தந்தைகளுக்கு, அந்த துக்கத்தைக் கொடுக்கக் கூடாது. அவர்களை அந்த துக்கத்தினின்றும் ரக்ஷிக்கிறவனே புத்ரனாவான். அவர்கள் ஜீவிக்கும்பொழுது அவர்களுடைய ஆக்ஞையை சிரஸால் வஹித்து புத்ரன் பரிபாலனம் செய்தானேயானால், அவர்களுடைய ஆனந்த

விசேஷம், புத்ரனுக்கு ப்ரத்யக்ஷம் என்பதில் ஆக்ஷேபணை இல்லை. அவ்விதமே, அவர்களுடைய வார்த்தைகளை உல் லங்கனம் செய்தானேயானுல், அவர்களுக்கு ஏற்படும் துக்க மும் அளவற்றது என்பது அனுபவஸித்தமானது. ஒரு வித மான துக்கங்களுக்கும் அவர்களுக்கு இடங்கொடுக்காமல் நடந்துகொள்கிறவனே புத்ரனுவான். அவர்கள் மரித்த பிறகும், அவரவர்கள் கர்மாவுக்கு தகுந்தபடி ஆங்காங்கு தேச கால விசேஷத்தில், ப்ராணி விசேஷங்களுடைய யோனிகளில் பிறக்கிருர்கள். 'எங்கோரிடத்தில் அவர்கள் பிறந்து விட்டார்களே, அங்கு அவர்கள் திருப்திக்குக் காரணமான அன்னுதிகள் இராதா, நாம் எதற்காக அவர்கள் மரித்த தினத்தில், ச்ராத்தாதிகளால் அவர்களை திருப்திசெய்து வைப்பது' என்று மூர்க்கவாதம் செய்கிற நாஸ்திகர்களின் கோஷ்டியில் சேராமல், ச்ரத்தையுடன் சாஸ்த்ரத்தை நம்பி, அவர்கள் மரித்ததினத்தில் ச்ராத்தாதி களைச் செய்தே ஆகவேண்டும். ஜாதிகள் வெவ்வேருக இருப்பதுபோல், ஆகாராதிகளும் வெவ்வேருக ப்ரஸித்த மாக ஏற்பட்டது. சால்யான்னத்தை சிலர் புஜிக்கிருர்கள், மாம்ஸத்தை பசனம் செய்து சிலர் புஜிக்கிருர்கள், பசனம் செய்யாமலே மாம்ஸத்தை சிலர் புஜிக்கிருர்கள். அப்படி யப்படி அந்தந்த ஜாதி விசேஷங்களுக்கு ஆஹாராதிகள் ஏற் பட்டது. நமது தாய் தந்தைகள், எந்த ஜாதிவிசேஷத்தில் பிறந்திருக்கிருர்கள் என்பதை நாம் அறியமுடியாது. அதை அறிவதற்காகவே, பித்ருலோகத்தில் வஸுக்கள், ருத்ராள், ஆதித்யாள், என்று பித்ருதேவதைகள் ஈச்வரனுல் சிருஷ் டிக்கப்பட்டு ஸர்வக்ஞாளாக விளங்குகிருர்கள். நாம், தாய் தந்தைகள் மரித்ததினத்தில், ச்ரத்தையுடன், நம் பித் ருக்களை உத்தேசித்து ப்ராம்மணமுகமாக கொடுக்கும் ஹவ்ய கவ்யாதிகளை, ப்ரதிநிதியாக, நமது தாய் தந்தைகள் எந்த ஜாதியில் எந்த ஆஹாரத்தை புஜிக்கிறவர்களாகப் பிறந் திருக்கிருர்களோ; அந்த ஆஹார விசேஷாதிகளாக மாற்றி முன்சொன்ன பித்ருதேவதைகள் நமது தாய் தந்தைகளுக்கு

எத்ருச்சையாகக் கிடைக்கும்படி செய்து அவர்களை த்ருப்தி செய்து வைக்கிறார்கள். ஒரு தினத்தில், நாம் ச்ரத்தையுடன் கொடுக்கும் ஹவ்ய கவ்யாதிகளை, ஒரு வருஷ ஆஹாரத்திற்கு முதலாக வைத்துக்கொண்டு, நம் தாய் தந்தைகள் எந்த தேசத்தில், எந்த ஜாதியில், எந்த ஆஹாரத்தை புஜிக்கிறவர்களாக பிறந்திருக்கிறார்களோ, அந்த ஆஹாரத்தை தினம் வஸு ருத்ராள் ஆதித்யாள் என்ற நித்ய பித்ருக்கள் கொடுத்து வருகிறார்கள். அதனால் ச்ராத்தம் வீண் என்று ஸந்தேஹப்படவே இடமில்லை. अदृष्टे वचनं प्रमाणं (𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌵𑌚𑌨𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂) (அத்ருஷ்டே வசனம் ப்ரமாணம்) என்ற வசனத்தை அனுஸரித்து, தர்மமானது கண்ணுக்குப் புலப்படாததான வஸ்துவானதினால், சாஸ்த்ரம் சொன்னபடியே அதை நம்பவேண்டும் என்று தெரிகிறபடியால், ச்ராத்தம் முதலான தர்மத்தில், சாஸ்த்ரத்தையே நம்பி ப்ரவ்ருத்திக்க வேண்டும்.

ஒரு பாங்கில் மற்றொரு பாங்கிற்காகப் பணம் கட்டுவது போலவும், ஒரு தேசத்திலுள்ளவனுக்காக மற்றொரு தேசத்திலிருந்து மணியார்டர் செய்வதுபோலவும், நமது தாய் தந்தைகளுக்காக இங்கு ப்ராம்மணர்களிடம் கொடுக்கப்படும் ஹவ்ய கவ்யாதிகளும். அவர்கள் மோக்ஷத்தை அடைந்திருந்தால் எதற்கு ச்ராத்தம் செய்யவேண்டுமென்று நாஸ்திகவாதம் செய்யக்கூடாது. அவர்கள் மோக்ஷத்தையடைந்துவிட்டார்கள் என்பது நமக்கு எவ்விதம் தெரியக்கூடும். அவர்கள் நேரில் வந்து "நாங்கள் முக்தாளாக ஆகிவிட்டோம், ச்ராத்தம் செய்யவேண்டாம்" என்று சொன்னார்களா? அவர்கள் ஜீவதசையில், அவர்களிடமிருந்த ஞான பலத்தால் அவர்கள் முக்தர்களாக ஆகியிருப்பார்கள் என்று ஊஹிப்பதும் மூடத்தனமே. அவர்களுக்குமேல் ஞானமுள்ள ஜடபரதர் முதலானவர்களும், ப்ராரப்தத்தால், மான் முதலான ஜாதியில் மறுபடியும் பிறந்திருக்கிறார்கள். ப்ரக்ருதத்திலும், **தாரக** ப்ரம்மத்தை ப்ரத்யக்ஷமாகப் பார்த்த தசரதர், முக்தராக ஆகியிருக்கக்கூடாதா. சித்ரகூட பர்வ

த்தில், பரதன்மூலம், தசரதரின் மரணத்தை அறிந்தவுடன், ஸ்ரீராமசந்த்ரமூர்த்தி ச்ரத்தையுடன் ஸமஸ்காராதிகளைச் செய்யவில்லையா? அப்படியே முக்தர்களாகவே யிருந்தாலும், ஈச்வரன் புஜிப்பதில்லை என்பதற்காக, பூஜையை விட்டுவிடுவதுண்டா. விசேஷமான நிவேதனாதிகளை ஈச்வரனுக்கு நாம் செய்கிறோமே. அதுபோல் முக்தர்களான பித்ருக்களுக்கும் ஏன் ச்ராத்தம் செய்யக்கூடாது. ஆகையால், ச்ராத்தம் என்பது அவச்யம்தான். அதையும் செய்தால்த்தான் புத்ரனாக ஆகுவான். அத்துடன்,

ज्ञानात् पिण्डात् तथा न्यासात् पुत्राःस्वान् मोचयन्तिहि

𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌪𑌿𑌣𑍍𑌡𑌾𑌤𑍍 𑌤𑌥𑌾 𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌃𑌸𑍍𑌵𑌾𑌨𑍍 𑌮𑍋𑌚𑌯𑌨𑍍𑌤𑌿𑌹𑌿

ஞானாத் பிண்டாத் ததா ந்யாஸாத் புத்ராஸ்வாந் மோசயந்திஹி

என்ற சாஸ்த்ரத்தால், தன் தாய் தந்தைகள், ஏதோ ஸூக்ஷ்மமான பாபத்தைச் செய்து, அதனால் நரகாதிகளில் யமபீடையை அனுபவித்து வருகிறவர்களாக இருக்கும் பக்ஷத்தில், அத்துக்கத்தினின்றும் அவர்களை விடுதலை செய்து வைப்பதற்கு புத்ரனானவன் ஆத்மஞானத்தை ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும். இல்லாவிடில் பரம வைராக்யத்துடன் ஸந்யாஸத்தைச் செய்துகொள்ள வேண்டும். இல்லாவிடில் கயா க்ஷேத்ரத்திலுள்ள விஷ்ணுபாதத்தில் பிண்டதானம் செய்யவேண்டும் என்று தெரிகிறபடியால், கயையில் பிண்டதானமும், புத்ரனால் அவச்யம் செய்யவேண்டிய கர்மாவாகும். பிதாவும் மரிக்கும் காலத்தில் ஸத்புத்ரனிடத்தில்,

त्वं यज्ञः त्वं क्रतुः त्वं ब्रह्म त्वं आत्मा

𑌤𑍍𑌵𑌂 𑌯𑌜𑍍𑌞𑌃 𑌤𑍍𑌵𑌂 𑌕𑍍𑌰𑌤𑍁𑌃 𑌤𑍍𑌵𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌆𑌤𑍍𑌮𑌾

த்வம் யக்ஞ: த்வம் க்ரது: த்வம் ப்ரஹ்ம த்வம் ஆத்மா

என்றதினால், "யக்ஞம் முதலான ஸத்கர்மாக்களைச் செய்ய நான் தவறிவிட்டேன், வேதாந்த விசாரம் செய்து ப்ரம்ம

ஸாக்ஷாத்காரத்தையும் அடையவில்லை, நீ அவ்வைகளை அவச்யம் செய்து என்னை கரை ஏற்ற வேண்டும்" என்று சொல்லிக் கொண்டு ப்ராணனை விடுகிறான் என்று சாஸ்த்ரம் சொல்லு கிறது. ஆகையால் **புத்ரன்** என்ற சப்தத்திற்கு பொருத்த மான பொருளாக ஆகவேண்டுமேயானால், மேற்சொன்ன மூன்று தர்மத்தையும் அவச்யம் அனுஷ்டித்தே தீரவேண்டும். இம்மூன்றுகளுக்குள், தாய்தந்தைகளின் ஜீவதசையில் அவர்கள் ஆக்ஞையை பரிபாலனம் செய்வதே முக்ய தர்ம மாகும். இந்த முக்ய தர்மத்தை ஸ்ரீ ராமசந்த்ரமூர்த்தி யானவர், அயோத்யா காண்டத்தில் ப்ரதிஷ்டை செய் தார். இந்த்ரன் முதலான தேவர்களாலும் ஆசைப்படத் தகுந்த, இக்ஷ்வாகுவம்சராஜ்யஸ்ரீ என்ற அகண்டமான அர்த்தத்தையும், துச்சமாக நினைத்துவிட்டு, கைகேயி தேவி என்ற ஸ்த்ரீயின் வலையில் அகப்பட்டுக்கொண்ட தசரத சக்ர வர்த்தியாகிய தன் பிதாவினுடைய வாக்யத்தை பரிபாலனம் செய்வதற்கு, பரம யௌவன வயதில் அரண்யம் செல்ல ப்ரஸ்தானம் செய்து, லக்ஷ்மணஸ்வாமியினுடைய தடைக் கும், கௌஸல்யாதேவியின் தடைக்கும், உட்படாமல் அவர்களுக்கும் தர்மதத்வத்தை உபதேசித்து, ஸாரக்ராஹி களாக அவர்களைச் செய்து, தான் சித்ரகூட பர்வதத்தி லிருக்கும்பொழுது, பரத ஸ்வாமி தர்மத்திலிருந்து தன்னை ப்ரச்யுதனாகச் செய்ய யத்னம் செய்தும், அதற்கும் உட் படாமல், பரதனைப் பார்த்து "எனக்கு அரண்யத்தில் வஸிக் கும்படி பிதாவின் ஆக்ஞை. உனக்கு ராஜாவாக இருக்கும் படி ஆக்ஞை. நீ, நான் இருவரும் பித்ருவாக்யத்தை பரிபால னம் செய்வது அவச்யமாகும்" என்று பித்ருவாக்ய பரிபால னம் என்ற தர்மத்தையே ஆங்காங்கு, அயோத்யாகாண்டம் முடிகிறவரை ஸம்ஸ்தாபனம் செய்திருக்கிறார். அயோத்யா காண்டத்தில் பித்ருவாக்யபரிபாலனம், அவச்யம் என்று தோன்றுவதுபோல் வேறு எந்த சாஸ்த்ரத்திலும் கிடையாது. இதனால் பித்ருவாக்யபரிபாலனம் என்ற தர்ம ரஹஸ் யத்தை அயோத்யாகாண்டத்தில் பகவான் ப்ரதிஷ்டை

செய்திருப்பதினுல், "நாந்தி" ச்லோகத்தில், प्रतिष्ठां त्वं अगमः (ப்ரதிஷ்டாம்த்வம் அகம:) (ப்ரதிஷ்டாம்த்வம் அகம:) என்ற பதத்தால் தர்ம ப்ரதிஷ்டையையும் நீ செய்திருக்கிருய் என்ற அர்த்தம் வெளியாகிறபடியால், தர்ம ப்ரதிஷ்டையைச் சொல்லும் அயோத்யாகாண்ட கதையும் "ப்ரதிஷ்டாந்த்வம் அகம :" என்ற பதத்தால் ஸூசிப்பிக்கப்படுகிறது.

அரண்யத்தில் வஸித்துக்கொண்டு தபஸ்ஸையே தனமாக நம்பி, ஈச்வரனை எதிர்பார்க்கும் மஹர்ஷிகள் आरण्याः (ஆரண்யா:) (ஆரண்யா:)என்ற சப்தத்தால் சொல்லப்படுவார்கள். அம்மஹர்ஷிகளுக்கு இந்த லோகத்தில் தாரக ப்ரம்மமாகிய ஸ்ரீராமன் அவதரித்து அகண்டமான ஆனந்தத்தை கொடுத்துவந்த காண்டமானதினுல், மூன்ருவது காண்டத்திற்கு ஆரண்யகாண்டமெனப் பெயர்வந்தது. ஸ்ரீராமனுல் மஹர்ஷிகளுக்கு அநேகவிதமான நன்மைகள் செய்யப்பட்டதாக இக்காண்டத்தின்மூலம் தெரிகிறது. பதினுன்கு வருஷங்கள் தான் அரண்யத்தில் வஸிக்கவேண்டுமென்ற நியமத்தை பரிபாலனம் செய்வதற்காக, மஹா ப்ராம்மணேத்தமர்களான ரிஷிகளின் ஸந்நிதியை எதிர்பார்த்ததினுல், பதிமூன்று வருஷ காலங்கள் பித்ருவாக்ய பரிபாலனம் என்ற தர்மத்தை மஹர்ஷிகளின் ஆச்ரமங்களிலேயே கழித்தார் என்று தெரிகிறது. ப்ராம்மணர்களுடைய ஸந்நிதியில் அனுஷ்டிக்கப்படும் தர்மமே, புஷ்களமான பலத்தைக் கொடுக்கும். அதனுல் நாம் அனுஷ்டிக்கிற பித்ருவாக்ய பரிபாலனம் என்ற தர்மமானது ரிஷிகளின் எதிரில் அனுஷ்டித்ததாக ஆகவேண்டும் என்ற எண்ணத்தால், ரிஷிகளுடைய ஆச்ரமத்திலேயே வஸிக்க ராமனுக்கு அபிப்ராயம் ஏற்பட்டது. 'நாந்தி' ச்லோகத்திலுள்ள शाश्वतीस्समाः (ஶாஶ்வதீஸ்ஸமா:) (சாச்வதீஸ்ஸமா:) என்ற பதத்தால் பித்ருவாக்ய பரிபாலனம் என்ற தர்மத்தை, தான் ப்ரதிஷ்டை செய்ததுமாத்திரமன்னியில், தானும் அநேக வர்ஷங்கள் அனுஷ்டித்து வந்தார் என்று தாத்பர்யம் ப்ரகாசிக்

கிறபடியால், தர்ம ப்ரதிஷ்டா அனுவ்ருத்தி என்பதைச் சொல்லுகிற, ஆரண்யகாண்ட கதையும் ஸூசிப்பிக்கப்படு கிறது.

அவித்வான்களான க்ர்மநிஷ்டர்களைக் குறிப்பது பால காண்டம். வித்வான்களான ஞான நிஷ்டர்களைக் குறிப்பது அயோத்யாகாண்டம். உபாஸகர்களான ரிஷிகளைக் குறிப்பது ஆரண்யகாண்டம். இவ்விதம் கர்மிஷ்டர்கள், ஞானிகள், உபாஸகர்கள், இம்மூன்று விதமான ஸஜ்ஜனங்களுக்கும் ஸ்ரீராமனால் செய்யப்பட்ட நன்மையை ப்ரகாசிக்கும் காண் டங்களாக, முதல் மூன்று காண்டங்களாகும்.

நான்காவது காண்டத்திற்கு, "**கிஷ்கிந்தா**" காண்டமெனப் பெயர் ஏற்பட்டது.

फिष्किस्तु देवपादे स्यात् शरणागतिरीरिता

𑌕𑌿𑌷𑍍𑌕𑌿𑌸𑍍𑌤𑍁 𑌦𑍇𑌵𑌪𑌾𑌦𑍇 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌿𑌰𑍀𑌰𑌿𑌤𑌾

கிஷ்கிஸ்து தேவபாதே ஸ்யாத் சரணாகதிரீரிதா

என்ற மஹாநாராயண உபநிஷத் வாக்யத்தை அனுஸரித்து "**கிஷ்கி:**" என்ற பதத்தால், சரணாகதி என்ற விசேஷ தர்ம மானது சொல்லப்படுகிறது. ஸர்வேச்வரனான ஸ்ரீராமனை சரணாகதியடைந்து, அந்த தர்ம விசேஷத்தால் சத்ருக்ஷயம் ஏற்பட்டு, பரமஸுகத்தை அனுபவித்து வரும் பெரு மையைக் காட்டும் காண்டமானதினால், நான்காவது காண் டத்திற்கு **கிஷ்கிந்தா** காண்ட மெனப் பெயர் ஏற்பட் டது. '**கிஷ்கி:**' என்றால் சரணாகதி என்று சொல்லப்பட்டது. அதை **दयति अनुभवति** (𑌦𑌯𑌤𑌿 𑌅𑌨𑍁𑌭𑌵𑌤𑌿) (**தயதி அனுபவதி**) என்ற ஸமாஸத்தால் சரணாகதி செய்தவர்கள் என்ற பொருள் வெளியாகிறது. தன்னை சரணாகதி செய்தவர் களுக்கு ஸ்ரீராமன் நன்மையைச் செய்த காண்டமாகும். ஸுக்ரீவனோ, வாலியின் பயத்தால் ராமனை சரணாகதி செய்து, சத்ருவான வாலியையும் ராமன்மூலம் நாசம்

செய்துவிட்டு, கிஷ்கிந்தா ராஜ்யத்தில் பரமஸௌக்யத்தை அடைந்து வந்தான் என்ற கதையல்லவா, கிஷ்கிந்தா காண்டத்தில் ப்ரதானமானது. அக்கதை "நாந்தி" ச்லோகத்தில் உள்ள உத்தரார்த்தத்தால் வெளியாகிறது.

कुञ्चकुटिलगति अल्पी भावयोः

க்ருஞ்சகுடிலகதி அல்பீ ஹாவயொஃ

க்ருஞ்சகுடிலகதி அல்பீ பாவயோ:

என்ற தாதுவானது முன்பு ப்ரகாசப்படுத்தப்பட்டிருக்கிறது. कुञ्चैव क्रौञ्चः (க்ருஞ்சைவ க்ரௌஞ்சஃ) (க்ருஞ்சைவ க்ரௌஞ்ச:) என்றதினால் வக்ரம் என்பது பொருளாகும். வக்ரமான நடத்தையில் ஏற்பட்ட வானர ஜாதியானது 'க்ரௌஞ்ச' பதத்தால் சொல்லப்படும். 'க்ரௌஞ்சமிதுனம்' என்றால் வாலி, தாரை இவர்களுடைய சேர்க்கை என்று அறியவும். அவ்விருவர்களுக்குள், காமபாரவச்யத்தை அடைந்து, தம்பியான ஸுக்ரீவனுடைய பார்யையை அபஹரித்த வாலியைக் கொன்று, சரணாகதியடைந்த ஸுக்ரீவனை ரக்ஷித்து, அதன் மூலம் லோகத்திற்கு நன்மையைச் செய்த காரணத்தால் "ஹே ராமா! இன்னும் அநேக வர்ஷங்கள் இப்பூலோகத்திலேயே, சாச்வதமான ப்ரதிஷ்டையை அடையவேண்டும்", என்ற ப்ரார்த்தனா ரூபமான தாத்பர்யத்தைக் கவனிக்கும்பொழுது, நாந்தி ச்லோகத்தில் அதிலும் முக்யமாக உத்தரார்த்தத்தில் கிஷ்கிந்தாகாண்ட கதையானது சொல்லப்பட்டிருக்கிறது. இவவிதம் கிஷ்கிந்தாகாண்ட கதையும், "நாந்தி" ச்லோகத்தில் ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தது ஸுந்தரகாண்டமாகும். सुन्दरं (ஸுந்தரம்) (ஸுந்தரம்) என்ற சப்தத்தால் சோபனம் என்ற தாத்பர்யம் வெளியாகிறது. அதாவது சுபஸம்பத்தியாகும். அவிவேகத்தினுடைய பாரவச்யத்தை அடைந்து பரம துக்கத்தை அனுபவித்து வரும் ஜீவனுக்கு, அந்த அவி

வேகத்திலின்றும் விடுபட்டவனாக ஆக உபாயத்தை போதிக்க வல்லவனான பரமகுருவினுடைய லாபம் யத்ருச்சையாகக் கிடைப்பதே "சுபஸம்பத்தி" என்று சொல்லப்படும். ப்ரக்ருதத்தில், रावयतीति रावणः (ராவயதீதி ராவண:) (ராவயதீதி ராவண:) என்ற ஸமாஸத்தால், ஸகல ஜீவகோடிகளையும், தேஹம் வேறு, ஆத்மா வேறு என்ற விவேகம் இல்லாமல் செய்து, வ்யாமோஹப்படுத்திவரும் அவிவேகமே "ராவணன்" என்று சொல்லப்படுவது. "ஜீவ"தத்வமே "ஸீதை"யாக ஆகிறுள். அந்த ராவணனுகிற அவிவேகத்தில் பாரவச்யத்தை அடைந்து லங்கையில் துக்கத்தை அனுபவித்துவருகிற ஸீதையான ஜீவனுக்கு, ஆஞ்சனேயஸ்வாமியாகிற மஹா குருவினுடைய ஆகமனம் என்ற பரமலாபம் ஏற்பட்டு அதன்மூலம் ராவணனுகிய அவிவேகத்தினின்றும் தான் விடுதலை அடைவதற்கு உபாயத்தை உபதேசம் செய்துகொண்டு பரமானந்தத்தை அடையக்கூடிய ஸந்தர்பத்தைச் சொல்லுவதினுல் ஐந்தாவது காண்டத்திற்கு "ஸுந்தரகாண்டம்" எனப் பெயர் ஏற்பட்டது. இந்த லோகத்தில் குருவின் அனுக்ரஹத்தால் ஜீவன் அடையக்கூடிய ஸுகத்தை இக்காண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தவிரவும், "ஸுந்தரம்" என்றுல் ஸந்தோஷம் என்றும் சொல்லப்படும். பூலோகத்தில் மனிதனுக்கு நஷ்டமாகப் போன பொருள் காலாந்தரத்தில் அகப்பட்டால் அதனுல் ஏற்படக்கூடும் ஸந்தோஷத்தைத்தான் "ஸுந்தரம்" என்று வித்வான்கள் சொல்வார்கள். ராமாயணத்திலோ ஸீதை என்ற உத்தமமான பொருள் ராவணனுல் அபஹரிக்கப்பட்டு நஷ்டமாகப் போனதற்கு ஸமானமாக இருந்து வந்தது, ஆஞ்சனேயஸ்வாமியின் முயற்சியால், ராமனுக்குப் பிறகு கிடைத்து பரமானந்தத்தை ராமன் அடைந்தபடியால், நஷ்டத்ரவ்யலாபத்தைக் கொடுக்கும் என்ற காரணத்தாலும் "ஸுந்தர காண்டம்" எனப் பெயர் வந்தது.

தவிரவும், பராசக்தியினுடைய ஆராதனத்திற்கும் "ஸுந்தரம்" என்று பெயர் உண்டு. இந்த பரதேவதையை

ஆராதிக்கும் மனிதன் விகாரமான உருவமுள்ளவனாக இருந்தாலும், தேவியினுடைய கடாக்ஷம் அவனிடம் விழுந்து மன்மதனையும் அழகில் தோற்கடிக்கக்கூடிய ஸுந்தர புருஷனாக ஆகிறான் என்பது "ஸ்ரீவித்யாதந்த்ரத்தின்" ஸித்தாந்தமாகும். இவ்விஷயத்தை ஆதிசங்கர பகவத்பாதாளும், "ஸௌந்தர்யலஹரி"யில்,

नरं वर्षीयांसं नयनविरसं नर्मसु जडं

𑌨𑌰𑌂 𑌵𑌰𑍍𑌷𑍀𑌯𑌾𑌂𑌸𑌂 𑌨𑌯𑌨𑌵𑌿𑌰𑌸𑌂 𑌨𑌰𑍍𑌮𑌸𑍁 𑌜𑌡𑌂

நரம் வர்ஷீயாம்ஸம் நயநவிரஸம் நர்மஸு ஜடம்

என்ற ச்லோகத்தால் ப்ரகாசப்படுத்தியிருக்கிறார்கள். ஆகையால் உபாஸிக்கிற புருஷனை லோக ஸுந்தரமாகச் செய்யும் காரணத்தால், தேவியினுடைய ஆராதனமே. பரம ஸுந்தரம் என்று ஏற்படுகிறது. அப்பராசக்தியின் பூஜா க்ரமங்களையும், தீக்ஷாவிதானங்களையும் ராவணனுடைய அனுஷ்டான மூலமாக, இக்காண்டத்தில் சொல்லப்படுகிறபடியால் இதற்கு "ஸுந்தரகாண்டம்" எனப் பெயர் ஏற்பட்டது.

ராவணன், மற்ற இடங்களில் பரம துஷ்டன் ஆனாலும் ஸீதாதேவியிடம் அவ்வித கெட்ட எண்ணங்கள் யாதொன்றுமில்லாமல், லோக மாதாவான மஹா லக்ஷ்மி என்றே தீர்மானம் செய்து, அந்த பரதேவதையினுடைய அனுக்ரஹ விசேஷத்தால், க்ரூரமான ராக்ஷஸ ரூபம் நசித்து ஸௌம்யமான (ஸுந்தரமான) தேவரூபம் ஸித்திக்க வேண்டுமென்ற எண்ணத்துடன், ஸீதாதேவியை ராவணன் ஆராதித்தான் என்றுதான், ஸுந்தரகாண்டத்தின் அர்த்தத்தை, வ்யங்க்ய மரியாதையை அனுஸரித்து வித்வான்கள் அறிந்துகொள்ளவேண்டும். ஸுந்தரகாண்டம் என்ற பெயரின் பொருளை இன்னும் ப்ரகாசப்படுத்துவதானல் க்ரந்த விஸ்தாரம் ஏற்படும் என்ற பயத்தால், "நாந்தி" ச்லோகத்தின் விவரண ப்ரகரணத்தில் மேற்கண்டபடி சுருக்கமாகச் சொல்லப்பட்டது. அக்காண்டம் வெளிவரும்பொழுது விஸ்தரிக்கப்படும்.

இக்காண்டத்தின் அர்த்தமும் "நாந்தி" ச்லோகத்தில் அடங்கி இருக்கிறது. அதாவது :—

अल्प (𑌅𑌲𑍍𑌪) (அல்பம்) என்ற அர்த்தத்திலும் **क्रुञ्च** (𑌕𑍍𑌰𑍁𑌞𑍍𑌚) (க்ருஞ்ச) தாது வரலாம் என்று முன்பு சொல்லப் பட்டது. **अल्प** (𑌅𑌲𑍍𑌪) (அல்பம்) என்ருல் க்ருசம் என்று அர்த்தமாகும். ஸீதாதேவியானவள் ராவணனுல் அபஹரிக் கப்பட்டு, **அசோக**வனத்தி லிருக்கும்பொழுது, ராமனை விட்டுப் பிரிந்திருக்கும் காரணத்தால் நாளுக்கு நாள் க்ருசமாக ஆகிருள். அவ்விதமே, ஸீதையை விட்டுப் பிரிந்திருக்கும் காரணத்தால், ராமனும் க்ருசமாக ஆனுர். இவ்விதம், ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருக்கும் காரணத்தால் மிகவும் க்ருசமாகப் போன, ஸீதை, ராமன், இவ்விருவர்களுடைய த்வந்த்வத்தை "க்ரௌஞ்ச மிதுனம்" என்பதற்குப் பொருளாக எடுத்துக்கொள்ளவும். அதிலும் ஸீதையோ, ராமனை அடையவேண்டுமென்ற ஆசை உள்ளவளாக இருந்து வருகிருள். அவ்விதமான எண்ண முள்ள ஸீதையை ராமனிடம் சேர்த்துவைக்காமல், அசோக வனத்தில் வைத்து, ராவணன் பகுப்ரகாரமாக ஹிம்ஸித்து வந்தான். அதை வால்மீகி மஹர்ஷியானவர் அறிந்து, ராவ ணனுக்குச் சாபம் கொடுத்தார். "நிஷாத:' என்ற பதத் திற்கு ப்ராணிகளை ஹிம்ஸிக்கின்ற ஜாதியில் பிறந்தவன் என்றும் அர்த்தமாகும். ராவணனும் அந்த ஹிம்ஸையை ஸ்வபாவ தர்மமாக உடைத்தானவனுனதினுல், ப்ரக்ருதத் தில், "நிஷாத:" என்ற பதத்தால் "ராவணன்" என்று அர்த் தம் வெளியாகிறது. "ஹே ராவணு! யாதொரு காரணத் தால், ராமனை விட்டுப் பிரிந்த ஸீதையை நீ ஹிம்ஸை செய்தாயோ, அக்காரணத்தால், நீ ஒருநாளும், ஓரிடத்தி லும் ஸ்திரமான ப்ரதிஷ்டையை அடையமாட்டாய்" என்று ராவணனைச் சபிப்பதாக ஸுந்தரகாண்டத்தின் அர்த்தம் "நாந்தி" ச்லோகத்தில் அடங்கியிருக்கிறது.

ஆறுவது காண்டத்திற்கு யுத்தகாண்டமெனப் பெயர். அவிவேகம், காமம், க்ரோதம், மதம், மாத்ஸர்யம் முதலான, ஆந்தரமான சத்ருக்களோடு போர்செய்து, அவைகளை ஜயித்து, அவைகளுக்கு மூலகாரணமான, அவித்யையையும் ஒழித்து, ஜீவன்கள் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைவ தற்கு உள்ள உபாயங்களை சொல்லுகிற காண்டமானதினால் **யுத்தகாண்டம்** எனப் பெயர் ஏற்பட்டது. இக்காண்டத்தின் அர்த்தத்தையும் 'நாந்தி' ச்லோகத்தில் அடக்கும் ப்ரகார மாவது :— **क्रौञ्चमिथुनं** (𑌕𑍍𑌰𑍌𑌞𑍍𑌚𑌮𑌿𑌥𑍁𑌨𑌂) (**க்ரௌஞ்சமிதுநம்**) என்றால் ராவணன் மண்டோதரி இவர்களைப்பொருளாக எடுத்துக்கொள்ளவேண்டும். **मानिषाद** (𑌮𑌾𑌨𑌿𑌷𑌾𑌦) (**மாநிஷாத**) என்பது ஒரேபதம். "ஹே ஸ்ரீநிவாஸ! ராவணன் மண் டோதரி என்ற த்வந்த்வத்திலிருந்து காமவெறி பிடித்த ராவணன் என்ற புருஷனைக் கொன்று லோகத்திற்கு நன் மையைச்செய்தகாரணத்தால், நீ எப்பொழுதும் பரமோத் கர்ஷத்தோடு விளங்கவேண்டும்" என்பதேதான் ஆகும். இவ்விதம் யுத்தகாண்டக் கதையானது "நாந்தி" ச்லோ கத்தில் அடங்கியிருக்கிறது.

அவ்விதமே, ஏழாவது காண்டமான **உத்தரகாண்ட** கதையும், "நாந்தி" ச்லோகத்தில் அடங்கி இருக்கிறது. அகஸ்த்யர் முதலான மஹர்ஷிகளுடைய ஸந்நிதியில், ஆஞ்சனேயஸ்வாமியை படிக்கிறவராக வைத்துக்கொண்டு, பரம வைராக்ய ஸம்பத்தி ஏற்பட்டபிறகு, அதிரஹஸ்ய மான மஹாவாக்யங்களை உபதேச மூலமாக ஸ்ரீராமசந்த்ர மூர்த்தியே ப்ரகாசப்படுத்துகிற காரணத்தால், ஏழாவது காண்டம் **உத்தரகாண்டம்** என்று சொல்லப்படும். **உத்தர காண்டத்திலோ,** ஸீதாதேவி கர்பிணியாக இருக்கும் காலத் தில், ஸீதையோடுகூட ராமசந்த்ரமூர்த்தியானவர், ஒரு நாள் உத்யானவனத்தில் உலாவிக்கொண்டிருக்கும் ஸம யத்தில், ஸீதையைப் பார்த்து, "ஹே ஸீதே, நீ கர்பிணி யாக இருக்கிறாய், கர்பிணி ஸ்த்ரீகளுக்கு அபீஷ்டதானம்

செய்யவேண்டுமென்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து உனக்கு நான் அபீஷ்டதானம் செய்கிறேன். உன் அபீஷ்டம் என்ன" என்று கேட்டார். ஸீதாதேவியோ தண்டகாரண யத்தில் முன்பு அநேக ரிஷிபத்னிகளோடு பழகிய விச்வா ஸத்தை நினைத்துக்கொண்டு, "அந்த ரிஷி பத்னிகளை மறுபடி யும் தர்சனம் செய்யவேண்டுமென்று நினைக்கிறேன்" என்றாள்.

பகவானான ஸ்ரீராமனும் மனதில் அதை வைத்துக் கொண்டு, மறுதினம் காலையில் லக்ஷ்மண ஸ்வாமியை அழைத்து, ரதத்தில் ஸீதையை ஏறச்செய்து, "வால்மீகி மஹர்ஷி ஆச்ரமத்தில் கொண்டுபோய் விடு, திரும்பி அழைத்துவர வேண்டாம்" என்று ஆக்ஞாபித்தார். அவ் விதமே ரிஷியின் ஆச்ரமத்தில் ஸீதை கஷ்டப்பட்டாள். அதனால் ராமனை விட்டுப் பிரிந்ததால் ஸீதையும் க்ருச மாக ஆகிவிட்டாள்; ராமனும் அப்படியே ஆனார். அவ் விருவர்களையும் **क्रौञ्चमिथुनं** (க்ரௌஞ்சமிதுநம்)(க்ரௌஞ்சமிதுனம்) என்ற பதத்தால் க்ரஹித்துக் கொள்ளவும். "ஹே மானி ஷாதா, ஹே ராமா! நீ லக்ஷ்மீபதியாக இருந்து என்ன ப்ரயோஜனம்? நீயாகவே ஸீதையை என்னவேண்டு மென்று கேட்டதனால், ரிஷிபத்னிகளை தர்சனம் செய்ய வேண்டுமென்று சொன்னாள். அதற்காக நீ ரதத்தில் ஏற்றி ரிஷபத்னிகளை தர்சனம் செய்த பிற்பாடு அயோத் திக்கு அழைத்துக்கொண்டு வருவதல்லவோ தர்மமாகும். லக்ஷ்மணன்மூலமாக ரதத்தில் ஏற்றி, நடுக்காட்டில் 'ரிஷி ஆச்ரமத்திற்கு ஸமீபத்தில் விட்டு வந்துவிடு' என்று சொல் வதா தர்மம். தர்மஸ்தாபனம் செய்வதற்காக அவதரித்த நீ ஒரு ஸ்த்ரீயை இவ்விதம் ஹிம்ஸிக்கக்கூடாது. இவ்விதம் ஸீதையை ஹிம்ஸை செய்ததினால் உன்னுடைய கீர்த்தியும், பௌருஷமும், உத்கர்ஷமும், அநேக நாட்கள் நீடித்து நிற்குமா என்ன?" என்று வால்மீகி மஹர்ஷிக்கு ஸீதையைப் பற்றி உள்ள கவலை வெளியாகிறபடியால் **உத்தரகாண்ட** அர்த் தமும் "நாந்தி" ச்லோகத்தில் அடங்கிவிட்டது.

இவ்விதம் ஸம்பூர்ணமான ராமாயணத்தின் ஸாரங்கள் "நாந்தி" ச்லோகத்தில் சுருக்கமாக சொல்லப்பட்டது.

நிற்க, இரண்டு பக்ஷிகள் காம ஸுகத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் காலத்தில், ஆண்பக்ஷியை ஒரு வேடன் அடித்தான் என்பதற்காக வால்மீகி மஹர்ஷிக்கு இவ்வளவு கோபம் வரலாமா? சாபம்தான் கொடுக்கலாமா? வேடர்களுக்கு பக்ஷியை அடிப்பது ஸ்வபாவமல்லவா? ஸ்வாபாவிக தர்மத்தைச் செய்கிறவன் சாபத்திற்கு அர்ஹனாக ஆகுவானா? ஸ்ரீராமசந்த்ரமூர்த்தியே தான் வாலியைக் கொன்றது தர்மம்தான் என்பதைக் காட்டுவதற்கு, மாம்ஸ போஜனத்தில் அதிகாரமுள்ள மனிதன் ம்ருகங்களையோ, பக்ஷிகளையோ வதித்ததினால், அவனுக்கு அது தோஷமாக ஆகாது என்று ஸ்பஷ்டமாகச் சொல்லி இருக்கிறார். அதை வால்மீகி மஹர்ஷி அறியவில்லையா? மேற்கண்ட சங்கையினால் வால்மீகி மஹர்ஷி கோபிஷ்டர் என்று தள்ளிவிடக்கூடாது. அவர் செய்தது ஸரியே. மாம்ஸத்திற்காக ம்ருக பக்ஷிகளை அடிப்பது சில ஜாதிகளுக்கு ஸ்வாபாவிக தர்மம்தான். அதிலும் வேடனுக்கு இது முக்ய தர்மமாகும். ஆகிலும், காம ஸுகத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் நடுவில் அடிக்கக்கூடாது. காம ஸுகத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் நடுவிலும் ஹிம்ஸிக்கலாம் என்று ஸ்ரீராமன் சொல்லவேயில்லை. ஆகையால் வால்மீகி மஹர்ஷி அந்த தர்மத்தை அறிந்தவர்தான். அவர் கோபித்துக்கொண்டு அவ்வேடனை சபித்ததும் ந்யாயம்தான். ப்ரக்ருதத்தில் வேடனால் அடிக்கப்பட்ட பக்ஷியானது காம ஸுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தது என்பது "நாந்தி" ச்லோகத்திலுள்ள **காம மோஹிதம்** என்ற பதத்தால் தெரிகிறது. ஆகையால் காமபாரவச்யத்தை அடைந்திருக்கும் காலத்தில் மாம்ஸத்தை விரும்புகிறவர்களும் ம்ருக பக்ஷிகளை அடிக்கக்கூடாது.

மஹாபாரதத்தில், பாண்டு மஹாராஜா வேட்டையாடும்பொழுது அநேக ம்ருகங்களை பாணத்தால் அடித்துக் கொண்டிருக்கும்பொழுது, ஒரு ஸமயத்தில் லக்ஷ்யம் தவறி, ஒரு பாணம் ஒரு மஹர்ஷியின் சரீரத்தில் விழுந்தது. அம்மஹர்ஷியோ, அந்த ஸமயத்தில் ராத்ரி வேளையானதினால், தர்ம பத்னியுடன் க்ரீடித்துக் கொண்டிருக்கும் ஸமயமாகும். காம ஸுகத்தை அனுபவிக்கும் மத்தியில் பாணத்தால் அடிபட்டு மஹர்ஷி உயிரைவிடும் ஸந்தர்பத்தில்,

अस्वर्ग्यमयशस्यन्त्वमनुतिष्ठसि भारत ।
कोहि विद्वान् मृगं हन्याच्चरन्तं मैथुनंवने ॥

𑌅𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍍𑌯𑌮𑌯𑌶𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑍍𑌵𑌮𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠𑌸𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌕𑍋𑌹𑌿 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌮𑍃𑌗𑌂 𑌹𑌨𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑌰𑌨𑍍𑌤𑌂 𑌮𑍈𑌥𑍁𑌨𑌂𑌵𑌨𑍇 ॥

அஸ்வர்க்யமயசஸ்யந்த்வமநுதிஷ்டஸி பாரத ।
கோஹி வித்வான் ம்ருகம் ஹந்யாச்சரந்தம் மைதுநம்வநே ॥

என்ற ச்லோகத்தால், தன்னை அடித்தது பாண்டு மஹாராஜா என்பதைத் தெரிந்துகொண்டு, "ராஜனே, உன்னுடைய யசஸ், பரலோகம் இதுகளை இழந்துவிட்டாயே. பரத வம்சத்தில் பிறந்த உனக்கு இது அழகாகுமா? ம்ருகமானாலும், தனது மனைவியோடு க்ரீடித்துக்கொண்டிருக்கும் ஸமயத்தில், வேட்டையாடும் அரசனும் அடிக்கக்கூடாது என்ற சாஸ்த்ரம் உனக்குத் தெரியாதா? அதிலும் ஓர் பெரிய ரிஷியான நான் காம பாரவச்யத்தை அடைந்திருக்கும்பொழுது, பாணத்தால் என்னை அடித்து உயிர் துறக்கும்படி செய்தாயே. மஹாவம்சத்தில் பிறந்தவர்களுக்கும் இவ்விதம் அதர்மத்தில் புத்தி செல்வது காலவைபவத்தால்தான். யார் என்ன செய்ய முடியும்? உனக்கு உன் மனைவியிடம் ரதிஸுகத்தை அனுபவிக்க இச்சை ஏற்பட்டு புணர்ந்தால், உன் தலை வெடித்து நீ மரிப்பாய்" என்று சபித்துவிட்டு அம்மஹர்ஷி தன் உயிரையும் இழந்தார். அதனால் பாண்டு மஹாராஜாவிற்கு குந்தி என்ற

பத்னியினிடத்திலோ, மாத்ரி என்ற பத்னியினிடத்திலோ, குழந்தைகள் இல்லாமல் குந்தியின் மந்த்ர சக்தியினுல் தேவாளுடைய அனுக்ரஹத்தால் ஏற்பட்ட குழந்தைகள் **பாண்டவாள்** என்பது ப்ரஸித்தமானது.

அதனுல் ம்ருக பக்ஷிகளை அடிக்கும் ஸ்வபாவமுள்ள வர்களும் ரதி பாரவச்யத்தை அடைந்திருப்பவைகளை அடிக்கக்கூடாது. ப்ரக்ருதத்திலோ ரதி பாரவச்யத்தை அடைந்திருக்கும் பக்ஷிகளை வேடன் அடித்தான். அது **அதர்மம்** தான். வால்மீகி மஹர்ஷி சபித்தது ந்யாயமே.

நாரத மஹர்ஷியானவர் வால்மீகி மஹர்ஷிக்கு ஸ்ரீராம சரித்ரத்தை சுருக்கமாக உபதேசம் செய்து ப்ரம்மலோகம் சென்ற பிறகு, வால்மீகி மஹர்ஷியானவர் ஸ்ரீராமசரித் ரத்தை பெரிய ப்ரபந்தமாக நிர்மாணம் செய்ய யத்னம் செய்தார். அந்த ஸங்கல்பத்தோடுதான் மாத்யான்ஹிக காலத்தில் அனுஷ்டிக்கவேண்டிய கர்மாவை செய்வதற் காக **தமஸா** நதிக்கு வந்தார். இந்த ஸந்தர்பத்தில் அயோத்யா நகரத்தில் நீதியாக ராஜ்ய பரிபாலனம் செய்து வரும் ஸ்ரீராமசந்த்ரமூர்த்திக்கு பரம்பரையாக இந்த வ்ருத் தாந்தம் தெரிந்தது. உடன். பகவானுன ஸ்ரீராமசந்த்ர மூர்த்தியும், "வால்மீகி மஹர்ஷியானவர் நமது சரித்ரத்தை விஸ்தரிக்க யத்னம் செய்கிருரே; கதாநாயகனுன நம்மிடத் தில் மற்றவர்களிடம் ஸம்பவிக்கக்கூடாமல் இருந்துவரும், **ஸத்யம், அஹிம்ஸை, ப்ரம்மசர்யம், கருணை, சாந்தி,** முதலான குணங்கள் எவ்வளவோ இருக்கின்றன. நாம் அநேக கல்யாண குணங்களால் அலங்கரிக்கப் பட்டவனுக ஆனுலும், எந்த குணத்தில் நமக்கு முக்யமானப்ரேமை ஏற்பட்டுள் ளது, நாம் எந்த குணத்தில் ஈடுபட்டவன் என்பதை அவர் அறியவேண்டாமா? நமக்கோ, **'கருணை'** என்பது முக்யமாக ஏற்பட்டது. 'கதாநாயகனுன ஸ்ரீராமனுக்கு அநேக கல்யாண குணங்கள் இருந்தாலும், அப் ப்ரபுவானவர் **காருண்யத்தை** முக்யமாக கைகொண்டவர். ஆகையால் ஆங்காங்கு, அவ ருடைய சரித்ரத்தில் **கருணுரஸத்தை** பொழியவேண்டும்.

அதாவது கருணு ரஸப்ரதானமாக ராமசரித்ரத்தை எழுத வேண்டும்' என்று தீர்மானம் செய்து, நமது சரித்ரத்தை விஸ்தரிக்க ஸங்கல்பம் செய்தாரா, என்பதை நாம் பரீக்ஷித்து, நமக்கு இஷ்டமான காருண்யம் வால்மீகி மஹர்ஷியிடம் இருந்துவருகிறதா என்பதைப் பார்த்த பிற்பாடு சரித்ரத்தை விஸ்தரித்து எழுத நாம் ஸம்மதிக்க வேண்டும். இல்லாவிடில், அதை நிறுத்திவிடவேண்டும்" என்று பகவான் தீர்மானித்தார். வால்மீகி மஹர்ஷி இந்த ஸந்தர்ப்பத்தில் எவ்விதம் இருந்து வருகிருர் என்பதையும் யோஜித்தார். தமஸா நதியில் ஸ்நாநம் செய்வதற்காக, நதிக் கரையில் நின்றுகொண்டு, ஸ்நானவஸ்த்ரத்தையும் தரித்துக் கொண்டு, நதிக்கரைக்கு ஸமீபத்திலுள்ள உபவனத்தில் மஹர்ஷியானவர் த்ருஷ்டியைச் செலுத்தி வருகிருர் என்பதையும் ஞானத்ருஷ்டியினுல் கண்டுபிடித்து, உடன் யோக மாயையை இருபக்ஷிகளாக உருவம் எடுத்துக்கொள்ளும்படி ஆக்ஞாபித்து, தானும் வேட உருவத்தை எடுத்துக் கொண்டார். மஹர்ஷியின் த்ருஷ்டிக்கு எதிரில் அந்த இரண்டு ஆண் பெண் ரூபமான பக்ஷிகள் பகவத் ஆக்ஞையை அனுஸரித்து ரமித்து வந்தன. அந்த ஸந்தர்ப்பத்தில் வேடரூபியான பகவானும் ஆண் பக்ஷியை அடித்துக்கொன்று பெண்பக்ஷியை அலறச் செய்தார். வால்மீகி மஹர்ஷியோ, இதைப் பார்த்து அப்பெண்பக்ஷியினிடத்தில் பரம கருணையை அடைந்தார். மஹர்ஷியோ ஸகல சாஸ்த்ரங்களையும் கற்றுணர்ந்தவர். வேடர்கள் பக்ஷியை அடிக்கும் ஸ்வபாவமுள்ளவர்களாயிருந்தாலும், அஹிம்ஸையை பரம தர்மமாக கை கொண்ட மஹர்ஷிகளுக்கு எதிரில் பக்ஷிகளை வேடர்களும் அடிப்பதில்லை.

अहिंसा प्रतिष्ठायां तत्सन्निधौ वैरत्यागः

ஃஹிம்ஸா ப்ரதிஷ்டாயாம் தத்ஸந்நிதௌ வைரத்யாகஃ

அஹிம்ஸா ப்ரதிஷ்டாயாம் தத்ஸன்னிதௌ வைரத்யாக:

என்ற பாதஞ்சல யோகஸூத்ரத்தால் அஹிம்ஸையை கை கொண்ட ரிஷிகளுக்கு எதிரில், ஜன்ம சத்ருவான யானை

சிங்கங்கள் இவைகூட வைரத்தை விட்டு ஸ்நேஹ முறையுடன் விளையாடி வரும் என்று வெளியாகிறது. அவ்விதமிருக்கும்பொழுது உயர்ந்த மானிட ஜன்மாவை அடைந்த வேடர்களுக்கு மஹர்ஷிகளுடைய ஸந்நிதியில் ஒரு ப்ராணியை ஹிம்ஸிப்பதில் புத்திபோகுமா, என்று சற்று ஆலோசித்து ஸூக்ஷ்மத்தை அறியவும். ஜாதிவேடனுனல் இம் மஹர்ஷிக்கு எதிரில் இவ்வித ஹிம்ஸையை செய்திருக்க மாட்டான். ஆகையால் ஜாதிவேடனல்ல; வேஷவேடன் தான் பகவானுன ஸ்ரீராமனென்றே அறியவேண்டும். மஹர்ஷியும் இவ்விதம் உணர்ந்து தத்வத்தை அறியக்கூடியவர் தான். ஆகிலும், தர்மத்தையே சரணமடைந்த மஹர்ஷியானவர் தர்ம விருத்தமாக நடத்தியவன் எவனுயிருந்தால் என்ன என்று மனதில் எண்ணினுர். "காம ஸுகத்தை அனுபவித்துக்கொண்டிருக்குங் காலத்தில், ஆண்பக்ஷியை அடித்து, ஆணைவிட்டுப்பிரிந்து பெண் பக்ஷி அலறித் துடிக்கும்படி செய்த பாபத்திற்கு நீயும் பரமதுக்கத்தை அனுபவிப்பாய், அநேக நாள் நீ ஜீவிக்கமாட்டாய்" என்று சாபமிட்டார்.

மனிதனுடைய கருணையை பரீக்ஷிக்கவேண்டுமானுல், அவனுக்கு எதிரில் ஒரு ப்ராணியை கஷ்டப்படுத்தி, அவன் அந்த ஸமயத்தில் எவ்விதமிருக்கிருன் என்பதனுல்தான் அவன் கருணையை அறியவேண்டும். அந்த ப்ராணியைக் கஷ்டப்படுத்தினவன், கஷ்டப்படும் ப்ராணியைப் பார்த்துக் கொண்டிருப்பவனுக்கு, கீழ்த் தன்மையை அடைந்தவனுயிருந்தால், அவனைப் பார்த்து கோபித்துக் கொள்வதோ, சபிப்பதோ ஸஹஜமாகும். தனக்கு மேலான தன்மை உள்ளவனுக இருந்தால், அவனை கோபத்தால் சபிக்க முடியாது. கருணையிருந்தும் ப்ரயோஜனப்படாது. இவ்விதமான கருணை பகவானுக்கு லக்ஷ்யமில்லை. இவ்விதமான கருணை உள்ள மனிதர்கள் அநேகர் உண்டு. ரொம்பவும் தைன்யத்தை அடைந்த மனிதனை ஒரு நாய் விரட்டினுல் அந்த

நாயைக் கல்லெடுத்து அடித்து, அந்த தீனனை ரக்ஷிப்பது வழக்கமுண்டு. அதே தீனனை ப்ரதானமான ராஜபுருஷாள் பலாத்காரமாக ஹிம்ஸித்தால் ப்ரஜைகள் ராஜ புருஷர்களை என்ன செய்யமுடியும்? அதுபோல், ஜாதிவேடனுனல் மஹர்ஷி கருணையால் சபிக்கலாம். ஜாதிவேடனே ரிஷிக ளுக்கு எதிரில் ப்ராணிகளை ஹிம்ஸிக்க வரமாட்டான் என்று முன்பு சொல்லப்பட்டது. இவ்வேடனே, வால்மீகி மஹர் ஷிக்கு எதிரிலேயே ஹிம்ஸை செய்திருக்கிருன். மஹர்ஷி யும், இவன் வேடனில்லை, பகவானின் மாயை என்று தெரிந்து கொண்டவர்தான். ஆகிலும் ஆணை விட்டுப் பிரிந்து கதறுகிற பெண் பக்ஷியினிடத்தில் இவருக்கு ஏற்பட்ட கருணையானது அளவிற்கு அடங்காமல் ஆகி, எதிரில் காணப் படுகிறவன் யாராயிருந்தாலென்ன என்று சபிக்க ஆரம் பித்துவிட்டார். பகவானும், "நாம் ஈச்வரன் என்று மஹர்ஷி நினைத்து நாம் செய்த அதர்மத்தையும் நம்மிடத்தில் பயத் தால் ஸம்மதித்து பேசாமலிராமல், அதர்மத்தைச் செய்த வன் ஈச்வரனுனலும் துச்சம் என்று நினைத்து நம்மையும் சபித்தார். அதற்கு நாம் கோபத்தை அடையக்கூடாது. அவருடைய காருண்யத்தை பரீக்ஷிக்க அல்லவா நாம் வந் தோம். அவரிடத்தில் கருணையானது எல்லை கடந்துவிட் டது. அவருடைய கருணை நம்மிடங்கூட இல்லை என்று சொல்லலாம். ஆகையால் இம்மஹர்ஷி மஹானுபாவன் தான். கருணுரஸப்ரதானமான நமது சரித்ரத்தை இம் மஹர்ஷிதான் எழுதவேண்டும். மற்ற எவர்களும் இவ ருக்கு ஸமானமாக ஆகமாட்டார்கள்," என்று தீர்மானித்து மஹர்ஷிக்கு பரிபூர்ணமான அனுக்ரஹத்தைச் செய்துவிட்டு, பகவானும் அந்தர்த்யானத்தை அடைந்துவிட்டார் என்ற அபிப்ராயமும் நாந்தி ச்லோகத்தால் வெளியாகிறது. ஜாதி வேடனுனல், பிறகு ரிஷியினிடத்தில் சரணமடைந்து, தனது சாபத்திற்கு விமோசனத்தை ப்ரார்த்தித்திருக்கமாட்டான? ஆகையால் ஜாதிவேடனே இல்லை. பகவான்தான் வால்மீகி மஹர்ஷியை சோதித்தார்.

தவிரவும், தமஸாநதி ஜலத்தைப் பார்த்து "ரொம்பவும் அழகாகவும், நிர்மலமாகவும், ப்ரம்மநிஷ்டாளுடைய மனது போலவும் விளங்கி வருகிறது, ஹே பரத்வாஜ, அதைப் பார்த்தாயா" என்று வால்மீகி மஹர்ஷியானவர் தன் சிஷ்யனைப் பார்த்துச் சொன்னார் என்ற பொருளை விளக்கும் "अकर्दमं इदं तीर्थं" (𑌅𑌕𑌰𑍍𑌦𑌮𑌂 𑌇𑌦𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂) (அகர்தமமிதம் தீர்த்தம்) என்ற ச்லோகத்திலிருந்து "मानिषाद" (𑌮𑌾𑌨𑌿𑌷𑌾𑌦) (மாநிஷாத) என்ற ச்லோகம்வரை தாத்பர்யத்தை மற்றொருவிதமாயும் அறியவும். அதாவது:—

நாரதமஹர்ஷியானவர் வால்மீகி மஹர்ஷிக்கு உபதேசம் செய்துவிட்டு ப்ரம்மலோகம் சென்றவுடன், வால்மீகி மஹர்ஷியானவர் தனது ஆச்ரமத்திலேயே ஸமாதியில் வீற்றிருந்தார். ஸமாதியினுடைய நடுவில், ரத்னகர மஹோததி ஸங்கமமாகிய, ஸமுத்ரஜலம் ஞான சக்ஷுஸ்ஸுக்கு தென்பட்டது. அந்த ஸமுத்ரதீரத்தில் ராவணன் மண்டோதரி என்ற தனது மனைவியோடு க்ரீடித்துக்கொண்டிருப்பதையும் ஞான சக்ஷுஸ்ஸால் பார்த்தார். ஸ்ரீராமனும் கோதண்டபாணியாக அந்த இடம் சென்று ராவணனை போர்செய்து வதித்தார். ராவணன் மரித்த பிற்பாடு, மண்டோதரி முதலான ஸ்த்ரீகள் ப்ரலாபிக்கின்றார்கள். இவ்விஷயத்தையும் ஸமாதியில் ஞான சக்ஷுஸ்ஸால் ப்ரத்யக்ஷமாகப் பார்த்து, ஸமாதியில் ஞான சக்ஷுஸ்ஸுக்கு எதிரில் நின்றுவரும் தனது சிஷ்யனைப் பார்த்து "ராமஸேதுஸ்தலத்தின்" மஹத்வத்தையும், அந்த சிஷ்யனிடத்தில் வர்ணித்துவிட்டு, ராவணனைக் கொன்ற ராமனையும் ஸமாதியில் ப்ரத்யக்ஷமாகப் பார்த்து "ராமா, ஹே ஸீதாபதே, லோக கண்டகனான ராவணனைக் கொன்று, லோகத்திற்கு நன்மையைச் செய்ததினால் நீ நீடித்து வாழவேண்டும். உன் உத்கர்ஷத்துக்கு ஸமானமான உத்கர்ஷத்தை மற்றவர்களிடம் பார்க்கமுடியாது" என்று ராமனை ப்ரார்த்திப்பதாயும், ஸமாதியில் வால்மீகி மஹர்ஷி அனுபவித்தார்.

மற்ருெரு ஸமயம் ஸமாதியில் வீற்றிருக்கும்பொழுது ஞான சக்ஷுஸ்ஸால் கோதாவரி நதியைப் பார்த்தார். அந்த நதி தீரத்தில், பஞ்சவடியில் (ஐந்து ஆலமரங்களால் சூழப்பட்ட அழகான ஸ்தலம்) அழகான ஆச்ரமத்தில், ஸீதையோடு ஸ்ரீராமன் லக்ஷ்மணனுடைய பரிசர்யையினுல் ஸந்தோஷத்தை அடைந்துகொண்டு, வஸித்து வருவதையும் பார்த்தார். தனது சிஷ்யனும் எதிரில் நின்று வருகிருன். அவனைப் பார்த்து, கோதாவரி நதிதீர்த்தத்தின் மஹிமையையும், **अफर्दमं इदं तीर्थं** (𑌅𑌕𑌰𑍍𑌦𑌮𑌮𑌿𑌦𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂) (அகர்தமமிதம் தீர்த்தம்) என்ற ச்லோகத்திலிருந்து வர்ணித்துச் சொன்ஞர். இந்த தோரணையில், ஸீதைக்கு எதிரில் ஓர் மான் விளையாடுவதையும், ஸீதைக்கு அம்மானிடம் அபிமானம் இருக்கிறதென்பதை அறிந்த ராமன் அதை விரட்டிக்கொண்டு போனதும் ராமனைத்தேடிக்கொண்டு லக்ஷ்மணன் போனதையும், ஸீதை ஆச்ரமத்தில் தனியாக இருப்பதையும், ராவணன் ஸீதையை அபஹரித்துச் சென்றதையும் ஞானக்கண்ணுல் பார்த்தார். ஸமாதியிலேயே மஹர்ஷிக்கு கோபம் வந்துவிட்டது. ராவணனைப் பார்த்து "வேடப் பயலே, ப்ராணிகளை ஹிம்ஸிக்கும் ஸ்வபாவமுள்ளவனே, ஸீதையும் ராமனும், வனவாஸத்தால் ரொம்பவும் கார்ச்யத்தை அடைந்துகொண்டிருக்கும் காலத்தில், மாயா ம்ருகத்தால் ராமனை வஞ்சித்துவிட்டு, ராமனேடுகூட இருப்பதில் ஆசை உள்ள ஸீதையை நீ அபஹரித்து ஹிம்ஸித்து வந்தாய். அதனுல், இனி நீ அநேக நாள் ஜீவிக்கமாட்டாய். உன் பரிஜனங்களோடுகூட நீ அழிந்துவிடுவாய்" என்று சாபத்தையும் கொடுத்தார். இந்த வ்ருத்தாந்தமும், ஸ்வப்ன வ்ருத்தாந்தம்போல், மஹர்ஷியினுல் ஸமாதியில் காணப்பட்ட வ்ருத்தாந்தமாகும். இவ்விதம் தான் ஸமாதியில் கண்ட, ஸமுத்ரதீர வ்ருத்தாந்தத்தையும், கோதாவரி தீர வ்ருத்தாந்தத்தையும், வால்மீகி மஹர்ஷியானவர் **मानिषाद** (𑌮𑌾𑌨𑌿𑌷𑌾𑌦) (மாநிஷாத) என்ற நாந்தி ச்லோகத்தில் வெளிப்படுத்தி இருக்கிருர்.

காவ்யத்தில் ச்ருங்காரம், கருணை, வீரம், ரௌத்ரம், பயாநகம், பீபத்ஸம், அத்புதம், ஹாஸ்யம், சோகம் என்ற நவரஸங்களும் அடங்கி இருக்கவேண்டும். இந்த ராமாயணம் ஆதிகாவ்யமானதினால், ஒவ்வொரு ச்லோகத்திலும், ஒன்பது ரஸங்களும் அடக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் இந்த நாந்தி ச்லோகத்தில் அடங்கி இருக்கும் ப்ரகாரத்தை அறியவும்:—

मानिषाद (ஊநிஷாத) (மாநிஷாத) என்ற பதத்தால், ஸீதைக்கும் ராமனுக்கும் ஸம்பந்தத்தைக் காட்டுவதிலிருந்து, ச்ருங்கார ரஸமும், काममोहितं (காமமோஹிதம்) (காமமோஹிதம்) என்ற பதத்தால், காமபாரதந்த்ரியத்தை அடைந்திருக்கும் காலத்தில், ஹிம்ஸை செய்யக்கூடாது; அதற்கு விரோதமாக வேடன் ஹிம்ஸித்தான் என்ற காரணத்தால் மஹர்ஷிக்கு ஏற்பட்ட கருணை ப்ரஸித்தமானதினால் கருணா ரஸமும், अवधीः (அவதீ:) (அவதீ:) என்ற பதத்தால் கொன்றாய் என்றதனால், வீரத்தன்மையையும், ரௌத்ராக்ருதியையும், பயத்தையும் காட்டுகிறபடியால், வீரம், ரௌத்ரம், பயாநகம் என்ற மூன்று ரஸங்களும், ஸ்த்ரீயுடன் கூடியிருக்கும் ஆண் பக்ஷியின் ஹிம்ஸையைப் பார்க்கும் பொழுது, சிலர்களுக்கு இது ஒரு ஹேயமான கார்யமென்றும், சிலர்களுக்கு இந்த ஸமயத்திலா கொன்றான் என்று ஆச்சர்யமாகவும், அப்பெண்பக்ஷியை ஆசைப்படும் மற்ற ஆண்பக்ஷிகளுக்கு ஹாஸ்யமாகவும் தோன்றுகிறபடியால் एकं अवधीः (ஏகம் அவதீ:) (ஏகம் அவதீ:) என்ற வாக்யத்தால் பீபத்ஸம், அத்புதம், ஹாஸ்யம் என்ற மூன்று ரஸங்களும், மஹர்ஷிக்கு கஷ்டம் ஏற்பட்டதினால் சோகரஸமும், க்ரமமாக நவரஸங்களும் இந்த நாந்தி ச்லோகத்தில் அடக்கப்பட்டது. இவ்விதம் "ரஸ" கர்பிதமான காவ்யமானதினால் ச்ரேயஸ்ஸை விரும்புகிறவர்கள் அவச்யம் இக்காவ்யத்தை படிக்கவேண்டும்.

ப்ரக்ருதத்தில் வக்த்ருவைலக்ஷண்யத்தை ப்ரதிபாதனம் செய்வதற்காக ஆரம்பித்துவிட்டு मानिषाद (ஶாநிஷாத) (மாநிஷாத) என்ற ச்லோகத்தால் வெகு ப்ரகாரமாக ராம சரித்ர வர்ணனமானது சொல்லப்பட்டது. அதனுல் ப்ரக்ருத வக்தாவான வால்மீகி மஹர்ஷியினுடைய வைலக்ஷண்யம் எப்படி சொல்லபட்டதாக ஆகும்? மலயபர்வதத்தை அடைய எண்ணமுள்ளவனிடம் மந்த்ர பர்வதத்தை வர்ணிப்பது போலாகிறதல்லவா! ஆகையால் வால்மீகி மஹர்ஷியினுடைய மஹத்வத்தை ப்ரகாசப் படுத்தக்கூடியதாக மேல்சொன்ன ச்லோகத்தின் அர்த்தத்தை வர்ணிப்பதுதான் ப்ரக்ருத உபயோகியாக ஆகும். ஆகையால் அவ்விதமான தாத்பர்யத்தையும் இந்த ச்லோகத்தால் அறியவும். मानिषाद (ஶாநிஷாத) (மாநிஷாத) என்றதினுல் லக்ஷ்மீபதி என்ற பொருள் வெளியாகிறது. அந்த பகவானை ரிஷியானவர் ஸம்போதனம் செய்துகொண்டு அழைக்கிருர். "ஹே லக்ஷ்மீபதே, உன் ப்ரதிஷ்டையை அடைய வேண்டும்" என்று சொல்கிருர். அதனுல் தன்னுடைய ஹ்ருதய தேசத்தில் லக்ஷ்மீபதியான கதாநாயகனை ஸ்திரவாஸம் பண்ணும்படி ப்ரார்த்தித்துக்கொண்டு அந்த கதாநாயகனுடைய எதிரிலேயே ராமசரித்ரத்தை வால்மீகி மஹர்ஷி எழுதுகிறவராக ஆகிறபடியால் பகவானுடைய ஸ்வரூபஸாக்ஷாத்காரத்தை அடைந்த ஓர் பெரிய மஹானுபாவன் என்ற தாத்பர்யம் ப்ரகாசிக்கிறபடியால் வக்த்ருவைலக்ஷண்யம் சொல்லப்பட்டதாக ஆகிறது.

क्रौञ्चमिथुनं (க்ரௌஞ்சமிதுநம்) (க்ரௌஞ்சமிதுனம்) என்பதினுல்

क्रुञ्च गतिकौटिल्याल्पीभावयोः

க்ருஞ்ச கதிகௌடில்யால்பீபாவயோ:

க்ருஞ்ச கதிகௌடில்யால்பீபாவயோ:

என்ற தாதுவை அனுஸரித்து ஜீவகோடிகளை பவபந்தத்தில் அவிச்சின்னமாக அனுபவிக்கும்படி நயிப்பிவைக்கிற

மூல அவித்யையும் அவிவேகமும் பொருளாக வெளியாகிறது. மூல அவித்யை என்றால் ஆத்மாவினுடைய அஞ்ஞான மாகும். அவிவேகம் என்றால் ஆத்மா, அநாத்மா விவேக மில்லாத தன்மை. அந்த அவிவேகத்தை புருஷனாகவும், அவித்யையை ஸ்த்ரீயாகவும் க்ரஹித்துக்கொண்டு அந்த இருவர்களுடைய மிதுனத்தை क्रौञ्चमिथुनं (𑌕𑍍𑌰𑍌𑌞𑍍𑌚𑌮𑌿𑌥𑍁𑌨𑌂) (க்ரௌஞ்ச மிதுநம்) என்ற பதத்தின் பொருளாக அறிந்து கொள்ளவும். அந்த இருவர்களுக்குள் அவிவேகம் என்பது தான் ஜீவகோடிகளை காம மோஹமாகிய வலையில் சிக்கிக்கொள்ளும்படி செய்கிறது. அந்த அவிவேகத்தையோ ப்ரக்ருதத்தில் ராவணன் என்று சொல்லப்படுகிறது.

रावयति असत्प्रलापान् कारयति इति रावणः

𑌰𑌾𑌵𑌯𑌤𑌿 𑌅𑌸𑌤𑍍𑌪𑍍𑌰𑌲𑌾𑌪𑌾𑌨𑍍 𑌕𑌾𑌰𑌯𑌤𑍀𑌤𑌿 𑌰𑌾𑌵𑌣𑌃

ராவயதி அஸத்ப்ரலாபாந் காரயதி இதி ராவண:

என்ற ஸமாஸத்தால் ஆத்மாவுக்கு ஸம்பந்தமில்லாததான தேஹ தர்மங்களை ஆத்மாவினிடம் ஆரோபணம் செய்து கொண்டு 'நான் பெருத்தவன், சிறுத்தவன்' என்று ப்ரலாபிக்கச் செய்கிற தாத்பர்யத்தை ஒட்டி, ராவணன் என்ற பதத்தால் அவிவேகம் என்ற அர்த்தத்தை க்ரஹித்து கொள்ளவும்.

வால்மீகி மஹர்ஷியின் ப்ரார்த்தனையோ, ஆத்மா அநாத்மா விவேகமில்லாததாகிய அவிவேகத்தை, ராமனுடைய வாஸத்தால், நமது மனதிலில்லாமல் செய்துகொண்டு சரித்ரத்தை நிர்மாணம் செய்ய ஆரம்பித்தால்தான் அது நிர்விக்னமாக முடிவு பெறும், சரித்ரத்திலுள்ள ரஹஸ்யங்கள் எல்லாம் ப்ரகாசிக்குமென்றெண்ணி, "ஹே ராமா, ஸீதாபதே, யாதொரு காரணத்தால் ஜீவகோடிகளை காம

மோஹமென்ற வலையில் சிக்கிக்கச் செய்து, அதன் காரண மாக ஜீவகோடிகளுக்கு பவபந்தத்தை நயிப்பிவைக்கிற மூல அவித்யை, அவிவேகம் என்ற த்வந்த்வத்திலிருந்தும், அந்த அவிவேகத்தை, ஸஜ்ஜனங்களுடைய ஹ்ருதத்தில் நீ ஸ்புரிக்கும் காரணத்தால், நாசம் செய்துவைக்கிறுயோ, அக்காரணத்தால ஸஜ்ஜனங்களுடைய கோடியில் நானும் ஒரு ஸஜ்ஜனமாகையால் என்னுடைய ஹ்ருதயத்திலே யும் நீ தீர்க்க காலம் ஸ்புரிக்கும் காரணத்தால் என்னுடைய அவிவேகத்தையும் நாசம் பண்ணி உன்னுடைய சரித்ரங் களை ப்ரத்யக்ஷமாக எனக்கு விளங்கும்படி அனுக்ரஹம் செய்யவேண்டு"மென்று கதா நாயகனுன ஸ்ரீராமசந்த்ர மூர்த்தியையே அனுஸந்தானம் பண்ணுகிற மங்கள ச்லோக மாகவும் "மாநிஷாத" என்ற ச்லோகத்தால் வித்வான்கள் அறிந்துகொள்ளக்கூடும்.

இவ்விதம் பரம மங்களமான தாத்பர்யங்கள் இந்த ச்லோகத்தில் அடங்கியதானுலும் ஆபாதமாக (மேலாக) பார்க்கிறவர்களுக்கு அமங்களமான சாபரூபமாகவே விளங்கி வரக்கூடும். மஹர்ஷியான வால்மீகிக்கே மனது ஸமாதான மில்லாமலாகிவிட்டது. பக்ஷியை அடித்த வேடனை சபித் தது மாத்திரமல்லாமல், கதாநாயகனுன ராமனே வால்மீகி மஹர்ஷியினுடைய கருணையை பரீக்ஷிக்க வேடனுக வந் தார் என்று முன்பு சொல்லப்பட்டிருப்பதினுல் ராமனையே இந்த மஹர்ஷி சபித்ததாகவும் இந்த ச்லோகத்தால் வெளி யாகிறது. வால்மீகி மஹர்ஷியினுடைய கருணையை பரி சோதிக்க ராமனே வேடனுக வந்தார்; வால்மீகி மஹர்ஷி யினுல் சபிக்கப்பட்டவர் ராமன்தான் எனபதிலும் ஸ்காந்த மஹா புராணத்தில் பாதாள கண்டத்தில் அயோத்யையி னுடைய மாஹாத்ம்யத்தை வர்ணிக்கும் ப்ரகரணத்தில் சொல்லப்பட்டிருக்கும் வசனங்களை அடியில் கண்டவாறு அறியவும்.

प्राचेतसेन मुनिना रामो राजीवलोचनः ।
तमसोपवने शप्तो वेषधृग्जानकीपतिः ॥
श्रीरामः प्राकृतां लीलां स्वीयां वर्णयितुं तदा ।
मन्दोदर्याः पतिः क्रूरः क्रौञ्चवत् विनिपातितः ॥
अण्डजं निहतं दृष्ट्वा मुनिः शापमथाऽददौ ।
चिरंप्रतिष्ठामाभूत्ते निषाद भुवि हिंसक ॥
शापं श्रुत्वैव सर्वात्मा तत्रैवान्तरधीयत ।
शोकाक्रान्तस्तु वाल्मीकिः ब्रह्मणाशु सुबोधितः ॥

𑌪𑍍𑌰𑌾𑌚𑍇𑌤𑌸𑍇𑌨 𑌮𑍁𑌨𑌿𑌨𑌾 𑌰𑌾𑌮𑍋𑌰𑌾𑌜𑍀𑌵𑌲𑍋𑌚𑌨𑌃 ।
𑌤𑌮𑌸𑍋𑌪𑌵𑌨𑍇 𑌶𑌪𑍍𑌤𑍋 𑌵𑍇𑌷𑌧𑍃𑌗𑍍𑌜𑌾𑌨𑌕𑍀𑌪𑌤𑌿𑌃 ॥
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌃 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌾𑌂𑌲𑍀𑌲𑌾𑌂 𑌸𑍍𑌵𑍀𑌯𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑌯𑌿𑌤𑍁𑌂𑌤𑌦𑌾 ।
𑌮𑌨𑍍𑌦𑍋𑌦𑌰𑍍𑌯𑌾𑌃 𑌪𑌤𑌿𑌃 𑌕𑍍𑌰𑍂𑌰𑌃 𑌕𑍍𑌰𑍌𑌞𑍍𑌚𑌵𑌦𑍍𑌵𑌿𑌨𑌿𑌪𑌾𑌤𑌿𑌤𑌃 ॥
𑌅𑌣𑍍𑌡𑌜𑌂 𑌨𑌿𑌹𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌮𑍁𑌨𑌿𑌃 𑌶𑌾𑌪𑌮𑌥𑌾𑌦𑌦𑍌 ।
𑌚𑌿𑌰𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌮𑌾𑌭𑍂𑌤𑍍𑌤𑍇 𑌨𑌿𑌷𑌾𑌦 𑌭𑍁𑌵𑌿 𑌹𑌿𑌂𑌸𑌕 ॥
𑌶𑌾𑌪𑌂𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑍈𑌵𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌧𑍀𑌯𑌤 ।
𑌶𑍋𑌕𑌾𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍁 𑌵𑌾𑌲𑍍𑌮𑍀𑌕𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾𑌶𑍁 𑌸𑍁𑌬𑍋𑌧𑌿𑌤𑌃 ॥

ப்ராசேதஸேந முனிநா ராமோராஜீவலோசன: ।
தமஸோபவநெ சப்தோ வேஷத்ருக்ஜானகீபதி: ॥
ஸ்ரீராம: ப்ராக்ருதாம்லீலாம் ஸ்வீயாம்வர்ணயிதும்ததா ।
மந்தோதர்யா: பதி: க்ரூர: க்ரௌஞ்சவத்விநிபாதித: ॥
அண்டஜம் நிஹதம் த்ருஷ்ட்வா முனி: சாபமதாததௌ ।
சிரம்ப்ரதிஷ்டாமாபூத்தே நிஷாத புவிஹிம்ஸக ॥
சாபம்ச்ருத்வைவ ஸர்வாத்மா தத்ரைவாந்தரதீயத ।
சோகாக்ராந்தஸ்து வால்மீகி: ப்ரஹ்மணாசு ஸுபோதித:॥

வால்மீகி மஹர்ஷியினுடைய கருணையை பரிசோதிக்கவும், தனது சரித்ரத்தை லோகத்தில் வால்மீகி மஹர்ஷி மூலமாக ப்ரசுரஞ்செய்யச் செய்வதற்கும் ஸ்ரீராமனே வேடனுக உருவத்தை எடுத்துக்கொண்டு தன்னுல் வதித்து கொல்லப்பட்ட ராவணனை ஆண் க்ரௌஞ்ச பக்ஷியாகவும், ராவணனுடைய

வியோகத்தால் ராவணனுடன் உடன்கட்டைமரித்த மந்தோதரி என்ற ஸ்த்ரீயை பெண் க்ரௌஞ்ச பக்ஷியாகவும் மாயையால் செய்து, வால்மீகி மஹர்ஷிக் கெதிரில் ஆண் பக்ஷியை அடித்து, மஹர்ஷியால் சபிக்கப்பட்டார் என்ற தாத்பர்யமே மேல்கண்ட ஸ்காந்தபுராண ச்லோகங்களால் வெளியாகிறது.

महद्भिः बोधितं दृष्टं महापुरुषमीश्वरं ।
न ननाम खलोभूमौ क्रौञ्चयोनिः प्रजायते ॥

𑌮𑌹𑌦𑍍𑌭𑌿𑌃 𑌬𑍋𑌧𑌿𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌮𑌹𑌾𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 ।
𑌨 𑌨𑌨𑌾𑌮 𑌖𑌲𑍋𑌭𑍂𑌮𑍌 𑌕𑍍𑌰𑍌𑌞𑍍𑌚𑌯𑍋𑌨𑌿𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌤𑍇 ॥

மஹத்பி: போதிதம் த்ருஷ்டம் மஹாபுருஷமீச்வரம் ।
ந நநாம கலோர்பூமௌ க்ரௌஞ்சயோநி: ப்ரஜாயதே ॥

என்ற ஸ்ம்ருதியால், அமானுஷமான சரித்ரத்தாலும் மஹாபுருஷர்களுடைய உபதேசத்தாலும் ஈச்வரன் என்று தெரிந்தும், அல்லது தன்னைக்காட்டிலும் பலவானென்று தெரிந்தும், எவன் அந்த பலவானுக்கு வணங்கவில்லையோ, அவன்தான் பூமியில் மூர்க்கனென்று சொல்லப்படுவான். அவன் மரித்தபிற்பாடு க்ரௌஞ்ச பக்ஷியின் யோனியில் பிறக்கிறானென்றும் தெரிகிறது. ப்ரக்ருதத்தில் ராவணனோ, ஆஞ்சனேயஸ்வாமி, விபீஷணஸ்வாமி என்ற மஹா புருஷர்களால் ராமனை ஈச்வரனென்றோ, தன்னைக் காட்டிலும் பலவானென்றோ உபதேசிக்கப்பட்டு அறிந்தும், கர வதம் முதலான அமானுஷமான லீலைகளால் ராமனுடைய மஹத்வத்தை பலவாறு தான் அறிந்துகொள்ளக்கூடிய ஸந்தர்ப்பம் நேர்ந்தும், அங்கதன் தூதுபோயும் இந்த ராவணன் ராமனை வணங்கவில்லை. அந்த பாபத்தால் ராமனால் அடிக்கப்பட்டும் க்ரௌஞ்ச பக்ஷியாகபிறந்தான். பர்த்தாவினிடத்திலுள்ள பக்தியால் மந்தோதரியும் அந்த ஜன்மாவை அடையும்படி நேர்ந்தது. அவ்விருவர்களும் தான் தமஸா நதியின் தீரத்தில் ரதி பரவசர்களாயிருந்து விளங்கி வந்தார்கள். ஸ்ரீராமசந்த்ரமூர்த்தியும் தன்

பாணத்தால் அடிபட்டும் தன்னை வணங்காத காரணத்தால்· ராவணன் பக்ஷி ஜன்மாவை அடைந்துவிட்டானே என்ற வருத்தம்கொண்டு அவனை முக்தனாக செய்வதற்கும், தன் சரித்ரத்தை விஸ்தாரப்படுத்த ஸங்கல்பம் செய்த வால்மீகி மஹர்ஷியினுடைய கருணையை பரிசோதிக்கவும், தானே வேடனாக வேஷம் தரித்துக்கொண்டு அந்த ஆண்பக்ஷியை அடித்தார் என்ற கதாஸாரத்தை கவனித்தால், ராமாயணத்தை விஸ்தரிக்க யத்னம் செய்த வால்மீகி மஹர்ஷி ஆரம்பத்தில் ராமனையே சபிக்கும்படியாக நேர்ந்ததே என்ற மனோவருத்தமேற்பட்டது. இதையறிந்த வேடவேஷம் தரித்த பகவானும் உடனே அந்தர்த்யானம் அடைந்தார். மஹர்ஷியும் பகவானிடத்தில் அபராத க்ஷமாபனம் செய்துகொள்ள ஸமயம் நேராமல் போய்விட்டதே என்ற கவலையுடன் मानिषाद (மாநிஷாத) (மாநிஷாத) என்ற ச்லோகத்தை ச்லோகமாக பாவிக்காமல் சோகமாகவே பாவித்து சிஷ்யனிடத்திலும் இதைச் சொல்லி வருத்தமுள்ளவராக இருந்து வந்தார். பிறகு மனோதைர்யமடைந்து தமஸாநதி தீர்த்தத்தில் ஸ்நானனுஷ்டானம் செய்துவிட்டு தனது ஆச்ரமத்துக்கு சிஷ்யனுடன் இந்த வருத்தத்தை சொல்லிக்கொண்டே திரும்பி வந்தார். ஆச்ரமத்திற்கு வந்தும் கவலையுள்ளவராக இருந்துகொண்டு சிஷ்யனைப் பார்த்து "பரத்வாஜா, मानिषाद (மாநிஷாத) (மாநிஷாத) என்றது ச்லோகமாக ஆகட்டும், சோகமாக ஆகக்கூடாது" என்று சொல்லிக்கொண்டு வந்தார். சிஷ்யனும் "இது பரம மங்களமான ச்லோகம்தான். சோகமாகவே ஆகாது" என்றுதைர்யப் படுத்திக்கொண்டிருக்கும் ஸந்தர்ப்பத்தில் ஸாக்ஷாத் ப்ரம்மாவே வால்மீகி மஹர்ஷியை ஸமாதானப் படுத்த விஷ்ணுவால் ஆக்ஞாபிக்கப்பட்டு வால்மீகி மஹர்ஷியின் ஆச்ரமம் வந்து சேர்ந்தார்.

வால்மீகி மஹர்ஷியும், ப்ரம்மாவை வரவேற்று அர்க்ய பாத்யாதி உபசாரங்களால் விதிவத்தாக பூஜித்தார். திவ்ய

மான வ்யாக்ராஸனத்தில் ப்ரம்மாவை உட்காரவைத்து ப்ர தக்ஷிண நமஸ்காராதிகளையும் செய்துவிட்டு அஞ்சலிபந் தத்துடன் நின்றுவந்தார்.

मनोबुद्ध्यभिमानेन सहन्यस्य धरातले ।
कूर्मवच्चतुरःपादान् शिरस्तत्रैवपञ्चमं ॥
प्रदक्षिणसमेतेन ह्येवंरूपेणसर्वदा ।
अष्टाङ्गेन नमस्कृत्वाह्युपविश्याग्रतो गुरोः ॥

𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌭𑌿𑌮𑌾𑌨𑍇𑌨 𑌸𑌹𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌧𑌰𑌾𑌤𑌲𑍇 ।
𑌕𑍂𑌰𑍍𑌮𑌵𑌚𑍍𑌚𑌤𑍁𑌰𑌃𑌪𑌾𑌦𑌾𑌨𑍍 𑌶𑌿𑌰𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑍈𑌵𑌪𑌞𑍍𑌚𑌮𑌂 ॥
𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌸𑌮𑍇𑌤𑍇𑌨 𑌹𑍍𑌯𑍇𑌵𑌂𑌰𑍂𑌪𑍇𑌣𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 ।
𑌅𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑍇𑌨 𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌹𑍍𑌯𑍁𑌪𑌵𑌿𑌶𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌤𑍋 𑌗𑍁𑌰𑍋𑌃 ॥

மனோபுத்யபிமானேந ஸஹந்யஸ்ய தராதலே ।
கூர்மவச்சதுர:பாதாந் சிரஸ்தத்ரைவபஞ்சமம் ॥
ப்ரதக்ஷிணஸமேதேந ஹ்யேவம்ரூபேணஸர்வதா ।
அஷ்டாங்கேந நமஸ்க்ருத்வாஹ்யுபவிச்யாக்ரதொ குரோ: ॥

என்று ப்ரஹ்ம சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டபடி மனஸ், புத்தி, அஹங்காரம், இரண்டு கைகள், இரண்டு கால்கள், தலை, இந்த எட்டுகளுக்குள் ஐந்து பாஹ்யமான அவயவங் களையும் மூன்று ஆந்தரமான அவயவங்களையும், ஆக எட்டு களையும் பூமியில் போட்டுவிட்டு செய்கிற நமஸ்காரத்திற்கு "அஷ்டாங்க" நமஸ்காரமென்று பெயர் ஏற்படுகிறது. அதில் ஒவ்வொரு நமஸ்காரத்திற்கும், ஒவ்வொரு ப்ரதக்ஷிணமும் செய்துவிட்டு செய்யவேண்டும். இவ்விதம் ப்ரதக்ஷிணத் தோடுகூடின நமஸ்காரங்களால் குருவை ஸந்தோஷிக்கச் செய்யவேண்டும் என்று வெளியாகிறபடியால், அந்த சாஸ்த் ரத்தை அனுஸரித்து வால்மீகி மஹர்ஷி நமஸ்காரம் செய் ததையும் பார்த்த ப்ரம்மா பரமஸந்தோஷத்தை அடைந்து வால்மீகி மஹர்ஷியையும் ஆஸனத்தில் எதிரில் உட்காரும் படி ஆக்ஞாபனம் செய்தார். பரஸ்பரம் குசல ப்ரச்னம் செய்துகொண்டார்கள். ப்ரம்மாவினுடைய ஸந்நிதியிலும்

வால்மீகி மஹர்ஷியானவர் பக்ஷியை வேடன் அடித்ததையே நினைத்துக்கொண்டு, பெண் பக்ஷி தபித்ததை நினைத்து துக்கத்துடன் “मानिषाद” (மா நிஷாத) (மாநிஷாத) என்ற ச்லோகத்தையே மனதில் சொல்லிக்கொண்டே இருந்து வந்தார். ப்ரம்மா ஸர்வக்ஞனதினால், வால்மீகி மஹர்ஷி மனதோடு படிக்கிற “मानिषाद” (மா நிஷாத) (மாநிஷாத) என்ற ச்லோகத்தை தெரிந்துகொண்டு, ப்ரம்மாவானவர், ‘நமது உத்திரவினால் இந்த வால்மீகி மஹர்ஷியின் ஜிஹ்வையில் (நாக்கில்) ஸரஸ்வதிதேவியானவள் இந்த ச்லோக ரூபமாக ஆவிர்பவித்ததை, இம்மஹர்ஷி தெரிந்துகொள்ளவில்லை; அதனால் இவர் கஷ்டப்படுகிறார்’ என்று நினைத்து, மந்தஹாஸத்துடன் வால்மீகி மஹர்ஷியைப் பார்த்து “ஹே மஹர்ஷே, சோகரூபமாக நீர் நினைத்துக்கொண்டிருக்கும் “मानिषाद” (மா நிஷாத) (மாநிஷாத) என்ற வாக்யமானது ச்லோகம்தான், அதாவது நீர் அமங்களமாக நினைத்துக்கொண்டிருப்பது ஸரியல்ல; பரம மங்களமே. அது விஷயத்தில் கொஞ்சமேனும் கவலையை அடைய வேண்டாம். என்னுடைய உத்தரவை அனுஸரித்து, ஸரஸ்வதி தேவியானவள் இந்த ச்லோக ரூபமாக உம்முடைய ஜிஹ்வாக்ரத்தில் ஆவிர்பவித்திருக்கிறாள். ஸரஸ்வதியினுடைய இக்கடாக்ஷத்தை வைத்துக்கொண்டு, ராம சரித்ரத்தை விஸ்தாரமாக நீர் செய்து லோகத்தில் ப்ரசுரப்படுத்தவேண்டும். சோகத்தை இனி அடையவேண்டாம்” என்று சொன்னார்.

ப்ரக்ருதத்தில் ராமசரித்ரத்தை ப்ரபந்தமாக செய்ய வால்மீகி மஹர்ஷியானவர் யத்னம் செய்துகொண்டிருக்கும்பொழுது, அதற்கு அனுகூலமாக ஸரஸ்வதி தேவியே “मानिषाद” (மா நிஷாத) (மாநிஷாத) என்ற ச்லோக ரூபமாக ஆவிர்பவித்து வால்மீகி மஹர்ஷிக்கு அனுக்ரஹம் செய்தாள் என்று சொல்லப்பட்டது. ஆனால், ஸரஸ்வதி

தேவி ப்ரம்மாவினுடைய உத்தரவால் வந்தாள் என்று சொல்லப்பட்டது. ராமன் விஷ்ணுவானதினால், விஷ்ணு வின் ஆக்ஞையினால் வந்தாள் என்று ஏன் சொல்லக் கூடாது என்று சங்கிக்கக் கூடும். அதற்கு ஸமாதானமோ :— விஷ்ணு, ப்ரம்மா, ருத்ரன் இம்மூன்று தேவதைகளும், ஒரே ஸ்வரூபந்தான் என்பதே ஆகும். அதனால் ப்ரம்மாவின் உத்தரவு, விஷ்ணுவின் உத்தரவு என்ற வேற்றுமையே இல்லை. மூன்று தேவதைகளும் ஒரே ஸ்வரூபம்தான் என்பதற்கோ,

एकामूर्तिस्त्रयोदेवा रुद्रविष्णुपितामहाः

𑌏𑌕𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑍇𑌵𑌾 𑌰𑍁𑌦𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌾𑌃 ।

ஏகாமூர்திஸ்த்ரயோதேவா ருத்ரவிஷ்ணுபிதாமஹா: ।

என்ற ஹரி வம்சம் என்ற க்ரந்தத்திலுள்ள வாக்யமே ப்ரமாணமாகும். மூன்று தேவதைகளும் ஒரே ஸ்வரூபம் என்று மேற்கண்ட வாக்யத்தின் தாத்பர்யம்.

தவிர, ப்ரம்மாவும் விஷ்ணுவும் ஒரே ரூபமானதினால், ப்ரும்மாவினுடைய ஸங்கல்பம், விஷ்ணுவின் ஸங்கல்ப மாகவே ஆகும். விஷ்ணுவினுடைய ஸங்கல்பத்தால்தான், "मानिषाद" (𑌮𑌾𑌨𑌿𑌷𑌾𑌦) (மாநிஷாத) என்ற ச்லோக ரூபமாக வால்மீகி மஹர்ஷியிடம் ஸரஸ்வதிதேவி வந்தாள். அந்த ச்லோகத்திற்கோ, ராமனையே வால்மீகி மஹர்ஷி சபிப்ப தான அர்த்தம் முன்பு விவரிக்கப்பட்டது. வால்மீகி மஹர் ஷியின் கருணையை பரிசோதிப்பதற்காக ராமனே வேட னாக வந்து பக்ஷியை அடித்தார். வால்மீகி மஹர்ஷி கோபத்தை அடைந்து, "ஆண் பக்ஷியை அடித்து பெண் பக்ஷியை தனியாக கதறச்செய்துவிட்டபடியால் நீயும் பார்யாவிரஹத்தை அடைவாய்" என்று சபித்தது ஸூசிப் பிக்கப்பட்டது. அந்த சாபத்தை அனுஸரித்தே ஸ்ரீராமனும் பின்பு அனுஷ்டித்தும் காட்டினார். அதனால் ப்ராம்மண

சாபம் ஈச்வரனிடத்திலும் பலிக்கும் என்பதை வெளிப் படுத்துவதற்காக மேற்சொன்ன அர்த்தம் அடங்கிய “मानिषाद” (𑌮𑌾𑌨𑌿𑌷𑌾𑌦) (மாநிஷாத) என்ற ச்லோக ரூபமாக ஸரஸ்வதி, வால்மீகி மஹர்ஷியினிடத்தில் ஆவிர்பவித்த தற்கு, விஷ்ணுவின் ஸங்கல்பமும் காரணமாகும். வால்மீகி மஹர்ஷிக்கும் பின்பு, “வேடனில்லை; ராமன்தான்” என்று தெரிந்து பகவானை சபித்துவிட்டோமே என்று வருந்தி, பகவத் விஷயமான அபராதத்திற்கு மஹாப்ராயச்சித்தமாக, பகவானுடைய குணானுவர்ணனமான ராமாயணத்தைச் செய்தார். அதனால், மற்ற பாபங்களை ஸ்ரீமத் ராமாயணம் போக்கடிக்கு மென்பதில் ஸந்தேஹமில்லை.

ராஜ்யம் முதலான ஸம்பத்துக்கள் இருந்தாலும் அதை அனுபவிக்க வேண்டுமென்ற சாபல்யமில்லாமல், காமத்தை ஜயிப்பதே முக்யமாகும் என்பதை தான் அனுஷ்டித்துக் காட்டி லோகத்தை சிக்ஷிப்பதற்கும், தன்னை சபித்ததற்கு ப்ராயச்சித்தமாக தனது கீர்த்தியை வர்ணிப்பது என்ற மஹாப்ரபந்தத்தை செய்த காரணமாக வால்மீகி மஹர்ஷி யின் யசஸ்ஸை வ்ருத்தி செய்வதற்கும், பகவத் விஷயமாக செய்த அபராதத்திற்கே ராமாயணம் ப்ராயச்சித்தமாக ஆகு மானால், இதர ஜனங்கள் செய்த ஸாமான்ய பாபங்களைப் போக்கடிப்பதில் ராமாயணம் மஹா ப்ராயச்சித்தமாக ஆகு மென்பதில் என்ன ஆக்ஷேபணை? என்ற கைமுதிக ந்யா யத்தை ப்ரகாசப்படுத்துவதற்கும் வால்மீகி மஹர்ஷியிடம் ஸரஸ்வதி ஆவிர்பவிக்க விஷ்ணுவின் ஸங்கல்பம் காரண மாகும். இதில்,

मच्छन्दादेवते ब्रह्मन् प्रवृत्तेयं सरस्वती

𑌮𑌚𑍍𑌛𑌨𑍍𑌦𑌾𑌦𑍇𑌵𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌯𑌂 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀

மச்சந்தாதேவதேப்ரஹ்மன் ப்ரவ்ருத்தேயம் ஸரஸ்வதீ

கைமுதிக ந்யாயம் :—

உதாஹரணம் :- ஸமுத்ரத்தைத் தாண்ட வல்லமை உள்ளவன் சிறிய நதியை தாண்டுவானா என்று கேட்கவும் வேண்டுமா!

என்று இரண்டாவது ஸர்கத்தில் 31-வது ச்லோகத்தால், ப்ரம்மா வால்மீகி மஹர்ஷியிடம் சொல்வதே ப்ரமாண மாகும். मच्छन्दः (மச்சந்த:) (மச்சந்த:) என்றதற்கு ப்ரம்மா ஸங்கல்பம் என்று அர்த்தம். ப்ரம்மாவும் விஷ்ணுவும் ஒன்றுதான் என்று एकामूर्तिः (ஏகாமூர்த்தி:) (ஏகாமூர்த்தி:) என்ற சாஸ்த்ரத்தால் சொல்லப்பட்டதால், ப்ரம்மாவின் ஸங் கல்பம் விஷ்ணுவின் ஸங்கல்பம் தான்.

இவ்விதம் ப்ரம்மாவானவர் வால்மீகி மஹர்ஷியின் மனதை ஸமாதானப்படுத்தி, ராமனுடைய சரித்ரத்தை விஸ்தாரமாக எழுதி லோகத்திற்கு நன்மையைச் செய்யு மென்று அனுக்ரஹம் செய்தார். "ராமனுடைய சரித்ரத் தில், ரஹஸ்யமான விஷயங்களோ, ப்ரகாசமான விஷயங் களோ, ஸகல விஷயங்களும் தங்களுக்கு ப்ரத்யக்ஷமாக ஸ்புரிக்கட்டும். ஸ்ரீராம கதையில் தங்களுக்குத் தெரியாத விஷயம் யாதொன்றுமே இருக்கவேண்டாம். இந்த லோகத் தில் பர்வதங்கள், நதிகள் இவைகள் எவ்வளவு காலம் இருக்கின்றனவோ அவ்வளவு காலம், தங்களால் செய்யப் படும் ராமாயணம் ப்ரசாரத்தை அடையட்டும். ராமாயண கதையானது பூலோகம், ஸ்வர்கலோகம் முதலான மேல் லோகங்கள், பாதாளம் முதலான கீழ்லோகங்கள், எல்லா லோகங்களிலும் ப்ரஸித்தமாக விளங்கட்டும். இவ்விதமான புண்யகார்யத்தை லோகத்தில் ஸ்தாபனம் செய்த தாங்க ளும், தங்களுடைய இஷ்டம்போல் எந்த லோகத்தில் வேண்டுமானாலும் ஸஞ்சாரம் செய்யலாம். ப்ரம்மலோகம் முதல் ஸகல லோகங்களும் தங்கள் வசத்தில் இருந்துவரு கின்றன" என்று ப்ரம்மாவானவர் சொல்லிவிட்டு அந்தர்த் யானத்தை அடைந்துவிட்டார்.

ப்ரம்மா சென்ற பிறகு வால்மீகி மஹர்ஷி, சிஷ்ய னுடன்கூட முன்சொன்ன "मानिषाद" (மாநிஷாத) (மாநிஷாத) என்ற ச்லோகத்தையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்

கொண்டு, பரம ஸந்தோஷத்தை அடைந்து வந்தார். அந்த ச்லோகமும் வால்மீகி மஹர்ஷியின் விஷயத்தில், ப்ரம்மா வின் அனுக்ரஹத்தால் பரமமங்கள ச்லோகமாகவே ஆகி விட்டது. 'ஸரஸ்வதி தேவியானவள் இந்த ச்லோக ரூப மாக முதலில் அவதரித்ததினால், ஸ்ரீமத் ராமாயணப் ப்ர பந்த முழுமையும், இந்த "அனுஷ்டுப்" வ்ருத்த ச்லோகங் களாலேயே, நிர்மாணம் செய்யப்போகிறேன்' என்று வால்மீகி மஹர்ஷி ஸங்கல்டாம் செய்து அவ்விதமே ப்ரபந் தத்தை நிர்மாணம் செய்தார்.

उदारवृत्तार्थपदैर्मनोरमैः तदास्य रामस्य चकारकीर्तिमान् ।
समाक्षरैः श्लोकशतैर्यशस्विनः यशस्करं काव्यमुदारधीर्मुनिः ॥

𑌉𑌦𑌾𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌪𑌦𑍈𑌰𑍍𑌮𑌨𑍋𑌰𑌮𑍈𑌃
𑌤𑌦𑌾𑌸𑍍𑌯 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌚𑌕𑌾𑌰 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍 ।
𑌸𑌮𑌾𑌕𑍍𑌷𑌰𑍈𑌃 𑌶𑍍𑌲𑍋𑌕𑌶𑌤𑍈𑌰𑍍𑌯𑌶𑌸𑍍𑌵𑌿𑌨𑌃
𑌯𑌶𑌸𑍍𑌕𑌰𑌂 𑌕𑌾𑌵𑍍𑌯 𑌉𑌦𑌾𑌰𑌧𑍀𑌰𑍍𑌮𑍁𑌨𑌿𑌃 ॥

உதாரவ்ருத்தார்த்தபதைர்மனோரமை:
ததாஸ்ய ராமஸ்ய சகார கீர்திமான் ।
ஸமாக்ஷரை: ச்லோகசதைர்யசஸ்வின:
யசஸ்கரம் காவ்ய முதார தீர்முனி: ॥

மஹர்ஷியானவர் தான் ஸங்கல்பம் செய்த ப்ரகாரம் ஸ்ரீமத் ராமாயணம் என்ற ஆதி காவ்யத்தை ரசனை செய் தார் என்று இந்த ச்லோகத்தால் சொல்லப்படுகிறது. இந்த ச்லோகத்தின் பூர்வார்த்தத்தில் कीर्तिमान् (𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍) (கீர்த்திமாந்) என்றது கடைசி பதமாகும். வால்மீகி மஹர் ஷிக்கு அந்த பதம் விசேஷணமாகவும் ஆகும்.

कीर्तिः अस्य अस्तीति = कीर्तिमान्

𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌃 𑌅𑌸𑍍𑌯 𑌅𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 = 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍

கீர்தி: அஸ்ய அஸ்தீதி = கீர்திமான்

என்ற ஸமாஸத்தால், வால்மீகி மஹர்ஷியானவர், இக்

காவ்யத்தை ரசனை செய்வதில், யசஸ்ஸையே முக்கிய ப்ர யோஜனமாக எதிர்பார்த்தவர் என்று தெரிகிறது.

काव्यं यशसेऽर्थकृते व्यवहारविदे शिवेतरक्षतये ।
सद्यः परनिर्वृतये कान्तासंमिततयोपदेशयुजः ॥

𑌕𑌾𑌵𑍍𑌯𑌂 𑌯𑌶𑌸𑍇𑌽𑌰𑍍𑌥𑌕𑍃𑌤𑍇 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌵𑌿𑌦𑍇 𑌶𑌿𑌵𑍇𑌤𑌰𑌕𑍍𑌷𑌤𑌯𑍇 ।
𑌸𑌦𑍍𑌯𑌃 𑌪𑌰𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌯𑍇 𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌸𑌂𑌮𑌿𑌤𑌤𑌯𑍋𑌪𑌦𑍇𑌶𑌯𑍁𑌜𑌃 ॥

காவ்யம் யசஸே அர்த்தக்ருதே வ்யவஹாரவிதே சிவேதரக்ஷதயே ।
ஸத்ய: பரநிர்வ்ருதயே காந்தாஸம்மிததயோபதேசயுஜ: ॥

என்று அலங்கார சாஸ்த்ரத்தில் சொல்லியபடி வாச்யார்த் தத்தை ப்ரதானமாகக்கருதாமல், வ்யங்க்யமான பொருளையே முக்யமாகக் காட்டும் காரணத்தால், **"காந்தா ஸ்ம்மிதை"** என்று காவ்யத்திற்குப் பெயர் வைத்து உபதேசத்தைச் செய்ய முன்வந்த வித்வான்களுடைய க்ரந்த ரசனைக்குப் பலமோ, யசஸ், தனம், ரஸிகர்களோடு வாதம் செய்வது, பாபக்ஷயம், அந்யர்களுடைய மனதிற்கு ஸந்தோஷத்தை உண்டு பண்ணுவது என்று ஏற்படுகிறது. இதுகளுக்குள் **காந்தா ஸம்மிதை** யான, இந்த ஸ்ரீமத் ராமாயணத்தைச் செய்த வால்மீகி மஹர்ஷிக்கு, யசஸ்ஸே மேலான ப்ர யோஜனம். இம்மஹர்ஷியும் அதைத்தான் பலனாக விரும்பி னார் என்பது कीर्तिमान् (𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍) (கீர்த்திமான்) என்ற பதத் தால் தெரிகிறது.

उदारधीः (𑌉𑌦𑌾𑌰𑌧𑍀𑌃) (உதாரதீ:) என்றும், மற்றொரு விசேஷணம் உத்தரார்த்தத்தில் காணப்படுகிறது.

उदारा महती धीः यस्य सः 𑌉𑌦𑌾𑌰𑌾 𑌮𑌹𑌤𑍀 𑌧𑍀𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃 உதாரா மஹதீ தீ: யஸ்ய ஸ: என்ற ஸமாஸத்தால், மஹா கவியாக ஆகுவதற்குள்ள காரணங்கள், இம் மஹர்ஷியிடத்தில் பொருந்தி இருக்கின்றன. மஹா புத்திமான் என்று தெரி கிறது. "காவ்ய ப்ரகாசம்" என்ற சாஸ்த்ரத்தில்,

शक्तिर्निपुणता लोककाव्य शास्त्राद्यवेक्षणात् ।
काव्यज्ञ शिक्षयाभ्यास इतिहेतुस्तदुद्भवः ॥

𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌨𑌿𑌪𑍁𑌣𑌤𑌾 𑌲𑍋𑌕𑌕𑌾𑌵𑍍𑌯 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌵𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍 ।
𑌕𑌾𑌵𑍍𑌯𑌜𑍍𑌞 𑌶𑌿𑌕𑍍𑌷𑌯𑌾𑌭𑍍𑌯𑌾𑌸 𑌇𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌸𑍍𑌤𑌦𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 ॥

சக்திர்நிபுணதா லோககாவ்ய சாஸ்த்ராத்ய வேக்ஷணாத் ।
காவ்யக்ஞ சிக்ஷயாப்யாஸ இதிஹேதுஸ்ததுத்பவ: ॥

என்று சொல்லியபடி, லோகம், வேதம், சாஸ்த்ரம், காவ்யம், இதுகளை அடிக்கடி பார்த்த காரணத்தால், புதிதாக ஓர் ப்ரபந்தத்தை நிர்மாணம் செய்யக்கூடிய சக்தி விசேஷமும், அந்த சக்தி விசேஷத்தை வெளியில் கார்யத்தில் காட்டி, ப்ரபந்த நிர்மாணம்செய்து அதை லோகத்தில் ப்ரகாசம் ஆகும்படி செய்யும் ஸாமர்த்ய விசேஷமும், காவ்யத்தை அறிந்த வித்வான்களிடத்தில் வெகு காலம் சிக்ஷை மூலம் செய்த அப்யாஸமும், காவ்யத்தை உண்டுபண்ணுவதற்குக் காரணமாகும். அந்த லக்ஷணங்கள் முழுமையும் வால்மீகி மஹர்ஷியினிடத்தில் குடியிருந்து வருகிறது. அதனால் மஹா காவ்யத்தைச் செய்ய சக்தி உள்ளவரான தினால், ராமாயணம் என்ற ஆதிகாவ்யத்திற்கு அம்மஹர்ஷி கர்த்தாவாக ஆகுவது மிகவும் பொருத்தம்தான் என்பதை उदारधीः (𑌉𑌦𑌾𑌰𑌧𑍀𑌃) (**உதாரதீ:**) என்ற பதம் காட்டுகிறது.

मुनिः (𑌮𑍁𑌨𑌿𑌃) (முனி:) என்று சொன்னதினால், குருவினால் உபதேசிக்கப்பட்ட தத்வத்தை, நிர்ஜனமான தேசத்திலிருந்துகொண்டு மனனம் செய்யும் ஸ்வபாவமுள்ளவர். இதனால் வாமனன் என்ற மஹா கவியால் சொல்லப்பட்ட

द्वयेहि कवयः अरोचकिनस्सतृणाभ्यवहारिणश्च

𑌦𑍍𑌵𑌯𑍇𑌹𑌿 𑌕𑌵𑌯𑌃 𑌅𑌰𑍋𑌚𑌕𑌿𑌨𑌸𑍍𑌸𑌤𑍃𑌣𑌾𑌭𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌿𑌣𑌶𑍍𑌚

த்வயேஹி கவய: அரோசகிநஸ் ஸத்ருணாப்யவஹாரிணச்ச

என்ற ச்லோக மூலமாக வெளிவந்த "**அரோசகித்வம்**" என்ற வைராக்யமும், "**த்ருணாப்யவஹாரம்**" என்ற ஸாத்விக ஆஹார

மும், கவிகளுக்கு முக்ய லக்ஷணமானதினுல் அந்த லக்ஷண மும், வால்மீகி மஹர்ஷியினிடம் இருந்துவருகிறதென்பது தெரிகிறது. மேற்சொன்ன ச்லோகத்தில் तदा (𑌤𑌦𑌾) (ததா) என்றும் ஓர் பதம் அடங்கியிருக்கிறது. அந்த பதத்திற்கு வால்மீகி மஹர்ஷிக்கு ப்ரம்மா அனுக்ரஹம் செய்து அந் தர்த்யானத்தை அடைந்த காலத்தில் என்பது பொருளாகும். அதனுல் வால்மீகி மஹர்ஷி ப்ரம்மாவின் வரப்ரஸாதத்தை அடைந்தவரானதால், "பரம ஆப்ததமன்" என்று சொல் லப்பட்டதாக ஆகும். இம்மஹர்ஷியினுல் செய்யப்பட்ட ராமாயணம் என்ற காவ்யத்திற்கு,

यशस्विनोपि रामस्य यशस्करं

𑌯𑌶𑌸𑍍𑌵𑌿𑌨𑍋𑌪𑌿 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌯𑌶𑌸𑍍𑌕𑌰𑌂

யசஸ்விநோபி ராமஸ்ய யசஸ்கரம்

என்ற வாக்யத்தால் ஸகலலோகங்களிலும் ப்ரஸித்தமான கீர்த்தியோடு கூடின ராமனுக்கும் ஒரு ஆபூர்வமான யசஸ்ஸைக் கொடுக்கக்கூடியது என்ற கௌரவத்தைக் கொடுத்திருக்கிறுர். இதனுல்,

आदिराजयशोबिम्ब मादर्शं प्राप्य वाङ्मयं ।
तेषामसन्निधानेपि नस्वयं पश्यनश्यति ॥

𑌆𑌦𑌿𑌰𑌾𑌜𑌯𑌶𑍋𑌬𑌿𑌂𑌬 𑌮𑌾𑌦𑌰𑍍𑌶𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌵𑌾𑌙𑍍𑌮𑌯𑌂 ।
𑌤𑍇𑌷𑌾𑌮𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑍇𑌪𑌿 𑌨𑌸𑍍𑌵𑌯𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ॥

ஆதிராஜயசோபிம்பமாதர்சம் ப்ராப்ய வாங்மயம் ।
தேஷாம ஸந்நிதாநேபி நஸ்வயம் பச்யநச்யதி ॥

என்று தண்டி என்ற கவியால் சொல்லப்பட்ட ப்ரகாரம் ஆதி ராஜாக்களான அரசர்கள் ஈச்வரனுடைய அவதார புரு ஷர்கள். அவர்களோ, மனுஷ்யனுல் செய்யமுடியாத கார் யங்களைச் செய்து, தனது யசஸ்ஸை லோகம்முழுமையும் பரவச் செய்திருக்கிறுர்கள். அதற்கு ரகு, திலீபன், அம்பரீஷன்,

மாந்தாதா, ஹரிச்சந்திரன், நளன், ப்ரக்ருத கதாநாயகனுன ராமன், க்ருஷ்ணன் முதலானவர்களையே உதாஹரணமாக எடுத்துக் கொள்ளலாம். அவர்களுடைய சரித்ரங்களை வால்மீகியைப் போலொத்த மஹா கவிகள் ப்ரபந்தரூபமாக செய்திருக்கும் இதிஹாஸ புராணங்கள் ப்ரதிபிம்பத்தை க்ரஹிக்கும் சக்தி உள்ள நிர்மலமான கண்ணுடி போலாகும். அக் கண்ணுடியில் ஆதிராஜாக்களுடைய யசஸ்ஸாகிய பிம்பங்கள் ப்ரதிபலித்து விளங்கி வருகின்றன. அதாவது அந்த நூல்களைப் படிக்கும்பொழுது அவர்களின் ப்ரதாபங்கள் தெரியவருகின்றன. லோகத்தில் பிம்பத்தின் ஸந்நிதியில்தான் ப்ரதிபிம்பம் தெரியும். அதற்கு நேர்விரோதமாக ஆதி ராஜாக்களாகிய பிம்பம் தத்காலத்தில் இல்லாமலிருந்தும் அவர்களுடைய யசோரூபமான ப்ரதிபிம்பங்கள் மாத்திரம் இதிஹாஸ புராணங்களாகிய கண்ணுடியில் காணப்படுகின்றன. இதோர் ஆச்சர்யமான தத்வமே! பிம்பமில்லாமல் ப்ரதிபிம்பத்தைப் பார்க்கமுடியுமா? இந்த அபூர்வமான விஷயத்தை தண்டி கவியானவர் தன் கவிதா சாதுர்யத்தால் வெளிப்படுத்தி இருக்கிருர். அது போல் ப்ரக்ருதத்திலும் ஸ்ரீராமனை பிம்ப புருஷனுகவும், அந்த ப்ரபுவின் யசஸ்ஸை ப்ரதிபிம்பமாகவும், வால்மீகி மஹர்ஷி இயற்றிய ஸ்ரீமத் ராமாயணத்தை ப்ரதிபிம்பத்தை க்ரஹிக்கும் கண்ணுடியாகவும் வைத்துக்கொண்டால், ராமன் என்ற பிம்பத்தினுடைய ஸந்நிதி இல்லாத காலத்திலும், யசஸ் என்ற ப்ரதிபிம்பமானது ராமாயணம் என்ற கண்ணுடியில் காணப்படுகிறது. தண்டி கவி சொல்லியது ரொம்பவும் பொருத்தமாக இந்த ராமாயணத்தில்தான் இருந்துவருகிறது. அதைத்தான் மூலத்திலும்,

यशस्विनः रामस्य यशस्करं

யஶஸ்விநः ராமஸ்ய யஶஸ்கரம்

யசஸ்விந: ராமஸ்ய யசஸ்கரம்

என்ற வாக்யத்தால், வால்மீகி ப்ரகாசப்படுத்தி இருக்கிருர். ராமனுடைய ஸந்நிதானத்தில் மாத்திரம், இந்த ராமாயணம்

அப்பிரபுவின் யசஸ்ஸை போதிப்பதாக நினைக்கக்கூடாது. ராமன் வைகுண்டாரோஹணம் செய்த பிற்பாடுங்கூட ராமன் பூலோகத்தில் இருப்பதுபோலவும், ராமனை ப்ரத்யக்ஷமாகக் காட்டுவது போலவும் ராமனுடைய யசஸ்ஸாகிய பிம்பத்தை வைத்துக்கொண்டு கதையை வர்ணிக்கிறபடியால் இந்த ராமாயணம் ராமனுக்கும் யசஸ்ஸை கொடுக்கக்கூடியது என்று சொல்லப்பட்டது. அதனால் கதாநாயகனான ஸ்ரீராமனுடைய கீர்த்திக்கு ஸமானமான கீர்த்தியை வேறு யாரும் ஸம்பாதித்ததில்லை என்பது வெளியாகிறது. அதனால் இக் காவ்யத்திற்கு ரொம்பவும் மேன்மை உண்டு. இதற்கு காவ்யம் என்று பெயர் ஏற்பட்டதற்கும் காரணத்தை அறியவும்:—

லோகோத்தரமான தத்வத்தை வெகு அழகாக வர்ணிப்பதில் சக்தி உள்ளவர்களே கவிகளாக ஆகுவார்கள். அவர்களுடைய கார்யத்திற்கு காவ்யமெனப் பெயர். இன்ன சப்தத்தால் இந்த பொருளை போதிக்கவேண்டும் என்ற ஈச்வரனுடைய சங்கேதத்தை அனுஸரித்து ஒரு பொருளையும் சப்தத்தையும் சேர்க்கும்பொழுது நவரஸங்களும் எந்த இடத்தில் பெருகுகிறதோ அதுவே காவ்யமாகும். ராமாயணத்தில் நவரஸமும் அடங்கி இருக்கிறது என்பதை விளக்க, "மானிஷாத" என்ற ச்லோகத்தின் அர்த்தத்தில் காட்டப்பட்டது. அத்துடன்,

"सर्ग बन्धो महाकाव्यमुच्यते"

ஸ மஉ ப ந்தோ மஹாகாவ்யமுச்யதே

ஸர்க பந்தோ மஹாகாவ்யமுச்யதே

என்ற காவ்ய லக்ஷணத்தை அனுஸரித்து, எந்த சாஸ்த்ரத்தில் ஆங்காங்கு பிரிவிற்கு ஸர்கம் என்று பெயர் ஏற்படுகிறதோ அதற்கு மஹாகாவ்யம் என்று சொல்லவேண்

டும் என்று தெரிகிறபடியால், இந்த ராமாயணத்தையும் ஸர்கம் ஸர்கமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறபடியால், இதற்கு மஹாகாவ்யம் எனப் பெயர் ஏற்பட்டது. இவ்வித மஹிமை உள்ள காவ்யத்தை 24,000 ச்லோகங்களால் காயத்ரி அக்ஷ ரங்களுக்கு அனுகுணமாக இருக்கும்படி ரசனை செய்தார். ஒவ்வொரு ச்லோகங்களிலும் வ்ருத்த ரத்னகரத்தை அனு ஸரித்து, அந்தந்த ரஸங்களை ப்ரகாசப் படுத்தக்கூடிய அழ கான வ்ருத்தங்களோடுகூடினதாயும், வாச்யார்த்தம், வ்யங்க் யார்த்தம், லக்ஷ்யார்த்தம் என்ற மூன்றுவிதமான அர்த்த விசேஷத்தோடு கூடினதாயும், வாசகமான பதம், வ்யஞ் சகமான பதம், லக்ஷகமான பதம் இதுகளோடு கூடின தாயும், ஒவ்வொரு பதங்களிலும், அக்ஷரங்கள் அதிகமாக இருக்கிறது குறைந்திருக்கிறது என்ற தோஷமில்லாம லும், அர்த்தத்தை அறியாமல் ச்ரவணம் செய்தவர்களுக் குக்கூட மனதை ரமிக்கச் செய்யும் சக்தி விசேஷத்தோடு கூடிய ச்லோகங்களால் வால்மீகி மஹர்ஷியானவர் இம் மஹா காவ்யத்தை ரசனை செய்தார். இக் காவ்யத்திற்குக் கர்த்தாவான மஹர்ஷியோ, முதலில் நாரத மஹர்ஷியினால உபதேசிக்கப்பட்டவர். பிறகு ப்ரம்மாவின் வரப்ரஸாதத் தால் ஞானசக்ஷுஸ்ஸை அடைந்தவர். நடுவில் கதாநாயக னை ராமனை வேடவேஷதாரியாக இருக்கும்பொழுது தர்சனம் செய்தவர். ஈச்வர ப்ரஸாதமும், திவ்ய ஞானமும், இம்மஹர்ஷியினிடத்தில் இருந்துவருவதினால், இவர் மற்ற கவிகளைப்போலல்ல; மஹாகவி. இம்மஹர்ஷியால் செய் யப்பட்ட ஸ்ரீமத் ராமாயணத்தை ச்ரேயஸ்ஸை விரும்பு கிற ஸகல ஆஸ்திகர்களும் அவச்யம் ஆதரித்தே தீர வேண்டும் என்று, வக்த்ரு வைலக்ஷண்யம் என்ற மஹத்வ மானது இரண்டாவது ஸர்கத்தால் சொல்லப்பட்டது.

மூன்ருவது ஸர்கம்.

விஷய வைலக்ஷண்யம்.

முன் ஸர்கத்தில் ஸ்ரீமத் ராமாயணம் என்ற க்ரந்தமானது, ப்ரம்மாவின் வரப்ரஸாதத்தை அடைந்த பரம ஆப்தனுன வால்மீகி மஹர்ஷியினுல் செய்யப்பட்ட காரணத்தால், ச்ரேயஸ்ஸை விரும்பும் ஆஸ்திக சிகாமணிகளால் மேற்சொன்ன க்ரந்தமானது மிகவும் ஆதரிக்கத்தகுந்ததாக ஆகிறது என்று சொல்லப்பட்டது. இந்த ஸர்கத்திலோ, கதாநாயகனுடைய வைபவத்தாலும், அதாவது சொல்லப்படும் விஷயத்தின் கௌரவத்தாலும், மிகவும் ஆதரிக்கத்தகுந்ததாக ஆகிறது. ஞான சக்ஷுஸ்ஸால் கண்டுபிடிக்கக்கூடும் மிகவும் ரஹஸ்யமான தத்வங்கள் இந்த க்ரந்தத்தில் சொல்லப்படுகின்றன. இந்த லோகத்திலேயே எல்லாவிதத்திலும் உத்க்ருஷ்டனுன பரம புருஷனே இந்த க்ரந்தத்தில் கதாநாயகன் ஆனதினுல், அம்மஹானுபாவனுடைய அளவற்ற கல்யாணகுணங்களும் இந்த க்ரந்தத்தில் சொல்லப்படுகிறது. அதனுல்,

सम्यक् ज्ञानावधृतत्वं लोकोत्तर नायकगुण परिष्कृततत्वं

𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌵𑌧𑍃𑌤𑌤𑍍𑌵𑌂 𑌲𑍋𑌕𑍋𑌤𑍍𑌤𑌰 𑌨𑌾𑌯𑌕
𑌗𑍁𑌣 𑌪𑌰𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌤𑍍𑌵𑌂।

ஸம்யக் ஞானாவத்ருதத்வம் லோகோத்ர நாயக குணபரிஷ்க்ருதத்வம்

என்ற விஷய வைலக்ஷண்யத்தின் லக்ஷணமானது இந்த க்ரந்தத்தில் பொருத்தமாக இருக்கிறது. லோகோத்தரமான நாயகனே, ஸ்ரீராமசந்த்ர மூர்த்தியே. இந்த க்ரந்தத்தில் சொல்லியிருக்கும் ரஹஸ்யங்களை வால்மீகி மஹர்ஷியானவர் ஸமாதியில் ஞான சக்ஷுஸ்ஸால் கண்டுபிடித்தார். அதாவது,

उपस्पृश्योदकं सम्यक् मुनिः स्थित्वा कृताञ्जलिः ।
प्राचीनाग्रेषु दर्भेषु धर्मेणान्वेषते गतिं ॥

𑌉𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑍍𑌯𑍋𑌦𑌕𑌂 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌮𑍁𑌨𑌿𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾 𑌕𑍃𑌤𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌃 ।
𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌨𑌾𑌗𑍍𑌰𑍇𑌷𑍁 𑌦𑌰𑍍𑌭𑍇𑌷𑍁 𑌧𑌰𑍍𑌮𑍇𑌣𑌾𑌨𑍍𑌵𑍇𑌷𑌤𑍇 𑌗𑌤𑌿𑌂 ॥

உபஸ்ப்ருச்யோதகம் ஸம்யக் முனி: ஸ்தித்வா க்ருதாஞ்சலி: ।
ப்ராசீனாக்ரேஷு தர்பேஷு தர்மேணாந்வேஷதே கதிம் ॥

என்ற ச்லோகத்தால் வெளியாகும் பொருளோ :—

வால்மீகி மஹர்ஷியானவர் நாரத மஹர்ஷியினால் தனக்கு உபதேசிக்கப்பட்டு, பிறகு ப்ரம்மாவினால் த்ருடம் செய்து வைக்கப்பட்ட ஸ்ரீராமனாகிய தாரக ப்ரம்மத்தின் தத்வத்தை ப்ரத்யக்ஷமாக கண்டுபிடித்துப் பார்க்க, சாஸ்த்ரப்ரகாரம் ஆசமனம் செய்துவிட்டு, கிழக்கு நுனியாக பூமியில் தர்பைகளைப் பரத்திக்கொண்டு, வீராஸனத்தில் அமர்ந்து தனது குருவான நாரத மஹர்ஷியையும் சுத்தமான மனதோடு த்யானம் செய்துகொண்டு, ப்ரம்மாவினுடைய வரப்ரஸாதம் என்ற பலத்தால் ஸ்ரீராமன் பூலோகத்தில் அவதரித்து செய்த வ்ருத்தாந்தங்கள் முழுமையையும் ஸமாதி சக்ஷுஸ்ஸால் ப்ரத்யக்ஷமாகப் பார்த்தார். ஸ்ரீராமன் ஸீதையோடு அயோத்யா ராஜ்யத்தில் இருக்கும் காலத்தில் செய்த ஸகல வ்ருத்தாந்தங்களையும், அரண்யத்தில் லக்ஷ்மணன், ஸீதை இவர்களுடன்கூட இருந்துகொண்டு அனுஷ்டித்து வந்த தர்ம ரஹஸ்யங்களையும் த்யானயோகத்தில் இருந்துகொண்டு கையில் உள்ள நெல்லிக்கனியைப்போல் ப்ரத்யக்ஷமாக அனுபவித்தார். தான் அனுபவித்த ப்ரகாரமாகவே, ஸ்ரீராமனுடைய சரித்ரத்தையும் வெளியிட்டார். வால்மீகி மஹர்ஷியால் வெளியிடப்பட்ட ஸ்ரீராமனுடைய சரித்ரமோ, மஹா ப்ரபாவத்தோடு கூடினது என்பதை வர்ணித்து முடியாது.

कामार्थगुणसंयुक्तं धर्मार्थगुणविस्तरं ।
समुद्रमिव रत्नाढ्यम् सर्वश्रुति मनोहरं ॥

𑌕𑌾𑌮𑌾𑌰𑍍𑌥𑌗𑍁𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌗𑍁𑌣𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌮𑍍 ।
𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌮𑌿𑌵 𑌰𑌤𑍍𑌨𑌾𑌢𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌶𑍍𑌰𑍁𑌤𑌿 𑌮𑌨𑍋𑌹𑌰𑌮𑍍 ॥

காமார்த்தகுணஸம்யுக்தம் தர்மார்த்தகுணவிஸ்தரம் ।
ஸமுத்ரமிவ ரத்நாட்யம் ஸர்வச்ருதி மனேஹரம் ॥

என்ற ச்லோகத்தை கவனித்தால் ராமாயணத்தின் பெருமையை அறியக்கூடும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு விதமான புருஷார்த்தங்களுக்குள், பொருள், இன்பம் என்ற இரண்டு புருஷார்த்தங்களேயும் அப்ரதானமாக வைத்துத்தான் இந்த ராமாயணத்தில் போதிக்கப்பட்டிருக்கிறது. அதனல் ச்ரேயஸ்ஸை விரும்புகிறவர்கள், பொருளேயும் இன்பத்தையும் வெறுக்க வேண்டும் என்பது விளங்குகிறது. இந்த விஷயத்தை, कामार्थगुणसंयुक्त (𑌕𑌾𑌮𑌾𑌰𑍍𑌥𑌗𑍁𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂) (காமார்த்தகுணஸம்யுக்தம்) என்ற பதத்தால், காமம் என்ற இன்பத்தையும், **அர்த்தம்** என்ற பொருளேயும், **குணம்** என்ற பதத்தோடு சேர்த்து ப்ரயோகம் செய்திருப்பதே, இந்த இரண்டு புருஷார்த்தமும் ஹேயமான புருஷார்த்தம் என்பதற்கு அத்தாக்ஷியாகும். **தர்மம்** என்ற அறத்தையும் மோக்ஷம் என்ற வீட்டையும் ப்ரதானமான புருஷார்த்தங்களாக, இந்த இரண்டுகளின் பெருமையை விஸ்தாரமாக சொல்லுகிறது.

ஸமுத்ரத்தைப்போல் ராமாயணம் இருந்துவருகிறது. ஸமுத்ரத்தில் ரத்னங்களும் இருக்கின்றன. **சுக்திகை** என்று சொல்லப்படும் கிளிஞ்சல்களும் இருக்கின்றன. ஆகிலும் “கிளிஞ்சல்களுக்கு இருப்பிடம் ஸமுத்ரம்” என்று சொல்லப்படுவதல்ல, “ரத்னகரம்” என்றுதான் சொல்லப்படுகிறது. ரத்னங்கள்தான் ஸமுத்ரத்தில் ப்ரதானமானது. கிளிஞ்சல்கள் ப்ரதானமல்ல, தள்ளப்படவேண்டிய வஸ்து என்பது ஏற்படுகிறது. அதைப்போல், ராமாயணமாகிய ஸமுத்ரத்திலும் **தர்மம் மோக்ஷம்** என்ற ரத்னங்களும் இருந்து

வருகின்றன. அர்த்தம், காமம் என்ற கிளிஞ்சல்களும் இருந்துவருகின்றன. "அர்த்தம்" "காமம்", என்ற கிளிஞ்சல்களை வெறுத்துவிட வேண்டுமென்பதைக் காட்டுவதற்காகவே, ஆங்காங்கு இந்த இரண்டுகளையும் பூர்வபக்ஷ ரீதியாகச் சொல்லியிருப்பதினால், இந்த இரண்டுகளும் ச்ரேயஸ்ஸை விரும்புகிறவர்களுக்கு உபாதேயம்தானோ (ஸ்வீகரிக்கத் தகுந்ததுதானோ) என்ற ப்ரமம் வேண்டாம். இந்த இரண்டையும் தள்ளத்தான் வேண்டும். தர்மமும் மோக்ஷமும் தான் முக்யமான உபாதேயமாகும். இது "ஸமுத்ர" த்ருஷ்டாந்த ஸ்வாரஸ்யத்தால் ப்ரகாசிக்கிறது.

அத்துடன் இந்த காவ்யமானது, கேட்கும் ஜனங்களுடைய காதுகளையும், மனதுகளையும் அபஹரிக்கும் சக்தி உள்ளது. சப்தத்தினுடைய மாதுர்யத்தால், ச்ரோத்ரேந்த்ரியத்தை ஆகர்ஷணம் செய்கிறது. அர்த்தத்தினுடைய ஸௌஷ்டவத்தால், மனதையும் ஆகர்ஷணம் செய்கிறது. இந்த தாத்பர்யம் सर्वश्रुतिमनोहरं (𑌸𑌰𑍍𑌵𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌮𑌨𑍋𑌹𑌰𑌂) (ஸர்வச்ருதி மனோஹரம்) என்ற விசேஷணத்தால் வெளியாகிறது. இதே விசேஷணத்தால் ஸமஸ்தமான உபநிஷத்துக்களுடைய தாத்பர்யத்தையும் இந்த ராமாயணம் ப்ரதிபாதிக்கின்றது என்றும் வெளியாகிறது.

सर्वासां श्रुतीनामुपनिषदां मनोहृदयं
तात्पर्यं हरति गृह्णाति प्रतिपादयतीति तथा ॥

𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑌾𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍀𑌨𑌾𑌮𑍁𑌪𑌨𑌿𑌷𑌦𑌾𑌂 𑌮𑌨𑍋𑌹𑍃𑌦𑌯𑌂
𑌤𑌾𑌤𑍍𑌪𑌰𑍍𑌯𑌂 𑌹𑌰𑌤𑌿 𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌯𑌤𑍀𑌤𑌿 𑌤𑌥𑌾 ॥

ஸர்வாஸாம் ச்ருதீநாமுபநிஷதாம் மனோஹ்ருதயம்
தாத்பர்யம் ஹரதி க்ருஹ்ணாதி ப்ரதிபாதயதீதி ததா ॥

என்ற "மஹேச்வரதீர்த்தீய" வ்யாக்யானத்திலுள்ள ஸமாஸத்தால் வேதாந்த தாத்பர்யத்தையே ராமாயண தாத்பர்யமாக கருதவேண்டுமென்று தெரிகிறது. இவ்வித மஹிமை

உள்ள ராமாயணத்தை நாரத மஹர்ஷி தனக்கு எவ்விதம் உபதேசித்தாரோ அவ்விதமே, குருபரம்பரா ப்ராப்தமான ஸம்ப்ரதாயத்திற்கு விரோதமில்லாமல், வால்மீகி மஹர்ஷி யானவர் இந்த ராமசரித்ரத்தை அவதாரம் முதல் உத்தரகாண்ட கதை முடிய ஒரு தத்வத்தைக்கூட மறைக்காமல் ப்ரகாசப்படுத்தி இந்த உத்தமமான காவ்யத்தை ரசனை செய்தார். இதனால், இந்த க்ரந்தத்தில் க்தாநாயகன் அனந்த கல்யாண குணங்களால் அலங்கரிக்கப்பட்டவராயும், லோகோத்தரனுயும் விளங்கிவரும் காரணத்தாலும், அவனுடைய மஹிமைகளை ஸமாதியில் ஞானசக்ஷுஸ்ஸால் தான் பார்க்கக்கூடியது என்று சொன்னதினுலேயும் இந்த க்ரந்தத்தில் ப்ரதிபாத்யவைலக்ஷண்யம் (விஷய வைலக்ஷண்யம், அதாவது சொல்லப்படும் பொருளின் மஹத்வம்) இருக்கிறபடியால், பக்தியுடன் மஹாஜனங்களால் ஆதரிக்கத் தகுந்ததாகவே ஆகிறது.

இது மூன்ருவது ஸர்கத்தின் கதாஸாரமாகும்.

நான்காவது ஸர்கம்.

ப்ரபந்த வைலக்ஷண்யம்

(க்ரந்தத்தின் மஹத்வம்)

பரம ஆப்தனுன மஹர்ஷிகளால் இயற்றப்பட்டதாயும், கேட்ட மாத்திரத்தில் கேட்கும் ஜனங்களுக்கு பெரிய புண்யத்தைக் கொடுக்கும் தத்வத்தை போதிக்கிறதாயும், மஹான்களான பண்டித சிரோமணிகளால் ரொம்பவும் ஆதரவோடு க்ரஹிக்கப்பட்டதாயும், கதாநாயகனுலேயே ச்லாகிக்கத் தகுந்ததாயும் உள்ள ப்ரபந்தமே, மேலான ப்ரபந்தமாகும். அதாவது,

परमाप्तप्रणीतत्वं पुण्यश्लोक विषयत्वं
महाजनपरिगृहीतत्वं प्रबन्धनायक श्लाघितत्वं

𑌪𑌰𑌮𑌾𑌪𑍍𑌤𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌤𑍍𑌵𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌶𑍍𑌲𑍋𑌕 𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌂
𑌮𑌹𑌾𑌜𑌨𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍀𑌤𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑌨𑌾𑌯𑌕 𑌶𑍍𑌲𑌾𑌘𑌿𑌤𑌤𑍍𑌵𑌂

பரமாப்த ப்ரணீதத்வம் புண்யச்லோக விஷயத்வம்
மஹாஜன பரிக்ருஹீதத்வம் ப்ரபந்தநாயக ச்லாகிதத்வம்

என்று நான்குவிதமாக ப்ரபந்த மஹத்வ லக்ஷணமானது சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நான்கு லக்ஷணங்களும் இந்த ராமாயணம் என்ற க்ரந்தத்தில் பொருத்தமாக இருப்பதினுல், இந்த க்ரந்தந்தான் மஹாப்ரபந்தம் என்று சொல்லப்படும். ஆகையால் பண்டித சிரோமணிகளுக்கு பக்தியுடன் ஆதரிக்கத்தகுந்த ப்ரபந்தம் இதற்கு ஸமானமாக வேருென்றும் இல்லை என்பதை விவரிக்கின்ருர்.

ஸ்ரீராமன் ராஜ்யபட்டாபிஷேகம் செய்துகொண்டு நீதியுடன் ராஜ்ய பரிபாலனம் செய்துவரும் காலத்தில் வால்மீகி மஹர்ஷியானவர் இந்த ராமாயணத்தை இருபத்திநாலாயிரம் ச்லோகங்களால் அலங்கரித்து பூலோகத்தில் ப்ரசாரம் செய்தார். இந்த ராமாயணம் தர்மம் மோக்ஷம் என்ற இரண்டு

புருஷார்த்தங்களையும் விவரிக்கின்றது என்று முன் சொல்லப்பட்டபடியால், தர்ம தத்வத்தை போதிக்கிற பாகத்தை பூர்வ பாகமாகவும், மோக்ஷதத்வத்தை போதிக்கிற பாகத்தை உத்தரபாகமாகவும் வைத்து பூர்வபாகத்திற்கு ஆறு காண்டங்களாகவும், உத்தரபாகத்திற்கு ஒரு காண்டமாகவும், மொத்தம் ஏழு காண்டங்களாக விபாகம் செய்தார்.

सर्गप्रबन्धः महाकाव्यं

𑌸𑌰𑍍𑌗𑌪𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑌃 𑌮𑌹𑌾𑌕𑌾𑌵𑍍𑌯𑌂

ஸர்க்கப்ரபந்த: மஹாகாவ்யம்

என்ற வசனத்தை அனுஸரித்து மஹா காவ்யமாகிய இந்த ராமாயணத்தை ஐன்னூறு ஸர்கங்களாகப் பிரித்து தத்வத்தை விளக்கினர். இவ்விதம் வால்மீகி மஹர்ஷி செய்தாரென்றதினுல் **परमाप्तप्रणीतत्त्वं** (𑌪𑌰𑌮𑌾𑌪𑍍𑌤𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂) (பரமாப்த ப்ரணீ தத்வம்) என்ற பிரபந்த லக்ஷணமானது விவரிக்கப்பட்டது.

இவ்விதம் மஹா காவ்யத்தை ரசனை செய்துவிட்டு இந்த ரஹஸ்யமான தத்வத்தை எந்த சிஷ்யன் க்ரஹித்துக் கொண்டு லோகத்தில் ப்ரசாரப்படுத்துவான்? இந்த சாஸ்திரத்தை க்ரஹிப்பதற்கு மஹா புத்திமானுயும், ஊஹா போக சக்திஉள்ளவனுயும் (இதை க்ரஹித்துக்கொள்ள வேண்டும், இதைத் தள்ளிவிட வேண்டுமென்ற புத்தி உள்ளவனுயும்) இருக்கும் நல்ல சிஷ்யன் கிடைக்கவேண்டும் என்ற ஆலோசனையுடன் இருந்து வந்தார். இவ்விதம் ஆலோசித்துக்கொண்டிருக்கும்பொழுது, தனது ஆச்ரமத்திலேயே தன்னுடைய சிஷ்யர்களாக விளங்கிவந்த குசன், லவன் என்ற இரண்டு ப்ரம்மசாரிகளும், வால்மீகி மஹர்ஷியாகிய தனது குருவை விதிவத்தாக நமஸ்கரித்து அஞ்சலிபந்தத்துடன் நின்றுகொண்டு, வால்மீகி மஹர்ஷியால் இயற்றப்பட்ட தாரக ப்ரம்ம தத்வத்தை போதிக்கும் ஸ்ரீமத் ராமாயணத்தை, தங்களுக்கு உபதேசிக்க வேண்டுமாக ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார்கள். மஹர்ஷியும் ஸந்தோஷத்துடன் அந்த இரண்டு சிஷ்யர்களையும் க்ரஹித்துக்கொண்டு,

"இவ்விருவர்களும் நான்கு வேதங்களிலும் மிகப் பயிற்சி அடைந்தவர்கள்; இவர்கள்தான் நாம் செய்த ஸ்ரீமத் ராமாயணத்தை படித்து தாரணை செய்து, அதிஸூக்ஷ்மமான அர்த்தத்தையும் அறிகிற விஷயத்தில் சக்தி உள்ளவர்கள்" என்று தீர்மானித்து வேதத்தின் உபப்ரம்மணரூபமான இந்த ராமாயணத்தை இரு சிஷ்யர்களுக்கும் உபதேசித்தார்.

இவ்விதம் குசலவர்களுக்கு தான் செய்த ராமாயணத்தை காவ்யம் என்ற பெயரால் உபதேசித்தார். **ப்ரபு ஸம்மிதை, ஸுஹ்ருத்ஸம்மிதை, காந்தா ஸம்மிதை,** என்று மூன்று ப்ரகாரமாக சாஸ்த்ரத்தில் மரியாதை ஏற்பட்டது. அதில் சப்தத்தை ப்ரதானமாக வைத்துக்கொண்டு க்ரஹிக்கவேண்டிய சாஸ்த்ரமான வேதமானது ப்ரபு ஸம்மிதை என்று சொல்லப்படும். சப்தம் குறைச்சலாயும், அர்த்தம் அதிகமாயும் உள்ள சாஸ்த்ரமானது ஸுஹ்ருத் ஸம்மிதை என்று சொல்லப்படும். அதுதான் இதிஹாஸமாகும். வாச்யார்த்தம் ரொம்பவும் குறைந்து வ்யங்க்யார்த்தமே ப்ரதானமாக விளங்கிவரும் சாஸ்த்ரம் காவ்யம் என்று சொல்லப்படும். அதற்கு காந்தா ஸம்மிதை என்றும் பெயர் உண்டு. இந்த ராமாயணமோ உத்தம காவ்யமாகும். ஒவ்வொரு பதத்திலும், ஒவ்வொரு வாக்யத்திலும், ஒவ்வொரு ச்லோகத்திலும், ஒவ்வொரு ஸர்கத்திலும், வ்யங்க்யார்த்தமானது வாச்யார்த்தத்தை அதிக்ரமித்து பாஸிக்கிறபடியால் இந்த ராமாயணத்திற்கு உத்தம காவ்யமென்ற பெயர் ஏற்பட்டது.

அத்துடன், இந்த க்ரந்தத்திற்கு **ராமாயணம்** என்று ஓர் பெயரும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

काव्यालापांश्च वर्जयेत्

காவ்யாலாபாம்ஶ்ச வர்ஜயேத்

காவ்யாலாபாம்ச்ச வர்ஜயேத்

என்ற நிஷேத சாஸ்த்ரத்தால், மோக்ஷத்தை விரும்பும் மஹர்ஷிகள் காவ்யத்தில் ஆதரவை வைக்கக்கூடாது. இந்த

ராமாயணமும் காவ்யமானதினால், மஹர்ஷிகள் இதை எவ் விதம் ஆதரிக்கமுடியும் என்ற சங்கையை மேற்சொன்ன ராமாயணம் என்ற பெயரானது நிவர்த்தி செய்கிறது. அதாவது, रमयतीति रामः (ரமயதீதி ராமஃ) (ரமயதீதி ராம:) என்ற ஸமாஸத்தால், ஸகல ஜனங்களையும் ஆனந்திக்கச் செய்கிறவன்; रमयतां वरः (ரமயதாம் வரஃ) (ரமயதாம் வர:) என்ற ஸமாஸத்தால் ஸகல ஜனங்களையும் ஆனந்திக்கச் செய்கிறவர்களுக்குள் ச்ரேஷ்டன்; रमन्ते अस्मिन् सर्वे जनाः (ரமந்தே அஸ்மிந் ஸர்வே ஜநாஃ) (ரமந்தே அஸ்மிந் ஸர்வே ஜநா:) என்ற ஸமாஸத்தால், ஸகல ஜனங்களும் எவனிடத்தில் ரமிக்கிறார்களோ, என்று அர்த்தங்கள் விளங்குகிறது. அதனால் एषह्येव आनन्दयाति (ஏஷஹ்யேவ ஆநந்தயாதி) (ஏஷஹ்யேவ ஆனந்தயாதி) என்ற ச்ருதியை அனுஸரித்து ஸகல ப்ராணிகளுக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கும் பரப்ரம்மமே ராமன் என்று அர்த்தம் வெளியாகிறது. அந்த ராமனும் अय्यते प्रतिपाद्यते (அய்யதே ப்ரதிபாத்யதே) (அய்யதே ப்ரதிபாத்யதே) என்ற ஸமாஸத்தால் எந்த க்ரந்தத்தால் சொல்லப்படுவானோ, அந்த க்ரந்தத்திற்கு ராமாயணம் என்று பெயர் ஏற்பட்டது. அதனால் ஸகல கல்யாண குணங்களால் அலங்கரிக்கப்பட்ட ராமப்ரம்மத்தை இந்த காவ்யத்தில் ப்ரதிபாதனம் செய்கிறபடியால், இந்த காவ்யமானது काव्यालापांश्च वर्जयेत् (காவ்யாலாபாம்ஶ்ச வர்ஜயேத்) (காவ்யாலாபாம்ச்ச வர்ஜயேத்) என்ற நிஷித்த சாஸ்த்ரத்திற்கு விஷயமாக ஆகாது. முமுக்ஷுக்களான ஸஜ்ஜனங்களுக்கு உபாதேயமாகத்தான் ஆகும்.

उपश्लोक्यस्य माहात्म्यादुज्ज्वलाः काव्यसंपदः

உபஶ்லோக்யஸ்ய மாஹாத்ம்யாதுஜ்ஜ்வலாஃ காவ்யஸம்பதஃ

உபச்லோக்யஸ்ய மாஹாத்ம்யா துஜ்வலா: காவ்யஸம்பத:

என்ற சாஸ்த்ரத்தால், சொல்லப்படுகிற பொருளின் மஹத்வத்தை அவலம்பித்து காவ்யங்களுக்கு பெருமை ஏற்படுகிறதென்று தெரிகிறபடியாலும்,

काव्यं आश्रयसंपत्या मेरुणेवामरद्रुमः

𑌕𑌾𑌵𑍍𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌸𑌂𑌪𑌤𑍍𑌯𑌾 𑌮𑍇𑌰𑍁𑌣𑍇𑌵𑌾𑌮𑌰𑌦𑍍𑌰𑍁𑌮𑌃

காவ்ய மாச்ரய ஸம்பத்யா மேருணேவாமரத்ரும:

என்ற சாஸ்த்ரத்தால், மஹா மேருபர்வதம் என்ற ஆச்ரயத்தால் தேவ வ்ருக்ஷங்களுக்கு கௌரவம் ஏற்பட்டது போல், கதாநாயகனுடைய பெருமையினுல், காவ்யங்களுக்கும் பெருமை உண்டு என்று தெரிகிறபடியாலும், ராமாயணம் மற்ற காவ்யங்களைப்போலல்ல. இது உத்தம காவ்யமாகும். ச்ரேயஸ்ஸை விரும்பும் ஜனங்களுக்கு ஆதரிக்கத் தகுந்தது. இந்த க்ரந்தத்தில் ராமனுடைய சரித்ரம் சொல்லப்பட்டாலும், ராமசரித்ரம் ப்ரதானமல்ல. இதற்கு காந்தா ஸம்மிதை என்றும் ஒரு பெயர் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதனுல் ஸீதையின் சரித்ரந்தான் இந்த க்ரந்தத்தில் ப்ரதானமாகச் சொல்லப்படும். அதை कृत्स्नंसीतायाश्चरितं (𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂𑌸𑍀𑌤𑌾𑌯𑌾𑌶𑍍𑌚𑌰𑌿𑌤𑌂) (க்ருத்ஸ்நம்ஸீதாயாச்சரிதம்) என்ற பதத்தால் வால்மீகி மஹர்ஷியானவர், நான்காவது ஸர்கத்திலுள்ள ஏழாவது ச்லோகத்தின்மூலம் வெளிப் படுத்தி இருக்கிறுர். மேலும்,

प्रातर्द्यूतप्रसङ्गेन मध्यान्हे स्त्रीप्रसङ्गतः ।
रात्रौ चोरप्रसङ्गेन कालोगच्छति धीमतां ॥

𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑍍𑌦𑍍𑌯𑍂𑌤𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑍍𑌹𑍇 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌤𑌃 ।
𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌚𑍋𑌰𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 𑌕𑌾𑌲𑍋𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌧𑍀𑌮𑌤𑌾𑌂 ॥

ப்ராதர்த்யூதப்ரஸங்கேந மத்யாந்ஹே ஸ்த்ரீப்ரஸங்கத: ।
ராத்ரௌ சோரப்ரஸங்கேந காலோகச்சதி தீமதாம் ॥

என்ற சாஸ்த்ரத்தால், காலை வேளையில் சொக்கட்டான் ஆடுவது என்பதை நிமித்தமாக வைத்து ஏற்பட்ட மஹா பாரத பாராயணத்தாலும், மத்யானத்தில் ஸீதாதேவியை நிமித்தமாக வைத்து ஏற்பட்ட ராமாயண பாராயணத்

தாலும், ராத்ரியில் கோபிகளின் க்ரஹத்தில் தயிர் வெண்ணெ இதுகளைத் திருடின க்ருஷ்ணனுடைய சரித்ரத்தைச் சொல்லுகிற பாகவத பாராயணத்தாலும், புண்ய புருஷர்கள் காலத்தை நயனம் செய்கிறார்கள் என்று தெரிகிறது. இந்த சாஸ்த்ரத்தை அனுஸரித்து ராமாயணத்திற்கு "ஸ்த்ரீ ப்ர ஸங்கம்" என்று பெயர் ஏற்பட்டிருக்கிறபடியால் இந்த ப்ரமாண வசனத்தாலும் ராமாயணத்தில் ஸீதையின் சரித் ரந்தான் ப்ரதானமாகச் சொல்லப்படுகிறதென்று தெரிகிறது.

ஸகல கார்யத்திற்கும் உபாயம், புருஷகாரம் இவ்விரண் டும் அந்தரங்க ஸாதனங்களாகும். உபாயமென்றால் புருஷன் என்றும், புருஷகாரமென்றால் சக்தி என்றும் ஏற்படுகிறது. மஹாபாரதமும் இதிஹாஸம்தான்; ஸ்ரீமத் ராமாயணமும் இதிஹாஸம்தான். இந்த இரண்டும் அர்த்தப்ரதானமான ஸம்ஹிதைகளாக ஆகும். மஹாபாரதத்திலோ, புமானுடைய ரூபமான உபாய ஸ்வரூபம் சொல்லப்பட்டது. அதாவது, திவ்ய புருஷர்களுக்கு ப்ராதான்யத்தைக் கொடுத்தே மஹா பாரதம் முடிவடைகிறது. ராமாயணத்திலோ, ஸ்த்ரீ ரூப மான புருஷகார ஸ்வரூபம் சொல்லப்பட்டிருக்கிறது. ஸீதை என்ற மஹாபதிவ்ரதையான ஸ்த்ரீக்கு ப்ராதான்யம் கொடுத்தே, ராமாயண கதை முடிவடைகிறது. ஸீதைக்கு ப்ராதான்யம் கொடுத்து அந்த தேவியின் சரித்ரத்தை வர் ணிப்பதற்கு, ராமன் உபாய ஸ்வரூபமானதால் (ஸீதை யின் பர்த்தாவானதினால்) ராமனுடைய சரித்ரத்தையும் அதற்கு அங்கமாகச் சொல்லவேண்டியிருப்பதினால், ராம னுடைய சரித்ரமும் ப்ரதிபாதனம் செய்யப்பட்டிருக்கிறது. அங்ஙியில், ராமனுடைய சரித்ரத்தைச் சொல்லுவதற்காகவே இச்சரித்ரம் ஏற்பட்டதல்ல. இந்த ஸர்கத்திலேயே, கடைசியில், குசலவாள் மூலமாக ஸ்ரீராமனே இந்த ராமா யண கதையை ச்ரவணம் செய்தார் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அவருடைய சரித்ரமே இதில் ப்ரதான மானால் அவரே எவ்விதம் கேட்கமுடியும்? தன் கதை

யையே கேட்கும் ராமன் ஆத்ம ப்ரசம்ஸையில் திருப்தி உள்ளவன் என்று வெளியாகும். அப்படியானால், அவர் மஹாபுருஷர் என்று சொல்லமுடியாது. ஸ்ரீராமன் இக் கதையைக் கேட்டதினாலேயே, அவருடைய சரித்ரம் ராமா யணத்தில் ப்ரதானமில்லை என்பதும் ஸீதையின் சரித்ரம் தான் ப்ரதானமாக இருக்கிறதென்பதும் வெளியாகிறது.

அத்துடன், இந்த ராமாயணத்திற்கு **பௌலஸ்த்ய வதம்** என்று ஒரு பெயர் உள்ளது. புலஸ்த்யர் என்ற மஹர்ஷி யினுடைய வம்சத்தில் ராவணன் பிறந்திருப்பதினால், **பௌலஸ்த்ய:** என்பதினால் ராவணனென்ற அர்த்தத்தை அறியவும். ராவணனுடைய வதத்தை முன்னிட்டு, இந்த ராமாயணம் ஏற்பட்டதினால், ராமாயணத்திற்கு **பௌலஸ்த்யவதம்** என்றும் மஹர்ஷி நாமகரணம் செய் திருக்கிறார். ராமாயணம் ஏற்பட்டதற்கே முக்யமான பலம் ராவணவதமல்லவா? அதனால், அந்த சப்தத்தினாலேயே இந்த சாஸ்த்ரத்திற்கு பெயர் ஏற்பட்டது.

காவ்யங்களில் முக்யமாக ஐந்து தத்வங்கள் சொல் லப்பட வேண்டும்.

बीजबिन्दु पताकाख्याः प्रकरीकार्यमित्यपि

ஸீஜஸிநு பதாகாவ்யாஃ ப்ரகரீகாயஂமிதுவி

பீஜபிந்து பதாகாக்யா: ப்ரகரீகார்யமித்யபி

என்று ஐந்து அவஸ்தைகள் காவ்யங்களுக்கு முக்யமாக ஏற்பட்டன. அதில் कार्य (காயஂ) (கார்யம்) என்றால் பலம் என்று சொல்லப்படும். ப்ரக்ருத ராமாயணத்தில், ராவண வதம் மஹாபலமாகும். அந்த பலத்திற்குக் காரணம் எதுவோ, அது பீஜம் என்று சொல்லப்படும். அந்த பீஜமோ, ராம னுக விஷ்ணு அவதாரம் செய்ததும், ஸீதையை பரிணயம் செய்துகொண்டதுமே. இது பாலகாண்டத்தின் ஸாரமா கும். இதனால் பீஜம் என்ற அவஸ்தையும் இக்காவ்யத்தில் பாலகாண்டத்தில் காட்டப்பட்டது.

वस्तुनःसतिविच्छेदे बिन्दुः अच्छेदकारणं

𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌃 𑌸𑌤𑌿𑌵𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑍇 𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌰𑌚𑍍𑌛𑍇𑌦𑌕𑌾𑌰𑌣𑌂

வஸ்துநஸ்ஸதி விச்சேதே பிந்து ரச்சேதகாரணம்

என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து, ப்ரக்ருதமான கார்யத்திற்கு விக்னம் ஏற்பட்டால் அந்த விக்னத்தை நிவ்ருத்தி செய்துகொண்டு, ப்ருக்ருதகார்யத்தை ஸாதித்துக் கொடுக்கக்கூடிய உபாயமானது, **பிந்து** என்ற இரண்டாவது அவஸ்தையாகச் சொல்லப்படும். ப்ரக்ருதத்தில், **ராவணவத** ரூபமான கார்யத்திற்கு, விக்னமாக தசரத சக்ரவர்த்தி எற்பாடு செய்த **பட்டாபிஷேகம்** ஏற்பட்டது. அதை நிவர்த்தி செய்து ப்ரக்ருத கார்யத்திற்கு ஸாதகமாக கைகேயி தேவி ஸங்கல்பம் செய்த **ராமனுடைய வனவாஸமென்ற** உபாயமும் ஏற்பட்டிருக்கிறது. இக்கதைதான் அயோத்யா காண்டத்தில் சொல்லப்படுகிறது. அதனுல் **பிந்து** என்ற அவஸ்தா விசேஷமும் ராமாயணம் என்ற காவ்யத்தில் அடங்கியிருக்கிறது என்பது தெரிகிறது.

பதாகா என்பது மூன்ருவது அவஸ்தையாகும்.

यदन्तरानुवृत्तंस्यात् सापताकेति कीर्त्यते

𑌯𑌦𑌨𑍍𑌤𑌰𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌂𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌾𑌪𑌤𑌾𑌕𑍇𑌤𑌿 𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑍇

யதந்தரானுவ்ருத்தம்ஸ்யாத் ஸாபதாகேதி கீர்த்யதே

என்றதினுல், ஒரு கதையை சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது, ப்ரக்ருத கதைக்கு அனுகுணமாகவே, மற்ருெரு கதையைச் சொல்லும்படி நேர்ந்தால், அது **பதாகை** என்ற அவஸ்தையாகும். ராமகதையைச் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது ராவணன் ஸீதையை அபஹரித்துச் சென்ற பிறகு, ஸுக்ரீவனுடைய வ்ருத்தாந்தம் சொல்லும்படி நேர்ந்ததாலும், அது ப்ரக்ருத கதைக்கு அனுகுணமாக ஆனதினுலும், **பதாகை** என்ற அவஸ்தையும்

ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம் முதலானதுகளால் சொல்லப்பட்டது.

ப்ரகரி என்ற நான்காவது அவஸ்தையும் ராமாயணத்தில் அடங்கி உள்ளது. ஒரு கதையை உதாஹரணமாக வைத்துக்கொண்டு, மற்றொரு கதையை வர்ணிக்கும்படி நேரிடுகிறதை, ப்ரகரி என்று சொல்லப்படும். தன்னை சரணமடைந்த ஸுக்ரீவனுக்கு ஸ்ரீராமன், அவனுடைய தமயனான வாலியைக் கொன்று, கிஷ்கிந்தையில் ராஜ்யாபிஷேகம் செய்துவைத்து, அவனை ரக்ஷித்தார் என்ற சரித்ரத்தை விபீஷணஸ்வாமி கேட்டு, தானும் அவ்விதமான க்ஷேமத்தை அடையலாம் என்ற எண்ணத்துடன், விபீஷணஸ்வாமி ஸ்ரீராமனை சரணாகதி அடைந்த வ்ருத்தாந்தத்தைச் சொல்வதே **ப்ரகரி** என்ற அவஸ்தையாகும். அதுவும் ராமாயணத்தில் அடங்கி இருக்கிறது.

கார்யம் என்றால் பலமாகும். ராமாயணத்தில் ராவணவதம் தான் மஹாபலமாகும். ராவணவதத்தை முன்னிட்டு, ராமாவதாரம் ஏற்பட்டதினால், அதை ப்ரதானமாகக் கருதி "பௌலஸ்த்யவதம்" என்றும் மஹர்ஷி ராமாயணத்திற்கு நாமகரணம் செய்தார்.

இதனால் ராவணவதத்தை வ்யாஜமாக வைத்துக் கொண்டு ராமசரித்ரத்தை அப்ரதானமாகவும், ஸீதையினுடைய சரித்ரம் ப்ரதானமாகவும் சொல்லப்பட்டிருக்கும் க்ரந்தமே ராமாயணமாகும்.

रामाया इदं चरितं रामं, तस्य अयनं रामायणं

𑌰𑌾𑌮𑌾𑌯𑌾 𑌇𑌦𑌂 𑌚𑌰𑌿𑌤𑌂 𑌰𑌾𑌮𑌂, 𑌤𑌸𑍍𑌯 𑌅𑌯𑌨𑌂 𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌂

ராமாயா இதம் சரிதம் ராமம், தஸ்ய அயநம் ராமாயணம்

என்ற ஸமாஸத்தால் रामा (𑌰𑌾𑌮𑌾) (ராமா) என்ற சப்தத்தால் லக்ஷ்மீதேவியும், रामं (𑌰𑌾𑌮𑌂) (ராமம்) என்ற சப்தத்தால் அந்த தேவியினுடைய சரித்ரமும், अयनं (𑌅𑌯𑌨𑌂) (அயநம்)

என்ற பதத்தால், அந்த சரித்ரத்திற்கு இருப்பிடம் என்றும் அர்த்தம் கிடைக்கிறபடியால், ஸீதாதேவியினுடைய சரித்ரம்தான் இந்த க்ரந்தத்தில் முக்யமாகச் சொல்லப்படுகிறது. ராமனுடைய சரித்ரம் அதற்கு அங்கமாகத்தான் ஆகும்.

இந்த காவ்யத்திற்கு "மஹத்" என்று மற்ருெரு விசேஷணமும் ஏற்பட்டிருக்கிறது. மஹாவிஷ்ணுவினுடைய கதையை அபேக்ஷித்து, லக்ஷ்மீதேவியினுடைய கதை ரொம்பவும் மேலானது என்ற தாத்பர்யத்தை "மஹத்" சப்தமானது வெளிப்படுத்துகிறது. பெரிய அபராதம் செய்த ஜனங்களையும் ரக்ஷிக்க வேண்டுமென்ற ஸ்பாவமுள்ளவள் லக்ஷ்மீ தேவி ஆகுவாள். விஷ்ணுவாகிய ராமனுடைய குணம் அவ்விதமல்ல; அபராதம் செய்த ஜனங்கள் சரணுகதி செய்து மன்னிப்புக் கேட்டுக்கொண்ட பிறகுதான் அவர்களை ரக்ஷிக்கும் ஸ்வபாவமுள்ளவர். அக்காரணத்தாலும், இந்த ப்ரபந்தத்திற்கு ராமசரித்ரமென்று பெயரிடுவதைக் காட்டிலும், ஸீதையினுடைய சரித்ரமென்று பெயரிடுவது பொருத்தமானதென்று மஹர்ஷி நினைத்து,

काव्यं रामायणं कृत्स्नं सीतायाश्चरितं महत्

𑌕𑌾𑌵𑍍𑌯𑌂 𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌸𑍀𑌤𑌾𑌯𑌾𑌶𑍍𑌚𑌰𑌿𑌤𑌂 𑌮𑌹𑌤𑍍

காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாச்சரிதம் மஹத்

என்று மஹர்ஷி சொன்ஞர். இந்த விஷயத்தில் மஹா வித்வான்களும் அதை ஸம்மதிக்கிருர்கள்.

ஒரு வித்வான் ஸீதையைப் பார்த்து சொல்வதாவது :—

मातर्मैथिलि राक्षसीस्त्वयि तदैवार्द्रापराधास्त्वया
रक्षन्त्यापवनात्मजात् लघुतरा रामस्य गोष्ठीकृता ।
काकन्तञ्च विभीषणं शरणमित्युक्तिक्षमौ रक्षतः
सानस्सान्द्र महागसः सुखयतुक्षान्ति स्तवाकस्मिकी ॥ इति

𑌮𑌾𑌤𑌰𑍍𑌮𑍈𑌥𑌿𑌲𑌿 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌿𑌤𑌦𑍈𑌵𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌾𑌪𑌰𑌾𑌧𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾
𑌰𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑌵𑌨𑌾𑌤𑍍𑌮𑌜𑌾𑌲𑍍𑌲𑌘𑍁𑌤𑌰𑌾 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌗𑍋𑌷𑍍𑌠𑍀𑌕𑍃𑌤𑌾 ।
𑌕𑌾𑌕𑌨𑍍𑌤𑌞𑍍𑌚 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌂 𑌶𑌰𑌣𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌕𑍍𑌷𑌮𑍌 𑌰𑌕𑍍𑌷𑌤𑌃
𑌸𑌾𑌨𑌸𑍍𑌸𑌾𑌨𑍍𑌦𑍍𑌰 𑌮𑌹𑌾𑌗𑌸𑌸𑍍𑌸𑍁𑌖𑌯𑌤𑍁 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑌵𑌾𑌕𑌸𑍍𑌮𑌿𑌕𑍀 ॥

மாதர்மைதிலி ராக்ஷஸீஸ்த்வயிததைவார்த்ராபராதா ஸ்த்வயா
ரக்ஷந்த்யா பவநாத்மஜால்லகுதரா ராமஸ்ய கோஷ்டீக்ருதா ।
காகந்தஞ்ச விபீஷணம் சரணமித்யுக்திக்ஷமௌரக்ஷத:
ஸாநஸ்ஸாந்த்ர மஹாகஸஸ்ஸுகயது க்ஷாந்திஸ்தவாகஸ்மிகீ ॥

மிதிலா தேசத்திற்கு அதிபதியான ஜனக மஹாராஜாவிற்கு புத்ரி என்ற வ்யாஜத்தால் அவதரித்த ஹே பரதேவதே, நீ பூலோகத்தில் பாதிவ்ரத்யம் என்ற தர்மத்தை ரொம்பவும் வீம்போடு அனுஷ்டித்துக் காட்டினாய். ஆகிலும், ஒரு அம்சத்தில் மாத்திரம் உன்னுடைய ஸ்வபாவம் மேலாகவும், ராமனுடைய ஸ்வபாவம் கீழாகவும் ஆகிவிட்டது. ராமனே அபராதம் செய்தவனையும் ரக்ஷிக்கும் ஸ்வபாவமுள்ளவர்தான். ஆனால், அவர் சரணாகதி அடைந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்வதை எதிர்பார்க்கிறார். நீயோ அவ்விதமல்ல. பெரிய அபராதம் செய்தவர்களையும் அவர்கள் சரணாகதி அடைந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்வதை எதிர்பார்க்காமலேயே ரக்ஷிக்கும் ஸ்வபாவமுள்ளவள். ராவணவதத்திற்குப் பிறகு லங்கையில் அசோகவனத்தில் ஆஞ்சனேய ஸ்வாமியானவர் ராவணவதம் ஆன விஷயத்தை, ராமனுடைய ஆக்ஞையை அனுஸரித்து உன்னிடம் தெரிவித்தார். நீ அதைக் கேட்டு பரமஸந்தோஷத்துடன் ஆஞ்சனேய ஸ்வாமிக்கு, அவரால்தான் இக்கார்யம் நடைபெற்றதென்று நினைத்து "ப்ரீதி" தானம் செய்ய தீர்மானித்து, ஆஞ்சனேயரை உனக்கு என்னவேண்டுமென்று கேட்டாய். ஆஞ்சனேயரோ, 'தாயே உன்னை நான் தேடுவதற்கு ஆரம்பித்ததுமுதல் ஜலபானங்கூட செய்யவில்லை. பசி ரொம்பவும் என்னை பாதிக்கின்றது. முன்பு உன்னை நான் பார்க்கவந்த காலத்தில், எதிரில் தென்படும் ராக்ஷஸ ஸ்த்ரீகள் உன்னை ஹிம்ஸித்ததைப் பார்த்து, ஸஹிக்கமுடியா

மல் அந்த காலத்தில் நாம் என்ன செய்யமுடியுமென்று நினைத்து பேசாமலிருந்துவிட்டேன். இப்பொழுதோ, ராவண வதம் ஆகிவிட்டது. அதற்கு நான் ஒரு நிமித்தம் என்று எண்ணி எனக்கு வரம் கொடுப்பதானால், உன்னிடத்தில் மஹாபராதத்தைச் செய்த இந்த ராக்ஷஸ ஸ்த்ரீகளை பக்ஷணம் செய்து அதன்மூலம் என் பசியை நிவர்த்தி செய்து கொள்ளும்படி உத்திரவளிக்கவேண்டும். இல்லாவிடில், இந்த ராக்ஷஸ ஸ்த்ரீகளாவது உன் காலில் விழுந்து, தாங்கள் செய்தது பிசகு என்று, தங்களை மன்னிக்க ப்ரார்த்தித்துக் கொள்ளட்டும்; இதுவேதான் நீ கொடுக்கும் வரமாகும்' என்றார். ஸீதையோ அதற்குப் பதிலாக,

पापानांवा शुभानांवा वधार्हाणां प्लवङ्गम ।
कार्यं करुणं आर्येण नकश्चित् नापराध्यति ॥

𑌪𑌾𑌪𑌾𑌨𑌾𑌂𑌵𑌾 𑌶𑍁𑌭𑌾𑌨𑌾𑌂𑌵𑌾 𑌵𑌧𑌾𑌰𑍍𑌹𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌲𑌵𑌙𑍍𑌗𑌮 ।
𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑍁𑌣𑌂 𑌆𑌰𑍍𑌯𑍇𑌣 𑌨𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌨𑌾𑌪𑌰𑌾𑌧𑍍𑌯𑌤𑌿 ॥

பாபாநாம்வா சுபாநாம்வா வதார்ஹாணாம் ப்லவங்கம ।
கார்யம் கருணம் ஆர்யேண நகச்சித் நாபராத்யதி ॥

என்ற ச்லோகத்தால், "ஆஞ்சனேயரே, உம்மை நான் பெரிய தபஸ்வியாக நினைத்தேன், ஜாதி ஸ்வபாவம் போகவில்லை. யார்தான் லோகத்தில் தோஷமில்லாதவர்கள்? உத்தம புருஷனானால் தோஷம், குணம் என்பதை எதிர்பார்க்காமல் எல்லா ஜனங்களையும் கருணையுடன் ரக்ஷிக்கவேண்டும். இதுதான் பரம தர்மமாகும். இந்த ராக்ஷஸ ஸ்த்ரீகள் என்னை எவ்விதம் ஹிம்ஸித்தாலும் அதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்ளாவிட்டாலும், அவர்களை ரக்ஷிப்பதே எனது ஸ்வபாவம். சரணாகதி செய்துவிட்டால், நாம் என்ன ரக்ஷிப்பது? அந்த சரணாகதி என்ற புண்ய விசேஷமே அவர்களை ரக்ஷிக்கிறது. நாம் ரக்ஷித்தோம் என்று எப்படிச் சொல்ல முடியும்" என்று ஆஞ்சனேய ஸ்வாமிக்கு ஸீதா தேவியானவள் பதில் சொன்னாள். ராமனோ, காகாஸுரன்,

விபீஷணன் முதலானவர்கள், சரணுகதி செய்த பிறகுதான் அவர்களுக்கு அபய ப்ரதானம் செய்தார். ராமனுடைய கருணையைக் காட்டிலும் ஸீதையின் கருணை மேலானது என்பது மேற்சொன்ன கதையால் வெளியாகவில்லையா? பொருமையிலும் ஸீதைதான் மேலானவள். அது ந்யாயமே. தகப்பனிடம் பிள்ளைகள் தாங்கள் செய்த குற்றத்தை மன்னிப்புக் கேட்டுக்கொள்ளாவிட்டால் தகப்பன் பிள்ளைகளிடம் ப்ரேமையை வைக்கமாட்டான். தாயோ, பிள்ளைகள் என்ன செய்தாலும், மன்னிப்புக் கேட்டுக்கொள்வதை அபேக்ஷிக்காமலேயே பிள்ளைகளை அபிமானத்துடன் ரக்ஷிக்கும் ஸ்வபாவமுள்ளவள். ராமனே விஷ்ணுவானதினுல் லோகத்திற்குப் பிதாவாக ஆகிருர். ஸீதையோ, லக்ஷ்மியானதினுல் லோகத்திற்குத் தாயாராகிருள். அதனுல் ராமனுடைய பொருமையைக் காட்டிலும், ஸீதைக்குப் பொருமை அதிகம் என்பது பொருத்தமானது. இந்த அம்சத்தில் ராமனுடைய பெருமையை, ஸீதாதேவி தன் பெருமையினுல் கொஞ்சம் குறைத்தவளாகத்தான் ஆகிருள். இந்த தத்வத்தைத்தான் அனுஸந்தானம் செய்துகொண்டு மேற்காட்டிய "மாதர்மைதிலி" என்ற ச்லோகத்தால் ஒரு வித்வான் ஸீதையை ஸ்தோத்ரம் செய்கிருர். ஸர்வக்ஞனை வால்மீகி மஹர்ஷியும் இந்த உண்மையை உணர்ந்தவரானதினுல் ஸீதாதேவிக்கு ராமனைக்காட்டிலும், அதிகமான பெருமையைக் கொடுக்கவேண்டுமெனக் கருதித் தான் செய்த ராமாயணத்தில் முக்யமாக ஸீதையினுடைய வ்ருத்தாந்தம் தான் போதிக்கப்படுகிறதென்பதை ஸூசிப்பிக்கக் கூடிய

कृत्सनं सीतायाश्चरितं महत्

க்ருத்ஸ்நம் ஸீதாயாஶ்சரிதம் மஹத்

க்ருத்ஸ்நம் ஸீதாயாச்சரிதம் மஹத்

என்ற வாக்யத்தை எழுதினுர்.

இவ்வித மஹிமை உள்ள ஸ்ரீமத் ராமாயணம் என்ற மஹா காவ்யத்தை படனம் செய்தாலும், கானம் செய்தா

லும் ரொம்பவும் மாதுர்யத்தை கொடுக்கக்கூடியதாக ரசனை செய்தார். ரத்னாகரத்தில் சொல்லியபடி द्रुतं, मध्यमं, विलंबं (𑌦𑍍𑌰𑍁𑌤𑌂 𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌵𑌿𑌲𑌮𑍍𑌬𑌂) (க்ருதம், மத்யமம், விளம்பம்) என்று பெயருள்ள கான காலத்தில் த்வனியை விசேஷமாகப் பிரித்துக் காட்டும் மார்க்கங்களாலும், ஷட்ஜம், நிஷாதம், தைவதம், பஞ்சமம், மத்யமம், காந்தாரம், ரிஷபம், என்ற ஏழுவித மான ஸ்வரபேதங்களாலும் அலங்கரித்து, ச்ருங்காரம், கருணை, ஹாஸ்யம், வீரம், பயாநகம், ரௌத்ரம், பீபத்ஸம், அத்புதம், சாந்தம் முதலான நவரஸங்களையும் தனது ப்ரபந்தத்தில் கர்பமாக அடக்கி, தனது சிஷ்யர்களான குச லவானை கானம் செய் யும்படி உத்திரவளித்தார். இந்த ராமாயண க்ரந்தத்தி லேயே, ஆங்காங்கு கதாஸந்தர்ப்பத்தை அனுஸரித்து ரஸங் கள் பிரிக்கப்பட்டு பெருகிவருகின்றன. ஸம்போகம், விப்ர லம்பம் என்று ச்ருங்காரரஸம் இருவகைப்படும். ஸீதாகல் யாணம் முதல் ஸீதாபஹாரம்வரை, ஸம்போகம் என்ற ச்ருங் கார ரஸமும், அதற்குப் பிறகு உள்ள க்ரந்தங்களால் விப்ர லம்பம் என்ற ச்ருங்கார ரஸமும் பெருகி வருகின்றன. சூர்பனகையினுடைய வ்ருத்தாந்த ஸந்தர்ப்பத்தில் ஹாஸ்ய ரஸமும், தசரத சக்ரவர்த்தியினுடைய மரண வ்ருத்தாந் தத்தில் கருணா ரஸமும், லக்ஷ்மணனுடைய கோபாவேச காலத்தில் வீர ரஸமும், ராவணனுடைய வ்ருத்தாந்தத்தில் ரௌத்ர ரஸமும், மாரீசனுடைய வ்ருத்தாந்தத்தில் பயாநகம் என்ற ரஸமும், கபந்தன், விராதன் இவர்களுடைய வ்ருத் தாந்தத்தில் பீபத்ஸம் என்ற ரஸமும், ராவணனோடு ஸ்ரீராமன் யுத்தம் செய்யும் காலத்தில் அத்புத ரஸமும், சபரியினுடைய வ்ருத்தாந்த காலத்தில் சாந்தம் என்ற ரஸமும் ஆங்காங்கு க்ரமமாக வித்வான்களால் கண்டுபிடிக்கக் கூடியதாக விளங்கி வருகின்றன.

சிலர், ராமாயணத்தில் शोकः श्लोकत्वमागतः (𑌶𑍋𑌕𑌃 𑌶𑍍𑌲𑍋𑌕𑌤𑍍𑌵𑌮𑌾𑌗𑌤𑌃) (சோக: ச்லோகத்வமாகத:) என்ற ப்ரமாண வாக்யத்தை அனுஸரித்து சோக ரஸம்தான் ப்ரதானமென்

றும் மற்ற ரஸங்கள் அங்கங்கள் என்றும் சொல்லுகிறார்கள். சிலரோ, பௌலஸ்த்யவதம் என்று இக்ரந்தத்திற்கு நாம கரணம் செய்த காரணத்தால் வீர ரஸம் ப்ரதானமென்றும் மற்ற ரஸங்கள் அங்கங்கள் என்றும் சொல்லுகிறார்கள். வேறு சிலரோ, ஸீதாயாச்சரிதம் மஹத் என்ற ப்ரமாண வாக்யத்தை அனுஸரித்து, ச்ருங்கார ரஸம்தான் ப்ரதானம் என்றும் மற்ற ரஸங்கள் அங்கங்கள் என்றும் சொல்லுகிறார்கள். வித்வான்களுடைய புத்தி சக்தியை அனுஸரித்து ஒவ்வொரு ரஸமும் இந்த க்ரந்தத்தில் ப்ரதானமாக விளங்கிவருகிறது.

ரஸபூரிதமான இந்த க்ரந்தத்தை குச லவாள் வால்மீகி மஹர்ஷியின் உத்தரவை அனுஸரித்து கான சாஸ்த்ரத்திற்கு விரோதமில்லாதிருக்கும்படி ஆங்காங்கு கானம் செய்தார்கள். இருவர்களும் அழகில் நிகரற்றவர்கள்; ராமனுடைய பிம்பத்தினின்றும் எடுக்கப்பட்ட பிம்பங்கள்போல் விளங்கிவந்தார்கள். அநேக ப்ராம்மணர்களுடைய ஸமாஜத்திலும் ப்ரம்ம நிஷ்டாளுடைய ஸமாஜத்திலும் குருமுகமாகத் தங்களுக்கு ஏற்பட்ட உபதேசத்தை அனுஸரித்து அழகாக கானம் செய்தார்கள். ஒரு ஸந்தர்பத்தில் அளவிடமுடியாத மஹர்ஷிகளின் கூட்டத்தில் ஸ்ரீமத் ராமாயணத்தை வீணையுடன் இவ்விருவர்களும் கானம் செய்யும்பொழுது மஹர்ஷிகள் பரம ஸந்தோஷத்தை அடைந்து இக்குழந்தைகளுக்கு ஆசீர்வாதம் செய்து கானத்தின் மாதுர்யத்தை மிகவும் மெச்சிப் பேசினார்கள். சில மஹர்ஷிகள் இந்த இருகுமாரர்களுக்கும் ஸந்தோஷத்தால் கமண்டலுவை ஸன்மானமாகக் கொடுத்தார்கள். சில மஹர்ஷிகள் மரையுருவியையும், சிலர்கள் க்ருஷ்ணாஜினத்தையும், சிலர் விஞ்சிக்கயிற்றையும், சிலர் யக்ஞோபவீதத்தையும், சிலர் தீர்க்கமான ஆயுளையும் கொடுத்து ஆசீர்வதித்தார்கள். இவ்விதம் ரிஷிகளுடைய ஸமாஜத்தில் ஸன்மானங்களைப்பெற்று இரண்டு குமாரர்களும் ஆங்காங்கு ஸ்ரீராமகதையை வீணையுடன் கானம் செய்துகொண்டு ஸஞ்சாரம் செய்துகொண்டிருக்கும் ஸமயத்தில், யத்ருச்சையாக அயோத்யா நகரம் சென்று,

தனது குருவான வால்மீகி மஹார்ஷிக்கும், தாயாரான ஸீதாதேவிக்கும், ஸம்ரக்ஷணத்தைச் செய்வதற்காக தனத்தில் ஆகாங்க்ஷை உள்ளவர்கள்போல், ராஜவீதியில் ஒவ்வொரு க்ருஹத்தின் வாசலில் நின்றுகொண்டு, அழகாக ஸ்ரீராம சரித்ரத்தை கானம் செய்துகொண்டுவந்தார்கள்.

இவ்விதமிருக்கும்பொழுது, ராஜ மார்க்கத்தில் பரத ஸ்வாமியினுடைய த்ருஷ்டிக்கு, இவ்விருவர்களும் கோசரமாக ஆனார்கள். பரதனும், இக்குழந்தைகளுடைய கான மாதுர்யத்தைக் கேட்டுப் பரம ஸந்தோஷத்தை அடைந்து, வெகு வேகமாக ஸ்ரீராமனிடம் சென்று இந்த வ்ருத்தாந்தத்தைச் சொன்னார். "ப்ரபோ! இரண்டு குழந்தைகள்; ஸமான வயதுள்ளவர்கள்; கானவித்தையில் ரொம்பவும் ஸமர்த்தர்கள் என்று தெரிகிறது. ராமாயண ப்ரபந்தத்தை, வீணையுடன் கானம் செய்துகொண்டு, ராஜவீதியில் ஸஞ்சரிக்கிறார்கள். தாங்களும் அவச்யம் அவர்களை வரவழைத்து, அந்த இரண்டு குமாரர்களுடைய புத்தி சாதுர்யத்தை அனுபவித்து தாங்கள் வெகுமானம் செய்யவேண்டும். தாங்கள் தர்மமாக ராஜ்ய பரிபாலனம் செய்துகொண்டுவரும் ஸமயத்தில் கவிதையில் மஹாபண்டிதர்களான இந்த இரண்டு குமாரர்களும் ஒவ்வொரு க்ருஹத்தின் வாசலில் நின்றுகொண்டு, பிச்சை எடுப்பது நமக்கழகல்ல" என்று பரதர் ஸ்ரீராமனிடம் சொன்னார். இதைக்கேட்ட ஸ்ரீராமன் பரபரப்புடன் அந்த இரண்டு வித்வான்களையும் தன் ராஜ ஸபைக்கு அழைத்து வரும்படி பரதனுக்குக் கட்டளையிட்டார். பரதனும் வெகு வேகமாகச் சென்று, இரண்டு குமார்ர்களையும் ரதத்தில் ஏற்றிக்கொண்டு, ஸ்ரீராமனுடைய ஸமீபத்தில் கொண்டுவந்து சேர்த்தார்.

ராமனும், அவ்விருவர்களையும் விதிவத்தாக வரவேற்று, ஸ்ரீமத் ராமாயணம் என்ற மஹாப்ரபந்தத்தை கானம் செய்கிற காரணத்தால் ஸர்வ ஜனங்களையும் பரிசுத்தர்களாகச் செய்துவைக்கும் புண்யவான்கள் என்று நினைத்து,

அர்க்ய பாத்யாதி உபசாரங்களால் பூஜித்து நவரத்னமான பீடத்தில் அவ்விருவர்களையும் அமரச் செய்து தானும் மஹா ஸபையில் ராஜஸிம்ஹாஸனத்தில் அமர்ந்தார். உடன் ஸுமந்த்ரர் முதலான மந்த்ரிவர்கங்கள், வஸிஷ்டர் முதலான குரு வர்கங்கள், நகரத்திலுள்ள விசிஷ்டமான மஹா புருஷர்கள் எல்லோரையும் வரவழைத்து, மரியாதை செய்து லக்ஷ்மணன், பரதன் இவர்களிடம் "குச லவாள் இருவர்களும் தேவதுல்யாளாக விளங்கி வருகிறார்கள்; ஸ்ரீமத் ராமாயணம் என்ற ப்ரபந்தத்தை வீணையுடன் கானம் செய்ய ஆரம்பம் செய்யலாம்" என்று கட்டளையிட்டார். லக்ஷ்மணன், பரதன் இவர்கள் மூலம் ராமாக்ஞையை குசலவாள் தெரிந்துகொண்டு, மிக அழகாக, வீணையினுடைய ஸ்வரத்தை அனுஸரித்து ஸபையிலுள்ள ஸர்வ ஜனங்களுடைய மனதையும் ஆரம்பகாலத்திலேயே ஸந்தோஷப்படுத்துகிறவர்களாய்க்கொண்டு கானம் செய்தார்கள்.

கானத்தின் ஆரம்பத்திலேயே, மஹா ஜனங்களிடத்தில் ஸ்ரீராமசந்த்ரமூர்த்தி தனது அபிப்ராயத்தை வெளிப்படுத்தினார். அதாவது:—

इमौमुनी पार्थिवलक्षणान्वितौ कुशीलवौचैव महातपस्विनौ ।
ममापि तद्भूतिकरं प्रवक्ष्यते महानुभावं चरितं निबोधत ॥

இமௌமுநீ பார்திவலக்ஷணாந்விதௌ குசீலவௌ சைவ மஹாதபஸ்விநௌ ।
மமாபி தத்பூதிகரம் ப்ரவக்ஷ்யதே மஹாநுபாவம் சரிதம் நிபோதத ॥

இமௌமுநீ பார்த்திவலக்ஷணான்விதௌ குசீலவௌசைவ மஹாதபஸ்விநௌ ।
மமாபி தத்பூதிகரம் ப்ரவக்ஷ்யதே மஹாநுபாவம் சரிதம் நிபோதத ॥

"ஹே மஹா ஜனங்களே, ரொம்பவும் இனிமையாக, ஸ்ரீமத் ராமாயணம் என்ற ப்ரபந்தத்தை, வீணையோடு கானம் செய்யும் இக்குமாரர்களை, நீங்களும் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள், ரிஷிகுமாரர்கள் என்று நிச்சயம் பண்ண

லாம். ஆகிலும், எனக்கு ரிஷிகுமாரர்களாகத் தோன்ற வில்லை. ஸாமுத்ரிகா சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட ராஜலக்ஷணங்கள் இந்த இருகுமாரர்களிடத்திலும் பூர்ணமாக விளங்கி வருகின்றன. இவர்கள் தற்காலத்திலோ, கானகுசலாளாக (பாடகர்களாக) விளங்கி வருகிறார்கள். ஆகிலும் இவர்களுடைய தபோ மஹிமை எல்லோருடைய மனதையும் ஆகர்ஷணம் செய்கிறதென்று நான் நினைக்கிறேன். காயகர்கள் த்பஸ்விகளாக இருக்கமுடியாது. மஹா தபஸ்விகளும் காயகர்களாக வரமாட்டார்கள். தவிரவும், ராஜகுமாரர்களிடம் மஹர்ஷிகளின் லக்ஷணங்களைக் காணமுடியாது. ரிஷிகளிடமும் ராஜலக்ஷணங்களைக் காணமுடியாது. ரிஷிகளுக்கு ரிஷி, அரசனுக்கு அரசன், பாடகர்களுக்கு பாடகன், தபஸ்விகளுக்கு தபஸ்வி, இவ்வித அத்புதமான வைபவங்களை இக்குமாரர்களிடம் காண்கிறோம். இவர்களுடைய தர்சனம் இந்த ஸபையில் ஏற்பட்டதற்கு, ஸபையோர்களுடைய பெரும் தவமே காரணமாகும். இவர்கள் தற்காலத்தில் கானம் செய்யும் சரித்ரமோ ராமாயணமாகும். அது ஸீதையின் சரித்ரத்தை ப்ரதானமாகச் சொல்வதற்கு ஏற்பட்டது. நானோ, ஸீதையை விட்டுப்பிரிந்து துக்கத்தை அனுபவிக்கும் ஸ்திதியில் இருந்துவருகிறேன். அதனால் எனக்கும் அக்கதையை ச்ரவணம் செய்தால் கொஞ்ச காலம் ஜீவன் நிலைத்து நிற்குமென்று எனது தாத்பர்யம். அதனால் எனக்கும் ஒரு பெருமையை உண்டுபண்ணக் கூடியது இச்சரித்ரம். அத்துடன் இச்சரித்ரமானது மிகவும் மேன்மை தங்கியது. இவ்விருவர்களும் இச்சரித்ரத்தை கானம்செய்யப் போகிறார்கள். நீங்கள் ரொம்பவும் ச்ரத்தையுடன் கேட்கவேண்டும்" என்று ஸபையோர்களிடம் ராமன் தெரிவித்தார்.

இந்த சரித்ரமானது ஸீதையின் சரித்ரமென்று முன்பு சொல்லப்பட்டது. இப்பொழுது ராமனே இச்சரித்ரத்தை ச்லாகிப்பதாலும், மஹா பதிவ்ரதா சிரோமணியான ஸீதையின் சரித்ரம்தான் என்பது வெளியாகிறது. தனது சரித்ர

மானுல் தனக்கு ச்ரேயஸ்ஸைக் கொடுக்கும் என்று ராமன் சொல்ல ந்யாயமில்லை. அத்துடன் இச்சரித்ரம் மிக மேன்மை தங்கியது என்றும் சொல்லக்கூடாது. அப்படியானுல் தன்னையே தான் புகழ்ந்துகொண்டார் என்ற ஆத்மச்லாகனை செய்துகொண்டதாக ஆகும். அது மஹானுபாவனுன ராமனுக்கு அழகல்ல. லோகத்தில் அல்பமனுஷ்யன்கூட தன்னை ஒருவன் ச்லாகித்தால் லஜ்ஜையை அடைகிருன். அவ்விதமிருக்க ராமனு தன்னை ச்லாகித்துக் கொள்பவர்! அவ்விதம் ப்ரவ்ருத்திக்கவே மாட்டார். ஆகையால், ராமாயணம் ஸீதையினுடைய சரித்ரம்தான். ராமனுலும் ஆதரவுடன் கேட்கத்தகுந்ததே. ஸ்த்ரீயை விட்டுப் பிரிந்த புருஷன் தனது காந்தையான ஸ்த்ரீயின் கதையை கேட்க விருப்பமுள்ளவனுக இருப்பான். அவனிடம், அந்யர்களும் அவன் ஸ்த்ரீயின் கதையைச் சொல்லுவார்கள். அதுபோல் "ஸீதையைவிட்டுப் பிரிந்திருக்கும் எனக்கு உயிரைக் கொடுக்கக் கூடிய சரித்ரம் இதுவே" என்ற தாத்பர்யத்துடன் ममापितद्भूतिकरं (𑌮𑌮𑌾𑌪𑌿𑌤𑌦𑍍𑌭𑍂𑌤𑌿𑌕𑌰𑌂) (மமாபிதத்பூதிகரம்) என்று ராமன் சொன்னுர்.

अप्रमेयंहि तत्तेजो यस्यसा जनकात्मजा

𑌅𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌂𑌹𑌿 𑌤𑌤𑍍𑌤𑍇𑌜𑍋 𑌯𑌸𑍍𑌯𑌸𑌾 𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾

அப்ரமேயம்ஹி தத்தேஜோ யஸ்யஸா ஜநகாத்மஜா

என்று சொல்லப்பட்ட ரீதியை அனுஸரித்து ஜனக மஹாராஜாவினுடைய புத்ரியான ஸீதா தேவி எந்த ராமனுடைய தர்மபத்னியாக ஆகிருளோ, அந்த ராமனுடைய மஹிமையானது அளவிடமுடியாதது என்று தெரிகிறபடியால், "எனக்கும் ஸீதையினுடைய சரித்ரம் மேன்மையைக்கொடுக்கும்" என்ற அபிப்ராயத்துடன் மமாபி **தத்பூதிகரம்** என்று ராமன் சொன்னுர். **மஹானுபாவம்** என்றும் ராமனே இச்சரித்ரத்தை வர்ணித்திருக்கிருர். "ப்ராண ரக்ஷகியான ஸீதை இல்லாத ஸமயத்திலும் இச்சரித்திரம் என் ப்ரா

ணை தரிக்கச் செய்யும்'' என்ற எண்ணத்தால், அப் பதத்தை ராமன் உபயோகித்தார்.

மேலும், தன் விஷயத்தில் அளவுகடந்து அபராதத் தைச் செய்த ராக்ஷஸிகளை ரக்ஷித்த ஸீதையினுடைய சரித்ர மானதினுலும், தன் வைபவத்தைக் காட்டிலும் ஸீதையின் மஹிமை மேலானது என்பதை போதிக்கும் சரித்ரம் இதுவே என்ற எண்ணத்தாலும், மஹானுபாவம் என்ற பதத்தை உபயோகித்தார்.

मित्रभावेन संप्राप्तं नत्यजेयं कथंचन ।
दोषोयद्यपि तस्यस्यात् सतां एतत् अगर्हितं ॥

𑌮𑌿𑌤𑍍𑌰𑌭𑌾𑌵𑍇𑌨 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌨𑌤𑍍𑌯𑌜𑍇𑌯𑌂 𑌕𑌥𑌂𑌚𑌨 ।
𑌦𑍋𑌷𑍋𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌤𑌸𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌤𑌾𑌂 𑌏𑌤𑌤𑍍 𑌅𑌗𑌰𑍍𑌹𑌿𑌤𑌂 ॥

மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சந ।
தோஷோயத்யபி தஸ்யஸ்யாத் ஸதாம் எதத் அகர்ஹிதம் ॥

என்றதினல் "அபராதம் செய்தவனும் ஸ்நேஹ பாவத் துடன் என்னிடம் வந்தால் சேர்த்துக்கொள்வேன் என்று நான் சொன்னேன். அதனல் தோஷமுள்ளவர்கள், தோஷ மில்லாதவர்கள் என்ற விபாகம் எனக்குப் புலப்படுகிறது. ஸீதையோ,

नकश्चिन्नापराध्यति (𑌨𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌾𑌪𑌰𑌾𑌧𑍍𑌯𑌤𑌿) (நகச்சின்னாபராத்யதி) என்று சொன்னுள். தோஷமில்லாதவர்கள் ஒருவரும் இல்லை என்று அவளுடைய தாத்பர்யம். தோஷமில்லாதவர்களா ஞல் எல்லோரும் தோஷமில்லாதவர்களே, தோஷமுள்ள வர்களாஞல் எல்லோரும் தோஷமுள்ளவர்களே! இவ்வித மல்லவா ஸீதையின் உள் எண்ணம். இந்த ஸமத்வ புத்தி யின் மஹிமையை யாரால் வர்ணிக்கமுடியும்? விஷமபுத்தி யோடு கூடிய எனக்கு ஸமத்வபுத்தியை போதிக்கின்ற ஸீதையின் சரித்ரமானது மஹானுபாவம் என்பதில் யாருக்கும்

ஆக்ஷேபணை இரா்தென்று நான் நினைக்கின்றேன். அத்துடன் தேவஸ்த்ரீகள், கந்தர்வ ஸ்த்ரீகள் முதலிய அளவற்ற ஸ்த்ரீகளை ராவணன் பலாத்காரமாக அபஹரித்து லங்கா நகரத்தில் சிறையில் அடைத்து கஷ்டப்படுத்திவந்த விஷயம் யாராலும் அறியக்கூடியதே. அந்த ஸ்த்ரீகளுக்கு அந்த கஷ்டம் நிவர்த்தியாக வேண்டுமானால், நாமும் நமது காலில் விலங்கை மாட்டிக்கொண்டு லங்கா நகரத்தில் சிறையில் அடைபட்டதுபோல் கஷ்டப்பட்டு வந்தால் ராவணன் நசித்து ஸ்த்ரீகளுக்கு ஸௌபாக்யம் ஏற்படும் என்ற எண்ணத்துடன், லோகத்தில் பதிவ்ரதா ஸ்த்ரீகளை ரக்ஷிக்கும் விஷயத்தில், ஸீதை அனுபவித்த கஷ்டம்போல் நான் அனுபவித்தேனா? இதை அறிந்துதான் வால்மீகி மஹர்ஷி இச்சரித்ரத்திற்கு, **ஸீதையின் சரித்ர**மென்று நாமகரணம் செய்தார். ஆகையால் இச்சரித்ரம் மஹானுபாவமே.

அத்துடன், பிதா புத்ரனை எவ்வளவு வாத்ஸல்யத்துடன் ரக்ஷிப்பானோ, அதற்குமேல் என்னிடத்தில் ஸீதைக்கு அபிமானம் ஏற்பட்டு, நான் ஏதாவது கோபமடைந்த ஸமயத்திலும் என்னை அருமையான வார்த்தைகளால் பொருமையை உண்டுபண்ணி ஸமாதானம் செய்யும் வழக்கமுண்டு. நான் பொருமையைக் கைகொள்ளவேண்டுமென்று எண்ணினாலும், சில ஸந்தர்ப்பங்களில் என்னையும் அறியாது கோபமும் வந்துவிடும். கோபம் அதிகரிக்காமல் என்னை ஸமாதானப்படுத்தி பொருமையை உண்டுபண்ணுகிற ப்ரமயந்து ஸீதை ஒருவள்தான். நான் ஸீதைக்குக் கோபத்தை உண்டுபண்ண வேண்டுமென்று எவ்வித கடோரமான வார்த்தைகளைச் சொன்னாலும், அவைகளைப் பொருட்படுத்தாமலே மந்தஹாஸத்துடன் பொருமையாகவே இருந்துவருவாள். எனது பொருமையைக் காட்டிலும் ஸீதையின் பொருமை மிகவும் மேலானதே. அக்காரணத்தாலும் ஸீதையின் சரித்ரமென்று ராமாயணத்திற்கு வால்மீகி மஹர்ஷி பெயரிட்டது பொருத்தமானது. இச்சரித்ரம் மஹானுபாவம் என்று நான் சொன்னதும் பொருத்தமே.

ஆகையால் இந்த உத்தமமான சரித்ரத்தை தேவதுல்யாளான, இந்த இரண்டு குமாரர்கள்மூலம் கேட்கும்படியான பாக்யம் நமக்கு நேர்ந்ததைப்பற்றி நான் ரொம்பவும் ஸந்தோஷிக்கின்றேன். ஸாவதானமான மனதோடு எல்லோரும் கேட்டு ஆனந்திக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டு குசலவாளையும் "ஆரம்பம் செய்யலாம்" என்று உத்தரவளித்து ஸிம்ஹாஸனத்தில் ஸ்ரீராமன் அமர்ந்தார்.

ततस्तु तौ रामवचः प्रचोदितावगायतां मार्गविदानसंपदा ।
स चापि रामः परिषद्गतश्शनैर्बुभूषयासक्तमनाबभूवह ॥

ததஸ்து தௌ ராமவசஃ ப்ரசோதிதாவகாயதாம் மார்கவிதாந
ஸம்பதா ।
ஸ சாபி ராமஃ பரிஷத்கதஶ்ஶனைர்புபூஷயாஸக்தமநா
பபூவஹ ॥

ததஸ்துதௌ ராமவச: ப்ரசோதிதா வகாயதாம் மார்கவிதாநஸம்பதா ।
ஸசாபிராம: பரிஷத்கதச்சனைர் புபூஷயாஸக்த மநாபபூவஹ ॥

இவ்விதம் ஸ்ரீராமசந்த்ரமூர்த்தியானவர் ச்ரோத்ரு ஜனங்களை ஸந்தோஷிக்கச் செய்த பிற்பாடு, ராமனுடைய வார்த்தைகளால் ஆக்ஞாபிக்கப்பட்ட, குசலவாள் என்ற இரு குமாரர்களும் தேசி, மார்கம் என்ற இரண்டுவிதமான கான ப்ரகாரங்களை அவலம்பித்து அதிலும், எப்பொழுதும் எங்கும் ப்ரஸித்தமான மார்கம் என்ற ப்ரகாரத்தால் வீணையுடன் ஸ்ரீமத் ராமாயண கதையை ஸபையில் அமர்ந்திருக்கும் மஹாஜனங்களுடைய மனதைக் கவரும்படி கானம் செய்தார்கள். அந்த ஸந்தர்ப்பத்தில், ராமனே பரமஸந்தோஷத்துடன், "மஹா ஜனங்கள் எல்லோரும், கீழான ஆஸனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள், நானே உன்னதமான ஆஸனத்தில் அமர்ந்திருக்கிறேன். இக்கதாம்ருதத்தை எல்லோரும் சேர்ந்து கூட்டத்தில் பானம் செய்ய வேண்டும்; உயர்ந்த ஆஸனத்தில் இருக்கும் நான், தனியாக பானம் செய்யவேண்டி இருக்கிறது.

एकस्स्वादुनभुञ्जीत (ஏகஸ்ஸ்வாது ந புஞ்ஜீத) (ஏகஸ்ஸ்வாதுநபுஞ்ஜீத) என்ற சாஸ்த்ரத்தால், தித்திப்பான (அபூர்வமான) பதார்த்தத்தைத் தனியாக புஜிக்கக்கூடாதென்று தெரிகிறபடியால், இக்கதாம்ருதத்திற்கு மேலான தித்திப்பான பதார்த்தம் வேறொன்றும் இல்லாததபடியால், உயர்ந்த ஆஸனத்தில் உட்கார்ந்துகொண்டு நாம் புஜிப்பது சாஸ்த்ர விருத்தம்" என்று நினைத்து ஸபையின் நடுவில் உட்காருவதற்காக ஸிம்ஹாஸனத்திலிருந்து மெள்ள மெள்ள இறங்கி ஸபையை அடைந்தார். ஸபையில் உள்ள ஜனங்களோ, கதையில் மனதை லயப்படுத்தி ஏகாக்ரமாக ச்ரவணம் செய்துவருகிறார்கள். ராமன், தான் வேகமாக இறங்கினால் கால் அடி ஓசையால் ரஸபங்கம் ஏற்பட்டுவிடுமோ என்று நினைத்து தான் இறங்கியது தெரியாமலே மெதுவாக ஸபையின் நடுவில் வந்துசேர்ந்தார். அப்படி வந்ததற்கு முக்ய காரணமோ, காயகர்களுடைய ஸமீபத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு, அந்த கானத்தை ச்ரவணம் செய்வதிலேயே ஏகாக்ரமாக ஆகி, காது, மனது இதுகளுக்கு ஆனந்தத்தை உண்டுபண்ண வேண்டுமென்ற இச்சைதான். அத்துடன், இக்கதையானது தன்னுடைய காந்தையின் கதையானதினால் அக்கதையைக் கேட்டு தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்வோமென்ற இச்சையும் காரணமாகும்.

இந்த ஸமயத்தில் வால்மீகி மஹர்ஷியோ, தனது சிஷ்யாளான குசலவாளால் கானம் செய்யப்பட்ட ராமாயணம் என்ற ப்ரபந்தத்தை ராமனே கேட்கவேண்டுமென்ற ஆசையுடன் பரம ஆதரவோடு அவ்விருவர்களையும் பூஜித்து, அச்வமேத மஹாமண்டபத்தில் மஹா ஸபையைக்கூட்டி, இருவர்களையும் கானம் செய்வதற்கு ஏற்பாடு செய்து, குசலவாளும் அவ்விதமே ஸ்ரீமத் ராமாயணம் என்ற ப்ரபந்தத்தை அழகாக கானம்செய்துவருகிறார்கள் என்பதை ஞானத்ருஷ்டியினால் அறிந்து பரமானந்தத்தை அனுபவித்துக்கொண்டு வருகிறார்.

இந்த ஸர்கத்தால், பரம ஆப்தனுன வால்மீகி மஹர்ஷியால் செய்யப்பட்டது. பரமபதிவ்ருதா சிரோமணியான ஸீதையினுடைய பெருமை சொல்லப்படுகிறது; குச லவாள் மூலம் மஹாதபஸ்விகளான மஹர்ஷிகளால் ஆதரவுடன் க்ரஹிக்கப் பட்டது; கதாநாயகனுன ராமனுலேயே மமாபி தத் பூதிகரம், மஹானுபாவம் என்று ச்லாகிக்கப்பட்டது என்று சொன்னதிலிருந்து ப்ரபந்த வைலக்ஷண்யமானது சொல்லப்பட்டது.

ஐந்தாவது ஸர்கம்.

பகவதவதார தேச வர்ணனம்.

श्रीविष्णोः प्रथमेकाण्डे जगज्जनन हेतुता ।
द्वितीये स्थितिहेतुत्वं तृतीये मोक्षदायिता ॥
चतुर्थे गुणसंपत्तिः पंचमे सर्वहन्तृता ।
षष्ठे वेदान्तवेद्यत्वं सप्तमे स्रष्टृहेतुता ॥
एवं विष्णुः परंतत्त्वं रामात्मेति सुनिश्चितं ।

𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 𑌜𑌗𑌜𑍍𑌜𑌨𑌨 𑌹𑍇𑌤𑍁𑌤𑌾 ।
𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌂 𑌤𑍃𑌤𑍀𑌯𑍇 𑌮𑍋𑌕𑍍𑌷𑌦𑌾𑌯𑌿𑌤𑌾 ॥
𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍇 𑌗𑍁𑌣𑌸𑌂𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 𑌪𑌞𑍍𑌚𑌮𑍇 𑌸𑌰𑍍𑌵𑌹𑌨𑍍𑌤𑍃𑌤𑌾 ।
𑌷𑌷𑍍𑌠𑍇 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑍇𑌦𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌸𑌪𑍍𑌤𑌮𑍇 𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌹𑍇𑌤𑍁𑌤𑌾 ॥
𑌏𑌵𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌪𑌰𑌂𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌰𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑌿 𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌮𑍍 ।

ஸ்ரீவிஷ்ணோ: ப்ரதமேகாண்டே ஜகஜ்ஜகந ஹேதுதா ।
த்விதீயே ஸ்திதிஹேதுத்வம் த்ருதீயே மோக்ஷதாயிதா ॥
சதுர்த்தே குணஸம்பத்தி: பஞ்சமே ஸர்வஹந்த்ருதா ।
ஷஷ்டே வேதாந்தவேத்யத்வம் ஸப்தமே ஸ்ரஷ்ட்ருஹேதுதா ॥
ஏவம் விஷ்ணு: பரந்தத்வம் ராமாத்மேதி ஸுநிச்சிதம் ।

என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து பாலகாண்டத்தில் ஜகத் காரணத்வமும், அயோத்யா காண்டத்தில் ஸம்ரக்ஷண கர்த்ருத்வமும், ஆரண்யகாண்டத்தில் மோக்ஷப்ரதத்வமும், கிஷ்கிந்தா காண்டத்தில் அனந்தகல்யாணகுணாலங்க்ருதத்வமும், ஸுந்தர காண்டத்தில் ஸர்வ ஸம்ஹரந்த்ருத்வம் என்ற அத்த்ருத்வமும், अत्तृत्वं (𑌅𑌤𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂) (அத்த்ருத்வம்) யுத்தகாண்டத்தில் வேதாந்த வேத்யத்வமும், உத்தர காண்டத்தில் ஸ்ரஷ்ட்ருஹேதுத்வமும் க்ரமமாக மேற்சொன்ன லக்ஷணங்கள் சொல்லப்படுகின்றன. இந்த லக்ஷணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ விஷ்ணுவே

இந்த ராமாயணம் என்ற ப்ரபந்தத்தின் கதாநாயகனான ஸ்ரீ ராமன் என்று அறிந்துகொள்ளவும். இவ்விதமான மஹிமை யுள்ள தாரகப்ரம்மமான ஸ்ரீராமனை எந்த உபாயத்தால் நாம் அடையலாமென்ற விருப்பமுள்ளவர்களுக்கு வால்மீகி மஹர்ஷியானவர் **சரணாகதியே** மேலான உபாயமாகுமென் பதை **ஸ்ரீமத்ராமாயணம்** என்ற ப்ரபந்தத்தில் வெளிப்படுத்தி யிருக்கிறார்.

योब्रह्माणं विदधातिपूर्वं योवैवेदांश्चप्रहिणोतितस्मै ।
तंह देवं आत्मबुद्धिप्रकाशं मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये ।

𑌯𑍋𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌵𑌿𑌦𑌧𑌾𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌯𑍋𑌵𑍈𑌵𑍇𑌦𑌾𑌂
𑌶𑍍𑌚𑌪𑍍𑌰𑌹𑌿𑌣𑍋𑌤𑌿𑌤𑌸𑍍𑌮𑍈 ।
𑌤𑌂𑌹 𑌦𑍇𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌿 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌵𑍈
𑌶𑌰𑌣𑌮𑌹𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

யோப்ரம்மாணம் விததாதிபூர்வம் யோவைவேதாம்சப்ரஹிணோதிதஸ்மை ।
தம்ஹ தேவமாத்மபுத்தி ப்ரகாசம் முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே ॥

என்ற ச்ருதியும் சரணாகதியைத்தான் பகவத் ப்ராப்தியில் அந்தரங்க உபாயமாகச் சொல்கின்றது. இந்த ச்ருதியினு டைய அர்த்தத்தை நிர்ணயம் பண்ணுவதற்காகவே **உபப்ரம் மணமாக** இந்த ராமாயணம் ஏற்பட்டது. இந்த க்ரந்தத்திலோ ஆரம்பம் முதல் முடிவு பெறுகிறவரையில் சரணாகதி மஹா மந்த்ரமானது விவரிக்கப்படுகின்றது. பால காண்டத்தில்,

एतस्मिन्नन्तरे विष्णुः उपयातोमहाद्युतिः

𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌨𑍍𑌤𑌰𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍁𑌪𑌯𑌾𑌤𑍋𑌮𑌹𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃

ஏதஸ்மிந்நந்தரே விஷ்ணு ருபயாதோ மஹாத்யுதி:

என்ற முதலான ச்லோகங்களால் ஸர்வேச்வரனான பக வான் தேவர்களால் ப்ரார்த்திக்கப்பட்டு ராவணனை வதம் செய்து தங்களை ரக்ஷிக்கவேண்டுமென்று அபேக்ஷித்ததை

அங்கீகரித்து பூமண்டலத்தில் தசரத சக்ரவர்த்தியினுடைய புத்ரகாமேஷ்டி யாக ஸமயத்தில் ஆவிர்ப்பவித்தார். அப்போது,

देवगन्धर्वयक्षाश्च ततस्त्वां शरणंगताः

𑌦𑍇𑌵𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌯𑌕𑍍𑌷𑌾𑌶𑍍𑌚 𑌤𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌶𑌰𑌣𑌂𑌗𑌤𑌾𑌃

தேவகந்தர்வயக்ஷாச்ச ததஸ்த்வாம் சரணம்கதா:

என்ற ச்லோகத்தால் ராவணவதத்தை எதிர்பார்க்கிற தேவர்கள் முதலானவர்கள் சரணாகதி பண்ணினார்கள் என்று சொல்லப்பட்டது.

பிறகு, த்ரிசங்கு மஹாராஜா, அம்பரீஷ மஹாராஜாவுக்கு பசுவாயிருந்த சுனச்சேபன், முதலானவர்களுடைய வ்ருத்தாந்தங்களில் விச்வாமித்ர மஹர்ஷியினுடைய சரித்ரத்தை சொல்லும்போது, சரணாகதி செய்தவர்களை ரக்ஷிப்பதே மேலான தர்மம் என்றும், கருணையுள்ளவனை சரணாகதி அடைந்தால் உடனே அது பலத்தைக் கொடுக்குமென்றும் சொல்லப்படுகிறது.

सभ्रातुश्चरणौगाढं निपीड्यरघुनन्दन ;
सीतामुवाचातियशाः राघवंच महाव्रतं

𑌸𑌭𑍍𑌰𑌾𑌤𑍁𑌶𑍍𑌚𑌰𑌣𑍌𑌗𑌾𑌢𑌂 𑌨𑌿𑌪𑍀𑌡𑍍𑌯 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨𑌃 ;
𑌸𑍀𑌤𑌾𑌮𑍁𑌵𑌾𑌚𑌾𑌤𑌿𑌯𑌶𑌾𑌃 𑌰𑌾𑌘𑌵𑌂𑌚 𑌮𑌹𑌾𑌵𑍍𑌰𑌤𑌂

ஸப்ராதுச்சரணௌகாடம் நிபீட்ய ரகுநந்தந: ;
ஸீதாமுவாசாதியசா: ராகவஞ்ச மஹாவ்ரதம்

என்ற ச்லோகங்களால் புருஷாகாரபூதையான ஸீதா தேவியை முன்னிட்டுக்கொண்டு ராம சரணாகதியானது செய்யத் தகுந்தது என்று லக்ஷ்மணனுடைய வ்ருத்தாந்தத்தாலேயும் சொல்லப்பட்டது.

பரதஸ்வாமியும் சித்ரகூட பர்வதத்தில் ராமனுடைய பர்ணசாலைக்கெதிரில் ப்ராயோபவேசம் செய்துகொண்டு சரணாகதி பண்ணினார். ராமனே, தேவகணங்கள் ராவ

ணனைக் கொல்வதற்காக பரதனுக்கு முன்பாகவே தன்னை சரணாகதி பண்ணினதால் தேவர்களுடைய சரணாகதிக்கு பலமான ராவணவதத்தைச் செய்துவிட்டு பரதனுடைய சரணாகதிக்கு பலமான ராஜ்யாபிஷேகத்தை பின்பு செய்து கொள்வோமென்ற எண்ணத்துடன் தனக்கு ப்ரதிநிதியாக பாதுகையை பரதனிடம் ஸமர்ப்பித்து சரணாகதியை ஸபலமாக செய்தார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால் பின்கதைகள் ஒவ்வொன்றிலும் சரணாகதியினுடைய மஹிமையே சொல்லப்பட்டிருக்கிறபடியால் ஸ்ரீமத் ராமாயணமென்ற க்ரந்தத்தில் சரணாகதி மஹாமந்த்ரமே முக்யமாக ப்ரதிபாதிக்கப்படுகின்றது. அந்த சரணாகதி மஹாமந்த்ரமோ,

॥ श्रीमन्नारायणचरणं शरणंप्रपद्ये ॥

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌚𑌰𑌣𑌂 𑌶𑌰𑌣𑌂𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

॥ ஸ்ரீமந்நாராயணசரணம் சரணம்ப்ரபத்யே ॥

பாலகாண்டத்தால் ஸ்ரீமத் சப்தார்த்தமும், அயோத்யா காண்டத்தால் நாராயண சப்தார்த்தமும், ஆரண்யகாண்டத்தால் (च) சரண சப்தார்த்தமும், கிஷ்கிந்தா ஸுந்தரகாண்டங்களால் (श) சரண சப்தார்த்தமும், யுத்தகாண்டத்தால் ப்ரபத்யே என்ற பதத்தின் அர்த்தமும், உத்தரகாண்டத்தால் சரணாகதியின் மஹாபலமான மோக்ஷமும் க்ரமமாக ராமாயண க்ரந்தத்தில் வர்ணிக்கப்படுகிறது. அத்துடன், இந்த ராமாயணம் எப்போதும் பாராயணம் பண்ணத்தகுந்தது. மஹாமந்த்ரரூபம் என்பதைக் காட்டுவதற்கு காயத்ரியினுடைய அர்த்தமும் க்ரமமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

பாலகாண்டத்தில், வேதப்ரஸித்தமான ஜகத்தினுடைய உத்பத்திக்கு ஹேதுவான பகவானுடைய ஸ்வரூபத்தை வர்ணித்திருக்கிறபடியால் காயத்ரீ மஹாமந்த்ரத்திலடங்கிய

सवितुः (ஸவிது:) (ஸவிது:) என்ற சப்தத்தின் அர்த்தமும்; அயோத்யா, கிஷ்கிந்தாகாண்டங்களில், பகவானுடைய கல் யாண குணங்களை வர்ணித்திருப்பதினால் वरेण्यं (வரேண்யம்) (வரேண்யம்) என்ற சப்தத்தின் அர்த்தமும்; ஆரண்யகாண்டத் தில், கரவத ஸந்தர்ப்பத்தில் தேஜோமயமாக பகவா னுடைய சரீரத்தை வர்ணித்திருப்பதால் भर्गः (பர்க:) (பர்க:) என்ற சப்தத்தின் அர்த்தமும்; ஸுந்தரகாண்டத்தில் ஆஞ்ச னேயஸ்வாமி ராமனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை வர்ணித்திருப்பதால் देवस्य (தேவஸ்ய) (தேவஸ்ய) என்ற சப் தத்தின் அர்த்தமும்; யுத்தகாண்டத்தில் धीमहि (தீமஹி) (தீமஹி) என்ற சப்தத்தின் அர்த்தமும்; உத்தரகாண்டத்தில் प्रचोदयात् (ப்ரசோதயாத்) (ப்ரசோதயாத்) என்ற சப்தத்தின் அர்த்தமும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. அந்தந்தகாண்டம் வெளிவரும்போது கதா ஸந்தர்ப்பத்தை அனுஸரித்து மேல்சொன்ன விஷயங்கள் விஸ்தரிக்கப்படும்.

இவ்வித மஹிமையுள்ள ஸ்ரீமத்ராமாயணத்திற்கு சென்ற மூன்று ஸர்கங்களை உபோத்காதமாகச் சொல்லி விட்டு வால்மீகிமஹர்ஷியானவர் கதாபாகத்தை ஆரம்பிக் கிறார். அதாவது:—

இக்ஷ்வாகு வம்சத்தில் இந்த ராமாயணம் என்ற ஆக்யானமானது (கதையானது) உண்டானது. இதை கேட்கும் ஜனங்கள் அஸூயை என்ற தோஷத்தை விட்டு விட்டு பரமபக்தியுடன் கேட்டுவந்தால் தர்மம், அர்த்தம், காமம், என்ற பலத்தை ச்ரவண மாத்திரத்தாலேயே அடையலாம்.

இந்த பூமண்டலத்தில் வடக்கு திக்கில் கோஸல தேச மென்று ஸரயூநதி தீரத்தில் ஒரு தேசம் ப்ரஸித்தமாக விளங்கிவருகிறது. அந்த தேசத்தில் ஸரயூ நதிக்கரை யில் அயோத்தி என்று ஒரு பெரிய ராஜதானியும் வைவஸ் வத மனுவினால் நிர்மாணம் செய்யப்பட்டு

விளங்கி வந்தது. அது ரொம்பவும் அழகான நகரம். அந்த நகரத்தை தசரதர் என்று பெயருள்ள அரசன் தர்ம விரோத மில்லாமல் பரிபாலனம் செய்துவந்தார். நகரங்களுக்கேற் பட்ட லக்ஷணங்கள் யாவற்றும் அந்த நகரத்தில் பூர்ணமாக விளங்கிவந்தன.

तामग्निमद्भिः गुणवद्भिरावृतां द्विजोत्तमैर्वेदषडङ्गपारगैः ।
सहस्रदैस्सत्यरतैर्महात्मभिः महर्षिकल्पैः ऋषिभिश्च केवलैः ॥

𑌤𑌾𑌮𑌗𑍍𑌨𑌿𑌮𑌦𑍍𑌭𑌿𑌃 𑌗𑍁𑌣𑌵𑌦𑍍𑌭𑌿𑌰𑌾𑌵𑍃𑌤𑌾𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑍈𑌰𑍍𑌵𑍇𑌦
𑌷𑌡𑌙𑍍𑌗𑌪𑌾𑌰𑌗𑍈𑌃 ।
𑌸𑌹𑌸𑍍𑌰𑌦𑍈𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌰𑌤𑍈𑌰𑍍𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌭𑌿𑌃 𑌮𑌹𑌰𑍍𑌷𑌿
𑌕𑌲𑍍𑌪𑍈𑌃 𑌋𑌷𑌿𑌭𑌿𑌶𑍍𑌚 𑌕𑍇𑌵𑌲𑍈𑌃 ॥

தாமக்நிமத்பிர் குணவத்பிராவ்ருதாம் த்விஜோத்தமைர்வேத
ஷடங்கபாரகை: ।
ஸஹஸ்ரதைஸ்ஸத்யரதைர்மஹாத்மபிர் மஹர்ஷிகல்பை:
ரிஷிபிச்ச கேவலை: ॥

என்ற ச்லோகத்தால் வால்மீகி மஹர்ஷியானவர் இந்த அயோத்யா நகரமானது பகவானுடைய அவதாரத்திற்கு யோக்யமான தேசம் என்று வர்ணிக்கிறுர். ப்ராம்மணோத்த மர்களால் இந்த நகரமானது அலங்கரிக்கப்பட்டுவந்தது. அந்த ப்ராம்மணோத்தமர்களோ, சீக்ஷா, கல்பம், வ்யாகரணம், நிரு க்தம், சந்தஸ், ஜ்யோதிஷமென்ற ஆறு அங்கங்களோடு சேர்த்து வேதங்களாகிய கடல்களின் கரையை கண்டவர்கள். அத் துடன் ஆஹிதாக்னிகள், ஸத்யம் தவருமல் நடக்கக்கூடியவர் கள். சமதமம் முதலான ஆந்தரமான குணங்களோடும் கூடினவர்கள். மஹாத்யாகிகள், மஹா ஞானிகள். வஸிஷ்டர் முதலான மஹர்ஷிகளுக்கு ஸமான வைபவமுள்ளவர்கள். இவ்வித லக்ஷணங்கள் பொருந்திய ப்ராம்மண ச்ரேஷ்டர்கள் இந்த ராஜதானியில் விளங்கிவருவதினுலேயே பகவானுக்கு இந்த நகரத்தில் அவதரிக்க ருசியேற்பட்டது.

तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदिषन्ति
यज्ञेन दानेन तपसाऽनाशकेन ॥

𑌤𑌮𑍇𑌤𑌂 𑌵𑍇𑌦𑌾𑌨𑍁𑌵𑌚𑌨𑍇𑌨 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌿𑌵𑌿𑌦𑌿𑌷𑌨𑍍𑌤𑌿
𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌤𑌪𑌸𑌾𑌽𑌨𑌾𑌶𑌕𑍇𑌨 ॥

தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி
யஜ்ஞேன தாநேந தபஸாநாசகேந ॥

என்ற ச்ருதியால்,

अष्टवर्षं ब्राह्मणं उपनयीत

𑌅𑌷𑍍𑌟𑌵𑌰𑍍𑌷𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌉𑌪𑌨𑌯𑍀𑌤

அஷ்டவர்ஷம் ப்ராஹ்மண முபநயீத

என்று சொல்லப்பட்ட ரீதியை அனுஸரித்து எட்டாவது வயதில் உபநயனம் செய்துகொண்டு, குரு குலம் சென்று வேதத்தையும் ஸாங்கமாக அத்யயனம் செய்து ஸமாவர்த்தனம் செய்துகொண்டு யக்ஞம், தானம், வேதானுவசனம் என்ற ஸத்கர்மாக்களால் பரப்ரம்மத்தினுடைய ஸ்வரூபத்தை ப்ராம்மணோத்தமர்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள் என்ற அபிப்ராயம் வெளியாகிறபடியால், மேல் சொன்ன ச்ருதிக்கு உபப்ரம்மணரூபமான இந்த ராமாயணத்தில் சொல்லப்பட்ட அயோத்யா நகரத்தில் இந்த ச்ருதியில் சொல்லப்பட்ட லக்ஷணமுள்ள ப்ராம்மணோத்தமர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று தெரிகிறபடியாலும், இந்த இடத்தில் பகவான் அவதாரம் செய்ததும் சாஸ்த்ர ஸம்மதமாகத்தான் ஆகும்.

மேல்காட்டிய ராமாயண ச்லோகத்தில் केवलैः (𑌕𑍇𑌵𑌲𑍈𑌃) (கேவலை:) என்று கடைசியில் ஒரு பதமிருக்கிறது. அந்த பதமானது ப்ராம்மணோத்தமர்களுக்கு விசேஷணமென்று முன்சொல்லப்பட்டது. இப்போது அந்த பதத்திற்கு மற்றொரு பொருளுமுண்டென்றறியவும், அதாவது :—

केवल ऐ: (கெவல ஐ:) (கேவல ஐ:) என்று இரண்டு பதமாக केवलै: (கெவலை:) (கேவலை:) என்ற பதத்தைப் பிரித்துக்கொள்ளவும். हे केवल! (ஹெ கெவல) (ஹே கேவல) நிர்மலமான மனதுள்ள ஹே பரப்ரம்மமே! உனது ஸ்வரூபத்தை தர்சனம் செய்ய வேதாத்யயனம் முதலான ஸாதனங்களை அனுஷ்டானம் செய்துகொண்டு இந்த நகரத்தில் அநேக ப்ராம்மணோத்தமர்கள் வஸித்துக்கொண்டு வருகிறார்கள். நீயும் ऐ: (ஐ:) (ஐ:) இந்த நகரத்திலேயே வாஸம் பண்ண வரவேண்டும் என்று வைகுண்டத்திலிருந்து அயோத்திக்கு ப்ராம்மணோத்தமர்கள் பகவானை எதிர்பார்த்த ப்ரகாரம் வால்மீகி மஹர்ஷியானவர் அழைக்கிறார் என்ற தாத்பர்யமும் केवलै: (கெவலை:) (கேவலை:) என்ற பதத்தால் வெளியாகிறது.

இவ்விதம் பகவானுடைய அவதாரத்திற்கு யோக்ய தேசமாகிய அயோத்தியானது ஐந்தாவது ஸர்கத்தில் வர்ணிக்கப்பட்டது. அயோத்யா நகர லக்ஷணமே ஐந்தாவது ஸர்கத்தின் விஷயமென்பதை அறியவும்.

ஆறு, ஏழு, எட்டாவது ஸர்கங்கள்

பகவதவதாரத்திற்கு பஹிரங்கமான உபாயம்.

முன்ஸர்க்கத்தில் பகவான் அவதாரம் செய்வதற்கு யோக்யமான தேசமானது சொல்லப்பட்டது. இந்த ஸர்கத்தில் பகவானுடைய அவதாரத்திற்கு யோக்யமான உத்தமபுருஷனைச் சொல்லப்படுகிறது.

அதாவது, அயோத்யா நகரத்தில் **தசரதர்** என்ற பெயரால் ஓர் அரசன் விளங்கிவந்தார். அம்மஹானுபாவன் ஸகல வேதங்களுடைய கரையைக் கண்டு வேதார்த்தத்தையும் அறிந்தவன். வித்வான்கள், ஸாமந்த ராஜாக்கள், ப்ரஜைகள், மந்த்ரிகள், ரிஷிவர்கங்கள், இவர்களை தனக்கு ஸ்வாதீனம் செய்துகொள்வதில் எவ்விதமான உபாயங்களை அனுஷ்டிக்கவேண்டுமோ, அவைகளைத் தவருமல் அனுஷ்டித்துக்கொண்டு ஸகல ஜனங்களுடைய ப்ரேமைக்கும் பாத்ரனுக விளங்கிவந்தார். பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம், முதலிய ஸகல லோகங்களிலும் அவருடைய மஹாத்வமானது ப்ரஸித்தமாக விளங்கி வந்தது. அந்த மஹானுபாவன் ராஜ்யபரிபாலனம் செய்து வரும் காலத்தில் நான்கு வர்ணங்களிலும் பிறந்தவர்கள் அவரவர்களுடைய தர்மத்தை விதிவத்தாக அனுஷ்டித்துக் கொண்டு தனதான்யாதிகளால் நிரம்பிய க்ரஹாதிகளை அனுபவித்துக்கொண்டு ஆனந்தமாக விளங்கிவந்தார்கள். ரதம், கஜம், துரகம், பதாதிகள் என்ற சதுரங்க ஸேனைகளும் நாளுக்குநாள் அபிவ்ருத்தியடைந்துகொண்டு வந்தது. நித்யாக்னிஹோத்ரியாக இருந்துகொண்டு ஒவ்வொரு வஸந்தருதுவிலும் அச்வமேதம் முதலான யாகங்களை அனுஷ்டித்துக்கொண்டு அதன்மூலம் தேவர்களையும் தனது அதீனமாகவே வைத்துக்கொண்டு ராஜ்யபரிபாலனம் செய்துவந்தார். அவர் ராஜ்யபரிபாலனம் செய்யும்காலத்தில் க்ஷத்ரி

யர்கள், ப்ராம்மணர்களுடைய அதீனமாகவும், வைச்யர்கள் ப்ராம்மணன் க்ஷத்ரியன் இவ்விருவர்களுடைய அதீன மாகவும், சூத்ரர்கள், ப்ராம்மணன் க்ஷத்ரியன் வைச்யன் இம் மூவர்களையும் உபசரிக்கிறவர்களாவும், அவரவர்களுடைய ஆசாரம் தவறுமல் இருந்துவந்தார்கள். ராஜனுடைய தபஸ் ஸோ கர்மானுஷ்டான ச்ரத்தையோ, வேதாந்த விசாரத்தின் மஹிமையோ, ஜிதேந்த்ரியத்வமோ, இவைகளை யாராலும் வர்ணிக்கமுடியாது. அந்த ராஜன் ஸநத்குமார ஸ்வாமியினு டைய உபதேசத்தால் அஷ்டாக்ஷரீ என்ற மஹாமந்த்ரத்தை உபதேசம் செய்துகொண்டு அதை புரச்சரணைசெய்து ஸித்தி செய்தவர். ஸாமுத்ரிகாலக்ஷணங்களால் அலங்க்ருதமான யானைகளாலும் குதிரைகளாலும் சூழப்பட்ட ராஜ்ய ஸம்பத்தை அனுபவித்துவந்தார். அந்த அரசனுக்கு மஹா புத்திமான்களான த்ருஷ்டி, ஜயந்தன், விஜயன், ஸித்தார்த் தன், அர்த்தஸாதகன், அசோகன், மந்த்ரபாலன், ஸுமந்த் ரர், என்று பெயருள்ள எட்டுமந்த்ரிகள் விளங்கிவந்தார் கள். வஸிஷ்டர், வாமதேவர் என்ற இரண்டு ப்ராம்மணோத் தமர்களும் ஸகலமான ராஜ கார்யத்திலும் ராஜாவிற்கும் மற்ற மந்த்ரிகளுக்கும் புத்திமதிகளைப் போதித்துவரும் ப்ர தான மந்த்ரிகளாக விளங்கிவந்தார்கள். மற்ற ஜாபாலி முத லான ரிஷிகளும் மந்த்ரிவர்கத்தில் சேர்ந்தவர்களே. எல்லா மந்த்ரிகளும் ஸகல சாஸ்த்ரங்களிலும் மஹாநிபுணர்கள். அதர்மத்தைச் செய்வதில் லஜ்ஜை உள்ளவர்கள். இந்த் ரிய நிக்ரஹம் செய்தவர்கள். ராஜநீதியில் ரொம் பவும் உயர்ந்த புத்தியோடுகூடினவர்கள். தனஸம்ருத்தி யோடு கூடினவர்கள். மனது, வாக், காயம் மூன்றி லும் ஒரேவிதமாக நடத்திக்காட்டுபவர்கள். லோகமுழு மையும் ப்ரஸித்திபெற்ற கீர்த்தியோடு கூடினவர்கள். யுத் தத்தில் பின்வாங்காத பராக்ரமத்தோடு கூடினவர்கள். தன கோசங்களை குறையாமல் வ்ருத்தி செய்யக்கூடிய ஸாமர்த்ய முள்ளவர்கள். இவ்விதமான மஹா மஹிமையுள்ள மந்த்ரிக ளால் சூழப்பட்டவனுய்க்கொண்டு தசரதசக்ரவர்த்தி யானவர் அயோத்தியைப்பரிபாலனம் செய்து வந்தார்.

இவ்விதம் ஸகலவிதமான மஹிமையை அடைந்தவ ராஞலும் வம்சவ்ருத்திக்குக் காரணமான புத்ரனில்லாததி ஞல் அவர் மஹத்தான துக்கத்தை அனுபவித்துவந்தார். இவ்விதமிருக்கும்பொழுது, அச்வமேதயாகத்தால் நமது பாபத்தைப் போக்கடித்துக்கொண்டு சுத்தனுக ஆகிவிட் டால் பிறகு புத்ரன் ஏற்படலாமென்ற எண்ணத்துடன் அச்வமேதயாகம் செய்வதாக ஸங்கல்பம் செய்தார். தனது ஸங்கல்பத்தை மந்த்ரி ஸபையில் தெரிவித்தார். ராஜகார்ய நிர்வாஹத்தில் ப்ரதானமந்த்ரியான ஸுமந்த்ரர் அதை சிர ஸால் வஹித்து அவ்விதமே அச்வமேதயாகம் செய்வதென்ற தீர்மானத்துடன் வஸிஷ்டர் முதலான மஹர்ஷிகளை ராஜ ஸபைக்கு அழைத்துவந்தார். ராஜனும் மஹர்ஷிகளை வணங்கி நமஸ்கரித்து விநயத்துடன், "மஹர்ஷிகளே! வம்ச வ்ருத்திக்குக்காரணமான புத்ரன் எனக்கு இல்லை என்பது தங்களுக்குத் தெரிந்த விஷயம். அதை முன்னிட்டு அச்வமேதயாகம் செய்யலாமென்றுநினைக்கிறேன். தாங் கள் அந்த ஸத்கர்மாவை நடத்திக்கொடுத்து என்னை க்ருதார்த்தனுகச் செய்யவேண்டும்" என்று ப்ரார்த்தித் துக்கொண்டார். ப்ராம்மணேத்தமர்களும் ராஜனுடைய அச்வமேதயாக ஸங்கல்பத்தை ச்லாகித்து, அச்வமேதயாகத் திற்கு வேண்டிய ஸாமக்ரியைகளை சேகரம் செய்யவேண் டியதில் கட்டளையிட்டுவிட்டு, அச்வமேதயாகத்திற்கு அர்ஹ மான பட்டத்துக் குதிரையையும் மந்த்ரவத்தாக கட்டிலி ருந்து அவிழ்த்துவிடும்படி ஆக்ஞாபித்தார்கள். ராஜனைப் பார்த்து,

सर्वथा प्राप्स्यसे पुत्रानभिप्रेतांश्च पार्थिव ।
यस्यते धार्मिकी बुद्धिरियं पुत्रार्थमागता ॥

ஸர்வதா ப்ராப்ஸ்யஸே புத்ராநபிப்ரேதாம்ச்ச பார்திவ ।
யஸ்யதே தார்மிகீ புத்திரியம் புத்ரார்தமாகதா ॥

ஸர்வதா ப்ராப்ஸ்யஸே புத்ராநபிப்ரேதாம்ச்ச பார்த்திவ ।
யஸ்யதே தார்மிகீ புத்திரியம் புத்ரார்த்தமாகதா ॥

என்ற ச்லோகத்தால் "ராஜனே! தாங்கள் ஸங்கல்பித்தபடி அச்வமேதயாகம் செய்துவிட்டால் புத்ரோத்பத்திக்கு ப்ரதிபந்தகமான ஸகலபாபங்களும் நசித்துவிடும். தங்கள் இஷ்டப்பட்டபடி ஸத்புத்ரர்களை அடையலாம். ஒரு பிள்ளை மாத்ரமல்லாமல் அநேக பிள்ளைகளை அடையலாம். பிள்ளை இல்லை என்ற வருத்தத்தால் புத்ரோத்பத்தியைக் கருதி கேவலம் லௌகிகமான கார்யங்களில் தங்களுக்கு ப்ரவ்ருத்தி ஏற்படாமல், அச்வமேதம் என்ற மேலான தர்மத்தைச் செய்து அதன்மூலம், आवोराजानं अध्वरस्य (𑌆𑌵𑍋 𑌰𑌾𑌜𑌾𑌨𑌂 𑌅𑌧𑍍𑌵𑌰𑌸𑍍𑌯) (ஆவோ ராஜாநம் அத்வரஸ்ய) என்ற ச்ருதியை அனுஸரித்தும்,

अहंहि सर्वयज्ञानां भोक्ताचप्रभुरेवच

𑌅𑌹𑌂𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾𑌚𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍇𑌵𑌚

அஹம்ஹி ஸர்வயக்ஞாநாம் போக்தாசப்ரபுரேவச

என்ற ஸ்ம்ருதியை அனுஸரித்தும், யக்ஞபுருஷனை பரமேச்வரனை திருப்திசெய்துவைக்க வேண்டுமென்ற விஷயத்தில் தங்கள் புத்தி ப்ரவ்ருத்தித்திருப்பது பெரிய ஆச்சர்யத்தை எல்லோருக்கும் உண்டுபண்ணக்கூடியது. மற்றவர்களுக்கு இவ்விதம் புத்திசொல்வது மிகவும் துர்லபமாகும். இவ்விதம் தர்மபுத்தி தங்களுக்கு இருப்பதினால் அவச்யம் புத்ரர்கள் தங்களுக்கு ஏற்பட்டு அவர்கள்மூலம் பரமானந்தத்தை அனுபவிக்கப்போகிறீர்கள்" என்று ஆசீர்வாதம் செய்துவிட்டு, வஸிஷ்டர் முதலான மஹர்ஷிகள் தங்கள் தங்கள் ஆச்ரமத்திற்கு சென்றார்கள்.

அரசனும் ப்ராம்மணர்களுடைய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு மந்த்ரிகளைப் பார்த்து "மந்த்ரிகளே! ப்ராம்மணோத்தமர்கள் சொல்லியபடி அச்வமேதத்திற்கு வேண்டிய ஸாமக்ரியைகளை சீக்கிரம் சேகரம் செய்யுங்கள். பட்டத்துக்

குதிரையானது அவிழ்த்து விடப்படட்டும். ஸரயூநதியின் வடகரையில் யக்ஞசாலை நிர்மாணம் செய்யப்படட்டும். விக்னத்தை நிவர்த்தி செய்யக்கூடிய சாந்தி கர்மாக்கள் விதிவத்தாகச் செய்யப்படட்டும். श्रेयांसि बहुविघ्नानि (𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌂𑌸𑌿𑌬𑌹𑍁𑌵𑌿𑌘𑍍𑌨𑌾𑌨𑌿) (ச்ரேயாம்ஸிபஹுவிக்நாநி) என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து சுபகார்யத்திற்கு விக்னங்கள் ஏற்படக்கூடும். அதுகள் யாதும் வராமலிருக்கும் படி பார்த்துக்கொள்ள வேண்டும். முன் ஜன்மாவில் ப்ராம்மணனாகப் பிறந்து, மஹாவித்வானாகவும் இருந்து குடும்ப ஸம்ரக்ஷணத்திற்காக யாகத்திற்கு அனர்ஹனான மனிதனுக்கு யாகம் செய்துவைப்பது, தானமாக வாங்கக்கூடாத ஸொத்தை தானம் வாங்குவது, அதிகாரிபேதமில்லாமல் மஹாமந்த்ரங்களை உபதேசிப்பது, நினைத்த இடங்களில் போஜனம் செய்வது முதலான மஹாபாபங்களைச் செய்து குடும்பத்தை ரக்ஷித்து தனது ஜன்மா வீணாகப் போகாமலிருக்க தான் செய்த மஹாபாபங்களுக்கு மஹா ப்ராயச்சித்தத்தையும் செய்துகொள்ளாமல் மரித்த ப்ராமணர்கள் ப்ரம்மராக்ஷஸ்ஸுக்களாக பிறக்கிறார்கள். அந்த பைசாசஜன்மாவை அடைந்தவர்கள் முன் ஜன்மாவில் மஹாவித்வானாக இருந்த காரணத்தால் ஸத்கர்மா அஸத்கர்மா என்ற விவேகம் இருப்பதைக்கொண்டு ஸத்கர்மாக்கள் நடக்கும் இடத்திற்கும் தான் வந்து ஸூக்ஷ்மமான சரீரத்தோடு மறைந்திருந்துகொண்டு,

छिद्रंहि मृगयन्तेऽत्रविश्वांसो ब्रह्मराक्षसाः

𑌛𑌿𑌦𑍍𑌰𑌂𑌹𑌿 𑌮𑍃𑌗𑌯𑌨𑍍𑌤𑍇𑌤𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌂𑌸𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌃

சித்ரம்ஹி ம்ருகயந்தேத்ரவித்வாம்ஸோ ப்ரம்மராக்ஷஸா:

என்ற வசனத்தால் விக்னம் செய்து ஸத்கர்மாக்களைக் கெடுத்துவிடுகிறார்கள். அவ்விதம் மத்தியில் ஸத்கர்மாக்கள் விக்னத்தால் தடைபட்டு நின்றுவிட்டால் அந்த ஸத்கர்மாவின் கர்த்தா உடன் நசித்துவிடுகிறான் என்றும்,

निहतस्यच यज्ञस्य सद्यःकर्ता विनश्यति

நிஹதஸ்யச யஜ்ஞஸ்ய ஸத்ய:கர்தா விநச்யதி

நிஹதஸ்யச யஞ்ஸ்ய ஸத்ய:கர்தா விநச்யதி

என்ற சாஸ்த்ரத்தால் தெரிகிறபடியால், அவ்விதமான ஆபத்துக்கள் வராமலிருக்கும்படி யக்ஞத்தை ரக்ஷித்துக் கொடுக்கவேண்டிய பொருப்பு தங்களைச் சேர்ந்தது" என்று சொன்னார்.

மந்த்ரிகளும் ராஜாக்ஞையை சிரஸால்வஹித்து "அவ்வித மே நாங்கள் செய்ய கடமைப்பட்டவர்கள்" என்ற வார்த்தை களால் ராஜனை உத்ஸாகப்படுத்தினார்கள். மந்த்ரிகளோ, வஸிஷ்டர் முதலான ரித்விக்வர்கங்களோ, ராஜாவின் மனோ ரதத்தைப் பூர்த்திசெய்வதற்காக அச்வமேதயாகத்திற்கு வேண்டிய ஸாமக்ரியைகளை மிக அவஸரமாக சேகரம் செய்துகொண்டு ஸரயூ நதியின் வடகரையில் யக்ஞசாலையை யும் விதிவத்தாக நிர்மாணம்செய்ய ஆரம்பித்தார்கள்.

அரசனும், தனது அந்தப்புரம் சென்று, கௌஸல்யா தேவி, கைகேயி தேவி, ஸுமித்ரா தேவி என்ற மூன்று பட்ட மஹிஷிகளிடமும், "அச்வமேதயாகம் செய்து பக வானை த்ருப்தி செய்துவைத்து, பகவானுடைய ப்ரஸாதத் தால் திவ்யபுத்ரர்களை அடையலாம் என்ற ஸங்கல்பம் உள்ளவனாக நான் இருந்துவருகிறேன். அவ்விதமே யாகத் திற்கு வேண்டிய ஏற்பாடுகளும் நடந்துவருகின்றன. நீங்கள் தர்மபத்னிகளானதினால் உங்களால்தான் யாகம் நடைபெற வேண்டும். தீக்ஷாவிதியை அனுஸரித்து இந்த க்ஷணம் முதல் நீங்கள் நியமத்துடன் இருந்துவரவேண்டும்" என்று பத்னிகளுக்கு கட்டளையிட்டார். அந்த பத்னிகளும் புத் ரோத்பத்தியில் அரசனுக்கு ஏற்பட்ட தார்மிக புத்தியை அறிந்து ஸந்தோஷமான மனதோடு புத்ர லாபம் ஏற்படப் போகிறது என்ற எண்ணத்துடன் விளங்கிவந்தார்கள்.

ஒன்பதாவது ஸர்க்கம்.

ஸுமந்த்ரர் என்ற மந்த்ரி ச்ரேஷ்டரானவர் வஸிஷ்டர் முதலான ப்ராம்மணோத்தமர்களோடுகூட, தசரத சக்ரவர்த்தியான அரசன், புத்ரோத்பத்திக்கு உபாயமான அச்வமேத யாகத்தைச் செய்வதாக தீர்மானம் செய்ததை மஹாஸபையில் அனுமோதனம் செய்தவரானாலும், ராஜனுடைய புத்ரோத்பத்தியைப் பற்றி உள்ள புராதனமான ஒரு ரஹஸ்யம் தனக்குத் தெரியுமானதினால் அதையும் அரசனிடம் சொல்லவேண்டுமென்று நினைத்தார். மஹாஸபையில் சொன்னால், அச்வமேத யாகத்திற்கு தான் தடை செய்வதுபோல் ஸபையோர்கள் நினைக்கக்கூடுமென்றும், ரஹஸ்யமாக ராஜனிடம் தெரிவிக்கவேண்டும் என்றும் நினைத்து ஸபை கலைந்த பிற்பாடு, ஸுமந்த்ரர் மாத்ரம் அரசனுடைய ஸமீபம் சென்று ரஹஸ்யமாக வ்ருத்தாந்தத்தை தெரிவித்தார். அதாவது :—

"ராஜனே! தங்களுடைய புத்ரோத்பத்தி விஷயமாக க்ருதயுகத்தில் ஸனகாதிகளான மஹர்ஷிகளுடைய ஸமாஜத்தில், ஸநத்குமாரஸ்வாமி மூலமாக யாத்ருச்சிகமாக ப்ரஸங்கம் செய்யப்பட்ட ஒரு கதையானது என் மனதில் இருந்து வருகிறது. நானும் அந்த ஸமாஜத்தில் இருந்தவனானதினால் என்னால் நேரில் கேட்கப்பட்ட கதையாகும். வேதத்தின் அர்த்தத்தை விசாரித்துக்கொண்டிருக்கும்பொழுது வேதார்த்தமான ப்ரம்மமும்

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानं अधर्मस्य तदात्मानं सृजाम्यहं ॥

𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌂 𑌅𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌂

யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத ।
அப்யுத்தாநம் அதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥

என்ற ப்ரதிக்ஞையை அனுஸரித்து பூலோகத்தில் மனுஷ்ய வடிவாக அவதாரம் செய்கிறதுண்டு. அதில் அயோத்யா நகரத்திற் கரசனுன தசரத சக்ரவர்த்தியும் பரப்ரம் மத்தின் அவதாரத்திற்கு தகப்பனூராக ஆகும் பாக் யத்தை அடையப்போகிருர். த்ரேதா யுகத்தில் இவ்விஷயம் நடைபெறும் என்று உபந்யஸிக்கப்பட்டு வரும்பொழுது என் மனது பரமானந்தத்தை அடைந்தது. நான் இந்த வம்சத் தில், இக்ஷ்வாகு மஹாராஜா காலம் முதல் மந்திரியாகவே இருந்துவந்ததால், இந்த வம்ச ஸம்பந்தமான வ்ருத்தாந்தத் தைக்கேட்டவுடன் பரம ஸந்தோஷமடைந்தேன். உடன் ஸபையில் எழுந்திருந்து ஸனத் குமார ஸ்வாமியை ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளால் ஸந்தோஷிக்கச் செய்து வணக்கத்துடன் 'ஹே மஹர்ஷே! வரப்போகும் விஷயத்தை அறியும் சக்தி உள்ள ஸர்வக்ஞனதினுல் இக்ஷ்வாகு வம்ச ஸம்பந்தமான வ்ருத்தாந்தத்தை கொஞ்சம் விஸ்தாரமாகச் சொல்லவேண்டு' மென்று ப்ரார்த்தித்துக்கொண்டதின்பேரில், ஸனத்குமார ஸ்வாமியும், நானே ஒரு பிரஸித்திபெற்ற ராஜத்வாரத்தில் முக்ய மந்திரியாக இருப்பதாலும், ராஜப் பிரதிநிதியாக அந்த ஸமாஜத்திற்குச் சென்றிருந்ததாலும் என் ப்ரார்த்தனைக் கிணங்கி இந்த வம்ச ஸம்பந்தமாக, அதுவும் தங்களுடைய புத்ரோத்பத்தி விஷயமாக, வரும் விஷயத்தை ரொம்பவும் விஸ்தரித்துச் சொன்னுர். அதாவது :—

கச்யபர் என்ற மஹர்ஷியினுடைய வம்சத்தில் விபண்டகர் என்ற மஹர்ஷி ஏற்படப்போகிருர். அவர் மஹா தபஸ்வி, அவர் ஓர் பெரிய தடாகத்தில் கழுத்தளவு ஜலத்தில் நின்றுகொண்டு உக்ரமான தபஸ்ஸைச் செய்யப்போகிருர். அந்த தபஸ்ஸைக் கெடுக்க இந்த்ரன் முதலான தேவதைகள் அப்ஸரஸுகள் மூலமாக விக்னம் செய்யப்போகிருர்கள். ரம்பை திலோத்தமை முதலான அப்ஸரஸுகள் ச்ருங்கார

விலாஸங்களால் மஹர்ஷியினுடைய எதிரில் வ்யாமோஹப் படுத்த, மஹர்ஷியும் தபஸ்ஸிலிருந்து விழித்துக்கொண்டு காமபாணத்தால் அடிபட்டு தனது காம வேகத்தை அடக்க யத்னம் செய்தும் ஸாத்யப்படாமல் ரேதஸ்ஸானது அந்த ஜலத்தில் விழுந்துவிடும். அப்ஸரஸுகளும் ஓடிவிடுவார்கள். உடன், அழகான ஒரு பெண் மான், தாகத்தால், ஜலம் குடிக்க அந்த தடாகம் வந்து சேர்ந்து, ஜலம் குடித்துக் கொண்டிருக்கும்பொழுது ஜலத்தில் மிதந்துகொண்டிருக்கும் ரேதஸ்ஸையும் குடித்துவிடும். அப்பெண்மான் உடன் கர்பிணியாக ஆகிவிடும். காலக்ரமேண அந்த மான் ப்ரஸவித்து திவ்ய குமாரன் உதிப்பான். விபண்டக மஹர்ஷியின் இந்த்ரியமானதினால், மனுஷ்ய சரீரமும், தாய், மான் ஆனதினால் தலையில் இரண்டு கொம்புகளுடனும் கூடினவனாக அக்குழந்தை ஜனிப்பான். ரிச்யச்ருங்கர் என்ற பெயருடன் மஹா தபஸ்வியாக விளங்கிவருவார். ரிச்யம் என்றால் மான், ச்ருங்கம் என்றால் கொம்பு. மானுடைய கொம்பைப்போல் கொம்போடு கூடியவர் என்ற அர்த்தத்தை அனுஸரித்து ரிச்யச்ருங்கர் என்ற பெயரை அடைவார். ஆனால் தலையில் பெரிய கொம்பல்ல, கொம்பினுடைய சின்னம்தான். அந்த மானும் ஜாதி மானல்ல. ரம்பை என்ற அப்ஸரஸ் ஆனவள் விபண்டக மஹர்ஷியை தபஸ்ஸிலிருந்து கலைத்தோமே, விபண்டக மஹர்ஷி சபித்துவிடுவாரோ என்ற பயத்தால், தன் ஸ்வய உருவத்தை மறைத்துக்கொண்டு மான் வேஷத்தை எடுத்துக்கொண்டு விளையாடி வருவாள். ஆகையால் ரிச்யச்ருங்கருக்குத் தாயான மானும் ஜாதிமானில்லாததினால் இந்த மஹர்ஷிக்கு கொம்பினுடைய அடையாளம் மாத்திரமன்னியில் மானைப்போலொத்த நீண்ட கொம்போ என்ற ப்ரமம் வேண்டாம். ரிச்யச்ருங்கர் என்ற ரிஷிகுமாரனே அதிஸுந்தரமான சரீரத்தோடுகூடினவனாய்க்கொண்டு, விபண்டக மஹர்ஷியின் ஆச்ரமத்திலேயே, பிதாவான மஹர்ஷிக்கு பரிசர்யை செய்துகொண்டு நைஷ்டிகப் ப்ரம்மசர்ய வ்ரதத்தோடு, காயத்ரீ மஹா மந்த்ரத்தை புரச்சரணை செய்துகொண்டு

மஹா தபஸ்வியாக விளங்கிவருவார். ஸ்த்ரீ முதலான விஷயங்களைக் கண்ணால்கூடப் பார்க்கக்கூடிய ஸந்தர்ப்பம் நேராதவர்.

இவ்விதமிருக்கும்பொழுது தசரத சக்ரவர்த்திக்கு மித்ரனான அங்கதேசாதிபதியான ரோமபாதர் என்ற ராஜனுடைய ராஜ்யத்தில் க்ஷாமம் ஏற்படும். ராஜாக்களுடைய தர்மவ்யதிக்ரமத்தால் ராஜ்ய க்ஷாமம் என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து, ரோமபாதர் என்ற ராஜா, ஏதோ தர்ம வ்யதிக்ரமத்தைச் செய்ததால் ராஜ்யத்தில் 12 வருஷகாலமாக மழை இல்லாமலும் பூமியில் ஒருவித ஸஸ்யமும் வ்ருத்தியாகாமலும், ப்ராம்மணர்களும் க்ஷத்ரியர்களும் வைச்யர்களும் சூத்ரர்களும் அவரவர்கள் ஸ்வதர்மத்தை அனுஷ்டிக்க முடியாமல் ரொம்பவும் துக்கத்தை அநுபவித்துவருவார்கள்,

तस्य व्यतिक्रमात्राज्ञः भविष्यतिसुदारुणा ।
अनावृष्टिः सुघोरावै सर्वभूत भयावहा ॥

𑌤𑌸𑍍𑌯 𑌵𑍍𑌯𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿𑌸𑍁𑌦𑌾𑌰𑍁𑌣𑌾 ।
𑌅𑌨𑌾𑌵𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 𑌸𑍁𑌘𑍋𑌰𑌾𑌵𑍈 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤 𑌭𑌯𑌾𑌵𑌹𑌾 ॥

தஸ்ய வ்யதிக்ரமாத்ராக்ஞ: பவிஷ்யதிஸுதாருணா ।
அநாவ்ருஷ்டி: ஸுகோராவை ஸர்வபூத பயாவஹா ॥

என்றபடி ராஜ்யத்தில் மஹத்தான கஷ்டம் நேர்ந்துவிடும். ராஜனும் பரம துக்கத்தை அனுபவிப்பார். உடன் ப்ராம்மணோத்தமர்களை அழைத்து அனாவ்ருஷ்டி என்ற துக்கத்தை நிவ்ருத்தி செய்துகொள்ள ப்ராயச்சித்தம் என்னவென்பதை விசாரிப்பார். ப்ராம்மணர்களோ, தர்ம வ்யதிக்ரமத்தால் ஏற்பட்ட இந்த ஆபத்தை நிவர்த்தி செய்துகொள்ள சுத்தமான நைஷ்டிக ப்ரமமசாரிக்கு ஒரு கன்னிகையை தானம்செய்து கொடுப்பதே மஹாப்ராயச்சித்தமாகுமென்பார்கள். ரோமபாதர் என்ற அரசனுக்கோ சாந்தை என்ற பெயருடன் ஸுந்தரியான ஒரு கன்னிகை இருந்துவருவாள்.

அக்கன்னிகையை விபண்டக மஹர்ஷியின் புத்ரனுன சுத்த ப்ரம்மசாரியான ரிச்யச்ருங்க மஹர்ஷிக்கு தானம் செய்து கொடுத்தால், இந்த அனுவ்ருஷ்டி பயம் நிவ்ருத்தியாகிவிடும் என்று சொல்லுவார்கள். அதைக்கேட்ட அரசனும், 'நைஷ் டிக ப்ரம்சர்யவ்ரதத்தைப் பரிபாலனம் செய்துவருகிற, ரிச்ய ச்ருங்க மஹர்ஷியினுடைய ப்ரம்மசர்யத்தை எவ்விதம் பங் கப்படுத்துகிறது? தன் கன்னிகையை அவர் கல்யாணம் செய்துகொள்ள ஸம்மதிப்பாரா? இது அஸாத்யமான கார்ய மல்லவா' என்று மந்த்ரி ஸபையில் ஆலோசிப்பார். மந்த்ரி ஸபை கூட்டி அதில், ராஜதானியிலுள்ள அழகான தாஸிகளை உபாயனத்ரவ்யங்களோடு விபண்டக மஹர்ஷியின் ஆச்ரமத் திற்கு அனுப்பி, அந்த மஹர்ஷியை ச்ருங்கார ரஸங்களால், ஸம்யோகம் விப்ரலம்பம் என்ற கலைகளால் ப்ரம்மசர்யத்தை பங்கப்படுத்தி தமது நகரத்திற்கு அவரை அழைத்துவர முடிவு செய்வார்கள். உடன் அழகான தாஸிகளை மோதகம் முதலான உபாயன த்ரயங்களுடன் விபண்டக மஹர்ஷியின் ஆச்ரமத்திற்கு ராஜன் அனுப்புவான். தாஸிகளும் ஆச்ரமத்தில் ரிச்யச்ருங்க மஹர்ஷி மாத்ரம் இருப்பதைக் காண்பார்கள். விபண்டக மஹர்ஷியோ, ஸமீபத்திலுள்ள ஒரு அச்வத்த வ்ருக்ஷத்தி னடியில் ஸமாதியில் வீற்றிருப்பார். விபண்டக மஹர்ஷி யில்லா மல் ரிச்யச்ருங்கமஹர்ஷி மாத்ரம் ஆச்ரமத்தில் இருந்த ஸந்தர்ப்பம் வாய்த்து, தாஸிகளும் பரமஸந்தோ ஷத்துடன் மஹர்ஷியின் ஸமீபம் செல்வார்கள். ரிஷியோ ஸ்த்ரீ என்ற வ்யக்தியை கண்ணுல் பார்க்காதவரானதினுல் யாரோ தேவதைகள் என்று நினைத்து பரபரப்புடன் எழுந் திருந்து அர்க்ய ஆசமனுதிகளால் இவர்களை பூஜித்து, நமஸ் காரம்செய்ய ஆரம்பிப்பார். உடன் தாஸிகளுக்கு,

उत्कृष्टवन्दनंलोके नीचानां प्राणघातकं

உத்க்ருஷ்ட வந்தநம்லொகெ நீசாநாம் ப்ராணகாதகம்

உத்க்ருஷ்ட வந்தனம்லோகே நீசாநாம் ப்ராணகாதகம்

என்ற ஸ்ம்ருதியை அனுஸரித்து, 'மஹாபுருஷனிவர். நாம் தாஸி. இவர் நம்மை நமஸ்கரித்தால், இந்த அரண்யத்தி லேயே, நாம் ப்ராணனை விட்டுவிடும்படி நேர்ந்துவிடும். ராஜகார்யத்தை எவ்விதம் செய்யமுடியும்' என்று நினைத்து ரிச்யச்ருங்க மஹர்ஷி நமஸ்காரம் செய்ய இடம்கொடுக்கா மலே அவர்களே அவர் பாதத்தில் நமஸ்கரித்துவிட்டு, மோத கம் முதலான உபாயன த்ரவ்யங்களையும் அவரிடம் ஸமர்ப்பிப் பார்கள். மஹர்ஷியும் தாஸிகளால் ஆதரவுடன் கொடுக்கப் பட்ட மோதகத்தை புஜித்து பரம ஸந்தோஷத்தை அடை வார். மோதகத்தினுடைய, மாதுர்யத்தை அனுபவித்த ரிச் யச்ருங்கர் இது அக்னியின் ஸம்பந்தத்தால் பசனம் செய்யப் பட்ட பக்ஷ்ய விசேஷமென்று கருதாமல் இது ஒரு வ்ருக்ஷவிசே ஷத்தின் பலமென்றே நினைப்பார். ஆனால் 'நாம் இந்த அரண் யத்தில் ஸஞ்சரித்துவருகிறோமே. இவ்வித மாதுர்யமான பல முள்ள வ்ருக்ஷம் நமது கண்ணுக்குப் புலப்படவில்லையே. இது ஓர் ஆச்சர்யமாக இருக்கிறது' என்று நினைத்து தாஸி களைப் பார்த்து 'நீங்கள் யார்? உங்களுடைய ஆச்ரமம் எங்கிருக்கிறது? இந்த மதுரமான பலத்தைக் கொடுக்கக் கூடிய வ்ருக்ஷங்கள் உங்கள் ஆச்ரமத்தில் இருக்கின்றனவா?' என்று கேட்பார். தாஸிகளும் 'ஸமீபத்தில் எங்கள் ஆச்ர மம் இருக்கிறது. இந்த மதுரமான பலமும் தங்களுக்கு வேண்டியது அகப்படும். நீங்கள், எங்கள் ஆச்ரமத்திற்கு வரவேண்டும்' என்று சொல்லிவிட்டு விபண்டக மஹர்ஷி வந்துவிடுவாரோ என்ற பயத்தால், ரிச்யச்ருங்க மஹர்ஷியை காடமாக ஆலிங்கனம் செய்துகொண்டு காமவிகாரத்தையும் அவருக்கு உண்டுபண்ணிவிட்டு இந்த தாஸிகள் கொஞ்ச தூரம் அப்பால் ஓடிவிடுவார்கள்.

श्रुतिशत निगमान्त शोधकानपि अह रह जनादि निदर्शनेन सद्यः
खलुषयति चतुष्पदाघभिन्नाघ अघटित घटना पटीयसीमाया

𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌤 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤 𑌶𑍋𑌧𑌕𑌾𑌨𑌪𑌿 𑌅𑌹 𑌰𑌹 𑌜𑌨𑌾𑌤𑌿
𑌨𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑍇𑌨 𑌸𑌦𑍍𑌯𑌃
𑌕𑌲𑍁𑌷𑌯𑌤𑌿 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌦𑌾𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌅𑌘𑌟𑌿𑌤𑌘𑌟𑌨𑌾
𑌪𑌟𑍀𑌯𑌸𑍀𑌮𑌾𑌯𑌾

ச்ருதிசத நிகமாந்த சோதகாநபி அஹ ரஹ ஜநாதி நிதர்சநேந ஸத்ய:
கலுஷயதி சதுஷ்பதாகபிந்நாக அகடித கடநா படீயஸீமாயா

என்ற சாஸ்த்ரப்படி விஷய ஸந்நிதியில் வைராக்யம் பறந்து விடும் என்று தெரிகிறபடியால் ரிச்யச்ருங்க மஹர்ஷியும் மாயையின் வலையில் அகப்பட்டுக்கொண்டு, அந்த தாஸி களையே மறுபடியும் பார்க்கவேண்டும், ஆலிங்கனுதிகள் செய்துகொள்ள வேண்டுமென்று கஷ்டப்படுவார். இத்தரு ணத்தில் விபண்டக மஹர்ஷியும் ஸமாதியிலிருந்து கலைந்து ஆச்ரமத்திற்கு வருவார். புத்ரனையும் பார்த்து முன்பார்த்த ப்ரம்மவர்சஸ், புத்ரனிடம் காணப்படாமல் ஸ்த்ரீ சித்தனு டைய முக லக்ஷணங்கள் புத்ரனிடம் காணப்பட்டு 'தபஸ் ஸிற்கு விக்னம் வந்துவிட்டதா' என்று சொல்லிவிட்டு விபண் டகர் முன்போலவே ஸமாதிக்குச் சென்றுவிடுவார். மறுபடி யும் தாஸிகள் ரிச்யச்ருங்கரின் கண்ணில் தென்படுவார்கள். ரிச்யச்ருங்க மஹர்ஷியும் தாஸிகளை தன்னிடம் அழைப்பார். தாஸிகளோ, எங்கள் ஆச்ரமத்திற்குத்தான் தாங்கள் வர வேண்டுமென்று அழைப்பார்கள். மஹர்ஷியும் தாஸிகளைப் பின்தொடர்ந்து செல்லுவார். கொஞ்சம் கொஞ்சமாக அங்க தேசம் சென்றுவிடுவார்கள். ரிச்யச்ருங்க மஹர்ஷியின், சர ணங்களும் அங்கதேசத்தின் பூமியில் பட்டவுடன், ப்ரளய காலமழைபோல் மழை அம்ருதவர்ஷமாக வர்ஷித்து அனவ் ருஷ்டிபயம் நிவர்த்தியாகி ராஜன், ப்ரஜை எல்லோரும் பரமஸந்தோஷத்தை அடைந்து ரிச்யச்ருங்க மஹர்ஷியை வரவேற்று சாந்தை என்ற தன் கன்னிகையை ரிச்யச்ருங்க மஹர்ஷிக்கு பாணிக்ரஹணம் செய்துகொடுத்து தம்பதிகளைத் தனது ராஜதானியிலேயே வஸிக்கும்படி வேண்டிய ஸௌகர் யங்களைச் செய்துகொடுத்து, ராஜன் பரமஸௌக்யத்தை

அடைந்துவருவான். விபண்டக மஹர்ஷியும் புத்ரனைத் தேடிக்கொண்டு அங்கதேசம் வந்துசேர்ந்து, அவரும் ராஜனால் ஸமாதானப்படுத்தப்பட்டு "ப்ராரப்தத்தின் அனுபவம்" என்ற விவேகத்தால் திரும்பி ஆச்ரமம் சென்றுவிடுவார். ரிச்யச்ருங்க மஹர்ஷியை, சாந்தை என்ற பார்யையுடன் தசரதசக்ரவர்த்தி அழைத்துவந்து, புத்ரகாமேஷ்டி யாகம் செய்யப்போகிறார். அம்மஹானுபாவனுடைய அனுக்ரஹ விசேஷத்தால் தசரத சக்ரவர்த்திக்கு திவ்ய புத்ரர்கள் ஆவிர்பவிக்கப்போகிறார்கள்' என்று ஸனத் குமாரஸ்வாமி உபந்யஸித்த விஷயம் என் மனதில் இருந்து வருவதினால் மஹாராஜாவினிடம் தெரிவித்தேன். பிறகு ராஜனின் இஷ்டம் போல் செய்யப்படட்டும், அச்வமேதயாகத்தை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை,

तरति ब्रह्महत्यांयो अश्वमेधेन यजते

தரதி ப்ரஹ்மஹத்யாம்யொ அஶ்வமெஷெந யஜதெ

தரதி ப்ரஹ்மஹத்யாம்யோ அச்வமேதேந யஜதே

என்ற ச்ருதியினால் அச்வமேதயாகமானது ப்ரம்மஹத்தி முதலான பஞ்சமஹாபாதகங்களையும் போக்கக்கூடியதல்லவா! புத்ரோத்பத்திக்கு ப்ரதிபந்தகமான பாபங்கள் ஏதாவதிருந்தாலும் அப்பாபங்கள் அச்வமேதத்தால் நசித்துவிடும் ஆகையால் அச்வமேதமும் நடக்கத்தான்வேண்டும். ஆனால் ரிச்யச்ருங்க மஹர்ஷியை அழைத்துவந்து அவர் ஸந்நிதியில் ஆரம்பிக்கலாமென்று எனக்கு தோன்றுகிறது" என்று ஸுமந்த்ரர் தெரிவித்தார்.

இதைக்கேட்ட தசரதசக்ரவர்த்தியும், பரம உத்ஸாஹத்துடன் பரிவாரத்துடன்கூட, ஸுமந்த்ரரை முன்னிட்டுக்கொண்டு அங்கதேசம் சென்று ரோமபாதர் என்ற அரசனால் விதிவத்தாக வரவேற்கப்பட்டு, அந்த அரசனையும் தான் செய்யப்போகும் யாகத்திற்கு அழைத்து அங்குள்ள சாந்தை என்ற பார்யையோடு கூடின ரிச்யச்ருங்க மஹர்ஷியையும் ப்ர

தக்ஷிண நமஸ்காராதிகளால் ஸந்தோஷிக்கச் செய்து அயோத்யா நகரத்திற்கு வந்து, தனக்கு புத்ர காமேஷ்டி யாகத்தை செய்துவைத்து புத்ரலாபத்தைக் கொடுக்க வேண்டுமென்றும், புத்ர காமேஷ்டியாகத்திற்கு முன்பாக, பாபக்ஷயத்தின் பொருட்டு நடக்கும் அச்வமேதயாகத்திற்கே தங்களுடைய ஸாந்நித்யம் ஏற்படவேண்டுமென்றும் ப்ரார்த்தித்தார். ரிச்யச்ருங்க மஹர்ஷியும் சாந்தை என்ற பார்யையுடனும் ரோமபாதர் என்ற மஹாராஜாவினுல் அனுப்பப்பட்டு தசரத சக்ரவர்த்தியைத் தொடர்ந்து சென்றுர்.

இம்மஹர்ஷியின் ஆகமனத்திற்காக புதிதாக அலங்கரிக்கப்பட்ட அயோத்யா நகரத்தில் ஸ்வஸ்திவாசன புரஸ்ஸரமாக நகரத்தில் ப்ரவேசம் செய்தார். தசரத சக்ரவர்த்தியும் வீதி ப்ரதக்ஷிணமாக தனது அரண்மனைக்கு அழைத்துச் சென்று நவரத்ன ஸிம்ஹாஸனத்தில் அமரச் செய்து அர்க்ய பாத்யாதிகளால் பூஜித்து தனக்கு புத்ரலாபம் ஏற்பட்டு விட்டதாகவே நினைத்து ஸந்தோஷப்பட்டார். கௌஸல்யா தேவி முதலான அரசனின் பட்டமஹிஷிகளும், சாந்தையை விதிவத்தாக வரவேற்று ஆதரித்தார்கள். சாந்தை என்ற பார்யையுடன் ரிச்யச்ருங்க மஹர்ஷி அயோத்யா நகரத்தில் பரமஸுகமாக விளங்கிவந்தார். தசரத சக்ரவர்த்தியும் முதலில் அச்வமேதயாகத்தை ஆரம்பித்துச் செய்ய ஸந்நத்தராக இருந்துவந்தார். வஸிஷ்டர் முதலான ப்ராம்மணர்களும், ஸுமந்த்ரர் முதலான மந்திரிகளும் அச்வமேதயாகத்திற்கு வேண்டிய உபசரணங்களை சேகரித்துக்கொண்டு, லௌகீக வைதீக கார்யத்தைச் செய்துவந்தார்கள். ஸரயூநதியின் வடகரையில் அச்வமேதயாகத்திற்கு யக்ஞசாலையும் நிர்மாணம் செய்யப்பட்டது. தேவர்களும் ரிஷிகளும் பௌரஜானபத ஜனங்களும் அச்வமேதயாக தர்சனத்திற்காக நகரத்திற்கு வந்து குவிந்துகொண்டிருந்தார்கள்.

ரிச்யச்ருங்க மஹர்ஷியானவர் மகாதபஸ்வி என்று முன் சொல்லப்பட்டது. அம்மஹானுபாவனுக்கும் **கணிகை** என்று

சொல்லப்படுகிற தாஸிகளுடைய ஸம்பந்தம் ஏற்பட்டுவிட்டதே.

तमोद्वारं योषितां सङ्गि सङ्गं

தமோத்₃வாரம் யொஷிதாம் ஸங்₃கி ஸங்₃ம்

தமோத்வாரம் யோஷிதாம் ஸங்கி ஸங்கம்

என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து ஸ்திரீகளினிடத்தில் ஈடுபட்ட புருஷனுடைய சேர்க்கையே நரகத்திற்குக் காரணமாகும், ஸகல தபஸ்ஸையும் அழித்துவிடும் என்று தெரியும் பொழுது ஸாக்ஷாத் கணிகைகளின் (தாஸிகள்) ஸங்கம் மேற்சொன்ன ரிஷிக்கு ஏற்பட்டுவிட்டதே? அவருடைய தபஸ் முழுமையும் அதனுல் அழிந்திருக்கும். அம்மஹர்ஷி அங்க தேசத்தில் ப்ரவேசித்த உடன் அனுவ்ருஷ்டி பயம் நிவ்ருத்தியாகிவிட்டது. அதாவது நல்ல மழை பெய்து ப்ராணிகள் ஸுகத்தை அடைந்தார்கள்; அம்மஹர்ஷியின் அனுக்ரஹத்தால் தசரத சக்ரவர்த்திக்கு புத்ரலாபம் ஏற்படப்போகிறது என்பது எவ்விதம் ஸங்கதமாகும். ஸ்த்ரீ ஸம்பந்தத்தால் அம்மஹர்ஷிக்கு ப்ரம்மசர்யமே போய்விட்டதே. அவர் வஸிஷ்டரைக் காட்டிலும் எவ்விதம் உயர்ந்தவராக ஆகுவார். வஸிஷ்டரை வைத்துக்கொண்டே தசரதர் புத்ரகாமேஷ்டியாகம் செய்யக்கூடாதா. ஸுமந்த்ரர் ரிச்யச்ருங்க மஹர்ஷியை அழைக்கவேண்டுமென்று சொன்னுர் என்பதற்காக அம்மஹர்ஷியை அழைத்து வந்த காரணம் யாது?

ரிச்யச்ருங்க மஹர்ஷிக்கு ஸ்த்ரீ, புருஷன் என்ற வித்யாஸமே தெரியாமலிருந்த காரணத்தால் தத்காலத்தில் ஏற்பட்ட ஸ்த்ரீ ஸம்பந்த தோஷமானது ரொம்பவும் அல்பமாகத்தான் ஆகும். அந்த தோஷமானது அவருடைய பெரும்தவத்தால் பஸ்பமாக ஆகிவிடும். அதனுல் ரிச்யச்ருங்க மஹர்ஷியின் பெருமை குறையாது. வஸிஷ்டரைக் காட்டிலும் இம்மஹர்ஷி மேன்மை உள்ளவர்தான். ஸநத்

குமாரஸ்வாமியும் இதை அறிந்துதான் ரிச்யச்ருங்க மஹர்ஷியின் அனுக்ரஹத்தால் தசரத ராஜனுக்கு புத்ரலாபம் ஏற்படப்போகிறதென்று ஸுமந்த்ரரிடம் சொல்லியிருக்கிறார். ஸுமந்த்ரர் அதைச் சொன்னவுடன் ராஜனும் ரிச்யச்ருங்க மஹர்ஷியை அழைத்துவந்தார். மேற்கண்டபடி ஸமாதானம் சொல்வது ப்ருக்ருதத்தில் பொருத்தமாக ஆகாது.

ரிச்யச்ருங்க மஹர்ஷிக்கு ஸ்த்ரீ புருஷன் என்ற வித்யாஸம் தெரியாதென்று சொல்வதே பிசகாகும். அவரோ, ப்ரம்மசர்யத்தை கைகொண்டு ஸகல சாஸ்த்ரங்களுடைய உண்மையையும் உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல் அனுபவித்து வருபவர். அந்த சாஸ்த்ரங்களில் ஸ்த்ரீகளின் ஸ்வபாவமும், புருஷர்களின் லக்ஷணமும் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா! அத்துடன் ஸ்த்ரீ ஸம்பந்தமானது ப்ரம்மசர்யத்தையும், தபஸ்ஸையும் கெடுத்துவிடும் என்ற உண்மையையும், சாஸ்த்ரங்களின்மூலம் அவருக்குத் தெரிந்திராதா? சாஸ்த்ரமூலமாகவும் ஸ்த்ரீகளுடைய பரிஞானம் அம்மஹர்ஷிக்கு உண்டு என்றுதான் ஒப்புக்கொள்ளவேண்டும். காட்டிலேயே அவர் வஸிப்பவராஞலும் அங்கும் வேட ஸ்த்ரீகளை அவர் பார்த்திருக்கக்கூடாதா? ஆகையால் சாஸ்த்ரத்தை அனுஸரித்தும், லோகத்தை அனுஸரித்தும் ஸ்த்ரீ என்ற வ்யக்தி அவருக்குத் தெரிந்துதான் இருக்கவேண்டும். அந்த வ்யக்தியில் ஸம்பந்தமேற்பட்டால், தபஸ்ஸே போய்விடுமென்றும் தெரிந்திருக்கவேண்டும். இவ்விதமிருக்கும் பொழுது ஸ்த்ரீ என்ற ஞானமில்லாததினுல், தாஸிகளுடைய ஸம்பந்தம் ஏற்பட்டும் தபோசக்தி போகவில்லை என்று சொல்லமுடியுமா? ஒன்றுமே அவருக்குத் தெரியாது, பரம அக்ஞன் என்ருல் அனுக்ரஹம் செய்யும்சக்தி அவருக்கு எவ்விதம் ஏற்படும். ஆகையால் அவரை அழைத்துவந்துதான், தசரத சக்ரவர்த்தி, யாகம் செய்யவேண்டுமென்று ஸங்கல்பம் செய்தது ரொம்பவும் பொருத்தமாக இல்லை என்ற நாஸ்திகர்களுடைய வாதத்திற்கு ஸமாதானமாவது:—

ரிச்யச்ருங்க மஹர்ஷியானவர், மஹா தபஸ்வி; ப்ரம்ம நிஷ்டன் என்பதில் ஸந்தேஹமேயில்லை. அவர் நிர்மலமான ப்ரம்மசர்யத்தால் பிதாவான விபண்டக மஹர்ஷியிடம் வேதாந்த சாஸ்த்ரங்களை அத்யயனம்செய்து அதன் உண்மையை அனுபவத்திற்குக் கொண்டுவந்த **வஸிஷ்டர்** என்று இம்மஹர்ஷியைச் சொல்லவேண்டும். இவருடைய த்ருஷ்டிக்கு காணப்படுகிற வஸ்துக்கள் எல்லாம் ப்ரம்மமாகவே புலப்படுகின்றன.

यस्मिन् सर्वाणि भूतानि आत्मैवाभूत् विजानतः
तत्रकोमोहः कःशोकः, एकत्वं अनुपश्यतः

𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌆𑌤𑍍𑌮𑍈𑌵𑌾𑌭𑍂𑌤𑍍 𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌃
𑌤𑌤𑍍𑌰𑌕𑍋𑌮𑍋𑌹𑌃 𑌕𑌃𑌶𑍋𑌕𑌃 𑌏𑌕𑌤𑍍𑌵𑌂 𑌅𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌃

யஸ்மிந் ஸர்வாணி பூதாநி ஆத்மைவாபூத் விஜாநத:
தத்ரகோமோஹ: க:சோக: ஏகத்வம் அநுபச்யத:

என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து ப்ரம்மநிஷ்டர்களுக்கு எந்த காலத்தில் ஸகல ஜகத்தும் ஆத்ம ஸ்வரூபமாகவே பாஸிக்கின்றதோ அக்காலத்தில் அந்த ப்ரம்மநிஷ்டர்களுக்கு சோகமும், மோஹமுமில்லை. அடிக்கடி பிறந்து சாகுவது என்ற ஸம்ஸாரத்திற்குக் காரணமான சோகமோஹமே அந்த ப்ரம்மநிஷ்டர்களிடத்தில் இல்லை என்று தெரிகிறபடியால் ரிச்யச்ருங்க மஹர்ஷியையும் மேற்சொன்ன உபநிஷத் வாக்யத்தின் அர்த்தத்தை அனுபவிக்கும் ப்ரம்மநிஷ்டனுக ஒப்புக்கொள்ளவேண்டியது அவச்யமானதினுல் அம்மஹானுபாவனுக்கு தன்னை வ்யாமோஹப்படுத்த வந்த தாஸிகளிடம் "இவர்கள் தாஸிகள்" என்ற புத்தியே தோன்ருமல் ஸச்சிதானந்த ரூபமான ப்ரம்மம் என்றே அந்த தாஸிகள் அவருடைய த்ருஷ்டிக்குத் தோன்றியபடியால் யாதொரு விதமான தோஷத்தையும் அம்மஹர்ஷியினிடத்தில் சங்கிக்க ந்யாயமே இல்லை. ப்ரம்மஞானி யானதினுல் ஸர்வக்ஞத்வம் அவரிடத்தில் ஸித்திக்கிறது. ஸர்வக்ஞத்வ மஹிமையினுல்

ப்ராரப்தவசமாக க்ஷத்ரிய ஸ்திரீயனுடைய ஸம்பந்தம் தனக்கு ஏற்படக்கூடிய பாவியான ஸமாசாரத்தையும் அறிந்தார். அதற்கு அனுகூலமாக இந்த தாஸிகள் வந்திருக்கிறார்கள் என்று நினைத்துத்தான் அவர்களிடம் ப்ரம்ம த்ருஷ்டியோடு இம்மஹர்ஷியானவர் வ்யவஹாரம் செய்தார். வாஸ்தவத்தில் ஸ்திரீ என்ற எண்ணமே அவரிடம் உதிக்கவில்லை.

नतेनजन्मप्रभृति दृष्टपूर्वं तपस्विना ।
स्त्रीवापुमान्वा यच्चान्यत् सर्वं नगरराष्ट्रजं ।

𑌨𑌤𑍇𑌨𑌜𑌨𑍍𑌮𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑌾 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌵𑌾𑌪𑍁𑌮𑌾𑌨𑍍𑌵𑌾 𑌯𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌨𑌗𑌰𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌜𑌂 ॥

நதேநஜந்மப்ரப்ருதி த்ருஷ்டபூர்வம் தபஸ்விநா ।
ஸ்த்ரீவாபுமாந்வா யச்சாந்யத் ஸர்வம் நகரராஷ்ட்ரஜம் ॥

என்று ஸ்ரீமத் ராமாயணத்திலேயே பாலகாண்டத்தில் 10வது ஸர்கத்தில் 9வது ச்லோகத்தால் ரிச்யச்ருங்க மஹர்ஷிக்கு பிறப்பு முதல் ஸ்த்ரீ புமான் என்ற வேற்றுமையில்லாது எல்லாம் ப்ரம்மமாகவே பாவித்து வந்தார். இவ்விதமான ப்ரம்ம நிஷ்டர்களும்

तस्यतावर्द्शिरं यावन्नविमोक्ष्ये

𑌤𑌸𑍍𑌯𑌤𑌾𑌵𑌦𑍇𑌵𑌚𑌿𑌰𑌂 𑌯𑌾𑌵𑌨𑍍𑌨𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑍇

தஸ்யதாவர்த்தசிரம் யாவந்நவிமோக்ஷ்யே

என்ற ச்ருதியினுல் ப்ராரப்த கர்மாவை அனுபவித்தே தீர வேண்டுமென்று ஏற்படுகிறது. ஆத்மஞானத்தை ஸம்பாதிப்பதற்குமுன் செய்யப்பட்டு, பலத்தைக் கொடுக்காமல், பலத்தைக் கொடுக்க ஸமயத்தை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் புண்யபாப கர்மாக்களை ஸஞ்சித கர்மாக்கள் என்றும், ஆத்ம ஞானத்தை அடைந்த பிற்பாடு செய்யப்பட்டு, பலத்தைக் கொடுக்காமல், காலத்தை எதிர்பார்த்து வரும் புண்யபாப கர்மாக்களை ஆகாமிகள் என்றும், ஞானத்

திற்குக் காரணமான சரீரத்தையே பலமாகக் கொடுத்து அனுபவத்தில் இருந்துவரும் புண்யபாபங்களை ப்ராரப்த கர்மாக்களென்றும் மூன்று வகையாக கர்மாவானது சாஸ்த்ரங்களில் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இம்மூன்றுகளில், ஸஞ்சிதம், ஆகாமி இவ்விரண்டுகளுக்கும் ஞானத்தால் நாசம் ஏற்பட்டுவிடும். ஞானிகளிடம் இந்த இரண்டு கர்மாக்களும் ஞானக்னியால் எரிக்கப்பட்டதாக ஆகிறபடியால் இவ்விரண்டு கர்மாக்களின்மூலம் ஞானிகளுக்கு பந்தமேயில்லை. ப்ராரப்தத்தையோ, அனுபவித்துத்தான் தீரவேண்டும். ஞானஸாதனமான சரீரத்தை பலமாக கொடுத்த கர்மாவை ப்ராரப்த கர்மாவென்று முன் சொல்லியிருப்பதினால், ப்ராரப்த கர்மாவிற்கு ஞானத்தால் நாசமில்லை. பலத்தை அனுபவித்துத்தான் அதை நசிக்கச் செய்ய வேண்டும்.

ஒரு வீரன் வில்லில் பாணத்தைத் தொடுத்து எதிரியை அடிக்க யத்னம் செய்துகொண்டிருக்கிறான். ஆனால் வில்லிலிருந்து பாணத்தைவிடவில்லை. அவனை நாம் ஸமாதானம் செய்து பாணப்ரயோகம் செய்யாமல் செய்துவிடலாம். வில்லிலிருந்து பாணத்தை ப்ரயோகம் செய்த பிற்பாடு எவ்விதம் ஸமாதானம் செய்யமுடியும்? ப்ரயோகம் செய்யப்பட்டபாணம் எவ்வளவுதூரம் செல்லுகிறதோ, அவ்வளவுதூரம் சென்று வேகத்திற்கு நாசம்வந்தபிறகு, தானாகத்தான் விழவேண்டும். வில்லிலிருந்து ப்ரயோகம் செய்யப்பட்டு வெளிக்கிளம்பிய பாணம் ப்ராரப்த கர்மாவிற்கு த்ருஷ்டாந்தமாகஆகும். யாரும் ப்ராரப்தகர்மாவை அனுபவித்தே தீரவேண்டும். ஸ்ரீமத் பாகவதத்தில் ரிஷபயோகியினுடைய புத்ரனான பரதன் என்பவர், ப்ரம்ம ஸாக்ஷாத்காரத்தை அடைந்தவரானாலும், ப்ராரப்த கர்மாவினால் மானாகப் பிறந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோல்தான் ரிச்யச்ருங்க மஹர்ஷியும் மஹா ஞானியானாலும், க்ஷத்ரியனுடைய பெண்ணை கல்யாணம் செய்துகொண்டு, கார்ஹஸ்த்ய தர்மத்தில் இருந்துவரக்கூடிய ஒரு

நிலையும், தன் ப்ராரப்தகர்மாவின் வேகம் என்பதைத் தெரிந்து கொண்டுதான், அப் ப்ராரப்தத்தையும் சீக்கிரம் அனுபவித்து நசிக்கச் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் ராஜபுத்ரியை விவாஹம் செய்துகொள்வதற்கு அனுகூலமாக தாஸிகளின் ஆகமனம் என்று அறிந்து, தாஸிகளை சபிக்காமல் அனுஸரித்தே போனார். ரிச்யச்ருங்க மஹர்ஷியின் பிதாவான விபண்டக மஹர்ஷியும், இந்த பாவியான ப்ராரப்த கர்மாவின் வேகத்தை அறிந்தவரானதினால், பலானுபவத்தால் ப்ராரப்த கர்மாவிற்கு க்ஷயம் ஏற்படுவது நல்லதுதான் என்று நினைத்து, பேசாமலிருந்ததோடும்கூட அதற்கு உத்திரவும் கொடுத்தார். இதனால் தத்வத்தை அறிந்த ப்ரம்ம நிஷ்டனுக்கு,

यथापुष्करपलाशे आपः नशिष्मन्ते एवं एवं विदि

யஜாவுஷ்கரவலாஶெ ஆவஃ நஶிஷ்ஹெ ஏவம் ஏவம் விதி

யதாபுஷ்கரபலாசே ஆப: நசிஷ்மந்தே ஏவம் ஏவம் விதி

என்ற சாஸ்த்ரத்தில் சொல்லியபடி தாமரை இலையில் ஜலம் ஒட்டாததுபோல ஒரு தோஷமும் அண்டாது என்பது ஸித்தமாகும்.

இவ்விதம் இந்த இடத்தில் ஸமாதானம் சொல்லாத பக்ஷத்தில் தனது புத்ரனான ரிச்யச்ருங்க மஹர்ஷியினுடைய ப்ரம்மசர்யத்தை தாஸிகள் மூலம் கெடுக்கப்பட்ட விஷயத்தில் பிதாவான விபண்டக மஹர்ஷிக்கு ஏற்படும் கோபாக்னியை யாராலும் அடக்கமுடியாமல் ஆகிவிடும். தேசங்கள் பஸ்பமாக போயிருக்கும். அவ்விதம் ஒன்றையும் காணோம். ப்ராரப்த கர்மாவின் செயல் என்ற எண்ணத்துடன் சாந்தராகவே விபண்டக மஹர்ஷி இருந்துவிட்டார். இதுதான் ப்ரம்ம நிஷ்டர்களின் ஸ்வபாவமாகும். ரிச்யச்ருங்க மஹர்ஷியும் எல்லாவற்றையும் ப்ரம்மமாகவே பார்க்கிறவரானதினால், மஹானுபாவன்தான். வஸிஷ்டரைக் காட்டிலும் மிக மேன்மையோடுகூடியவரே. ஸநத்குமார

ஸ்வாமியினாலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஆகையால் ஸுமந்த்ரர் சொல்லியபடி தசரத சக்ரவர்த்தி ரிச்யச்ருங்க மஹர்ஷியின் ஸந்நிதியில் யாகத்தை ஆரம்பித்ததுதான் உசிதமாகும்.

அச்வமேதயாகத்திற்காக சுரு சுருப்பும், வேகமும் உள்ள குதிரையை விதிவத்தாக அவிழ்த்துவிட்டு, ஒரு ஸம்வத்ஸரம் ஆனபிற்பாடு ஸரயூ நதியின் வடகரையில், அச்வமேத யாகத்தை தசரத சக்ரவர்த்தியானவர், ரிச்யருங்க மஹர்ஷியையும், வஸிஷ்ட மஹர்ஷியையும் முன்னிட்டுக்கொண்டு ஆரம்பம் செய்தார். அந்த யக்ஞத்தில், வேத சாஸ்த்ரங்களில் ரொம்ப பாண்டித்யம் உள்ள மஹர்ஷிகள், ரித்விக்குக்களாக அமர்ந்து மீமாம்ஸா சாஸ்த்ரத்திற்கும் கல்பஸூத்ரத்திற்கும் விரோதமன்னியில் வைதீகமான கர்மாக்களை அநுஷ்டானம் செய்துவந்தார்கள். ப்ராதஸ்ஸவனம், மாத்யாந்நிகஸவனம் ஸாயம் ஸவனம் முதலான ஸத்கர்மாக்கள் ப்ரம்ம ரிஷிகளால் ஒழுங்காக நடத்தப்பட்டுவந்தன. அந்த அச்வமேதயாக ஸந்தர்ப்பத்தில், பல தேசங்களிலிருந்து மஹாவித்வான்களாகவும், ஆஹிதாக்னிகளாகவும் உள்ள ப்ராம்மணோத்தமர்கள் கூட்டம் கூட்டமாக வந்துகொண்டேயிருந்தார்கள். ப்ராம்மண ஸந்தர்ப்பணைகளும் அளவுமீறி நடந்தன. ப்ரயோகம்முடிந்த ஸமயங்களில் வித்வான்களான ப்ராம்மணர்கள் அன்றன்று நடந்த ப்ரயோகங்களின் தத்வங்களைப் பற்றி பூர்வபக்ஷ ஸித்தாந்தமூலமாக விசாரங்கள் செய்து நிர்ணயம் செய்தார்கள். யூபஸ்தம்பங்களும், சாஸ்த்ரத்தை அநுஸரித்து வில்வ வ்ருக்ஷத்திலிருந்தும், காதிபவிருக்ஷத்திலிருந்தும், தேவதாரு வ்ருக்ஷத்திலிருந்தும் நிர்மாணம் செய்யப்பட்டு, 21 யூபஸ்தம்பங்கள் விளங்கிவந்தன. வேத வேதாந்த பாரகாளான வஸிஷ்டர் முதலான ப்ராம்மணோத்தமர்கள் அச்வமேதத்திற்கு அர்ஹமான பட்டத்துக் குதிரையை ஸம்கமனம் செய்து, அதன்வபையை,

हृदयस्याग्रे अवद्यति अथ जिह्वाया अथ वक्षसः

ஹ்ருதயஸ்யாக்ரே அவத்யதி அத ஜிஹ்வாயா அத வக்ஷஸ:

ஹ்ருதயஸ்யாக்ரே அவத்யதி அத ஜிஹ்வாயா அத வக்ஷஸ:

என்ற க்ரமத்தை அநுஸரித்து தேவர்களுக்கு அக்னி முகமாக ஹோமம் செய்து, தேவர்களை த்ருப்தி செய்து வைத்தார்கள். அந்த அச்வமேதத்தில், ஜ்யோதிஷ்டோமம் என்ற க்ருதுவும் அதிராத்ரம் என்ற யாகமும் அபிஜித், விச்வஜித் என்ற யாகங்களும் அங்கங்களாக அநுஷ்டிக்கப்பட்டன. அந்த யாகத்தில் மாத்யான்ஹிக ஸவனத்தில் தசரத சக்ரவர்த்தியானவர் ஹோதா என்ற ரித்விக்குக்கு கிழக்கு திக்கிலுள்ள ராஜ்யத்தையும், அத்வர்யு என்ற ரித்விக்குக்கு மேற்கு திக்கிலுள்ள ராஜ்யத்தையும் ப்ரம்மாவுக்கு தெற்கு திக்கிலுள்ள ராஜ்யத்தையும் உத்காதாவுக்கு வடக்கு திக்கிலுள்ள ராஜ்யத்தையும் தக்ஷிணையாகக் கொடுத்தார். ராஜன் விசாலமான மனஸோடு ராஜ்யத்தையே தக்ஷிணையாகக் கொடுத்தாலும் ப்ராம்மணோத்தமர்கள் ராஜனைப் பார்த்து, "ராஜனே! இந்த பூமிகளை வைத்துக்கொண்டு நாங்கள் என்ன செய்யப்போகிறோம்? எங்களால் பரிபாலனம் செய்ய முடியுமா? நாங்களோ வேதாத்யயனத்திலும் வேதாந்தத்தின் அர்த்தத்தை விசாரம் செய்வதிலும் ஆஸக்தி உள்ளவர்கள். எங்கள் ஆசாரத்திற்கும் பூமியை பரிபாலனம் செய்வதற்கும் முற்றிலும் விரோதமானது. ஆகையால் தங்களிடமே நாங்கள் ஒப்புவித்து விடுகிறோம். தாங்கள் அதற்கு பதிலாக ஏதாவது மூல்யத்ரவ்யத்தைக் கொடுத்தால் போதும்"—என்று சொன்னார்கள். ராஜனும் அதைக் கேட்டு அவர்களுக்கு தக்ஷிணையாகக்கொடுத்த பூமியை திரும்பவும் பெற்றுக்கொண்டு, அதற்கு மூல்யமாக அநேக பசுக்களையும், நவரத்னங்களையும், ஸுவர்ணங்களையும் மஹர்ஷிகளுக்குக் கொடுத்து விட்டு மஹர்ஷிகளின் அநுக்ரஹத்தை ஸம்பாதித்துக் கொண்டார்.

தேசாந்தரங்களிலிருந்துவந்த ப்ராம்மணோத்தமர்களுக்கும், ஸுவர்ணங்களையும் ரஜிதங்களையும் ஸன்மானமாகக் கொடுத்தார். இவ்விதம் கொடுத்துக்கொண்டிருக்கும் ஸம

யத்தில் ஒரு தரித்ர ப்ராம்மணன் ராஜன் கையில் தரித்துக் கொண்டிருக்கும் நவரத்ன கசிதமான ஸுவர்ண கடகத்தை யாசித்தான். ராஜனும் உடன் அந்த ப்ராம்மணனுக்கு அந்த கடகத்தை கழட்டிக் கொடுத்துவிட்டார். அந்த அச்வ மேத யாகத்தில் தசரத சக்ரவர்த்தி செய்த தானம்போல் ஒருவரும் அவ்விதம் தானம் செய்ததில்லை. ப்ராம்மணர் களுக்கு வெகு த்ருப்தி ஏற்பட்டது. ரிஷிகள் அடைந்த ஸந்தோஷத்தை அளவிடமுடியாது. அதிதி ஜனங்களும் பூர்ணமான மனோரதத்தோடு திரும்பிச் சென்றார்கள். அச்வமேத யாகத்தின் அவப்ருதமும் ரொம்பவும் கோலாஹல மாக நடைபெற்றது.

பிறகு, ரிச்யச்ருங்க மஹர்ஷியின் முன்பாக புத்ர காமேஷ்டியாகம் ஆரம்பிக்கப்பட்டு, ரொம்பவும் ஒழுங் காக நடைபெற்று வந்தது. அபராஜிதம் என்ற வைகுண் டத்திற்கு அதிபதியான மஹாவிஷ்ணுவும் தான் பூமியில் அவதாரம் செய்து ராவணனையும் வதம் செய்து, லோகத் திற்கு நன்மையைச் செய்வதற்காகத் தீர்மானம் செய்து, தசரத சக்ரவர்த்தியின் புத்ரகாமேஷ்டியாகத்தை அதற்கு ஒரு வ்யாஜமாக ஏற்படுத்தி தேவாளுடைய, ப்ரார்த்தனை யும் அந்த யாகத்தின் மத்தியில் ஏற்படும்படி செய்து, பக வான் அவதாரம் செய்யத் தயாரானார்.

அதாவது, புத்ரகாமேஷ்டியாகம் நடக்கும் மத்தியில் இந்த்ரன் முதலான தேவர்கள், ப்ரம்மாவை முன்னிட்டுக் கொண்டு புத்ரகாமேஷ்டி யாகத்தின் ஹவிர்பாகத்தை வாங் கிக்கொள்ள யக்ஞசாலையில் ப்ரத்யக்ஷமாகவே ஆவிர்பவித் தார்கள். யாகசாலையில் ப்ரயோகம் நடந்துகொண்டிருக்கும் பொழுது, தேவர்கள் அவரவர்கள் தம் தம் ஆஸனத்தில் உட்கார்ந்துகொண்டு யக்ஞத்தின் பெருமையைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த ஸந்தர்ப்பத்தில், ப்ரம்மா வைப் பார்த்து இந்த்ரன் முதலான தேவர்கள் சொன்ன தாவது :—

"ஹே ப்ரம்மன்! தங்களுடைய வரபலத்தால், ராவணன் என்ற ராக்ஷஸன் ரொம்பவும் ப்ரபலனுயும் துஷ்டனுயும் ஆகிவிட்டான். எங்களை ஸ்வர்க்கத்திலிருந்தும் வெளியில் போகும்படி விரட்டுகிருன். யக்ஞத்தில் கிடைக்கும் ஹவிர்பாகத்தையும் எங்களுக்கு வந்து சேராமல் தடுக்கிருன். நாங்கள் படுகிற கஷ்டத்தை யாரிடம் சொல்லி கதறுகிறது. ஸூர்யபகவானே, வாயுவோ, ஸமுத்ர ராஜனே, மற்ற தேவர்களோ, அவரவர்களுடைய தொழிலை செய்யாமல் ராவணனுக்கு பயந்துகொண்டு கஷ்டப்படுகிருர்கள். அந்த ராவணனைத் கொல்வதற்கு, உபாயத்தைத் தேடவேண்டியது அவச்யமாகும்" என்று சொன்னுர்கள். ப்ரம்மாவும் அதைக்கேட்டு, "தேவர்களே! நான்அந்த ராவணனுக்கு வரம்கொடுத்தது வாஸ்தவம். தேவர்களாலும் அவனைக் கொல்ல முடியாது. மனுஷ்யன் ஒருவனைத் தவிர மற்ற யாராலும் அவனுக்கு ம்ருத்யுவை உண்டுபண்ண முடியாது தான். மனுஷ்யனை த்ருணமாக நினைத்து, அவன் வரம் கேட்கும் ஸமயத்தில் "மனுஷ்யாள் மூலமாய் எனக்கு மரணம் ஸித்திக்கக்கூடாது" என்று வரம் கேட்காமல் இருந்துவிட்டான். ஆகையால் பகவானுன மஹாவிஷ்ணுவே மனுஷ்யனுக பூலோகத்தில் அவதாரம் செய்து ராவணனைக் கொன்றுல்தான் நமக்கு க்ஷேமம் ஏற்படும். லோகத்திற்கும் நன்மை ஏற்படும்" என்று தேவர்களுக்குச் சொல்லி ஸமாதானப்படுத்தினர். தேவர்களும், ப்ரம்மாவின் வார்த்தையைக் கேட்டு இந்த யாகசாலையில் ப்ரம்மாவை முக்யமாய் வைத்துக்கொண்டு, மஹாவிஷ்ணுவை ஸ்தோத்ரம் செய்தார்கள். விஷ்ணுவோ, தேவர்களுடைய ஸ்தோத்ரத்திற்கு இணங்கி, தசரத சக்ரவர்த்தியின் மனோரதத்தை பூர்த்திசெய்து வைப்பதற்காகவும், அந்த புத்ர காமேஷ்டி யாக ஸமயத்தில் யக்ஞ சாலையில் தேவர்களுக்கு முன்பாக, திவ்யஸ்வரூபத்தோடு ஆவிர்பவித்தார்,

एतस्मिन्नन्तरे विष्णुः उपयातो महाद्युतिः
शंखचक्रगधापाणिः पीतवासा जगत्पतिः

𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌨𑍍𑌤𑌰𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌉𑌪𑌯𑌾𑌤𑍋 𑌮𑌹𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃
𑌶𑌂𑌖𑌚𑌕𑍍𑌰𑌗𑌦𑌾𑌪𑌾𑌣𑌿𑌃 𑌪𑍀𑌤𑌵𑌾𑌸𑌾 𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑌿𑌃

ஏதஸ்மிந்நந்தரே விஷ்ணு: உபயாதோ மஹாத்யுதி:
சங்கசக்ரகதாபாணி: பீதவாஸா ஜகத்பதி:

என்ற ச்லோகத்தால் மஹாவிஷ்ணுவானவர் ஆவிர்பவித்த தின் பெருமையை வால்மீகி மஹர்ஷியானவர் வெளிப்படுத்து கிறார். பகவானான விஷ்ணு ஸர்வ தேவர்களுக்கும் ஈச்வரன் ஸர்வக்ஞன். கருணாமூர்த்தியே ஆகிலும் தேவர்களோ மனுஷ் யர்களோ தன்னை ப்ரதீக்ஷிக்கும் ஸமயத்தை இவ்வளவு கால மாக எதிர்பார்த்து வந்தார். ப்ராணிகள் தாங்கள் வந்து தான் எங்களை ரக்ஷிக்கவேண்டும் என்று ப்ரார்த்திக்காமல் இருக்கும்பொழுது நாமாக போவது உசிதமில்லை என்று பகவான் எண்ணியிருந்தார். அழைத்தால்தான் போவது என்பது லோக வழக்கமல்லவா? அதை பகவானும் அனு ஸரித்தார். இப்பொழுது தேவர்கள் அழைத்தவுடன், பக வான் ஆவர்பவித்துவிட்டார். ஸகல சரீரத்திலேயும், அந் தர்யாமியாய் தான் இருப்பதால் ஜனங்களை ரக்ஷிப்பது தனது கடமையாகும், வைகுண்டத்தில் திவ்ய போகத்தை அனுபவிப்பதைக் காட்டிலும் பூலோகம் வந்து ப்ராணிகளை ரக்ஷிப்பதுதான் ச்ரேஷ்டம் என்று நினைத்து, உடன் பக வான் பூலோகத்திற்கு வந்தார். ப்ராணிகளை ரக்ஷிக்க தனக்கு ஸந்தர்ப்பம் வாய்த்ததே என்ற ஸந்தோஷத்தால் பகவானுடைய காந்தி விசேஷமானது அளவடங்காமல் பாஸித்துவந்தது. ‘இப்பொழுதே நான் ரக்ஷிக்கத் தயார்’ என்பதைக் காட்டுவதற்கு துஷ்ட நிக்ரஹத்திற்கு வேண் டிய சங்கம், சக்ரம், கதை முதலான ஆயுதங் களையும் தரித்துக்கொண்டு நான்கு கைகளுடன் ஆவிர் பவித்தார். ஸர்வ ஜகத்திற்கும் அவர் ஸ்வாமியானதால் ஜகத்தை ரக்ஷிப்பதில் அவர் இவ்விதம் உத்ஸாஹத்தை அடை வதில் ஆச்சர்யமல்ல. வைகுண்டத்தினின்றும், தசரத சக்ர வர்த்தியின் யக்ஞசாலைக்கு வந்தார். இவ்விதம் ஆவிர் பவித்த பகவானை, ப்ரம்மா முதலான தேவர்கள் ப்ரதக்ஷிண

நமஸ்காராதிகளால் ஸந்தோஷிக்கச் செய்து, அஞ்சலிபந் தத்துடன் ஸ்தோத்ரமும் செய்துவிட்டு பகவானை ப்ரார்த் தித்துக்கொண்டார்கள். "ஹே! ப்ரபோ! தங்களை, நாங் கள் உத்ஸாஹப்படுத்துகிறோம். ஆக்ஞாபனம் செய்வதாய் நினைத்துக்கொள்ளக்கூடாது. லோகத்தினுடைய நன்மை யைக் கருதி தசரத சக்ரவர்த்தியினுடைய மனைவிகளான கௌஸல்யா தேவி, ஸுமித்ரா தேவி, கைகேயி தேவி, என்ற மூன்று பட்ட மஹிஷிகளிடம் உன்னுடைய ஸ்வரூபத்தை யும், உன்னுடைய உபகரணங்களையும், நான்கு புத்ரர்களாக பிறக்கும்படி செய்துகொண்டு, எங்களை ரக்ஷிக்கவேண்டும். தசரத சக்ரவர்த்தியின் மனைவிகளோ,

ह्रीः श्रीः कीर्तिः 𑌹𑍍𑌰𑍀𑌃 𑌶𑍍𑌰𑍀𑌃 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌃 ஹ்ரீ: ச்ரீ: கீர்த்தி: என்று வேதங் களில் சொல்லப்படும், தேவதைகளுக்கு ஸமானமான வைப வம் உள்ளவர்கள். அவர்களிடம் நீ புத்ரனாக ஆவர்பவிப் பது சாஸ்த்ர ஸம்மதமாகவே ஆகும். அவ்விதம் மனுஷ்ய னாக அவதாரம் செய்து, லோகசத்ருவான ராவணனையும் வதம் செய்து, லோகத்தையும் எங்களையும் ரக்ஷிக்க வேண்டும்.

त्वं गतिः परमादेवा सर्वेषां नः परंतप
वधाय देवशत्रूणां नृणां लोके मनः कुरु

𑌤𑍍𑌵𑌂 𑌗𑌤𑌿𑌃 𑌪𑌰𑌮𑌾𑌦𑍇𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌨𑌃 𑌪𑌰𑌂𑌤𑌪
𑌵𑌧𑌾𑌯 𑌦𑍇𑌵𑌶𑌤𑍍𑌰𑍂𑌣𑌾𑌂 𑌨𑍃𑌣𑌾𑌂 𑌲𑍋𑌕𑍇 𑌮𑌨𑌃 𑌕𑍁𑌰𑍁

த்வம் கதி: பரமாதேவா ஸர்வேஷாம் ந: பரந்தப
வதாய தேவசத்ரூணாம் ந்ருணாம் லோகே மந: குரு

ருத்ரன், ப்ரம்மா, முதலான தேவர்கள் இருந்தாலும் நீ தான் எங்களுக்கு மேலானகதி. நாங்கள் ஸௌக்யத்தை அடைய முக்யமான உபாயமாக ஆகிறாய். சத்ருக்களைக் கொல்லக்கூடிய சக்தி உனக்குத்தான். மற்ற எந்த தேவர் களாலும் முடியாது. ஆகையால் தேவசத்ருவான ராவ ணன் முதலானவர்களை கொல்வதற்காக, மனுஷ்ய லோகத்

தில் அவதரிப்பதற்கு நீ நல்லமனதைச் செய்யவேண்டும்” என்று ப்ரம்மா முதலான தேவர்கள் விஷ்ணுவை சரணுகதி செய்து, வேண்டிக்கொண்டார்கள். விஷ்ணுவும் அவர்களுடைய ப்ரார்த்தனைக்கு இணங்கி பரம ஸந்தோஷத்துடன் ப்ரம்மா முதலான தேவர்களைப் பார்த்து சொன்னதாவது :—

“தேவர்களே! பயத்தை விட்டுவிடுங்கள். நான் அவதரித்து, ராவணனை குலத்துடன் வதம் செய்கிறேன். அவனை வதம் செய்தபிறபாடும் 11,000 வருஷம்வரை பூலோகத்தில் இக்ஷ்வாகு வம்ச ராஜ்யஸ்ரீயை பட்டாபிஷேகம் செய்துகொண்டு, தர்ம ஸ்தாபனம் செய்துவருகிறேன்” என்று சொன்னார். இவ்விதம் சொல்லிவிட்டு, மஹாவிஷ்ணுவும், தான் புத்ரனுய் பிறப்பதற்குப் புண்யவானுன பிதா யார்? என்பதை ஆலோசித்தார். சற்றுநேரம் யோசித்துவிட்டு,

तपः पद्मपलाशाक्षः कृत्वात्मानं चतुर्विधं
पितरं रोचयामास तदादशरथं नृपं

𑌤𑌪𑌃 𑌪𑌦𑍍𑌮𑌪𑌲𑌾𑌶𑌾𑌕𑍍𑌷𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌂
𑌪𑌿𑌤𑌰𑌂 𑌰𑍋𑌚𑌯𑌾𑌮𑌾𑌸 𑌤𑌦𑌾𑌦𑌶𑌰𑌥𑌂 𑌨𑍃𑌪𑌂

தப: பத்மபலாசாக்ஷ: க்ருத்வாத்மாநம் சதுர்விதம்
பிதரம் ரோசயாமாஸ ததாதசரதம் ந்ருபம்

என்ற ச்லோகத்தை அநுஸரித்து தசரத சக்ரவர்த்தியினுடைய புண்ய விசேஷத்தையும், கல்யாண குணங்களையும், தெரிந்துகொண்டு பரம ஸந்தோஷத்தையும் அடைந்து, ஸகல தேவர்களாலும் ஆசைப்படத்தகுந்த அழகான கண்களோடுகூடின பகவான் ஸ்ரீ மஹாவிஷ்ணு, தசரத சக்ரவர்த்தித் தனக்கு பிதாவாக ஆக ஆசைபட்டார். எவ்விதம் அடிக்கடி பிறப்பவனுக்கு, பிறக்காமல் இருக்கவேண்டும் என்ற ஆசை ஏற்படுமோ, அதுபோல் பிறப்பில்லாத பகவானுக்கு பிறக்கவேண்டும் என்று ஆசை ஏற்பட்டது! தசரதருடைய தவத்தின் மஹிமையால் பிறப்பில்லாத பக

வானும் அவரிடம் பிள்ளையாய் பிறக்க ஆசைப்பட்டார் என்பது ஒரு பெரிதல்ல. அந்த ராஜனுடைய புண்யத்தின் பெருமையால், அவருக்கு நாம் ஒரு சரீரத்துடன் ஸந்தோஷப்படுத்தினல் போதாது, நான்கு சரீரங்களுடன் நான்கு குமாரர்களாக பிறந்து, அவருக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ண வேண்டுமென்ற எண்ணத்துடன் தனது ஸ்வரூபத்தை நான்கு பாகங்களாகச் செய்துகொள்ளவும் இச்சித்தார்.

पिता पुत्रेण पितृमान्

𑌪𑌿𑌤𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑍇𑌣 𑌪𑌿𑌤𑍃𑌮𑌾𑌨𑍍

பிதா புத்ரேண பித்ருமான்

என்ற சாஸ்த்ரத்தை அநுஸரித்து, தகப்பன் தன் பிள்ளையினிடம் பிள்ளையாகப் பிறந்து, தன் புத்ரனை பிதா என்று அழைக்கிருன் என்று தெரிகிறது. அந்த சாஸ்த்ரம் ப்ரக்ருதத்தில் ஸத்யமாகிறது. ஏனெனில், பகவானுன மஹாவிஷ்ணு ஸகல லோகத்திற்கும் பிதாவாக ஆகிருர்; லோகத்திற்குட்பட்ட தசரதருக்கும் அந்த விஷ்ணு பிதாதான்; அதனுல் தசரதர் விஷ்ணுவிற்கு பிள்ளையாகவே ஆகிருர்; தன் பிள்ளையான தசரதரையே, தனக்குப் பிதாவாக பகவான் கருதினுர். இதனுல் पिता पुत्रेण पितृमान् (𑌪𑌿𑌤𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑍇𑌣 𑌪𑌿𑌤𑍃𑌮𑌾𑌨𑍍) (பிதா புத்ரேண பித்ருமான்) என்ற சாஸ்த்ரம் ப்ராமாண்யத்தை அடைகின்றது.

गुणैः दशरथोपमं (𑌗𑍁𑌣𑍈𑌃 𑌦𑌶𑌰𑌥𑍋𑌪𑌮𑌂) (குணை: தசரதோபமம்) என்றதால் பகவானுன விஷ்ணு புத்ரனுய் பிறந்த பின்பு அவருடைய குணங்களுக்கு, தசரதருடைய குணங்களையே உபமானமாக வர்ணிப்பதிலிருந்து தசரத சக்ரவர்த்தி மஹா புண்யவான் என்று தெரிகிறது. தசரத சக்ரவர்த்தியைத் தவிற, வேறு யாரும் தனக்குப் பிதாவாக பாக்யம் செய்தவன் இல்லை என்று பகவான் தீர்மானித்தார்.

இவ்விதம் தசரத சக்ரவர்த்தியின் விஷயத்தில் பகவானுக்கு ஏற்பட்ட கருணையைக் கவனித்தால், தசரத சக்ரவர்த்தி மஹாதபஸ்வி என்று வெளியாகிறது. இவ்விதம் பகவான் தீர்மானித்த பிறகு ருத்ரன் ப்ரம்மா முதலான தேவர்கள், பகவானுடைய சரணத்தில் ப்ரபத்தி செய்து, பரமக்ரூரனுன ராவணனை வதம் செய்து தங்களை ரக்ஷிக்க வேண்டும் என்றும் ஸ்தோத்ரம் செய்து ப்ரார்த்திக்கொண்டார்கள்.

மஹாவிஷ்ணுவானவர் முன்சொன்னபடி தேவர்களுக்கு அபயப்ரதானம் செய்துவிட்டு, அந்தர் த்யானத்தை அடைந்தார். யாகசாலையில், ரிச்யச்ருங்க மஹர்ஷியினுடைய ஸந்நிதியில் புத்ரகாமேஷ்டி யாகமானது ரொம்பவும் விமர்சையாக நடைபெற்று வந்தது. யாகத்தில் ப்ரதானமான ப்ரோடாசாதி ஹோமம் செய்தவுடன்,

ततो वै यजमानस्य पावकात् अतुलप्रभं
प्राविर्भूतं महद्भूतं महावीर्यं महाबलं

ததொ வெ யஜஊாநஸ்ய வாவகாக் அதுலுவுஹ.
வுாவிஹ்ஊதம் ஊஹஜ்ஊதம் ஊஹாவீயஂ ஊஹாபலு.

ததோ வை யஜமாநஸ்ய பாவகாத் அதுலப்ரபம்
ப்ராவிர்பூதம் மஹத்பூதம் மஹாவீர்யம் மஹாபலம்

என்றது முதலான ச்லோகங்களில் சொல்லியபடி அக்னியிலிருந்தும், விசேஷமான ஒரு மஹாபுருஷன் தங்கமயமான பாத்ரத்தில் திவ்யமான பாயஸத்தை தரித்துக்கொண்டு, ஆவிர்பவித்தார். அந்த மஹாபுருஷனே நிகரற்ற காந்தியோடு கூடினவராயும், மஹா பலிஷ்டராயும், நீலமேகச்யாமளராயும், பீதாம்பரத்தை தரித்துக்கொண்டவராயும், ஸாமுத்ரிகா லக்ஷணத்தில் சொல்லப்பட்ட ஸகல லக்ஷணங்களும் பொருந்தினவராயும், ஸகலவிதமான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவராயும், விளங்கிவந்தார். அவர் கையில் தரித்துக்கொண்டிருக்கும் பாயஸ பாத்ரமோ,

வெள்ளியினால் ஒரு பெரிய தாம்பாளமும், அதில் தங்க மயமான ஒரு கூஜாவில் திவ்ய பாயஸமானது பூர்ணமாக நிறைக்கப்பட்டு, விளங்கிவந்தது. அந்த பாயஸமோ மஹா விஷ்ணுவினுடைய யோகமாயை என்று சொல்லப்படும். மாயையானது ஈச்வரனுடைய இச்சையை அநுஸரித்து எவ்விதமாக வேண்டுமானாலும் பரிமளிக்கச் சக்தியுள்ள தானதால், அதாவது முன் உருவத்தை விட்டு வேறொரு உருவம் எடுத்துக்கொள்ள ஸாமர்த்யம் உள்ளதானதால், விஷ்ணுவினுடைய ஸந்நிதியில் பாயஸ ரூபமாக பரிண மித்து விளங்கியது. அந்த மாயைக்கு ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று மூன்று குணங்கள் உண்டு. அவைகளில் தமோகுண மானது வெள்ளிப் பாத்ரமாகவும், ரஜோ குணமானது தங்கக் கூஜாவாகவும், ஸத்வ குணமானது அதிலுள்ள திவ்ய பாயஸ மாகவும் பரிணமித்திருக்கிறது. அந்த பாயஸ பாத்ரத்தை கையிலெடுத்துக்கொண்டு அக்னியிலிருந்து ஆவிர்பவித்த புருஷனே ஸ்ருஷ்டியினுடைய ஆதியில் முதன்மையாக மஹாவிஷ்ணுவினால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட **ஹிரண்ய கர்பன்** என்று சொல்லப்படும் ஸகுண ப்ரம்மமாகும். இந்த விஷ யத்தில்,

यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदागंश्च प्रहिणोति तस्मै
तं ह देवं आत्मबुद्धि प्रकाशं मुमुक्षुरिह वै शरणमहं प्रपद्ये ।

𑌯𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌵𑌿𑌦𑌧𑌾𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌯𑍋 𑌵𑍈 𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑍍𑌚
𑌪𑍍𑌰𑌹𑌿𑌣𑍋𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑍈
𑌤𑌂 𑌹 𑌦𑍇𑌵𑌂 𑌆𑌤𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌿 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌰𑌿𑌹
𑌵𑍈 𑌶𑌰𑌣𑌮𑌹𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ।

யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாகம்ச்ச
ப்ரஹிணோதி தஸ்மை

தம் ஹ தேவம் ஆத்மபுத்தி ப்ரகாசம் முமுக்ஷுரிஹ வை
சரணமஹம் ப்ரபத்யே ।

என்ற ச்ருதியே ப்ரமாணமாகும். ஈச்வரனுனவன், ஸ்ருஷ்டியினுடைய ஆதியில் ஹிரண்ய கர்பனை ஸ்ருஷ்டித்து, அந்த ஹிரண்யகர்பனுடைய மனதில் வேத சாஸ்த்ரங்களை ப்ரகாசிக்கும்படி அநுக்ரஹம் செய்தான் என்றே மேற் சொன்ன ச்ருதியின் தாத்பர்யமாகும். அந்த ஈச்வரனுல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஹிரண்ய கர்பன் என்ற மஹா புருஷன் தான், பாயஸ பாத்ரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, விஷ்ணுவினுடைய ஆக்ஞையால், புத்ரகாமேஷ்டி நடக்கும் யாகசாலையில் அக்னியிலிருந்தும் ப்ராஜாபத்ய புருஷனுக ஆவிர்பவித்தான் என்பது நிச்சயமாக வெளியாகிறது. அந்த பாத்ரத்திலுள்ள பாயஸமோ மாயை என்றே சொல்லவேண்டும். அதிலும், ஸ்ரீமத் ராமாயணத்திலேயே, பாலகாண்டத்தில் **16**-வது ஸர்க்கத்தில் **15**-வது ச்லோகத் தில்,

प्रगृह्य विपुलां दोर्भ्यां स्वयं मायामयीमिव

𑌪𑍍𑌰𑌗𑍃𑌹𑍍𑌯 𑌵𑌿𑌪𑍁𑌲𑌾𑌂 𑌦𑍋𑌰𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌮𑌾𑌯𑌾𑌮𑌯𑍀𑌮𑌿𑌵

ப்ரக்ருஹ்ய விபுலாம் தோர்ப்யாம் ஸ்வயம் மாயாமயீமிவ

என்றுள்ள வாக்யமே ப்ரமாணமாகும்.

मायामयीमिव (𑌮𑌾𑌯𑌾𑌮𑌯𑍀𑌮𑌿𑌵) (மாயாமயீமிவ) என்ற சப்தத்திற்கு,

मयामयीं इव शब्द एव अर्थे भगवतः मायैवेत्यर्थः

𑌮𑌯𑌾𑌮𑌯𑍀𑌂 𑌇𑌵 𑌶𑌬𑍍𑌦 𑌏𑌵 𑌅𑌰𑍍𑌥𑍇 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌮𑌾𑌯𑍈𑌵𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃

மயாமயீம் இவ சப்த எவ அர்தே பகவத: மாயைவேத்யர்த:

என்ற திலக வ்யாக்யானத்தை வித்வான்கள் பார்த்து அறிந்து அநுமோதிக்கவேண்டும். ப்ராக்ருதமான பாயஸத்திற்கு ப்ரக்ருதத்தில் அவஸரமேயில்லை. பகவானுடைய அவதா ரத்தில் சரீரமும், மாயாமயம் என்றது ஸகல ச்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸ, புராண ப்ரஸித்தமானது.

इन्द्रो मायाभिः पुरुरूपऽयिते

ஊ ெ.ந்ஜ ஊாயா ஹி: வ ு ரு ு ரு ெவ ஃயிெத

இந்த்ரோ மாயாபி: புருரூபஅயிதே

என்ற ச்ருதியையும்,

अजोऽपिस्सन् अव्ययात्मभूतानां इश्वरोपिसन्

प्रकृतिं स्वां अवष्टम्य संभवामि आत्म मायया

ஃஜொஃவிஸ்ஸந ஃவ்யயாத்ஹ ூதாநாம் ஊஶ்வொவிஸந

வ்ரக்ருதிம் ஸ்வாம் ஃவஷ்ஃ்ய ஸம்ஹவாஊி ஆத்ஊ ஊாயயா

அஜோஅபிஸ்ஸங் அவ்யயாத்மபூதாநாம் இச்வரோபிஸங்

ப்ரக்ருதிம் ஸ்வாம் அவஷ்டம்ய ஸம்பவாமி ஆத்ம மாயயா

என்ற ஸ்ம்ருதியையும் கவனித்தால் பகவானுடைய சரீரம் மாயாமயம்தான் என்பதில் ஸந்தேஹமே ஏற்படாது. இவ்விதமான பாயஸத்தை அந்த ப்ராஜாபத்ய புருஷன் தசரத ராஜனிடம் அர்ப்பணம் செய்து "ராஜனே! நான் ப்ராஜாபத்ய புருஷன் என்று நீ அறியவேண்டும். ஸகல ப்ரஜைகளையும் பரிபாலனம் செய்கிற மஹாவிஷ்ணுவே ப்ரஜாபதியாக ஆகுவார். அவரால் ஸ்ருஷ்டிக்கப்பட்டு, அவருடைய அம்சமாக நான் விளங்கிவருகிறபடியால், ப்ராஜாபத்யன் என்று என்னைச் சொல்லுவார்கள். இப்பவும் அந்த ப்ரஜாபதியான விஷ்ணுவாலேயே அனுப்பப்பட்டு வந்தேன். இந்த பாயஸத்தை உன்னுடைய தர்மபத்னிகளிடம் விபாகம் செய்து, ப்ராசனம் செய்யும்படிகொடு. கர்பம் ஏற்பட்டு திவ்யபுத்ரர்களை நீ அடையலாம்" என்று சொல்லிவிட்டு தசரதருடைய கையில் பாயஸ பாத்ரத்தைக் கொடுத்துவிட்டு, தசரத சக்ரவர்த்தியினுலேயும் விதிவத்தாக பூஜிக்கப்பட்டு, பின்பு அந்த ப்ராஜாபத்ய புருஷன், அக்னியிலேயே அந்தர்த்யானத்தை அடைந்தார்.

தசரத சக்ரவர்த்தியும், அந்தப்புரம் சென்று, தனது பட்டமஹிஷிகளில் முதல் பட்டமஹிஷியான கௌஸல்யா

தேவியினிடம் "இந்த பாயஸத்தை நீ ப்ராசனம் செய்தால் திவ்ய புத்ரலாபத்தை அடையலாம். அக்னியிலிருந்து ஆவிர்பவித்த ப்ராஜாபத்யன் மூலமாக இந்த பாயஸம் கிடைத்தது" என்று சொல்லிவிட்டு, அந்த ஸுவர்ணபாத்ரத்திலுள்ள பாயஸத்தை பாதிபாயஸமாக பிரித்து, அர்தாம்சத்தை கௌஸல்யா தேவிக்குக் கொடுத்தார். பிறகு ஸுமித்ரையை அழைத்து, தன் கையிலிருக்கும் அர்தாம்சத்தை இரண்டு பாகங்களாகப் பிரித்து கால் அம்சத்தை, ஸுமித்ரைக்கும், மீதமுள்ள கால் அம்சத்தை இரண்டாக பிரித்து $\frac{1}{8}$ பாகத்தை கைகேயி தேவி என்ற பட்டமஹிஷிக்கும் கொடுத்தார். மறுபடியும் மீதமுள்ள $\frac{1}{8}$ பாகத்தை ஸுமித்ரா தேவியினிடம் கொடுத்தார். மூன்று பத்னிகளையும் ஸமமாகச் பாவிக்கக்கூடாது என்ற சாஸ்த்ரத்தை அநுஸரித்து கௌஸல்யா தேவிக்கு அர்த்தாம்சத்தையும், ஸுமித்ரா தேவிக்கு முதலில் $\frac{1}{4}$ பாகமும் பிறகு $\frac{1}{8}$ பாகமும் ஆக மொத்தம் $\frac{3}{8}$ பாகமும், கைகேயி தேவிக்கு $\frac{1}{8}$ பாகமுமாக அந்த பாயஸத்தை விபாகம் செய்து கொடுத்ததால் மூன்று பேர்களுக்கும் ஸன்மானத்தில் தாரதம்யம் ஏற்பட்டு, முதல் மஹிஷி, இரண்டாவது மஹிஷி, மூன்ருவது மஹிஷி என்ற விபாகம் ஸித்தித்தது. அவ்விதமிருந்தால்தான், அந்த விபாகமானது சாஸ்த்ர ஸம்மதமாக ஆகும். ஈச்வர அவதாரத்திற்கு காரணமாகும் என்றும் தெரிகிறது.

समासमाम्यां विषमेसमे पूजातः प्रच्युतो भवति

ஸமாஸமாஞ்யாம் விஷமெஸமெ வூஜாதஃ ப்ரச்யுதொ ஹவதி

ஸமாஸமாம்யாம் விஷமேஸமே பூஜாத: ப்ரச்யுதோ பவதி

என்ற சாஸ்த்ரமானது, பூஜாவிஷயத்தில், அதாவது பஹுமான விஷயத்தில் தாரதம்யம் அவச்யம் வேண்டும் என்று சொல்கிறது. அதாவது ஒரு ப்ராம்மணன் ஸாங்கமாக வேதத்தையும் அத்யயனம் செய்து, சாஸ்த்ரங்களையும் படித்து, இதிஹாஸ புராணங்களிலேயும் பயிற்சி செய்து,

பரம ச்ரோத்ரியனுக இருந்து வருகிறுன். மற்ெறாரு ப்ராம்மணன் வேதாத்யயனமே செய்யவில்லை. சாஸ்த்ரங்களில் பயிற்சி செய்தவன்தான். இதிஹாஸ புராணங்களில் நல்ல ஞானம் உண்டு. ச்ரோத்ரியனுமே. இவர்களிருவர்களை யும், வஸத்ரங்களாலோ, தனுதிகளாலோ, ஸமமாக பஹுமானம் செய்து பூஜித்தவன் தன்னுடைய ஸகல தபஸ்ஸை யும் இழந்து நரக துக்கத்தை அனுபவிக்கிறவனுக ஆகிறுன். மேல் சொன்ன இரண்டு ப்ராம்மணர்களும் அஸமாள். ஒருவனிடம் ஸாங்கவேதாத்யயனம் அதிகமாகவும், மற்ெறாருவனிடம் அது இல்லாமலும் இருக்கிறது. அதனுல் அவர்களிருவர்களும் யோக்யதையில் ஸமானமானவர்களல்ல. அவர்களை, பூஜையில் ஸமமாகச் செய்தால், அது மஹாபாபமாகத்தான் ஆகும். அப்படியே, இரண்டு ப்ராம்மணர்கள் வேதம், சாஸ்த்ரம், இதிஹாஸ புராணங்கள், அனுஷ்டானம், இவைகளில் ஸாம்யத்தை அடைந்தவர்கள். அவர்கள் ஸமாள் என்று சொல்லப்படும். அவர்களுக்கு ஒருவனுக்கு பஹுமானம் அதிகமாகச் செய்து, மற்றவனுக்கு பஹுமானம் குறைவாகச் செய்தால், பூஜையில் ஸமாளை விஷமாளாகச் செய்ததாக ஆகும். அதுவும் மஹாபாபம்தான். அதனுல், அவ்விதம் செய்தவனும் நரகத்திற்கு போகிறுன் என்று மேல்சொன்ன ஸமாஸமாப்யாம் என்ற சாஸ்த்ரத்தின் தாத்பர்யமாகும். இதில் தசரத சக்ரவர்த்தி மஹாவித்வானுயிருக்கும் காரணத்தால், இவ்விஷயத்தை அறிந்து தனது மஹிஷிகளில் உத்தம மஹிஷி, மத்யம மஹிஷி, அதம மஹிஷி என்ற தாரதம்யத்தை அனுஸரித்து, பாயஸ ப்ரதானத்திலும் தாரதம்யம் வேண்டும் என்ற எண்ணத்தால், கௌஸல்யா தேவிக்கு அதிகமாகவும், ஸுமித்ரா தேவிக்கு அதற்குக் குறைவாகவும், கைகேயி தேவிக்கு அதற்கும் குறைவாகவும் கொடுத்தார். இதனுல் தசரத சக்ரவர்த்தி செய்த பாயஸ ப்ரதானமானது சாஸ்த்ரத்தை அனுஸரித்ததாகவே ஆகிறது. பகவானுடைய அவதாரத்திற்கு யாதொரு

ஸந்தேஹமும் ஏற்பட ந்யாயமில்லே. அந்த பாயஸ ப்ரதானத்தினுடைய விபாகத்தை, தாரதம்யத்தை அநுஸரித்து வால்மீகி மஹர்ஷி ஒருவர்தான் சாஸ்த்ர ப்ரகாரம் சொல்லியிருக்கிறுர். மற்ற கவிகள் பாயஸபிரதானத்தைப் பற்றி சொல்லியிருக்கும் விஷயம் ஸரியாகவே ஆகாது. சில கவிகள் "ஸமானமாக மூன்று பத்னிகளுக்கும் பாகம்செய்து பாயஸத்தை கொடுத்தார்" என்று சொல்லியிருக்கிறுர்கள். அவ்விதமானுல் அஸமானுக்கு பூஜையில் ஸாம்யத்தை செய்த மஹாபாபம் தசரத சக்ரவர்த்திக்கு ஏற்பட்டு, அதனுல் பகவதவதாரத்திற்கு அவகாசமே இல்லாமலே போய்விடும். ஆகையால் அந்தக் கவிகளின் அபிப்ராயங்களெல்லாம் ஸரியல்ல. வால்மீகி மஹர்ஷி சொன்னபடிதான் பாயஸ ப்ராதானவிபாகத்தை சாஸ்த்ர ஸம்மதமென்று அறியவும்.

இவ்விதம் தசரத சக்ரவர்த்தியானவர் மனேவிகளுக்கு பாயஸ விபாகம் செய்த பின்பு, அவருடைய மனேவிகள் தங்களுக்கு ஒரு பஹுமானமாக நினேத்து பரம ஸந்தோஷத்துடன்கூடினவர்களாக இருந்துகொண்டு, காலக்ரமமாக அவரவர்கள் கர்பத்தையும் தரித்தார்கள். ராஜனும், கௌஸல்யா தேவி முதலான மூன்று பட்டமஹிஷிகளேயும் கர்பிணிகளாக இருந்துவருவதைப் பார்த்து பரம ஸந்தோஷத்தை அடைந்தார். 'தனது மனேரதமும் பூர்த்தியாகிவிட்டது' என்று எண்ணினுர்.

பகவானுடைய அந்தர்த்யானத்திற்கு பிறபாடு இரண்டு கார்யங்கள் முக்யமாய் ஏற்பட்டன. அவைகளில் அக்னியிலிருந்தும் பாயஸ பாத்ரத்தை க்ரஹித்துக்கொண்டு ப்ராஜாபத்ய புருஷன் ஆவிர்பவித்ததும், அதையொட்டி தசரத சக்ரவர்த்தியானவர் பாயஸத்தை விபாகம் செய்து தனது தர்மபத்னிகளுக்குக் கொடுத்து அவர்கள் பூர்ண கர்பத்தைத் தரித்தார்கள் என்பது முதல் கார்யமாகும். அதை முன்பு சொல்லியாய்விட்டது. இரண்டாவதோ ப்ரம்மாவானவர் தேவர்களேப் பார்த்து அங்காங்கு வானரங்களாகவும், கரடி

களாகவும் உண்டாகவேண்டும் என்று கட்டளேயிட்டதே. அந்த இரண்டாவது கார்யத்தை இப்பொழுது விஸ்தரிக்கிருர்.

ப்ரம்மாவினுடைய ஆக்ஞையை அனுஸரித்து தேவ ஸ்த்ரீகளும் கந்தர்வ ஸ்த்ரீகளும், யக்ஷ ஸ்த்ரீகளும், பந்நக ஸ்த்ரீகளும், வித்யாதர ஸ்த்ரீகளும், கிந்நர ஸ்த்ரீகளும் வானர யோனிகளில் ஸ்த்ரீகளாக பிறந்து அங்காங்கு திவ்ய ரூபத்துடன் பூலோகத்தில் ஸஞ்சரித்துவந்தார்கள். தேவர்கள் முதலானவர்களும் வானரங்களில் புருஷர்களாக அவதரித்து அந்தந்த ஸ்த்ரீகளுடன் அந்தந்த தேவர்கள் வானரர்களே புத்ரர்களாக உண்டுபண்ணிஞர்கள். ஸ்ருஷ்டியினுடைய ஆதி காலத்தில் ப்ரம்மாவினுடைய ஜ்ரும்பணத்திலிருந்தும் (கொட்டாவிவிட்டதிலிருந்தும்) ஜாம்பவான் என்ற கரடிகளுக்கு ராஜாவான ஒரு மஹா புருஷன் உண்டாகி, மஹா பராக்ரம சாலியாய் பூலோகத்தில் ராமருடைய ஆகமனத்தை எதிர் பார்த்துக்கொண்டு அங்கங்கே ஸஞ்சரித்துக்கொண்டுவந்தார். அவ்விதமே, தேவேந்த்ரன் வாலியை உண்டுபண்ணினுன். ஸூர்யன் ஸுக்ரீவனேயும், ப்ரஹஸ்பதி பகவான் தாரன் என்ற வானரத்தையும், குபேரன் கந்தமாதனன் என்ற வானரத்தையும், விச்வகர்மா நளன் என்ற வானரத்தையும், அக்னி பகவான் நீலன் என்ற வானரத்தையும், அச்வினி தேவதைகள் மைந்தன் த்விவிதன் என்ற இரண்டு வானரங்களேயும், வருணன் ஸுஷேணன் என்ற வானரத்தையும், பர்ஜன்யன் என்ற மழைக்கு அபிமானியான தேவதை சரபன் என்ற வானரத்தையும், வாயுபகவான் ஹனுமான் என்ற மஹானுபாவனேயும், க்ரமமாக உண்டுபண்ணிஞர்கள். வானர ரூபிகளான அந்தந்த தேவர்களால் வாநர ரூபிணிகளான அந்தந்த தேவ ஸ்த்ரீகளிடம் உண்டுபண்ணப்பட்ட வானரர்கள் அளவிட முடியாதவர்களாகவும், நினேத்த மாத்ரத்தில் எவ்விதமான ரூபத்தையும் எடுத்துக்கொள்ள சக்தியுள்ளவர்களாகவும், பெரும் மலேயைப்போல் நாளுக்குநாள் வ்ருத்தி

அடைபவர்களாகவும், ராவணனைக் கொன்று லோகத்திற்கு நன்மையைச் செய்து ரக்ஷிக்க பரம உத்ஸாஹம் உள்ளவர்களாகவும் விளங்கிவந்தார்கள். சில தேவர்கள் புருஷக் கரடிகளாக ஆவிர்பவித்து, பெண் கரடிகளாக ஆவிர்பவித்த தேவஸ்திரீகளிடம், அநேக பலவான்களான கரடிகளையும் உண்டுபண்ணினார்கள். அவர்களுடைய ஸங்க்யை இவ்வளவுதான் என்பதும் அளவிலடங்காததே ! இந்த்ரனுடைய புத்ரனான வாலியையும், ஸூர்யனுடைய புத்ரனான ஸுக்ரீவனையும், ப்ரதானமாக வைத்துக்கொண்டு அவர்களுடைய ஆதீனத்தில் மற்றவர்கள் இருந்துவந்தார்கள்.

இவ்விதம் வானர ஸேனைகள் பூமண்டலம் முழுமையும் ஆக்ரமித்துக்கொண்டு பரம உத்ஸாஹத்துடன் விளங்கிவந்தார்கள் என்ற கதையுடன் பாலகாண்டத்தின் 17-வது ஸர்க்கம் முற்றிற்று.

18-வது ஸர்கம்.

ஸ்ரீ ராமாவதாரம்.

அச்வமேதயாகமும், புத்ரகாமேஷ்டியும் முடிந்த பிற்பாடு, தேவர்கள் தம் தம் ஹவிர்பாகத்தை க்ரஹித்துக் கொண்டு ஸ்வர்கலோகம் சென்றூர்கள். தசரத ராஜனும் தீக்ஷா நியமத்தை முடித்துக்கொண்டு பத்னிகளுடன் சதுரங்கபல ஸேனைகளால் சூழப்பட்டு திவ்ய வாத்யகோஷங்களுடன் நகரத்திற்கு வந்து அரண்மனையை அடைந்தார். ராஜாக்களும், மஹர்ஷிகளும் ராஜனுல் ரொம்பவும் பஹுமானத்துடன் பூஜிக்கப்பட்டவர்களாய்க்கொண்டு, ரிச்யச்ருங்க மஹர்ஷியையும் வஸிஷ்ட மஹாமுனியையும், நமஸ்கரித்துவிட்டு மஹர்ஷிகளின் உத்தரவின்பேரில் தம் தம் தேசம் சென்றூர்கள். தேவர்களோ அரசர்களோ ரிஷிகளோ அவரவர்கள் தேசம் சென்றபின், ரிச்யச்ருங்க மஹர்ஷியும் சாந்தை என்ற தன் பார்யையுடன் ராஜனுல் விதிவத்தாக பூஜிக்கப்பட்டு அங்கதேசம் சென்றூர். யாகத்திற்கு வந்திருந்த மஹானுபாவர்களை விதிவத்தாக பூஜித்து அவரவர்களின் தேசங்களுக்கு அனுப்பின பிற்பாடு தசரத ராஜனும் பரம ஸந்தோஷத்துடன் புத்ரர்களின் ஆவிர்பாவ காலத்தை ப்ரதீக்ஷித்துக்கொண்டு ஸுகமாக வஸித்து வந்தார். யக்ஞும் முடிந்து பாயஸ ப்ராசனம் ஆனபின்பு ஆறு ருதுக்கள் (12 மாத காலம்) சென்றுவிட்டன.

ततश्च द्वादशे मासे चैत्रे नावमिके तिथौ ।
नक्षत्रेऽदितिदैवत्ये स्वोच्चसंस्थेषु पञ्चसु ॥
ग्रहेषु कर्कटे लग्ने वाक्पताविन्दुना सह ।
प्रोद्यमाने जगन्नाथं सर्वलोकनमस्कृतं ॥
कौसल्याऽजनयत् रामं सर्वलक्षणसंयुतम् ।
विष्णोरर्धं महाभागं पुत्रं ऐक्ष्वाकवर्धनं ॥

𑌤𑌤𑌶𑍍𑌚 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍇 𑌮𑌾𑌸𑍇 𑌚𑍈𑌤𑍍𑌰𑍇 𑌨𑌾𑌵𑌮𑌿𑌕𑍇 𑌤𑌿𑌥𑍌 ।
𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍇𑌽𑌦𑌿𑌤𑌿𑌦𑍈𑌵𑌤𑍍𑌯𑍇 𑌸𑍍𑌵𑍋𑌚𑍍𑌚𑌸𑌂𑌸𑍍𑌥𑍇𑌷𑍁 𑌪𑌞𑍍𑌚𑌸𑍁 ॥
𑌗𑍍𑌰𑌹𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌕𑌟𑍇 𑌲𑌗𑍍𑌨𑍇 𑌵𑌾𑌕𑍍𑌪𑌤𑌾𑌵𑌿𑌨𑍍𑌦𑍁𑌨𑌾 𑌸𑌹 ।
𑌪𑍍𑌰𑍋𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 𑌜𑌗𑌨𑍍𑌨𑌾𑌥𑌂 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑌂 ॥
𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾𑌜𑌨𑌯𑌦𑍍 𑌰𑌾𑌮𑌂 𑌸𑌰𑍍𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑌂𑌯𑍁𑌤𑌂 ।
𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌰𑍍𑌧𑌂 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑍈𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑌵𑌰𑍍𑌧𑌨𑌂 ॥

ததச்ச த்வாதசே மாஸே சைத்ரே நாவமிகே திதௌ ।
நக்ஷத்ரே அதிதிதைவத்யே ஸ்வோச்சஸம்ஸ்தேஷு பஞ்சஸு ॥
க்ரஹேஷு கர்கடே லக்னே வாக்பதாவிந்துநாஸஹ ।
ப்ரோத்யமானே ஜகந்நாதம் ஸர்வலோகநமஸ்க்ருதம் ॥
கௌஸல்யா அஜநயத் ராமம் ஸர்வலக்ஷண ஸம்யுதம் ।
விஷ்ணோரர்தம் மஹாபாகம் புத்ரம் ஐக்ஷ்வாகவர்தநம் ॥

என்ற ச்லோகங்களால், ஸர்வக்ஞனான வால்மீகி மஹர்ஷியானவர் ஸ்ரீராமனுடைய அவதார மஹிமையை வெளியிடுகிறார். அதாவது,

அச்வமேதயாகத்தின் ஸமாப்தியை அபேக்ஷித்தோ, பாயஸ ப்ராசனத்தை அபேக்ஷித்தோ, பன்னிரண்டாவது மாஸத்தில் சாந்த்ரமான ரீதியாக வஸந்த ருதுவில் பூர்வ பக்ஷமாகிய சுக்லபக்ஷத்தில், சாந்த்ரமான ரீதியாக சித்திரை மாஸத்தில், ஸ்திர வாரத்தில் நவமிதிதியில், அதிதியை தேவதையாகக்கொண்ட புநர்வஸு நக்ஷத்ரத்தில், கௌஸல்யா தேவியானவள் ஸ்ரீராமனை புத்ரனாக உண்டுபண்ணினாள். அந்தக் காலத்தில் ஸூர்யன், குரு, சுக்ரன், அங்காரகன், சனி, என்ற ஐந்து க்ரஹங்களும் தங்கள் உச்ச ஸ்தானங்களில் இருந்துவந்தார்கள். ஸூர்யனுக்கு மேஷராசி உச்சஸ்தானமாகும். குருவிற்கு கடகமும், சுக்ரனுக்கு மீனமும், அங்காரகனுக்கு மகரமும், சனிக்குக் துலாமும் உச்ச ஸ்தானங்களாக சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்விதம் அந்த ஐந்து க்ரஹங்களும் உச்சமாக விளங்கிவந்தார்கள். ஆனால் மூலச்லோகத்தில் வால்மீகி மஹர்ஷியானவர் ஐந்து க்ரஹங்கள் உச்ச ஸ்தானத்தில் இருந்துவருகிறார்கள் என்பதை மட்

டும் வெளியிட்டார். எந்தந்த க்ரஹங்கள் உச்சம் என்பதைச் சொல்லவில்லை. அதற்குக் காரணமோ, உச்சமாக இருக்கும் க்ரஹங்களுடைய பெயரை குறிப்பிட்டு சொன்னால் பலம் குறைந்துவிடும் என்பதுதான். பெயரைக் குறிப்பிடாமல் க்ரஹங்களைச் சொன்னால் அந்த க்ரஹங்கள் ரொம்பவும் ஸந்தோஷத்துடன் ஏற்பட்ட பலத்தைக் காட்டிலும் மஹாபலத்தைக் கொடுக்கிறார்கள் என்பது வால்மீகி மஹர்ஷியின் அபிப்ராயமாகும்.

एक ग्रहोच्चजातस्य सर्वारिष्टविनाशनं

𑌏𑌕 𑌗𑍍𑌰𑌹𑍋𑌚𑍍𑌚𑌜𑌾𑌤𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑌿𑌷𑍍𑌟𑌵𑌿𑌨𑌾𑌶𑌨𑌂

ஏக க்ரஹோச்சஜாதஸ்ய ஸர்வாரிஷ்டவிநாசநம்

என்ற சாஸ்த்ரத்தால் ஒரு க்ரஹம் உச்சமாயிருக்கும்பொழுது பிறந்தவனுக்கு ஸகலதுக்க நிவ்ருத்தி ஏற்படுகிறது.

द्विग्रहोच्चे तु सामन्तः त्रिग्रहोच्चे महीपतिः

𑌦𑍍𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑍋𑌚𑍍𑌚𑍇 𑌤𑍁 𑌸𑌾𑌮𑌨𑍍𑌤𑌃 𑌤𑍍𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑍋𑌚𑍍𑌚𑍇 𑌮𑌹𑍀𑌪𑌤𑌿𑌃

த்விக்ரஹோச்சேது ஸாமந்த: த்ரிக்ரஹோச்சேமஹீபதி:

என்ற சாஸ்த்ரத்தால் இரண்டு க்ரஹம் உச்சமானால் அப்பொழுது பிறந்தவன் அரசனாகவும், மூன்று க்ரஹங்கள் உச்சமானால் அநேக அரசர்கள் தனக்குக் கப்பம்கட்டத் தகுந்த பெரிய அரசனாகவும் ஆகிறான் என்று பலம் தெரிகிறது.

चतुर्ग्रहोच्चे संराट् स्यात् पञ्चोच्चे लोकनायकः

𑌚𑌤𑍁𑌰𑍍𑌗𑍍𑌰𑌹𑍋𑌚𑍍𑌚𑍇 𑌸𑌂𑌰𑌾𑌟𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌞𑍍𑌚𑍋𑌚𑍍𑌚𑍇 𑌲𑍋𑌕𑌨𑌾𑌯𑌕𑌃

சதுர்க்ரஹோச்சேத் ஸம்ராட்ஸ்யாத் பஞ்சோச்சேத் லோகநாயக:

என்ற சாஸ்த்ரத்தால் நான்கு க்ரஹங்கள் உச்சமாக இருக்கும் பொழுது பிறந்தவன் அநேக அரசர்களை அடக்கிஆளும் அரசனையும் அடக்கிஆளக்கூடிய ராஜாதிராஜனாக ஆகிறானென்றும்

ஐந்து க்ரஹங்கள் உச்சமாக இருக்கும்பொழுது பிறந்தவன் ஸர்வஜகத்திற்கும் அதிபதியான ஈச்வரனாகத்தான் இருக்க வேண்டும் என்று தெரிகிறது. ப்ரக்ருதத்தில் ராமாவதார காலத்திலோ ஐந்து க்ரஹங்கள் உச்சம் என்று சொல்லப்பட்டது. அதனால் ஸ்ரீராமசந்த்ரமூர்த்தி லோகநாயகனான மஹா விஷ்ணுவே என்பது வெளியாகிறது. இதைத்தான் மேற் குறிப்பிட்டிருக்கும் ச்லோகத்தில் ராமருக்கு விசேஷணமாக சொல்லப்பட்ட ஜகந்நாதம் என்றபதமானது வெளிப்படுத்து கிறது. அந்த ஐந்து க்ரஹங்கள் உச்சமாயிருப்பதிலும், ஸூர்யன் உச்சமாய் இருந்தால் அநேக ஸேனைகளுக்கு அதி பதியாகவும் ஆகிறான்; செவ்வாய் என்று சொல்லப்படும் அங்காரகன் உச்சமானால் காட்டிலும் அரசாளுவான், குரு உச்சமானால் பெரிய ராஜ்யத்திற்கு அதிபதியாக இருப் பான்; சுக்ரன் உச்சமானால் ராஜ்யஸ்ரீயை அனுபவிப்பான்; சனி உச்சமானால் ராஜாவிற்கு ஸமானமான வைபவங்களை அனுபவிப்பான் என்று தனித்தனியாக அந்தந்த க்ரஹங் கள் உச்சமாக இருந்தால் பலத்தைக் குறிப்பிட்டு சொல்லி யிருக்கிறபடியால் ஸ்ரீராமனுடைய விஷயத்தில் ஸகலவித மான மஹிமையும் பொருந்தி இருப்பதால், ஸ்ரீராமன் ஈச் வரன்தான் என்பதில் ஸந்தேஹமேயில்லை. அதிலும் கடக லக்னத்தில் ப்ரஹஸ்பதி, (குரு) உச்சமாக இருப்பதுமன்னி யில் புநர்வஸூ நக்ஷத்ரத்தில் 4-வது பாதத்தில் கடக லக் னம் உதயமானதால் அந்த கடக ராசிக்கு அதிபதியான சந்த் ரனும் அந்த கடகத்தில் இருப்பதைக்கொண்டு குரு சந்த்ர யோகமும் ஸ்ரீராமாவதார காலத்தில் ஏற்படுகிறது. அதையும் மஹர்ஷியானவர்

वाक्पतौ इन्दुनासह प्रोच्यमानं

வாக்பதௌ இந்து₃நாஸஹ ப்ரோச்யமாநம்

வாக்பதௌ இந்துநாஸஹ ப்ரோத்யமாநம்

என்ற வாக்யத்தால் வெளிப்படுத்தியிருக்கிறார்.

दृढसौहृदः विनीतः स्वबन्धुसंमानत्वात् धनेशश्च
शशिगुर्वोः गुणशीलः सुरद्विजेभ्यो रतः भवेत्पुरुषः

𑌦𑍃𑌢𑌸𑍌𑌹𑍃𑌦𑌃 𑌵𑌿𑌨𑍀𑌤𑌃 𑌸𑍍𑌵𑌬𑌨𑍍𑌧𑍁𑌸𑌂𑌮𑌾𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌧𑌨𑍇𑌶𑌶𑍍𑌚
𑌶𑌶𑌿𑌗𑍁𑌰𑍍𑌵𑍋𑌃 𑌗𑍁𑌣𑌶𑍀𑌲𑌃 𑌸𑍁𑌰𑌦𑍍𑌵𑌿𑌜𑍇𑌭𑍍𑌯𑍋 𑌰𑌤𑌃 𑌭𑌵𑍇𑌤𑍍
𑌪𑍁𑌰𑍁𑌷𑌃

த்ருடஸௌஹ்ருத: விநீத: ஸ்வபந்துஸம்மாநத்வாத் தநேசச்ச
சசிகுர்வோ: குணசீல: ஸுரத்விஜேப்யோ ரத: பவேத்புருஷ:

என்று வராஹமிஹிரர் குரு சந்த்ர யோகத்தின் பலத்தை விவரித்து இருக்கிறார். அதாவது, குரு சந்த்ரனோடு சேர்ந்திருக்கும்பொழுது பிறந்த மனிதன் ப்ராணிகளிடம் த்ருடமான ஸௌஹ்ருதத்தை (ஸ்நேஹத்தை) உடையவனாகவும், அளவற்ற கல்வியும் தனமும் இருந்தாலும் ரொம்பவும் அடக்கமுள்ளவனாகவும், தனது பந்துக்களிடத்தில் ப்ரீதி உள்ளவனாகவும், குபேரனுக்கு ஸமமான கோடீச்வரனாகவும், அநந்த கல்யாண குணங்களால் அலங்கரிக்கப்பட்டவனாகவும், தேவ ப்ராம்மணர்களிடம் பக்தி உள்ளவனாகவும் இருப்பான் என்று தெரிகிறது. அதுவும் ராமனிடத்தில் பொருத்தமுள்ளதே. புதனானவன் எப்பொழுதும் ஸூர்யனுக்கு ஸந்நிஹிதனாகவே இருப்பவனானதால் ஸூர்யன் மேஷ ராசியில் உச்சமானதை கொண்டு மேஷத்திலேயே புதனும் இருக்கிறான் என்றும் தெரிகிறது. இதனால் ராமாவதார காலத்தில் ரவிபுத யோகமும் ஏற்படுகிறது. அதன் பலமோ,

वेदान्तवित् स्थिरधनो रविज्ञयोः प्रायशः यशोर्थी स्यात्
आर्यः क्षितिपतिदयितः सतां च बलरूपविद्यावान्

𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌤𑍍 𑌸𑍍𑌥𑌿𑌰𑌧𑌨𑍋 𑌰𑌵𑌿𑌜𑍍𑌞𑌯𑍋𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑌃 𑌯𑌶𑍋𑌰𑍍𑌥𑍀 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍
𑌆𑌰𑍍𑌯𑌃 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌪𑌤𑌿𑌦𑌯𑌿𑌤𑌃 𑌸𑌤𑌾𑌂 𑌚 𑌬𑌲𑌰𑍂𑌪𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌾𑌨𑍍

வேதாந்தவித் ஸ்திரதநோ ரவிக்ஞயோ: ப்ராயச: யசோர்தீஸ்யாத்
ஆர்ய: க்ஷிதிபதிதயித: ஸதாம்ச பலரூபவித்யாவாந்

என்றதால் வேதாந்த சாஸ்த்ரத்தை கரைகடந்தவனாகவும், அழியாத தனம் உள்ளவனாகவும், யசஸ்ஸை விரும்புகிற

வனுகவும், வேத சாஸ்த்ரத்தில் நம்பிக்கை உள்ளவனுகவும், ராஜாதி ராஜனுக்குப் புத்ரனுகவும், ஸஜ்ஜனங்களுக்கு ஆச்ரயனுகவும், ஸ்வயமாக மஹாவித்வானுகவும் விளங்கி வருவான் என்று தெரிகிறது. இவ்விதம் சொல்லப்பட்ட ரவி புதயோகத்தின் பலமும் ஸ்ரீராமனிடம் ப்ரத்யக்ஷமானது. சித்திரை மாஸத்தில் ஸ்ரீராமன் அவதாரம் செய்தார் என்று சொல்லப்பட்டது. அதுவும் பொருத்தமானது.

चैत्रे मधुरभाषी स्यात् अहंकारसुखान्वितः

𑌚𑍈𑌤𑍍𑌰𑍇 𑌮𑌧𑍁𑌰𑌭𑌾𑌷𑍀 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌅𑌹𑌂𑌕𑌾𑌰 𑌸𑍁𑌖𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃

சைத்ரே மதுரபாஷீஸ்யாத் அஹங்கார ஸுகாந்வித:

என்ற வாக்யத்தால் சித்திரையில் பிறந்தவன் பேச்சில் மாதுர்யமுள்ளவனுகவும், பிறர்களுக்குத் தான் அடங்காதவனுகவும், ஸுகத்தை அனுபவிக்கிறவனுகவும் ஆகிருன் என்றும் வெளியாகிறது. அத்துடன்,

दीर्घवैरी भुविख्यातः वश्यः शूरश्च पण्डितः ।
निर्भयः सर्वभूतेभ्यः नवम्यां जायते नरः ॥

𑌦𑍀𑌰𑍍𑌘𑌵𑍈𑌰𑍀 𑌭𑍁𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌃 𑌵𑌶𑍍𑌯𑌃 𑌶𑍂𑌰𑌶𑍍𑌚 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌃 ।
𑌨𑌿𑌰𑍍𑌭𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌨𑌵𑌮𑍍𑌯𑌾𑌂 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌨𑌰𑌃 ॥

தீர்கவைரீ புவிக்யாத: வச்ய: சூரச்ச பண்டித: ।
நிர்பய: ஸர்வபூதேப்ய: நவம்யாம் ஜாயதே நர: ॥

என்ற வாக்யத்தை அனுஸரித்து, நவமியில் பிறந்தவன் ஒருவனிடம் த்வேஷத்தை வைத்தால் அதை தீர்ககாலம் கொண்டுசெலுத்துகிறவனுகவும், லோகம் முழுமையும் ப்ரஸித்தியடைபவனுயும், ஸகல ப்ராணிகளுக்கும் ஸுலபனுயும், பெரிய யுத்தத்திலும் ஸகாயத்தை எதிர்பாராமல் ஜயிப்பவனுயும் மஹாபண்டிதனுயும் எவனுக்கும் தான் பயப்படாமல் தீரனுகவும் இருப்பான் என்று தெரிகிறது. தவிரவும்,

सहिष्णुः गूढवृत्तिश्च श्लेष्मलः नाट्यकोविदः
अगृध्नः अल्पसन्तुष्टः शीघ्रगः अदितिधिष्ण्यजः

𑌸𑌹𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌗𑍂𑌢𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌶𑍍𑌲𑍇𑌷𑍍𑌮𑌲𑌃 𑌨𑌾𑌟𑍍𑌯𑌕𑍋𑌵𑌿𑌦𑌃
𑌅𑌗𑍃𑌧𑍍𑌨𑌃 𑌅𑌲𑍍𑌪𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌃 𑌶𑍀𑌘𑍍𑌰𑌗𑌃 𑌅𑌦𑌿𑌤𑌿 𑌧𑌿𑌷𑍍𑌣𑍍𑌯𑌜𑌃

ஸஹிஷ்ணு: கூட வ்ருத்திச்ச ச்லேஷ்மல: நாட்யகோவித:
அக்ருத்ந: அல்பஸந்துஷ்ட: சீக்ரக: அதிதி திஷ்ண்யஜ:

என்ற வாக்யத்தால் புநர்வஸு நக்ஷத்ரத்தில் பிறந்தவன், யார் என்ன குற்றம் செய்தாலும் அதை ஸஹித்துக்கொள்ளும் சக்தி உள்ளவனாகவும், தனது ஜீவன வ்ருத்தியை என்ன என்பதை வெளிப்படுத்தாமல் ரஹஸ்யமாய் வைத்துக்கொள்பவனாயும், எல்லா ப்ராணிகளிடமும் ப்ரியனாயும், அன்யர்களைப்போல் நடிக்கும் விஷயத்தில் மஹா ஸமர்த்தனாயும், பிறர்ஸொத்தில் ஆசை இல்லாதவனாயும், கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷப்படுகிறவனாயும், ஆரம்பித்த கார்யத்தை சீக்ரம் முடிக்கிறவனாயும் ஆகிறான் என்று தெரிகிறது. அதிலும் புநர்வஸு நக்ஷத்ரத்தில் 4-வது பாதத்தில் ஜனித்தவனும்,

कान्तः प्रियवपुः श्लक्ष्णः सज्जनप्रिय दर्शनः
लक्ष्मीवान् प्रियवादी च आदित्यान्ते प्रजायते

𑌕𑌾𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌪𑍁𑌃 𑌶𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌣𑌃 𑌸𑌜𑍍𑌜𑌨𑌪𑍍𑌰𑌿𑌯 𑌦𑌰𑍍𑌶𑌨𑌃
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌦𑍀 𑌚 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌤𑍇

காந்த: ப்ரியவபு: ச்லக்ஷ்ண: ஸஜ்ஜநப்ரிய தர்சந:
லக்ஷ்மீவாந் ப்ரியவாதீ ச ஆதித்யாந்தே ப்ரஜாயதே

என்ற வாக்யத்தால் அழகான சரீரத்தோடு கூடினவனாயும், ஜனங்களை ஸந்தோஷிக்கச் செய்கிறவனாயும், ம்ருதுவான ஸ்வபாவம் உள்ளவனாயும், ப்ரம்மநிஷ்டர்களுக்கு வேண்டினவனாயும் அளவற்ற ஐச்வர்யம் உள்ளவனாயும், ப்ரியமாய் பேசுகிறவனாயும், இருப்பான் என்றும் தெரிகிறது.

கடகலக்னத்தில் பிறந்தவன்,

कर्कटे लग्नके चन्द्रयुक्ते दृष्टे च भोगवान् ।
गुरुणा वीक्षिते युक्ते धनाढ्यो बहुभोगवान् ।

கக்கடெ லக்நகெ சந்த்ரயுக்தெ த்ருஷெ்ட ச ஹோகவாந் ।
குருணா வீக்ஷிதெ யுக்தெ தநாட்யோ பஹுஹோகவாந் ॥

கர்கடே லக்நகே சந்த்ரயுக்தே த்ருஷ்டே ச போகவாந்
குருணு வீக்ஷிதே யுக்தே தநாட்யோ பஹுபோகவாந்

என்ற வாக்யத்தால் சந்த்ரனேடு கூடினதாகவோ, சந்த்ர ஞல் பார்க்கப்பட்டதாகவோ, அவ்விதமே குருவோடு கூடினதாகவோ, குருவினுல் பார்க்கப்பட்டதாகவோ இருக் கும், கடக லக்னத்தில் பிறந்தவன் அளவற்ற ஸம்பத்தோடு கூடினவனுயும், பஹுப்ரகாரமான போக போக்யங்களு டன் கூடினவனுயும் ஆகிருன் என்றும் தெரிகிறது. இந்த விஷயங்களெல்லாம் ஸ்ரீராமாவதார காலத்தில் பொருத்த மாய் இருந்ததால், அதை அனுஸரித்து வால்மீகி மஹர்ஷி யானவர் மாஸம், திதி, நக்ஷத்ரம், லக்னம், இவைகளைக் குறிப்பிட்டு எழுதி ராமருடைய மஹத்வத்தை வெளிப் படுத்தினுர்.

ஐந்து க்ரஹங்கள் உச்சமாக இருக்கும் பக்ஷத்தில் पञ्चोच्चे लोकनायकः (பஞ்சோச்செ லோகநாயகஃ) (பஞ்சோச்சே லோக நாயக:) என்ற சாஸ்த்ரத்தை அநுஸரித்து, ஸாக்ஷாத் மஹா விஷ்ணுவே ஸ்ரீராமன் என்று முன்புசொல்லப்பட்டது. அதை பகவானுன வால்மீகி மஹர்ஷியானவர் जगन्नाथं (ஜகநாயம்) (ஜகந்நாதம்) என்ற விசேஷணத்தால் ப்ரகாசப் படுத்துகிறுர். ஸர்வலோகத்திற்கு நாதன் (ஸ்வாமி) என்றே அதன் பொருளாகும். नाथृ याच्नायां (நாய்ரு யாச்நாயாம்) (நாத்ரு யாச்நாயாம்) என்ற தாதுவை அனுஸரித்து, ஸகல ஜனங்களா லும் ப்ரார்த்திக்கப்படுகிற பொருள் என்றும் அந்த பதத்

தின் பொருளை அறியவும். அத்துடன் பகவானுடைய அவதார காலத்தில் அவதரித்த லக்னமாகிய கடகத்தில், தேவ குருவான ப்ரஹஸ்பதி இருந்துவருகிறார் என்று சொல்லப் பட்டது. அந்த விஷயத்தை "ஸர்வலோக நமஸ்க்ருதம்" என்ற விசேஷணத்தால் தெரிவிக்கிறார். ஸகல ஜனங்களா லும் நமஸ்கரிக்கப்பட்ட பரம்பொருள் என்று அந்தபதத் தின் தாத்பர்யமாகும்.

कवि स्सुगीतः प्रियदर्शनः सखी दाता च भोक्ता नृपपूजितः शुचिः।
देवद्विजाराधनतत्परोथ भवेन्नरः देवगुरौ तनुस्थिते॥

𑌕𑌵𑌿 𑌸𑍍𑌸𑍁𑌗𑍀𑌤𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌃 𑌸𑌖𑍀
𑌦𑌾𑌤𑌾 𑌚 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌨𑍃𑌪𑌪𑍂𑌜𑌿𑌤𑌃 𑌶𑍁𑌚𑌿𑌃।
𑌦𑍇𑌵𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌰𑌾𑌧𑌨 𑌤𑌤𑍍𑌵𑌰𑍋𑌥 𑌭𑌵𑍇𑌨𑍍𑌨𑌰𑌃
𑌦𑍇𑌵𑌗𑍁𑌰𑍌 𑌤𑌨𑍁𑌸𑍍𑌥𑌿𑌤𑍇॥

கவி ஸ்ஸுகீத: ப்ரியதர்சந: ஸகீ
தாதா ச போக்தா ந்ருபபூஜித: சுசி: ।
தேவத்விஜாராதந தத்பரோத பவேந்நர:
தேவகுரௌ தநுஸ்திதே ॥

என்ற வாக்யத்தால் தேவகுருவான ப்ரஹஸ்பதி லக்னத்தி லிருக்கும்பொழுது பிறந்தவன் மஹாவித்வானாயும், ஸங்கீத வித்யையில் சிறந்த பயிற்சிஉள்ளவனாயும் மன்மதனைப்போல் அழகாயும் ஸகல ஜனங்களுக்கும் மித்ரனாயும், ஸத்பாத் ரங்களில் த்ரவ்யங்களை தானம் செய்வதில் ஸந்தோஷமுள்ள வனாயும், திவ்ய போகாதிகளை அனுபவிக்கிறவனாயும், ராஜாக் களால் பூஜிக்கப்பட்டவனாயும் நல்ல ஆசாரத்துடன் கூடின வனாயும், தேவர்கள், ப்ராம்மணர்கள் இவர்களைப் பூஜிப் பதில் முன்வருகிறவனாயும் இருப்பான் என்றே தெரிகிறது. அந்த குணங்கள் எல்லாம் ராமரிடத்தில் இருந்து வருகின் றன. லக்னத்தில் குரு இருப்பதே அதன் காரணமாகும்.

सर्वलोक नमस्कृतं (𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕 𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑌂) (ஸர்வலோக நமஸக்ருதம்) என்ற பதத்திற்கு **திலக** வ்யாக்யானத்தை அனுஸரித்து,

सर्वलोकरूपश्चासौ नमस्कृतश्च तं इत्यप्यर्थः

𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌰𑍂𑌪𑌶𑍍𑌚𑌾𑌸𑍌 𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑌶𑍍𑌚 𑌤𑌂 𑌇𑌤𑍍𑌯𑌪𑍍𑌯𑌰𑍍𑌥𑌃

ஸர்வலோகரூபச்சாஸௌ நமஸ்க்ருதச்ச தம் இத்யப்யர்த்த:

என்ற வ்யாக்யானத்தில் செய்திருக்கும் ஸமாஸத்தால் பகவான் ஆவிர்பவிக்கும் ஸமயத்தில், 'விராட்ரூபமாக ஆவிர்பவித்தார். அந்த திவ்ய ரூபத்தையே கௌஸல்யா தேவி தர்சனம் செய்து, உடன் அந்த கௌஸல்யா தேவியே பகவானை நமஸ்கரித்து ஸ்தோத்ரம் செய்தாள்' என்ற தாத்பர்யம் ஸித்திக்கிறபடியால், ராமாவதாரம், கர்பவாஸ துக்கத்தை அனுபவித்த ஜன்மாவாக ஆகாது. திவ்யமான மாயாமயமான ஜன்மாதான் என்பது ஸித்திக்கிறது. பிறகு, கௌஸல்யா தேவியின் ப்ரார்த்தனைக்கிணங்கி மாயையினால் பாலபாவத்தை அடைந்தார் என்பதே அவதார ரஹஸ்யமாகும். இந்த தாத்பர்யம் **रामं** (𑌰𑌾𑌮𑌂) (ராமம்) என்று ஜன்ன காலத்திலேயே சொல்லியிருக்கும் திருநாமத்தால் விளங்குகிறது.

रमयति इति रामः (𑌰𑌮𑌯𑌤𑌿 𑌇𑌤𑌿 𑌰𑌾𑌮𑌃) (ரமயதி இதி ராம:) என்ற ஸமாஸத்தால் ஹிரண்ய கர்பன் முதல், ஸ்தாவரம் வரை உள்ள ஸகல ப்ராணிகளையும் ரமிக்கச் செய்கிறவன்—ஆநந்திக்கச் செய்கிறவன்—என்று ஏற்படுகிறபடியால் **एषह्येव आनन्दयाति** (𑌏𑌷𑌹𑍍𑌯𑍇𑌵 𑌆𑌨𑌨𑍍𑌦𑌯𑌾𑌤𑌿) (எஷஹ்யேவ ஆநந்தயாதி) என்ற ச்ருதியின் அர்த்தமாகிய ப்ரம்மமே ப்ரக்ருத ராமன் என்று தீர்மானமாகிறது. பிறகு ராமன் என்ற பெயரை அடையக்கூடிய புருஷன் என்றும் அதன் பொருளை அறியவும்.

ஸாமுத்ரிகா லக்ஷணத்தில் சொல்லப்பட்ட ஸகல லக்ஷணங்களுடன் கூடினவர் என்பதை सर्वलक्षणसंयुतं (ஸர்வலக்ஷணஸம்யுதம்) (ஸர்வலக்ஷணஸம்யுதம்) என்ற பதத்தால் ப்ரகாசப் படுத்துகிறுர். सर्वलक्षणं (ஸர்வலக்ஷணம்) (ஸர்வலக்ஷணம்) என்ற பதத்தால் ஸ்வரூப லக்ஷணம், தடஸ்த லக்ஷணம், என்ற இரண்டு லக்ஷணங்களாலேயும் அலங்கரிக்கப்பட்ட புருஷன் என்ற தாத்பர்யம் வெளியாகிறது.

सत्यं ज्ञानमनन्तं ब्रह्म (ஸத்யம் ஜ்ஞானமனந்தம் ப்ரஹ்ம) (ஸத்யம் ஞானமநந்தம் ப்ரம்ம) என்ற வாக்யத்தால் தைத்ரீயோபநிஷத்தில் ப்ரம்மானந்தவல்லியானது ப்ரம்மத்தினுடைய ஸ்வரூப லக்ஷணத்தை போதிக்கின்றது. ब्रह्म (ப்ரஹ்மம்) (ப்ரஹ்மம்) என்ற பதமானது ब्रूहि वृद्धौ (ப்ருஹி வ்ருத்தௌ) (ப்ருஹி வ்ருத்தௌ) என்ற தாதுவை அநுஸரித்து——ஒரு பெரிய மஹத்தான வஸ்து என்பதை போதிக்கின்றது. அந்த மஹத்தான வஸ்துவும் நிரதிசயமான மஹத்——அதாவது, தனக்கு மேலான மஹத்தான வஸ்து இல்லை என்பதைக் காட்டும் மஹத் தான வஸ்து——என்பதை விளக்குகிறது. அந்த அபிப் பிராயத்தில், ஸாதிசயமான மஹத் என்று சொல்வதில் ப்ரமாணம் இல்லாமல் இருப்பதும், முடிவில்லாதபொருள் என்று அர்த்தத்தை போதிக்கும் अनन्तं (அநந்தம்) (அநந்தம்) என்ற பதத்துடன் சேர்ந்து இந்த ब्रह्म (ப்ரஹ்ம) (ப்ரஹ்ம) என்ற பதம் இருப்பதேதான் ஆகும். அதனுல், ‘ஒரு தேசத்திலிருந்து மற்றெரு தேசத்தில் இல்லாமல் இருக் கிறது’ என்று தேசத்தில் ஏற்படும் பரிச்சேதமோ (குறைவோ) ‘ஒரு காலத்திலிருந்து மற்றெரு காலத்தில் இல்லாமல் ஆகும்’ என்று காலத்தால் ஏற்படும் பரிச்சேதமோ——இதைப் போல் பலவஸ்துக்கள் உண்டு என்று வஸ்துவினுல் ஏற் படும் பரிச்சேதமோ—— இந்து மூன்றுவிதமான பரிச்சேதம் (குறைவு) இல்லை என்ற காரணத்தால், நித்யமாயும், அவித்யை முதலான தோஷமற்றதாயும், ஜாட்யம் அற்றதாயும், எப்

பொழுதும் ஸர்வ ஸம்ஸார தர்மத்தினின்றும் விடுபட்டதாயும் உள்ள நிரதிசயமான ஒரு மஹத் வஸ்துவே பர ப்ரம்மம் என்று अनन्तं ब्रह्म (அநந்தம் ப்ரஹ்ம) (அநந்தம் ப்ரஹ்ம) என்றதால் ஏற்படுகிறது. அந்த வஸ்துவானது, இந்த ஜகத்தினுடைய உத்பத்திக்கு முன் காலத்திலோ, ஜகத்தின் ப்ரளய காலத்திற்கு பின்காலத்திலோ, ஜகத்தின் ஸ்திதி காலத்திலோ———இல்லை என்று நிஷேதம் செய்ய முடியாததால் காலத்ரயத்திலும் அபாத்யமாக இருந்துவருகிறது. அத்துடன் எல்லா ப்ராணிகளுக்கும் 'நான்' என்று ப்ரத்யக்ஷமாக ப்ரகாசித்துவரும் பொருளாகும். இதனால், 'காலத்ரயாபாத்யமாயும்', 'ஸ்வயம் ப்ரகாச சிதேகரஸமாயும்', 'த்ரிவித பரிச்சேத சூன்யமாயும்' உள்ள வஸ்துவே ப்ரம்மம் என்று சொல்லப்படுகிறது. இந்த லக்ஷணமானது ஸ்வரூப லக்ஷணமாகும். 'அக்னி சுடும்' என்றதில் அக்னிஉள்ளவரையிலும் அந்த சுடும் என்ற தன்மையை எவ்விதம் அழிக்கவும் பிரிக்கவும் முடியாதோ, அதுபோல் ப்ரஹ்மம் உள்ள வரையிலும் இந்த லக்ஷணத்தை பிரிக்கவும், அழிக்கவும் முடியாது. அதைத்தான் ஸ்வரூப லக்ஷணம் என்று வேதாந்திகள் சொல்லுவார்கள்.

இதுபோல், **தடஸ்தலக்ஷணம்** என்றும் ஒரு லக்ஷணம் உண்டு. அந்த லக்ஷணம் ஸ்வரூபலக்ஷணம் போலல்ல. லக்ஷ்ய வஸ்துவை விட்டு பிரித்தும் விடலாம் — அந்த லக்ஷணத்தை இல்லாமலும் செய்யலாம். ஒரு பெரிய உத்யோகத்தைக் கொண்டு ஒரு மனிதனைப் போதிப்பதே **தடஸ்தலக்ஷணமாகும்**. ப்ரஹ்மத்திற்கோ ஜகத்தினுடைய உத்பத்தி, ஸ்திதி, ஸம்ஹாரம் இந்த மூன்றையும் செய்யும் சக்தியிருப்பதால் 'ஜகத் காரணத்வம்' என்றது தடஸ்த லக்ஷணமாக ஆகிவிடும். "எவன் எதை உண்டுபண்ணுகிறானோ அவனுக்கு அது விஷயமான ஞானம் முன்பு இல்லாதபோனால் அதை அவன் உண்டுபண்ண முடியாது" என்ற ந்யாயத்தை அனுஸரித்து, ஜகத்தை இந்த ப்ரஹ்

மம் உண்டுபண்ணுகிறபடியால், ஜகத்தை உண்டுபண்ணும் முன்பே இந்த ஜகத்தின் ஸம்பந்தமான ஞானம் அவச்யம் ப்ரமத்தினிடத்தில் ஸித்தித்து இருக்கவேண்டும். அதனால் ஸர்வஜகத்திற்கும் காரணமாயும், ஸர்வக்ஞமாயும் உள்ளதே ப்ரஹ்மம் என்று ஸித்திக்கிறது. ஒரு கார்யத்தை ஒருவன் உண்டுபண்ணினால், அதை உண்டுபண்ண அவனுக்கு சக்தியில்லாமல் அதை உண்டுபண்ண முடியாது. அதை செய்யக்கூடிய சக்தியை அந்தப் புருஷனிடத்தில் ஒப்புக்கொள்ளவேண்டும். அதுபோல், ப்ரஹ்மமும் ஸர்வஜகத்தை உண்டுபண்ணி, ரக்ஷித்து, ஸம்ஹரிக்கிறபடியால், அதற்கு அனுகூலமான சக்தியை ப்ரஹ்மத்தினிடம் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். இதனால், 'ஸர்வஜகத் காரணமாயும்', 'ஸர்வக்ஞமாயும்', 'ஸர்வசக்திமத்தாயும்' உள்ள வஸ்து ப்ரஹ்மம் என்று ஸித்திக்கிறது. இதுதான் தடஸ்தலக்ஷணமாகும்.

முன்சொன்னபடி, த்ரிகாலாபாத்யமாயும், ஸ்வயம் ப்ரகாச சித்தேகரஸமாயும், தேச, கால, வஸ்து இம்மூன்றிலும் பரிச்சேதமற்றதாயும், நிரதிசயமான ஆநந்த ஸ்வரூபமாயும் உள்ள வஸ்துவே ப்ரஹ்மம் என்று சொல்வது ஸ்வரூப லக்ஷணமாகும்.

இவ்விதமுள்ள தடஸ்தலக்ஷணம், ஸ்வரூப லக்ஷணம், என்ற இரண்டு லக்ஷணங்களாலேயும் கூடினவனான ராமனை கௌஸல்யா தேவி உண்டுபண்ணினாள் என்ற பொருளும் सर्वलक्षणसंयुतं (ஸர்வலக்ஷணஸம்யுதம்) (ஸர்வலக்ஷணஸம்யுதம்) என்ற விசேஷணத்தால் ஸித்திக்கிறது.

அத்துடன், ராமனுடைய சரீரமோ, ஸாக்ஷாத் மஹா விஷ்ணுவினால் அனுப்பப்பட்டு அக்னியிலிருந்தும் ஆவிர்பவித்த ப்ராஜாபத்ய புருஷனால், தசரத சக்ரவர்த்தியினுடைய கையில் கொடுக்கப்பட்ட விஷ்ணுமாயாமயமான பாயஸத்தின் அர்த்தாம்சமாக — (பாதிபாயஸத்தின் பரிணாமமாக) — ஆகிறது. மாயையினுடைய குணமோ ஸத்வம்,

ரஜஸ், தமஸ் என்று மூன்றுவகைப்படும். அந்த ஸத்வத்தில் ரஜோகுணம், தமோகுணம் இவைகளால் ஸம்பந்தப்பட்ட ஸத்வம் என்றும், இவை இரண்டுகளாலும் ஸம்பந்தப்படாத ஸத்வம் என்றும், இரண்டு வகையாகும். மற்ற இரண்டு குணங்களால் ஸம்பந்தப்படாத ஸத்வம் **சுத்தஸத்வம்** ; ரஜோ, தமோ குணஸம்பந்தமானது மலின **ஸத்வம்**. ரஜோகுணமும் தமோகுணமும் ஸமமாக இருந்து ஸத்வகுணம் ரொம்பவும் குறைந்து இருக்கும் ஸமயத்தில், மாயையை எவ்விதமான வைபவம் உள்ளதாக வர்ணிக்க முடியுமோ, அதுபோலவே ஸத்வகுணம் மாத்ரம் ஒன்று இருந்து, மற்ற இரண்டு குணங்களும் இல்லாத காலத்தில் மஹாசக்தியோடு கூடினது என்று வர்ணிக்கலாம். அதாவது மூன்று குணங்களும் சேர்ந்த மாயை ஒருபுறம், ஸத்வகுணம் மாத்ரம் சேர்ந்த மாயை ஒருபுறம். இதனுல், **विष्णोरर्धं** (விஷ்ணோரர்தம்) (விஷ்ணோரர்தம்) என்ற விசேஷணத்தால் விஷ்ணுமயமான பாயஸத்தின் அர்த்தமாகுமென்று, ஸ்ரீராமனுடைய திருமேனியை வர்ணித்த ஸ்ரீ வால்மீகி மஹர்ஷியினுடைய அபிப்பிராயத்தை வித்வத் ஜனங்கள் **சுத்த ஸத்வமய மாயாமயம்**, ராமனுடைய இஷ்டப்படி பரிணமித்த திவ்யமங்கள விக்ரஹம், அதி சுத்தம், கரை கடந்த கருணாமூர்த்தி, ஸர்வஜன ஸுலபம் ராமருடைய சரீரம், என்று மஹர்ஷியின் அபிப்ராயம் என்றதை அறியவும்.

அத்துடன் புத்ரன் என்ருல் தசரத சக்ரவர்த்திக்குப் புத்ரனுய்ப் பிறந்த ஸ்ரீராமனைத்தான் சொல்லலாம். புத் என்ருல் நரகம் (துக்கம்). ஸர்வதுக்கத்திலிருந்தும் தனது பிதாவை தரணம் செய்துவைக்கிறவனே புத்ரன் என்ற சப்தத்தின் பொருளாக ஆகுவான். ராமனே, தனது பிதாவான தசரத சக்ரவர்த்தியையோ, அவருக்கும் முந்தின மற்ற பித்ருக்களேயோ இஹத்திலும் பரத்திலும் ஸமஸ்தமான துக்கத்திலிருந்தும் தரணம் செய்துவைத்த ஸத்புத்

ரன் என்று சொல்வதில் யாதொருவிதமான ஸந்தேஹமும் ஏற்பட ந்யாயமில்லை. இதைத்தான் 'தசரதரை ஸந் தோஷிக்க செய்த புருஷன்' என்ற பொருளை வெளியாக்கும்— ऐक्ष्वाकवर्धनं (𑌐𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑌵𑌰𑍍𑌧𑌨𑌂) (ஐக்ஷ்வாகவர்தனம்) என்ற பதத்தை வால்மீகி ப்ரயோகம் செய்துள்ளார். இந்த மஹி மையை, ஸ்ரீராமன் அவதரித்த லக்னத்தில் சுப க்ரஹங்கள் இருப்பது வெளிப்படுத்துகின்றன.

नरश्चिरायुः नृपपूजितः सुखी लग्नं भवेत् सौम्ययुतं यथा तथा ।
लग्ने तथा स्वामिनिरीक्षिते धनी कुशाग्रबुद्धिः कुलकीर्तिवर्धनः ॥

𑌨𑌰𑌶𑍍𑌚𑌿𑌰𑌾𑌯𑍁𑌃 𑌨𑍃𑌪𑌪𑍂𑌜𑌿𑌤𑌃 𑌸𑍁𑌖𑍀
𑌲𑌗𑍍𑌨𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 𑌸𑍌𑌮𑍍𑌯𑌯𑍁𑌤𑌂 𑌯𑌥𑌾 𑌤𑌥𑌾 ।
𑌲𑌗𑍍𑌨𑍇 𑌤𑌥𑌾 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍇 𑌧𑌨𑍀
𑌕𑍁𑌶𑌾𑌗𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌕𑍁𑌲𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌃 ॥

நரச்சிராயு: ந்ருபபூஜித: ஸுகீ
லக்நம் பவேத் ஸௌம்யயுதம் யதா ததா ।
லக்நே ததா ஸ்வாமி நிரீக்ஷிதே தநீ
குசாக்ரபுத்தி: குலகீர்த்திவர்தந: ॥

என்ற சாஸ்த்ரத்தால், லக்னத்தில் சுபக்ரஹங்களின் ஸம் பந்தம் ஏற்பட்டால் அந்த மனிதன் தீர்க்கமான ஆயு ளுடனும், ராஜபூஜிதனுயும், ஸுகியாகவும், தனவானுயும், நிர்மலமான புத்தியோடு கூடினவனுயும், தனது வம்சத் திற்கு கீர்த்தியை வ்ருத்தி செய்கிறவனுயும் இருப்பான் என்று தெரிகிறபடியால் அவைகளும் பகவானிடத்தில் பொருந்தி இருக்கின்றன.

அத்துடன், லக்னத்தில் குரு இருப்பதால்,

एको गुरुः विलग्नस्थः कोटिदोषान् निहन्त्यहो

𑌏𑌕𑍋 𑌗𑍁𑌰𑍁𑌃 𑌵𑌿𑌲𑌗𑍍𑌨𑌸𑍍𑌥𑌃 𑌕𑍋𑌟𑌿𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌨𑌿𑌹𑌨𑍍𑌤𑍍𑌯𑌹𑍋

ஏகோ குரு: விலக்நஸ்த: கோடி தோஷாந் நிஹந்த்யஹோ

என்ற வசனத்தை அனுஸரித்து மஹா பாக்யவானுகவும், லக்னத்தில் குரு இருக்கும்பொழுது ஜனித்தவன் ஆகிருன்.

இவ்விதம் கௌஸல்யா தேவியானவள், பாயஸ ப்ராசனம் செய்த பன்னிரெண்டாவது மாஸத்தில், அதிலும் சித்ரைமாஸத்தில் சுக்லபக்ஷ நவமியில், புனர்வஸு நக்ஷத்ரத்தில் கடகலக்னத்தில், தேவகுருவான ப்ரஹஸ்பதி சந்த்ரனுடன்கூட உதித்திருக்கும் பொழுது ஸூர்யன், புதன், சுக்ரன், அங்காரகன், சனி என்ற ஐந்து க்ரஹங்களும் அவரவர்கள் உச்சஸ்தானங்களில் இருக்கும்பொழுது, ஸர்வ லோகத்திற்கு நாதனும், ஸர்வலோகங்களால் நமஸ்கரிக்கப்பட்டவனும், ஸர்வ லக்ஷணங்களால் நிரப்பினவனும், விஷ்ணுமயமான பாயஸத்தின் அர்த்தாம்சபூதனும், மஹாபாக்யவானும், தசரத சக்ரவர்த்திக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கிறவனும், பித்ருக்களை நரக துக்கத்திலிருந்து தரணம் செய்துவைக்கிறவனும், நீலமேக ச்யாமளனும், பின்பு ராமன் என்ற பெயரை அடையக்கூடினவனும் உள்ள மஹாநுபாவனை புத்ரனுக பெற்ருள் என்று அவதார கட்ட ச்லோகத்தின் தாத்பர்ய ஸாரமாகும்.

ப்ரக்ருதத்தில் தர்ம ஸ்தாபனம் செய்வதற்காக தேவர்களால் ப்ரார்த்திக்கப்பட்டு அப்ராக்ருத மங்கள விக்ரஹத்தோடு பூலோகத்தில் அவதாரம் செய்த ப்ரபுவானவர் மஹாவிஷ்ணுதான் என்பதில் ஸந்தேஹமே இல்லை. மஹாவிஷ்ணுவிற்கோ கர்ம பரதந்த்ரனுன ஜீவனைப்போல், ஜன்மா ஏற்படுவதற்கும் ந்யாயமில்லை. ஆகையால் கௌஸல்யா தேவியினிடம் பகவானுன விஷ்ணு புத்ரனுக பிறந்தார் என்பதும் அபூர்வமான ஒரு மாயாவிலாஸம்தான். அதனுடைய உண்மையோ, மஹாபுண்யவதியான கௌஸல்யா தேவியானவள், தனது தபஸ்ஸின் மஹிமையால், இந்த்ரியத்திற்கு கோசரமாகாததான பரம்பொருளை, தானும் அன்னியர்களும், கண்ணுல்பார்த்து ஆனந்திக்கும்படி திவ்ய ஸௌந்தர்ய நிதியாக எதிரில் ஆவிர்பவிக்கும்படி செய்தாள்.

என்றுதான் அவதாரத்தின் ரஹஸ்யத்தை அறியவும். இதை பகவத்கீதையில் பகவானும் ஸூசனம் செய்திருக்கிறார்.

जन्म कर्म च मे दिव्यमेवं यो वेत्ति तत्त्वतः ।
त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन ॥

𑌜𑌨𑍍𑌮 𑌕𑌰𑍍𑌮 𑌚 𑌮𑍇 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌏𑌵𑌂 𑌯𑍋 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃।
𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌹𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮 𑌨𑍈𑌤𑌿 𑌮𑌾𑌮𑍇𑌤𑌿 𑌸𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨॥

ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்வத: ।
த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந ॥

என்ற ச்லோகத்தால், दिव्यं (𑌦𑌿𑌵𑍍𑌯𑌂) (திவ்யம்) என்ற பதத்தாலும், तत्त्वतः (𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃) (தத்வத:) என்ற பதத்தாலும் அவதார ரஹஸ்யத்தை அறிந்தவனுக்கு ப்ராப்த சரீரம் போனவுடன் மறுபடியும் தேஹ ஸம்பந்தம் இல்லாததான விதேஹ கைவல்யத்தை பலமாக சொல்லியிருக்கும் காரணத்தாலும் பகவதவதாரங்களெல்லாம் மாயாமயமன்னியில் கர்ம பரதந்த்ரமில்லை. கர்பவாஸம் முதலான தோஷ லேசமற்றது என்பதை ப்ரகாசப்படுத்தியிருக்கிறார். அதை ப்ரக்ருதத்திலும் ராமாவதாரத்திலும் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். கௌஸல்யாதேவியோ மஹா புண்யவதி. அவளுடைய ஈச்வர பக்திக்கும், குருபக்திக்கும் கட்டுப்பட்டு பகவானும் கண்ணுக்கு எதிரில் திவ்யமங்கள விக்ரஹத்துடன் ஆவிர்பவித்தார் என்றுதான் அங்கு அர்த்தத்தை ஸ்வீகரித்துக் கொள்ளவேண்டும். அந்த அம்மாளுடைய குருபக்தி விசேஷத்தையும் ஈச்வரபக்தி விசேஷத்தையும் வால்மீகி மஹர்ஷியே, ராமாவதாரகட்ட ச்லோகங்களில் சில வாக்யங்களால் வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த ராமாயணமோ உத்தமகாவ்யமானதால், வாச்யமான அர்த்தத்தை அதிக்ரமித்து வ்யங்க்யார்த்தத்தை வெளிப்படுத்தும் என்று முன்பே சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த வ்யங்க்ய மர்யாதையில் த்ருஷ்டியை செலுத்தி பார்க்கும் ஸூக்ஷ்ம த்ருஷ்டியோடு கூடின மஹான்களுக்கு அவதாரகட்ட ச்லோகங்களில் உள்ள கௌஸல்யாதேவியி னுடைய குருதேவதா பக்திமஹிமையை ப்ரகாசப்படுத் தும் வாக்யங்கள் புலப்படும்.

அவதாரகட்ட ச்லோகத்தில் ஐந்து க்ரஹங்கள் உச்சஸ் தானத்தில் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

पञ्चसु ग्रहेषु स्वोच्चसंस्थेषु

𑌪𑌞𑍍𑌚𑌸𑍁 𑌗𑍍𑌰𑌹𑍇𑌷𑍁 𑌸𑍍𑌵𑍋𑌚𑍍𑌚𑌸𑌂𑌸𑍍𑌥𑍇𑌷𑍁

பஞ்சஸு க்ரஹேஷு ஸ்வோச்சஸம்ஸ்தேஷு

என்ற வாக்யம்தான் ஐந்து க்ரஹங்கள் உச்சமாய் இருக்கின் றது என்பதைக் காட்டும் வாக்யமாகும். அதன் பொருளை விவேகிகள் கவனிக்கவும். அதாவது,

गृह्णाति इति शब्दादि विषयान् स्वीकरोति

𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 𑌇𑌤𑌿 𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑌿 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑍀𑌕𑌰𑍋𑌤𑌿

க்ருஹ்ணாதி இதி சப்தாதி விஷயாந் ஸ்வீகரோதி

என்ற ஸமாஸத்தால் ग्रहं (𑌗𑍍𑌰𑌹𑌂) (க்ரஹம்) என்ற சப்தத் தால் ஞானேந்த்ரியம் என்ற கரண விசேஷங்கள் சொல் லப்படுகின்றன. **க்ரஹம், அதிக்ரஹம்** என்ற சப்தங்கள் **ப்ரஹதாரண்யகோபநிஷத்தில்** காணப்பகின்றன. ग्रहं (𑌗𑍍𑌰𑌹𑌂) (க்ரஹம்) என்றால் இந்த்ரியங்களென்றும், अतिग्रहं (𑌅𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑌂) (அதிக்ரஹம்) என்றால் விஷயமென்றும், பகவத்பாதாளுடைய பாஷ்யத்திலேயே அர்த்தம் விளக்கப்பட்டிருக்கிறது. ஆகை யால், ப்ரக்ருதத்தில் ग्रहं (𑌗𑍍𑌰𑌹𑌂) (க்ரஹம்) என்ற பதத்தால் ரூபத்தை க்ரஹிக்கும் சக்ஷுரிந்த்ரியமும், ரஸத்தை க்ரஹிக் கும் ரஸநேந்த்ரியமும், கந்தத்தை க்ரஹிக்கும் க்ராணேந்த் ரியமும், ஸபர்சத்தை க்ரஹிக்கும் த்வகிந்த்ரியமும் சப்தத்தை

க்ரஹிக்கும் ச்ரோத்ரேந்த்ரியமும் ஆக ஐந்து ஞானேந்த்ரியங்கள் என்ற கரண விசேஷங்கள் சொல்லப்படுகின்றன. स्वोच्चः (𑌸𑍍𑌵𑍋𑌚𑍍𑌚𑌃) (ஸ்வோச்ச:) என்ற பதத்தால் स्वं (𑌸𑍍𑌵𑌂) (ஸ்வம்) என்ற பதத்தால் ஜீவனும் उच्चः (𑌉𑌚𑍍𑌚𑌃) (உச்ச:) என்ற பதத்தால் ஜீவனைக்காட்டிலும் உத்க்ருஷ்டனான ஈச்வரனும் சொல்லப்படும். எந்த ஜீவன் தனக்கு மேலான ஈச்வரனிடம் சக்ஷுரிந்த்ரியம் முதலான ஞானேந்த்ரியங்களை, அந்தந்த விஷயங்களில் போகாமல் திருப்பி, லயிக்கச் செய்கிறானோ அதாவது சக்ஷுரேந்த்ரியத்தால் ஈச்வரனுடைய மங்கள திவ்ய தர்சனமும், ச்ரோத்ரேந்த்ரியத்தால் பகவானுடைய அபிஷேக தீர்த்தத்தின் சைத்யாநுபவமும், க்ராணேந்த்ரியத்தால் பகவானுக்கு அலங்கரித்த திவ்ய குஸுமங்களுடைய ஸௌலப்யத்தை அநுபவிப்பதும், ரஸநேந்த்ரியத்தால் பகவானுக்கு நிவேதனம் செய்த அன்ன ரஸத்தை ஆஸ்வாதம் செய்வதுமாக, மேற்சொன்ன ஐந்து இந்த்ரியங்களுக்கு பகவத் கைங்கர்யங்களைத் தவிர வேறு கார்யங்கள் இல்லாமல் செய்துகொண்டு பழக்கி வருகிறானோ அதுவே அந்த ஜீவனுக்கு பகவத் பக்தி என்று சொல்லப்படும்.

ऐकाग्र्यं परमं तपः

𑌐𑌕𑌾𑌗𑍍𑌰𑍍𑌯𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌤𑌪𑌃

ஐகாக்ரயம் பரமம் தப:

என்ற ச்ருதியை அனுஸரித்து இந்த்ரியங்களுக்கு ஏற்படுகிற ஏகாக்ரதையைக் காட்டிலும் வேறு தபஸ் ஒன்றுமேயில்லை என்று தெரிகிறபடியால், விஷயாதிகளில் செல்லும் ஸ்வபாவமுள்ள இந்த்ரியங்களை திருப்பி பகவத் ஸ்வரூபத்தில் ஏகாக்ரமாக, ஒரே நிலையாக நின்றுவரும் நிலையை அப்யஸித்து வருகிறவன் மஹா தபஸ்வியாக ஆகிறான் तपसा ब्रह्म विजिज्ञासस्व (𑌤𑌪𑌸𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌸𑍍𑌵) (தபஸா ப்ரஹ்மவிஜிக்ஞாஸஸ்வ) என்ற ச்ருதி

யால் ஜகாக்ரம் என்ற தபஸ்ஸே ப்ரம்ம ஸாக்ஷாத்காரத் திற்கு அந்தரங்க ஸாதனம் என்றும் தெரிகிறபடியால், அதை அநுஸரித்து கௌஸல்யா தேவியானவள் தனது ஐந்து ஞானேந்த்ரியங்களையும், தனக்கு ஸ்வாமியான ஈச்வரனிடத் தில் வஸிக்கச் செய்துகொண்டிருக்கும்பொழுது இந்த்ரியங்க ளுடைய ஜகாக்ரம் என்ற தபஸ் ஸித்தித்துவிட்டபடியால் அது நிமித்தமாக ராமனுகிய தாரக ப்ரம்மத்தை கண்ணுக்கு எதிரில் ஆவிர்பவிக்கச் செய்தாள் என்ற தாத்பர்யம்,

पञ्चसु ग्रहेषु स्वोच्चसंस्थेषु सत्सु कौसल्या रामं अजनयत्

𑌪𑌞𑍍𑌚𑌸𑍁 𑌗𑍍𑌰𑌹𑍇𑌷𑍁 𑌸𑍍𑌵𑍋𑌚𑍍𑌚𑌸𑌂𑌸𑍍𑌥𑍇𑌷𑍁 𑌸𑌤𑍍𑌸𑍁 𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾
𑌰𑌾𑌮𑌂 𑌅𑌜𑌨𑌯𑌤𑍍

பஞ்சஸு க்ரஹேஷு ஸ்வோச்சஸம்ஸ்தேஷு ஸத்ஸு கௌஸல்யா
ராமம் அஜநயத்

என்ற அன்வயத்தை அநுஸரித்து ஸித்திக்கிறது. இதனுல் ஈச்வர பக்தியினுடைய பரகாஷ்டையும் ப்ரகாசிக்கிறது. தவிரவும்,

वाक्पतौ इन्दुना सह प्रोद्यमाने सति

𑌵𑌾𑌕𑍍𑌪𑌤𑍌 𑌇𑌨𑍍𑌦𑍁𑌨𑌾 𑌸𑌹 𑌪𑍍𑌰𑍋𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 𑌸𑌤𑌿

வாக்பதௌ இந்துநா ஸஹ ப்ரோத்யமானே ஸதி

என்ற அன்வயத்தை அநுஸரித்து குரு பக்தி விசேஷமும் புலப்படுகின்றது. वाक्पति (𑌵𑌾𑌕𑍍𑌪𑌤𑌿) (வாக்பதி) என்ருல் தேவ குருவான ப்ரஹஸ்பதி என்று சொல்லப்படும். தைவஸம்பத் தியில் ஜனித்து, ப்ரம்ம தத்வத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலுள்ள ஸஜ்ஜனங்களே தேவர்களாக ஆகுவார்கள். அவர்களுக்கு ப்ரம்மோபதேசம் செய்ய அவர் களுடைய புண்யவசத்தால் கிடைத்த ஸத்குருவே ப்ருக்ரு தத்தில் வாக்பதி என்ற சப்தத்தால் சொல்லப்படுகிருன் என் பதை அறியவும்.

इन्दु (𑌇𑌨𑍍𑌦𑍁) (இந்து) என்ற சப்தத்திற்கு, चन्द्रमा मनसो जातः (𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾 𑌮𑌨𑌸𑍋 𑌜𑌾𑌤𑌃) (சந்த்ரமா மநஸோ ஜாத:) என்ற ச்ருதியை அநுஸரித்து மனஸிற்கு அதிஷ்டான தேவதையான சந்த்ரனைச் சொல்லும் சப்தத்தால் சந்த்ரனுடைய ஆளுகைக்குள் இருந்துவரும் மனஸ் என்ற பொருளை அறியவும். அதனால், "ஸத்குருவோடு மனதானது சேர்ந்திருக்கும் பொழுது" என்ற தாத்பர்யம் ஏற்படுகிறது. அக்னிஹோத்ரம் முதலான கர்மாக்களால் மனதை நிர்மலமாகச் செய்து கொண்டு, அந்த மனதை நல்ல பாவத்துடன் ஸத்குருவினிடத்தில் செலுத்தின காரணத்தால் அந்த ஸத் குருவானவர் சிஷ்யனுடைய விஷயத்தில் தத்வோபதேசம் செய்து, ஸம்ஸார ஸாகரத்திலிருந்தும் சிஷ்யனை கரையேற்றி வைக்க வேண்டும் என்ற விஷயத்தில் ப்ரஸன்னனாக விளங்கிக் கொண்டிருக்கும்பொழுது என்பது,

वाक्पतौ इन्दुना सह प्रोद्यमाने सति

𑌵𑌾𑌕𑍍𑌪𑌤𑍌 𑌇𑌨𑍍𑌦𑍁𑌨𑌾 𑌸𑌹 𑌪𑍍𑌰𑍋𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 𑌸𑌤𑌿

வாக்பதௌ இந்துநா ஸஹ ப்ரோத்யமாநே ஸதி

என்ற வாக்யத்தால் தாத்பர்யம் விளங்குகிறது. ப்ரக்ருதத்தில் கௌஸல்யா தேவியானவள், தனது குருவான வஸிஷ்டரிடம் சுத்தமான மனதை அர்ப்பணம் செய்து, அக்காரணத்தால் வஸிஷ்டர் என்ற பரமகுரு கௌஸல்யாதேவி என்ற சிஷ்ய ஜனத்தினிடம் கருணைவைத்து, 'இந்த அம்மாளுக்கு ப்ரஹ்ம தர்சனம் செய்துவைக்கவேண்டும்' என்ற விஷயத்தில் ப்ரஸன்னராக இருந்தார். அக்காரணத்தால் இந்த அம்மாளும் தாரக ப்ரம்மத்தை கண்ணுக்கு எதிரில் ஆவிர்பவிக்கும்படி செய்து தர்சனமும் செய்து, ஜன்ம ஸாபல்யத்தை அடைந்தாள் என்றும் தாத்பர்யம் வெளியாகிறது. கௌஸல்யா தேவியைப்போல், யோகிகளுக்கும் அகப்படாததான பரப்ரஹ்மத்தை புத்ரனாக அடைந்து தர்சனம் செய்ய வேண்டுமென்ற ஆவல் மற்றவர்களுக்கு இருந்தால், கௌஸல்

யாதேவியைப்போல் அவர்களும் தபத்தைச் செய்தால் அது ஸுலபம்தான். அந்த தபஸ்ஸும் ஈச்வர பக்தியும், குருபக்தியும்தான் என்பதை அவதார கட்ட ச்லோகத்திலுள்ள மேல் காட்டிய வாக்யங்கள் ப்ரகாசப்படுத்துகின்றன. இதனல் கௌஸல்யா தேவியானவள் ஐந்து இந்த்ரியங்களையும் ஈச்வரனிடத்தில் லயப்படுத்தி மனதையும் ஸத்குருவினிடம் அர்ப்பணம் செய்து, குரு, ஈச்வரன் இருவர்களையும் ஒரே தத்வமாக பஜனம் செய்துவந்த காரணத்தால், ஜகந்நாதம் என்றது முதலான விசேஷணங்களால் விசேஷிக்கப்பட்ட ஸ்ரீராமனை, வஸந்த ருதுவில், சித்திரை மாஸத்தில், சுக்லபக்ஷ நவமியில், கடகலக்னத்தில் புனர்வஸுநக்ஷத்ரத்தில் ஆவிர்பவிக்க செய்தாள். தானும் தர்சித்து ஜன்ம ஸாபல்யத்தை அடைந்தாள் என்றும் வ்யங்க்ய மர்யாதையை அநுஸரித்து அவதார கட்டத்தின் ச்லோகங்களின் அபிப்ராயம் வெளியாகும். இந்த விஷயத்தைத்தான் வால்மீகி மஹர்ஷியானவர்,

कोसल्या शुशुभे तेन पुत्रेणामित तेजसा ।
यथा वरेण देवानां अदितिः वज्रपाणिना ॥

கொஸல்யா ஶுஶுஹெ தெந புத்ரெணாமித தெஜஸா ।
யதா வரெண தெவாநாம் அதிதி: வஜ்ர பாணிநா ॥

கோஸல்யா சுசுபே தேந புத்ரேண அமித தேஜஸா ।
யதா வரேண தேவாநாம் அதிதி: வஜ்ர பாணிநா ॥

என்ற ச்லோகத்தால் வெளிப்படுத்துகிறார். அந்த ச்லோகத்தின் வ்யாக்யானத்தில், ஸ்ரீராமருடைய ஆவிர்பாவத்திற்கு தசரதர் செய்த யக்ஞம் மாத்ரம் காரணமல்ல; கௌஸல்யா தேவியினுடைய தபஸ்ஸும் காரணம்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த தபஸ்ஸும் மேல்சொன்னபடி ஈச்வர பக்தி ரூபமாகவும், குருபக்தி ரூபமாகவும்தான் ஆகிறது. कौसल्या शुशुभे (கௌஸல்யா ஶுஶுஹெ)(கௌஸல்யா சுசுபே) என்ற ச்லோகத்தின் தாத்பர்யத்தை கவனித்தாலோ புத்ரன் என்ற வ்யாஜத்தால் அவதரித்த ஈச்வரனல் கௌஸல்யாதேவி

ஸந்தோஷத்தை அடைந்தாள். அதிலும் सौश्रेयान् भवति व्याय मानः (ஸௌச்ரேயாந் பவதி வ்யாயமாந:) (ஸௌச்ரேயாந் பவதி வ்யாயமாந:) என்றதை அனுசரித்து முடிவு இல்லாததான திவ்ய தேஜஸ்ஸோடு அந்த ஈச்வரன் விளங்கிக்கொண்டு கௌஸல்யாதேவிக்கு தர்சனம் அளித்தார். எவ்விதம் அதிதி அம்மாள் மஹாவிஷ்ணுவானவர் தன்னிடம் வாமனுவதாரம் செய்து தனக்கு தர்சனம் கொடுத்த காலத்தில். ஸந்தோஷப்பட்டாளோ, அதுபோல் கௌஸல்யா தேவியும் ஸ்ரீராமன் ஆவிர்பவித்த காலத்தில் ஸந்தோஷப்பட்டாள் என்று சொல்லியிருக்கிறபடியால் உபேந்த்ராவதாரம் எப்படி அயோனிஜமான அவதாரமோ, அதுபோல் ஸ்ரீராமாவதாரமும் அயோனிஜாவதாரம்தான். ஸ்ரீராமன் பிறந்தார் என்பதெல்லாம் மாயைதான் என்பது ஸ்பஷ்டமாக ஆகிறது.

ஆகையால், பக்தி மஹிமையினுல் பகவான் ப்ரத்யக்ஷமாகிருர் என்பதே அவதார ரஹஸ்யமாகும். தவிரவும், இக்ஷ்வாகு வம்சத்திலுள்ள தசரத சக்ரவர்த்தியை, ஸர்வ ஜகத்தையும் பாஸிக்கச் செய்கிற ஸூர்ய பகவானுகக் கருத வேண்டும். அந்த வம்சத்திற்கு ஸூர்யனே மூல புருஷன் என்றது ப்ரஸித்தமானது. அந்த மூலபுருஷனுன ஸூர்யன் பகவதவதாரத்தின் பித்ருபாவத்தை அடைந்து அதனுல் கீர்த்தியை அடையவேண்டுமென்ற எண்ணத்துடன் மறுபடியும் அதே வம்சத்தில் தசரதராக பிறந்தார் என்று தெரிகிறது. தசரதர் என்ற சப்தத்தினுலேயே ஸூர்யன் என்ற அர்த்தத்தை அறியலாம்.

दशस्वपि दिक्षु अप्रतिहतः रथः यस्य सः

தசஸ்வபி திக்ஷு அப்ரதிஹத: ரத: யஸ்ய ஸ:

தசஸ்வபி திக்ஷு அப்ரதிஹத: ரத: யஸ்ய ஸ:

என்ற ஸமாஸத்தால் "எல்லா திக்குகளிலும் தடையின்றி எவனுடைய ரதம் போகக்கூடுமோ அவன் தசரதன்" என்ற

அர்த்தம் ப்ரகாசிக்கிறபடியால் ஸூர்யனுடைய ரதம்தான் எல்லா திக்குகளிலும் தடையில்லாமல் போகக்கூடுமானதால், அந்த ஸூர்யன்தான் தசரதர் என்று தசரதர் என்ற பெயராலேயே ஸூசிப்பிக்கப்படுகிறது. ஸூர்யபகவானுக்கோ ஸந்த்யாதேவியே தர்மபத்னி என்று சொல்கிற வழக்கம். ப்ராதஸ்ஸந்த்யை, மாத்யாந்ஹிகஸந்த்யை ஸாயம்ஸந்த்யை, என்று மூன்றுவிதம் ஸந்த்யைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ப்ராதஸ் ஸந்த்யையை காயத்ரீ தேவியாகவும், மாத்யாந்ஹிக ஸந்த்யையை ஸாவித்ரீ தேவியாகவும், ஸாயம் ஸந்த்யையை ஸரஸ்வதீ தேவியாகவும், கவிகள் சொல்லுவார்கள். ஸூர்யனே தசரதராக இக்ஷ்வாகு வம்சத்தில் அவதரித்தார் என்று சொன்னதால் ஸூர்யனைச் சேர்ந்த மூன்றுவிதமான ஸந்த்யா ரூபிணிகளான காயத்ரீ, ஸாவித்ரீ, ஸரஸ்வதீ என்ற தேவிகளும் கௌஸல்யா தேவி, ஸூமித்ரா தேவி, கைகேயி தேவி என்ற மூன்று மனைவிகளாக ஆவிர்பவித்தார்கள். தசரதருக்கு கௌஸல்யாதேவியினிடத்தில் ராமன் என்ற புத்ரன் பிறந்தான் என்பதால், ஒவ்வொரு தினத்திலும் ப்ராதக்காலத்தில் ஸூர்யமண்டலத்தில் காயத்ரீ மந்த்ரத்தின் அர்த்தத்தை த்யானம் செய்தால் ப்ரம்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படுகிறது என்றும், ஸூமித்திரையினிடம் லக்ஷ்மணன் சத்ருக்னன் என்பவர்கள் பிறந்தார்கள் என்பதால், மாத்யாந்ஹிக காலத்தில் ஸூர்யபகவானோடு ஸாவித்ரீ என்ற தேவதையை சேர்த்து த்யானம் செய்வதால் அளவற்ற தனமும் ம்ருத்யுவை ஜயிப்பதான சக்தியும் ஏற்படுகிறதென்றும், கைகேயினிடம் பரதன் பிறந்தான் என்பதாலேயும் ஸாயம்காலத்தில் ஸரஸ்வதியோடு ஸூர்யனைச் சேர்த்து த்யானம் செய்வதால் மோக்ஷம் என்ற பரம புருஷார்த்தம் ஸித்திக்கிறது என்றும் வெளியாகிறது. இதனால் ஸூர்யமண்டலத்திலுள்ள பரப்ரஹ்மமே ஸ்ரீராமசந்த்ர மூர்த்தி என்பதை நிச்சயமாகச் சொல்ல வேண்டும்.

ஸூர்யமண்டலத்திலோ பரப்ரம்மம் விளங்கி வருகிறது என்பதில்,

य एषोऽन्तरादित्ये हिरण्मयः पुरुषो दृश्यते हिरण्यश्मश्रुः हिरण्यकेशः आप्रणखात् सर्व एव सुवर्णः । तस्य यथा कप्यासं पुण्डरीकं एवं अक्षिणी ।

𑌯 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋
𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌃 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑍇𑌶𑌃
𑌆𑌪𑍍𑌰𑌣𑌖𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌃 । 𑌤𑌸𑍍𑌯
𑌯𑌥𑌾 𑌕𑌪𑍍𑌯𑌾𑌸𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌂 𑌏𑌵𑌂 𑌅𑌕𑍍𑌷𑌿𑌣𑍀 ।

ய ஏஷோ அந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ
த்ருச்யதே ஹிரண்யச்மச்ரு: ஹிரண்யகேச:
ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண: । தஸ்ய
யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவம் அக்ஷிணீ ।

என்ற சாந்தோக்ய ச்ருதியும், हिरण्मयेन पात्रेण (𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑍇𑌨 𑌪𑌾𑌤𑍍𑌰𑍇𑌣) (ஹிரண்மயேந பாத்ரேண)

என்றது முதலான ஈசாவாஸ்யோபநிஷத் வாக்யமும் ப்ரமாண மாக ஆகும். இதனல் ராமனை பரப்ரம்மமாகவும், பரத ஸ்வாமியை மோக்ஷம் என்ற நான்காவது புருஷார்த்தமாகவும் லக்ஷ்மண ஸ்வாமியை தனத்திற்கு அதிதேவதை என்றும், சத்ருக்னஸ்வாமியை ப்ராணனுக்கு அதிதேவதை என்றும், அறியவும்.

वेदवेद्ये परे पुंसि जाते दशरथात्मजे ।
वेदः प्राचेतसादासीत् साक्षाद्रामायणात्मना ॥

𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑍍𑌯𑍇 𑌪𑌰𑍇 𑌪𑍁𑌂𑌸𑌿 𑌜𑌾𑌤𑍇 𑌦𑌶𑌰𑌥𑌾𑌤𑍍𑌮𑌜𑍇 ।
𑌵𑍇𑌦𑌃 𑌪𑍍𑌰𑌾𑌚𑍇𑌤𑌸𑌾𑌦𑌾𑌸𑍀𑌤𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ॥

வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே ।
வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத்ராமாயணாத்மநா ॥

என்ற ஸூக்தியை அனுஸரித்து ஸ்ரீமத் ராமாயணமானது வேதம் என்றே தெரிகிறபடியால் வேதத்திற்கு எந்த அர்த்தத்தில் பரம தாத்பர்யம் ஏற்படுமோ அந்த அர்த்தத்தில் தான் ராமாயணத்திற்கும் தாத்பர்யத்தைச் சொல்லவேண்டும். அதை அனுஸரித்து ராமாவதார ரஹஸ்யத்தை அறியவும்.

ஒரே ரூபமான ப்ரம்மத்தை அவித்யா தசையில் விச்வன், தைஜஸன், ப்ராக்ஞன், துரீயன் என்று நான்குவிதங்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஸ்தூலமான சரீரம் என்ற உபாதியால் உபஹிதமாக இருந்துகொண்டு சக்ஷுரேந்த்ரியம் முதலான பஹிரிந்த்ரியங்களை உபாயங்களாகக் கொண்டு ஸ்தூலமான ப்ரபஞ்சத்தை அனுபவித்து வருகிறவன் **விச்வன்** என்று சொல்லப்படுவான்.

ஸூக்ஷ்மமான மனஸ் என்ற உபாதியினுல் உபஹிதமாக இருந்துகொண்டு சக்ஷுரேந்த்ரியமான பாஹ்ய இந்த்ரியங்களை அபேக்ஷிக்காமல், மனதை மாத்ரம் உபாயமாகக்கொண்டு ஸூக்ஷ்மமான (வாஸனுமயமான) ப்ரபஞ்சத்தை அனுபவித்துவருகிறவன் **தைஜஸன்** என்று சொல்லப்படுவான்.

காரண சரீரமென்ற அவித்யை ஆகிற உபாதியினுல் உபஹிதமாக இருந்துகொண்டு ஸ்தூலமோ, ஸூக்ஷ்மமோ ஒருவிதமான உபாயங்களையும் அபேக்ஷிக்காமலும், ஒருவிதமான விஷயானுபவம் இல்லாமலும் தனது ஸ்வரூபமாகிய ஆநந்தத்தை அனுபவித்துவரும் நிலையில் ப்ராக்ஞன் என்று சொல்லப்படுவான்.

மேல் சொன்ன மூன்று க்ரமங்களையும் அனுஸரித்துத்தான் ஜாக்ரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்று மூன்று அவஸ்தைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஸ்தூல ஸூக்ஷ்மம் என்ற கார்யோபாதியோ, அவித்யை என்ற காரணேபாதியோ இரண்டுவிதமான உபாதிகளும் ஸ்வரூபநாசத்தை அடைந்து உபாதி ஸம்பந்தம் இல்லாத சுத்தமான அகண்ட சைதன்யம் **துரீயம்** என்று சொல்லப்படும்.

இவ்விதம் சைதன்யத்தின் விபாகங்கள் வேதாந்த நூல்களில் கூறப்பட்டுள்ளன.

यो वेदादौ स्वरः प्रोक्तः वेदान्ते च प्रतिष्ठितः ।
तस्य प्रकृतिलीनस्य यः परः समहेश्वरः ।

𑌯𑍋 𑌵𑍇𑌦𑌾𑌦𑍌 𑌸𑍍𑌵𑌰𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍇 𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 ।
𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌲𑍀𑌨𑌸𑍍𑌯 𑌯𑌃 𑌪𑌰𑌃 𑌸𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ।

யோ வேதாதௌ ஸ்வரப்ரோக்த: வேதாந்தே ச ப்ரதிஷ்டித: ।
தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய ய: பர: ஸமஹேச்வர: ।

என்ற ச்ருதியை அனுஸரித்து, ப்ரணவம் என்ற (ओं) ஓம்கார மானது வேதங்களுக்கும் மூலபூதமான காரண வஸ்து என்று சொல்லப்படும். அந்த ஓம் காரத்தை த்ரிமாத்ரம் (மூன்றுமாத்ரைகளுடன் கூடினது) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஓம்காரத்தில் (अ) (उ) (म) அ உ ம என்று மூன்று அக்ஷரங்கள் உள்ளன. அந்த மூன்று அக்ஷரங்களையே மூன்று மாத்ரைகள் என்று சொல்லப்படும். (अ) அ என்ற எழுத்து முதல் மாத்ரையாகவும், (उ) உ என்றது இரண்டாவது மாத்ரையாகவும், (म) ம என்றது மூன்ருவது மாத்ரையாகவும் சொல்லப்படுகிறது. ஆகையால் ப்ரணவம் என்ற அக்ஷரமானது மூன்று மாத்ரைகளுடன் கூடினது என்பது ஸித்தமாகிறது. இது ஸவர்ணமான ஓம்காரமாகும்.

முதல் மாத்ரையான (अ) அ காரத்தில், ஜாகரிதஸ்தானமான இந்த்ரியங்கள், ஸ்தூல ப்ரபஞ்சம், அதில் அபிமானமுள்ள விச்வன் என்ற ஜீவன் அடங்கியிருக்கிறது.

(उ) உ என்ற இரண்டாவது மாத்ரையில் ஸ்வப்னஸ்தானமான மனஸ், ஸூக்ஷ்ம ப்ரபஞ்சம் அதில் அபிமானமுள்ள தைஜஸன் என்ற ஜீவன் அடங்கியிருக்கிறது.

மூன்ருவது மாத்ரையான (म) ம என்ற அக்ஷரத்தில் ஸுஷுப்திஸ்தானமான ஹ்ருதயாகாசம், ஸுஷுப்த்யவஸத்தை, அந்த அவஸ்தையில் அபிமானமுள்ள ப்ராக்ஞன் என்ற ஜீவன் அடங்கியிருக்கிறது.

இதனுல் ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண ப்ரபஞ்சங்கள் யாவும் ப்ரணவமாகிய ओं (ஓம்) (ஓம்) காரத்தில் அடங்கிவிட்டன. அந்த ப்ரணவத்திலடங்கிய மாத்ரைகளில் விச்வ,

தைஜஸ, ப்ராக்ஞன் என்ற மூன்று ஜீவர்களாகிய த்வம் பதார்த்தமும் அடங்கிவிட்டது.

ओमित्येतदक्षरं इदमित्येतत् सर्वं

ஓமித்யே தத³க்ஷரம் இத³மித்யேதத் ஸர்வம்

ஓமித்யே ததக்ஷரம் இதமித்யேதத் ஸர்வம்

என்றது முதலான உபநிஷத் வாக்யக்களே மேற்சொன்ன விஷயத்தில் ப்ரமாணமாகும். இந்த க்ரமத்தில், ஸ்வப்ன வஸ்தைக்கு அபிமானியான தைஜஸனுக்கு இரண்டு அவஸ்தைகள் உண்டு. ஸ்வப்னத்தைக்கண்டு முழித்துக் கொள்வதும் உண்டு; ஸ்வப்னத்திலிருந்தே தூங்குகிறதும் உண்டு. ஸுஷுப்தி என்ற தூக்கத்திற்கும், ப்ரபோதம் என்ற ஜாக்ரத்திற்கும் ஸவப்னத்தை ஸந்தியாக சொல்லப்பட்டிருக்கிறது. இதனுல், ஸ்வப்னஜீவன் இரண்டு ரூபமாக ஆகலாம் என்பது ஸித்தமாகிறது. ப்ரணவம் என்ற (ॐ) ஓம்காரத்திலுள்ள நடு எழுத்தான (उ) உ என்ற எழுத்தில் ஸவப்னவஸ்தை தைஜஸன், இவை அடக்கப்பட்டிருக்கின்றன என்றுசொன்னதினுல் ஸ்வப்னத்தைக் கண்டவன் ஸுஷுப்திக்கு வருவதே அதிகமானதாலும், ஸுஷுப்தி இல்லாதவனுக்கு ஸ்வப்னம் ஏற்படாததாலும், ஸுஷுப்தி ஸ்வப்னம் இரண்டும் ஒரே தத்வமாக ஆகிவிடும். இதுபோல் அக்ஷரங்கள் இல்லாமல் ஒரு ॐ (ஓ°) ஓம் காரமும் உண்டு. அது அவர்ணமாயும், அமாத்ரமாயும் சொல்லப்படும். அந்த (ॐ) ஓம்காரமானது வாக் என்ற இந்த்ரியத்தால் சொல்லப்படவும் முடியாது; அதனுடைய தத்வத்தை எழுதவும் முடியாது. குருகடாக்ஷத்தால் ஏற்படுகிற ஸ்வானுபவத்தில் ப்ரகாசிக்கும் ஓம் காரமாகும். அதுதான் "துரீயமான ப்ரம்மம்" என்று சொல்லப்படும். இதனுல் விச்வன், தைஜஸன், ப்ராக்ஞன், துரீயன் என்று நான்கு பிரிவாக சைதன்யமும், அந்த நான்கில் மூன்று பிரிவுகளை (अ उ म) அ உ ம என்ற ஸவர்ணமான ஓம் காரமும், நான்காவது பிரிவான சுத்தப்ரம்மத்தை அவர்ண

மான ஓம் காரமும் போதிக்கிறது என்ற தத்வத்தை விவேகிகள் அறியவும்.

அதில் (उ) உ என்ற அக்ஷரத்தை உச்சரிக்க இரண்டு உதடுகளும் குவியவேண்டும், (म) ம என்ற அக்ஷரத்தை உச்சரிக்க இரண்டு உதடுகளும் ஒன்றுகச் சேரவேண்டும். இது லோகத்தில் ப்ரஸித்தமானது. இதனுல் இரண்டு உதடுகளுக்கும் (उ) உ என்ற அக்ஷரத்தை உச்சரிப்பதிலும், (म) ம என்ற அக்ஷரத்தை உச்சரிப்பதிலும், ஸங்கோசம் (குறுகல்) ஏற்படுகிறது என்பது ஸமானமானதால் இரண்டு அக்ஷரத்தையும் ஒரே தத்வமாக பாவிக்கவேண்டும். அதை அனுஸரித்துத் தான் லோகமாதாவான பார்வதிக்கு " உமை " என்ற பெயர் ஏற்பட்டது.

(अ) அகாரமும்,(उ)உகாரமும் சேர்ந்தோ,(अ) அகாரமும் (म) மகாரமும் சேர்ந்தோ ஒரு சேதனத்திற்கு நாமாவாக லோகத்தில் ப்ரஸித்தி கிடையாது. (उ) உவும் (म) மவும் சேர்ந்து நாமாவாக ஆகிறதுபோல் (अ) அவும் (म) மவுமோ, (अ) அவும் (उ) உவுமோ பெயராக ஆவது ப்ரஸித்தமில்லை. ஆகிலும் (उ) உவும் (म) மவும் சேர்ந்த உமை என்ற தத்வத்தில் இரண்டு பொருள் தைஜஸன் ப்ராக்ஞன் என்ற பெயர் விளங்கிவருகிறது. இதைத்தான் உமை என்ற பார்வதி ப்ரகாசப்படுத்தத் தன்னிடத்தில் இரண்டு அக்ஷரங்கள் சேர்ந்த பெயர் விளங்கினுலும் தத்வம் ஒன்றுனதினுல் அந்த ஒரு தத்வத்திலும் இரண்டு சைதன்யம் ப்ரகாசிக்கிறது என்பதைக் காட்டுவதற்கு, மஹாகணபதி ஸுப்ரஹ்மண்யன் என்ற இரண்டு புத்ரர்களை ஆவிர்பவிக்கச் செய்ததின் மூலமாக இரண்டு சைதன்யத்தை ப்ரகாசப்படுத்தினுள். சிவரஹஸ்யம் முதலான நூல்களை கவனித்தவர்களுக்கு இந்த ரஹஸ்யம் ஸுலபமாக புலப்படக்கூடும்.

இந்த விசாரம் இவ்விதமிருக்க, ப்ரக்ருதத்தில் தசரத சக்ரவர்த்தியை ओं (ஓ॰) ஓம் கார ஸ்வரூபமென்றும், கைகேயி

தேவியை (अ) அகாரமென்ற முதல் மாத்ரையாகவும், ஸுமித்ரா தேவியை (उ) உ (म) ம இரண்டு அக்ஷரங்களும் சேர்ந்து இரண்டாவது, மூன்றுவது மாத்ரைகளாகவும், கௌஸல்யா தேவியை அமாத்ரையாகவும் பாவிக்கவேண்டும். அமாத்ரையாகிற கௌஸல்யா தேவியோடு தசரதர் என்ற ஓம் காரம் சேரும் பொழுது அவர்ணமான ஓம் காரமாகவும், கைகேயி தேவி என்ற முதல் மாத்ரையோடும், ஸுமித்ரை என்ற இரண்டாவது மூன்றுவவது மாத்ரையோடும் சேர்ந்து இருக்கும் பொழுது ஸவர்ணமான ஓம் காரமென்றும் அறியவும். தசரதர் என்ற பெயராலேயே ப்ரணவ ஸ்வரூபமே அவர் என்பதை அடியில்கண்டபடி அறியவும்.

'தசரதர்' என்ற பதத்தின் ஸாம்ப்ரதிகி லக்ஷணையை அனுசரித்து, **नाम एकदेश ग्रहणं** (𑌨𑌾𑌮 𑌏𑌕𑌦𑍇𑌶 𑌗𑍍𑌰𑌹𑌣𑌂) (நாம ஏகதேச க்ரஹணம்) செய்துகொள்ள வேண்டியதால், **दशमः** (𑌦𑌶𑌮𑌃) (தசம:) என்ற பதத்திலிருந்து **दश** (𑌦𑌶) (தச) என்பதையும், **मनोरथः** (𑌮𑌨𑍋𑌰𑌥𑌃) (மனோரத:) என்ற பதத்திலிருந்து **रथः** (𑌰𑌥𑌃) (ரத:) என்பதையும் க்ரஹித்துக் கொண்டு தசமனிடத்தில் மனோரதத்துடன் கூடினவன், (தாத்பர்யத்தோடு கூடினவன்) என்று அர்த்தம் விளங்குகிற படியால், **தசரத:** என்று ஏற்பட்டது. பத்தாவது வஸ்துவோ பரப்ரம்மம்தான் ஆகும். அதாவது, பாஹ்யமான கோசங்கள் நான்கு; அன்னம், வித்தம், புத்ரன், களத்ரம் என்று சொல்லப்படும். ஒரு புருஷனுக்கு எது புஜிப்பதற்கு அர்ஹமான வஸ்துவோ அது அன்னமாகும்; அதுவும் ப்ரியமான வஸ்துதான். அதற்கு மேலான ப்ரியம் வித்தம் என்ற பொருளாகும்; வித்தத்திற்கு மேலாக புத்ரன் என்ற பிள்ளை ஆகுவான். அதற்கும் மேலாக களத்ரம் என்ற மனைவி ஆகுவாள்.

இந்த நான்கு கோசங்களும் பாஹ்யமாகும். சரீரம், இந்த்ரியம், மனஸ், புத்தி, ஜீவன் இந்த ஐந்தும் ஆந்த்ரமான

கோசமாகும். களத்ரம் என்ற மனைவியைக் காட்டிலும் தன் சரீரம் தனக்குப் ப்ரியமானது. சரீரத்தைக் காட்டிலும், ஸூக்ஷ்மமான இந்த்ரியங்களில் ப்ரேமை அதிகம்; அதைக் காட்டிலும் மனஸிலும்; மனதைவிட புத்தியிலும்; எல்லாவற்றைக் காட்டிலும் கர்த்தா போக்தாவான "தான்" என்ற சிதாபாஸனுகிய ஜீவன் மேல். இந்த ஒன்பதில் ஆசையுள்ளவனுக்கு, ஒன்பதுக்கும் மேலான, பத்தாவதான பகவான் புலப்படாததால் பத்தாவது பகவானை மறைக்கும் வஸ்துக்கள்போல் இந்த ஒன்பதும் ஆவதால், இந்த ஒன்பதையும் கோசங்கள் (மறைக்கும் பொருள்) போல் சாஸ்த்ரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. இந்த ஒன்பது கோசங்களுக்கும் பகவத் ஸ்வரூபம் விலக்ஷணமானதால் தசமன் என்று பகவானை சொல்கிற வழக்கம். அந்த தசமனை ப்ரம்மத்தையே சொல்கிற சப்தமானதால் ஓம் காரத்தை தசரத: என்று சொல்லக்கூடும். ப்ரம்மத்தை தசமன் என்றே நிரூபணம் செய்தோம். அந்த ப்ரம்மத்தைச் சொல்லும் சப்தம் ஓம் காரமாகும் என்பதில், ओं तत्सदिति निर्देशः (ஓ० தத்ஸதிதி நிர்தேஶ:) (ஓம் தத்ஸதிதி நிர்தேச:) என்ற பவகத்கீதா வாக்யமே ப்ரமாணமாகும்.

नामैकदेशग्रहण (நாமைகதேஶக்ரஹண) (நாமைகதேசக்ரஹண) யுக்தியை அனுஸரித்து, தசரத சக்ரவர்த்தியே ப்ரணவஸ்வரூபமாகிவிட்டார். வேதமே ராமாயணமாக ஆகும்பொழுது ராமாயணத்திற்கு மூலபுருஷனை தசரதர் வேதத்திற்கு மூலமான ஓம்காரமாகவே ஆகிருர் என்பதில் என்ன ஸந்தேஹம்? ஆகையால், ஸ்ரீமத் ராமாயண க்ரந்தமே வேத ஸ்வரூபமானதால், அதை அனுஸரித்து பகவானுடைய அவதார ரஹஸ்யத்தை கவனித்தால், அமாத்ரை என்ற சித்சக்தியோடு, அவர்ணமென்ற ப்ரணவ ஸ்வரூபியான தசரதர் ஸம்பந்தப்பட்டு, துரீய ப்ரம்மமாகிற தாரக ப்ரம்மத்தை (ப்ரக்ருதத்தில் ஸ்ரீராமரை) ப்ரகாசப்படுத்தினுர் என்றும், ஸவர்ணமான ப்ரணவமாகத் தான் இருக்கும்பொழுது அகாரம் என்ற முதல்

மாத்ரையில் ஸம்பந்தப்படடு விச்வன் என்ற ஸமஷ்டி ஜீவனுன விராட்புருஷனுகிய ஈச்வர ஸ்வரூபத்தை (ப்ரக்ருதத்தில் பரதஸ்வாமியை) ப்ரகாசப்படுத்தினுர் என்றும், உகார, மகாரரூபிணியான ஸுமித்ரை என்ற 2-வது 3-வது மாத்ரைகளாகிற ஒரு சக்தியோடு ஸம்பந்தப்பட்டு, ப்ராக்ஞன் என்ற கூடஸ்த தத்வம் ஆகிற சுத்த ஜீவனையும், (ப்ரக்ருதத்தில் லக்ஷ்மணஸ்வாமியையும்), சத்ருக்னன் என்ற ஸம்ஸாரியான ஜீவஸ்வரூபமாகிற த்வம்பதத்தின் வாச்யார்த்தத்தையும் ப்ரகாசப்படுத்தினுர். இதனுல் ஓம்காரத்தை த்யானம் செய்துகொண்டு, ப்ரம்மஞானம் செய்கிற யோகிகளுக்கு ஸமாத்ரமாய் ஓம் காரத்தை உச்சரிக்கும்பொழுது, அதிலும் (अ)·அ காரம் என்ற முதல் மாத்ரையோடு ஓம் காரத்தை சேர்த்து உச்சரிக்கும்பொழுது ஸமாதியில் ஸகுண பரம்மமாகிய ஈச்வர ஸ்வரூபத்தையும், (उ) உ கார (म) மகாரமாத்ரையோடு சேர்த்து உச்சரிக்கும்பொழுது, கூடஸ்தன், ஜீவன் என்ற தத்வங்களையும், அமாத்ரமாக ஓம் காரத்தை அனுபவிக்கும்பொழுது நிர்குண ப்ரம்மத்தையும் ராஜயோகிகள் பார்த்து ஆநந்திக்கிருர்கள். இந்த நான்குவிதமான தத்வங்களையும் ப்ரகாசப்படுத்த ப்ரணவம் என்ற ஒரு அக்ஷரத்திற்குத்தான் சக்தி உண்டு. அந்த ப்ரணவம்தான் ப்ரக்ருதத்தில் தசரதர். ஸமாத்ரமாக அந்த ப்ரணவம் இருக்கும் காலத்தில் ஸுமித்ரா தேவி, கைகேயி தேவி இவர்கள் இருவர்கள் மூலமாக, கைகேயி தேவி, அகாரத்தின் பொருளாகவும் ஸுமித்ரையை உ கார ம காரத்தின் பொருளாகவும் அறிந்து, ஸுமித்ரா தேவியை இரண்டுமாத்ரையாகவும் கைகேயியை ஒரு மாத்ரையாகவும் அறிந்து, அவ்விதமே அவர்ணமாக ஓம் காரம் இருக்கும் நிலையில், கௌஸல்யா தேவியை அமாத்ரையான பரதேவதாஸ்வரூபமாகவும் அறிந்து ராமன், பரதன், லக்ஷ்மண சத்ருக்னன் இந்த நான்கு குமாரர்களையும் ப்ரம்மம், ஈச்வரன், கூடஸ்தன், ஜீவன் என்று முறையே நான்கு தத்வங்களாகவும் அறிவது, 'ஸ்ரீமத் ராமாயணம் வேதமே' என்பதற்குப் பொருத்தமாகும். இதில்

ராம ரஹஸ்யோபநிஷத், ராம பூர்வதாபினி, ராமோத்தரதாபினி, ஸீதோபநிஷத், முக்திகோபநிஷத், மாண்டுக்யோபநிஷத் முதலான உபநிஷத்துக்கள் ப்ரமாணங்களாக முன்வருகின்றன. இது தான் அவதார ரஹஸ்யம். ப்ரம்மசர்யம் முதலான ஸாதன ஸம்பத்தியோடு கூடினவர்களுக்கு இது பரம ஸந்தோஷத்தைக் கொடுக்கும் என்பதில் ஆக்ஷேபணையே யில்லை. இதை ப்ரபந்தகதமான வ்யங்யமாக அறிந்துகொள்ளவேண்டும். வால்மீகி ராமாயணத்திற்கு வ்யாக்யாதாக்களில் முக்யமான கோவிந்தராஜ அய்யங்கார் மஹாஸ்வாமிகளவர்கள், கோவிந்த ராஜீயம் என்ற தனது வ்யாக்யானத்தில் ஒவ்வொரு ச்லோகத்திலும் இதுபோலொத்த வ்யங்யத்தை ப்ரகாசப்படுத்தாதபோனலும், இந்த ப்ரபந்தத்திற்கே இது போலொத்த பொருளைத்தான் சொல்லவேண்டுமென்ற நியமத்தை ஸுந்தர காண்டத்தில், पक्षी च शाखा निलयः (வக்ஷீ அ் பாவா நிலயஃ) (பக்ஷீ ச சாகா நிலய:) என்ற ச்லோக வ்யாக்யானுவஸரத்தில் इदंतु उत्तमकाव्यं (ஊஃஞ உதூஃகாவ்யம்) (இதம்து உத்தம காவ்யம்) என்று ஆரம்பித்துக்கொண்டு, ராமாயணகதா சரீரத்தை வர்ணித்திருக்கும் அழகை கவனித்தால் இதுதான் அவதார ரஹஸ்யம் என்பதை அவச்யம் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

ஸ்ரீ ராமாவதார விசாரம்.

1. ஸ்ரீராமனுடைய ஜன்மாவானது ப்ராக்ருத ஜீவனுடைய ஜன்மாவைப்போல் கர்ம பரதந்த்ரமா? அல்லது மாயாமயமா?

தசரத ராஜன் தனக்குப் பிள்ளை இல்லையென்ற தாபத்தால் அச்வமேதம், புத்ரகாமேஷ்டி முதலான ஸத்கர்மாக்களைச் செய்து ரிச்யச்ருங்கர் முதலான மஹர்ஷிகளுடைய அனுக்ரஹ விசேஷத்தாலும், ப்ராஜாபத்ய புருஷனுடைய

ப்ரஸாத விசேஷத்தாலும் கிடைத்த விஷ்ணுமயமான திவ்ய பாயஸத்தை கௌஸல்யாதேவி முதலான ராஜனுடைய தர்மபத்னிகள் விபாகம்செய்து ப்ராசனம் செய்ததிலிருந்து, கர்பிணிகளாக ஆகி, அந்தந்த தர்மபத்னிகள் பாயஸ ப்ராசனம் செய்த பன்னிரண்டாவது மாதத்தில், பிள்ளைகளைப் பெற்றார்கள். அதில் கௌஸல்யா தேவியானவள் 12-வது மாஸத்தில் ஸ்ரீ ராமனை பிள்ளையாகப் பெற்றாள் என்று **कौसल्याऽजनयद्रामं** (கௌஸல்யாஜனயத்ராமம்) (கௌஸல்யாஜனயத் ராமம்) என்ற வாக்யத்தால் தெரியவருகிறது. தவிரவும், வால்மீகி மஹர்ஷி, ராமனுடைய ஜனன காலத்தில் நவக்ரஹங்களுடைய ஸ்திதியை ரொம்பவும விஸ்தாரமாக காட்டியிருப்பதிலிருந்தே ஸ்ரீ ராமனுடைய ஜன்மா ப்ராக்ருதமான ஜீவனுடைய ஜன்மாவைப்போல் கர்மபாரதந்த்ரந்தான். **पदवी पूर्व पुण्यानां** (பதவீ பூர்வ புண்யாநாம்) (பதவீ பூர்வ புண்யானும்) என்ற வசனத்தால், நவக்ரஹங்களுடைய சாரங்கள், முன் ஜன்மாவிலுள்ள புண்ய பாபகர்மாக்களை விவரித்துக் காட்டுவதோடுங்கூட அதை அனுஸரித்து இந்த ஜன்மாவிலும், ஸுகானுபவகாலம், துக்கானுபவகாலம் எந்தெந்த ஸமயத்தில் ஏற்படுகிறது என்பதை ப்ரகாசப்படுத்துகிறது என்று தெரிகிறபடியால், ராமனுடைய ஜனன காலத்திலும் நவக்ரஹங்களுடைய சாரங்களைக் காட்டி அதனுடைய பலாபலன்களையும் வ்யாக்யாதாக்கள் சொல்லியிருப்பதிலிருந்தும் ஸ்ரீ ராமனுக்கும் பூர்வகர்மா உண்டு. அந்தப் பூர்வகர்மாவின் பரிபாகத்தை இந்த க்ரஹங்களின் சாரங்கள் காட்டுகின்றன. ராமனுடைய ஜாதகம் ரொம்பவும் உயர்ந்த ஜாதகம். ஐந்து க்ரஹங்கள் உச்சமல்லவா! குருவானவர் லக்னத்தில் சந்த்ரனுடன் கூடியிருப்பது ரொம்பவும் ச்ரேஷ்டமல்லவா? இவ்விதம் வர்ணிப்பதிலிருந்து "ஸ்ரீ ராமனுடைய ஜன்மா கர்ம ப்ரதந்த்ரம் தான்" என்று ஆகிறது.

2. தவிரவும், தசரத சக்ரவர்த்தி விச்வாமித்ரரிடம் ராமனை அர்ப்பணம் செய்யும் காலத்தில் அவர் பட்ட கஷ்டத்

தைக் கவனித்தாலே ஸ்ரீ ராமனுடைய ஜன்மாவை மாயாமய மான ஜன்மா என்று சொல்வதற்கு ந்யாயம் ஏற்படாது. மாயாமயமான ஜன்மாவானால் அதை அறிய தசரத சர்ரவர்த்திக்குச் சக்தி யில்லையா? பெரிய ப்ரம்மநிஷ்டரான வஸிஷ்டரை குருவாக அடைந்த தசரத சக்ரவர்த்தியை கிஞ்சிக்ஞன் என்று சொல்ல முடியுமா? மஹா தபஸ்வி என்றும், மஹா யஜ்வா என்றும், ராமாயணத்திலேயே தசரத சக்ரவர்த்தியை வால்மீகி மஹர்ஷி வர்ணித்திருக்கிறார். விச்வாமித்ரமஹர்ஷியினிடம் தசரத சக்ரவர்த்தி பேசிக்கொண்டிருக்கும்பொழுது, "ரொம்பவும் வ்ரதோபவாஸாதிகளைச் செய்து, ரொம்பவும் கஷ்டத்தால் அடையப்பட்ட பிள்ளை ஸ்ரீ ராமன். இந்தப் பையனை ராக்ஷஸர்களுக்கு முன்னிலையில் நின்று யுத்தம் செய்ய தாங்கள் அழைத்துப்போவது ந்யாயமில்லை. பதினாறு வயதுகூட முடியவில்லை. பதினாறு வயது முடிந்த பின்பல்லவா யுத்தம் செய்ய சக்தி ஏற்படும்? ஸூர்யன் அஸ்தமித்துவிட்டால் இந்தக் குழந்தை தூங்கிவிடுவான். ராக்ஷஸர்களோ இரவில் பலவான்களாக இருப்பார்கள். அந்த ராக்ஷஸர்களோடு யுத்தம் செய்யும் படியான யோக்யதை இந்த ஸ்ரீராமனிடம் இருப்பதாக நான் நினைக்கவில்லை" என்று சொல்லி இருப்பதைக் கவனித்தால், ராமனுடைய ஜன்மா நரஸிம்மாவதாரங்களைப் போலல்ல; ப்ராக்ருதமான ஜீவனுடைய ஜன்மாவைப் போலத்தானாகும் என்பது ஸ்பஷ்டமாக விளங்குகிறது.

3. தவிரவும், அரண்யத்தில் ஸ்ரீராமன் இருக்கும்பொழுது ஒவ்வொரு ரிஷிகளுடைய ஆச்ரமங்களுக்கும் சென்ற காலத்தில், அந்தந்த ரிஷிகளுக்கு ஸ்ரீராமன் லக்ஷமணனோடும் ஸீதையோடும் அபிவந்தனம் செய்தார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதுதான் கர்ம பரதந்த்ரத்தில் அகப்பட்டுக் கொள்ளாத ஈச்வரனானால் எவ்விதம் ஸம்பவிக்கும்? நரஸிம்ஹாவதாரம் மாயாமயம் என்பதில் நிர்விவாதமானது. அந்த அவதாரத்திலோ, நரஸிம்ஹஸ்வாமியானவர் ஸர்வ ஜனங்களுக்கும் பூஜ்யனாக இருந்தாரே தவிர தான் ஒருவ

னுக்கும் நமஸ்கரித்தார் என்று சொல்லவேயில்லை. ஸாம்ஸாரிகமான துக்கானுபவமும் நரஸிம்ஹ மூர்த்தியினிடம் காணப்படவில்லை. ஸ்ரீ ராமனுடைய அவதாரம் மாயாமயமானல், நரஸிம்ஹ சரித்ரம்போல் ராம சரித்ரமும் இருக்க வேண்டும் என்றே சொல்லவேண்டும். அதனுல் ஸ்ரீ ராமனுடைய ஜன்மா கர்மபராதீனமானுல் எவ்விதம் உபாஸ்யத்வம் ஏற்படும்? ஸர்வ ஜனங்களோ ராமனேயும் ராம சரித்ரத்தையும் பூஜித்து வருகிருர்களே! இவ்விதம் பரஸ்பர விருத்தமான ஸம்பவங்கள் எப்படி ஏற்படலாம்?

4. ஸுக துக்கமோ, தர்மாதர்மத்தின் பலம் என்று சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பாபத்தைச் செய்தவன் துக்கத்தை அனுபவிப்பதும், புண்யத்தைச் செய்தவன் ஸுகத்தை அனுபவிப்பதும் லோகத்தில் ப்ரஸித்தமானது. ராமனே, அரண்யவாஸம் செய்த காலத்தில், ஸீதா விரஹத்தால் ஏற்பட்ட துக்கத்தை அனுபவித்துவந்ததாகவே ராமாணத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த துக்கத்திற்குக் காரணமான பாப கர்மாவை ராமனிடமும் ஒப்புக்கொள்ளவேண்டியது அவச்யமல்லவா? அவ்விதமானுல் அந்த ராமனுடைய ஜன்மா ஏன் கர்ம பரதந்த்ரமாக ஆகக்கூடாது? ராமன் ஈச்வரன், அவனுடைய ஜன்மாவோ ஜீவனுடைய ஜன்மாவைப் போலல்ல, சுத்த ஸத்வமயமான மாயாமயமே—என்று சொல்ல ந்யாயமே யில்லை.

5. அத்துடன் லக்ஷ்மண ஸ்வாமியும் ஆஞ்சனேய ஸ்வாமியும் பேசிக்கொண்டிருக்கும் ஸமயத்தில், "என் தமயனுன ராமனே தன் மனேவியான ஸீதையை விட்டுப் பிரிந்து கதறுகிருன்; ஸீதையையோ ராவணன் அபஹரித்துக்கொண்டு போய்விட்டான். ராவணனேக் கொன்று ஸீதையை அடைந்தால்தான் என்னுடைய தமையனுக்கு ஸமாதானம் ஏற்படும். அதற்கு உங்கள் ராஜாவான ஸுக்ரீவன்தான் உதவிசெய்ய வேண்டும். அப்படி உதவிசெய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டு என் தமயனுன ராமன் சுக்ரீவனே சரணமடை

கிறார்" என்றும் सुग्रीवं शरणं गतः (ஸுக்ரீவம் சரணம் கத:) (ஸுக்ரீவம் சரணம் கத:) என்ற வாக்யத்தால் கிஷ்கிந்தா காண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவும் கர்ம பராதீனமான ஜீவனுடைய ஸ்வபாவமாகும்.

6. அவ்விதமே, ராவணனோடு யுத்தம் செய்தகாலத்தில் யுத்தத்தில் ரொம்பவும் ச்ரமத்தை அடைந்து ராமன் கஷ்டப்பட்டார். அகஸ்த்ய மஹர்ஷி வந்து அந்த ஸமயத்தில் ராமனுக்கு பலத்தை வ்ருத்தி செய்யக்கூடியதாயும், சத்ருக்களை நாசம் செய்யக்கூடியதாயுமுள்ள "ஆதித்ய ஹ்ருதயம்" என்ற மஹா மந்த்ரத்தை உபதேசம் செய்தார் என்றும் ஸ்ரீமத் ராமாயணத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. கர்ம பராதீனனான ஜீவனுக்கல்லவா மற்றொரு மஹர்ஷியோ, தேவர்களோ மந்த்ரோபதேசம் செய்து, அதனால் பலம் வந்தது என்று சொல்லலாம். கர்மாவில்லாத நிஷ்க்ரியமான பரமாத்மாவே ப்ரக்ருதத்திலுள்ள ஸ்ரீராமன் என்று சொன்னால் மேல்சொன்னதுதான் எப்படி ஒத்து வரும்?

7. ராவண வதத்திற்குப் பிற்பாடு ப்ரம்மாவினுடைய வம்சத்திலுதித்த ராவணனுடைய ஹத்தியை, ப்ரம்ம ஹத்தியாக நினைத்து, அதனால் தனக்கு ப்ரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தால் அந்த பாப பரிஹாரத்திற்காக ஸ்ரீராமனே ஸ்ரீராமேச்வர க்ஷேத்ரத்தில், சிவலிங்க ப்ரதிஷ்டை செய்து, இந்த விஷயம் பின்காலத்தில் ஸர்வ ஜனங்களுக்கும் தெரியவேண்டுமென்ற எண்ணத்துடன், அந்த லிங்கத்திற்கு ராமனாதன் என்ற பெயரை அளித்து, அவ்விதம் செய்த ப்ராயச்சித்த கர்மாவால் ப்ரஹ்மஹத்தி தோஷத்தினின்றும் விமுக்தனாக ஆனார் என்று புராணங்களில் ப்ரஸித்தமானது. இந்த விஷயங்களெல்லாம் ராமன் ஸ்வயமாக ஈச்வரனாகவேயிருந்து தன் மாயையினால் பிறந்தவர்போல் மூட ஜனங்களுக்கு நடித்துக்காட்டினார் என்று சொன்னால் எவ்விதம் ஒத்துவரும்?

ராமவதாரத்தைக் கவனித்தாலோ, கர்பவாஸ துக்கம் ராமனுக்கும் இருந்ததாகத்தான் தெரிகிறது. कौसल्याजनयत् (கௌஸல்யாஜநயத்) (கௌஸல்யாஜநயத்) என்ற ஒரு வாக்யமே அதற்கு ஆதாரமாகப் போதும். நக்ஷத்ரத்தினுடைய ஆனுகூல்யமோ, திதி, மாஸ, லக்ன ஆனுகூல்யங்களோ, சுபக்ரஹ வீக்ஷணமோ, ஸம்பந்தமோ, இவைகளை வர்ணித்திருப்பதைப் பார்த்தால், 'ராமன் ஒரு புண்யவானான உத்க்ருஷ்டஜீவன்' என்று சொல்லலாமே தவிர 'ஸாக்ஷாத் மஹாவிஷ்ணு, ஈச்வரன்தான்' என்று சொல்ல அவகாசமேயில்லை. அவ்விதம் ஒப்புக்கொள்வதிலும் மஹர்ஷியான வால்மீகிக்கு ஸம்மதம் ஏற்படாது.

एतस्मिन्नन्तरे विष्णुः उपयातो महाद्युतिः ।
शंखचक्रगदापाणिः पीतवासा जगत्पतिः ॥

ஏதஸ்மிந்நந்தரே விஷ்ணு: உபயாதோ மஹாத்யுதி: ।
ஶங்கசக்ரகதாபாணி: பீதவாஸா ஜகத்பதி: ॥

ஏதஸ்மிந்நந்தரே விஷ்ணு: உபயாதோ மகாத்யுதி: ।
சங்கசக்ரகதாபாணி: பீதவாஸா ஜகத்பதி: ॥

என்றது முதலான ச்லோகங்களுக்கு விரோதம் ஏற்படுமல்லவா? ஆகையால் ராமனுடைய ஜன்மா எவ்விதம்தான் என்பதை தீர்மானிக்க வேண்டியது அவச்யமானது. மேற்சொன்ன காரணங்களால் சிலர்கள் ராமனுடைய ஜன்மாவையும் கர்ம பராதீனமாகவே வைத்துக் கொண்டு அதை அனுஸரித்தே ஒரு பெரிய ராஜ குடும்பத்தின் கதையைப்போல், ராமனுடைய கதையை பட்டாபிஷேகம் வரையில் சொல்லிவிடுகிறார்கள். ஆகையால், அதன் உண்மையானது ப்ருக்ருதத்தில் விசாரிக்கப்படும். அதாவது :

1. ராமனுடைய அவதாரமானது கர்ம பராதீனமேயில்லை ; ஸ்வதந்த்ரமே. தனது இச்சையை அனுஸரித்து ப்ராக்ருதமான திவ்ய மங்கள விக்ரஹத்தோடு மஹாவிஷ்ணு

வானவர் சக்ஷுரிந்த்ரியத்திற்கும் விஷயமாக ப்ரகாசித்தார் என்பதுதான் ராமன் பிறந்தார் என்பதற்குப் பொருளாகும். कौसल्याऽजनयत् (கௌஸல்யாஜநயத்) (கௌஸல்யாஜநயத்) என்ற வாக்யத்தில் जनिः प्रादुर्भावे (ஜநிः ப்ராதுர்பாவே) (ஜநி: ப்ராதுர்பாவே) என்ற தாதுவை அனுஸரித்து, கௌஸல்யா தேவியானவள் பரோக்ஷமான (அப்ரத்யக்ஷமான) பரப்ரஹ்மத்தை அபரோக்ஷமாக (ப்ரத்யக்ஷமாக) ப்ரகாசிக்கும்படி செய்தாள் என்றுதான் अजनयत् (அஜநயத்) (அஜநயத்) என்ற பதத்தின் அர்த்தமாகும். அதைத் தவிர கர்பத்தில் தரித்து, அவாச்யமான சித்ரவழியாக பெற்றுள் என்பதாகச் சொல்லவே கூடாது. गर्भभूताः तपोधनाः (கர்பபூதாः தபோதநாः) (கர்பபூதா: தபோதநா:) என்ற வாக்யத்தை அனுஸரித்து, தபஸ்ஸை தானமாக உடைய ஜீவன் முக்தர்கள் எந்த பரப்ரஹ்மத்தினுடைய கர்பத்திலடங்கி யிருக்கிறுர்களோ, அதாவது எந்த பரப்ரஹ்மத்திற்குள் அடங்கிவிடுவார்களோ என்ற அர்த்தமானது விளங்குகிறபடியால், மஹர்ஷிகளே தனது கர்ப வாஸதுக்கத்தை நிவ்ருத்தி செய்துகொள்ள பகவானுடைய கர்பத்தில் (குக்ஷியில்) வஸித்து வருகிறுர்கள் என்று தெரியும்பொழுது, அந்த பகவானே கௌஸல்யையினுடைய கர்பத்தில் வாஸம் செய்தான் என்பது உசிதமாக ஆகாது. தசரத சக்ரவர்த்தியானவர் புத்ரன் இல்லாமல் கஷ்டப்பட்டு அச்வமேதம், புத்ர காமேஷ்டி முதலான யக்ஞங்களைச் செய்தார் என்ற ஸங்கர்ப்பத்திலும்,

तमेतं वेदानुवचनेन ब्राह्मणाः विविदिषन्ति यज्ञेन दानेन तपसाऽनाशकेन ।

தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணாः விவிதிஷந்தி யஜ்ஞேந
தாநேந தபஸாऽநாசகேந

தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணு: விவிதிஷந்தி யஞ்சேந
தாநேந தபஸாநாசகேந

என்ற ச்ருதியை அனுஸரித்து पुत् (புத்) (புத்) என்ற சப்

தத்தால் சொல்லப்படும் ஸம்ஸார துக்கத்தினின்றும், தரணம் செய்து வைக்கக்கூடிய தாரக ப்ரஹ்மத்தை ஸாக்ஷாத்கரித்துக் கொள்ள ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்திற்கு ஸாதனமான யக்ஞாதிகளை அனுஷ்டானம் செய்தார் என்றுதான் தாத்பர்யத்தை அறிந்துகொள்ள வேண்டும். ப்ராக்ருத புத்ரலாபத்திற்கு அச்வமேதம் வேண்டுமா? அக்னியிலிருந்தும் ப்ராஜாபத்ய புருஷன் ஆவிர்பவித்து, பாயஸத்தைக் கொடுத்து தசரதருடைய பத்னிகளை ப்ராசனம் செய்யும்படி செய்த விஷயத்தை ஆலோசித்தால் அந்த பாயஸமே பிள்ளைகளாகப் பிறந்தது என்ற தாத்பர்யத்தை க்ரஹித்துக் கொள்ளக்கூடாது. தசரத ராஜனே ப்ரஹ்மஸாக்ஷாத்காரத்திற்கு ஸாதனமான யக்ஞாதிகளை அனுஷ்டானம் செய்துவிட்டார். வஸிஷ்டர் ரிச்யச்ருங்கர் முதலான மஹாபுருஷர்களுடைய ஸம்ச்ரயமும் அந்த ராஜனுக்கு த்ருடமாக ஏற்பட்டுவிட்டது. மோக்ஷத்தை அடையவேண்டுமென்ற ஆவலும் அவருக்கு த்ருடமாக இருந்துவருகிறது. ஆகையால்,

दुर्लभं त्रयमेवैतत् देवानुग्रह हेतुकं ।
मनुष्यत्वं मुमुक्षुत्वं महापुरुष संश्रयः ॥

𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌂 𑌤𑍍𑌰𑌯𑌮𑍇𑌵𑍈𑌤𑌤𑍍 𑌦𑍇𑌵𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹 𑌹𑍇𑌤𑍁𑌕𑌂 ।
𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌤𑍍𑌵𑌂 𑌮𑌹𑌾𑌪𑍁𑌰𑍁𑌷 𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌃 ॥

துர்லபம் த்ரயமேவைதத் தேவாநுக்ரஹ ஹேதுகம் ।
மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷ ஸம்ச்ரய: ॥

என்று ஸ்ரீசங்கரபகவத்பாதாள் சொன்னபடி ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்திற்கு அந்தரங்க ஸாதனமான, மனுஷ்யத்வம், முமுக்ஷுத்வம், மஹாபுருஷஸம்ச்ரயம், என்ற மூன்றும் ராஜனிடம் ஸித்தித்து விட்டபடியால், ஸாக்ஷாத் பகவானே திவ்ய ஸ்வரூபத்துடன் ஆவிர்பவித்து தர்சனம் கொடுக்க தயாராக இருக்கும் ஸந்தர்ப்பத்தில், யக்ஞாதிகளை அனுஷ்டிப்பதற்கு அனுகூலர்களாக இருந்த தர்மபத்னிகளுக்கும் தனது

தர்சனத்தை அளித்து அவர்களை க்ருதார்த்தர்களாகச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன், பகவான் தனது திவ்ய ஸ்வரூபத்தைப்பார்க்க ஸ்த்ரீஜாதிகளுக்கு சக்தி ஸுலப மாக ஏற்படாது என்று நினைத்து மந்த்ரபூதமான பாயஸ ப்ராசனம் மூலம் அவர்களுக்கும் தன்னுடைய ஸ்வரூபத் தைப் பார்க்க வல்லமையுள்ள ஞானத்ருஷ்டியைப்பகவானே ப்ராஜாபத்யபுருஷன் மூலமாகக் கொடுத்தார் என்றுதான் பாயஸோபயோகத்தினுடைய தாத்பர்யமன்னியில் வேறு தாத்பர்யமே அங்கு இல்லை என்பதை நிச்சயமாக அறிய வும். ஆனால் கௌஸல்யை முதலான தர்மபத்னிகளுடைய சரீரத்தில் கர்பம் ஏற்படவில்லையா ? என்று கேட்கக்கூடாது. கர்பம் ஏற்படத்தான் இல்லை. கர்பம்போல் அவிவேகிக ளுக்குத்தோன்றிற்று.

நிர்மலமான கண்ணுடிக்கு வெளியில் நிற்கும் புருஷன் கண்ணுடிக்குள் புகுந்துகொண்டவன்போல் தோன்றும். ஆகாசத்திலுள்ள ஸூர்யன் நிர்மலமான ஜலத்தால் நிரப் பப்பட்ட தடாகத்திற்குள் முழுகிக்கொண்டிருப்பவன்போல் தோன்றும். அதனல் கண்ணுடிக்குள் புருஷன் புகுந்துவிட வும் இல்லை ; ஸூர்யனும் தடாகத்திற்குள் முழுகியிருக்க வும் இல்லை. கண்ணுடியும், ஜலமும் ஸ்வச்சத்ரவ்யமான தினுல் (நிர்மலமான பதார்த்தங்களானதினுல்) ப்ரதிபிம்பத் தைக் க்ரஹிக்கும் யோக்யதை அவைகளிடம் ஸித்தித்து வெளியில் நிற்கும் புருஷனுடையவோ, ஆகாசத்திலுள்ள ஸூர்யனுடையவோ ப்ரதிபிம்பங்களைக்ரஹிக்கின்றன. அத னுல் கண்ணுடிக்கு வெளியில் நிற்கும் புருஷனுக்குக்கண்ணுடி யிலும், ஆகாசத்திலுள்ள ஸூர்யனுக்குக்குளத்திலும், ப்ரதி பிம்பம் மூலமாக அந்தப்ரவேசம் (உள்ளே நுழைவு) அன்னி யில் பிம்பஸ்வரூபமே உட்புகுந்தது என்று எப்படி சொல்லமுடியாதோ, அதுபோல் கௌஸல்யாதேவி முத லான பட்ட மஹிஷிகள் ப்ராஜாபத்யபுருஷனுல் கொடுக் கப்பட்ட பாயஸத்தை ப்ராசனம் செய்த காரணத்தால்

திவ்யக்ஞானத்ருஷ்டிகளோடு கூடினவர்களாகவும், நிர்மல மான மனதுடன் கூடினவர்களாகவும், தர்பணம் (கண்ணுடி) போலும், ஸ்படிகம்போலும் ஸ்வச்சமான சரீரத்துடன் கூடி னவர்களாகவும் ஆகிறபடியால் எங்கும் நிறைந்த ப்ரஹ்மத் தின் ப்ரதிபிம்பத்தை க்ரஹிக்கும் சக்தியுள்ளவர்களாக ஆகிவிட்டார்கள். அதனல் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவினு டைய ஸ்வரூபம் எங்கும் வ்யாபகமானதால், கௌஸல்யா தேவி முதலான ராஜபத்னிகளிடம் அவர்கள் ஸ்வச்சமான கார்யகரண ஸங்காதத்துடன் கூடிக்கொண்டிருக்கும் நிமித்த மாக ப்ரதிபிம்பபாவத்தால் அவர்களுக்குள் அனுப்ர வேசம் செய்து அவர்களுடைய கர்பத்தில் வஸிப்பவர்போல் தோன்றுகிறதன்னியில், உண்மையில் எங்கும் நிறைந்த பகவானுக்கு கர்பவாஸம் என்ற வாடையே இல்லை என்பது நிச்சயமாகும். அவருக்கே கர்பவாஸதுக்கம் இருந் தால் கர்பவாஸதுக்கத்தை நிவ்ருத்தி செய்துகொள்ள நாம் எப்படி அவரை பஜிக்க முடியும்? துக்கம் இல்லவேயில்லை. गर्भं प्रपेदिरे (ഗർഭം പ്രപേദിരേ) (கர்பம் ப்ரபேதிரே) என்ற இடத் திலும் இந்த அர்த்தத்தைத்தான் விவேகிகள் க்ரஹித்துக் கொள்ளவேண்டும்.

ஒரு மனிதன் இரவில் ஒரு க்ராமத்தில் நித்ரை செய் கிருன். ரொம்பவும் தூரத்திலுள்ள மற்ருெரு நகரத்தில் ஒரு ஸ்நேஹிதனுடைய வீட்டில் விருந்துண்ணுவதாக ஸ்வப் னம் காண்கிருன். எந்த இடத்தில் தூங்குகிருனே அந்த இடத்தில்தான் எப்பொழுதுமுள்ள சரீரம் இருக்கின்றது. விருந்து சாப்பிட்டு அனுபவிக்கும் சரீரமோ வேறென்பது நிச்சயமாகும். அந்த சரீரத்தை வாஸனமயமான சரீரம் என்று வித்வான்கள் சொல்லுவார்கள். ஸ்வப்னத்தில் ஜீவ னுக்கு ஏற்படும் வாஸனமயமான சரீரத்திற்கு கர்பவாஸ துக்கம் இல்லையென்பதும் ப்ரஸித்தமானது. கிஞ்சிக்ஞனை இந்த ஜீவனுக்கே ஸ்வப்னவஸ்தையில் வாஸனமயமான சரீரத்தை கர்பவாஸ துக்கம் இல்லாமலேயே எடுத்துக்

கொண்டு தன்னிஷ்டப்ரகாரம் ஸஞ்சரிக்க சக்தியிருக்குமே யானல், ஸர்வக்ஞனுயும், ஸர்வ சக்திமானுயும், ஸர்வ ஜகத் காரணபூதனுயுமுள்ள ஸர்வேச்வரனுன பகவானுக்கு மாயா மயமான சரீரத்தை ஸ்வீகரித்துக்கொண்டு இந்த பூமண் டலத்தைத் தனது ஸ்ரீபாதங்களால் அலங்கரிக்க சக்தி ஏற் படாதா! ஏற்படவே ஏற்படும். அதனுல் அந்த மாயாமய மான மங்கள விக்ரஹத்தை ஸ்வீகரித்துக்கொண்ட விஷயத் திலும், ஒரு தாய் தந்தையை நிமித்தகாரணமாக அவலம் பிக்கவேண்டியது அவச்யமானதினுல் அந்த அம்சத்தில் கௌஸல்யாதேவி தாயாகவும், தசரதர் தந்தையாகவும், அந்த ஸ்வரூபத்தை முதலில் தர்சனம் செய்தார்கள் என்ற காரணத்தால் நிமித்தமாக மாத்ரம் சொல்லப்படுவார்கள்.

தவிரவும், ஜனகமஹாராஜாவினுடைய புத்ரியான ஸீதாதேவியோ அயோனிஜை. கர்பவாஸதுக்கம் இல்லாமலே உண்டானவள். ஜனகராஜன் யக்ஞம் செய்வதற்காக பூமியை கலப்பையினுல் உழும் காலத்தில் அந்தக் கலப்பையி னுடைய முகத்திலிருந்து ஸீதை உண்டானுள் என்பது லோகப்ரஸித்தமானது. அந்த அயோனிஜையான ஸீதை யையோ, இந்த ஸ்ரீராமன் பரிணயம் செய்துகொண்டிருக் கிருர். ராமனுக்குக் கர்பவாஸ துக்கம் ஏற்பட்டு யோனிஜ னுனல், அயோனிஜையான ஸீதைக்கும், யோனிஜனுன ராம னுக்கும் எவ்விதம் ஸம்பந்தம் ஏற்பட ந்யாயம் உண்டு?

அத்துடன், ஸீதை என்றவளோ ஸ்த்ரீ ஜாதியில் சேர்ந்த வள். அந்த ஸ்த்ரீக்கே தனக்குக் கர்பவாஸ துக்கம் இல் லாமல் ஒரு அழகான சரீரத்தை எடுத்துக்கொள்ள சக்தி யிருக்குமேயானுல், மஹாபுருஷனுன மஹாவிஷ்ணுவிற்கு கர்பவாஸ துக்கமில்லாமல், தன் மாயையால் லோகோத் தரமான ஒரு மங்கள விக்ரஹத்தை ஸ்வீகரித்துக்கொண்டு பூலோகத்தில் விளையாட சக்தி வராதா? இவ்வித சக்தி வராது என்று எப்படிச் சொல்லக்கூடும்? ஆகையால் பகவானுடைய அவதாரம் கர்மபராதீனமல்ல. ஜீவனுடைய ஜன்மாவைப்

போலல்ல. அப்ராக்ருதம்தான். ஸ்வேச்சாக்ரஹீதமான திவ்யமங்கள விக்ரஹ ஸ்வரூபம். அந்த ஸ்வரூப தர்சனம் முதன்முதலாக கௌஸல்யா தேவிக்கும் பிறகு தசரதருக்கும் ஏற்பட்டதால் அவர்களை மாதா, பிதா என்று உபசாரமாகச் சொல்லவேண்டுமே தவிர, அன்னியில் ஸர்வ ஜகத்திற்கும் மூலகாரணமான மஹாவிஷ்ணுவிற்கு அவர்களை மாதா பிதா என்று சொல்வது வாஸ்தவமாக ஆகாது. ஆகையால் பகவானுக்குச் சொல்லப்பட்ட கர்பவாஸமெல்லாம், ஜலத்தில் ஸூர்யனைப்போலும், கண்ணாடியில் புருஷனின் ப்ரதிபிம்பம்போலும் மாயாமயமே. இதைத்தான் பகவான் ஸ்ரீ க்ருஷ்ணனும்,

जन्म कर्म च मे दिव्यं (ஜந்ம கர்ம ச மே திவ்யம்) (ஜன்ம கர்ம சமே திவ்யம்) என்ற ச்லோகத்தில் தனது ஜன்மாவிற்கு **दिव्यं** (திவ்யம்) (திவ்யம்) என்ற விசேஷணத்தைக் கொடுத்து ப்ரகாசப்படுத்துகிறார்.

2. விச்வாமித்ரருடன் தசரதர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, "சின்னக் குழந்தை, ராக்ஷஸர்களுடன் யுத்தம் செய்ய யோக்யதை ஏற்படவில்லை" என்று சொன்னதும் யோகமாயையினால் தசரத சக்ரவர்த்திக்கு அந்த பரப்ரம்மத்தினிடத்தில் புத்ர வாத்ஸல்யம் ஏற்பட்டு, 'தனது புத்ரன்' என்ற புத்தியுடனே அவர் இருந்ததைத்தான் காரணமாக அவலம்பித்து ஏற்பட்டது.

மேலும், பரிபூர்ணமான பகவான் விராட் ரூபத்துடன் தர்சனம் கொடுத்தது, முதலில் கௌஸல்யாதேவிக்குத்தான். ராமாவதார ச்லோகத்தில், ராமனுக்கு ஸர்வலோக நமஸ்க்ருதம் என்றுசொல்லப்பட்ட விசேஷணத்தின் அர்த்தத்தை முன்பே நிரூபணம் செய்திருப்பதை வாசகர்கள் அறிந்திருக்கலாம். அப்படி விராட் ரூபத்தோடு கௌஸல்யாதேவிக்கு தர்சனம் கொடுத்த பிற்பாடு கௌஸல்யாதேவி ஸ்தோத்ரங்கள்

செய்துவிட்டு அஞ்சலிபந்தத்துடன் நின்றுவரும் காலத்தில், கௌஸல்யா தேவியைப் பார்த்து, "உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று பகவான் கேட்கும்பொழுது, "உன்னைக் குழந்தையாய் வைத்துக்கொண்டு லாலனை செய்ய எனக்கு மனோரதம் இருக்கிறது? அதை நீ பூர்த்தி செய்யவேண்டு" மென்று வரனாகக் கேட்க, பகவானும் அந்த அம்மாளின் தபஸ்ஸிற்கும், பக்திக்குமிணங்கி யோகமாயையால் விராட்ரூபத்தை மறைத்துக்கொண்டு, பாலபாவத்தை தரித தார். அழகான குழந்தைப் பருவத்துடன் விளையாடினார். அந்த ஸந்தர்ப்பத்தில்தான் தசரதர் பார்த்தது. மாயையினால் குழந்தையாய் ஆகுவதற்குமுன் பரிபூர்ண ஸ்வரூபத்துடன் பார்த்தது கௌஸல்யாதேவி ஒருவள்தான். அதை வால்மீகி மஹர்ஷியே,

कौसल्या शुशुभे तेन पुत्रेणामिततेजसा

கௌஸல்யா ஶுஶுபே தேந புத்ரேணாமிததேஜஸா

கௌஸல்யா சுசுபே தேந புத்ரேணமிததேஜஸா

என்ற ச்லோகத்தில் ப்ரகாசப்படுத்தியிருக்கிறார். ஆகையால் மாயையால் பால பாவத்தைத் தரித்துக்கொண்ட பிற்பாடு, தசரதர் பார்த்ததிலிருந்து அந்த அபிமானமே அதிகமாக ஏற்பட்டு அது நிமித்தமாக "இவன் குழந்தை, யுத்தத்திற்கு யோக்யதை ஏற்படவில்லை" என்று சொல்லியிருக்கலாம். அதற்காக ராமன் ஈச்வரன் இல்லை என்று ஆகிவிடாது.

அத்துடன், தசரத சக்ரவர்த்தி சொன்னதின் அபிப்ராயத்தையும் கவனிக்கவேண்டும். யுத்தத்திற்கு யோக்யதை ராமனிடம் இல்லை என்று சொன்னதால், "ராமனுடைய ஸௌந்தர்யாதிசயத்தையும், விக்ரஹத்தின் அவயவவின்யாஸங்களையும் பார்த்தமாத்ரத்தில் ராக்ஷஸர்களும், பரோக்ஷத்தில் சத்ருக்களாக ஆனாலும் அபரோக்ஷத்தில் சரணாகதி செய்துவிடுவார்கள். அவ்விதமானால்,

सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते
अभयं सर्वभूतेभ्यः ददाम्येतद्व्रतं मभ

𑌸𑌕𑍃𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾𑌯 𑌤𑌵𑌾𑌸𑍍𑌮𑍀𑌤𑌿 𑌚 𑌯𑌾𑌚𑌤𑍇
𑌅𑌭𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌵𑍍𑌰𑌤𑌂 𑌮𑌮

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே
அபயம் ஸர்வபூதேப்ப: ததாம்யேதத்வ்ரதம் மம

என்ற தனது ப்ரதிக்ஞையை அனுஸரித்து, சரணுகதி செய்தவர்கள், ராக்ஷஸர்களா தேவர்களா என்பதை விசாரிக்காமலேயே அவர்களை ரக்ஷித்து முன்னிருந்த பலத்தைக் காட்டிலும் அதிக பலிஷ்டர்களாக ஆகும்படி செய்துவிடுவார். அப்படியானுல் ராக்ஷஸர்கள்மூலம் உங்களுக்கு அதிகமான பாதைதான் ஏற்படும். ஆகையால் யுத்தத்திற்கு ராமனை அழைத்துப் போவதில் ப்ரயோஜனமே கிடையாது.

स्वगुणैः सर्वान् रमयतीति रामः

𑌸𑍍𑌵𑌗𑍁𑌣𑍈𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌰𑌮𑌯𑌤𑍀𑌤𑌿 𑌰𑌾𑌮𑌃

ஸ்வகுணை: ஸர்வாந் ரமயதீதி ராம:

என்ற ஸமாஸத்தால், ஸர்வ ஜனங்களையும் ரமிக்கச் செய்கிற மன்மத மன்மதனுகவே இந்த ராமன் விளங்குகிறுன். அப்படியிருக்க ராக்ஷஸர்களையும் ப்ரமிக்கச் செய்துவிடுவான். அதனுல் தங்களுக்கு யாதொரு ப்ரயோஜனமும் இல்லை" என்றுதான் தசரதருடைய அபிப்ராயத்தை அறியவும். தவிரவும், "மஹர்ஷே! தாங்கள் மஹா தபஸ்வி ஞானத்ருஷ்டியினுல் ஸகல விஷயங்களையும் அறியும் சக்தியுள்ள மஹான். इच्छामात्रं प्रभोः सृष्टिः (𑌇𑌚𑍍𑌛𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌭𑍋𑌃 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌃) (இச்சாமாத்ரம் ப்ரபோ: ஸ்ருஷ்டி:) என்ற சாஸ்த்ரத்தைத் தாங்கள் படித்ததில்லையா? ஜகத்தை ஈச்வரன் ஸருஷ்டிப்பதிலோ, பரிபாலிப்பதிலோ, ஸம்ஹரிப்பதிலோ ஏதா

வது யத்னம் செய்யவேண்டுமா? இச்சைமாத்ரம் போதுமென்றல்லவா சாஸ்த்ரம் சொல்லியுள்ளது. இச்சா மாத்ரத்தால் ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரத்தைச் செய்கிற பகவானே இந்த ராமன் என்பது எனக்குத் தெரியாதபோனாலும், தங்களுக்கு நிச்சயமாய்த் தெரியும். अहं वेद्मि महात्मानं (𑌅𑌹𑌂 𑌵𑍇𑌦𑍍𑌮𑌿 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂) (அஹம் வேத்மி மஹாத்மாநம்) என்று தாங்களே சொல்கிறீர்களே. தங்களுடைய யாகத்தை விக்னம் செய்கிற ராக்ஷஸர்கள் பஸ்மமாக ஆகவேண்டுமென்று இங்கிருந்தபடியே ராமன் நினைத்தால் அவர்கள் சாம்பலாக ஆகிவிடமாட்டார்களா? யுத்தம் செய்துதானா அவர்களைக் கொல்லவேண்டும்? இந்த அல்ப ராக்ஷஸர்களையே யுத்தம் செய்துதான் கொல்லவேண்டுமேயானால் ப்ரளய காலத்தில் இவன் எவ்விதம்தான் ஸம்ஹரிப்பான்? ஆகையால், தங்கள் கார்யம் நிறைவேற ராமனை அங்கு அழைத்துப்போக வேண்டாம். நானும் அவனை விட்டுப் பிரிய மனமில்லாதவனாக இருக்கிறேன். ராமன் இங்கிருந்தபடியே தங்கள் கார்யமும் நிறைவேறிவிடும்" என்ற அபிப்ராயத்துடன்தான், விச்வாமித்ரிடம் ராமனைக் கொடுக்கமாட்டேனென்று தசரதர் சொல்லியிருக்க வேண்டும்.

மேலும், "ப்ரம்மஸாக்ஷாத்காரத்திற்காக அரண்யத்தில் யோகிகள் எவ்வளவோ காலமாகத் தவம் செய்கிறார்கள். அவர்களுக்கும் இந்த ஸ்வரூப தர்சனம் இன்னும் கிடைக்கவில்லை.

गुरोरनुग्रहेणैव पुमान् पूर्णः प्रजायते

𑌗𑍁𑌰𑍋𑌰𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑍇𑌣𑍈𑌵 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍 𑌪𑍂𑌰𑍍𑌣𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌤𑍇

குரோ ரநுக்ரஹேணைவ புமாந் பூர்ண:ப்ரஜாயதே

ரிச்யச்ருங்கர் என்ற பரமகுருவினுடைய அனுக்ரஹத்தாலல்லவோ இந்த ராம ப்ரம்மத்தினுடைய தர்சனம் நமக்குக்

கிடைத்தது. இந்த தர்சனத்திற்காக தபஸ்ஸைச் செய்துவரும் மஹர்ஷிகளுக்குள் இந்த விச்வாமித்ரரும் முதன்மையான மஹர்ஷியாக ஆகுவார். ஆகையால் அவர் தான் ஒரு ப்ராம்ம ஶ்ரேஷ்டன்; பஹுகாலமாக இந்த மூர்த்தியின் தர்சனத் திற்காக தபஸ்ஸை செய்கிறவர்; தனக்கு இந்த மூர்த்தியின் தர்சனம் கிடைக்கவில்லை; ஆனால் நானோ க்ஷத்ரியன் நமக்கு இந்த மூர்த்தியின் தர்சனம் ஸுலபமாய்க் கிடைத்துவிட்டது என்று அஸூயையைகொண்டு, இந்த ப்ராம்மணன் நம்மை விட்டு ராமனைப் பிரிக்க யத்னத்துடன் வந்திருக்கிறாரோ" என்று நினைத்து "மஹர்ஷே! உம்மாலானதைச் செய்யும். ராமனை நான் கொடுக்க மாட்டேன்" என்றும் சொல்லி யிருக்கலாம். இதனால் தசரதருக்கும் ராமரிடம் ஈச்வர புத்தி யில்லை என்பதில்லை.

3. ஸாக்ஷாத் ஸ்ரீராமன் மஹர்ஷிகளுடைய ஆச்ரமங்க ளுக்குச் சென்றபொழுது அந்தந்த ரிஷிகளுக்கு அபிவந்தனம் செய்து அவர்களுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டதற்காக ராமன் ஈச்வரனில்லை என்று ஏற்படாது.

दैवाधीनं जगत्सर्वं मन्त्राधीनं तु दैवतं ।
तन्मन्त्रं ब्राह्मणाधीनं ब्राह्मणाः मम देवताः ॥

𑌦𑍈𑌵𑌾𑌧𑍀𑌨𑌂 𑌜𑌗𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌧𑍀𑌨𑌂 𑌤𑍁 𑌦𑍈𑌵𑌤𑌂 ।
𑌤𑌨𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌧𑍀𑌨𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃 𑌮𑌮 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ॥

தைவாதீநம் ஜகத்ஸர்வம் மந்த்ராதீநந்து தைவதம் ।
தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம் ப்ராஹ்மணா: மம தேவதா: ॥

என்று பகவானால் சொல்லப்பட்ட வசனத்தைக் கவனித்தால் சேதனாசேதனாத்மகமான ஸகல ஜகத்தும், தான் தான் செய்த கர்மத்தின் அதீனமாக ஆகின்றது. அந்த கர்மாக் களோ வேதத்தில் ப்ரகாசப்படுத்தப் பட்டிருக்கின்றன. வேதங்களெல்லாம் ப்ராஹ்மணர்களுடைய அதீனமாகத் தான் வெளியில் ப்ரகாசிக்கவேண்டும் என்ற தாத்பர்யம் ப்ர

காசிக்கிறபடியால், இதை வெளிப்படுத்தும் மேல்சொன்ன தனது வார்த்தையையும், ब्रह्मदैवं परंतुमे (ஸ்ரஹ்ஹதைவம் பரந்துமே) (ப்ரஹ்ம தைவம் பரந்துமே) என்று "ப்ராஹ்மணர்களே எனக்கு மேலான தெய்வம்" என்ற வார்த்தையையும் ஸத்யமாகச் செய்யவும் ப்ராஹ்மண ஜாதியின் உத்கர்ஷத்தைத் தன்னுடைய அனுஷ்டானம் மூலமாகப் ப்ரகாசப்படுத்தவும், ரிஷிகளுக்கு ஸ்ரீராமன் அபிவாதனாதிகளைச் செய்தார்.

வைகுண்டத்திலேயே ஸனகாதிகள் பகவானை தர்சனம் செய்யவந்த ஒரு ஸமயத்தில் வைகுண்டத்தினுடைய வாசலில் நின்றுவரும் ஜயன், விஜயன் என்ற பாரிஷதாள் ஸனகாதிகளை 'இதுஸமயம் உள்ளே போகக்கூடாது' என்று தடுத்து, ஸனகாதிகளுக்கு பராபவத்தைச் செய்த காலத்தில், பகவானுக்கு இந்த விஷயம் தெரிந்து "ப்ராஹ்மணர்களுடைய அபசாரம் வந்துவிட்டதே; நமது ப்ருத்யன் அபசாரம் செய்தாலும் நான் செய்ததாகத்தான் ஆகும்" என்று பயந்து, திடீரென்று வெளியில் வந்து, ஸனகாதிகளுடைய பாதங்களில் தனது சிரஸ் படும்படியாக நமஸ்கரித்து, அபசாரத்தை மன்னிக்கும்படியாக வேண்டிக்கொண்டதாகவும் ஸ்ரீமத் பாகவதம் முதலான நூல்களில் சொல்லப்பட்டுள்ளது. அந்த ஜயன், விஜயன் என்ற இரண்டு பாரிஷதர்களும் மூன்றுதடவை ஸனகாதிகளை அவ்விதம் தடுத்த பாபத்திற்காக வைகுண்ட வாஸத்தையே விட்டு விட்டு ஸனகாதிகளால் "பகவானுக்கு சத்ருவாய்ப் போகக் கடவது" என்று சபிக்கப்பட்டு, பூலோகத்தில் முதல் ஜன்மாவில், ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு என்றும், இரண்டாவது ஜன்மாவில், இராவணன், கும்பகர்ணன் என்றும் மூன்ருவது ஜன்மாவில் சிசுபாலன், தந்தவக்த்ரனாகவும் பிறந்து பகவானுக்கு விரோதிகளாகவே இருந்து வந்தார்கள். பகவானும் அவர்களை சாபத்தினின்றும் விடுதலை செய்து வைப்பதற்கு, யக்ஞவராஹ அவதாரத்தால் ஹிரண்யாக்ஷனையும், நரஸிம்ஹாவதாரத்தால் ஹிரண்யகசிபுவையும், ராமாவ

தாரத்தால் ராவண கும்பகர்ணனையும், க்ருஷ்ணவதாரத்தால் சிசுபாலன், தந்தவக்த்ரனையும் வதித்து, சாபத்திலிருந்தும் விமோசனம் செய்துவைத்தார். அதற்காக பகவானும் பூலோகத்தில் ஜன்மாவை அடையும்படி நேர்ந்துவிட்டது. இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் ஸனகாதிகளுக்குத் தன் ப்ருத்யர்களால் செய்யப்பட்ட அபசாரமே தானுகும். இவ்விதமான மஹத்வத்தை உண்மையான ப்ராஹ்மணர்களுக்கு பகவானே அளித்திருக்கிருர். தர்மத்தை ஸ்தாபனம் செய்ய பூலோகத்தில் ஸ்ரீராமனுக அவதரித்த காலத்திலும், ஸத்ப்ராஹ்மணர்களுடைய மஹிமையை வெளிப்படுத்துவதற்காக அவர்களுக்குத் தானும் நமஸ்காரம் செய்ததாகக் காட்டி நடித்ததும் அவதாரத்திற்கு அலங்காரமாகும். அதனுல் ஈச்வரத்வம் போய்விடாது.

ஒரு நாடகசாலையில் ஒரு ஸத்ப்ராஹ்மணன் மந்த்ரி வேஷம் போட்டுக்கொள்கிருன். ஒரு க்ஷத்ரியன் ராஜ வேஷம் போட்டுக்கொள்கிருன். ராஜ வேஷத்தைத் தரித்துக்கொண்ட க்ஷத்ரியனுக்கு மந்த்ரி வேஷத்தைத் தரித்துக்கொண்ட ப்ராஹ்மணன் வணங்கி நமஸ்கரித்ததால் அவனுக்கு ப்ராஹ்மணத்வம் போய்விடுமா? வேஷம் தரித்ததற்கு எப்படி நடித்துக் காட்டவேண்டுமோ அப்படி நடிப்பது உசிதமல்லவா? அதுபோல்தான் ப்ரக்ருதத்திலும், இந்த பூலோகமான நாடக சாலையில் மஹர்ஷிகளுக்கும் ஸேவிக்கத்தகுந்த சரணுரவிந்தத்தோடு கூடின ஸர்வேச்வரனுன பகவானும் தர்ம விரோதிகளான துஷ்டர்களை நிக்ரஹம் செய்ய,

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச து³ஷ்க்ருதாம் ।
த⁴ர்மஸம்ஸ்தா²பநார்தா²ய ஸம்ப⁴வாமி யுகே³ யுகே³ ॥

பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் ।
தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥

என்று "ஒவ்வொரு யுகத்திலும், துஷ்ட நிக்ரஹ மூலமாக சிஷ்ட பரிபாலனத்தைச் செய்து, அதன்மூலமாக தர்மத்தைச் செழிக்கச் செய்ய நான் அவதரிக்கிறேன்" என்ற ப்ரதிக்ஞையை அனுஸரித்து, அஹிம்ஸையை கைகொண்ட ப்ரஹ்ம குலத்தில் அவதரித்தால் துஷ்ட நிக்ரஹத்திற்கு அவகாசம் இல்லாமல் போய்விடும் என்று நினைத்து, ப்ரஹ்ம குலத்திற்கு அடுத்த குலமான ராஜகுலத்தில் (க்ஷத்ரிய குலத்தில்) யோகமாயையால், மனுஷ்யனைப்போல் வேஷம் தரித்துக்கொண்டு துஷ்ட நிக்ரஹத்திற்காக அரண்யம் சென்று நடித்துக்காட்டும் ஸமயத்தில், ப்ரஹ்ம ரிஷிகளுக்கு அபிவாதனம் செய்ததால் விஷ்ணுத்வம் ஒருநாளும் போகவே போகாது. ஆகையால் ஸ்ரீராமன் ஈச்வரன்தான் என்பதில் ஸந்தேஹமேயில்லை. ஆரண்யகாண்டத்திலேயே அநேக மஹர்ஷிகள் ஸ்ரீராமனையே சரணமடைந்து ராக்ஷஸர்களை வதித்துத் தங்களை காப்பாற்ற வேண்டும் என்பதாக ப்ரார்த்தித்துக்கொண்டார்கள் என்பதும் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. சில ரிஷிகளை ஸ்ரீராமன் நமஸ்கரித்தார் என்று காணப்பட்டாலும், பல ரிஷிகள் ஸ்ரீராமனை சரணாகதி செய்தார்கள் என்பதிலிருந்தே ஸ்ரீராமனுடைய ப்ரபுத்வம் ஸ்பஷ்டமாக விளங்குகிறது.

4. அரண்யத்தில் ஸீதாவிரஹத்தால் தான் அனுபவித்த துக்கமும் ராமனிட..த்தில் விஷ்ணுத்வத்தை தடுக்காது.

तमोद्वारं योषितां सङ्गिसङ्गं

𑌤𑌮𑍋𑌦𑍍𑌵𑌾𑌰𑌂 𑌯𑍋𑌷𑌿𑌤𑌾𑌂 𑌸𑌙𑍍𑌗𑌿𑌸𑌙𑍍𑌗𑌂

தமோத்வாரம் யோஷிதாம் ஸங்கிஸங்கம்

என்ற வசனத்தால் ஸ்த்ரீகளிடத்தில் மயக்கத்தை அடைந்த புருஷனுடைய சேர்க்கையே எவ்விதமான விவேகிகளையும்

நரக துக்கத்தை அனுபவிக்கும்படி செய்துவிடும் என்று தெரிகிறபடியால், ஈச்வரனுன தானும் ஸீதையென்ற தன் மனைவியினிடத்தில் ஸங்கத்தை வைத்த காரணத்தால் இவ்விதமான துக்கத்தை அனுபவிக்கும்படி நேர்ந்துவிட்டது. ஸர்வக்ஞனும், ஸர்வ சக்திமானும் உள்ள ஸ்ரீராமனே இவ்விதம் கஷ்டப்படும்பொழுது, கிஞ்சிக்ஞனும் அல்பனும் உள்ள ஜீவனை ஸ்த்ரீஸங்கம் கெடுக்கக் கேழ்க்கவேண்டுமா? முன்புவைத்த அபிமானம் பின்பு பரம துக்கத்திற்கே காரணமாகும்.

स्त्रीसंङ्गिनां गतिरिति प्रथयन् चचार

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌸𑌙𑍍𑌗𑌿𑌨𑌾𑌂 𑌗𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌥𑌯𑌨𑍍 𑌚𑌚𑌾𑌰

ஸ்த்ரீஸங்கிநாம் கதிரிதி ப்ரதயந் சசார

என்ற வாக்யத்தை அனுஸரித்து ஸ்த்ரீ ஸங்கத்தை அடைந்தவர்களுக்கு, பாவியாக இவ்விதமான கஷ்டங்கள் ஏற்படும் என்பதையும் நடித்துக்காட்டினூர்.

मर्त्यावतारस्त्विह मर्त्यशिक्षणं रक्षोवधायैव न केवलं विभोः ।
कुतोऽन्यथास्यात् रमतः स्व आत्मनः सीताकृतानि व्यसनानीश्वरस्य ॥

𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌵𑌤𑌾𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌹 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌶𑌿𑌕𑍍𑌷𑌣𑌂 𑌰𑌕𑍍𑌷𑍋𑌵𑌧𑌾𑌯𑍈𑌵
𑌨 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌵𑌿𑌭𑍋𑌃 ।
𑌕𑍁𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌥𑌾𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌰𑌮𑌤𑌃 𑌸𑍍𑌵 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑍀𑌤𑌾𑌕𑍃𑌤𑌾𑌨𑌿
𑌵𑍍𑌯𑌸𑌨𑌾𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 ॥

மர்த்யாவதாரஸ்த்விஹ மர்த்யசிக்ஷணம் ரக்ஷோவதாயைவ ந கேவலம் விபோ: ।
குதோந்யதாஸ்யாத் ரமத: ஸ்வ ஆத்மந: ஸீதாக்ருதாநி வ்யஸநாநீச்வரஸ்ய ॥

என்ற ஸ்ரீமத் பாகவத வசனரீதியாக, மனுஷ்ய லோகத்தை சிக்ஷித்து அவர்களை அஸன்மார்கத்திலிருந்து ஸன்மார்கத்தில் திருப்பவும், முக்யமாக ஸ்த்ரீ ஸங்கத்தைவிடச் செய்யவும், ஸ்ரீராமவதாரம் ஏற்பட்டது என்று தெரிகிறபடியால்

இதனாலும் தாரக ப்ரஹ்மமாகிய ராமனுக்கு மஹிமை குறைந்துவிடாது; இதையும் ஒரு நாட்டியமாகவே பாவிக்க வேண்டும்.

ஒருவன் நாடகசாலையில் இந்த ராம நாடகத்தையே நடித்துக் காட்டுகிறான். அதில் யாரோ ஒரு தேவ தத்தன் ஸீதை வேஷம் போட்டுக்கொள்கிறான்; மற்றொருவன் ராமர் வேஷம் போட்டுக்கொள்கிறான்; மற்றொருவன் ராவண வேஷம் தரித்து, ஸீதையைத் தூக்கிக்கொண்டு போகிறான். ராமன் கதறுகிறார். நாடகசாலையில் வேடிக்கை பார்க்க வந்திருப்பவர்கள் கண்களினின்றும் கண்ணீர் பெருகுகிறது. இந்தக் கதையில் என்ன தத்வமோ அதுதான் ஸீதையை விட்டுப்பிரிந்த ராமன் அழுததிலும், என்பதைக் கவனித்து அறியவும். வெறும் கதையை மட்டும் சொன்னால் சாஸ்த்ரங்களுக்கு ப்ராமாண்யமே ஏற்படாது. ஒவ்வொரு கதையாலும் ஒவ்வொரு தத்வம் விளங்கவேண்டும். ப்ரக்ருத லீலையால் ஸ்த்ரீ ஸங்கம் கெட்டது என்பது வெளியாகிறது. எந்த விஷயத்திலும் அது விஷயஜாதியில் சேர்ந்ததானால் விவேகியானவன் ரொம்பவும் மிதம் மீறிப் போகக் கூடாது. அப்படியானால் பின்பு அதற்கும் நமக்கும் விரஹம் ஏற்படும்பொழுது அளவற்ற துக்கத்தை அனுபவிக்க நேரிடும் என்பதுதான் ராமனுடைய நடனத்தின் தாத்பர்யமாகும்.

அத்துடன் ராமன் என்ற பரம்பொருளுக்கு யோக மாயை ஆகிற ஸீதையினுடைய ஸம்பந்தத்தால்தான் ஸகல ஜகத்தையும் ஸ்ருஷ்டிக்கவோ, பரிபாலிக்கவோ, ஸம்ஹரிக்கவோ சக்தி ஏற்படுகிறது. மாயா ஸம்பந்தம் இல்லாத காலத்தில் ஸ்வயமாக அது நிர்விகாரமான கூடஸ்த ப்ரஹ்மம் தான். அது பரம சுத்தமே. இதை

शिवः शक्त्या युक्तो यदि भवति शक्तः प्रभवितुं

ஶிவஶ்ஶக்த்யா யுக்தோ யதி பவதி ஶக்த: ப்ரபவிதும்

சிவச்சக்த்யா யுக்தோ யதி பவதி சக்த: ப்ரபவிதும்

என்று சங்கர பகவத் பாதாளே விவரமாக சொல்லியிருக்கிறார்கள். ராமனே தர்மத்தைச் செழிக்கச்செய்ய அவதரித்தார். ஸாது ஸம்ரக்ஷணம், துஷ்ட நிக்ரஹம், இரண்டும் ஏற்படவேண்டியதாக இருக்கிறது. யோகமாயா ரூபிணியான ஸீதையின் ஸம்பந்தமோ தன்னிடம் இல்லாமல் ஆகிவிட்டது. ஆகையால் "நமது அவதார கார்யத்தை நாம் எப்படி நிறைவேற்ற முடியும். மாயா ஸம்பந்தமில்லாத அவஸ்தையில் நாம் கூடஸ்தனாக வல்லவா ஆகிவிடுகிறோம்." என்ற கவலையையும் ஸீதையைவிட்டு ராமன் துக்கப்பட்டதற்குக் காரணமாயும் சொல்லக்கூடும். அதனாலும் ராமனிடம் ஈச்வரத்வம் போகாது.

5. ஸீதையை ராவணன் தூக்கிக்கொண்டுபோன பிற்பாடு ராவணனைக் கொன்று ஸீதையைத் தான் மறுபடியும் அடைவதற்காக, ஆஞ்சனேய ஸ்வாமி மூலமாக ஸுக்ரீவனிடம் தான் ஸ்நேஹம் செய்துகொண்டார் என்பதும் ராவணனைக் கொல்வதற்குத் தனக்கு சக்தியில்லாததால் என்று சொல்லக் கூடாது.

अङ्गुल्यग्रेण तान्हन्यां (அங்கு³ல்யக்³ரேண தாந்ஹந்யாம்) (அங்குல்யக்ரேண தாந்ஹந்யாம்) என்று ஸுக்ரீவனிடத்திலேயே ராமன், "விரலின் நுனியை வைத்துக்கொண்டே, ஆயுதமன்னியில், ராக்ஷஸர்களை நான் கொன்றுவிடுவேன்" என்று சொல்லுகிறார். அதனால் ராமனுடைய பௌருஷத்தை ஸுக்ரீவனும் அறிந்தவன்தான். வாலி வதம் ஒன்றே போதாதா? தன் கார்யத்திற்கு ஸஹாயமாக ஸுக்ரீவனை ஸ்நேஹம் செய்துகொள்ளவில்லை.

यान्ति न्यायप्रवृत्तस्य तिर्यञ्चोऽपि सहायतां

யாந்தி ந்யாயப்ரவ்ருத்தஸ்ய திர்யஞ்சோऽபி ஸஹாயதாம்

யாந்தி ந்யாயப்ரவ்ருத்தஸ்ய திர்யஞ்சோபி ஸஹாயதாம்

என்ற ரீதியாக ஸன்மார்க்கத்தில் போகிறவனுக்கு விவேக மற்ற வானர ஜாதிகளும் ஸஹாயம் செய்யுமேயானுல், ஈச்வ ரன் ஏன் அனுகூலமாயிருக்க மாட்டான். நாம் போகும்வழி நல்வழியானுல், பரமேச்வரனும் உயிரைக் கொடுத்து ரக்ஷிக்க ஸகாயமாக வருவான் என்ற விஷயத்தையும் ப்ரகாசப் படுத்த, 'நான் பித்ருவாக்ய பரிபாலனம் என்ற தர்மத்திற் காக ராஜ்ய ஸ்ரீயையும் துச்சமாக நினைத்துவிட்டேன். தர்ம மார்க்கத்தில் நான் போகிறேன். அப்படியிருக்கும் எனக்கு என் தர்ம பத்னியான ஸீதையை ராவணன் அபஹரித்துக் கொண்டுபோன ஸந்தர்ப்பத்தில் விவேக சூன்யமான இந்த வானரங்களும் ஸகாயமாக உதவி செய்தார்கள். ஆகையால் நீங்களும் நல்வழியில் செல்லுங்கள். ஸர்வேச்வரன் எந்த ஆபத்து வந்தாலும் தான் முன்பாக வந்து அதை நிவ்ருத்தி செய்துவைத்து க்ஷேமத்தைச் செய்வார்' என்பதை வெளிக் காட்டினுரன்னியில், தனக்கு சக்தியில்லாமல் ஸுக்ரீவனு டன் தன் கார்யத்திற்காக ஸ்நேஹம் செய்துகொண்டார் என்பதேயில்லை.

லக்ஷ்மண ஸ்வாமியானவர், ஆஞ்சனேய ஸ்வாமியிடம் रामः सुग्रीवं शरणं गतः (ராம: ஸுக்ரீவம் சரணம் கத:) (ராம: ஸுக்ரீ வம்சரணம் கத:) என்ற வாக்யத்தால் ஸுக்ரீவனை சரணமடை கிருர் என்று சொன்ன வார்த்தையோ, ஸுக்ரீவனை ஒரு மேலானவனுக நினைத்து ராமன் தான் கீழ் என்ற எண் ணத்துடன் சரணமடைந்தார் என்ற அபிப்ராயத்தை வைத் துக்கொள்ளக்கூடாது. ஒரு மனிதனுக்கு ஏதாவது ஆபத்து வரும் காலத்தில் தன்னுடைய மஹத்வத்தைக்கூட மறந்து விட்டு எளியவனையும் பணிந்து தொழுவான். இது மனிதர் களுடைய ஸ்வபாவமாகும் என்றுதான் அந்த லக்ஷ்மண ஸ்வாமி சொன்ன வார்த்தைக்கு அபிப்ராயமாகும்.

அத்துடன் शरणं गृह रक्षित्रोः (சரணம் க்ருஹ ரக்ஷித்ரோ:) (சரணம் க்ருஹ ரக்ஷித்ரோ:) என்ற ந்யாயத்தை அனுஸரித்து

சரணம் என்ற சப்தத்திற்கு 'க்ருஹம்' என்றும் ஒரு அர்த்தம் உண்டு. 'ரக்ஷிக்கிறவன்' என்றும் அர்த்தமுண்டு. ப்ரக்ருதத்தில் 'வாஸஸ்தானம்'———'க்ருஹம்' என்ற அர்த்தத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அதனால் ஸுக்ரீவனை க்ருஹமாக, தனது வாஸஸ்தானமாக அடைந்தவன் எவனோ அவன்தான் எனது தமயனான ராமன் என்று லக்ஷ்மண ஸ்வாமி சொன்னார். அதனால் सूर्यपुत्रस्तु सुग्रीवः (𑌸𑍂𑌰𑍍𑌯𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑍁 𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌃) (ஸூர்ய புத்ரஸ்து ஸுக்ரீவ:) என்ற வாக்யத்தாலும், आत्मा वै पुत्रनामाऽसि (𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑍈 𑌪𑍁𑌤𑍍𑌰𑌨𑌾𑌮𑌾𑌽𑌸𑌿) (ஆத்மாவை புத்ரநாமாஸி) என்ற ச்ருதியாலும், ஸர்வலோகத்தையும் பாஸிக்கச் செய்யும் ஸூர்யபகவானே, ஸுக்ரீவனாக அவதரித்திருக்கிறான் என்று தெரிகிறபடியாலும், அந்த ஸூர்யபகவானுடைய தேஜோமயமான மண்டலத்தின் நடுவில்,

सवितृमण्डलमध्यवर्ती नारायणः सरसिजासन सन्निविष्टः।
केयूरवान् मकरकुण्डलवान् किरीटी हारी हिरणमयवपुः धृतशंखचक्रः॥

𑌸𑌵𑌿𑌤𑍃𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑌧𑍍𑌯𑌵𑌰𑍍𑌤𑍀 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃 𑌸𑌰𑌸𑌿𑌜𑌾𑌸𑌨
𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 ।
𑌕𑍇𑌯𑍂𑌰𑌵𑌾𑌨𑍍 𑌮𑌕𑌰𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌵𑌾𑌨𑍍 𑌕𑌿𑌰𑍀𑌟𑍀 𑌹𑌾𑌰𑍀
𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯 𑌵𑌪𑍁𑌃 𑌧𑍃𑌤𑌶𑌂𑌖𑌚𑌕𑍍𑌰𑌃 ॥

ஸவித்ருமண்டல மத்யவர்த்தீ நாராயண: ஸரஸிஜாஸந
ஸந்நிவிஷ்ட: ।
கேயூரவாந் மகரகுண்டலவாந், கிரீடீ ஹாரீ ஹிரண்மயவபு:
த்ருத சங்கசக்ர: ॥

என்ற ச்ருதியாலும்,

अत एष अन्तरादित्ये हिरण्मयः पुरुषो दृश्यते

𑌅𑌤 𑌏𑌷 𑌅𑌨𑍍𑌤𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇

அத எஷ அந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே

என்ற ச்ருதியாலும், மஹாவிஷ்ணுவே வாஸம் செய்கிறார்

என்று தெரிகிறபடியால், ஸூர்யமண்டலமானது மஹா விஷ்ணுவினுடைய க்ரஹமாக (வாஸஸ்தானமாக) ஆகிறது. அதைத்தான் ப்ரக்ருதத்தில் லக்ஷ்மணஸ்வாமி யானவர் सुग्रीवं शरणं गतः (ஸுக்ரீவம் ஶரணம் கத:) (ஸுக்ரீவம் சரணம் கத:) என்று சொல்கிறார். அதாவது "ஆஞ்சனேயரே! உங்கள் ராஜாவான ஸுக்ரீவன் ஸூர்யபகவான் என்பதைத் தாங் கள் அறியக்கூடும். அந்த ஸூர்யபகவானுடைய தேஜோ மயமான மண்டலத்தை க்ரஹமாக வைத்துக்கொண்டு நித்யவாஸம் செய்கிறவன் மஹாவிஷ்ணுதான் என்பதும் தங்களுக்குத் தெரிந்த விஷயம். அந்த மஹாவிஷ்ணுதான் எதிரில் புலப்படும் திவ்யமங்கள விக்ரஹத்துடன் விளங் கும் என் தமையனார் என்று சொல்லப்படும் இந்த ராமன் ஆகிறார்" என்றதைத்தான் சொன்னார். அன்னியில் தனக்கு சக்தியில்லாமல் ஸுக்ரீவன் காலில் விழுந்ததாக அதன் தாத்பர்யமில்லை. ஆகையால் सुग्रीवं शरणं गतः (ஸுக்ரீவம் ஶரணம் கத:) (ஸுக்ரீவம் சரணம் கத:) என்ற வாக்யத்தால் ராமன் "விஷ்ணு" என்று வெளியாகிறதுபோல் மற்ற எந்த வாக்யத்தாலும் வெளியாகாது என்பதும் நிச்சயமாகிறது. அதனாலும் ராமன் ஈச்வரன் இல்லை என்பதும் ஆகாது. பரமேச்வரன்தான்.

6. ஸ்ரீராமசந்த்ரன் அகஸ்த்ய மஹர்ஷியினிடம் ஆதித்ய ஹ்ருதயம் என்றதை உபதேசம்செய்து கொண்டதற்காக மனி தன் என்று நினைக்கக்கூடாது. தன்னிடத்திலுள்ள ஈச்வ ரத்வத்தை ப்ரகடனம் செய்தாலோ ராவணன் சரணாகதி அடைந்துவிடுவான். சரணாகதி அடைந்தவனை ரக்ஷித்தே ஆகவேண்டும். அவனை வதித்துத் தேவர்களுக்கும் ரிஷி களுக்கும் ஸௌக்யத்தைச் செய்வதற்காக ஏற்பட்ட தன் னுடைய அவதாரமும் பயனற்றதாக ஆகிவிடும். ஆகை யால், தான் மஹாவிஷ்ணு என்பதை ப்ரகடனம் செய்யா மல் மனுஷ்யபாவத்திலேயே இருந்துகொண்டுதான் ராவ ணனைக் கொன்றாகவேண்டும். மனுஷ்யபாவத்திலிருந்து ராவ

ணனைக் கொன்றாலோ, கேவலம் மனுஷ்யனாலேயே மரணத்தை அடைந்த ராவணன் மஹா தபஸ்வியாக எப்படியாக முடியும்? அவன் செய்த தபஸ்ஸோ, ப்ரஹ்மாவிடமிருந்து பெற்றுக்கொண்ட வரன்களோ வீணாக ஆகிவிடும். மனுஷ்யனை துச்சனாக நினைத்தல்லவா, மனுஷ்யர்களை விட்டு விட்டு மற்றவர்கள்மூலம் தனக்கு வதம் கூடாது என்று ப்ரஹ்மாவிடம் வரம் கேட்டுக்கொண்டான். அதையனுஸரித்துப் பார்த்தால் மனுஷ்யனால் அவனை வதிக்க முடியாது என்றே ஒப்புக்கொண்டு தீரவேண்டும். அப்படியானாலும், மஹாபலிஷ்டனான ராவணனையும் ஒரு மனிதனும் மஹர்ஷிகள்மூலம் மஹா மந்த்ரத்தை உபதேசம் செய்துகொண்டால் அந்த மந்த்ர பலத்தால் ராவணனையும் கொன்றுவிடலாம் என்பதை ப்ரகாசப்படுத்த ராமர் மந்த்ரோபதேசம் செய்துகொண்டார். மனிதனுக்குத் தன்னால் பரிஹரிக்க முடியாததான பெரிய ஆபத்துத் தனக்கு வரும் பொழுது அந்த ஆபத்தையும் வெகு ஸுலபமாகத் தன் அருகில் அண்டாமல் செய்துகொள்ளலாம். அதற்குள்ள உபாயமோ நமது ஹிந்து தர்ம சாஸ்த்ரத்தில் காணப்படும் மஹாமந்த்ரம்தான். அதிலும் இந்த "ஆதித்ய ஹ்ருதயம்" என்பது ரொம்பவும் உயர்ந்த மந்த்ரமாகும். வ்யாதிகளைத் தொலைத்துக்கொள்ளவோ, ஸர்வ சத்ருக்களையும் நாசம் செய்துகொள்ளவோ, அநேகவிதமான போக போக்யங்களை அனுபவிப்பதற்கோ, இம்மந்த்ரமே மனிதர்களுக்கு முக்யமான உபாயமாகும். இந்த மந்த்ரத்தை ஒவ்வொரு மனிதனும் தினந்தோறும் மூன்று ஆவர்த்திகளுக்குக் குறையாமல் ஜபம் செய்வானேயானால், ஸகலவிதமான ஆபத்துக்களினின்றும் ரொம்பவும் ஸுலபமாக முக்தனாக ஆகி, ஸகலவிதமான ஸௌபாக்யங்களையும் அடைகின்றான். "நானே ராவணனை கொல்ல மனுஷ்யபாவத்திலிருந்தால் தேவையான பலம் போதாது என்று நினைத்து, 'என்ன செய்வது' என்று ஆலோசித்தேன். விஷ்ணுபாவத்தை ப்ரகாசப்படுத்தவும் ப்ரக்ருதத்திற்கு விரோதமாக இருந்தது.

மனுஷ்யபாவத்தில், ராவணனைக் கொல்வது அஸாத்யமாகத் தோன்றி சிந்தையுடன் இருக்கும் காலத்தில், அகஸ்த்ய மஹர்ஷி மூலம் இந்த "ஆதித்ய ஹ்ருதயம்" என்ற மஹா மந்த்ரத்தை நான் உபதேசம் செய்துகொண்டு ஜபம் செய்த மஹிமையால் ராவணனையும் கொன்றுவிட்டேன். ஆகையால் மனுஷ்யஜாதியில் பிறந்தவனுக்கு இந்த மந்த்ரமானது ஸகல ஸௌபாக்யங்களையும் அடைய ஒரு அந்தரங்கமான உபாயமாகும்" என்பதுதான் 'மந்த்ரத்தை ஸ்ரீராமனும் உபதேசித்துக்கொண்டார்' என்பதின் தாத்பர்யமாகும்.

அத்துடன், அகஸ்த்ய மஹர்ஷியோ வித்யாமண்டல மஹர்ஷி என்ற பெயரை அடைந்தவர். வேதசாஸ்த்ரங்களிலுள்ள ஸகல ரஹஸ்யங்களையும் கண்டு பிடித்த மஹானுபாவனாக அவர் லோகத்தில் ப்ரஸித்தி அடைந்தவர். அதர்வண வேதத்திலிருந்தும் இந்த ஆதித்ய ஹ்ருதயம் என்ற மஹாமந்த்ரத்தை,

|| ओं भगवते हिरण्यगर्भाय नमः ||

|| 𑌓𑌂 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌾𑌯 𑌨𑌮𑌃 ||

|| ஓம் பகவதே ஹிரண்யகர்பாய நம: ||

என்ற ரஹஸ்யத்தை அங்கந்யாஸ, கரந்யாஸ த்யான ச்லோகங்களுடன் கண்டுபிடித்தார். பிறகு அந்த மந்த்ர ப்ராபவத்தால் தான் அநேகவிதமான மேன்மைகளையும் அடைந்தார். அதன் வைபவத்தைப் பார்த்து அந்த மஹா மந்தரத்தையும் அந்த ஸ்தோத்ரங்களையும், பூலோகத்தில் ப்ரகாசப்படுத்த வேண்டுமென்றும் நினைத்தார். "ப்ராணிகளுக்கோ இந்த மந்த்ரமானது ரொம்பவும் முக்யமானது. ஸகல ரோகத்தையும் நிவ்ருத்தி செய்யக்கூடியது; நான்கு விதமான புருஷார்த்தங்களையும் கொடுக்கக்கூடியது; இது ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு சிந்தாமணி ரத்னம்போல் இருந்துவரவேண்டியது அவச்யமாகும். இதை ஒரு பெரிய

மஹானுபாவனிடம் அரங்கேற்றி பூலோகத்தில் ப்ரசுரம் செய்யவேண்டும்'' என்று எண்ணினார். அந்த ஸந்தர்ப்பத்தில் ராமனும், மனுஷ்ய பாவத்தில் ராவணனை வதிப்பது ரொம்பவும் கஷ்டமானதுபோல் நடித்துக் காட்டினார். இதுதான் ஸரியான ஸந்தர்ப்பம் என்று நினைத்து, அகஸ்த்ய மஹர்ஷி ஸ்ரீராமனிடம் வந்து சேர்ந்து, "ராமா! உன்மூலம் இந்த மஹா மந்த்ரம் லோகத்தில் ப்ரஸித்தியடைய வேண்டும்.

गुणाधिकैः अनुष्ठीयमानः दीर्घेन कालेन धर्मः प्रचयं गमिष्यति

குணாதிகைः அநுஷ்டீயமாநः தீர்கேந காலேந தர்மः ப்ரசயம் கமிஷ்யதி

குணாதிகை: அநுஷ்டீயமாந: தீர்கேந காலேந தர்ம: ப்ரசயம் கமிஷ்யதி

என்று ராமா! ஸகல கல்யாண குணங்களும் பொருந்திய உன்னைப்போலொத்த மஹானுபாவனால் அனுஷ்டிக்கப்பட்ட தர்மம்தான் லோகத்தில் ப்ரசாரத்தை அடையும். ஆகையால் இந்த ஆதித்யஹ்ருதயம் என்ற மஹா மந்த்ரத்திற்கு நீ கொஞ்சம் கௌரவத்தைக் கொடுக்கவேண்டும். இந்த அவதாரத்தில் நீ எவ்வளவோ விஷயங்களை நடித்துக் காட்டியிருக்கிறாய். இந்த விஷயத்திலும், நீ ராவணனைக் கொல்ல சக்தியற்றவன்போல் கஷ்டப்பட்டு, என்னிடமிருந்து இந்த மந்த்ரோபதேசம் செய்து கொண்டதால், ராவணனைக் கொல்லும் ஸாமர்த்யம் வந்ததுபோல் நடித்துக் காட்டி மந்த்ரத்தை ஸகல ஜனங்களும் ஆதரிக்கும்படி நீ செய்தால் லோகத்திற்குப் பரம உபகாரமாக இருக்கும்'' என்று ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார். ஸ்ரீராமனும் அதற்கு இணங்கி அகஸ்த்ய மஹர்ஷி மூலமாக மந்த்ரத்தை உபதேசம் செய்துகொண்டார். இதனாலும் ஸ்ரீராமன் ஈச்வரனில்லை என்பதாகாது.

7. ராவண வதம் ஆனபின்பு சிவலிங்க ப்ரதிஷ்டை செய்தார் என்பதற்கும் தாத்பர்யத்தை அறியவும். அதா

வது : அதனால் ப்ராஹ்மணர்களுடைய பெருமைதான் வெளியாகிறது. ஸாக்ஷாத் ப்ரம்மாவினுடைய பரம்பரையில் பிறந்தவனாக இருந்தாலும் ராவணன் ராக்ஷஸனாக ஆகி விட்டபடியால் அவனைக் கொல்வது சாஸ்த்ர ஸம்மதமாகத் தானாகும். ஆகிலும், அவனுடைய வம்சம் ப்ரம்மாவினுடைய வம்சமே என்றதை நினைத்தால் ப்ராஹ்மண ஸம்பந்தம் இருக்கிறதே, ஒரு ஸமயம் ப்ரஹ்மஹத்தி தோஷம் வருமோ என்ற சங்கையினால் அதற்கு ப்ராயச்சித்தமாக சிவலிங்க ப்ரதிஷ்டையை ஸ்ரீராமனும் செய்தார் என்பதினால், ஸத் ப்ராஹ்மணனும் ஸத் வ்ருத்தனும், ச்ரோத்ரியனும் உள்ள மஹானுபாவர்களுடைய வம்சத்தில் பிறந்தவர்கள் எவ்விதமான குற்றத்தைச் செய்தவர்களானாலும் அவர்களை வதிக்கக் கூடாது. அது மஹா பாபமாகும்.

न ब्राह्मणो हन्तव्यः (𑌨 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌹𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌃) (ந ப்ராஹ்மணோ ஹந்தவ்ய:) என்ற ச்ருதியே அதற்கு ப்ரமாணமாகும். இதை ப்ரகாசப்படுத்த ஸ்ரீராமன் சிவலிங்க ப்ரதிஷ்டை செய்தார் என்பதை அறிந்துகொள்ளவும். ஆனால் சில புராணங்களில், ப்ரம்மஹத்தி விமோசனத்திற்காக சிவலிங்கப்ரதிஷ்டை செய்தார் என்று சொல்லப்பட்டாலும், வால்மீகியினுடைய தாத்பர்யம் அவ்விதமில்லை. ராவணனை வதம் செய்த பிற்பாடு ஸீதையுடனும், லக்ஷ்மணனுடனும், மற்ற ஸுக்ரீவன் முதலான பரிவாரங்களுடனும், புஷ்பக விமானத்தில் ஏறிக்கொண்டு அயோத்திக்கு திரும்பிவரும் ஸமயத்தில் ஸமுத்ரத்தைத் தாண்டிக் கரைக்கு வந்தவுடன், அதாவது ராமேச்வரம் என்று சொல்லப்படும் க்ஷேத்ரத்திற்கு வந்தவுடன் ஸீதையிடம் " இது எந்த இடம் என்று உனக்குத் தெரியுமா ?

अत्र पूर्वं महादेवः प्रसादमकरोत्प्रभुः

𑌅𑌤𑍍𑌰 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌃 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌮𑌕𑌰𑍋𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑍁𑌃

அத்ர பூர்வம் மஹாதேவ: ப்ரஸாதமகரோத்ப்ரபு:

என்ற ச்லோகத்தால், உன்னை நான் தேடிக்கொண்டு வானர ஸேனைகளுடன் இந்த இடம் வந்தவுடன், ஸமுத்ரத்தில்

அணை போடுமுன், கைலாஸவாஸியான பரமேச்வரன் இந்த இடத்தில் வந்து எனக்கு அனுக்ரஹம் செய்தார். அது எக்காலத்திலும் ஸத்யமாக ஆகவேண்டுமென்ற எண்ணத்துடன் பரமேச்வரனைப் பார்த்து நான், 'தாங்கள் இங்கேயே பூர்ணமான ஸாங்நித்யத்துடன் ஸ்திரமாக விளங்கிவரவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அதற்கு பரமேச்வரனும் இணங்கி ஸ்வயம்பூலிங்க ரூபமாக விளங்கிவருகிறார்.

ஜ்யோதிர்மயமான லிங்கம் ஸமீபத்தில் அதோ பாஸித்து வருகிறது. அந்த லிங்கத்திற்கு ராமநாதன் என்றும் பெயர் விளங்கிவருகிறது. உடன் ஸகல தேவர்களும் இங்கு வந்தார்கள். மஹாஸபை கூடி, பரமேச்வரனைப் பார்த்து, रामेश्वरः (𑌰𑌾𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃) (ராமேச்வர:) என்ற சப்தத்திற்கு என்ன அர்த்தம் என்று கேட்டார்கள். பரமேச்வரனே அதற்கு பதிலாக रामः ईश्वरः यस्य सः रामेश्वरः (𑌰𑌾𑌮𑌃 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃 𑌰𑌾𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃) (ராம: ஈச்வர: யஸ்ய ஸ: ராமேச்வர:) என்ற பஹுவ்ரீஹி ஸமாஸத்தால் ராமனே எந்த சிவனுக்கும் தெய்வமோ, அதாவது எந்த பரமசிவனும் ராமநாம ஜபம் செய்துகொண்டு எப்பொழுதும் காலத்தை நயனம் செய்கிறானோ, அந்த பரமசிவனுக்கு ராமேச்வரன், ராமநாதன் என்று பெயர் ஏற்பட்டது. அது நான்தான். எனக்கும் ராமன் தெய்வம் என்று சொன்னார். உடன் தேவர்கள் என்னிடம் रामेश्वरः (𑌰𑌾𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃) (ராமேச்வர:) என்ற பதத்திற்கு என்ன அர்த்தம் என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு பதில் சொன்னதோ, " रामस्य ईश्वरः रामेश्वरः (𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 (𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 𑌰𑌾𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃) (ராமஸ்ய ஈச்வர: ராமேச்வர:) என்ற ஷஷ்டீ தத்புருஷ ஸமாஸத்தை அவலம்பித்து ராமனாலேயும் பூஜிக்கப்பட்ட பரமேச்வரன். அந்த ப்ரபுவிற்குத்தான் ராமேச்வர: ராமநாதன் என்ற பெயர் ஏற்பட்டது. ஆகையால் விஷ்ணுவான எனக்கும் பரமசிவன் பூஜ்யமான தெய்வம் என்பதை நீங்கள் அறியுங்கள்" என்று சொன்னேன். மறுபடி தேவர்

கள் சொன்னதாவது. रामेश्वरः (𑌰𑌾𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃) (ராமேச்வர:) என்ற பதத்திற்கு रामः ईश्वरः यस्य (𑌰𑌾𑌮𑌃 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 𑌯𑌸𑍍𑌯) (ராம: ஈச்வர: யஸ்ய) என்ற பஹுவ்ரீஹி ஸமாஸத்தையோ, रामस्य ईश्वरः (𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃) (ராமஸ்ய ஈச்வர:) என்ற தத்புருஷ ஸமாஸத்தையோ ஒப்புக்கொள்ளக் கூடாது. அப்படியானால் ஸகல ச்ருதிகளுக்கும் வ்யாகோபம் ஏற்பட்டுவிடும். रामश्चासौ ईश्वरश्च (𑌰𑌾𑌮𑌶𑍍𑌚𑌾𑌸𑍌 𑌈𑌶𑍍𑌵𑌰𑌶𑍍𑌚) (ராமச்சாஸௌ ஈச்வரச்ச) என்ற கர்மதாரய ஸமாஸத்தைத்தான் ப்ரக்ருதத்தில் ஆச்ரயிக்கவேண்டும். கர்மதாரய ஸமாஸத்திலோ, ஸமாஸத்தில் அடங்கிய பதார்த்தங்களுக்கு அபேதம் தான் ஏற்படும். नीलो घटः (𑌨𑍀𑌲𑍋 𑌘𑌟𑌃) (நீலோ கட:) என்ற இடத்தில்,

नीलश्चासौ घटश्च नीलघटः नीलाभिन्नो घटः

𑌨𑍀𑌲𑌶𑍍𑌚𑌾𑌸𑍌 𑌘𑌟𑌶𑍍𑌚 𑌨𑍀𑌲𑌘𑌟𑌃 𑌨𑍀𑌲𑌾𑌭𑌿𑌨𑍍𑌨𑍋 𑌘𑌟𑌃

நீலச்சாஸௌ கடச்ச நீலகட: நீலாபிந்நோ கட:

என்றது போல் रामश्चासौ ईश्वरश्च रामेश्वरः (𑌰𑌾𑌮𑌶𑍍𑌚𑌾𑌸𑍌 𑌈𑌶𑍍𑌵𑌰𑌶𑍍𑌚 𑌰𑌾𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃) (ராமஸ்சாஸௌ ஈச்வரச்ச ராமேச்வர:) என்ற இடத்திலேயும் ராமனாகிய விஷ்ணுவிற்கும், ஈச்வரன் என்ற சிவனுக்கும் பேதமே யில்லை. அபேதம் தான்.

राम अभिन्नो ईश्वरः रामेश्वरः

𑌰𑌾𑌮 𑌅𑌭𑌿𑌨𑍍𑌨𑍋 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 𑌰𑌾𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃

ராம அபிந்நோ ஈச்வர: ராமேச்வர:

இதில்,

शिवस्य हृदयं विष्णुः, विष्णोस्तु हृदयं शिवः

𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃, 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌸𑍍𑌤𑍁 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌶𑌿𑌵𑌃

சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு: விஷ்ணோஸ்து ஹ்ருதயம் சிவ :

என்ற சாஸ்த்ரமே ப்ரமாணமாகும் என்று தேவர்கள் சொன்னார்கள். இவ்விதம் அழகாக ராமேச்வர: என்ற பதத்தின் அர்த்தமானது விசாரிக்கப்பட்டது.

மஹாபுண்ய ஸ்தலம் என்று அறிந்துகொள். பரம சிவன் நித்யஸாந்நித்யத்துடன் கூடியிருந்து வருகிறார். இந்த க்ஷேத்ரத்தில் நான் நினைத்த மாத்ரத்தில் பரம சிவன் வந்தார். அதற்குக் காரணமோ: உன்னை அபஹரித்துக்கொண்டுபோன ராவணனே பரமேச்வரனுடைய பக்தன். ஸமுத்ரத்திற்கு அணைபோடும் ஸமயத்தில், ராவணன் சிவபக்தனாக இருக்கிறானே; அவனே நமது மனைவியை அபஹரித்திருக்கிறான்; இந்த அக்ரமத்தை அவன் உபாஸிக்கும் பரமசிவனிடமே நேரில் சொல்லி 'அவனை சிக்ஷிக்கிற விஷயத்தில் தாங்கள் யத்னம் எடுத்துக்கொள்கிறீர்களா? அல்லது நானே அவனை சிக்ஷித்துவிடலாமா?' என்று கேட்டேன். பரமசிவனும், 'உனக்கு யார் த்வேஷியே அவன்தான் எனக்கு த்வேஷி. உனக்கு யார் பக்தனோ அவன்தான் என் பக்தன். உனக்கு செய்த அபசாரம் எனக்குச் செய்ததாகவே ஆகும். ஆகையால் நீயே அந்த ராவணனைக் கொன்று லோகத்திற்கு நன்மையை செய்து வா' என்று எனக்குக் கட்டளையிட்டார். அப்படி 'அவரிடம் தெரிவித்துவிட்டுத்தான் அவர் பக்தனை நான் கொன்றேன்' என்பதை எக்காலத்திலும் ஸூசிப்பிக்க இந்த க்ஷேத்ரத்திலேயே ஸாந்நித்யத்தை நித்யமாய் அடையும்படி நான் கோரிக்கொண்ட ப்ரகாரம் பரமேச்வரனும் ஸந்நிஹிதனாக இருந்து வருகிறார்" என்று ராமன் ஸிதைக்குச் சொன்னார். அதனால், 'ராமன் தன்னுடைய தோஷ நிவ்ருத்திக்காக சிவலிங்க ப்திஷ்டை செய்தார்' என்பது தப்பாகும். ராவணன் சிவபக்தனானதினால் சிவனிடத்தில் தகவல் கொடுத்துவிட்டு ராவணனைக் கொல்ல யத்னம் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் பரமசிவனை தருவித்தார் என்றுதான் அறிந்துகொள்ளவும்.

ஆகையால் எக்காரணத்தைக்கொண்டும் ஸ்ரீராமன் கர்மபரதந்த்ரனான ஜீவன் என்று நினைக்கக்கூடாது. ஸ்ரீராமன் மஹாபுருஷனும் ஸர்வேச்வரனும்தான். அவரு

டைய அவதாரமும் கர்பவாஸ துக்கமற்றதே. கர்மபரதந்த்ர ஜீவஜன்ம விலக்ஷணம்தான். அப்ராக்ருதமுமே.

இந்த விஷயங்களையே அவதாரகட்டத்திலுள்ள ச்லோகங்களில் காணப்படும்,

सर्वलक्षण संयुतं, सर्वलोक नमस्कृतं

𑌸𑌰𑍍𑌵𑌲𑌕𑍍𑌷𑌣 𑌸𑌂𑌯𑍁𑌤𑌂, 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕 𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑌂

ஸர்வலக்ஷண ஸம்யுதம், ஸர்வலோக நமஸ்க்ருதம்

முதலான விசேஷணங்களால் வால்மீகி மஹர்ஷி ப்ரகாசப்படுத்தியிருக்கிறார்.

ஆனால் நவக்ரஹங்களுடைய சாரங்களை ப்ரகாசப்படுத்தி யிருப்பதில் தாத்பர்யம் என்னவென்றாலோ, அது ரொம்பவும் சின்ன விஷயம். மேல்கண்ட விஷயங்களை அறிந்தவர்களுக்குத் தானாகவே ஸமாதானம் புலப்படும்.

ஒரு தேவாலயத்தில், சிவனுக்கோ விஷ்ணுவிற்கோ ப்ரதிஷ்டை செய்வதற்கு நல்ல முஹூர்த்தங்கள் பார்க்கிறார்கள். நவக்ரஹங்களுடைய ஆனுகூல்யமான ஸ்திதியை கவனித்துத்தான் நல்ல லக்னத்தில் ப்ரதிஷ்டை செய்வது வழக்கம். ப்ரம்மோத்ஸவாதிகளுடைய த்வஜாரோஹணம், ரதா ரோஹணம் முதலானவைகளுக்குக்கூட சுபலக்னம் பார்ப்பது வழக்கம். ஆனால் அது பகவானின் நன்மைக்காக அல்ல. பகவானே, அவாப்த ஸமஸ்தகாமன்; பரிபூர்ணானந்தஸ்வரூபி; புண்யபாப விலக்ஷணன். இவ்விதமான ப்ரபுவிற்கு க்ரஹங்களுடைய ஆனுகூல்ய ப்ராதிகூல்யத்தால் என்ன ஏற்படக்கூடும்? ஆனால் நல்ல ஸமயத்தைப் பார்ப்பது லோகத்தின் க்ஷேமத்திற்காக என்று தான் அங்கு ஸமாதானம் சொல்லவேண்டும். அதுபோல்தான் ப்ரக்ருதத்திலும்,

अशरीरं वावसन्तं, न प्रियाप्रिये स्पृशतः

ஃஶரீரம் வாவஸந்தம், ந ப்ரியாப்ரியே ஸ்ப்ருஶத:

அசரீரம் வாவஸந்தம், நப்ரியாப்ரியே ஸ்ப்ருசத:

என்ற ச்ருதியினுல் ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரணம் என்ற மூன்றுவிதமான சரீர ஸம்பந்தமில்லாத பரப்ரஹ்மமானது சுத்த ஸத்வமய மாயாமயமான மங்கள விக்ரஹத்துடன் அவதரித்த ஸமயம், லோகத்தினுடைய நன்மையைக் காட்டுகிறதா, தீமையைக் காட்டுகிறதா என்பதை விளக்க க்ரஹங்களின் சாரங்களைப்பற்றி வால்மீகி மஹர்ஷி சொல்லியிருக்கிருர். ராமனுக்காக ஒன்றுமில்லை. ராமாவதார காலத்திலுள்ள க்ரஹங்களின் ஸ்திதியைக் கவனித்தால், ஸ்வதர்ம தத்பரர்களான ஜனங்களின் க்ஷேமமும், அதர்ம தத்பரர்களான துஷ்டர்களுக்கு நாசமும், என்பதைத்தான் விவேகிகள் அறிந்துகொள்ளவேண்டும்.

ஆகையால் ஸ்ரீராமனுடைய அவதாரமானது ஸீதையினுடைய ஜன்மாவைப்போலும், த்ரௌபதி, த்ரஷ்டத்யும்னன், பார்வதி, மீனுக்ஷி இவர்களின் ஜன்மாவைப்போல் அயோனிஜ அப்ராக்ருதமான அவதாரமே. கர்ப வாஸ துக்கமற்றது. ராமன் மஹாபுருஷன், உத்தமபுருஷன், லக்ஷ்மீ பதியே, ஸர்வேச்வரனே என்பதை அறியவும்.

கைகேயி தேவியினிடத்தில் பரதனும், ஸுமித்ரா தேவியினிடம் லக்ஷ்மண ஸ்வாமி, சத்ருக்ன ஸ்வாமி இவ்விருவர்களும் க்ரமமாக உண்டானுர்கள். புஷ்ய நக்ஷத்ரத்தில் பரத ஸ்வாமியும், ஆயில்ய நக்ஷத்ரத்தில் லக்ஷ்மண ஸ்வாமியும், சத்ருக்ன ஸ்வாமியும் உண்டானுர்கள். இவ்விதம் ராமன், லக்ஷ்மணன் பரதன், சத்ருக்னன் என்று நான்கு ராஜகுமாரர்களும் திவ்ய தேஜஸ்ஸோடு கூடினவர்களாக விளங்கி வந்தார்கள். தேவலோகத்திலும் பூலோகத்திலும் பகவானுடைய அவதார காலத்தில் மஹோத்ஸவங்களாகவே இருந்துவந்தன. அயோத்யா ராஜ்யத்தில், ஒவ்வொரு க்ருஹத்திலும் விசேஷமான மங்களவாத்ய

கோஷங்களுடன் மஹோத்ஸவமானது கொண்டாடப்பட்டது. ராஜனும் ஸத்ப்ராஹ்மணர்களுக்கு கோதானம், பூதானம், ஸுவர்ணதானம் இவைகளை விசேஷமாகச் செய்தார். பௌராணிகோத்தமர்களுக்கும் விசேஷமான தானங்களைச் செய்தார். பிறகு வஸிஷ்டமஹர்ஷி மூலமாக ராமன் பிறந்த பன்னிரண்டாவது தினத்தில் நான்கு குமாரர்களுக்கும் ஜாதகர்மா, நாமகரணங்களைச் செய்தார்.

ज्येष्ठं रामं महात्मानं भरतं कैकथी सुतं ।
सौमित्रिं लक्ष्मणमिति शत्रुघ्नमपरं तथा ॥
वसिष्ठः परमप्रीतोनामानि कृतवान् तदा ॥

𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌭𑌰𑌤𑌂 𑌕𑍈𑌕𑌯𑍀 𑌸𑍁𑌤𑌂 ।
𑌸𑍌𑌮𑌿𑌤𑍍𑌰𑌿𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌮𑌿𑌤𑌿 𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑌮𑌪𑌰𑌂 𑌤𑌥𑌾 ॥
𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌃 𑌪𑌰𑌮𑌪𑍍𑌰𑍀𑌤𑍋 𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌕𑍃𑌤𑌵𑌾𑌨𑍍 𑌤𑌦𑌾 ॥

ஜ்யேஷ்டம் ராமம் மஹாத்மாநம் பரதம் கைகயீ ஸுதம் ।
ஸௌமித்ரிம் லக்ஷ்மணமிதி சத்ருக்நமபரம் ததா ॥
வஸிஸ்ட: பரமப்ரீதோ நாமாநி க்ருதவாந் ததா ॥

என்ற ச்லோகத்தால் வஸிஷ்ட மஹர்ஷி மூலமாக ராமன் முதலானவர்களுக்ரு தசரத சக்ரவர்த்தி செய்துவைத்த நாமகரணங்களின் மஹிமையை வால்மீகி மஹர்ஷி சொல்கிறார். கௌஸல்யா தேவியினிடத்தில் பிறந்த ஜ்யேஷ்ட புத்ரனுக்கு ராமன் என்ற பெயரை வைத்தார். அதற்குக் காரணமோ,

रमन्ते योगिनः अनन्ते सत्यानन्दे चिदात्मनि

𑌰𑌮𑌨𑍍𑌤𑍇 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌅𑌨𑌨𑍍𑌤𑍇 𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑍇 𑌚𑌿𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑌿

ரமந்தே யோகிந: அநந்தே ஸத்யாநந்தே சிதாத்மநி

என்ற ச்ருதியை அனுஸரித்து, மூன்று காலங்களிலும் அழியாமலும் தேச, கால, வஸ்து பரிச்சேதமற்றதாயும், ஸ்வயம் ப்ரகாச ஸ்வரூபமாயும், பரமானந்த ஸ்வரூபியாயு

முள்ள எந்த சித்ரூபமான ஆத்மாவினிடத்தில் ப்ரஹ்ம நிஷ்டர்கள் ரமிப்பார்களோ அந்த பரப்ரஹ்மமே ராமன் என்ற பொருள் என்பதை விளக்க 'ராமன்' என்று நாமாவை ஜ்யேஷ்ட புத்ரனுக்கு நாமகரணம் செய்ததின் காரணமாகும். ஸர்வ ஜனங்களும் ராமனுடைய கல்யாண குண விசேஷங்களால், ராமனிடம் ரமித்து வருகிறதும் மற்றொரு காரணமாகும்.

மேலும், மஹாவிஷ்ணுவினுடைய மூலமந்த்ரமானது **ॐ नमो नारायणाय** (ஓ௦ நமொ நாராயணாய) (ஓம் நமோ நாராயணாய) என்ற அஷ்டாக்ஷரியாக ஆகும். பரமசிவனுடைய மூல மந்த்ரமானது **ॐ नमः शिवाय** (ஓ௦ நமஃ ஶிவாய) (ஓம் நம: சிவாய) என்ற பஞ்சாக்ஷரியாக ஆகும். ராமவதாரமோ சிவன், விஷ்ணு இரண்டும் சேர்ந்த அவதாரமாகும்.

न प्रदोषे हरिं पश्येत् नृसिंहं राघवं विना

ந ப்ரதொஷெ ஹரிஂ பஶ்யெத் ந்ருஸிஂஹஂ ராகவஂ விநா

ந ப்ரதோஷே ஹரிம் பச்யேத் ந்ருஸிம்ஹம் ராகவம் விநா

என்ற ஸ்ம்ருதி வசனமானது ப்ரதோஷ காலத்தில் சிவனைத்தான் ஆராதிக்கவேண்டும். விஷ்ணுவை ஆராதிக்கக் கூடாது, என்று சொல்ல வந்தாலும், ஸ்ரீராமமூர்த்தியை யும் நரஸிம்மமூர்த்தியையும் ப்ரதோஷ காலத்திலும் முக்கியமாக ஆராதிக்கலாம் என்று சொல்கிறது. ப்ரதோஷ காலத்தில் சிவனைத் தவிர மற்ற எந்த தெய்வமும் ஆராதிக்கத் தகுந்ததாக ஆகாது என்று ஸர்வ சாஸ்த்ரங்களின் ஸித்தாந்தம் இருக்கும்பொழுது, ராமனையும் நரஸிம்ம மூர்த்தியையும் ஆராதிப்பதில் அனுக்ஞை செய்ததிலிருந்து அந்த இரண்டு மூர்த்திகளிடமும் சிவாம்சம் பொருந்தியிருக்கிறது என்பது ஸித்தமாகும்.

அத்துடன் சிவ புராணத்திலுள்ள கதையையும் கவனிக்கவேண்டும். ராவணன் திக்விஜயம் செய்யும்காலத்தில்

கைலாஸம் சென்றான். நந்திகேச்வரரிடம் பரமேச்வரனை தான் யுத்தத்திற்கு அழைத்த காலத்தில் நந்திகேச்வரரோ, "என்னோடு நீ யுத்தம் செய்து ஜயித்தபிற்பாடு. பரமேச்வரனை நீ யுத்தத்திற்கு அழைக்கலாம்'' என்றார். உடன் ராவணன் பரம கோபங்கொண்டு தன் கையிலிருந்த கதையினால், நந்திகேச்வரரை அடித்துக் கீழே தள்ளிவிட்டு, கைலாஸ பர்வதத்தை தலைகீழாய் தள்ளிவிட இரண்டு கைகளாலேயும் பிடித்துத் தூக்கினான். மலையோ திடீரென்று கிடுகிடுவென்று நடுங்கினது. பார்வதியும் பயந்தாள். பயத்துடன் பரமேச்வரருடைய அருகில் வேகமாய் ஓடி பரமேச்வரனை ஆலிங்கனம் செய்துகொண்டு பயத்தின் காரணத்தையும் தெரிவித்தாள். பரமேச்வரனோ ஸர்வக்ஞனானதால் இது ராவணனுடைய விஷமமான கார்யம் என்று அறிந்தும், ராவணனிடம் கோபத்தை அடையாமல் ப்ரஸன்னராக ஆனார். உடன் பார்வதியானவள், "ராவணனைக் கொல்ல யத்னம் செய்யாமல் ராவணன் செய்த கார்யத்தில் ஸந்தோஷப்படுகிறீர்களே! இது என்ன அந்யாயம்'' என்று கேட்டாள். பரமேச்வரனோ "ஹே ப்ரியே! ராவணன் செய்த கார்யத்தில் அவனுக்கு பெரிய ஸன்மானம் செய்யவேண்டுமென்றுதான் எனக்குத் தோன்றுகிறது. எனக்குக் கோபமே வரவில்லை. அதற்குக் காரணமோ, ஸ்த்ரீகளுக்கு புருஷனைக் காட்டிலும் காமவேகம் ரொம்பவும் அதிகம் என்று வாத்ஸ்யாயன ஸூத்ரங்கள் சொல்லுகின்றன. ஆனால் அந்தை அவர்கள் ஸுலபமாய் வெளிக்காட்டமாட்டார்கள். புருஷனைத் தானாகத் தனது காமவேகத்தில் நிவ்ருத்தி செய்துகொள்ள விஷய ஸுகத்தை அனுபவிக்க வேண்டுமென்று விரும்பவும் மாட்டார்கள், ஆலிங்கனாதிகளையும் ஸ்வயமாகச் செய்துகொள்ளவும்மாட்டார்கள். கைலாஸத்தில், அனாதிகாலமாக நாமிருவர்களும் இருந்துவருகிறோமே! நீ என்றயதினமாவது என்னை ஸ்வயமாக ஆலிங்கனம் செய்துகொண்டதுண்டா? இப்பொழுதோ, ஸ்வயமாகவே ஆலிங்கனம் செய்துகொண்டு

எனக்கு ஸுகத்தை அளித்தாய். அதற்குக் காரணம் ராவணனல்லவா? ராவணன் இந்த மலையை இவ்விதம் அசைக்காதபோனால் நீ இவ்விதம் செய்வாயா? ஆகையால் இந்த ஸந்தர்ப்பத்தில் ராவணனுக்கு ஸன்மானம்தான் அளிக்கவேண்டும்'' என்றார். உடன் பார்வதியும், “நானாக ஆலிங்கனம் செய்துகொண்டதில் என்ன அவ்வளவு ஸுகத்தை அடைந்தீர்கள்?'' என்று கேட்டாள். பரமேச்வரனும் “ஸ்த்ரீ புமான்களுடைய ஸம்பந்தத்தால் ஏற்படும் ஸுகத்தை வாயால் சொல்ல முடியாது. அவரவர்களுக்கு அனுபவத்தில்தான் அது புலப்படும். நீ புருஷனாக இருந்து, நானும் ஸ்த்ரீயாக ஆகி உன்னை நானாக வந்து ஆலிங்கனம் செய்துகொள்ளும் காலத்தில் அந்த ஸுகம் அப்பொழுதுதான் உனக்கு ஏற்படும்'' என்று சொல்லிவிட்டு, ராவணனுடைய துஷ்டத்தனத்தையும் அடக்க தன்னுடைய கால் விரலால் கைலாஸத்தையும் அமுக்கினார். ராவணனுடைய கைகளும் மலையினடியில் அகப்பட்டுக்கொண்டன. உடன் ஸாமகானத்தால் பரமேச்வரனைத் திருப்தி செய்துவைத்து ரொம்பவும் ச்ரமத்தால் கையை உருவிக்கொண்டு லங்கா நகரம் சென்றான். பிறகு ராவணனுடைய தௌஷ்ட்யத்தை ஸஹிக்க முடியாமல் தேவர்கள், ராவணனுக்கு உபாஸ்யமான தேவதையாக பரமேச்வரன் ஆகிறபடியால், பரமேச்வரனிடம் போய், ராவணனுடைய அக்ரமத்தைச் சொல்வோம் என்று நினைத்து பார்வதி பரமேச்வரான் இருவர்களும் ஏகாஸனத்தில் அமர்ந்திருக்கும் காலத்தில் விஷயத்தைச் சொன்னார்கள். பரமேச்வரனும் மந்தஹாஸத்துடன் பார்வதியைப் பார்த்து, “ஹே ப்ரியே! சற்று நேரம் முன்பு நாம் பேசிக்கொண்ட விஷயங்களை அனுபவிக்கக்கூடிய காலம் வந்துவிட்டது. ராவணவதத்திற்காக தேவர்கள் வந்து ப்ரார்த்திக்கிறார்கள். ஆகையால் பூலோகத்தில் மனுஷ்ய ரூபமாக அவதரித்தாகவேண்டும். அந்த அவதாரத்தில் நாமிருவர்களும் ஸ்த்ரீ பாவம், புருஷ பாவத்தை மாற்றிக்கொள்வோம், நீ புருஷனாக அவதா

ரம் செய்; நான் ஸ்த்ரீயாக அவதாரம் செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு, தேவர்களுடைய ப்ரார்த்தனைக் கிணங்கி, அவ்விதமே ஸங்கல்பித்த ப்ரகாரம் பார்வதீ ராமனுகவும், பரமேச்வரன் ஸீதையாகவும் அவதாரம் செய்ததாக சில புராணங்களில் ப்ரஸித்தமாகத் தெரிகிறது. வால்மீகி மஹர்ஷியும், இந்த வ்ருத்தாந்தத்தை அயோத்தியா காண்டத்தில் அரண்யம் போகும் விஷயமாக ஸீதையும் ராமனும் ஸம்வாதம் செய்யும் ஸமயத்தில், किंत्वामन्यत वैदेहः (கிம்த்வாமந்யத வைதேஹ:) (கிந்த்வாமந்யத வைதேஹ:) என்ற ச்லோகத்தால், ஸூசிப்பித்து இருக்கிறுர்.

அந்த ச்லோகத்திற்கு வ்யாக்யானம் செய்யும் அவஸரத்தில், விஸ்தாரமாக எழுதப்படும். சிவனும் சக்தியும் ஒன்றே என்று பரமாசார்யாள் त्वयाहृत्वा वामं (த்வயாஹ்ருத்வா வாமம்), (த்வயாஹ்ருத்வா வாமம்) என்ற ஸௌந்தர்ய லஹரீ ச்லோகத்தில் வெளிப்படுத்தி யிருக்கிறுர்கள். அதனுல் பார்வதீ என்ற பராசக்தியும் சிவனும் ஒரே ஸ்வரூபமானதால் ராமனுக பார்வதி அவதாரம் செய்திருக்கும்பொழுது சிவாவதாரம் என்று எப்படிச் சொல்லமுடியும் என்று கேட்க ந்யாயமில்லை. தேவர்கள் இவ்விதம் பார்வதியும் பரமேச்வரனும் பூமண்டலத்தில் அவதாரம் செய்து ராவணனைக் கொல்கிறேன் என்று பரதிக்ஞை செய்ததைக் கேட்டு, பரம ஸந்தோஷத்துடன் கைலாஸத்திலிருந்து ஸ்வர்கலோகம் சென்ருர்கள். நடுவழியில் நாரதர் ஸந்தித்து, "தேவர்களே பார்வதீ பரமேச்வராளுடைய வாக்கை நம்பி ஸந்தோஷமாக போகிறீர்களே. பரமேச்வரன் ராவணனைக் கொன்றுவிடுவாரா? அவருக்கு சக்தியுண்டோ இல்லையோ என்பதைப்பற்றி நான் இப்பொழுது சொல்லவரவில்லை. ஆகிலும் அந்த ராவணனே சிவ பக்த அக்ரேஸனன். தன் பக்தனை அவரே கொல்வாரா? ஆகையால் பரமசிவன் சொன்னதை நம்பாதீர்கள்" என்று தேவர்கள் புத்தியை நாரதர், கலைத்தார்.

தேவர்களும் உடனே பரமேச்வரனை நம்புவதில் ப்ரயோஜனம் இல்லை என்று நினைத்து வைகுண்டம் சென்று விஷ்ணுவினிடம், ராவணனுடைய அக்ரமத்தைச் சொல்லி முறையிட்டுக் கதறினார்கள். மஹா விஷ்ணுவும் தேவர்களுடைய ப்ரார்த்தனைக் கிணங்கி, "நான் பூலோகத்தில் ஸூர்யவம்சத்தில் மனுஷ்யனாக அவதாரம் செய்து, ராவணனை வதம் செய்து உங்களுக்கு நன்மையைச் செய்கிறேன்" என்று ப்ரதிக்ஞை செய்தார். அந்த விஷ்ணுவினுடைய வார்த்தையை நம்பி தேவர்கள் திரும்பிவிட்டார்கள். அங்கும் நாரதர் தேவர்களை ஸந்தித்து "தேவர்களே உங்களுடைய புத்திக்கு வ்யவஸ்தையேயில்லையே. ராவண வதத்திற்குப் பரமேச்வரனைத்தான் ப்ரார்த்தித்தாகிவிட்டதே. மறுபடியும் விஷ்ணுவினிடம் என்ன? பரமேச்வரனுடைய கார்யம் என்று நினைத்து விஷ்ணு பேசாமல் இருந்துவிட்டாலும், விஷ்ணுவின் கார்யம் என்று நினைத்து பரமசிவன் பேசாமல் இருந்துவிட்டாலும் நீங்களல்லவா கஷ்டப்பட நேரிடும்! இனி போய் ஓரிடத்திலும் வேண்டாம் என்று சொல்வதும் தப்பாகிவிடுமே" என்று சொல்லிவிட்டு நாரதர் மறைந்துவிட்டார்.

தேவர்கள், பரமசிவன், மஹாவிஷ்ணு இவர்கள் அபசாரம் வராமலிருக்க வேண்டுமென்று உத்தேசித்து, பூலோகத்திற்கு வந்து பரிசுத்தமான அரண்யத்தில் ஹரிஹர ஸ்தோத்ரம் என்ற மார்க்கத்தை அவலம்பித்து தபஸ்ஸை செய்தார்கள். பரமேச்வரன், மஹாவிஷ்ணு இருவர்களும், சங்கர நாராயணன் என்ற பெயருடன் ஒரே ரூபத்துடன் அவர்களுக்கு தர்சனம் கொடுத்து, நாங்களிருவர்களும் சேர்ந்து ராமாவதாரம் செய்து ராவணனைக் கொன்று, உங்களுக்கு க்ஷேமத்தைச் செய்கிறோம் என்று ப்ரதிக்ஞை செய்தார்கள். தேவர்களும் பரம ஸந்தோஷத்தை யடைந்து இவ்விதம் நாங்கள் தபஸ் செய்து, ஹரிஹரமூர்த்தியாகிய தாங்களிருவர்களும் சேர்ந்து ஒரு தத்வமாகத் தாங்கள் தர்சனம் கொடுத்த இந்த

க்ஷேத்ரத்தில் இந்த ரூபமாகவே எப்பொழுதும் ஸாந்நித்யத்தை அடையவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இந்த க்ஷேத்ரம் இப்பவும், மேற்கு திசையில் கோகர்ண க்ஷேத்ரத்திற்கு ஸமீபத்தில் மூகாம்பிகையினுடைய அருகில் சங்கர நாராயண க்ஷேத்ரம் என்று ப்ரஸித்திபெற்றிருக்கிறது. தீர்த்தாடனம் செய்துவருகிறவர்கள் இந்த க்ஷேத்திரத்திற்குச் சென்று தர்சனம் செய்யாமலிருப்பதில்லை. ஆதிசங்கர பகவத்பாதாளும் அந்த க்ஷேத்ரம் சென்று ஆச்சர்யப்பட்டு ஹரிஹரமூர்த்தியை ஸ்துதித்திருக்கிறார்கள். சில இதிஹாஸப்படி, இந்த க்ஷேத்ரம் திருநெல்வேலி ஜில்லாவில் சங்கரன் கோவில் என்று வழங்கிவரும் க்ஷேத்ரமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த க்ஷேத்ர பகவானுக்கும் சங்கர நாராயணன் என்ற பெயரும் ஏற்பட்டிருக்கிறது. வஸிஷ்ட பகவானே யுகாந்தரத்திலுள்ள இதை அறிய சக்தியுள்ள ஸர்வக்ஞன். முன்பு அஷ்டாக்ஷர மந்த்ரத்தையும், பஞ்சாக்ஷர மந்த்ரத்தையும் குறிப்பிட்டோம். அஷ்டாக்ஷரியில் ரா என்ற எழுத்தும் பஞ்சாக்ஷரத்தில் ம என்ற எழுத்தும் முக்யமானது. அஷ்டாக்ஷரியில் ரா என்ற எழுத்தை எடுத்துவிட்டால் சோபையே போய்விடும்; ஓம் நமோ நாயணாய என்று ஆகிவிடும். அப்படியே பஞ்சாக்ஷரியில் ம என்ற எழுத்தை எடுத்துவிட்டால் ஓம் ந சிவாய என்று ஆகிவிடும். ஆகையால் விஷ்ணு மதத்தில் "ரா" வும் சிவமதத்தில் "ம" வும் உயிர்க்கலையான தால் இந்த ராமாவதாரம் மேல்சொன்ன கதையை அநுஸரித்து ஹரிஹர ஸ்வரூபமானதால் அதையறிந்த வஸிஷ்ட பகவானும், இந்த தத்வத்தை வெளியில் ப்ரகாசப்படுத்த அஷ்டாக்ஷரி மஹாமந்த்ரத்திலுள்ள रा (ரா) என்ற எழுத்தையும், பஞ்சாக்ஷரி மஹாமந்த்ரத்திலுள்ள म (ம) என்ற எழுத்தையும், எடுத்துச் சேர்த்து "ராம" என்ற பெயரை, தசரத சக்ரவர்த்திக்கு கௌஸல்யா தேவியினிடம் பிறந்த புதல்வனுக்கு நாமகரணம் செய்தார். அத்துடன்,

आद्यो रा तत्पदार्थस्यात् मकारः त्वं पदार्थवान्
तयोः संयोजनमसीत्यर्थे राम इति पदमाहुः

𑌆𑌦𑍍𑌯𑍋 𑌰𑌾 𑌤𑌤𑍍𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌮𑌕𑌾𑌰𑌃 𑌤𑍍𑌵𑌂 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌵𑌾𑌨𑍍
𑌤𑌯𑍋𑌃 𑌸𑌂𑌯𑍋𑌜𑌨𑌮𑌸𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑍇 𑌰𑌾𑌮 𑌇𑌤𑌿 𑌪𑌦𑌮𑌾𑌹𑍁𑌃

ஆத்யோ ரா தத்பதார்த்தஸ்யாத் மகார: த்வம் பதார்த்தவாந்
தயோ: ஸம்யோஜநமஸீத்யர்தே ராம இதி பதமாஹு:

என்ற ராமரஹஸ்யோபநிஷத்திலுள்ள வாக்யப்படி **தத்வமஸி** என்ற மஹாவாக்யத்திலடங்கிய **தத்** என்ற பதத்தின் லக்ஷ்யார்த்தமான சைதன்யத்தையும், **த்வம்** என்ற பதத்தின் லக்ஷ்யார்த்தமான சைதன்யத்தையும், இரண்டையும் ஒன்ருகச் சேர்த்து, 'அகண்ட சைதன்யமான பரப்ரஹ்மமே இந்த ராமன்' என்பதைப் ப்ரகாசப்படுத்த **ராமன்** என்ற தாரகநாமத்தை, இந்த ராமனுக்கு மஹாவித்வானுன வஸிஷ்ட பகவான் நாமகரணம் செய்தார் என்றும் தெரிகிறது.

அவ்விதமே கைகேயியினிடத்தில் பிறந்த புத்ரனுக்கு பரதன் என்ற பெயரை நாமகரணம் செய்தார். **राज्यस्य भरणात् भरतः** (𑌰𑌾𑌜𑍍𑌯𑌸𑍍𑌯 𑌭𑌰𑌣𑌾𑌤𑍍 𑌭𑌰𑌤𑌃) (ராஜ்யஸ்ய பரணுத் பரத:) என்ற ரீதியை அனுஸரித்து வஸிஷ்ட மஹர்ஷியானவர் ஸர்வக்ஞனதால், 'ராமன் ராஜ்யபாரத்தை வஹிக்கப் போவதில்லை; ராஜ்யபாரத்திற்காக வைகுண்டத்திலிருந்து பூலோகம் வந்தவருமில்லை;

नाहं अर्थपरो देवि लोकं आवस्तुं उत्सहे ।
विद्धि मां ऋषिभिः तुल्यं केवलं धर्ममाश्रितम् ॥

𑌨𑌾𑌹𑌂 𑌅𑌰𑍍𑌥𑌪𑌰𑍋 𑌦𑍇𑌵𑌿 𑌲𑍋𑌕𑌂 𑌆𑌵𑌸𑍍𑌤𑍁𑌂 𑌉𑌤𑍍𑌸𑌹𑍇 ।
𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑌾𑌂 𑌋𑌷𑌿𑌭𑌿𑌃 𑌤𑍁𑌲𑍍𑌯𑌂 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌧𑌰𑍍𑌮𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 ॥

நாஹம் அர்த்தபரோ தேவி லோகம் ஆவஸ்தும் உத்ஸஹே ।
வித்தி மாம் ரிஷிபி: துல்யம் கேவலம் தர்மமாச்ரிதம் ॥

என்று ராமனே கைகேயி தேவியினிடம் சொல்லியபடி 'ராமனவர், ஆர்ஷமான தர்மத்தையே பரிபாலனம் செய்ய கங்க

ணம் கட்டிக்கொள்ளப்போகிறார்' என்பதை யறிந்து, பரத னிடத்தில்தான் ராஜ்யபாரத்தை வஹிக்கும்படியான நிலைமை வரப்போகிறதென்ற எண்ணத்துடன், அதை ஸூசிப்பிக்க பரதன் என்ற பெயரையே கைகேயியின் புத்ர னுக்கு வைத்தார்.

ஸுமித்ரையினுடைய பிள்ளைகளில், முதல்வனுக்கு லக்ஷ் மணன் என்ற பெயரை வைத்தார். लक्ष्मण: (லக்ஷ்மண:) (லக்ஷ்மண:) என்றால் லக்ஷ்மீஸம்பந்தன் என்ற அர்த்தத்தை அறிய வும். லக்ஷ்மீ என்ற ई (இ) கார ஸ்தானத்தில், आ (ஆ) காரம் ஏற்பட்டது. मत् (மத்) (மத்) ப்ரத்யயத்தின் அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியதாக ஏற்பட்டதிலிருந்து, लक्ष्म्यासंपन्न: (லக்ஷ்ம்யா ஸம்பந்ந:) (லக்ஷ்ம்யா ஸம்பந்ந:) என்ற பொருளை போதிக்கும் விஷயத்தில் लक्ष्मण: (லக்ஷ்மண:) (லக்ஷ்மண:) என்று ஏற்பட் டது. அந்த லக்ஷ்மியோ ஸ்ரீராமனுடைய பாதஸேவை என்ற கைங்கர்ய ஸாம்ராஜ்ய ராஜ்யஸ்ரீயாகவே ஆகும். அந்த ஸம்பத்தோடு இவர் கூடினவராக ஆகப்போகிறார் என்பதையும் அறிந்து, அதாவது ராமன் அரண்யம் செல் லும்பொழுது இவரும், ராமனுடைய கைங்கர்யத்தில் ஈடு பட்டு ராமனுடன் அரண்யம் போகப்போகிறார் என்ற அர்த் தத்தை வெளிப்படுத்த லக்ஷ்மணன் என்ற பெயரை வைத் தார்.

அவ்விதமே ஸுமித்ரையினிடம் பிறந்த இரண்டா வது பிள்ளைக்கு, உத்தரகாண்ட கதையை அனுஸரித்து ராவ ணனைக் காட்டிலும் ப்ரபலனான லவணாஸுரன் முதலான சத்ருக்களை இவர் கொல்லப்போகிறார் என்பதையும் அறிந்து சத்ருக்னன் என்ற பெயரைச் சூட்டினார். இவ்விதம் தசரத ருடைய நான்கு பிள்ளைகளுக்கும் ராமன், பரதன், லக்ஷ் மணன் சத்ருக்னன் என்று க்ரமமாக, வஸிஷ்டமஹர்ஷி மூல மாக, தசரத சக்ரவர்த்தி நாமகரணம் செய்தார்.

श्रियः कमलवासिन्या रमणोऽयं यतो हरिः।
तस्माच्छ्रीराम इत्यस्य नामसिद्धं पुरातनं ।
सहस्रनामसदृशं स्मरणान्मुक्तिदं नृणां॥

𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 𑌕𑌮𑌲𑌵𑌾𑌸𑌿𑌨𑍍𑌯𑌾 𑌰𑌮𑌣𑍋𑌽𑌯𑌂 𑌯𑌤𑍋 𑌹𑌰𑌿𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍀𑌰𑌾𑌮 𑌇𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌮𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑌂 ।
𑌸𑌹𑌸𑍍𑌰𑌨𑌾𑌮𑌸𑌦𑍃𑌶𑌂 𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌦𑌂 𑌨𑍃𑌣𑌾𑌂 ॥

ஸ்ரீய: கமலவாஸிந்யா ரமணோயம் யதோ ஹரி: ।
தஸ்மாத் ஸ்ரீராம இத்யஸ்ய நாமஸித்தம் புராதநம் ।
ஸஹஸ்ர நாம ஸத்ருசம் ஸமரணான்முக்திதம் ந்ருணாம் ॥

என்ற பாத்மபுராண வசனத்தை அனுஸரித்து ராமனுக்கு ராமன் என்ற கேவல நாமா மாத்ரம் இல்லாமல், ஸ்ரீராமன் என்று நாமகரணம் செய்ததாகவும் தெரிகிறது. 'தாமரை புஷ்பத்தில் எப்பொழுதும் வஸித்துவரும் மஹாலக்ஷ்மிக்கு ரமிக்கும் ஸ்தானமானதால் மஹாவிஷ்ணுவே இந்த ப்ரபு', என்பதை விளக்க ஸ்ரீராமன் என்று ராமனுக்கு திருநாமம் ஏற்பட்டது. விஷ்ணுஸஹஸ்ரநாமத்திலுள்ள ஆயிரம் நாமாக்களை ஜபிப்பதும், ஸ்ரீராமன் என்று ஒரு தடவை சொல்வதும் ஸமானமானதாகும். இந்த ஸ்ரீராமா என்ற திருநாமாவோ ஸ்மரித்த மாத்ரத்திலேயே ப்ராணிகளுக்கு மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியது. ஆகையால் இந்த நாமா வானது உயர்ந்த தாத்பர்யத்தை விளக்குகிறபடியால் ஸ்ரீராமன் என்றுதான் ராமருக்குத் திருநாமம் ஏற்பட்டது என்பதை விவேகிகள் அறியவேண்டும்.

இந்த பகவான் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவாக ஆகுவார். பரதாழ்வார் பாஞ்சஜன்யம் என்ற சங்கத்தின் ஸ்வரூபமாகுவார். லக்ஷ்மண ஸ்வாமியானவர் அநந்தம் என்று சொல்லப்படும் ஆதிசேஷ பகவானாகுவார். ஸுதர்சனன் என்று சொல்லப்படும் சக்ரமாகவே சத்ருக்ன ஸ்வாமியாகுவார். இவ்விதம் சங்கம், சக்ரம், அனந்தம் முதலிய உபகரணங்

களோடு கூடின மஹாபுருஷனையே மஹாவிஷ்ணு என்று சொல்லவேண்டியதால், பரிபூர்ணமான மஹாவிஷ்ணுவே ஸ்ரீராமனாக அவதரித்தார் என்ற ஸித்தாந்தமும், வஸிஷ்ட பகவான் செய்த நாமகரணத்தால் வெளியாகிறது. விஷ்ணுவினுடைய உபகரணங்களாகிய சங்கம், சக்ரம், அநந்தம் முதலான பதார்த்தங்களிலும் ஒன்றொன்றிலும் ஸாக்ஷாத் விஷ்ணுத்வபாவனையையே செய்து பூஜிக்க வேண்டும். ஸாக்ஷாத் மஹாவிஷ்ணு எவ்விதமோ அதே ரீதியாகத்தான் சங்க சக்ராதிகளையும் பாவித்து ஆராதிக்க வேண்டுமென்பது ஸித்தம்.

இவ்விதம் நாமகரண முஹூர்த்தம் நடந்ததினங்களில் ப்ராஹ்மண போஜனங்களும், கோ, பூ, ஹிரண்யதானங்களும் ரொம்பவும் விசேஷமாக நடைபெற்றது. க்ரமமாக, நாலு குமாரர்களுக்கு உபநயனகாலம் ஸமீபிக்கவும், உபநயனம் என்ற ஸம்ஸ்காரமும் விதிவத்தாக, ரொம்பவும் விமர்சையாய் நடைபெற்றது. ராமனுடைய உபநயனத்தை ராமாயணத்தில் சொல்லவில்லை என்று நினைக்கக்கூடாது.

तेषां जन्म क्रियादीनि सर्वकर्माणि अकारयत् ॥

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌜𑌨𑍍𑌮𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑍀𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌅𑌕𑌾𑌰𑌯𑌤𑍍 ॥

தேஷாம் ஜந்மக்ரியாதீநி ஸர்வகர்மாணி அகாரயத் ॥

என்ற ச்லோகத்தால் ஜாதகர்மா முதல் உபநயனம் முடிய சுபகர்மாக்களை வஸிஷ்டமுகமாக தசரத ராஜன் ரொம்பவும் அழகாக நடத்தினார் என்று ஸ்பஷ்டமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. நாலு குமாரர்களும் உபநயனம் ஆனவுடன் குலகுருவான வஸிஷ்டருடைய புத்ரன் ஸுயக்ஞ மஹர்ஷியினிடம் சிக்ஷா, கல்பம், வ்யாகரணம், நிருக்தம், சந்தஸ், ஜ்யோதிஷம் என்ற ஆறு அங்கங்களோடு வேதாத்யயனம் ஸம்பூர்ணமாகச் செய்து வேதார்த்தத்தையும் விசாரித்து, மஹாவித்வான்களாக ஆனார்கள். நாலுகுமாரர்களுக்குள் ராமனே ஸகல ப்ராணிகளுக்கும் ப்ரியதமனாக

விளங்கிவருவதோடுங்கூட தனது பிதாவான தசரத சக்ரவர்த்திக்கு நிமிஷத்திற்கு நிமிஷம் ஆனந்தத்தை வ்ருத்தி செய்துகொண்டு விளங்கிவந்தார். நாலு குமாரர்களும் க்ஷத்ரியர்களுக்கு உசிதமான தனுர்வேதங்களிலும், அஸ்த்ர சஸ்த்ரவித்யைகளிலும் மஹா நிபுணர்களாக ஆனார்கள். யானையின்பேரில் ஏறி யுத்தம் செய்வதிலோ, குதிரைமேல் யேறி யுத்தம் செய்வதிலோ, ரதத்திலிருந்துகொண்டே யுத்தம் செய்வதிலோ மஹா ஸமர்த்தர்களாக விளங்கி வந்தார்கள். ஒவ்வொரு தினத்திலும் ஸ்ரீராமமூர்த்தியோ பித்ரு சிச்ரூஷையில் ரொம்பவும் ச்ரத்தா பக்தியுடன் ஈடுபட்டு தனது பிதாவுக்கும் மாதாவிற்கும் பரமஸந்தோஷத்தைக் கொடுத்துவந்தார். லக்ஷ்மண ஸ்வாமிக்கு ராமனிடம் வெகு ப்ரீதியும், ராமனை விட்டுப்பிரிய மனமில்லாமலும், ராமனுடைய ப்ராணனுக்கு ஸமானமாயும் ராமனை அண்டியிருக்க பாக்ய விசேஷம் நாளுக்கு நாள் வ்ருத்தியாகிக்கொண்டு வந்தது. போஜனம் செய்வதிலும், தூங்கும்போதும், வேட்டையாடுவதிலும், மற்ற எவ்விதமான க்ரீடையிலும் லக்ஷ்மணஸ்வாமியை விட்டு ராமன் பிரிந்திருக்க மனமுள்ளவராக ஆகமாட்டார். ப்ராதாவினிடம் எவ்விதமாக இருந்துகொள்ளவேண்டும் என்ற பெருமையையும், ப்ராத்ரு ஸௌஹ்ருதத்தையும் ரொம்பவும் மேன்மையாக லக்ஷ்மண ஸ்வாமி ரக்ஷித்து வந்தார்.

ஸ்ரீராமனானவர் ஏதாவது ஒரு ஸமயத்தில் குதிரையின்மீது ஏறிக்கொண்டு வேட்டையாடச் சென்றால், அப்பொழுது லக்ஷ்மண ஸ்வாமியானவர் ராமனைப் பின்துடர்ந்து தனது கையிலிருக்கும் வில்லை நாணேற்றி ஸஜ்ஜமாக வைத்துக்கொண்டு ராமருடைய சரீரத்தில் ஒருவிதமான குறையும் ஏற்படக்கூடாது என்று பரம பக்தியுடன் பின்துடர்ந்து ரக்ஷித்து வருவார். இவ்விதமே பரதாழ்வாரிடம் சத்ருக்ன ஸ்வாமிக்கும் பரம பக்தி இருந்துவந்தது. இவ்விதம் மஹா பாக்யவான்களான நாலு குமாரர்களால் சூழப்பட்ட தசரத சக்ரவர்த்தி தேவர்களால் சூழப்பட்ட ப்ரஹ்மாவைப்

போல் பரமானந்த ஸாகரத்தில் முழுகி வந்தார். நாலு குமாரர்களும் அபூர்வமான ஞான ஸம்பத்தியுடன் கூடினவர்களாகி, ஏதாவது தாங்கள் பாலர்கள் என்ற பர்வத்தில் தெரியாமையால் ஸம்பவித்த சாஸ்த்ர விருத்தமான கார்யங்களிலும் பரம லஜ்ஜையுள்ளவர்களாயும் தங்களுடைய ஞானத்தால் லோகங்களில் பரவின கீர்த்தியுடன் கூடினவர்களாயும் எந்த கார்யத்தையும் தீர்க்கமாக ஆலோசித்து செய்கிறவர்களாயும், விளங்கிவந்தார்கள். ராஜனுடைய ஸந்தோஷத்தையோ அளவிட முடியவில்லை. பூலோகத்தில் அடையவேண்டிய ஆனந்தம் இதற்குமேல் ஒன்றுமில்லை யென்றே ராஜன் தீர்மானித்தார். இவ்வித மிருந்துவரும்பொழுது வேதவேதாந்த வித்யைகள் ஸம்பூர்ணமாக முடிந்துவிட்டதானதால் ஸமாவர்த்தன காலம் (தாரபரிக்ரஹகாலம்) ஆரம்பித்துவிட்டது. அது விஷயத்திலும் ராஜனுக்கு பெரிய கவலை. "குலத்திலும், சீலத்திலும், வயதிலும், ஸதாசாரத்திலும், நமது குலத்திற்குத் தகுந்தபடி சாஸ்த்ர ஸம்மதமான ராஜ குலம் எங்கு இருக்கிறதோ தெரியவில்லை. எந்த ராஜ குலத்திலிருந்து நமது ராமனுக்கு கன்னிகையை க்ரஹித்து விவாஹ மங்களத்தைச் செய்துவைத்து அக்னிஹோத்ர சாலையுடன் ஆஹிதாக்னியாக ராமன் விளங்கி வருவதை நான் என்று பார்த்து ஆனந்திக்கப்போகிறேன். முன்பு பிள்ளையில்லை என்று கஷ்டப்பட்டேன். பகவானுடைய அனுக்ரஹத்தாலும், வஸிஷ்ட மஹர்ஷி, ரிச்யச்ருங்க மஹர்ஷி முதலான மஹான்களுடைய அனுக்ரஹத்தாலும் புத்ரலாபம் ஏற்பட்டது. அதனால் நாம் பரம ஸந்தோஷத்தைத்தான் அடைகிறோம். ஆகிலும் ஸரியான கன்னிகை கிடைத்து ராமனுக்கு விவாஹ தர்மத்தையும் நடத்திவைத்து குல தர்மத்தை ராமன் வசம் ஒப்படைத்துவிட்டு, நான் என்று விச்ராந்தியை அடையப்போகிறேன்" என்று ரொம்பவும் ராஜன் கவலையை அடைந்தார். வஸிஷ்டர் முதலான ப்ரஹ்ம ரிஷிகளையும் ஸுமந்த்ரர் முதலான மந்த்ரிகளையும், நெருங்கின பந்துக்களையும் வைத்துக்கொண்டு தனது குமா

ர்களுடைய விவாஹ மங்கள விஷயமாக தான் ஆலோசித்துக்கொண்டிருப்பதை ப்ரகாசப்படுத்தி கவலையை அடைந்தார். இவ்விதமான ஸந்தர்ப்பத்தில், ஸித்தாச்ரமத்திலிருந்து விச்வாமித்ர மஹர்ஷியானவர் அகஸ்மாத்தாக (எதிர்பாராமல்) தசரத சக்ரவர்த்தியினிடம் வந்துசேர்ந்தார்.

अथ राजा दशरथः तेषां दारक्रियांप्रति ।
चिन्तयामास धर्मात्मा सोपाध्यायस्सबान्धवः ॥
तस्य चिन्तयमानस्य मन्त्रिमध्ये महात्मनः ।
अभ्यागच्छन्महातेजा विश्वामित्रो महामुनिः ॥

𑌅𑌥 𑌰𑌾𑌜𑌾 𑌦𑌶𑌰𑌥𑌃 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌦𑌾𑌰𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 ।
𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌮𑌾𑌸 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑍋𑌪𑌾𑌧𑍍𑌯𑌾𑌯 𑌸𑍍𑌸𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌃 ॥
𑌤𑌸𑍍𑌯 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌮𑌧𑍍𑌯𑍇 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌅𑌭𑍍𑌯𑌾𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑍋 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌿𑌃 ॥

அத ராஜாதசரத : தேஷாம் தாரக்ரியாம் ப்ரதி ।
சிந்தயாமாஸ தர்மாத்மா ஸோபாத்யாய ஸ்ஸபாந்தவ : ॥
தஸ்ய சிந்தயமாநஸ்ய மந்த்ரிமத்யே மஹாத்மந : ।
அப்யாகச்சந் மஹாதேஜா விச்வாமித்ரோ மஹிமுநி : ॥

என்ற ச்லோகத்தில் சொல்லியபடி தசரத சக்ரவர்த்தியானவர் மந்த்ரிகளுடைய ஸபையில், தனது புத்ரர்களுடைய விவாஹ மங்களத்தைக் குறித்து ஆலோசித்துக்கொண்டிருக்கும்பொழுது, மஹா தேஜஸ்வியான விச்வாமித்ர மஹர்ஷியானவர் தசரத ராஜனைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையுடன் வந்துசேர்ந்தார். விச்வாமித்ர மஹர்ஷியினுடைய ஆகமனம் வரையிலும் சென்ற கதைகள் பகவானுடைய அவதாரத்திற்கு உபயுக்தமானவைகள். ஆகமனத்திற்கு பிறகு உள்ள கதைகள் அவதாரத்தின் ப்ரயோஜனமாகிய ஸாது பரித்ராணம், துஷ்க்ருதிவிநாசனம், தர்ம ஸ்தாபனம் இவைகளை ப்ரகாசப்படுத்துகின்றன. அவைகளுக்குள் ஸாது பரித்ராணம் முக்யமானது. ஒரு கர்ஷகன் சாகுபடி செய்தால்

எப்படி ஸஸ்ய வ்ருத்திதான் அவனுக்கு முக்யமோ, அந்த வயலின் நடுவில் பயிர்களுடைய வ்ருத்தியைத் தடுக்கும் முள் மயமான கோரைகள் ஏதாவது முளைத்திருந்தால் அதைப் பிடுங்கி எறிவதற்கும் பயிர்களுடைய வ்ருத்திதான் எப்படி உத்தேச்யமோ, அதுபோல் வைகுண்டத்திலிருந்து அவதரித்த பகவானை பூலோகமாகிய வயலில் ஸஜ்ஜனங்களாகிய பயிரை வ்ருத்தி செய்வதற்காக சாகுபடி செய்கிற கர்ஷகருடைய ஸ்தானத்தில் வைத்துப் பார்த்தால் அவதாரத்திற்கு முக்யமான ப்ரயோஜனம் ஸாது பரித்ராணம் தான். ஸாதுக்களுடைய அபிவ்ருத்திகளைக் கெடுக்கும் கோரைகளுடைய நிக்ரஹமும், ஸாதுபரித்ராணத்தைத்தான் உத்தேச்யமாகக் காட்டும். பகவானுடைய அவதாரத்திற்கு ஸாது பரித்ராணம் மஹா பலம்; துஷ்ட நிக்ரஹம் அவாந்தர பலம் என்பதை அறியவும். மஹாபலமான ஸாது பரித்ராணத்தை ப்ரகாசப்படுத்த விச்வாமித்ரருடைய ஆகமனம் மூலகாரணமாக ஆகும். அத்துடன் குடும்பிகள் தனது க்ரஹத்தில் ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றி கவலையுள்ளவர்களாக இருந்துவரும் காலத்தில் தான் எதிர்பார்க்காமல் ஒரு மஹானுபாவன், வித்வத் ச்ரேஷ்டன், ஒரு அதிதி, தன் க்ரஹத்திற்கு வந்தால் நாம் ஆலோசித்த கார்யம் ஸபலமாகும் என்பதை நம்பவேண்டும் என்று,

गृहचिन्तायां महापुरुषस्यागमनम् फलप्रदानेन चिन्ता निवर्तकं

𑌗𑍃𑌹𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌯𑌾𑌂 𑌮𑌹𑌾𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯𑌾𑌗𑌮𑌨𑌂 𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍇𑌨
𑌚𑌿𑌨𑍍𑌤𑌾 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌂

க்ருஹசிந்தாயாம் மஹாபுருஷஸ்யாகமநம் பலப்ரதாநேந சிந்தா நிவர்த்தகம்

என்ற சாஸ்த்ரப்படி 'விச்வாமித்ர மஹர்ஷியினுடைய ஆகமனம்' தசரத சக்ரவர்த்தி தன் புத்ரர்கள் விஷயமாக ஆலோசித்துக்கொண்டிருக்கும் விவாஹ மங்களத்தை ஸபலமாகச் செய்துவைப்பதற்காகவே என்று ஏற்படுகிறதே தவிர, தன் கார்யம் அவருக்குப் பெரிதாக நினைத்து விச்வாமித்ரர்

வரவில்லை. விச்வாமித்ரருடைய ஆகமனத்திற்கு "ராமனுக்கு ஸீதையை பரிணயம் செய்துவைப்பதே" முக்ய பலமாகும். அதன் நடுவில் தன்னுடைய யக்ஞ ஸம்ரக்ஷணமும் நடந்தது என்பது அவாந்தர பலமாகும் என்பதையும் அறியவும். மஹர்ஷி வெகு வேகமாக அரண்மனையின் ஆஜார வாசலில் வந்து நின்றுகொண்டு த்வாரபாலகர்களிடம், ராஜனிடம் தன்னுடைய ஆகமனத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று சொன்னார். சீக்ரமாய்த் தெரிவிக்கவேண்டும் என்றும் வற்புறுத்தினார். த்வாரபாலகர்களோ ரொம்பவும் பயத்துடன் என்ன இந்த மஹர்ஷி சீக்ரம், சீக்ரம் என்று சொல்கிறாரே என்று நடுங்கிக்கொண்டு ராஜ ஸபை சென்று ராஜனுக்கு நமஸ்கார வசனங்களைச் சொல்லிவிட்டு, "ராஜனே! விச்வாமித்ர மஹர்ஷி, ஸித்தாச்ரமத்திலிருந்து வெகு வேகத்துடன் வந்து தங்களைப் பார்க்க ஆவலுள்ளவராக அரண்மனையின் வாசலில் நிற்கிறார். சீக்ரமாகத் தெரிவிக்கவேண்டுமென்று எங்களுக்குக் கட்டளையிட்டதிலிருந்தும் மஹர்ஷியினுடைய சாபத்திற்குப் பயந்து, மஹாராஜாவின் ஸமயம் எப்படியோ என்பதையும் கவனிக்காமல் வந்து விஷயத்தைத் தெரிவித்தோம். பிறகு செய்ய வேண்டியதில் தாங்களே ப்ரமாணம்" என்றார்கள். இதைக்கேட்ட தசரத சக்ரவர்த்திக்குத் திடீரென்று பயம் ஏற்பட்டு, இந்த்ரன், ப்ரஹ்மாவானவர் தன் ஸபைக்கு வந்தால் எவ்விதம் பயந்து எழுந்திருப்பானோ, அதுபோல் வஸிஷ்டர் முதலான புரோஹிதர்களுடனும், ஸுமந்த்ரர் முதலான மந்த்ரிகளோடும், பரபரப்புடன் ஸிம்ஹாஸனத்தை விட்டெழுந்து, ஸுவர்ணமயமான அர்க்ய பாத்ரங்களையும் பாதப்ரக்ஷாளனம் செய்துவைக்க கடத்தில் தீர்த்தத்தையும் எடுத்துக்கொண்டு விச்வாமித்ர மஹர்ஷிக்கு அபிமுகமாக ஆஜாரவாசலில் வந்து சேர்ந்தார். விச்வாமித்ர மஹர்ஷியினுடைய தபோமஹிமையோ ஜ்வலித்தது. அத்யுக்ரமான தபஸ்ஸை அனுஷ்டித்தவர் என்பது முகத்தின் தேஜஸ்ஸாலேயே விளங்கிற்று.

மஹாராஜா, அவரைப் பார்த்து ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து ப்ரதக்ஷிணம் செய்து அபிவாதனம் சொல்லிவிட்டு, திவ்ய தீர்த்தத்தால் மஹர்ஷியி னுடைய இரண்டு பாதங்களையும் அபிஷேகம் செய்து, அந்த பாத தீர்த்தத்தை தனது சிரஸிலும் ப்ரோக்ஷணம் செய்துகொண்டு, கௌஸல்யா தேவி முதலான தர்மபத்னி களுக்கும் ப்ரோக்ஷணம் செய்து, ராமன் முதலான தனது குமாரர்களுக்கும் அவ்விதமே செய்து, விச்வாமித்ர மஹர்ஷி யினுடைய வலது கையில் அர்க்யம் கொடுத்து, ஸ்வாகத வச னம் சொல்லி குசல ப்ரச்னங்கள் செய்து, வணங்கின தலையுடன், தனது இருகரங்களால் விச்வாமித்ர மஹர்ஷி யின் கையைப் பிடித்து, விச்வாமித்ர மஹர்ஷி நின்ற இட மிருந்து ஆஸ்தானமண்டபம்வரை பூமியில் விரிக்கப்பட்ட பீதாம்பரத்தின்மீது ஸுவர்ணபாதுகையில் விச்வாமித்ரரு டைய பாதங்களை வைக்கும்படி ப்ரார்த்தித்துக்கொண்டு, ஸ்வஸ்திவாசன கோஷங்களுடனும், பதினெட்டுவிதமான வாத்ய கோஷங்களுடனும், ஸுமந்த்ரர் முதலான மந்திரி களும், கௌஸல்யாதேவி முதலான தர்மபத்னிகளும், ராமன் முதலான குமாரர்களும், பத்தாஞ்சலிபுரஸ்ஸரர்களாக விச்வாமித்ரரை பின் தொடர்ந்துவர, வஸிஷ்டபகவானாகிய குல புரோஹிதரை முன்னிட்டுக்கொண்டு, விச்வாமித்ர மஹர்ஷியை ஆஸ்தான மண்டபத்தில் அலங்கரிக்கப்பட்ட தர்பாருக்கு அழைத்துக்கொண்டுபோய், நவரத்னகசிதமான பீடத்தில் ரொம்பவும் ம்ருதுவான வ்யாக்ர சர்மாவை விரித்து அழகாயும் ம்ருதுவாயுமுள்ள அந்த ஆஸனத்தில் மஹர்ஷியை உட்காரவைத்துத் தசரத சக்ரவர்த்தி, ப்ர தக்ஷிண நமஸ்காராதிகளால், மஹர்ஷியை ஸந்தோஷிக்கச் செய்து, ஸ்தோத்ரமும் செய்து பத்தாஞ்சலிபுரஸ்ஸரனாக மஹர்ஷிக்கு எதிரில் பரமபக்தியுடனும், ரொம்பவும் வணக் கத்துடனும் நிற்க, மஹர்ஷியால் ஆஸனத்தில் உட்காரலா மென்று ஆக்ஞாபிக்கப்பட்டு மஹர்ஷிஅமர்ந்திருந்த ஆஸ னத்திற்குக் கீழான ஆஸனத்தில் வணக்கமாக அரசன்

உட்கார்ந்தார். வஸிஷ்ட மஹர்ஷி முதலானவர்களும் விச்வாமித்ரருக்கு ஸமீபத்தில் அவரவர்களுடைய பெருமைக்குத் தகுந்ததான நவரத்னகசிதமான ஸுவர்ணமயமான ஆஸனத்தில் உட்கார்ந்தார்கள். மந்த்ரி வர்கங்களும் ஆஸனங்களில் அமர்ந்தார்கள். பட்ட மஹிஷிகளும், ரஹஸ்யமான இடத்தில் இருந்துகொண்டு இந்த ஆச்சர்யங்களைக் கண்ணுற்று ஆனந்தித்தார்கள். ராமன் முதலான குமாரர்களும் சற்று தூரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்த்ரஸபையைக்கூட அந்த ஸபைக்கு நிகராக சொல்லமுடியாது. அவ்விதமான ஸபையில், விச்வாமித்ர மஹர்ஷி தசரத சக்ரவர்த்தியைப் பார்த்து "கஜானுவில் பணம் குறையாமல் இருந்துவருகிறதா? ஜனங்களுக்கு ராஜவிச்வாஸம் இருக்கிறதா? பந்துக்கள் ஸுஹ்ருத்துக்கள் எல்லோரும் ஆரோக்யத்துடன் இருந்துவருகிறார்களா! ஸாமந்த ராஜாக்கள் உமக்கு அடங்கி ஸரியாக கப்பம்கட்டிவருகிறார்களா? ஈச்வர ஆராதனம் அரண்மனையில் விடாமல் நடந்து வருகிறதா? அக்னிஹோத்ரம் முதலான கர்மாக்கள் விச்யுதியில்லாமல் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதா?" என்று குசல ப்ரச்னம் செய்தார். ராஜனும் ரொம்பவும் பக்தியோடு "மஹான்களுடைய ஆசீர்வாதத்தால் ஒன்றும் குறைவில்லை." என்று மிதமாகப் பேசி நிறுத்திவிட்டார். விச்வாமித்ர மஹர்ஷி, ராஜனுடைய மிதபாஷணத்தில் ஸந்தோஷமடைந்து தானிருக்கும் ஆஸனத்திலிருந்து திடீரென்று எழுந்து, வஸிஷ்ட மஹாமுனி அமர்ந்திருக்கும் ஆஸனத்திற்கு ஸமீபம் சென்று, வஸிஷ்டருடைய இரண்டு கைகளையும் தன்னிருகைகளால் பிடித்துக்கொண்டு "எல்லாம் க்ஷேமந்தானே" என்று குசல ப்ரச்னம் செய்துவிட்டு, மற்ற வாமதேவர், ஜாபாலி, கௌதமர், காத்யாயனர், முதலான மஹர்ஷிகளையும் ஸுமந்த்ரர் முதலான மந்த்ரி வர்கங்களையும், ராஜத்வாரத்தில் பெரிய அதிகாரிகள் என்ற பதவியை வஹித்து வருகிறார்கள் என்ற காரணத்திற்காக குசல ப்ரச்னம்

செய்துவிட்டு, அவரவர்கள் ஸந்தோஷத்தை அடையும் படி ப்ரியமாகவும் பேசிவிட்டு ராஜபவனத்தில் தன்னுடைய ஆஸனத்தில் அமர்ந்தார். மற்றவர்களும் அவரவர்களின் ஆஸனங்களில் அமர்ந்தனர். மஹாஸபையில் அவரவர்களுடைய நிலைமைக்குத் தகுந்தபடி புஷ்பஹாரங்களும், பலோபஹாராதிகளும் கொடுக்கப்பட்டு, ராஜாவினால் விதிவத்தாக பூஜிக்கப்பட்டவர்களாகக் கொண்டு விளங்கி வந்தார்கள். ராஜனே விச்வாமித்ரருடைய ஆகமனம் தனது அரண்மனையில் யத்ருச்சையாக நேர்ந்தது அநேக ஜன்மாக்களில் செய்த மஹா தபத்தின் பலம் என்றே தீர்மானித்து பரம ஸந்தோஷத்தோடு அஞ்சலிபந்தனம் செய்துவிட்டு, மஹர்ஷியினுடைய ஆகமனம் எந்தக் கார்யத்தை உத்தேசித்தது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு மஹாராஜா மஹா ஸபையில் நேரில் பேசினார். அதாவது.

यथामृतस्य संप्राप्तिः यथावर्ष मनूदके ।
यथा सदृशदारेषु पुत्रजन्माप्रजस्यच ॥
प्रणष्टस्य यथा लाभो यथाहर्षो महोदये ।
तथैवागमनंमन्ये स्वागतं ते महामुने ॥

𑌯𑌥𑌾𑌮𑍃𑌤𑌸𑍍𑌯 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 𑌯𑌥𑌾𑌵𑌰𑍍𑌷𑌮𑌨𑍂𑌦𑌕𑍇 ।
𑌯𑌥𑌾 𑌸𑌦𑍃𑌶𑌦𑌾𑌰𑍇𑌷𑍁 𑌪𑍁𑌤𑍍𑌰𑌜𑌨𑍍𑌮𑌾𑌪𑍍𑌰𑌜𑌸𑍍𑌯 𑌚 ॥
𑌪𑍍𑌰𑌣𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾 𑌲𑌾𑌭𑍋 𑌯𑌥𑌾𑌹𑌰𑍍𑌷𑍋 𑌮𑌹𑍋𑌦𑌯𑍇 ।
𑌤𑌥𑍈𑌵𑌾𑌗𑌮𑌨𑌂𑌮𑌨𑍍𑌯𑍇 𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑌂 𑌤𑍇 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑍇 ॥

யதா அம்ருதஸ்ய ஸம்ப்ராப்தி: யதா வர்ஷமநூதகே ।
யதா ஸத்ருசதாரேஷு புத்ர ஜந்மா ப்ரஜஸ்ய ச ॥
ப்ரணஷ்டஸ்ய யதா லாபொ யதாஹர்ஷோ மஹோதயே ।
ததைவாகமநம் மந்யே ஸ்வாகதம் தே மஹாமுநே ॥

என்ற ச்லோகங்களால் தசரத சக்ரவர்த்தியானவர் விச்வாமித்ரருடைய ஆகமனத்தைப் பற்றி நேரில் புகழ்ந்து பேசுகிறார். "மஹர்ஷே! தாங்கள் யத்ருச்சையாக என்னுடைய

அரண்மனைக்கு வந்த விஷயத்தில் நான் அடையும் ஆனந்தத்தை வாக்கினல் சொல்லிமுடியாது. பூலோகத்திலுள்ள ப்ராணிகள் மர்த்யாள் என்று சொல்லப்படுவார்கள். மரண தர்மத்துடன் கூடினவர்கள். அவர்களுக்கு பால்கடலில் மஹாவிஷ்ணுவினுடைய உதவியால் மந்தனம் செய்து எடுக்கப்பட்ட அம்ருதமானது தேவர்களுக்குத்தான் அர்ஹமானது; அதனல்தான் தேவர்களுக்கு அமராள் என்றும் பெயர் ஏற்பட்டது. மனிதனுக்கு அந்த அம்ருதம் கிடைப்பது என்பது ஸாத்யமில்லாததே. மனிதனுக்கும் தேவர்கள் புஜித்த அந்த அம்ருதம் கிடைத்தால் எவ்விதமான ஆனந்தத்தை அம்மனிதன் அடைவானே, அவ்விதமான ஆனந்தத்தைத் தங்களுடைய ஆகமனத்தால் நான் அடைகிறேன். அந்த அம்ருதத்தை ப்ராசனம் செய்தவர்களுக்கு ஜரையும், மரணமும் இல்லாமலாகும். தங்களை தர்சனம் செய்த மாத்ரத்தில் எனக்கும் ஜராமரணம் இல்லாமலாகிவிட்டது. ஸந்தோஷத்தினுடைய ஆதிக்யத்தால் யுவாவாக நான் ஆகிவிட்டேன். தங்களுடைய கருணு த்ருஷ்டிக்கு நான் பாத்ரனுக ஆனதினல் மரணத்தையும் ஜயித்தவனுகவே நான் ஆகிவிட்டேன் என்று என்னுடைய அபிப்ராயம். மேலும், தேவர்கள் அந்த அம்ருதத்தை புஜித்து அமரர்களாக ஆனுர்கள். அந்த அம்ருத ப்ராசனம் இல்லாமலே, அது கிடைத்த மாத்ரத்தால் நான் அம்ருதனுக ஆனதாக என் அபிப்ராயம். மர்த்யன் அம்ருதத்தை அடைந்து எவ்வளவு ஸந்தோஷத்தை அடைவானே அவ்வளவு ஆனந்தத்தைத் தங்களுடைய ஆகமனம் எனக்குக் கொடுக்கிறது" என்ருர். அத்துடன், ப்ரக்ருதத்தில் அம்ருதம் என்ற பதத்திற்கு ஸாபேக்ஷமான அம்ருதம் என்று அர்த்தத்தை க்ரஹித்துக் கொள்ளக்கூடாது. தேவர்கள் பால்கடலைக் கடைந்து எடுத்த அம்ருதமோ ஸாபேக்ஷமான அம்ருதமாகும். தீர்ககாலம் மனிதனை ஜீவிக்கும்படி செய்யும். அன்னியில் மரணமில்லாமல் தடுக்க அந்த அம்ருதத்திற்கு ஸாமர்த்யம் இல்லை. மோக்ஷம் என்ற பரம புருஷார்த்

தத்தை அளிக்கும் ஆத்மஞானமாகிய அம்ருதமோ நிரபேக்ஷ மான அம்ருதமாகும். அதற்கு காலவரம்பே இல்லை. ஆத்ம ஞானமாகிய அம்ருதத்தை ப்ராசனம் செய்தவனுக்கு न तस्य प्राणा उत्क्रामन्ति (ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி) (ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி) என்ற ச்ருதியை அனுஸரித்து மரணமே யில்லை; அவன் முக்தனாக ஆகிவிடுகிறான்.

इहैव तैर्जितस्सर्गः येषां साम्ये स्थितं मनः

இஹைவ தைர்ஜிதஸ்ஸர்க: யேஷாம் ஸாம்யே ஸ்திதம் மன:

இஹைவ தைர்ஜிதஸ்ஸர்க: ஏஷாம் ஸாம்யே ஸ்திதம் மந:

என்ற ச்லோகத்தில், ஸ்ரீ க்ருஷ்ணபகவானும் ஞானம் ருதத்தை பானம் செய்தவனுக்கு சரீரம் ஜீவித்துக்கொண் டிருக்கும்பொழுதே ஜன்ம மரண ரூபமான பவபந்தம் நிவ்ருத்தியாகிவிடுகிறது; அவன் ஜீவன் முக்தனாகிறான் என்று அர்ஜுனனுக்கு உபதேசித்திருக்கிறார். அந்த மோக்ஷ ஸாதனமான ஞானத்திற்கோ, ஸ்வாமி பரமேச்வரனே ज्ञानं महेश्वरात् इच्छेत् (ஜ்ஞாநம் மஹேச்வராத் இச்சேத்) (ஞானம் மஹேச்வராத் இச்சேத்) என்ற ஸ்ம்ருதி வசனப்படி பரமேச்வர னுடைய அனுக்ரஹத்தால்தான், ஆத்மஞானம் உதிக்க வேண்டும்.

मोक्षं इच्छेत् जनार्दनात् (மோக்ஷம் இச்சேத் ஜநார்தநாத்) (மோக்ஷம் இச்சேத் ஜனார்தனாத்) என்ற ஸ்ம்ருதியை அனுஸரித்து, மோக்ஷம் என்ற பரம புருஷார்த்தத்தைக் கொடுக்கும் வல் லமையுள்ளவன் மஹாவிஷ்ணுவே. அந்த மஹாவிஷ்ணுவோ இந்த தசரதருடைய குலத்தில் ஸ்ரீராமன் என்ற பெயரு டன் அப்ராக்ருதமான மங்கள விக்ரஹத்துடன் அவதரித்து விளங்கிவருகிறார். மோக்ஷதாதாவான விஷ்ணுவே தசரதருக்கு புத்ரனாக ஆவிர்பவித்திருப்பதால் உடன் தசரதருக்கு ஜீவன் முக்தி ஸுகானுபவம் ஏற்படவேண்டுமல்லவா? அப்படி

ஏற்படாமலிருப்பதற்குக் காரணமோ மோக்ஷஸாதனமான ஆத்மஞானம் இல்லாமலிருப்பதேதானுகும். அந்த குறைவை தசரதரிடம் இல்லாமல் செய்ய ஞான தாதாவான கைலாஸ வாஸியான பரமேச்வரனுக்கும் தசரத சக்ரவர்த்தியினிடம் கருணை பிறந்துவிட்டது. கைலாஸ வாஸியான பரமசிவனே காயத்ரீ என்ற மஹா மந்த்ரத்தின் பொருளாக ஆகுவார். भर्गः (஭ர்கः) (பர்க:) என்ற அந்தமந்த்ரத்திலுள்ள பதத்திற்கு ரூடி வ்ருத்தியை ஆச்ரயித்து பரமேச்வரனைத்தான் அர்த்தமாக க்ரஹித்துக்கொள்ள வேண்டும். ப்ரக்ருதத்தில் ராஜனிடம் வந்துள்ள விச்வாமித்ர மஹர்ஷியோ அந்த காயத்ரீ என்ற மஹா மந்த்ரத்தை ஸித்திசெய்து தான ப்ராம்மண்யத்தை அடைந்தார், என்பது லோக ப்ரஸித்தமானது. அந்த மஹாமந்த்ரத்தின் வைபவங்களை அனுபவித்த மந்த்ரத்ரஷ்டாவும் அந்த விச்வாமித்ரர்தான். அதில் सवितायाः ऋषिः विश्वामित्रः (ஸவிதாயாஃ ருஷிஃ விஶ்வாமித்ரஃ) (ஸவிதாயா: ருஷி: விச்வாமித்ர:) என்ற ச்ருதி வசனமே ப்ரமாணமாகும். இந்த மஹர்ஷியான்வர் காயத்ரீ மந்த்ர ஜாபியாக ஆனதால், பரமேச்வர உபாஸகனுகவே ஆகிவிடுகிருர். காயத்ரீ மஹா மந்த்ரமானது பரமேச்வரனைத்தான் ப்ரதிபாதிக்கின்றது என்று முன்பே சொன்னேம்

को ब्राह्मणैः उपास्यः गायत्री अर्क अग्निगोचरः शम्भुः

கோ ப்3ராஹ்மணைஃ உபாஸ்யஃ கா3யத்ரீ அர்க அக்3னிகோ3சரஃ ஶம்பு4ஃ

கோ ப்ராஹ்மணை: உபாஸ்ய: காயத்ரீ அர்க அக்னிகோசர சம்பு:

என்ற பகவத் பாதாளுடைய ஸூக்தியை அனுஸரித்து, ப்ராஹ்மணர்களுக்கு உபாஸ்யமான பரமேச்வரன், காயத்ரீ அக்னி, ஸூர்யமண்டலம் இம்மூன்றிலும் விளங்கிவருகிருன் என்று தெரிகிறது. அதனுல் காயத்ரீஜப தத்பரனுய் உள்ளவன் சிவாராதன தத்பரன் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். கைலாஸத்திற்கு அதிபதியான பரமேச்வரனே

ஞானதாதாவானதால் "மோக்ஷதாதாவான விஷ்ணு தசரத சக்ரவர்த்திக்குப் புத்ரனுக ஆவிர்பவித்தும், ஜீவன் முக்தா ளுடைய ஸுகானுபவம் தசரத சக்ரவர்த்திக்கு ஏற்படவில் லேயே. அதற்குக் காரணமோ ஆத்மஞானம் இல்லாமலிருப் பதே தான் ஆகும். அந்த ஞானத்தை ஊட்டுவதோ நமது பொறுப்பாகும். ஆகையால் ஆத்ம தத்வத்தை தசரத சக்ர வர்த்திக்கு உபதேசித்து, திவ்ய ஞானியாக அந்த ராஜன் ஆகும்படி செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன், தன்னு டைய முக்ய பக்தனுன இந்த வித்வாமித்ர மஹர்ஷியை அனுப்பியிருக்கிருர் என்பதை ராஜன் அறிந்து,"தாங்கள்பரம சிவனேச் சேர்ந்தவர். எனக்கு ஞானேபதேசம் செய்வதற்காக தங்கள் ஆகமனம் என்று நினேக்கிறேன். மஹாகுரு லாபம் ஏற்பட்ட பிற்பாடு ஞானத்திற்கு யாதொருவிதமான தடை யும் இல்லே. ஆகையால், மோக்ஷ ஸாதனமான நிரபேக்ஷ ஆத்ம ஞானும்ருதத்தை அடைந்த பரமானந்தத்தை தங்க ளுடைய ஆகமனத்தால் நான் அனுபவிக்கிறேன். அதாவது மோக்ஷ ஸாதனமான ஞானேபதேசத்தை எனக்கு செய்வ தற்காக ஈச்வரனுல் ஏவப்பட்டு பரமகுருவாக தாங்கள் வந் திருக்கிறீர்கள் என்று எண்ணி ஸந்தோஷத்தை அடை கிறேன்" என்ருர்.

இதனுல், விச்வாமித்ரரைப்போலொத்த மஹாபுருஷர்க ளுடைய கடாக்ஷ விசேஷம் எந்த புண்யவானுக்கு ஏற்படு கிறதோ அவன் திவ்ய ஞானத்தை அடைந்து முக்தனுகவே ஆகிவிடுவான். மஹான்களுடைய ஸந்தர்சனமே பவபந்தத்தை நிவ்ருத்தி செய்யக்கூடியது. "அந்த பாக்யம் நமக்கு இப்பொ ழுது கிடைத்துவிட்டது" என்றுதான் தசரத சக்ரவர்த்தி எண்ணியதாக அறியவும். இதைத்தான் **यथाऽमृतस्य संप्राप्तिः** (யதாऽம்ருதஸ்ய ஸம்ப்ராப்தி:) (யதா அம்ருதஸ்ய ஸம்ப்ராப்தி:) என்ற வாக்யத்தால் தசரத ராஜன் விச்வாமித்ரருடைய ஆகம னத்தை மகிழ்ந்து பேசினுர். "மஹான்களுடைய தர்ச னமே மோக்ஷம் என்ற பரம புருஷார்த்தத்தைக் கொடுக்கக்

கூடியது; மோக்ஷானந்தத்தையும் ஸத் ஸங்கத்தால் அடைய லாம்" என்பது வெளியாகிறது. இதைத்தான் சங்கர பகவத் பாதாளும்

सत्सङ्गत्वे निस्सङ्गत्वं
निस्सङ्गत्वे निर्मोहत्वम् ।
निर्मोहत्वे निश्चलतत्वं
निश्चलतत्वे जीवन्मुक्तिः ॥

𑌸𑌤𑍍𑌸𑌙𑍍𑌗𑌤𑍍𑌵𑍇 𑌨𑌿𑌸𑍍𑌸𑌙𑍍𑌗𑌤𑍍𑌵𑌂
𑌨𑌿𑌸𑍍𑌸𑌙𑍍𑌗𑌤𑍍𑌵𑍇 𑌨𑌿𑌰𑍍𑌮𑍋𑌹𑌤𑍍𑌵𑌮𑍍 ।
𑌨𑌿𑌰𑍍𑌮𑍋𑌹𑌤𑍍𑌵𑍇 𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌤𑌤𑍍𑌵𑌂
𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌤𑌤𑍍𑌵𑍇 𑌜𑍀𑌵𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌃 ॥

ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம் ।
நிர்மோஹத்வே நிச்சலதத்வம்
நிச்சலதத்வே ஜீவன்முக்தி: ॥

என்ற ச்லோகத்தால் விச்வாமித்ரரைப்போன்ற மஹான்களுடைய ஸங்கம் ஏற்பட்டால், ஸ்த்ரீ முதலான விஷயாதிகளில் வைராக்யம் ஏற்படும்; வைராக்யத்தால் அவிவேகம் போகும்; அவிவேகம் போனதால் ஆத்ம தத்வ ஸாக்ஷாத்காரம் ஏற்படும்; அதனால் ஜீவன்முக்தி ஸுகானுபவம் ஸித்திக்கும் என்பதை ப்ரகாசப்படுத்தினர். இந்த உண்மையைத் தான் தசரதரும் அனுபவித்தவராகவே ஆகுவார்.

தவிரவும், விச்வாமித்ரருடைய ஆகமனத்தை அநேக காலமாக மழையில்லாத ஊரில் நல்ல மழைபெய்து ஸுபிக்ஷமானல் எவ்வித ஸந்தோஷம் ப்ரஜைகளுக்கு ஏற்படுமோ, அதை த்ருஷ்டாந்தமாகச் சொன்னர். இதனல், ராஜ்யத்தில் மழை யில்லாமல் போகிறது என்பது ராஜாக்களுடைய தர்ம வ்யதிக்ரமத்தால்தான். அதனல் ஏற்படும் துக்கானுபவம் ப்ராணிகளுக்கானலும் அரசனுக்குத்தான் அதிகமாகும்.

இந்த விஷயத்தை ராமாயணத்திலேயே, "அங்கதேசத்தில் ரோமபாதர் என்ற மஹாராஜன் தன் தேசத்தில் அநேக காலம் மழை யில்லாத காரணத்தால் கஷ்டப்பட்டார். பிறகு ரிச்ய ச்ருங்க மஹர்ஷியினுடைய ஆகமன மாத்ரத்தால் மழை பெய்து ஸுபிக்ஷமாக ராஜன் ஸந்தோஷத்தை அடைந்தார்" என்று முன்பே சொல்லப்பட்டுள்ளது. அதைப் போலவே, தசரதரானவர் விச்வாமித்ரருடைய ஆகமனத்தை வர்ணித் தார். மழையில்லாத தேசத்தில் எவ்விதம் வர்ஷம் தாரை யாக ஏற்பட்டால் ஆனந்தமோ, அவ்வளவு ஆனந்தம் தங்க ளுடைய ஆகமனத்தால் எனக்கு ஏற்படுகிறது என்றுசொன் னதிலிருந்து, விச்வாமித்ர மஹர்ஷியையும், ரிச்யச்ருங்க மஹர்ஷியைப்போல் மஹா தபஸ்வி என்று தசரத சக்ர வர்த்தி தீர்மானித்தார். மழையில்லாத இடத்தில் ரிச்யச்ருங் கர் சென்றால் மழை பெய்துவிடும்; அதுபோலவே தங்க ளுடைய ஆகமனமும் என்று சொன்னார். அதிலிருந்து, ரிச்ய ச்ருங்க மஹர்ஷி மூலமாக எனக்கு ஒரு பரம லாபம் ஏற்பட் டது போல், தங்கள் மூலமாகவும் ஒரு மஹாலாபம் ஏற்படப் போகிறது என்று தீர்மானித்து ஸந்தோஷமடைகிறேன்.

अर्धो वा आत्मनः एषः यत्पत्नी

𑌅𑌰𑍍𑌧𑍋 𑌵𑌾 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌏𑌷𑌃 𑌯𑌤𑍍𑌪𑌤𑍍𑌨𑍀

அர்தோ வா ஆத்மந: எஷ: யத்பத்நீ

என்ற ஸூத்ரத்தை அனுஸரித்து, தர்மபத்னி என்பவள் தர் மானுஷ்டான சீலனான புருஷனுடைய பாதி உடல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. புருஷனை ஒரு பாதியாகவும், ஸ்த் ரீயை ஒரு பாதியாகவும் வைத்து, இரண்டையும் சேர்த்து ஒரு உடலாக தீர்மானிக்க வேண்டுமென்றுதான் மேல் சொன்ன ஸூத்ரத்தின் அபிப்ராயமாகும். இது வித்வத் கோஷ்டியில் ப்ரஸித்தமானது.

மாஹிஷ்மதி தேசத்தில் மண்டனமிச்ரர் என்ற ஒரு பண்டிதன் இருந்தார். அவருடன் ஜகத்குருவான ஆதி

சங்கரபகவத்பாதாள் சாஸ்த்ரார்த்தத்தைப் பற்றி பெரிய வாதம் செய்தார். சங்கராசார்யாள் ஸந்யாஸி; மண்டனமிச்ரர் க்ரஹஸ்தன்; தோல்வியடைந்தவர் ஜயத்தை அடைந்தவரின் ஆச்ரமத்தைப் பெற்றுக்கொள்வது என்று அவர்கள் வாதத்தின் பந்தயம். மண்டனமிச்ரரோ தோல்வியடைந்தார். தோல்வியடைந்த மண்டனமிச்ர ருக்கு, ஜயித்த சங்கரர் தனது ஆச்ரமமான ஸந்யாஸத்தைக் கொடுக்க யத்னம் செய்யும்பொழுது மண்டனமிச்ரருடைய மனைவியான **பாரதீ** என்றவள் சங்கராசார்யாளைப் பார்த்து "தாங்கள் மஹா வித்வான்; தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. ஆகிலும் கொஞ்சம் சொல்கிறேன். அதாவது, ஸ்த்ரீயும், புருஷனும் சேர்ந்து ஒரே உடலல்லவா? மண்டனமிச்ரரை தாங்கள் ஜயித்தால் பாதி சரீரத்தைத் தான் தாங்கள் ஜயித்திருக்கிறீர்கள்; நானொரு பாதி அம்சம் இருக்கிறேனே; என்னையும் ஜயித்தாலல்லவா முழு சரீரத் தையும் தாங்கள் ஜயித்தவராக ஆகுவீர்கள்? அதற்குப் பின்பு மண்டனமிச்ரருக்கு ஸந்யாஸம் கொடுப்பது உசித மாகும். ஆகையால் நான் கேட்கும் கேள்வைகளுக்கும் பதில் சொல்லுங்கள்" என்று ஆசார்யாளை மண்டனமிச்ர ருடைய பார்யை வாதத்திற்கு அழைத்தாள். இந்தக் கதை **சங்கரவிஜயத்தில்** விஸ்தாரமாக சொல்லப்பட்டுள்ளது. ராமாயணத்தில் இதைச் சொல்ல ப்ரக்ருதமில்லாதபோனாலும், ஸ்த்ரீயும் புமானும் சேர்ந்து ஒரே உடல் என்பதை ப்ரகாசப் படுத்த மேல்காட்டிய கதை ரொம்பவும் பொருத்தமானதே. அதற்காக இந்தக் கதையையும் ஸூசிப்பிக்கப்பட்டிருக் கிறது.

ப்ரக்ருதத்தில், தசரத சக்ரவர்த்தியானவர் எண்ணியதோ, ரிச்யச்ருங்க மஹர்ஷியினுடைய அனுக்ரஹத்தால் புத்ரலாபம் நமக்கு ஏற்பட்டாலும் பாதி சரீரம்தான் நமக்கு லாபமாக ஏற்பட்டது. மற்றொரு பாதி சரீரமாகிய ஸீதையோ ஜனக குலத்தில் விளங்கி வருகி

ருள். இரண்டும் ஒன்ருகச் சேர்ந்தாலல்லவா முழு புத்ரலாபம் ஏற்பட்டுவிட்டது என்று ஸந்தோஷிக்க ந்யாயம் உண்டு. ஸ்த்ரீபுமான் ஒன்ருக சேர்ந் திருந்தால்தான் தர்ம தேவதைக்கே ஸ்வரூபம் ஸித் திக்கும். தர்ம ஸ்வரூபமே ஸித்திக்காமலிருக்கும்பொழுது லோக க்ஷேமம் ஏது? அதனுல், லோக க்ஷேமத்திற்குக் காரணம் தர்மமே? அந்த தர்மம் ஸித்திக்க ஸ்த்ரீ புமான் களுடைய தாம்பத்யமே அவச்யம்; தாம்பத்யம் என் பது ஒரு உடலாகும். அதில் பாதி ஸ்த்ரீ, பாதி புருஷன். ஒரு பாதியான புருஷனை ரிச்யச்ருங்கர் மூலமாக நான் அடைந்தேன். நான் அடைந்த புருஷாம்சம் என்ற பாதியை முக்யமான ஸீதையென்ற ஸ்த்ரீ அம்சம் என்ற பாதியுடன் சேர்த்துவைத்து தர்மஸ்வரூபத்தை ரக்ஷிக்கிற நித்ய தம்பதி களைப் பார்க்கக்கூடிய ஸந்தோஷத்தை உண்டுபண்ண தங்களு டைய ஆகமனம் என்று நான் நினைத்து ஸந்தோஷிக்கிறேன்." என்ருர். "மழையில்லாத தேசத்தில் மழை பெய்தால்......" என்றதிலிருந்து, ரிச்யச்ருங்க மஹர்ஷியினுடைய ஸ்மரணம் ஏற்படுகிறபடியாலும், அதனுல், ரிச்யச்ருங்கர் மூலம் ராமரை அடைந்தாலும் விச்வாமித்ரர் மூலமாகத்தான் தன் குலத்தில் மஹாலக்ஷ்மியின் ஸம்யோகம் ஏற்படப்போகிறது என்றும் நினைக்கக்கூடுமானதால்—இவ்வளவு ஆந்தரமான அபிப்ராயத்தை தசரத சக்ரவர்த்தி உள்ளே வைத்துக் கொண்டுதான் यथावर्ष अनूदके ([illegible]) (யதாவர்ஷம் அநூதகே) என்ற வாக்யத்தால் விச்வாமித்ரருடைய ஆக மனத்தை ப்ரசம்ஸை செய்தார் என்று தெரிகிறது.

முதல் வாக்யத்தால் மோக்ஷானந்தமானது சொல்லப் பட்டது. இரண்டாவது வாக்யத்தால் அந்த மோக்ஷானந்த மானது பித்ருக்கள் மூலம் தடைபடாமல் இருக்கும் பொருட்டு, தர்மானுஷ்டானத்திற்கு அர்ஹமாக ஸத்புத்ரனை நல்ல சீலத்துடன் கூடிய பத்னியுடன் குலத்தில் ஸ்தாப னம் செய்துவிட்டு முக்தியை அடையவேண்டும் என்ற சாஸ்த்ரத்தின் க்ரமமும் படிப்படியாக வருகின்றது.

निवेशयित्वा सत्पुत्रं सदारं स्वकुलेनरः
मुक्त्यर्थं आव्रजेदेकः पाणिपात्रो दिगम्बरः

𑌨𑌿𑌵𑍇𑌶𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑌤𑍍𑌪𑍁𑌤𑍍𑌰𑌂 𑌸𑌦𑌾𑌰𑌂 𑌸𑍍𑌵𑌕𑍁𑌲𑍇 𑌨𑌰𑌃
𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌆𑌵𑍍𑌰𑌜𑍇𑌦𑍇𑌕𑌃 𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌤𑍍𑌰𑍋 𑌦𑌿𑌗𑌮𑍍𑌬𑌰𑌃

விவேசயித்வா ஸத்புத்ரம் ஸதாரம் ஸ்வகுலே நர:
முக்த்யர்தம் ஆவ்ரஜேதேக: பாணிபாத்ரோ திகம்பர:

என்ற பிக்ஷுகீதா வசன ப்ரகாரம் தசரத சக்ரவர்த்தி விச்வாமித்ர மஹர்ஷியுடன் ஸல்லாபம் செய்துவருகிறார்.

மூன்றுவதாகவும், "அக்னி ஸாக்ஷிகமாக காலத்தில் விதிவத்தாக க்ரஹிக்கப்பட்ட தர்மபத்னியிடத்தில் பஹு காலமாக புத்ரலாபம் ஏற்படாமலிருந்து 'இனி மேல் நமக்கு எங்கு புத்ரலாபம் ஏற்படப்போகிறது' என்று ஆசையிலிருந்து நிவ்ருத்தியை அடைந்த புருஷனுக்கு, அதே தர்மபத்னியிடம் புத்ரலாபம் ஏற்பட்டால் எவ்விதமான ஸந்தோஷத்தை அவன் அடைவானே, அவ்விதமான ஆனந்தத்தை தங்களுடைய ஆகமனத்தால் நான் அடைகிறேன்" என்றார். இதனாலும் "என்னுடைய தர்மபத்னியான கௌஸல்யா தேவியினிடம் ஸர்வேச்வரனை ஸாக்ஷாத் ஸ்ரீராமனே புத்ரனாக ஆவிர்பவித்த காலத்தில் ஏற்பட்ட ஸந்தோஷம்போல் தங்களுடைய ஆகமனம் எனக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கிறது" என்பதிலிருந்து 'தனது புத்ரன்' என்று சொல்லப்படுகிற ராமன் ஸாக்ஷாத் பரப்ரஹ்மமானதாலும், அந்த பரப்ரஹ்மத்தை அறிந்தவனும் ப்ரஹ்மீபூதனாவதாலும், தாரக ப்ரஹ்மமாகிய ராமனுடைய தத்வத்தை அறிந்த விச்வாமித்ர மஹர்ஷி தாரக ப்ரஹ்மமாகவே விளங்கிவருகிறாரே தவிர, வேறு ஒரு ரூபத்துடன் பாஸிக்கவில்லை என்று தெரிகிறது.

லோகத்தில், புத்ரன் பிறந்தான் என்பதைக் காதில் கேட்டு அனுபவிக்கப்படும் ஸுகத்திற்கு ப்ரியம் என்றும்,

பிறந்த புத்ரனைக் கண்ணால் பார்த்து அனுபவிக்கும் ஸுகத்திற்கு மோதம் என்றும், அந்த புத்ரனை லாலனை செய்து அனுபவிக்கும் ஸுகத்திற்கு ப்ரமோதம் என்றும், அந்த புத்ரனே லோகத்தில் எங்கும் பரவின கீர்த்தியுடனும் மஹா வித்வானாயும், சூரனாயும் விளங்கி வரும்பொழுது புத்ரனுடைய மஹத்வத்தைக் கேட்டு பிதா வ்ருத்தனாக இருந்துவரும் தன்மையில் அனுபவிக்கும் ஸுகம் ஆனந்தம் என்றும் சொல்லப்படும். இவ்விதம் ப்ரியம், மோதம், ப்ரமோதம், ஆனந்தம் என்று நான்கு வகைகளாக ஸுகத்தை, தைத்திரீயோபநிஷத்தில் பிரிக்கப்பட்டிருக்கிறது. புத்ர நிமித்தமாக ஏற்படும் ஆனந்தானுபவம் என்பதுதான் பூலோகத்தில் அடையவேண்டிய புருஷார்த்தங்களுக்குள் மேலானது. "புத்ரனுடைய ஜன்மாவிற்குப் பிறகு, ச்ரவணம், தர்சனம், லாலனம் இம்மூன்றுகளின் மூலமாக ஏற்படும் ப்ரியம் மோதம், ப்ரமோதம் என்ற மூன்றையும் நான் அனுபவித்துவிட்டேன். புத்ரனுடைய லோக ப்ரஸித்தமான கீர்த்தியாலும், சௌர்யத்தாலும், கல்வியாலும், மஹத்வத்தாலேயும் அனுபவிக்க வேண்டிய ஆனந்தம் எனக்கு பாக்கியிருக்கிறது. அதை எனக்கு அளிக்கவே தாங்கள் வந்திருக்கிறீர்கள் என்றே என் தீர்மானம்" என்று தசரதர் சொன்னார். தசரத சக்கரவர்த்தி எண்ணியபடி விச்வாமித்ரர் மூலமாகத்தான் ராமன் பரமபுருஷன் என்பது லோகத்தில் ப்ரஸித்தமானது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடியதே. இந்த ப்ரியம், மோதம், ப்ரமோதம் என்ற மூன்றும் ஒன்றாகச் சேர்ந்தால் எவ்விதமிருக்குமோ அவ்விதம் ஆனந்தம் என்று சொல்லப்படும் ஸுகம் பாஸிக்கும். அதனால்தான் விச்வாமித்ரர் மூலமாக புத்ர நிமித்தமாக ஏற்படக்கூடிய ஆனந்தத்திற்கு புத்ர ஜன்ம மூலமாக தான் அனுபவித்த மூன்று ஆனந்தங்களையும் ஒன்றாகச் சேர்த்து த்ருஷ்டாந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் பித்ரு ரணத்தை நிவ்ருத்தி செய்யக் கூடிய புத்ரலாபம் ஏற்பட்டு यथावर्षमनूदके (யதாவர்ஷமநூதகே)

(யதாவர்ஷமநூதகே) என்பதால் அந்த புத்ரனையும் ஸத்குல ப்ரஸூதையான ஸஹதர்மசாரிணியோடு சேர்த்துவைத்து தர்மானுஷ்டானம் செய்யும்படி செய்துவிட்டு, தானும் மோக்ஷானந்தத்தை அடைய யத்னம் செய்யவேண்டும் என்றதும், முதல் புத்ர லாபத்தையும், பிறகு கல்யாணத்தில் விச்வாமித்ரர் வந்த மஹிமையையும், அவருடைய ஆகமனத்தால் ராஜனுக்கு ஏற்பட்ட ஸந்தோஷத்தையும் க்ரமமாக வைத்து தாத்பர்யத்தை அறியவும்.

விச்வாமித்ரருடைய ஆகமனத்திற்கு நான்காவது உதாஹரணமாக, காணமற்போன வஸ்துவினுடைய லாபத்தை ராஜன் சொன்னார். "மஹர்ஷே! தங்களுடைய ஆகமனத்தால் நான் அடையும் ஆனந்தமோ, கெட்டுப்போன பொருள் அகப்பட்ட பிற்பாடு ஏற்படும் ஆனந்தத்திற்கு ஸமானமானது" என்றார். ஒரு மனிதனுக்கு ஏராளமான பொருள் இருந்தாலும் கெட்டுப்போன பொருள் அகப்பட்டால் அவன் அடையும் ஆனந்தம்போல், அந்த ஏராளமான பொருளும் ஆனந்தத்தைக் கொடுக்காது.

नष्टद्रव्य लाभोहि परमानन्दहेतुः

𑌨𑌷𑍍𑌟𑌦𑍍𑌰𑌵𑍍𑌯 𑌲𑌾𑌭𑍋𑌹𑌿 𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌹𑍇𑌤𑍁𑌃

நஷ்டத்ரவ்ய லாபோஹி பரமாநந்தஹேது:

என்ற லோகவசனமே அதில் ப்ரமாணமாகும். ரிச்யச்ருங்க மஹர்ஷியினுடைய ஆகமனத்தால் புத்ர லாபம் ஏற்பட்டது போல் விச்வாமித்ர மஹர்ஷியினுடைய ஆகமனத்தால் இக்ஷ்வாகு வம்சத்தில் லக்ஷ்மிதேவியினுடைய ஸம்யோகம் ஏற்படப்போகிற தென்பதை

यथावर्षं अनूदके (𑌯𑌥𑌾𑌵𑌰𑍍𑌷𑌂 𑌅𑌨𑍂𑌦𑌕𑍇) (யதாவர்ஷம் அநூதகே)

என்ற வாக்யத்தின் தாத்பர்யத்தை ப்ரகாசப்படுத்தும் பொழுது தெரிவித்தோம். அதை அனுஸரித்து ராஜன் சொல்வதோ "தங்களுடைய ஆகமனத்தால் என் வம்சத்

திற்கே லக்ஷ்மீ கடாக்ஷமும், என் புத்ரனுன ஸ்ரீராமனுக்கு ஸஹதர்மசாரிணி ஸம்யோகமும் ஏற்படப்போகிறதென்ப தில் யாதொருவிதமான ஸந்தேஹமுமில்லை. ஆகிலும் தங் களுடைய அனுக்ரஹத்தால் ராமனுக்குக் கிடைக்கப்போகிற ஸீதை என்ற பொருள், ராமனுடைய அவதார ப்ரயோஜ னத்தை உத்தேசித்து ராவணன் மூலமாக காணுமல் போகும் படி நேர்ந்தாலும், பிறகு அது அகப்பட்டு அதன் மூலம் ராமனுக்கும் விசேஷமாக எனக்கும், இக்குல பித்ருக்களுக் கும் பரம ஸந்தோஷம் ஏற்படுமென்பதில் ஸந்தேஹமே இல்லை. மஹான்களுடைய அனுக்ரஹத்தால் கிடைத்த பொருள் கெட்டுப்போனுலும் அகப்பட்டுவிடும்" என்றதை ஸூசிப்பித்தார். நஷ்ட த்ரவ்ய லாபத்தால், புத்ர லாபத்தை சாஸ்த்ரமானது பாவியாகக் காட்டுகிறது.

अपुत्रस्य नरस्येह नष्टद्रव्यस्य लाभतः
पुत्रोत्पत्तिं वदन्त्यस्य सहसातत्ववेदिनः

𑌅𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌨𑌰𑌸𑍍𑌯𑍇𑌹 𑌨𑌷𑍍𑌟𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌸𑍍𑌯 𑌲𑌾𑌭𑌤𑌃
𑌪𑍁𑌤𑍍𑌰𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌂 𑌵𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑌹𑌸𑌾𑌤𑌤𑍍𑌵𑌵𑍇𑌦𑌿𑌨𑌃

அபுத்ரஸ்ய நரஸ்யேஹ நஷ்டத்ரவ்யஸ்ய லாபத:
புத்ரோத்பத்திம் வதந்த்யஸ்ய ஸஹஸாதத்வவேதிந:

என்ற வராஹமிஹிரருடைய வசனத்தால், ஒரு குலத்தில் பிள்ளை இல்லாமல் தபிக்கிறவனுக்கு, பிள்ளை பிறக்குமா, இல்லையா என்பதை அறிய தனது க்ரஹத்தில் ஏதாவது ஒரு இஷ்ட வஸ்து தெரியாமல் கெட்டுப்போகும்படி நேர்ந்து மறுபடியும் அது அகப்பட்டால் சீக்ரமாக புத்ரன் ஏற்படும் என்பதை அறியலாம். அகப்படாவிடில் புத்ரலாபம் இல்லை என்றும் தீர்மானிக்கலாம். இதை அனுஸரித்து "பாவியாக புத்ரோத்பத்திக்கு அந்தரங்க ஸாதனமான, ஸீதை என்ற இஷ்ட வஸ்துவிற்கு, ராவணன் மூலமாக கெட்டுப்போய்விட் டது என்று ஏற்பட்டாலும் பிறகு, அந்த வஸ்துவின் லாபம் ஏற்படப்போகிறபடியால் வம்சத்திற்கு அபிவ்ருத்தியைச்

செய்யும் புத்ரலாபமும் ராமனுக்கு ஏற்படும் என்ற பெருமைகள் எல்லாம் இக்ஷ்வாகு வம்சத்திற்கு ஏற்படப்போகிறது. அவைகளுக் கெல்லாம் தங்களுடைய ஆகமனமே முக்ய காரணமாகும்.

அவைகளை இப்பொழுது நேரில் அனுபவித்தால் நான் எவ்விதமான ஆனந்தத்தை அடைவேனோ, அவ்வித ஆனந்தத்தை தங்கள் ஆகமனத்தால் அடைகிறேன்.

தவிரவும், மஹோதயத்தில் எவ்விதமான ஸந்தோஷம் ஏற்படுமோ அவ்விதமான ஸந்தோஷத்தையுமடைகிறேன். **மஹோதயம்** என்றால் புத்ரர்களுக்கு நடக்கும் விவாஹ மஹோத்ஸவங்கள். புத்ராதிகளுடைய அபிவ்ருத்தியால் அடையப்படும் ஆனந்தமும் இப்பொழுது என்னால் அனுபவிக்கப்பட்டு வருகின்றது'' என்று வெகு ப்ரகாரமாய் விச்வாமித்ரருடைய ஆகமனத்தை தசரதராஜன் பெருமையாகப் பேசினார். அப்படி பேசிய ச்லோகத்திலுள்ள வாக்யங்களை விபரீதக்ரமமாக அந்வயித்துக்கொள்ளவேண்டும். அதாவது,

यथा हर्षो महोदये (யயா ஹஷெ-ஜா உஹொஉயெ) (யதா ஹர்ஷோ மஹோதயே) என்ற பதத்தால் ராமனுக்குக் கல்யாணம் நடந்தால் எந்த ஸந்தோஷமோ அதை அனுபவிக்கிறேன். பிறகு **प्रणष्टस्य यथा लाभः** (வ்ணஷுஸூ யயா யூாஹஃ) (ப்ரணஷ்டஸ்ய யதா லாப:) என்றதால், கல்யாணம் ஆனபிறகு அரண்யவாஸத்தில் ராவணன் மூலமாக ஸீதை அபஹரிக்கப்பட்டு, பிறகு ராவணவதம் ஆனவுடன் அந்த ஸீதையை அடைந்த காரணத்தால் ஏற்படும் ஆனந்தம். அதற்குப் பிறகு,

यथा सदृशदारेषु पुत्र जन्माऽप्रजस्य च

யயா ஸஜுஸஜாரெஷு வுதூ ஜநூாஉவுஜஸூ அ

யதா ஸத்ருசதாரேஷு புத்ர ஜந்மாப்ரஜஸ்ய ச

என்றதால் ராமருக்கு ஸீதையினிடம் பிறக்கும் குசலவாள் என்ற பௌத்ரலாப ப்ரயுக்தமான ஆனந்தம். இவை

களுக்கு மூலகாரணம் விச்வாமித்ர மஹர்ஷியே என்பதை **यथावर्षमनूदके** (𑌯𑌥𑌾𑌵𑌰𑍍𑌷𑌮𑌨𑍂𑌦𑌕𑍇) (யதாவர்ஷமநூதகே) என்ற வாக்யத்தால் மழை பெய்யாத இடத்தில் மழையை உண்டாக்க வல்லமையுள்ள ரிச்யச்ருங்க மஹர்ஷியினுடைய வ்ருத்தாந்தம் ஸூசிப்பிக்கப்படுகிறபடியால் அவர் மூலமாக புத்ரலாபமோ, தங்கள் மூலம் அந்த புத்ரனுக்கு தர்மபத்னியான ஸீதா லாபமும் ஏற்படுகிறது என்றதால் ஸீதாராம பரிணயமஹோத்ஸவத்திற்குத் தாங்களே காரணமென்றும் விச்வாமித்ரரைப் பார்த்து ராஜன் ஸ்தோத்ரம் செய்தார். மஹோத்ஸவ காரணம், ஸீதாபரிணய மஹோத்ஸவம், ப்ரணஷ்டமான ஸீதையின் லாபம், பிறகு ராமனுக்கு ஏற்படும் புத்ரலாபம், என்ற நான்கு நிமித்தங்களையும் காட்டி ஆனந்தத்தை ப்ரகாசம் செய்ததிலிருந்து ஸம்ஸாரமண்டலத்திற்குள் அனுபவிக்க வேண்டிய ஆனந்தானுபவமும் **यथाऽमृतस्य संप्राप्तिः** (𑌯𑌥𑌾𑌽𑌮𑍃𑌤𑌸𑍍𑌯 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌃) (யதா அம்ருதஸ்ய ஸம்ப்ராப்தி:) என்ற பதத்தால் ஸம்ஸாரமண்டலத்திற்கு வெளியில் அனுபவிக்கவேண்டிய மோக்ஷாநந்த லாபமும் விச்வாமித்ருடைய ஸந்தர்சனத்தால் ஏற்படுகிறது என்பதை விச்வாமித்ரரைக் குறிப்பிட்டுச் சொன்னார். மஹான்களுடைய தர்சனமே மனிதர்களுக்கு புக்தி முக்தியைக் கொடுக்கும் என்பதே அதன் ஸாரமாகும்.

இவ்விதம் சொல்லிவிட்டு, "மஹர்ஷே! தங்களுடைய வரவு நல்வரவு ஆகுக.

कच्चते परमं कामं करोमि किमु हर्षितः ।
पात्र भूतोऽसि मे ब्रह्मन् दिष्ट्या प्राप्तोऽसि कौशिक ॥

𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍇 𑌪𑌰𑌮𑌂 𑌕𑌾𑌮𑌂 𑌕𑌰𑍋𑌮𑌿 𑌕𑌿𑌮𑍁 𑌹𑌰𑍍𑌷𑌿𑌤𑌃 ।
𑌪𑌾𑌤𑍍𑌰 𑌭𑍂𑌤𑍋𑌽𑌸𑌿 𑌮𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌦𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌾
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋𑌽𑌸𑌿 𑌕𑍌𑌶𑌿𑌕 ॥

கஞ்சதே பரமம் காமம் கரோமி கிமு ஹர்ஷித: ।
பாத்ரபூதோஸி மே ப்ரஹ்மந் திஷ்ட்யா ப்ராப்தோஸி கௌசிக ॥

என்ற ச்லோகத்தால் தங்களுடைய அபீஷ்டம் என்ன என்பதைத் தெரிவிக்கவேண்டும். அதை நான் எந்த ப்ரகாரமாக செய்யவேண்டுமென்று ஆக்ஞையானுலும் அவ்விதம் செய்கிறேன். தங்களைப்போலொத்த மஹான்களுக்கு சிரஸ்ஸைக்கூடக் கொடுக்கலாம். என் தலையைக் கேட்டால் ஸந்தோஷமாகத் தங்களுக்கு நான் தருகிறேன். தங்களைப்போல் ஸத்பாத்ரம் லோகத்திலேயே அகப்படுவது துர்லபமாகும். எனது பூர்வஜன்மத்தில் நான் செய்த புண்யவசத்தால் தாங்கள் வந்தீர்கள். என்னுடைய ஜன்மா இப்பொழுதுதான் ஸபலமாயிற்று. என்னுடைய ஜீவிதமும் இப்பொழுதுதான் புண்ய ஜீவிதமாயிற்று. தாங்கள் முன்காலத்தில் என்னைப்போல் க்ஷத்ரியனுக இருந்தீர்கள். அந்த காலத்திலும் சௌர்யம், வீர்யம் முதலான குணங்களால் லோகம் முழுமையும் ப்ரஸித்தியடைந்தவர்கள். மஹா தபஸ்ஸைச் செய்து ப்ராஹ்மண்யத்தையும் அடைந்துவிட்டீர்கள். தாங்கள் ராஜரிஷியாகவும், ப்ரஹ்மரிஷியாகவும் இருக்கிறீர்கள். இரண்டு ப்ரகாரங்களாலும் தங்களை பூஜிக்கவேண்டும். தங்கள் ஆகமனமானது இந்த ஸூர்ய வம்சத்திற்கே ஒரு பெரிய ஸம்சுத்தியை ஏற்படுத்திவிட்டது. தங்களுடைய ஸந்தர்சனத்தால் நான் புண்யவானுனதாய் தகப்பனிடம் பிறந்தவன் என்று என் ஜன்மாவைத் தீர்மானிக்கிறேன். எதற்காக தங்களுடைய ஆகமனம் ஏற்பட்டதென்று பயமில்லாமல் சொல்லலாம். எதை என்னிடமிருந்து தாங்கள் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று தாங்கள் நினைத்து வந்தாலும் அதை நான் தங்களுக்குக் கொடுத்துவிட்டதாகவும், என்னிடம் வந்த கார்யம் ஸித்தமாக ஆகிவிட்டதாகவும் தீர்மானித்துத் தாங்கள் ஸந்தோஷிக்கலாம். நான் தங்களுடைய மனோரதத்தைப் பூர்த்தி செய்வேனே செய்யமாட்டேனே என்ற ஸந்தேஹமே வேண்டாம்.

कार्यस्य न विमर्शंच गन्तुं अर्हसि कौशिक ।
कर्ता चाहं अशेषेण दैवतं हि भवान् मम ॥

𑌕𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌵𑌿𑌮𑌰𑍍𑌶𑌂𑌚 𑌗𑌨𑍍𑌤𑍁𑌂 𑌅𑌰𑍍𑌹𑌸𑌿 𑌕𑍌𑌶𑌿𑌕 ।
𑌕𑌰𑍍𑌤𑌾 𑌚𑌾𑌹𑌂 𑌅𑌶𑍇𑌷𑍇𑌣 𑌦𑍈𑌵𑌤𑌂 𑌹𑌿 𑌭𑌵𑌾𑌨𑍍 𑌮𑌮 ॥

கார்யஸ்ய ந விமர்சம் ச கந்தும் அர்ஹஸி கௌசிக ।
கர்தா சாஹம் அசேஷேண தைவதம் ஹி பவாந் மம ॥

என்று என் மூலமாக நடக்கவேண்டிய கார்யத்தில் ஸந்தேஹமே வேண்டாம்.

எதைத் தாங்கள் உத்தரவிட்டாலும் அதை அந்தப்படி செய்துகொடுக்க ஸித்தனுக இருக்கிறேன். தங்களுடைய ஆகமனத்தால் எனக்கு ஒரு பெரிய மஹா அப்யுதயம் ஏற்பட்டதென்று என்னுடைய கருத்து. அளவற்ற புண்யமும் ஏற்படப்போகிறது. ஆகையால் ஸந்தேஹப்படாமலும், பயமுமில்லாமலும், லஜ்ஜையுமில்லாமலும் வந்த கார்யத்தைச் சொல்லவேண்டு''மென்று தசரதசக்ரவர்த்தி விச்வாமித்ர மஹர்ஷியிடம் ப்ரார்த்தித்துக்கொண்டார். அதைக் கேட்ட விச்வாமித்ர மஹர்ஷியோ பரமானந்தத்தை அடைந்தார். தான் வந்த கார்யம் நிறைவேறிவிட்டது என்றே நினைத்தார். தசரதருடைய ம்ருதுவான வார்த்தைகளோ, காதிற்கும் இனிமையைக் கொடுத்தது; மனதிற்கும் ஆஹ்லாதத்தை உண்டுபண்ணிற்று. ராஜாதி ராஜனுக இருந்தாலும் ரொம்பவும் வணக்கமாகவும் ராஜன் பேசுகிறுர். அவ்விதமிருக்கும்பொழுது மஹர்ஷிக்கு பேரானந்தம் உண்டாகாமலிருக்க ந்யாயமுண்டா? ராஜனுடைய வாக்யத்தைக் கேட்டு மஹர்ஷியானவர் ஆனந்தஸாகரத்தில் மூழ்கினுர்.

19-வது ஸர்கம்.

ஸ்ரீ ராம மஹிமை.

விச்வாமித்ர மஹர்ஷியானவர் தசரதரைப் பார்த்து, "நீ மஹாவம்சத்தில் பிறந்தவன்; உன்னுடைய வம்சம் ஸூர்ய வம்சமல்லவா? ஆதிகாலம் முதல் மஹா தபஸ்வியாகவும், ஸர்வக்ஞனாகவுமுள்ள வஸிஷ்ட பகவானுடைய ஆக்ஞையை சிரஸால் வஹித்து நடக்கும் ஸ்வபாவமுள்ள உன்னைப் போன்ற மஹானுபாவன் இந்த வம்சத்திலிருக்கும்பொழுது இது மேலான வம்சம் என்பதற்கு என்ன ஆக்ஷேபணை? இந்த வம்சத்தைக் கவனிக்கும்பொழுதும், குல குருவான வஸிஷ்டரைக் கவனிக்கும்பொழுதும், நீ என்னுடைய ஆகமனத்தை ச்லாகித்துப் பேசி 'எதைக் கேட்டாலும் தருகிறேன்' என்று நீ சொன்னது உனக்கு அழகுதான். உசிதமுந்தான். ஆனால் என் மனதில் ஒரு கார்யத்தை ஸங்கல்பம் செய்துகொண்டு, உன் மூலம் அதை நிறைவேற்றிக்கொள்ளும் எண்ணத்துடன் உன்னிடம் வந்தேன், அதை நீ கட்டாயம் நடத்திக்கொடுக்கிறது என்ற தீர்மானத்தைச் செய்யவேண்டும். ப்ரதிக்ஞை செய்துவிட்டு, மாறக்கூடாது. இந்த வம்சத்தில் பிறந்த ஒவ்வொரு ராஜனும் சொன்ன ப்ரதிக்ஞையை நடத்தாமல் மீறி நடக்கும் வழக்கமுள்ளவர்களல்ல. அதுபோல் நீயும் நடந்து கொள்ளவேண்டும்" என்று சொல்லிவிட்டு,

अहं नियममातिष्ठे सिद्ध्यर्थं पुरुषर्षभ ।
तस्य विघ्नकरौ द्वौतु राक्षसौ कामरूपिणौ ॥
व्रते मे बहुशश्चीर्णे समाप्त्यां राक्षसाविमौ ।
मारीचश्च सुबाहुश्च वीर्यवन्तौ सुशिक्षितौ ॥

𑌅𑌹𑌂 𑌨𑌿𑌯𑌮𑌮𑌾𑌤𑌿𑌷𑍍𑌠𑍇 𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌰𑍍𑌷𑌭 ।
𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌘𑍍𑌨𑌕𑌰𑍌 𑌦𑍍𑌵𑍌 𑌤𑍁 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍌 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑍌 ॥
𑌵𑍍𑌰𑌤𑍇 𑌮𑍇 𑌬𑌹𑍁𑌶𑌶𑍍𑌚𑍀𑌰𑍍𑌣𑍇 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌵𑌿𑌮𑍌 ।
𑌮𑌾𑌰𑍀𑌚𑌶𑍍𑌚 𑌸𑍁𑌬𑌾𑌹𑍁𑌶𑍍𑌚 𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑍌 𑌸𑍁𑌶𑌿𑌕𑍍𑌷𑌿𑌤𑍌 ॥

அஹம் நியமமாதிஷ்டே ஸித்யர்த்தம் புருஷர்ஷப ।
தஸ்ய விக்நகரௌ த்வௌ து ராக்ஷஸௌ காமரூபிணௌ ॥
வ்ரதே மே பஹுச:சீர்ணே ஸமாப்த்யாம் ராக்ஷஸாவிமௌ ।
மாரீசச்ச ஸுபாஹுச்ச வீர்யவந்தௌ ஸுசிக்ஷிதௌ ॥

என்றதான ச்லோகங்களால் விச்வாமித்ர மஹர்ஷியானவர் தான் வந்த கார்யத்தைத் சொல்கிருர். "நான் காயத்ரீ மந்த்ரஸித்தி செய்து புரச்சரணை ஹோமம் என்ற ஸாவித்ரீ யாகத்தை அனுஷ்டானம் செய்வதற்காக தீக்ஷையை அவலம்பித்தவனாக ஆகிறேன். இப்படி நான் ஸங்கல்பம் செய்தது ஒரு தடவை, இரண்டு தடவையல்ல பல தடவைகளுண்டு. அந்த யாகமானது என் ப்ரயோஜனத்தைக் குறித்ததல்ல. ஸர்வஜனக்ஷேமார்த்தமாக ஏற்பட்டது. அதை நான் ஆரம்பித்து அனுஷ்டித்துவரும் காலத்தில் அநேகமாக முடிவு அடையும் ஸமயத்தில் மாரீசன், ஸுபாஹு என்ற இரண்டு ராக்ஷஸர்கள் விக்னம்செய்து கர்மாவை முடிவுபெருமல் தடுத்து விடுகிருர்கள். அந்த இருவர்களும் தான் நினைத்த மாத்ரத்தில் எந்த உருவத்தையும் எடுத்துக் கொள்கிருர்கள். ரொம்பவும் பராக்ரமசாலிகள். மாயையினுல் யுத்தம் செய்வதில் ரொம்பகாலமாக குரு குலத்தில் சிக்ஷையை அடைந்தவர்கள். மாம்ஸங்களாலும், ரக்தங்களாலும் யக்ஞவேதியை அசுத்தம்செய்து யக்ஞத்தைக் கெடுத்துவிடுகிருர்கள். என்னுடைய ச்ரமங்களெல்லாம் வீணுக ஆகிவிடுகிறது. நானும் அந்த யக்ஞசாலையைவிட்டு வேறு இடம் ஓடிவிடுவேன். தபோ மஹிமையால் அவர்களைச் சாம்பலாக்க சக்தி எனக்கு இருந்தாலும் அவர்களுடைய விஷயத்தில் கோபத்தை நான் அடைவதில்லை. ஸத்கர்மாவினுடைய நடுவில் கோபத்தை அடையக்கூடாது.

ஆகையால் அந்த ராக்ஷஸர்களை வதம்செய்து, 'எவ்விதம் என்னுடைய யக்ஞத்தை பூர்த்தி செய்வது' என்பதை ஆலோசித்து यज्ञ विघ्नकरं हन्यां (யஜ்ஞ விக்⁴ந கரம் ஹந்யாம்) (யஜ்ஞ விக்நகரம் ஹந்யாம்) யக்ஞத்திற்கு விக்னம் செய்கிறவர்களை நான் கொல்லுகிறேன் ; 'யக்ஞ ஸம்ரக்ஷணம் செய்துவைக்கிறேன்' என்ற ப்ரதிக்ஞையை அனுஸரித்து, மஹாவிஷ்ணுவானவர் உனக்கு புத்ரனாக அவதரித்து இருக்கிறார் என்பதை ஞான த்ருஷ்டியால் அறிந்து, அந்த உன்னுடைய புத்ரனை அழைத்துக்கொண்டுபோய், ராக்ஷஸர்களை வதித்து, யக்ஞத்தைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் உன்னிடம் வந்தேன். ஆகையால்,

स्वपुत्रं राजशार्दूलं रामं सत्य पराक्रमम् ।
काकपक्षधरं शूरं ज्येष्ठं मे दातुमर्हसि ॥

शक्तो ह्येष मया गुप्तः
दिव्येन स्वेन तेजसा ।
राक्षसा ये विकर्तारः
तेषामपि विनाशने ॥

श्रेयश्चास्मै प्रदास्यामि
बहुरूपं न संशयः ।
त्रयाणामपि लोकानाम्
येनख्यातिं गमिष्यति ॥

ஸ்வபுத்ரம் ராஜஶார்தூ³லம் ராமம் ஸத்ய பராக்ரமம் ।
காகபக்ஷத⁴ரம் ஶூரம் ஜ்யேஷ்ட²ம் மே தா³துமர்ஹஸி ॥

ஶக்தோ ஹ்யேஷ மயா கு³ப்த:
தி³வ்யேந ஸ்வேந தேஜஸா ।
ராக்ஷஸா யே விகர்தார:
தேஷாமபி விநாஶநே ॥

𑌶𑍍𑌰𑍇𑌯𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑍈 𑌪𑍍𑌰𑌦𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿
𑌬𑌹𑍁𑌰𑍂𑌪𑌂 𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 ।
𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌮𑌪𑌿 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂
𑌯𑍇𑌨𑌖𑍍𑌯𑌾𑌤𑌿𑌂 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

ஸ்வபுத்ரம் ராஜசார்தூலம் ராமம் ஸத்ய பராக்ரமம் ।
காகபக்ஷதரம் சூரம் ஜ்யேஷ்டம் மே தாதுமர்ஹஸி ॥

சக்தோ ஹ்யேஷ மயா குப்த:
திவ்யேந ஸ்வேந தேஜஸா ।
ராக்ஷஸா யே விகர்தார:
தேஷாமபி விநாசநே ॥

ச்ரேயச்சாஸ்மை ப்ரதாஸ்யாமி
பஹுரூபம் நஸம்சய: ।
த்ரயாணாமபி லோகாநாம்
யேநக்யாதிம் கமிஷ்யதி ॥

“உன்னுடைய புத்ரனை நீ எனக்குக் கொடுத்து உபஹரிக்க வேண்டும். உன்னுடைய புத்ரனை நீ குழந்தை என்று நினைக்கலாம். என் கண்ணுக்கும் குழந்தையாகத் தான் தென்படுகிறான். காகபக்ஷம் என்ற குழந்தைகள் வைத்துக் கொள்ளும் சிகையல்லவா ராமனிடம் காணப்படுகிறது; ஆகிலும் உன்னுடைய புத்ரன் ஸத்யபராக்ரமன். தர்ம மான யுத்தத்தில் சத்ருக்களை ஜயிக்கும் சக்தியுண்டு. மஹா சூரன். ஸ்வயமாகவே மஹா தேஜஸ்வி; அத்துடன் நானும் பாதுகாப்பாக இருந்துவருகிறேன். ஆகையால் ஸுபா ஹுவோ, மாரீசனோ, அவர்களுடன் பின்துடர்ந்துவரும் ராக்ஷஸர்கள் அளவிலடங்காதவர்களானாலும் ஸரி; அவர் கள் யாவரையும் ஒரே க்ஷணத்தில் நாசம் செய்யும் விஷ யத்தில் உன் புத்ரன் ஸமர்த்தன்தான். அப்படி என்னி டம் உன் புத்ரனைக் கொடுத்து உதவி செய்தால், உன் புத்ரனுக்கு எவ்விதமான ச்ரேயஸ் ஏற்பட்டால் பதி நான்கு லோகங்களிலும், உன் புத்ரனுடைய கீர்த்தி பரவுமோ, அவ்விதமான ச்ரேயஸ்ஸை நான் உன்

புத்ரனுக்கு உண்டுபண்ணுகிறேன். விச்வாமித்ரருடைய யக்ஞத்தை ரக்ஷித்தவன் என்றும், அஹல்யாதேவியை சாபத்தினின்றும் விமோசனம் செய்தவனென்றும், சிவ தனுஸ்ஸை முறித்தவனென்றும், அநேக அபூர்வமான யசஸ்ஸை பரவச் செய்யக்கூடிய திருநாமங்களை என்மூலம் உன்புத்ரன் அடைந்து எல்லா லோகத்திலும் ப்ரஸித்தமாக விளங்குவான். மாரீசன், ஸுபாஹு என்ற இரண்டு ராக்ஷஸர்களும் உன் புத்ரனுக்கு எதிரில் யுத்தத்திற்கு நிற்கவே முடியாது. உன் புத்ரனை ராமனைத் தவிர அவர்களைக் கொல்லும் வீரனும் லோகத்திலில்லை. அந்த இருவர்களோ மஹா பாபிகள். ராமனிடத்தில் யுத்தம் செய்து ஜயிக்க வல்லமையற்றவர்களே. நீயும் ராமனிடத்தில் புத்ரன் என்ற ஸ்நேஹத்தை இதுமுதல் விட்டுவிடு: அவன் புத்ரனல்ல; லோகங்களெல்லாம் அவனுடைய புத்ரன்; அநேக காலமாக நான் செய்துவந்த காயத்ரீ மந்த்ர புரச்சரணை என்ற மஹா தபஸின்பேரில் ஆணையிட்டு உனக்குச் சொல்கிறேன்; என் யாகத்திற்கு ராமன் வந்தால் அந்த இரண்டு அரக்கர்களும் ஒழிந்துவிடுவார்கள் என்று நீ அறிவாய். நான் எப்படி ராமனை அறிந்தவனோ அதுபோல் உன்னால் அறியமுடியாது. ராமனுடைய பரதத்வத்தை உனக்கு எடுத்துச் சொல்கிறேன்—கேள்" அதாவது :

अहं वेद्मि महात्मानं
रामं सत्यपराक्रमम् ।
वसिष्ठोऽपि महातेजा
येचेमे तपसि स्थिताः ॥

அஹம் வேத்மி மஹாத்மாநம்
ராமம் ஸத்யபராக்ரமம் ।
வஸிஷ்டோऽபி மஹாதேஜா
யேசேமே தபஸி ஸ்திதா: ॥

அஹம் வேத்மி மஹாத்மாநம்
ராமம் ஸத்யபராக்ரமம் ।
வஸிஷ்டோபி மஹாதேஜா
யேசேமே தபஸி ஸ்திதா: ॥

என்ற ச்லோகத்தால் விச்வாமித்ர மஹர்ஷியானவர் ராமனை பரப்ரஹ்மம் என்று தசரத சக்ரவர்த்திக்கு ஸூசிப்பிக்கிறவராய்க் கொண்டு சொல்கிறார். "ராஜனே!" अहं (அஹம்) (அஹம்) நான் யார் தெரியுமா? அநேககாலம் குருகுல வாஸம் செய்து ஆத்ம ஞானத்தை அடைந்தவன். अहं (அஹம்) (அஹம்) நான் யோகாப்யாஸத்தின் பலத்தால் பராபர தத்வத்தை (பரதத்வமாகிய ப்ரஹ்மத்தையும்) அபர தத்வமாகிய ஸகுணத்தையும் ப்ரத்யக்ஷமாகப் பார்த்தவன். भवांस्तु (பவாம்ஸ்து) (பவாம்ஸ்து) நீரோ, கேவல கர்மடன். நானோ, ஜடை மரையுருவி இவைகளை தரித்துக்கொள்ளும் மஹர்ஷி; நீரோ க்ரோதபாரத்தை வஹிக்கிறவன். நானோ சுத்த ஸத்வ ப்ரதிக்ஞையோடு கூடினவன். நீரோ ரொம்ப ராஜஸன். நானோ गर्भभूतास्तपोधना: (கர்பபூதாஸ்தபோதனா:) (கர்பபூதாஸ்தபோதநா:) என்ற ரீதியை அனுஸரித்து 'ராமனுடைய கர்பத்தில் (குக்ஷியில்) வஸிக்கிறவர்கள் நாங்கள்' என்று எண்ணமுள்ளவன். நீயோ 'ராமனை உம்முடைய கர்பத்திலிருந்து வெளிப்படுத்தினவன்' என்று எண்ணிக் கொண்டிருப்பவன். நானோ யோகக்ரமத்தை அறிந்தவன்; நீரோ போக க்ரமத்தை அறிந்தவர். நானோ மோக்ஷ காமேஷ்டியைச் செய்தவன்; நீரோ புத்ர காமேஷ்டியைச் செய்தவர். நானோ தர்மத்தையும் மோக்ஷத்தையும் சரணமடைந்தவன்; நீரோ கேவல அர்த்தபரன். இவ்விதம் உமக்கும் எனக்கும் எவ்வளவோ வித்யாஸம் இருக்கிறது. ஆகையால் ராமனை நான் அறிவதுபோல் உம்மால் அறிய முடியாது. ஆனால்,

सो अंग वेद यदि वा नकिलेति वेदः सन्देग्ध्यनर्घविदमात्मनि रङ्गनाथं ।

𑌸𑍋 𑌅𑌙𑍍𑌗 𑌵𑍇𑌦 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌨𑌕𑌿𑌲𑍇𑌤𑌿 𑌵𑍇𑌦𑌸𑍍 𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑍍𑌯𑌨𑌰𑍍𑌘𑌵𑌿𑌧 𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿
𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌥𑌮𑍍 ।

ஸோ அங்க வேத யதி வா நகிலேதி வேதஸ் ஸந்தேக்த்யநர்கவித மாத்மநி
ரங்கநாதம் ।

என்ற ரீதியாக வேதமே தன்னிடம் பாஸித்துவரும் அளவற்ற மஹிமைதங்கிய பரம்பொருளாகிய மஹாவிஷ்ணுவை இவ்விதமான மஹிமையுள்ளவனென்று அறிந்திருக்குமோ, அறிந்திராதோ என்று ஸந்தேஹப்படுகிறேன்" என்று வேதத்திற்கே பரம்பொருளை அறிய முடியாது என்று ஏற்படுகிறதே. அதோடு,

विधिशिव सनकाद्यैः ध्यातुं अत्यन्तदूरं

𑌵𑌿𑌧𑌿𑌶𑌿𑌵 𑌸𑌨𑌕𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌧𑍍𑌯𑌾𑌤𑍁𑌂 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌦𑍂𑌰𑌂

விதிசிவ ஸநகாத்யை: த்யாதும் அத்யந்ததூரம்

என்ற ரீதியாக ப்ரஹ்மா, பரமேச்வரன், ஸனகாதி முனிகள், இவர்களுக்கும்கூட அந்த பரப்ரஹ்மத்தின் தத்வம் தெரியாது என்று ஏற்படுகிறதே. அதனால் ராமனாகிய தாரக ப்ரஹ்மம் அபரிச்சின்னமல்லவா். அறிவிற்கு விஷயமாகாத வஸ்துவல்லவா? "நீர் அதை எவ்விதம் அறிவீர்?" என்று கேட்பாயோ: அதைச் சொல்கிறேன் கேள்.

महात्मानं (𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂) (மஹாத்மாநம்) ஒருவராலேயும் அறிய முடியாத மஹிமையுடன் கூடினவர் என்று நான் அறிந்தேன். வேதமும் இவ்விதமே சொல்கிறது.

वेदाहमेतं पुरुषं महान्तं

𑌵𑍇𑌦𑌾𑌹𑌮𑍇𑌤𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌂

வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்

என்ற ச்ருதி வாக்யமே, பரப்ரஹ்மத்தை அபரிச்சின்னமென்றும், மஹாபுருஷன் என்றும் சொல்லுகிறது. அந்த

ச்ருதியில் एतं (ஏதம்) (எதம்) என்ற ஒரு பதம் அடங்கி யிருக்கிறது. அந்த பதத்திற்கு எதிரிலுள்ள வஸ்துவைக் காட்டும் சக்தி ஏற்படும். அந்த புருஷ ஸூக்த ச்ருதியி லுள்ள. एतं (ஏதம்) (எதம்) என்ற பதத்தின் ஸ்தானத்தில் रामं (ராமம்) (ராமம்) என்ற பதம் ஏற்பட்டது. அதனால் ஸௌலப்யமானது சொல்லப்படுகிறது, அதே புருஷஸூக் தத்திலுள்ள पुरुषं (புருஷம்) (புருஷம்) என்ற பதத்தின் ஸ்தானத்தில், ஸத்யபராக்ரமம் என்று ராமருக்கு விசேஷண மாக अहं वेद्मि (அஹம் வேத்மி) (அஹம் வேத்மி) என்ற ச்லோகத் தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் பரத்வமும், ராம னிடம் ஸித்தமாகிறது. பரத்வம், ஸௌலப்யம், இந்த இரண்டும் ராஜாக்களுக்கு குடை, சாமரம்போல் அலங் காரங்களாக இருக்கவேண்டியது அவசயமாகும். பரத்வம் மாத்திரம் இருந்து ஸௌலப்யம் இல்லாதபோனால் அந்த வஸ்து மனிதனுடைய இச்சைக்கு விஷயமாகாது. இதற் குத் தங்கமலையான மஹாமேருவையே த்ருஷ்டாந்தமாக அறியவும். ஸௌலப்யம் இருந்து பரத்வம் இல்லாத போனால் அதுவும் மனிதனுடைய இச்சைக்கு விஷயமாகாது. இதற்கு தெருவாசலில் கிடக்கும் மண்கட்டிகளே உதா ஹரணமாகும். அதனால் எந்த வஸ்துவினிடம் ஸௌலப் யம், பரத்வம் இரண்டும் இருந்துவருகிறதோ அவைகள்தான் ப்ராணிகளால் ப்ரார்த்திக்கத் தகுந்த வஸ்துக்களாக ஆகும். ராமரிடத்திலோ இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்து, ராமன் என்ற பெயருடன் ரொம்பவும் ஸுலபமாக விளங்கி வரு கிறான், என்ற பொருளை விளக்கும் रामः (ராம:) (ராம:) என்ற பதமே, ராமரிடத்திலுள்ள ஸௌலப்யத்தைக் காட்டுகிறது. सत्यपराक्रमं (ஸத்ய பராக்ரமம்) (ஸத்ய பராக்ரமம்) என்ற பத மானது பரத்வத்தை போதிக்கிறது. பரத்வம், ஸௌலப் யம் இரண்டும் இந்த ராமனிடம் இருந்துவருகிறபடியால் இந்த ராமன் மஹாத்மாவாக ஆகிறான். மஹாத்மா என்ற பதத்திற்கு,

तेजसां हि न वयः समीक्ष्यते

𑌤𑍇𑌜𑌸𑌾𑌂 𑌹𑌿 𑌨 𑌵𑌯𑌃 𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇

தேஜஸாம் ஹி ந வய: ஸமீக்ஷ்யதே

என்ற ரீதியாக, ஞானமோ, வீர்யமோ, சௌர்யமோ, பராக்ரமமோ, இவைகள் வயதைப் பொறுத்து ஏற்பட்டதல்ல. வயது சின்னதானாலும் ஞான வீர்யாதிகள் பெரிதாக இருக்கலாம். ஆகையால் உன்னுடைய புத்ரனை ராமன் அதிபால்யமானாலும், அவனுடைய ஞானத்தையோ, வீர்யத்தையோ, பராக்ரமத்தையோ, அளவிடமுடியாது. आत्मा (𑌆𑌤𑍍𑌮𑌾) (ஆத்மா) என்ற சப்தத்தால் சொல்லப்படுகிற ஜீவகோடிகளுக்கும் இவன் மேலானவன்——அதாவது,

नियन्ता य आत्मनि तिष्ठन् अन्तरो यमयति

𑌨𑌿𑌯𑌨𑍍𑌤𑌾 𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍 𑌅𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑌿

நியந்தா ய ஆத்மநி திஷ்டந் அந்தரோ யமயதி

என்ற அந்தர்யாமி ப்ராஹ்மண வாக்யமே அதில் ப்ரமாணமாகும். இந்த ராமனுடைய தேஹமும் ப்ராக்ருத தேஹமல்ல. ஸ்வபாவமும் உயர்ந்த ஸ்வபாவமாகும்.

न तस्य प्राकृता मूर्तिः (𑌨 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌾 𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌃) (ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்தி:) என்ற ஸ்ம்ருதியானது அவதார புருஷர்களுக்கு கர்ம பரதந்த்ரமான சரீரம் இல்லை என்று சொல்லுகிறது.

अभयं सर्व भूतेभ्यः ददामि एतद्व्रतं मम

𑌅𑌭𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵 𑌭𑍂𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌦𑌦𑌾𑌮𑌿 𑌏𑌤𑌦𑍍𑌵𑍍𑌰𑌤𑌂 𑌮𑌮

அபயம் ஸர்வ பூதேப்ய: ததாமி ஏதத்வ்ரதம் மம

என்ற ரீதியாக தன்னை சரணமடைந்தவனுக்கு ஸர்வ பூதங்களிலிருந்தும் அபயத்தைக் கொடுக்கின்றேன் என்று

ப்ரதிக்ஞை செய்த ராமனுடைய ஸ்வபாவமோ ரொம்பவும் மேலானது என்பதில் ஆக்ஷேபணை அற்றது.

स उश्रेयान् भवति जायमानः

ஸ உஶ்ரேயாந் ஹவதி ஜாயமாநஃ

ஸ உச்ரேயாங் பவதி ஜாயமாந:

என்ற ச்ருதியால் இந்த அவதாரத்தில் காணப்படும் ஸ்வபாவவே மஹா ஸ்வபாவம்; பெரிய மனது; உயர்ந்த ஒழுக்கமுள்ளவன் என்பதைக் காட்டுகிறதல்லவா? அத்துடன், இந்த ராமன் ஸத்ய பராக்ரமன். न अविजित्य निवर्तते (ந அவிஜித்ய நிவத்ததே) (ந அவிஜித்ய நிவர்ததே) என்று சொல்லியபடி எந்த மஹாயுத்தத்திலும் ஜயிக்காமல் திரும்பி வரமாட்டான் என்று தெரிகிறபடியால், மஹாபராக்ரமசாலி; அத்துடன் உண்மையான பராக்ரமத்துடன் கூடினவன்; தவிரவும் சத்ருக்களையும் "யுத்தத்தை நிறுத்திக்கொள், ஏன் கஷ்டப்படுகிறாய்? உன்னை நான் விட்டுவிடுகிறேன்" என்று அடிக்கடி நேரிலும், தூதர்கள் மூலமும் சொல்லியும், அதை பொருட்படுத்தாமல் தன்னை பலாத்காரமாகப் பீடிக்கவந்த சத்ருக்களைக் கொல்கிறவன். அதாவது சத்ருக்களையும் ந்யாய வழியில் போய்க் கொல்கிறவன். அதிலும், யுத்தகளம் சென்று ஆயுத ப்ரயோகம் செய்யாமலிருக்கும் காலத்திலேயே ராமனைப் பார்த்த மாத்திரத்திலேயே சத்ருக்களுக்கு सुख सुप्तः परं तपः (ஸுவ ஸுபூஃ வரம் தவஃ) (ஸுக ஸுப்த: பரம் தப:) என்று தூங்கும் பொழுதே சத்ருக்களை தபிக்கச் செய்கிறவன் என்று தெரிகிறபடியால், ராமருடைய அவயவ விசேஷங்களில் ஜ்வலிக்கும் தேஜஸ்ஸே சத்ருக்களுடைய ஹ்ருதயத்தை பிளக்கக் கூடிய சக்தியுள்ள மஹா பராக்ரமசாலி, ஆகையால் ஸத்ய பராக்ரமனும், மஹாத்மாவாயும், உள்ள ராமனை மஹா தபஸ்வியான நான் அறிவதுபோல், போகியான நீ அறிய முடியாது என்பது நிச்சயமாகும்—என்பதை

अहं वेद्मि महात्मानं....

ஃஹம் வெஃி மஹாஃாநம்...

அஹம் வேத்மி மஹாத்மாநம்...

என்ற ச்லோகத்தின் பூர்வார்த்தத்தால் விளக்கினர். ஆனல், "ராஜனே! என் கார்யத்திற்காக நான் ராமனை ச்லாகிப்பதாக நீ நினைக்கக்கூடாது. நான் எப்படி ராமனை அறிந்தவனே அதுபோல் வஸிஷ்டரும் ராமனுடைய பரதத்வத்தை அறிந்தவர்தான். என் வாக்யத்தில் நம்பிக்கை இல்லாத போனல் வஸிஷ்டரிடம் நீ கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். வஸிஷ்ட பகவானே உனக்கு ரொம்பவும் பந்துவான மனுஷ்யன். உங்கள் குலாசார்யன். அத்துடன் யதார்த்தவாதி. எனக்கு பரம விரோதியும் ஆவார். வஸிஷ்டருக்கும் எனக்கும் நடந்த கலகங்களை நீ அறிந்திருக்கலாம். எங்கள் இருவர்களுக்கும் ஏற்பட்ட விரோதத்தால் நான் சொல்வதற்கு விரோதமாகத்தான் அவர் பேசுவார். ஆகிலும் ராமனுடைய உண்மையைச் சொல்வதில் அந்த விரோதத்தை பாராட்டமாட்டார். அவரிடமும் ராமருடைய பெருமையை நீ கேட்டு அறிந்துகொள்ளலாம். எந்த வஸிஷ்டருடைய வாக்யத்தால் நான் ப்ரஹ்ம ரிஷியாக ஆனேனே அந்த வஸிஷ்டரும் ராமனை அறிவார். அந்த வஸிஷ்ட பகவான் மஹா தேஜஸ்வி. ப்ரஹமாவிற்கு ஸரஸ்வதி என்ற தர்மபத்னியிடம் பிறந்த இஷ்டபுத்ரன்; யோகாப்யாஸத்தால் ஸித்தமான ஞானத்துடன் கூடினவர். सत्यं वद, धर्मं चर (ஸதூம் வஃ, யஃம் அர) (ஸத்யம் வத தர்மம் சர) என்ற சாஸ்த்ரத்தை உன்னைப்போலொத்த சிஷ்ய ஜனங்களுக்கு உபதேசிப்பது மாத்ரமில்லாமல், ஸ்வயமநுஷ்டாதாவும் ஆவார். அந்த மஹானுபாவனிடத்திலும் ராமனுடைய தத்வத்தை நீ ஏகாந்தத்தில் விசாரிக்கலாம்" என்று விச்வாமித்ர மஹர்ஷி சொன்னர்.

ராஜன் சொன்னதாவது: "மஹர்ஷே தங்கள் வார்த்தையில் நம்பிக்கையில்லாமலா வஸிஷ்டரை எனக்கு கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும்! மேலும்,

यद्ब्राह्मणश्च अब्राह्मणश्च प्रश्नम् एयातां ब्राह्मणाय अधिब्रूयात्

𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌶𑍍𑌚 𑌅𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌮𑍍 𑌏𑌯𑌾𑌤𑌾𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌯
𑌅𑌧𑌿𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍

யத்ப்ராஹ்மணச்ச அப்ராஹ்மணச்ச ப்ரச்நம் ஏயாதாம் ப்ராஹ்மணாய
அதிப்ரூயாத்

என்ற வேதவாக்யமானது, ப்ராஹ்மணனுக்கும் அப்ராஹ்மணனுக்கும் ஒரு விஷயத்தைப் பற்றி விவாதம் ஏற்பட்டால் ப்ராஹ்மணனுடைய கக்ஷியில் சேர்ந்துகொள்ள வேண்டும்; ப்ராஹ்மணனுக்கு ஸாதகமாகவே பேசவேண்டும் என்று சொல்கிறபடியால் அதை அனுஸரித்துப் பார்த்தால் தங்களுக்கும் எனக்கும் ராமனைப் பற்றி ஏற்பட்ட விசாரம் ப்ராஹ்மண அப்ராஹ்மண விசாரமாக ஆகிவிட்டது. நான் க்ஷத்ரியனானதால் அப்ராஹ்மணனல்லவா? தாங்களோ மஹாப்ராஹ்மணன்! நம்மிருவர்களுக்கும் ஏற்பட்ட விவாதத்தில் வஸிஷ்டரை ஸாக்ஷியாக அவலம்பித்தால் தங்கள் பக்ஷமாகத்தான் வஸிஷ்டர் பேசுவார். அந்த வஸிஷ்டருக்கு மேல்சொன்ன வேதவாக்யம் தெரியாதா? ஆகையால் வஸிஷ்டருடைய வார்த்தையில்தான் எனக்கு எப்படி விச்வாஸம் உண்டாகும்?" என்றார்.

விச்வாமித்ர மஹர்ஷியோ அதற்கு பதிலாக "வஸிஷ்டரிடம் கேட்கவேண்டாம். ये इमे (𑌯𑍇 𑌇𑌮𑍇) (யே இமே) ராஜத்வாரத்தில் ஸம்பந்தமில்லாமலும், வேறு யாதொருவிதமான லோக விஷயத்தில் ஈடுபடாமலும், அரண்யத்திலேயே வாஸம் செய்துகொண்டு,

तस्य धीराः परिजानन्ति योनिं

𑌤𑌸𑍍𑌯 𑌧𑍀𑌰𑌾𑌃 𑌪𑌰𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌯𑍋𑌨𑌿𑌂

தஸ்ய தீரா: பரிஜாநந்தி யோநிம்

என்று சாஸ்த்ரத்தில் சொல்லியபடி பகவதவதார ரஹஸ்யத்தையும் அறிந்த மஹர்ஷிகளுண்டோ, அதாவது புலஸ்த்யர்

அகஸ்த்யர், முதலான ஆசார்ய பதவியை நிர்வாஹம் செய்து வரும் லோக குருக்கள், அத்துடன் கர்ப்பத்திலேயே திவ்ய ஞானத்தை அடைந்த வாமதேவர், ஏழு கல்பங்களாக சிரஞ் ஜீவியாய் இருந்துவரும் மார்க்கண்டேயர் முதலான ப்ரஹ்ம வித்துக்களுக்குள் அக்ரேஸராளான மஹான்களுண்டோ, அவர்களிடம் ராமனுடைய பரதத்வத்தை விசாரித்து நான் சொன்னபடி அவர்கள் சொன்னால், என்னுடன் ராமனை அனுப்பினால் போதும். அவர்களிடமும் உனக்கு ஸந்தேஹ மிருந்தால்,

तपसि स्थिता: (தபஸி ஸ்திதா:) (தபஸி ஸ்திதா:) காயிகவ்யா பாரங்களே ஒன்றுமில்லாமல், கேவலம் ஆத்ம ஸ்வரூப அனுஸந்தானம் என்ற மஹா தபஸ்ஸில் பரிநிஷ்டிதாளான அவதூத ராஜயோகிகளான ஸநகாதிகளை வேண்டுமானா லும், தனித்தனியாக ஸந்தித்து 'விச்வாமித்ரர் என் பிள்ளை யான ராமரைக் கடவுள் என்று சொல்கிறாரே! அந்த விஷயத்தில் தங்கள் அபிப்ராயம் என்ன?' என்று விசா ரித்து, வஸிஷ்டருடைய மனதும், வானப்ரஸ்தாளான வாம தேவர் முதலானவர்களின் மனதும், ஸநகாதிகளான ஸந்யாஸி களுடைய மனதும், ஏகரூபமாக இருந்து 'ராமனை ப்ரஹ் மம்' என்று அவர்கள் சொன்னார்களேயானால், உன் மன திற்கும் திருப்தியானால் ராமனை என்னுடன் அனுப்பி என் யக்ஞத்தைப் பூர்த்திசெய்தால் போதும்.

தவிரவும், ராமனை ஸத்யபராக்ரமன் என்று நான் அறி கிறேன்" என்றார்.

सत्यमाप: (ஸத்யமாப:) (ஸத்யமாப:) என்ற ச்ருதியை அனு ஸரித்து ஸத்யம் என்ற பதத்தால் ஸமுத்ரமானது சொல்லப் படும். அந்த ஸமுத்ரத்தில், க்ருதயுகத்தில் துர்கமாஸுரன் என்ற ஒரு அஸுரனால் வேதம், மந்த்ரங்கள் இவைகள் அபஹரிக்கப்பட்டு பாதாள லோகத்தில் ரொம்பவும் கூட மாக (ரஹஸ்யமாக) ரக்ஷிக்கப்பட்டு வந்தன. அந்த ஸந்

தர்ப்பத்தில் ஸத்பவ்ரதன் என்றொரு அரசன் லோகத்தை ஆண்டுவந்தான். லோகத்தில், திடீரென்று க்ஷாமம் ஏற்பட்டுவிட்டது. அதற்குக் காரணமோ தர்மானுஷ்டானம் குறைந்துபோனதே. அதன் காரணமோ, வேத மந்த்ரங்கள் ப்ரகாசிக்காமல் துர்கமாஸுரனால் அபஹரிக்கப்பட்டு, பாதாள லோகத்தில் மறைந்துவந்ததே காரணமாகும். இதை அறிந்த ஸத்யவ்ரதன் என்ற ராஜனும் ரொம்பவும் துக்கத்தை அடைந்துவந்தான். ஆனால்,

जरामरणमोक्षाय मां आश्रित्य यतन्ति ये

ஜராமரணமொக்ஷாய மாம் ஆஶ்ரித்ய யதந்தி யெ

ஜராமரணமோக்ஷாய மாம் ஆச்ரித்ய யதந்தி யே

என்று பகவான் சொல்லியிருப்பதால் இந்த துக்கத்தை நிவ்ருத்தி செய்துகொள்ள பகவானையே பஜிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் பகவானை பஜித்துவந்தான். பூலோகத்தில் தர்மானுஷ்டானம் குறைந்ததால், தேவலோகத்திலும் துர்பிக்ஷம் அதிகமாய், தேவர்களுக்கு புரோடாசம் என்ற ஆஹாரமில்லாமல் கஷ்டம் ஏற்பட்டுவிட்டது. தேவர்களும் உடன் வைகுண்டம் சென்று அந்த துக்கத்தை நிவ்ருத்தி செய்துகொள்ள மஹாவிஷ்ணுவை ஸ்தோத்ரம் செய்து ப்ரார்த்தித்தார்கள். மஹாவிஷ்ணுவோ தேவர்களுடைய ப்ரார்த்தனைக்கும், பூலோகத்தில் தன்னை பூஜித்துவரும் ஸத்யவ்ரதன் என்ற அரசன் ப்ரார்த்தனைக்குமிணங்கி, "மத்ஸ்யமூர்த்தி"யாக அவதாரம் செய்து, அந்த துர்கமாஸுரனையும் ஸமுத்ரத்தில் யுத்தம்செய்து வதித்து பாதாளலோகத்தினின்று வேத மந்த்ரங்களைக் கொண்டுவந்து பூலோகத்தில் பரவச் செய்தார். அதுமூலம் லோகத்தை உத்தாரணம் செய்து வைத்தார் என்று மத்ஸ்யாவதாரக் கதையானது புராணாந்தரங்களில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ரக்ருதத்திலோ, ஸத்யபராக்ரமம் என்ற சப்தத்திற்கு அர்த்தத்தைக் கவனிக்கவும். सत्यमापः (ஸத்யஉ௵வஃ) (ஸத்ய

மாப:) என்ற ச்ருதியால்தான் அப் என்ற ஜலத்திற்கு ஸத்யம் என்ற பெயர் ஏற்பட்டது என்று முன்பே சொல்லப்பட்டது. அதை அனுஸரித்து,

सत्ये परं शत्रु आक्रमति इति सत्यपराक्रमः

𑌸𑌤𑍍𑌯𑍇 𑌪𑌰𑌂 𑌶𑌤𑍍𑌰𑍁𑌂 𑌆𑌕𑍍𑌰𑌮𑌤𑌿 𑌇𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌃

ஸத்யே பரம் சத்ரும் ஆக்ரமதி இதி ஸத்ய பராக்ரம:

என்ற ஸமாஸத்தால் ஸமுத்ர ஜலத்தில் மத்ஸ்யமூர்த்தியாக அவதாரம் செய்து லோக சத்ருவான துர்க்கமாஸுரனை யுத்தத்தில் ஜயித்துவதித்தவர் என்ற பொருள் விளங்குகிறது. அதையே விச்வாமித்ரர் ப்ரகாசப்படுத்துகிருர். "ராஜனே! 'மத்ஸ்யாவதாரம் செய்த, சத்ருவை ஜயித்து வேதமந்த்ரங்களை பூலோகத்தில் பரவச்செய்து, மஹாவிஷ்ணுவே உன் குமாரன் என்று சொல்லப்படும் இந்த ராமன்' என்று நான் அறிகிறேன்.

அதுவுமன்னியில் ஸமுத்ர ஜலத்தில், மேலான, அதாவது பெரிய மந்தர பர்வதத்தை தேவாஸுராள் அம்ருத மதனம் செய்யும் காலத்தில் கூர்மாவதாரம் செய்து, தனது முதுகு ஓடுமூலம் ஸமுத்ரத்தில் முழுகின அந்த உயர்ந்த மலையை ஆக்ரமித்துத் தூக்கி நிறுத்திவைத்த கூர்ம மூர்த்தியான மஹாவிஷ்ணுவே இந்த ராமன் என்று நான் அறிகிறேன். இதில்,

सत्ये समुद्रजले परं उत्कृष्ट मन्दरपर्वतं आक्रमतीति सत्यपराक्रमः

𑌸𑌤𑍍𑌯𑍇 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌜𑌲𑍇 𑌪𑌰𑌂 𑌉𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌂 𑌮𑌨𑍍𑌦𑌰𑌪𑌰𑍍𑌵𑌤𑌂
𑌆𑌕𑍍𑌰𑌮𑌤𑍀𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌃

ஸத்யே ஸமுத்ரஜலே பரம் உத்க்ருஷ்டம் மந்தரபர்வதம் ஆக்ரமதீதி ஸத்யபராக்ரம:

என்ற ஸமாஸத்தால் மேல்சொன்ன தாத்பர்யம் ப்ரகாசிக்கும். இதனல் கூர்மாவதார கதையும் ஸூசிப்பிக்கப்படுகிறது.

அவ்விதமே सत्यमापः (ஸத்யமாப:) (ஸத்யமாப:) என்ற ச்ருதியை அனுஸரித்து, ஸத்யம் என்ற ஸமுத்ர ஜலத்தில் परं (பரம்) (பரம்) சத்ருவான, அதாவது கர்மானுஷ்டானத்திற்கு ஸாதகமான பூமியை பாய்போல் சுருட்டிக்கொண்டு ஸமுத்ரத்தில் மூழ்கி பாதாளலோகம் சென்ற, ஹிரண்யாக்ஷனை ஆக்ரமித்தவர் (யுத்தம் செய்து வதித்து ஜயத்தை அடைந்தவர்) என்ற தாத்பர்யம் ப்ரகாசிக்கிறபடியால் ஹிரண்யாக்ஷனை கொன்று, பூமியை ஸமுத்ரஜலத்தில் ஸ்தாபனம் செய்த யக்ஞ வராஹமூர்த்தியே ஸ்ரீராமனென்றும் நான் அறிகிறேன். இதனால் வராஹ அவதார கதையும் ஸூசிப்பிக்கப்படுகிறது.

मित्रभावेन संप्राप्तं न त्यजेयं कथंचन

மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதம்சந

மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதம்சந

என்று பக்தனை நான் கைவிடமாட்டேன்; ரக்ஷிப்பேன் என்று தான் சொன்ன வார்த்தை ஸத்யமாக ஆகவேண்டியதின்பொருட்டு, அதிலும் பரம பக்த சிரோமணியான ப்ரஹலாத ஆழ்வாருடைய விஷயத்தில் அதை ஸத்யமாகச் செய்வதற்காக परं (பரம்) (பரம்) சத்ருவான ஹிரண்யகசிபுவை நரஸிம்ஹ அவதாரம் செய்து ஆக்ரமித்தவர் என்ற தாத்பர்யமும், सत्यपराक्रमः (ஸத்யபராக்ரம:) (ஸத்யபராக்ரம:) என்ற பதத்தில் அடங்கியிருப்பதால் ப்ரஹ்லாதனை ரக்ஷிப்பதற்காக நரஸிம்ஹாவதாரம் செய்து ஹிரண்யகசிபுவைக் கொன்ற மஹாவிஷ்ணுவே உன் குமாரன் என்பதை நான் அறிவேன்.

सत्याय, भक्तपरिपालनाय, अमोघत्वसिद्ध्यर्थं परं, शत्रुं हिरण्यकशिपुं, आक्रमतीति सत्यपराक्रमः

ஸத்யாய, பக்தபரிபாலநாய, அமோகத்வஸித்த்யர்த்தம் பரம், ஶத்ரும் ஹிரண்யகஶிபும், ஆக்ரமதீதி ஸத்யபராக்ரம:

ஸத்யாய, பக்தபரிபாலநாய, அமோகத்வஸித்யர்த்தம்
பரம், சத்ரும் ஹிரண்யகசிபும், ஆச்ரமதீதி ஸத்யபராக்ரம:

என்ற ஸமாஸத்தால் மேல்சொன்ன தாத்பர்யம் ப்ரகாசிக்கிறது.

தவிரவும், ஸத்பக்தனுடையவார்த்தையை ஸத்யமாக்குவதற்காக, அதாவது மஹாபலி சக்ரவர்த்தி தன்னுடைய விஷயத்தில் மூன்று அடி பூமிதானம் செய்த வார்த்தையை ஸத்யமாகச் செய்வதற்காக, பரं (வஙூ) (பரம்) பரனுன தேவர்களுக்கு சத்ருவான மஹர்பலியை மூன்ருவது அடியையும் அவன் கொடுத்ததாக ஆகவேண்டுமென்ற எண்ணத்துடன், அந்த மஹாபலியினுடைய தலையிலும் தன் காலை வைத்து ஆக்ரமித்தவர். அதாவது, வாமனுவதாரம் செய்த மஹாவிஷ்ணு, அந்த விஷ்ணுவே இந்த ராமர்தான்.

அத்துடன், பித்ருவாக்யத்தை ஸத்யமாக பரிபாலனம் செய்வதற்காக, அதாவது தனது பிதாவான ஜமதக்னி மஹர்ஷி ஸமாதியில் இருந்துவரும் காலத்தில், கார்த்தவீர்யார்ஜுனன் என்ற க்ஷத்ரியன், ஜமதக்னி மஹர்ஷியினிடமிருந்த காமதேனுவை அபஹரித்துக்கொள்வதற்காக விவாதம் செய்த காலத்தில், ஜமதக்னி மஹர்ஷியானவர் கார்த்தவீர்யார்ஜுனனைப் பார்த்து, "ஏதாவது பலாத்காரமாக அக்ரமம் செய்தால் என் புத்ரனுக அவதரித்து இருக்கும் பரசுராமன் என்ற மஹாவிஷ்ணுவால் உம்முடைய க்ஷத்ரிய ஜாதி என்றதின் பூண்டே யில்லாமல் அழிந்துவிடும்" என்று சொன்ன வார்த்தையை ஸத்யமாய்ச் செய்வதற்காக ப்ராஹ்மண விரோதிகளான க்ஷத்ரியர்களை பூமண்டலம் முழுமையும் இருபத்தோர் தடவைகள் ப்ரதக்ஷிணம் செய்து ஆக்ரமித்தவர்; த்வம்ஸம் செய்தவர். அதாவது க்ஷத்ரியப் பூண்டை ஒழிக்க பரசுராமராக அவதரித்தவரே இந்த ஸ்ரீராமன் என்று நான் அறிகிறேன்.

सत्याय, पितुः वाक्यस्य अमोघत्वसिद्ध्यर्थं, परान् ब्रह्मरिपून् क्षत्रियान्,
आक्रमतीति सत्यपराक्रमः

𑌸𑌤𑍍𑌯𑌾𑌯, 𑌪𑌿𑌤𑍁𑌃 𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑍍𑌯 𑌅𑌮𑍋𑌘𑌤𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌪𑌰𑌾𑌨𑍍
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑌿𑌪𑍂𑌨𑍍 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌨𑍍, 𑌆𑌕𑍍𑌰𑌮𑌤𑍀𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌃

ஸத்யாய, பிது: வாக்யஸ்ய அமோகத்வஸித்யர்த்தம், பராந்
ப்ரஹ்மரிபூந் க்ஷத்ரியாந், ஆக்ரமதீதி ஸத்யபராக்ரம:

என்று ஸத்யபராக்ரம: என்ற பதத்தை பரசுராமாவதார பலமாகவும் நயனம் செய்துகொள்ளவேண்டும்.

அத்துடன், தசரதருடைய புத்ரகாமேஷ்டியாகத்தில் தேவர்களால் ப்ரார்த்திக்கப்பட்டு, அந்த ஸமயத்தில்,

एतस्मिन् अन्तरे विष्णुः

𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌅𑌨𑍍𑌤𑌰𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃

ஏதஸ்மிந் அந்தரே விஷ்ணு:

என்று சொல்லியபடி, பரிபூர்ணமாக தான் ஆவிர்பவித்த காலத்தில், தேவர்கள் ராவணனைக் கொல்வதற்காக தசரதபுத்ரனாக அவதரிக்கவேண்டும் என்று தேவர்கள் ப்ரார்த்தித்தபடி, தானும் அவ்விதம் தசரதருக்குப் பிள்ளையாகப் பிறந்து ராவணனைக் கொல்கிறேன் என்று சொன்ன வார்த்தையை ஸத்யமாய்ச் செய்வதற்கு அந்த தசரதரான உன்னிடத்தில் புத்ரனாய்ப் பிறந்தாகிவிட்டது. லோகசத்ருவான ராவணனையும் அதிசீக்கிரத்தில் கொல்லப்போகிறார். ராவண வதம் அதிசீக்கிரமே நடக்கப்போகிறபடியால் சீக்கிரமாக நடக்கும் பாவி விஷயத்தையும், வர்த்தமான காலத்திலுள்ளது போல்,

वर्तमानसामीप्ये वर्तमानवत्

𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑌾𑌮𑍀𑌪𑍍𑌯𑍇 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌵𑌤𑍍

வர்தமாநஸாமீப்யே வர்தமாநவத்

என்ற ந்யாயத்தை அனுஸரித்து, आक्रमतीति आक्रमः (ஆக்ரம தீதி ஆக்ரம:) (ஆக்ரமதீதி ஆக்ரம:) என்று ஏற்படுகிறது. இதனுல் ராவண வதத்திற்காக அவதாரம் செய்த ராமாவதார பலமாகவும் सत्यपराक्रमं (ஸத்யபராக்ரமம்) (ஸத்யபராக்ரமம்) என்ற பதத்தில் உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

தவிரவும் பீஷ்மக மஹாராஜாவினுடைய பெண்ணுன ருக்மணீ தேவி தன்னை அடைவதான உத்தேசத்துடன் ப்ராஹ்மணன் மூலமாக எழுதியனுப்பிய கடிதத்தைப் பார்த்து, அவ்விதமே நான் ருக்மணியின் மனோரதத்தைப் பூர்த்தி செய்கிறேன் என்று ப்ராஹ்மணனுக்கு எதிரில் சொன்ன வார்த்தையை,

अप्यहं जीवितं जह्यां त्वां वा सीते सलक्ष्मणां।
न तु प्रतिज्ञां संश्रुत्य ब्राह्मणेभ्यो विशेषतः ॥

அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணாம் ।
ந து ப்ரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விஶேஷத: ॥

அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணும் ।
ந து ப்ரதிஜ்ஞாம் ஸம்ச்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விசேஷத: ॥

என்ற வாக்யத்தால், 'ப்ராணனையும் இழந்துகொள்வேன்; மனைவியையும் விட்டுவிடுவேன்; ஸஹோதரனையும் வெறுத்துவிடுவேன்; சொன்ன வார்த்தையை பரிபாலனம் செய்யாமலிருக்க மாட்டேன்; அதுவும் ப்ராஹ்மணனுக்கு எதிரில் சொன்ன வார்த்தையைக் கட்டாயம் பரிபாலனம் செய்தே தீருவேன்' என்று சொன்னபடி, ருக்மிணி தேவியினுல் அனுப்பப்பட்ட ப்ராஹ்மணனுக்கு எதிரில் சொல்லப்பட்ட வார்த்தையையும் ஸத்யமாக காப்பாற்றுவதின் பொருட்டு, அவள் தன்னை பர்த்தாவாக அடைவதற்கு, விரோதியான ருக்மி, சிசுபாலன் முதலான சத்ருக்களையும் ஆக்ரமிக்கிறவர்

என்று க்ருஷ்ணாவதார பரமாகவும் सत्यपराक्रमं (ஸத்ய வராக்ரமம்) (ஸத்யபராக்ரமம்) என்ற பதத்தை வித்வான்கள் உப யோகப்படுத்த வேண்டும்.

ஸத்யம் என்றால் ஈச்வரன், வேதம் என்று சொல்லப் படும். அதற்கு சத்ருவான பௌத்தர்கள் ஸத்யபராள் என்று சொல்லப்படுவார்கள். அவர்களையும் புத்தாவதாரம் செய்து ஆக்ரமித்தவரான மஹா விஷ்ணுவே இந்த ராமன் என்று நான் அறிகிறேன்.

सत्यात् परः सत्यपरः (ஸத்யாத் வரः ஸத்யவரः) (ஸத்யாத் பர: ஸத்யபர:) பர: என்றால் அன்ய: வேறு ; நிஜமில்லாதவன். அதா வது கேவலம் பணத்தையும், காமத்தையும் மட்டும் முன் னிட்டு ஸத்யத்திற்கு வெகு தூரம் அப்பால் போன கலி யுகத்திலுள்ள பாபிகளையும் கல்கி அவதாரம் செய்து ஆக்ர மிக்கிறவர் என்றும் ஸத்ய பராக்ரமம் என்ற பதத்தை கல்கி யவதார பரமாகவும் உபயோகப்படுத்திக் கொள்ளவேண் டும். இந்த இடத்தில்,

वर्तमानसामीप्ये वर्तमानवत् प्रयोगः

வத்மாநஸாமீப்யே வத்மாநவத் வ்ரயோமः

வர்தமாநஸாமீப்யே வர்தமாநவத் ப்ரயோக:

என்ற ந்யாயத்தை அவலம்பிக்கவும்.

இதனால், மத்ஸ்யாவதாரம் செய்து வேதத்தை ரக்ஷித்த வரும், கூர்மாவதாரம் செய்து தேவர்களுக்கு அம்ருதத்தை அர்ப்பணம் செய்தவரும், வராஹ அவதாரம் செய்து பூமியை ரக்ஷித்தவரும், நரஸிம்ஹாவதாரம் செய்து ப்ரஹ் லாதன் என்ற பக்த ஜனத்தைக் காப்பாற்றியவரும், வாம னவதாரம் செய்து தேவர்களுக்கு ராஜ்யத்தைத் திரும்ப வாங்கிக்கொடுத்தவரும், பரசுராமவதாரம் செய்து துஷ்ட க்ஷத்ரியர்களை அழித்தவரும், ராமாவதாரம் செய்து லோக கண்டகனை ராவணனைக் கொன்றவரும், க்ருஷ்ணாவதாரம் செய்து சிசுபாலன் முதலான துஷ்டர்களை ஜயித்தவரும்,

ஈச்வரன் வேதம் இவைகளுக்கு சத்ருக்களான பௌத் தர்களை புத்தாவதாரம் செய்து ஆக்ரமித்தவரும் கல்கி அவதாரம் செய்து அதர்மத்தைச் செய்த ஜனங் களை நாசம் செய்தவரும், எந்த மன்னனே, எந்த மஹா விஷ்ணுவோ, எந்த பராபரமோ, எந்த வேதாந்த வேத் யமோ, எந்த அகண்ட சைதன்யமோ, அதுவே இதோ எதிரில் "ராமன்" என்ற பெயருடன் மஹாத்மாவாக விளங்கிவருகிறது என்பதை நான் அறிகிறேன்.

मत्स्यः कूर्म बराहश्च नृसिह्मो वामनस्तथा ।
जामदग्न्यः दाशरथिः वासुदेवो जिनो द्विजः ॥

𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌃 𑌕𑍂𑌰𑍍𑌮 𑌵𑌰𑌾𑌹𑌶𑍍𑌚 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑍋 𑌵𑌾𑌮𑌨𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌜𑌾𑌮𑌦𑌗𑍍𑌨𑍍𑌯𑌃 𑌦𑌾𑌶𑌰𑌥𑌿𑌃 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍋 𑌜𑌿𑌨𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 ॥

மத்ஸ்ய: கூர்ம வராஹச்ச ந்ருஸிம்ஹோ வாமநஸ்ததா ।
ஜாமதக்ந்ய: தாசரதி: வாஸுதேவோ ஜிநோ த்விஜ: ॥

இந்த ச்லோகத்தால் ஸ்ரீமந்நாராயணனுடைய பத்து அவ தாரங்களும் வெளியாகின்றன.

ராஜனே! இந்த உண்மையை நான் அறிவதுபோல் உம் மால் முடியாது நான் யோகி; நீர் போகி. உமக்கும்நமக்கும் எவ்வளவோ தாரதம்யங்கள் உள்ளன. அத்துடன், ராமனை நான் अहं वेद्मि (𑌅𑌹𑌂 𑌵𑍇𑌦𑍍𑌮𑌿) (அஹம் வேத்மி) 'நானென்று' அறிகிறேன். "நான்" என்று சொல்லப்படும் என் ஆத்மா வாகவே எனக்கு பாஸிக்கிறது. உமக்கோ ராமன் பிள்ளை யாக பாஸிக்கிறான். எனக்கு ராமன் ஆத்மாவே; உமக்கு ராமன் ஆத்மீயன். அவனவனுக்குத் தன் தன் ஆத்மாவிலுள்ள ப்ரேமை விச்வாஸம் அளவற்றது. தன்னைச் சேர்ந்தவனிடத் தில் தன்னிடத்திலுள்ள ப்ரேமையைப்போல் ப்ரேமை ஏற் படாது. தன்னைச் சேர்ந்தவன் தனக்கு ஏதோ வேண்டியவன், உபகாரத்தைச் செய்தவன், என்பதற்காக அவனிடம் ப்ரேமை ஏற்படுகிறது. தன்னிடமுள்ள ப்ரேமைக்கு தானே காரணமன்னியில் மற்றொன்றும் காரணமில்லை.

ஆகையால்,

तत्प्रेम आत्मार्थं अन्यत्र नैवं अन्यार्थं आत्मनि

𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑍇𑌮 𑌆𑌤𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌂 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌨𑍈𑌵𑌂 𑌅𑌨𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌂 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿

தத்ப்ரேம ஆத்மார்த்தம் அந்யத்ர நைவம் அந்யார்த்தம் ஆத்மநி

புத்ரன், பார்யை முதலானவர்களிடம் ஏற்படும் விச்வாஸமோ ஆத்மாவைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக அதாவது ஆத்மசேஷத்வ ப்ரயுக்தம்; ஆத்மாவினிடம் ப்ரேமையோ அவ்விதமல்ல. அன்யசேஷம் என்பதற்காக இல்லை. அனன்ய சேஷத்வ ப்ரயுக்தம் என்றபடி ஆத்மாவாக விளங்கும் ராமனிடம் எனக்குள்ள ப்ரேமை நிருபாதிகமான ப்ரேமை. ஆத்மீயமாகவுள்ள ராமனிடம் உமக்குள்ள ப்ரேமையோ ஸோபாதிகமான ப்ரேமை. 'நம் பையன்' என்பதாக ராமன் உமக்குவேண்டியவன்; 'என் ஆத்மா' என்பதற்காக ராமன் எனக்கு வேண்டியவன். ஆகையால் உமக்குள்ள ப்ரேமையைக் காட்டிலும், ராமனிடம் எனக்கு அதிகமான விச்வாஸமுண்டு: ராமனைப் பற்றி நீர் ஒன்றும் கவலைப்படவேண்டாம்.

अहं हि सर्व यज्ञानां भोक्ता च प्रभुरेवच

𑌅𑌹𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵 𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍇𑌵𑌚

அஹம் ஹி ஸர்வ யக்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவச

என்று சொன்னபடி யக்ஞங்களுக்கு அதிதேவதையே அந்த ராமன். அவன் இங்கிருக்கும்பொழுது நான் எப்படி யக்ஞத்தைச் செய்வேன். ஆகையால் யக்ஞத்தை முன்னிட்டு என்னுடன் ராமனை அவச்யம் நீர் அனுப்பியே ஆகவேண்டும். அதுதான் என் ஆகமனத்திற்கு ப்ரயோஜனமாகும்" என்று விச்வாமித்ரர் சொன்னார்.

"ராஜனே, ராமனுடைய மஹத்வத்தை மேற்சொன்ன ப்ரகாரம் நீ அறிவாயானால், ராமனை என்னுடன் அனுப்பு

வதில் இவ்விதம் துக்கத்தை அடையமாட்டாய். உபநிஷத்துக்களில் ஸ்வரூப, தடஸ்த லக்ஷணங்களால் எந்த ப்ரும்மமானது போதிக்கப்படுமோ, அதே ப்ரும்மம்தான் நீ புத்ரன் என்று நினைக்கும் இந்த ராமன் என்பதை நிச்சயமாக அறியவும்" என்ற எண்ணத்துடன் விச்வாமித்ர மஹர்ஷியானவர்,

“ अहंवेद्मि महात्मानं ”

“ 𑌅𑌹𑌂𑌵𑍇𑌦𑍍𑌮𑌿 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 ”

அஹம்வேத்மி மஹாத்மாநம்

என்ற ச்லோகத்தால் ராமனை வேதாந்த தாத்பர்ய விஷயீபூதமான அர்த்தம் என்பதைத் தெரிவிக்கிறார். “ सत्यपराक्रमं “ 𑌸𑌤𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌂 ” “ஸத்யபராக்ரமம் ” என்ற பதத்தால் தடஸ்த லக்ஷணமானது சொல்லப்படுகிறது. सच्च त्यच्च सत्यं; सत् (𑌸𑌚𑍍𑌚 𑌤𑍍𑌯𑌚𑍍𑌚 𑌸𑌤𑍍𑌯𑌂, 𑌸𑌤𑍍) (ஸச்ச த்யச்ச ஸத்யம், ஸத்) என்றால் ப்ருத்வி, அப், தேஜஸ் என்ற மூன்று பூதங்களையும், त्यत् (𑌤𑍍𑌯𑌤𑍍) (த்யத்) என்ற பதத்தால் வாயு, ஆகாசம் என்பதையும் அறியவும். सत, त्यत्, सत्यं (𑌸𑌤𑍍, 𑌤𑍍𑌯𑌤𑍍, 𑌸𑌤𑍍𑌯𑌂) (ஸத், த்யத், ஸத்யம்) என்ற பதத்திற்கு ஐந்து பூதங்களின் ஸ்வரூபமான இந்த ப்ரபஞ்சம் என்ற அர்த்தம் விளங்குகிறது. सत्ये पराक्रमः यस्य सः (𑌸𑌤𑍍𑌯𑍇 𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃) (ஸத்யே பராக்ரம: யஸ்ய ஸ:) என்ற ஸமாஸத்தால், உலகத்தில் எவனுடைய பராக்ரமமானது ப்ரகாசிக்கின்றதோ அவன் என்ற தாத்பர்யம் விளங்குகிறது.

ஒரு புருஷனுடைய ஸாமர்த்ய விசேஷத்தை அவனுடைய செய்கையில் காண்கிறோம். ப்ரபஞ்சத்தில் ராமனுடைய ஸாமர்த்ய விசேஷமென்ற பராக்ரமமானது ப்ரகாசிக்கும் காரணத்தால், இந்த ப்ரபஞ்சமானது ராமனுடைய செய்கையாகவே (கார்யமாகவே) ஆகவேண்டும். அதனால் ப்ரபஞ்ச காரணத்வம் என்ற தடஸ்த லக்ஷணமானது ராமனிடத்தில் ஸமன்வயம் செய்யப்பட்டது.

ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், இம்மூன்றையும் செய்கிற வனே ஜகத்காரணமாக ஆகுவான். सत्यपराक्रमः (ஸத்யபராக்ரம:) (ஸத்யபராக்ரம:) என்ற விசேஷணத்தால் ஜகத்காரணத்வம் என்ற தடஸ்த லக்ஷணம் ஸித்திக்கிறதினுல், ஜகஜ்ஜன்மாதி காரணத்வமும் ஸித்திக்கிறது—இதனுல்,

"यतो वा इमानि भूतानि जायन्ते"

"யதோ வா இமானி பூதானி ஜாயந்தே"

"யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே"

என்ற ச்ருதியின் அர்த்தத்தை நிர்ணயம் செய்வதற்குள்ள ந்யாயங்களை ப்ரகாசப்படுத்துகிற जन्माद्यस्य यतः, (ஜந்மாத்யஸ்ய யத:) (ஜன்மாத்யஸ்ய யத:) என்ற அதிகரண ந்யாயமானது ப்ரகாசப்படுத்தப்படுகிறது. यतो वा, யதோ வா, யதோ வா, என்ற ச்ருதியிலோ, ஜன்ம, ஸ்திதி, பங்கம் மூன்றையும் ப்ரம்ம கார்யமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜன்மாவுக்கு மட்டும் காரணமென்று சொன்னுல், நிமித்த காரணமாக மாத்ரம் ஆகும் என்ற ப்ரமத்தை நிவ்ருத்தி செய்ய கார்யத்திற்கு ப்ரக்ருதியில் (உபாதான காரணத்தில்) லயம் என்ற ந்யாயத்தை உத்தேசித்து, பங்கத்திற்கும் காரணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனுல் ப்ரும்மமானது உபாதான காரணம் என்று ஸித்திக்கிறது. அத்துடன் நிமித்த காரணமான வஸ்து ப்ரும்மத்துக்கு வேருன வஸ்துவோ என்ற ஸந்தேஹத்தை நிவ்ருத்தி செய்வதற்கு "येन जातानि जीवन्ति" "யேந ஜாதாநி ஜீவந்தி" "யேந ஜாதாநி ஜீவந்தி" என்ற ச்ருதியினுல் ஸ்திதிகாரணமும் ப்ரும்மம்தான் என்று ஸித்திப்பதிலிருந்து, ப்ரம்மம்தான் நிமித்த காரணமாகவும் ஆகும் என்று வெளியாகிறது. இதனுல், अभिन्ननिमित्त उपादानकारणत्वं (அபிந்நநிமித்த உபாதாநகாரணத்வம்)(அபிந்நநிமித்த உபாதாநகாரணத்வம்) என்று ப்ரும்மத்திற்கு தடஸ்த லக்ஷணமாக ஆகிறது. यः यत्कर्ता सः तदज्ञः, ய: யத்கர்த்தா ஸ: தத்ஜ்ஞ:, (ய: யத்கர்த்தா

ஸ: தத்ஞ:) என்ற ந்யாயத்தால், எவன் எந்தக் கார்யத்திற்கு கர்த்தாவாக ஆகிருனோ, அவன் அந்த கார்யத்தையும் அந்த கார்யத்தில் ஸம்பந்தித்த ஸகல விஷயங்களேயும் அறிந்த வன் என்று ஏற்படுகிறபடியால், இந்த ப்ரும்மமோ, ஸர்வ ஜகத்திற்கும் கர்த்தாவாக ஆகும் காரணத்தால், ஸர்வக்ஞன் என்றும் ஸித்திக்கிறது. அதனுல்,

सर्व जगत्कारणत्वे सति, सर्वज्ञत्वं, ब्रह्मणः लक्षणम् ॥

𑌸𑌰𑍍𑌵 𑌜𑌗𑌤𑍍𑌕𑌾𑌰𑌣𑌤𑍍𑌵𑍇 𑌸𑌤𑌿, 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌂, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

ஸர்வ ஜகத்காரணத்வே ஸதி, ஸர்வக்ஞத்வம், ப்ரஹ்மண: லக்ஷணம் ॥

என்பது ஸித்தமாகிறது. அவ்விதம் தடஸ்த லக்ஷண லக்ஷி தமான ப்ரும்மம் எதுவோ அதுதான் இந்த ராமன் என் பதை, सत्यपराक्रमः (𑌸𑌤𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌃) (ஸத்யபராக்ரம:)என்ற விசே ஷணத்தால் ஸூசிப்பிக்கிருர்.

महात्मानं (𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂) (மஹாத்மாநம்) என்ற பதத்தால் ஸ்வ ரூப லக்ஷணமானது சொல்லப்படுகிறது.

महान् आत्मा यस्य सः, तं महात्मानं

𑌮𑌹𑌾𑌨𑍍 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃, 𑌤𑌂 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂

மஹாந் ஆத்மா யஸ்ய ஸ:, தம் மஹாத்மாநம்

என்ற ஸமாஸத்தால், அபரிச்சின்னமான ஸ்வரூபத்தோடு கூடின வஸ்து என்பது வெளியாகிறது. தேசத்தாலும், காலத்தாலும், வஸ்துவினுலும், பரிச்சேதம் என்பது மூன்று வகை ஆகும். ஒரு தேசத்தில் இருந்து, மற்றெரு தேசத் தில் இல்லாதபோனுல், அந்த வஸ்துவை தேச பரிச்சின் னம் என்றும்; ஒரு காலத்திலிருந்து மற்றெரு காலத்தில் இல்லாதபோனுல் அந்த வஸ்துவை கால பரிச்சின்ன மென்றும்; ஸஜாதீயமாகவோ, விஜாதீயமாகவோ, ஸ்வ கதமாகவோ, பேதத்தோடு கூடின வஸ்துவானுல், அந்த வஸ்துவை வஸ்துபரிச்சின்னமென்றும், வேதாந்திகள்

சொல்வார்கள். பரப்ரும்மமோ எல்லா தேசத்திலும் ஸர்வ வ்யாபகமாக ஆகாசம்போல் விளங்கி வருகிற காரணத்தால் தேச பரிச்சேத சூன்யமாக ஆகிவிட்டது. அவ்விதமே காலத்ரயத்திலும் ஸ்வரூபஸத்தையோடு பாஸித்துவரும் காரணத்தால் காலபரிச்சேத சூன்யமாகவும் ஆகும். "सर्वं खल्विदं ब्रह्म" "आत्मैवेदं सर्वं" "ஸவ௱ ஖ஸ்விஜ௦ ஬ஹ்ம" "ஆத்மைவெஜ௦ ஸவ௱" "ஸர்வம் கல்விதம் ப்ரம்ம" "ஆத்மைவேதம் ஸர்வம்" என்ற ச்ருதிகளால், ஸகல ஜகத்தும் ப்ரும்ம விகாரம் என்ற காரணத்தால், ப்ரும்ம ஸ்வரூபம் என்றே சொல்லப்பட்டிருக்கிறபடியால், ப்ரும்மத்துக்கு விஜாதீயமான ப்ரபஞ்சம் என்ற வஸ்துவானது, ப்ரும்ம ஸ்வரூபத்திற்கு வேறுபடாததினால் விஜாதீய பேதமும் ப்ரம்மத்திற்கு இல்லை.

அத்துடன், ப்ரும்மம் ஒரே வஸ்துவானதால், ப்ரும்மத்தைப்போல் மற்றொரு ப்ரும்மும் ஒன்று உண்டோ என்று ஸஜாதீய பேதமும் இல்லை. அவ்விதமே ப்ரும்ம ஸ்வரூபம், ஏகரஸமானதால், ஸ்வகதபேதமும் இல்லை. உப்புக்கட்டியில் உள்பாகம், வெளிபாகம், தலை, கால் என்ற ஸ்வகத பேதத்தை கல்பிக்க முடியாது; அதுபோலவே தான் ப்ரும்மத்தினிடத்திலும், ब्रह्म चिदेकरसं (஬ஹ்ம௦ சிஜெகரஸம்) (ப்ரஹ்மம் சிதேகரஸம்) என்ற காரணத்தால், ஸ்வகத பேதத்தையும் சொல்லமுடியாது.

இவ்விதம், தேசத்தாலோ, காலத்தினாலோ, வஸ்துவினாலோ, பரிச்சேதமில்லாத (குறைவில்லாத) ஸ்வரூபத்தோடு கூடின பரப்ரும்மமே இந்த ராமன் என்பதை "महात्मा" "உஹாத்மா" "மஹாத்மா" என்ற பதத்தால் விளக்குகிறார். இவ்விதம் மூன்றுவிதமான பரிச்சேதமில்லாத பொருள், ஜடமாகவோ, அந்ருதமாகவோ, இருக்க ந்யாயமில்லாததினால், மூன்றுவிதமான பரிச்சேதமற்ற ஸ்வரூபம் என்று சொன்னதினாலேயே, सत् चित् (ஸத் சித்) (ஸத் சித்) என்பதும்

கிடைத்துவிட்டது. सत् (ஸத்) (ஸத்) என்றால் கால த்ரயத்தி லும் பாதிக்கப்படாததான பொருள் என்று ஏற்படுகிறது. चित् (சித்) (சித்) என்றால் வேறு ப்ரகாசத்தை அபேக்ஷிக்காமல், தான் ஸ்வயமாகவே ப்ரகாசிக்கும் வல்லமையுள்ளது என்று ஏற்படுகிறது—ஸத்தாயும், சித்தாயும், அநந்தமாயும் எந்த வஸ்து ஸித்திக்கிறதோ, அந்த வஸ்துவானது துக்கரூபமாகஆக ந்யாயமில்லை. ஆநந்த ஸ்வரூபம்தான். அதனால், सत्यं, ज्ञानं, अनन्तं, आनन्दं (ஸத்யம், ஜ்ஞானம், அநந்தம், ஆநந்தம்) (ஸத்யம், ஞானம், அநந்தம், ஆநந்தம்) என்ற ஸ்வரூப லக்ஷணத்தையும், महात्मानं (மஹாத்மானம்) (மஹாத்மாநம்) என்ற பதத்தில் அடக்கி, விச்வாமித்ர மஹர்ஷியானவர் தசரத மஹாராஜனுக்கு தாரக ப்ரும்மமாகிய ராமனை உபதேசிக்கின்றார்.

மேற்சொன்னபடி தடஸ்த லக்ஷணம், ஸ்வரூப லக்ஷணம் இந்த இரண்டு லக்ஷணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட பரப்ரும்மத்தை அறியவேண்டிய ப்ரகாரத்தையும், अहं (அஹம்) (அஹம்) என்ற பதத்தால் மஹர்ஷியானவர் போதிக்கிறார். "ராஜனே, ப்ரும்மத்தை அஹம் என்று (நான் என்று) நான் அறிகிறேன்" என்று சொன்னதினால் ப்ரத்யகாத்மா என்ற ஜீவாத்மாவிற்கு வேறுபடுத்தாமல் ஒன்றாகவே அறியவேண்டும் என்று தெரிகிறபடியால், ஜீவப்ரும்ம ஐக்யஞானம்தான் மோக்ஷஸாதனமாகும், என்ற தத்வத்தையும் மஹர்ஷியானவர் போதித்தார்.

"இவ்விதமான ஸ்வாநுபவத்தை நான் மாத்திரம் அடைந்தவனென்று அஹங்காரத்துடன் நான் பேசவில்லை. வஸிஷ்டபகவான், அரண்யத்தில் வஸிக்கும் வைகானஸாள், வாலகில்யாள் என்ற மஹர்ஷிகள், ஸ்திதப்ரக்ஞாள் என்று சொல்லப்படும் ஸநகாதிகள் முதலானவர்களும், இவ்விதமான ஸ்வாநுபூதியை அடைந்தவர்கள் என்பதில் ஸந்தேஹமே இல்லை. இதனால் ஜகத்காரணபூதனும், ஸர்வக்ஞனும் ஸத்தாயும், சித்தாயும், அநந்தமாயும், ஆநந்தமாயும் உள்ள யாதொரு

பரமாத்மா உண்ம்.-ா, அந்த பரமாத்மாதான் சக்ரவர்த்தி திருமகன் என்று எதிரில் பாஸித்துவரும் ஸ்ரீராமனுகுவான். இந்த ராமன் மனிதனல்ல; பரப்ரும்மமே. அந்த ப்ரும்மத்தை தனது ஆத்மாவாக அநுபவிக்கவேண்டும். அதுதான் சாஸ்த்ர ஸம்மதமாகும். சிஷ்டாசாரமும் அவ்விதமே உள்ளது. तत्वमसि (தத்வமஸி) (தத்வமஸி) முதலான ச்ருதிகளும், क्षेत्रज्ञं चापि मां विद्धि (க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி) (க்ஷேத்ரக்ஞம் சாபி மாம் வித்தி) இதுமுதலான ஸ்ம்ருதிகளும், आत्मेतितु उपगच्छन्ति ग्राहयन्तिच (ஆத்மேதிது உபகச்ச்ந்தி க்ராஹயந்திச) (ஆத்மேதிது உபகச்ச்ந்தி• க்ராஹ யந்திச) என்றது முதலான ந்யாயங்களும் அவ்விதமே போதிக்கின்றன. இவ்விதமான ஆத்மபோதத்தை நீ அடைந்தால், ஜீவன்முக்த ஸுகத்தையும் அனுபவித்துக்கொண்டு ப்ராரப்த சரீரத்திற்கு பதனம் (நாசம்) வந்த பிற்பாடு, விதேஹ கைவல்யத்தையும் அனுபவிக்கலாம்" என்று விச்வாமித்ர மஹர்ஷியானவர் தசரதராஜனுக்கு, अहंवेद्मिमहात्मानं (அஹம்வேத்மி மஹாத்மானம்) (அஹம்வேத்மி மஹாத்மாநம்) என்ற ச்லோகத்தால் தாரக ப்ரும்மோபதேசம் செய்தார் என்றும் வெளியாகிறது. இவ்விதம் உபதேசித்துவிட்டு, ராஜனைப் பார்த்து மஹர்ஷி சொன்னதாவது. "ராஜனே! இவ்விதம் வைபவமுள்ள ராமனை என்னுடன் அனுப்ப நீ கொஞ்சமேனும் பீதியை அடையவேண்டாம். தர்மலாபமும், யசஸ்ஸும், இந்த புண்ய பூமியில் ஸ்திரமாக இருக்க வேண்டுமென்று நீ இச்சித்தால், ராமனை என்னுடன் அவச்யம் அனுப்பவேண்டும். ஸுமந்த்ரர் முதலான மந்த்ரிகளோ, வஸிஷ்டர் முதலான ப்ராம்மணோத்தமர்களோ, ராமனை என்னிடம் கொடுக்கலாம் என்று அநுமதி கொடுத்தால், நீ என்னிடம் கொடுத்துவிடலாம். அதுவே எனக்குப் போதுமானது. அவர்களிடமும் நீ நன்ருக ஆலோசித்துக்கொள்ளலாம். பத்து தினங்களைக் கொண்டு என்னுடைய யக்ஞமானது முடிவடையும். யக்ஞகாலம் அதிக்ரமிக்காமல் சீக்ரமாக ஸ்ரீராமனை அனுப்பி என்னுடைய யக்ஞத்தை

ரக்ஷித்துக் கொடுப்பது உம்முடைய தர்மமாகும். வீண் கவலையை அடையவேண்டாம்” என்று சொல்லிவிட்டு விச்வாமித்ர மஹர்ஷியானவர் மௌனமாக இருந்துவிட்டார். ராஜனும் விச்வாமித்ரருடைய வாக்யத்தைக் கேட்டு ராமனை விட்டுப்பிரிய மனமில்லாமல், ரொம்பவும் துக்கத்தை அடைந்தார். விச்வாமித்ரருடைய உபதேசத்தைக் கேட்டதினால் தசரத ராஜனுக்கு ராமனிடத்தில் தன்னுடைய புத்ரன் என்ற காரணத்தால், முன்னிருந்த ப்ரேமையைக் காட்டிலும் தான் என்ற உணர்ச்சி ஏற்பட்டதிலிருந்து, நிருபாதிகமான (அளவற்ற) ப்ரேமை ஏற்பட்டுவிட்டது. ஆத்ம த்யாகத்தை யாராலேதான் ஸம்மதிக்கக் கூடும். புத்ரனே ஆத்மீயன். ராமனிடத்திலுள்ள ஆத்மீய புத்தியை மாற்றி ஆத்மத்வ புத்தியை மஹர்ஷி உண்டுபண்ணிவிட்டார். இவ்விதமிருக்க, ஆத்மீய த்யாகத்தைக் காட்டிலும் ஆத்ம த்யாகம் ரொம்பவும் துஷ்கரமல்லவா? ஆகையால் தசரத சக்ரவர்த்தியானவர் ராமனை மஹர்ஷியினிடம் அர்ப்பணம் செய்ய மனமில்லாமல் துக்கப்பட்டார் என்பது உசிதம்தான்.

न वा अरे सर्वस्य कामाय सर्वं प्रियं भवति,
आत्मनस्तु कामाय सर्वं प्रियं भवति ॥

𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿
𑌆𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿 ॥

ந வா அரே ஸர்வஸ்ய காமாய ஸர்வம் ப்ரியம் பவதி,
ஆத்மநஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி ॥

என்ற ப்ருஹதாரண்யகோபநிஷத் வாக்யத்தால் ஆத்மாவுக்கு வேறான அதாவது ஆத்மீயமான (ஆத்மாவைச் சேர்ந்த) பார்யை முதலான பந்துக்களிடம் ஏற்படும் ப்ரீதி அவர்களுக்காக ஏற்படவில்லை. தன் ஆத்ம ஸம்பந்தம் அவர்களிடம் இருப்பதினால்தான் ஏற்படுகிறது. ஆத்மாவினிடத்திலோ ஏற்படுகிற ப்ரேமையானது ஆத்மாவுக்காகத்

தான். அந்ய நிமித்தமாக ஆகாது. ஆகையால் நிருபாதிக மான ப்ரேமைக்கு ஆஸ்பதமான ஆத்மாவை த்யாகம் செய்துகொள்வது மிகவும் கஷ்டமானதினுலும் விச்வாமித்ர மஹர்ஷி ஸ்ரீராமனிடத்திலிருந்த ஆத்மீயத்வ புத்தியை மாற்றி ஆத்மத்வ புத்தியை உபதேசித்ததினுலும் ஆத்ம ஸ்வரூபமான ராமனை த்யாகம் செய்வது ரொம்பவும் அஸாத்யமான கார்யமென்று நினைத்து தசரத சக்ரவர்த்தி விச்வாமித்ர மஹர்ஷியின் வார்த்தையைக் கேட்டு மிகவும் கஷ்டப்பட்டார்.

20-வது ஸர்க்கம்.

இப்படி விச்வாமித்ரரின் வார்த்தையைக் கேட்ட பிறகு, ஒரு முஹூர்த்தகாலம் தசரத சக்ரவர்த்தியானவர் ப்ரக்ஞையே இல்லாதவராக ஆகிவிட்டார். சற்றுநேரம் கழித்து ப்ரக்ஞையை அடைந்து, மிகவும் வணக்கமாக விச்வாமித்ர மஹர்ஷியைப் பார்த்து ராஜன் சொன்னதாவது :—

ऊनषोडश वर्षोमे, रामो राजीव लोचनः ।
नयुद्ध योग्यतामस्य, पश्यामि सहराक्षसैः ॥

𑌊𑌨𑌷𑍋𑌡𑌶 𑌵𑌰𑍍𑌷𑍋𑌮𑍇, 𑌰𑌾𑌮𑍋 𑌰𑌾𑌜𑍀𑌵 𑌲𑍋𑌚𑌨𑌃 ।
𑌨𑌯𑍁𑌦𑍍𑌧 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾𑌮𑌸𑍍𑌯, 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑌹𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍈𑌃 ॥ ।

ஊநஷோடச வர்ஷோமே, ராமோ ராஜீவ லோசந: ।
நயுத்த யோக்யதாமஸ்ய, பச்யாமி ஸஹராக்ஷஸை: ॥

என்ற ச்லோகத்தால் தசரத சக்ரவர்த்தியானவர் ராமனிடம் யுத்த யோக்யதையே இல்லை என்பதை விளக்குகிருர். “यज्ञ विघ्नकरं हन्यां” (𑌯𑌜𑍍𑌞 𑌵𑌿𑌘𑍍𑌨𑌕𑌰𑌂 𑌹𑌨𑍍𑌯𑌾𑌂) (யக்ஞ விக்நகரம் ஹந்யாம்) என்ற ப்ரதிக்ஞையை அனுஸரித்து விச்வாமித்ர மஹர்ஷியானவர் தன்னுடைய யக்ஞத்திற்கு ஏற்பட்ட விக்னங்களை நிவ்ருத்தி செய்து ஸம்பூர்ணமாக யக்ஞத்தை

நடத்திக் கொடுக்கக்கூடிய சக்தியுள்ளவரே என்று நினைத்து ஸித்தாச்ரமத்திலிருந்து ராஜனிடம் வந்து மஹர்ஷி ப்ரார்த்தித்தும், தசரத ராஜனே, புத்ர வாத்ஸல்யத்தால் ஏற்பட்ட ப்ரேமையினால் சஞ்சலமான மனதுள்ளவராய்க்கொண்டு ஸ்ரீராமனுடைய பரதத்வத்தை விச்வாமித்ர மஹர்ஷி சொன்னபடி மனதில் வைத்துக்கொள்ளாமலே, ராமனுடைய பாலபாவத்தை முன்னிட்டுக்கொண்டு, விச்வாமித்ர மஹர்ஷியினிடம் ஸ்ரீராமனைக் கொடுக்காமலிருப்பதற்கு உள்ள வழியைக் கையாளுகிறார். “மஹர்ஷே, இந்த ராமன் ऊनषोडश वर्षः, ऊनाः असंपूर्णाः, षोडश वर्षाः, यस्य सः, ऊनषोडश वर्षः, द्वादश वयस्कः । 𑌊𑌨𑌷𑍋𑌡𑌶 𑌵𑌰𑍍𑌷𑌃, 𑌊𑌨𑌾𑌃 𑌅𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌃, 𑌷𑍋𑌡𑌶 𑌵𑌰𑍍𑌷𑌾𑌃, 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃, 𑌊𑌨𑌷𑍋𑌡𑌶 𑌵𑌰𑍍𑌷𑌃, 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌵𑌯𑌸𑍍𑌕𑌃, (ஊநஷோடச வர்ஷ: ஊநா: அஸம்பூர்ணா: ஷோடச வர்ஷா:, யஸ்ய ஸ: ஊநஷோடச வர்ஷ: த்வாதச வயஸ்க:) அதாவது பன்னிரண்டு வயதுள்ளவன்.

बालो द्वादश वर्षोऽयं अकृतास्त्रश्च राघवः ।

𑌬𑌾𑌲𑍋 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌵𑌰𑍍𑌷𑍋𑌽𑌯𑌂 𑌅𑌕𑍃𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌶𑍍𑌚 𑌰𑌾𑌘𑌵𑌃 ।

பாலோ த்வாதச வர்ஷோயம் அக்ருதாஸ்த்ரச்ச ராகவ: ।

என்ற வாக்யத்தால் ராமன் ரொம்பவும் குழந்தை; பன்னிரண்டு வயதுதான் ஆகிறது. அஸ்த்ர சஸ்த்ர வித்யைகளில் இன்னும் ஸரியானபடி சிக்ஷையாகவில்லை என்பதை பின்பு விசதமாகச் சொல்லப்படும். அதனால் பதினாறு வயது பூர்த்தியான பிறகு அல்லவா யுத்தத்திற்கு ஸ்ரீராமன் அர்ஹனாகுவான். பன்னிரண்டு வயதுள்ள இந்த சிறு பையன் யுத்தம் செய்ய எப்படி ஸமர்த்தனாக ஆகுவான். இவ்விதம் வயதினுடைய ஸ்வரூபத்தை ஆலோசித்தாலோ, ப்ராக்ருதமான மனிதர்களோடுகூட இந்தக் குழந்தையான ராமன் யுத்தம் செய்ய அர்ஹனாகமாட்டான். இவ்விதமிருக்கும்பொழுது ராக்ஷஸர்களோடு எவ்விதம் யுத்தம்

செய்ய ஸமர்த்தனாக ஆகுவான்? இவனோ, राजीव लोचनः, पद्मतुल्य नयनः (𑌰𑌾𑌜𑍀𑌵 𑌲𑍋𑌚𑌨𑌃, 𑌪𑌦𑍍𑌮𑌤𑍁𑌲𑍍𑌯 𑌨𑌯𑌨𑌃) (ராஜீவ லோசந:, பத்மதுல்ய நயந:) அதாவது தாமரைப் புஷ்பத்துக்கு ஸமானமான கண்களோடுகூடினவன். தாமரை புஷ்பமோ ராத்ரியில் முகுளீபாவத்தை (மூடிக்கொள்வதை) அடைந்து விடும். அதற்கு ஸமானமான நேத்ரங்களோடுகூடின இந்த ராமனும் ஸூர்யன் அஸ்தமித்தவுடன் கண்களை மூடித் தூங்கிவிடுவான். ராக்ஷஸர்களோ, ராத்ரிஞ்சராள் என்ற பெயரோடுகூடினவர்கள்; ராத்ரி காலத்தில் இவர்களுக்கு பலம் அதிகமல்லவா? அவ்விதமான ராக்ஷஸர்களோடுகூட இந்த ராமன் எவ்விதம்தான் யுத்தம் செய்வானோ?

அத்துடன், இந்த ராமன் என்னுடையமடியில் உட்கார்ந்து கொண்டிருப்பதிலேயே பழக்கமுடையவன். என்னைவிட்டுப் பிரிய மனமில்லாதவன். நானோபுத்ர னில்லையென்ற காரணத்தினால் அறுபதினாயிரம் வருஷம் வ்ரதோபவாஸாதிகளைச் செய்து ரொம்பவும் கஷ்டத் தால் இந்த ராமனை புத்ரனாக அடைந்தவன். रामो रतिकरः पितुः (𑌰𑌾𑌮𑍋 𑌰𑌤𑌿𑌕𑌰𑌃 𑌪𑌿𑌤𑍁𑌃) (ராமோ ரதிகர: பிது:) என்று எனக்கு எப்போதும் ஆநந்தத்தைக் கொடுத்துவரும் புத்ரன் இவனே. ஸர்வஸ்வமும் இந்த புத்ரன்தான் என்று என்னுடைய நிச் சயமாகும். அவ்விதமிருக்கும்போது, இந்த ராமனை விட்டு நான் எவ்விதம் பிரிந்திருப்பேன். अस्य (𑌅𑌸𑍍𑌯) (அஸ்ய) இந்த ராமனுக்கு" என்று தன் கையால் ராமனைத் தொட்டு, மஹர்ஷிக்குக் காட்டுகிறார். "काकपक्षं (𑌕𑌾𑌕𑌪𑌕𑍍𑌷𑌂) (காகபக்ஷம்) என்று சொல்லப்படும் ராஜபுத்ரர்கள் அலங்கரித் துக்கொள்ளக்கூடிய ஜில்ப்பாவோடுகூடி விளங்கி வருகிறான். அந்த ஜில்ப்பாவை எடுக்கும் வயது இன்னும் ராமனுக்கு வரவில்லை. கல்வியை அப்யாஸம் செய்வதிலுள்ள உத்ஸா ஹத்தைக்காட்டிலும் விளையாட்டு ஸாமான்களை ஸ்வீகரித் துக்கொண்டு தன் ஸ்நேஹிதர்களோடுகூட விளையாடுவதி

லேயே உத்ஸாஹமுள்ளவன். இவ்விதமிருக்கும் நிலையில் யுத்தத்திற்கு எவ்விதம் யோக்யனாக ஆகுவான். ராக்ஷஸன் என்ற சப்தத்தைக் கேட்டமாத்திரத்தினாலேயே பயப்படும் ஸ்வபாவமுள்ளவனுக்கு ராக்ஷஸர்களோடு யுத்தம் செய்யக்கூடிய யோக்யதை எவ்விதம் ஏற்படும்? மனிதர்களுடன் யுத்தம் செய்கிற ப்ரகாரத்தையே பூராவாக அறியாத குழந்தைகளுக்கு ராக்ஷஸர்களுடன் யுத்தம் செய்யும் யோக்யதை வருமா? ஒரு ராக்ஷஸனோடு கூடவே யுத்தம் செய்ய சக்தியில்லாமலிருக்கும்பொழுது, அநேக ராக்ஷஸர்களோடு யுத்தம் செய்யக்கூடிய சக்தி எவ்விதம் ஏற்படும்? ஆகையால் மஹர்ஷே, வீணாக நிர்ப்பந்தப்படுத்தவேண்டாம். ராமனைக் கொடுக்கவேண்டும் என்ற ஆக்ரஹத்தை விட்டுவிடுங்கள். அளவற்ற அக்ஷௌஹிணீ ஸேனைகளுக்கு நான் அதிபதி ஆகிறேன். நானே ஸேனைகளுடன் தங்களுடைய யக்ஞசாலைக்கு வந்து என் ஜீவனுள்ளவரையில் யுத்தம் செய்து, ராக்ஷஸர்களையும் ஜயித்து, தங்களுடைய யக்ஞத்தை நிர்விக்னமாக பூர்த்தி செய்து வைக்கிறேன். ராமனோ ரொம்பவும் பாலன். வில்லில் பாணத்தைத் தொடுக்கும் ப்ரகாரத்தை அறியாதவன். சத்ருக்களுடைய பலாபலத்தையும் அறியும் சக்தி ராமனுக்கு ஏற்படவில்லை. யுத்தம் செய்து வழக்கமுமில்லை. ராக்ஷஸர்களோடு யுத்தம் செய்வதற்கு இவன் யோக்யனல்ல. கபடமான மாயா யுத்தம் செய்பவர்கள் இந்த ராக்ஷஸர்கள். நானும் ஒரு முஹூர்த்தங்கூட ஸ்ரீராமனை விட்டுப் பிரிந்து ஜீவித்திருக்கமாட்டேன். அப்படி ராமனையேதான் அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்றுதாங்கள் ஸாஹஸம் செய்யும் பக்ஷத்தில் சதுரங்க ஸேனையோடும் நானும் பின்தொடர்ந்து வருகிறேன். ராமனை மட்டும் தனியாக அனுப்புவதில் எனக்கு இஷ்டமில்லை. அறுபதினாயிரம் வருஷகாலம் பிள்ளை இல்லையென்று தபித்து அளவற்ற வ்ரதோபவாஸாதிகளையும் செய்துகஷ்டப்பட்டு, பெற்று எடுத்து வளர்த்த கஷ்டம் எனக்கே தவிர, தங்களுக்கு இல்லை. நான்கு புத்ரர்களுக்குள் ஸ்ரீராமன்தான்

ஜேஷ்ட புத்ரனும், பித்ருசுச்ரூஷை என்ற தர்மத்தை ஆசரிக்கிறவனும், பிதாவான எனக்கு எப்போதும் எவ்விதத்திலும் ஆநந்தத்தையே கொடுத்துவருகிறவனுமாகிருன் அவ்விதமான புத்ர ரத்னத்தை தனியாக விட்டு நான் பிரிந்திருக்க மாட்டேன். ஒன்று, நான் வருகிறேன்; ராமன் வேண்டாம். இல்லாவிடில் ராமனும், நானும் ஸேனைகளுடன் புறப்பட்டு வருகிறோம். அன்னியில் என்னையும் விட்டு, ஸேனைகளுமில்லாமல், ஸ்ரீராமனை மட்டும் தாங்கள் தனியாக அழைத்துப்போய் விடலாம் என்ற ஸாஹஸம் கொஞ்சமேனும் பலிக்காது. இதை பிற்பாடு ஆலோசிப்போம். தங்கள் யக்ஞத்திற்கு விக்னம் செய்யும் ராக்ஷஸர்கள் எந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள்? அவர்களுக்குள் ப்ரதான பூதாளான ராக்ஷஸர்கள் யார்? ராமன்தான் அவர்களை எந்த உபாயத்தை அவலம்பித்து ஜயிக்க முடியும்? ராக்ஷஸர்களோ மஹா மாயாவிகள். இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்தவர்களோ தர்ம்மமாகவே யுத்தம் செய்கிறவர்கள். மாயாவிகளான ராக்ஷஸர்களோடு தர்மத்தையே சரணமடைந்த் ராஜாக்கள் எவ்விதம் யுத்தம் செய்யமுடியும்? இவைகளை யெல்லாம் விஸ்தாரமாகத்தானே தாங்கள் எடுத்துச் சொல்லவேண்டும். பிறகு ராமனை அழைத்துச் செல்வதோ, அல்லது நானும்கூடவருவதோ, அல்லது ஸேனைகளை அனுப்புவதோ இவைகளை யோஜிப்போம்" என்று ராஜன் சொன்னர்.

அதைக் கேட்டு விச்வாமித்ர மஹர்ஷியோ சொல்கிருர்:—"ராஜனே! புலஸ்த்ய வம்சத்தில் ராவணன் என்ற பெயருடன் ஒரு ராக்ஷஸன் பிறந்து அதிபால்யத்திலேயே ஜிதேந்த்ரியனுக மஹாதபஸ்ஸைச் செய்து ப்ரும்மாவினுடைய மூலமாக, அபூர்வமான வரபலங்களை யடைந்து, அந்த தபோபலத்தால் மூன்று லோகங்களையும் தன்வசமாக்கிக்கொண்டு மஹாபலிஷ்டனுகி, அநேக ராக்ஷஸ பலங்களால் சூழப்பட்டவனுயும், லங்காபுரியில் விளங்கி வருகிருன் என்பதையும் நீரும் காதினுல் கேட்டிருக்கலாம். ஸாக்ஷாத் குபேரனு

டைய ஸஹோதரன், அந்த ராவணன், விச்ரவஸ் என்ற மஹர்ஷியினுடைய புத்ரனாகுவான். அவன்தான் இந்த யக்ஞத்திற்கு விக்னம் செய்கிறவன். ஆனால் நான் செய்கிற யக்ஞம் அவனுக்கு ஒரு த்ருணப்ராயமானதினால் (புல்லைப்போல்) அவன் நேரில் வந்து விக்னம் செய்கிறதில்லை. அவனால் ஏவப் பட்ட ஸுபாஹு, மாரீசன் என்ற ராக்ஷஸர்கள் அபரிமிதமான ஸேனைகளுடன் வந்து என்னுடைய யக்ஞத்தைக் கெடுக்கிறார்கள்" என்று சொல்லிவிட்டு விச்வாமித்ரர் மௌன மாக இருந்துவிட்டார். இதைக்கேட்ட தசரதரோ நடுங் கிப்போய் விச்வாமித்ர மஹர்ஷியைப் பார்த்து சொல்வ தாவது :—

"விச்வாமித்ர மஹர்ஷே! போதும், போதும், தங்கள் யக்ஞத்திற்கு விக்னம் செய்கிற ராக்ஷஸர்களுக்கு மூல புரு ஷன் ராவணனா? அவனுக்கு எதிரில் யார்தான் நிற்க முடியும்? இக்ஷ்வாகு வம்சத்தையே நாசம் செய்துவிடாதே யும். என் புத்ரனான ராமனிடத்தில் தயவு செய்து கரு ணையை வைக்கவேண்டும். இந்த ராமனை அழைத்துக் கொண்டுபோய் அந்த ராக்ஷஸர்களுக்கு இரையாக ஆக்கி விடுவது என்ற ஸங்கல்பத்தை விட்டு விடுங்கள். தாங்கள் எனக்குக் கொடுத்த பிச்சை இந்த ராமன் என்றே இந்த நிமிஷம் முதல் நினைத்துக்கொள்கிறேன். அநுக்ரஹம் செய்ய வேண்டும். தேவாளோ, கந்தர்வாளோ, யக்ஷாளோ, பந்ந காளோ எந்த ராவணனுக்கு எதிரில் நின்று யுத்தம்செய்ய சக்தியற்றவர்களோ, அந்த ராவணனுக்கு எதிரில் மனுஷ் யன், அதிலும் குழந்தை, எவ்விதம் நின்று யுத்தம்செய்ய முடியும்? ராவணனுடனோ, அவனுடைய ஸேனைகளு டனோ, அவனால் அனுப்பப்பட்ட ஸுபாஹு, மாரீசன் என்ற இரண்டு ராக்ஷஸர்களுடனோ நாங்கள் யுத்தம் செய்ய சக்தியற்றவர்கள். ராக்ஷஸர்களுக்கு எதிரில் இந்த ராமனை நான் அனுப்பவேமாட்டேன். ஸுபாஹு, மாரீசன் இருவர்களும் ம்ருத்யுவுக்கு ஸமானமானவர்கள். அவர்களிருவர் களுக்குள் ஒருவன் முன்னாலேயே யுத்தம் செய்வது அஸாத்

யம். இருவர்களுமே எதிரியாக நிற்கும்பொழுது எவ்விதம் மனிதர்கள் எதிர்த்து யுத்தம் செய்யமுடியும்?" என்று தசரதர் சொன்னார். இதைக்கேட்ட விச்வாமித்ர மஹர்ஷிக்கு அடங்காத கோபம் வந்துவிட்டது. யக்ஞசாலையில் நல்ல கோக்ருதத்தால் (பசுவின் நெய்) ஆஹுதி செய்யப்பட்ட அக்னிபகவான் எவ்விதம் ஜ்வலிப்பரோ அதுபோல் அந்த மஹர்ஷியும் கோபாக்னியினால் ஜ்வலித்தார்.

இது இவ்விதம் நிற்க, விச்வாமித்ர மஹர்ஷியானவர் ராமனுடைய பரதத்வத்தை அநேக ப்ரகாரமாக எடுத்துரைத்தும், ராஜனுக்கு ராமன் ஈச்வரன் என்ற ஞானம் உண்டாகவில்லையா? அப்படியானால் வெகுகாலமாக வஸிஷ்ட பகவானுடைய ஸமாச்ரயணம் அந்த ராஜனுக்கு ஏற்பட்டிருந்தது என்பது நிஷ்ப்ரயோஜனமாக ஆகிவிடுமே. அந்த ராஜன் செய்த யக்ஞ யாகாதி க்ரதுக்களான புண்ய கர்மாக்களுக்குத்தான் என்ன பயன். அந்த ராஜனே அஷ்டாக்ஷரீ மஹாமந்த்ர உபாஸகர் என்று புராணாந்தரங்களில் சொல்லப்படுகிறதே. பகவான்தான் இவ்வளவு அக்ஞான தசரதனிடத்தில் எவ்விதம் புத்ரனாக அவதரித்தார். அவ்விதமே இந்த தசரதர் ஸ்வயம் அக்ஞனாக இருந்தாலும்,

नह्यम्मयानि तीर्थानि
नदेवा मृच्छिलामयाः ।
तेपुनन्त्युरु कालेन
दर्शनादेव साधवः ॥

ந ஹ்யம்மயாநி தீர்தாநி
ந தேவா ம்ருச்சிலாமயா: ।
தே புநந்த்யுரு காலேந
தர்சநாதேவ ஸாதவ: ॥

நஹ்யம்மயாநி தீர்த்தாநி
நதேவா ம்ருச்சிலாமயா: ।
தேபுநந்த்யுரு காலேந
தர்சநாதேவ ஸாதவ: ॥

என்ற சாஸ்த்ரத்தினுல் ஸாதுக்களுடைய ஸந்தர்சனத்தால் ஸகல துரிதங்களும் போய், புருஷன் மஹா விவேகியாக ஆகிவிடுகிருன் என்று தெரிகிறதே. வஸிஷ்ட பகவான், ரிச்யச்ருங்க மஹர்ஷி, ப்ருக்ருதத்தில் சொல்லப்படுகிற விச்வாமித்ர மஹர்ஷி, இவர்களெல்லோரும் பரமஸாதுக்களல்லவா! அவர்களுடைய ஸந்தர்சனமானது தசரத சக்ரவர்த்திக்கு ஏன் அவ்விதமான பயனை உண்டுபண்ணவில்லை? ப்ராக்ருத மனுஷ்யனைப்போலவே தசரத சக்ரவர்த்தி விச்வாமித்ர மஹர்ஷிக்கு எதிரில் வஸிஷ்டமஹர்ஷி முதலானவர்களிருக்கும்போதே, ஸ்ரீராமனைப் பற்றி (ரொம்பவும் குழந்தை, பன்னிரண்டு வயதுதான் ஆகிறது) ஜில்பா வைத்துக்கொண்டிருக்கிருன், எப்படி யுத்தம் செய்வான் என்று பேசுகிருரே, இது அழகா என்று விசாரிக்கும் ஸூக்ஷ்மதர்சிகளுடைய த்ருஷ்டியை அனுஸரித்து தசரத சக்ரவர்த்தி சொன்ன வார்த்தைகளுக்குள், அதிலும் முக்யமாக பன்னிரண்டு வயதுதான் ராமனுக்கு ஆகிறது என்று சொல்கிற ச்லோகத்தின் வ்யங்க்யார்த்தத்தை அடியில் கண்டபடி அறியவும்.

ऊन षोडश वर्षो मे, रामो राजीव लोचनः ।
नयुद्ध योग्यता मस्य, पश्यामि सह राक्षसैः ॥

𑌊𑌨 𑌷𑍋𑌡𑌶 𑌵𑌰𑍍𑌷𑍋 𑌮𑍇, 𑌰𑌾𑌮𑍋 𑌰𑌾𑌜𑍀𑌵 𑌲𑍋𑌚𑌨𑌃 ।
𑌨𑌯𑍁𑌦𑍍𑌧 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾 𑌮𑌸𑍍𑌯, 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑌹 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍈𑌃 ॥

ஊந ஷோடச வர்ஷோ மே, ராமோ ராஜீவ லோசந: ।
நயுத்த யோக்யதா மஸ்ய, பச்யாமி ஸஹ ராக்ஷஸை: ॥

“மஹர்ஷே मे रामः मदीयत्वेन अभिमतः रामः (𑌮𑍇 𑌰𑌾𑌮𑌃 𑌮𑌦𑍀𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌅𑌭𑌿𑌮𑌤𑌃 𑌰𑌾𑌮𑌃) (மே ராம: மதீயத்வேந அபிமத: ராம:) என்னுடைய பிள்ளையென்று அவிவேகத்தால் நான் அபிமானத்தை

வைத்திருக்கும் இந்த எதிரில் புலப்படும் வஸ்து ராமன், ஹிரண்ய கர்பன் முதல் சிற்றெறும்புவரையிலுள்ள ஸகல ப்ராணிகளையும் ஆநந்திக்கச் செய்கிற பரம புருஷன்; **एषह्येवानन्दयति** (ஏஷ ஹ்யேவாநந்தயதி) (எஷஹ்யேவாநந்தயதி) என்ற ச்ருதியால் ஸகல ப்ராணிகளுக்கும் ஆநந்தத்தைக் கொடுக்கும் பரம புருஷன் என்ற அர்த்தத்தை விளக்கிக்காட்டும் ச்ருதியே ராமன் ப்ரும்மம்தான் என்பதில் ப்ரமாணமாகும். **रमयतीति रामः** (ரமயதீதி ராம:) (ரமயதீதி ராம:) என்ற ஸமாஸத்தால் ரமிக்கச் செய்கிறவன், ஆநந்திக்கச் செய்கிறவன் என்ற அர்த்தத்தை அறியவும். அத்துடன் **राजीवलोचनः** (ராஜீவலோசந:) (ராஜீவலோசந:) என்ற பதத்தால் **य एषोन्तरादित्ये** (ய ஏஷோந்தராதித்யே) (ய ஏஷோந்தராதித்யே) என்ற ச்ருதியில் புண்டரீகாக்ஷன் என்று சொல்லப்பட்ட பகவானான மஹாவிஷ்ணுவே இந்த எதிரில் நிற்கும் புருஷன் (ராமன்) என்று அறியவும். அத்துடன் **ऊनषोडश वर्षः वर्षतीति वर्षः** (ஊநஷோடச வர்ஷ: வர்ஷதீதி வர்ஷ:) (ஊநஷோடச வர்ஷ: வர்ஷதீதி வர்ஷ:) என்பதினால் உபாஸகனுடைய மனோரதத்தை பூர்த்தி செய்யும் வஸ்துவென்று அறியவும். அதாவது ப்ரக்ருதத்தில் வர்ஷம் என்ற பதத்திற்கு கலை என்ற அர்த்தம். சந்த்ரனும் சுக்ல பக்ஷத்தில் கலையினுடைய அபிவ்ருத்தியினால்தான் ஜகத்திற்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கிறான். அதனால் ப்ரச்னோபநிஷத்தில் சொல்லியபடி சரீரத்திற்குள் அந்தர்யாமியாக பாஸிக்கும் ஷோடசகல புருஷனே இந்த ராமன்தான் என்று சொல்கிறார். பதினாறு கலைகளோ ப்ராணன், ச்ரத்தை, ஆகாசம், வாயு, தேஜஸ், அப், ப்ருதிவி, இந்த்ரியம், மனஸ், அன்னம், வீர்யம், தபஸ், மந்த்ரம், கர்மா, லோகங்கள், நாம, என்று ப்ரச்னோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த பதினாறு கலைகளுக்குள் கர்மாவும் ஒரு கலையாகும். அந்த கர்மா என்பது அக்னி ஹோத்ரம் முதலான ச்ரௌத கர்மாவே. ப்ரக்ருதத்தில் ராமனுக்கு ஸஹதர்ம சாரிணீ ஸம்யோகம் என்ற விவா

ஹம் இன்னும் ஆகாததினால் கர்மா என்று சொல்லப்பட்ட ஒரு கலையானது குறைந்திருக்கிறது. அதைக் காட்டுகிறார். **ऊनषोडश वर्षः** (𑌊𑌨𑌷𑍋𑌡𑌶 𑌵𑌰𑍍𑌷𑌃) (ஊநஷோடச வர்ஷ:) என்ற பதத்தால், அதாவது ऊनः किंचित्ऊनः (𑌊𑌨𑌃 𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑍂𑌨𑌃) (ஊந: கிஞ்சித் ஊந:) ஒரு கலை குறைந்து, பதினைந்து கலைகளோடு கூடி விளங்கிவருகிற பரம புருஷன்.

ராஜாவானவர் மஹர்ஷியினிடம் தெரிவிப்பதாவது, "மஹர்ஷே, தாங்கள் ராமனுடைய பரதத்வத்தை உபதேசித்தபடி நான் க்ரஹித்துக்கொண்டேன். தாங்கள் சொல்லிய சப்தத்தையே நானும் திருப்பிச் சொன்னால் நான் நன்றாக க்ரஹித்துக்கொண்டதாக ஆகாது. அதற்காக சப்தாந்தரத்தால் சொல்கிறேன். ராமனே ஆநந்த ஸ்வரூபியான பரப்ரும்மம்— அந்த ப்ரப்ரும்மமே ஸூர்யமண்டலத்தில் புண்டரீகாக்ஷன் என்ற பெயருடன் ஸகுண ப்ரும்மமாக விளங்குகிறது. அதுதான் சரீரத்திற்குள் ஷோடசகல புருஷன் என்று சொல்லப்பட்ட ப்ரத்யகாத்மாவாகவும் பாஸித்துவருகிறது. இதைத்தான்,

"सयश्चायंपुरुषे, यश्चासावादित्ये, सएकः"
"असौ वा आदित्यो ब्रह्म, ब्रह्मैवाहमस्मि"
"योसावसौ पुरुषस्सोह मस्मि"

"𑌸𑌯𑌶𑍍𑌚𑌾𑌯𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑍇, 𑌯𑌶𑍍𑌚𑌾𑌸𑌾𑌵𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇, 𑌸𑌏𑌕𑌃"
"𑌅𑌸𑍌 𑌵𑌾 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌾𑌹𑌮𑌸𑍍𑌮𑌿"
"𑌯𑍋𑌸𑌾𑌵𑌸𑍌 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌸𑍋𑌹 𑌮𑌸𑍍𑌮𑌿"

"ஸயச்சாயம் புருஷே, யச்சாஸாவாதித்யே, ஸஏக:"
"அஸௌ வா ஆதித்யோ ப்ரஹ்ம, ப்ரஹ்மைவாஹமஸ்மி"
"யோ ஸாவஸௌ புருஷ ஸ்ஸோஹ மஸ்மி"

என்று ச்ருதிகளும் முறையிடுகின்றன. அந்த பரம் பொருள் யார் செய்த தவத்தாலோ, மங்கள விக்ரஹத்துடன், மனுஷ்ய வடிவமாக, மாம்ஸசக்ஷுஸ்ஸுக்கும் கோசரமாக எதிரில் பாஸித்துவருகிறது. 16 கலைகளில் கர்மா என்ற ஒரு கலை குறைந்திருப்பதை தாங்கள் பூர்த்தி

செய்துவைக்கவேண்டுமென்றே வந்திருக்கிறீர்கள். குறைவான கலே கர்மாவல்லவா? அது அக்னிஹோத்ராதிகளாக ஆகும். அந்த கர்மாவோ ஸஹதர்மசாரிணீ ஸம்யோகம் என்ற விவாஹத்தினால் ஸித்திக்கவேண்டும். அதுவோ, राघवत्वे भवेत्सीता (ராவவஃவெ ஹவெத்ஸீதா)(ராகவத்வே பவேத்ஸீதா)என்ற வசனத்தை அனுஸரித்து, மஹாவிஷ்ணுவானவர் இந்த குலத்தில் ஸ்ரீராமனாக அவதரித்திருக்கும்போது, மஹாலக்ஷ்மியானவள், கார்ஹஸ்த்ய தர்மத்திற்கு ஸ்த்ரீயினுடைய ஸம்சுத்தியே முக்யமானதென்று காட்டுவதற்காகவே, அயோனிஜையாக ஜனகமஹாராஜாவினுடைய புத்ரியாக ஸீதையென்ற பெயருடன், அவதரித்திருக்கிறாள். அந்த இருவர்களுக்கும் பரிணய மஹோத்ஸவத்தைச் செய்துவைக்கும்பொருட்டே பகவத் ஸங்கல்பத்தால் தங்களுடைய ஆகமனம் யத்ருச்சையாய் இவ்விடம் நேர்ந்தது. அதையும் நான் நன்கு அறிகிறேன். என் கார்யத்திற்காகத்தான் தாங்கள் இங்கு வந்து விஜயம் செய்தீர்களே தவிர, தங்கள் கார்யத்திற்காக வென்பதே இல்லை. தங்கள் கார்யம் என்ற யக்ஞ ஸம்ரக்ஷணம் என்பது வ்யாஜம்தான். தங்களுடைய யக்ஞத்திற்கு விக்னம் செய்கிற ராக்ஷஸர்களை தங்களுடைய தபோக்னியே எறித்துவிடாதா? இந்த ராமன் வந்துதானா ஆகவேண்டும்! தவிரவும், ராமன்மூலமாகத்தான் அந்த ராக்ஷஸர்களை நாசம் செய்யவேண்டுமென்று எண்ணினாலும், அல்பமான ராக்ஷஸர்களுக்கு எதிரியாக நின்றுகொண்டு யுத்தம் செய்துதான், அவர்களை நசிக்கச் செய்யவேண்டும் என்பதை நான் நினைக்கவே இல்லை. नतत्समश्चाभ्यधिकश्चविद्यते (நதத்ஸமஶ்சாப்யதிகஶ்சவித்யதெ) (நதத்ஸமச்சாப்யதிகச்சவித்யதே) என்ற ச்ருதியை அனுஸரித்து இந்த ராமன் என்ற தாரக ப்ருமத்திற்கு ஸமானமான வஸ்துவே மற்றொன்றில்லையே; சௌர்யத்திலோ, வீர்யத்திலோ, பலத்திலோ, ஞானத்திலோ, தர்மத்திலோ, ஸமானமான இருவர்களுக்கல்லவா ஏற்படும் யுத்தம் சோபிக்கும்:—विवाहश्च विवादश्च समयोरेव शोभते (விவாஹஶ்ச விவாதஶ்ச ஸமயொரெவ ஶொஹதெ) (விவாஹச்ச விவா

தச்ச ஸமயோரேவ சோபதே) என்ற சாஸ்த்ரம் வீணுக ஆகிவிடுமா? अहंवेद्मि महात्मानं (ஃஹம்வெத்மி மஹாத்மாநம்) (அஹம்வேத்மி மஹாத்மாநம்) என்ற ச்லோகத்தாலேயோ ராமனை பரப்ரும்மம் என்று தாங்கள் உபதேசித்தீர்கள்; நானும் க்ரஹித்துக்கொண்டேன். பிறகு திடீரென்று அல்ப ராக்ஷஸர்களுக்கு எதிரியாக நிறுத்தவேண்டுமென்று இந்த ராமனை யாசிக்கிறீர்களே அது அழகா? इच्छामात्रं प्रभोः सृष्टिः (இச்சாமாத்ரம் ப்ரபோஃ ஸ்ருஷ்டிஃ) (இச்சாமாத்ரம் ப்ரபோ: ஸ்ருஷ்டி:) என்ற மாண்டூக்ய காரிகையை அனுஸரித்து ஜகத்தினுடைய ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களை ஸங்கல்பமாத்திரத்தினுலேயே செய்யும் வல்லமையுள்ள இந்த ராமனுக்கு தங்களுடைய யக்ஞத்திற்கு விக்னம் செய்கிற ராக்ஷஸர்களோடு யுத்தம் செய்துதானு அவர்களைக் கொல்லும் சக்தி ஏற்படவேண்டும். ஸங்கல்பமாத்திரத்தினுலேயே ஸகல கார்யங்களும் நடைபெற்றுவிடும். யுத்தமே வேண்டியதவச்யமில்லை. தவிரவும், தாரகப்ரும்மமாகிய இந்த ராமனை உபாஸிக்கிறவனுக்கே ஸங்கல்ப மாத்ரத்தால் ஸகல கார்யங்களும் கைகூடும் என்று अस्य संकल्प मात्रेण सर्वं समुत्तिष्ठति (அஸ்ய ஸங்கல்ப மாத்ரேண ஸர்வம் ஸமுத்திஷ்டதி) (அஸ்ய ஸங்கல்ப மாத்ரேண ஸர்வம் ஸமுத்திஷ்டதி) என்ற ச்ருதியும்; संकल्पादेवतु तच्छ्रुतेः (ஸங்கல்பாதேவது தச்ச்ருதேஃ)(ஸங்கல்பா தேவது தச்ச்ருதே:)என்ற ந்யாயமும் சொல்லும்போது, ஸாக்ஷாத் ஸர்வலோக சரண்யனுன தாரகப்ரும்ம ஸ்வரூபமான ராமனுக்கு, அல்ப ராக்ஷஸர்களைக் கொல்லும் விஷயத்தில் யுத்தம் செய்துதான் ஆகவேண்டும் என்று நான் எண்ணவே இல்லை" என்று இந்த அபிப்ராயத்தைத்தான் தசரத சக்ரவர்த்தியானவர் ऊनषोडश वर्षोमे (ஊநஷோடஶ வர்ஷோமெ) (ஊநஷோடச வர்ஷோமே) என்ற ச்லோகத்தால் விச்வாமித்ர மஹர்ஷியிடம் தெரிவித்துக் கொண்டார். அன்னியில் விச்வாமித்ர மஹர்ஷி சொல்லிய தத்வத்தை க்ரஹித்துக்கொள்ளாதவரல்ல. மஹா ஞானிதான் தசரதரென்பதை விவேகிகள் அறியவும்.

21-வது ஸர்க்கம்

ஆகையால் தசரத சக்ரவர்த்தியினுடைய த்ருஷ்டியை அனுஸரித்து ராமனிடத்தில் அந்த ராஜனுக்கு புத்ரத்வ புத்தியோ, ப்ரும்மத்வபுத்தியோ, எதை இருப்பதாக ஒப்புக்கொண்டாலும், புத்ர த்யாகமும் துஷ்கரம்தான். ஆத்ம த்யாகமும் மிகவும் துஷ்கரம்தான். அதனுல்தான், 'ராமனை நான் கொடுக்கமாட்டேன்' என்று ராஜன் சொன்னுர். அது ந்யாயமே. இதையறிந்த விச்வாமித்ர மஹர்ஷியோ மஹா கோபத்தை அடைந்து ராஜனைப் பார்த்து சொல்வதாவது, "ராஜனே, 'எதைக்கேட்டாலும்தருகிறே' னென்று சொல்லி விட்டு, அதற்கு விரோதமாக இப்போது நீர் நடக்கிறீர். ரகுவம்சத்தில் பிறந்த மஹாராஜாக்களுக்கு இது அழகல்ல. சொன்னபடி நடக்காமல் தவறி நடப்பது உமக்கு அழகானுல், அவ்விதமே நீர் நடந்துகொள்ளலாம். நானும் போகிறேன். 'தசரதசக்ரவர்த்தி பொய் சொல்கிறவர்' என்ற ப்ரஸித்தியை நீர் அடையப் போகிறீர். ராமனை என்னுடன் அனுப்பாததினுல் எனக்கு ஒன்றும் கார்யஹானி ஏற்பட்டுவிடாது. நீர் எவ்விதத்திலும் குடும்பத்துடன் க்ஷேமமாக இருந்தால் போதுமானது" என்று சொல்லிவிட்டு, வெகு கோபத்துடன் மிகவும் வேகமாக அரண்மனையிலிருந்து வெளியே போக ஆரம்பித்தார். விச்வாமித்ர மஹர்ஷிக்கு கோபம் வந்தவுடன் பூமியே நடுங்கியது. தேவர்களுக்கும் பயம் ஏற்பட்டுவிட்டது. லோகம் முழுவதும் ப்ராணிகள் ஹாஹாகாரம் செய்துகொண்டு விச்வாமித்ர மஹர்ஷியினுடைய கோபம் எவ்விதம் பரிணமிக்குமோ (முடியுமோ) என்று பயத்தை அடைந்தது. இதை யறிந்த வஸிஷ்ட பகவானே, 'நாம் இனி மௌனமாயிருப்பது ந்யாயமல்ல', என்று நினைத்து ராஜனையும் பரபரப்புடன் அழைத்து, ராஜனைப் பார்த்து சொல்கிருர்.

"ராஜனே! தாங்கள் இக்ஷ்வாகு வம்சத்தில் உதித்திருக்கிறீர்கள்—தர்மமூர்த்தி யென்றே தங்களைச் சொல்லலாம்.

மஹா தைர்யசாலி, மஹா வ்ரதங்களையெல்லாம் அனுஷ்டானம் செய்து ப்ரஸித்தியடைந்தவர்; மூன்று லோகங்களிலும் ரகுவம்சத்தில் பிறந்த தசரத சக்ரவர்த்தியானவர் பரம தார்மிகன் என்று ப்ரஸித்தி ஏற்பட்டிருக்கிறது. அவ்விதமிருக்கும்பொழுது, இச்சமயம் அதிலும் லோகப்ரஸித்தரான விச்வாமித்ர மஹர்ஷியுடன் செய்த ப்ரதிக்ஞையை நிறைவேற்றுமல் விபரீதமாக நடந்துகொள்வது தங்களுக்கு அழகல்ல. 'ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டு, ஒரு மனிதன் அவ்விதம் நடத்தாதபோனுல், அவன் செய்த ஸகல புண்யங்களும் அவனைவிட்டு விலகிவிடுகிறது' என்ற ந்யாயத்தால், தாங்கள் செய்த அச்வமேதயாகம் முதலியவைகளுடைய பலன் தங்களைவிட்டு விலகிவிடும். ஜலமில்லாத இடத்தில் குளம் வெட்டின புண்யமோ, அன்னதானம் செய்த புண்யமோ உத்யானவனத்தை நிர்மாணம் செய்த புண்யமோ எல்லாவிதமான புண்யமும் அடியோடு போய்விடும். ராமன் அஸ்த்ரசஸ்த்ர வித்யையில் சிக்ஷிதனுனுலும் ஸரி, அசிக்ஷிதனுனுலும் ஸரி, விச்வாமித்ர மஹர்ஷி ரக்ஷகனுக இருக்கும்பொழுது, எவ்விதமான ராக்ஷஸர்களும் ராமனுடைய அருகில் அண்ட முடியாது. அக்னி சக்ரத்தால் ரக்ஷிக்கப்பட்ட அம்ருதத்தை, யார்தான் அபஹரிக்க முடியும்? விச்வாமித்ர மஹர்ஷியோ ஸாமான்யமான மஹர்ஷி யல்ல".

एष विग्रहवान् धर्मः एष वीर्यवतां वरः ।
एष बुद्ध्याऽधिको लोके तपसश्च परायणम् ॥
एषोस्त्रान् विविधान्वेत्ति त्रैलोक्ये सचराचरे ।
नैनमन्यः पुमान् वेत्ति नच वेत्स्यन्ति केचन ॥

𑌏𑌷 𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌵𑌾𑌨𑍍 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌏𑌷 𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌤𑌾𑌂 𑌵𑌰𑌃 ।
𑌏𑌷 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌽𑌧𑌿𑌕𑍋 𑌲𑍋𑌕𑍇 𑌤𑌪𑌸𑌶𑍍𑌚 𑌪𑌰𑌾𑌯𑌣𑌂 ॥
𑌏𑌷𑍋𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑍍 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑍍𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑍇 𑌸𑌚𑌰𑌾𑌚𑌰𑍇 ।
𑌨𑍈𑌨𑌮𑌨𑍍𑌯𑌃 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌨𑌚 𑌵𑍇𑌤𑍍𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑍇𑌚𑌨 ॥

ஏஷ விக்ரஹவாந் தர்ம: ஏஷ வீர்யவதாம் வர: ।
ஏஷ புத்யாதிகோ லோகே தபஸச்ச பராயணம் ॥
ஏஷோஸ்த்ராந் விவிதாந்வேத்தி த்ரைலோக்யே ஸசராசரே ।
நைநமந்ய: புமாந் வேத்தி நச வேத்ஸ்யந்தி கேசந ॥

என்ற ச்லோகங்களால் விச்வாமித்ர மஹர்ஷியினுடைய மஹிமையை வஸிஷ்ட பகவான் வர்ணிக்கிறார். அதாவது வேதோக்தமான ஸகல தர்மங்களும் உருவமெடுத்துக் கொண்டு இந்த விச்வாமித்ர மஹர்ஷியினுடைய ரூபமாக விளங்கிவருகிறது. அந்த மஹர்ஷியோ, வீர்யத்தோடு கூடினவர்களுக்குள் ச்ரேஷ்டராக விளங்குகிறார். ஆத்மஞானத்தில் இவருக்கு மேலான வித்வானே லோகத்தில் கிடையாது. தபஸ்ஸுக்கும் இவரே இருப்பிடமான ஸ்தானம் ஆகுவார். அதாவது, மஹா தபஸ்வி என்பது லோக ப்ரஸித்தமானது. சேதனுசேதன வர்க்கங்களால் நிறப்பப்பட்ட இந்த மூன்று லோகங்களிலும், இந்த மஹர்ஷியானவர் அறிந்திருக்கும் அஸ்த்ர சஸ்த்ரங்களைப்போல், மற்றொருவர் அறிந்திருப்பதும் இல்லை. அறியப்போவதும் இல்லை. भृशाश्वः (ப்ருசாச்வ:) என்று ப்ரஜாபதிகளுக்குள் (ப்ரும்ம புத்ராளான மஹர்ஷிகளுக்குள்) ஒருவர் இருந்தார். அவருக்கு ஸகல அஸ்த்ரங்களும் புத்ரர்களாக ஆவிர்ப்பவித்தன. அந்த ப்ரஜாபதியோ அவர்களை விச்வாமித்ர மஹர்ஷிக்கு அனுக்ரஹ பூர்வமாகக் கொடுத்துவிட்டார். அந்த அஸ்த்ரங்களுக்கு அநேக ரூபங்களை எடுத்துக்கொள்ள சக்தி யுண்டு. ப்ரயோகம் செய்த மாத்ரத்தில், நெருப்பு ஜ்வாலைகளைக் கக்கிக்கொண்டு சத்ருக்களுடைய கூட்டத்தைச் சாம்பலாகச் செய்துவிடும். அந்த அஸ்த்ரத்தைத் தெரிந்துகொண்டவன் எந்த யுத்தத்திலும் ஜயத்தைத்தான் அடைவான். தக்ஷப்ரஜாபதிக்கு ஜயா, ஸுப்ரபா என்று இரண்டு கன்னிகைகள் இருந்தார்கள். அவர்களை தக்ஷப்ரஜாபதியானவர் ப்ருசாச்வர் என்ற ப்ரஜாபதிக்கு பரிணயம் செய்துகொடுத்தார். அந்த இருவர்களுக்குள் ஜயை என்றவள் 500 அஸ்த்ரங்களை புத்ரனாக அடைந்தாள். அந்த அஸ்த்ரங்க

ளில் ஒன்ருென்றும் பலவிதமான ரூபத்தை எடுத்துக் கொண்டு அஸுர ஸைன்யத்தை ஒழித்துவிடும். ஸமஷ்டி யில் (மொத்தத்தில்) 500 என்ற பெயரைத் தவிர, ஒவ் வொரு அஸ்த்ரத்தின் பரிணும விசேஷங்களே அளவிட முடியாது. அவ்விதமே ஸுப்ரபை, என்றவளும் 500 அஸ்த் ரங்களே புத்ரர்களாக அடைந்தாள். அவைகளும் மற்ற அஸ்த்ரங்களேப்போலவே முன்ஞல் சொல்லப்பட்ட ப்ரபா வத்தோடு கூடினவைகள். இவ்விதம் ப்ருசாச்வர் என்ற ப்ர ஜாபதிக்கு இரண்டு தர்மபத்னிகளிடத்திலும் புத்ரர்களாக ஆவிர்பவித்த ஆயிரம் அஸ்த்ரங்களுக்கும், ஸம்ஹாராஸ்த்ரம் என்று பொதுவாக பெயர் ஏற்பட்டிருக்கிறது. அந்த அஸ்த்ரங்கள் ஒரு வீரனல் ப்ரயோகம் செய்யப்பட்டால், எதிராளியால் ப்ரயோகம் செய்யப்பட்ட ப்ரத்யஸ்த்ரங்க ளுக்கு தான் பராபவத்தை (அபஜயத்தை) அடையாமலே, அந்த ப்ரத்யஸ்த்ரம் ப்ரயோகம் செய்த எதிராளியினுடைய கூட்டத்தை நிர்மூலமாகச் செய்துவிட்டு, திரும்பிவரும் காரணத்தால் அந்த அஸ்த்ரங்களுக்கு ஸம்ஹாராஸ்த்ரம் என்ற பெயரானது அந்வர்த்தமாகவே (பெயருக்குத் தகுந் தபடி) ஏற்பட்டிருக்கிறது. அந்த அஸ்த்ரங்களே இந்த விச்வாமித்ர மஹர்ஷியானவர் தெரிந்துகொண்டு பரமேச்வ ரனுடைய அனுக்ரஹத்தால் தன் வசமே வைத்துக்கொண் டிருக்கிருர். அதுமாத்ரமல்ல. தானும் அபூர்வமான அஸ்த்ர விசேஷங்களே ஸ்ருஷ்டிக்கிற விஷயத்தில் தபோ மஹிமை யால் அபார சக்திவாய்ந்தவர். இவ்விதமான மஹிமை யுடன் விச்வாமித்ர மஹர்ஷி ராமனுக்கு ரக்ஷகனுக இருக் கும்பொழுது, ராமனுடைய விஷயத்தில் நீ ஏன் கவலேயை அடையவேண்டும். இந்த விச்வாமித்ர மஹர்ஷியோ, தனது யக்ஞத்திற்கு விக்னம் செய்கிற ராக்ஷஸர்களே, தான் ஸ்வய மாகவே நிக்ரஹம் செய்ய சக்தியுள்ளவர்தான். ராமனே அழைத்துக்கொண்டு போய்த்தான் அவருக்கு ஒரு கார்யம் முடிவுபெற வேண்டும் என்பது இல்லே. ஆகிலும் உன் புத்ரனுடைய் நன்மையைக் கருதியே உன்னிடம் வந்து

உன் புத்ரனுக அவதரித்திருக்கும் ஸ்ரீராமனை இப்பொழுது யாசிக்கிருர். இவருடன் ஸ்ரீராமனை அனுப்புவதினுல் ராமனுக்கு பரமலாபம் ஏற்படப்போகிறதே தவிர, அந்த மஹர்ஷிக்கு ஒன்றுமேயில்லை. ஆகையால் விச்வாமித்ர மஹர்ஷியுடன் ராமனை அனுப்புவதில் கொஞ்சமேனும் ஸம்சயத்தை அடையாமல் ப்ரஸன்னமான மனதுடன், செய்த ப்ரதிக்ஞையை ஸத்யமாகச் செய்வதின் பொருட்டு, மஹர்ஷியிடம் ராமனை அவச்யம் அர்ப்பணம் செய்யத் தான் வேண்டும். மஹர்ஷியினுல் ரக்ஷிக்கப்படுகிற ராமனுடைய விஷயத்தில் பயம் வேண்டாம் என்பது மாத்ர மல்ல. ரக்ஷகனுன மஹர்ஷியினுடைய மாஹாத்ம்யம் இருக்கட்டும். தன் புத்ரன் என்று நீ நினைத்திருக்கும் ராமனுடைய மஹிமையை நீ அறிந்திருக்கிருயா? ராமனுடைய வைபவத்தை நீ அறிந்திருந்தால், ராமனுடைய விஷயத்தில் கொஞ்சமேனும் நீ ஸந்தேஹத்தை அடையவே மாட்டாய். ராமனுடைய பெருமையையும் கொஞ்சம் சொல்கிறேன், கேள்" என்று வஸிஷ்ட பகவான் தசரத சக்ரவர்த்தியிடம் சொல்லிவிட்டு,

एष विग्रहवान् धर्मः एषवीर्यवतां वरः ।
एषबुद्ध्याऽधिको लोके तपसश्च परायणम् ॥
एषोस्त्रान् विविधान्वेत्ति त्रैलोक्ये सचराचरे ।
नैनमन्यः पुमान् वेत्ति नच वेत्स्यन्तिकेचन ॥

ஏஷ விக்ரஹவாந் தர்மஃ ஏஷ வீர்யவதாம் வரஃ ।
ஏஷ புத்த்யாऽதிகோ லோகே தபஸஶ்ச பராயணம் ॥
ஏஷோஸ்த்ராந் விவிதாந்வேத்தி த்ரைலோக்யே ஸசராசரே ।
நைநமந்யஃ புமாந் வேத்தி நச வேத்ஸ்யந்தி கேசந ॥

ஏஷ விக்ரஹவாந் தர்ம: ஏஷ வீர்யவதாம் வர: ।
ஏஷ புத்யாதிகோ லோகே தபஸச்ச பராயணம் ॥
ஏஷோஸ்த்ராந் விவிதாந்வேத்தி த்ரைலோக்யே ஸசராசரே ।
நைநமந்ய: புமாந் வேத்தி நச வேத்ஸ்யந்தி கேசந ॥

என்ற ச்லோகங்களால் ஸ்ரீராமபிரானுடைய மஹத்வத்தை வர்ணிக்கிருர்.

"एषः (ഏഷഃ) (ஏஷ:) இந்த ராமபத்ரன் वीर्यवतां वरः (വീര്യവതാം വരഃ) (வீர்யவதாம் வர:) வீர்யத்தோடு கூடினவர்களுக்குள், அதாவது சத்ருக்களே தோற்கடிக்கும் ஸாமர்த்யத்தோடு கூடினவர்களுக்குள் ச்ரேஷ்டனுன புருஷனுக ஆகிருன்—இதனுல் ஸஹஜமாக (இயற்கையிலேயே, பிறவியிலேயே) ஏற்பட்ட வீர்யத்தோடு கூடினவன் இந்த ராமன் தான். அக்னிக்கு ஔஷ்ண்யம் (சுடுவது) என்பது எப்படி ஸஹஜமான தர்மமோ, அதுபோல் ஸ்ரீராமனுக்கு வீர்யமானது ஸஹஜமான தர்மந்தான்—நடுவில் ஆகந்துகமாக வந்ததல்ல" என்று வஸிஷ்டபகவான் சொல்வதிலிருந்தும் ராமன் ஈச்வரன்தான் என்பதை தசரத சக்ரவர்த்திக்கு போதித்ததாக ஆகிறது.

அத்துடன் एष बुद्ध्याधिकः (ഏഷ ബുദ്ധ്യാധികഃ) (ஏஷ புத்யாதிக:) என்ற பதத்தால், ஸஹஜமான ஞானசக்தியும் ஸ்ரீராமனிடத்தில் இருப்பதாகச் சொன்னுர். அதுவும், ஸ்ரீராமன் ஈச்வரன்தான் என்பதற்கு ஒரு அஸாதாரணமான லிங்கம் ஆகும். அவ்விதமே एषविग्रहवान् धर्मः (ഏഷ വിഗ്രഹവാന് ധര്മ്മഃ) (ஏஷ விக்ரஹவாந் தர்ம:) என்பதாலும், ஸஹஜ தர்மமானது போதிக்கப்படுகிறது. அதுவும் ஒருவித ஐச்வரமான லிங்கந்தான். அத்துடன் तपसश्च परायणम् (തപസശ്ച പരായണം) (தபஸச்ச பராயணம்) என்ற வாக்யத்தால், தபஸ் என்ற ஸாதனத்தினுல் ரொம்பவும் மேலானதாக அடையத்தகுந்த ஸ்தானம் என்று தெரிகிறது. தபஸ்

ஸைச்செய்து ஞானத்வாரா (ஞானமூலமாக) புருஷன் போய்ச் சேருகிற இடமோ, பரப்ரும்மம்தான், என்பதை,

तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदिषन्ति ।
यज्ञेन दानेन तपसा अनाशकेन ॥

𑌤𑌮𑍇𑌤𑌂 𑌵𑍇𑌦𑌾𑌨𑍁𑌵𑌚𑌨𑍇𑌨 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌿𑌵𑌿𑌦𑌿𑌷𑌨𑍍𑌤𑌿 ।
𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌤𑌪𑌸𑌾 𑌅𑌨𑌾𑌶𑌕𑍇𑌨 ॥

தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி ।
யக்ஞேந தாநேந தபஸா அநாசகேந ॥

என்ற ச்ருதியானது சொல்கிறது. வஸிஷ்ட பகவானே தபஸ்ஸால் அடையத்தகுந்த வஸ்து என்று சொன்னதினல், மேற் சொன்ன ச்ருதியில் எந்த பரப்ரும்மத்தினுடைய ஸ்வரூ ஸாக்ஷாத்காரத்திற்கு, தபஸ்ஸை ஸாதனமாகச் சொல்லப் பட்டிருக்கிறதோ, அந்த பரப்ரும்மம்தான் இந்த ஸ்ரீராமன் என்று சொன்னதாக ஆகிறது.

அத்துடன், एषोस्त्रान् विविधान् वेत्ति (𑌏𑌷𑍋𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑍍 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑍍 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿) (ஏஷோஸ்த்ராந் விவிதாந் வேத்தி) என்றதினல் "ராஜனே, விச்வாமித்ர மஹர்ஷிக்கு எதிரில், 'இந்த குழந்தைக்கு அஸ்த்ரமே ஒன்றும் தெரியவே தெரியாது' என்று சொன்னயே அது மிகவும் பிசகு. இந்த ராமனே திவ்யமான அஸ்த்ரங்களையும் அறிந்தவன். அதாவது, மனுஷ்யர்களுக்கோ, அஸுரர்களுக்கோ, ராக்ஷஸர்களுக்கோ, புலப்படாததான அதிஸூக்ஷ்மமான அஸ்த்ரங்கள் இந்த ராமனுக்குத்தான் தெரியும். இந்த ராமனே ஸர்வேச்வரனன மஹாவிஷ்ணு; அபராஜிதமான ஸ்ரீவைகுண்டத்திலிருந்து தர்ம ரக்ஷணத்திற்காக பூதலத்தில் அவதாரம் செய்யும் பொழுது, மஹாவிஷ்ணுவாக இருக்கும்பொழுது என்னென்னவிதமான ஆயுதங்களுண்டோ, அந்த ஸகல ஆயுதங்களும் இந்த ராமாவதாரத்தில் ஸூக்ஷ்மமான ஸ்வரூபத்தோடு ராமனை அனுஸரித்து ஆவிர்பவித்திருக்கின்றன.

शराः नानाविधाकाराः, धनुः आयतविग्रहं ।
अनुव्रजन्ति काकुत्स्थं, सर्वे पुरुषविग्रहाः ॥

ஶராஃ நாநாவிதா⁴காராஃ, த⁴நுஃ ஆயதவிக்³ரஹம் ।
அநுவ்ரஜந்தி காகுத்ஸ்த²ம், ஸர்வே புருஷவிக்³ரஹாஃ ॥

சரா: நாநாவிதாகாரா:, தநு: ஆயதவிக்ரஹம் ।
அநுவ்ரஜந்தி காகுத்ஸ்தம் ஸர்வே புருஷவிக்ரஹா: ॥

என்ற ச்லோகமே மேற்சொன்ன விஷயத்தில் ப்ரமாண மாக ஆகும். பலவிதமான பாணங்களும், சார்ங்கம் என்று சொல்லப்பட்ட வில்லும், பாஞ்சஜன்யம் என்ற சங்கம், ஸுதர்சனம் என்ற சக்ரம், கௌமோதகீ என்று சொல்லப் லப்பட்ட கதை இது முதலான ஆயுத விசேஷங்களெல் லாம், மஹாவிஷ்ணுவானவர் ககுத்ஸ்த வம்சத்தில் ஸ்ரீராம னாக அவதாரம் செய்தகாலத்தில் புருஷ ஆகாரமாக ஆவிர் பவித்து, ஸ்ரீராமனிடமே பின்துடர்ந்து சென்றுவந்தன. ஆனால் ஸ்தூல புத்தியுள்ளவர்களுக்கு அந்த ரஹஸ்யம் தெரியாது. அதைத்தான் ப்ரக்ருதத்திலும் வஸிஷ்ட பக வானும் नैनं अन्यः पुमान् वेत्ति (நைநம் அந்ய: புமாந் வேத்தி) (நைநம் அந்ய: புமாந் வேத்தி) என்ற வாக்யத்தால் ஸூசனம் செய்கிறார் என்பதை வால்மீகி மஹர்ஷி சொல்கிறார். ராமனுடன் நின்றுகொண்டே இருக்கும் அஸ்த்ரங் களை ஒருவரும் அறியமுடியவில்லை என்பதுதான் அதன் கருத்து. सहैव सन्तं न विजानन्ति देवाः (ஸஹைவ ஸந்தம் ந விஜா நந்தி தே³வா:) (ஸஹைவ ஸந்தம் ந விஜாநந்தி தேவா:) என்ற ச்ருதியே அதில் ப்ரமாணமாக ஆகும். இந்த அவதாரத்தில் மட்டும் அல்ல. மற்ற அவதாரங்களி லும் இவ்விதமே இருக்கும் மஹிமையை ஒருவரும் அறி கிறதுமல்ல; அறியப்போகிறதுமல்ல. இவ்விதம் அவதார மஹிமையானது அதிக கோப்யமானதாக விளங்கி வரு கிறது. ஆகையால் ராமன் பரப்ரும்மமானதினால் ஸ்வய மாகவே தன் தேஜஸ்ஸால், ஸகல ராக்ஷஸர்களையும் ஸம்

ஹாரம் செய்ய சக்தியுள்ளவன். திவ்யமான ஆயுதங்களை யும் தன்னுடன் வைத்துக்கொண்டிருக்கிறார். மஹா தபஸ்வி யான விச்வாமித்ர மஹர்ஷியும் ரக்ஷகனாக விளங்கி வரு கிறார். அவருடைய மஹிமையோ, ஸ்ரீராமனுடைய மஹி மையோ, ஆயுத விசேஷங்களுடைய மஹிமையோ, இவை களையெல்லாம் கவனித்தால், கொஞ்சமேனும் ராமனுடைய விஷயத்தில் ஸந்தேஹத்தையோ, பயத்தையோ அடைய ந்யாயமே இல்லை. வம்ச கௌரவத்தை ரக்ஷிக்க, தாங்களும் ஸத்யப்ரதிக்ஞனாக ஆகவேண்டியது அவச்ய மாகும். ராமனை புத்ரனாக நினைத்தாலும் விச்வாமித்ர மஹர் ஷியின் பாதுகாப்பு இருந்து வருகிறது. ஈச்வரனாக அறிந் தாலும், ஸ்வயமாகவே பலிஷ்டன் என்பதில் கொஞ்சமேனும் ஆக்ஷேபணை இல்லை. ஆகையால் புத்ரத்ருஷ்டியை அனு ஸரித்தோ, பகவத் த்ருஷ்டியை அனுஸரித்தோ, கொஞ்ச மேனும் பயத்திற்கு அவகாசமே இல்லாததினால், ஸ்ரீராமச் சந்த்ர மூர்த்தியை ஸந்தோஷமான மனதுடன் விச்வாமித்ர மஹர்ஷியிடம் அர்ப்பணம் செய்து ஜன்ம ஸாபல்யத்தையு மடைந்து, வம்ச கௌரவத்தையும் காப்பாற்றி ஸத்யப்ர திக்ஞனாகவும் ஆகவேண்டும்" என்று வஸிஷ்ட பகவான் தசரதசக்ரவர்த்திக்கு உபதேசித்து, ஸ்ரீராமனை விச்வா மித்ர மஹர்ஷியினிடம் அர்ப்பணம் செய்வதில் பரம த்ருப்தி உள்ளவராக தசரத சக்ரவர்த்தியைச் செய்தார்.

தசரத ராஜனும் வஸிஷ்ட மஹர்ஷியின் வார்த்தை யைக் கேட்டு, விச்வாமித்ர மஹர்ஷியுடன் ஸ்ரீராமனை அனுப்புவதில் த்ருடமான ஸங்கல்பத்தோடு கூடினவராக ஆனார்.

22-வது ஸர்க்கம்

வஸிஷ்ட மஹர்ஷியினுடைய ஆக்ஞையை அனுஸரித்து பரம ஸந்தோஷத்துடன்கூடின மனதுடன், தசரத சக்ரவர்த்தியானவர், லக்ஷ்மணனோடுகூட ஸ்ரீராமனை ஸபைக்கு வரவழைத்து ராம லக்ஷ்மணனுக்கு மங்கள ஆசீர்வாதங்களைச் செய்து வஸிஷ்ட பகவான் மூலமாக மந்த்ர புரஸ்ஸரமாக ரக்ஷையையும் செய்து, ராமனுடைய சிரஸ்ஸை உச்சிமுகர்ந்து பார்த்து, அவ்விரு குழந்தைகளையும் விச்வாமித்ர மஹர்ஷியினிடம், பரம பக்தியுடன் அர்ப்பணம் செய்தார். லக்ஷ்மணனோடுகூட ஸ்ரீராமன் விச்வாமித்ர மஹர்ஷியை யடைந்து அந்த மஹானுபாவன்கூடவே சென்று ஸித்தாச்ரமத்தை அடைய ப்ரயாண அபிமுகனாக இருக்கும்பொழுது, ஸுகமான காற்று வீசிற்று. தேவலோகத்திலிருந்து புஷ்ப வர்ஷங்கள் வர்ஷிக்கப்பட்டன. தேவதுந்துபி வாத்ய கோஷங்களும் முழங்கின. சங்கபேரீ வாத்யங்களும், காஹளம் முதலிய வாத்யங்களும் சப்திக்கப்பட்டன. விச்வாமித்ர மஹர்ஷியானவர் முன்பாகச் சென்றார். ஸ்ரீராமனும் கையில் வில்லை தரித்துக்கொண்டு பின்துடர்ந்து சென்றார். ஸ்ரீராமனுக்குப் பின்னால் லக்ஷ்மணனும் சென்றார். ஸ்ரீராமர், லக்ஷ்மணன். இருவர்களும் அநேக அபூர்வமான பாணங்களால் நிறப்பப்பட்ட அம்பராத் தூணிகளால் அலங்கரிக்கப்பட்டவர்களாயும், நாநாதிக்குகளையும் தங்களுடைய தேஹ காந்தியால் பாஸிக்கச் செய்கிறவர்களாயும் இருந்துகொண்டு விச்வாமித்ர மஹர்ஷியை அனுஸரித்துச் சென்றார்கள். இருவர்களுக்குள் ஒவ்வொருவரும் இரண்டு தூணீரங்களை (அம்பராத் தூணிகளை) தரிப்பதினால், இரண்டு தூணீரங்களும் இரண்டு சிரஸ்ஸுகள் போலவும், தன் தன் சிரஸ்ஸோடுகூட சேர்த்து பார்க்கும்பொழுது, ஒவ்வொருவருக்கும் மூன்று சிரஸ்ஸுகள் இருப்பதுபோல் தோன்றுகிறபடியால், மூன்று தலைகளோடு கூடிய இரண்டு நாகங்களே, விச்வாமித்ர மஹர்ஷியைப் பின்துடர்ந்து செல்

கின்றனவோ என்று பார்ப்பவர்களுக்குத் தோன்றிற்று. ராமலக்ஷ்மணுள் தரித்துக்கொண்டிருக்கும் இரண்டு தூணீரங்களும், கையிலுள்ள கோதண்டங்களும், ப்ராக்ருதமான (ஸாதாரணமான) ஆயுதங்களல்ல. அபராஜிதமான வைகுண்ட லோகத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்தில் இருந்துவரும் ஆயுத விசேஷங்களே. ஸ்ரீராமன், லக்ஷ்மணன் இருவர்களும் விச்வாமித்ர மஹர்ஷியுடன் ஸித்தாச்ரமத்திற்குப் புறப்படும் ஸமயத்தில், கருடபகவானே நேரில் வந்து நின்றுகொண்டு, வைகுண்டத்திலிருந்து இந்த ஆயுத விசேஷங்களை எடுத்துக்கொண்டுவந்து கொடுத்ததாக தெரிகிறது.

पक्षी तार्क्ष्यः समागम्य, त्रीणिचास्त्राणि कार्मुकं ।
सर्वभूतैः अदृश्यः सन्, दत्वा ताभ्यां पुनर्ययौ ॥

𑌪𑌕𑍍𑌷𑍀 𑌤𑌾𑌰𑍍𑌕𑍍𑌷𑍍𑌯𑌃 𑌸𑌮𑌾𑌗𑌮𑍍𑌯, 𑌤𑍍𑌰𑍀𑌣𑌿𑌚𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌕𑌾𑌰𑍍𑌮𑍁𑌕𑌂 ।
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍈𑌃 𑌅𑌦𑍃𑌶𑍍𑌯𑌃 𑌸𑌨𑍍, 𑌦𑌤𑍍𑌵𑌾 𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂
𑌪𑍁𑌨𑌰𑍍𑌯𑌯𑍌 ॥

பக்ஷீ தார்க்ஷ்ய: ஸமாகம்ய, த்ரீணிசாஸ்த்ராணி கார்முகம் ।
ஸர்வபூதை: அத்ருச்ய: ஸந், தத்வா தாப்யாம் புநர்யயௌ ॥

என்ற பாத்மபுராண வசனமே, மேற்சொன்ன விஷயத்தில் ப்ரமாணமாகும்.

கருடபகவானே, ப்ராக்ருதமான ப்ராணிகளுக்கு புலப்படாததான ஸூக்ஷ்ம ரூபத்தோடு, ராம லக்ஷ்மணுளுக்கு எதிரில் திவ்ய சகுனமாக வந்து, வைகுண்டத்திலுள்ள, கத்தி, சர்ம, அம்பராத்தூணீ இவைகளை ராம லக்ஷ்மணுளிடம் கொடுத்துவிட்டு சென்றதாக மேற்சொன்ன, புராண வசனத்தின் பொருளாகும். இவ்வித மஹிமையுள்ள ராமனும் லக்ஷ்மணனும் விச்வாமித்ர மஹர்ஷியைப் பின் தொடர்ந்து சென்ருர்கள். இதனுல், ஒரு மனிதன் எந்தக் கார்யத்தை உத்தேசித்து எங்கு சென்ருலும், அவன், விச்வாமித்ரரைப்போல் இருந்தால் அவனுடைய கார்யத்தை ஸாதித்துக்

கொடுக்கவும், அவனை ரக்ஷிக்கவும் ராம லக்ஷ்மணுள் இருவர்களும் கட்கபாணிகளாக இருந்துகொண்டு அவனைப் பின் துடர்ந்து வருவார்கள். இந்த வைபவத்தை அதர்ம பஹுளமான இக்கலியுகத்திலும் அனுபவிக்கலாம் என்பது ப்ரத்யக்ஷமானது என்றதை विश्वामित्रं अनुजग्मतु: (𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌂 𑌅𑌨𑍁𑌜𑌗𑍍𑌮𑌤𑍁𑌃) (விச்வாமித்ரம் அநுஜக்மது:) என்ற வாக்யத்தால் வெளியிட்டார். வால்மீகி மஹர்ஷியானவர் विश्वामित्रं (𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌂) (விச்வாமித்ரம்) என்ற பதத்தை ப்ரயோகம் செய்ததினுலேயே, ராம லக்ஷ்மணுள் பின்துடர்ந்து வரும்படியான ஸாதனம் இன்னதென்பதைக் காட்டுகிருர். அதாவது, विश्वस्य मित्रं, विश्वामित्रः (𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌮𑌿𑌤𑍍𑌰𑌂, 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌃) (விச்வஸ்ய மித்ரம் விச்வாமித்ர:) என்று அந்த பதத்தின் ஸமாஸத்தை அறியவும். मित्रे चर्षाविति (𑌮𑌿𑌤𑍍𑌰𑍇 𑌚𑌰𑍍𑌷𑌾𑌵𑌿𑌤𑌿) (மித்ரே சர்ஷாவிதி) வ்யாகரண ப்ரக்ரியையை அனுஸரித்து விச்வ சப்தமானது தீர்க்கமாகிவிட்டது. அதனுல் विश्वामित्रः (𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌃) (விச்வாமித்ர:) என்று சொல்லப்படுகிறது. வேதத்திலும், तस्यों विश्वं मित्रं असीत्, यदिदं किंच, तस्मात् विश्वामित्रः इत्याचक्षते (𑌤𑌸𑍍𑌯𑍋𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌮𑌿𑌤𑍍𑌰𑌂 𑌆𑌸𑍀𑌤𑍍, 𑌯𑌦𑌿𑌦𑌂 𑌕𑌿𑌂𑌚, 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍, 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌃 𑌇𑌤𑍍𑌯𑌾𑌚𑌕𑍍𑌷𑌤𑍇) (தஸ்யோம் விச்வம் மித்ரம் ஆஸீத், யதிதம் கிஞ்ச, தஸ்மாத், விச்வாமித்ர: இத்யாசக்ஷதே) என்ற வாக்யத்தால் விச்வாமித்ர சப்த நிர்வசனமும் செய்யப்பட்டிருக்கிறது. லோகத்தில் எந்த வஸ்துவானுலும், அது தன்னுடைய நடத்தையினுலேயே எந்த ப்ரபுவுக்கு மித்ரமாகவே ஆகிறதோ, அந்த மஹானுபாவன்தான் விச்வாமித்ரர் என்று சொல்லப்படுகிருர் என்று மேற்சொன்ன ச்ருதியின் தாத்பர்யம் ஆகும். ப்ரக்ருதத்திலுள்ள மஹர்ஷியும் அந்த வைபவமுள்ளவரானதால், விச்வாமித்ரர் என்று சொல்லப்படுகிருர். அதனுல் ஸர்வபூதமைத்ரீ என்ற கல்யாண குணம்தான் ஈச்வரனை வசமாக்கிக்கொள்வதற்கு முக்யமான ஸாதனமென்று வெளியாகிறது. ஆகையால் ஸகல ப்ராணிகளும் ஸர்வ பூதங்களிடத்திலும் மைத்ரத்துடன் (அன்புடன்) இருந்து வரவேண்டும் என்பது ப்ரகாசப்படுத்தப்படுகிறது.

இவ்விதம் ராம லக்ஷ்மணுள் இருவர்களும் திவ்ய தேஜஸ்ஸுடன் ஜ்வலித்துக்கொண்டு விச்வாமித்ர மஹர்ஷியைப் பின்துடர்ந்து போனுர்கள். அதைப் பார்க்கும் ஜனங்களுக்கு, அக்னியிலிருந்து உண்டான **ஸ்கந்தன், விசாகன்** என்று இரண்டு குமாரர்களால் பின்துடரப்பட்டு பரமேச்வரன் போனுல் எவ்விதம் விளங்குமோ, அவ்விதம் அவர்கள் பாஸித்தார்கள். இப்படி அயோத்யையிலிருந்து ஸரயூ நதியின் தென்கரை வழியாக ஒன்றரை யோஜனை தூரம் வெகு வேகமாக வந்துவிட்டார்கள். விச்வாமித்ர மஹர்ஷியோ, ராம லக்ஷ்மணர்களைக் குறித்து 'இருவர்களும் பாலர்கள், வழியில் நடந்து வரும் ச்ரமம் அவர்களுக்குத் தோன்றக்கூடாது, பசி தாஹமும் ஏற்படக்கூடாது, சரீரத்தில் ச்ரமம், களைப்பு ஒன்றும் தோன்றக் கூடாது' என்று எண்ணி, ஸர்வ துக்கத்தையும் நிவ்ருத்தி செய்துவைக்கக்கூடிய மஹா மந்த்ரத்தை உபதேசம் செய்ய யத்னம் செய்தார். ராமா என்று மதுரமான வாக்கினுல் ஸ்ரீராமனை அழைத்து. "வத்ஸ, (குழந்தாய்) மெதுவாக ஸரயூ நதியில் இறங்கி பாதப்ரக்ஷாளனம் (காலலம்புவது) செய்துகொண்டு, ஆசமனம்செய்துவிட்டு வா, உனக்கு ஒரு மஹாவித்யை உபதேசம் செய்வதாக உத்தேசித்திருக்கிறேன்" என்று சொன்னுர். ஸ்ரீராமனும் லக்ஷ்மணனுடன்கூட அவ்விதமே ஸரயூ நதியிலிறங்கி பாதப்ரக்ஷாளன ஆசமனுதிகளைச் செய்துகொண்டு பரிசுத்தமான சரீரத்துடன் விச்வாமித்ர மஹர்ஷியை ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளால் ஸந்தோஷிக்கச் செய்துவிட்டு அந்த மஹர்ஷிக்கு முன்பாக அஞ்ஜலிபந்தம் செய்துகொண்டு (கைகூப்பி) நின்றுகொண்டார். லக்ஷ்மணனும் அவ்விதமே ராமனை அனுஸரித்து நின்றுர்.

விச்வாமித்ர மஹர்ஷியும், "**मन्त्रग्रामं गृहाणत्वं, बलां अतिबलां तथा**" (𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌗𑍃𑌹𑌾𑌣𑌤𑍍𑌵𑌂 𑌬𑌲𑌾𑌂 𑌅𑌤𑌿𑌬𑌲𑌾𑌂 𑌤𑌥𑌾) (மந்த்ரக்ராமம் க்ருஹாணத்வம் பலாம் அதிபலாம் ததா) என்ற வாக்யத்தால்

மஹாவித்யையை உபதேசம் செய்தார். "ராமா, பலை, அதிபலை என்று இரண்டு வித்யைகள் அபூர்வமானவைகள். அதர்வண வேதத்தில் இந்த வித்யைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அநேக மஹாமந்த்ரங்கள் இந்த இரண்டு வித்யைகள் ஒவ்வொன்றிலும் அடக்கப்பட்டிருக்கின்றன. அதில் பலை என்ற வித்யையோ சரீர ச்ரமத்தையும், ஜ்வராதி ரோகங்களையும், விகாரமான ரூபங்களையும் தேஹத்தில் கிட்ட அண்டாமலிருக்கும்படி செய்யும். பலை என்ற வித்யையை ஜபிக்கும் உபாஸகன் தூங்கும்பொழுதோ, ப்ரமத்தனாக இருக்கும்பொழுதோ (புத்தி ஸ்வாதீன மில்லாமலிருந்தாலும்) அப்பொழுதுகூட அவனை சத்ருக்கள் ஒன்றும் செய்ய முடியாது. அந்த வித்யையே தன் ஸ்வரூபத்தை எடுத்துக் கொண்டு அந்த சத்ருக்களை விரட்டிவிடும். அந்த வித்யை இருந்தால், அவன் பாஹுபலத்தில் ரொம்பவும் சிறந்தவனாக ஆகிறான். மூன்று லோகங்களிலும் அவனுக்கு ஸமானமாக மற்றொருவனையும் சொல்ல முடியாது. அந்த வித்யையானது தேஹத்திற்கு ஒருவித அபூர்வமான அழகையும் பலத்தையும் கொடுக்கும். ஸூக்ஷ்மமான தத்வத்தை அறியும் சக்தியையும் கொடுக்கும். அந்த உபாஸகன் ஒரு மஹாஸபையில் ஒரு விஷயத்தைப்பற்றி பேசினால் அதற்கு மற்ற ஒருவராலும் பதில் சொல்லமுடியாது. ஸர்வக்ஞனாகவே அந்த உபாஸகனை இந்த வித்யைசெய்து விடுகிறது என்பது நிச்சயம். இந்த வித்யைக்கு ஸமானமான வித்யையே லோகத்தில் வேறொன்றும் கிடையாது.

அதிபலை என்ற வித்யையோ, ஸங்கல்பமாத்ரத்தில் எவ்விதமான கார்யத்தையும் பூர்த்திசெய்து கொடுக்கும் ஸாமர்த்யமுள்ளது. அதிபலை என்ற வித்யையை ஆச்ரயித்தவன் சத்ரு நாசத்தை தான் மனதில் நினைத்தாலே போதுமானது. சத்ரு அடியோடு நசித்துவிடுவான். அவ்விதம் மஹாப்ரபாவமுள்ள வித்யை. இந்த வித்யையை நான் சதுர்முகனான ப்ரும்மாவினுடைய அனுக்ரஹத்தினால் அடைந்தேன். விஷ்ணு மூலமாக பரமேச்வரனுக்கு

இந்த வித்யை கிடைத்தது. பரமேச்வரன் மூலமாக ப்ரும்மா வுக்கு கிடைத்தது. நானும் இந்த வித்யையை உனக்கு உபதேசம் செய்யலாம் என்று எண்ணுகிறேன். உண்மை யிலோ, எனக்குப் பிறகு இந்த வித்யைக்கு பாத்ரம் பூலோ கத்திலேயே இல்லாததினால், எந்த விஷ்ணுவினிடமிருந்து இந்த வித்யையானது ஆவிர்பவித்து வந்ததோ அந்த விஷ் ணுவே நீயானதினால் உன்னிடத்திலேயே அந்த வித்யையை ஒப்புவித்துவிடலாமென்று தாத்பர்யம்" என்று விச்வாமித்ர மஹர்ஷி சொன்னார்.

முதலில் சொல்லப்பட்ட பலை என்பதோ, ஸர்வதுக்க நிவாரணி; அதிபலை என்பதோ சிந்திதார்த்த ப்ரபூரணீ.

मातर्बलं देहि तनुषु नः। विराट् छन्दः। ब्रह्मा ऋषिः। भुवनेश्वरी देवता॥ दशाक्षरा विराट्॥

𑌮𑌾𑌤𑌰𑍍𑌬𑌲𑌂 𑌦𑍇𑌹𑌿 𑌤𑌨𑍁𑌷𑍁 𑌨𑌃। 𑌵𑌿𑌰𑌾𑌟𑍍 𑌛𑌨𑍍𑌦𑌃। 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌋𑌷𑌿𑌃। 𑌭𑍁𑌵𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑍀 𑌦𑍇𑌵𑌤𑌾॥ 𑌦𑌶𑌾𑌕𑍍𑌷𑌰𑌾 𑌵𑌿𑌰𑌾𑌟𑍍॥

மாதர்பலம் தேஹி தநுஷு ந:। விராட் சந்த:। ப்ரும்மா ரிஷி:। புவநேச்வரீ தேவதா॥ தசாக்ஷரா விராட்॥

மேற்சொல்லியதுதான் பலை என்று சொல்லப்படும்.

श्रीं ह्रीं क्लीं ऐं सौः मातर्मम मनः प्रसन्नं कुरु कुरु स्वाहा सौः ऐं क्लीं ह्रीं श्रीं॥ पंक्तीछन्दः॥ पंचपदावा, पंच पादावा, पंचाक्षरीवा॥ ब्रह्मा ऋषिः॥ भुवनेश्वरी देवता॥

𑌶𑍍𑌰𑍀𑌂 𑌹𑍍𑌰𑍀𑌂 𑌕𑍍𑌲𑍀𑌂 𑌐𑌂 𑌸𑍌𑌃 𑌮𑌾𑌤𑌰𑍍𑌮𑌮 𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌂 𑌕𑍁𑌰𑍁 𑌕𑍁𑌰𑍁 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 𑌸𑍌𑌃 𑌐𑌂 𑌕𑍍𑌲𑍀𑌂 𑌹𑍍𑌰𑍀𑌂 𑌶𑍍𑌰𑍀𑌂॥ 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑍀𑌛𑌨𑍍𑌦𑌃॥ 𑌪𑌞𑍍𑌚𑌪𑌦𑌾𑌵𑌾, 𑌪𑌞𑍍𑌚 𑌪𑌾𑌦𑌾𑌵𑌾, 𑌪𑌞𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰𑍀𑌵𑌾॥ 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌋𑌷𑌿𑌃॥ 𑌭𑍁𑌵𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑍀 𑌦𑍇𑌵𑌤𑌾॥

ச்ரீம் ஹ்ரீம் க்லீம் ஐம் ஸௌ: மாதர்மம மந: ப்ரஸந்நம் குரு குரு ஸ்வாஹா ஸௌ: ஐம் க்லீம் ஹ்ரீம் ச்ரீம்॥ பங்க்தீ சந்த:॥ பஞ்சபதாவா, பஞ்ச பாதாவா, பஞ்சாக்ஷரீவா॥ ப்ரஹ்மா ரிஷி:॥ புவநேச்வரீ தேவதா॥

மேற்சொல்லிய மந்த்ரம் அதிபலை என்று சொல்லப்படும்.

இந்த இரண்டு வித்யைகளையும் விச்வாமித்ர மஹர்ஷியானவர் ராமலக்ஷ்மணனுக்கு உபதேசம் செய்தார். ராமனும் பரம ஸந்தோஷமான மனதுடன்கூட மஹா தபஸ்விகளுக்குக்கூட கிடைக்காததான அந்த வித்யைகளை க்ரஹித்துக்கொண்டு, ஆயிரம் ஸூர்யனுக்கு ஸமானமாக பாஸித்துவந்தார். அதுமுதல் விச்வாமித்ர மஹர்ஷியே, பரமகுரு என்று தீர்மானம் செய்து, வித்யாகுருவான மஹர்ஷிக்கு ஸகலவிதமான கைங்கர்யங்களையும் பரம ச்ரத்தா பக்தியுடன் ராம லக்ஷ்மணர்கள் இருவர்களும் செய்துவந்தார்கள். இந்த வ்ருத்தாந்தத்துடன் அந்த ஸரயூ நதிக் கரையிலேயே, ஸூர்யன் அஸ்தமனத்தை அடைந்துவிட்டார். அன்று தினம் இரவு ஸ்ரீராமலக்ஷ்மணன், விச்வாமித்ர மஹர்ஷி மூன்றுபேர்களும் ஸுகமாக காலத்தை நயிப்பித்தார்கள். ரொம்பவும் ம்ருதுவான த்ருணத்தில் (புல்லால் செய்த படுக்கையில்) ராமலக்ஷ்மணன் சயனம் செய்தார்கள். விச்வாமித்ர மஹர்ஷியும் அவ்விருவர்களையும் மதுரமான வார்த்தைகளால் லாளனை செய்துவிட்டு, தூங்கும்படி செய்தார்.

23-வது ஸர்க்கம்.

ப்ரபாதகாலத்தில் (விடியற் காலையில்) விச்வாமித்ர மஹர்ஷியானவர் சீக்ரமாகவே நித்ரையிலிருந்து விழித்துக்கொண்டு, ம்ருதுவான தர்ப்பசயனத்தில் (புல்லணையில்) நித்ரை செய்துகொண்டிருக்கும் ராம லக்ஷ்மணர்களை எழுப்புவதற்காக, அவர்களுடைய ஸமீபம் சென்று, ராமனையும் மஹர்ஷி பரமப்ரீதியுடன் பார்த்து, நித்ராகாலத்திலே கூட ஸ்ரீராமனுடைய முகஸ்ரீ விளங்குகிறதைப்பார்த்து, பரம ஸந்தோஷத்துடன் ஸ்ரீராமனைப்பார்த்துச் சொல்கிறார்.

कौसल्या सुप्रजा राम, पूर्वा संध्या प्रवर्तते ।
उत्तिष्ठ नरशार्दूल, कर्तव्यं दैवमाह्निकम् ॥

𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾 𑌸𑍁𑌪𑍍𑌰𑌜𑌾 𑌰𑌾𑌮, 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌉𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠 𑌨𑌰𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲, 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌦𑍈𑌵𑌮𑌾𑌹𑍍𑌨𑌿𑌕𑌮𑍍 ॥

கௌஸல்யா ஸுப்ரஜா ராம, பூர்வா ஸந்த்யா ப்ரவர்ததே ।
உத்திஷ்ட நரசார்தூல, கர்தவ்யம் தைவமாஹ்நிகம் ॥

என்ற ச்லோகத்தால் ஸ்ரீராமனுடைய மஹிமையை அந்த மஹர்ஷி வெளிப்படுத்துகிருர். ராமன், லக்ஷ்மணன் இருவர்களையும் எழுப்பச்சென்ற விச்வாமித்ர மஹர்ஷியானவர் "स मया बोधितः श्रीमान् सुखसुप्तः परंतपः" (𑌸 𑌮𑌯𑌾 𑌬𑍋𑌧𑌿𑌤𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌸𑍁𑌖𑌸𑍁𑌪𑍍𑌤𑌃 𑌪𑌰𑌂𑌤𑌪𑌃) (ஸ மயா போதித: ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரம்தப:) என்ற ரீதியாக தூங்கும் காலத்தில் கூட சத்ருக்களை கிட்ட அண்டமுடியாமல் விரட்டி விடுகிற நித்ராகாலிகமான ஸ்ரீராமனுடைய தேஹகாந்தியையும், சோபையையும் பார்த்து, அந்த சோபையிலேயே முழுகிப்போன மனதுடன் கூடினவராகி, தன்னுடைய யக்ஞ கார்யத்தைக்கூட மறந்து, இந்த மஹா புருஷனை புத்ரனுகப் பெற்றெடுத்த கௌஸல்யா தேவியானவள், என்ன தபஸ்தான் செய்தாளோ என்று ஆச்சர்யப்பட்டார். கௌஸல்யா தேவியானவள் सुप्रजाः (𑌸𑍁𑌪𑍍𑌰𑌜𑌾𑌃) (ஸுப்ரஜா:) நல்ல புத்ரனேடு கூடினவள்.

शोभना प्रजा पुत्रः, यस्याः सा, सुप्रजाः ।

𑌶𑍋𑌭𑌨𑌾 𑌪𑍍𑌰𑌜𑌾, 𑌪𑍁𑌤𑍍𑌰𑌃, 𑌯𑌸𑍍𑌯𑌾𑌃 𑌸𑌾, 𑌸𑍁𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 ।

சோபநா ப்ரஜா, புத்ர:, யஸ்யா: ஸா, ஸுப்ரஜா: ।

என்ற ஸமாஸத்தால் இருபத்தி ஒன்று தலைமுறையுள்ள பித்ருக்களை ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கரையேற்றிவிடக்கூடிய ஸத்புத்ரனேடு கூடினவள் என்று பரம ஆச்சர்யத்தை யடைந்தவராக ஆனுர். இதனுல் कौसल्या सुप्रजाः (𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾 𑌸𑍁𑌪𑍍𑌰𑌜𑌾𑌃) (கௌஸல்யா ஸுப்ரஜா:) என்று தனித்தனி பதமாக வைத்துக்கொண்டு அர்த்தமானது சொல்லப்பட்டது. कौसल्यायाः सुप्रजाः कौसल्यासुप्रजाः (𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾𑌯𑌾𑌃 𑌸𑍁𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾𑌸𑍁𑌪𑍍𑌰𑌜𑌾𑌃) (கௌஸல்யாயா: ஸுப்ரஜா: கௌஸல்யா

ஸுப்ரஜா:) என்று ஸம்போதன ப்ரதமையாக வைத்துக் கொண்டு "கௌஸல்யையினுடைய ஸத்புத்ரனே" என்று கூப்பிடுவதுபோல் வைத்துக்கொள்ளவும். ராமா என்பதும் ஸம்போதன ப்ரதமைதான். ராமா என்று அழைத்தால், பரசுராமரை விச்வாமித்ரர் அழைத்தாரோ என்ற ஸந்தேஹம் ஏற்படலாம். ப்ரபாதகாலத்தில் ஸத்புருஷாள் பகவந் நாம ஸங்கீர்த்தனம் செய்வது வழக்கமுண்டு. அதையனுஸரித்து விச்வாமித்ர மஹர்ஷியும் ப்ரபாதகாலத்தில் நித்ரையிலிருந்து விழித்தவுடன், ராமா என்று பகவானை பரசுராமருடைய திருநாமத்தை ஸங்கீர்த்தனம் செய்கிறாரோ என்ற ஸந்தேஹத்தை நிவ்ருத்தி செய்ய, "कौसल्या सुप्रजाः" (கௌஸல்யா ஸுப்ரஜா:) (கௌஸல்யா ஸுப்ரஜா:) என்ற ஸம்போதன விசேஷணம் ஏற்பட்டது. விசேஷணம் (உரிச்சொல்) என்பது இதரத்தை (மற்றொன்றை) வ்யாவ்ருத்தி செய்து கொடுக்கும் (விலக்கிக்காட்டும்) ஸ்வபாவமுள்ளதினால், பரசுராமரை வ்யாவ்ருத்தி செய்துகொடுக்கிறது. ஆகையால் எந்த ஸஜ்ஜனங்களும் தினந்தோறும் காலையில் எழுந்திருந்தவுடன் கௌஸல்யாநந்த்வர்த்தனனை ஸ்ரீராம நாமத்தையே ஸங்கீர்த்தனம் செய்தால் அந்தந்த தினத்தில் பரம மங்களத்தை அடையலாம் என்று ஸூசிப்பிக்கப்படுகிறது. விச்வாமித்ர மஹர்ஷியானவர் ராமனை कौसल्यासुप्रजाः (கௌஸல்யாஸுப்ரஜா:) கௌஸல்யா ஸுப்ரஜா:) என்று ஸம்போதனம் செய்தாரே அது எப்படி ஸங்கதமாகும் (ஒத்துவரும்)? கௌஸல்யா தேவி, தசரதசக்ரவர்த்தி இருவர்களுமே மஹா தபஸ்ஸைச்செய்து, அவ்விருவர்களுடைய தபஸ்ஸின் பலமாகவே இந்த ராமன் உதித்திருக்கும்பொழுது, கௌஸல்யா தேவிக்குமட்டும் கௌரவத்தைக் கொடுத்து, தசரத சக்ரவர்த்தியை வ்யாவ்ருத்தி செய்தது அவ்வளவு ஸமஞ்ஜஸமாக (நன்றாக) ஆகாது என்பதற்கு ஸமாதானத்தை அறியவும்.

माता पुत्रस्य भूयांसि कर्माणि आरभते ।

ஊதா வுுத்ரஸ்ய ஹூயாம்ஸி கூஊாணி ஆரஹதெ ।

மாதா புத்ரஸ்ய பூயாம்ஸி கர்மாணி ஆரபதே ।

என்ற சாஸ்த்ரத்தால் புத்ரனுடைய அபிவ்ருத்தியில் தகப்பன் செய்கிற ஸத்கர்மாவைக் காட்டிலும் தாயார் செய்கிற ஸத்கர்மாக்கள் ரொம்பவும் அதிகமானவைகள் என்று தெரிகிறபடியால், தாயாருக்குத்தான் ப்ராதான்யத்தைக் கொடுக்கவேண்டும். "मातृ देवो भव" (ஊதரு தெவொ ஹவ) (மாத்ரு தேவோ பவ) என்ற ச்ருதியும், தாயாருக்குத்தான் ப்ராதான்யத்தை போதிக்கிறது. "पितुः शतगुणं माता" (விதுஃ ஶதமுணம் ஊதா) (பிது: சதகுணம் மாதா) என்ற ஸ்ம்ருதியும் தகப்பனுரை அபேக்ஷித்து தாயாரை நூறு மடங்கு அதிகமாகப் பூஜிக்க வேண்டுமென்று சொல்கிறது. இந்த ப்ரமாண வாக்யங்களை அனுஸரித்துத்தான் விச்வாமித்ர மஹர்ஷியும் கௌஸல்யா தேவிக்கு ப்ராதான்யத்தைக் கொடுத்து कौसल्यासुप्रजाः (கௌஸல்யாஸுப்ரஜாஃ) (கௌஸல்யாஸுப்ரஜா:) என்று ஸம்போதனம் செய்தார்.

தவிரவும், கௌஸல்யாதேவிக்கும் தசரத சக்ரவர்த்திக்கும் மஹத்தான தாரதம்யம் (வித்யாஸம்) உண்டு. अहं वेद्मि महात्मानं (அஹம் வெஜ்ரி ஊஹாத்ாநம்) (அஹம் வேத்மி மஹாத்மாநம்) என்று விச்வாமித்ர மஹர்ஷியானவர் ராமனை பரப்ரும்மம் என்று போதித்தும் அதை தசரதராஜன் மனதில் க்ரஹித்துக் கொள்ளாமலே,

"दुःखेन उत्पादितश्चायं, न रामं नेतुमर्हसि"

"ஃுஃவெந உத்வாஷிதஸ்ாயம், ந ராமம் நெதுமஹஸி"

"து:கேந உத்பாதிதச்சாயம், ந ராமம் நேதுமர்ஹஸி"

என்ற ச்லோகத்தால், "நான் எவ்வளவோ கஷ்டப்பட்டு இந்த ராமன் எனக்கு பிள்ளையாகப் பிறந்தான். ஆகையால் நீங்கள் இந்த ராமனை அழைத்துக்கொண்டு போகக்

கூடாது" என்று புலம்பிக்கொண்டு ராமனிடத்தில் கேவலம் புத்ரன் என்ற அபிமானத்தைமட்டும் வைத்துக் கொண்டு வஸிஷ்ட மஹர்ஷியினுடைய நிர்பந்தத்திற்காக மாத்ரம், விச்வாமித்ர மஹர்ஷியுடன் ஸ்ரீராம லக்ஷ்மணர்களை அனுப்பிவைத்தாரே தவிர, ஸ்ரீராமனிடத்தில் ஈச்வரன் தான் என்ற த்ருடபுத்தியுடன் அவர் அனுப்பவில்லை. கௌஸல்யாதேவியோ புத்ர வாத்ஸல்யத்தோடு கூடினவளாயிருந்தாலும், விச்வாமித்ர மஹர்ஷியினுடைய உபதேச வாக்யத்தைக் கேட்டமாத்ரத்திலேயே, ராமனிடத்தில் பரத்வ புத்தியை அவலம்பித்து, ஸ்த்ரீ ஜாதியானாலும் நிர்ப்பயமாக பரம ஆதரவுடன் விச்வாமித்ர மஹர்ஷியுடன் ஸ்ரீராம லக்ஷ்மணர்களை அனுப்பிவைத்தாள். இவ்விதமான அவர்களுக்குள்ள விவேகதாரதம்யத்தை நன்றாக அறிந்த விச்வாமித்ர மஹர்ஷியானவர் कौसल्या सुप्रजा: (கௌஸல்யா ஸுப்ரஜா:) (கௌஸல்யா ஸுப்ரஜா:) என்று ஸம்போதனம் செய்தார்.

सुप्रजा: (ஸுப்ரஜா:) (ஸுப்ரஜா:) என்று ஸம்போதனம் செய்ததினால் ஸத்புத்ரன் என்ற தாத்பர்யம் வெளியாகிறது. அதனால் மாத்ரு வாக்யம், பித்ரு வாக்யம் இரண்டையும் சிரஸ்ஸால் வஹித்து பரிபாலனம் செய்யவேண்டும் என்ற ஸாமான்ய தர்மத்தை தான் அனுஷ்டித்துக் காட்டி, ஸம்ஸ்தாபனம் செய்வதற்காக அவதரித்த ஸத்புத்ரனே, என்பது வெளியாகிறது. இதனால் தாய் தந்தையர்களுடைய வாக்யத்தை பரிபாலனம் செய்கிறவனே ஸத்புத்ரனாகுவான்.

மறுபடியும் ராமா என்று ஸம்போதனம் செய்தார். 'ரமிக்க (ஆநந்திக்க) செய்கிறவனே' என்று அதன் பொருளாகும். அதனால் ஸ்வாப காலத்தில் (தூங்கும் காலத்தில்) விளங்குகிற ஸௌந்தர்ய விசேஷமானது வர்ணிக்கப்படுகிறது. இவ்விதம் "ஹே, கௌஸல்யா தேவியினுடைய ஸத்புத்ரனே, ஹே, ராம" என்று எழுப்பி पूर्वा संध्या प्रवर्तते (பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே) (பூர்வா ஸங்த்யா ப்ரவர்த்ததே) என்று சொன்

ணுர். "ப்ராதக்கால ஸந்த்யை வந்துவிட்டது. ப்ராதக்கால ஸந்த்யையானது ஸூர்யனை ப்ரகாசப்படுத்துவதுபோல் கௌஸல்யாதேவியும், ராமா! உன்னை ப்ரகாசப்படுத்தி வைத்திருக்கிருள்" என்று சொன்ஞர். இதனுல் ஸூர்யபகவான் பூர்வ ஸந்த்யையினுடைய கர்ப்பத்திலிருந்து வெளிவந்திருந்தால், இந்த ஸ்ரீராமனும் கௌஸல்யா தேவியினுடைய கர்ப்பத்திலிருந்து வந்ததாக ஒப்புக்கொள்ளலாம். இல்லாவிடில் பூர்வ ஸந்த்யைக்கும் ஸூர்ய பகவானுக்கும் எவ்வித ஸம்பந்தமோ அதேவிதமான ஸம்பந்தம்தான் ஸ்ரீ ராமச்சந்த்ரமூர்த்திக்கும் கௌஸல்யா தேவிக்கும் என்று வித்வான்கள் அறியவும்.

தவிரவும், पूर्वा संध्या प्रवर्तते (பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே) (பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே) என்றதிஞல் "ராமா! உன் தாயாரான கௌஸல்யா தேவி உனக்கு எப்படி பூஜிக்கத் தகுந்தவளோ அதுபோல் பூர்வ ஸந்த்யையும் உனக்கு பூஜிக்கத் தகுந்ததாக ஆகிறது. தவிரவும், ப்ராதக்கால ஸந்த்யை வந்தவுடன் ஸூர்ய பகவானுக்கு ராத்ரியிலுள்ள இருட்டை போக்கடிக்கிற ஸமயம் வந்துவிடுமோ, அதுபோல் உனக்கும் ஸாதுக்களை ஹிம்ஸிக்கிற ராக்ஷஸர்களை நாசம் செய்யக்கூடிய ஸமயமும் வந்திருக்கிறது. இல்லாவிடில் ப்ராதக்கால ஸந்த்யை வந்தவுடன் இருட்டு போய், கர்மஸாக்ஷியான ஸூர்ய பகவானுடைய ஸாக்ஷாத்காரம் ஸகலப்ராணிகளுக்கும் எவ்விதம் ஏற்படுமோ, அதுபோல் அக்ஞானமாகிய அந்தகாரம் (இருள்) போய், பரப்ரும்மமாகிய உன்னுடைய ஸாக்ஷாத்காரமும் எனக்கு ஏற்பட்டுவிட்டது. ஆகையால் இன்று தினம் தான் விடியற்காலம் எனக்கு ஸுப்ரபாதமாக (நல்லவிடியற்காலமாக) ஆகிற்று.

"தவிரவும், ராமா! ப்ராதக்கால ஸந்த்யை வந்தவுடன் லோகத்தில் எப்படி ப்ரகாசம் ஏற்படுமோ, அதுபோல் உன் அவதாரத்தால் ஸகல ப்ராணிகளுக்கும் ஸத்வகுண ப்ரகாச காலம் வந்துவிட்டது.

अद्य मे सफलं जन्म, सुप्रभाता च मे निशा ।
यदुन्निद्राब्जपत्राक्षं, विष्णोः द्रक्ष्याम्यहं मुखं ॥

𑌅𑌦𑍍𑌯 𑌮𑍇 𑌸𑌫𑌲𑌂 𑌜𑌨𑍍𑌮 𑌸𑍁𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑌾 𑌚 𑌮𑍇 𑌨𑌿𑌶𑌾 ।
𑌯𑌦𑍁𑌨𑍍𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌬𑍍𑌜𑌪𑌤𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌂, 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 𑌮𑍁𑌖𑌂 ।

அத்ய மே ஸபலம் ஜந்ம, ஸுப்ரபாதா ச மே நிசா ।
யதுந்நித்ராப்ஜபத்ராக்ஷம், விஷ்ணோ: த்ரக்ஷ்யாம்யஹம் முகம் ॥

என்ற ச்லோகத்தால், ராமா! என் ஜன்மா ஸபலமானஜன்மாவாகிவிட்டது. இப்பொழுது சென்ற ராத்ரிதான் ஸுப்ரபாதத்தோடு கூடினதென்று சொல்லவேண்டும். மலர்ந்த தளங்களோடுகூடின செந்தாமரை புஷ்பத்திற்கு ஸமான மான கண்களோடுகூடின மஹாவிஷ்ணுவான உன்னுடைய முகமண்டலத்தை இன்று காலே தர்சனம் செய்கிறேனே, என்னைப்போல் பாக்யவானுண்டா? நானே தந்யன், நானே க்ருதார்த்தன்'' என்று பரம ஸந்தோஷத்துடன் ஸ்ரீராமனுடைய நித்ராகாலிகமான ஸ்ரீயை அனுபவித்து விச்வாமித்ர மஹர்ஷியானவர் பரமானந்தத்தோடு कौसल्या सुप्रजा राम, पूर्वा संध्याप्रवर्तते (𑌕𑍌𑌸𑌲𑍍𑌯𑌾 𑌸𑍁𑌪𑍍𑌰𑌜𑌾 𑌰𑌾𑌮, 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾 𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇) (கௌஸல்யா ஸுப்ரஜா ராம, பூர்வா ஸந்த்யாப்ரவர்ததே) என்று சொன்னார்.

"ராமா, उत्तिष्ठ, हे, नरशार्दूल (𑌉𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠, 𑌹𑍇, 𑌨𑌰𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲) (உத்திஷ்ட, ஹே, நரசார்தூல) ஹே, நரச்ரேஷ்டா! எழுந்திரு. உன்னை ஆச்ரயித்த என்னைப்போலொத்த ஸாதுக்களுடைய விரோதிகளான ராக்ஷஸர்களை த்வம்ஸம் செய்வதில் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிற உனக்கு தூங்குவதற்குக்கூட அவகாசம் உண்டா? ஹே நரசார்தூல! ஹே, நரச்ரேஷ்டா! என்னுடைய யக்ஞத்தை ஸம்ரக்ஷித்துக் கொடுக்கிற ப்ரபோ! எழுந்திரு, எழுந்திரு, कर्तव्यं दैवं आह्निकं (𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌦𑍈𑌵𑌂 𑌆𑌹𑍍𑌨𑌿𑌕𑌂) (கர்தவ்யம் தைவம் ஆஹ்நிகம்) தேவனாகிய ஈச்வரனால், பகலில் அவச்யம் செய்யத் தகுந்ததாக விதிக்கப் பட்டிருக்கிற

நித்ய கர்மாவைச் செய்ய வேண்டும். தேவன் யார் ? நீயே தான்; உன்னுடைய ஆங்நிகத்தை உன்னுடைய ஆக்ஞா ரூப மான நித்ய கர்மாவை, நான் செய்யவேண்டியது அவச்யம் அதை நீ ப்ரத்யக்ஷமாக ஸ்வீகரித்துக் கொண்டு எனக்கு அனு க்ரஹத்தைச் செய்யவேண்டும். நீ வைகுண்டத்திலேயோ, ஸூர்ய மண்டலத்திலேயோ பாஸிக்கிற ஸமயத்தில் என்னைப் போன்ற மனிதனுடைய த்ருஷ்டிக்கு புலப்படாததினுல், உன்னை நேரில் பார்த்து ப்ராதக் காலத்தில் அவச்யம் செய்ய வேண்டியதான ஸந்த்யோபாஸனம் முதலான கர்மாக்களை செய்ய முடியாமல், உன்னை மனதிலேயே த்யானம் செய்து கொண்டு இவ்வளவு காலமாக கர்மாவைச் செய்து வந்தேன். இப்பொழுதோ, வைகுண்டத்திலும் ஸூர்யமண்டலத்திலும் பாஸித்துவருகிற பரிபூர்ணமான மஹாவிஷ்ணுவே திவ்ய மங்களவிக்ரஹத்துடன் பாஸிக்கிற ஸ்ரீ ராமனுகிய உன்னு டைய ஸ்வரூபம். அவ்விதம் ப்ரத்யக்ஷமாக நேரில் காணப் படும் உன்னிடத்தில் ஸாக்ஷாத்தாகவே கர்மாக்களை ஸமர்ப் பணம் செய்ய ஸௌகர்யம் நேர்ந்திருக்கிறபடியால், நான் கர்மாவைச் செய்து அர்ப்பணம் செய்கிறேன். நீ தயவு செய்து அதை அங்கீகரித்து எனக்கு அனுக்ரஹம் செய்ய வேண்டும். அத்துடன், தேவதாராதனபூதமாயும், பகலில் செய்ய வேண் டியதாயும் உள்ள என்னுடைய ஏகஸூப்தி என்ற யக்ஞகாலம் வந்துவிட்டது. சீக்ரம் நீ எழுந்திருந்து அதை நடத்திக் கொடு த்து பூர்த்தி செய்யவேண்டியது" என்று ராமனைப் பார்த்து விச்வாமித்ர மஹர்ஷியானவர் வேண்டிக் கொண்டார்.

இவ்விதம் மஹர்ஷியினுடைய வார்த்தையைக் கேட்ட ராம லக்ஷ்மணர்கள் இருவர்களும் பரபரப்புடன் எழுந்திருந்து சௌசம், ஸ்நாநம் முதலிய கர்மாக்களைச் செய்து விட்டு, தேவர்ஷி தர்ப்பணங்களெல்லாம் செய்துமுடித்து, காயத்ரீ மஹா மந்த்ரத்தையும், விச்வாமித்ர மஹர்ஷியினுல் உபதேசிக்கப் பட்ட, பலே, அதிபலே என்ற வித்யைகளையும் விதிவத்தாக ஜபித்துவிட்டு, வித்யாகுருவான மஹர்ஷியையும் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளால் பூஜித்துவிட்டு, ஸித்தாச்ரமத்தைக் குறித்

துப்ரயாணமானுர்கள். ஸரயூ நதியினுடைய தென்கரை வழியாகவே கிழக்கு திக்கில் வெகுதூரம் சென்று, ஸரயூநதி யானது எந்ததேசத்தில் கங்கையில் போய் ஸங்கமத்தை அடைகின்றதோ, அந்த தேசம் சென்ருர்கள். ஸரயூ கங்கா ஸங்கமப்ரதேசத்தில் அழகான ஒரு பெரிய ஆச்ரமத்தையும் பார்த்தார்கள். அநேக மஹர்ஷிகள் வெகுகாலமாக அந்த ஆச்ரமத்தில் மஹா தபஸ்ஸைச் செய்துவருகிருர்கள். அந்த ரிஷி மண்டலத்தையும் பார்த்து ஸந்தோஷித்து விச்வாமித்ர மஹர்ஷியினிடம் ஸ்ரீ ராமன் லக்ஷ்மணன் இருவர்களும் "இது யாருடைய ஆச்ரமம்? இப்பொழுது இந்த ஆச்ரமத்தில் யார் இருந்து வருகிருர் என்பதைத் தெரிந்து கொள்ள நாங்கள் ஆவலுள்ளவர்களாக இருக்கிறோம்" என்று கேட்டார்கள். விச்வாமித்ர மஹர்ஷியும் ராமலக்ஷ்மணர்களுக்கு சொன்ன தாவது:—

"ராமா, இந்த ஆச்ரமத்திற்கு காமாச்ரமம் என்று பெயர் ஏற்பட்டது. ஸ்தாணு ஆச்ரமம் என்றும் சொல்லப்படும். ஸ்தாணு என்ருல் பரமசிவனுகுவார். அந்த பரமசிவன் தக்ஷ ப்ரஜாபதியினுடைய பெண்ணுன ஸதீ தேவியை கல்யாணம் செய்துகொண்ட விஷயத்தை நீ கேட்டிருக்கலாம். தக்ஷ ப்ரஜாபதியானவர் பரமசிவனிடத்திலுள்ள த்வேஷத்தால், பரமேச்வரனை அழைக்காமலே ஒரு பெரிய யாகம் செய்தார். அந்த ஸமயத்தில் ஸதீ தேவியானவள் பித்ரு கௌரவத்தால் தக்ஷப்ரஜாபதி தன்னை அழைக்காதபோனுலும் அந்த யாகத்தை தர்சனம் செய்வதற்காக அங்கு சென்ருள். ஆகி லும், பராபவத்தை (அவமானத்தை) அடைந்து யோகாக்னி யில் தன் தேஹத்தை பஸ்மமாக்கிக்கொண்டுவிட்டாள் என்று ஸ்காந்தம் முதலான மஹாபுராணங்களில் ப்ரஸித்தமாக தெரி கிறது. பிறகு பரமேச்வரன், பரம வைராக்யத்துடன் இந்த ஆச்ரமத்திலிருந்துகொண்டு மஹாதபஸ்ஸைச் செய்தார். அந்த ஸமயத்தில் சூரபத்மா, ஸிம்மவக்த்ரன், தாரகாஸுரன் என்ற மூன்று அஸுரர்கள் எல்லா லோகத்தையும் மிகவும் பீடித்து வந்தார்கள். அவர்களுக்கோ பரமேச்வரனுடைய

இரண்டாவது குமாரனுன ஸுப்ரமண்யன் மூலமாக நாசம் என்றும் ப்ரும்மாவினுல் வரம் கொடுக்கப்பட்டிருந்தது. 'தத்காலத்திலோ பரமேச்வரனுக்கு பத்னி இல்லை. இவருக்கு எங்கே குமாரன் பிறக்கப்போகிருன்' என்று அந்த அஸுரர்களுக்கு கொழுப்பு அதிகரித்துவிட்டது. தேவர்களெல்லோரும் அடங்காத கவலையை அடைந்தார்கள். ஸதீதேவியும் பிறகு ஹிமவான் என்ற பர்வதராஜனுக்கு புத்ரியாகப்பிறந்து இந்த பரமேச்வரனையே பர்த்தாவாக அடையவேண்டும் என்று தபஸ் செய்துவந்தாள். காமனும் (மன்மதனும்) அந்த ஸமயத்தில் சரீரத்தோடு கூடியவனுக இருந்தான். தேவர்கள் காமனை அழைத்து, 'நீ பரமேச்வரனுடைய ஸமீபம் சென்று அவருடைய தபஸ்ஸைக்கெடுத்து, பார்வதியைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டுமென்ற இச்சையை அவருக்கு உண்டுபண்ணவேண்டும்' என்று ஏவினுர்கள். காமனும் தேவர்களுடைய வார்த்தையைக் கேட்டு, பரமேச்வரனுடைய ஸமீபம் வந்துசேர்ந்து, அவருடைய தபஸ்ஸைக் கெடுக்க ஆரம்பித்தான். உடனே பரமேச்வரன்மஹாகோபத்தையடைந்து, ஹுங்காரத்துடன் அவருடைய நெற்றிக்கண்ணுல் பார்க்கப்பட்டு, மன்மதனுடைய சரீரம் சாம்பலாகிவிட்டது. அதுமுதல், மன்மதன் லோகத்தில் அநங்கன் என்று ப்ரஸித்தனுனன். மன்மதன் இந்த இடத்தில் தன் அங்கத்தை(சரீரத்தை) இழந்து விட்டதினுல், இதற்கு அங்கதேசம் என்று பெயர் வந்தது. பரமேச்வரன்(ஸ்தாணு) இந்த ஆச்ரமத்தில் தபஸ் செய்ததால் ஸ்தாணு ஆச்ரமம் என்றும் பெயர் வந்தது. பரமேச்வரன் தபஸ் செய்யும்பொழுது, பரமேச்வரனுக்கு கைங்கர்யத்தைச்செய்வதற்காக பரமேச்வரனுடன் கூட தபஸ்செய்த மஹர்ஷிகளே, இந்த மஹர்ஷிகள். ரொம்பவும் மஹானுபாவர்கள். இவர்களிடம் பாபலேசத்தின் ஸம்பந்தமே கிடையாது. இன்றிரவு இந்த ஸரயூ கங்கா ஸங்கம ப்ரதேசத்திலேயே இந்த மஹர்ஷிகளுடைய ஆதித்யத்தில் வஸித்துவிட்டு, ப்ராதக்காலத்தில் கங்கா நதியை தரணம் செய்து (தாண்டி) ஸித்தாச்ரமத்திற்குச் செல்வோம்" என்று

சொல்லிவிட்டு, மஹர்ஷிகளுடைய ஆச்ரமங்களுக்கு ஸ்ரீ ராம லக்ஷ்மணர்களை அழைத்துக்கொண்டு விச்வாமித்ர மஹர்ஷி சென்றார். மஹர்ஷிகளும் விச்வாமித்ர மஹர்ஷியையும், ராமலக்ஷ்மணர்களையும் விதிவத்தாக வரவேற்று, ஞான த்ருஷ்டியினால் ராமலக்ஷ்மணர்களை மஹாவிஷ்ணுவென்றும் ஆதிசேஷனென்னும் தெரிந்துகொண்டு, அர்க்ய, பாத்ய, ஆசமனீயாதிகளால் பூஜித்தார்கள். ராமலக்ஷ்மணனும் விச்வாமித்ர மஹர்ஷியும், அவ்விதம் அந்த ரிஷிகளால் பூஜிக்கப்பட்டு அன்று ஸாயங்காலம் செய்யவேண்டிய ஸந்த்யோபாஸனாதிகளான க்ரியைகளையும் செய்து அன்றிரவு அங்கு வஸித்தார்கள்.

காமாச்ரமத்தில் பார்வதி தேவியைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும் என்று பரமேச்வரனுக்கு இச்சை உண்டாகும்படி, காமன் அவருடைய தபஸ்ஸுக்கு விக்னம் செய்தான் என்று சொல்லப்பட்டது. ஆனால் அதை कृतोद्वाहं (കൃതോദ്വാഹം) (க்ருதோத்வாஹம்) என்று மூலத்தில் பதமிருப்பதினாலும், கோவிந்த ராஜீய வ்யாக்யானத்தில், பார்வதி தேவியைக் கல்யாணம் செய்துகொண்ட பிற்பாடு தபஸ்ஸைச் செய்ததாகவும், பார்வதி தேவியினிடம் பலஆஹாராதிகளுக்குப் போய்க்கொண்டிருக்கும் பரமேச்வரனை மன்மதன் தர்ஷித்தான் (எதிர்த்து விக்னம் செய்தான்) என்று இருப்பதினாலும், 'கல்யாணம் செய்துகொள்வதற்கு முன்னால் தபஸ் செய்தார் என்று சொல்வது தப்பு' என்று தோஷத்தில் த்ருஷ்டியைச் செலுத்துகிறவர்கள் தயவு செய்து மஹேச்வர தீர்த்தீய வ்யாக்யானத்திலிருக்கிற कृतोद्वाहं करिष्यमाणोद्वाहं (കൃതോദ്വാഹം കരിഷ്യമാണോദ്വാഹം) (க்ருதோத்வாஹம் கரிஷ்யமாணோத்வாஹம்) என்ற வாக்யத்தை கவனிக்கவும். அத்துடன் கோவிந்த ராஜீய வ்யாக்யானத்திலேயும்,

कृतोद्वाहमिति क्रियाविशेषणं, यदा अयं कृतोद्वाहो भवति, तदा तं पार्वत्यां साभिलाषचित्तं अकरोत् इत्यर्थः

𑌕𑍃𑌤𑍋𑌦𑍍𑌵𑌾𑌹𑌮𑌿𑌤𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌂, 𑌯𑌥𑌾 𑌅𑌯𑌂 𑌕𑍃𑌤𑍋𑌦𑍍𑌵𑌾𑌹𑍋 𑌭𑌵𑌤𑌿, 𑌤𑌥𑌾 𑌤𑌂 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍍𑌯𑌾𑌂 𑌸𑌾𑌭𑌿𑌲𑌾𑌷𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌅𑌕𑌰𑍋𑌦𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃

க்ருதோத்வாஹமிதி க்ரியாவிசேஷணம், யதா அயம் க்ருதோத்வாஹோ பவதி, ததா தம் பார்வத்யாம் ஸாபிலாஷ சித்தம் அகரோத் இத்யர்த்த:

என்ற வாக்யத்தையும் நன்ருக கவனிக்கவும். அதாவது, எப்பொழுது அந்த பரமேச்வரன் அந்த பார்வதி தேவியை கல்யாணம் செய்துகொண்டவராக ஆகிருரோ அப்பொழுது அவளிடத்தில் அதிக ப்ரேமையுடன்கூடி இருப்பதற்கு வேண்டிய ப்ரயத்னத்தை இப்பொழுதே மன்மதன் செய்தான் என்று அர்த்தம்.

24, 25, 26-வது ஸர்க்கங்கள்.

தாடகாவதம்.

முன்சொன்ன ப்ரகாரம் காமாச்ரமத்தை ஸ்ரீராமமூர்த்தியினுடைய சரணாரவிந்த வின்யாஸத்தால் மஹா பரிசுத்தமாகச்செய்துவிட்டு, தாடகா வனத்தை நிர்மலமாகச் செய்வதற்கு விச்வாமித்ர மஹர்ஷியானவர் ஸித்தாச்ரமத்திற்கு ராமனை தாடகாவன வழியாக அழைத்துச் சென்றார். ஸரயூ கங்கா ஸங்கமத்தில் அயோத்யையிலிருந்து புறப்பட்டு இரண்டாவது தினத்தின் ராத்ரியைக் கழித்துவிட்டு, காலையில் ஸரயூகங்கா ஸங்கமதீர்த்தத்தில் நித்ய ஆந்நிகங்களை முடித்துக்கொண்டு, வழக்கம்போல் குருவந்தனாதிகளையும் செய்துவிட்டு, கங்கையை தாண்டுவதில் உத்ஸாஹமுள்ளவர்களாக ராமலக்ஷ்மணாளிருவர்களும் விச்வாமித்ர மஹர்ஷியை முன்னிட்டுக்கொண்டு கங்காதீரத்தில் நின்று வந்தார்கள். உடனே அந்த ஸரயூகங்காஸங்கமத்தில் எப்பொழுதும் தபஸ் செய்து வருகிற மஹர்ஷிகள் த்ருடமான ஓடத்தை ஸந்நத்தமாக வைத்துக்கொண்டு விச்வாமித்ர மஹர்ஷியைப் பார்த்து, "மஹர்ஷே, இந்த ஓடத்தில் ஏறலாம். ராமன், லக்ஷ்மணன் இருவர்களையும் முன்னிட்டுக்கொண்டு ஓடத்திலேறி கங்கா நதியினுடைய தென்கரையை அடையலாம். தங்களுடைய தபஸ்ஸாலும், ராமலக்ஷ்மணாளுடைய மஹிமையினாலும், கங்காநதியினுடைய தென் ப்ரதேசங்களில் சுபம் உண்டாக வேண்டும்; எந்த வழியில் போனால் க்ஷேமம் ஏற்படுமோ அந்த வழியில் சென்று, ஸித்தாச்ரமத்தை அடையுங்கள்" என்று ப்ரார்த்தித்தார்கள். விச்வாமித்ர மஹர்ஷியும் அவ்விதமே ஸம்மதித்து மஹர்ஷிகளையும் பூஜித்துவிட்டு, மஹர்ஷிகளை ராம லக்ஷ்மணாள் இருவர்களுக்கும் மங்களாசீர்வாதத்தை செய்யச்சொல்லி மஹர்ஷிகளால் கொண்டுவரப்

பட்ட த்ருடமான ஓடத்தில் ராமலக்ஷ்மணனுடன் ஏறிக் கொண்டு, ஸமுத்ரகாமியான கங்காநதியைத் தாண்டினார். நதியினுடைய நடுபாகத்தில் ஓடம் செல்லும்பொழுது ஸரயூ நதி அங்கு ஸங்கமத்தையடைகிற ப்ரதேசமானதினால், ஸரயூ நதியினுடைய ஜலத்தின் வேகமும், கங்காநதியினுடைய ஜலத்தின் வேகமும், ஒன்றோடொன்று உறைந்துகொண்டு மஹத்தான சப்தத்தை உண்டுபண்ணிற்று. அந்த சப்தத்தைக் கேட்டு, ராமன் பரம உத்ஸாஹத்துடன் விச்வாமித்ர மஹர்ஷியினிடம் ‘இதென்ன சப்தம்?’ என்று கேட்டார். விச்வாமித்ர மஹர்ஷியோ ராமனுக்கு பதில் சொன்னதாவது :—

“ராமா! கைலாஸ பர்வதத்தில் குபேரனுடைய பவனத்திற்கு (அரண்மனைக்கு) அருகில் ப்ரும்மாவினால் மனதால் நிர்மாணம் செய்யப்பட்ட ஸரஸ் (ஓடை) ஒன்று விளங்கிவருகிறது. அதற்குத்தான் மானஸ ஸரஸ் என்று பெயர் வழங்கி வருகிறது. அந்த மானஸ ஸரஸ்ஸிலிருந்து ப்ரவாஹித்து அயோத்யா நகரத்திற்கு மேற்குபாகத்தில் பூமியில் விழுந்து ஓடிவரும் நதியைத்தான் ஸரயூ நதி என்று சொல்வார்கள். அந்த நதியானது அயோத்யா நகரத்திற்கு மேற்குபாகத்தை அடைந்து, வடக்குபாக வழியாக அயோத்யா நகரத்தை ப்ரதக்ஷிணமாகச் சுற்றிக்கொண்டு, அயோத்யா நகரத்தின் கிழக்கு பாகத்தை அடைந்து அங்கிருந்து அங்கதேசத்தில் கங்காநதியுடன் சேருகிறது. சேரும்பொழுது உன்னத ப்ரதேசத்திலிருந்து கீழ்ப்ரதேசத்திலிருக்கிற கங்காஜலத்தில் விழுகிற ஸரயூநதியின் ஜலவேகந்தான் இந்த சப்தத்திற்குக்காரணமாகும். இந்த ஸரயூநதியோ, கங்கா நதியோ, மஹாபுண்யமான நதிகளாகும். அந்த இரண்டு நதிகளுடைய ஸங்கமம் மஹாபுண்யத்தைக் கொடுக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? நமஸ்காரத்தைச் செய்து, இனி நடைபெறவேண்டிய கார்யம் நன்றாக நிறைவேறவேண்டுமென்று ப்ரார்த்தித்துக்கொள்” என்று சொன்னார். ராமனும் லக்ஷ்மணனுடன் விச்வாமித்ர மஹர்ஷி

னுடைய வார்த்தையைக் கேட்டு ஆநந்தித்து, பரம ச்ரத்தையுடன் ஸரயூ நதி, கங்கா நதி இவைகளை நமஸ்காரம் செய்துவிட்டு, கங்கையினுடைய தென்கரைக்குவந்து வெகு வேகமாக ஸித்தாச்ரமத்தைக் குறித்து, விச்வாமித்ர மஹர்ஷியை முன்னிட்டுக்கொண்டு சென்றார்கள்.

அவ்விதம் போகும் ஸந்தர்ப்பத்தில் மஹா கோரமாயும் திக்கு திசை ஒன்றும் தெரியாமலிருக்கும்படியான அவ்வளவு கஹனமாயும், (நடுவில் செல்ல முடியாததாயும்) **ஜில்லிகை** என்ற கீட விசேஷங்களுடைய (வண்டுகளுடைய) சப்த விசேஷங்களால் நிறைந்ததாயும், கரடி, புலி, ஸிம்மம், சிறுத்தை,மதயானை முதலான துஷ்ட ம்ருகங்களால் சூழப்பட்டதாயும், கழுகு, காட்டுக் குருவி, காட்டுக் கொட்டைப்பருந்து முதலான க்ரூரமான பக்ஷிகளால் நிறப்பப்பட்டதாயும், பயங்கரமாயுமுள்ள ஒரு பெரிய காட்டைப் பார்த்து, ராமனும் லக்ஷ்மணனும் பரம ஆச்சர்யத்துடன் விச்வாமித்ர மஹர்ஷியைப் பார்த்து, "இதென்ன காடு, பெயரென்ன, ரொம்பவும் பயங்கரமாயிருக்கிறதே, யார் இந்தக் காட்டில் வஸிக்கிறார், அதைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்கள். விச்வாமித்ர மஹர்ஷியும் பரம ஸந்தோஷத்துடன் "ராமா! இந்த தேசம் முன்காலத்தில் ரொம்பவும் செழிப்பாக இருந்தது. மலதம், **கரூசம்** என்று இந்த தேசத்திற்குப் பெயர் ஏற்பட்டிருந்தது. தேவர்களால் நிர்மாணம் செய்யப்பட்ட தேசமாகும். முன்காலத்தில், தேவேந்த்ரன் வ்ருத்ராஸுரனைக் கொன்றதிலிருந்து, அவனுக்கு ப்ரும்மஹத்தி தோஷம் ஏற்பட்டுவிட்டது. ப்ரும்மஹத்தி தோஷத்தினால் ஸஹிக்க முடியாத பாபமும், பசியும் இந்த்ரனுக்கு ஏற்பட்டது. தேவர்கள் அச்வமேத யாகம் செய்து இந்த்ரனை மஹாபிஷேகத்தால் ப்ரும்மஹத்தியிலிருந்தும் விமோசனம் செய்துவைத்தார்கள். அதனால் இந்த்ரனுடைய சரீரத்திலுள்ள பாபங்களும், பசியும் இந்த பூமியில் விழுந்தன. இந்த்ரனும், பரமபரிசுத்தனாகவும், பசியற்றவனாகவும் ஆகிவிட்டான். இந்த இடத்தில்

அந்த அச்வமேத யாகம் நடந்தது. இந்த்ரன் பரிசுத்தமான காரணத்தாலும், இந்த்ரனுடைய சரீரத்திலிருந்து பாபமும், பசியும் இந்த பூமியில் விழுந்ததினுலேயும், இந்த்ரன் இந்த பூமிக்கு வரன் கொடுத்தான். அதாவது, 'என் பாபத்தை வாங்கிக்கொண்ட பூமியினுடைய பாகம் மலதம் என்றும், என் பசியை வாங்கிக்கொண்ட பூமியினுடைய பாகம் கரூசம் என்றும் மஹா ப்ரஸித்தியை அடையப்போகிறது; தன தான்யங்களால் ஸம்ருத்தமாக எப்பொழுதும் இருந்து வரப்போகிறது' என்று சொன்னுன். தேவர்களும் அவ்விதமே ஸம்மதித்து இந்த தேசத்திற்கு அனுக்ரஹம் செய்தார்கள். அதுமுதல் வெகு காலமாக இந்த தேசமானது ரொம்பவும் செழிப்பாகவும் தன தான்யங்களால் நிறைந்ததாகவும் மஹா ப்ரஸித்தமாகவும் விளங்கிவருகிறது.

"கொஞ்சகாலங் கழித்து, யக்ஷ வம்சத்தில் பிறந்த ஒரு ஸ்த்ரீயானவள் மஹாபலிஷ்டையாக விளங்கிவந்தாள். பிறப்பிலேயே ஆயிரம் யானைகளுக்குள்ள பலத்தோடுகூடினவளாக இருந்துவந்தாள். அவளுக்குத்தான் தாடகை என்று பெயர் ஏற்பட்டது. அவளுடைய பலத்தை நீயும் கேட்டிருக்கலாம்; ஆனுல் பயப்படாதே. ஸுந்தன் என்ற ஒரு யக்ஷனை அவள் கல்யாணம் செய்துகொண்டாள். அவளுக்கு மாரீசன் என்ற ஒரு மஹாபராக்ரமசாலியான புத்ரன் உண்டானுன். அந்த ராக்ஷஸனே உக்ரமான பராக்ரமத்துடன் ப்ரஜைகளை தினந்தோறும் ஹிம்ஸித்துவருகிறுன். அந்த தாடகை என்பவளோ இதோ ஸமீபத்தில் கூப்பிடுதூரத்திலிருந்துவருகிறுள். இந்த மலதம், கரூசம் என்று சொல்லப்பட்ட இரண்டு செழிப்பான ராஜதானிகளையும் காடாக அழித்துவிட்டாள். அவளிருக்கும் ப்ரதேசத்திற்கு இந்த வழியாகத்தான் போகவேண்டும். இங்குள்ள அநேக மஹர்ஷிகள் அவளுக்கு பயந்துகொண்டு இந்த ஸ்தலத்தை விட்டு எங்கோ தேசாந்தரம் ஓடிப்போய்விட்டார்கள். ஏதோ அவள் ஒரு ஸ்த்ரீதானே என்று அலக்ஷியம் செய்யக்கூடாது. ஸுகேது என்ற ஒரு யக்ஷராஜன் மஹர்தபஸ்ஸை

செய்தான். அவன் புத்ரனில்லாதவன். புத்ரனைக் கருதியே அவன் தபஸ் செய்தவன். ப்ரும்மாவும் அவனுடைய தபஸ்ஸால் ஸந்தோஷத்தை அடைந்து அந்த ஸுகேது என்ற யக்ஷ ராஜனுக்கு இந்த தாடகை என்ற கன்யாரத்னத்தை வரனாகக் கொடுத்தார். கொடுக்கும் காலத்திலேயே ஆயிரம் யானைக்குள்ள பலத்தோடு கூடினவளாகவே கொடுத்தார். அந்தஸுகேதுவினுடைய மனோரதத்தையும், தபஸ்ஸினுடைய மஹிமையையும் அறிந்த ப்ரும்மாவானவர் ஸர்வ லோகத்தையும் வசமாக்கிக்கொள்ளக்கூடிய ஒரு புத்ரனை அவன் இச்சித்த காரணத்தால், புத்ரனைக் கொடுத்தால் லோகத்திற்கு பீடை ஏற்படும் என்று நினைத்து புத்ரனைக் கொடுக்காமல், புத்ரியைக் கொடுத்தார். ஸுகேது என்ற யக்ஷராஜனும் தாடகை என்ற தன் புத்ரியை ஜர்ஜ்ஜன் என்று சொல்லப்பட்ட அஸுரனுடைய பிள்ளையான ஸுந்தனுக்கு கல்யாணம்செய்து கொடுத்தார். அந்த ஸுந்தனும் தாடகையினிடம் மாரீசன் என்ற ஒரு புத்ரனை உண்டு பண்ணினன். அந்த ஸுந்தன் என்ற தாடகையினுடைய புருஷன் ஆஸுரயோனியில் பிறந்த காரணத்தால் தக்ஷிண தேசத்தில் விளங்கிவரும் அகஸ்த்ய மஹர்ஷியினுடைய ஆச்ரமத்தின் அருகில் உள்ள பசு, பக்ஷிமுதலானவைகளையும், ஆச்ரமமண்டலங்களையும் ஹிம்ஸித்து வந்த காரணத்தால் அகஸ்த்ய மஹர்ஷியினுடைய ஹுங்காரத்தால் பஸ்மம் ஆகிவிட்டான். தன் பர்த்தாவான ஸுந்தன் அகஸ்த்ய மஹர்ஷியினுடைய சாபத்தால் ம்ருதனாக (இறந்தவனாக) ஆனதிலிருந்து, மஹாகோபத்தை யடைந்து, மாரீசன் என்ற பிள்ளையுடன்கூட அகஸ்த்ய மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திற்குச் சென்று, அகஸ்த்ய மஹர்ஷியை பலாத்காரமாக தர்ஷிக்க (எதிர்க்க) ஆரம்பித்தாள். அகஸ்த்ய மஹர்ஷி பரமகோபத்தை யடைந்து தாடகையை ராக்ஷஸியாகப் போகக்கடவது என்றும், மாரீசனை ராக்ஷஸனாகப் போகக் கடவது என்றும் சபித்துவிட்டார். உடனே தாடகையும் தேவயோனியில் பிறந்த ஸ்வரூபத்தை விட்டு விட்டு, ராக்ஷஸி

யாக ஆகிவிட்டாள். மாரீசனும் ராக்ஷஸனுகவே ஆகிவிட்டான். அதுமுதல் சாபத்தால் ராக்ஷஸபாவத்தை அடைந்த தாடகை இந்த தேசத்தை நாசம் செய்து வருகிருள்."

एनां राघव दुर्वृत्तां, यक्षीं परमदारुणां ।
गो ब्राह्मण हितार्थाय, जहि दुष्टपराक्रमां ॥

ஏநாம் ராகவ துர்வ்ருத்தாம், யக்ஷீம் பரமதாருணாம் ।
கோ ப்ராஹ்மண ஹிதார்த்தாய, ஜஹி துஷ்டபராக்ரமாம் ॥

ஏநாம் ராகவ துர்வ்ருத்தாம், யக்ஷீம் பரமதாருணும் ।
கோ ப்ராஹ்மண ஹிதார்த்தாய, ஜஹி துஷ்டபராக்ரமாம் ॥

என்ற ச்லோகத்தால் விச்வாமித்ர மஹர்ஷியானவர், "ராமா! இந்த ராக்ஷஸியானவள் ரொம்பவும் துர்வ்ருத்தை (கெட்ட நடத்தையுள்ளவள்) மஹர்ஷிகளுடைய தபஸ்ஸைக் கெடுத்து அவர்களை தர்ஷிக்க ஆசையுள்ளவள். க்ரூரமான ஸ்வபாவத்தோடும் கூடினவள். இவளை நீ கட்டாயம் வதம்செய்து லோகத்திற்கு நன்மையைச் செய்யவேண்டும். அநேக பசுக்களும், ப்ராம்மணர்களும் இவள் மூலமாக அழிந்து வருகிருர்கள். அந்த அநேக பசுக்களையும், ப்ராம்மணர்களையும் ரக்ஷிக்கவேண்டிய நிமித்தமாக 'ஸ்த்ரீ வதம்' என்று எண்ணுமல் நீ இவளைக் கட்டாயம் கொல்லவேண்டும். இந்த தாடகாவதமானது பாபம்போல் தோன்றினாலும், கோ ப்ராம்மண பரிபாலனத்தில் பர்யவஸிக்கிறபடியால் (முடிகிறபடியால்) இது பெரிய தர்மமென்றே கருதவேண்டும்.

नह्येनां शापसंस्पृष्टां, कश्चित् उत्सहते पुमान् ।
निहन्तुं त्रिषु लोकेषु, त्वामृते रघुनन्दन ॥

நஹ்யேநாம் சாபஸம்ஸ்ப்ருஷ்டாம், கச்சித் உத்ஸஹதே புமாந் ।
நிஹந்தும் த்ரிஷு லோகேஷு, த்வாம்ருதே ரகுநந்தந ॥

நஹ்யேநாம் சாபஸம்ஸ்ப்ருஷ்டாம், கச்சித் உத்ஸஹதே புமாந் ।
நிஹந்தும் த்ரிஷு லோகேஷு, த்வாம்ருதே ரகுநந்தந ॥

என்ற இந்த ச்லோகத்தால், ராமா! இவள் அகஸ்த்ய மஹர்ஷியின் சாபத்தால் தூஷிக்கப்பட்டவள். ஸாத்வீயான

ஸ்த்ரீயல்ல. नस्त्रियो हन्तव्याः (𑌨𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌹𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌃) (நஸ்த்ரியோ ஹந்தவ்யா:) என்ற ச்ருதியானது ஸாத்வீயான ஸ்த்ரீயைத்தான் விஷயீகரிக்கிறது. இவளைப்போல் துஷ்டசாரிணியான ஸ்த்ரீ மற்றொருவள் இருக்கிறுள் என்று சொல்ல முடியாது. இவளுடைய வதம் தர்மமாகத்தான் ஆகும். மூன்று லோகங்களிலும் உன்னை விட்டால் இவளைக் கொல்லும்படியான சக்தியுள்ளவன் ஒருவனுமில்லை.

नहि ते स्त्रीवधकृते, घृणा कार्या नरोत्तम ।
चातुर्वर्ण्य हितार्थाय, कर्तव्यं राजसूनुना ॥
नृशंसं अनृशंसं वा, प्रजारक्षण कारणात् ।
पातकं वा सदोषं वा, कर्तव्यं रक्षता सता ॥
राज्यभारनियुक्तानां, एष धर्मः सनातनः ।
अधर्म्यां जहि काकुत्स्थ, धर्मो ह्यस्याः नविद्यते ॥

𑌨𑌹𑌿 𑌤𑍇 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌵𑌧𑌕𑍃𑌤𑍇, 𑌘𑍃𑌣𑌾 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾 𑌨𑌰𑍋𑌤𑍍𑌤𑌮 ।
𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯 𑌹𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌯, 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌰𑌾𑌜𑌸𑍂𑌨𑍁𑌨𑌾 ॥
𑌨𑍃𑌶𑌂𑌸𑌂 𑌅𑌨𑍃𑌶𑌂𑌸𑌂𑌵𑌾, 𑌪𑍍𑌰𑌜𑌾𑌰𑌕𑍍𑌷𑌣 𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 ।
𑌪𑌾𑌤𑌕𑌂 𑌵𑌾 𑌸𑌦𑍋𑌷𑌂 𑌵𑌾, 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌰𑌕𑍍𑌷𑌤𑌾 𑌸𑌤𑌾 ॥
𑌰𑌾𑌜𑍍𑌯𑌭𑌾𑌰𑌨𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂, 𑌏𑌷 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌸𑌨𑌾𑌤𑌨𑌃 ।
𑌅𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌂 𑌜𑌹𑌿 𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥, 𑌧𑌰𑍍𑌮𑍋𑌹𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌃 𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

நஹி தே ஸ்த்ரீவதக்ருதே, க்ருணு கார்யா நரோத்தம ।
சாதுர்வர்ண்ய ஹிதார்த்தாய, கர்தவ்யம் ராஜஸூநுநா ॥
ந்ருசம்ஸம் அந்ருசம்ஸம் வா, ப்ரஜாரக்ஷண காரணுத் ।
பாதகம் வா ஸதோஷம் வா, கர்தவ்யம் ரக்ஷதா ஸதா ॥
ராஜ்யபாரநியுக்தாநாம், ஏஷ தர்ம: ஸநாதந: ।
அதர்ம்யாம் ஜஹிகாகுத்ஸ்த, தர்மோஹ்யஸ்யா: நவித்யதே ॥

என்ற ச்லோகங்களினுல் ராமா, ஸ்த்ரீ யென்று கொஞ்சமேனும் நீ கருணையைச் செலுத்தக்கூடாது. நான்கு வர்ணங்களிலும் பிறந்த ப்ரஜைகளை ரக்ஷிப்பது ராஜனுடைய கடமையாகும். பரம க்ரூரமானுலும், நல்லதானுலும்,

மஹா பாபமானாலும், கொஞ்சம் தோஷமுள்ளதானாலும் மஹாதோஷமுள்ளதானாலும் ப்ரஜைகளை ரக்ஷிப்பது என்ற காரணத்தை முன்னிட்டு, ராஜாக்கள் அவச்யம் அதை செய்தே ஆகவேண்டும். இந்த தாடகையின் மூலம் எவ்வளவு ப்ரஜைகள் தினந்தோறும் அழிந்துபோகிறார்கள் என்று கணக்கிட முடியாது. நீயோ ராஜபுத்ரன். ப்ரஜா பரிபாலனமென்பது உனக்கு முக்யமான தர்மமல்லவா? அந்த தர்மத்தை உத்தேசித்து, இந்த தாடகா வதம் ஸதோஷமா, நிர்தோஷமா என்று கொஞ்சமேனும் விசாரிக்காமலே, நீ செய்து ஆகவேண்டும். துஷ்ட ஸ்த்ரீகளைக்கொல்வது சிஷ்டாசாரத்திற்கும் ஸம்மதம்தான். முன்காலத்தில் விரோசனன் என்ற அஸுரனுடைய பெண்ணான மந்தரை என்றவள் பூமியிலுள்ள ஜனங்களை ஹிம்ஸிக்க ஆரம்பித்தாள். ஆஸுரஸ்வபாவத்தால் கொஞ்சமேனும் தர்மத்தை கவனிக்காமல் அகாரணமாக ப்ராணிகளை ஹிம்ஸித்த, அந்த விரோசனனுடைய பெண்ணான மந்தரை என்றவளை தேவேந்த்ரனானவன் வதம் செய்து, லோகத்திற்கு நன்மையைச் செய்தான் என்ற பூர்வீக சரித்ரமும், சிஷ்டஸம்மதம்தான் என்பதில் அத்தாக்ஷியாக ஆகும்.

"அத்துடன், ப்ருகு மஹர்ஷியினுடைய தர்மபத்னி சுக்ராசார்யருடைய தாயார் ஆகுவாள். தன் புத்ரனான அஸுர குருவான சுக்ராசார்யர் தன் சிஷ்யர்களான அஸுரர்களுக்கு தேவர்கள் மூலமாக அபஜயம் ஏற்படக்கூடாதென்ற உத்தேசத்துடன் அஸுரர்களுக்கு மரணம் இல்லாமல் செய்ய உபாயத்தைக் கற்றுவர, மஹா கைலாஸத்திற்குச் சென்று தபஸ் செய்துவந்தார். அந்த தருணத்தில் தேவர்கள் அஸுரர்களை ஹிம்ஸித்தார்கள். அஸுரர்கள் சுக்ராசார்யருடைய தாயாரிடம் வந்து சேர்ந்து தங்களை ரக்ஷிக்கவேண்டும் என்று சரணமடைந்தார்கள். உடனே சுக்ராசார்யருடைய தாயாரும் தன்னுடைய பலத்தால் தேவர்களைப் பூண்டுகூட இல்லாமல் அழிக்க யத்னம் செய்தாள். தேவர்கள் எல்லோரும் விஷ்ணுவைச் சரணமடைந்தார்கள். உடனே

விஷ்ணுவும் சுக்ராசார்யரின் தாயாரை சக்ராயுதத்தால் வதம் செய்தார். இந்தக் கதை மத்ஸ்ய புராணத்தில் ப்ரஸித்த மானது. இதுவும், 'தாடகாவதம் என்பது ஒரு தர்மம்தான், சிஷ்ட ஸம்மதம்தான்' என்பதற்கு அத்தாக்ஷியாக ஆகும் என்று, இந்த்ரனுடைய ஆசாரம், விஷ்ணுவினுடைய ஆசாரம் முதலான சிஷ்டாசாரம், துஷ்ட ஸ்த்ரீகளைக் கொல்ல லாம் என்பதற்கு ப்ரமாணமாக இருப்பதினால், நீயும் அந்த சிஷ்டாசாரத்தை அனுஸரித்து மஹாதுஷ்டையான இந்த தாடகையை வதம் செய்து லோகத்தை ரக்ஷிக்கவேண்டும். இவளிடத்தில் கொஞ்சமேனும் தர்மம் என்பதே இல்லை" என்று விச்வாமித்ர மஹர்ஷி, தாடகை வதத்தை அவச் யம் செய்யவேண்டியதற்காக ராமனை வற்புறுத்திச் சொன் னார். ராமனும் மஹர்ஷியினுடைய வார்த்தையைக் கேட்டு அஞ்ஜலிபந்தத்துடன் விச்வாமித்ர மஹர்ஷிக்கு பதில் சொன்னதாவது :—

"என் பிதா தங்களுடன் என்னை அனுப்பும் காலத் தில் தாங்கள் எதைச் சொன்னாலும் அது கர்த்தவ்யமா, (செய்யத் தகுந்ததா) அகர்த்தவ்யமா (செய்யத்தகாததா) என்று விசாரிக்காமலே, தர்மம்தான் என்ற ஒரேவிதமான ச்ரத்தையுடன், கொஞ்சமேனும் சஞ்சலபுத்தி இல்லாமல் செய்தே தீரவேண்டும் என்று சொல்லியபடி என் பிதா வின் ஆக்ஞை ஏற்பட்டிருக்கிறது. வஸிஷ்டர் முதலான மஹான்களுடைய மத்தியில் விச்வாமித்ர மஹர்ஷியி னுடைய வார்த்தையைக் கொஞ்சங்கூட அனாதரவு செய் யக்கூடாது என்று நான் பிதாவினால் சிக்ஷிக்கப்பட்டவ னாக ஆகிறேன். தாங்களும் எனக்கு வித்யாகுருவாக ஆகி விட்டீர்கள். பசுக்களையும், ப்ராம்மணர்களையும் ரக்ஷிப்ப தற்கும், தேசத்தையும் நன்றாக ரக்ஷிப்பதற்காகவும் தங்க ளுடைய ஆக்ஞையை கட்டாயம் செய்தே தீருகிறேன். இந்த தாடகையை வதம் செய்து லோகத்திற்கு நன்மை யைச் செய்வதில் நானும் ஸந்தோஷ முள்ளவன்தான். தாடகா வதம் ஸ்த்ரீ வதம் என்ற பயமே எனக்கு இல்லை.

பித்ருவாக்யம், குருவாக்யம், வஸிஷ்டர் முதலான மஹானுபாவர்களுடைய முன்னிலையில் எனக்கு ஏற்பட்ட சிக்ஷை, வித்யாகுருவான தங்களுடைய ஆக்ஞை, இந்த மூன்றும் மூர்த்தன்யமான ப்ரமாணங்களாக பாஸித்து வரும் பொழுது, தாடகாவதத்தில் கொஞ்சமேனும் தோஷ சங்கையே எனக்கு ஏற்படவில்லை" என்று சொல்லிவிட்டு, இடது கையினுடைய முஷ்டியினல் வில்லின் நடுபாகத்தைப் பிடித்துக்கொண்டு, நாண்கயிற்றினல் வில்லை வளைத்து, ஜ்யா சப்தத்தால் (நாண்கயிறு சுண்டின சப்தத்தினல்) எல்லா திக்குகளையும் அந்த சப்தத்தினலேயே நிறப்பப் பட்டதாகச் செய்தார். அந்த சப்தத்தைக்கேட்ட தாடகை என்ற ராக்ஷஸியும் பரமகோபத்துடன், எந்த இடத்திலிருந்து இந்த சப்தம் வந்ததோ அந்த திக்கை நோக்கி ஹா ஹா கர்ரத்துடன் ஓடிவந்தாள். அப்படி மஹா கோபத்துடன் தன்னை எதிர்த்து ஓடிவருகிற தாடகையைப் பார்த்த ராமன் தன் தம்பியான லக்ஷ்மணனைப் பார்த்து, "லக்ஷ்மண! இவள் மஹாபாபி யென்று தெரிகிறது. மாயாபலம் என்ற அந்தர்த்தான (மறையும்) சக்தியோடு கூடினவள். இவளுடைய காது, மூக்கு, முதலானவைகளை அறுத்துவிட்டு விரூபிணியாகச் செய்துவிடலாம் என்று நினைக்கிறேன். ஸ்த்ரீ ஜாதி என்பது கொஞ்சம் மனதை சலிக்கும்படி செய்யத்தான் செய்கிறது. இவளுடைய வீர்யத்தையும் குறைத்து விடுகிறேன். இவளுடைய நாலாபக்கத்திலுள்ள ஸஞ்சாரத்தையும் தடுத்துவிடுகிறேன். குருவாக்யத்தையும் அனுஷ்டானம் செய்ததாக ஆகும். ஸ்த்ரீயைக் கொன்றேமென்ற தோஷமும் இல்லாமலுமிருக்கும்" என்று சொன்னர்.

இவ்விதம் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது தாடகை பரமகோபத்துடன் இரண்டு கைகளையும் மேல் நோக்கி விரித்துத்தூக்கிக்கொண்டு ராமனை லக்ஷ்யமாகக் கருதி ஓடி வந்தாள். விச்வாமித்ர மஹர்ஷியோ ஹுங்காரத்தால் அவளை நடுங்கச்செய்துவிட்டு, ராமலக்ஷ்மணனுக்கு க்ஷேமம் உண்டாகவேண்டுமென்று ப்ரார்த்தித்துக் கொண்டார்.

தாடகையும் மண் புழுதிகளால் ராமலக்ஷ்மணனிருவர்களை யும் மறைத்து ஒரு முஹூர்த்தகாலம் மோஹிக்கச் செய் தாள். பிறகு தானும் மறைந்துகொண்டு கல்மயமாக வர் ஷித்தாள். ராமனும் தாடகையினால் உண்டுபண்ணப் பட்ட சிலாவர்ஷங்களைத் தனது பாணங்களால் தடுத்து விட்டு தன்னுடைய அருகில் ஓடிவருகிற தாடகையினு டைய இரண்டு கைகளையும் கத்தியினால் வெட்டிவிட்டார். லக்ஷ்மணஸ்வாமியும் தாடகையினுடைய காது, மூக்குகளை அறுத்துவிட்டார். அந்த தாடகையும் மாயையினால் அந் தர்த்தான சக்தியை அவலம்பித்து, அடிக்கடி நினைத்த மாத்ரத்தில் எந்த ரூபத்தை வேண்டுமோ அந்த ரூபத்தை எடுத்துக்கொண்டு ராமனுடைய சிரஸ்ஸிலும், லக்ஷ்மண னுடைய சிரஸ்ஸிலும் பெரிய பெரிய பாராங்கற்களை வர்ஷ மாக வர்ஷித்தாள். விச்வாமித்ர மஹர்ஷி அதைப் பார்த்து, "ராமா! போதும், நீ வேடிக்கை செய்தது. இந்த துஷ்ட ஸ்த்ரீயினிடத்தில் தயையை வைத்ததும் போதும். இவள் மஹாபாபி. இவள்தான் என் யக்ஞத்திற்கு விக் னத்தைச் செய்கிறவள். ஸாயங்காலம் ஆகப்போகிறது. அந்தர்த்தான சக்தியை அவலம்பித்து மேன்மேலும் இவள் வ்ருத்தி அடைந்துவிடுவாள். ஸந்த்யாகாலத்தில் ராக்ஷஸர் கள் வ்ருத்தியடைந்துவருகிறார்கள். அவர்களுடன் அப் பொழுது யுத்தம் செய்வது மிகவும் கஷ்டம் என்பதை நீ தெரிந்துகொண்டிருக்கிறாய். ஆகையால் இப்பொழுதே தாமதமன்னியில் இவளை நீ கொன்றுவிடவேண்டும்" என்று சொன்னார். அதைக் கேட்ட ராமன் உடனே, அந்த தாட கையானவள் அந்தர்த்தான சக்தியை அவலம்பித்து மறைந் திருந்தாலும், அவளுடைய சப்தத்தின் மூலமாக அவளிருக்கும் தேச விசேஷத்தை தெரிந்துகொண்டு, அந்த தேசத்தை பாணங்களால் கோட்டையாகக்கட்டி அவளை அப்பால் இப்பால் அசையமுடியாதபடி செய்தார். உடன் தாடகை யும் பாணஸமூஹங்களால் தகைக்கப்பட்டவளாகி, ஹாஹா காரம் செய்துகொண்டு, ராமலக்ஷ்மணனைக் குறித்து ஓடி வந்தாள். உடன் பகவானும்,

तामापतन्तीं वेगेन, विक्रान्तां अशनीमिव ।
शरेणोरसि विव्याध, सा पपात ममार च ॥

𑌤𑌾𑌮𑌾𑌪𑌤𑌨𑍍𑌤𑍀𑌂 𑌵𑍇𑌗𑍇𑌨, 𑌵𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌂 𑌅𑌶𑌨𑍀𑌮𑌿𑌵 ।
𑌶𑌰𑍇𑌣𑍋𑌰𑌸𑌿 𑌵𑌿𑌵𑍍𑌯𑌾𑌧, 𑌸𑌾 𑌪𑌪𑌾𑌤 𑌮𑌮𑌾𑌰 𑌚 ॥

தாமாபதந்தீம் வேகேந, விக்ராந்தாம் அசநீமிவ ।
சரேணோரஸி விவ்யாத, ஸா பபாத மமார ச ॥

என்று வெகு வேகமாகத் தன் அருகில் ஓடிவந்த இடிபோல் பயங்கரமாயிருக்கிற அந்த தாடகையை ஒரே பாணத்தால் அவள் மார்பில் அடித்து அவளைக் கீழேதள்ளினார். அவ ளும் கீழேவிழுந்து மரணத்தை அடைந்தாள். இவ்விதம் ராமனால் அடிபட்டு தாடகை மரணமடைந்த பிறகு, லோகத்தை ஹிம்ஸித்துவந்த துஷ்டசாரிணியான ஒரு மஹா பாபி போனதில், தேவேந்த்ரன், தேவர்கள் எல்லோரும் பரம ஸந்தோஷத்தை அடைந்து, ராமலக்ஷ்மணனுடைய சிரஸ்ஸில் பாரிஜாத புஷ்பங்களை வர்ஷித்து, அவர்க ளிருவர்களையும் பூஜித்தார்கள். பூஜித்துவிட்டு, விச்வா மித்ர மஹர்ஷியைப் பார்த்து தேவர்கள் "மஹர்ஷே! ராமன் செய்த தாடக வதமென்ற கர்மாவினால் நாங்கள் பரம ஸந்தோஷத்தை அடைந்தோம். லோகமும் ஸுபிக்ஷ மாக ஆகிவிட்டது. தாங்கள் ராமனிடத்தில் அன்பை செலுத்தவேண்டும். ப்ருசாச்வர் என்ற ப்ரஜாபதியினுடைய புத்ரர்களாக அவதரித்த 1000 அஸ்த்ரங்கள் தங்களருகி லிருந்து வருகின்றன. அந்த அஸ்த்ரங்களெல்லாம் காம ரூபிகள், மஹா தபஸ்விகள். சத்ருக்களை நாசம் செய்வ தில் மஹா பராக்ரமத்தோடு கூடின சக்தியுள்ளவர்கள். அந்த அஸ்த்ரங்களை இந்த ஸமயம் ராமனுக்கு பாரி தோஷிகமாக (வெகுமதியாக) கொடுக்கவேண்டும். ராமன் தான் அந்த அஸ்த்ரங்களுக்கு முக்யபாத்ரன் ஆகுவான். ராமன் மூலம் இந்த லோகத்தில் அநேகவிதமான பெரிய

பெரிய கார்யங்கள் நடக்கவேண்டியதாக இருக்கின்றன" என்று சொல்லிவிட்டு தேவர்கள் பரம ஸந்தோஷத்துடன் ஸ்வர்க்கலோகம் சென்றுர்கள்.

ஸந்த்யாகாலமும் வந்துவிட்டது. விச்வாமித்ரரும் ராமன் செய்த தாடகாவதத்தால் பரம ஸந்தோஷத்தை அடைந்து, ராமனை உச்சிமுகர்ந்து பார்த்து, ஆலிங்கனம் செய்துகொண்டு, ராமனைப் பார்த்து. "ராமா! இன்றிரவை தாடகா வனத்தில் கழிப்போம், ப்ரபாத காலத்தில் ஸித்தாச்ரமம் போகலாம்" என்று சொன்னுர். ராமனும் லக்ஷ்மணனுடன் விச்வாமித்ரருடைய வார்த்தையைக் கேட்டு பரம ஸந்தோஷத்துடன் அன்று ஸாயங்காலம் செய்யவேண்டிய ஆந்நிகங்களைச் செய்துவிட்டு, தாடகா வனத்திலேயே இரவை ஸுகமாக கழித்தார். அந்த தாடகா வனமோ ராமலக்ஷ்மணனுடைய வாஸத்தால் அன்று முதல் சாபத்திலிருந்துவிடுபட்டதாகவும், அழகாகவும் ஆகி விட்டது. பார்க்கிறவர்களுக்கு 'குபேரனுடைய உத்யான வனமோ இது' என்று சொல்லும்படியாக விளங்கிற்று.

निहत्य तां यक्षसुतां स रामः, प्रशस्यमानः सुरसिद्धसंघैः ।
उवास तस्मिन् मुनिना सहैव, प्रभातवेळां प्रतिबोध्यमानः ॥

𑌨𑌿𑌹𑌤𑍍𑌯 𑌤𑌾𑌂 𑌯𑌕𑍍𑌷𑌸𑍁𑌤𑌾𑌂 𑌸 𑌰𑌾𑌮𑌃, 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌮𑌾𑌨𑌃
𑌸𑍁𑌰𑌸𑌿𑌦𑍍𑌧 𑌸𑌂𑌘𑍈𑌃 ।
𑌉𑌵𑌾𑌸 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌮𑍁𑌨𑌿𑌨𑌾 𑌸𑌹𑍈𑌵, 𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑌵𑍇𑌳𑌾𑌂
𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍋𑌧𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 ॥

நிஹத்ய தாம் யக்ஷஸுதாம் ஸராம:, ப்ரசஸ்யமாந: ஸுரஸித்த ஸங்கை: ।
உவாஸ தஸ்மிந் முநிநா ஸஹைவ, ப்ரபாதவேளாம் ப்ரதிபோத்யமாந: ॥

என்று ஸுகேது என்ற யக்ஷராஜனுடைய பெண்ணுகப் பிறந்து அகஸ்த்ய மஹர்ஷியினுடைய சாபத்தால் ராக்ஷஸியாகப்போன தாடகையை ஸம்ஹாரம் செய்துவிட்டு, தேவர்கள், ஸித்தபுருஷர்கள், முதலானவர்களால் ஸ்துதிக்கப்

பட்டவராகி. அந்த ராமனும் லக்ஷ்மணனோடும் விச்வா மித்ர மஹர்ஷியோடும்கூட அந்த தாடகா வனத்தில் அன்றிரவு ஸுகமாக வஸித்தார். மறுநாள் ப்ராதக்கால வேளையிலும் விச்வாமித்ர மஹர்ஷியினால் कौसल्या सुप्रजा राम (கௌஸல்யா ஸுப்ரஜா ராம) (கௌஸல்யா ஸுப்ரஜா ராம்) என்ற ப்ரகாரம் எழுப்பப்பட்டவராகக் கொண்டு விழித்துக் கொண்டார்.

தாடகாவத விசாரம்

ஸாக்ஷாத் ஸ்ரீராமனே பரம்பொருள் என்றே முன்பு நிருபிக்கப்பட்டது. அந்தப் பரம்பொருள் இந்தப் பூமண்டலத்தில் திவ்யமான மங்கள விக்ரஹத்தோடு அவதரிப்பதற்கு பயனே தர்ம ஸ்தாபனம் தான். அவதார புருஷர்களிடம் தர்மலோபமானது ஏற்படுவதற்கு ந்யாயமுண்டா? அவர்களே சாஸ்த்ரத்திற்கு விரோதமான கார்யத்தை செய்தார்களேயானால், மற்றவர்கள் போகும் வழி எது? அவதார புருஷர்களும் தான் தர்மத்தை அனுஷ்டித்துக்காட்டித்தானே மற்றவர்களை தர்ம மார்க்கத்தில் ப்ரவர்த்திக்கச் செய்ய வேண்டும். இவ்விதமிருக்கும்பொழுது, அவதார புருஷரான ஸ்ரீராமர் விச்வாமித்ர மஹர்ஷியினுடன் ஸித்தாச்ரமத்திற்குப் போகும் வழியில் தாடகை என்ற ஒரு ராக்ஷஸ ஸ்த்ரீயை வதம் செய்ததாக ஸ்ரீமத் ராமாயணத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. ஸ்த்ரீ வதம் சாஸ்த்ர ஸம்மதமாகுமா? "न स्त्रियो हन्तव्याः" (ந ஸ்த்ரியொ ஹந்தவ்யாஃ) (நஸ்த்ரியோ ஹந்தவ்யா:) என்ற வாக்யத்தால் ஸ்த்ரீகளை, எந்த அபராதம் செய்தவர்களாக இருந்தாலும் கொல்லக் கூடாது என்று சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றனவே. கருணைக்குப் பாத்ரமாக வல்லவா ஸ்த்ரீ ஜாதியை மஹர்ஷிகள் அநுஷ்டித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த ராமாயணத்திலேயே ஸுந்தரகாண்டத்தில் லங்கா நகரத்திற்கு நகர தேவதையான இலங்கினி என்ற ஸ்த்ரீயோடு ஆஞ்ஜனேயர் போர் செய்த காலத்தில், அந்த இலங்கினியினுல் ஸஹிக்க முடியாததான தாடனத்தை (அடியை) ஆஞ்ஜனேயர் பெற்றுக்கொண்டாலும், அந்த ஆஞ்ஜனேயரும் தனது கை முஷ்டியினுல் அவளை ஒரு குத்து குத்தி, அவமதித்தார். "स्त्रीचेति मन्यमानेन नातिक्रोधः स्वयं कृतः" (ஸ்த்ரீசேதி மந்யமாநேந நாதிக்ரோத: ஸ்வயம் க்ருத:) (ஸ்த்ரீசேதி மந்யமாநேந நாதிக்ரோத: ஸ்வயம் க்ருத:) என்ற வாக்யத்தால் ஸ்த்ரீஜாதியென்று நினைத்து ஆஞ்ஜனேயர் அவளைக் கொல்லாமல் விட்டார் என்று சொல்லப்பட்டு இருக்கின்றது. ஸ்த்ரீவதம் சாஸ்த்ர ஸம்மதமாகாதென்று தானே ஆஞ்ஜனேயர் அவளை உபேக்ஷித்து இருக்கின்றுர்.

அதுமாத்ரமல்ல. ஸ்ரீராமனே பஞ்சவடி தீரத்தில், தான் இருக்கும்பொழுது சூர்ப்பனகை என்ற ஒரு ராக்ஷஸ ஸ்த்ரீ தனது தர்ம பத்னியான ஸீதையை பக்ஷித்து விடுகிறதான ஒரு உத்தேசத்துடன் தனது ஆச்ரமத்திற்குள் நுழைந்து, தன்னுேடும் லக்ஷ்மணனுேடும் அநேகவிதமான பரிஹாஸ வார்த்தைகளையும் பேசி, ஸீதாதேவியையும் பலவிதமாக நிந்தித்தும் அந்த ராக்ஷஸ ஸ்த்ரீ உபத்ரவப் படுத்தினுள். அவ்விதம் துஷ்டையான சூர்ப்பனகையைக்கூட பகவானுன ஸ்ரீராமர் காதையும் மூக்கையும் அறுத்து அவளை விரட்டிவிட்டார் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த இடத்திலும், ஸ்த்ரீயைக் கொல்லக்கூடாது என்ற தர்ம சாஸ்த்ரத்திற்கு ராமர் பயந்தார் என்றுதானே சொல்ல வேண்டும். இவ்விதம் ராமாயணத்திலேயே ஸ்த்ரீவதை கூடாது என்று சொல்லப்பட்டு இருக்கும்பொழுது அதற்கு விரோதமாக தாடகை என்ற ராக்ஷஸ ஸ்த்ரீயை பகவானுன ஸ்ரீராமர் எப்படிக் கொன்றுர்?

இந்த ஸந்தர்ப்பத்தில் ஸ்த்ரீகளை கொல்லக்கூடாது என்ற தர்ம சாஸ்த்ரம் ஸ்ரீராமருக்கு மறந்துவிட்டதா?

அப்படி மறதி உள்ளவராக அவரை ஒப்புக்கொண்டால், அவரை அவதார புருஷராக எப்படி கருதமுடியும்; அல்லது சாஸ்த்ரத்தையே உதாஸீனம் செய்து தான் துணிந்து ஸ்த்ரீ வதை செய்தாரா? அப்படியானல் நாமும் தற்கால ஸந்தர்ப் பத்தை அனுஸரித்து சாஸ்த்ரங்களை மூட்டை கட்டிவைத்து விட்டு, நமது இஷ்டம்போல் ஏன் நடந்து கொள்ளக்கூடாது. அப்படி சாஸ்த்ர விருத்தமாக ஸ்த்ரீ வதத்தைச் செய்த ராமனை தர்ம ஸம்ஸ்தாபனம் செய்வதற்காக அவதரித்த வர் என்று எப்படி ஒப்புக்கொள்ளலாம்? ஸனுதன தர்மி களுக்கு தர்மம் செழிக்க, ஸ்த்ரீகளுடைய ரக்ஷையல்லவா அந்தரங்க ஸாதனமாகும். அப்படி இருக்கும்பொழுது ஒரு ஸ்த்ரீயை ஸ்ரீராமர் எப்படிக் கொன்றார்? அப்படி சாஸ்த்ர விருத்தமான கார்யத்தை செய்த ராமரிடம் ஈச்வராம்சம் இல்லை என்றுவது சொல்லவேண்டும். அல்லது ஈச்வர னுடைய அவதாரமாகிற ஸ்ரீராமனே சாஸ்த்ர விருத்தமான கார்யத்தை செய்திருக்கிறபடியால், நாமும் காலத்தை அனு ஸரித்து சாஸ்த்ரம், சாஸ்த்ரம், என்று புலம்பிக்கொண்டு இராமல் நமக்கு இஷ்டமான கார்யத்தை செய்து நன்மையை அடையவேண்டும் என்று நினைத்து ராமருடைய ஆசாரத் தையே கைகொள்ளவேண்டுமா! லோகத்தில் தற்காலத்தி லுள்ள ப்ராணிகளுடைய ஊக்கத்திற்கு இந்தத் தாடகா வதம் ஒரு ஸந்தோஷத்தைக் கொடுத்து ப்ராணிகளுக்கு சாஸ்த்ரத்தை அனுதரிப்பதில் ஒரு தைர்யத்தைக் கொடுக்கிற தல்லவா? ஆகையால் அவ்விதமான ஸம்சயத்துக் கிடமில் லாமல் அதனுடைய தத்வத்தை எப்படி விசாரித்து நிர்ண யிக்கவேண்டுமோ அப்படி விசாரமானது அவச்யம் வித்வான் களால் செய்யப்படவேண்டும். தர்மத்தை ப்ரசாரப்படுத்து கிற ஸ்ரீராமாயணம் என்ற நூலில் உள்ள ஸகல விஷயங்களும் தர்மங்களேதான். ஆகையால் இந்த தாடகாவதத்தையும் தர்மம் என்று ருஜுப்படுத்துவது வித்வான்களுடைய கடமை யாகும். ஸ்ரீராமரால் செய்யப்பட்டதால் இது தர்மம் என்று ருஜுப்படுத்தினல் போதாது. ஸ்த்ரீகளைக் கொல்லக்கூடாது

என்கிற சாஸ்த்ரத்திற்கும் ப்ராமாண்யத்தைக் கெடுக்காமல் இதையும் தர்மம் என்று ருஜுப்படுத்தினலொழிய ப்ராணிகளுக்கு ஸனுதன தர்மத்திலும் அவதார புருஷர்களிடமும் ஸ்ரீமத் ராமாயணம் முதலான புராதன நூல்களிடமும் நம்பிக்கை ஏற்படாது.

தாடகாவதம் மேலான தர்மம்தான். ஸ்த்ரீகளைக் கொல்லக்கூடாது என்கிற சாஸ்த்ரத்திற்கும் ப்ராமாண்யம் கொஞ்சமேனும் குறையாது. அது எப்படி என்ருல் அதை நிரூபிக்கின்ருேம். அதாவது :—

ஸ்த்ரீகளைக் கொல்லக்கூடாது என்ற சாஸ்த்ரமானது நல்ல நடத்தை உள்ளவர்களாயும் பதிவ்ரதைகளாயும் உள்ள நல்ல ஸ்த்ரீகளிடம்தான் பொருந்தத்தக்கது. கெட்ட ஸ்வபாவம் உள்ளவர்களான துஷ்ட ஸ்த்ரீகளை கொல்லக்கூடாது என்று தடுப்பதற்கு அந்த சாஸ்த்ரம் ப்ரவ்ருத்திக்காது. அதற்கு உதாஹரணமாக பரஹிம்ஸையைத் தடுக்கும் சாஸ்த்ரத்தை எடுத்துக் கொள்ளலாம். "न हिंस्यात् सर्वा भूतानि" (𑌨 𑌹𑌿𑌂𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿) (ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி) அதாவது ஒரு ப்ராணியையும் ஹிம்ஸிக்கக்கூடாது என்று அந்த சாஸ்த்ரத்தின் கருத்து. ஆகிலும் "अग्नीषोमीयं पशुं आलभेत" (𑌅𑌗𑍍𑌨𑍀𑌷𑍋𑌮𑍀𑌯𑌂 𑌪𑌶𑍁𑌂 𑌆𑌲𑌭𑍇𑌤) (அக்நீஷோமீயம் பசும் ஆலபேத) என்ற ச்ருதியால் யாகத்தில் பசு ஹிம்ஸையை செய்யவேண்டுமென்று மற்ருெரு சாஸ்த்ரம் சொல்லுகிறது. இவ்விதம் ஹிம்ஸைகூடாது என்ற சாஸ்த்ரத்திற்கும், ஸத்கர்மாக்களில் ஹிம்ஸையை அனுமதிக்கிற சாஸ்த்ரத்திற்கும், பரஸ்பரம் முற்றிலும் விரோதம் ஏற்படுகிறது. சாஸ்த்ரத்திற்குள்ள விரோதத்தை பரிஹாரம் பண்ணுவதே ஆஸ்திகர்களின் கடமையாகும். உண்மையில் சாஸ்த்ரங்களில் முன்பின் விரோதமேயில்லை. அதனுடைய வ்யவஸ்தைகளைப் பிரித்து தெரிந்துகொள்ளாத ப்ராக்ருதமான மனுஷ்யர்களுக்கு விரோதம்போல் தோன்றுகிறது. அந்தத் தோற்றத்தையும் பரிஹரிக்க வேண்டியது

அவச்யம் தான். தனது ஆசையினுல் ஒரு ப்ராணியைக் கொன்று அதனுடைய மாம்ஸத்தை புஜிக்க வேண்டுமென் கிற எண்ணத்துடன் அந்த ப்ராணியை ஹிம்ஸிப்பது राग प्राप्त (ராம ப்ராப்தம்) (ராக ப்ராப்தம்) ராகத்தால் ஏற்பட்ட ஹிம்ஸையாகும். தனக்கு ஆசை இல்லாமல் இருக்கும் பொழுதே சாஸ்த்ரங்களில் கூறப்படுகிற ஆக்ஞையை அனு ஸரித்து செய்கிற ஹிம்ஸையானது विधिप्रोक्त (விதிப்ரோக்தம்) (விதிப்ரோக்தம்) வைதமான ஹிம்ஸையாகும். இவ்விதம் ஒன்று ராகப்ராப்த ஹிம்ஸை, மற்ருென்று வைதமான ஹிம்ஸை என்று இரண்டு விதமாக ஹிம்ஸை பிரிக்கப்பட்டு இருக் கின்றது. ஹிம்ஸை கூடாது என்ற சாஸ்த்ரமானது பொது வாக ஹிம்ஸையை நிஷேதிக்கிறபடியால் ஸாமான்ய சாஸ்த்ர மாகும். ஸத்கர்மாக்களில் ஹிம்ஸையை அனுமதிக்கிற சாஸ்த்ரம் ஒரு தேசத்தையும், காலத்தையும், ஒரு ப்ராணி யையும், ஒரு அதிகாரியையும், குறிப்பிட்டுக்கொண்டு ஹிம் ஸையை அனுமதிப்பதினுல் அது விசேஷ சாஸ்த்ரமாகும். விசேஷ சாஸ்த்ரத்திற்கும், ஸாமான்ய சாஸ்த்ரத்திற்கும் விரோதம் வராமலிருந்தால் இரண்டையும் அனுஷ்டித்தே தான் தீரவேண்டும். விஷயம் வெவ்வேருக யிருந்தால்தான், விரோதம் வராமலிருக்கும். ஹிம்ஸை என்ற ஒரே விஷ யத்தைப்பற்றி ஒரு சாஸ்த்ரம் கூடுமென்றும், மற்ருெரு சாஸ்த்ரம் கூடாதென்றும் சொன்னுல் அது விரோதந்தானே. அந்த இடத்தில் இரண்டு சாஸ்த்ரத்தையும் சேர்த்து அனுஷ் டிக்கமுடியாது. விசேஷ சாஸ்த்ரத்தைத்தான் அவலம்பித்து ஸாமான்ய சாஸ்த்ரத்திற்கு பொதுவாக ஹிம்ஸையை நிஷே தம் செய்யவில்லை. மனுஷ்யனுடைய ராகத்தால் ஏற்பட்ட ஹிம்ஸையை அந்த ஸாமான்ய சாஸ்த்ரம் நிஷேதம் பண்ணு கிறது என்று ஸாமான்ய சாஸ்த்ரத்திற்கு ஸங்கோசம் செய்ய வேண்டும்.

இதற்கு உதாஹரணமாகவும் ராமாயணத்திலேயே விபீஷண் ஸ்வாமியை எடுத்துக்கொள்ளலாம். அதாவது ஸீதா

தேவி நிமித்தமாக, ராவணனுக்கும் ஸ்ரீராமனுக்கும் விரோத மானது ஏற்பட்டிருக்கும்பொழுது ராவணனை அனுஸரிப்ப தற்கும் ஸ்ரீராமனை பஜிப்பதற்கும் பரஸ்பரம் விரோதம் வந்துவிட்டதே என்று விபீஷண ஆழ்வார் ஆலோசித்தார். பிறகு சாஸ்த்ரங்களை ஆராய்ந்து பார்த்து ஸமான்ய தர் மத்திற்கும் விசேஷ தர்மத்திற்கும் விரோதமில்லாமல் இருந் தால் இரண்டையும் அனுஷ்டிக்கவேண்டியது தான். விரோ தம் ஏற்பட்டால் ஸாமான்ய தர்மத்தைத் தள்ளி, விசேஷ தர்மத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்ற ந்யாயத்தைக் கண்டு பிடித்து, தன் தகப்பனுக்கு ஸமானமான ராவ ணனுடைய அனுஸரணை ஸாமான்ய தர்மம் என்றும், லோகநாதனுன ஸ்ரீராமருடைய பஜனம் விசேஷ தர்மம் என்றும், அந்த இரண்டிற்கும் ப்ரக்ருதத்தில் விரோதம் வந்திருப்பதினால், ராவணனுடைய அனுஸரணை என்கிற ஸாமான்ய தர்மத்தை விட்டுவிட்டு ராமபஜனம் என்கிற விசேஷ தர்மத்தையே தான் அனுஷ்டிக்க முன்வந்து ஸ்ரீராமபிரானை சரணம் அடைந்தார், என்று சொல்லப் பட்டு இருக்கிறது. லௌகிகமான ந்யாயத்தையும் கவனிக் கலாம்.

அதாவது, ஒருவன் மற்றொருவனை கொலைசெய்யக் கூடாது என்று சட்டம் ஏற்பட்டு இருக்கிறது. ஆகிலும், ஒரு ந்யாயாதிபதி ஒருவனுக்கு கொலையை விதிக்கிறார். அந்த ந்யாயாதிபதி சொன்னது முன்சொன்ன சட்டத்திற்கு விரோதமாகுமா? ஒருவன் மற்றொருவனை கொலை செய்வ தற்கு அவனிடத்தில் உள்ள த்வேஷம் காரணமாகிறது. ந்யாயாதிபதி கொலையை விதிப்பதற்கு அந்தக் கைதியினி டத்தில் உள்ள த்வேஷம் காரணம் அல்ல. ந்யாயாதிபதிக்கு அந்தக் கைதியினிடத்தில் த்வேஷம் இல்லை. மிகுந்த கருணை தான் ந்யாயாதிபதிக்கு அந்தக் கைதியினிடத்தில் ஏற்படும். ஆகிலும் அவனுக்குக் கொலையை விதிப்பதில் அந்த ந்யாயாதிபதி முன் வந்து இருக்கிறான். அதற்கு காரணமோ அந்த கைதி செய்த குற்றமே. அந்தக் குற்

றத்துக்குத் தகுந்த தண்டனை செய்விக்கவேண்டுமென்கிற சட்ட சாஸ்த்ரமே தான் காரணமாகும். இந்த உதாஹ ரணங்களை நாம் கவனித்தால், ஸ்ரீராமர் தாடகையை வதம் செய்தது தர்மம் என்றே கருதலாம்.

பொதுவாக ஸத்ரீகளைக் கொல்லக்கூடாது என்ற சாஸ்த்ரம் ஸாமான்ய சாஸ்த்ரமாகும். ஸ்ரீராமர் தனக்கு பலை, அதிபலை என்ற இரண்டு ரஹஸ்ய வித்யைகளை உப தேசம் செய்ய விச்வாமித்ர மஹர்ஷி என்ற தனது குருவி னுடைய ஆக்ஞையை அனுஸரித்து தாடகையை வதம் செய்ததாக ராமாயணத்தில் தெரிகிறது. குருவான விச்வா மித்ர மஹர்ஷியினுடைய ஆக்ஞையோ, தாடகை ஸ்த்ரீ யானாலும் அவளைக் கொன்றுவிடவேண்டுமென்பதே. சாஸ்த் ரமோ ஸ்த்ரீகளைக் கொல்லக்கூடாது என்று சொல்லுகிறது. ப்ரக்ருதத்தில் குருவினுடைய வார்த்தைக்கும் தர்மசாஸ்த் ரத்திற்கும் விரோதம் வந்துவிட்டது. ராமபிரான் மஹா புத்திமான் ஆனதால் "ஸ்த்ரீகளைக் கொல்லாதே" என்ற சாஸ்த்ரத்தை ஸாமான்ய சாஸ்த்ரமென்றும் "தாடகையைக் கொல்லு" என்று சொல்லுகிற தனது குருவின் வார்த் தையை விசேஷ சாஸ்த்ரமென்றும், விசேஷ சாஸ்த்ரத்தை அனுஸரித்துத் தான் ஸாமான்ய சாஸ்த்ரத்திற்கு அர்த்தத் தைச் சொல்லவேண்டுமென்றும் தீர்மானித்து, "ஸ்த்ரீகளைக் கொல்லாதே" என்ற ஸாமான்ய சாஸ்த்ரத்திற்கு நல்ல நடத்தையுள்ள ஸ்த்ரீகளைக் கொல்லாதே என்று தான் அர்த் தமே தவிர கெட்ட நடத்தையுள்ள ஸ்த்ரீகள் அந்த சாஸ்த் ரத்திற்கு விஷயமாகவே ஆகமாட்டார்கள். இந்தத் தாட கையோ கெட்ட நடத்தை உள்ள மூர்க்க ஸ்த்ரீயாகத் தெரிகிறது. அதனுல் தான், "நமது குருவான மஹர்ஷி இவளை வதைக்க ஆக்ஞாபனம் செய்கிறுர்; அதனுல் நாம் செய்யலாம்" என்று நினைத்து ஸ்ரீராமபிரான் தாடகையை வதம்செய்தார். அது தர்மம்தான் என்பதில் என்ன ஆக்ஷேபணை ?

ஸோமயாகத்தில் செய்கிற பசு ஹிம்ஸை தர்மம் ஆவது போலவும், ந்யாயாதிபதிகள் கைதியை தண்டிக்கும் தண்டனை தர்மம் ஆவதுபோலவும், தாடகாவதமும் தர்மம் என்பதில் ஆக்ஷேபணைக்கே இடமில்லை. தவிரவும், சாஸ்த்ரமானது ஈச்வரனுடைய வாக்குகளாகவும், ஈச்வரனுடைய தத்வத்தை அறிந்த மஹர்ஷிகளுடைய வாக்குகளாகவும் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. அதனால் சாஸ்த்ரத்தைக் காட்டிலும் ஈச்வரன் மேல் என்பதில் ஆக்ஷேபணை இல்லை. அந்த ஈச்வரனுக்கும் மேலாக ஸத்குருவை பாராட்ட வேண்டுமென்று அந்த சாஸ்த்ரங்களிலேயே சொல்லப் பட்டு இருக்கிறது. ஈச்வரனிடத்தில் அபராதத்தை செய்து விட்டாலும் குரு க்ருபை இருந்தால் அவன் தப்பித்துக் கொள்ளலாம் என்றும், குருவினிடத்தில் அபராதம் செய்து விட்டால், ஈச்வர க்ருபை இருந்தாலும் தப்பித்துக்கொள்ள முடியாது என்று ஸ்பஷ்டமாக சாஸ்த்ரங்களில் கூறப்பட் டிருக்கின்றபடியால் எத்தனையோ விதத்தில் ஈச்வரனைக் காட் டிலும் குரு மேலானவர். லோகத்தை ப்ரகாசம் செய்கிற ஸூர்யனைக் காட்டிலும் அவனவனுக்குள்ள கண் மேலான தென்று சொல்லவும் வேண்டுமா? கண்ணில்லாதபோனல் ஸூர்யனை எப்படிப் பார்க்கமுடியும்? லோகத்தை ப்ரகாசம் செய்கிறது இந்தக் கண். அப்படி இருக்கும்பொழுது ஸூர்யனைக் காட்டிலும் இந்தக் கண் மேலல்லவா. ஸூர் யனைப்போல் ஈச்வரனுகுவான்; கண்ணைப் போல் குருவாகி ருன். அதனுல் குருவே மேலானவன். அந்தக் குருவினு டைய வார்த்தையை தர்மமா, அதர்மமா என்று விசாரிக் காமலேயே அதை அனுஷ்டிப்பது உத்தம சிஷ்யனின் கடமை ஆகும். அதனுல்தான் ஸ்ரீராமனும் தாடகையை குருவசன பலத்தால் வதைத்தார்.

ஜமதக்னி மஹர்ஷியினுடைய பிள்ளையான பரசுராமர் தன் தாயாரான ரேணுகா தேவியை, தனக்கு தந்தையா யும் குருவாயுமுள்ள ஜமதக்னி மஹர்ஷியின் வார்த்தையை ப்ரமாணமாக்க் கருதி, ரேணுகையை வதம் செய்தார் என்று

புராண மூலமாகத் தெரிய வருகிறது. ஜமதக்னி மஹர்ஷியினுடைய பூஜைக்கு ப்ரதிதினமும் அந்த ரேணுகா தேவியானவள் நதியினுடைய மணலை தன் பாதிவ்ரத்ய மஹிமையால் குடமாகச் செய்து அதில் தீர்த்தம் கொண்டு வந்து உபசரிக்கிற வழக்கம். ஒரு தினம் நதிக்கு போயிருக்கும் காலத்தில், ஒரு கந்தர்வனை ஆகாச மார்க்கத்தில் பார்த்து அவனுடைய ஸௌந்தர்யத்தால் இந்த ரேணுகையானவள் மனக்கலக்கத்தை அடைந்தாள். உடனே இவளுக்கு பாதிவ்ரத்ய பங்கம் ஏற்பட்டது. பிறகு மணலை குடமாகச் செய்ய முடியாதவளாகி விட்டாள். ஸர்வக்ஞனான ஜமதக்னி மஹர்ஷி இதை ஞான திருஷ்டியினால் அறிந்து, தனது பிள்ளையாயும் சிஷ்யனாயுமுள்ள பரசுராமருக்கு அவளை வதம் செய்யும்படி ஆக்ஞாபித்தார். உடன் பரசுராமரும் குருவின் வார்த்தையால் ரேணுகையைத் தன் தாயாரானாலும், வதம் பண்ணிவிட்டார். இதனால் குருவினுடைய வார்த்தைக்கு மேலான சாஸ்த்ரமே கிடையாது என்பது ஸித்திக்கிறது. அதுபோல் தான் ஸ்ரீராமபிரானும் குருவான விச்வாமித்ர மஹர்ஷிக்கு கௌரவத்தை அளிக்கத் தாடகையை வதம் செய்தார் என்பது திண்ணம். அத்துடன், அந்தத் தாடகையும், வதத்திற்கு யோக்யமான கெட்ட நடத்தையோடு கூடியவள். அவளுடைய கெட்ட நடத்தை மாத்ரம் அதில் காரணமில்லை. சாஸ்த்ரத்திற்கும் ஈச்வரனுக்கும் மேலான தனது குருவினுடைய வார்த்தையே காரணமாகும். சூர்ப்பநகையை ஸ்ரீராமர் அவமதித்த காலத்திலோ, ஆஞ்ஜனேயர் இலங்கிணியை ஜயித்த காலத்திலோ, குருவினுடைய ஆக்ஞை என்ற ப்ரமாண சாஸ்த்ரம் இல்லாததால் சூர்ப்பநகையை ஸ்ரீராமரும், இலங்கிணியை ஆஞ்ஜனேயரும் வதம் செய்யவில்லை. ப்ரக்ருதத்திலோ தாடகா வதத்திற்கு குருவினுடைய ஆக்ஞையே ப்ரமாண சாஸ்த்ரமாகும். ஆகையால் தாடகா வதமானது தர்மம்தான். ஸ்ரீராமபிரான் தர்மாவதாரமானதால் தர்ம மார்க்கத்திற்கு விரோதமாக கொஞ்சங்கூட தவறிப்

போகமாட்டார். ஆகையால் ஸ்ரீராமருடைய ஆசாரத்தையே நாம் அனுஷ்டிப்பதால் நமக்கு ச்ரேயஸ்ஸுதான். இந்தத் தாடகா வதம் என்ற சரித்ரத்தால் ஆசார்யனுடைய மஹிமையும் அவருடைய வாக்கிற்கு ஒரு கௌரவமும் வெளியாகிறது. இதனால் லோகத்தில் குருபக்தி என்ற ரஹஸ்யமான தர்மம் ப்ரகாசப்படுத்தப்பட்டதாக ஆகும்.

தவிர, இந்தத் தாடகை என்றவள் உண்மையில் ஸ்த்ரீயே இல்லை. இவள் ஒரு ராக்ஷஸன். அவனுக்கு காலநேமி என்ற பெயரானது புராணங்களில் ப்ரஸித்தமாகத் தெரிகிறது. இவன் அதிஉக்ரமான தபஸ்ஸைச் செய்து, ப்ரம்மாவை தனக்கு ஸுலபமாக செய்துகொண்டான். ப்ரம்மா ப்ரத்யக்ஷமாகி, "உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்ளலாம்" என்று சொல்ல "ஒரு ப்ராணியாலும் எனக்கு வதம் உண்டாகக் கூடாது" என்று கேட்டான். அதற்கு ப்ரம்மாவோ, "பிறந்தவர்க்கு மரணம் நிச்சயமாக ஏற்படும். ஒரு ப்ராணியாலும் வதம் ஏற்படாமல் உனக்கு எப்படி வரம் கொடுக்க முடியும்" என்று சொல்லி அவன் கேட்டதற்கு இணங்காமல் இருந்துவிட்டார். ஆகிலும் அவனுடைய தபோபலத்தைப் பார்த்து, "ம்ருகம், பக்ஷிகள், ஸர்ப்பம் முதலான ஜந்துக்களாலும் தேவ மனுஷ்யர்களாலும் உனக்கு வதம் ஏற்படவேண்டாம். ஈச்வரனுடைய அவதார மூர்த்தியான மஹானுபாவனால் உனக்கு வதம் ஏற்படட்டும். அந்த விதமும் ஏற்படாமல் வஞ்சிக்க உனக்கு ஒரு உபாயம் சொல்லிக் கொடுக்கிறேன். அதாவது உன்னுடைய இச்சையினாலே உனக்கு ஸ்த்ரீ ரூபம் எடுத்துக்கொள்ள சக்தி ஏற்படட்டும். அதையும் நான் உனக்கு ஒரு வரமாகக் கொடுக்கிறேன். அந்த ஸ்த்ரீ ரூபத்தை எடுத்துக்கொண்டு விட்டால் எந்த அவதார புருஷனால் நான் உனக்கு வரத்தைக் கற்பித்திருக்கிறேனோ அந்த அவதார புருஷன் தர்ம ஸம்ஸ்தாபனம் செய்வதற்கு அவதரித்து இருக்கிறபடியாலும் ஸ்த்ரீ ஜாதியைக் கொல்லக்கூடாது என்ற சாஸ்த்ரத்தை அறிந்து உன்னைக் கொல்லாமல் விட்டுவிடுவான். எப்படி

யாவது உன்னுடைய கோரிக்கை நிறைவேறிவிடும்" என்று ப்ரம்மா இந்த காலநேமிக்கு வரம் கொடுத்து அனுக்ரஹம் செய்தார். அந்தக் காலநேமியும் வரபலத்தாலும், அவதார புருஷனைத் தவிர மற்ற ப்ராணிகள் மூலமாக தனக்கு வதம் இல்லாத தைர்யத்தாலும், அவதார புருஷனால் ஏற்படுகிற வதத்தையும் ஸ்த்ரீ ரூபத்தை எடுத்துக்கொண்டு வஞ்கிக்கிற சக்தி இருப்பதினாலும் ரொம்ப திமிர் அடைந்து ஸ்த்ரீ வேஷத்தைப் போட்டுக்கொண்டு, தாடகை என்று பெயருடன் உலகத்தில் அங்காங்கு ஸஞ்சரித்து மஹர்ஷிகளை பாதித்துவந்தான். ப்ரம்மா வரம்கொடுக்கிற காலத்தில், தான் தப்பித்துக் கொள்வதற்கு காலநேமியை வஞ்சித்தாலும், ராம பிரானான அந்த அவதார புருஷனுக்கு அந்த ரஹஸ்யம் தெரியாதா? அத்துடன் ஸர்வக்ஞனான விச்வாமித்ரருடைய உதவியும் இருக்கும்பொழுது அந்தத் தாடகையினுடைய உண்மையை ஏன் அறியமுடியாது? ஆகையால் ஸ்ரீராமபிரானும், "இவள் உண்மையில் ஸ்த்ரீயல்ல. காலநேமி என்ற ராக்ஷஸன் வரபலத்தால் ஸ்த்ரீ ரூபத்தை எடுத்துக்கொண்டு, ஸ்த்ரீ வதத்திற்கு ப்ராமாணிகர்கள் 'நம்மைக் கொல்லமாட்டார்கள் என்று நடித்து வருகிறான். இவளைக் கொல்வது ஸ்த்ரீ வதமாக ஆகாது. குருவினுடைய ஆக்ஞையாகிற ப்ரமாண சாஸ்த்ரமும் நமக்கு பலமாக ஏற்பட்டு இருக்கிறது. 'ஸ்த்ரீகளைக் கொல்லாதே' என்ற சாஸ்த்ரத்திற்கு ப்ரக்ருதத்தில் ஸம்பந்தமே இல்லை. ஆகையால் நாம் செய்கிற இந்தத் தாடகையின் வதமானது தர்மசாஸ்த்ரத்திற்கு விருத்தமான ஆசாரமே இல்லை. ஸம்மதமான தர்மம் தான்," என்று ஸ்ரீராமபிரான் நினைத்துத்தான், அந்தத் தாடகையை வதம் செய்தாரே தவிர, கொஞ்சமேனும் தர்மமில்லாத கார்யத்தில் ப்ரவேசிக்கவில்லை. தாடகையினுடைய வதம் ஸ்த்ரீவதமல்ல, புருஷனுடைய வதம் தான், என்று நிரூபணம் செய்ததற்கு ஆனந்த ராமாயணமும், ஸ்காந்த புராணமும் ப்ரமாணமாகும். ஆகையால் தாடகா வதம் பரமதர்மமானதினால், ஸ்ரீராமரிடத்தில் கொஞ்ச

மேனும் தர்மத்தினுடைய விபரீத நிலைமையை சங்கிக்காமல் தர்மமூர்த்தியே ஸ்ரீராமர் என்று தீர்மானித்து ஸ்ரீராமரை பரம பக்தியோடு பஜித்து, ஸ்ரீராமபிரானுடைய ஆசாரத்தைக் கைகொள்வதே ஸஜ்ஜனங்களுடைய கடமையாகும்.

27, 28, 29, 30-வது ஸர்க்கங்கள்

ஸ்ரீராமச்சந்த்ர மூர்த்தியினுடைய சரணாரவிந்தத்தில் ஸம்பந்தப்பட்ட பாம்ஸுக்களால் (தூளிகளால்) பரிசுத்தம் செய்யப்பட்ட தாடகாவனத்தில் விச்வாமித்ர மஹர்ஷியானவர், ராமலக்ஷ்மணர்களுடன் அன்றிரவு ஸுகமாக வஸித்துவிட்டு மறுதினம் காலையில் விச்வாமித்ர மஹர்ஷியானவர் மந்தஹாஸத்துடன் ராமனைப் பார்த்துச் சொல்கிறார். "ராமா, நீ செய்த தாடகாவதத்தால் நான் ரொம்பவும் ஸந்தோஷத்தை யடைகிறேன். எனக்குப் பரமயசஸ் ஏற்பட்டுவிட்டது. நான் பரம த்ருப்தியோடு சில அஸ்த்ரங்களை உனக்கு பாரிதோஷிகமாக (வெகுமதியாக) தானம் செய்கிறேன். நீ அவைகளை க்ரஹித்துக் கொள்ளவேண்டும். தேவர்களோ, கந்தர்வர்களோ, உரகர்களோ, எவர்களானுலும் உனக்கு எதிரிகளாயிருந்தால், அவர்களை உனக்கு வசமாக்கிக் கொடுத்து ஜயத்தைக் கொடுக்கும் பரம மங்களம் உனக்கு நாளுக்கு நாள் வ்ருத்தியாகும்" என்று சொல்லிவிட்டு இவ்விதமான அஸத்ரங்களை ராமனுக்கு அர்ப்பணம் செய்தார். அவ்விதம் அந்த மஹர்ஷியினுல் அர்ப்பணம் செய்யப்பட்ட அஸ்த்ரங்களாவன:—தண்டசக்ரம், தர்மசக்ரம், காலசக்ரம், விஷ்ணுசக்ரம், ஐந்த்ராஸ்த்ரம், வஜ்ராஸ்த்ரம், சிவசூலம், ப்ரும்மாஸ்த்ரம், ஐஷீகாஸ்த்ரம், ப்ரும்ம சிரோ அஸ்த்ரம், கௌமோதகீ என்ற கதை, தர்மபாசம், காலபாசம், வருணபாசம், அசநி என்ற இடியைப் போலொத்த அஸ்த்ரவிசேஷம், பாசுபதாஸ்த்ரம், நாரா

யஞுஸ்த்ரம், ஆக்னேயாஸ்த்ரம், வாயவ்யாஸ்த்ரம், சிவ சக்தி, விஷ்ணுசக்தி என்ற ஆயுதவிசேஷங்கள், கங்கா ளம், முஸலம், காபாலம், கங்கணம், வைத்யாதரம், நந்த னம், காந்தர்வாஸ்த்ரம், மானவாஸ்த்ரம், விசேஷமாயும் அபூர்வமாயுமுள்ள கத்திகள், ஸௌராஸ்த்ரம், ப்ரஸ்வாப னம், ப்ரசமனம், தர்ப்பணம், சோஷணம், ஸந்தாபனம், விலாபனம், பைசாசம், மோஹனம், தாமஸம், ஸௌமனம், ஸம்வர்த்தம், மௌஸலம், ஸத்யாஸ்த்ரம், மாயாதரம், ஸௌம்யாஸ்த்ரம் முதலான காரணப்பெயர்களோடுகூடின அஸ்த்ர விசேஷங்கள் விச்வாமித்ர மஹர்ஷியால் கொடுக் கப்பட்டன. அந்தந்த அஸ்த்ரங்களுடைய மூலமந்த்ரங்கள் விச்வாமித்ர மஹர்ஷியால் உபதேசிக்கப்பட்டன. அந்தந்த அஸ்த்ரங்களுடைய மூலமந்த்ரத்தை விச்வாமித்ர மஹர்ஷி யானவர், ராமனுக்கு உபதேசித்தார் என்பதே, அவ்வளவு அஸ்த்ரங்களையும் தானம் செய்தார் என்றதற்கு அர்த்தம் ஆகும். ஸர்வஸங்க்ரஹணம் என்று எல்லா அஸ்த்ரங்களை யும் ப்ரத்யக்ஷமாக வரவழைக்கக் கூடிய ஒரு மந்த்ர மானது சொல்லப்படும்; அதை விச்வாமித்ர மஹர்ஷி ராம னுக்கு உபதேசித்தார். தானும் கிழக்குமுகமாக நின்று கொண்டு அந்த மந்த்ரத்தை ஜபித்த மாத்ரத்தில் ஸகல அஸ்த்ரங்களும் திவ்யரூபத்தோடு ஆவிர்ப்பவித்தன. அந்தந்த அஸ்த்ரங்களுக்கு உரிய தேவதைகளும் வந்துவிட்டார்கள். அந்த அஸ்த்ரங்களையும் தேவதைகளையும் பார்த்து "இந்த க்ஷணம் முதல் நீங்கள் ஸ்ரீராமனுடைய வசத்தில் இருந்து வரவேண்டியது" என்று விச்வாமித்ரமஹர்ஷி ஆக்ஞாபித்த ப்ரகாரம், அந்த தேவதைகளும், சரீரதாரிகளான அஸ்த்ரங் களும், ராமனைப்ரதக்ஷிணம் செய்து, நமஸ்கரித்து "உன்னு டைய கிங்கரர்கள் நாங்கள்" என்று சொல்லிவிட்டு அஞ்ஜலி பந்தம் செய்துகொண்டு நின்றார்கள். ராமனும் தன்னுடைய கோஷ்டியில் அவர்களைச் சேர்த்துக்கொண்டு தன் கையினால் அந்த தேவதைகளையும், அஸ்த்ரபுருஷர்களையும் தொட்டு ஆசீர்வாதம் செய்து, "நான் எப்பொழுது மனதினால் ஸ்ம

ரிக்கிறேனே, அப்பொழுது என் எதிரில் நீங்கள் ஆவிர்ப்ப விக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு அவர்களை அந்தர்த் தானம் அடையும்படி கட்டளையிட்டார்.

ராமனும் பரம ஸந்தோஷத்துடன் விச்வாமித்ர மஹர் ஷியை நமஸ்காரம் செய்துவிட்டு, ஸித்தாச்ரமத்தை அடை வதின் பொருட்டு ப்ரஸ்தானம் செய்தார். அவ்விதம் புறப் பட்டுப்போகும் காலத்தில், விச்வாமித்ரரைப்பார்த்து, "மஹர்ஷே! தேவர்களுக்கும் கிடைக்கக்கூடாததான அஸ்த்ர ஸமூஹங்களைத் தங்களுடைய அனுக்ரஹத்தால் நான் தெரிந்துகொண்டேன். ஆனாலும், உபஸம்ஹாரமந்த்ரம் இன்னதென்று தெரியவில்லை. அந்தந்த அஸ்த்ரத்தினுடைய மூலமந்த்ரத்தைத் தெரிந்து கொண்டதுபோல், உபஸம்ஹார மந்த்ரத்தையும் தெரிந்துகொண்டால் அழகல்லவா? அதை யும் தாங்கள் உபதேசிக்கவேண்டும்" என்று ஸித்தாச்ரமத் திற்குப்போகும் வழியில், விச்வாமித்ரமஹர்ஷியை ராமன் கேட்டார். ராமன் ஸர்வக்ஞனாதலால், எல்லா விஷயங் களும் அவருக்குத் தெரியும். ஆகிலும் குருபதேசத்தால் க்ரஹிக்கப்பட்ட வித்யைதான் பலத்தைக்கொடுக்கும்; மற்ற வித்யைகள் பயனற்றதே என்ற தர்மத்தை லோகத்தில் ஸ்தாபனம் செய்வதற்காக, உபஸம்ஹாரமந்த்ரம் தனக்குத் தெரியாததுபோல் விச்வாமித்ரமஹர்ஷியைப் பார்த்து கேட் கிறார். மஹர்ஷியும் ராமன் கேட்டபடியே, உபஸம்ஹார மந்த்ர ரஹஸ்யத்தையும் உபதேசித்தார். அந்த மந்த்ரங்க ளுடைய விசேஷங்களை அறியவும்:—

ஸத்யகீர்த்தி, த்ருஷ்டன், ரபஸன், ப்ரதிஹாரதரம், பராங்முகம், அபாங்முகம், லக்ஷாக்ஷம், விஷமம், த்ருட நாபம், ஸுநாபம், ஜ்யோதிஷம், க்ருசனம், நைராச்யம், விமலம், யோகந்தரம், ஹரித்ரம், தைத்யம், ப்ரசமனம், சுசிர்பாஹு, மஹாபாஹு, நிஷ்குலி, விருசி, ஸார்ச்சிமாலீ, த்ருதிமாலீ, வ்ருத்திமான், ருசிரம், பித்ரு ஸௌமனஸம், விதூதம், மகரம், கரவீரகரம், தனம், தான்யம், காமரூபம், காமருசி,

ஜ்ரும்பணம், ஆவரணம், ஜ்ரும்பகம், ஸெளர்வநாபம், ஸந்தா னம்; என்ற பெயருள்ள உபஸம்ஹார மந்த்ர தேவதைகளேயும், மந்த்ர ரஹஸ்யங்களேயும் ராமனுக்கு உப தேசித்தார். ராமன் இவ்விதம் உபதேசம் செய்துகொண்டு, அந்தந்த தேவதாத்யானத்துடன் அந்தந்த மந்த்ரங்களே ஜபிக்கும் காலத்தில், அந்தந்த அஸ்த்ரதேவதைகளும் அஸ்த் ரங்களும் திவ்ய தேஹங்களோடும், ஜ்வலிக்கிற சரீரத்தோ டும், கொள்ளிக்கட்டை, புகை முதலியவைகளுக்கு ஸமான மான சரீரத்தோடு கூடினவர்களாயும், சந்த்ர ஸூர்யர்க ளுக்கு ஸமானமான சரீரத்தோடு கூடினவர்களாயும், அஞ் ஜலிபந்தத்துடன் ராமனுக்கு எதிரில் ஆவிர்ப்பவித்து, ப்ர தக்ஷிண நமஸ்காராதிகளால் ராமனே ஸந்தோஷிக்கச் செய்து, "நாங்கள் தங்களுக்கு கிங்கரர்கள், எப்படி இச்சையோ, அவ்விதம் எங்களுக்கு ஆக்ஞாபனம் செய்யலாம்" என்று சொன்னுர்கள். ராமனும் அதை அங்கீகாரம் செய்து கொண்டு, அவர்களேப் பார்த்து, "அவச்யம் தங்களுடைய ஸஹாயம் வேண்டிய காலத்தில் நான் உங்களே மனதினுல் ஸ்மரிக்கிறேன். அப்பொழுது நீங்கள் வந்தால் போதும். இப்பொழுது உங்கள் இஷ்டம் எப்படியோ அவ்விதம் சென்றுவரலாம்" என்று உத்திரவிட்டார். "நான் ஸ்மரிக் கும் காலத்திலும் வெளியில் நீங்கள் உருவத்துடன் ஸாந் நித்யத்தை அடையவேண்டும். என் மனதில் ஸந்நிஹிதர்க ளாக இருந்துகொண்டு ஸஹாயம் செய்தால் போதும்" என்று சொன்னுர். அந்த மந்த்ரதேவதைகளும் அதைக் கேட்டு, "அப்படியே செய்கிறோம்" என்று சொல்லிவிட்டு, ராமனே யும் ப்ரதக்ஷிணம் செய்துவிட்டு, யதேஷ்டமாகச் சென்றுர் கள். ராமனும் விச்வாமித்ரருடைய ஆக்ஞையினுல், லக்ஷ்மண ஸ்வாமிக்கும் அந்த உபஸம்ஹாராஸ்த்ரங்களே உபதேசித் தார். ராம லக்ஷ்மணுள் இருவர்களும் அஸ்த்ரங்களின் மூல மந்த்ரங்களேயும் அந்தந்த அஸ்த்ரங்களின் மூலமந்த்ரங்களே ஒட்டி இருக்கும் உபஸம்ஹாரமந்த்ரங்களேயும் அறிந்தவர் களாக ஆன காரணத்தினுல், மஹா தேஜஸ்விகளாக விளங்கி வந்தார்கள்.

இவ்விதம் வைபவத்தோடு கூடின ஸ்ரீராமன் ஸித்தாச்ரமத்திற்கு ஸ்மீபத்தில் ஒரே இருளடைந்த ஒரு அரண்யத்தை ஒரு மலைக்கு ஸமீபத்திலிருந்ததைப் பார்த்து, "அநேக வ்ருக்ஷங்களால் நிறம்பப்பட்டு, அபூர்வமான லதா குல்மங்களால் அலங்கரிக்கப்பட்டதாயும், அழகான மான்களாலும், பக்ஷிகளாலும் சோபிக்கப்பட்டதாயும் உள்ள அந்த வனத்தைப் பார்த்து அதை தெரிந்துகொள்ளவேண்டுமென்ற இச்சையுடையவனாக இருக்கிறேன். தங்களுடைய யக்ஞத்திற்கு விக்னம் செய்கிற ராக்ஷஸர்கள் எங்கு வருவார்கள்? தங்கள் யக்ஞம் எங்கு நடக்கும் வழக்கம்? நான் எங்கு நின்றுகொண்டு யக்ஞத்தை ரக்ஷிக்கவேண்டும். ராக்ஷஸர்களை எங்கு நின்றுகொண்டு வதம்செய்ய வேண்டும். இவைகளை எல்லாம் விவரமாக எனக்குச் சொல்லவேண்டும்" என்று விச்வாமித்ரரைப் பார்த்து ராமன் கேட்டார்.

அதற்கு விச்வாமித்ர மஹர்ஷியானவர் பதில் சொன்னதாவது :—"ராமா இது முதல் தான் ஸித்தாச்ரமம் என்று சொல்லப்படும் ப்ரதேசம். இந்த வனத்தில் பகவான் எப்பொழுதும் ஸந்நிஹிதனாக இருக்கும் காரணத்தினால், யார் எவ்விதமான தபஸ் செய்தாலும், அது உடனே பலவத்தாக ஆகிறது. அதினால் எனக்கு இந்த இடத்தில் ரொம்ப ப்ரீதி உண்டாகிறது. பகவானுடைய தேசம்தான் ஸாதுக்களால் வஸிக்கத் தகுந்த தேசமாக ஆகும். இந்த தேசத்திற்கு ஸமானமான புண்யதேசம் மற்றொன்று இல்லை. இந்த இடத்தில் அநேக யுகங்களாகவும், வருஷங்களாகவும், தேவச்ரேஷ்டனான ஸாக்ஷாத் மஹாவிஷ்ணு, தபஸ்ஸினுடைய ஸித்திக்காகவும் யோக ஸித்திக்காகவும், தான் வாமனாவதாரம் செய்வதற்கு முன்பும் அதற்குப் பிற்பாடும், இந்த இடத்தில் தபஸ்ஸைச் செய்துகொண்டு வஸித்து வந்தார்.

வாமனாவதாரம் செய்வதற்கு முன்பு மஹாவிஷ்ணுவாக இருக்கும் காலத்தில் அவருடைய பூர்வாச்ரமமாக இந்த ஆச்ரமம் விளங்கி வந்தது. ஸித்தாச்ரமம் என்று

இதற்கு பெயர் ப்ரஸித்தமாக ஏற்பட்டது. எந்த மஹத்தான தபஸ்ஸும் இந்த இடத்தில் பலித்துவிடும். வாமனுவதாரம் செய்வதற்கு முன்பு மஹாவிஷ்ணுவாக இருக்கும்பொழுது, இந்த ஆச்ரமத்தில் பகவான் லக்ஷ்மீபதி யானவர் உக்ரமான தபஸ்ஸைச் செய்து வந்தார். அந்த ஸமயத்தில் விரோசனனுடைய புத்ரனுன மஹாபலி என்ற அஸுரன், தேவதைகளையும் அவர்களுடைய லோகங்களையும் தன் வசமாக்கிக்கொண்டு, தேவலோக ராஜ்யஸ்ரீ பூராவையும் தன் மந்த்ரிகள் மூலம் பரிபால னம் செய்துவந்தான். இந்த்ரன் முதலான தேவதைகள் ராஜ் யத்தை இழந்து, மஹாபலிக்குப் பயந்து திக்கு திக்காக ஓடி அநேகவிதமான கஷ்டங்களை அனுபவித்தார்கள். இவ்வித மிருக்கும்பொழுது, அந்த மஹாபலியானவன் ஒரு யாகத்தை அனுஷ்டானம் செய்ய ஆரம்பித்தான். அக்னி முதலான தேவர்களோ அதைத் தெரிந்துகொண்டு இந்த ஆச்ரமத்தில் தபஸ் செய்துகொண்டிருந்த மஹாவிஷ்ணுவை சரண மடைந்து, 'விஷ்ணோ! விரோசனனுடைய பிள்ளையான மஹாபலி சக்ரவர்த்தி தனக்கு பலத்தை வ்ருத்தி செய்யக் கூடிய ஒரு பெரிய யாகத்தைச் செய்கிறுன். அந்த யக்ஞம் முடிவடைந்தால், தங்களாலேயும் அவனை ஜயிக்க முடியாது. அந்த யக்ஞம் ஸமாப்தி அடைவதற்கு முன்பு தேவ கார் யத்தை தாங்கள் நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும். எவ் விதத்திலாவது மஹாபலி சக்ரவர்த்தியினிடமிருந்து தேவ ராஜ்யத்தை எங்களுக்குத் திரும்ப வாங்கிக்கொடுக்கவேண்டு' மென்று ப்ரார்த்தித்தார்கள்.

இப்பொழுது ஒருலகுவான விசாரம் செய்யப்படும். அதாவது, மஹாபலி சக்ரவர்த்தியோ அஸுரனுனதினுல் யக்ஞானுஷ்டானம் அவனுக்கு எப்படி ஸம்பவிக்கும்?

"यस्यै देवतायै हविः गृहीतंस्यात् तां ध्यायेत्, वषट्करिष्यन् साक्षात् देवतां प्रीणाति"

"யஸ்யை தேவதாயை ஹவி: க்ருஹீதம் ஸ்யாத், தாம் த்யாயேத், வஷட்கரிஷ்யந், ஸாக்ஷாத் தேவதாம் ப்ரீணாதி"

"யஸ்யை தேவதாயை ஹவி: க்ருஹீதம் ஸ்யாத், தாம் த்யாயேத், வஷட்கரிஷ்யந், ஸாக்ஷாத் தேவதாம் ப்ரீணாதி."

என்ற ச்ருதியால் இந்த்ரன் முதலான தேவர்களுக்குள் எந்த தேவதைக்கு புரோடாசம் முதலான ஹவிஸ்ஸை அக்னி முகமாக அர்ப்பணம் செய்கிருனே அப்பொழுது வஷட் என்று சொல்லிக்கொண்டு அந்த தேவதையை மனதினுல் த்யானம் செய்துகொள்ள வேண்டும். அப்படியானுல்தான் அந்த தேவதையை த்ருப்தி செய்து வைக்கிருன்; என்ற தாத்பர்யம் வெளியாகிறபடியால், அந்தந்த தேவதையை த்யானம் செய்துகொண்டு அந்தந்த தேவதையின் மந்த்ரத்தினுல் அந்தந்த தேவதையை உத்தேசித்து அந்தந்த ஹவிஸ்ஸை அக்னி முகமாகக் கொடுப்பதே யாகம் என்று சொல்லப்படும். அப்படி யிருக்கும்பொழுது தேவ சத்ருவான மஹாபலிக்கு எவ்விதம் யாகம் ஸம்பவிக்கும். தேவதைகளெல்லோரும் இவனுல் விரட்டியடிக்கப்பட்டு திக்கு திக்காக ஓடி ரொம்பவும் கஷ்டப்படுகிருர்களே! ஆனுல் இந்த்ரன் முதலான தேவதைகளென்ருல் இந்த்ராய, அக்னயே, என்று நான்காவது வேற்றுமையோடு கூடின (சதுர்த்தி அந்தமான) சப்தம்தான் தேவதைகள். தேவதைகள் என்ருல் சப்த ஸ்வரூபம். அன்னியில் கை கால்களோடு கூடின உருவமுள்ள ப்ராணிகளை தேவதைகளாக ஒப்புக்கொள்ள முடியாது. உருவமுள்ள கை கால்களோடுகூடின இந்த்ரன் முதலான தேவதைகள் தான் மஹாபலி சக்ரவர்த்தியினுல் விரட்டப்பட்டவர்கள். அவர்கள் மஹாபலிக்கு விரோதிகளாஞலும் வேதத்திலுள்ள சதுர்த்தி அந்தமான சப்தங்கள் மஹாபலிக்கு விரோதி அல்ல. அந்த சப்தம்தான் யாகத்தில் ப்ரதிபாதிக்கப்படுகிற தேவதைகள் என்று சொன்னேம். மஹாபலியும் வைதிக சிரோமணி தான். ப்ரஹ்லாத ஆழ்வாருடைய பேரனல்லவா? பரம பாகவத சிகாமணி. ஆகையால் சதுர்த்தி அந்தமான சப்

தத்தையே ஸ்வரூபமாகக்கொண்ட தேவதைகளை உத்தேசித்து மஹாபலி சக்ரவர்த்தியினுடைய யாகமும் ஸம்பவிக்கலாம் என்று ஸமாதானம் சொல்லலாமோ என்றால், அது ஸரியான ஸமாதானமாக ஆகாது. சதுர்த்தி அந்தமான சப்தமே தேவதை என்று சொல்வதும் ரொம்பவும் பிசகானதுதான். சப்தம் அசேதனமானதால், அதற்கு ப்ரீதி என்பது உண்டா? அது ப்ரீதி அடைந்து, அதன்மூலமாக யஜமானனுக்கு ஒரு பலன் ஏற்பட்டது, என்பதுதான் ஸம்பவிக்குமா? அசேதனமான பதார்த்தத்திற்கு பலத்தைக் கொடுக்கும் சக்தி இல்லாததினால், கேவலகர்மாவே பலத்தைக் கொடுக்கிறது என்று வைத்துக்கொள்ள முடியாமல், கர்மபலத்தைக் கொடுக்கிறவரான வேறானதாயுள்ள ஈச்வரனொருவனை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகையால் **वज्रहस्तः पुरन्दरः** (வஜ்ரஹஸ்த: புரந்தர:) (வஜ்ரஹஸ்த: புரந்தர:) என்ற அர்த்த வாதத்தை அனுஸரித்து, ஜடமான சதுர்த்தி அந்தமான சப்தத்திற்கும், ஜடமான க்ரியைக்கும், வேறாக அந்த ஸத்கர்மாவினால் த்ருப்தியை அடைகிற சேதனமான ஒரு தேவதையை **புரந்தர:** என்ற பெயருடனும், வஜ்ராயுதத்தைக் கையில் வைத்துக்கொண்டதாயுமுள்ள ஒரு தேஹத்துடன் கூடின தேவதையை அவசியம் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அப்படியானால்தான் அந்த தேவதை சேதனமானதினால் யாகத்தினால் அந்த தேவதை ப்ரீதி அடைந்தது என்று சொல்லலாம். அந்த தேவதையின் ப்ரீதிமூலமாக யஜமானனுக்கு பலஸித்தி ஏற்படுகிறதென்றும் சொல்லலாம். ஆனால் தேவதைகளுக்கு விக்ரஹத்தை (தேஹத்தை) ஒப்புக்கொண்டால் ஒரே காலத்தில் அநேக யாகங்கள் நடக்கும்பக்ஷத்தில், இந்த்ரன் முதலான தேவதைகள், ஒரு தேஹத்துடன் அநேக யாகங்களில் எப்படி ஸாந்நித்யத்தை அடைய முடியும் என்று சங்கை (ஸம்சயம்) ஏற்படலாம். ஆகிலும் தேவதைகளுடைய விஷயத்தில் இவ்விதமான சங்கைக்கு அவகாசமேயில்லை. தேவதைகள் திவ்ய சக்தியோடு கூடிக்

கொண்டிருக்கும் காரணத்தால், ஒரே காலத்தில் அநேக சரீரங்களைப் பரிக்ரஹம் செய்துகொண்டு, எல்லா யாகங்களி லும் ஒரே ஸமயத்தில் ஸாந்நித்யத்தை அடையலாம். இது தான் மீமாம்ஸகர்களுடைய ஸித்தாந்தமாகும். சதுர்த்தி அந்த மான சப்தம் தேவதைகளல்ல. தேவதைகளுக்கு சரீரம் உண்டு. **वज्रहस्तः पुरन्दरः** (வஜ்ர ஹஸ்த: புரந்தர:) (வஜ்ரஹஸ்த: புரந்தர:) என்ற அர்த்தவாத வாக்யமே இதில் ப்ரமாணமாக ஆகும். அவ்விதமான தேவதைகளோ மஹாபலி சக்ரவர்த்திக்கு விரோதிகள். விரோதிகளான தேவதைகளை உத்தேசித்து மஹாபலி யாகம் செய்ய ப்ரஸக்தி உண்டா? இவ்விதமிருக் கும்பொழுது, மஹாபலி யாகம் செய்யும் காலத்தில், ஸித் தாச்ரமத்தில் எல்லா தேவதைகளும் மஹாவிஷ்ணுவை சரண மடைந்து, "மஹாபலி யாகம் செய்கிருன். அந்த யாகம் முடி வடைவதற்குள், தேவ ராஜ்யத்தை எங்களுக்கு வாங்கிக் கொடுக்கவேண்டும். யாகம் முடிவடைந்துவிட்டால், தங்க ளாலேயும் மஹாபலியை ஜயிக்கமுடியாது" என்று ப்ரார்த் தித்தார்கள் என்பது எப்படி ஸமஞ்ஜஸமாகும்.

மேற்சொன்னதற்கு ஸமாதானம் என்னவென்ருல்:-கர்ம தேவர்கள், ஆஜான தேவர்கள் என்று இருவகையாக தைத்தி ரீய உபநிஷத்தில் தேவர்களை பிரித்துச் சொல்லப்பட்டிருக் கிறது. பூலோகத்தில் அக்னிஹோத்ரம் முதலான ஸத்கர்மாக் களை அனுஷ்டானம் செய்து அதனுல் தேவபாவத்தை அடைந் வர்கள் கர்ம தேவர்கள் என்று சொல்லப்படுவார்கள். ஆஜான தேவாள் என்றவர்களோ ஆதிஸ்ருஷ்டியிலேயே ஏற்பட்டவர் கள். அந்த ஆஜான தேவர்கள்தான் இந்தமாதிரி யக்ஞங்களில் சொல்லப்பட்ட மந்த்ரங்களின் அர்த்தபூதமான தேவதை கள். வேதத்திலுள்ள சப்தமோ நித்யமாக ஆகவேண்டுமே யானுல், நித்யமான சப்தத்திற்கு நித்யமான பொருளுடன் நித்யமான ஸம்பந்தம் ஏற்பட்டால்தான் முடியும்.

'नित्ययोः शब्दार्थयोः नित्य संबन्धः वेदो नित्यः

𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍋𑌃 𑌶𑌬𑍍𑌦𑌾𑌰𑍍𑌥𑌯𑍋𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯 𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌃 𑌵𑍇𑌦𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃

நித்யயோ: சப்தார்தயோ: நித்ய ஸம்பந்த: வேதோ நித்ய:

என்று சொல்லப்படும். ஆகையால் யக்ஞ மந்த்ரங்களின் பொருளாகிய தேவர்கள் என்பவர்கள் ஆஜான தேவர்கள் என்ற நித்ய தேவர்கள்தான். கர்ம தேவர்கள் அல்ல. கர்மதேவர்களுக்கு முன்பாகவே ஆஜான தேவர்கள் எவ்வளவோ ப்ராசீனமான (ஆதிகாலமான) காலத்திலிருந்தே இருந்துவருகிறார்கள். அஸுரர்களுக்கு கர்மதேவர்களிடம்தான் த்வேஷமே தவிர, ஆஜான தேவர்களிடம் த்வேஷமே இல்லை. பூலோகத்தில் வேதாந்த விசாரம் செய்கிறவர்களைக் கெடுக்கிற தேவ கோடிகள் கர்ம தேவர்கள்தான். பரோத்கர்ஷ அஸஹனம் என்பது (பிறருடைய மேன்மையில் பொறாமை) ஆஜான தேவர்களிடம் கொஞ்சமேனும் கிடையாது. देवाः अयजन्त (𑌦𑍇𑌵𑌾𑌃 𑌅𑌯𑌜𑌨𑍍𑌤) (தேவா: அயஜந்த) என்று தேவர்களும் யக்ஞும் செய்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் தேவா: என்ற பதத்திற்கு கர்ம தேவர்கள் என்றுதான் அர்த்தம் சொல்லவேண்டும். ஆஜான தேவர்கள் என்பவர்கள், தங்களுக்கு பூஜ்யமான வேறு தேவர்கள் இல்லாமலிருக்கும்பொழுது, அவர்கள் எப்படி யாகம் செய்யமுடியும்? கர்மதேவர்களோ, தங்களுக்கு மேலான ஆஜான தேவர்களை உத்தேசித்து யாகம் செய்யலாம். அது உசிதம் ஆகும். ஆகையால் ஆஜான தேவர்கள் கர்ம தேவர்கள் என்று இருவகையாக தேவர்களை ஒப்புக்கொள்ளவேண்டும். கர்ம தேவர்கள்தான் அஸுரர்களுக்கு விரோதிகளாவார்கள். ஆஜான தேவர்கள் ஒருவருக்கும் விரோதிகளாகமாட்டார்கள். யக்ஞத்தினுடைய மந்த்ரங்களுக்கு அர்த்தபூதர்களான தேவதைகள் ஆஜான தேவர்களே. இந்த ஆஜான தேவர்களுக்குத்தான் திவ்ய ஐச்வர்ய சக்தி இருப்பதினால், நினைத்த மாத்ரத்தில் அநேக சரீரங்களை எடுத்துக்கொண்டு,

कर्मणि विरोध इति चेन्न अनेक प्रतिपत्तेर्दर्शनात्

𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌵𑌿𑌰𑍋𑌧 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨 𑌅𑌨𑍇𑌕 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍇𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍

கர்மணி விரோத இதி சேந்ந அநேக ப்ரதிபத்தேர்தர்சநாத்

என்ற ந்யாயத்தை அனுஸரித்து எல்லா யக்ஞங்களிலும் ஒரே ஸமயத்தில் ஸாந்நித்யத்தை அடையக்கூடிய சக்தியுண்டு. இந்த ஆஜான தேவர்கள்தான் எல்லா யாகங்களிலும் உத்தேச்யமான தேவதைகளாகுவார்கள். ஆகையால் மஹாபலி சக்ரவர்த்திக்கு ஆஜான தேவர்களிடம் விரோதமில்லாததினால், 'மஹாபலி சக்ரவர்த்தியும் யாகம் செய்தான்' என்பது உசிதம்தான்.

ஆனால், ஸித்தாச்ரமத்தில் வந்து அங்கு தபஸ்செய்துகொண்டிருந்த மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்து ஸ்வர்க்கலோகத்தை தங்களுக்குத் திருப்பி வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்த தேவதைகள் கர்மதேவர்களா? ஆஜான தேவர்களா? கர்ம தேவர்களுக்கு ஸ்வர்க்கம் ஏது? என்று யோஜித்தாலோ, ஆஜான தேவர்கள்தான் விஷ்ணுவை ப்ரார்த்தித்துக்கொண்டது. அதில் ஸந்தேஹமே இல்லை. ஆகிலும், ஆஜான தேவர்கள் வஸிக்கும் ஸ்வர்க்கலோகத்தில் கர்ம தேவர்களுக்கும் ஒரு தேசம் (ஒரு பாகம்) ஏற்பட்டதினால், அந்த இடம்தான் அஸுரர்களால் அபஹரிக்கப்பட்டது என்பதை அறியவும். அதை மீட்டுவைப்பது ஆஜான தேவர்களுடைய கடமையாகும். ஏனென்றால், பூலோகத்தில் ஆஜான தேவர்களை நம்பி கர்மாக்களைச் செய்து பிறகு ஆஜான தேவர்களாலேயே தங்களுக்கு என்று ஸ்வர்க்கலோகத்தில் தனியாகக் கொடுக்கப்பட்ட இடத்தை அஸுரர்கள் அபஹரித்துக் கொண்டுபோகும் பொழுது, ஆஜான தேவர்கள் அதற்காக முக்ய ப்ரயத்னம் செய்து அவர்களுக்கு உபகாரம் செய்யாத போனால், ஆஜான தேவர்களை உத்தேசித்து, பூலோகத்தில் ஸோமயாகம் முதலிய கர்மாக்கள் எவ்விதம் நடக்கும்? அதற்கு ப்ரஸக்தியே இல்லாமல் போய்விடும். ஆகையால் ஸ்வர்க்கலோகத்தைத் திரும்ப வாங்கிக்கொடுக்கவேண்டிய கடமை ஆஜான தேவர்களுக்குத்தான் என்பதை அறியவும்.

இல்லாவிடில் வேறுவிதமான ஸமாதானத்தை அறியவும். அதாவது:—மஹாபலி செய்த யக்ஞமானது இந்த்ரன் முதலான தேவதைகளை ஆராதிக்கிற யக்ஞமல்ல. அப்படிச் சொன்னால்தானே மேற்சொன்ன தோஷங்களுக்கு அவகாசம் ஏற்படும். ஆனாலோ, பகவதாராதனரூபமான ஒரு அபூர்வமான யாக விசேஷம்தான் மஹாபலி சக்ரவர்த்தியினால் செய்யப்பட்டது. இந்த்ராதி தேவர்களுக்கு அந்த யாகத்தில் கொஞ்சமேனும் ஸம்பந்தமே கிடையாது. அந்த யாகம் கேவலம் விஷ்ணுதைவத்யம். மஹாபலி சக்ரவர்த்தியானவர் ப்ரஹ்லாத ஸ்வாமியினுடைய பௌத்ரனானதினால், விஷ்ணுபக்தியில் ரொம்பவும் சிறந்தவர். ஆகையால், மஹாவிஷ்ணுவை த்ருப்தி செய்துவைக்கிறதற்கு அவர் யக்ஞம் செய்தது ந்யாயமே. ஆனால் மஹாவிஷ்ணுவானவர் பின்பு வாமனாவதாரம் செய்து இந்த யக்ஞத்திற்கு விக்னம் செய்யப்போகிறாரே; தன் பக்தனுடைய யக்ஞத்தை தானே கெடுக்கிறாரே; அது அவருக்குத்தான் தர்மமாகுமா என்று கேட்கக்கூடாது. மஹாபலியும் தன் பக்தன்தான். இந்த்ராதி தேவர்களும் தன் பக்தர்கள்தான். தன் பக்தர்களுக்குள் ஒரு பக்தனுக்கு மற்றொரு பக்தன் கெடுதலைச் செய்தால், அது பகவானுக்கு ஸஹ்யமாக ஆகாது. ஒரு குடும்பத்தில் ஒரு மனிதனுக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு. ஒரு பிள்ளை மற்றொரு பிள்ளையை த்வேஷித்துக்கொண்டால், பிதாவுக்கு அது ஸம்மதமாகுமா? த்வேஷிக்கிற புத்ரனை அந்த பிதா சிக்ஷித்ததற்காக அவன் அவருக்கு புத்ரன் இல்லை என்று ஆகிவிடுமா? அதுபோல் தன்னை அண்டின தேவர்களுக்கு விரோதியான மஹாபலி முதலான அஸுரர்களை மஹாவிஷ்ணுவானவர் சிக்ஷித்ததற்காக மஹாபலி விஷ்ணு பக்தன் இல்லை என்று ஆகாது. பரமபக்தன்தான். இருவர்களும் அன்யோன்ய பாவத்துடன் இருக்கவேண்டுமென்பதே பகவானுடைய முக்ய தாத்பர்யமாகும். தனக்கு அபசாரத்தைச் செய்தாலும் பகவான் மன்னித்துக்கொண்டு விடுவார். தன் பக்தனுக்கு அபசாரத்தைச் செய்தால், அது பகவானால் ஸஹிக்கமுடியாது,

मम मद्भक्त भक्तेषु, प्रीतिरभ्यधिका भवेत्

𑌮𑌮 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤 𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍁, 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌰𑌭𑍍𑌯𑌧𑌿𑌕𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍

மம மத்பக்த பக்தேஷு, ப்ரீதிரப்யதிகா பவேத்

என்று பகவானுலேயே சொல்லப்பட்டிருக்கிறது. "என்னுடைய பக்தனிடம் யாருக்கு பக்தி இருக்கிறதோ, அவர்களிடம் எனக்கு ப்ரீதி அதிகமாக ஏற்படுகிறது" என்ற தாத்பர்யமும் ஏற்படுகிறபடியால், "என் பக்தனிடத்தில் யாருக்கு த்வேஷம் ஏற்படுகிறதோ அவன் என் பக்தனுனுலும் அவனிடத்தில் எனக்கு ப்ரீதி அவ்வளவு இல்லைதான்" என்ற தாத்பர்யத்தை அறியவும். ஆகையால் எல்லாம் ஸமஞ்ஜஸம்தான். மஹாபலி சக்ரவர்த்தி யாகம் செய்ததும் ஸரிதான். அந்த யாகம் விஷ்ணுதைவத்யம்தான். அந்த யாகம் முடிவதற்கு முந்தி மஹாபலியை ஜயித்து தேவர்களுக்கு ராஜ்யம் கிடைத்தால்தான் முடியும்; யாகம் ஸமாப்தி ஆகிவிட்டால் தேவர்களுக்கு ராஜ்யம் போய் விடும். அதற்காக அந்த யாகம் முடிவதற்கு முன்பே உபாயத்தை உபயோகப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன், இங்கு ஸித்தாச்ரமத்தில் மஹாவிஷ்ணு தபஸ்ஸைச் செய்து கொண்டிருக்கும் காலத்தில், இந்த்ரன் முதலான தேவர்கள் வந்து சரணமடைந்து,

असमाप्ते क्रतौतस्मिन्, स्वकार्यं अभिपद्यतां ।

𑌅𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑍇 𑌕𑍍𑌰𑌤𑍌𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍, 𑌸𑍍𑌵𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌅𑌭𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑌾𑌂 ।

அஸமாப்தே க்ரதௌதஸ்மிந், ஸ்வகார்யம் அபிபத்யதாம் ।

என்ற வாக்யத்தால், "மஹாபலியினுடைய யாகம் முடிவதற்கு முன்பே தங்களுடைய கார்யத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டு" மென்று சொன்னுர்கள். பகவானுக்கு ஸொந்தத்தில் ஒரு கார்யமுமில்லை. பக்தர்களுடைய கார்யமே தன் கார்யமாக ஆகும். அப்படி பகவானுடைய

அபிப்ராயத்தை யறிந்து தேவர்களும் स्वकार्यं अभिपद्यतां (𑌸𑍍𑌵𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌅𑌭𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑌾𑌂) (ஸ்வகார்யம் அபிபத்யதாம்) என்று பகவானை உத்ஸாஹப்படுத்தினார்கள்.

மஹாபலி சக்ரவர்த்தி தார்மிகனானதினால் அவனை எப்படி நிக்ரஹம் செய்வது என்றதில் உபாயத்தை தேவர்கள் சொல்கிறார்கள். அதாவது,

ये चैनं अभिवर्तन्ते, याचितारः इतस्ततः ।
यच्च, यत्र यथावच्च, सर्वं तेभ्यः प्रयच्छति ॥
स त्वं सुरहितार्थाय, मायायोगं उपाश्रितः ।
वामनत्वं गतो विष्णो, कुरुकल्याणं उत्तमं ॥

𑌯𑍇 𑌚𑍈𑌨𑌂 𑌅𑌭𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇, 𑌯𑌾𑌚𑌿𑌤𑌾𑌰𑌃 𑌇𑌤𑌸𑍍𑌤𑌤𑌃 ।
𑌯𑌚𑍍𑌚, 𑌯𑌤𑍍𑌰 𑌯𑌥𑌾𑌵𑌚𑍍𑌚, 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 ॥
𑌸 𑌤𑍍𑌵𑌂 𑌸𑍁𑌰𑌹𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌯, 𑌮𑌾𑌯𑌾𑌯𑍋𑌗𑌂 𑌉𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 ।
𑌵𑌾𑌮𑌨𑌤𑍍𑌵𑌂 𑌗𑌤𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋, 𑌕𑍁𑌰𑍁𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌂 𑌉𑌤𑍍𑌤𑌮𑌂 ॥

யே சைநம் அபிவர்தந்தே, யாசிதார: இதஸ்தத: ।
யச்ச, யத்ர யதாவச்ச, ஸர்வம் தேப்ய: ப்ரயச்சதி ॥
ஸ த்வம் ஸுரஹிதார்தாய, மாயாயோகம் உபாச்ரித: ।
வாமநத்வம் கதோ விஷ்ணோ, குருகல்யாணம் உத்தமம் ॥

என்றதினால் "மஹாபலி சக்ரவர்த்தியானவர் यत्र (𑌯𑌤𑍍𑌰) (யத்ர) பொருள், வாஹனம் முதலான எந்த வஸ்துக்களுக்குள் यत् (𑌯𑌤𑍍) (யத்) எதை याचितारः (𑌯𑌾𑌚𑌿𑌤𑌾𑌰𑌃) (யாசிதார:) யாசிக்கிறவர்களாகக் கொண்டு इतस्ततः (𑌇𑌤𑌸𑍍𑌤𑌤𑌃) (இதஸ்தத:) இங்கும் அங்குமுள்ள தேசங்களிலிருந்தும் एनं (𑌏𑌨𑌂) (எநம்) இந்த மஹாபலியை येच (𑌯𑍇𑌚) (யேச) எவர்கள் अभिवर्तन्ते (𑌅𑌭𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇) (அபிவர்தந்தே) அடைகிறார்களோ, तेभ्यः (𑌤𑍇𑌭𑍍𑌯𑌃) (தேப்ய:) அவர்களின் பொருட்டு सर्वं (𑌸𑌰𑍍𑌵𑌂)

(ஸர்வம்)ஸமஸ்தமான வஸ்துவையும் यथावत् (யதாவத்) (யதாவத்) ஸத்காரம்செய்து பூஜையுடன், प्रयच्छति (ப்ரயச்சதி) (ப்ரயச்சதி) கொடுக்கவே கொடுப்பான். இந்த யாகம் என்ற ஸத்கர் மாவை அனுஷ்டித்துவரும் மத்தியில், எங்கெந்த தேசத்தி லிருந்து எங்கெந்த ஜாதிகள் எங்கெந்த கஜானுவிலுள்ள எங்கெந்த வஸ்துவை வாங்கிக்கொண்டு போகவேண்டு மென்ற எண்ணத்துடன் யாசிக்கிறவர்களாகக் கொண்டு, இந்த மஹாபலியினிடம் வருகிருர்களோ, அந்தந்த வஸ் துவை அவர்களுக்கு வெகுமானத்துடன் கொடுப்பதாக யாகசாலையினுடைய வாசலில் ப்ரசுரம் செய்திருக்கிறுன். ஆகையால் தாங்களும் தேவர்களுடைய ஹிதத்தை உத்தே சித்து, மாயாபலத்தை ஆச்ரயித்து, அதாவது தாங்கள் மஹா விஷ்ணுதான் என்பதை அவன் அறியாமலிருக்கும்படியான சக்தி விசேஷத்துடன் வாமனரூபியாக ஸ்வரூபத்தை யெடுத்துக்கொண்டு, महाविष्णो (மஹாவிஷ்ணோ) (மஹாவிஷ்ணோ) ஹே, மஹாவிஷ்ணுவே! எங்களுக்கு நன்மையைச் செய்ய வேண்டும். ஔதார்யம் என்ற குணமானது மஹாபலியி னிடம்தான் அஸாதாரணமாக இருந்துவருகிறது. தாங்கள் வாமன வேஷதாரியாக யக்ஞவாடம் சென்று யாசனை என்ற வ்யாஜத்தால் தேவர்களுடைய ராஜ்யத்தை அவனிடமிருந்து அபஹரித்து, தேவர்களாகிய எங்களிடம் கொடுக்கவேண் டும். வாமன ரூபமானது அத்யாச்சர்யத்தை உண்டுபண் ணக்கூடியதாகையால், அந்த ரூபத்துடன் தாங்கள் யாசித் தால், அதை அவச்யம் கொடுத்து அந்தக் கார்யத்தை முடித்துக் கொடுப்பதில் யஜமானனுக்கு ஒரு பெரிய ஆவலை உண்டுபண்ணும்" என்று எண்ணி வாமன வேஷத் தைப் போட்டுக்கொள்ளும்படி தேவர்கள் பகவானை ப்ரார்த்தித்துக்கொண்டார்கள்.

இந்த ஸமயத்தில் காச்யப ப்ரஜாபதியும் அதிதி அம்மா ளுடன், ஆயிரக்கணக்கான வருஷங்கள் தபஸ்ஸைச் செய்துவிட்டு, தபஸ்ஸினுல் த்ருப்தி அடைந்து தபஸ்

ஸுக்கு வரனைக் கொடுக்கும் விஷயத்தில் உத்ஸாஹமுள்ள மஹாவிஷ்ணுவை ஸ்தோத்ரம் செய்தார்.

सोऽकामयत बहु स्यां प्रजायेय । सतपो तप्यत॥

𑌸𑍋𑌽𑌕𑌾𑌮𑌯𑌤 𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯 । 𑌸𑌤𑌪𑍋 𑌤𑌪𑍍𑌯𑌤 ॥

ஸோகாமயத பஹு ஸ்யாம் ப்ரஜாயேய ஸதபோ தப்யத ॥

என்ற ச்ருதியை அனுஸரித்து மஹாவிஷ்ணுவானவர், ஜகத்தை ரக்ஷிப்பதிலேயே சிந்தையோடு கூடினவராகி, இந்த ஸித்தாச்ரமத்தில் வெகுகாலம் அன்யர்களுடைய கண்களுக்குத் தென்படாத ஸ்வரூபத்தோடு வாஸம்செய்து வந்தார். இதை யறிந்த காச்யப ப்ரஜாபதியானவர் அதிதி என்ற தன்னுடைய தர்மபத்னியுடன் அந்த மஹாவிஷ்ணுவையே தான் புத்ரனாக அடையவேண்டுமென்ற ஆசையால், மஹா விஷ்ணுவினுடைய ஆராதன ரூபமான ஒரு வ்ரதத்தை தேவமான ரீதியாக ஆயிரம் வருஷங்கள் அனுஷ்டானம் செய்து, அந்த வ்ரதத்தினுடைய ஸமாப்தி காலத்தில் காச்யப ப்ரஜாபதியினுடைய மனோரதத்தை பூர்த்தி செய்ய வேண்டுமென்ற உத்ஸாஹத்துடன் ப்ரஸன்னராகி ப்ரத்யக்ஷமாக தர்சனம் கொடுத்த மஹாவிஷ்ணுவை காச்யப ப்ரஜாபதியானவர் அதிதி யென்ற தன்னுடைய தர்மபத்னியோடுகூட ஸ்தோத்ரம் செய்தார். அந்த ஸமயத்தில்தான் இந்த்ரன் முதலான தேவர்களும் மஹாபலியினுடைய யாக வ்ருத்தாந்தத்தை விஷ்ணுவினிடம் சொல்லி ஸ்வர்க்க ராஜ்யத்தை யாசனை என்ற வ்யாஜத்தால் தங்களுக்கு திரும்ப வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்தார்கள். காசயப ப்ரஜாபதி செய்த ஸ்தோத்ரத்தையோ அறியவும் :—

तपोमयं तपोराशिं तपोमूर्तिं तपात्मकं ।
तपसा त्वां सुतप्तेन पश्यामि पुरुषोत्तमं ॥
शरीरे तव पश्यामि जगत्सर्वं इदं प्रभो ।
त्वं अनादिः अनिर्देश्यः त्वामहं शरणं गतः ॥

𑌤𑌪𑍋𑌮𑌯𑌂 𑌤𑌪𑍋𑌰𑌾𑌶𑌿𑌂 𑌤𑌪𑍋𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌂 𑌤𑌪𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 ।
𑌤𑌪𑌸𑌾 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌸𑍁𑌤𑌪𑍍𑌤𑍇𑌨 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 ॥
𑌶𑌰𑍀𑌰𑍇 𑌤𑌵 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌜𑌗𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑌭𑍋 ।
𑌤𑍍𑌵𑌮𑌨𑌾𑌦𑌿𑌃 𑌅𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌃 𑌤𑍍𑌵𑌾𑌮𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌤𑌃 ॥

தபோமயம் தபோராசிம் தபோமூர்திம் தபாத்மகம் ।
தபஸா த்வாம் ஸுதப்தேந பச்யாமி புருஷோத்தமம் ॥
சரீரே தவ பச்யாமி ஜகத்ஸர்வம் இதம் ப்ரபோ ।
த்வம் அநாதி: அநிர்தேச்ய: த்வாமஹம் சரணம் கத: ॥

என்று ஸ்தோத்ரம் செய்தார். "ஹே, மஹாவிஷ்ணே! மஹா தபஸ்ஸினால் ஆராதிக்கத் தகுந்த மூர்த்தியே உன்னுடைய மூர்த்தி ஆகும். மஹா தபஸ்ஸுக்குப் பலத்தைக் கொடுக்கிறவனும் நீயே. ஞானமே உன்னுடைய பரமார்த்த ஸ்வரூபம். வ்யவஹாரதசையில் ஞானத்தை குணமாக உடைத்தானவன். பத்தன், முக்தன் என்று இருவகைப்பட்ட ஜீவர்களுக்கு விலக்ஷணமான வைபவத்தோடு கூடினவன். உன்னுடைய தர்சனத்தைத் தவிர, வேறு ப்ரயோஜனத்தை எதிர்பார்க்காமல், ச்ரத்தையுடன் அனுஷ்டித்த தபஸ்ஸினால் உன்னை நான் இப்பொழுது ப்ரத்யக்ஷமாக தர்சனம் செய்கிறேன். ஸர்வகர்ம ஸமாராத்யனையும், ஸர்வகர்மபலப்ரதனையும், ஞானஸ்வரூபியாயும், ஸமஸ்த ஹேயப்ரத்யநீகஞான ஆநந்தாதி அபரிமிதகுணவானையும், அக்காரணத்தினாலேயே ஸர்வ ஜகத் விலக்ஷணனையும் உள்ள உன்னை நான் தர்சனம் செய்கிறேன். இதுதான் என்னுடைய தபஸ்ஸுக்கு முக்யமான ப்ரயோஜனம் என்றும் கருதுகிறேன். இத்துடன், சேதனம், அசேதனம் என்று இருவகைப்பட்ட ஸகல ஜகத்தையும் உன்னுடைய சரீரத்தில் பார்க்கின்றேன். உன் சரீரத்திலேயே ஸகல ஜகத்தும் அடங்கினதாக,

पश्यामि देवान् तव देव देहे सर्वांस्तथा भूतविशेषसंघान् ।
ब्रह्माणमीशं कमलासनस्थं ऋषींश्च सर्वान् उरगांश्च दिव्यान् ॥

𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌤𑌵𑌦𑍇𑌵 𑌦𑍇𑌹𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾 𑌭𑍂𑌤
𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑌂𑌘𑌾𑌨𑍍 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌮𑍀𑌶𑌂 𑌕𑌮𑌲𑌾𑌸𑌨𑌸𑍍𑌥𑌂 𑌋𑌷𑍀𑌂𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍
𑌉𑌰𑌗𑌾𑌂𑌶𑍍𑌚 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑍍 ॥

பச்யாமி தேவாந் தவதேவ தேஹே ஸர்வாம்ஸ்ததா பூதவிசேஷஸங்காந் ॥
ப்ரஹ்மாணமீசம் கமலாஸநஸ்தம் ரிஷீம்ச்ச ஸர்வாந் உரகாம்ச்ச திவ்யாந் ॥

என்ற பகவத்கீதா வசனமும் சொல்கிறது. அத்துடன் சித்தான ஜீவனேயும், அசித்தான ஜகத்தையும் உன்னுடைய சரீரமென்றே சொல்லியிருப்பதால், சிதசித் சரீரனே நீ என்று தீர்மானித்து, ஸர்வ ஜகத்தையும் உன்னுடைய சரீரமாகவே பார்க்கிறேன். நீ அநாதி, உத்பத்தி இல்லாதவன். நீ அநித்தேச்யன். இவ்வளவுதான் என்று சப்தத்தால் சொல்ல முடியாதவன். அதாவது அப்ரமேயன். இவ்விதம் மஹிமை பொருந்திய உன்னே நான் சரணமடைகிறேன்" என்று காச்யப ப்ரஜாபதிசெய்த ஸ்தோத்ரத்தின் தாத்பர்யமாகும். காச்யப ப்ரஜாபதி செய்த ஸ்தோத்ரமோ ஸ்ரீமத் ராமாயணத்தில் பாலகாண்டத்தில் 29-வது ஸர்க்கத்தில் 12, 13-வதான இரண்டு ச்லோகங்களுமாகும். இந்த ச்லோகங்களால் ஸ்ரீராமபிரான் மஹாவிஷ்ணுவே என்று ப்ரத்யக்ஷமாக விளக்கி இருக்கிருர். ஆகையினுலேயே, ஸ்ரீமத் ராமாயணத்தை விஷ்ணுபரமாகத்தான் அர்த்தம் சொல்லவேண்டுமென்று நேரிடுகிறது. புத்ரனில்லாதவர்களுக்கு புத்ரனைக் கொடுக்கும் பெரிய சிந்தாமணியாக இந்த இரண்டு ச்லோகங்களும் ஆகும். இந்த இரண்டு ச்லோகங்களேயும் ப்ரதி தினம் புருஷனே, அவன் பத்னியோ யாராஞலும், விஷ்ணுவையே த்யானம் செய்துகொண்டு யதா சக்தி ஜபம் செய்துவந்தார்களேயாஞல், விஷ்ணுவுக்கு ஸமானமான புத்ர லாபத்தை அவர்கள் அடையலாம் என்பது ஸித்தமாகிறது.

இவ்விதம் காச்யப ப்ரஜாபதியினுடைய ஸ்தோத்ரத்தைக் கேட்டு மஹாவிஷ்ணு பரம ஸந்தோஷத்தை அடைந்தார். 'வரனையும் நீர் கேட்டுக்கொள்ளலாம்' என்று சொன்னுர். காச்யபப்ரஜாபதியும் பகவானைப் பார்த்துச் சொன்னதாவது:-

“ ஹே, விஷ்ணோ ! என்னுடைய ப்ரார்த்தனை ப்ரகாரமோ, தேவர்களுடைய ப்ரார்த்தனை ப்ரகாரமோ, என் தர்மபத்னியான அதிதியினுடைய ப்ரார்த்தனை ப்ரகாரமோ, அதிதியினிடம் நீ புத்ரனாக ஆவிர்பவிக்கவேண்டும். இந்த்ரனுக்கு நீ ப்ராதாவாகவும் ஆகவேண்டும். மஹாபலியினால் தேவ ராஜ்யம் அபஹரிக்கப்பட்டு கஷ்டப்படுகிற தேவர்களுக்கு நீ அவச்யம் ஸஹாயம் செய்யவேண்டும். இந்த ஆச்ரமம் ஸித்தாச்ரமம் என்று உன்னுடைய அனுக்ரஹத்தால் ப்ரஸித்தியை அடையவேண்டும். என்னுடைய தபஸ்ஸானது ஸித்தமாகிவிட்டது என்பதற்கு அடையாளமாக என்னுடைய தர்மபத்னியான அதிதியினிடம் புத்ரனாக நீ அவச்யம் ஆவிர்ப்பவிக்கவேண்டும். இந்த தேசமும் ஸித்தாச்ரமம் என்று பெயரை அடையவேண்டும். இந்த ஆச்ரமத்தை விட்டு நீ எழுந்திரு. சீக்ரம் தேவகார்யத்தைச் செய் ” என்று ப்ரார்த்தித்துக்கொண்டார். பகவானும் உடன்,

अथ त्रिष्णुः महातेजाः अदित्यां समजायत ।
वामनं रूपमास्थाय वैरोचनिं उपागमत् ॥
त्रीन् क्रमान् अथ भिक्षित्वा प्रतिगृह्य च मानदः ।
आक्रम्य लोकान् लोकात्मा सर्वभूतहितेरतः ॥
महेन्द्राय पुनः प्रादात् नियम्य बलिं ओजसा ॥

𑌅𑌥 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾𑌃 𑌅𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌂 𑌸𑌮𑌜𑌾𑌯𑌤 ।
𑌵𑌾𑌮𑌨𑌂 𑌰𑍂𑌪𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌯 𑌵𑍈𑌰𑍋𑌚𑌨𑌿𑌂 𑌉𑌪𑌾𑌗𑌮𑌤𑍍 ॥
𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌕𑍍𑌰𑌮𑌾𑌨𑍍 𑌅𑌥 𑌭𑌿𑌕𑍍𑌷𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌯 𑌚 𑌮𑌾𑌨𑌦𑌃 ।
𑌆𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌲𑍋𑌕𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌹𑌿𑌤𑍇𑌰𑌤𑌃 ॥
𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌦𑌾𑌤𑍍 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯 𑌬𑌲𑌿𑌂 𑌓𑌜𑌸𑌾 ॥

அத விஷ்ணு: மஹாதேஜா: அதித்யாம் ஸமஜாயத ।
வாமநம் ரூபமாஸ்தாய வைரோசநிம் உபாகமத் ॥
த்ரீந் க்ரமாந் அதபிக்ஷித்வா ப்ரதிக்ருஹ்யச மாநத: ।
ஆக்ரம்ய லோகாந் லோகாத்மா ஸர்வபூதஹிதேரத: ॥
மஹேந்த்ராய புந: ப்ராதாத் நியம்யபலிம் ஓஜஸா ॥

என்ற ப்ரகாரம், காச்யபப்ரஜாபதியினுடைய ப்ரார்த்தனைக் கிணங்கி, அவருடைய தர்மபத்னியான அதிதி

யம்மாளிடம் திவ்ய புத்ரனுக ஆவிர்பவித்து, வாமன ரூபத்தையும் எடுத்துக்கொண்டு, மஹாபலியினுடைய யக்ஞவாடத்திற்குச் சென்றார். யாகசாலைக்குள் போய் தன்னுடைய சிறு காலால் மூன்று அடிகளுள்ள பூப்ரதேசம் தனக்கு தபஸ் செய்வதற்காக வேண்டுமென்று யாசித்து, மஹாபலி சக்ரவர்த்தியினுலும் ओंतत्सत् (ஓம்தத்ஸத்) (ஓம்தத்ஸத்) என்று மந்த்ர புரஸ்ஸரமாகக் கொடுக்கப்பட்டு, இவரும் அவ்விதமே அங்கீகாரம் செய்துகொண்டு, பூமி தானம் செய்த மஹாபலி சக்ரவர்த்திக்கு வெகுமானம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன், விராட்ரூபியான தான், ஸர்வலோகங்களையும் தன் இருஅடிகளால் ஆக்ரமித்துக்கொண்டு, மூன்ருவது அடிக்கு மஹாபலி சக்ரவர்த்தியையே தன் வசமாக்கிக்கொண்டு, இந்த்ரனிடத்திலும் திரும்ப தேவராஜ்யத்தை வாங்கிக் கொடுத்துவிட்டு, ஸர்வ பூதங்களுக்கும் பகவான் ஹிதத்தைச் செய்தார்.

இந்த இடத்தில் ஒரு அல்பவிசாரம் செய்யப்படுகிறது. அதாவது, பகவானுன விஷ்ணு மஹாபலியை வஞ்சித்ததாக ஆகவில்லையா? அந்த மஹாபலியோ தன் குருவான சுக்ராசார்யாருடைய வாக்யத்தை மீறி 'இதைப்போல் நமக்கு ஸத்பாத்ரம் கிடைக்காது. அதுவும் ப்ரக்ருதத்தில் யக்ஞம் நடக்கும் ஸமயம். யக்ஞ சாலையில் நேரில் வந்து பூஜ்யனுன ஒரு அதிதியானவர் யாசிக்கும்பொழுது, நாம் அதை அவச்யம் கொடுத்தே தீரவேண்டும்' என்று கொடுத்த மஹாபலிக்கு பகவான் இவ்விதம் த்ரோஹம் செய்யலாமா? இவர் எந்த ரூபத்துடன் மஹாபலியை யாசித்தாரோ, அந்த ரூபத்திற்குண்டானபடியான மூன்று அடிக்குள்ள பூப்ரதேசத்தைத்தானே வசப்படுத்திக்கொள்ள வேண்டும். பகவானுக்குக்கூட சில ஸந்தர்ப்பத்தில் இவ்விதமான தர்ம ஸங்கடம் ஏற்படட்டு விடுகிறது. இவ்விதம் தான் தேவர்களுக்கு அந்த ராஜ்யத்தை திரும்ப வாங்கிக்கொடுக்காத பக்ஷத்தில் என்ன நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று சிலர்கள் நினைக்கக்கூடும். அதற்கு ஸமாதானமோ :—

பகவானிடத்தில் அன்யனை வஞ்சிக்கும் ஸ்வபாவமே கிடையாது. அதிலும் தன் பக்தனையா வஞ்சிப்பார்! மஹாபலியும் பரமபக்தன் என்று முன்பு சொல்லப்பட்டது. வாமனரூபியாகத்தான் பகவான் யக்ஞவாடம் சென்றார். ஆகிலும் அந்த மஹாபலி, 'இந்த ப்ரும்மசாரி ப்ராக்ருதமான ப்ரும்மசாரியல்ல. அப்ராக்ருதமான மஹாவிஷ்ணுவே தேவ கார்யத்தை உத்தேசித்து இந்த வேஷத்துடன் வந்திருக்கிறார். நீ ஒன்றையும் கொடுத்துவிடாதே' என்று பல தடவை சொல்லியவர் தனது குலகுருவாயிருந்தும் குருவாக்யத்தைக்கூட உல்லங்கனம் செய்து, 'அப்படியே விஷ்ணுவானால், அவர் லக்ஷ்மீபதி இல்லையா? சதுர்விதமான புருஷார்த்தங்களையும் அன்யர்களுக்கு அளிக்க வல்லவன். அவனே மற்றொருவனிடம் சென்று யாசிக்க வேண்டுமென்று வந்தால், எவன் தான் எதைத்தான் கொடுக்கமாட்டான் எல்லோருக்கும் கொடுக்கிறவனே வாங்குகிறவனாக வருவது, கொடுக்கிறவனுடைய புண்யாதிசயத்தால் அல்லவா!' என்று சொல்லிவிட்டு, பகவானுடைய கையில் தீர்த்த புரஸ்ஸரமாக பூமியை தானம் செய்தார். தானமோ பூமி தானம், பாத்ரமோ மஹாவிஷ்ணு.

दत्वा भूमिं तु विप्राय, परमाणुसमामपि ।
दृष्ट्वा विष्णुं सत्यलोके, सर्वदेवैः सुपूज्यते ॥

𑌦𑌤𑍍𑌵𑌾 𑌭𑍂𑌮𑌿𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌯, 𑌪𑌰𑌮𑌾𑌣𑍁𑌸𑌮𑌾𑌮𑌪𑌿 ।
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌸𑌤𑍍𑌯𑌲𑍋𑌕𑍇, 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑍈𑌃 𑌸𑍁𑌪𑍂𑌜𑍍𑌯𑌤𑍇 ॥

தத்வா பூமிம் து விப்ராய, பரமாணுஸமாமபி ।
த்ருஷ்ட்வா விஷ்ணும் ஸத்யலோகே, ஸர்வதேவை: ஸுபூஜ்யதே ॥

என்ற ஸ்ம்ருதி வசனத்தால், அணுமாத்ரமான பூமியைக்கூட ஒரு ஸத்ப்ராம்மணனிடம் ச்ரத்தையுடன் தானம் செய்தால் பூமிதேவிக்கும் பர்த்தாவான ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவினுடைய ஸ்வரூப ஸாக்ஷாத்காரம் ஏற்படுகிறது என்று பூதானத்தின பலமானது சொல்லப்பட்டிருக்கிறது.

ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவே ப்ரக்ருதத்தில் ப்ரதிக்ரஹீதா வாக வந்திருக்கிறார். அவரிடம் மஹாபலி சக்ரவர்த்தி ச்ரத்தையுடன் செய்த பூமிதானத்திற்கு பலமான தன்னுடைய ஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தை உடனேயே மஹாவிஷ்ணு அளிக்காதபோனால், மேற்சொன்ன ஸ்ம்ருதி வசனத்திற்கு எவ்விதம் ப்ராமாண்யம் ஸித்திக்கும். பூதானத்தினுடைய பெருமையைச் சொல்லும் சாஸ்த்ரங்களெல்லாம் வீணாகவே ஆகிவிடும். அதிலும்,

अन्यस्वं अन्यतो दत्वा, रौरवेषु सपच्यते ।

ஃஅந்யஸ்வம் ஃஅந்யதொ ஃதத்வா, ரௌரவெஷு ஸபஃச்யதெ ।

அங்யஸ்வம் அங்யதோ தத்வா, ரௌரவேஷு ஸபச்யதே ।

என்ற சாஸ்த்ரத்தையும் அறிந்து, அன்யனுடைய ஸொத்தை அன்யனிடம் தானம் செய்தால் அவனுக்கு கோரமான நரகவாஸம்தான் என்று தெரிகிறது. அதை யறிந்த மஹாபலி சக்ரவர்த்திக்கு தானம் செய்த பிறகு புத்தியில் பரபரப்பு ஏற்பட்டது. 'பூமியானவள் மஹாவிஷ்னுவின் தர்மபத்னி யல்லவா? யாரோ ஒரு ப்ராம்மணன் ப்ரும்மசாரி ரூப்மாக இருந்துகொண்டு என்னை யாசித்தான். அவ்விதமே கொடுத்துவிட்டேனே. யாருடைய ஸொத்தை யார் யாரிடம் கொடுக்கிறது?' என்று புத்திக்கு சாஞ்சல்யம் ஏற்பட்டு, ஸ்தம்பித்து நிற்கிற மஹாபலி சக்ரவர்த்தியை மனஸ் ஸமாதானத்தோடு கூடினவனாகச் செய்வதற்கு, பகவான் "ஹே, பலிசக்ரவர்த்தியே! நான் யாரோ அன்யனான ப்ரும்மசாரி யல்ல; நான் விஷ்ணுதான்; பூமிதேவியினுடைய பதியான என்னிடம்தான் அந்த பூமியை இப்பொழுது ஒப்புவித்தாய். ஆகையால் நீ கொஞ்சமேனும் ஸம்சயத்தை அடையவேண்டாம்' என்று தெளிவு செய்ய பகவான் விராட்ரூபத்தை அவலம்பித்து உடனே தர்சனம் கொடுத்தார். பூதானத்தினுடைய பலமாகவோ, பூமிக்கு பதியான விஷ்ணுதான் என்பதை விளக்கிக் காட்டுவதற்காகவே, ஸாக்ஷாத் பக

வான் த்ரிவிக்ரமரூபியாக ஆனாரே யொழிய, மஹாபலி சக்ரவர்த்தியை வஞ்சிக்க வேண்டுமென்கிற ஸ்வபாவத்துடன் த்ரிவிக்ரமரூபியாக ஆகவில்லை.

தவிரவும், ஒரு மனிதன், தன் ஸ்வரூபத்தை மறைத்து மற்றொருவனுடைய வேஷத்தை தரிக்கிற ஸந்தர்ப்பத்தில், தன்னுடைய பரமார்த்த ஸ்வரூபம் (உண்மை வடிவம்) வெளியாகிவிட்டால், அன்ய வேஷத்துடன் விளங்கிவருவதில் லஜ்ஜையை அடைவான். தன் உண்மையான ஸ்வரூபத்தோடு தான் பாஸிப்பான். அதுபோல், ப்ரக்ருதத்திலும் சுக்ராசார்யனான தன் குருவின் மூலமாக, மஹாபலி சக்ரவர்த்திக்கு இந்த ப்ரும்மச்சாரி மஹாவிஷ்ணுதான் என்பது வெளியாகிவிட்டது. அதனால் பகவானுக்கு மாயா வேஷத்தை விட்டுவிட்டு மஹாவிஷ்ணுவினுடைய உண்மையான ஸ்வரூபத்தோடுதான் பாஸிக்கவேண்டு மென்கிற தோற்றம் ஏற்பட்டு த்ரிவிக்ரமரூபியாக ஆகிவிட்டார். மாயைக்கும் பகவத் ஸ்வரூபத்தை மறைக்கும் சக்தி இருந்தாலும், குருவினுடைய உபதேசம் இல்லாமல் தன் புத்தியினால் பகவத் ஸ்வரூபத்தை விசாரிக்கும் இடத்தில் மட்டும் பகவத் ஸ்வரூபத்தை மறைத்து விக்ஷேபத்தை உண்டு பண்ணுகிற சக்தி உண்டே தவிர, குருவினுடைய உபதேசம் ஏற்பட்ட ஸந்தர்ப்பத்தில், அந்த சிஷ்யனுடைய புத்தியை மோஹிக்கும் விஷயத்தில் சக்தியற்றவளாக ஆகி, விலகித்தான் இருப்பாள். ப்ரக்ருதத்திலேயோ, சுக்ராசார்யார் என்ற ஸத்குருவின் மூலமாக விஷ்ணுவென்ற உபதேசம் ஸித்தித்துவிட்டது. ஆகையால் எதிரில் நிற்கும் ப்ரும்மச்சாரி விஷ்ணுதான் என்ற ஞானம் மஹாபலி சக்ரவர்த்திக்கு இருக்கிறது என்றேதான் சொல்லவேண்டும். ஞான சக்திக்கு ப்ரதிபந்தம் அவனிடத்தில் ஏற்பட ந்யாயமே இல்லை. ஆகையால் தன்னுடைய உண்மையை நன்றாக அறிந்த மஹாஸபையில் மாயாவாமன வேஷத்தை பகவான் மறைத்துக்கொண்டு விராட் ரூபியாக ஆகி இந்த ப்ரக்ருத யக்ஞத்திற்கு அதிதேவதையான மஹாவிஷ்ணு

நான்தான் என்று காட்டியது ந்யாயம்தான். அந்த ஸந்தர்ப் பத்தை அனுஸரித்து, பூலோகம் முதல் மஹாபாதாளம் வரை ஒரு அடியாயும், அந்தரிக்ஷம் முதல் ப்ரும்மலோகம் வரை ஒரு அடியாயும் அளந்துகொண்டு, மூன்ருவது அடிக்கு அப்பொழுதும் மஹாபலியை ஸத்ய ஸந்தனுக செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன், மஹாபலியைக் காட்டி அவனுடைய சிரஸ்ஸில் தன்னுடைய பாதத்தை வைத்தார். மஹாவிஷ்ணுவினுடைய ஸ்ரீபாதம் பலிசக்ர வர்த்தியினுடைய சிரஸ்ஸில் படுவதற்கும், பலிசக்ரவர்த்தி இவ்விதம் செய்த பூதானம்தான் காரணமாகும். விஷ்ணு வினுடைய ஸ்ரீபாதத்தின் கௌரவமோ, மஹாலக்ஷ்மீ, மஹா பலி, ஆஞ்ஜநேயஸ்வாமி, அஹல்யாதேவி முதலானவர்க ளுக்குத்தான் தெரியும். மற்றவர்களால் அறிய முடியாது. அத்துடன் ஸுதளம் என்ற பாதாளத்தில் இன்னும் மஹா பலி சக்ரவர்த்தி அரசாண்டுவருகிருன். அதுவும் அந்த பூமி தானத்தின் பலம்தான். பகவானுன விஷ்ணுவும் அந்த ராஜ்யத்தில் ராஜத்வாரத்தில் த்வாரபாலகனுக இருந்துவரு கிருர். அதுவும் அந்த பூதானத்தினுடைய பலன்தான். அத் துடன், அடுத்த இந்த்ரபட்டத்திற்கு தேவர்கள் மஹாபலி சக்ரவர்த்தியையே தேர்ந்தெடுத்திருக்கிருர்கள். அதுவும் பூதானத்தின் பலன்தான். இவ்விதம் அநேக ப்ரகாரமாக பகவானுடைய அனுக்ரஹம் மஹாபலி சக்ரவர்த்தியினிடத் தில் இருந்துவருகிறது. ஆனுல் தனது ராஜ்யத்தைவிட்டு பாதாளலோகம் போகும்படி நேர்ந்த காரணமோ, குரு வாக்யத்தை உல்லங்கனம் செய்த பாவத்தால்தான் என்று அறியவும். குரு வாக்யத்தினுடைய பெருமையை தாடகா வத காலத்தில் நன்ருக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. பக வானுக்கு அஸுரர்களென்றும் தேவர்களென்றும் வேற்று மையே கிடையாது. नमे द्वेष्योस्ति नप्रियः (நமே த்வேஷ்யோஸ்தி நப்ரிய:) (நமே த்வேஷ்யோஸ்தி நப்ரிய:) என்ற கீதாவாக்யமே அதில் ப்ரமாணமாக ஆகும். இந்த்ரனுக்கு ராஜ்யம் வாங் கிக் கொடுத்தாரே தவிர இந்த்ரனுக்கு த்வாரபாலகனுக பக

வான் ஆகவில்லை. மஹாபலிக்குத்தான் த்வாரபாலகனுக ஆனுர். அதனுலேயே பகவானுடைய அனுக்ரஹம் யாரிடத்தில் அதிகமாக இருக்கிறதென்று ஊஹித்துக்கொள்ள வேண்டியது. ஆகையால் வாமனுவதாரம் செய்து, மஹாபலி சக்ரவர்த்தியினுடைய யாகசாலையில் பகவான் பூமி தானம் வாங்கிய ஸந்தர்ப்பத்தில் எந்தக் கதையிலும் தர்ம விரோதமோ என்ற சங்கைக்கு இடமே யில்லை.

அந்த வாமனமூர்த்தியினுல் இந்த ஆச்ரமமானது புண்யவான்களுக்கு ஸம்ஸார ச்ரமத்தை நிவர்த்தி செய்யக் கூடியதாகச் செய்யப்பட்டது. விச்வாமித்ரர் ராமனைப் பார்த்து, "நானும் விஷ்ணுவினிடத்தில் பரம பக்தியோடு கூடினவனுனதினுல், விஷ்ணுவினுடைய அவதாரமாகிய வாமன மூர்த்தியினுடைய ஆச்ரமத்தையே, ஆச்ரயித்து தபஸ் செய்தேன். இந்த ஆச்ரமத்தைத்தான் ஸித்தாச்ரமம் என்று சொல்வார்கள். இங்கேதான் ராக்ஷஸர்கள் என் யக்ஞத்திற்கு விக்னம் செய்வதற்காக ஸாந்நித்யத்தை அடைவார்கள். ராக்ஷஸர்களைக் கொல்லவேண்டிய தேசமும் இது தான். அதோ ஸமீபத்தில் தெரிகிற உடஜமே (குடிசை) என் ஆச்ரமம் ஆகும். என்னுடைய ஆச்ரமம் என்று சொல்வதற்கு ஒன்றுமே காரணமில்லை. ஸித்தாச்ரமமோ விஷ்ணுவினுடையது. நீயும் விஷ்ணுவினுடைய அவதாரமானதினுல் உன்னுடைய ஆச்ரமமாகத்தான் இந்த ஆச்ரமமாகும்" என்று சொன்னுர்.

तदाश्रमपदं तात, तवाप्येतद्यथा मम ।

𑌤𑌦𑌾𑌶𑍍𑌰𑌮𑌪𑌦𑌂 𑌤𑌾𑌤, 𑌤𑌵𑌾𑌪𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 𑌮𑌮 ।

ததாச்ரமபதம் தாத, தவாப்யேதத்யதா மம ।

என்ற வாக்யத்தால் ஸித்தாச்ரமத்தை ராமனுடைய ஆச்ரமமாகவே தெரிவித்தார். ராமலக்ஷ்மணுளை அழைத்துக் கொண்டு தன் ஆச்ரமத்திற்குள் விச்வாமித்ர மஹர்ஷி ப்ரவேசிக்கும்பொழுது பனியினுடைய ஸம்பந்தமே இல்லாத

சந்த்ரமண்டலம்போல் பாஸித்தார். மஹர்ஷியுடன் பின் தொடர்ந்து போகிற ராம லக்ஷ்மணர்களோ, புனர்வஸு நக்ஷத்ரம்போல் தோன்றினார்கள். இரண்டு ராசிகளான புனர்வஸு நக்ஷத்ரங்களால் சூழப்பட்டு, பனிஸம்பந்த மில்லாத சந்த்ரன்போல் ராம லக்ஷ்மணர்களால் சூழப்பட்ட விச்வாமித்ர மஹர்ஷி விளங்கிவந்தார். ஸித்தாச்ரமத்தில் வஸித்துவரும் மஹர்ஷிகளோ, விச்வாமித்ர மஹர்ஷியை எதிர்கொண்டழைத்து பூஜை செய்தார்கள். ராமலக்ஷ்மணர்களையும் அழைத்து ஆதித்யம் செய்தார்கள். ராம லக்ஷ்மணர்களும் ஒரு முஹூர்த்தகாலம் கொஞ்சம் விச்ராந்தி செய்து கொண்டு பிறகு விச்வாமித்ர மஹர்ஷியைப் பார்த்து, "மஹர்ஷே! ஹே, பரமகுரோ! இப்பொழுதே யக்ஞதீக்ஷையில் தாங்கள் அமர்ந்திருக்கலாம். ஸித்தாச்ரமமானது அன்வர்த்தமான பெயருடன் கூடியதாக ஆகட்டும். இந்த இடத்தில் தான் ராக்ஷஸர்களைக் கொல்லவேண்டும் என்று சொன்ன தங்களுடைய வார்த்தையும் ஸத்யமாக ஆகட்டும். எவ்விதத்திலும் தங்களுடைய யக்ஞத்திற்கு விக்னம் செய்யும் ராக்ஷஸர்களைக் கொன்றுவிடுகிறேன்" என்று சொன்னார். மஹர்ஷியும் ராமன் அவ்விதம் சொன்னதைக் கேட்டு, அன்று தினம் ஸாயங்காலத்திலேயே யக்ஞதீக்ஷையை அவலம்பித்தார். ராமன் லக்ஷ்மணன் என்ற இரண்டு குமாரர்களும், அன்றிரவு ஸித்தாச்ரமத்தில் விச்வாமித்ர மஹர்ஷியினுடைய ஆதரவில் வஸித்துவிட்டு மறுநாள் காலையில் எழுந்திருந்து, ப்ராதக் காலத்தில் செய்யவேண்டிய ஸ்நானம் ஸந்த்யாவந்தனம் முதலான கர்மாக்களை முடித்துக்கொண்டு, மானஸமாக அக்னி ஹோத்ராதிகளான ச்ரௌத கர்மாக்களையும் செய்துவிட்டு, யக்ஞசாலையில் தீக்ஷையில் அமர்ந்திருக்கும் விச்வாமித்ர மஹர்ஷியிடம் சென்று வந்தனம் செய்தார்கள். அவ்விதம் வந்தனம் செய்த பிறகு மஹர்ஷியைப் பார்த்து "மஹர்ஷே, இந்த யக்ஞத்தில் எந்தக் காலத்தில் இந்த ராக்ஷஸர்களை நாங்களிருவரும் கவனித்துக்கொண்டிருக்க வேண்டும்?" என்று கேட்டார்கள்.

அவ்விதம் கேட்ட ராம லக்ஷ்மணர்களை விச்வாமித்ர மஹர்ஷியானவர், தீக்ஷையில் மௌனமாக இருக்கும் காரணத்தினுல், நேரில் பதில் சொல்லாமல் மற்ற மஹர்ஷிகளைக்கொண்டு இங்கிதத்தால் பதில் சொல்லும்படி செய்தார். மற்ற மஹர்ஷிகளோ ராம லக்ஷ்மணர்களை விதிவத்தாக பூஜித்தார்கள். அதன் பிறகு அந்த மஹர்ஷிகளும் "ராமா! விச்வாமித்ர மஹர்ஷி தங்களுடைய இச்சையை அனுஸரித்து தீக்ஷா நியமத்தை ஆச்ரயித்துவிட்டார். இது முதல் ஆறு தினங்கள் விச்வாமித்ர மஹர்ஷி மௌனமாகத்தான் இருப்பார். அதனுல் அவர் பேசமாட்டார். நாங்களே சொல்லுகிருேம். ஆறு தினங்களும் தாங்களிருவர்களும் ஜாகரூகர்களாகத்தான் இருக்கவேண்டும். இரவிலோ பகலிலோ ஸந்த்யாகாலங்களிலோ எந்த ஸமயத்திலோ எப்பொழுது ராக்ஷஸர்கள் வருவார்கள் என்று நிச்சயம் சொல்லமுடியாது. ஆனுல் யாகம் ஸமாப்தப்ராயமாக ஆகும்பொழுது அவர்கள் வருவது வழக்கம். அப்பொழுதுதான் வருவார்களென்று பேசாமலும் இருந்துவிட முடியாது. ஆறு தினங்களிலும் தாங்களிருவர்களும் எக்காலத்திலும் ஸந்நத்தர்களாக இருந்துகொண்டு யாகத்தை ரக்ஷித்துக் கொடுக்கவேண்டு" மென்று சொன்னுர்கள். அவ்விதம் சொன்ன மஹர்ஷிகளுடைய வார்த்தையைக் கேட்டு ராம லக்ஷ்மணர்களிருவர்களும் பகல் ராத்ரி என்ற பேதமில்லாமலே ஆறு தினங்களிலும் நித்ரை கொஞ்சங்கூட இல்லாமல், கோதண்டபாணிகளாகவே, ஸந்நத்த கவசிகளாக விச்வாமித்ர மஹர்ஷியை ரக்ஷித்து வந்தார்கள். ஐந்துதினங்களுடைய யக்ஞம் பூர்த்தியாகிவிட்டது. ஆறுவது தினம் ப்ராதக் காலத்தில் லக்ஷ்மணனைப் பார்த்து ராமன் "லக்ஷ்மணு! ரொம்பவும் ஜாகரூகனுக இருக்கவேண்டும். ஸமயம் வந்துவிட்டது" என்ருர். லக்ஷ்மணனும் ஸஜ்ஜமாக கவனித்துக்கொண்டிருந்தார். ராமன் இவ்விதம் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது திடீரென்று அக்னியானது அபூர்வமான ஜ்வாலையோடு ஜ்வலிக்க ஆரம்பித்தது. யஜமானனை விச்வாமித்ர மஹர்ஷியினுடைய முகத்திலும் ரித்விக்கு

களுடைய முகத்திலும் அபூர்வமான ஒரு தேஜஸ்ஸும் ஜ்வலித்தது. ராக்ஷஸர்களுடைய ஆகமனத்தை ஸூசிப்பது போல் ராமனுக்குத் தோன்றி ராமனும் ரொம்ப கவன மாக இருந்துவந்தார். உடனே ஆகாசத்தில் ஒரு பயங்கர மான சப்தம் ஏற்பட்டது. வர்ஷா காலத்தில் மேகமானது ஆகாசத்தை மறைத்துக்கொண்டு எவ்விதம் அட்டஹாஸத் துடன் கர்ஜிக்குமோ, அதுபோல் மாரீசன், ஸுபாஹு என்ற இரு ராக்ஷஸர்களும் மாயையினல் ஆகாசத்தை மறைத்துக் கொண்டு தாங்களும் மறைந்து நின்றுகொண்டு ரக்தவர்ஷங் களால் யக்ஞசாலையின் மேல் வர்ஷித்தார்கள். அந்த ரக்தப் பெருக்கால் யக்ஞ வேதிகள் மெழுகப்பட்டதாகக் கொண்டு, விகாரமாகக் காணப்பட்டன. அவ்விதமாக வேதிகளைப் பார்த்த ராமனுக்கு அடங்காத கோபம் ஏற்பட்டு, ஆகா சத்திலும் அநேக ராக்ஷஸர்களால் சூழப்பட்ட மாரீசன் ஸுபாஹு இவர்களைப் பார்த்துவிட்டு உடன் லக்ஷ்மண னையும் பார்த்து, "லக்ஷ்மணு இதோ பார், துராசாரத்துடன் கூடின ராக்ஷஸர்களை மானவாஸ்த்ர ப்ரயோகம் செய்து, வாயுவானது மேகங்களை விரட்டியடிப்பதுபோல், நான் இந்த ராக்ஷஸர்களை விரட்டிவிடுகிறேன்," என்று சொல்லி விட்டு மானவாஸ்த்ரத்தை மாரீசனுடைய மார்பில் ராமன் ப்ரயோகம் செய்தார்.

அந்த மாரீசனே, அந்த மானவாஸ்த்ரத்தால் ஆயிரம் மைல்களுக்கப்பால் ஸமுத்ர மத்தியில் பாதாளலோகம் வரையில் அமுக்கப்பட்டு, மூர்ச்சை போகிறதும் மறுபடி வருகிறதுமாகி, இந்த விதமாக ரொம்பவும் கஷ்டப்பட்டான். அதையும் கவனித்துப்பார்த்து, ராமன் லக்ஷ்மணனிடம் "லக்ஷ்மணு! அதோ பார்த்தாயா, மானவாஸ் த்ரத்தால் மாரீசன் படும் கஷ்டத்தை யாராலேயாவது அனுபவிக்க முடியுமா?" என்று சொன்னர். ராமனுடைய ஆக்ஞையினல் அந்த மானவாஸ்த்ரமும் மாரீசனை ரொம்ப வும் கஷ்டப்படுத்தி ப்ராணனை மாத்ரம் அபஹரிக்காமல்

வைத்து அவனை விரட்டிவிட்டு திரும்பி வந்துவிட்டது. பாவி (வரப்போகிற) கார்யத்தை உத்தேசித்து, மாரீசன் உயிருடன் இருக்கவேண்டும் என்று ராமன் எண்ணின எண்ணமே அதற்குக் காரணமாகும். பிறகு ஆக்னேயாஸ்த்ரத்தை ஸுபாஹுவினுடைய மார்பில் ப்ரயோகம்செய்து அவனை மரிக்கச் செய்தார். மற்ற ராக்ஷஸர்களையும் வாயவ்யாஸ்த்ரத்தால் த்வம்ஸம் செய்தார். இவ்விதம் ஸ்ரீராமசந்த்ரமூர்த்தியானவர் யக்ஞத்திற்கு விரோதம் செய்கிற ராக்ஷஸர்களைக் கொன்றுவிட்டு, மஹர்ஷிகளுக்கு பரம ஸந்தோஷத்தைக் கொடுத்து, யக்ஞத்தையும் ஸம்பூர்ணமாக நிறைவேற்றிவைத்து, மஹர்ஷிகளாலும் தேவர்களாலும் விதிவத்தாகப் பூஜிக்கப்பட்டு, அஸுரர்களை ஜயித்த இந்த்ரன் விளங்கினாற்போல் விளங்கிவந்தார். விச்வாமித்ர மஹர்ஷியும் யக்ஞம் ஸமாப்தியானவுடன் ராமனால் செய்யப்பட்ட அபூர்வமான உபகாரத்தை அபிநந்தனம் செய்து (புகழ்ந்து) ராக்ஷஸர்களுடைய நாசத்தால் ஸித்தாச்ரமமானது நிர்ப்பயமாக ஆனதையும் நினைத்து நினைத்து ஸந்தோஷமடைந்து, தனது க்ருதக்ஞதையை ஸ்ரீராமனிடத்தில் தெரிவித்துக்கொண்டார்.

कृतार्थोऽस्मि महाबाहो कृतं गुरुवचस्त्वया ।
सिद्धाश्रमं इदं सत्यं कृतं राम महायशः ॥

𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌕𑍃𑌤𑌂 𑌗𑍁𑌰𑍁𑌵𑌚𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾 ।
𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌶𑍍𑌰𑌮𑌂 𑌇𑌦𑌂 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌕𑍃𑌤𑌂 𑌰𑌾𑌮 𑌮𑌹𑌾𑌯𑌶𑌃 ॥

க்ருதார்த்தோஸ்மி மஹாபாஹோ க்ருதம் குருவசஸ்த்வயா ।
ஸித்தாச்ரமம் இதம் ஸத்யம் க்ருதம் ராம மஹாயச: ॥

என்ற ச்லோகத்தால், "ராமா! உன் நிமித்தமாக நான் க்ருதார்த்தனாக ஆனேன். செய்யவேண்டிய கர்மாவைச் செய்தவனாகவே ஆனேன். எவ்வளவோ தடவை இந்த யக்ஞத்தை நான் ஆரம்பித்து முடிவுபெறாமல், ராக்ஷஸர்கள் மூலம் பராபவத்தை (அவமானத்தை) நான் அடைந்

தேன். இப்பொழுதுதான் எனக்கு க்ருதக்ருத்யத்வம் ஏற்பட்டது. தாங்கள்தான் அதற்கு மூலகாரணம்,

"यज्ञो वै विष्णुः" "अहं हि सर्वयज्ञानां, भोक्ता च प्रभुरेव च"

"𑌯𑌜𑍍𑌞𑍋 𑌵𑍈 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃" 𑌅𑌹𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂, 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍇𑌵 𑌚"

"யக்ஞோ வை விஷ்ணு:" "அஹம் ஹி ஸர்வயக்ஞாநாம், போக்தா ச ப்ரபுரேவ ச"

என்ற ச்ருதி, ஸ்ம்ருதிகளால், யக்ஞம் முதலான ஸத்கர்மாக்களை ரக்ஷித்துக் கொடுக்கிறவனாக சொல்லப்பட்ட பரப்ருஹ்மம் நீதான். यज्ञविघ्नकरंहन्यां (𑌯𑌜𑍍𑌞𑌵𑌿𑌘𑍍𑌨𑌕𑌰𑌂𑌹𑌨𑍍𑌯𑌾𑌂) (யக்ஞவிக்நகரம்ஹந்யாம்) என்ற உன் ப்ரதிக்ஞையையும் நீ நிறைவேற்றிவிட்டாய். ஹே, மஹாபாஹோ!

"बाहुच्छायां अवष्टब्धः, यस्यलोकाः महात्मनः ।"

"𑌬𑌾𑌹𑍁𑌚𑍍𑌛𑌾𑌯𑌾𑌂 𑌅𑌵𑌷𑍍𑌟𑌬𑍍𑌧𑌃, 𑌯𑌸𑍍𑌯𑌲𑍋𑌕𑌾𑌃 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।"

"பாஹுச்சாயாம் அவஷ்டப்த:, யஸ்யலோகா: மஹாத்மந: ।"

என்ற வாக்யத்தை அனுஸரித்து, உன்னுடைய கைகளின் நிழலை ஆச்ரயித்து பதினான்கு லோகங்களும் ஸௌபாக்யத்துடன் விளங்கிவருகிறது, இவ்விதம் மஹிமையுள்ள உனக்கு இந்த ராக்ஷஸர்களை வதம் செய்வது ஒரு பெரிதல்ல. அஸஹாயனான மாரீசன், ஸுபாஹு இன்னும் மற்ற ராக்ஷஸர்களை நீ கொன்று ஜயித்து என் யக்ஞத்தை ரக்ஷித்தது உன்னிடத்திலுள்ள மஹாவிஷ்ணுத்வத்தை ப்ரகடனம் செய்கிறது. நான் யக்ஞசாலையில் தீக்ஷிதனாக இருந்துவந்தாலும், நீ வில்லில் பாணங்களை ப்ரயோகம் செய்துகொண்டிருந்தபொழுதுகூட நான் அதை நன்றாக கவனித்தேன். அந்த ஹஸ்தலாகவத்தினுடைய வைசித்ரயத்தை (கை விசேஷத்தை) யாரால்தான் வர்ணிக்கமுடியும்! இரண்டாவது பாணத்திற்கு செலவில்லா

மல் ஒரே பாணத்தினுலேயே ஒவ்வொரு ராக்ஷஸர்களேயும் வதம் செய்துவந்தாய். உன்னுடைய பாஹு பலத்தின் வைசித்ரயத்தை மற்ருெருவனுல் அடையமுடியாது.

பிறகு ராவணன் முதலான ராக்ஷஸர்களிடம் உனது பாஹு பலத்தைப் ப்ரகடனம் செய்ய (வெளிக்காட்ட) மாரீசனே நிமித்தமாக வைத்துக்கொள்வதற்காகவே, உன் மானவாஸ்த்ர ப்ரயோகத்தால் மாரீசனே ரொம்பவும் கஷ்டப்படுத்தி ஜீவச்சவமாக அடித்துவிட்டு, அவனே உயிருடன் வைத்தாயோ அந்தவிதமான உன் பராக்ரமமானது ரொம்பவும் ஆச்சர்யகரமானது. இனி மாரீசன் ஒரு ரிஷியோ, ஒரு ப்ராம்மணனே ஒருவரிடமும் போகவே மாட்டான். உனது பாஹு பலத்தை ப்ரகடனம் செய்ய, மற்ருெரு விஷயாந்தரமும் என் மனதில் ப்ரஸ்துதமாக ஆகிவிட்டது. அதையும் நீ அவச்யம் செய்து கட்டாயம் ஜயிப்பாய் என்று என்மனதில் நிச்சயம் ஏற்பட்டுவிட்டது. ஹே, மஹா பாஹோ! உன் பாஹு பலத்தை நான் எப்படிப்பட்டதென்று சொல்வேன். அத்துடன்,

"कृतं गुरुवचस्त्वया" "वचनं कौशिकस्येति, कर्तव्यं अविशंकया"

"𑌕𑍃𑌤𑌂 𑌗𑍁𑌰𑍁𑌵𑌚𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾" "𑌵𑌚𑌨𑌂 𑌕𑍌𑌶𑌿𑌕𑌸𑍍𑌯𑍇𑌤𑌿, 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌅𑌵𑌿𑌶𑌂𑌕𑌯𑌾"

"க்ருதம் குருவசஸ்த்வயா" "வசநம் கௌசிகஸ்யேதி, கர்தவ்யம் அவிசம்கயா"

என்று உன்பிதாவான தசரதர் 'விச்வாமித்ரர் எதைச் சொன்னுலும் நீ அதை ஸந்தேஹமில்லாமல் செய்தே தீரவேண்டும்' என்று கட்டளையிட்டாரல்லவா? அதை அவ்விதமே நீ ஸத்யமாகச் செய்தாய். பித்ரு வசனத்திற்கு உன்னைப் போல் ஒருவரும் கௌரவத்தைக் கொடுக்கமாட்டார்கள்.

"सिद्धाश्रमं इदं सत्यं कृतं" (𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌶𑍍𑌰𑌮𑌂 𑌇𑌦𑌂 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌕𑍃𑌤𑌂) (ஸித்தாச்ரமம் இதம் ஸத்யம் க்ருதம்) இந்த ஸித்தாச்ரமமும் இப்பொழுதுதான் அன்வர்த்த நாமாவுடன் கூடினதாக செய்யப்

பட்டது. இந்த ஆச்ரமத்தில் யார் எதைச் செய்தாலும், அது பலவத்தாக ஆகும் என்பதற்கு நீ செய்கிற கார்யம் அத்தாக்ஷியாக ஆகுமல்லவா? வாமனுவதாரம் செய்வதற்கு முனனுல், விஷ்ணுவாயிருந்து நீ தபஸ்ஸைச் செய்து, இந்த ஆச்ரமத்தை ஸித்தாச்ரமமாகச் செய்ததுபோல், இப்பொழுது ராமனுக அவதரித்த காலத்திலும், இந்த ஆச்ரமத்தை ஸித்தாச்ரமமாகவே செய்துவிட்டாய்.

कृतं राम महायशः (க்ருதம் ராம மஹாயச:) (க்ருதம் ராம மஹாயச:) ஹே, ராமா! அபரிச்சின்னமாயும், அழியாததாயுமுள்ள யசஸ் ஸும் உன்னுல் ஸம்பாதிக்கப்பட்டது. विश्वामित्राध्वरत्राता (விச்வாமித்ராத்வரத்ராதா) (விச்வாமித்ராத்வரத்ராதா) என்ற திரு நாமம் உனக்கு யுகம் புரண்டாலும், கல்பம் மாறினுலும், அழியாமல் விளங்கிவருமல்லவா? இந்த யசஸ் மஹாயசஸ் என்று சொல்லப்படும்'' என்று சொன்னுர்.

31, 32, 33-வது ஸர்க்கங்கள்.

ஸித்தாச்ரமத்தில் விச்வாமித்ர மஹர்ஷியினுடைய யக்ஞம் முடிந்த பிற்பாடு, அன்றிரவு ஸித்தாச்ரமத்திலேயே ராமனும், லக்ஷ்மணனும் பரமஸந்தோஷத்துடன் வஸித் தார்கள். மறுதினம் காலையில், ப்ராதஸ்ஸந்த்யை முதலான கர்மாக்களை அனுஷ்டித்துவிட்டு, ப்ராதாக்கள் இருவர்களும் விச்வாமித்ர மஹர்ஷி, இன்னும் மற்ற மஹர்ஷிகள் எல் லோருக்கும் அபிவாதனம் செய்துவிட்டு, விசேஷமாக தபோ மஹிமையால் அக்னிபோல் ஜ்வலிக்கும் விச்வாமித்ர மஹர் ஷியை நமஸ்கரித்துவிட்டு மதுரமானவார்த்தையினுல் ராமன் லக்ஷ்மணன் இருவர்களும் "ஹே முனிச்ரேஷ்டா! நாங்க ளிருவர்களும் தங்களுக்கு கிங்கரர்கள். இனி நாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை ஆக்ஞாபனம் செய்ய வேண்டும். தங்களுடைய ஆக்ஞையை சிரஸ்ஸால் வஹிக்

கிறோம்" என்றார்கள். இவ்விதம் ராமன், லக்ஷ்மணன் இருவர்களாலும் விச்வாமித்ரர் முதலிய மஹர்ஷிகள் ப்ரார்த்திக்கப்பட்டவர்களாகக் கொண்டு, விச்வாமித்ர மஹர்ஷியினுடைய உத்திரவின்பேரில், மஹர்ஷிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ராமனைப் பார்த்து சொன்னார்கள், "ராமா!

मैथिलस्य नरश्रेष्ठ जनकस्य भविष्यति ।
यज्ञः परमधर्मिष्ठः तस्य यास्यामहे वयं ॥
त्वं चैव नरशार्दूल सहास्माभिः गमिष्यसि ।
अद्भुतं धनुरत्नं च तत्रतद्द्रष्टुमर्हसि ॥

𑌮𑍈𑌥𑌿𑌲𑌸𑍍𑌯 𑌨𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌜𑌨𑌕𑌸𑍍𑌯 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ।
𑌯𑌜𑍍𑌞𑌃 𑌪𑌰𑌮𑌧𑌰𑍍𑌮𑌿𑌷𑍍𑌠𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌹𑍇 𑌵𑌯𑌂 ॥
𑌤𑍍𑌵𑌂 𑌚𑍈𑌵 𑌨𑌰𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲 𑌸𑌹𑌾𑌸𑍍𑌮𑌾𑌭𑌿𑌃 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ।
𑌅𑌦𑍍𑌭𑍁𑌤𑌂 𑌧𑌨𑍁𑌰𑌤𑍍𑌨𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌰𑌤𑌦𑍍𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

மைதிலஸ்ய நரச்ரேஷ்ட, ஜனகஸ்ய பவிஷ்யதி ।
யக்ஞ: பரமதர்மிஷ்ட: தஸ்ய யாஸ்யாமஹே வயம் ॥
த்வம் சைவ நரசார்தூல ஸஹ அஸ்மாபி: கமிஷ்யஸி ।
அத்புதம் தநுரத்னம் ச தத்ரதத்ரஷ்டு மர்ஹஸி ॥

என்ற ச்லோக ப்ரகாரம், ஹே, ராமா! மிதிலா நகரத்திற்கு அதிபதியான ஜனக மஹாராஜாவானவர் ஒரு யக்ஞம் செய்யப்போகிறார். அந்த யக்ஞமோ, பகவதாராதனரூபமாக ஆகும். அதனால் காம்யம், நித்யம் முதலான கர்மாக்களைக் காட்டிலும் ரொம்பவும் மேலானது. அதை தர்சனம் செய்வதற்கு நாங்கள் போகிறோம். எங்கள் பின்னோடு நீயும் வரும்பக்ஷத்தில் அந்த அபூர்வமான யக்ஞத்தையும் பார்க்கலாம். அந்த மிதிலா நகரத்தில் ஜனக மஹாராஜாவினுடைய அரண்மனையில் வெகுகாலமாக பூஜிக்கப்பட்டுவரும் மஹா பலத்தோடு கூடின ஒரு பெரிய வில் ஒன்றிருக்கிறது. அதையும பார்க்கலாம்; ஒரு ஸ்த்ரீ ரத்னத்தையும் பார்க்கலாம். அந்த வில்லோ, இந்த்ரன் முதலான தேவதைகள்

மூலமாக ஜனக மஹாராஜாவினுடைய கூடஸ்தனான தேவ ராதன் என்ற மஹாராஜனிடம் கொடுக்கப்பட்டு அங்கு இருந்துவருகிறது. தேவர்களோ கந்தர்வர்களோ அஸுரர் களோ, ராக்ஷஸர்களோ, மனுஷ்யர்களோ, அந்த வில்லை ஆரோபணம் செய்வதற்கு (வளைத்து நாணேற்றுவதற்கு) யத்னஞ் செய்து தங்களால் முடியாமல் பராபவத்தை அடைந்துவிட்டார்கள். அந்த வில்லை வளைப்பதிலோ, அசையச் செய்வதிலோ, நாண்கயிற்றை ஏற்றிப் பூட்டுவ திலோ, ஒருவரும் ஸமர்த்தராக ஆகவில்லை. இந்த வில்லோ ஒரு யக்ஞத்தில் யாகபலமாக யாசிக்கப்பட்டு ஸர்வ தேவதைகளாலும் கொடுக்கப்பட்டது. நானுவிதமான புஷ்பங்களாலும் பூஜிக்கப்பட்டு அந்த ஜனக மஹாராஜாவினு டைய க்ருஹத்திலிருந்துவருகிறது" என்று சொல்லிவிட்டு விச்வாமித்ர மஹர்ஷியும் மற்ற மஹர்ஷிகளும் வனதேவதை களுக்கு நமஸ்காரம் செய்துவிட்டு, ராமலக்ஷ்மணர்களுக்கும் தங்கள் மனப்பூர்வமான ஆசீர்வசனங்களையும் சொல்லிவிட்டு, 'கங்கையினுடைய வடகரையிலிருக்கும், ஹிமவத் பர்வ தத்தை மிதிலா நகர மார்க்கமாக அடையப்போகிறேன்' என்று சொல்லிவிட்டு ஸித்தாச்ரமத்திற்கு ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளையும் செய்துவிட்டு வடக்கு திக்கை நோக்கி விச்வாமித்ர மஹர்ஷி ராமலக்ஷ்மணர்களுடன் புறப்பட்டார்.

இவ்விதம் ப்ரயாணம் செய்த விச்வாமித்ர மஹர்ஷி யை அனுஸரித்து, கூட்டம் கூட்டமாக மஹர்ஷிகளும் பின்தொடர்ந்து சென்றார்கள். ஸித்தாச்ரமத்தில் வஸிக்கும் பக்ஷிகள், ம்ருகங்கள் முதலானவைகளும் விச்வாமித்ர மஹர்ஷியை அனுஸரித்துச் சென்றன. அந்த மஹர்ஷியோ ம்ருக பக்ஷிகளை ஸித்தாச்ரமத்திலேயே வஸித்துவரும்படி உத் திரவு செய்துவிட்டு, ரிஷி மண்டலங்களால் சூழப்பட்டு ராம லக்ஷ்மணர்களை முன்னிட்டுக்கொண்டு விச்வாமித்ரர் சென் றார். வெகுதூரம் சென்று, தனது ஸித்தாச்ரமத்திலிருந்து புறப் பட்டு சற்று வடமேற்கு பாகமாக சென்றுவரும் மஹர் ஷிக்கு கங்காதீரத்திற்கு வந்து சேருவதற்கு முன்பே,

சோணபத்ரா என்ற ஒரு நதி (மேற்கு பார்த்து ஓடும் நதி) விசேஷம் மத்தியில் ஏற்பட்டு அதைத் தாண்டித்தான் கங்காதீரத்தை அடையும்படி நேர்ந்ததினுல், சோணபத்ராதீரம் வந்தவுடன், ஸூர்யாஸ்தமனமாகிவிட்டது. அதனுல் அன்று இரவு அந்த சோணபத்ரா நதி தீரத்தில் வாஸம் செய்தார்கள். விச்வாமித்ர மஹர்ஷியை முன்னிட்டுக்கொண்டு மற்ற மஹர்ஷிகள் ஸ்நாநாதிகளைச் செய்துவிட்டு, மஹர்ஷியை அனுஸரித்து அந்த நதிதீரத்தில் வாஸம் செய்தார்கள். ராமனும் லக்ஷ்மணனுடன் விச்வாமித்ர மஹர்ஷியைப் பூஜித்துவிட்டு, ஸாயங்காலம் செய்ய வேண்டிய கர்மாக்களையும் முடித்துக்கொண்டு, விச்வாமித்ர மஹர்ஷிக்கு எதிரில் வந்து அவரை நமஸ்காரம்செய்து, பரம ஸந்தோஷத்துடன் சோணபத்ராநதிதீரத்தில் விளங்கி வரும் கிரிவ்ரஜம் என்ற ஸுபிக்ஷமான தேசத்தைப் பார்த்து, "மஹர்ஷே, இந்த தேசம் யாருடைய தேசம்? ரொம்பவும் பார்க்க அழகாயிருக்கிறது. அதை விவரமாக எனக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டார். விச்வாமித்ர மஹர்ஷியும் ராமனுடைய வார்த்தையைக் கேட்டு அந்த தேசத்தினுடைய வ்ருத்தாந்தத்தைச் சொல்வது தன்னுடைய வம்ச வ்ருத்தாந்தத்திலேயே வந்து முடிகிறபடியால் பரம ஸந்தோஷத்துடன் ரிஷிகளுடைய மத்தியில் சொல்வதற்கு ஆரம்பித்தார்.

"ராமா! ஸாக்ஷாத் ப்ரும்மாவினுடைய மானஸ புத்ரன் குசன் என்ற ஒரு மஹானுபாவன் இருந்தார். அயோனிஜனை புத்ரன் அவர். ஞானம், சௌர்யம் முதலான உத்தம குணங்களால், மற்ற ப்ரும்ம குமாரர்களைக்காட்டிலும் மேலானவர். कौ, भूमौ, शेते, इति कुशः (கௌ, பூமௌ, சேதே, இதி குச:) (கௌ, பூமௌ, சேதே, இதி குச:) என்ற ஸமாஸத்தால், பூமியிலேயே எப்பொழுதும் வாஸம் செய்கிறவரானதினுல் குசன் என்று அவருக்குப் பெயர் ஏற்பட்டது. நாரதாதிகளைப்போல் ப்ரும்மலோகத்திலேயே இருப்பவர்

அல்ல. ப்ரஜைகளை ரக்ஷிக்கவேண்டுமென்ற முக்ய தர்மத்தில் ச்ரத்தையுடையவர். அதனுல் அவர் ஜன்மாவினுல் (பிறவியில்) ப்ரும்மபுத்ரன் என்று சொல்லப்பட்டாலும், ஆசாரத்தினுல் அவரை க்ஷத்ரியன் என்றே சொல்லவேண்டும். ரொம்பவும் தர்ம ரஹஸ்யங்களை நன்ருக அறிந்தவர். மேலான வ்ரதாதிகளை அனுஷ்டானம் செய்தவர். அந்த மஹானுபாவன் ஸத்குல ப்ரஸூதையான வைதர்ப்பீ என்ற ராஜகுமாரியினிடம் நான்கு குமாரர்களை அடைந்தார். குசாம்பன், குசநாபன், ஆதூர்த்தரஜஸ், வஸு என்று நான்கு குமாரர்களுக்கும் நான்கு பெயர்கள் விளங்கிவந்தன. அந்த நான்கு குமாரர்களையும் பார்த்து, அந்த குசமஹர்ஷியானவர் 'ஹே, புத்ரர்களே! ப்ரஜைகளை வ்ருத்தி செய்து, அவர்களை பரிபாலனம் செய்துவருவதே முக்யமான தர்மமாகும். க்ஷத்ரியனுடைய தர்மத்திற்கு மேலான தர்மமே கிடையாது. அதைச் செய்து நீங்கள் பித்ருரிணத்தை நிவர்த்தி செய்யவேண்டும்' என்று ஆக்ஞாபித்தார். அந்த நான்கு குமாரர்களும், அவ்விதமே ஆக்ஞையை சிரஸ்ஸால் வஹித்துக்கொண்டு, தபோ மஹிமையினுல் நான்கு நகரங்களை நிர்மாணம் செய்துகொண்டு ப்ரஜாபரிபாலனம் செய்துவந்தார்கள். குசாம்பன் என்ற புத்ரன் கௌசாம்பி என்ற நகரத்தையும், குசநாபன் என்ற புத்ரன் மஹோதயம் என்ற நகரத்தையும், ஆதூர்த்தரஜஸ் என்ற புத்ரன் தர்மாரண்யம் என்ற நகரத்தையும், வஸு என்ற புத்ரன் கிரிவ்ரஜம் என்ற நகரத்தையும் நிர்மாணம் செய்துகொண்டு, அந்தந்த ராஜதானியில் அவரவர்கள் ராஜ்யாபிஷேகம் செய்துகொண்டு, ப்ரஜைகளை தர்மமாக பரிபாலனம் செய்துவந்தார்கள். இதோ பார்! இந்த சோணபத்ரா நதி தீர ஸமீபத்தில் காணப்படுகிற ராஜதானியானது வஸு என்ற ராஜனுடைய ராஜதானியாக ஆகும். கிரிவ்ரஜம் என்று இந்த நகரத்திற்குப் பெயர் ஏற்பட்டது. இந்த நகரத்திற்கு கிரிவ்ரஜம் என்று பெயர் ஏற்பட்டதிற்கு காரணமோ, ஐந்து சிறிய

மலைகள் இந்த ராஜதானியை நான்குபக்கங்களிலும் அழகாக சூழ்ந்திருப்பதேதான். இந்த சோணபத்ரா நதிக்கு மாகதீ என்றும் வேறு பெயருண்டு. மகத தேசவழியாக வந்து இந்த ஐந்துமலைகளுடைய நடுவில் ஒரு மாலைபோல் இந்த நதி ப்ரவாஹித்து வருகிறது. இந்த நதியினுடைய கரையோரமாக காணப்படுகிற க்ஷேத்ரங்கள் எல்லாம் ஸாரமான க்ஷேத்ரங்கள். நன்ருக பயிர்களையும் வ்ருத்தி செய்கின்றன.

குசநாபன் என்ற குசனுடைய இரண்டாவது புத்ரனே, மஹோதயம் என்ற நகரத்தில் க்ருதாசீ என்ற ஒரு அப்ஸர ஸ்த்ரீயைக் கல்யாணம் செய்துகொண்டு நூறு கன்னிகைகளைப் பெண்களாக அடைந்தான். அந்த நூறு பெண்களும் யௌவனத்தை யடைந்து திவ்யாலங்கார பூஷிதைகளாக, உத்யானவனத்தில் கானங்கள் செய்துகொண்டும், நடனம் செய்துகொண்டும் பரம ஸந்தோஷத்தை அடைந்து வந்தார்கள். இவ்விதமிருக்கும்பொழுது, உத்யானவனத்தில் அவர்கள் ஸ்வேச்சையாக க்ரீடித்துக்கொண்டிருக்கும் காலத்தில், அவர்களுடைய ஸௌந்தர்யத்தால் அபஹரிக்கப்பட்ட மனதோடுகூடின வாயு பகவான் அந்த உத்யானவனத்திற்கு வந்து, கன்னிகைகளைப் பார்த்து, 'ஹே, ராஜபுத்ரிகளே! உங்களிடம் நான் மோஹத்தை அடைகிறேன். எனக்கு பார்யைகளாக நீங்கள் ஆகவேண்டும். மனுஷ்யபாவத்தை விட்டு விடுங்கள். யௌவனம் என்பதே சஞ்சலமாகும். அதிலும் மனுஷ்ய ஜாதியில் யௌவனத்தை நம்பமுடியாது. என்னை நீங்கள் கல்யாணம் செய்துகொண்டீர்களேயானுல், தேவ ஸ்த்ரீகளாக ஆகிவிடுவீர்கள். யௌவனமோ உங்களுக்கு ஸ்திரமாக ஏற்பட்டுவிடும். ஆயுஸ்ஸும் தீர்க்கமாக ஸித்திக்கும்' என்று வாயு பகவான் கெஞ்சினுர். அவ்விதம் வாயுபகவானுடைய வார்த்தையைக் கேட்ட நூறு கன்னிகைகளும் மந்தஹாஸம் செய்துகொண்டு, 'ஸகல பூதங்களிலும் ப்ராண ஸ்வரூபியாக நீ உள்ளே ஸஞ்சரித்து வருகிருய். நீயோ தேவச்ரேஷ்டன். உன்னுடைய வைபவத்தை

நாங்கள் அறிந்தவர்கள். எதற்காக எங்களை நீ அவமதிக்கிறாய்? நாங்கள் குசநாபன் என்ற அரசனுடைய புத்ரிகள். உன்னையும் உன் ஸ்தானத்திலிருந்து நழுவச் செய்வதில் நாங்கள் ஸமர்த்தர்கள். நாங்கள் தபஸ்ஸை ரக்ஷித்து வருகிறோம். அதனால் இப்பொழுது உனக்கு சாபம் கொடுக்கவில்லை.

मा भूत्सकालः दुर्मेधः पितरं सत्यवादिनं ।
नावमन्यस्व धर्मेण स्वयंवरं उपास्महे ॥
पिता हि प्रभुरस्माकं दैवतं परमं हि सः ।
यस्य नो दास्यति पिता स नो भर्ता भविष्यति ' ॥

𑌮𑌾 𑌭𑍂𑌤𑍍𑌸𑌕𑌾𑌲𑌃 𑌦𑍁𑌰𑍍𑌮𑍇𑌧𑌃 𑌪𑌿𑌤𑌰𑌂 𑌸𑌤𑍍𑌯𑌵𑌾𑌦𑌿𑌨𑌂 ।
𑌨𑌾𑌵𑌮𑌨𑍍𑌯𑌸𑍍𑌵 𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌸𑍍𑌵𑌯𑌂𑌵𑌰𑌂 𑌉𑌪𑌾𑌸𑍍𑌮𑌹𑍇 ॥
𑌪𑌿𑌤𑌾 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑌸𑍍𑌮𑌾𑌕𑌂 𑌦𑍈𑌵𑌤𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌹𑌿 𑌸𑌃 ।
𑌯𑌸𑍍𑌯 𑌨𑍋 𑌦𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 𑌪𑌿𑌤𑌾 𑌸 𑌨𑍋 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ' ॥

மா பூத்ஸகால: துர்மேத: பிதரம் ஸத்யவாதிநம் ।
நாவமந்யஸ்வ தர்மேண ஸ்வயம்வரம் உபாஸ்மஹே ॥
பிதாஹி ப்ரபுரஸ்மாகம் தைவதம் பரமம் ஹி ஸ: ।
யஸ்ய நோ தாஸ்யதி பிதா ஸ நோ பர்தா பவிஷ்யதி ' ॥

என்று அந்த ராஜகுமாரிகள் வாயுபகவானைப் பார்த்துச் சொன்னார்கள். 'ஹே, துர்புத்தே! மஹாபுருஷனையும், ஸத்யவாதியாயுமுள்ள பிதாவை அவமதித்துவிட்டு, காமத்தால் ஸ்வயமாகவே ஒரு புருஷனை பர்த்தாவாக அடைவது என்ற யாதொரு காலமுண்டோ, அந்த காலம் எங்கள் விஷயத்தில் ஏற்படவேண்டாம். பிதாதான் எங்களுக்கு ப்ரபுவும், ஸ்வாமியும், தைவமும் ஆகுவார். அந்த பிதாவாகப் பார்த்து எங்களை யாருக்குக் கொடுக்கிறாரோ அந்த மஹாபுருஷன் தான் எங்களுக்கு பர்த்தாவாக (கணவனாக) ஆகுவார். நீ ஏன் வீணாக தர்மத்திலிருந்து விலகி ப்ரலா

பிக்கிறுய்' என்று சொன்னார்கள். அதைக் கேட்ட வாயு பகவானுக்கு பரமகோபம் ஏற்பட்டு, அவர்களுடைய சரீரத்தில் ப்ரவேசித்து ஒவ்வொரு அங்கங்களையும் கூனலாகச் செய்துவிட்டார். ஒரு ஓட்டைப்ரமாணமுள்ளவர்களாக எல்லாரும் ஆகிவிட்டார்கள். தாங்கள் ரூபவதிகள் என்ற கர்வமும் அவர்களுக்குப் போய்விட்டது. மஹாபயமும் உள்ளுக்குள் ஏற்பட்டது. பரம லஜ்ஜையுடன் ராஜனிடம் சென்று தங்களுடைய பிதாவினுடைய சரணங்களைப் பிடித்துக்கொண்டு, தாரை தாரையாக கண்ணீர் ஜலத்தைப் பெருகவிட்டுக்கொண்டு கதறினார்கள். 'புத்ரிகளே இதென்ன! உங்களுடைய வ்ருத்தாந்தம் இன்னதென்று தெரியவில்லையே. யார் தர்மத்தை மீறி நடந்தான்? யாரால் நீங்கள் எல்லோரும் இவ்விதம் கூனிகளாகச் செய்யப்பட்டீர்கள்? அதையெல்லாம் நன்றாகச் சொல்லுங்கள்' என்று ராஜன் கேட்டான். அந்த ராஜனுடைய வார்த்தையைக் கேட்டு, அந்த நூறு கன்னிகைகளும் தகப்பனான ராஜனுடைய பாதங்களில் நமஸ்கரித்துவிட்டு நடந்த வ்ருத்தாந்தத்தைச் சொன்னார்கள். 'ராஜனே! வாயு பகவான் எங்களை அவமதிக்க ஆரம்பித்தான். பலாத்காரம் செய்தான். கொஞ்சமேனும் தர்மத்தையே கவனிக்கவில்லை. நாங்கள் வாயுவினுடைய ஹடத்துக்கு உட்படாமல், 'எங்களுடைய பிதா இருந்துவருகிறார். காமத்தால் ஸ்வயமாக புருஷனை வரித்துக்கொள்கிற ஸ்வைரிணீகள் நாங்களல்ல. பிதாவினிடம் சென்று யாசித்தால், உனக்கு பிதா எங்களை பரிணயம் செய்து கொடுத்துவிடுவார், அதுதான் தர்மம். வீணாக பலாத்காரம் செய்யாதே' என்று சொன்னோம். அந்த வார்த்தை வாயுவினுடைய காதில் படவேயில்லை. உடன், மஹா கோபத்தையடைந்து எங்களை இவ்விதம் விரூபிணிகளாகச் செய்துவிட்டான்' என்று சொல்லிக் கதறினார்கள். பிதாவான ராஜனும் தன் கன்னிகைகளுடைய வார்த்தையைக் கேட்டு, பரம தார்மிகனானதால் கொஞ்சமேனும் கோபத்தை யடையாமல்

வாயுவையும் சபித்துவிடாமல், தனது புத்ரிகளைப் பார்த்து சொன்னன். அதாவது :—

क्षान्तं क्षमावतां पुत्र्यः कर्तव्यं सुमहत्कृतं ।
ऐकमत्यमुपागम्य कुलं चावेक्षितं मम ॥
अलंकारो हि नारीणां क्षमा तु पुरुषस्य वा ॥
दुष्करं तच्च यत् क्षान्तं त्रिदशेषु विशेषतः ।
यादृशी वः क्षमा पुत्र्यः सर्वासां अविशेषतः ॥
क्षमा दानं क्षमा यज्ञः क्षमा सत्यं हि पुत्रिकाः ।
क्षमा यशः क्षमा धर्मः क्षमयाविष्ठितं जगत् ॥

𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌂 𑌕𑍍𑌷𑌮𑌾𑌵𑌤𑌾𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑍍𑌯𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌸𑍁𑌮𑌹𑌤𑍍𑌕𑍃𑌤𑌂 ।
𑌐𑌕𑌮𑌤𑍍𑌯𑌮𑍁𑌪𑌾𑌗𑌮𑍍𑌯 𑌕𑍁𑌲𑌂 𑌚𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑌂 𑌮𑌮 ॥
𑌅𑌲𑌂𑌕𑌾𑌰𑍋 𑌹𑌿 𑌨𑌾𑌰𑍀𑌣𑌾𑌂 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌤𑍁 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌵𑌾 ॥
𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑌂 𑌤𑌚𑍍𑌚 𑌯𑌤𑍍 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑍇𑌷𑍁 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌯𑌾𑌦𑍃𑌶𑍀 𑌵𑌃 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑌾𑌂 𑌅𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ॥
𑌕𑍍𑌷𑌮𑌾 𑌦𑌾𑌨𑌂 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌯𑌜𑍍𑌞𑌃 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌹𑌿 𑌪𑍁𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌃 ।
𑌕𑍍𑌷𑌮𑌾 𑌯𑌶𑌃 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌕𑍍𑌷𑌮𑌯𑌾𑌵𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌂 𑌜𑌗𑌤𑍍 ॥

க்ஷாந்தம் க்ஷமாவதாம் புத்ரய: கர்தவ்யம் ஸுமஹத்க்ருதம் ।
ஏகமத்ய முபாகம்ய குலம் சாவேக்ஷிதம் மம ॥
அலங்காரோ ஹி நாரீணும் க்ஷமா து புருஷஸ்யவா ॥
துஷ்கரம் தச்ச யத் க்ஷாந்தம் த்ரிதசேஷு விசேஷத: ।
யாத்ருசீ வ: க்ஷமா புத்ரய: ஸர்வாஸாம் அவிசேஷத: ॥
க்ஷமாதாநம் க்ஷமாயக்ஞ: க்ஷமாஸத்யம் ஹி புத்ரிகா: ।
க்ஷமாயச: க்ஷமாதர்ம: க்ஷமயாவிஷ்டிதம் ஜகத் ॥

என்ற வாக்யங்களால் ராஜன் புத்ரிகளை ஸமாதானம் செய்தான். 'ஹே புத்ரிகளே! பொறுமையை கைக்கொண்டவர்கள் அவச்யம் அனுஷ்டிக்கவேண்டியது பொறுமைதான். பொறுமையை கைக்கொள்வது என்பது மேலான கர்மாவாக ஆகும். தேவனே வந்து ப்ரார்த்திக்கும் காலத்திலுங்

கூட மனதில் விகார லேசமில்லாமலிருப்பதோ, தங்களுடைய தேஹத்தைக் குறுகிப்போகும்படி செய்த காலத்திலும் கோபம் வராமலிருப்பதோ, மற்றவர் எவருக்கும் அஸாத்யமான கார்யமாகும். குலத்திற்கு அநுரூபமான கார்யத்தை நீங்கள் செய்தீர்கள். புருஷனோ, ஸ்த்ரீயோ யாரானாலும் அன்யர்கள் செய்த அபராதத்திற்கு பதில் செய்ய சக்தி இருந்தும்கூட பதில் அபகாரம் செய்யாமல் ஸஹித்துக்கொண்டிருக்கும் பொறுமை என்பது அவர்களுக்கு ரொம்பவும் அலங்காரமாகும். அதிலும் ரூபம், ஐச்வர்யம் இவை முதலியவைகளால் நிறைந்த தேவர்களிடத்திலும் கொஞ்சமேனும் மயக்கமில்லாமல், பொறுமையுடன் நீங்கள் இருந்துவந்தது ரொம்பவும் விசேஷமானது. க்ஷமையினால் ஸத்பாத்ரத்தில் தானம் செய்த புண்யத்தை அடையலாம். யக்ஞ அனுஷ்டானத்தினால், ஸத்ய வசனத்தினால் எந்த லாபமோ அதையெல்லாம் க்ஷமையினால் அடையலாம். க்ஷமையினால் யசஸ் ஏற்படும். க்ஷமையினால் தர்மம் ஸித்திக்கும். க்ஷமையினால்தான் ஸகல ஜகத்தும் நிலைத்து நிற்கிறது. பூமியில் இருக்கிற ப்ராணிகள் செய்யும் அக்ரமங்களை பூமி எவ்வளவு ஸஹித்துக்கொண்டிருக்கிறது. அதுவும் க்ஷமையினால்தான். ஆகையால் புத்ரிகளே! க்ஷமை என்பது ப்ராணிகளுக்கு ஏற்படுவது ரொம்பவும் கஷ்டமானது. மனுஷ்யர்களுக்குள்ளேயே ஒருவன் நமக்கு அபகாரத்தைக் செய்துவிட்டால் அவனுக்கு நாம் பதில் செய்யாமல் பேசாமலிருப்பதுதான் ஸ்த்ரீகளுக்கோ, புருஷர்களுக்கோ, அலங்காரமாகும். ஆனால் அவ்விதம் ஸஹித்துக்கொண்டு பேசாமலிருப்பது என்பது அஸாத்யமான கார்யமாகும். அப்படி க்ஷமையை அனுஷ்டிக்க முடியாமல் மனுஷ்யர்களுக்கு மனுஷ்யர்களிடத்தில் கோபம் ஏற்பட்டாலும் அதனால் அதிக பாதகமில்லை என்று நினைக்கக் கூடும். தேவர்களோ மனுஷ்யர்களுக்கு பூஜ்யமான நிலையில் இருக்கக்கூடியவர்கள். அவர்கள் மனுஷ்யர்களிடம் என்ன அபசாரத்தைச் செய்தாலும் அதைப் பொறுத்துத்

தான் ஆகவேண்டும். அவர்களை எதிர்க்க முடியுமா? ஆகையால் தேவர்களை உத்தேசித்து பொறுமையை அனுஷ்டிப்பது ரொம்பவும் விசேஷமான தர்மமாகும். அதை நீங்கள் அனுஷ்டித்ததைப்பற்றி நான் ரொம்பவும் ஸந்தோஷமடைகிறேன்" என்று ராஜன் சொல்லிவிட்டு, புத்ரிகளையும் அவரவர்களுடைய இருப்பிடத்திற்குப் போய்வரும்படி ஆக்ஞாபனம் செய்தார்.

பிறகு மந்த்ரிகளை அழைத்து இந்த கன்னிகைகளை யாருக்கு கல்யாணம் செய்துகொடுக்கலாம் என்ற விஷயத்தைப்பற்றி மந்த்ராலோசனை செய்தான். ராஜனுடைய எண்ணமோ, ஸமானமான குலமாயிருக்கவேண்டும்; தேச காலமும் ஒத்துவரவேண்டும்; கூனிகளாகப்போன இந்த நூறு கன்னிகைகளையும் ஏற்றுக்கொள்கிறவன் ஒருவன் வரவேண்டுமே; யார் வரப்போகிறுன் என்பதுதான். அந்தக்காலத்தில் சூளீ என்ற ஒரு மஹர்ஷியானவர் ஊர்த்வ ரேதஸ்ஸாக இருந்துகொண்டு முக்யமாக ப்ரும்மஸாக்ஷாத்காரமாக மஹா தபஸ்ஸைச் செய்துவந்தார். அவருக்கு ஸோமதா என்ற ஒரு கந்தர்வ கன்னிகையானவள் பரிசர்யை செய்துவந்தாள். ப்ரதிதினம் அந்த மஹர்ஷிக்கு அவள் நமஸ்காரம் செய்துவிட்டு, பல மூலாதிகளை அர்ப்பணம் செய்து, சுச்ரூஷணபணியாக (கைங்கர்யத்தில் ஈடுபட்டவளாக) இருந்துவந்தாள். காலக்ரமத்தில் அந்த மஹர்ஷிக்கு அவளிடம் ஒருவிதமான கருணை உண்டாயிற்று. அவளைப் பார்த்து, "ஹே, கந்தர்வ கன்னிகையே! உனது சுச்ரூஷையினுல் நான் ரொம்பவும் ஸந்தோஷமடைந்தேன். உனக்கு நான் செய்யவேண்டிய ப்ரத்யுபகாரம் என்ன" வென்று கேட்டார். அந்த ஸோமதை என்ற கந்தர்வ ஸ்த்ரீயும் தன்னுடைய விஷயத்தில் மஹர்ஷி ரொம்பவும் ஸந்துஷ்டராக இருக்கிறுர் என்பதைத் தெரிந்துகொண்டு அவரை ப்ரார்த்தித்ததோ:-" மஹர்ஷே! ப்ரும்மவர்ச்சஸ்ஸோடு தாங்கள் ஜ்வலிக்கிறீர்கள். தாங்கள் மஹா தபஸ்வி; பரப்ரும்மம் என்றே தங்களைச் சொல்லவேண்டும். ப்ரும்மவர்ச்சஸ்

ஸூக்குக் காரணமான மஹா தபஸ்ஸோடுகூடின ஒரு புத்ரனை தங்களிடமிருந்து நான் இச்சிக்கிறேன். நான் இது வரையிலும் ஒரு புருஷனுக்கும் பார்யையாக இருந்தவ ளல்ல. தங்களைச் சரணமடைந்தேன். மஹா தபஸ்வி யான புத்ரனை நான் தங்கள் மூலம் அடைய இச்சிக்கி றேன். ஆனால் அபதியாக இருப்பதில்தான் எனக்கு ஸந் தோஷம். இனியும் ஒரு புருஷனுக்கு பார் யையாக இருக்கப்போகிறதுமில்லை. நான் ஒரு நைஷ்டிக ப்ரும்மசாரிணீ. நைஷ்டிக ப்ரும்மசாரிணியாயுள்ள நானும் தங்களையே சரணமடைந்துவிட்டதினால் ப்ரும்மா எவ்விதம் ஸநகாதிகளை மனதினால் ஸ்ருஷ்டித்தாரோ, அதுபோல் தாங்களும் மானஸிகமாக ஒரு புத்ரனை ஸ்ருஷ்டித்து எனக்குக் கொடுக்கவேண்டும். அதுதான் என்னுடைய முக்ய அபிலாஷை." அவளுடைய விஷயத்தில் ரொம்பவும் ப்ரஸந்நராக இருந்த அந்த சூளீ என்ற மஹர்ஷியும், தன் னுடைய தபோ சக்தியினால் ஸநகாதிகளைப்போன்ற ஒரு மானஸிக புத்ரனை ஸ்ருஷ்டித்து அந்த ஸோமதை என்ற கந்தர்வ ஸ்த்ரீக்கு அனுக்ரஹம் செய்தார். அந்த புத்ர னுக்கு ப்ரும்மதத்தன் என்ற பெயரையும் நாமகரணஞ் செய்தார். அந்த ப்ரும்மதத்தன் என்ற ஸோமதையினு டைய குமாரனும் கம்பில என்ற ராஜனால் உண்டுபண்ணப் பட்ட ராஜதானியை அடைந்து, பரம ஸம்பத்தோடு ஸ்வர்க்கலோகத்தை இந்த்ரன் ஆண்டுவருவதுபோல் ஆண்டு வந்தான். அந்த ப்ரும்மதத்தனுக்குத் தான் குசநாபன் என்ற மஹாராஜனும் வாயுபகவானால் கூனிகளாகச் செய் யப்பட்ட தன்னுடைய கன்னிகைகளான நூறுபேர்களையும் கல்யாணம் செய்துகொடுப்பதாக நிச்சயம் செய்தார். உடன் மந்த்ரிகள்மூலம் அந்த ப்ரும்மதத்தனை வரவழைத்து திவ்யமான முஹூர்த்தத்தில் அந்த நூறு கன்னிகைகளை யும் ஸந்தோஷமான மனதுடன் ப்ரும்மதத்தனுக்கு பாணி க்ரஹணம், செய்துவைத்தார். அந்தப்ரும்மதத்தனும் அந்த கன்னிகைகளுடைய பாணிகளை க்ரமமாக க்ரஹித்துக்

கொண்டான். சூளீ என்ற மஹர்ஷியினுடைய மானஸிக புத்ரனை ப்ரும்மதத்தனுடைய கையினுல் தொடப்பட்ட மாத்ரத்திலேயே இந்த நூறு ராஜ கன்னிகைகளும் வாயு பகவானுல் உண்டான கூனல் தோஷம் நிவர்த்தியாகி திவ்யஸௌந்தரிகளாக ஆகிவிட்டார்கள். குசநாபன் என்ற அரசனும் தன் புத்ரிகளை இவ்வித வைபவத்துடன் கூடின வர்களாகப் பார்த்து பரம ஸந்தோஷமடைந்தான். பிறகு விமரிசையாக கல்யாண மஹோத்ஸவத்தை பூர்த்திசெய்து, தன் புத்ரிகளான நூறு பேர்களையும் ப்ரும்மதத்தனுடன் காம்பிலி என்ற நகரத்திற்கு, ஏராளமான பாரிபர்ஹத்துடன் (சீர்வகையருவுடன்) அனுப்பிவைத்தார். ஸோமதை என்ற கந்தர்வஸ்த்ரீயும் தன் புத்ரனுடைய வைபவத்தைப் பார்த்து ஸந்தோஷத்தையடைந்து, குசநாபன் என்ற அரசனையும் ச்லாகித்துக்கொண்டு தன்னுடைய புத்ரனுக்கு ஏற்பட்ட திவ்ய ஸௌந்தரிகளான நூறு ஸ்நுஷைகளையும் பார்த்துப் பார்த்து, தொட்டுத் தொட்டு, பரமானந்தத்தை அனு பவித்து வந்தாள்.

34-வது ஸர்க்கம்.

குசநாபன் என்ற அரசன் தனது நூறு கன்னிகை களையும் ப்ரும்மதத்தனுக்கு விதிவத்தாக பரிணயம் செய்து கொடுத்துவிட்ட பிறகு, ப்ரும்மதத்தனும் அந்த ஸ்த்ரீகளு டன் காம்பிலி என்ற நகரத்தில் பரம ஸௌக்யமாக வாழ்ந்து வரும்பொழுது, குசநாபன் என்ற அரசன் தனக்கு புத்ரன் இல்லை என்ற காரணத்தால் துக்கப்பட்டு, புத்ர காமேஷ்டி யாகத்தைச் செய்தான். அந்த யாகம் நடக் கும்பொழுது, குசநாபனுடைய பிதாவாயும், ப்ரும்மாவி னுடைய மானஸிக புத்ரனுயும் உள்ள குசன் என்ற மஹர்ஷி யானவர் ப்ரத்யக்ஷமாக தர்சனம் கொடுத்து "குசநாபா! உனக்கு ஸமானமான புத்ரன், அவச்யம் உண்டாகப் போகி ருன். காதி என்ற பெயருடன் லோகத்தில் ப்ரஸித்தி அடை வான். அதன்மூலம் லோகத்தில் கீர்த்தியையும் சாச்வத

மாக நீ அடைவாய்" என்று சொல்லிவிட்டு ப்ரும்மலோகம் சென்றுவிட்டார். புத்ரகாமேஷ்டியாகமும் முடிந்தது. சில காலம் கழித்து, குசநாபனுக்கு காதி என்ற பெயருள்ள புத்ரனும் உண்டானுன். அந்த காதி என்பவர்தான், ராமா, என்னுடைய பிதாவாக ஆகுவார். குசனுடைய வம்சத்தில் நான் பிறந்தவனுனதினுல், கௌசிகன் என்று எனக்குப் பெயர் ஏற்பட்டது. எனக்குமுன் ஜேஷ்டையாக (அக்காள்) ஸத்யவதி என்று பெயருடைய ஒரு பெண்ணும் காதி என்ற என் தகப்பனுருக்குப் பிறந்தாள். அவளை என் தகப்பனுர் ரிசீகர் என்ற மஹர்ஷிக்கு விதிவத்தாக விவாஹம் செய்து கொடுத்தார். பர்த்தாவை அனுஸரித்து நடப்பது என்ற பாதிவ்ரத்யத்திற்கு என் தமக்கையான ஸத்யவதிக்கு ஸமான மாக மற்ருெரு ஸ்த்ரீயைச் சொல்லமுடியாது. அந்த பாதிவ்ரத்ய மஹிமையினுல் வெகுகாலம் கழித்து சரீரத்துடன் ஸ்வர்க்கலோகமும் சென்ருள். ஸ்வர்க்கலோகம் சென்றது மாத்ரமல்ல. கௌசிகீ என்ற ஒரு மஹாநதியாகவும் ஆவிர் பவித்து ஹிமவத்பர்வதத்தினுடைய தாழ்வரையில் ப்ர வஹித்து வருகிருள். ரொம்பவும் நிர்மலமாயும் மதுரமாக வும் உள்ள ஜலத்துடன் கூடினவள். ஸமஸ்த ப்ராணிக ளும் அந்த நதியின் ஸ்நான, பான, தர்சன, மாத்ரத்தினுல், ஸர்வபாபத்திலிருந்தும் விநிர்முக்தர்களாகஆகி, ஸகல புரு ஷார்த்தங்களுக்கும் பாத்ரர்களாக ஆகவேண்டுமென்று, ஹிதத்தைச் செய்வதற்காக, ஒரு மஹாநதி ரூபமாக பரி ணமித்தாள். ஸத்யவதி என்ற என்னுடைய ஜேஷ்ட பகினீ (தமக்கை) இந்த சரீரத்தோடு ஸ்வர்க்கலோகம் சென்ற மஹிமைக்கோ, மஹாநதிரூபமாக ஆகி ஹிமவானுடைய தாழ் வரையில் ஸஞ்சரித்து ப்ரவஹித்துக்கொண்டு ஸகல ஜனங் களுக்கும் நன்மையைச் செய்துவந்ததற்கோ அவளுடைய பாதிவ்ரத்யம்தான் காரணம்.

पतिव्रता तु या नारी भर्तारं समुपासते ।
सशरीरातु सा स्वर्गं एष्यत्येव नसंशयः ॥

𑌪𑌤𑌿𑌵𑍍𑌰𑌤𑌾 𑌤𑍁 𑌯𑌾 𑌨𑌾𑌰𑍀 𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌸𑌶𑌰𑍀𑌰𑌾𑌤𑍁 𑌸𑌾 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌏𑌷𑍍𑌯𑌤𑍍𑌯𑍇𑌵 𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 ॥

பதிவ்ரதா து யா நாரீ பர்தாரம் ஸமுபாஸதே ।
ஸசரீராது ஸா ஸ்வர்கம் ஏஷ்யத்யேவ நஸம்சய: ॥

என்ற தர்மசாஸ்த்ர வசனம், என்னுடைய ஜேஷ்ட பகினீ (தமக்கையான) கௌசிகீ என்பவளுடைய விஷயத்தில் அன்வர்த்தமாக ஆயிற்று. அதனுல்தான் எனக்கு ரொம்பவும் ஹிமவத் பர்வதத்தினுடைய தாழ்வரையில் தபஸ் செய்வதில் உத்ஸாஹம். என் தமக்கையினிடத்தில் ரொம்பவும் ஸ்நேஹபாவத்தால், அந்த நதியின் தீரத்திலேயேதான் என்னுடைய ஆச்ரமம் இருந்துவருகிறது. அவளோ, ஸத்யமான தர்மத்தில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டவள். அந்த நதியில் ஸ்நானம் செய்தமாத்ரத்தில், மனதிற்கு பொய் சொல்வதில் உத்ஸாஹம் ஏற்படாது. அவ்விதமான புண்ய நதியையும் மற்றொரு இடத்தில் பார்க்கமுடியாது. ஆனுல், அந்த இடத்தைவிட்டு நான் ஸித்தாச்ரமத்திற்கு வந்த காரணத்தையும் நீ அறியவேண்டும்.

"गयायां पिण्डदानाच्च" (𑌗𑌯𑌾𑌯𑌾𑌂 𑌪𑌿𑌣𑍍𑌡𑌦𑌾𑌨𑌾𑌤𑍍) (கயாயாம் பிண்டதாநாச்ச) என்ற சாஸ்த்ரத்தினுல், பித்ருக்களை உத்தேசித்து அக்ஷயவடவ்ருக்ஷத்தின் மூலத்தில் பிண்ட ப்ரதானம் செய்வது கயா க்ஷேத்ரத்தில்தான் ஸாத்யமானது என்பது போல், நான் கைக்கொண்ட நியமமானது ஸித்தாச்ரமத்தில்தான் நிறைவேறக்கூடியது என்ற நியமம் சாஸ்த்ரங்களின் மூலம் ஸித்திக்கிறபடியால், நான் இந்த ஆச்ரமம் வந்து சேர்ந்தேன்.

गायत्र्याख्य महा मन्त्र पुरश्चरणसिद्धये ।
सिद्धाश्रमं व्रजेत् शुद्धः जपेत् तत्रैव शुद्धधीः ॥

𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌖𑍍𑌯 𑌮𑌹𑌾 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰 𑌪𑍁𑌰𑌶𑍍𑌚𑌰𑌣𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇 ।
𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌶𑍍𑌰𑌮𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 𑌶𑍁𑌦𑍍𑌧𑌃 𑌜𑌪𑍇𑌤𑍍 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌶𑍁𑌦𑍍𑌧𑌧𑍀𑌃 ॥

காயத்ரயாக்ய மஹா மந்த்ர புரச்சரணஸித்தயே ।
ஸித்தாச்ரமம் வ்ரஜேத் சுத்த: ஜபேத் தத்ரைவ சுத்ததீ: ॥

என்ற மந்த்ரமஹோததி வாக்யத்தை அனுஸரித்து இன்னென்ன மந்த்ரத்தை இன்னென்ன க்ஷேத்ரங்களில்தான் ஸித்தி செய்யவேண்டும்; அதுவும் காயத்ரீ மஹாமந்த்ரத்தை ஸித்தாச்ரமத்தில்தான் ஸித்தி செய்யவேண்டும் என்று ஏற்பட்டிருக்கிறபடியால், அதை அனுஸரித்து நான் ஸித்தாச்ரமம் வந்து சேர்ந்தேன். அது உன் அனுக்ரஹத்தால் பூர்த்தியடைந்தது. ராமா என்னுடைய உத்பத்தியை இவ்விதம் நீ அறியவேண்டும். வம்ச விஸ்தாரத்தையும் சொல்லிவிட்டேன். இதோ தெரிகிற கிரிவ்ரஜம் என்ற நகரத்தின் மஹிமையும் சொல்லப்பட்டது. நான் இவ்விதம் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே அர்த்தராத்ரி ஆகிவிட்டது. ராமா நீ படுத்துக்கொண்டு ஸுகமாக நித்ரை செய். மரம் செடிகள்கூட அசங்கவில்லை. ம்ருக பக்ஷிகளுடைய சப்தமோ அடங்கிவிட்டது. காடமான இருள் நாலாபக்கங்களிலும் வ்யாபித்துவிட்டது" என்று சொல்லிவிட்டு மஹா தேஜஸ்வியான விச்வாமித்ர மஹர்ஷி மௌனமாக இருந்துவிட்டார். மற்ற மஹர்ஷிகளும் விச்வாமித்ர மஹர்ஷி ரொம்பவும் இங்கிதம் தெரிந்தவரென்று அவரை ச்லாகித்துவிட்டு அவருடைய வம்சத்தையும் குசிக வம்சம் பெரிய வம்சம், குசன் என்ற ப்ரும்மாவினுடைய புத்ரன் பரமதார்மிகன், குசவம்சத்தில் பிறந்தவர்கள் மஹாத்மாக்கள், அதிலும் விச்வாமித்ர மஹர்ஷி விசேஷமாகப் பெரியவர், கௌசிகி என்ற நதியோ லோகத்தைப் பாவனம் செய்யக்கூடிய மஹாநதி என்று புகழ்ந்துவிட்டு மஹர்ஷிகளும் மௌனமாக இருந்தார்கள். விச்வாமித்ர மஹர்ஷியும் கொஞ்சம் நித்ரை செய்தார். ராமனும் லக்ஷ்மணனோடுகூட விச்வாமித்ர மஹர்ஷியினுடைய வம்சத்தைக் கேட்டு பரம ஆச்சர்யத்துடன் மஹர்ஷியையும் ச்லாகித்துவிட்டு நித்ரை செய்தார்.

35—44 ஸர்க்கங்கள் :

கங்காவதரணம்

ஸ்ரீராமன், 'விச்வாமித்ரர் தன்னுடைய வம்சத்தை அழகாக வர்ணித்தார், அதுபோல் நமது பூர்வாச்ரமமாகிய மஹாவிஷ்ணு என்ற நிலைமையையும், நமது பாதாரவிந்தத்திலிருந்து உண்டான கங்கையினுடைய வைபவத்தையும் லோகத்தில் ப்ரசுரமாகச் செய்யவேண்டும், தன்னுடைய தமக்கையான கௌசிகீ என்ற மஹாநதிக்கு கங்காநதியை மேலாகச் சொல்கிறாரா ; ஸமானமாகச் சொல்கிறாரா அல்லது கீழாகச் சொல்கிறாரா என்பதையும் நன்றாக அந்த மஹர்ஷியின் வாக்குமூலமாக தெரிந்துகொள்ளவேண்டும்' என்று நினைத்தார். அதைனுயஸரித்து மேல்வரும் கதாபாகத்தை அறியவும்.

சோணபத்ராதீரத்தில் மஹர்ஷிகளோடுகூட விச்வாமித்ரர் அன்றிரவை கழித்துவிட்டு ப்ராதக்காலத்தில் தானும் ஸ்நான ஸந்த்யாவந்தனாதிகளைச் செய்து முடித்துவிட்டு ராமனை எழுப்பினார். "ஹே, ராமா! அருணோதயமாகிவிட்டது. எழுந்திருந்து ஸ்நான ஸந்த்யாவந்தனாதிகளை முடித்துக் கொண்டு வெயிலுக்கு முன்னால் ப்ரயாணமாக வேண்டும்" என்று சொன்னார். ராமன் அதைக் கேட்டு, பரபரப்புடன் எழுந்திருந்து, ப்ரபாதகாலத்தில்,

ब्राह्मे मुहूर्त्ते उत्थाय चिन्तयेत् आत्मनो हितं ॥

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍇 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍍𑌤𑍇 𑌉𑌤𑍍𑌥𑌾𑌯 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋 𑌹𑌿𑌤𑌂 ॥

ப்ராஹ்மே முஹூர்த்தே உத்தாய சிந்தயேத் ஆத்மனோ ஹிதம் ॥

என்ற ஸ்ம்ருதியை அனுஸரித்து, ஸ்வரூப த்யானம் செய்துவிட்டு, பூர்வாங்கத்தில் செய்யவேண்டிய ஆஹ்நிகங்களையும் ஒழுங்காகச் செய்துவிட்டு, ப்ரஸாதனம் செய்வதற்கு (புறப்பட) தய்யாராக இருந்துகொண்டு மஹர்ஷியைப் பார்த்து

"மஹர்ஷே, சோணபத்ரையில் ஜலம் ரொம்பவும் நிர் மலமாக இருக்கிறது. ஸொல்பஜலம்தான் ஓடுகிறது. மணல் களோ ரொம்பவும் அழகாக அலங்கரிக்கப்பட்டதாக இருக் கிறது. ஆகையால் அறித்து ஓடுகிறபடியால் ஓடமில்லா மலே தாண்டிவிடலாமென்று தோன்றுகிறது. எந்த வழி யாகப் போகவேண்டும்" என்று கேட்டார்.

விச்வாமித்ர மஹர்ஷி சொன்னதாவது, "ராமா, இது தான் ஸரியான வழி, குறுக்கு மார்க்கம். மஹர்ஷிகளெல் லாம் வரிசையாகப் போகிறுர்கள் பார்" என்று சொல்லி விட்டு, மஹர்ஷிகளுக்கு அந்த தேசம் முன்பே பரிசிதமான திஞல், முன்நோக்கிப் போகும்படி செய்தார். விச்வாமித்ர ரால் இவ்விதம் சொல்லப்பட்ட மஹர்ஷிகள், ப்ரஸ்தான உத்யுக்தர்களாக ஆகி, அபூர்வமான அந்த சோணபத்ரா நதியையும் தாண்டி, நடுவில் அநேக அழகான வனங்களே யும் ஆச்ரமங்களேயும் பார்த்துக்கொண்டு, சென்ருர்கள். ராமலக்ஷ்மணர்களும் அவ்விதமே விச்வாமித்ர மஹர்ஷியைப் பின்துடர்ந்து சென்ருர்கள். வெகுதூரம் நடந்து மத்யான்ன ஸமயத்தில் ரிஷிகணங்களால் ஸேவிக்கப்பட்ட கங்காநதி யைப் பார்த்தார்கள். கங்கையைப் பார்த்த மாத்ரத்திஞல் ராமலக்ஷ்மணர்கள் மஹர்ஷிகள் முதலானவர்கள் பரம ஸந் தோஷத்தையடைந்து மத்யான்ன காலத்தில் அகமர்ஷண ஸூக்தம் முதலான ஜபங்களோடு கங்கா ஸ்நானம் செய்து விட்டு, தேவ, ரிஷி, பித்ரு, தர்ப்பணங்களேயும் செய்து விட்டு, ஹம்ஸ பக்ஷி, ஸாரஸ பக்ஷி, முதலானவைகளால் ஸேவிக்கப்பட்ட கங்கையினுடைய தீரத்தில், சுத்தமான இடத்தில் வாஸஸ்தானம் கல்பித்துக்கொண்டு, தேவதாரா தனம், அக்னிஹோத்ரம் முதலான கர்மாக்களேயும் செய்து விட்டு,

यज्ञशिष्टामृत भुजः यान्ति ब्रह्म सनातनं ।

யஜ்ஞஶிஷ்டாம்ருத ஹுஜः யாந்தி ப்ரஹ்ம ஸநாதநம் ।

யக்ஞசிஷ்டாம்ருத புஜ: யாந்தி ப்ரஹ்ம ஸநாதநம் ।

என்ற ஸ்ம்ருதி ப்ரகாரம் பஞ்ச மஹாயக்ஞம் என்ற வைச்வதேவத்தையும் செய்து யக்ஞ சிஷ்டமான ஹவிஸ்ஸை புஜித்துவிட்டு, விச்வாமித்ர மஹர்ஷியைச் சூழ்ந்துகொண்டு, ஆஸனத்தில் உட்கார்ந்துகொண்டு மஹர்ஷிகள் ஜ்வலித்து வந்தார்கள். ராமனும், கங்கையினுடைய வைபவத்தைப் பார்த்து ரொம்பவும் ஸந்தோஷமடைந்து மஹர்ஷிகளுடைய கூட்டத்தில் லக்ஷ்மணனுடன் விச்வாமித்ர மஹர்ஷிக்கு ப்ர தக்ஷிண நமஸ்காராதிகள் செய்துவிட்டு, ப்ரச்னம் செய் தார்.

"மஹர்ஷே! கங்கையினுடைய விஷயமாக ஏதோ கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற இச்சை இருந்துவருகிறது. கங்காதேவியானவள் மூன்று லோகத் திலும் ஆக்ரமித்துக்கொண்டு பூலோகத்தில் ஸமுத்ரத்தில் ஸங்கமத்தை யடைந்தாள் என்பது எப்படி ஸித்திக்கும்?" இவ்விதம் ராமனால் ப்ரச்னம் செய்யப்பட்ட மஹர்ஷி யானவர், கங்கையினுடைய ஜன்மா (பிறவி), மூன்று லோகங்களிலும் கங்கையினுடைய வ்யாப்தி (ப்ரசாரம்) இவைகளைச் சொல்வதற்கு ஆரம்பித்தார். 'ராமா! பர்வத ராஜனான ஹிமவான், மஹா ப்ரஸித்தராக விளங்கிவருகி றார் என்பது உனக்குத் தெரிந்த விஷயம். தங்கம்,வெள்ளி தாம்பரம் முதலான தாதுக்களுக்கு இருப்பிடமான ஸ்தா னம் இந்த ஹிமாலயமாகும். அந்த ஹிமவான் என்ற பர் வத ராஜனுக்கு மனோரமா என்று அழகான ஒரு பத்னி இருந்தாள். அவளிடம் இரண்டு கன்னிகைகளுண்டானார் கள். அதில் முதலாவது கன்னிகைக்கு கங்கை என்று பெயர். ஜ்யேஷ்டையான கங்கை என்றவளை தேவர்கள் பர் வத ராஜனிடம் ஸ்வர்க்கம், பூலோகம், பாதாளம், என்ற மூன்று லோகங்களிலும் ஜலரூபியாக வ்யாபிக்கும் சக்தி யுள்ளவளாகச் செய்வதற்கு முன்பாக ஸ்வர்க்க லோகத்தில் வ்யாபிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அப்படி ப்ரார்த் தித்துக்கொண்டதற்கு, ஷண்முகனுடைய ஜனனம் ஏற்பட

வேண்டுமென்று தேவதைகள் நினைத்ததே காரணமாகும். இவ்விதம் ப்ரார்த்தித்த தேவர்களிடம், याचकाः न प्रत्याख्येयाः (யாசகா: ந ப்ரத்யாக்யேயா:) (யாசகா: ந ப்ரத்யாக்யேயா: என்ற தர்மத்தை முன்னிட்டும், தாரகாஸுரன் மூலமாக மஹா பயத்தை அடைந்த மூன்று லோகங்களையும் ரக்ஷிப்பதற்கு ஸ்கந்தன் ஆவிர்பவிக்கவேண்டும் என்ற எண்ணத்துடனும், ஜலரூபமாயிருந்துகொண்டு மூன்று லோகங்களையும் பரிசுத்தம் செய்துவைக்க சக்தியுள்ளவளாயும், தன்னுடைய இச்சையை அனுஸரித்து ஏற்பட்ட மார்க்கத்தில் செல்லக்கூடிய சக்தியுள்ளவளுமான கங்கையை ஹிமவான் தேவர்களிடம் ஒப்புவித்தான். தேவர்களும் கங்கையை ஸ்வீகரித்துக்கொண்டு ஸ்வர்க்கலோகம் சென்றார்கள்.

பர்வத ராஜனுடைய இரண்டாவது கன்னிகையான உமை என்றவளோ பரமேச்வரனையே பர்த்தாவாக அடைய வேண்டுமென்று உக்ரமான தபஸ்ஸைச் செய்ததினால் பர்வத ராஜனும் ப்ரஸந்நனாக பரமேச்வரனுக்கே அந்த உமா தேவியைப் பரிணயம் செய்துகொடுத்தார். இவ்விதம் பர்வத ராஜனுடைய இரண்டு பெண்களுடைய உத்பத்தியானது சொல்லப்பட்டது. கங்கை, நதிகளுக்குள் ச்ரேஷ்டமானவள். உமாதேவியும் மஹா பதிவ்ருதா சிரோமணி. இந்த ஆக்யானத்தை உனக்கு நான் ஸங்க்ரஹமாக (சுருக்கமாக) சொன்னேன். ஹிமவானுடைய பெண்ணான கங்கையோ முதலில் ஆகாசமார்க்கத்தையடைந்து, ஸ்வர்க்கலோகத்தில் ஸுரநதி என்ற பெயரோடு விளங்கிவருகிறாள்."

இவ்விதம் கங்கையினுடைய மஹிமையை ரொம்ப ஸங்க்ரஹமாக ராமனுக்கு மஹர்ஷி சொன்னார். விசேஷமாகத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற ஆவல் ஸாமான்யமாக (பொதுவாக சுருக்கமாக) ஞானம் ஏற்பட்டவனுக்குத்தான் ஏற்படும். அதை யறிந்து,

विशेष धर्मप्रकारक जिज्ञासां प्रति सामान्य धर्मप्रकारक ज्ञानं कारणं

𑌵𑌿𑌶𑍇𑌷 𑌧𑌰𑍍𑌮𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌕 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮
𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌕 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌕𑌾𑌰𑌣𑌂

விசேஷ தர்மப்ரகாரக ஜிக்ஞாஸாம் ப்ரதி ஸாமாந்ய தர்மப்ரகாரக ஞாகம் காரணம்

என்ற சாஸ்த்ர ரீதியாக ஸாமான்ய ஞானம் கங்கை விஷயமாக ராமனுக்கு ஏற்பட்டுவிட்டது. அதற்குமேல் விசேஷமாக கங்கையின் வ்ருத்தாந்தத்தைப் பற்றிச் சொல்வதற்கு விச்வாமித்ர மஹர்ஷி ஆரம்பித்தார்.

ஹிமவானுக்கு இரண்டு கன்னிகைகள் பிறந்தார்கள் என்று முன்பு சொன்னோம். முதலாவது கன்னிகைதான் ப்ரக்ருதத்தில் வர்ணிக்கப்படும் கங்கை என்று சொல்லப் படுவாள். கங்கை என்ற பெயர் பின்னால் வந்த காரணப் பெயர் ஆகும். பிறந்த மாத்ரத்தில் ஏற்பட்ட பெயர் குடிலை என்று சொல்லப்படும். அந்த குடிலை என்ற ஹிமவானுடைய முதல் பெண்ணை, பின்பு பரமசிவனுடைய வீர்யத்தை தரிப்பதற்காக (தாங்க) தேவலோகத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் ரக்ஷிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் அந்த ஹிமவானை தேவதைகள் ப்ரார்த்தித்தார்கள். ஹிமவானும் தேவதைகளிடம் அவ்விதமே தன் முதல் பெண்ணை குடிலையை ஒப்புவித்துவிட்டார். தேவர்களும் குடிலை என்றவளை தேவலோகத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் ப்ரும்மலோகமும் சென்று 'சிவனுடைய வீர்யத்தை தரிக்க, சரியான ஆள் கொண்டுவந்துவிட்டோம்' என்று சொன்னார்கள். ப்ரும்மாவோ, 'இந்த குடிலையினால் சிவனுடைய வீர்யத்தை தரிக்க முடியாது. சிவனுடைய வீர்யத்தை தரிக்க வல்லமையுள்ள புருஷனோ, ஸ்த்ரீயோ லோகத்திலில்லை' என்று சொன்னார்.

அவ்விதம் சொன்ன ப்ரும்மாவினுடைய வார்த்தையை ஆதரவோடு க்ரஹித்துக்கொள்ளாமல், 'சிவனுடைய வீர்யம் என்ன! நான் தரித்துவிடுவேன்' என்று மிகவும் அலக்ஷ்ய

மாக அந்தக் குடிலை பேசினுள். 'சிவ வீர்யத்தை இவ்வளவு ஸுலபமாகப் பேசிவிட்டாள் இந்தக் குடிலை' என்று மனதில் கோபங்கொண்டு 'நீ ஜலரூபமாகப்போகக் கடவாய்' என்று அவளை சபித்துவிட்டார். உடனே ப்ரும்மாவினுடைய சாபத்தால் அவள் ப்ரும்மாண்டத்தினுடைய ஊர்த்வ (மேல்பாக) கடாஹத்தில் ஜலரூபமாக ப்ரவாஹித்து விளங்கி வந்தாள். அதற்குப் பிறகுதான் அவளுக்கு கங்கை என்று பெயர் ஏற்பட்டது. இந்த கங்கையில்தான் அக்னி பகவான் சிவனுடைய வீர்யத்தைக் கொண்டுபோய் வாரி இறைத்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

विष्ण्वंघ्रिणा प्रसरता कटाहे भेदिते अम्बरात् ।
कुटिला विष्णुपादान्तात् पपात आकुलिता ततः ॥
तस्मात् विष्णुपदी ख्याता ॥

விஷ்ண்வங்க்ரிணா ப்ரஸரதா கடாஹே பேதிதே அம்பராத் ।
குடிலா விஷ்ணுபாதாந்தாத் பபாத ஆகுலிதா தத: ॥
தஸ்மாத் விஷ்ணுபதீ க்யாதா ॥

விஷ்ண்வங்க்ரிணா ப்ரஸரதா கடாஹே பேதிதே அம்பராத் ।
குடிலா விஷ்ணுபாதாந்தாத் பபாத ஆகுலிதா தத: ॥
தஸ்மாத் விஷ்ணுபதீ க்யாதா ॥

என்ற வாமன புராண வசனத்தை அனுஸரித்து ப்ரும்மாவினுல் சபிக்கப்பட்ட குடிலை என்றவள், ப்ரும்மாண்டத்தினுடைய ஊர்த்வ கடாஹத்தில் (மேல்பாக கடாஹத்தில்) ஜலரூபமாக விளங்கிவரும்பொழுது, பகவானுன விஷ்ணுவானவர் த்ரிவிக்ரமாவதாரம் செய்து, மேல் லோகத்தில் தன் காலைத் தூக்கும்பொழுது ப்ரும்மாண்டத்தினுடைய ஊர்த்வ கடாஹம் (மேல்பாக மூடி) பேதிக்கப்பட்டு (பிளக்கப்பட்டு) அந்த ஊர்த்வ கடாஹத்தில் ஸம்பந்தப்பட்டிருந்த ஜலரூபமான குடிலை ஆகாசமார்க்க வழியாக ரொம்

பவும் வ்யாகூலமான மனதுடன் கீழே விழுந்தாள். அக் காரணத்தினுல் விஷ்ணுபதீ என்ற பெயரையும் அடைந் தாள். கீழே விழும்பொழுது ப்ரும்மாண்டத்திலுள்ள பாஹ்ய யமான ஜலத்துடன் சேர்ந்திருந்தாள். அந்த ஜலமானது ப்ரும்மாவினுல் தன்னுடைய கமண்டலுவில் அடைத்து தரிக்கப்பட்டது. அந்த ப்ரும்மாண்ட பாஹ்ய ஜலமோ, பரமசிவன் பார்வதியைப் பரிணயம் செய்துகொண்ட பிற்பாடு, பார்வதியும் பரமசிவனும் வேடிக்கையாக க்ரீடை செய்துகொண்டிருக்கும்பொழுது, பார்வதியானவள் தன்னிரு கைகளால் பரமசிவனுடைய இரு கண்களையும் மூடினபொழுது, பரமசிவன் நெற்றிக்கண்ணைத் திறந்த மாத்திரத்தில் பார்வதி உடனே பயந்துநடுக்கமடைந்த தால் அந்த பரமசிவனுடைய கண்களை மூடிக்கொண்டிருந்த அவளுடைய கைகளில் உண்டான வியர்வையே. அந்த வியர்வை ஜலமும் ப்ரும்மாவினுல் கமண்டலுவில்தரிக்கப் பட்டது. பரமசிவனுக்கு ஆநந்தபாஷ்பமும் (கண்ணீர்) பெருகிற்று. அதையும் ப்ரும்மா தன் கமண்டலுவில் தரித் துக்கொண்டார். கங்கை என்ருல் ப்ரும்மாவினுடைய சாபத் தால் குடிலை என்ற ஹிமவானுடைய பெண் ஜலரூபமாக ஆனவளாக ஆகும். அந்த கங்கையும் த்ரிவிக்ரமாவதாரத்தில் விஷ்ணுவினுடைய பாதத்தில் ஸம்பந்தப்பட்டபடியால் விஷ்ணுபதீ என்றும் சொல்லப்படுவாள். அந்த கங்கையோ பார்வதியினுடைய கைகளிலுண்டான வியர்வை ஜலத்தி லும் ஸம்பந்தப்பட்டவள். பரமசிவனுடைய ஆநந்தபாஷ்ப ஜலத்திலும் ஸம்பந்தமடைந்தவள். அதே தீர்த்தத்தால் தான் மஹாவிஷ்ணுவினுடைய பாதாரவிந்தங்களை அபிஷே கம் செய்து, ப்ரும்மா தன் கமண்டலத்தில் அந்த தீர்த்தத்தை தரித்து வைத்துக்கொண்டார். மேற்கண்ட கங்கையினு டைய ஸ்வரூபத்தை வாமன புராணத்தில் இவ்வாறு கூறப் பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் வாமன புராணம், காமிகா ஸம்ஹிதை, சங்கர ஸம்ஹிதை, கங்கா மஹாத்ம்யம் முதலான நூல்களே ப்ரமாணமாக ஆகும். இந்த கங்கை

தான் பகீரதனுல் மஹா தபஸ் செய்து ப்ரார்த்திக்கப்பட்டு, ப்ரும்மாவினுல் பூலோகத்திற்கு அனுப்பப்பட்டது.

கங்காதேவிக்கு த்ரிபதகா என்று பெயர் ஏற்பட்டது. இந்தத் திருநாமமானது ஸ்வர்க்கம், ஆகாசம் இரண்டு லோகங்களிலும் கங்கைக்கு ஸம்பந்தம் ஏற்படுகிறது என்பதை முன்பு சொல்லியிருப்பதினுல் மூன்ருவது லோகத்தில் அந்த கங்கைக்கு உள்ள ஸம்பந்தத்தை மட்டும்தான் இப்பொழுது சொல்லவேண்டும். அதைச் சொல்வதற்காக ராமனுடைய ப்ரச்னத்தை முன்னிட்டு விச்வாமித்ர மஹர்ஷியானவர் சொன்னுர். "ராமா! கைலாஸத்திற்கு அதிபதியான பரமேச்வரன் உமாதேவியை கல்யாணம்செய்து கொண்டு மிதுனீபாவம் என்ற கர்மாவை அந்த பார்வதி தேவியினிடம் செய்ய ஆரம்பித்தார். தேவமானரீதியாக ஆயிரம் வருஷங்கள் சென்றுவிட்டன. ஆகிலும் புத்ரனை உண்டுபண்ணக்கூடிய வீர்யம் வெளிப்படவில்லை. அதை அறிந்த தேவர்கள் ரொம்பவும் பயத்தை யடைந்தார்கள். 'பரமேச்வரனுடைய வீர்யமானது இவ்வளவு காலம் வெளியில் ப்ரகாசிக்காமல் இனி ப்ரகாசிக்குமேயானுல் அதிலிருந்து உண்டாகும் புத்ரன் மஹாபூதமாகத்தான் இருக்கவேண்டும். நம்மால் அந்த மஹாபூதத்தைப் பரிபாலிக்க முடியாது. சூரபத்மாவைக் கொல்வதற்கு தேவஸேனுபதியை உண்டுபண்ணுவதற்கு யத்னம் செய்த நமக்கு, நம்மையே பக்ஷிக்கக்கூடிய மஹாபூதம் ஒன்று உண்டாகும் போல் தோன்றுகிறது. அவ்விதம் ஸம்பவிக்காமல், பரமேச்வரனிடம் போய் சரணமடைந்து அந்தக் கார்யத்தை நிறுத்திவிடவேண்டுமென்று ப்ரார்த்திக்கவேண்டும்' என்று தீர்மானித்து பரமசிவனிடம் வந்து சேர்ந்தார்கள். பரமேச்வரனை நமஸ்காரம் செய்துவிட்டு தேவர்கள் சொன்னுர்கள்.

'ஹே, தேவ தேவா, மஹாதேவா! லோகத்திற்கு நன்மையைச் செய்யவே யத்னம் செய்யவேண்டும். நாங்கள் எல்லோரும் சிரணமடைகிருேம். அனுக்ரஹம் செய்யவேண்டும்.

न लोका धारयिष्यन्ति तव तेजः सुरोत्तम ।
ब्राह्मेण तपसा युक्तः देव्या सह तपश्चर ॥
त्रैलोक्यहितकामार्थं तेजस्तेजसि धारय ।

𑌨 𑌲𑍋𑌕𑌾 𑌧𑌾𑌰𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑌵 𑌤𑍇𑌜𑌃 𑌸𑍁𑌰𑍋𑌤𑍍𑌤𑌮 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍇𑌣 𑌤𑌪𑌸𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌸𑌹 𑌤𑌪𑌶𑍍𑌚𑌰 ॥
𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌹𑌿𑌤𑌕𑌾𑌮𑌾𑌰𑍍𑌥𑌂 𑌤𑍇𑌜𑌸𑍍𑌤𑍇𑌜𑌸𑌿 𑌧𑌾𑌰𑌯

ந லோகா தாரயிஷ்யந்தி தவ தேஜ: ஸுரோத்தம ।
ப்ராஹ்மேண தபஸா யுக்த: தேவ்யா ஸஹ தபச்சர ॥
த்ரைலோக்யஹிதகாமார்த்தம் தேஜஸ்தேஜஸி தாரய ।

என்று ஹே, பரமேச்வரா! உன்னுடைய ரேதஸ்ஸிலுண்டாகும் பிள்ளையைப் பார்த்து, லோகம் பூராவும் ஸஹிக்க முடியாமல் கஷ்டப்படும். அவ்வளவு க்ரூரமான தேஜஸ்ஸுடன் கூடினவன் உன் பிள்ளை. அதனால் இந்த புத்ரோத்பத்தி நிமித்தமான கர்மாவை நிறுத்திவிட்டு, வைதிகமான மஹா தபஸ்ஸைச் செய்துகொண்டிருப்பதே லோகத்திற்குப் பெரிய நன்மையாகும். ப்ராணிகளை ரக்ஷிக்க வேண்டுமென்ற கருணை உனக்கு இருந்தால் உன்னுடைய தேஜஸ்ஸை தேஜோமயமான உன் சரீரத்திலேயே ரக்ஷித்துக்கொள்ள வேண்டும். வேதத்திலும்,

यदेतत्पुरुषे रेतो भवति आदित्यस्य तद्रूपं ॥

𑌯𑌦𑍇𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑍇 𑌰𑍇𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑌦𑍍𑌰𑍂𑌪𑌂 ।

யதே தத்புருஷே ரேதோ பவதி ஆதித்யஸ்ய தத்ரூபம் ॥

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் ரேதோரூபமான தேஜஸ்தான். ஆதித்யமண்டலமும், அந்த ஆதித்யமண்டலத்தை விராட் புருஷனை பரமேச்வரன் ஆகாசத்தில் எவ்வளவு காலம் தரிக்கச் செய்கிறானோ, அவ்வளவு காலம் ஜகத்தானது ரக்ஷிக்கப்பட்டதாக ஆகும். ஸூர்யபகவானுக்கு நாசம் வந்தால் ஜகத்திற்கே நாசம், என்ற தாத்பர்யத்தைத் மேற்சொன்ன ச்ருதியால் அறியவும். இதனல்

மஹா கைலாஸத்திற்கு அதிபதியான பரமேச்வரனே, ஜகத்தையே (மூன்றுலோகங்களையே) தன்னுடைய உருவமாக உடைத்தான விராட்புருஷன் என்று சொல்லப்படுவான். ப்ரஸித்தமான பூதாகாசமோ விராட்புருஷனன பரமேச்வரனுடைய ஹ்ருதயமாக ஆகும். அந்த ஆகாசத்தில் காணப்படும் ஸூர்யமண்டலமோ, விராட்புருஷனன பரமேசவரனுடைய ஹ்ருதயமாகிற ஆகாசத்தில் க்ரஹிக்கப்பட்ட தேஜோரூபமான ரேதஸ்ஸாக ஆகும். அந்த மண்டலம் விசகலிதமாக (விகீர்ணமாக—இறைந்துபோனதாக) ஆகாமல் எவ்வளவுகாலம் இருக்கிறதோ, அதுவரை லோகத்திற்கு க்ஷேமம். அதனுல், பரமேச்வரமான தேஜோரூபமான ரேதஸ் என்ற ஆதித்யமண்டலமானது விகீர்ணமாக ஆகாமலிருக்கும்படி பரமேச்வரனிடம் தேவர்கள் கேட்டுக்கொண்டார்கள். இதனுல் பஞ்சாயதன பூஜையில் ஸுப்ரமண்யமூர்த்திக்கு பூஜையில்லாமலிருப்பதற்குக் காரணம் என்ன என்ற சங்கையும் நிவர்த்திசெய்யப்படுகிறது. அதாவது, ஸூர்யனே பரமேச்வரனுடைய வீர்யம் என்று எப்பொழுது சொன்னேமோ, அப்பொழுது ஸூர்யனுக்கு பஞ்சாயதன பூஜையில் பூஜ்யதை இருப்பதினுல், பரமேச்வரனுடைய வீர்யமான ஸுப்ரமண்ய ஸ்வாமியும் பூஜிக்கப்பட்டவராக ஆகிருர். ஸூர்ய பகவான் என்பவரே ஷண்முகன் தான்.

இது நிற்க, அவ்விதம் தேவர்களுடைய வார்த்தையைக் கேட்ட பரமசிவன், தேவதைகளுடைய இஷ்டப்ரகாரம் அவ்விதமே அதை அங்கீகரித்துவிட்டு, ‘தேஜோரூபமான ரேதஸ்ஸை தேஜோமயமான சரீரத்திலேயே நான் தரித்துக்கொள்கிறேன். அவ்விதமே பார்வதியையும் தரித்துக்கொள்ளும்படி செய்கிறேன். லோகம் எவ்விதமாவது க்ஷேமத்தை அடைந்தால் போதும். லோகத்தினுடைய க்ஷேமார்த்தமாக நீங்கள் இந்த கார்யத்தில் என்னை ப்ரவ்ருத்திக்கச் செய்தீர்கள். ஆகையால், வேண்டாம் என்ருல் நான் இத்துடன் நின்றுவிடுகிறேன். ஆனுல் ஹ்ருதயஸ்தா

னத்திலிருந்து நழுவிவந்த தேஜோ அம்சத்தை உள்ளேயே தரிக்கமுடியாது,அதை யார் தரிக்கிறீர்கள்?' என்று கேட்டார். தேவர்களோ, பரமேச்வரனைப் பார்த்து 'ஹே, மஹா தேவா! ஹ்ருதயதேசத்திலிருந்து நழுவி வந்த தேஜோ அம்சத்தை ப்ருத்வியானவள் தரிப்பாள்' என்று சொன்னார்கள். அவ்விதமே தேவர்களால் ப்ரார்த்திக்கப்பட்ட பரமேச்வரனும், ப்ருத்வியிலேயே அந்த தேஜோ அம்சத்தை விட்டுவிட்டார். ப்ருத்வி முழுமையும் அந்த தேஜஸ்ஸானது வ்யாபரித்துவிட்டது. பிறகு தேவர்கள் அக்னியை பார்த்து, 'ஹே, அக்னே! வாயுவுடன்கூட, நீ அந்த ருத்ர தேஜஸ்ஸில், ப்ரவேசிக்க வேண்டும்' என்று சொன்னார்கள். அவ்விதம் வாயுவுடன்கூட அக்னியால் ப்ரவேசிக்கப்பட்ட அந்த ருத்ர தேஜஸ்ஸானது காலக்ரமேண, ஒரு श्वेतपर्वतं (ஶ்வேதபர்வதம்) (ச்வேதபர்வதம்) ஆக (வெள்ளையான மலையாக) ஆகிவிட்டது. அந்த மலையில் நாணல்களும் காடாக காலக்ரமேண வளர்ந்திருந்தது. அந்த இடத்தில்தான் கார்த்திகேயன் என்ற ஸுப்ரமண்ய மூர்த்தி உண்டானார் என்று ஸ்காந்தம் முதலான புராணங்களில் சொல்லப்படுகிறது. பிறகு தேவர்கள் பார்வதி பரமேச்வரர்களிடம் தங்களால் செய்யப்பட்ட அபராதத்தை க்ஷமித்துக்கொள்ளும்படி ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார்கள். பார்வதியோ பரம கோபத்துடன் தேவர்களைப் பார்த்து சபித்தாள். 'எனக்குச் செய்த அப்ரியத்திற்கு (கெடுதலுக்கு) அதிசீக்ரத்தில் நீங்கள் பலத்தை அடைவீர்கள்' என்று சொல்லிவிட்டு, கையில் தீர்த்தத்தை யெடுத்துக்கொண்டு, தேவர்களைப் பார்த்து, 'ஹே, தேவர்களே, நான் புத்ரோத்பத்தியை உத்தேசித்து அதுவும் லோக க்ஷேமார்த்தமாக, பரமேச்வரனோடு ஸங்கதியை அடைந்தேன். அதை நீங்கள் விக்னம்செய்து தடுத்துவிட்டீர்கள். அந்த பாபத்திற்காக உங்களுடைய ஸ்வதாரங்களில் புத்ரர்களை உண்டுபண்ண மாட்டீர்கள். உங்களுடைய பத்னிகள் எப்பொழுதும் அப்ரஜைகளாகவே இருக்கவேண்டும்' என்று தேவர்க

ளுக்கு சாபம் கொடுத்தாள். 'ஹே, பூமியே! நீ ஒரே ரூபத்துடன் கூடினவளாக இருக்கமாட்டாய். நீ அநேக ரூபங்களை அடையவேண்டும். நீ ஒருவனுக்கே பார்யை யாக இருக்காமல் பல புருஷனுக்கு பார்யையாக இருக்க வேண்டும். புத்ரநிமித்தமான ப்ரீதியை நீ அடையவும் போகிறதில்லை. நீ மஹாமூர்க்கை. என்னுடைய புத்ரோத் பத்தியை நீ ஸஹிக்காத பாபத்தால் உனக்கு பலவிதமான கஷ்டங்கள் ஏற்படப்போகிறது' என்று பூமியையும் சபித் தாள். தேவர்களுக்கும், பூமிதேவிக்கும் மிகவும் லஜ்ஜை ஏற்பட்டது. அதைப் பார்த்த பரமேச்வரனும் ரொம்பவும் துக்கத்துடன், ஹிமாலயத்திற்குச் சென்று பார்வதியோடு கூட மஹாதபஸ்ஸைச் செய்துவந்தார். இப்படி உக்ரமான தபஸ்ஸைப் பரமசிவன் செய்துவரும் பொழுது, தேவர்கள், சூரபத்மா முதலான அஸுரர்களால் ரொம்பவும் பீடிக்கப் பட்டவர்களாக ஆகி, அந்த பாதையை ஸஹிக்கமுடியாமல் ப்ரும்மாவினுடைய காலில் விழுந்துசொன்னதாவது:—'ஹே ப்ரும்மன்! சூரபத்மாவைக் கொல்லக்கூடிய தேவஸேநாபதி யை ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னீர்கள். அந்த தேவஸேநாபதி இன்னும் உண்டாகவில்லை. சூரபத்மாவி னுடைய பாதையோ எங்களால் ஸஹிக்க முடியவில்லை. தேவஸேநாபதியை உண்டுபண்ணுவதில் நிமித்த பூதர்க ளான பார்வதி பரமேச்வரர்களோ, ஹிமவத் பர்வதத்தினு டைய சிகரத்தில் அத்யுக்ரமான தபஸ்ஸைச் செய்துவருகி றூர்கள். பிறகு செய்யவேண்டிய கார்யம் என்ன?' என்று கதறினுர்கள். தேவர்களுடைய வார்த்தையைக் கேட்ட ப்ரும்மாவோ, 'ஹே, தேவர்களே! பயத்தை யடைய வேண்டாம். பார்வதி தேவியானவள் உங்களைப் பார்த்து சபித்த சாபத்தை ஒருவராலேயும் நிவர்த்தி செய்யமுடி யாது. அதை அனுபவித்தே தீரவேண்டும். ஆனுல் நமக் கும் அஸுரபாதை நிவர்த்தி ஆகவேண்டும். இதோ இந்த கமண்டலுவில் ஆகாச கங்கை விளங்கி வருகிறுள். இந்த கங்கையில் அக்னிபகவானுனவர் தேவஸேநாபதியை சீக்

ரத்தில் உண்டுபண்ணுவார். பர்வத ராஜனுடைய முதல் பெண்ணுக கங்கை ஆகுவாள். அதனுல், அந்த புத்ரனே அவளே வ்ருத்தி செய்வாள். உமாதேவிக்கும் அது ஸம் மதமாக ஆகும்' என்று தேவர்களே ஒருவாறு ஸமாதானப் படுத்தினுர். அதைக் கேட்டு தேவர்களும் உடனே கைலாஸ பர்வதம் சென்று அக்னி பகவானிடம் 'நீ தேவகார்யத்தை சீக்ரம் செய்து, லோகத்திற்கு நன்மையைச் செய்யவேண் டும். ஆகையால் இதற்கு முன்பு பரமேச்வரனுடைய தேஜஸ்ஸில் ப்ரவேசித்தாயே, அந்த தேஜஸ்ஸை ஹிம வானுடைய பெண்ணுன கங்கையில் வாரி இறைத்துவிட வேண்டும்' என்று சொன்னுர்கள். அக்னிபகவானும் தேவர் களுடைய வார்த்தையைக் கேட்டு, ஆகாச கங்கையினு டைய ஸமீபம் சென்று, கங்கையைப் பார்த்து 'ஹே தேவி! தேவதைகளுடைய கார்யார்த்தமாக, என்னுல் வ்யாபரிக்கப் பட்ட பரமேச்வரமான வீர்யத்தை உன்னிடத்தில் கொடுக் கப்போகிறேன். நீ லோகத்தின் க்ஷேமார்த்தமாக கர்ப் பத்தை தரித்து திவ்யமான புத்ரனேப் பெற்றெடுக்கவேண் டும். அந்த புத்ரன் தேவஸேநாபதியாக பிறந்து காங்கே யன் என்ற பெயருடன் விளங்கப்போகிறுன்' என்று சொன்னுர். கங்காதேவியும் அதைக்கேட்டு, பரம ஸந்தோஷத்துடன் திவ்யமான உத்தம ஸ்த்ரீ வேஷத்தை தரித்துக்கொண்டாள். ருத்ரதேஜோமூர்த்தியான அக்னிபக வானும் அந்த கங்கையினுடைய ஸௌந்தர்யாதிசயத் தைப் பார்த்து வ்யாமோஹத்தை யடைந்து, தன்னுல் வ்யாபரிக்கப்பட்ட ருத்ரனுடைய வீர்யத்தை அந்த கங்கை யினிடம் வாரி இறைத்துவிட்டார். கங்காதேவிக்கோ, அந்த வீர்யத்தை தரித்துக்கொள்ள சக்தியில்லாமல் ரொம்பவும் கஷ்டப்பட்டாள். அதைப் பார்த்த அக்னிபகவானும் இந்த ஹிமவானுடைய ப்ராந்த தேசத்தில் (மலேயடிவாரத்தில்) ச்வேத பர்வதத்தில் சரவணத்தில், கர்ப்பத்தை விட்டுவிட லாம் என்று சொன்னுர். கங்காதேவியும் அவ்விதமே செய்துவிட்டாள். அந்த கர்ப்பத்தை வெளியில்விட்ட ஸம

யத்தில், கங்கையினுடைய சரீரத்திலிருந்து சோணிதம் முதலியவை பூமியில் ஸம்பந்தப்பட்டு அந்த இடமெல்லாம் ஸுவர்ணமாகவே ஆகிவிட்டது. அவ்விதமே கங்கையினுடைய கஷ்டப்படுகிற தன்மை வியானவரூபமாக வந்து அதன்மூலம் இரும்பு, தாம்பரம் முதலான வஸ்துக்களெல்லாம் உண்டாயின. அவளுடைய மலமானது ஈயம் தகரம் முதலானதாக ஆயிற்று. கர்ப்பத்தை ஹிமவானுடைய ப்ராந்த தேசத்தில் விட்டமாத்ரத்தில் மலை மலையாக நானுவிதமான தாதுக்கள் வ்ருத்தி யடைந்துவிட்டன. பிறகு, அந்த கங்கையினுல் விடப்பட்ட கர்ப்பமானது சிசுவினுனுடைய ஆகாரமாக அந்த சரவணத்தில் பாஸித்து வந்தது. அவ்விதம் உண்டான குமாரனைப் பார்த்து தேவர்கள் மிகவும் ஸந்தோஷத்துடன், தங்களுக்கு பூர்ண க்ஷேமம் உண்டாகி விட்டதென்று தீர்மானித்து, அக்குழந்தைக்கு ஸ்தன்யபானம் செய்துவைப்பதற்கு, க்ருத்திகா நக்ஷத்ர அதிதேவதைகளை வரவழைத்து, ஸ்தன்யபானம் செய்வித்தார்கள். அந்த க்ருத்திகா நக்ஷத்ர அதிதேவதைகளால் கார்த்திகேயன் என்ற ப்ரஸித்தி யடைந்து, தன் குமாரன் என்ற கௌரவத்தை நமக்கு கொடுக்கப்போகிருன் என்ற எண்ணத்துடன், ஸ்தன்யபானம் செய்து வைத்தார்கள். இந்த க்ருத்திகா நக்ஷத்ரத்திற்கு அதிதேவதைகள் ஆறு தேவதைகளானதினுல், தன் குழந்தை, தன் குழந்தை என்று, அபிமானத்துடன் ஸ்தன்யபானம் செய்துவைக்க முன்வந்ததினுல், அவர்களை த்ருப்தி செய்து வைக்கவே, இந்த சிசுவான பகவான் ஆறுமுகத்தை எடுத்துக்கொண்டு ஒரே ஸமயத்தில் அந்த ஆறு தேவதைகளிடத்திலும் ஸ்தன்யபானம் செய்தார். ஆறு தேவதைகளும் இந்த குமாரனுக்கு ஸுகந்த தைலாப்யாங்காதிகளால் ஸ்நானத்தையும் செய்துவைத்தார்கள். அந்த குழந்தைக்கு அன்று முதல் கார்த்திகேயன் என்று பெயர் ப்ரஸித்தமாக ஏற்பட்டுவிட்டது. ஈச்வரனுடைய ஹ்ருதயத்திலிருந்தும், பார்வதி தேவியினுடைய ஹ்ருதயத்திலிருந்தும் நழுவி பூமியில் ஸ்கந்த

மாக விழுந்த காரணத்தால், ஸ்கந்தன் என்றும் தேவர்கள் திருநாமகரணம் செய்தார்கள். स्कन्दिर्गतिशोषणयोः (ஸ்கந்திர் கதி ஶோஷணயோ:) (ஸ்கந்திர்கதிசோஷணயோ:) என்ற தாதுவை அனுஸரித்து, உபாஸகனுடைய பாபங்களைப் போக்கடித்து, அந்த உபாஸகன் எதிர்பார்க்கும் ஸ்தானத்தை அடையும் படி செய்துவைக்கிற ப்ரபுவானதினாலும், ஸ்கந்தன் என்னும் காரணப்பெயரை வைத்தார்கள் அந்த குமாரன் காலக்ர மேண, பாலபர்வத்திலும், சூரபத்மா, ஸிம்மவக்த்ரன், தாரகாஸுரன் முதலான துஷ்டர்களை வதம் செய்து, தேவர்களுக்கும் லோகத்திற்கும் நன்மையைச் செய்ததினால், தேவர்கள் தேவர்களுடைய ஸேனாபத்யத்தில் அக்குமாரனுக்கு மஹாபிஷேகம் செய்துவைத்து, **தேவஸேனாபதி** என்று அழைத்தார்கள்.

விச்வாமித்ர மஹர்ஷி கங்கையினுடைய வைபவத்தை ராமனுக்கு இவ்விதம் சொன்னார். நடுவில் ப்ரஸங்கத்தில், (ஸமயத்தில்)சொல்லும்படி வந்ததால் ஸுப்ரமண்யனுடைய ஆவிர்ப்பாவமும் சொல்லப்பட்டது. அந்த குமார ஸம்பவமோ இஹத்திலும் பரத்திலும், பொருளையும், புண்யத்தையும் கொடுக்கக்கூடியது. ஸ்கந்தனிடத்தில் பக்தியுள்ள ஜனங்கள் தீர்க்கமான ஆயுஸ்ஸோடும் புத்ர பௌத்ராதிகளோடும் ஸம்ருத்தர்களாக ஆகி நோயற்ற வாழ்வுடன் நீடித்த காலம் பூலோகத்தில் வஸித்துவிட்டு, பிறகு ஸ்கந்தனுடைய ஸாலோக்யத்தையும் அடைவார்கள். இந்த ஸுப்ரமண்யனுடைய ஆவிர்பாவம் ரொம்பவும் புண்ய ப்ரதமானதினால் ராமாயணத்தினுடைய மத்தியில், கங்கையினுடைய ப்ராபவத்தை சொல்லி வரும் காலத்தில், வர்ணிக்கும்படி நேரிட்டது. சிவனுடைய தேஜஸ்ஸை ஸூர்யனென்று ச்ருதியை அனுஸரித்து முன்பு போதித்தோம். அக்னியினுடைய ஸ்வரூபத்தையும் பார்வதியினுடைய வீர்யம் என்று அறியவும். அக்னியும் ஸூர்யனும் சேர்ந்த ஒன்றான ஒரு தத்வத்தைத் தான் ஸ்கன்னம் என்ற காரணத்தால், ஸ்கந்தன் என்று

சொல்லப்பட்டது. அவ்விதம் அக்னிபகவானும் ஸூர்ய பகவானும் சேர்ந்த ஒரு தத்வமானதால், ஸுப்ரமண்ய மூர்த்தியினுடைய உபாஸனம் ரொம்பவும் உத்க்ருஷ்டமான (மேலான) உபாஸனமாக ஆகும். இந்த மூர்த்தியினிடம் கங்கையினுடைய ஸம்பந்தமும், க்ருத்திகா நக்ஷத்ர அதிதேவதைகளுடைய ஸம்பந்தமும் முன்னால் சொல்லப்பட்டது. கங்கையைப்போல பாபத்திலிருந்து விமோசனத்தை யடைய மற்றொரு புண்யதீர்த்தம் இல்லாததினால், ஸுப்ரமண்ய மூர்த்தியினுடைய உபாஸனத்தினால் ஸர்வ பாபக்ஷயம் என்ற மஹாபலன் உண்டாகிறது. க்ருத்திகா நக்ஷத்ரங்களுடைய அதிதேவதைகளோ, துர்க்கா, லக்ஷ்மீ, ஸரஸ்வதீ, ராதை, ஸாவித்ரீ, புவனேச்வரீ என்று ஆறுவிதமான சக்திகளே ஆகுவார்கள். துர்க்கா ஸம்பந்தத்தினால் துக்கத்திலிருந்து விமோசனமும், லக்ஷ்மீ ஸம்பந்தத்தினால் தாரித்ரயத்திலிருந்து விமோசனமும், ஸரஸ்வதீ ஸம்பந்தத்தினால் ஞான ப்ராப்தியும், ஸாவித்ரீ ஸம்பந்தத்தால் ஸுக ஜீவனமும், ராதா ஸம்பந்தத்தால் நீடித்த நோயற்ற வாழ்வும், புவனேச்வரியினுடைய ஸம்பந்தத்தால் பவபந்த விமோசனமும் க்ரமமாக ஷண்முகபக்தனுக்கு ஏற்படுகிறது என்பது ஸித்தமாகிறது. இதனால், ஸுப்ரமண்ய உபாஸனத்தினால் ஸர்வ தேவதா உபாஸனம் ஸித்திக்கும். வால்மீகி மஹர்ஷியும் இதை ஹ்ருதயத்தில் வைத்துக்கொண்டுதான்,

कुमारसम्भवश्चैव धन्यः पुण्यस्तथैव च ।

குமாரஸம்பவச்சைவ தந்ய: புண்யஸ்ததைவ ச ।

குமாரஸம்பவச்சைவ தந்ய: புண்யஸ்ததைவ ச ।

என்று குமார ஸம்பவத்தைப் பற்றி ரொம்பவும் வர்ணித்தார்.

கங்கையினுடைய வ்ருத்தாந்தத்தை சொல்லிக்கொண்டு வரும் ஸந்தர்ப்பத்தில், தேவலோகத்தில் நடந்த விஷயங்களைச் சொல்லிவிட்டு, பூலோகத்தில் நடந்த விஷயங்களை விஸ்தாரமாகச் சொல்வதற்கு விச்வாமித்ர மஹர்ஷி ஆரம்பித்தார்.

"ராமா! அயோத்யா நகரத்தில் முன் காலத்தில் ஒரு அரசன் ப்ரஸித்தனுக இருந்துவந்தான். அவனைத்தான் மூன்று லோகங்களிலும் ஸகர மஹாராஜா என்று சொல் வார்கள். அந்த அரசனுக்கு கேசினீ யென்றும், ஸுமதி என்றும் இரண்டு பட்டமஹிஷிகள் இருந்தார்கள். கேசினீ என்பவள் விதர்ப்ப தேசத்தரசனுடைய பெண்ணுகுவாள். ஸுமதி என்றவள் காச்யப ப்ரஜாபதியின் பெண்ணுகுவாள். அந்த இரண்டு மஹிஷிகளோடும் தர்மமாக ஸகர மஹா ராஜா அரசாண்டு வந்தாலும், அந்த இருவர்களிடத்திலும் அந்த ராஜனுக்கு புத்ரன் உண்டாகவில்லை. வெகுகாலம் அரசன் புத்ரன் இல்லாமல் தவித்துவிட்டு, பிறகு அந்த இரண்டு மனைவிகளோடும்கூட, ஹிமோத் பர்வதம் சென்று, ப்ருகு ப்ரச்ரவணம் என்ற ப்ரதேசத்தில், உக்ரமான தபஸ்ஸை செய்து வந்தார்.

ப்ருகு மஹர்ஷியானவர் ஒரு அபூர்வமான அருவி ஓடி வரும் இடத்தில் தபஸ்ஸை செய்துவந்தவரானதால், அந்த ப்ரதேசத்திற்கு ப்ருகு ப்ரச்ரவணம் என்று பெயர் ஏற்பட்டது. இந்த அரசனும், இந்த ப்ருகு மஹர்ஷியினு டைய அநுக்ரஹத்தை அடைந்துதான், தபஸ்ஸின் ரஹஸ் யங்களையும் தெரிந்துகொண்டு, தபஸ்ஸைச் செய்து வந்தான். தேவமான ரீதியாக நூறுவருஷங்கள் சென்றுவிட்டன. ஸகலதேவர்களும் ப்ரஸன்னர்களாக ஆகிவிட்டார்கள். ப்ரும் மாவும் ப்ரஸன்னராக ஆகி, ப்ருகு மஹர்ஷி மூலமாக ஸகர மஹாராஜாவுக்கு வேண்டிய வரனைக் கொடுக்கும்படி ஏற் பாடு செய்தார். ப்ருகு மஹர்ஷியும், பரம ஸந்தோஷத் துடன், ஸகர மஹாராஜாவிற்கு 'ராஜனே! உமக்கு புத்ரலா பம் ரொம்பவும் பெரிதாக ஏற்படப்போகிறது. லோகத்தில் மஹத்தான கீர்த்தியையும் அதன்மூலம் அடையப் போகிருய். ஒரு மனைவி, வம்சவ்ருத்தியைச் செய்யும் ஸத்புத்ரனை பெறு வாள். மற்றொரு மனைவி அறுபதினுயிரம் பிள்ளைகளை பெறு வாள்' என்றுவரம் கொடுத்தார். இவ்விதம் சொல்லும் மஹர்ஷிய்யைப் பார்த்து, ராஜனுடைய மனைவிகளான

கேசினி ஸுமதி இருவர்களும் மஹர்ஷியை ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளால் ஸந்தோஷிக்கச் செய்துவிட்டு 'எங்களிருவர்களுக்குள் யாருக்கு ஒரு பிள்ளை, யாருக்கு அறுபதினுயிரம் பிள்ளைகள் என்பதை விவரித்துச் சொல்ல வேண்டும்' என்று கேட்டார்கள். ப்ருகு மஹர்ஷியும், அந்த இருவர்களுடைய வார்த்தையைக் கேட்டு 'உங்களிருவர்களுக்குள் யாருக்கு ஒரு புத்ரன் வேண்டும், யாருக்கு அறுபதினுயிரம் புத்ரர்கள் வேண்டும் என்பதை நீங்களே யோசித்துக் கேட்டுக்கொள்ளலாம். ஒரு புத்ரனுனுலும் வம்ச வ்ருத்தியை செய்வான்; அறுபதினுயிரம் பிள்ளைகள் வம்சத்திற்கு உபயோகம் இல்லை. ஆனுல் வம்சத்திற்கு பெரிய கீர்த்தியை உண்டுபண்ணுவார்கள். உங்களிஷ்டம் எப்படி?' என்று கேட்டார். மஹர்ஷியினுடைய வார்த்தையைக் கேட்டு, கேசினி என்ற முதல் மஹிஷியானவள், 'வம்ச வ்ருத்தியை செய்யும் புத்ரன்தான் புண்ய புத்ரனுகுவான். அவன் ஒரு புத்ரனுனுலும் எனக்குப் போதும். ஆகையால் எனக்கு ஒரு புத்ரன் என்றவனைக் கொடுக்க வேண்டும்' என்று சொன்னுள்.

ஸுமதி என்ற இரண்டாவது மஹிஷியோ, 'வம்சத்திற்கு உபயோகம் இல்லாதபோனுலும், வம்சத்தின் கீர்த்தி என்ற கொடியை நாட்டும் புத்ரர்கள்தான் மேலான புத்ரர்களாக ஆகுவார்கள்; ஆகையால் எனக்கு அறுபதினுயிரம் புத்ரர்களைக் கொடுக்கவேண்டும்' என்று கேட்டாள்.

மஹர்ஷியும் அந்த மனைவிகளுடைய இஷ்டப்ரகாரம் புத்ரலாபத்தை வரனுகக் கொடுத்துவிட்டார். ராஜனும், மஹர்ஷியை ப்ரதக்ஷிணம் செய்து நமஸ்காரம் செய்துவிட்டு, தன் மனைவிகளோடுகூட அயோத்யா நகரம் சென்றுவிட்டார். காலக்ரமமாக கேசினீ என்றவள் ஒரு புத்ரனைப் பெற்றுள்; அந்த புத்ரனுக்குத்தான் அஸமஞ்ஜன் என்று ப்ரஸித்தமாக பெயர் ஏற்பட்டது. ஸுமதி என்பவள் ஒரு

முட்டையைப்போல் அநேக கர்பங்கள் அடங்கிய கர்ப்ப பிண்டத்தை ஸ்ருஷ்டித்தாள். அதற்குள் அறுபதிஞயிரம் புத்ரர்கள் உண்டாஞர்கள். அந்த அறுபதிஞயிரம் பேர்களே யும், நல்ல பசுநெய்யினுல் நிறைக்கப்பட்ட, கடாஹத்தில் போட்டு, உபமாத்ரு ஜனங்கள் வ்ருத்தி செய்தார்கள். சில காலம் கழிந்து, அறுபதிஞயிரம் குமாரர்களும், நல்ல யௌவனத்தோடும். ஸௌந்தர்யத்தோடும் கூடினவர்களாக ஆஞர்கள். கேசினீ என்ற முதல் மஹிஷியின் பிள்ளை யான அஸமஞ்ஜனே குடும்பத்தில் ஆஸக்தி இல்லாதவ ஞகி, வனம் சென்று மஹா தபஸ்ஸைச் செய்யவேண்டு மென்ற ஆவலுள்ளவஞக ஆஞன். ஆஞல் அவ்விதம் அவன் வனம் செல்ல தாய்தந்தையர்களுக்கு ஸம்மதம் ஏற் படவில்லை. ராஜனுக்கு அநேக காலம் புத்ரனில்லாமலிருந்து மஹா தபஸ்ஸைச் செய்து, ப்ருகு மஹர்ஷியினுடைய அநுக்ரஹ விசேஷத்தால் ஏற்பட்ட புத்ரன் என்றல்லவா அஸமஞ்ஜனைச் சொன்னேம். அந்த புத்ரனை எவ்விதம் விட் டுப் பிரிய அரசனுக்கு ஸம்மதம் ஏற்படும்? ஆகையால் அரசன் ஸம்மதிக்கவில்லை. இருந்தாலும் அந்த அஸமஞ்ஜன் என்ற பையன், தாய் தந்தையர்களுடைய உத்தர வானது தனக்கு ஸ்வயமாகவே கிடைக்க ஒரு செய்கையைச் செய்தார். அதாவது அயோத்யா நகரத்திலுள்ள சிசுக்களை க்ரஹித்து, க்ரஹித்து, ஸரயூ நதியில் எறிந்துவிடுகிறது, தான் கரையில் நின்று அட்டஹாஸமும் செய்கிறது. இவ்விதம் அயோத்தியிலுள்ள குழந்தைகள் எல்லோரும் இவன் மூலம் ஸரயூநதியில் தள்ளப்பட்டு மரித்தார்கள். இதனுல் ப்ரஜைகளுக்கே இந்த ராஜபுத்ரனிடம் விச்வாஸம் இல்லாமல், இந்த புத்ரனை த்யாகம் செய்ய அரச னிடம் முறையிட்டு கதறிஞர்கள். அரசனும், “இவ் விதமான பாபாசாரத்தோடு கூடின புத்ரனை, நாம் நம தருகில் வைத்துக்கொள்ளக் கூடாது; நகரத்திலுள்ள ஜனங்களுக்கு இவன்மூலம் புத்ரநாசம் ஏற்படுகிறது” என்று நினைத்து,

त्यजेत् एकं कुलस्यार्थे
ग्रामस्यार्थे कुलं त्यजेत् ।
ग्रामं जनपदस्यार्थे
ह्यात्मार्थे पृथिवीं त्यजेत् ॥

𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 𑌏𑌕𑌂 𑌕𑍁𑌲𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇
𑌗𑍍𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌕𑍁𑌲𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ।
𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌜𑌨𑌪𑌦𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇
𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑍇 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ॥

த்யஜேத் ஏகம் குலஸ்யார்தே
க்ராமஸ்யார்தே குலம் த்யஜேத் ।
க்ராமம் ஜநபதஸ்யார்தே
ஹ்யாத்மார்தே ப்ருதிவீம் த்யஜேத் ॥

என்ற ப்ரகாரம் ஒரு குலத்தை ரக்ஷிப்பதற்காக அந்த குலத்திலுள்ள அஸத் புத்ரனை தள்ளிவிட வேண்டும்; ஒரு குலத்தால் க்ராமம் கெட்டுவிடும் என்றால் அந்த குலத்தையே அழித்துவிடவேண்டும். ஒரு க்ராமத்தால் ஒரு தேசமே அழியுமானால் அந்த க்ராமத்தையும் எரித்துவிட வேண்டும். ஒரு அரசன் பூமண்டலம் முழுமையும் தான் ஆண்டுவந்தாலும், அதன்மூலம் தனக்குக் கேடுவரும் என்று தோன்றினால் தன் ரக்ஷணத்திற்காக, பூமண்டலத்தையும் விட்டுவிடவேண்டும் என்று நீதி சொல்கிறபடியால், அதை அனுஸரித்து, இந்த அஸமஞ்ஜன் என்ற புத்ரன்மூலம், குலம், க்ராமம், தேசம் எல்லாம் கெட்டுவிடும் என்று நினைத்து, அரசன் இந்த அஸமஞ்ஜனை நடுக்காட்டில் விட்டுவிட ஏற்பாடு செய்தான். அஸமஞ்ஜனும் தான் நினைத்தபடி கார்யம் ஸித்தித்துவிட்டது என்ற ஸந்தோஷத்துடன் அரண்யத்திற்கு ப்ரஸ்தானமாகி ஸரயூ நதிக்கரையில் வந்து நின்றுகொண்டு, பகவானை ப்ரார்த்தித்தான்.

भगवन् भवतः पादसरोजं संश्रितोस्म्यहं ।
प्रक्षिप्ताः बालका येतु सरय्वां क्रूर कर्मणा ॥
जीवन्तु ते कृपा पात्रंभवन्तु चिरजीविनः ।

𑌭𑌗𑌵𑌨𑍍 𑌭𑌵𑌤𑌃 𑌪𑌾𑌦𑌸𑌰𑍋𑌜𑌂 𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑍋𑌸𑍍𑌮𑍍𑌯𑌹𑌂 ।
𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌾𑌃 𑌬𑌾𑌲𑌕𑌾 𑌯𑍇𑌤𑍁
𑌸𑌰𑌯𑍍𑌵𑌾𑌂 𑌕𑍍𑌰𑍂𑌰 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 ॥
𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑍇 𑌕𑍃𑌪𑌾 𑌪𑌾𑌤𑍍𑌰𑌂
𑌭𑌵𑌨𑍍𑌤𑍁 𑌚𑌿𑌰𑌜𑍀𑌵𑌿𑌨𑌃 ।

பகவந் பவத: பாதஸரோஜம் ஸம்ச்ரிதோஸ்ம்யஹம் ।
ப்ரக்ஷிப்தா: பாலகா யேது
ஸரய்வாம் க்ரூர கர்மணா ॥
ஜீவந்து தே க்ருபா பாத்ரம்
பவந்து சிரஜீவிந: ।

என்று "ஆதிநாராயணா! ஹே லக்ஷ்மீபதே! ஸ்வாமின்! உன்னுடைய சரணாரவிந்தத்தை நான் ப்ரபத்தி செய்தவன். உன்னுடைய ஸ்வரூபத்யானம் எனக்கு சாச்வதமாக கிடைக்கும் என்ற எண்ணத்துடன் இந்த பாபகர்மாவைச் செய்துவிட்டேன். இந்த அயோத்யா நகரத்திலுள்ள குழந்தைகளை ஸரயூ நதியில் தூக்கி நான் எறிந்துவிட்டதால் அவர்கள் மரித்த காரணத்திலிருந்து, இந்த நகரத்தில் எவ்வளவோ குடும்பங்களில் குழந்தைகள் இல்லாமல் செய்த பாபியாக நான் ஆகிறேன். அப்பாபத்தினின்றும் என்னை விநிர்முக்தனாக (விடுபட்டவனாக) செய்யவேண்டும்" என்று ப்ரார்த்தித்துக் கொண்டு, அந்த அஸ்மஞ்ஜன் என்ற ராஜபுத்ரன், தபஸ்ஸைச் செய்வதற்காக வனம் சென்றுவிட்டான். பகவானுடைய க்ருபையினால், எவ்வளவு குழந்தைகளை அந்த அஸமஞ்ஜன் ஸரயூ நதியில் போட்டானோ அவ்வளவு குழந்தைகளும் விளையாடிவிட்டு கரையேறுவது போல்

பரம ஸௌபாக்யத்துடன் கூடினவர்களாக அவரவர்கள் க்ருஹம் சென்ருர்கள். பிறகு நகரம் முழுவதிலும் ஒரு பர பரப்பும், ஆச்சர்யமும் ஏற்பட்டன. ராஜனுக்கும் ‘மஹா பாகவதோத்தமனுன புத்ரனை இழந்தோமே’ என்ற துக்கம் ஏற்பட்டது. ஆகிலும் தபஸ்ஸைச் செய்ய அரண்யம் சென்ற வனை யாரால் கண்டுபிடிக்கமுடியும்! ‘போனது போனது தான்’ என்று எல்லோரும் தீர்மானித்துக்கொண்டார்கள். ஆகிலும் அந்த அஸமஞ்ஜனுக்கு அம்சுமான் என்ற ஒரு புத்ரன் இருந்துவந்தான். அதனல் எல்லோரும் ஸந்தோஷமடைந்துவந்தார்கள். ப்ரஹ்லாதனைப்போல் அப்புத்ரன் விளங்கிவந்தான். ஸர்வ ப்ராணிகளுக்கும் ஸம்மதனுயும் ச்ரேஷ்டமான கல்யாணகுணங்களால் அலங்க்ருதனுயும், தன்னுடைய பிதாமஹரான ஸகர மஹாராஜாவிற்கு மஹத்தான ப்ரீதியைக் கொடுத்துக்கொண்டும் விளங்கிவந்தான். இவ்விதமிருக்கும்பொழுது, ஸகர மஹாராஜாவிற்கு அச்வமேத யாகம் செய்யவேண்டுமென்ற இச்சை ஏற்பட்டது.

இந்தக் கதையை விச்வாமித்ர மஹர்ஷியானவர் சொல்லிக்கொண்டுவரும் ஸந்தர்ப்பத்தில், ஸகர மஹாராஜாவானவர் அயோத்யா நகரத்திற்கு அதிபதி என்று சொன்னதால் ‘தன்னுடைய வம்ச கூடஸ்தபுருஷன்’ என்று நினைத்து, அந்த சரித்ரத்தை விஸ்தாரமாகக் கேட்க ஆவலுள்ளவராகி விச்வாமித்ர மஹர்ஷியைப் பார்த்து,

श्रोतुमिच्छामि भद्रन्ते
विस्तरेण कथामिमाम् ।
पूर्वको मे कथं ब्रह्मन्
यज्ञं वै समुपाहरत् ॥

𑌶𑍍𑌰𑍋𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌭𑌦𑍍𑌰𑌨𑍍𑌤𑍇
𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍇𑌣 𑌕𑌥𑌾𑌮𑌿𑌮𑌾𑌮𑍍 ।
𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍋 𑌮𑍇 𑌕𑌥𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍
𑌯𑌜𑍍𑌞𑌂 𑌵𑍈 𑌸𑌮𑍁𑌪𑌾𑌹𑌰𑌤𑍍 ॥

ச்ரோதுமிச்சாமி பத்ரந்தே
விஸ்தரேண கதாமிமாம் ।
பூர்வகோ மே கதம் ப்ரஹ்மந்
யக்ஞம் வை ஸமுபாஹரத் ॥

என்றதால், "மஹர்ஷே! ஸகர மஹாராஜா என்பவர் என் குலத்திற்கு கூடஸ்த புருஷன் என்று தெரிகிறதே. அவருடைய சரித்ரத்தை விஸ்தாரமாகக் கேட்கவேண்டுமென்ற ஆவலுள்ளவனாக இருக்கிறேன். அவர் ஏதோ அச்வமேத யாகம் செய்ததாகச் சொன்னீர்களே! அதனுடைய வ்ருத்தாந்தத்தையும் விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்" என்று கேட்டார். விச்வாமித்ர மஹர்ஷியானவர் ஸகர மஹாராஜாவினுடைய யக்ஞ வ்ருத்தாந்தத்தையும், விஸ்தாரமாகச் சொன்னார்.

பரமேச்வரனுடைய மாமனாரான பர்வதராஜனான ஹிமவான் விந்த்ய பர்வதத்தை தன் சிகரத்தால் பார்ப்பவன். விந்த்ய பர்வதமும் ஹிமவானை தனது சிகரத்தால் பார்ப்பதுமாக விளங்கிவந்தது. அதாவது தெற்கு திக்கில் விந்த்ய பர்வதமும், வடக்கு திக்கில் ஹிமாலயமுமாக இரண்டு மலைகளும் ரொம்பவும் உன்னதமாக நடுவில் வேறு மலையினால் மறைபடும்படி யில்லாமல் விளங்கிவந்தன. இவ்விரு மலைகளுக்கும் நடுவேயுள்ள பூமிபாகம்தான்,

आर्यावर्तः पुण्यभूमिः मध्यं विन्ध्यहिमालयोः

𑌆𑌰𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌭𑍂𑌮𑌿𑌃 𑌮𑌧𑍍𑌯𑌂 𑌵𑌿𑌨𑍍𑌧𑍍𑌯𑌹𑌿𑌮𑌾𑌲𑌯𑍋𑌃

ஆர்யாவர்த: புண்யபூமி: மத்யம் விந்த்யஹிமாலயோ:

என்ற ஸ்ம்ருதி வசனத்தை அனுஸரித்து, ஆர்யாவர்த்தமென்றும், புண்யபூமி என்றும் சொல்லப்படுகிறது. அந்த ப்ரதேசத்தில் செய்யப்படுகிற ஸத்கர்மாக்கள்தான் பலத்தைக்கொடுக்குமென்று ப்ரஸித்தமானது. ஸகர மஹாராஜாவினுடைய யக்ஞமும் அந்த ஆர்யாவர்த்தம் என்ற புண்ய பூமியில்தான் நடைபெற்றது. அந்த யாகம் அச்வமேதம் ஆனதால் யக்ஞத்

திற்கு அர்ஹமான குதிரையை ரக்ஷிப்பதில் அம்சுமான் என்ற ஸகர மஹாராஜாவினுடைய பௌத்ரனுனவன் ஸித்தனுக இருந்துவந்தான். தேவேந்த்ரனே, 'ஸகர மஹாராஜா இந்த யக்ஞத்தை நிறைவேற்றிவிட்டால் இந்த்ர பட்டத்திற்கு அர்ஹனுக ஆகிவிடுவார்; தனக்கு ஸ்தானம் போய்விடும்' என்று பொருமைகொண்டு, யக்ஞத்தின் நடுவில் ரொம்பவும் முக்யமான தினத்தில், ராக்ஷஸ வேஷத்தைத் தரித்துக்கொண்டு, யக்ஞத்திற்கு அர்ஹமான குதிரையை அபஹரித்துக்கொண்டு போய்விட்டான். இவ்விதம் இந்த்ரன் குதிரையைத் திருடிக்கொண்டு போகும்பொழுது, அந்த யக்ஞத்தின் கர்மாக்களைச் செய்துவரும் மஹர்ஷிகள், (ருத்விக்குகள்) ஸகர மஹாராஜாவைப் பார்த்து 'ராஜனே! யக்ஞ தினங்களுக்குள் இன்று முக்ய தினமாகும். उक्थ्या अहस् (உக்த்யா அஹஸ்) (உக்த்யா அஹஸ்) என்று சொல்லப்படும் அந்த முக்ய தினத்தில் யாகத்துப் பட்டக் குதிரையை, இந்த்ரன் அபஹரித்துக்கொண்டு போகிருன். அந்த இந்த்ரனை ஜயித்துக் குதிரையைத் திருப்பிக் கொண்டுவரவேண்டும். இது யக்ஞத்திற்கு ஓர் பெரிய விக்னமாக ஆகிவிட்டது. இவ்விதம் ஸத்கர்மாவில் ஸம்பவிக்கும் விக்னமானது லோகத்திற்கே க்ஷேபத்தைக் கொடுக்கும். அதனுல் இந்த விக்னத்தால் யக்ஞம் தடைபடாமல் எவ்விதமாகுமோ அவ்விதம் செய்யவேண்டியது தங்களுடைய கடமையாகும்' என்று சொன்னுர்கள். மஹா ஸபையில் உபாத்யாயர்களுடைய வார்த்தையைக் கேட்ட ராஜன், தனது அறுபதினுயிரம் பிள்ளைகளையும் பார்த்து, 'ஹே புத்ரர்களே! ராக்ஷஸர்கள் மஹா மாயாவிகள். அவர்களுடைய செய்கையை யாராலேயும் அறியமுடியாது. ப்ரக்ருதமான யக்ஞத்தில் யாரோ ராக்ஷஸன் நமது குதிரையை அபஹரித்துக்கொண்டு போய்விட்டான். இந்த யாகமோ மஹா வித்வான்களால் அலங்கரிக்கப்பட்டுவருகிறது. இந்த யாகசாலையிலுள்ள வேதவித்துக்கள் கணக்கி லடங்கமாட்டார்கள். நானே யக்ஞத்தில் யஜமானனுக தீக்ஷைசெய்து

கொண்டு இருந்துவருகிறேன். நீங்களெல்லோரும் இப்பொழுதே ப்ரஸ்தானம் செய்து, குதிரையைத் தேடிப்பிடிக்க வேண்டும். அதன்மூலம் உங்களுக்கு பரமக்ஷேமம் உண்டாகும். நீங்கள் அறுபதினாயிரம் பேர்களும் எனக்குபுத்ரர்களாக பிறந்ததற்கு இந்த என் கார்யத்தை நிறைவேற்றிக் கொடுப்பதே மஹாபலமாகும். அன்னியில் உங்கள் ஜன்மம் வீணாக ஆகும். பூமண்டலத்தில் நாலாபக்கங்களிலும் சுற்றித் தேடுங்கள். இந்த யாகத்தில் வேதத்தால் பரிசுத்தர்களான அநேக மஹாத்மாக்கள் கூடியிருக்கும் காரணத்தால், ராக்ஷஸர்கள் யக்ஞசாலையில் ப்ரவேசித்துக் குதிரையை கொண்டு போகக் காரணமில்லை. அவர்கள் இங்கு வருவதற்கு ப்ரஸக்தியுமில்லை. ஆகையால் யக்ஞத்தில் ஹவிர்பாகம் வாங்க வந்த தேவர்களுக்குள் யாராவதொருவன்தான், மறைந்து குதிரையைத் திருடிக்கொண்டு போயிருக்கவேண்டும். அதை கண்டுபிடிப்பது கஷ்டம்தான். பூமி முழுமையும் தேடி விட்டு குதிரை அகப்படாதபோனால், பலமில்லாமல் திரும்பி வந்துவிடக் கூடாது. பூமியை பள்ளமாகத்தோண்டி பாதாளம்வரை சென்று தேடிவரவேண்டும். நான் இங்கு யக்ஞசாலையிலேயே குதிரை வரும் வரையில் தீக்ஷிதனாக இருந்து வருகிறேன்' என்று கட்டளையிட்டார்.

அறுபதினாயிரம் புத்ரர்களும் பித்ருவாக்யத்தை சிரஸால் வஹித்துக்கொண்டு, 'ப்ராணத்யாக பர்யந்தம் நாம் பித்ருவாக்யத்தை பரிபாலனம் செய்தே தீரவேண்டும்' என்ற எண்ணமுள்ளவர்களாக ஆகி பூமிமுழுமையும் தேடினார்கள். குதிரையோ அகப்படவில்லை. பிறகு ஒவ்வொருவனும் வஜ்ரத்திற்கு ஸமானமான நகங்களால் பூதலத்தைப் பள்ளமாக தோண்டினார்கள். கோடையிடியைப்போலொத்த சூலாயுதங்களாலும், கலப்பைகளாலும் பூமியானது பேதிக்கப்பட்டு சப்தித்தது. பாதாளம் வரையிலும் ஆழமாக தோண்டிவிட்டார்கள். அந்த ஸமயத்தில் அநேக ஸர்ப்பங்கள், அஸுரர்கள், ராக்ஷஸர்கள், உக்ரமான ஜல ஜந்துக்

கள் எல்லாம் நாசமடைந்தன. இவ்விதம் பூமியை சுற்றி அறுபதினாயிரம் ராஜபுத்ரர்களும், ஒவ்வொருவரும், ஆயிரம் மைல்கள் நீளம், ஆயிரம் மைல்கள் அகலமான சதுக்கங்களாக பிரித்துக்கொண்டு, அறுபதினாயிரம் மைல் நீளம், ஆயிரம் மைல்கள் அகலமாக ஆறு கோடி சதுர மைல்கள் பாதாளம்வரை பூமியைத் தோண்டிவிட்டார்கள், தேவர்கள், கந்தர்வர்கள் முதலானவர்களுக்கு இந்த ராஜபுத்ரர்கள் செய்த கர்மாவில் பயம் ஏற்பட்டு ப்ரும்மாவிடம் சென்று கதறினார்கள். 'ப்ரும்மன்! ஸகர மஹாராஜாவினுடைய புத்ரர்களால் பூமியில் ஜம்பூத்வீபத்தை நடுமத்யமாக வைத்து நான்கு பக்கங்களிலும் பாதாளம் வரையிலும் பூமி தோண்டப்பட்டதாக ஆகிவிட்டது. அதனால் அநேகவிதமான ஜந்துக்களுக்குப் பீடையும் ஏற்பட்டிருக்கிறது. தேவேந்த்ரன் தான் ராக்ஷஸ வேஷத்துடன் ஸகர மஹாராஜாவினுடைய யக்ஞசாலையிலுள்ள குதிரையை அபஹரித்து வந்துவிட்டான். இது பெரிய அனர்த்தத்தை லோகத்திற்கு விளைவிக்கிறது!' என்று சொன்னார்கள்.

அதற்கு ப்ரும்மா பதில் சொன்னதாவது, 'நீங்கள் பயத்தை அடையவேண்டாம். இந்த ஸமஸ்தமான பூமியும் எந்த மஹாவிஷ்ணுவினுடையதோ அந்த பகவான் கபிலாவதாரம் செய்து அந்த ரூபத்துடன் பாதாளத்தில் தபஸ் செய்துவருகிறார். அவருடைய அருகில் இந்த்ரன் குதிரையைக் கட்டிவிட்டு மறைந்துவிட்டான். இந்த ஸகர ராஜனின் புத்ரர்களோ பாதாளம் சென்று, கபில மஹர்ஷியின் ஸன்னிதியில் குதிரையைக் காண்பார்கள். கபில மஹர்ஷியினுடைய எதிரில் அக்குதிரை நின்றுவரும் காரணத்தால் கபிலரே குதிரையைத் திருடினவர் என்று ஸகர புத்ரர்கள் நினைத்து, அந்த மஹர்ஷியை பலாத்காரமாக இவர்கள் ஆக்ரமிப்பார்கள். உடன் மஹர்ஷியின் கோபாக்னியால் அறுபதினாயிரம் பேர்களும் பஸ்மமாகப் போய்விடுவார்கள். இந்த பூமியில் ஜம்பூத்வீபத்தைச் சுற்றி ஒட்டியாணம்

போல், கீழே வெட்டப்பட்டு ஒரே ஜலமாக இருந்துவரு வது தெய்வ ஸம்மதமே. ஸகர புத்ரர்கள் அதிசீக்ரமாகப் போய்விடுவார்கள். நீங்கள் கொஞ்சமேனும் கவலையை அடையவேண்டாம்' என்று தேவர்களை ப்ரும்மா ஸமா தானப்படுத்தினர். தேவர்களும் ப்ரும்மாவினுடைய வார்த் தையைக் கேட்டு ஸந்தோஷத்துடன் ஸ்வர்க்கலோகம் சென் ருர்கள்.

ஸகர புத்ரர்களும் பூமியை பேதிக்கும் காலத்தில், பெரிய உத்பாதங்களெல்லாம் (அசுபங்களெல்லாம்) ஏற் பட்டன. அதனுல் பயந்து அந்த புத்ரர்கள் பிதாவினு டைய ஸமீபமே சென்ருர்கள். பிதாவினிடம் 'பூமி முழு மையும் தேடியாகிவிட்டது. பாதாளம்வரையிலும் பூமியை வெட்டியும் பார்த்தோம். அதனுல் அநேக ஜந்துக்கள் நாச மடைந்த பாபம்தான் எங்களுக்குப் பலமாக கிடைத்தது. குதிரையையோ, அதை அபஹரித்தவனையோ காணவில்லை. இனி நாங்கள் என்ன செய்யவேண்டும்?' என்று கேட் டார்கள். ஸகர மஹாராஜாவோ, பரம கோபத்தை அடைந்து, 'புத்ரர்களே! கார்யத்தை முடிக்காமல் திரும் பக்கூடாதென்று நான் சொல்லவில்லையா? மறுபடியும் போய் பூமியை வெட்டி எப்படியாவது குதிரையைக் கண்டு பிடித்தே ஆகவேண்டும்.' என்று சொன்னுர்.

புத்ரர்களும் பிதாவின் கோபத்திற்கு பயந்துகொண்டு, வேகமாக ஓடி மறுபடியும் பூமியை வெட்டினுர்கள். முன்வெட்டியதைக் காட்டிலும் அகல நீளமுள்ளதாக வும் ஆழமுள்ளதாகவும் தற்சமயம் வெட்டினுர்கள். அப்படி பூமியைத் தோண்டும்பொழுது, பூமியை தனது சிரஸ்ஸால் தரித்துக்கொண்டிருக்கும் விரூபாக்ஷன் என்ற பெயருடன்கூடின திக்கஜத்தைப் பார்த் தார்கள். அந்த திக்கஜமானது பர்வகாலத்தில் பூபாரத்தை வஹித்த காரணத்தால் ச்ரமத்தை யுடைந்து தலையை அசைத்துக்கொள்வதுதான் பூகம்பம் என்றுசொல்

லப்படும். அதை ப்ரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்துவிட்டு, பாதாளம் சென்றார்கள். முதலாவது கிழக்கு திக்கிலுள்ள பூமியைத் தோண்டிவிட்டு, பிறகு அதுபோல் தெற்கிலும், தோண்டினார்கள். கிழக்கு திக்கில்தான் விரூபாக்ஷன் என்ற திக்கஜத்தைப் பார்த்தார்கள். தெற்கு திக்கிலும் மஹாபத்மம் என்ற திக்கஜத்தைப் பார்த்து ஆநந்தித்தார்கள். பிறகு ப்ரதக்ஷிணமாக மேற்கு திக்குக்கு வரும்பொழுது ஸௌமனஸம் என்ற திக்கஜத்தைப் பார்த்தார்கள். பிறகு வடக்கு திக்கில் பூமியைத் தலையில் சுமந்துவரும் திக்கஜமாகிய பத்ரம் என்ற பெயருடன்கூடின வெள்ளை யானையைப் பார்த்தார்கள். இவ்விதம் ப்ரதக்ஷிணக்ரமமாக அந்தந்த திக்கஜங்களைப் பார்த்து அவைகளின் ப்ரஸாதத்தையு மடைந்து பூமியைத் தோண்டிக்கொண்டு பாதாளத்தில் ஈசான்ய திக்கை (வடகிழக்கை) அடைந்தார்கள். அவ்விடத்தில் கபில மஹர்ஷி தபஸ் செய்துவந்தார். அவர் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவே. அவருடைய ஸமீபத்தில் ஸஞ்சரித்து வரும் தன் பிதாவின் யக்ஞத்திற்கு அர்ஹமான குதிரையையும் பார்த்தார்கள். 'குதிரையைக் கண்டோமே' என்ற ஸந்தோஷமும் ஏற்பட்டது. குதிரையை அபஹரித்த திருடன் என்று கபில மஹர்ஷியையும் தீர்மானித்து அநேக வ்ருக்ஷங்கள், மலைகள், கலப்பைகள், மண்வெட்டிகள் இவைகளால் கபில மஹர்ஷியைப் பாதிக்க ஆரம்பித்தார்கள். 'குதிரை திருடினவனுக்கு தபஸ் வேறு வேண்டுமா!' என்று க்ரூர வார்த்தைகளையும் சொன்னார்கள். அதைக் கேட்ட மஹர்ஷிக்கு பரம கோபம் ஏற்பட்டுவிட்டது. தன்னை அடிக்க வந்த ஸகர புத்ரர்களை, பரம கோபத்துடன் மஹர்ஷியானவர் ஹூம்காரம் செய்து தடுத்தார் அதனால் உடன் அறுபதினாயிரம் போர்களும் சாம்பலாக ஆகிவிட்டார்கள். நிரபராதியாயும், மஹா பூஜ்யனாயுமுள்ள மஹாபுருஷனிடம் செய்த அபசாரத்திற்கு ராஜபுத்ரர்களுக்கு உடன் பலன் கிடைத்துவிட்டது. இந்த வ்ருத்தாந்தத்தை ஸகர மஹாராஜனுக்குத் தெரிவிக்கவும் எவனுமில்லாமலிருந்தது.

இவ்விதம் குதிரையைத் தேடிக்கொண்டுபோய் வெகு காலமாகியும் திரும்பி அறுபதினுயிரம் புத்ரர்களும் வராமலிருப்பதை, ஸகர மஹாராஜா அறிந்து தன்னுடைய பௌத்ரனுன அம்சுமானிடம் சொன்னதாவது :—

"நீ ரொம்பவும் சூரன். அஸ்த்ர வித்யைகளிலும் ஸமர்த்தன். இந்த வம்சத்தில் பிறந்த பூர்வீகர்களுக்கு ஸமானமான வைபவமுள்ளவன். உன் சிறிய தகப்பனுர்களான அறுபதினுயிரம் பேர்களும் யக்ஞத்திற்கு அர்ஹமான குதிரையைத் தேடச் சென்று, இன்னமும் திரும்பி வரவில்லை. அவர்களேயும் எப்படியாவது தேடிப் பிடிக்க வேண்டும். யக்ஞத்திற்கு அர்ஹமான குதிரையையும் யார் அபஹரித்தான் என்பதை அறிந்து எப்படியாவது குதிரையை யாகத்திற்கு கொண்டுவரவேண்டும். பூமியில் அகப்படாவிடில் பாதாள லோகமும் சென்று தேடவேண்டும். பாதாள லோகத்திலுள்ள ப்ராணிகளோ மிக பலவான்கள். அவர்களுடன் யுத்தம் செய்யும்படி நேர்ந்தாலும் நேரும். அவர்களை வதிப்பதற்குள்ள ஆயுத விசேஷங்களையும் கத்திகளையும், விற்களையும் எடுத்துக்கொண்டு போகவேண்டும். அப்படி நீ செல்லும் காலத்தில், நமது கார்யத்திற்கு அனுகூலமாக இருப்பவர்களை நமஸ்கரித்து அவர்களுடைய அனுக்ரஹத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும். விக்னம் செய்கிறவர்களைக் கொஞ்சமேனும் தயை யில்லாமல் வதைத்துவிடவேண்டும். எவ்விதத்திலும் கார்யத்தை முடித்துக் கொண்டு வரவேண்டும். நான் ஆரம்பித்த அச்வமேத யாகத்தை ஸமாப்தி செய்துவைக்கவேண்டியது உன் பொறுப்பு. உன்னுடைய தகப்பனுரான அஸமஞ்ஜனே எனக்கு உபயோகமில்லாதவனுக ஆகிவிட்டான். உனது சிறிய தகப்பனுர்களான அறுபதினுயிரம் பேர்களோ, குதிரையைத் தேடப்போனுர்கள். அவர்களின் கதி என்ன ஆயிற்று என்று தெரியவில்லை."

இவ்விதம் தனது பாட்டனுரான ஸகர மஹாராஜனின் வார்த்தையைக் கேட்டு, அம்சுமான் என்ற ராஜபுத்ரன்

தேவையான ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, சில ஸேனை களுடனும் வெகு வேகமாகக் குதிரையைத் தேடிக்கொண்டு சென்றான். தனது சிறிய தகப்பனார்களான அறுபதினா யிரம் பேர்களால், பள்ளமாகச் செல்லப்பட்ட வழியாக பாதாள லோகம் சென்றான். போகும் வழியில் அஸுரர்கள், ராக்ஷஸர்கள் முதலானவர்களால் பூஜிக்கப்பட்ட பூமியைத் தாங்கிவரும் திக்கஜத்தைப் பார்த்து, ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளால் பூஜித்து, தனது பித்ருக்களுடைய கதி யையும், குதிரையினுடைய கதியையும் என்னவென்று கேட்டான். அந்த யானையோ, அம்சுமானைப் பார்த்து, 'நீ அஸமஞ்ஜனுடைய பிள்ளை. உன் தகப்பன் மஹா பாகவதோத்தமன். சீக்ரம் குதிரையைக் கண்டுபிடித்து குதிரையுடன் உன் தாத்தாவின் ஸமீபம் போய்ச் சேரு வாய்.' என்று அனுக்ரஹம் செய்தது. அவ்விதமே மற்ற திக்குகளிலுள்ள யானைகளையும் ப்ரச்னம் செய்தான். அந்த யானைகளும் முன் யானையைப் போலவே குதிரைகிடைக்கு மென்று அனுக்ரஹித்ததும் திக்கஜங்களுடைய வார்த் தையைக் கேட்டு நம்பிக்கையுடன் பாதாள லோகத்தில் வடகிழக்கான திக்கில் கபில மஹர்ஷியின் ஆச்ரமத்திற்கு அருகில் சென்றான். இந்த ஆச்ரமத்தின் ஸமீபத்தில், தனது சிறிய தகப்பனார்களான அறுபதினாயிரம் பேர்களும், கபில மஹர்ஷியின் கோபாக்னியால் எரிக்கப்பட்டு சாம்பலாகக் கிடப்பதையும் பார்த்தான். அவர்களுடைய மரணத்தால் அம்சுமான் மிக துக்கத்துடன் வீறிட்டுக் கதறி துக்கப்பட் டான். அவர்களுடைய ஸமீபத்தில் ஸஞ்சரித்துக்கொண்டு வரும் குதிரையையும் பார்த்தான். குதிரையைப் பார்த்து ஸந் தோஷமும் ஏற்பட்டது. ஆகிலும் பித்ருக்களுடைய மரணத் தால் ஏற்பட்ட துக்கத்தை அடக்க முடியவில்லை. மனதை ஸமாதானம் செய்துகொண்டு, பித்ருக்களுடைய சாம்பலைக் கரைத்து தர்ப்பணாதிகளைச் செய்துவிட்டுப் போவோம் என்று நாலாபக்கங்களிலும் நதியோ தடாகமோ இருக்கிறதா வென்று பார்த்தான். ஜலமோ அகப்படவில்லை. இதனாலும்

பெரிய துக்கம் ஏற்பட்டது. பிறகு, அங்கு நாலாபக்கங்களி லும் த்ருஷ்டியைச் செலுத்திக்கொண்டு இந்த தர்மஸங்கடத் தில் என்ன செய்வதென்ற கவலையுடன் இருந்து வரும் பொழுது, கருடபகவானைப் பார்த்தான். இந்த அறுபதி னுயிரம் பேர்களுக்கும் தாயாரான ஸுமதி என்பவளுக்கு கருடபகவான் தமயனுனதினுல், இந்த அறுபதினுயிரம் பேர் களும் கருடபகவானின் மருமகன்களாக ஆகிருர்கள். அத ஞல், இவர்களை கரையேற்றிவிடுவதில் கருடபகவானுக்கும் பொறுப்பு ஏற்பட்டுவிட்டது. அம்சுமானைப் பார்த்து கருட பகவான் 'குழந்தாய்! உனக்குள்ள, துக்கம் எனக்குமுண்டு. நீ துக்கப்படாதே. இந்த அறுபதினுயிரம் பேர்களும் இவ் விதம் மாண்டது ஈசனுடைய செயலால்தான். பின்பு நடக் கப்போவதை யோஜித்தால், லோகத்திற்கு நன்மையைக் கொடுக்கக்கூடியது. கபில மஹர்ஷியின் கோபாக்னியால் இவர்கள் சாம்பலாக ஆகிவிட்டார்கள். இவர்களுக்கு செய் கிற தர்ப்பணமோ, பிண்டதானமோ ஒன்றும் பயனைக் கொடுக்காது. அவர்களிடம் போயும் சேராது.

चण्डालादुदकात्सर्पा द्वैद्युतात् ब्राह्मणादपि ।
दंष्ट्रिभ्यश्च पशुभ्यश्च मरणं पापकर्मणां ।
उदकं पिण्डदानंच एतेभ्योय द्विधीयते ।
नोपतिष्ठति तत्सर्व मन्तरिक्षे विनश्यति ।

𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌾𑌦𑍁𑌦𑌕𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌪𑌾 𑌦𑍍𑌵𑍈𑌦𑍍𑌯𑍁𑌤𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌦𑌪𑌿 ।
𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌿𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 𑌪𑌶𑍁𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 𑌮𑌰𑌣𑌂 𑌪𑌾𑌪𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 ।
𑌉𑌦𑌕𑌂 𑌪𑌿𑌣𑍍𑌡𑌦𑌾𑌨𑌞𑍍𑌚 𑌏𑌤𑍇𑌭𑍍𑌯𑍋𑌯 𑌦𑍍𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌨𑍋𑌪𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵 𑌮𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑍇 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ।

சண்டாலதுத காத்ஸர்பா த்வைத்யுதாத் ப்ராஹ்மணுதபி ।
தம்ஷ்ட்ரிப்யச்ச பசுப்யச்ச மரணம் பாபகர்மணும் ।
உதகம் பிண்டதானஞ்ச ஏதேப்யோய த்விதீயதே ।
நோபதிஷ்டதி தத்ஸர்வ மந்தரிக்ஷே விநச்யதி ।

என்ற ஸ்ம்ருதியால் பாபத்தைச் செய்தவர்களுக்கு துர் மரணம்தான் ஏற்படும். சண்டாளனுல் கொல்லப்பட்டு சாகிற

தும், ஜலத்தில் முழுகிச் சாகிறதும், ஸர்ப்பம் கடித்துச் சாகிறதும் தலையில் இடிவிழுந்து சாகிறதும், ப்ராம்மண னுடைய சாபத்தால் சாகிறதும், புலி, கரடி முதலிய ம்ருகங்களால் ஹிம்ஸிக்கப்பட்டுச் சாகிறதும் மாடு முட்டிச் சாகிறதும், துர்மரணங்களாக ஆகும். ப்ராயச்சித்த வரம்பைக்கூட மீறின பாபத்தைச் செய்த பாபிகளுக்குத்தான் இவ்விதமான மரணம் ஏற்படும். அவர்களை உத்தேசித்து அவர்களுடைய வம்சத்திலுள்ளவர்களால் கருணையினுல் பிண்டதானம் உதகதானம் முதலானதுகள் யாதொன்று செய்யப்படுகிறதோ, அதுகள் துர்மரணத்தால் மரித்தவர்களைப் போய் அடையாது. ஆகாசத்திலேயே நசித்துவிடும் என்று சொல்லப்பட்டிடுக்கிறது. அதனுல் இங்குள்ள ஜலங்களால் செய்யப்படுகிற அபரக்ரியையானது பித்ருக்களை கரை ஏற்ருது.

ஆனுல், பர்வதராஜனுன ஹிமவானுடைய ஜ்யேஷ்ட புத்ரியாக கங்காதேவியானவள் ஸ்வர்க்க லோகத்தில் விளங்கிவருகிருள். கங்கையில் இந்த பித்ருக்களுக்கு தர்ப்பண்ம் செய்தால் பித்ருக்கள் கரையேறுவார்கள். கங்கா ஜலத்தைக்கொண்டு இந்த சாம்பல் முட்டைக் கரைக்கவேண்டும். கங்கையினுல் நனைக்கப்பட்ட இந்த சாம்பல் இந்த அறுபதினுயிரம் பேர்களை ஸ்வர்க்கலோகம் கொண்டு சேர்த்துவிடும். அன்னியில் மன்வாதிகளால் சொல்லப்பட்ட ப்ராயச்சித்தங்கள் எல்லாம் ப்ரக்ருத ஸந்தர்ப்பத்தில் பலிக்காது. ஆகிலும் இந்த சாம்பலில் கங்காஜல ஸ்பர்சமானது ஸர்வபாப ப்ராயச்சித்தமாக ஆகும். ஸ்வர்கலோகத்திலுள்ள கங்கையை பூமியில் கொண்டுவருவதே கஷ்டம். பூமியிலிருந்து பாதாளத்திற்குக் கொண்டுவந்து, அதிலும் இந்த சாம்பல்முட்டு இருக்கும் இடத்திற்கு கங்கையைக் கொண்டுவந்து, சாம்பல் முட்டை கங்கா ஜலத்தில் நனைப்பதென்பது, இப்பொழுது ஆகிற கார்யமல்ல. ரொம்பவும் ச்ரமஸாத்யமானது. நீயோ குழந்தை; என்ன செய்வது! எப்படியாகிலும் சீக்ரத்தில்

நடக்கும். குதிரையை க்ரஹித்துக்கொண்டு உன் தாத்தாவினிடம் கொடுத்து யக்ஞத்தை நிறைவேற்றுவதே முதல் கார்யமாகும்' என்று சொல்லிவிட்டு கருடபகவான் மறைந்துவிட்டார்.

அம்சுமானும், கருடபகவானின் வார்த்தையைக் கேட்டு குதிரையைக் கையில் பிடித்துக்கொண்டு வெகு வேகமாக அயோத்யா நகரத்திற்கு வந்து சேர்ந்தான். யக்ஞ சாலைக்குச் சென்று பிதாமஹனுடைய எதிரில் குதிரையை நிறுத்திவிட்டு பித்ருக்களுடைய கதியைச் சொன்னான். ராஜனும் அதைக்கேட்டு ரொம்பவும் துக்கப்பட்டார். ஆகிலும் தீக்ஷா காலத்தில் ஆசௌசாதிகளுக்கு ப்ரஸக்தி இல்லாததினால் ஆரம்பித்த யக்ஞத்தை ரொம்பவும் விமர்சையாக வஸிஷ்டாதிகளைக் கொண்டு ஸமாப்தி செய்து, அவப்ருத ஸ்னானதிகள் ஆனபிறகு ராஜன் அரண்மனை வந்து சேர்ந்தார். பிறகும் முப்பதினாயிரம் வருஷங்கள் அரசாண்டார். கங்கையை வரவழைத்து தன் பிள்ளைகளான அறுபதினாயிரம் பேர்களை கரையேற்றிவிட எவ்வளவோ யத்னம் செய்தும், அவைகள் ஒன்றும் பலிக்கவில்லை. அந்த துக்கத்தினாலேயே ராஜன் ஸ்வர்க்கம் சென்றுவிட்டார்.

ராஜன் ஸ்வர்க்கம் சென்றபிறகு ப்ரஜைகள் ராஜனுடைய பௌத்ரனான அம்சுமானுக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் செய்துவைத்து அரசனாக ஸ்தாபனம் செய்தார்கள். அம்சுமானோ, கபில மஹர்ஷியினுடைய சாபத்தால் சாம்பலாகப் போன பித்ருக்களை நேரில் பார்த்த காரணத்தால், கருட பகவான் சொல்லியபடி கங்கையை வரவழைத்து பித்ருக்களை கரையேற்றவேண்டும் என்ற கவலை உள்ளவராகவே இருந்தார். அகண்ட பூமண்டலத்தை ஆண்டுவரும் ராஜ பதவியும் அம்சுமானுக்குக் கொஞ்சமேனும் ஸுகத்தை அளிக்கவில்லை.

அம்சுமானுக்கு திலீபன் என்று ஓர் குமாரன் இருந்தான். அந்த குமாரனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டு ஹிமோத்பர்வதத்தின் சிகரம் சென்று, முப்பத்திரண்டாயிரம்

வருஷங்கள் அத்யுக்ரமான தபஸ்ஸைச் செய்தார். ஆகிலும் கங்கையை வரவழைக்க முடியவில்லை. பித்ருக்களை கரை யேற்ற முடியவில்லையே என்ற கவலை மேலிட்டு அம்சுமானும் ஸ்வர்க்கம் சென்றுவிட்டார்.

திலீபன் என்ற அரசனே, தன் குலத்தில் ஸம்பவித்த பித்ருக்களுடைய துர்கதியை அறிந்து மிகவும் துக்கத்துடன் ராஜ்யஸுகத்தைக் கொஞ்சமேனும் விரும்பாமல் கஷ்டப் பட்டு வந்தான். இந்த துக்கத்தினலேயே, தன் முன்னோர் கள் மரித்ததையும் தெரிந்துகொண்டு எப்பொழுதும் மந்த்ரி ஸபையில் 'எப்படி கங்கையை வரவழைப்பது? பித்ருக் களுக்கு தர்ப்பணம் எப்படிச் செய்வது? அவர்களை எப்படித் தான் நான் கரை ஏற்றுவேன்?' என்று யோஜிக்கிறவனகவே இருந்துகொண்டு அன்னம், தீர்த்தம் இவைகளில்கூட ருசி இல்லாதவனக ஆகிவிட்டான். பகவானுடைய அனுக்ரஹத் தால் பகீரதன் என்ற புத்ரன் மாத்ரம் ஏற்பட்டான். பிறகு திலீபனும் முப்பதினயிரம் வருஷங்கள் ராஜ்யபரிபாலனம் செய்துவிட்டு, க்ஷத்ரியனல் செய்யப்படவேண்டிய யக்ஞ யாகாதிகளையும் செய்துவிட்டு பகீரதனை ராஜ்யத்தில் பட் டாபிஷேகம் செய்துவிட்டு தானும் கங்கையை வரவழைப்ப தற்காக ஆயிரக்கணக்கான வருஷங்கள் தபஸ் செய்து அதனல் வ்யாதி ஏற்பட்டு கங்கையை வரவழைக்காமல் திலீபனும் ஸ்வர்க்கம் சென்றான்.

பகீரதனே, ராஜ்ய பட்டாபிஷேகம் செய்துகொண்ட தினத்திலிருந்தே கங்கையை வரவழைத்துத்தான் மறுகார் யம் செய்வதென்று தீர்மானித்துவிட்டான். ராஜன் பரமதார் மிகன்; ஆனல் புத்ரனில்லை. ராஜ்யத்தை மந்த்ரிகளிடம் ஒப்பு வித்தான். ஹிமோத்பர்வதம் சென்று, ஹிமோத்பர்வதத் தின் தாழ்வரையிலுள்ள கோகர்ணம் என்ற ஸ்தல விசேஷத் தில் அத்யுக்ரமான தபஸ்ஸைச் செய்தான். இரண்டு கைகளை யும் ஆகாசத்தில் தூக்கி நிறுத்திக்கொண்டு, நாலாபக்கங்களி லும் அக்னியை ஜ்வலிக்கச் செய்துகொண்டு தலையில் ஸுர்ய

கங்காவதரணம்.

கிரணமும் படும்படியான இடத்தில் நின்றுகொண்டு, பஞ் சாக்னி மத்தியில் தபஸ்ஸைச் செய்தான். மாதத்திற்கு ஒரு தடவை ஜலத்தை மாத்ரம் ஆஹாரம் செய்து வந்தான். இவ்விதம் ஆயிரம் வருஷங்கள் சென்றுவிட்டன. ப்ரும்மா வானவர் இனி நாம் பேசாமலிருப்பது ந்யாயமில்லை என்று நினைத்து, தேவகணங்களால் சூழப்பட்டு பகீரதனின் ஸமீ பம் வந்து சேர்ந்தார். "பகீரதா! உன்னுடைய தபஸ் ஸால் நான் மிக ஸந்தோஷமடைந்தேன். உனக்கு வேண் டிய வரங்களைக் கேட்டுக்கொள்ளலா"மென்று சொன்னார். பகீரதனும் அஞ்ஜலிபந்தத்துடன் "பகவன்! என்னுடைய தபஸ்ஸால் தாங்கள் ஸந்தோஷப்பட்டிருக்கும் பக்ஷத்தில், என்னுடைய தபஸ் பலவத்தாக ஆகிவிட்டதேயானால், ஸகர மஹாராஜாவின் புத்ரர்களான என்னுடைய குல பித்ருக்க ளான அறுபதினாயிரம் பேர்களும், என்மூலமாக திலோத கத்தை அடையவேண்டும். கங்கை பூலோகத்திற்கு வந்து, அந்த கங்காஜலத்தால் என்னுடைய குல பித்ருக்களுடைய சாம்பலும் நனைக்கப்பட்டு, அதன்மூலம் அவர்கள் ஸ்வர்க் கத்தை அடையவேண்டும். அத்துடன், இக்ஷ்வாகு வம்சமே என் வம்சமாகும். அந்த வம்சத்தின் கௌரவத்தையும் தாங் கள் அறிந்தவர்களே. அந்த வம்சம் என்னுடன் போய் விடும்போலிருக்கிறது. எனக்கு ஸந்ததியோ இல்லை. குலம் அழியாமலிருக்கும்படி நல்ல புத்ரனையும் எனக்குக் கொடுக்க வேண்டும்." என்று கேட்டான்.

இவ்விதம் வரனைக் கேட்டுக்கொண்ட பகீரதனைப் பார்த்து ப்ரும்மாவானவர் "பகீரதா! உன்மனோரதம் ரொம் பவும் பெரிதாக இருக்கிறது. பகவானுடைய அனுக்ரஹம் இருந்தால் பூர்த்தியாகும். கங்கையோ ஹிமவானுடைய ஜ்யேஷ்ட புத்ரி. அம்ச கங்கை என்று தேவர்களால் அழைக் கப்பட்டு ஸ்வர்க்க லோகத்தில் ப்ரவாஹித்து வருகிறாள். ஸ்வர் நதி த்விர் நதி என்று அவளுக்கு ப்ரஸித்தமாகப் பெயர் ஏற்பட்டுவிட்டது. அவள் பூமியில் விழுந்தால் வேகத்தை பூமியால் ஸஹிக்கமுடியாது. அவளுடைய வேகத்தை தரிக்

கிறவனும் பூலோகத்தில் ஒருவனுமில்லை. ஒரு ஸமயம் பரமேச்வரன் தரித்தால் தரிக்கலாம். தபஸ்ஸினால் பரமேச்வரனை ஸந்தோஷிக்கச் செய்து அவர் இந்த கங்கையை தான் தரிப்பதாக ஒப்புக்கொண்டால், பிறகு பூதலத்தில் கங்கைவர ந்யாயமேற்படும். ஆகையால் பரமேச்வரனைக் குறித்து தபஸ் செய்து அவருடைய அனுக்ரஹத்தைப் பெற்றுக்கொள்'' என்று பகீரதனுக்கு ஆசீர்வாதம் செய்துவிட்டு, தேவர்களுடன் ப்ரும்மா ஸ்வர்க்கலோகம் சென்று, கங்கையையும் கூப்பிட்டு, "ஸூர்ய வம்சத்தில் உதித்த பகீரதன் ரொம்பவும் கஷ்டப்படுகிறான். கொஞ்சம் நீ அனுக்ரஹம் செய்யவேண்டு'' மென்று சொல்லிவிட்டு, ப்ரும்மாவானவர் ப்ரும்மலோகம் சென்றார்.

ப்ரம்மாவானவர் கங்கையைப் தரிப்பதற்கு பரமேச்வரனைக் குறித்து தபஸ்ஸைச் செய்யவேண்டும் என்று உத்தரவு அளித்துவிட்டு ப்ரும்மலோகம் சென்ற பிற்பாடு, பகீரத மஹாராஜாவானவர் இரண்டு கால்களின் கட்டைவிரல்களின் நுனிகளால் பூமியை ஆச்ரயித்துக்கொண்டு வாயு பக்ஷணாகவும் ஊர்த்வபூருவாயும் சரீரத்தைக் கொஞ்சங்கூட சலிக்காமல் இருக்கும்படி வைத்துக்கொண்டு ஒரு வருஷ காலம் பரமேச்வரனை உபாஸித்து வந்தார். பரமேச்வரனும் ஒரு வருஷம் பூர்த்தியானவுடன் பார்வதியோடுகூட பகீரதனுக்கு தர்சனம் கொடுத்து "உன் விஷயத்தில் நான் ரொம்பவும் த்ருப்தி அடைந்தேன். உன் மனோரதத்தையும் பூர்த்தி செய்கிறேன். கங்கையை சிரஸால் தரிக்கிறேன்'' என்று சொன்னார். இவ்விதம் பரமேச்வரன் கங்கையை சிரஸ்ஸால் தரிக்கிறேன் என்று சொன்னதை தேவர்கள் மூலமாக கங்காதேவி அறிந்து கர்வத்தால் 'நம்மையும் தரிக்கிறவன் இந்த லோகத்தில் உண்டா!' என்று எண்ணி, மிகவும் பெரிதான ரூபத்தையும் எடுத்துக்கொண்டு ஒருவராலும் ஸஹிக்க முடியாததான வேகத்தையும் அடைந்து ஆகாசத்திலிருந்து பரம மங்களரூபமான பரமசிவனுடைய

சிரஸ்ஸில் மிகவேகமாக விழுந்தாள். மற்றொருவராலும் தரிக்கமுடியாத கங்கை நினைத்ததோ 'பரமேச்வரனை பார்வதி தேவியோடுகூட க்ரஹித்துக்கொண்டு பாதாள லோகம் சென்றுவிடுகிறேன்' என்பதே. பகவானுன பரமேச்வரன் அவளுடைய கர்வத்தை அறிந்து தன்னைக்கூட வேகத்தில் அடித்துக்கொண்டு பாதாள லோகம் சென்றுவிடுகிறதென்று கங்கை எண்ணிய எண்ணத்தையும் அறிந்து மஹா கோபத்துடன் தன் ஜடா மண்டலத்தில் கங்கை மறைந்துபோகும்படி செய்வதற்கு யத்னம் செய்தார். கங்கையும் மஹா பரிசுத்தமான பரமேச்வரனுடைய சிரஸ்ஸில்விழுந்தவளாகக்கொண்டு அந்த சிரஸ்ஸில் ஹிமாலயம்போல் வழி கண்டுபிடிக்க கஷ்டமாயிருப்பதால் தான் பூமியில் விழவேண்டுமென்று யத்னம் செய்தாலும்கூட கங்கை ஸமர்த்தையாக ஆகவில்லை. ஜடாமண்டலத்திலிருந்து வெளிக்கிளம்பவும் முடியவில்லை. அநேக வருஷங்கள் பரமேச்வரனின் ஜடையிலேயே சுற்றிக் கொண்டு வெளியில்வர வழிதெரியாமல் கஷ்டப்பட்டாள். பிறகும் பகீரதன் பரமேச்வரனை ஸ்தோத்ரம் செய்தான். பகீரதனின் ஸ்தோத்ரத்திற்கிணங்கி பரமேச்வரனும் ஹிமாலயத்தின் சிகரத்தில் ப்ரும்மாவினுடைய மனதால் நிர்மாணம் செய்யப்பட்ட பிந்துஸரஸ், மானஸஸரஸ் என்ற பெயரால் விளங்கிவரும் ஸரஸில் ஜடையிலிருந்து கங்கையை விட்டார். அந்த கங்கை விடப்பட்ட மாத்ரத்தில் ஏழு நதிகளாக ப்ரவாஹித்து சென்றன. ஹ்லாதினீ, பாவனீ, நளினீ என்று மூன்று நதிகள் கிழக்கு திக்கை நோக்கிச் சென்றன. ஸுசக்ஷு:, ஸீதா, ஸிந்து, என்ற மூன்று மஹாநதிகள் மேற்கு திக்கை நோக்கிச் சென்றன. ஏழாவதான நதி பகீரதனைப் பின் தொடர்ந்து சென்றது. பகீரதனும் தன் பித்ருக்கள் கபில மஹர்ஷியின் கோபாக்னியால் சாம்பலாகிக் கிடக்கும் இடத்திற்குப்போக ரதத்தில் ஏறிக்கொண்டு, கங்கைக்கு வழி காட்டுவதுபோல் முன்பு சென்றுன். பகீரதனை அனுஸரித்து பின்பு கங்கா நதியும் சென்றுள். ஸ்வர்க்கலோகம், ஆகாசம், பூமி மூன்று மார்கங்களிலும் கங்கை ப்ரவாஹித்ததினுல்

த்ரிபதகா என்ற பெயரை அடைந்தாள். ஆகாசத்திலிருந்து பரமசிவனுடைய சிரஸ்ஸில் விழுந்து பரமேச்வரனுடைய சிரஸ்ஸிலிருந்து பூமியிலும் விழுந்தாள். உக்ரமான சப்தத்துடன் ஜலமானது பூமியில் நாலபக்கங்களிலும் பரவிற்று. மத்ஸ்யங்கள், ஆமைகள், முதலைகள், முதலான அநேக ஜல ஜந்துக்களாலும் அலங்கரிக்கப்பட்டதாக விளங்கி வந்தது. தேவதைகள், ரிஷிகள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், உரகர்கள், ஸித்தர்கள் எல்லா ஜாதியார்களும் அவரவர்கள் விமானத்தில் ஏறிக்கொண்டும், யானை, குதிரை இவைகளில் ஏறிக்கொண்டும், ஓடத்தில் ஏறிக்கொண்டும், கூட்டங் கூட்டமாக வந்து கங்கையைப் பார்த்து ஆச்சர்யப்பட்டார்கள். ஆகாசத்திலும் ஆகாச விமானத்தில் ஏறிக்கொண்டு பார்க்கும் தேவர்களை கணக்கிட முடியாமலிருந்தது. ஸகல தேவர்களும் அநேக ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, அவரவர்கள் ஆகாசத்தில் விமானங்களில் இருப்பதைப் பார்க்கும்பொழுது ஒவ்வொருவரும் ஸூர்யன்தான் ஆகாசத்தில் உதித்திருக்கின்றானோ என்று பார்ப்பவர்களுக்கு தோன்றினார்கள். கங்காதேவியும் சரத்கால மேகம்போல் ரொம்பவும் நிர்மலமான ஜலத்தோடு சில ப்ரதேசத்தில் வேகமாகவும், சில ப்ரதேசத்தில் குறுகலாகவும், சில ப்ரதேசத்தில் ஒழுங்காகவும், சில ப்ரதேசத்தில் வணக்கமாகவும், சில ப்ரதேசத்தில் ஊர்த்வமுகமாகவும் ப்ரவாஹித்துக்கொண்டு பகீரதனை அனுஸரித்துச் சென்றாள்.

இவ்விதம் பரமேச்வரனுடைய சிரஸ்ஸிலிருந்து பூமியில் விழுந்த கங்கா ஜலமானது பாபத்தை போக்கடிக்கக் கூடியதாயும், அதி நிர்மலாயும், ஸ்வச்சமாயும் விளங்கிவந்தது.

तत्र देवर्षिगन्धर्वा वसुधातलवासिनः ।
भवाङ्गपतितं तोयं पवित्रमिति पस्पृशुः ॥

தத்ர தேவர்ஷிகந்தர்வா வஸுதாதலவாஸிநः ।
பவாங்கபதிதம் தோயம் பவித்ரமிதி பஸ்ப்ருசுः ॥

தத்ர தேவர்ஷிகந்தர்வா வஸுதாதல வாஸிந: ।
பவாங்கபதிதம் தோயம் பவித்ரமிதி பஸ்ப்ருசு: ॥

என்ற ச்லோகத்தில் சொல்லியபடி பரமசிவனுடைய சிரஸ்ஸிலிருந்து பூமியில் கங்கை விழுந்தபொழுது தேவதைகளுடைய ஸங்கங்கள், மஹர்ஷிகளுடைய ஸங்கங்கள், பூமி தளத்தில் வஸிக்கிற புண்யவான்கள் எல்லா ஜனங்களும் 'இந்த ஜலமானது மிகவும் பரிசுத்தம், பஞ்சமஹா பாதகங்களைப் போக்கடிக்கக் கூடியது, இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்த மாத்ரத்தில் ஸர்வ பாபத்தினின்றும் மனிதன் விநிர்முக்தனாக ஆகிவிடுவான். இவ்வளவு மஹிமை இந்த தீர்த்தத்திற்கு ஏற்பட்டதற்கோ பரமேச்வரன் தனது சிரஸில் தரித்ததே காரணமாகும்' என்று தீர்மானித்து ஸ்நானம் செய்தார்கள்.

பவித்ரம் (பரிசுத்தம் செய்விக்கும்) என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால் இன்னாரை பரிசுத்தம் செய்து வைக்குமென்று குறிப்பிடாததால் பரமேச்வரனையும் பரிசுத்தம் செய்துவைக்கக்கூடியது, அன்யர்களையும் பரிசுத்தம் செய்துவைக்கக் கூடியது என்று தீர்மானமாகும். ஸ்ரீமத் பாகவதத்திலும்,

यच्छौचनिस्सृतसरित्प्रवरोदकेन तीर्थेन मूर्ध्निविधृतेन शिवश्शवो भूत्

𑌯𑌚𑍍𑌛𑍌𑌚𑌨𑌿𑌸𑍍𑌸𑍃𑌤𑌸𑌰𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑌰𑍋𑌦𑌕𑍇𑌨
𑌤𑍀𑌰𑍍𑌥𑍇𑌨 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑍍𑌵𑌿𑌧𑍃𑌤𑍇𑌨 𑌶𑌿𑌵𑌶𑍍𑌶𑌵𑍋 𑌭𑍂𑌤𑍍

யச்சௌசநிஸ்ருத ஸரித்ப்ரவரோதகேந
தீர்தேந மூர்த்நிவித்ருதேந சிவச்சவோ பூத்

என்று சொல்லப்பட்டிருக்கிறது. மஹாவிஷ்ணுவினுடைய பாதாரவிந்தத்தை ப்ரும்மா தீர்த்தத்தால் சுத்திசெய்து, அந்த ஜலத்தை ப்ரும்மாவானவர் தனது கமண்டலுவில் எடுத்து வைத்துக்கொண்டிருந்தார். அது பகீரதனால் வரவழைக்கப்பட்ட கங்கை என்று சொல்லப்படும். ஆகையால் அதை சிரஸில் நாம் தரித்தால் பரிசுத்தனாக ஆகு

வோம் என்று எண்ணி, பரமசிவனும் சிரஸில் தரித்தார் என்றதினுல் பரமேச்வரனையும் பரிசுத்தி செய்துவைக்கக் கூடியது என்று ஏற்படுகிறது. மஹாபாரதத்திலும்,

तदं बुपतितं दृष्ट्वाद्धारशिरसाहरः ।
पावनार्थं जटामध्येयोग्योस्मीत्यवधारणात् ॥

தத்ஂபுவதிதஂ த்ருஷ்ட்வாத்யாரஶிரஸாஹர: ।
பாவநார்தஂ ஜடாமத்யெயொக்யொஸ்மீத்யவதாரணாத் ॥

ததம்புபதிதம் த்ருஷ்ட்வாததாரசிரஸாஹர: ।
பாவநார்தம் ஜடாமத்யேயோக்யோஸ்மீத்யவதாரணுத் ॥

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனுலும், ஆகாசத்திலிருந்து கங்கை விழும்பொழுது பரமேச்வரன்தான் பரிசுத்தனுக ஆகவேண்டுமென்று நினைத்து சிரஸ்ஸில் தரித்தார் என்று தெரிகிறது. ராமாயணத்திலேயே, அயோத்யாகாண்டத்தில், கங்கையை விஷ்ணுவின் பாதத்திலிருந்து உண்டானதினுல், பரம பவித்ரம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் மேற்காட்டிய ச்லோகத்தில் पस्पृशुः (பஸ்ப்ருஶு:) (பஸ்ப்ருசு:) என்ற பதத்திற்கு, 'கங்கையைத் தொட்டார்களே தவிர, ஸ்நானம் செய்யவில்லை, தொட்டதற்கு மஹாவிஷ்ணு பாதத்திலிருந்து உண்டானதே காரணமாகும்; ஸ்நானம் செய்யாமலிருந்ததற்கு பரமசிவனுடைய சரீரத்தில் ஸம்பந்தப்பட்ட அருவருப்பே காரணமாகும்' என்று சில மஹா புருஷர்கள் வர்ணிக்கிருர்கள். இதனுல் பரமசிவனுக்கு ஒரு அபகர்ஷம் ஏற்பட்டுவிட்டதாகவும் அவர்களின் எண்ணம். भूयसां भलीयत्वं (பூயஸாஂ பலீயஸ்த்வஂ) (பூயஸாம் பலீயத்வம்) என்ற ந்யாயத்தை அனுஸரித்து வ்யாக்யாதாக்களுக்குள், மஹேச்வரதீர்த்தர், கதகர் முதலானவர்கள் पस्पृशुः (பஸ்ப்ருஶு:) (பஸ்ப்ருசு:) என்ற பதத்திற்கு सस्नुः (ஸஸ்நு:)

(ஸஸ்நு:) ஸ்நானம் செய்தார்கள்) என்ற அர்த்தத்தை விளக்கி இருக்கிறுர்கள். எந்த வ்யாக்யாதா பரமசிவனுடைய அபகர்ஷத்தில் த்ருப்தி அடையக்கூடியவரோ, அவரும் இந்த ச்லோகத்திற்கு வ்யாக்யானம் செய்யும் அவஸரத்தில், கங்கா ஜலத்தை பவித்ரம் மஹா பரிசுத்தமானது என்பதைச் சொல்லிவிட்டு,

तत्र ज्ञापनहेतुमाह भवांग पततमिति

𑌤𑌤𑍍𑌰 𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑌹𑍇𑌤𑍁𑌮𑌾𑌹 𑌭𑌵𑌾𑌂𑌗 𑌪𑌤𑌤𑌮𑌿𑌤𑌿

தத்ர ஞாபநஹேதுமாஹ பவாங்க பததமிதி

என்று குறிப்பிட்டிருக்கிறுர். கங்கா ஜலம் பரிசுத்தம் என்பதற்கு பரமசிவன் சிரஸ்ஸில் தரித்ததே காரணமென்றுல், பரமசிவனுக்கு உத்கர்ஷமா அபகர்ஷமா என்பதை அறிய வேண்டும். மேலும் இந்த வ்யாக்யாதாவே,

भवेन धृतत्वादस्माभिरपिधार्यमिति पस्पृशुरित्येवार्थः

𑌭𑌵𑍇𑌨 𑌧𑍃𑌤𑌤𑍍𑌵𑌾𑌦𑌸𑍍𑌮𑌾𑌭𑌿𑌰𑌪𑌿𑌧𑌾𑌰𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑍇
𑌵𑌾𑌰𑍍𑌥𑌃

பவேந த்ருதத்வாதஸ்மாபிரபிதார்யமிதி பஸ்ப்ருசுரித்யேவார்த:

என்றும் வ்யாக்யானத்தில் குறிப்பிட்டிருக்கிறுர்கள். அதாவது பரமசிவனே சிரஸ்ஸில் தரித்துவிட்டதினுல் நாம் கங்கையில் ஸ்நானம் செய்வதற்கு என்ன ஆக்ஷேபணை என்று நினைத்து ஸ்நானம் செய்தார்கள்! என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனுல் பரமேச்வரனுடைய சரீரத்தில் ஸம்பந்தப்பட்ட பிற்பாடுதான் கங்கைக்கு ஒரு பாவனத்வம் என்பது ஏற்பட்டதென்று வெளியாகிறதல்லவா! தவிரவும், பரமேச்வரன் பரிசுத்தன் இல்லாதவனுக இருந்து கங்கையை தரித்ததினுல்தான் பரிசுத்தனுக ஆனுர் என்றுல்,

सातस्मिन् पतितापुण्या पुण्यैरुद्रस्यमूर्धनि

𑌸𑌾 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑌤𑌿𑌤𑌾 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌿

ஸா தஸ்மிந் பதிதாபுண்யா புண்யேருத்ரஸ்ய மூர்த்நி

என்று வால்மீகி மஹர்ஷியானவர், மஹா பரிசுத்தமான ருத்ரனுடைய சிரஸில் கங்கை விழுந்தாள் என்று சொல்லியிருப்பது எப்படி ஸமஞ்ஜஸமாகும். தவிரவும், அபரிகந்தனை பரமசிவனுக்கு கங்கையின் கர்வத்தை போக்கடிக்கும்படியான பலம் எங்கிருந்து வரும்?

परमात्मा शिवोह्यन्यस्तस्मादन्या च जाह्नवी ।
इति यः सेवते गङ्गां न स मोक्षस्य भाजनं ॥

𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌿𑌵𑍋𑌹𑍍𑌯𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌨𑍍𑌯𑌾 𑌚 𑌜𑌾𑌹𑍍𑌨𑌵𑍀 ।
𑌇𑌤𑌿 𑌯𑌃 𑌸𑍇𑌵𑌤𑍇 𑌗𑌙𑍍𑌗𑌾𑌂 𑌨 𑌸 𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌭𑌾𑌜𑌨𑌂 ॥

பரமாத்மா சிவோஹ்யந்யஸ்தஸமா தந்யா ச ஜாஹ்நவீ ।
இதி ய: ஸேவதேகங்காம் ந ஸ மோக்ஷஸ்ய பாஜநம் ॥

என்ற சாஸ்த்ரமானது ஸாக்ஷாத் பரமசிவனே, கங்கா தேவியாகவும், ஸாக்ஷாத் கங்கா தேவியே பரமசிவனுகவும் விளங்கி வருகிறுர்கள். கங்காதேவிக்கும் பரமசிவனுக்கும் கொஞ்சமேனும் பேதமில்லை. பரமசிவனை வேருகவும், கங்கையை வேருகவும், அறிந்தவன் மோக்ஷத்திற்கு பாத்ரமாக ஆகமாட்டான் என்று சொல்லுகிறபடியால் கங்கை வேறுபோலவும் பரமேச்வரன் வேறுபோலவும், கங்கையினுல்தான் பரமேச்வரனுக்கு சுத்தி வந்ததுபோலவும் சொல்லுகிறதெல்லாம் லீலா மாத்ரமன்னியில் சாஸ்த்ரத்தினுடைய உண்மையான தாத்பர்யமாக ஆகாது.

हरिरेव हरस्साक्षात् हरमेव हरिस्वयं

𑌹𑌰𑌿𑌰𑍇𑌵 𑌹𑌰𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌹𑌰𑌮𑍇𑌵 𑌹𑌰𑌿𑌸𑍍𑌵𑌯𑌂

ஹரிரேவ ஹரஸ்ஸாக்ஷாத் ஹரமேவ ஹரிஸ்வயம்

என்ற சாஸ்த்ரத்தால் ஹரி என்ற விஷ்ணுவும் ஹரன் என்ற சிவனும் உண்மையில் ஒன்ருனுலும், வ்யவஹாரத்தில்

வேறுபோல் பாஸிப்பது எப்படி லீலாமாத்ரமோ, அது போல்தான், கங்கையை தரித்ததினால் பரமேச்வரன் சுத்தனானர் என்பதாகும். விஷ்ணு பாதோத்பவை என்று கங்கைக்கு ஓர் பெயர் ப்ரஸித்தமாக விளங்கிவருகிறது. பாத ஜலத்திற்கு லோகத்தில் பரிசுத்தியானது ப்ரஸித்தி யில்லை. அதனால் அந்த கங்கையில் ஸ்நானபானாதிகளைச் செய்ய தேவர்கள் முதலானவர்களுக்கு ஒரு ப்ராமாண்ய புத்தியே இல்லாமலிருந்தது.

ईशानस्सर्वविद्यानां ईश्वरः सर्वभूतानां

ஈசாநஸ்ஸர்வவித்யாநாம் ஈச்வர: ஸர்வபூதாநாம்

ஈசாநஸ்ஸர்வ வித்யாநாம் ஈச்வர: ஸர்வபூதாநாம்

என்ற ச்ருதியை அனுஸரித்து, ஸகல வித்யைகளுக்கும் அதிபதியாயும், ஸர்வ பூதங்களுக்கும் ஈச்வரனாயும் இருக்கும் காரணத்தால் ச்ரேஷ்டனான பரமசிவனாலேயே அந்த கங்கையானவள் சிரஸில் தரிக்கப்பட்டிருக்கும்பொழுது, விஷ்ணுவின் பாதத்திலிருந்து உண்டானது என்று நாம் நினைத்தது பிசகு என்று தோன்றி மஹாபவித்ரந்தான் என்ற எண்ணத்துடன் தேவர்கள் முதலானவர்கள் ஸ்நானம் செய்தார்கள் என்ற தாத்பர்யத்தை மேற்காட்டிய ச்லோகத்திற்குச் சொல்லும்பக்ஷத்தில் என்ன தோஷம் ஏற்படும்? ஆனால் சிலர்கள் எதிர்பார்க்கும் சிவாபகர்ஷம் இல்லாமல் போய்விடும்! அது ஒரு தோஷமாகுமா? பரமசிவன்தான் கங்கையை தரிக்கவேண்டுமென்ற நிபந்தனை என்ன? ஏன் ப்ரும்மாவோ இந்த்ரனோ தரிக்கக் கூடாதா? இவர்களுக்கு ஸாமர்த்யம் போதாது; அதனால்தான் பரமேச்வரன் தரிக்கும்படி நேர்ந்தது என்றால், ப்ரும்மா முதலான தேவதைகளைக் காட்டிலும், பரமேச்வரனை மேலான தேவதை என்று ஒப்புக்கொண்டுதானே தீரவேண்டும். அந்த மேன்மையை பரிசுத்தன் என்பதில் மாத்ரமில்லாமல் மற்ற விஷயங்களில் ஒப்புக்கொள்வதில் என்ன ப்ர

யோஜனம்? கங்கையோ, லௌகிகமான பதார்த்தமல்ல. சாஸ்த்ரீயமான தத்வமாகும். சாஸ்த்ரீயமான பதார்த்தத்தை சிக்ஷிக்கவோ, ரக்ஷிக்கவோ சாஸ்த்ரீயமான ஸாமர்த்யமல்லவா அபேக்ஷிக்கப்படும். சாஸ்த்ரீயமான ஸாமர்த்யமோ, ஸம்சுத்திதான். ஆகையால் கங்கையை தரித்ததினால் பரமேச்வரன் பரிசுத்தனானன் என்று கல்பிப்பதோ, பரமேச்வரனின் சரீரத்தில் ஸம்பந்தப்பட்டதால் ஸ்னானத்திற்கு லாயக்கில்லை; தொட்டுப்பார்த்தார்கள் என்று சொல்வதோ ஸாஹஸமன்னியில், ஸப்ரமாணமாக ஆகாது. பாகவதம், பாரதம் இவைகளிலுள்ள வசனங்களோ, அர்த்தவாதங்களே. ஸ்வார்த்தத்தில் ப்ராமண்யத்தை அடையாது. கங்கையினுடைய மஹாத்ம்யத்தைச் சொல்லி, அத்துடன் இந்த வாக்யங்கள் உபக்ஷயத்தை அடையுமன்னியில் பரமசிவனை அசுத்தன் என்று போதிப்பதில் தாத்பர்யமுள்ளதாக ஆகாது. ஆகையால் கங்கையினுடைய வேகத்தை பரமேச்வரன் ஒருவனைத் தவிர, மற்றொருவன் தடுக்கமுடியாது என்பது பாஸிக்கிறபடியால், பரமேச்வரனுடைய உத்கர்ஷந்தான் ப்ரகாசிக்கிறது. ச்ரேஷ்ட புருஷர்களால் அனுஷ்டிக்கப்பட்ட தர்மந்தான் லோகத்தில் ப்ரசாரத்தை அடையுமானதினால் பரம ச்ரேஷ்டனான பரமசிவனும் தன் அனுஷ்டானமூலமாக கங்கா ஸ்நானம் என்ற தர்மத்தை லோகத்தில் ப்ரசாரப்படுத்த, "நான்கூட கங்கையை சிரஸால் தரித்தேன்" என்றதை சொல்லக்கூடாதோ? அப்படித்தான் சொல்லவேண்டும். இதுதான் உண்மையான பொருளாகும். ஸ்ரீமத் ராமாயணத்திலேயோ, விஷ்ணுவினுடைய பாரம்யத்தை ப்ரகாசப்படுத்தவல்லவா கதாபாகங்கள் ஏற்பட்டன. ஆகிலும், ஸ்ரீராமனே சில ஸந்தர்ப்பங்களில் ஒரு ஜீவன்போல் நடித்துக்காட்டுகிறார். அதற்கு மர்த்யசிக்ஷணம்தான் ப்ரயோஜனம் என்று சொல்லுகிறோம். அதுபோல், பரமசிவன் கங்கையை தரித்தார், அதனால் பரிசுத்தனானர் என்ற இடத்திலும் ஏன் சொல்லக்கூடாது? ஆகையால் விஷ்ணுபாதோத்பவை என்று கங்கையைச் சொல்லுகிறார்களே, பாதஜலம்

ஸ்நானார்ஹமாக ஆகுமா என்ற ஸந்தேஹத்துடன் கங்கையில் ஸ்நானபானாதிகளைச் செய்யாமலிருந்து வந்த ப்ராணிகளுக்கு, பரமேச்வரனே சிரஸ்ஸில் தரித்துவிட்டாரே, பரமேச்வரனுடைய சரீர ஸம்பந்தம் ஏற்பட்டு விட்டபடியால், இது பரம பவித்ரம்தான், ஸ்நானார்ஹம்தான் என்ற நிச்சயம் ஏற்பட்டு முன்னிருந்த ஸந்தேஹம் நிவர்த்தியாகி, பரம பக்தியோடு, தேவர் முதலிய ஸகல ப்ராணிகளும் ஸ்நானம் செய்தார்கள் என்ற தாத்பர்யத்தைத்தான்,

भवांग पतितन्तोयं पवित्रमिति पस्पृशुः

ஹவாංஂ வதிதஜோயං வவித்ரமிதி வஸ்ருஶுः

பவாங்க பதிதந்தோயம் பவித்ரமிதி பஸ்ப்ருசு:

என்ற ச்லோகத்திற்குச் சொல்லவேண்டும்.

தேவலோகத்திலிருந்தும் சாபத்தால் பூலோகத்திற்கு வந்த மஹான்களும் அந்த கங்கையில் ஸ்நானம் செய்த மாத்ரத்தில் சாபத்திலிருந்து விமுக்தர்களாக ஆகி அவரவர்கள் முன்னிருந்த தன் தன் பதவியை அடைந்தார்கள். ஆகையால் இந்த கங்கோதகமானது ஸமஸ்த சாபவிமோசக மென்றும லோகத்தில் ப்ரஸித்தமாகிவிட்டது. நிர்மலமான அந்த கங்கா ஜலத்தால் லோகமே பரமஸந்தோஷத்தை அடைந்தது. ஸகல ப்ராணிகளும் இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸகல துக்கத்திலிருந்தும் விடுபட்டு தன் தன் மனோரதத்தை பூர்த்திசெய்து கொண்டார்கள்.

பகீரத மஹாராஜனும், திவ்யமான ரதத்தில் ஏறிக்கொண்டு தனது பித்ருக்கள் எந்த ப்ரதேசத்தில் கபில மஹர்ஷியினுடைய கோபாக்னியால் சாம்பலாகச் செய்யப்பட்டு இருந்துவந்தார்களோ அந்த இடம் சென்றான். அவனுடைய மார்க்கத்தை அனுஸரித்து கங்கையும் பின் தொடர்ந்தே சென்றாள். அவ்விதம் பகீரதனுடைய ரதத்தை அனுஸரித்துச் செல்லும் கங்கையை தேவர்கள், மஹர்ஷிகள், யக்ஷர்கள், உரகர்கள், அப்ஸரஸ்கள் எல்லோரும் பரமாச்சர்யத்துடன் கங்கையை அனுஸரித்துப் போனார்கள்.

அந்த கங்கையில் போகும் ஜல ஜந்துக்களை கணக்கிடவும் முடியாது. எந்த திக்கில் பகீரதன் போனானோ அந்த திக்கை அனுஸரித்தே ஸமஸ்த பாபங்களையும் போக்கடிக்க கூடிய கங்கா நதியும் சென்றாள். இவ்விதம் போய்க்கொண் டிருக்கும் நடுவழியில் ஜன்ஹு மஹர்ஷியானவர் ஒரு பெரிய யக்ஞம் செய்துவந்தார். அந்த மஹானுபாவனுடைய யக்ஞ சாலையை இந்த கங்கையானவள் முழுகடித்துவிட்டாள். மஹர்ஷிக்கோ பெரிய கோபம் ஏற்பட்டு கங்கையின் கர் வத்தை அடக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் பார்க்கும் ஜனங்களுக்கு பரமாச்சர்யத்தைக் கொடுக்கும்படி அகஸ்திய மஹர்ஷியானவர் ஸமுத்ர ஜலத்தை ஒரு ஆசமனத்தால் பானம் செய்ததுபோல், கங்கா ஜலத்தையும் ஒரு ஆசமன மாத்ரத்தால் பானம் செய்துவிட்டார். அது பார்க்கும் ஜனங்களுக்கு மிகுந்த ஆச்சர்யத்தைக் கொடுத்தது.

அந்த ஸந்தர்ப்பத்தில் பகீரதனுடைய ப்ரயத்னம் பய னற்றதாக ஆகக்கூடாது என்ற எண்ணத்துடன் தேவ ரிஷிகள் ஜன்ஹு மஹர்ஷியை ஸ்தோத்ரம் செய்து அந்த மஹர்ஷியினுடைய காலைப் பிடித்துக் கெஞ்சினார்கள். "மஹர்ஷே! பகீரதன் இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த அரசன்; அவன் மஹிமையை நாங்கள் தங்களுக்கு எடுத்து சொல்ல வேண்டிய அவச்யமேயில்லை. கபில மஹர்ஷியினுடைய கோபாக்னியால் சாம்பலாகப்போன தன் பித்ருக்கள் அறு பதினாயிரம் பேர்வழிகளையும் கரையேற்ற இந்த மஹானு பாவன் அத்யுக்ரமான தபஸ்ஸை செய்து ஸ்வர்க்கலோகத் திலிருந்து ஆகாச வழியாக பூலோகத்திற்கு கங்கையை கொண்டுவந்தான். அந்த கங்கையின் கர்வத்தை பரமேச் வரன் குறைத்தும், அவளுக்கும் இன்னும் அஹங்காரம் போகவில்லை. தங்களுடைய யக்ஞசாலையையும் முழு கடித்தாள். அதற்காக நீங்கள் வருத்தத்தை அடையக் கூடாது. பகீரத மஹாராஜாவினிடம் கருணையை வைத்து கங்கையை வெளியில் விடவேண்டும். கங்கைக்கு தங்களு டைய பெண் என்ற தாத்பர்யத்தை ப்ரகாசப்படுத்தக்கூடிய

"ஜான்ஹவீ" என்ற பெயரும் லோகத்தில் ப்ரஸித்தமடையப் போகிறது" என்றார்கள்.

ஜன்ஹு மஹர்ஷி தேவர்ஷிகளுடைய ஸ்தோத்ரத்தாலும், பகீரத மஹாராஜாவினுடைய பக்தி விசேஷத்தாலும் பரமஸந்தோஷத்தை அடைந்து தான் ஆசமனத்தால் பானம் செய்த கங்கையை இரண்டு காதுகள் வழியாக பூமியில் ப்ரவாஹிக்கச் செய்தார். அதுமுதல் கங்கைக்கு ஜான்ஹவீ என்ற பெயரும் விளங்கிவந்தது. பிறகு பகீரத மஹா ராஜாவினுடைய ரதத்தை அனுஸரித்தே கங்கையும்சென்று ஸமுத்ரத்தை அடைந்தாள். முன் கங்கைக்கு இருந்த பரி சுத்தியைக்காட்டிலும் அதிகமான பரிசுத்தியும் ஜன்ஹு மஹர்ஷியினுடைய காது வழியாக வந்ததிலிருந்து ஏற்பட் டது. மனிதனுடைய அவயவங்களில் காதுகள் ரொம்ப வும் பரிசுத்தமான அவயவம் என்று कर्णाभ्यां भूरि विश्रुवं (கர்ணாப்யாம் பூரி விச்ருவம்) என்ற ச்ருதியால் சொல்லப்பட்டிருக்கிறது. பரமபவித்ர மான வேத சப்தத்தைக் கேட்கக்கூடிய அவயவமானதால் காதுகள் பரிசுத்தம் என்பதில் ஆக்ஷேபணையே யில்லை. அதிலும் மஹா தபஸ்வியான ஜன்ஹு மஹர்ஷியினுடைய காதைப் பற்றி சொல்லவும் வேண்டுமா! அவருடைய காதிலிருந்து வெளிவந்த காரணத்தால் பரமபாவனத்வத்தை கங்கையானவள் அடைந்து ஸமுத்ரத்தில் போய் விழுந்து பகீரதனுடைய வம்ச பித்ருக்களை உத்தாரணம் பண்ணுவ தற்காக பாதாள லோகமும் சென்றாள். பகீரத ராஜனும் கங்கையை அழைத்துக்கொண்டு சாம்பலாகக்கிடக்கும் பித்ருக்களைப் பார்த்து ரொம்பவும் துக்கமுள்ளவனாக ஆனான். பிறகு மனதை ஸமாதானம் செய்துகொண்டு, அந்த சாம்பல் முட்டை கங்கா தீர்த்தத்தில் நன்றாக நனைத்து கரையும்படி செய்தான். உடனே அறுபதினாயிரம் பேர்க ளான பித்ருக்களும் திவ்ய தேஹத்தோடு கூடினவர்களாக ஆகி, திவ்ய விமானத்தில் ஏறிக்கொண்டு ஸ்வர்க்கலோகம் சென்றார்கள்.

இந்த பேராச்சர்யத்தை ஆகாச விமானிகளான தேவர்கள் கண்குளிர பார்த்துக்கொண்டு ஜயகோஷத்துடன் புஷ்பவர்ஷம் வர்ஷித்தார்கள்.

ஸர்வலோகத்திற்கும் பிதாவாயுள்ள ப்ரும்மாவும் பகீரத ராஜாவைப் பார்த்து, "ஹே நரச்ரேஷ்டா! ஸகர மஹா ராஜாவின் பிள்ளைகளான அறுபதினுயிரம் பேர்களான உன்னுடைய பித்ருக்கள் உன்னுல் துக்க ஸமுத்ரத்திலிருந்தும் தரணம் செய்துவைக்கப்பட்டார்கள். பித்ருக்களை கரையேற்றின புண்யவான் நீதான். அறுபதினுயிரம் பேர்களும் ஸ்வர்க்கலோகம் சென்று தேவர்களைப்போலவே திவ்ய போகத்தை அநுபவித்துவருகிருர்கள். எவ்வளவு காலம் ஸமுத்ர ஜலம் லோகத்தில் ஸ்திரமாக இருக்குமோ, அவ்வளவு காலம் ஸகர புத்ரர்களான உன் பித்ருக்களுக்கும் ஸ்வர்க்கவாஸம் என்பதை தீர்மானம் பண்ணிக்கொள்ளலாம். இந்த கங்கையும் உன் மூலமாக பூலோகத்திற்கு வந்ததினுல் உன் பெண் என்று ப்ரஸித்தி அடையப்போகிருள். பாகீரதி என்ற பெயரையும் லோகத்தில் ப்ரஸித்தமாக அடையப்போகிருள். ஸ்வர்க்கம், ஆகாசம்,பூமி இந்த மூன்று லோகங்களையும் பரிசுத்தம் செய்துவைத்த காரணத்தால் த்ரிபதகா என்றும் ப்ரஸித்தியை அடையப்போகிருள். இந்த கங்கா ஜலத்தில் நீ திலதர்ப்பணம் செய்து பித்ருக்களை நித்ய திருப்தர்களாகச் செய்துவைத்து, 'கங்கையை வரவழைத்து ஸகர புத்ரர்களான என் பித்ருக்களை கரையேற்றி வைக்கப்போகிறேன்' என்ற உன் ப்ரதிக்ஞையையும் முடித்துக்கொள். அறுபதினுயிரம் பேர்களான பித்ருக்களுக்கு மாமாவான கருட பகவானுல் கங்கா ஜலத்தைக்கொண்டுதான் இவர்களைக் கரையேற்ற வேண்டுமென்று அம்சுமானிடம் சொல்லப்பட்ட வார்த்தையையும் ஸபலமாக செய்துவிட்டாய். உனக்கு முந்தின அம்சுமானுலும் இவ்விதமான பித்ருதரணம் என்ற புண்யகர்மாவைச்செய்து பித்ருக்களை கரையேற்ற முடியவில்லை. அம்சுமானும் மஹாதார்மிகன். லோகத்தில் ப்ரக்யாத

மான பராக்ரமத்தோடு கூடினவன். கங்கையை பூலோகத் திற்கு வரவழைக்க அத்யுக்ரமான தபஸ்ஸையும் செய்தான். ஆனல் இது நிறைவேறவில்லை. அந்த துக்கத்தாலேயே அம்சுமான் ஸ்வர்க்கம் சென்ருன். அவ்விதமே திலீபமஹா ராஜாவும் மஹர்ஷிக்கு ஸமானமான வைபவத்தோடுகூடின வர். க்ஷத்ரியதர்மத்தை திலீபனைப்போல் அனுஷ்டித்த மற்ருரு ராஜனை நான் பார்த்ததேயில்லை. திலீபனைப் போல் மஹாதபஸ்ஸை செய்ய என்னுல்கூட முடியாது. அந்த திலீபமஹாராஜாவும் பூலோகத்தில் கங்கையை வர வழைக்க அத்யுக்ரமான தபஸ்ஸை செய்யத்தான்செய்தார். அவராலேயும் பித்ருக்களை கரையேற்ற முடியாமல் அவரும் துக்கத்துடன் ஸ்வர்க்கம் சென்ருர். அந்த மகத்தான ப்ர திக்ஞையானது உன்னுல் நிறைவேற்றப்பட்டது. கங்கையை பூலோகத்திற்கு வரவழைத்து அறுபதினுயிரம் பித்ருக்களை ப்ரும்ம சாபத்திலிருந்தும் விமுக்தர்களாக செய்யவேண்டு மென்ற முன்னேர்களுடைய ப்ரதிக்ஞையை நிறைவேற்றின புண்யத்தை நீ அடைந்துவிட்டாய்.

உனக்கு ஸமானமான புண்யவான் லோகத்திலேயே இல்லையென்றதை நிச்சயமாக சொல்லலாம். நீ பூலோகத் திற்கு கங்கையை வரவழைத்தது என்பது யாதொன்று உண்டோ அதனுல் பெரிய தர்மப்ரதிஷ்டையை நீ அடைந்து விட்டாய். ஹே! நரச்ரேஷ்டா! ஸ்நானத்திற்கு அர்ஹமான இந்த புண்யஜலத்தில் ஸ்நானம் செய். ஆத்மாவை மஹா பரிசுத்தனுக செய்துகொள். மஹாபுண்யத்தினுடைய பலனையும் அடை. அம்சுமான் முதலான பிதாமஹர்களுக் கும் இந்த கங்கா தீர்த்தத்தால் திலதர்ப்பணங்கள் செய்து தீர்த்தச்ராத்தாதிகளால் திருப்திசெய். பரமக்ஷேமம் உனக்கு உண்டாகட்டும். திரும்பி பூலோகம்சென்று அயோத்தியில் நீ நீடித்து வாழவேண்டும்" என்று ஆசீர்வாதம் செய்தார்.

இவ்விதம் ப்ரும்மாவும் ஆசீர்வாதம் செய்துவிட்டு, தன் லோகம் சென்ருர். பகீரதராஜனும் பித்ருக்களுக்கு சாஸ்

த்ரத்தில் சொல்லியபடி செய்யவேண்டிய க்ரியைகளை செய்து விட்டு தனது நகரமாகிற அயோத்திக்கு வந்துசேர்ந்தான். அதுமுதல் பகீரதராஜனுடைய கோசங்கள் நிமிஷத்திற்கு நிமிஷம் அபிவ்ருத்தி அடைந்துகொண்டுவந்தன. ப்ரஜை களையும் ஔரஸமான புத்ரர்களைப்போல் பாவித்து கொஞ்ச மேனும் ந்யாய விரோதமில்லாமல் பஹுகாலம் அரசாண்டு வந்தான். ப்ரஜைகளும் மஹாபுண்யவானான பகீரதனை அரசனாக அடைந்து துக்கலேசமில்லாமல் ஸகலவிதமான ஸௌபாக்யங்களோடும் அரசனை ச்லாகித்துக்கொண்டு வாழ்ந்து வந்தார்கள்.

"ஹே ராமா! கங்கையின் விஸ்தாரத்தை சொல்லி விட்டேன். மங்களத்தை நீ அடையவேண்டும். பரம க்ஷேம மும் உண்டாகட்டும். ஸந்த்யாகாலம் வந்துவிட்டது. இந்த கங்கா அவதரணத்தை கேட்கிறவர்களுக்கோ, படிக்கிறவர் களுக்கோ இந்த புண்ய கதையானது அளவற்ற ஐச்வரி யத்தையும், யசஸ்ஸையும், தீர்க்காயுளையும், ஸத்புத்ரப்ராப்தி யையும், ஸ்வர்க்கத்தையும் கொடுக்கும். ப்ராம்மணர்களுக் குள்ளோ, க்ஷத்ரியர்களுக்குள்ளோ, வைச்யர்களுக்குள்ளோ, எவன் ச்ராத்தகாலத்தில் பித்ருக்களுக்கு கங்கா அவதரண கட்டத்தை பாராயணம் செய்து ச்ரவணம் செய்து வைக் கிறானோ, அவனுடைய பித்ருக்களும் தேவதைகளும் நித்ய த்ருப்தர்களாக ஆகின்றார்கள். இந்த கங்கா அவதரணம் என்ற ஆக்யானத்தை (கதையை) எவன் பரம ஆதரவோடு கேட்கின்றானோ அவன் ஸகல காமங்களையும் அடைகின் றான். அவனுடைய ஸகல பாபங்களும் நசித்துவிடுகின் றன. ஆயுளும் வ்ருத்தியடைகின்றது. கீர்த்தியும் நாளுக்கு நாள் பெருகும்." இவ்வாறு கங்கா மஹாத்ம்யத்தை விச்வா மித்ர மஹர்ஷியானவர் விஸ்தாரமாக ஸ்ரீராமனுக்கு சொன் னார். 35 முதல் 44 முடிய 10 ஸர்க்கங்களால் கங்கையி னுடைய மஹிமை, காங்கேயன் என்ற ஸுப்ரமண்யனுடைய ஸம்பவம் என்ற புண்ய கதையானது சொல்லப்பட்டது.

45-வது ஸர்க்கம்.

அம்ருதமதனம்

இவ்விதம் விச்வாமித்ரருடைய வார்த்தையைக் கேட்டு லக்ஷ்மணஸ்வாமியோடுகூட ஸ்ரீராமன் பரமாச்சர்யத்தை அடைந்து விச்வாமித்ர மஹர்ஷியை பார்த்து "ப்ரும்மன்! ஹே மஹர்ஷே! என்ன மஹதாச்சர்யம்!! கங்கா அவதரணத்தை பற்றி தாங்கள் சொன்ன வைபவத்தை ஆதிசேஷனுல்கூட வர்ணிக்க முடியாது! இந்த கதையை கேட்டு நான் ரொம்பவும் தன்யனுக ஆனேன்" என்று சொன்னுர். இவ்விதம் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது இரவு வந்து விட்டது. அன்றிரவு முழுமையும் லக்ஷ்மணனும் ராமனும் விச்வாமித்ரருடைய மஹிமையைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். கொஞ்சமேனும் நித்ரையை அடையவில்லை. ப்ரபாதகாலமும் வந்துவிட்டது. காலையில் செய்யவேண்டிய சௌச ஸ்நாநுதி கர்மாக்களைச் செய்துவிட்டு வழக்கம்போல் லக்ஷ்மணனேடுகூட விச்வாமித்ர மஹர்ஷிக்கு குருவந்தனம் செய்துவிட்டு ராமன் விச்வாமித்ர மஹர்ஷியைப் பார்த்து "மஹர்ஷே! நேற்றிரவு முழுமையும் ஒரு க்ஷணம்போல் சென்றன. கங்கா அவதாரத்தைக் குறித்து தாங்கள் சொன்ன கதையை கேட்ட எனக்கு கொஞ்சமேனும் நித்ரையோ பசி தாகமோ உண்டாகவேயில்லை. வெய்யில் அதிகமாக ஆகிற தற்குமுன் கங்கையைத் தாண்டுவோம். மஹர்ஷிகளுடைய கூட்டங்கள் தங்கள் ஆகமனத்தை தெரிந்துகொண்டு நம்மை கங்கையைத் தாண்டிவைக்க த்ருடமான ஓடத்தைக் கொண்டு வந்திருக்கிறுர்கள்" என்று சொன்னுர். விச்வாமித்ரரும் ராமனுடைய வார்த்தையைக் கேட்டு மஹர்ஷிகளால் கொண்டு வரப்பட்ட ஓடத்தில் ராமலக்ஷ்மணர்களை ஏற்றிவைத்துத் தானும் ஏறிக்கொண்டு ஓடம் தள்ளுகிறவர்கள் மூலமாக கங்கையை தரணம் செய்து கங்கையின் வடகரைக்கு சென்றுர்கள்.

கங்கையின் வடகரையருகில் ஸ்வர்க்கத்திற்கு ஸமானமாக விளங்கிவரும் **விசாலா** என்ற நகரத்தைப் பார்த்தார்கள். அந்த நகரத்தின் ஸன்னிவேச விசேஷங்களைப் பார்த்து, ராமன் பரம ஸந்தோஷத்துடன் "இந்த நகரத்தை எந்த ராஜவம்சத்தில் பிறந்தவன் ஆண்டுவருகிறுன்? அதை தெரிந்துகொள்ள இச்சிக்கிறேன்" என்று விச்வாமித்ரரைப் பார்த்து ப்ரச்னம் செய்தார். விச்வாமித்ர மஹர்ஷியும் ராமனுடைய வார்த்தையைக் கேட்டு விசாலா என்ற நகரத்தின் விருத்தாந்தத்தை விஸ்தாரமாக சொல்ல ஆரம்பித்தார். "ராமா! இந்த ப்ரதேசத்தில் எந்த ஆச்சர்யமான ஒரு கார்யம் நடந்ததோ அதை சொல்கிறேன். அந்த கதையில் இந்த்ரனுடைய மஹத்வமும் ப்ரகாசிக்கும். ஜாகரூகனுகக் கேள்" என்று சொல்லிவிட்டு மஹர்ஷியானவர் சொல்கிறுர்.

அதாவது, க்ருதயுகத்தில் காச்யப ப்ரஜாபதியினுடைய தர்மபத்னியான **அதிதி**யினுடைய புத்ரர்களான தேவர்களும், **திதி**யின் புத்ரர்களான அஸுரர்களும் கொஞ்சகாலம் ஸுஹ்ருத்துக்களாக இருந்தார்கள். மஹா பராக்ரமசாலிகளாகவும், தர்மச்ரத்தையுள்ளவர்களாகவும், ப்ராத்ரு ஸௌஹ்ருதத்தை வ்ருத்தி செய்துகொண்டு வருகிறவர்களாகவும் விளங்கிவந்தார்கள். அவரவர்கள் தங்களுக்கு ஜரையும் மரணமுமில்லாமலிருக்கும்படி ஒரு உபாயத்தை அனுஷ்டிக்கவேண்டுமென்ற புத்தியுண்டாயிற்று. பிறகு பால் கடலில் அம்ருதமதனம் செய்கிறதென்று தீர்மானித்தார்கள். மந்தர பர்வதத்தை மத்தாகவும், வாஸுகி என்ற ஸர்ப்பராஜனை கடையும் கயிறுகவும் வைத்துக்கொண்டு, பால் கடலில் அம்ருதத்தை கடைந்தார்கள். தேவமான ரீதியாக ஆயிரம் வருஷமானதும் ஸர்ப்பராஜனுடைய முகத்திலிருந்து விஷங்கள் கக்கப்பட்டன. ஸர்ப்பராஜனும் தன் கடவாய் பற்களால் மந்தர பர்வதம் என்ற மத்தைக் கடித்து த்வம்ஸம் செய்ய ஆரம்பித்தான். பிறகு ஹாலாஹலம் என்ற காளகூடவிஷ முண்டாயிற்று. அந்த விஷத்தால் லோகமே சாம்பலாக ஆகும்போல் ஆகிவிட்டது. உடனே

தேவர்கள் பரமேச்வரனை ஸ்தோத்ரம் செய்தார்கள். மஹா கைலாஸாதிபதியான பரமேச்வரனும் அம்ருதமதனம் செய்கிற ப்ரதேசத்தில் ப்ரத்யக்ஷமாக ஆவிர்பவித்தார். சங்க சக்ர கதாபாணியான மஹாவிஷ்ணுவும் ஆவிர்பவித்தார். மஹாவிஷ்ணு மந்தஹாஸத்துடன் பரமேச்வரனைப் பார்த்து சொன்னதாவது :—

“தேவர்கள் அம்ருதமதனம் செய்கிறார்கள். அந்த கர்மாவின் முதலில் உண்டானது காளகூடவிஷம். எல்லா தேவர்களுக்குள் அக்ரபூஜையை அடைய யோக்யதைத் தங்களுக்கிருப்பதினால் அந்த காளகூடவிஷத்தை தாங்களே க்ரஹித்துக்கொண்டு இதை அக்ர பூஜையாகவும் நினைத்து லோகத்தை ரக்ஷிக்கவேண்டும்.”

இதைச்சொல்லிவிட்டு விஷ்ணுவும் அந்தர்த்யானமானார். பரமேச்வரனும் தேவதைகளுடைய ப்ரார்த்தனைக்கும், மஹாவிஷ்ணுவின் ப்ரார்த்தனைக்குமிணங்கி இந்த காளகூடவிஷத்தை அம்ருதத்திற்கு ஸமானமாக தான் க்ரஹித்தார். உள்ளேயும் பக்ஷித்துவிட்டார். பக்ஷண காலத்தில் தனது குக்ஷியிலும் சராசரமான ஜகத் இருப்பதைப் பார்த்து உள்ளேயும் முழுங்கவில்லை. வெளியிலுள்ள சராசரமான ஜகத்தைப் பார்த்தும் வெளியிலும் கக்கவில்லை. பாஹ்யமாயும், ஆந்தரமாயுமுள்ள இரண்டுவிதமான ஜகத்தை ரக்ஷிக்கவேண்டுமென்று கருணையுடன் கழுத்திலேயே (கண்டத்திலேயே) இந்த காலகூடவிஷத்தை தரித்தார். இதனால் பரமேச்வரனுக்கு ஸ்ரீ க ண் ட ன் என்ற பெயர் ஏற்பட்டது. शृणाति हिनस्ति इति श्रीः (ஶ்ருணாதி ஹிநஸ்தி இதி ஶ்ரீ:) (ச்ருணாதி ஹிநஸ்தி இதி ச்ரீ:) என்ற ஸமாஸத்தால் மனிதனைக் கொல்லும் பதார்த்தத்திற்கு ஸ்ரீ என்ற பெயரேற்பட்டது. ப்ரக்ருதத்தில் காலகூடவிஷமே ஸ்ரீ என்று சொல்லப்படுகிறது. விஷமும் ஆளைக்கொல்லுமல்லவா?

श्रीः कण्ठे यस्यसः श्रीकण्ठः (ஶ்ரீ: கண்டே யஸ்யஸ: ஶ்ரீகண்ட:) (ச்ரீ: கண்டே யஸ்யஸ: ச்ரீகண்ட:) என்ற ஸமாஸத்தால் கழுத்தில்

விஷத்தை தரிக்கும் பரமேச்வரனே ஸ்ரீகண்டன் என்ற சப்தத்தின் பொருளாக ஆகுவான். விஷத்தை கழுத்தில் தரித்த காரணத்தால் பரமேச்வரனுடைய கழுத்து முழுமையும் கறுத்தது. இதனால் பரமேச்வரனுக்கு நீலகண்டன் என்ற பெயரும் ஏற்பட்டது. கறுத்த கழுத்தோடு கூடினவன் என்று இதன் பொருளாகும்.

இவ்விதம் தேவர்களும் அஸுரர்களும் பாற்கடலில் அம்ருதமதனம் செய்த காலத்தில் ஹாலாஹலம் என்ற காலகூட விஷத்தால் ஸகல ஜகத்தும் சாம்பலாகாமலிருக்கும்படி ரக்ஷித்த பரமேச்வரனை யாரும் நினைக்காமலிருக்க ந்யாயமில்லை. அந்த வ்ருத்தாந்தத்தைத்தான் லோககுருவான் சங்கரபகவத்பாதாளும் சிவானந்தலஹரீ என்ற க்ரந்தத்தில்,

नालं वा परमोपकारकमिदं त्वेकं पशूनांपते
पश्यन् कुक्षिगतांश्चराचरगणान् बाह्यस्थितान् रक्षितुं ।
सर्वामर्त्य पलायनौषधमतिज्वालाकरं भीकरं
निक्षिप्तं गरलं गले न गिलितं नोद्गीर्णमेव त्वया ॥

𑌨𑌾𑌲𑌂 𑌵𑌾 𑌪𑌰𑌮𑍋𑌪𑌕𑌾𑌰𑌕𑌮𑌿𑌦𑌂 𑌤𑍍𑌵𑍇𑌕𑌂 𑌪𑌶𑍂𑌨𑌾𑌂𑌪𑌤𑍇
𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌕𑍁𑌕𑍍𑌷𑌿𑌗𑌤𑌾𑌂𑌶𑍍𑌚𑌰𑌾𑌚𑌰𑌗𑌣𑌾𑌨𑍍 𑌬𑌾𑌹𑍍𑌯𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍
𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑍁𑌂 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌮𑌰𑍍𑌤𑍍𑌯 𑌪𑌲𑌾𑌯𑌨𑍌𑌷𑌧𑌮𑌤𑌿𑌜𑍍𑌵𑌾𑌲𑌾𑌕𑌰𑌂 𑌭𑍀𑌕𑌰𑌂
𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌂 𑌗𑌰𑌲𑌂 𑌗𑌲𑍇 𑌨 𑌗𑌿𑌲𑌿𑌤𑌂 𑌨𑍋𑌦𑍍𑌗𑍀𑌰𑍍𑌣𑌮𑍇𑌵 𑌤𑍍𑌵𑌯𑌾 ॥

நாலம் வா பரமோபகாரகமிதம் த்வேகம் பசூநாம்பதே
பச்யந்குக்ஷிகதாந் சராசரகணாந் பாஹ்யஸ்திதாந் ரக்ஷிதும் ।
ஸர்வாமர்த்ய பலாயநௌஷதமதிஜ்வாலாகரம் பீகரம்
நிக்ஷிப்தம் கரலம் கலேநகிலிதம் நோத்கீர்ணமேவ த்வயா ॥

என்ற ச்லோகத்தால் ப்ரகாசப்படுத்தி இருக்கின்றார்கள். இதனால் அந்த ஸமயத்தில் பரமேச்வரன் செய்தது ஜகத்திற்கு பரம உபகாரகரமாகும். பரமேச்வரன் அக்ர பூஜைக்கு

அர்ஹன்தான். இவ்விதம் காலகூடவிஷத்தை பானம் செய்துவிட்டு பரமேச்வரனும் அந்தர்த்யானமானூர்.

பிறகு தேவர்களும் அஸுரர்களும் மந்தர பர்வதமென்ற மத்தை வெகு வேகமாகக் கடைந்தார்கள். அந்த மத்தாகிய மந்தர பர்வதமும் நழுவி பாதாளத்திற்குப் போய்விட்டது. மறுபடியும் தேவர்களும் அஸுரர்களும்,

त्वंगतिस्सर्वभूतानां विशेषेण दिवौकसां ।
पालयास्मान् महाबाहो गिरिमुद्धर्तुमर्हसि ॥

𑌤𑍍𑌵𑌂𑌗𑌤𑌿𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣 𑌦𑌿𑌵𑍌𑌕𑌸𑌾𑌂 ।
𑌪𑌾𑌲𑌯𑌾𑌸𑍍𑌮𑌾𑌨𑍍 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌗𑌿𑌰𑌿𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

த்வம் கதிஸ்ஸர்வ பூதாநாம் விசேஷேண திவௌகஸாம் ।
பாலயாஸ்மாந் மஹாபாஹோ கிரிமுத்தர்து மர்ஹஸி ॥

என்று மஹாவிஷ்ணுவை ஸ்தோத்ரம் செய்தார்கள். "ஹே மஹாவிஷ்ணோ! நீ தான் ஸர்வ ப்ராணிகளுக்கும் ப்ராப்யமான ஸ்தானம். அதிலும் தேவர்களுக்கு விசேஷமான கதி நீ தான். எங்களை நீ இந்த ஸந்தர்ப்பத்தில் ரக்ஷிக்க வேண்டும். மத்தாகிய மந்தர பர்வதத்தை பாதாளத்திலிருந்து தூக்கி நிறுத்தவேண்டும்" என்பதுதான் மேற்சொன்ன ச்லோகத்தின் தாத்பர்யமாகும். இந்த ஸ்தோத்ரத்தால் மஹாவிஷ்ணுவும் த்ருப்தியடைந்து காமரூபத்தை (ஆமையின்வடிவம்) தரித்துக்கொண்டு முதுகு ஓட்டால் மந்தர பர்வதத்தை தூக்கி நிறுத்தி மலையை தரித்துவந்தார். தேவர்களுடைய நடுவில் தானும் ஒரு தேவன்போல் நின்றுகொண்டு தன் கையால் மலையின் சிகரத்தையும் ஆடாமலிருக்கும்படி பிடித்துக் கொண்டார். பிறகும் ஆயிரம் வருஷங்கள் கடைந்தார்கள். தன்வந்த்ரீ என்ற ஆயுர்வேதத்திற்கு அதிஷ்டாதாவான மூர்த்தி கைகளில் தண்ட கமண்டலுவை தரித்துக் கொண்டு முதலில் ஆவிர்ப்பவித்தார். பிறகு அப்ஸரஸ்

கள் உண்டானார்கள். பால்ரூபமான ஜலத்தில் கடைந்ததாலுண்டான யாதொரு ஸாராம்சமுண்டோ அதிலிருந்தும் உண்டான ஸ்த்ரீகளானதால்,

अप्सु निर्मथनादेव रसस्तस्माद्वरस्त्रियः ।
उत्पेतुर्मनुजश्रेष्ठ तस्मादप्सरसोऽभवन् ॥

𑌅𑌪𑍍𑌸𑍁 𑌨𑌿𑌰𑍍𑌮𑌥𑌨𑌾𑌦𑍇𑌵 𑌰𑌸𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌉𑌤𑍍𑌪𑍇𑌤𑍁𑌰𑍍𑌮𑌨𑍁𑌜𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌪𑍍𑌸𑌰𑌸𑍋𑌽𑌭𑌵𑌨𑍍 ॥

அப்ஸு நிர்மதநாதேவ ரஸஸ்தஸ்மா த்வரஸ்த்ரிய: ।
உத்பேதுர்மநுஜச்ரேஷ்ட தஸ்மாதப்ஸரஸோபவந் ॥

என்ற ச்லோகத்தை அனுஸரித்து, இந்த ஸ்த்ரீகள் அப்ஸரஸ்கள் என்று சொல்லப்படுகிறார்கள். அழகான இந்த ஸ்த்ரீகள் அறுபதுகோடிகள் ப்ரதானமாக ஆகுவார்கள். அப்ரதமானவர்களை கணக்கிட முடியாது. அம்ருதத்தில் குறிப்புள்ள தேவர்களோ அஸுரர்களோ அந்த அப்ஸரஸ்களை பத்னிகளாக அங்கீகரிக்கவில்லை. அப்படி தேவர்களாலும் அஸுரர்களாலும் தனது பத்னி என்று அங்கீகரிக்கப்படாத காரணத்தாலும் அந்த ஸ்த்ரீகளுக்கும் இவன்தான் தனது பர்த்தா என்ற நிர்ணயமில்லாதுபோன காரணத்தாலும் இவர்கள் ஸாதாரணமான ஸ்த்ரீகளாக ஆகிவிட்டார்கள்.

பிறகு வாருணீ என்ற வருணனுடைய கன்னிகை உண்டானாள். அவள் ஸுரை என்ற மத்யத்திற்கு (கள்ளுக்கு) அதிதேவதையாகுவாள். ரொம்பவும் ஸுந்தரியான அவளையும் திதியினுடைய பிள்ளைகள் அவர்களின் பத்னியாக வரிக்கவில்லை. அதிதியினுடைய பிள்ளைகள் இவளை பத்னியாக வரித்தார்கள். இந்த வாருணீ என்றவள் ஸுரைக்கு அதிதேவதை என்று முன்பு சொன்னதால் அவளை க்ரஹித்த காரணத்தால் தேவர்களுக்கு ஸுரர்கள்

என்ற பெயரும், அவளை வெறுத்த தானவர்களுக்கு அஸு ரர்கள் என்றும் பெயரும் ஏற்பட்டது. தேவர்களும் இந்த வாருணீயை க்ரஹித்த காரணத்தால் பரம ஸந்தோஷத்து டன்கூடினவர்களாகவும் பலவான்களாகவும் ஆகிவிட்டார் கள். வெகுகாலமாக வாஸுகியைக் கயிருகக் கட்டி இழுத் தாலும் ச்ரமம் தோன்றவில்லை.

பிறகு உச்சைச்ரவஸ் என்ற வெள்ளைக் குதிரை உண் டாயிற்று. மணிச்ரேஷ்டமான கௌஸ்துபமணி இதன்பின் ஆவிர்ப்பவித்தது. அதற்குப் பிறகு அம்ருதம் உண்டா யிற்று. அம்ருதம் உண்டானவுடன் தேவர்களுக்கும் அஸு ரர்களுக்கும் முன்னிருந்த ஸ்நேஹபாவம்போய் தங்களுக்கே கிடைக்கவேண்டும் என்ற துராக்ரஹம் ஏற்பட்டு அதன் காரணத்தால் பெரிய யுத்தமும் ஏற்பட்டுவிட்டது. இந்த யுத்தத்தில் காச்யபப்ரஜாபதியினுடைய குலத்திற்கே க்ஷயம் வரும்போல் தோன்றி மஹாவிஷ்ணுவானவர் மாயா பலத் தால் திவ்ய ஸுந்தரியான மோஹினி வேஷத்தை தரித்துக் கொண்டு அம்ருத கலசத்தை தான் க்ரஹித்துக்கொண் டார். அந்த விஷ்ணுவை சரணுகதியடைந்த தேவர்களை அம்ருதத்தை புஜிக்கச் செய்து த்ருப்தர்களாகச் செய்து வைத்தார். தனது ஸௌந்தர்யத்தில் வ்யாமோஹத்தை அடைந்து கெட்ட எண்ணத்துடன் தனதருகில் வந்த அஸு ரர்களுக்கு அம்ருதத்தைக் கொடுக்காமல் நசிக்கச் செய்து விட்டார். அக்காரணத்தாலும் அஸுரர்களுக்கும் தேவர் களுக்கும் பெரிய யுத்தம் ஏற்பட்டது. இவ்விதம் ஏற் பட்ட கோரமான யுத்தத்தில் தேவேந்த்ரன் அம்ருத ப்ரா சனம் செய்த பலத்தாலும், மஹாவிஷ்ணுவின் அனுக்ரஹ விசேஷத்தாலும் அஸுரர்களைக் கொன்றுவிட்டு ஸ்வர்க்கத் தில் பரம ஸந்தோஷத்துடனிருந்துகொண்டு மூன்று லோகங்களையும் பரிபாலனம் செய்துவந்தான்.

46-47-வது ஸர்க்கங்கள்.

ஸப்த மருத்துக்களின் உத்பத்தி.

ஸுமதியின் ஆதித்யம்.

விஷ்ணுபக்தர்களுக்கு விரோதம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் யார் எவ்விதமான யக்ஞத்தைச் செய்தாலும் அவை பயனற்றதாகவேதான் ஆகும் என்ற தத்வத்தை மருத்துக்களுடைய ஆக்யான மூலமாக விச்வாமித்ர மஹர்ஷி ராமனுக்குச் சொல்கிறார்.

அம்ருத விஷயமாக தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் பெரிய கலகம் ஏற்பட்டு தேவர்கள்மூலம், அஸுரர்கள் நாசத்தை அடைந்த பிறகு, அஸுரர்களுக்குத் தாயான திதி அம்மாள் காச்யப ப்ரஜாபதியான தனது பார்த்தாவிடம் சரணமடைந்து, "ஸ்வாமி! தங்களுடைய முதல் மஹிஷியான அதிதி அம்மாளிடம் பிறந்த தேவர்கள்மூலமாக என்னிடம் தங்களுக்குப் பிறந்த அஸுரர்கள் நாசத்தை அடைந்துவிட்டார்கள். தேவர்களை அடியோடு அழிக்க சக்தி உள்ள புத்ரனை எனக்குத் தாங்கள் கொடுக்கவேண்டுமாக ப்ரார்த்திக்கிறேன். அப்படிக் கொடுக்கும் புத்ரனுக்கு முக்யமாக இந்த்ரனைக் கொல்லக்கூடிய சக்தி உண்டாகவேண்டும். அதற்காக எவ்வித தபஸ்ஸைச் செய்யவேண்டுமென்று தாங்கள் ஆக்ஞை செய்தாலும், அவ்விதமான தபஸ்ஸைச் செய்கிறேன்" என்று சொன்னாள். அவளுடைய வார்த்தைகளைக் கேட்டு, காச்யபப்ரஜாபதியானவர் திதியைப் பார்த்து, "ஹே ப்ரியே! உனக்கு க்ஷேமம் உண்டாகவேண்டுமென்றுதான் என் அபிப்ராயமும். யுத்தத்தில் இந்த்ரனைக் கொல்லக்கூடிய சக்தியுள்ள புத்ரனை நீ அடையலாம். ஆனால் ஆயிரம் வருஷ காலம் அதற்காக ஒரு நியமத்தை நீ அனுஷ்டானம் செய்யவேண்டும். அப்படியானால் நிச்சயமாக என்னுடைய அனுக்ரஹத்தால் நீ புத்ரனை அடையலாம்" என்று சொன்னார்.

இவ்விதம் சொல்லிவிட்டு தனது வலது கையினுல் **திதி** அம்மாளை சிரஸ்ஸிலிருந்து தடவி விட்டு அவளுடைய உத ரத்தை கையால் தொட்டுக்கொண்டு, "புத்ரோத்பத்தி ரூப மான கர்பம் உனக்கு உண்டாகவேண்டு" மென்று சொல்லி விட்டு, காச்யபப்ரஜாபதியானவர் தபஸ்ஸிற்காக அரண்யம் சென்றுவிட்டார். ராமா! **திதி** அம்மாளும், இப்பொழுது நாம் இருக்கும் விசாலா என்ற நகரத்தில்தான் அத்யுக்ர மான தபஸ்ஸைச் செய்தாள். இது முன்பு அரண்யமாக இருந்துவந்தது. குசப்லவனம் என்ற பெயரால் விளங்கிவந் தது. **திதி**யும் மஹா பரிசுத்தையாக இருந்துகொண்டு காச்யப ப்ரஜாபதியான தன் பர்த்தா சொல்லியபடி நிய மங்களையும் அனுஷ்டானம் செய்துகொண்டு மஹா உக்ர மாக தபஸ் செய்துவந்தாள். இந்த வ்ருத்தாந்தம் இந்த்ர னுக்குத் தெரிந்தது. தன்னைக் கொல்லக்கூடிய புத்ரனுக் காக இவள் தபஸ்ஸை செய்கிருள் என்பதைத் தெரிந்து கொண்டு எப்படியாவது இந்த தபஸ்ஸிற்கு விக்னம் செய்துவிடவேண்டுமென்று தீர்மானம் செய்து, இந்த குசப்ல வனத்திற்கு இந்த்ரன் வந்து ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளால் திதி அம்மாளை ஸந்தோஷிக்கச் செய்து சிஷ்யபாவத்துடன் திதி அம்மாளுக்கு வேண்டிய கைங்கர்யத்தைச் செய்து வந்தான். ஹோம காலத்தில் அக்னியை மூட்டி ஜ்வாலை செய்து கொடுப்பதும், தர்பங்கள், ஸமித்துக்கள், பலம், மூலம் இவைகளை எந்தந்த ஸமயத்தில் **திதி**யானவள் அபே க்ஷிக்கின்ருளோ அந்த ஸமயத்தில் பரமபக்தியுடன் கொண்டு வந்து கொடுத்து த்ருப்தி செய்துவைத்து வந்தான். தபஸ் ஸைச் செய்து ச்ரமபரிஹாரம் செய்துகொள்ளும் காலத் தில், இந்த்ரன் மிகவும் பக்தியுடன், வெண்சாமரங்களால் வீசுகிறது, நிர்மலமான கங்கா தீர்த்தத்தைக் கொண்டுவந்து கொடுத்து சாப்பிடச் செய்வது முதலிய பரிசர்யை செய்துவந்தான். அநேக வருஷங்கள் சென்றுவிட்டன. திதி அம்மாளும் பரம ஸந்தோஷத்துடன் இந்த்ரனைப் பார்த்து 'தேவேந்த்ரா! உன் பிதாவான காச்யப ப்ரஜாபதியினி

டம் நான் புத்ரனை யாசித்தேன். இவ்விதம் ஆயிரம் வருஷங்கள் தபஸ் செய்தால், தேவர்களையும் ஜயிக்கக்கூடிய புத்ரன் எனக்கு உண்டாகுவான் என்று ஆசீர்வாதம் செய்தார். அநேக வருஷங்கள் முடிந்துவிட்டது. பத்து வருஷங்கள் தான் பாக்கி இருக்கின்றது. இந்த பத்துவருஷங்கள் ஆனவுடன் உன் ப்ராதாவை நீ பார்க்கலாம். உன்னையும் கொல்லக்கூடிய புத்ரனை யாசித்து, அதற்காக நான் தபஸ்ஸைச் செய்கிறவளாக ஆனாலும் உன்னுடைய பரிசர்யையினால், உன்னிடத்தில் விரோத புத்தி எனக்கு போய்விட்டது. ஆனால் பிறக்கக்கூடிய பிள்ளை மூன்று லோகங்களையும் கபளீகரணம் செய்யக்கூடியது. பிறந்த மாத்ரத்தில் தேவர்களுடைய பூண்டை அழித்துத்தான்விடும். ஆகிலும் நான் ஸமாதானம் செய்து, உன்னிடத்தில் அந்த புத்ரனுக்கு மித்ர பாவத்தை செய்துவைக்கிறேன். நீ அந்த புத்ரனை முதன்மையான ப்ராதாவாக வைத்துக்கொண்டு த்ரைலோக்ய ராஜ்யத்தை அனுபவித்து வரலாம்' என்றாள்.

இவ்விதம் சொல்லிவிட்டு பகலில், மத்யான ஸமயத்தில், வெகுகாலம் தபஸ்ஸைச் செய்த ச்ரமத்தால் கொஞ்சம் நித்ரையை அடைந்துவிட்டாள். ஆனால் நித்ரையை அடைந்த ஸமயத்தில் அவளுடைய தலையானது ஸ்வயமாகவே வளைந்து பாதங்களில் பட்டது. உட்கார்ந்து கொண்டு தூங்குகிறவர்கள், ஆடி ஆடி தலையால் பாதங்களைத் தொடுகிற வழக்கந்தான். மத்யானத்தில் தூங்கியது குற்றம்; பரிசுத்தமான தலை காலில் பட்டதும் மற்றொரு குற்றமாகும். ப்ராம்மணன் சூத்ரனைத் தொட்டால் எவ்விதமான அசுத்தியோ, அவ்விதமான அசுத்தியை காலில் தலை பட்டதால் அடைகிறாள் என்று தர்ம சாஸ்த்ரமானது சொல்கிறது.

ब्राह्मणोस्य मुखमासीत् पद्भ्यां शूद्रो जायत

ப்ராஹ்மணோஸ்ய முகமாஸீத் பத்ப்யாம் சூத்ரோ ஜாயத

ப்ராஹ்மணோஸ்ய முகமாஸீத் பத்ப்யாம் சூத்ரோ ஜாயத

என்ற ச்ருதியும், முகத்தை ப்ராம்மணனாகவும், பாதத்தை சூத்ரனாகவும் சொல்கிறது. அதனால் சிரஸ்ஸால் பாதத்தைத் தொடுவது, ப்ராம்மணன் சூத்ரனைத் தொடுவது போல்தான் ஆகும். திதி அம்மாள் நித்ரை செய்யுங்காலத்தில். பூமியில் சயனம் செய்துகொண்டுதான் நித்ரைசெய்ததாகவும் சிலர்கள் சொல்லுகிறார்கள். அதிலும் பகலில் தூங்கியது பெரிய பாபமாகும். ஆனால் நித்ரை செய்யும் காலத்தில் தெற்கு திக்கும், கிழக்கு திக்கும் சிரஸ்ஸை வைத்துக்கொள்வதற்கு யோக்யமான திக்குகள். இதற்கு விரோதமாக சிரஸ்ஸை வைத்துக்கொள்ளவேண்டிய திக்கில் பாதத்தை வைத்துக்கொண்டு தூங்கினாள். அதே பெரிய பாபமாகும் என்று அதற்கு அபிப்ராயத்தைச் சொல்கிறார்கள்.

एवमुक्त्वा दितिःशक्रं प्राप्ते मध्यं दिवाकरे ।
निद्रयापहृता देवी पादौ कृत्वाथ शीर्षतः ॥

𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌦𑌿𑌤𑌿𑌃𑌶𑌕𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌮𑌧𑍍𑌯𑌂 𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑍇 ।
𑌨𑌿𑌦𑍍𑌰𑌯𑌾𑌪𑌹𑍃𑌤𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌪𑌾𑌦𑍌 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌥 𑌶𑍀𑌰𑍍𑌷𑌤𑌃 ॥

ஏவமுக்த்வா திதி:சக்ரம் ப்ராப்தே மத்யம் திவாகரே ।
நித்ரயாபஹ்ருதா தேவீ பாதௌ க்ருத்வாத சீர்ஷத: ॥

என்ற ச்லோகத்தில் पादौ कृत्वाथ शीर्षतः (𑌪𑌾𑌦𑍌 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌥 𑌶𑍀𑌰𑍍𑌷𑌤𑌃) (பாதௌ க்ருத்வாத சீர்ஷத:) என்பதற்கு 'சிரஸ்ஸை வைக்கவேண்டிய ஸ்தானத்தில் பாதங்களை வைத்துக்கொண்டு' என்று சிலர்கள் அர்த்தம் செய்கிறார்கள். எவ்விதத்திலும் தபஸ்ஸிற்கு விக்னம் ஏற்பட்டுவிட்டது. இந்த்ரன் பரம ஸந்தோஷத்தை அடைந்தான். இந்த ஸமயத்தில் அவளுடைய சரீரத்திற்குள் யோனிவிவர வழியாக இந்த்ரன் ப்ரவேசித்து, அவளுடைய கர்பத்தை வஜ்ராயுதத்தால் ஏழு பாகமாக வெட்டிவிட்டான். அந்த சிசுவா

னது அழகாக அழுதது. திதி அம்மாளும் விழித்துக்கொண்டு விட்டாள். இந்த்ரனும் 'அழாதே! அழாதே!' என்று சொல்லிவிட்டு பிறகும், ஒவ்வொன்றையும் எவ்வேழாக வெட்டிவிட்டு தனது மனோரதம் பூர்த்தியாகிவிட்டதாக ஸந்தோஷமடைந்தான். திதியும் 'கொன்றுவிடாதே உயிர் இருக்கட்டுமென்று' சொன்னாள். இதைக் கேட்ட இந்த்ரன், சிறிய தாயாரான திதி அம்மாளுக்கு கௌரவத்தைக் கொடுக்கவேண்டுமென்று நினைத்து, அந்த குழந்தைகளுடைய உயிரை அபஹரிக்காமல் ஜீவனுடன் விட்டுவிட்டு வெளியில் வந்துவிட்டான். வஜ்ராயுதத்துடன் வெளியில் வந்து திதி அம்மாளுக்கு ப்ரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து விட்டு, 'தாயே! நான் என்ன செய்வேன். நீ அசுத்தமாக ஆகிவிட்டாய். பகலில் தூங்கலாமா? அதிலும் காலில் தலையை வைத்துக்கொண்டா தூங்குகிறது. அவனவன் தன் தன் ஆத்மாவை ரக்ஷித்துக்கொள்வதற்கு ஸமயத்தை தேடுவது வழக்கமல்லவா? என்னை கொல்லக்கூடிய புத்ரனை அடைய வல்லவா நீ தபஸ் செய்கிறாய்? அந்த புத்ரனை பிறக்காமலே செய்ய நான் யத்னம் செய்யமாட்டேனா?

स्वहिंसापरां गामपि हिंस्यात्

𑌸𑍍𑌵𑌹𑌿𑌂𑌸𑌾𑌪𑌰𑌾𑌂 𑌗𑌾𑌮𑌪𑌿 𑌹𑌿𑌂𑌸𑍍𑌯𑌾𑌤𑍍

ஸ்வஹிம்ஸாபராம் காமபி ஹிம்ஸ்யாத்

என்று வேதமே, கோ ஸம்ரக்ஷணத்தை மேலான புண்யமாகச் சொல்லிவிட்டு, தன்னை ஹிம்ஸிக்க வந்த கோவானால் அதைக் கொல்லவும் கொல்லலாம் என்று சொல்லுகிறது. அதனால் என்னைக் கொல்ல பிறக்கப்போகிற புத்ரனைக் கொல்ல யத்னம் செய்தது தோஷமாக ஆகாது. இது தெய்வ ஸம்மதம்தான். அப்படி இல்லாவிடில் எனக்கு ஸமயம் கிடைக்குமா? கர்பத்தை ஏழாகச் செய்தேன். பிறகு ஒன்றொன்றையும் ஏழாகச் செய்துவிட்டேன். நாற்பத்தி ஒன்பது கண்டங்களாக ஆகிவிட்டது. நீ உயிருடன்

விட்டுவிடும்படி சொன்னதால் அவ்விதமே செய்துவிட்டேன். அதனால் என் அபராதத்தை க்ஷமித்துக்கொள்ள வேண்டும்' என்று சொன்னான்.

இதைக் கேட்ட திதி அம்மாளும், அஹங்காரத்தை விட்டு விட்டு, இந்த்ரனைப் பார்த்து 'இந்த்ரா! உன்னுடைய அபராதம் ஒன்றுமேயில்லை. என் தோஷத்தால்தான் என் கர்பம் துலைந்தது. ஆனாலும், அவர்கள் ஜீவனுடன் இருப்பதினால், நீ அவர்களையும் தேவர்களின் கோஷ்டியில் சேர்த்துக்கொள். யக்ஞங்களில் உன்னைப் போல் அவர்களுக்கும் ஹவிர்பாகங்கள் கிடைக்கும்படி செய்து ரக்ஷித்துவா (आवह प्रवह संवह उद्वह विवह परिवह परावह 𑌆𑌵𑌹 𑌪𑍍𑌰𑌵𑌹 𑌸𑌂𑌵𑌹 𑌉𑌦𑍍𑌵𑌹 𑌵𑌿𑌵𑌹 𑌪𑌰𑌿𑌵𑌹 𑌪𑌰𑌾𑌵𑌹 ஆவஹ ப்ரவஹ ஸம்வஹ உத்வஹ விவஹ பரிவஹ பராவஹ) ஆவஹ, ப்ரவஹ, ஸம்வஹ, உத்வஹ, விவஹ, பரிவஹ, பராவஹ என்ற பெயரால் ஏழு கணங்களும் விளங்கி வரட்டும். அழுகிற காலத்தில் நீ "मा रुदः" (𑌮𑌾 𑌰𑍁𑌦𑌃) (மா ருத:) என்று சொன்னதினால் மருத்துகள் என்ற பெயரால் விளங்கி வரட்டும். மேற்சொன்ன விஷ்ணு புராணத்தில் உள்ளபடி ஏழு பெயர்களாலோ, அல்லது,

गगनस्पर्शनो वायुः अनिलश्चतथापरः ।
प्राणः प्राणेश्वरो जीवः इत्येतेसप्तमारुताः ॥

𑌗𑌗𑌨𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑍋 𑌵𑌾𑌯𑍁𑌃 𑌅𑌨𑌿𑌲𑌶𑍍𑌚𑌤𑌥𑌾𑌪𑌰𑌃 ।
𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌶𑍍𑌵𑌰𑍋 𑌜𑍀𑌵𑌃 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑍇 𑌸𑌪𑍍𑌤𑌮𑌾𑌰𑍁𑌤𑌾𑌃 ॥

ககநஸ்பர்சநோ வாயு: அநிலச்சததாபர: ।
ப்ராண: ப்ராணேச்வரோ ஜீவ: இத்யேதே ஸப்தமாருதா: ॥

என்றபடி ககநன், ஸ்பர்சனன் வாயு, அனிலன், ப்ராணன், ப்ராணேச்வரன், ஜீவன் என்ற பெயர்களுடனுவது லோக பாலகர்களாக விளங்கிவரட்டும். ப்ராணிகளுடைய ப்ராண ரக்ஷகர்களான தேவர்கள் இவர்கள்தான் என்ற ப்ரஸித்தியை

அடையட்டும். அதாவது வாயுவிற்கு அபிமானியான தேவதைகளாக ஆகட்டும். ஒருவன் ப்ரும்மலோகத்திலும், மற்றொருவன் தேவலோகத்திலும், ஆகாசத்தில் மற்றொருவனும், நாலு திக்குகளிலும் நாலு பேர்களுமாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஸ்தானத்தை பரிபாலனம் செய்துகொண்டு தேவர்களாக விளங்கிவரட்டும். உன்னால் செய்யப்பட்ட திருநாமங்களும் விளங்கிவரட்டும்' என்று சொன்னாள்.

இவ்விதம் திதியின் வார்த்தைகளைக் கேட்ட இந்த்ரன் 'தாயே! நீ சொல்லியபடியே ஸகலமும் நடக்கட்டும். எங்களுடைய கோஷ்டியில் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்கிறேன்' என்று அஞ்ஜலிபந்தத்துடன் தெரிவித்துக்கொண்டான். இவ்விதம் தபோவனத்தில் இந்த்ரனும் திதியும் நிச்சயத்தைச் செய்துகொண்டு ஸ்வர்க்கலோகம் சென்றார்கள். திதி அம்மாள் தபஸ் செய்யும்பொழுது எந்த இடத்தில் தேவேந்த்ரன் சிச்ரூஷை செய்துவந்தானோ அந்த தேசந்தான் இப்பொழுது நாம் இருந்துவரும் தேசமாகும்.

ஸூர்ய வம்சத்தில் இக்ஷ்வாகு மஹாராஜாவிற்கு அலம்புஸா என்ற தர்மபத்னியிடம் விசாலன் என்ற ஒரு புத்ரன் உண்டானான். அவன் பரம தார்மிகன். அம்மஹானுபாவனால் இந்த தபோவனமானது நகரமாக நிர்மாணம் செய்யப்பட்டது. இப்பொழுது மஹாராஜாதானியாக விளங்கி வருகிறது. கங்கையைத்தாண்டி வடகரை வந்தவுடன் இதென்ன பெரிய ராஜதானி தெரிகிறதே? இது யாருடையது என்று நீ கேட்டாயே, அது உன் வம்சகூடஸ்தனால் உண்டுபண்ணப்பட்ட ராஜதானியாகும். முன்பு தபோவனமாக இருந்தது. உன் வம்சகூடஸ்தனான இக்ஷ்வாகு மஹாராஜாவினுடைய புத்ரனான விசாலன் என்ற அரசனால் நிர்மாணம் செய்யப்பட்ட காரணத்தால் இந்த நகரத்திற்கு விசாலா எனப் பெயர் ஏற்பட்டது. விசாலனுடைய புத்ரன் ஹேமசந்த்ரன்; ஹேமசந்த்ரனின் புத்ரன் ஸுசந்த்ரன்; ஸுசந்த்ரனின் புத்ரன் தூம்ராச்வன்; தூம்ராச்வனின்

புத்ரன் ஸ்ருஞ்சயன்; ஸ்ருஞ்சயனின் புத்ரன் ஸஹதேவன்; ஸஹ தேவனின் புத்ரன் குசாச்வன்; குசாச்வனின் புத்ரன் ஸோமதத் தன்; ஸோமதத்தனின் புத்ரன் காகுத்ஸ்தன்; காகுத்ஸ்தனின் புத்ரன் ஸுமதி. அந்த ஸுமதி என்பவன்தான் தற்காலத் தில் அரசாண்டுவருகிறுன். இந்த்ரனுக்கு ஸமானமான பராக்ரமத்துடன் கூடினவன். இக்ஷ்வாகு மஹாராஜாவின் ப்ரஸாதத்தால், இந்த விசாலா என்ற நகரத்தில் ராஜவம் சத்திற்கு விச்சேதம் வராமல் மேன்மேலும் மஹா தார் மிகர்களாயும், ப்ராம்மண விச்வாஸமுள்ளவர்களாயும், ப்ர ஜைகளை ஒளரஸமான புத்ரர்களைப்போல் பரிபாலனம் செய்துவருகிறவர்களாயும், ராஜாக்கள் விளங்கிவந்தார்கள். இப்பொழுதுள்ள ஸுமதி என்ற அரசனே பரம தார்மி கன். நான் இவ்விதம் இங்கு வந்திருக்கும் வ்ருத்தாந்தம் அரசனின் காதில்பட்டால் நமக்கு அவன் செய்யும் ஆதித் யம் என்ற ஸத்கர்மாவிலிருந்தே அவனுடைய பக்தியை நீ அறியலாம். ராமா! இன்றிரவு இங்கே வஸிப்போம். நாளையதினம் காலையில் ஜனக மஹாராஜாவைப் பார்த்து விடலாம் இனி அதிக தூரம் இல்லை.

இவ்வாறு சொல்லிவிட்டு கங்காநதியின் வடகரையில் விசாலா என்ற நகரத்திலுள்ள ஒரு உத்யானவனத்தில் விச்வாமித்ர மஹர்ஷியானவர் ராமனேடும் லக்ஷ்மணனேடும் பின்தொடர்ந்துவரும் மஹர்ஷிகளால் பூஜிக்கப்பட்டவராகக் கொண்டு அன்றிரவு அங்கு வஸித்தார். விசாலா என்ற நகரத்திற்கு அதிபதியான ஸுமதி என்ற மஹாராஜன், விச்வாமித்ர மஹர்ஷியானவர் அதிமன்மத மன்மதனை இரு ராஜகுமாரர்களுடன் உபவனத்தில் வஸிக்கிருர் என் பதை பரம்பரையாக அறிந்து உடன் பரபரப்புடன் ஸகல பரிவாரங்களுடன் பூர்ணகும்பத்தை முன்னிட்டுக்கொண்டு மஹர்ஷியின் ஸமீபம் வந்துசேர்ந்து, ஸாஷ்டாங்க ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளால் மஹர்ஷியை ஸந்தோஷிக்கச் செய்து விட்டு, ராஜகுமாரர்களுக்கும் செய்யவேண்டிய பூஜையை யும் செய்துவிட்டு அஞ்ஜலிபந்தத்துடன்,

धन्योऽस्म्यनुगृहीतोऽस्मि यस्य मे विषयं मुनिः ।
संप्राप्तो दर्शनं चैव नास्ति धन्यतरो मया ॥

𑌧𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑍍𑌯𑌨𑍁𑌗𑍃𑌹𑍀𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌮𑍇 𑌵𑌿𑌷𑌯𑌂 𑌮𑍁𑌨𑌿𑌃 ।
𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌚𑍈𑌵 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌧𑌨𑍍𑌯𑌤𑌰𑍋 𑌮𑌯𑌾 ॥

தந்யோஸ்ம்யநுக்ருஹீதோஸ்மி யஸ்ய மே விஷயம் முநி: ।
ஸம்ப்ராப்தோ தர்சநம் சைவ நாஸ்தி தந்யதரோ மயா ॥

என்ற ச்லோகத்தாலும் ராஜன் பரம வினயத்துடன் ஆனந்த பாஷ்பத்தை பெருகவிட்டுக்கொண்டு, 'மஹர்ஷே! என் ராஜ்யத்தில் தங்களுடைய பாத தூளியும், தங்களுடைய பார்ச்வத்தில் நின்றுவரும் ராஜகுமாரர்களைப்போல் தோன்றும் மஹாபுருஷர்களுடைய பாத தூளியும், மற்ற மஹர்ஷிகளுடைய பாத தூளியும் பட்டதினால் நான் பரம தன்யனாக ஆகிவிட்டேன். மஹான்களுடைய அனுக்ரஹத்திற்கும் ஈச்வரானுக்ரஹத்திற்கும் முக்யமான பாத்ரமாக ஆகிவிட்டேன். தங்களைப்போலொத்த மஹான்களுடைய தர்சனம் பூலோகத்தில் மனிதர்களுக்கு கிடைப்ப தரிதல்லவா? அந்த தர்சனத்தை நான் அடைகிறேன். எனக்கு ஸமமான புண்யவானே லோகத்தில் இல்லை என்று எனக்கு நிச்சயம் ஏற்பட்டுவிட்டது" என்று தனது பரம பக்தியைக் காட்டிவிட்டு, ஸவாகத வசனம் முதலான ஸத்காரங்களால் விச்வாமித்ர மஹர்ஷியையும் ராமலக்ஷ்மணர்களையும் மற்ற மஹர்ஷிகளையும் யதாசாஸ்த்ரமாகப் பூஜித்து ராஜன் பரமானந்தத்தை அடைந்தான்.

48, 49-வது ஸர்க்கங்கள்.

ஸுமதியின் ஆதித்யம்.

அஹல்யா சாப விமோசனம்.

ஸுமதி என்ற ராஜன் விச்வாமித்ர மஹர்ஷியினிடம் குசல ப்ரசனம் செய்துவிட்டு, மஹர்ஷியினுல் தானும் குசல ப்ரச்னம் செய்யப்பட்டவனுகக்கொண்டு அஞ்ஜலிபந்தத்துடன் மிகவும் வணக்கத்தோடு விச்வாமித்ர மஹர்ஷியினிடம், மஹர்ஷியை அனுஸரித்து பார்ச்வத்தில் நின்று கொண்டிருக்கும் ராமலக்ஷ்மணர்களுடைய தத்வத்தை தெரிந்துகொள்ள ப்ரச்னம் செய்தான்.

इमौ कुमारौ भद्रं ते देवतुल्यपराक्रमौ ।
गजसिंहगती वीरौ शार्दूलवृषभोपमौ ॥
पद्मपत्रविशालाक्षौ खड्गतूणीधनुर्धरौ ।
अश्विनाविव रूपेण समुपस्थितयौवनौ ॥
यदृच्छयैव गां प्राप्तौ देवलोकादिवामरौ ।
कथं पद्भ्यामिह प्राप्तौ किमर्थं कस्य वा मुने ॥
भूषयन्ताविमं देशं चन्द्रसूर्याविवांबरम् ।
परस्परस्य सदृशौ प्रमाणेङ्गित चेष्टितैः ॥
किमर्थं च नरश्रेष्ठौ संप्राप्तौ दुर्गमे पथि ।
वरायुधधरौ वीरौ श्रोतुमिच्छामि तत्वतः ॥

𑌇𑌮𑍌 𑌕𑍁𑌮𑌾𑌰𑍌 𑌭𑌦𑍍𑌰𑌂 𑌤𑍇 𑌦𑍇𑌵𑌤𑍁𑌲𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑍌 ।
𑌗𑌜𑌸𑌿𑌂𑌹 𑌗𑌤𑍀𑌵𑍀𑌰𑍌 𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲 𑌵𑍃𑌷𑌭𑍋𑌪𑌮𑍌 ॥

𑌪𑌦𑍍𑌮𑌪𑌤𑍍𑌰 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍌 𑌖𑌡𑍍𑌗𑌤𑍂𑌣𑍀 𑌧𑌨𑍁𑌰𑍍𑌧𑌰𑍌 ।
𑌅𑌶𑍍𑌵𑌿𑌨𑌾𑌵𑌿𑌵 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌸𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤 𑌯𑍌𑌵𑌨𑍌 ॥

𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌯𑍈𑌵 𑌗𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌦𑍇𑌵𑌲𑍋𑌕𑌾𑌦𑌿𑌵𑌾𑌮𑌰𑍌 ।
𑌕𑌥𑌂 𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌮𑌿𑌹 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌕𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌮𑍁𑌨𑍇 ॥

𑌭𑍂𑌷𑌯𑌨𑍍𑌤𑌾𑌵𑌿𑌮𑌂 𑌦𑍇𑌶𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌵𑌿𑌵𑌾𑌮𑍍𑌬𑌰𑌮𑍍 ।
𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌸𑍍𑌯 𑌸𑌦𑍃𑌶𑍌 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍇𑌙𑍍𑌗𑌿𑌤𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑍈𑌃 ॥

𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌚 𑌨𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍌 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌦𑍁𑌰𑍍𑌗𑌮𑍇 𑌪𑌥𑌿 ।
𑌵𑌰𑌾𑌯𑍁𑌧𑌧𑌰𑍌 𑌵𑍀𑌰𑍌 𑌶𑍍𑌰𑍋𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 ॥

இமௌ குமாரௌ பத்ரம் தே தேவதுல்யபராக்ரமௌ ।
கஜஸிம்ஹ கதீவீரௌ சார்தூல வ்ருஷபோபமௌ ॥

பத்மபத்ரவிசாலாக்ஷௌ கட்கதூணீ தநுர்தரௌ ।
அச்விநாவிவ ரூபேண ஸமுபஸ்தித யௌவநௌ ॥

யத்ருச்சயைவ காம் ப்ராப்தௌ தேவலோகாதிவாமரௌ ।
கதம் பத்ப்யாமிஹப்ராப்தௌ கிமர்தம் கஸ்யவாமுநே ॥

பூஷயந்தாவிமம் தேசம் சந்த்ரஸூர்யாவிவாம்பரம் ।
பரஸ்பரஸ்ய ஸத்ருசௌ ப்ரமாணேங்கித சேஷ்டிதை: ॥

கிமர்தம் ச நரச்ரேஷ்டௌ ஸம்ப்ராப்தௌ துர்கமேபதி ।
வராயுததரௌ வீரௌ ச்ரோதுமிச்சாமி தத்வத: ॥

என்று ஐந்து ச்லோகங்களால் ஸுமதி என்ற அரசன், ராமனையும், லக்ஷ்மணனையும் குறித்து, விச்வாமித்ர மஹர்ஷியினிடம் கேட்டான். ராஜன், ராமனையும் லக்ஷ்மணனையும் பார்த்து, பரமாச்சர்யத்தை அடைந்தான். 'இதென்ன! பரமாச்சர்யமாயிருக்கிறதே! இவ்விருவர்களுடைய கௌமாரத் தன்மை பார்ப்பவர்களுக்கு மோக்ஷானந்தத்தைக்கூட கொடுக்குமல்லவா' என்று நினைத்தான். தான் ராஜனானதால் தன்னுடைய த்ருஷ்டியால் குழந்தைகளுக்கு தோஷம் வரக்கூடாதென்று நினைத்து க்ஷேமம் உண்டாக வேண்டுமென்றும் ஆசீர்வதித்தான்.

'இந்த இரண்டு குமாரர்களுடைய அவயவங்களைக் கவனித்தால் இருவர்களும் மஹாவிஷ்ணுவிற்கு ஸமானமான

பராக்ரமத்தோடு கூடினவர்கள் என்று நினைக்கிறேன். இவர்களுடைய கம்பீரமான நடையை கவனித்தால் மத்த கஜத்தின் கமனம்போல் இருக்கிறது. சத்ருக்களுக்குப் பயத்தைக் கொடுக்கும் ஸ்வபாவத்தைக் கவனித்தால் ஸிம்ஹத்தினுடைய ஸ்வபாவத்தை அடைந்தவர்கள்போல் தோன்றுகிறார்கள். பயத்தை சத்ருக்களுக்குக் கொடுக்கும் விஷயத்தில் பதினாறு அடி வேங்கையைப்போல் இவர்கள் பாஸிக்கிறார்கள். கர்வத்துடன் போகிற விஷயத்தில் வ்ருஷபத்திற்கு ஸமானமாகவும் தோன்றுகிறார்கள்.' (லோகத்தில் கமனம் என்பது, கம்பீரமான கமனம், சத்ருக்களை அவமதிக்கக்கூடிய கமனம், சத்ருக்களுக்கு பயத்தைக் கொடுக்கும் கமனம், கர்வத்தோடுகூடின கமனம், என்று நான்குவிதம் சொல்லப்படும். அவைகளில் கம்பீர கமனத்தை மத்தகஜத்தினிடமும், சத்ருக்களை அவமதிக்கக்கூடிய கமனத்தை ஸிம்ஹத்தினிடமும், சத்ருக்களுக்கு பயத்தைக் கொடுக்கும் கமனத்தை வேங்கையினிடமும், கர்வத்துடன்கூடின கமனத்தை வ்ருஷபத்தினிடமும் காணலாம். அந்த நான்குவிதமான கமனங்கள் ராமலக்ஷ்மணர்களிடம் காணப்படுகிறபடியால் மதயானை, சிங்கம், வேங்கை, வ்ருஷபம் இந்த நான்குகளையும் உபமானமாக வைத்துக்கொண்டு, ராமலக்ஷ்மணர்களை ஸுமதி என்ற ராஜன் வர்ணித்தார்.)

'தவிரவும், இந்த இருவர்களையும் கவனித்தால், சத்ருக்களை பஹு தூரத்திற்கப்பால் அலறியடித்து ஓடும்படி செய்வார்கள்; தன் பக்தர்களுக்கு ஏற்பட்ட சத்ருக்களை விரட்டுகிறவர்கள் (நாசம் செய்கிறவர்கள்); என்றும் நினைக்கிறேன். இந்த குமாரர்களுடைய நேத்ரங்களைக் கவனித்தாலோ தாமரஸ புஷ்பத்தினுடைய இதழ்போல் விஸ்தாரமாக நீண்டதாக இருக்கின்றன. லோகத்தில் அழகில் கண் அழகுதான் முக்யமானது. அந்த கண் அழகானது ஆதிசேஷனாலும் வர்ணிக்க முடியாததாக விளங்கி வருகிறது.

தாமரை புஷ்பம்போலொத்த கண்களுடன் கூடினவன் மஹாவிஷ்ணுவே என்பதும் ப்ரஸித்தமாகும்.

य एषोऽन्तरादित्ये हिरण्मयः पुरुषो दृश्यते
हिरण्यश्मश्रुः हिरण्यकेशः आप्रणखात् सर्व एव सुवर्णः।
तस्य यथा कप्यासं पुण्डरीकं एवं अक्षिणी।

𑌯 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇
𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌃 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑍇𑌶𑌃 𑌆𑌪𑍍𑌰𑌣𑌖𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵
𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌃 ।
𑌤𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾 𑌕𑌪𑍍𑌯𑌾𑌸𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌂 𑌏𑌵𑌂 𑌅𑌕𑍍𑌷𑌿𑌣𑍀 ।

ய ஏஷோ அந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே
ஹிரண்யச்மச்ரு: ஹிரண்யகேச: ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண: ।
தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவம் அக்ஷிணீ ।

என்ற ச்ருதியில் ஸூர்யமண்டலத்தின் நடுவில் வஸிக்கும் மஹாவிஷ்ணுவே புண்டரீகாக்ஷன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விருவர்களும் புண்டரீகாக்ஷர்களாக விளங்குகிறுர்கள். (புண்டரீகாக்ஷனுன விஷ்ணுவோ ஒருவன்தான். ப்ரக்ருதத்திலோ இருவர்களாகப் பாஸிக்கிறுர்கள். அதனுல்தான் ஸுமதி என்ற அரசன் 'இவ்விருவர்களும் யார்' என்று விச்வாமித்ர மஹர்ஷியைக் கேட்கக் காரணமேற்பட்டது.) இந்த இரு குமாரர்களும் கத்தி, அம்பராத்தூணி, வில், இவைகளைத் தரித்துக்கொண்டிருக்கிறுர்கள். கத்தி முதலியவை க்ஷத்ரியனுக்கு ஆயுதங்களாகவும் ஆகலாம்; ஆபரணங்களாகவும் ஆகலாம். இதனுல் இவ்விருவர்களும் க்ஷத்ரியர்களோ என்ற ஸந்தேஹத்திற்கும் இடமேற்படுகிறது. சரீரத்தின் அழகிலோ அச்வினி தேவதைகள்தான் என்று நிச்சயமாகச் சொல்லலாம். அழகுக்குத் தகுந்தபடி கௌரவமும் ப்ராதுர்பாவத்தை (ப்ரகாரத்தை) அடைந்திருக்கிறது. தேவலோகத்திலிருந்து யாரோ இரண்டு தேவர்கள் எதிர்பாராமல் ப்ராணிகளு

டைய புண்யவசத்தால் பூமியில் வந்திருக்கிறார்கள் என்றே நான் நினைக்கிறேன். இந்த இருவர்களுடைய தேஜஸ் ஸைப் பார்த்தால் யாரும் இவர்கள் தேவ குமாரர்கள் என்றுதான் சொல்லுவார்கள். ஆகையால் இவர்கள் மர்த் யர்களல்ல; அமர்த்யர்களே. இவ்விருவர்களும் தனது அழகான பாதங்களால் இந்த துர்க்கமான வழியில் எவ் விதம் வந்தார்கள்? இவர்களைப் பார்க்கும்பொழுதே ஸமஸ்த மான காமங்களையும் அடைந்த மஹாபுருஷர்கள் என்று தோன்றுகிறது. ஆகையால் அவர்களுக்கு இப்பூலோகத்தில் யாதொரு ப்ரயோஜனமுமில்லை. இவர்களைப் புத்ரர்களாக பெற்ற அரசன் யாரோ! அவன் மஹாபுண்யவானே! எந்த ப்ரயோஜனத்தை உத்தேசித்துத்தான் இவர்கள் பூமி யில் அவதரித்தார்களோ? ஆகாசத்தில் சந்த்ரனும், ஸூர்ய னும் சேர்ந்திருந்தால் எப்படியிருக்குமோ, அவ்விதமே பூமி யில் இந்த இரண்டு குமாரர்களும் சேர்ந்து இருப்பது இருக்கிறது. ப்ரதாப விசேஷத்தில் பார்த்தால் இருவர் களும் சந்த்ரஸூர்யர்களுக்கு ஸமானமானவர்களே. தன் னுடைய தேஜஸ்ஸால் இப்பூமியை ப்ரகாசப்படுத்துகிறார் கள். இந்த பூமிதான் என்ன தவம் செய்தாளோ! இந்த இருவர்களையும் பார்த்தால் சரீரத்தினுடைய உயரம், பரு மன் முதலான விஷயங்களிலோ, அன்ய புருஷர்களுடைய மனதிலிருப்பதை இங்கிதத்தால் அறிவதிலோ, நடையிலோ, பேச்சிலோ, பார்வையிலோ, ஒருவனுக்கு மற்றொருவனை த்ருஷ்டாந்தமாகச் சொல்வதைத் தவிர வேறு த்ருஷ்டாந் தம் பதினான்கு லோகங்களிலும் அகப்படாது. மஹர்ஷே! இந்த உத்தமபுருஷர்களை கல்லும், முள்ளும் நிறைந்த இந்த மார்க்கத்தில் அழைத்துவந்தீர்களே! இந்த மார்க்கத்தில் இவர்கள் வரக்கூடியவர்களா? வெகு வேகமாகவும் ஸஞ் சாரம் செய்வதாகத் தெரிகிறதே. எந்த ப்ரயோஜனத்தை உத்தேசித்து எந்த ஊர் போகிறீர்கள்? இவர்களுடைய கையிலிருக்கும் ஆபரணங்களைக கவனித்தால் ஏதோ ஒரு பெரிய யுத்தநிமித்தமாகப் போவதாகத் தெரிகிறது. மஹா

வீர்யவான்களென்றும் தோன்றுகிறது. பொதுவாக இரு வர்களும் ராஜபுத்ரர்கள்; யாரோ ஒரு மஹானுபாவனுக்கு உபகாரத்தை செய்யவந்தவர்கள்; என்று அறிகிறேன். ஆனலும், அதனுடைய விசேஷங்கள் தெரியாததால், அதைத் தெரிந்துகொள்ளத் தங்களிடம் ப்ரச்னம் செய்கிறேன். எனக்கு அதைச் சொல்லி என்னைக் க்ருதார்த்தனுக்ச் செய்யவேண்டும்' என்று ஸுமதி என்ற ராஜன் விச்வாமித்ர மஹர்ஷியைக் கேட்டதற்கு மஹர்ஷியும் பதில் சொன்னர்.

தசரத சக்ரவர்த்தியினுடைய குமாரர்களென்றும், தன்னுடைய யக்ஞத்திற்காக தான் தசரதரிடம் யாசித்து அழைத்துவந்ததையும், வரும் வழியில் தாடகையை ஸம்ஹாரம் செய்ததையும், ஸித்தாச்ரமத்தில் ஸுபாஹு மாரீசன் முதலான ராக்ஷஸர்களை ஜயித்து தன் யக்ஞத்தை நிறைவேற்றிவைத்த விஷயத்தையும், இப்பொழுது மிதிலா புரிக்கு ஜனக மஹாராஜாவின் யக்ஞத்தை தர்சனம் செய்வதற்காக போகிற விஷயத்தையும், விஸ்தாரமாகக் சொன்னர். ஸுமதி என்ற மஹாராஜாவும் பரமஸந்தோஷத்தை அடைந்து ரொம்பவும் மேலான அதிதிகளாக ராமலக்ஷ்மணர்களைக் கருதி ரொம்பவும் பக்தியோடு ஸத்காரங்கள் செய்தான். ராமன், லக்ஷ்மணன் இருவர்களும் விச்வாமித்ர மஹர்ஷியுடன் ஸுமதி என்ற ராஜனுடைய ஸத்காரத்தைப் பெற்றுக்கொண்டு அன்றிரவு விசாலா என்ற நகரத்தில் வஸித்துவிட்டு, மறுதினம் காலையில் மிதிலா நகரம் சென்றார்கள். விச்வாமித்ர மஹர்ஷியுடன் அனுஸரித்துப் போகிற மற்ற மஹர்ஷிகள், ஜனக மஹாராஜாவினுடைய நகரமான மிதிலையைப் பார்த்து, அபூர்வமான ஸன்னிவேச விசேஷங்களுடன்கூடின காரணத்தால், 'ரொம்ப ஆச்சர்யமான நகரம் இதுவே' என்று மகிழ்ந்து பேசினர்கள். மிதிலையினுடைய உபவனத்தில், ஒரு சிறிய ஆச்ரமத்தைக் கண்டு, அந்த ஆச்ரமத்தில் ப்ராணிகளுடைய ஸஞ்சாரமே இல்லாமலிருப்பதைப் பார்த்து, ராமன் விச்வாமித்ர மஹர்

ஷியைப் பார்த்து "மஹர்ஷே! இந்த ஆச்ரமம் யாருடைய ஆச்ரமம்? ரொம்பவும் அழகாக இருக்கிறதே, அதைத் தெரிந்துகொள்ள இச்சிக்கிறேன்" என்று கேட்டார். விச்வாமித்ர மஹர்ஷியும் "ராமா! இந்த ஆச்ரமத்தின் வ்ருத்தாந்தத்தை உனக்குச் சொல்கிறேன்" என்று பரமஸந்தோஷத்தோடு மஹா புண்யவதியான அஹல்யா தேவியினுடைய சரித்ரத்தைச் சொல்ல ஆரம்பித்தார். ராமனிடம் ஸகஜமாக பரமபாவனத்வம் என்ற கல்யாண குணத்தையும் லோகத்தில் ப்ரகாசப்படுத்தவேண்டிய காலமும் ஏற்பட்டுவிட்டது என்று விச்வாமித்ரருக்குப் பரம ஸந்தோஷம் ஏற்பட்டது. "ராமா! இந்த ஆச்ரமம் இதற்கு முன்பு கௌதம மஹர்ஷியினுடைய ஆச்ரமமாக இருந்தது. அந்த மஹர்ஷியானவர் அஹல்யை என்ற தர்மபத்னியுடன்கூட வெகுகாலம் தபஸ்ஸைச் செய்துவந்தார். அந்த தபஸ்ஸிற்கு விக்னம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் கௌதம மஹர்ஷியைப்போல் தேவேந்த்ரன் வேஷம் போட்டுக்கொண்டு கௌதம மஹர்ஷி ப்ரபாதகாலத்தில் ஸ்னானத்திற்குப் போயிருக்குங் காலத்தில், அஹல்யாதேவியினிடம் வந்து, அஹல்யாதேவியின் அழகில் மோஹமடைந்து, அவளுடன் ஸங்கமம் செய்ய இச்சித்தான். அஹல்யாதேவியும் தனது பாதிவ்ரத்ய மஹிமையால் தேவராஜன் என்று அறிந்துகொண்டு, அவனுடன் ஸங்கமத்தையும் இச்சித்தாள். பிறகு இருவர்களுக்கும் ஸங்கமம் நேர்ந்துவிட்டது. தேவராஜன் வெளியில்போகுங்காலத்தில் கௌதமரைக் கண்டுவிட்டான். கௌதம மஹர்ஷி பரம கோபத்துடன் துர்வ்ருத்தனான தேவேந்த்ரனைப் பார்த்து, 'வ்ருஷணமில்லாதவனாகப் போகக் கடவது' என்று சபித்தார். அஹல்யாதேவியையும் 'நீ பாஷாணமாக (கல்லாக) போகக் கடவது' என்று சபித்துவிட்டார். பிறகு கருணையினால் 'மஹாவிஷ்ணுவானவர், தசரத சக்ரவர்த்தியினுடைய குமாரனாக அவதரித்து இந்த ஆச்ரமம் எப்பொழுது வருவாரோ அப்பொழுது அவருடைய பாத ஸ்பர்சமாத்ரத்தால் நீ

பரிசுத்தையாக ஆகி என்னையும் அடையலாம்' என்று சாப மோக்ஷத்தையும் அனுக்ரஹம் செய்தார். இவ்விதம் சபித்துவிட்டு கௌதம மஹர்ஷி இந்த ஆச்ரமத்தை விட்டுவிட்டு, ஹிமாலயம் சென்று அங்கு தபஸ் செய்து வருகிறார். ஆகையால் நீ இந்த ஆச்ரமத்தில் வந்தது கௌதம மஹர்ஷியினுடைய வார்த்தையை ஸத்யமாகச் செய்ததாக ஆகிவிட்டது. உன்னுடைய பாத ஸ்பர்சத்தால் அஹல்யா தேவியை நீ துக்கத்தினின்றும் தரணம் செய்துவைக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு கௌதம மஹர்ஷியின் ஆச்ரமத்திற்கு ராமனை அழைத்துச் சென்றார்.

இந்த்ரனையும் கௌதம மஹர்ஷியானவர் 'நீ வ்ருஷண மற்றவனாக போகக்கடவது' என்று சபித்தார். ஆனால் தேவேந்த்ரன் செய்ததோ தேவர்களுடைய கார்யமே. அதாவது ஸகல தேவர்களும் தன் தன் ஸ்தானத்தைவிட்டு நழுவி பூமியில் பதிதர்களாகப் போகும்படியான தபஸ்ஸையே கௌதமர் செய்தார். தேவதைகளுடைய ஸ்தானத்தை தான் கைகொள்ள வேண்டுமென்று கௌதமரின் அபிப்ராயமாகும். அதற்காக இந்த்ரன் தபஸ்ஸுக்கு விக்னத்தை செய்து தபஸ்ஸை நஷ்டமாக்கவேண்டுமென்று எண்ணினான். தபஸ் நஷ்டமாக வேண்டுமானால் கௌதமருக்கு பெரிய கோபத்தை உண்டுபண்ணினால்தான் முடியுமென்று நினைத்து அதற்கு காரணமான வ்யபிசாரத்தை செய்தானே தவிர வேறு தாத்பர்யத்துடன் இந்த்ரன் ஒன்றும் செய்யவில்லை. அதனால் தேவர்களும் இந்த்ரனிடம் கருணைபுரிந்து பித்ருதேவதைகளுடைய ஹவிர்பாகமாகிய மேஷத்திலுள்ள (ஆட்டினுடைய) வ்ருஷணத்திற்கு ஸமானமாயுள்ள அவயவ விசேஷத்தை இந்த்ரனுக்கு வ்ருஷணமாக அக்னிமூலமாக கல்பித்தார்கள்.

ஸ்ரீராமனும் விச்வாமித்ர மஹர்ஷியினுடைய ஆக்ஞையை அனுஸரித்து கௌதம மஹர்ஷியின் ஆச்ரமத்திற்குள் நுழைந்தார்.

ददर्शच महाभागां तपसाद्योतितप्रभां ।
लोकैरपिसमागम्य दुर्निरीक्ष्यां सुरासुरैः ॥

𑌦𑌦𑌰𑍍𑌶𑌚 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌾𑌂 𑌤𑌪𑌸𑌾𑌦𑍍𑌯𑍋𑌤𑌿𑌤 𑌪𑍍𑌰𑌭𑌾𑌂 ।
𑌲𑍋𑌕𑍈𑌰𑌪𑌿𑌸𑌮𑌾𑌗𑌮𑍍𑌯 𑌦𑍁𑌰𑍍𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌂 𑌸𑍁𑌰𑌾𑌸𑍁𑌰𑍈𑌃 ॥

ததர்ச மஹாபாகாம் தபஸாத்யோதித ப்ரபாம் ।
லோகைரபிஸமாகம்ய துர்நிரீக்ஷ்யாம் ஸுராஸுரை: ॥

என்றபடி, ஸ்ரீராமன் ப்ரவேசித்த காலத்தில் கௌதமருடைய ஆச்ரமத்தில் பாஷாணமாகக் (கல்லாக) கிடந்த அஹல்யாதேவியானவள் ராமனுடைய சரணாரவிந்த ஸ்பர்ச மாத்ரத்தால் சாபத்திலிருந்து விமுக்தையாக ஆகி தேவரூபிணியாகவும் விளங்கிவந்தாள். தேவர்களுக்கும் பார்க்கமுடியாததான இந்த அஹல்யா தேவியை ராமனும் பார்த்து பரமஸந்தோஷத்தை அடைந்தார். பாத்ம புராணத்தில் :—

गच्छतस्तस्य रामस्य पादस्पर्शान् महाशिला ।
काचिद्योषाऽभवत् सोऽपि विस्मितो मुनिरब्रवीत् ॥
शापदग्धापुराभर्त्रा रामशक्रापराधतः ।
अहल्याख्या शिलाजज्ञे शतलिंगः कृतः स्वराट् ॥
त्वदंघ्रिस्पर्शनात् तस्यै शापान्तं प्राह गौतमः ।
तस्मादियंते पादाब्ज स्पर्शात् शुद्धाभवत्प्रभो ॥

𑌗𑌚𑍍𑌛𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌪𑌾𑌦𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾𑌨𑍍𑌮𑌹𑌾𑌶𑌿𑌲𑌾 ।
𑌕𑌾𑌚𑌿𑌦𑍍𑌯𑍋𑌷𑌾𑌭𑌵𑌤𑍍𑌸𑍋𑌽𑌪𑌿 𑌵𑌿𑌸𑍍𑌮𑌿𑌤𑍋 𑌮𑍁𑌨𑌿𑌰𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥
𑌶𑌾𑌪𑌦𑌗𑍍𑌧𑌾 𑌪𑍁𑌰𑌾 𑌭𑌰𑍍𑌤𑍍𑌰𑌾 𑌰𑌾𑌮𑌶𑌕𑍍𑌰𑌾𑌪𑌰𑌾𑌧𑌤𑌃 ।
𑌅𑌹𑌲𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾 𑌶𑌿𑌲𑌾𑌜𑌜𑍍𑌞𑍇 𑌶𑌤𑌲𑌿𑌙𑍍𑌗𑌃 𑌕𑍃𑌤𑌃 𑌸𑍍𑌵𑌰𑌾𑌟𑍍 ॥
𑌤𑍍𑌵𑌦𑌂𑌘𑍍𑌰𑌿𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍𑌤𑌸𑍍𑌯𑍈 𑌶𑌾𑌪𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌗𑍌𑌤𑌮𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌿𑌯𑌂𑌤𑍇 𑌪𑌾𑌦𑌾𑌬𑍍𑌜 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾𑌤𑍍𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌭𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑍋 ॥

கச்சதஸ்தஸ்ய ராமஸ்ய பாதஸ்பர்சாந் மஹாசிலா ।
காசித்யோஷாபவத்ஸோபி விஸ்மிதொ முநிரப்ரவீத் ॥

சாபதக்தா புரா பர்த்ரா ராமசக்ராபராதத:।
அஹல்யாக்யா சிலா ஜக்ஞே சதலிங்க: க்ருத: ஸ்வராட்॥
த்வதங்க்ரிஸ்பர்சநாத் தஸ்யை சாபாந்தம் ப்ராஹ கௌதம:।
தஸ்மாதியம்தே பாதாப்ஜ ஸ்பர்சாச்சுத்தாபவத் ப்ரபோ॥

என்று சொல்லியபடி கௌதம சாபத்தால் அஹல்யா தேவி சிலாபாவத்தைத்தான் அடைந்தாள். ராமனுடைய பாத ஸ்பர்சத்தால் பரிசுத்தையானுள் என்றும் தெரியவருகிறது.

வால்மீகி மஹர்ஷியினுடைய அபிப்ராயத்தை அனுஸரித்தும்,

वायुभक्षानिराहारा तप्यन्ती भस्मशायिनी ।
अदृश्यासर्वभूतानां आश्रमेऽस्मि न्निवत्स्यसि ॥

𑌵𑌾𑌯𑍁𑌭𑌕𑍍𑌷𑌾 𑌨𑌿𑌰𑌾𑌹𑌾𑌰𑌾 𑌤𑌪𑍍𑌯𑌨𑍍𑌤𑍀 𑌭𑌸𑍍𑌮𑌶𑌾𑌯𑌿𑌨𑍀 ।
𑌅𑌦𑍃𑌶𑍍𑌯𑌾𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾 𑌆𑌶𑍍𑌰𑌮𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌿𑌵𑌤𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥

வாயுபக்ஷா நிராஹாரா தப்யந்தீ பஸ்மசாயிநீ।
அத்ருச்யா ஸர்வபூதாநாமாச்ரமேஸ்மிந் நிவத்ஸ்யஸி॥

என்ற ச்லோகத்தால், அஹல்யாதேவியின் சாப காலத்தில் வாயுவை ஆஹாரமாக கல்பித்திருப்பதினுல் அவளைக் கல்லாக சபித்தார் என்று எப்படி சொல்லலாம் என்று நினைக்கக் கூடாது. கல்லாக சபித்தாலும் சைதன்யத்திற்கு ஹானி வராது. சைதன்யம் ஸர்வ வ்யாபகமானதால் பாஷாணத்திலும் சைதன்யமுண்டு. அங்கு இந்த சைதன்யத்திற்கு ஆஹாரம் வாயுதான் என்பதை அறிந்துகொள்ளவும். ராமனுடைய பாதஸ்பர்சம் பட்டமாத்ரத்தில் அஹல்யாதேவியும் திவ்ய ரூபத்துடன் பாஸித்துக்கொண்டு பாத்ய, அர்க்ய ஆசமனுதிகளால் விதிவத்தாக ராமனையும் லக்ஷ்மணனையும் பூஜித்து ஸ்ரீராமனுடைய ப்ரஸாத விசேஷத்தால் தன் பர்த்தாவான கௌதமரையும் நினைத்தமாத்ரத்தால் அடைந்து கௌதமரோடுகூடவும் ராமரை ஸத்காரம் செய்துவிட்டு அஹல்யாதேவி ஸுகமாக இருந்துவந்தாள். இதனுல் ராமனிடம் பரமபாவனத்வமென்ற குணமும் வெளியாகிறது.

ஸ்ரீராமன் விச்வாமித்ர மஹர்ஷியின் ஆக்ஞைக்கு இணங்கித் தனது பாதத்தால் கல்லை மிதித்தார். ஸ்ரீராமனுடைய பாதம் பட்டமாத்ரத்தில் அந்தக் கல்லானது கல்லென்ற தன்மையைவிட்டு நிகரற்ற ஸௌந்தர்யமுள்ள திவ்யமான ஸ்த்ரீயாக எழுந்திருந்து, ஸ்ரீராமனை பூஜித்த விஷயம், ஸ்ரீமத் ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதைத்தான் ஸ்ரீராமபிரான் அஹல்யா தேவியை அவள் பர்த்தாவின் சாபத்தினின்றும் விடுவித்துவைத்தார் என்று உலக முழுமையும் ப்ரஸித்தமாக சொல்லுகிறார்கள். அந்த அஹல்யாதேவியோ பதிவ்ரதா சிரோமணி என்று மஹா பாரதம் முதலான சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ராமாயணத்திலோ, அவளுக்கு வ்யபிசார தோஷம் ஏற்பட்டதால், கௌதமர் என்ற அவள் பர்த்தா அவளைக் கல்ரூபத்தை அடையும்படி சபித்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கௌதமர் ஒரு தினம் வழக்கம்போல் விடியற்காலையில் எழுந்திருந்து ஸ்நானம் செய்யப்போனார். ஆனால் அவர் எழுந்திருந்து போனகாலம் விடியற்காலமல்ல. நடுநிசி ஸமயம்தான். தேவராஜன் இந்த அஹல்யாதேவியின் ஸௌந்தர்யத்தில் ஈடுபட்டு அநேக நாட்களாக அவளுடன் சேரவேண்டுமென்ற இச்சை மேலிட்டவனாக இருந்து வந்ததினால், அன்று நடுநிசியில் கௌதமரின் ஆச்ரமத்திற்கு வந்து, காக்கை கத்துகிறதுபோல் சப்தமிட்டான். கௌதமர் அதைக்கேட்டதும் தூங்கிவிட்டோமோ, விடியற்காலம் வந்துவிட்டதே என்று பரபரப்புடன் ஸ்நானம் செய்யப் போய்விட்டார். உடனே இந்த்ரனும் ஆச்ரமத்திற்குள் நுழைந்து, அங்கு தனியாக இருந்த அஹல்யாதேவியிடம் தான் சேரவிரும்ப, அவள் அதற்கு இணங்காதிருந்தும், பலாத்காரமாக அவளிடம் க்ரீடித்தான். அதிலும், ஆச்ரமத்திற்குள் அந்த தேவராஜன் ப்ரவேசிக்கும்பொழுது, கௌதமரைப் போலவேதான் வேஷம்பூண்டு ப்ரவேசித்ததாகவும், அஹல்யாதேவி அவனைத் தன் பர்த்தாவென்று நினைத்து "ஸ்நானத்திற்குப் போனீர்களே, ஏன் திரும்பி

வந்து விட்டீர்கள்?" என்று கேட்க கௌதருடைய வேஷம் பூண்ட அந்த தேவராஜன் "இன்னமும் உஷக்காலம் வரவில்லை. நடுநிசிதான் என்று தோன்றுகிறது" என்று பதில் சொல்லிவிட்டு, அந்த அஹல்யையுடன் க்ரீடித்தான் என்றும் சில புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விதம் தேவராஜன் அஹல்யாதேவியோடு, ரஸமாக க்ரீடித்துக் கொண்டிருக்கும்பொழுதே, விடியற்காலமும் வந்துவிட்டது. ஸ்நானத்திற்குப் போன கௌதமரும் விதிவத்தாக ஸ்நானம் செய்துவிட்டு ஆச்ரமத்திற்குள் நுழையும் ஸமயம், இந்த்ரனையும் அங்கு கண்டார். அதிலும் அந்த கௌதமரைக் கண்ட இந்த்ரன் தப்பித்து ஓடிவிட்டான். கௌதமரோ கோபத்தை யடைந்து தேவேந்த்ரனை "வ்ருஷணம் (ஆண்மைக்குரிய விதை) இல்லாதவனாக நீ போகக்கடவாய்" என்று சபித்தார். அஹல்யாதேவியையும் "நீ பாஷாணமாகப் (கல்லாக) போகக் கடவது" என்று சபித்தார். அவ்விதமான சாபத்திற்குட்பட்டு இந்த்ரன் வ்ருஷணமில்லாதவனாகவும், அஹல்யை கல்லாகவும் ஆகிவிட்டார்கள். கௌதமரும் அதுமுதல் அந்த ஆச்ரமத்தையும் விட்டு விட்டு, ஹிமவத்பர்வதம்போய் மஹாதபஸ்ஸில் அமர்ந்திருந்தார்.

இவ்விதம் பாறுங்கல்லாகச் சபிக்கப்பட்ட அஹல்யா தேவியைத்தான் ஸ்ரீராமன் தன் பாதத்தால் மிதித்துச் சாபத்தினின்றும் அவளை விடுவித்தார் என்ற கதை, ராமாயண மூலமாகவும், மற்ற ஸ்காந்தம், முதலான புராணங்கள் மூலமாகவும், ஸ்பஷ்டமாகத் தெரியவருகின்றது. இவ்விதமே புராண ப்ரஸங்கங்கள் செய்து வருகிறவர்களும் ஆங்காங்கு உபந்யஸித்து வருகிறார்கள்.

ஆகிலும் இந்தக் கதை எப்படி ஒத்துவரும் என்று நாம் கொஞ்சம் ஆலோசிப்போம்.

அதாவது அஹல்யாதேவியை மஹா பதிவ்ரதை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு "தாரை, மண்டோதரி,

ஸீதை, த்ரௌபதி, அஹல்யை" இந்த ஐந்து பேர்களையும் மஹா பதிவ்ரதைகள் என்று சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கும் மஹாபாரத ச்லோகமே ப்ரமாணமாகும். அப்படியிருக்கும்பொழுது அந்தப் பதிவ்ரதையினிடம் தேவேந்த்ரன் வந்து பலாத்காரம் செய்ய முடியுமா? அப்படியே செய்திருந்தாலும், அவன் சாம்பலாகப் போயிருக்கவேண்டுமே? ஸமஸ்தமான ப்ராணிகளுக்கும் பூஜிக்கத்தகுந்த மஹிமையுள்ள கீதாசார்யாளான ஸ்ரீவாஸுதேவ ப்ரம்மமென்ற ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா தனக்குக்கூட பூஜிக்கத்தகுந்த தேவதை என்று பதிவ்ரதா ஸ்திரீகளைக் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது:—

ருக்மணிதேவியானவள் க்ருஷ்ண பரமாத்மாவோடு ஒரு நாள் ஏகாந்தமாக இருக்கும் தருணம் தன் பர்த்தாவைப் பார்த்து "ஹே ப்ரபோ! தங்களை எல்லோரும் வந்து நமஸ்கரிக்கிறார்களே, தாங்கள் யாரையாவது பூஜிப்பதோ, நமஸ்காரம் செய்வதோ உண்டா?" என்று கேட்க, பகவான் ருக்மணியைப் பார்த்து "ஹே! ப்ராணநாயகி! நானும் பூஜிக்கத் தகுந்த தேவதைகள் ஆறு பேர்கள் உண்டு. அவர்களில் (1) தினந்தோறும் அன்னதானம் செய்கிறவன், (2) யௌவனத்திலேயே ச்ரௌதகர்மாக்களை அனுஷ்டிக்கிறவன், (3) ஒவ்வொரு மாதத்திலும் பகல் உபவாஸதினம், ராத்திரி உபவாஸதினம், பகல் ராத்திரி இரண்டு வேளைகளும் உபவாஸதினம், என்று ஏற்பட்ட உபவாஸதினங்களில் உபவாஸமிருக்கும், மாஸோபவாஸி, (4) பதிவ்ரதா ஸ்த்ரீ, (5) ப்ரம்மநிஷ்டன், (6) ஆயிரம் தடவைகள் சந்த்ரப் பிறையைப் பார்த்தவன். இந்த ஆறுபேர்களும் எனக்கு நமஸ்கரிக்கத் தகுந்தவர்கள் என்று நீ அறி" என்று சொன்னார். இதனால் பதிவ்ரதா ஸ்த்ரீயானவள் ஸர்வேச்வரனான பகவானுக்கும் பூஜிக்கத் தகுந்த தேவதை என்று வெளியாகிறது.

அப்படியிருக்கும்பொழுது அஹல்யாதேவியிடம் தேவராஜன் கிட்ட அண்டமுடியுமா? கௌதமர் மாதிரி தேவ

ராஜன் வேஷம்பூண்டானே, அதை அஹல்யாதேவிக்கு அறிந்துகொள்ள சக்தியில்லையா? பாதிவ்ரத்யத்தின் மஹிமையால் எல்லாவற்றையும் அறியக்கூடிய சக்தி ஏற்படுகிறது. அதாவது ஸர்வஜ்ஞத்வம் ஏற்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறதே. காக்கையைப்போல் சப்தித்த இந்த்ரனை தெரிந்துகொள்ளாத கௌதமரைத்தான் "மஹர்ஷி" என்று எப்படிச் சொல்லமுடியும்? இந்தக் கதைகள் எப்படிவேண்டுமானாலும் இருக்கட்டும். ராமனுடைய பாதஸ்பர்சம் பட்டமாத்ரத்தில் வ்யபிசாரியும் சுத்தமாய்விடுகிறாள் என்றது மிகவும் சாஸ்த்ரத்திற்கு விருத்தமல்லவா? தற்கால வ்யபிசார ஸ்த்ரீகளுக்கு ஸாக்ஷாத் ஸ்ரீராம பாதஸ்பர்சம் ஏற்பட ந்யாயமில்லாதபோனாலும், ராமனுடைய பரமதத்வத்தை அறிந்த பரம பாகவத சிரோமணிகளுடைய பாதஸ்பர்சம் ஏற்பட அவகாசமிருக்கிறதல்லவா? பகவானே, தனக்குள்ள மஹிமையைக் காட்டிலும் தன்னுடைய பக்தர்களுக்கு அதிகமான மஹிமையைக் கொடுத்திருக்கிறார். அதற்கு பகவத்கீதையில் அர்ஜுனனைப் பார்த்து, பகவான் "என்னுடைய பக்தன் ஒருநாளும் கீழான கதியை அடையமாட்டான். மேன்மையையே அடைவான் என்று நீ ப்ரதிக்ஞை செய்" என்று அர்ஜுனனை ப்ரதிக்ஞை செய்யச்சொன்னார். தான் செய்யும் ப்ரதிக்ஞையைக் காட்டிலும் தன் பக்தன் செய்யும் ப்ரதிக்ஞையே மேலானது என்று எண்ணித்தான் பகவான் அவ்விதம் சொன்னார். இதுபோல் இன்னும் அநேக இடங்களில் பகவான் தானே பாகவதர்களின் பெருமையைத் தன் பெருமைக்கு மேலாகவே சொல்லியிருக்கிறார். அப்படியிருக்கும்பொழுது, பகவானின் பாதஸ்பர்சத்தால் அஹல்யைக்கு வ்யபிசார தோஷம் போகுமென்றால் பாகவதர்களுடைய பாதஸ்பர்சத்தால் தற்கால வ்யபிசார ஸ்த்ரீகளுக்கு வ்யபிசார தோஷம் போய்விடுமென்று ஏன் சொல்லக்கூடாது? கடோரமான வ்யபிசார தோஷத்தை போக்கடித்துக்கொள்ள இவ்வளவு ஸுலபமாக ப்ராயச்சித்தம் இருக்க ந்யாயமுண்டா? இந்தக் கதையைத்தான்

தர்ம தத்வத்தை ப்ரகாசப்படுத்த ஏற்பட்ட ஸ்ரீமத் ராமாயணத்தில் சொல்லப்பட்டிருப்பதில், ஏதோ தத்வமிருக்க வேண்டுமென்று கொஞ்சம் ஆலோசிக்க வேண்டாமா? அதில் தத்வமில்லாதபோனுல் இக்கதையால் அதர்மம் ஓங்குமே தவிர தர்மம் ஓங்குமா? ஆகையால் மஹர்ஷிகளுக்குள் குலபதியான வால்மீகி மஹர்ஷியால் இயற்றப்பட்டதாயும், தர்ம தத்வத்தை ப்ரகாசம் செய்வதில் முதலாவதான நூலாயுமுள்ள ஸ்ரீமத் ராமாயணத்தில் பாலகாண்டத்தில் மேற்கண்ட கதையானது காணப்படுகிறபடியால் அதனுல் விளங்கும் உண்மையான தத்வமின்னது என்றதையும், எந்த தர்மம் அதனுல் ஓங்கி விளங்கும் என்றதையும், ஸஜ்ஜனங்கள் நன்ருக அறிந்துகொள்ளும் பொருட்டு, இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்ய ஆரம்பிக்கப்பட்டது. இக்கதையின் உண்மையான தத்வத்தைப் பின்வருமாறு அறியவேண்டும்.

கௌதமருடைய தர்மபத்னியான அஹல்யாதேவியை மஹா பதிவ்ரதாசிரோமணியென்று ஆங்காங்கு நூல்களில் சொல்லப்பட்டிருப்பது வித்வான்களுக்குத் தெரிந்த விஷயம். பதிவ்ரதா ஸ்த்ரீகள் ஸர்வலோகசரண்யனுன பகவானுக்கு நமஸ்கரிக்கத் தகுந்த மஹிமையுள்ளவர்கள் என்று புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அதற்கு ஆதாரமாக

नित्यान्नदाता तरुणाग्निहोत्री वेदान्तवित् चन्द्रसहस्रदर्शी ।
मासोपवासीच पतिव्रता च षड्वन्दनीया मम जीवलोके ॥

𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌦𑌾𑌤𑌾 𑌤𑌰𑍁𑌣𑌾𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑍀 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌤𑍍
𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑌹𑌸𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑍀 ।
𑌮𑌾𑌸𑍋𑌪𑌵𑌾𑌸𑍀𑌚 𑌪𑌤𑌿𑌵𑍍𑌰𑌤𑌾 𑌚 𑌷𑌡𑍍𑌵𑌨𑍍𑌦𑌨𑍀𑌯𑌾 𑌮𑌮
𑌜𑍀𑌵𑌲𑍋𑌕𑍇 ॥

நித்யாந்நதாதா தருணாக்நிஹோத்ரீ வேதாந்தவித் சந்த்ரஸஹஸ்ரதர்சீ ।
மாஸோபவாஸீச பதிவ்ரதா ச ஷட்வந்தநீயா மம ஜீவலோகே ॥

என்ற இதிஹாஸ வசனத்தையே எடுத்துக்கொள்ளலாம். அஹல்யாதேவியை பதிவ்ரதாசிரோமணிகளான முக்யமான

ஸ்த்ரீகளுடைய வரிசையில்தான் சேர்க்கவேண்டும் என்ற தற்கும்,

अहल्या द्रौपदी सीता तारा मन्दोदरी तथा ।
पञ्चकन्याः स्मरेन्नित्यं पञ्चपातकनाशिनीः ॥

𑌅𑌹𑌲𑍍𑌯𑌾 𑌦𑍍𑌰𑍌𑌪𑌦𑍀 𑌸𑍀𑌤𑌾 𑌤𑌾𑌰𑌾 𑌮𑌨𑍍𑌦𑍋𑌦𑌰𑍀 𑌤𑌥𑌾 ।
𑌪𑌞𑍍𑌚𑌕𑌨𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌮𑌰𑍇𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑌞𑍍𑌚𑌪𑌾𑌤𑌕𑌨𑌾𑌶𑌿𑌨𑍀𑌃 ॥

அஹல்யா த்ரௌபதீ ஸீதா தாரா மந்தோதரீ ததா ।
பஞ்சகன்யா: ஸ்மரேந்நித்யம் பஞ்சபாதகநாசிநீ: ॥

என்ற மஹாபாரத வசனமே ப்ரமாணமாகும். அஹல்யா தேவி, த்ரௌபதி, ஸீதை, தாரை, மண்டோதரீ இந்த ஐந்து ஸ்த்ரீகளும் நித்யகன்னிகைகளென்று மேற்காட்டிய வசனத்தால் பரஸித்தமாகிறது. அந்த இடத்தில் "கன்யா" சப்தத்திற்கு தன்னுடைய பர்த்தாவினுடைய விஷயத்தில் ப்ரௌடையான பாவத்தையடைந்து, கர்பாதானத்திற்கு அர்ஹமான வயதுள்ளவர்கள்போல் தோன்றினலும், பர புருஷர்களுடைய ஸந்நிதியில் தனது பாதிவ்ரத்ய மஹிமை யினல் பத்துவயதுக்குட்பட்ட கன்யாப் பெண்ணின் பாவத் தையடைந்து, அந்த பரபுருஷர்களுடைய த்ருஷ்டிக்கு ஒரு சிறு குழந்தையாக தோன்றுகிருர்கள். இவ்விதம் புண்ய வதிகளான ஸ்த்ரீகள்தான் மேற்கண்ட ஸ்த்ரீகள் என்பது உண்மையான பொருளாகும். இந்த அர்த்தத்தையே கவ னித்தால், 'கன்னிகைகளாகவே அந்த ஸ்த்ரீகளைச் சொல்லி விட்டால், அவரவர்களுடைய பர்த்தா விஷயத்தில்கூட ஸம்யோகத்திற்கு அர்ஹமில்லாதவர்களாக ஆகிறபடியால், புத்ரோத்பத்திக்கு ந்யாயமில்லையே. மேற்கண்ட ஸ்த்ரீக ளுக்கோ, மஹாமேதாவிகளாயும், உத்தமசீலர்களான குமா ரர்கள் உண்டாகியிருப்பதாக மஹாபாரதம் முதலான கதை களினல் தெரியவருகிறதே,' என்ற சங்கைக்கு அவகாசமே இராது. தாரை, த்ரௌபதியினுடைய விஷயத்தில், ஒவ் வொரு ஸொந்த பர்த்தாவினிடத்திலும், தன் சரீரத்தையே

அநேகவிதமான ரூபத்தோடுகூடினதாக எடுத்துக்கொள்ளக் கூடிய சக்தியும் அந்த பாதிவ்ரத்யத்தின் மஹிமையே ஆகும்.

ஸாக்ஷாத் ஸ்ரீ ராமமூர்த்தியினுடைய மஹா பதிவ்ரதா ரத்னம் என்ற ஸ்ரீ ஸீதாதேவிக்கு ஸமானமான கோடியி லேயே இந்த அஹல்யாதேவியையும் சேர்த்துச் சொல் லப்பட்டிருக்கிறது. இவ்விதமிருக்கும்பொழுது இந்த அஹல்யாதேவிக்கும் எவ்விதமான தபோ மஹிமை இருக்கு மென்பதையும் கொஞ்சம் ஆலோசிக்க வேண்டும். தேவேந்த்ரன் அஹல்யாதேவியினிடம் காமாதுரனுக வந் தான் என்பது தப்பு. கௌதம மஹர்ஷியினுடைய தபஸ் சக்தியை அவன் கவனித்து, அந்த கௌதமர், தனது ஸ்தானமான ஐந்த்ரபதவிக்கு வந்துவிடுவாரோ, அல்லது நம்மைக்கூட நியமனம் செய்யக்கூடிய இதற்கு மேலான பத விக்கு வந்துவிடுவாரோ, என்றதை ஆலோசித்துக்கொண்டு, அதற்கு ஒரு விக்னம் செய்து அந்த மஹர்ஷியின் தபோ மஹிமையைக் கெடுத்துவிடவேண்டும் என்று நினைத்தான். மனிதர்கள் ச்ரேயஸ்ஸான மார்க்கத்தில் நடந்துவருவார்களே யானுல், அவர்களை முழுவதும் அவ்விதமான மார்க்கத்தில் செல்லவிடாமல் நடுமத்தியில் கெடுத்துவிடுவது தேவர்களு டைய ஸ்வபாவம். தனக்கு கீழான ஒரு மனிதன் தனக்கு மேலான பதவியை யடைய யத்னம் செய்தால், அதில் மாத்ஸர்யத்தை யடைந்து அதைக் கெடுக்க யத்னஞ் செய் வது என்பது போக ரஸிகர்களுக்கு ஸஹஜம்தானே! அத ஞல் இந்த்ரனுக்கும் கௌதமருடைய தபஸ்ஸை அவ்விதம் கெடுக்கவேண்டும் என்ற எண்ணம் உதித்தது. அதற்கு உபாயத்தையும் இன்னதென்று ஆலோசிக்கும்பொழுது, "கார்ஹஸ்த்யத்தை" (க்ருஹஸ்தாச்ரமம்) அடைந்தவர்களு டைய தபஸ்ஸுகளெல்லாம் தனது பத்னியினுடைய சுத்த மான ஆசாரத்தினுல்தான் ப்ரஸித்தமடைந்து பலத்தைக் கொடுக்கிறதாக ஆகும் என்பதே இந்து மதத்தினுடைய முக்யமான ஸித்தாந்தமாகும். இஹலோக, பரலோக ச்ரே

யஸ்ஸுக்கோ, தபஸ், யோகம், ஞானம் இவ்விதமான எல்லா ஸாதனங்களுக்கும் புஷ்டி ஏற்படவேண்டுமேயானால், பாரத தேசத்தில் பிறந்தவர்களுக்கு முக்யமாக அவர்களுடைய ஸ்த்ரீகளின் பாதிவ்ரத்யமே காரணமாகும்.

अप्रमत्ता भवत तन्तुं रक्षत यावान्
श्रौतोवा स्मार्तोवा धर्मकलापः
स सर्वोपि स्त्रीरक्षणमूलक एव ॥

𑌅𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑌾 𑌭𑌵𑌤 𑌤𑌨𑍍𑌤𑍁𑌂 𑌰𑌕𑍍𑌷𑌤 𑌯𑌾𑌵𑌾𑌨𑍍
𑌶𑍍𑌰𑍌𑌤𑍋𑌵𑌾 𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌤𑍋𑌵𑌾 𑌧𑌰𑍍𑌮𑌕𑌲𑌾𑌪𑌃
𑌸 𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌿 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌰𑌕𑍍𑌷𑌣𑌮𑍂𑌲𑌕 𑌏𑌵 ॥

அப்ரமத்தா பவத தந்தும் ரக்ஷத யாவாந்
ச்ரௌதோவா ஸ்மார்த்தோவா தர்மகலாப:
ஸ ஸர்வோபி ஸ்த்ரீரக்ஷணமூலக ஏவ ॥

என்றது முதலான சாஸ்த்ரவசனங்கள் மேற்சொன்ன ஸித்தாந்தத்தில் ப்ரமாணமாக ஆகும். இதை கவனித்துத்தான், தேவேந்த்ரனும், கௌதம மஹர்ஷியின் தர்மபத்னியான அஹல்யாதேவியின் பாதிவ்ரத்யத்தை கெடுத்துவிடவேண்டும் என்று நினைத்தான். அந்த மஹர்ஷியின் தபோமஹிமையைக் கெடுப்பதில்தான் அவனுக்கு தாத்பர்யமே தவிர, காமபோகத்தில் அபிப்ராயமில்லை. தேவர்களுக்கு திவ்ய ஸுந்தரிகளான அப்ஸர ஸ்த்ரீகளிருக்கும்பொழுது, தனக்கு நீசமான மனுஷ்ய ஸ்த்ரீகளிடத்திலா காமனை (ஆசை) ஏற்படப்போகிறது. ஆகையால் பாதிவ்ரத்யபங்கம் செய்து அதன்மூலம் மஹர்ஷியினுடைய தபஸ் சக்தியை குறைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கௌதமருடைய ஆச்ரமத்திற்கு இந்த்ரன் வந்தான் என்பது உண்மையே.

அதிலும், அவன் காக்கையாக வேஷம் போட்டுக் கொண்டு, அருணோதய காலமாகிவிட்டதுபோல் நடுநிசியில் தனது சப்தத்தால் கௌதமரை எழுப்பிவிட்டு, ஆச்ரமத்

திலிருந்து நதிக்கு ஸ்நானம் செய்யப்போகும்படி அவரை அப்புறப்படுத்திவிட்டான் என்று சொல்கிற கதைக்கும், உண்மையான அபிப்ராயம் என்னவென்ருல், இந்த்ரன், லோகத்திலுள்ள ப்ராக்ருதமான காக்கையாக வேஷம் போட்டுக்கொண்டான் என்பது அர்த்தமே இல்லை. காக்கை என்ற சப்தத்திற்கு, “ஆத்மா” வேறு, “அனுத்மா” வேறு என்று விவேசனம் செய்ய சக்தியில்லாத ஒரு ப்ராக்ருதமான மனுஷ்யன் என்றுதான் அர்த்தம். அப்படி ப்ராக்ருதமான மனுஷ்ய வேஷம் போட்டுக்கொண்டுதான், தானும் ஒரு கர்மிடனுன ரிஷிபோல் நதியில் ஸ்நானம் செய்துவிட்டு அக்னிஹோத்ர ப்ரணயனத்திற்காக, தன் ஆச்ரமத்திற்குப் போகிறதுபோல், கௌதம மஹர்ஷியின் ஆச்ரம வாசல் வழியாக, ஸ்நானம் செய்த பிறகு ஜபிக்கவேண்டிய வேத மந்த்ரங்களை உச்சரித்துக்கொண்டு, இந்த்ரன் போனதை கவனித்த கௌதமரும் யாரோ மஹர்ஷி ஒருவர் ஸ்நானஞ் செய்துவிட்டுப் போகிருரே, ரொம்பவும் அகலமாக ஆகிவிட்டதோ, என்று பரபரப்புடன் எழுந்திருந்து, தானும் ஸ்நானத்தின் பொருட்டு நதிக்குச் சென்ருர், என்பதுதான் அதன் கருத்தாகும். அதிலும்,

काको न काकः सम्प्रोक्तः प्राकृतः पुरुषोद्विजः ।
श्रोत्रियो वेदजापीच देवेन्द्रो गौतमंगतः ॥

𑌕𑌾𑌕𑍋 𑌨 𑌕𑌾𑌕𑌃 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 ।
𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑍇𑌦𑌜𑌾𑌪𑍀𑌚 𑌦𑍇𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌗𑍌𑌤𑌮𑌂𑌗𑌤𑌃 ॥

காகொ ந காக: ஸம்ப்ரோக்த: ப்ராக்ருத: புருஷோத்விஜ: ।
ச்ரோத்ரியோ வேதஜாபீச தேவேந்தரோ கௌதமம்கத: ॥

என்ற பாத்ம புராண வசனமே அதில் ப்ரமாணமாகும். கௌதமர் ஆச்ரமத்திற்கு வெளியில் போன பிற்பாடு, இந்த்ரனும் ஆச்ரமத்திற்குள் நுழைந்து அஹல்யையினுடைய ஸமீபம் சென்ருன். தான் காமதாபபீடிதன்போலும் நடனம் செய்தான். அஹல்யா தேவியும், ரொம்பவும் புத்தி

யில் சிறந்தவளானதால், தேவராஜன் என்றே தெரிந்து கொண்டு, “தாங்கள் அபேக்ஷிக்கும்பொழுது தங்களைப்போலொத்தவர்களுக்கு நாங்களெல்லோரும் வணங்க வேண்டாமா” என்று மந்தஹாஸத்துடன், கபடமாகச் சொல்லி விட்டு, ஆஸனமும் கொடுத்து உட்கார வைத்துவிட்டு, போகத்திற்கு யோக்யமான அலங்காரங்கள் செய்துகொண்டு வருகிறேன் என்று ஆச்ரமத்தின் உட்பக்கம் சென்றாள். அஹல்யையானவள் தன் பாதிவ்ரத்ய மஹிமையினால் தன் நிழலையே அதிரூபவதியாக ஸ்ருஷ்டித்து, அந்தசாயாஹல்யா மூலமாக இந்த்ரனை மோஹிக்கச் செய்தாளே தவிர, கௌதமருடைய தர்மபத்னியான அஹல்யாதேவி இந்த்ரனை கண் விழித்துக்கூடப் பார்க்கவேயில்லை. அவள் ரொம்பவும்சுத்தமானவள்தான். அதில்,

सृष्ट्वा स्वतपसाहल्या स्वीयां मायामयीं तनुम् ।
इन्द्रं विमोहयामास स्वयं स्थित्वा गृहान्तरे ॥

𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌤𑌪𑌸𑌾𑌹𑌲𑍍𑌯𑌾 𑌸𑍍𑌵𑍀𑌯𑌾𑌂 𑌮𑌾𑌯𑌾𑌮𑌯𑍀𑌂 𑌤𑌨𑍁𑌮𑍍 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌵𑌿𑌮𑍋𑌹𑌯𑌾𑌮𑌾𑌸 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾 𑌗𑍃𑌹𑌾𑌨𑍍𑌤𑌰𑍇 ॥

ஸ்ருஷ்ட்வா ஸ்வதபஸாஹல்யா ஸ்வீயாம் மாயாமயீம் தநும் ।
இந்த்ரம் விமோஹயாமாஸ ஸ்வயம் ஸ்தித்வா க்ருஹாந்தரே ॥

என்ற பாத்ம புராண வசனம் ப்ரமாணமாகும். இதனால் அஹல்யாதேவியினிடத்தில் யாதொரு விதமான பாதிவ்ரத்ய பங்கமே கிடையாது. பிறகு கௌதமர் தன் ஆச்ரமத்திற்குள் வந்தவுடன், இந்த்ரனும் பயந்து ஓடினான். ‘கௌதமரும் கோபத்தையடைந்து இந்த்ரனையும், அஹல்யையும் சபித்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறதே, அஹல்யை தோஷமில்லாதவளாக இருந்தால் அது எப்படி ஒத்துவரும்’ என்றும் சிலர்கள் சங்கிக்கக்கூடும். அதற்குப் பின்வருமாறு ஸமாதானத்தை அறிந்துகொள்ளவும்.

धूर्तं रजस्वलां नीचं स्पृष्ट्वा स्वच्छायया नरः ।
दुष्कृतं समवाप्नोति प्रायश्चित्तीयतेहिसः ॥

𑌧𑍂𑌰𑍍𑌤𑌂 𑌰𑌜𑌸𑍍𑌵𑌲𑌾𑌂 𑌨𑍀𑌚𑌂 𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑌾𑌯𑌯𑌾 𑌨𑌰𑌃 ।
𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌂 𑌸𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍀𑌯𑌤𑍇𑌹𑌿𑌸𑌃 ॥

தூர்தம் ரஜஸ்வலாம் நீசம் ஸ்ப்ருஷ்ட்வா ஸ்வச்சாயயா நர: ।
துஷ்க்ருதம் ஸமவாப்நோதி ப்ராயச்சித்தீயதேஹிஸ: ॥

என்ற ஸ்ம்ருதி வசனத்தால், காமாதுரன், சண்டாளன், ரஜஸ்வலை (மாதவிடாயானவள்) இவர்களை, தன் நிழலால் கூடத் தொடக்கூடாது. தொட்டால் அதனால் பாபம் ஏற்படுகிறது. அதற்கு அவன் ப்ராயச்சித்தம் செய்துகொள்ள கடமைப்பட்டவனாக ஆகிறான் என்று தீர்மானமாகிறது. இதையறிந்த கௌதமர், தன் தர்மபத்னியான நிஜ அஹல்யா தேவி இந்த்ரனைத் தொடாதபோனாலும், சாயா அஹல்யா மூலமாக இந்த்ரனுடைய ஸ்பர்சம் ஏற்பட்டதை அறிந்து, அதுவும் முற்றிலும் பிசகு என்று சொல்கிற மேற்கண்ட ஸ்ம்ருதி வசனத்தையும் ஆராய்ந்து பார்த்து, கௌதமருக்கு கோபம் ஏற்பட்டது. அதனால் தான் இந்த்ரனையும் சபித்தார். அஹல்யாதேவியையும் "உன் பாதிவ்ரத்யதேஜஸ்ஸால் அவனை எரித்துவிடாமல், சாயா அஹல்யையை ஸ்ருஷ்டித்து அவன் மூலமாகவே அவனுக்கு விருந்து முதலானதுகள் செய்தாயே, ஏன் உன்னை சபிக்கக்கூடாது" என்ற கோபத்தால் அவளை "நீ கல்லாகப் போகக் கடவது" என்று சபித்தார். கல்லாகத்தான் போகவேண்டும் என்று கௌதம மஹர்ஷி அஹல்யாதேவியை சபித்தார் என்பதற்கும்,

शापदग्धा पुरा भर्त्रा राम शक्रापराधतः ।
अहल्याख्या शिला जज्ञे शतलिङ्गः कृतःस्वराट् ॥

साततस्तस्य रामस्य पादस्पर्शान्महात्मनः ।
अभूत्सुरूपा वनिता समाक्रान्ता महाशिला ॥

𑌶𑌾𑌪𑌤𑌪𑍍𑌤𑌾 𑌪𑍁𑌰𑌾 𑌭𑌰𑍍𑌤𑍍𑌰𑌾 𑌰𑌾𑌮 𑌶𑌕𑍍𑌰𑌾𑌪𑌰𑌾𑌧𑌤𑌃 ।
𑌅𑌹𑌲𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾 𑌶𑌿𑌲𑌾 𑌜𑌜𑍍𑌞𑍇 𑌸𑌤𑌲𑌿𑌙𑍍𑌗𑌃 𑌕𑍃𑌤𑌃 𑌸𑍍𑌵𑌰𑌾𑌟𑍍 ॥
𑌸𑌾 𑌤𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌪𑌾𑌦𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾𑌨𑍍𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌅𑌭𑍂𑌤𑍍𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾 𑌵𑌨𑌿𑌤𑌾 𑌸𑌮𑌾𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾 𑌮𑌹𑌾𑌶𑌿𑌲𑌾 ॥

சாபதக்தா புரா பர்த்ரா ராம சக்ராபராதத, ।
அஹல்யாக்யா சிலாஜஞ்ஜே சதலிங்க: க்ருத: ஸ்வராட் ॥
ஸாததஸ்தஸ்ய ராமஸ்ய பாதஸ்பர்சாந்மஹாத்மந: ।
அபூத்ஸ்வரூபா வநிதா ஸமாக்ராந்தா மஹாசிலா ॥

என்ற பாத்ம புராணவசனங்களே ப்ரமாணமாகும்.

இவ்விதம் கௌதமரால் சபிக்கப்பட்ட அஹல்யா தேவிக்கு உண்மையில் மேற்சொன்ன ப்ரகாரம் பாதிவ்ரத்ய பங்கம் ஏற்படக் காரணமில்லாததினுல், ஸ்ரீராமனுடைய பாதஸ்பர்சமாத்ரத்தால் அஹல்யாதேவியானவள் சாபத்திலிருந்து விடுபட்டவளாக ஆகி, பாஷாணத் தன்மையையும் விட்டு, திவ்ய ஸ்த்ரீயாகவும் ஆனுள் என்றதினுல் வ்யபிசார தோஷத்திற்கு ஸுலபமான ப்ராயச்சித்தத்தைச் சொன்னதாக அக்கதையினுல் வெளியாகாது. ஸ்த்ரீகளுடைய பாதிவ்ரத்யத்திற்கு அளவிடமுடியாத மஹிமையிருக்கிறது என்பதுதான் வெளியாகும். தற்காலத்திலுள்ள ஸ்த்ரீகளுக்கு ஏதாவது வ்யபிசார ஸம்சயம் ஏற்பட்டால், அவர்களுக்கு ராமபாத ஸ்பர்சம் ஏற்படாவிட்டாலும், ராமனுக்கும் மதிக்கத் தகுந்த ராமபக்தர்களான பாகவதர்களுடைய பாதஸ்பர்சம் ஏற்பட ந்யாயம் இருப்பதினுல், வ்யபிசார தோஷத்திற்கு அதையே ப்ராயச்சித்தமாக செய்துவைத்து, அந்த ஸ்த்ரீகளை சுத்தமானவர்களாக ஒப்புக்கொள்ளலாமா என்ற சங்கைக்கு அவகாசமே யில்லாமல் ஆகிவிட்டது. அஹல்யாதேவியைப்போல் இக்காலத்திலுள்ள ஸ்த்ரீகளுக்கும், தனது பாதிவ்ரத்ய மஹிமையினுல் தனது நிழலையே தனது உருவமாக ஸ்ருஷ்டிக்கும் சக்தி இருந்து, அந்த நிழல் ரூபமான தனது உருவத்திற்கு அன்ய புருஷனுடைய ஸம்ஸர்க்கம் ஏற்பட்டுவிட்டது, அதற்கு

என்ன ப்ராயச்சித்தம் என்று கேட்டால், இந்த அஹல்யா தேவியின் உபாக்யானத்தை ஆதரித்துக்கொண்டு, அந்த இடத்தில் சொல்லியிருக்கிற ப்ராயச்சித்தத்தையே செய்து கொண்டால் போதுமானதுதான். அஹல்யாதேவி எங்கே, இக்காலத்திலுள்ள ஸ்த்ரீகள் எங்கே? எவ்வளவோ தூர மிருக்கிறது. அப்படியிருக்கும்போது அந்த ந்யாயத்தை ப்ராக்ருதமான ஸ்த்ரீகளிடத்தில் உபயோகப்படுத்த ந்யாய மில்லை.

தவிரவும், முன்காலத்திலுள்ள மஹிமைதங்கிய மஹர் ஷிகளிடமோ, பதிவ்ரதா சிரோமணிகளான ஸ்த்ரீரத்னங் களிடமோ, உள்ள ஸதாசாரத்தைத்தான் நாம் கவனித்து, அதுபோல் நாம் அனுஷ்டிக்கவேண்டுமே தவிர, அவர்க ளிடத்தில் துராசாரம் காணப்படுவதானுலும், அதை நாம் ஸ்வீகரித்து அனுஷ்டிக்கக்கூடாது. அக்னியில் பக்வமான அன்னத்தைப் போட்டாலும், கடினமான விறகைப்போட் டாலும் அக்னி அதை சாம்பலாகச் செய்துவிடுகிருன் என்றதற்காக நாம் கடினமான விறகைப் புஜிப்பதுண்டா? அக்னிக்கு விறகையும் ஜரிக்கத் தகுந்த சக்தியிருக்கிறது. நமக்கு அது ஏது? பக்வமான அன்னத்தை மட்டுந்தான் நாம் புஜிக்க அர்ஹர்களாக இருக்கிருேம். அதுபோல் முன் காலத்திலுள்ள மஹர்ஷிகளோ அவர்களுடைய தர்மபத்னி களான ஸ்ரீமாட்டிகளோ, தன்னிடம் ஏதாவது தர்மவ்ய திக்ரமம் (நடத்தையின் தவறுதல்) ஏற்பட்டாலும், அடுத்த நிமிஷத்தில், அதை சாம்பலாகச் செய்யக்கூடிய தபஸ் சக்தியோடு கூடியிருந்தார்கள். தற்காலத்திலுள்ள புருஷர் களோ, ஸ்த்ரீகளோ, தனது ஜாதி தர்மத்தையும், ஆச்ரம தர்மத்தையும் அடியோடு விட்டொழித்து, தனது இஷ்ட ப்ரகாரம் நடத்தையை அனுஷ்டித்துவருகிருர்கள். இவர் களுக்கு பாபத்தை எரிக்க சக்தி எங்கிருந்துவரும்? ஆகை யால் முன்னேர்களிடத்திலுள்ள ஸதாசாரத்தைத்தான் எல் லோரும் ஸ்வீகரித்து அனுஷ்டிக்கவேண்டுமே தவிர, துரா சாரத்தைக் கொஞ்சங்கூட ஸ்வீகரிக்கக் கூடாது. இதில்,

यान्यस्माकं सुचरितानि तानित्वयोपास्यानि नो इतराणि,
यान्यनवद्यानि कर्माणि तानि सेवितव्यानि नो इतराणि

யாநய்ஸ்மாகம் ஸுசரிதாநி தாநித்வயோபாஸ்யாநி நோ
இதராணி
யாநய்நவத்யாநி கர்மாணி தாநி ஸேவிதவ்யாநி நோ
இதராணி

யாங்யஸ்மாகம் ஸுசரிதாநி தாநித்வயோபாஸ்யாநி நோ இதராணி,
யாங்யநவத்யாநி கர்மாணி தாநி ஸேவிதவ்யாநி நோ இதராணி

என்றது முதலான வேதவாக்யங்களையே ப்ரமாணமாக அறியலாம்.

தவிர, இதிஹாஸ புராணங்களிலுள்ள கதைகளுக்கு அந்தக் கதையைச் சொல்வதில் தாத்பர்யமே இல்லை. அந்தக் கதையினுல் நாம் அடைகிற பயனும் ஒன்றுமில்லை. அதனுல் ஒரு பெரிய தத்வம் போதிக்கப்படுகிறது என்றே அறியவேண்டும். அதாவது ஒரு மஹர்ஷியினுடைய பத்னி வ்யபிசார தோஷத்தை யடைந்தும், தனது பர்த்தாவான மஹர்ஷியினுல் கல்லாகப் போகும்படி சபிக்கப்பட்டும், அந்த ஸ்த்ரீ இக்ஷ்வாகு மஹாராஜாவின் வம்சத்தில் திரு அவதாரம் செய்த ஸ்ரீ ராமனுடைய திருவடிகள் தன் சரீரத்தில் பட்டமாத்ரத்தினுல் சாபத்திலிருந்து விடுபட்டவளாக ஆகி, திவ்ய ஸ்த்ரீரத்னமாக ஆனுள் என்று சொல்லுகிற கதையினுல் ஸ்ரீராமபிரானுடைய பாதகமலங்களுக்குள்ள அளவற்ற மஹிமைதான் போதிக்கப்படுகிறது.

श्रवणं कीर्तनं विष्णोः स्मरणं पादसेवनं ।
अर्चनं वन्दनं दास्यं सख्यं आत्मनिवेदनं ॥

ஶ்ரவணம் கீர்த்தநம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவநம் ।
அர்ச்சநம் வந்தநம் தாஸ்யம் ஸக்யம் ஆத்மநிவேதநம் ॥

ச்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவநம் ।
அர்ச்சநம் வந்தநம் தாஸ்யம் ஸக்யம் ஆத்மநிவேதநம் ॥

என்று சொல்லப்பட்ட ஒன்பதுவிதமான பக்தியில் “பாத ஸேவனம்” என்ற பக்தியினுடைய பெருமைதான் மேற் சொன்ன கதையால் விளங்குமன்னியில், கதையில் அந்த ப்ரகரணத்திற்கு தாத்பர்யமே இல்லை. சாஸ்த்ரங்களில் இதுபோலுள்ள பாகங்களுக்கு “அர்த்தவாதம்” என்று சொல்லப்பட்டிருக்கிறது. அர்த்தவாதம் என்றால் ஒரு விஷயத்தை அந்த சாஸ்த்ரம் சொன்னாலும், அந்த விஷ யத்தைச் சொல்வதற்காக அந்த சாஸ்த்ரம் ஆரம்பிக்கப்பட வில்லை. அந்த விஷயத்தைச் சொல்கிற பாவனையாகச் சொல்ல ஆரம்பித்து, மனிதர்களுடைய மனதைக் கவரச் செய்து, அதுமூலம் மனிதர்களுக்கு இஹலோக பரலோகங்க ளில் ச்ரேயஸ்ஸுக்கு ஸாதனமான மார்க்கத்தை போதிக்கும் சாஸ்த்ரங்களைத்தான் அர்த்தவாத வாக்யங்களென்று சொல் லப்படும். அந்த அர்த்தவாத வாக்யங்களுக்கும் வேறு ப்ரமாணாந்தரங்களோடு விரோதம் இல்லாமலிருந்தால், தனது அர்த்தத்திலும் அதற்கு ப்ராமாண்யம் உண்டுதான். அதிலும் असञ्ज्ञातविरोधित्वे अर्थवादो यथाश्रुतः (𑌅𑌸𑌞𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌤𑍍𑌵𑍇 𑌅𑌰𑍍𑌥𑌵𑌾𑌦𑍋 𑌯𑌥𑌾𑌶𑍍𑌰𑍁𑌤𑌃) (அஸஞ்ஜாதவிரோதித்வே அர்தவாதோ யதாச்ருத:) என்ற வசனமே ப்ரமாணமாக ஆகும்.

கர்ம பலத்தை நித்யம் என்று சொல்கிற வேதவாக் யம் ஒன்றிருக்கிறது. அதுவோ,

तदक्षयं हास्यवै चातुर्मास्याजिनः सुकृतं भवति

𑌤𑌦𑌕𑍍𑌷𑌯𑌂 𑌹𑌾𑌸𑍍𑌯𑌵𑍈 𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌮𑌾𑌸𑍍𑌯𑌾𑌜𑌿𑌨𑌃 𑌸𑍁𑌕𑍃𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿

ததக்ஷயம் ஹாஸ்யவை சாதுர்மாஸ்யாஜிந: ஸுக்ருதம் பவதி

என்பதேதாகும். यत्कृतकं तदनित्यं (𑌯𑌤𑍍𑌕𑍃𑌤𑌕𑌂 𑌤𑌦𑌨𑌿𑌤𑍍𑌯𑌂) (யத்க்ருதகம் ததநித்யம்) என்று உண்டாகிற பொருள் எல் லாம் அநித்யமாகத்தானிருக்கும் என்ற ந்யாயத்திற்கு

விரோதமுள்ளதாக இருப்பதால், தனது அர்த்தத்தில் ப்ரா மாண்யத்தை அடையாமல், சாதுர்மாஸ்யம் செய்யவேண்டு மென்கிற விதிவாக்யத்தோடு சேர்ந்துகொண்டு சாதுர்மாஸ்ய யாகத்தை விசேஷமாக ஸ்தோத்ரம் பண்ணிவிட்டு, அத்து டன் தான் உபக்ஷயத்தை யடைந்து விடுகிறது. அந்த வாக் யத்தால் சாதுர்மாஸ்ய யாகத்தின் மஹிமைதான் விளங்குமே தவிர, கர்மபலம் நித்யமென்று விளங்காது. அதுபோலவே "वज्रहस्तः पुरन्दरः" (வஜ்ரஹஸ்தஃ புரந்தரஃ) (வஜ்ரஹஸ்த: புரந்தர:) என்று ஒரு அர்த்தவாத வாக்யம் உண்டு. அதனால் தேவேந்த்ரனுக்கு சரீரம் உண்டு என்ற அர்த்தம் வெளியா கிறது. ஆனால் அந்த வாக்யம் அதைச் சொல்லவந்ததல்ல. யாகத்தில் இந்த்ரனுக்கு ஹவிர்பாகத்தை வேதம் சொல் கிறதே, தேவர்களுக்கோ சரீரமில்லையே. அவர்கள் எவ்விதம் ஹவிர்பாகத்தை க்ரஹித்துக் கொள்வார்கள். ஆகையால் யாகம் செய்வதே தப்பான கார்யம் என்ற சங்கையை நிவர்த்திசெய்து, யாகம் செய்யவேண்டியது அவச்யம்தான் என்று நம்பிக்கையை உண்டுபண்ணுவதற்காகவே, இந்த்ர னுக்கு சரீரம் உண்டு என்று தீர்மானிக்க அந்த வாக்யம் ஏற் பட்டது. அதனால் யாகத்தின் மஹிமையும் வெளியாகிறது. தேவர்களுக்கு சரீரம் உண்டு என்று சொல்வதினால் வேறு ப்ரமாணங்களுக்கு விரோதம் இல்லாததினால், தனது அர்த்தத் திலேயும் ப்ராமண்யத்தை அடைகிறது.

ப்ரக்ருதத்தில் ஸ்ரீமத் ராமாயணத்திலுள்ள அஹல்யா உபாக்யானமோ அர்த்தவாதமென்பதில் யாதொரு ஆக்ஷே பணையுமில்லை. அது வித்வான்களுக்கு நன்றாக விளங்கும். ஆனால் ப்ரமாணாந்தரங்களுக்கு விருத்தமான வாக்யமா என் பதை மட்டும் விசாரிக்கவேண்டும். ஒரு ஸ்த்ரீ பரபுருஷ னிடம் போனாள் என்பதை ப்ரமாணாந்தரம் ஸம்மதிக்குமா?

श्रवणं कीर्तनं केलि प्रेक्षणं गुह्यभाषणं ।
संकल्पोध्यवसायश्च क्रियानिर्वृतिरेवच ॥

𑌶𑍍𑌰𑌵𑌣𑌂 𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌂 𑌕𑍇𑌲𑌿 𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌣𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌭𑌾𑌷𑌣𑌂 ।
𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑍋𑌧𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌶𑍍𑌚 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍇𑌵𑌚 ॥

ச்ரவணம் கீர்தநம் கேலி ப்ரேக்ஷணம் குஹ்யபாஷணம் ।
ஸங்கல்போத்யவஸாயச்ச க்ரியாநிர்வ்ருதிரேவச ॥

என்ற ப்ரமாணவசனத்தால், பரபுருஷனுடைய சப்தத்தையே ஒரு ஸ்த்ரீயானவள் காதினல் கேட்கக்கூடாது; அப்படி கேட்டாலே பாதிவ்ரத்யம் போய்விடுகிறது என்றிருக்கும் போது, இன்னொரு புருஷனிடம் ஸம்ஸர்க்கம் வைத்துக் கொண்டாலா ப்ரமாணாந்தரங்கள் ஸம்மதிக்கப்போகிறது. ஆகையால் ப்ரமாணாந்தர விருத்தமானதினல், அஹல்யோ பாக்யானம் அர்த்தவாதம்தான். அந்தக் கதையில் அதற்கு தாத்பர்யமே கிடையாது. ஸ்ரீராமபிரானுடைய இரு பாத கமலங்களுடைய மஹிமையைத் தான் வெளிக்காட்டுகிறதில் அதற்கு முக்ய தாத்பர்யம் என்பது ஸித்தமாகிறது.

தவிரவும், இந்தக் கதையினல் ஸ்த்ரீகளுக்குள்ள பாதிவ்ரத்யத்தின் மஹிமையும் சொல்லப்பட்டதாக ஆகும். முன் காலங்களில் இந்த பாரததேசத்தில், மஹர்ஷிகளுடைய தர்ம பத்னிகளான அனஸூயை முதலான பதிவ்ரதாசிரோமணிகள் தனது பாதிவ்ரத்ய மஹிமையால், தேவர்களாலுங்கூட செய்யக்கூடாத அரும் பெருங் கார்யங்களை, பார்க்கிறவர்களுக்கு பரம ஆச்சர்யம் உண்டாகும்படி செய்திருக்கிருர்கள். இந்த ராமாயணத்திலேயே,

असन्देशात्तु रामस्य तपसश्चानुपालनात् ।
नत्वांकुर्मि दशग्रीव भस्म भस्मार्हतेजसा ॥

𑌅𑌸𑌨𑍍𑌦𑍇𑌶𑌾𑌤𑍍𑌤𑍁 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌤𑌪𑌸𑌶𑍍𑌚𑌾𑌨𑍁𑌪𑌾𑌲𑌨𑌾𑌤𑍍 ।
𑌨𑌤𑍍𑌵𑌾𑌂𑌕𑍁𑌰𑍍𑌮𑌿 𑌦𑌶𑌗𑍍𑌰𑍀𑌵 𑌭𑌸𑍍𑌮 𑌭𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌹𑌤𑍇𑌜𑌸𑌾 ॥

அஸந்தேசாத்து ராமஸ்ய தபஸச்சாநுபாலநாத் ।
நத்வாம்குர்மி தசக்ரீவ பஸ்ம பஸ்மார்ஹதேஜஸா ॥

என்று ஸீதாதேவி ராவணனிடம் சொல்கிருள். அதாவது "உன்னை நான் என்னுடைய பாதிவ்ரத்ய தேஜஸ்ஸாலேயே

எரித்து சாம்பலாக ஆக்கிவிடுவேன். ஆகிலும் என்னுடைய கணவனுன ஸ்ரீராமபிரானுடைய ஆக்ஞையில்லாமல் நானுக ஒரு கார்யத்தை செய்வது உசிதமில்லை யென்று நினைக்கிறேன்” என்றபடி அதனுடைய அர்த்தம் ஆகும். ராவணனே மஹா தபோபலத்தோடு கூடினவனென்றும், இந்த்ரன் முதலான தேவர்களைக்கூடத் தனக்கு கீழாக அடக்கியாண்டுகொண்டு உலகத்தில் ரொம்பவும் ப்ரஸித்தியடைந்தவனுகவும் சிவபக்த சிகாமணிகளுக்குள் முதன்மையானவனுகவும், விளங்கி வந்த ஒரு பெரிய ராக்ஷஸராஜன் என்ற விஷயத்தை ஒவ்வொருவரும் அறியக்கூடும். இவ்விதம் மஹிமையுள்ள அந்த ராவணனைக்கூட ஸீதாதேவி பாதிவ்ரத்யத்தினுல் எரித்துவிடுவேன் என்று சொன்னதினுல், ஸ்த்ரீ ரத்னங்களுடைய பாதிவ்ரத்யம் எவ்வித மஹிமையுள்ளதென்பது வெளியாகும். பாதிவ்ரத்யத்தின் மஹிமையை வெளிக்காட்டும் சாஸ்தரங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அப்படியிருக்கும்பொழுது, பாதிவ்ரத்யம் மேலானதுதான் என்று நிரூபிக்க மற்றொரு சிறு உதாஹரணத்தையும் அறிந்துகொள்ளலாம். அதாவது,

सुतं पतन्तं प्रसमीक्ष्य पावके न बोधयामास पतिं पतिव्रता ।
तदाभवत् तत्पतिभक्तिगौरवात् हुताशनः चन्दनपङ्कशीतलः ॥

𑌸𑍁𑌤𑌂 𑌪𑌤𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌪𑌾𑌵𑌕𑍇 𑌨 𑌬𑍋𑌧𑌯𑌾𑌮𑌾𑌸 𑌪𑌤𑌿𑌂
𑌪𑌤𑌿𑌵𑍍𑌰𑌤𑌾 ।
𑌤𑌦𑌾𑌭𑌵𑌤𑍍 𑌤𑌤𑍍𑌪𑌤𑌿𑌭𑌕𑍍𑌤𑌿𑌗𑍌𑌰𑌵𑌾𑌤𑍍 𑌹𑍁𑌤𑌾𑌶𑌨𑌃 𑌚𑌨𑍍𑌦𑌨𑌪𑌙𑍍𑌕
𑌶𑍀𑌤𑌲𑌃 ॥

ஸுதம் பதந்தம் ப்ரஸமீக்ஷ்ய பாவகே ந போதயாமாஸ பதிம் பதிவ்ரதா ।
ததாபவத் தத்பதிபக்திகௌரவாத் ஹுதாசந: சந்தநபங்கசீதள: ॥

என்று ஒரு மஹா புருஷருடைய அனுபவ வாக்யமானது ப்ரஸித்தமாகக் காணப்படுகிறது. அதன் அர்த்தமோ:—தன் தர்மபத்னியினுடைய மடியிலேயே பர்த்தாவாகிய புருஷன் சயனித்து தூங்கிக்கொண்டிருந்தான். அந்த ஸமயத்தில்

அந்த பதிவ்ரதா ஸ்த்ரீக்குத் தனது பர்த்தாவினிடம் பிறந்த அருமையான இரண்டு வயதுள்ள சிசு ஒன்று அங்கு விளையாடிக்கொண்டிருக்கும்போது, யத்ருச்சையாக ஸமீபத்திலிருந்த அடுப்பிலுள்ள நெருப்பில் கையை வைத்துவிட்டது. ஆகிலும் அக்னிபகவான் அந்த குழந்தையின் கையை கொஞ்சமேனும் சுடவில்லை. அக்குழந்தைக்குத் தாயான பதிவ்ரதா சிரோமணியான ஸ்த்ரீயோ அயர்ந்து தூங்குகிற பர்த்தாவை எழுப்பக்கூடாதென்று நினைத்து குழந்தையைத் தடுக்காமல் பேசாமலிருந்துவிட்டாள். அந்த ஸ்த்ரீயினுடைய பதிபக்தியைப் பார்த்த அக்னிபகவான், நடுநடுங்கி, அந்தக் குழந்தைக்கு சந்தனக்குழம்பைத் தொட்டால்போல் ஜிலுஜிலுப்பையும், ஸந்தோஷத்தையும் கொடுத்துக்கொண்டு விளங்கி வந்தார். இதனால் நெருப்புக்கூட பதிவ்ரதா ஸ்த்ரீகளுக்கு பயப்படுகிறதென்று தெரிகிறதல்லவா? இது தான் மேற்கண்ட ச்லோகத்தின் பொருளாகும். ப்ரக்ருதமான அஹல்யோபாக்யானத்திலும் அஹல்யாதேவியானவள் தனது நிழலையே திவ்யஸ்த்ரீயாக ஸ்ருஷ்டிக்கும் சக்தியுள்ளவளானதால், அவளுடைய பாதிவ்ரத்யமும் பாராட்டத் தகுந்ததாகத்தான் ஆகிறது. சாயையை (நிழலை) ஸ்த்ரீயாகச் செய்யமுடியுமா, என்று சங்கிக்கக்கூடாது. பதிவ்ரதைகளுக்கு அதுவும் ஸாத்யம்தான்.

ஆக்னேய புராணத்தில் "த்வஷ்டா" என்ற ஒரு மஹானுபாவன் "ஸுவர்சலை" என்ற பெயருள்ள தனது கன்னிகையை ஸூர்ய பகவானுக்கு கல்யாணம் செய்துகொடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸூர்யன் உலகங்களையெல்லாம் தபிக்கச் செய்கிற கிரணங்களோடு கூடினவனானதால், "த்வஷ்டா"வினுடைய பெண்ணான "ஸுவர்சலை"க்கு அந்த ஸூர்யனுடைய அருகில் சென்று, தனது பர்த்தாவான அந்த ஸூர்யனை ஆலிங்கனம் முதலானதுகள் செய்து கொண்டு ஸுகத்தை யடையமுடியாமல் கஷ்டப்பட்டாள். அருகில் போனால் தாபம் ஸஹிக்கமுடியாமலே இருந்தது.

இவ்விதம் அநேக நாள் கஷ்டப்பட்டு, தன்னால் ஸஹிக்க முடியாமல், தனது பிதாவான த்வஷ்டாவின் ஸமீபம் போய்ச் சேர்ந்து, தனது ஆத்மஸ்வரூபத்தையே விசாரித்துக்கொண்டு தனது ஆயுளைக் கழிப்போம் என்று தீர்மானித்தாள். ஆகிலும் தன் பர்த்தாவான ஸூர்யனிடத்தில் உத்திரவு கேட்டால் கொடுக்கவும்மாட்டார், பர்த்தாவினிடம் சொல்லிக் கொள்ளாமலும் போகக்கூடாது நாம் என்ன செய்வது, என்று நினைத்து, பிறகு தன் பாதிவ்ரத்யத்தால் தனது நிழலையே தன்னைப்போல் ஒரு ஸ்த்ரீயாக ஸ்ருஷ்டித்து வைத்துவிட்டு, தன் பித்ருக்ருஹத்திற்கு வந்துவிட்டாள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதையே அனுஸரித்து, அஹல்யாதேவியும் தன் நிழலையே ஸ்த்ரீயாக ஸ்ருஷ்டித்தாள் என்பதற்கும் ப்ரமாணமாக எடுத்துக்கொள்ளலாம். பாதிவ்ரத்யத்தால் எதைத்தான் ஸாதிக்கமுடியாது. அஹல்யா தேவியைப்போல் நமது ஸநாதனதர்மிகளுடைய ஸ்த்ரீகளெல்லாம் பதிவ்ரதா ஸ்த்ரீகளாகவே இருக்கவேண்டும் என்றும், ஸ்ரீராமபிரானுடைய பாதஸேவனம்போல் மோக்ஷஸாதனம் வேறொன்றுமில்லையென்றும், உள்ள தத்வமானது மேற்சொன்ன அஹல்யோபாக்யானம் என்ற அர்த்தவாத கதையால் வெளியாகுமே தவிர, அஹல்யா தேவிக்கு வ்யபிசாரதோஷம் உண்டென்றோ, வ்யபிசார ஸ்த்ரீகளுக்கு பகவானுடைய பாதஸ்பர்சம் ஏற்பட்டுவிட்டால் சுத்தி ஏற்பட்டுவிடுமென்றோ, தற்காலத்திலுள்ள ஸ்த்ரீகளுக்கு ஸ்வேச்சாசாரத்தில் தைர்யம் ஏற்படலாம் என்பது வெளியாகாது என்பது திண்ணம்.

அஹல்யை, சாயா அஹல்யை, உண்மையான அஹல்யை என்று இரண்டு வகைப்படும். சாயா அஹல்யை கல்பிதமானதினால் அந்த சாயா அஹல்யைக்கு இந்த்ரனோடு ஏற்பட்ட ஸம்பந்தமும் கல்பிதம்தான். அதன் நிமித்தமாக உண்மையான அஹல்யைக்கு தோஷலேசம் உண்டா? அப்படி இருக்கும்போது காரணமன்னியில் கோபத்தால் கௌதமர், பிம்பமும், ப்ரதிபிம்பமும் ஒன்றுதான் என்ற

ந்யாயத்தை வைத்துக்கொண்டு, சாயைக்கு ஏற்படுகிற அசுத்தி பிம்பபுருஷனுக்கும் வரும் என்று சொல்லும் ஸ்ம்ருதியையும் ப்ரமாணமாக வைத்துக்கொண்டு, வீணுக அஹல்யையைக் 'கல்லாகப் போகக்கடவது' என்று சபித்தார். அதை ஸர்வேச்வரனுன பகவான் ஸ்ரீராமன் தன் பாதாரவிந்தஸ்பர்சத்தால் விமோசனஞ் செய்து வைத்தார். இதனுல் ஆரோபிதமான தோஷத்திற்குத்தான் ப்ராயச்சித்தம் உண்டென்று வெளியாகுமே தவிர, உண்மையான தோஷத்திற்கு ப்ராயச்சித்தமே கிடையாது. அக்னிதாஹம்தான் அதற்கு ப்ராயச்சித்தமாகும். தவிர, நிழலுக்கு ஏற்படுகிற அசுத்தி, புருஷனுக்குக்கூட உண்டு என்று சொல்கிற ஸ்ம்ருதிக்கும் தனது அர்த்தத்தில் அதற்கு தாத்பர்யமில்லை. அப்படியானுல் உலகத்தில் ஸாத்யப்படுமா? அது அனுபவத்திற்கும் விரோதமுள்ளதல்லவா? ஆனுல் அதனுடைய உண்மையான அர்த்தமோ, அசுத்தமான மனிதர்களுடைய சரீரம் நமது நிழலில்கூட ஸம்பந்தப்படக்கூடாது. அவர்களுடைய நிழலிலும் நமது சரீரமும் ஸம்பந்திக்கக்கூடாது, என்று சொல்லி, ஆசாரம் என்ற முக்யமான தர்மத்தை மனிதர்கள் ஒரு நாளும் கைவிடக் கூடாது என்று சாஸனம் செய்வதில்தான் அதன் தாத்பர்யமாகும். ஆகையால் தர்மதத்வத்தை விளக்கிக்காட்ட ஏற்பட்ட ஸ்ரீமத் ராமாயணத்தில் அஹல்யாதேவியின் உபாக்யானத்தினுல் ஸ்த்ரீகளுடைய பாதிவ்ரத்யத்தின் மஹிமையும், பகவானுடைய பாதஸேவனம் என்ற முக்ய பக்தியின் பரகாஷ்டையும் (மேலான பதவியும்) வெளியாகிறபடியால், பரமதர்ம தத்வம் ஸ்ரீமத் ராமாயணத்தில் அடங்கியிருக்கிறது என்பதில் யாதொரு ஆக்ஷேபணையுமில்லை.

அப்படியே அஹல்யாதேவியை வ்யபிசாரதோஷமுள்ளவளாக வைத்துக்கொண்டாலும் பரம்பொருளான ஸ்ரீராமனுடைய பாதஸ்பர்சம் அவளிடம் ஏற்படுவதற்கு முக்ய காரணம் என்னவாக இருக்கவேண்டுமென்று கொஞ்சம் ஆலோசிக்கவேண்டாமா? பெரிய ராஜயோகிகள்கூட

இன்னும் எந்த பரம்பொருளை, ப்ரத்யக்ஷமாகப் பார்க்க வேண்டுமென்ற எண்ணத்துடன் கடோரமான தபஸ்ஸை இன்னும் செய்துகொண்டே வருகிறார்களோ, பகவானையும் இன்னும் பார்க்கவில்லையோ, அப்பேர்ப்பட்ட பரம்பொருளல்லவா ஸ்ரீராகவன். அந்த மஹானுபாவனுடைய பாதஸ்பர்சம் ஏற்படுவது ஸுலபமா? அஹல்யா தேவிக்கோ ஸுலபமாக ஏற்பட்டிருக்கிறதே? அவளிடத்தில் கடோரமான வ்யபிசார தோஷத்தை ஒப்புக்கொண்டால், மஹா தபஸ்விகளுக்குக்கூட அதிதுர்லபமான இந்த பகவத்பாதஸ்பர்சம் என்ற மஹாபாக்யம் எப்படி ஏற்பட்டது? என்றதை விசாரித்தால், அந்த வ்யபிசார தோஷத்தையும் சாம்பலாக்கக்கூடிய ஒரு அபூர்வமான புண்ய விசேஷத்தின் மஹிமையும் அவளிடத்தி லிருந்திருக்கத்தான் வேண்டும் என்று எல்லா வாதிகளும் ஒப்புக்கொள்ளத் தகுந்ததல்லவா? ஸ்த்ரீகளுக்குள்ள மஹா புண்ய மஹிமை என்பது பாதிவ்ரத்யத்தைத் தவிர வேறு என்ன? பாதிவ்ரத்யமன்னியில் அநேக முக்ய தபஸ்களைச் செய்ய ஆரம்பித்தால், ஸ்த்ரீ ஜன்மாவுக்கு அதுகளெல்லாம் புண்யமாகுமா? ஆகையால் அஹல்யாதேவி மஹாபதிவ்ரதா சிரோமணிதான். ஆகிலும் ஏதோ தவறுதலால்,

महतामपि सूक्ष्मापराधदर्शनात्

𑌮𑌹𑌤𑌾𑌮𑌪𑌿 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌪𑌰𑌾𑌧𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍

மஹதாமபி ஸூக்ஷ்மாபராதத்ர்சநாத்

என்ற பகவத்பாதாளுடைய பாஷ்யவசனத்தால், அவளுக்கும் தோஷம் ஏற்பட்டுவிட்டது என்றுதான் ஒப்புக்கொள்ள வேண்டும். அவ்விதமான கதையினாலும் அஹல்யையினுடைய பாதிவ்ரத்யம்தான் வெளியாகிறது. இவ்விதம் திரும்பித் திரும்பிப் பார்த்தாலும், அஹல்யோபாக்யானத்தால் ஸர்வதர்மங்களுக்கும் மூலபூதமான நமது நாட்டு ஸனாதன தர்மபத்னிகளுடைய பாதிவ்ரத்ய தர்ம ரஹஸ்யந்தான்

வெளியாக்கப்பட்டதாகு மன்னியில், உபாக்யானத்தில் தோஷலேசத்திற்கே இடமில்லே. ஆகையால், ஸ்ரீமத் ராமாயணம் என்ற நூலானது தர்மதத்வ ரத்னுகரம் என்றுதான் சொல்லவேண்டியது. மோக்ஷத்தில் இச்சையுள்ளவர்களால் முக்யமாக ஆச்ரயிக்கத் தகுந்தது என்பது திண்ணம்.

50—77 ஸர்க்கங்கள் :

முன்சொன்னபடி அஹல்யாதேவியை, ஸ்ரீராமன் சாபத்திலிருந்தும் விமோசனம் செய்தார் என்ற காரணத்தால் ராமனிடத்திலுள்ள பரமபாவனத்வம் என்ற கல்யாண குணத்தை விச்வாமித்ர மஹர்ஷியானவர் லோகத்தில் ப்ரசுரம் செய்துவிட்டு, ராமனேடும் லக்ஷ்மணனேடும் மிதிலா நகரம் சென்ருர். மிதிலா நகரம் சென்றவுடன் ஜனக மஹாராஜனுடைய யக்ஞத்திற்காக நகரத்தில் அலங்கரிக்கப்பட்டிருக்கும் விசேஷமான விதானங்களேயும், மஹர்ஷிகள் கூட்டங் கூட்டமாக ராஜமார்க்கத்தில் சென்றுவரும் வைபவத்தையும் பார்த்து பரமாச்சர்யத்தை அடைந்து ராமன் விச்வாமித்ர மஹர்ஷியைப் பார்த்து "மஹர்ஷே! இந்த நகரத்திற்கு அதிபதியான ஜனகராஜனுடைய யக்ஞ வைபவமானது ரொம்பவும் மேலானதாக விளங்கிவருகிறது. அநேக தேசங்களிலிருந்தும் மஹாவித்வான்களான ப்ராம்மணேத்தமர்கள் இந்த யக்ஞத்தை உத்தேசித்து வந்திருப்பதாகத் தெரிகிறது. வெகுதூரம் ரிஷிகளின் கூட்டங்கள் காணப்படுகின்றன. இந்த யக்ஞத்தை தர்சனம் செய்ய வேண்டியது மிகவும் அவச்யமானது. நாம் வஸிப்பதற்கு ஒரு ஸ்தலம் வேண்டாமா? எங்கு வஸிப்பது?" என்று கேட்டார்.

மஹர்ஷியும் நகரத்திற்குக் கொஞ்ச தூரத்திலுள்ள நிர்ஜனமான ப்ரதேசத்தில் ஜலம் முதலிய ஸகலவிதமான ஸௌக்யத்தையும் கண்டு அந்த ஸ்தலத்தை ராமனுக்கு வாஸஸ்தானமாகக் கல்பித்தார். இந்த அவஸரத்தில் ஜனக மஹாராஜாவும் விச்வாமித்ர மஹர்ஷியானவர் இரண்டு ராஜகுமாரர்களோடு யக்ஞத்தை தர்சனம் செய்வதற்காக

வந்திருக்கும் வ்ருத்தாந்தத்தை அறிந்து சதானந்தர் என்ற தன்னுடைய புரோஹிதரை முன்னிட்டுக்கொண்டு, மிகவும் வணக்கத்துடன் எதிர்கொண்டு வரவேற்று, அர்க்யபாத ஆசமநீயாதிகளால் பூஜித்தார். யக்ஞசாலையிலுள்ள ருத்விக்குக்களான மஹர்ஷிகளும் அர்க்யபாத்ர ஸஹிதர்களாக கூட்டங் கூட்டமாக ஓடிவந்து விச்வாமித்ர மஹர்ஷியை பூஜித்தார்கள். விச்வாமித்ர மஹர்ஷியும் ஜனக மஹா ராஜாவினுடைய பூஜையையும் ருத்விக்குகளான ப்ராம் மணோத்தமர்களுடைய பூஜையையும் க்ரஹித்துக்கொண்டு ஜனக மஹாராஜாவினிடம், ராஜ்யத்திலும், ப்ரஜைகளிடத்திலும், ரத, கஜ, துரக, பதாதி ஸேனைகளிடமும், ராஜனுடைய சரீரத்திலும், மந்திரி வர்க்கங்களிலும், குசலப்ரச்னம் செய்தார்.

ஜனக மஹாராஜாவும் "தங்களுடைய ப்ரஸாத விசேஷத்தால் எல்லாவற்றிலும் க்ஷேமம்தான்" என்று பதில் சொல்லிவிட்டு விச்வாமித்ரர் முதலான மஹர்ஷிகளையும் ஆதரவுடன் அழைத்துக்கொண்டு யக்ஞசாலைக்கு வந்து சேர்ந்தார். விச்வாமித்ர மஹர்ஷிக்கு நவரத்னகசிதமான ஸுவர்ண ஸிம்ஹாஸனத்தை அளித்து அதில் உட்காரும்படி ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார். மஹர்ஷியும் ராஜனுடைய ப்ரார்த்தனைக்கிணங்கி ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்தார். மற்ற மஹர்ஷிகளும் அவரவர்களுக்கு உசிதமான ஆஸனத்தில் அமர்ந்திருந்தார்கள். ராமலக்ஷ்மணர்களும் விச்வாமித்ரரின் பார்ச்வத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். ஜனக மஹாராஜனும் மிகவும் விநயத்துடன் நின்றுகொண்டு அஞ்ஜலிபந்தத்துடன் விச்வாமித்ர மஹர்ஷியைப் பார்த்து "மஹர்ஷே! நான் செய்யும் யக்ஞமானது தங்களுடைய ஆகமனத்தால் ஸபலமாக ஆகிவிட்டது. புண்ய கர்மாவின் நடுவில் தங்களைப்போலொத்த மஹான்களுடைய தர்சனம் கிடைப்பது மிகவும் துர்லபமானது. என்னுடைய யக்ஞசாலைக்கு தாங்கள் வந்த மாத்ரத்தில்

நான் தன்யனாகிவிட்டேன். இந்த யக்ஞம் முடிவதற்கு இன்னமும் பன்னிரண்டு தினங்கள் இருக்கின்றன. நான் செய்யும் இந்த யக்ஞத்திற்கு த்வாதசராத்ரம் என்றும் பெயர் ஏற்பட்டது. இந்த ஸந்தர்ப்பத்தில் தங்களுடைய தர்சனத்தால் ஏற்பட்ட என் புண்யத்தால் தேவர்கள் ப்ரத்யக்ஷமாகவே வந்து ஹவிர்பாகத்தை வாங்கிக்கொண்டு எனக்கு அனுக்ரஹம் செய்யப்போகிறார்கள். அதைத் தாங்களும் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கலாம்'' என்று சொல்லிவிட்டு மஹர்ஷியினுடைய பார்ச்வத்தில் நின்றுவரும் ராஜகுமாரர்களை தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலுடன் ஜனகராஜன் விச்வாமித்ர மஹர்ஷியினிடம் ப்ரச்னம் செய்கிறார் :—

इमौ कुमारौ भद्रं ते देवतुल्यपराक्रमौ ।
गजसिह्मगती वीरौ शार्दूलवृषभोपमौ ॥

पद्मपत्रविशालाक्षौ खड्गतूणीधनुर्धरौ ।
अश्विनाविव रूपेण समुपस्थितयौवनौ ॥

यदृच्छयैव गां प्राप्तौ देवलोकादिवामरौ ।
कथं पद्भ्यामिह प्राप्तौकिमर्थं कस्य वा मुने ॥

वरायुधधरौ वीरौ कस्यपुत्रौ महामुने ।
भूषयन्ताविमं देशं चन्द्रसूर्याविवांबरम् ॥

परस्परस्य सदृशौ प्रमाणेङ्गित चेष्टितैः ।
काकपक्षधरौ वीरौ श्रोतुमिच्छामि तत्वतः ॥

𑌇𑌮𑍌 𑌕𑍁𑌮𑌾𑌰𑍌 𑌭𑌦𑍍𑌰𑌂 𑌤𑍇 𑌦𑍇𑌵𑌤𑍁𑌲𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑍌 ।
𑌗𑌜𑌸𑌿𑌂𑌹 𑌗𑌤𑍀𑌵𑍀𑌰𑍌 𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲 𑌵𑍃𑌷𑌭𑍋𑌪𑌮𑍌 ॥

𑌪𑌦𑍍𑌮𑌪𑌤𑍍𑌰 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍌 𑌖𑌡𑍍𑌗𑌤𑍂𑌣𑍀 𑌧𑌨𑍁𑌰𑍍𑌧𑌰𑍌 ।
𑌅𑌶𑍍𑌵𑌿𑌨𑌾𑌵𑌿𑌵 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌸𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤 𑌯𑍌𑌵𑌨𑍌 ॥

𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌯𑍈𑌵 𑌗𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌦𑍇𑌵𑌲𑍋𑌕𑌾𑌦𑌿𑌵𑌾𑌮𑌰𑍌 ।
𑌕𑌥𑌂 𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌮𑌿𑌹𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌕𑌸𑍍𑌯𑌵𑌾𑌮𑍁𑌨𑍇 ॥

𑌵𑌰𑌾𑌯𑍁𑌧𑌧𑌰𑍌 𑌵𑍀𑌰𑍌 𑌕𑌸𑍍𑌯𑌪𑍁𑌤𑍍𑌰𑍌 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑍇 ।
𑌭𑍂𑌷𑌯𑌨𑍍𑌤𑌾𑌵𑌿𑌮𑌂 𑌦𑍇𑌶𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍂𑌰𑍍𑌯𑌾 𑌵𑌿𑌵𑌾𑌮𑍍𑌬𑌰𑌮𑍍 ॥

𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌸𑍍𑌯 𑌸𑌦𑍃𑌶𑍌 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍇𑌙𑍍𑌗𑌿𑌤𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑍈𑌃 ।
𑌕𑌾𑌕𑌪𑌕𑍍𑌷𑌧𑌰𑍌 𑌵𑍀𑌰𑍌 𑌶𑍍𑌰𑍋𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 ॥

இமௌ குமாரௌ பத்ரம் தே தேவதுல்யபராக்ரமௌ ।
கஜஸிம்ஹ கதீவீரௌ சார்தூல வ்ருஷபோபமௌ ॥

பத்மபத்ரவிசாலாக்ஷௌ கட்கதூணீ தநுர்தரௌ ।
அச்விநாவிவ ரூபேண ஸமுபஸ்தித யௌவநௌ ॥

யத்ருச்சயைவ காம் ப்ராப்தௌ தேவலோகாதிவாமரௌ ।
கதம் பத்ப்யாமிஹப்ராப்தௌ கிமர்தம் கஸ்யவாமுநே ॥

வராயுததரௌ வீரௌ கஸ்யபுத்ரௌ மஹாமுநே ।
பூஷயந்தாவிமம் தேசம் சந்த்ரஸூர்யா விவாம்பரம் ॥

பரஸ்பரஸ்ய ஸத்ருசௌ ப்ரமாணேங்கித சேஷ்டிதை: ।
காகபக்ஷதரௌ வீரௌ ச்ரோதுமிச்சாமி தத்வத: ॥

மேற்கண்ட ச்லோகங்களுக்கு முன்பு தாத்பர்யம் எழுதப் பட்டதானாலும் ஜனக மஹாராஜாவினுடைய அபிப்ராயத்தை அனுஸரித்து தாத்பர்யமானது வர்ணிக்கப்படும். மேற்கண்ட ச்லோகங்களில் ராமன், லக்ஷ்மணன் இருவர்களையும் சொல்லக்கூடிய த்விவசனமான பதங்கள் காணப்பட்டாலும், ऋतं पिबन्तौ सुकृतस्य लोके (𑌋𑌤𑌂 𑌪𑌿𑌬𑌨𑍍𑌤𑍌 𑌸𑍁𑌕𑍃𑌤𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑍇) (ருதம் பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே) என்ற ச்ருதியில் உள்ள த்விவசனம் என்பதை அறிந்து கொள்ளவும்.

एको देवः एको विष्णुः एकमेवाद्वितीयं ब्रह्म

𑌏𑌕𑍋 𑌦𑍇𑌵𑌃 𑌏𑌕𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌏𑌕𑌮𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮

ஏகோதேவ: ஏகோவிஷ்ணு: ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம

என்ற ச்ருதிகளால் மஹாவிஷ்ணு என்ற பரதத்வம் ஒன்றானதினாலும், न तत्समश्चाभ्यधिकश्च विद्यते (𑌨 𑌤𑌤𑍍𑌸𑌮𑌶𑍍𑌚𑌾𑌭𑍍𑌯𑌧𑌿𑌕𑌶𑍍𑌚

விதயதே) (ந தத்ஸமச்சாப்யதிகச்ச வித்யதே) என்ற ச்ருதியினால், விஷ்ணுவிற்கு ஸமானமான தத்வமோ, மேலான தத்வமோ, இல்லை என்று சொல்லப்பட்டிருப்பதினாலும் ஒரே விஷ்ணுவை ராமன் லக்ஷ்மணன் என்று இரண்டு ரூபங்களாகப் பிரிக்க ந்யாயமில்லாததினாலும், மஹாவிஷ்ணுவே பரிபூர்ணமான ராமாவதாரம் என்றும், ஆதிசேஷன் லக்ஷ்மணஸ்வாமி என்றும் தெரிகிறபடியாலும், ஜனக ராஜனுடைய ப்ரச்ன ச்லோகத்திற்கு ராமனாகிய தாரகப்ரம்மம் ஒன்றையே விஷயமாக அவலம்பிக்க வேண்டுமே தவிர, இரண்டு தத்வத்தை விஷயமாக அவலம்பிக்கக் கூடாது. छत्रिणो गच्छन्ति (ஃத்ரிணோ மஃந்தி) (சத்ரிணோ கச்சந்தி) என்ற ந்யாயத்தில், குடையை தரித்துப்போகிறவன் ஒருவனானாலும் அவனுடன் குடையில்லாமலே போகிற மற்றவர்களையும் அவனுடன் சேர்த்து குடையுள்ளவர்கள் போகிறார்கள் என்ற தாத்பர்யத்தை விளக்கக்கூடிய छत्रिणः (ஃத்ரிணஃ) (சத்ரிண:) என்ற பஹுவசனம் ஏற்பட்டதுபோலவும், ऋतं पिबन्तौ (ஊதம் விபஷள) (ருதம் பிபந்தௌ) என்ற ச்ருதியில் கர்மபலத்தை புஜிக்கின்ற ஜீவனுடைய ஸந்நிதியில் இருக்கும் ஈச்வரன் தான் அபோக்தாவானாலும் புஜிக்கிற ஜீவனுடைய ஸம்பந்தத்தைக்கொண்டு ஈச்வரனிடத்திலும் ஔபசாரிகமாக போக்த்ருத்வத்தைக் கல்பித்துக்கொண்டு த்வி வசனத்திற்கு உபபத்தி சொல்வதுபோலவும், ஜனக ராஜனுடைய வாக்யத்திற்கு உள்ள ப்ரசம்ஸைக்கு ராமன் என்ற மஹாவிஷ்ணுவே பாத்ரமானாலும், விஷ்ணுவினுடைய பரம ஸாரூப்யத்தை அடைந்த லக்ஷ்மண ஸ்வாமியினிடமும் ராஜனுடைய ப்ரசம்ஸையை ஔபசாரிகமாக வைத்துக்கொண்டு த்விவசனத்திற்கு உபபத்தி சொல்லவேண்டும். அதாவது, ராஜன் முக்யமாக ராமனுடைய தத்வத்தை எடுத்து ப்ரகாசப்படுத்தி "மஹர்ஷே! நான் அறிந்தபடிதானா, அல்லது வேறு ஏதாவது விசேஷமுண்டா" என்றுதான் ப்ரச்னம் செய்தார்: அது ராமனுடைய ஸந்நிதியிலுள்ள லக்ஷ்மண

ஸ்வாமியினிடமும் ஔபசாரிகமாக அந்வயிக்கும். இல்லாவிடில் தத்வத்திற்கு பேதமேற்பட்டுவிடும். தத்வம் பின்னமானல் சாஸ்த்ரத்திற்கு ப்ராமண்யம் போய்விடும் என்ற ப்ரகாரத்தை அனுஸரித்து மேற்கண்ட ச்லோகங்களுக்கு வ்யங்க்ய மர்யாதையை அவலம்பித்துக்கொண்டு அர்த்தமானது சொல்லப்படும். அதாவது :—

" மஹர்ஷே ! எனக்கு எதிரில் புலப்படும் தங்களுடைய சிஷ்யஞன இந்த ராமன் மூட ஜனங்களுக்கும் குமாரனுகவே தோன்றுகிருன், விவேகிகளுக்கும் குமாரனுகவே தோன்றுகிருன். அவிவேகிகளுக்கோ குழந்தை என்று சொல்லக்கூடியவனுகத் தோன்றுகிருன், விவேகிகளுடைய விஷயத்திலோ,

कुत्सितः हुंकारेण धिक्कृतः भस्मीकृतः मारः मन्मथः येन सः

𑌕𑍁𑌤𑍍𑌸𑌿𑌤𑌃 𑌹𑍁𑌂𑌕𑌾𑌰𑍇𑌣 𑌧𑌿𑌕𑍍𑌕𑍃𑌤𑌃 𑌭𑌸𑍍𑌮𑍀𑌕𑍃𑌤𑌃 𑌮𑌾𑌰𑌃 𑌮𑌨𑍍𑌮𑌥𑌃 𑌯𑍇𑌨 𑌸𑌃

குத்ஸித: ஹூங்காரேண திக்ருத: பஸ்மீக்ருத: மார: மன்மத: யேந ஸ:

என்ற ஸமாஸத்தால் காமனை நெற்றிக்கண்ணுல் எரித்த பரமேச்வரனே என்று தோன்றுகிருன். தாங்கள் காயத்ரீ மந்த்ரத்தை ஸித்தி செய்தவர்களானதினுல் அந்த மந்த்ரத்தில் 𑌭𑌰𑍍𑌗𑌃 (ஹமஃ) (பர்க:) என்ற சப்தத்தால் ப்ரகாசப்படுத்தப்பட்ட த்ரிநேத்ரனுன பரமேச்வரனே இவ்விதமான திவ்யமங்கள விக்ரஹத்துடன் தங்களுக்கு ஸுலபனுக விளங்கி வருகிருனே என்று நான் நினைக்கிறேன். நான் நினைத்தது தப்போ, ஸரியோ, தாங்கள் கோபத்தை அடையக்கூடாது. அதனுடைய விசேஷத்தை எனக்கு உபதேசித்து என்னை க்ருதார்த்தனுகச் செய்யவேண்டும்.

தவிரவும், இந்த ராமனுடைய பராக்ரமத்தை கவனித்தால் தேவர்களுக்கு ஸமானமான பராக்ரமத்தோடு கூடினதாகத் தோன்றுகிறது. தேவர்களுடைய பராக்ரமமோ, செய்கைகளாலல்ல ; ஸங்கல்பமாத்ரத்தால்தான், इच्छामात्र

प्रभोस्सृष्टिः (ப்ரபோஸ்ஸ்ருஷ்டி:) (இச்சாமாத்ரம் ப்ரபோ ஸ்ருஷ்டி:) என்ற ந்யாயத்தை அனுஸரித்து தான் நினைத்த மாத்ரத்தில் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கவோ, பரிபாலிக்கவோ, ஸம்ஹரிக்கவோ, சக்தியுள்ளவர்களே தேவர்கள். அதற்கு ஸமானமான பராக்ரமத்துடன் இந்த எதிரில் உள்ள ராமன் கூடிக்கொண்டிருக்கும் காரணத்தால், நான் ஸீதைக்கு வீர்யசுல்கமாக (பந்தயமாக) கல்பித்திருக்கும் சிவனுடைய வில்லை ஸங்கல்ப மாத்ரத்தில் முறித்துவிடுவதென்ற தைர்யமும், கையில் வில்லைப் பிடித்து நின்றுகொண்டிருக்கும் நிலையைப் பார்க்கும்பொழுதே, எனக்கு ஏற்படுகிறது. ஆனால் குமாரன் என்ற சப்தத்திற்கு மன்மதனை எரித்தவன் என்று முன்சொன்ன தாத்பர்யத்தைக் கவனித்தால், ஸீதை என்ற என் பெண்ணை விவாஹம் செய்துகொள்ள இச்சிக்கமாட்டானோ என்றும் தோன்றுகிறது. காமபரதந்த்ரனல்லவா ஒரு பெண்ணை விரும்புவான். அப்படி காமபரதந்த்ரர்களான அநேக ராஜாக்கள் வந்து வில்லை முறிக்க சக்தியற்றவர்களாக திரும்பிச் சென்றுவிட்டார்கள். இந்த மஹாபுருஷனைப் பார்க்கும்பொழுது வில்லை முறிக்க சக்தியுள்ளவன்போல் தோன்றுகிறது. ஆனால் காமபரதந்த்ரனல்ல. காமபரதந்த்ரனே பராக்ரமசாலியாக ஆகமாட்டான். பராக்ரமசாலியோ காமபரதந்த்ரனாக ஆகமாட்டான். எனக்குத் தேவையான அதிதியோ, வில்லை முறிக்கக்கூடிய பராக்ரமசாலியாயும், காமபரதந்த்ரனாயும் இருக்கவேண்டும். அப்படி யிருந்தாலல்லவா என் பெண் என்ற அபிமானத்துடன் வளர்க்கப்பட்ட ஸீதையை பரிணயம் செய்துகொடுத்து, நான் தன்யனாக ஆகமுடியும். மஹர்ஷே! நான் என்ன செய்வேன். தங்களுடைய சிஷ்யனைப் பார்த்தாலோ, நான் ப்ரதிக்ஞை செய்திருக்கும் வில்லை ஸங்கல்பமாத்ரத்தில் முறிந்துபோகும்படி செய்யக்கூடிய பராக்ரமத்தோடுகூடினவனாக தோன்றுகிறான். ஆனால் குமாரன் மன்மதனை எரித்தவன். என் ப்ரதிக்ஞை எப்படித்தான் நிறைவேறும். தங்கள் மூலமாகத்

தான் எனக்கு க்ஷேமம் ஏற்படவேண்டும்" என்பதை மேற்சொன்ன ஐந்து ச்லோகங்களில் முதல் ச்லோகத்தின் பூர்வார்த்தத்தால் தெரிவித்துக்கொண்டார். गजसिंह गतीवीरौ (கஜஸிம்ஹ கதீவீரௌ) (கஜஸிம்ஹ கதீவீரௌ); ப்ராக்ருதத்தில் ஸிம்ஹ சப்தத்தை ச்ரேஷ்டவாசியாக உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும். गजसिंह (கஜஸிம்ஹம்) (கஜஸிம்ஹம் என்றால் கஜச்ரேஷ்டன் கஜேந்திரன் என்று ஏற்படுகிறது. गम्यत इति गतिः (கம்யத இதி கதி:) (கம்யத இதி கதி:) என்ற ஸமாஸத்தால் गतिः (கதி:) (கதி:) என்பதற்கு பலம் மோக்ஷம் என்று ஏற்படும். கஜேந்த்ரத்திற்கு மோக்ஷத்தை அளித்த மஹாவிஷ்ணுவோ, என்று ஜனக ராஜன் ராமனைப் பார்த்து ஸந்தோஷப்பட்டார். அந்த வாக்யத்தால் கஜேந்த்ரமோக்ஷ கதை வெளியாகிறது.

वीरौ (வீரௌ) (வீரௌ) என்ற பதத்தால், தனது ஸ்வரூபத்தை ஸ்மரிக்கும் பக்தகோடிகளுக்கு அந்தச்சத்ருவான காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்யம் என்ற சத்ருக்களை த்வம்ஸம் செய்து முக்தர்களாக அவர்களைச் செய்யும் ஸாமர்த்யமுள்ளவன். அத்துடன் शार्दूल वृषभोपमौ (சார்தூல வ்ருஷபோபமௌ) (சார்தூல வ்ருஷபோபமௌ) என்ற பதத்தால், சார்தூல சப்தமும் ச்ரேஷ்டவாசியான காரணத்தைக்கொண்டு वृषशार्दूलः शार्दूलवृषभः (வ்ருஷசார்தூல: சார்தூலவ்ருஷப:) (வ்ருஷசார்தூல: சார்தூல வ்ருஷப:) என்று மாறி வந்திருப்பதினாலும் வ்ருஷப ச்ரேஷ்டம் என்ற பொருளை அறியவேண்டும். ஸ்ரீராமனுக்கு காகுத்ஸ்தன் என்ற பெயர் ராமாயணத்தில் அடிக்கடி உபயோகப்படுத்தப்படுகிறது. ககுத்ஸ வம்சத்தில் பிறந்தவன் என்றே அதன் பொருளாகும். ककुत् (ககுத்) (ககுத்) என்றால் வ்ருஷபத்தினுடைய கழுத்திற்கு ஸமீபத்திலுள்ள ஒரு மாம்ஸபிண்டமாகும். இக்ஷ்வாகு வம்சத்தில் ஒரு அரசன் தேவர்களுக்கும் அஸு-

ரர்களுக்கும் யுத்தம் நடக்கும் ஸமயத்தில் இந்த்ரனால் தனக்கு ஸஹாயம் செய்வதற்காக அழைக்கப்பட்டு, அந்த அரசனும் அவ்விதமே ஸஹாயம் செய்வதற்குச் சென்று யுத்தத்தில் தேவேந்த்ரனை வ்ருஷபமாக உருவெடுத்துக் கொள்ளச் சொல்லி, அந்த வ்ருஷபத்தினுடைய கழுத்துக் கொண்டையின்மேல் இந்த அரசன் உட்கார்ந்துகொண்டு அஸுரர்களுடன் போர் செய்த கதையானது எல்லா புராணங்களிலும் ப்ரஸித்தமானது. அதனால், ककुदि तिष्ठतीति ककुत्स्थः (ககுதி திஷ்டதீதி ககுத்ஸ்த:) (ககுதி திஷ்டதீதி ககுத்ஸ்த:) என்ற ஸமாஸத்தால் இக்ஷ்வாகு வம்ச கூடஸ்தபுருஷனுக்கு ககுத்ஸ்தம் என்ற பெயர் ஏற்பட்டது. அந்த வம்சத்தில் பிறந்த காரணத்தால் ராமனை காகுத்ஸ்தன் என்று அடிக்கடி அழைக்கப்படுகிறது. ராமன் அவதரித்த வம்சத்திலுள்ள முன் உள்ள அரசர்கள் மிகவும் சூரர்கள் என்பதை அப்பதமானது ஸூசிப்பிக்கின்றது. அதை அனுஸரித்து ப்ருக்ருதத்தில் வ்ருஷபச்ரேஷ்டன் என்றால் தேவேந்த்ரன் என்பதை அறியவும், उपमः (உபம:) (உபம:) என்பதில், उप (உப) (உப) என்ற பதத்திற்கு ஸமீபம் என்றும் म (ம) (ம) என்ற பதத்திற்கு லக்ஷ்மி என்றும் அர்த்தமுண்டு. அதனால் தன் வம்ச கூடஸ்தனுக்கு வ்ருஷப வாஹனமாகவிளங்கி வந்த தேவேந்த்ரனுடைய ஸமீபத்தில் ராஜ்யலக்ஷ்மியை மஹாபலி சக்ரவர்த்தியினிடமிருந்து யாசித்து வாங்கி ஸ்திரமாக இருக்கும்படி செய்த வாமனாவதாரம் செய்த மஹாவிஷ்ணுவோ எதிரிலுள்ள ராமன் என்றும் ஜனகராஜன் ஸந்தேஹப்பட்டார். ராஜன் சொன்ன ஐந்து ச்லோகங்களுக்குள், முதல் ச்லோகத்திலுள்ள உத்தரார்த்தத்தால், கஜேந்திரமோக்ஷ கதையும், வாமனாவதார கதையும் வ்யங்க்ய மர்யாதையை அவலம்பித்து வெளியாகிறது.

पद्मपत्रविशालाक्षौ (பத்மபத்ரவிசாலாக்ஷௌ)(பத்மபத்ரவிசாலாக்ஷௌ) என்ற பதத்தால் தாமரையின் தளம்போல் விசாலமான நேத்ரத்துடன்கூடினவன் என்ற அர்த்தம் வெளியாகிறபடி.

யால், புண்டரீகாக்ஷத்வம் என்ற மஹாவிஷ்ணுவினுடைய முக்யமான தர்மம் சொல்லப்படுகிறது. புண்டரீகாக்ஷன் என்றால் மஹாவிஷ்ணு என்பதுதான் முதலில் ஸ்புரிக்கு மன்னியில் மற்ற எந்த தேவதைகளின் நினைவுக்குமிடமில்லை. சாந்தோக்யோபநிஷத்தில் य एषोन्तरादित्ये (ய ஏஷோந்தராதித்யே) (ய ஏஷோந்தராதித்யே) என்ற ச்ருதியானது ஸூர்ய மண்டலத்தின் நடுவில் மஹாவிஷ்ணுவை ஜ்யோதிர்மய மான புருஷன் என்று வர்ணித்து, यथाकप्यासं पुण्डरीकं एव अक्षिणी (யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவம் அக்ஷிணீ) (யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவம் அக்ஷிணீ) என்ற வாக்யத்தால் அந்த பரமபுருஷ னுக்கு புண்டரீகாக்ஷன் என்ற திருநாமத்தையும் செய்திருக் கிறது. இதனால் ஸூர்யமண்டல மத்யாந்தர்வர்த்தியாயும், नमस्सवित्रे (நமஸ்ஸவித்ரே) (நமஸ்ஸவித்ரே) என்ற மந்த்ர ப்ரதி பாத்யமாயும் காயத்ரீ என்ற மஹாமந்த்ரத்தின் பொரு ளான பரம்பொருளோ, என்று ராஜனுக்கு ஸந்தேஹம் ஏற்பட்டது.

खड्गतूणी धनुर्धरौ:—खड्गश्च तूणीच धनुश्च खड्गतूणी धनूंषि, खड्गतूणी धनुर्भिः धीयेते इति खड्गतूणी धनुर्धरौ (கட்கதூணீ தநுர்தரௌ:—கட்கஶ்ச தூணீச தநுஶ்ச கட்கதூணீ தநூம்ஷி, கட்கதூணீ தநுர்பி: தீயேதே இதி கட்கதூணீ தநுர்தரௌ) (கட்கதூணீ தநுர்தரௌ :—கட்கச்ச தூணீச தநுச்ச கட்கதூணீ தநூம்ஷி, கட்கதூணீ தநுர்பி: தீயேதே இதி கட்கதூணீ தநுர்தரௌ) என்ற ஸமாஸத்தால், கட்கம், தூணிரங்கள், தனுஸ் இவை களால் தரிக்கப்படும் (ப்ரதிபாதிக்கப்படும்) பரம்பொருள் என்பது வெளியாகிறது. தனு; என்பதால் ப்ரணவத்தை யும், தூணிரம் என்பதால் ஞான, கர்மயோகங்களையும், கட்கம் என்பதினால் வேதத்தையும் க்ரஹித்துக்கொள்ள வேண்டும். கட்கம் என்ற சப்தத்தால் சொல்லப்படுகிற கத்திக்கு ஒரு வஸ்துவை சோதிக்கக்கூடிய சக்தியிருப்பது போல், வேதத்திற்கு ஜன்ம மரணரூபமான பவபந்தத்தை

சோதிக்கக்கூடிய சக்தி இருப்பதினுல் வேதத்தையே கட்கம் என்று அறியவேண்டும். वैदखड्गधराद्विजाः ([illegible] வைதகட்கதராத்விஜா:) என்ற ஸ்ம்ருதியானது வேதத்தை கட்கம் என்று சொல்வதில் ப்ரமாணமாகும். அத்துடன் வேத ரஹஸ்யபூதமான சுத்த சக்திமாலா மஹாமந்த்ரத்திற்கு கட்க மாலை என்று பெயர் ஏற்பட்டிருப்பதையும், ஸ்ரீ வித்யோ பாஸகர்கள் அறியக்கூடும். ஞானயோகத்தையும் கர்ம யோகத்தையும் அம்பராத்தூணிகள் என்று சொல்வதிலும்,

ब्राह्मणस्यच तूणीरौ ज्ञानंकर्म चकीर्तितं

[illegible]

ப்ராஹ்மணஸ்யச தூணீரௌ ஞானம்கர்மச கீர்திதம்

என்ற ஸ்ம்ருதிவசனமே ப்ரமாணமாகும். சத்ருக்களை ஜயிக்கும் பாணங்களால் நிறப்பப்பட்டது அம்பராத்தூணி என்று சொல்லப்படும். அதுபோல் காமக்ரோதாதிகளான சத்ருக்களை ஜயித்து லக்ஷ்யமாகிய ப்ரும்மத்தை தன் வசமாக்கிக் கொள்ளக்கூடிய அநேக உபாயங்களாகிற பாணங்களால் நிறப்பப்பட்டதான காரணத்தால் ஞான யோகத்தையும் கர்ம யோகத்தையும் அம்பராத்தூணிகளுக்கு ஸமானமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசர்களுக்கு லக்ஷ்யத்தை அடிக்க பாணங்கள் மாத்ரம் போதாது. வில்லும் வேண்டும் என்பதுபோல் ப்ராம்மணோத்தமர்களுக்கு லக்ஷ்யமாகிய ப்ரம்மத்தைத் தன் வசமாக்கிக்கொள்ள ப்ரணவமும் அவச்யமானதினுல் அந்த ஓம்காரமென்ற ப்ரணவத்தையே வில்லாக அறியவும்.

प्रणवो धनुः शरोह्यात्मा ब्रह्मतल्लक्ष्य मुच्यते
अप्रमत्तेन वेद्धव्यं शरवत् तन्मयो भवेत् ।

[illegible]

ப்ரணவோ தநு: சரோஹ்யாத்மா ப்ரஹ்மதல்லக்ஷ்ய முச்யதே
அப்ரமத்தேந வேத்தவ்யம் சரவத் தந்மயோ பவேத் ।

என்ற ச்ருதியே ப்ரணவம் வில் என்பதில் ப்ரமாணமாகும். இதனால் முன்காட்டிய ஸமாஸப்படி வேதத்தாலும், ஞான யோகத்தாலும், கர்மயோகத்தாலும், ஓம்காரோபாஸனத்தாலும், அதிகாரிகளுடைய தாரதம்யத்தை அனுஸரித்து காண வேண்டிய பரம்பொருளே ராமன் என்று खड्गतूणीधनुर्धरौ (ஷஙூதூணீயநு-யூரள) (கட்கதூணீதநுர்தரௌ) என்ற பதத்திற்கு வ்யங்ய மர்யாதையை அனுஸரித்து தாத்பர்யம் ஏற்படுகிறது.

अश्विनाविपरूपेण (ஃஶ்விநாவிவ ரூவெண) (அச்விநாவிவரூபேண) என்ற பதத்தில் रूपं (ரூவம்) (ரூபம்) என்ற சப்தத்திற்கு சரீரம் என்று அர்த்தமாகும். அதில் रूपं रूपं प्रतिरूपो बभूव (ரூவம் ரூவம் வ்ரதிரூவொ வஹூவ) (ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பபூவ) என்ற ச்ருதியே ப்ரமாணமாகும். எதிரில் புலப்படும் இந்த ராமனுடைய சரீரத்தை கவனித்தாலோ, விராட்ரூபி என்று எண்ணக்கூடியதாக இருந்துவருகிறது. नश्वः अश्वः (நஶ்வः ஃஶ்வः) (நச்வ: அச்வ:) என்ற ஸமாஸத்தால் நாளைய தினம் இருக்கும் என்ற நிச்சயமில்லாத ஈச்வரனுடைய ஜகத்தை अश्वः (ஃஶ்வः) (அச்வ:) என்ற பதத்தால் அறியவும். अश्वः अस्यास्तीति (ஃஶ்வः ஃஸ்யாஸ்தீதி) (அச்வ: அஸ்யாஸ்தீதி) என்ற ஸமாஸத்தால் ஜகத்தோடுகூடினவன் என்று ஏற்படுகிறது. अश्वि (ஃஶ்வி) (அச்வி) என்ற சப்தம் நகாராந்தப்புல்லிங்கம். अश्वि अश्विनौ अश्विनः (ஃஶ்வி ஃஶ்விநௌ ஃஶ்விநः) (அச்வி அச்விநௌ அச்விந:) என்று அதன் ரூபமாகும். ப்ரக்ருதத்தில் இரு குமாரர்கள் இருந்துவருவதால் த்விவசனமாக ஏற்பட்டது. ஜகத்தின் ஸம்பந்தமோ பகவானுக்கு சரீரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. விஷ்ணுவிற்கும் ஜகத்திற்கும் சரீரபாவ ஸம்பந்தத்தை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ப்ரகாரம் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

सहस्रशीर्षाः पुरुषः, सच्च त्यचा भवति

ஸஹஸ்ரஶீர்ஷா: புருஷ:, ஸச்ச த்யச்சா ஹவதி

ஸஹஸ்ரசீர்ஷா: புருஷ:, ஸச்ச த்யச்சா பவதி

என்ற ச்ருதிகளாலும் सर्वतः पाणिपादं तत् (ஸர்வத: பாணிபாதம் தத்) (ஸர்வத: பாணிபாதம் தத்) என்ற ஸ்ம்ருதியினாலும் ஜகத்தை மஹாவிஷ்ணுவிற்கு சரீரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ஜகத்தையே சரீரமாக உடைத்தாயிருக்கும் காரணத்தால் ஸர்வாத்மகனாக மஹாவிஷ்ணுவேதான் எதிரில் புலப்படும் இந்த ராமன் என்றும் ஜனகராஜனுக்கு ஸந்தேஹம் ஏற்பட்டது.

समुपस्थित यौवनौ :--- समुपस्थितं संयक्प्राप्तं, यौवनं, याभ्यां तौ (ஸமுபஸ்தித யௌவனௌ:- ஸமுபஸ்திதம் ஸம்யக்ப்ராப்தம் யௌவநம் யாப்யாம் தௌ) ஸமுபஸ்தித யௌவனௌ:- ஸமுபஸ்திதம் ஸம்யக்ப்ராப்தம் யௌவநம் யாப்யாம் தௌ) என்ற ஸமாஸத்தால் நன்றாக யௌவனத்தை அடைந்தவர்கள் என்ற தாத்பர்யம் வெளியாகிறது. நன்றாக யௌவனமென்றால் அழகான யௌவனமென்றோ விஷயஸுகத்தை அனுபவிப்பதற்குப் போதுமான யௌவனமென்றோ அர்த்தத்தை க்ரஹித்துக்கொள்ளக்கூடாது. நல் வழியில் தானும் சென்று, தன்னை அண்டினவர்களையும் நல் வழியில் செல்லும்படி தர்ம ரஹஸ்யத்தையோ, ஆத்ம தத்வத்தையோ, உபதேசிப்பதற்கு அர்ஹமான யௌவனமே நல்ல யௌவனமாகும். கௌமாரத்திலோ, வார்த்தக்யத்திலோ தான் ஸ்வயமாக தர்மத்தை அனுஷ்டிப்பதற்கோ, அன்யர்களுக்கு உபதேசிப்பதற்கோ, சக்தி போதாதுதான் என்பது லோக ப்ரஸித்தமாகும். இதை அனுஸரித்துத் தான் वृद्धाः शिष्याः गुरुर्युवा (வ்ருத்தா: ஶிஷ்யா: குருர்யுவா) (வ்ருத்தா: சிஷ்யா: குருர்யுவா) என்று சாஸ்த்ரம் ஆசார்யனுக்கு யௌவனத்தை ஒரு லக்ஷணமாகச் சொல்கிறது. ப்ரஜா பரிபாலனம் என்ற தர்மத்தைச் செய்யும் அரசனும் யுவா

வாகவே இருக்கவேண்டுமென்று युवास्यात् साधुयुवाध्यायकः (𑌯𑍁𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌾𑌧𑍁𑌯𑍁𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌕𑌃)(யுவாஸ்யாத் ஸாதுயுவாத்யாயக:) என்ற ச்ருதியானது சொல்கிறது. இவ்விதமான யௌவனம் இருக்கும்பொழுது அரசனுக ஆகுவதோ, ஆசார்யனுக ஆகுவதோ அது கேவல மனிதர்களுக்கு ஸாத்யமில்லாத கார்யமாகும். அப்படியுள்ளவர்கள் ஈச்வரனுகத்தான் இருக்கவேண்டும். லோகத்தில் நல்ல யௌவன காலத்தில் ஒரு மனிதன் ஆதிசாரிக பதவியை வஹித்தால் ஜனங்கள் அவனைப் பார்த்து ஆச்சர்யப்படுகிற வழக்கம் ப்ரஸித்தமானது. வ்ருத்தனுனவன், ஆசார்யனுகவோ, அரசனுகவோ இருந்து என்ன ப்ரயோஜனம்? அதற்கு அர்ஹமான யௌவனத்தைத்தான் நல்ல யௌவனமென்று சொல்லப்படும். அது ராமலக்ஷ்மணர்களிடம் காணப்படுகின்றன. ஆகையால் ஒன்று அரசனுக இருக்கவேண்டும், அல்லது ஆசார்யனுக இருக்கவேண்டும். ஆசார்யத்வம் என்ற தன்மையும் ப்ராக்ருதமல்ல. यो ब्रह्माणं विदधातिपूर्वं (𑌯𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌵𑌿𑌦𑌧𑌾𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂) (யோ ப்ராஹ்மணம் விததாதிரூபம்) என்ற ச்ருதியில் சொல்லியபடியும், तेने ब्रह्म हृदाय आदिकवये (𑌤𑍇𑌨𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌹𑍃𑌦𑌾𑌯 𑌆𑌦𑌿𑌕𑌵𑌯𑍇) (தேநே ப்ரஹ்ம ஹ்ருதாய ஆதிகவயே) என்ற மஹாபுராணத்தில் சொல்லியபடியும் ஆதிஜீவனுன ஹிரண்யகர்பனுக்கும் வேதசாஸ்த்ரங்களை பரம அநுக்ரஹபூர்வகமாக உபதேசித்த ஆதிநாராயணனே என்று ஜனகராஜன் நினைத்தார்.

यदृच्छयैवगांप्राप्तौ देवलोकादिवामरौ

𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌯𑍈𑌵 𑌗𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌, 𑌦𑍇𑌵𑌲𑍋𑌕𑌾𑌦𑌿𑌵𑌾𑌮𑌰𑍌

யத்ருச்சயைவகாம்ப்ராப்தௌ தேவலோகாதிவாமரௌ

என்றும் ஸந்தேஹித்தார். दिविदीप्तौ (𑌦𑌿𑌵𑌿𑌦𑍀𑌪𑍍𑌤𑍌) (திவிதீப்தௌ) என்ற தாதுவை அனுஸரித்தும், दिव्यत इति देवः (𑌦𑌿𑌵𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌦𑍇𑌵𑌃) (திவ்யத இதி தேவ:) என்ற ஸமாஸத்தை அனுஸரித்

தும், देवः (𑌦𑍇𑌵𑌃) (தேவ:) என்ற பதத்தால் सत् चित् आनन्दं (𑌸𑌤𑍍 𑌚𑌿𑌤𑍍 𑌆𑌨𑌨𑍍𑌦𑌂) (ஸத் சித் ஆநந்தம்) என்ற ப்ரம்மத்தினுடைய ஸ்வமஹிமையானது சொல்லப்படும். सभगवः कस्मिन् खलु प्रतिष्ठितः (𑌸𑌭𑌗𑌵𑌃 𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌖𑌲𑍁 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃) (ஸபகவ: கஸ்மிந் கலு ப்ரதிஷ்டித:) என்று ச்ருதிரூப பரப்ரும்மமானது எந்த இடத்தில் ப்ரதிஷ்டிதமாக இருந்துவருகிறது என்று கேட்டுக்கொண்டு, அதற்கு பதிலாக ச்ருதியே स्वे महिम्नि प्रतिष्ठितः (𑌸𑍍𑌵𑍇 𑌮𑌹𑌿𑌮𑍍𑌨𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃) (ஸ்வே மஹிம்நி ப்ரதிஷ்டித:) என்று, தன் மஹிமையிலேயே ப்ரதிஷ்டிதம் என்று சொல்கிறது. இந்த விஷயம் சாந்தோக்யோபநிஷத்தில் பூமவித்யாப்ரகரணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஸ்வமஹிமைதான் மேற்கண்ட ச்லோகத்திலுள்ள देवः (𑌦𑍇𑌵𑌃) (தேவ:) என்ற பதத்தால் சொல்லப்படுகிறது. அம்ருதமான ப்ரப்ரும்மம் ஸ்வமஹிம ப்ரதிஷ்டிதமல்லவா? தற்காலத்திலோ பூமியில் ப்ரதிஷ்டிதமாக நின்றுவருகிறதே. இதென்ன ஆச்சர்யம்; யாருடைய பாக்யம் என்று ஜனக மஹாராஜா எண்ணினர்.

कथंपद्भ्यामिह प्राप्तौ किमर्थं कस्यवामुने

𑌕𑌥𑌂𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌮𑌿𑌹 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌕𑌸𑍍𑌯𑌵𑌾𑌮𑍁𑌨𑍇

கதம்பத்ப்யாமிஹ ப்ராப்தௌ கிமர்தம் கஸ்யவாமுநே

ஹே மஹர்ஷே! ப்ரம்மத்தைப் பற்றி,

यत्तद्रेश्यं अग्राह्यं, अगोत्रं, अचक्षुश्रोत्रं तदपाणिपादं

𑌯𑌤𑍍𑌤𑌦𑍍𑌰𑍇𑌶𑍍𑌯𑌂 𑌅𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌂, 𑌅𑌗𑍋𑌤𑍍𑌰𑌂, 𑌅𑌚𑌕𑍍𑌷𑍁𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂
𑌤𑌦𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌂

யத்தத்ரேச்யம் அக்ராஹ்யம், அகோத்ரம், அசக்ஷுச்ரோத்ரம்
ததபாணிபாதம்

என்ற ச்ருதியானது கை கால் முறிந்த அவயவங்களோடு ப்ரும்மம் கூடினதல்ல; பரம ஜ்யோதிஸ் ஸ்வரூபமே

ப்ரும்மமாகும் என்று சொல்லுகிறதே! எதிரில் நிற்கும் ராமனைப் பார்த்தாலோ பரஞ்ஜோதி ஸ்வரூபமான ப்ரும் மம் என்று யாரும் நிர்ணயிக்கக்கூடும். ஆனால், இரண்டு கால்களுடனும் பூமியை அவலம்பித்து நின்றுவருகிறதோ ஆச்சர்யத்தைக் கொடுக்கிறது. யாரோ ஒரு மஹாபுருஷன் தன்னுடைய தபஸ்ஸின் மஹிமையினால் நிரவயவமான ப்ரும் மத்தையும் ஸாவயவமாக, கண்ணுக்குப் புலப்படும்படி பூமி யில் ப்ரகாசிக்கும்படி செய்திருக்கின்றான். யாரந்தப் புண்ய வானோ? எந்த பலத்தை உத்தேசித்து பரப்ரும்மத்தை ப்ரத்யக்ஷமாகச் செய்துகொண்டான்? தவிரவும்,

वरायुधधरौ वीरौ कस्यपुत्रौ महामुने

𑌵𑌰𑌾𑌯𑍁𑌧𑌧𑌰𑍌 𑌵𑍀𑌰𑍌 𑌕𑌸𑍍𑌯𑌪𑍁𑌤𑍍𑌰𑍌 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑍇

வராயுததரௌ வீரௌ கஸ்யபுத்ரௌ மஹாமுநே

ஹே மஹர்ஷே! ச்ரேஷ்டமான ஆயுதத்தை கையில் தரித் துக்கொண்டிருக்கிறார். இம்மஹா புருஷனை விரோதித்துக் கொள்ளும் ப்ராணி ஒன்றுமேயிராதென்று என் எண்ணம். மேலும், இந்த வஸ்துவானது ஸர்வ பூதாந்தராத்மா என்று தோன்றுகிறது. எவன் இந்த ராமனுக்கு விரோதியோ, அவனும் இந்த ராமனுடைய ஸ்வரூபம்தானல்லவா. அவ னுடைய அந்தராத்மாவாகவும் ராமன்தானே விளங்கி வரு கிறார்.

ब्रह्मै वेदंसर्वं सर्वं खल्विदं ब्रह्म आत्मे वेदं सर्वं

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈 𑌵𑍇𑌦𑌂𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌖𑌲𑍍𑌵𑌿𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌆𑌤𑍍𑌮𑍇 𑌵𑍇𑌦𑌂
𑌸𑌰𑍍𑌵𑌂

ப்ரஹ்மை வேதம் ஸர்வம் ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம ஆத்மே வேதம் ஸர்வம்

என்ற ச்ருதிகள், காணப்படும் லோகத்தை ப்ரும்ம ஸ்வ ரூபமென்றே சொல்கிறதல்லவா. இதனால் ப்ரும்மத்திற்கு சத்ருவே ஏற்பட ந்யாயமில்லை. அவ்விதமிருக்கும்பொழுது ஆயுதபாணிகளாக இவர்கள் விளங்கிவரும் காரணம் என்ன

வென்று யோஜிக்கவேண்டியதாக இருக்கிறது. மனுஷ்ய வடிவாக காணப்படுகிறபடியால் யாரோ ஒரு மஹானுபாவனுக்குப் புத்ரனுகத்தான் ஆவிர்பவித்திருக்கவேண்டும். இந்த பரப்ரும்மத்திற்கு பிதாவாகும்படியான பாக்யத்தைச் செய்த அந்த மஹானுபாவன்தான் யாரோ?

भूषयन्ताविमन्देशं चन्द्रसूर्याविवाम्बरं

𑌭𑍂𑌷𑌯𑌨𑍍𑌤𑌾𑌵𑌿𑌮𑌨𑍍𑌦𑍇𑌶𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌵𑌿𑌵𑌾𑌮𑍍𑌬𑌰𑌂

பூஷயந்தாவிமந்தேசம் சந்த்ரஸூர்யாவிவாம்பரம்

ஆகாசத்தில் சந்த்ரனும் ஸூர்யனும் சேர்ந்தால் எப்படியிருக்குமோ, அதுபோல் இந்த இருகுமாரர்களும் பூமியில் சேர்ந்து நிற்பது, தோன்றுகிறது. சந்த்ரனும ஸூர்யனும் சேர்ந்தால் அன்று அமாவாஸை என்று சொல்லப்படும். அன்றிரவு லோகமுழுமையும் தமஸால் (இருட்டால்) மூடப்படும். ப்ரக்ருதத்திலோ, அந்த தோஷமானது காணப்படவில்லை இந்த இருவர்களுடைய தேஜஸ்ஸால் லோகமுழுமையும் ப்ரகாசிக்கின்றது. இதனுல்,

न तत्रसूर्यो भाति न चन्द्रतारकं

𑌨 𑌤𑌤𑍍𑌰𑌸𑍂𑌰𑍍𑌯𑍋 𑌭𑌾𑌤𑌿 𑌨 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌂

ந தத்ரஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம்

என்ற ச்ருதியினுலும் नतद्भासयते सूर्यः (𑌨𑌤𑌦𑍍𑌭𑌾𑌸𑌯𑌤𑍇 𑌸𑍂𑌰𑍍𑌯𑌃) (நதத்பாஸயதே ஸூர்ய:) என்ற ஸ்ம்ருதியினுலும் அனுக்ருதே: தஸ்யச என்ற ந்யாயத்தாலும் போதிக்கப்படுகிற பரஞ்ஜோதிஸ்ஸே இந்த ராமன் என்று தீர்மானிக்கலாம். சந்த்ரனேடு ஸூர்யன் சேர்ந்ததுபோல், லக்ஷ்மணனேடு ராமன் சேர்ந்ததை வர்ணிப்பதினுல் ராமனை ஸூர்யனுடைய ஸ்தானத்திலும், லக்ஷ்மணனை சந்த்ரனுடைய ஸ்தானத்திலும் வைத்துக் கொள்ளலாம். அதனுல் ஸூர்யவம்சத்திலுதித்த ராமன் சந்த்ரவம்சமாகிய தன் குலத்தில் ஆவிர்பவித்த சந்த்ரமண்

டல மத்யஸ்தையான பராசக்தியான ஸீதையை பரிணயம் செய்துகொண்டு விளங்கப்போகிருரோ, என்றும் ஜனக ராஜன் நினைத்து தன் ப்ரதிக்ஞை நிறைவேறி, தான் க்ரு தார்த்தனுக ஆகிவிடப் போகிருேம் என்று ஸந்தோஷத்தை அடைந்தார்.

परस्परस्य सदृशौ प्रमाणेङ्गितचेष्टितैः

வரஸ்வரஸ்ய ஸத்ருமௌ வ்ரமாணேஙிதசேஷ்டிதைஃ

பரஸ்பரஸ்ய ஸத்ருசௌ ப்ரமாணேங்கிதசேஷ்டிதை:

என்றும் ராஜன் சொல்கிருர். ப்ரமாணமோ, ப்ரும்மத்தை போதிப்பதிலுள்ள சாஸ்த்ரமாகும். இங்கிதமோ ஸ்வரூப தடஸ்த லக்ஷணங்களாகும். சேஷ்டையோ ஸம்ஸார ஸமுத் ரத்தில் முழுகிய ஜீவனை கறையேற்றிவிடுவதற்காக ஏற்பட்ட லீலாவதாரங்களாகும். இம்மூன்று விஷயங்களிலும் இந்த இரண்டு குமாரர்களும் பரஸ்பரம் ஸாம்யத்தை அடைந்த வர்களாக இருக்கிருர்கள். அதனுல் परमं साम्यं उपैति (வரமம் ஸாமயம் உவைதி) (பரமம் ஸாம்யம் உபைதி) என்ற சாஸ்த்ரத் தால் சொல்லப்படும் ஸாரூப்ய மோக்ஷமே பரமபுருஷார்த்த மென்று தோன்றுகிறதே! அதுதானு பரமபுருஷார்த்தம். அல்லது ब्रह्मैवसन् ब्रह्माप्येति (஬்ரஹ்மைவஸந் ஬்ரஹ்மாவெதி) (ப்ரஹ்மைவஸங் ப்ரஹ்மாப்யேதி) என்ற ச்ருதியினுல் சொல்லப் பட்ட பாரமார்த்திக ப்ரம்மாத்மனுவஸ்தான ரூபமான நிலை தான் பரம புருஷார்த்தமா? இந்நிலைதான் பரமபுருஷாத்த மானுல் எதிரிலுள்ளவர்களிடம் த்வைவித்யம் தோன்று கிறதே? அதன் காரணம் என்ன? இதையும் விளக்கிச் சொல்லவேண்டும். ஆகிலும் இவ்விருவர்களும் பரப்ரும்ம மானுலும் சுத்த ஸத்வமயமான யோகமாயையினுல் தன் இச்சையை அனுஸரித்து பரிணமிக்கப்பட்ட திவ்ய மங் கள விக்ரஹத்தோடு பூலோகத்தில் அவதரித்திருக்கிருர்கள். அதிலும்,

काकपक्षधरौ वीरौ श्रोतुमिच्छामि तत्वतः

காகபக்ஷதரௌ வீரௌ ச்ரோதுமிச்சாமி தத்வத:

காகபக்ஷதரௌ வீரௌ ச்ரோதுமிச்சாமி தத்வத:

என்ற வாக்யத்திலுள்ள काकपक्षधरौ (காகபக்ஷதரௌ) (காகபக்ஷதரௌ) என்பதினுல் வெளியாகும் கர்ணமூலத்தில் க்ஷத்ரியர்கள் தரித்துக்கொள்ளக்கூடிய ஜில்பா என்ற கேச விசேஷத்தைப் பார்த்து க்ஷத்ரியர்களென்றே தீர்மானிக்கின்றேன். ஆகிலும் தங்கள் முகாரவிந்தத்தினின்றும் அந்த உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று இச்சிக்கிறேன்" என்று மிதிலாதிபதியான ஜனக மஹாராஜா விச்வாமித்ர மஹர்ஷியைப் பார்த்து, ராம லக்ஷ்மணர்களைப் பற்றி ப்ரச்னம் செய்தார்.

விச்வாமித்ர மஹர்ஷியும் ராமலக்ஷ்மணர்களுடைய தத்வத்தை ராஜனுக்கு உபதேசித்தார்.

"ராஜனே! நீ நினைத்தபடி ஸர்வ வேதாந்த வேத்யமான பரம்பொருள்தான். ஆகிலும் பூமியிலுள்ள ப்ராணிகளின் அதிர்ஷ்டவசத்தால் திவ்யமங்கள விக்ரஹத்துடன் இக்ஷ்வாகு வம்சத்திலுதித்த தசரத ராஜனின் புத்ரர்களாக இவ்விருவர்களும் அவதரித்திருக்கிருர்கள். ராமன் மஹாவிஷ்ணுவே. விஷ்ணுவினுடைய பரம ஸாரூப்யத்தை அடைந்த ஆதிசேஷ பகவானே இந்த லக்ஷ்மணன். இந்த ராமனை நான் அயோத்திக்குச் சென்று என்னுடைய யக்ஞத்தைப் பூர்த்திசெய்துகொள்வதற்காக தசரத சக்ரவர்த்தியினிடம் யாசித்து அழைத்துவந்தேன். சேஷ சேஷீபாவம் சாஸ்த்ரார்த்தம் என்பதை ப்ரகாசப்படுத்த சேஷியைவிட்டு சேஷம் பிரியாதென்ற ந்யாயத்தால், சேஷனை லக்ஷ்மணனும், சேஷியான ராமனைப் பின்தொடர்ந்துவந்தான். ஸித்தாச்ரமத்திற்கு வரும் வழியில் தாடகையை ஸம்ஹாரம் செய்து, தாடகா வனத்தை சுத்தமாகவும், நிர்பயமாகவும்

செய்தார். என் யக்ஞத்திற்கு விக்னம் செய்த ராக்ஷஸர்களையும் கொன்று யக்ஞத்தையும் பூர்ணமாக நிறைவேற்றி வைத்தார். மிதிலைக்கு வரும்பொழுது விசாலா என்ற நகரத்திற் கதிபதியான ஸுமதி என்ற அரசனோடும் ஸந்தித்துப் பேசினார். மிதிலா நகரத்திற்கு ஸமீபத்திலுள்ள உபவனத்திலுள்ள கௌதம மஹர்ஷியின் ஆச்ரமம் சென்று, அங்கு கௌதமருடைய சாபத்தால் சிலையாகக் கிடந்த அஹல்யா தேவியை தனது பாதஸ்பர்ச மாத்ரத்தால் சாபத்திலிருந்து விமோசனம் செய்துவைத்து கௌதம மஹர்ஷியுடன் சேர்த்துவைத்தார். கௌதம மஹர்ஷி அஹல்யை இருவர்களாலும் விதிவத்தாகப் பூஜிக்கப்பட்டு, மிதிலா நகரத்திற்கு வந்தோம். இங்கு உன்னுடைய அரண்மனையில் வெகுகாலமாக பூஜிக்கப்பட்டு விளங்கிவருகிற சைவமான வில்லை பார்க்க வேண்டுமென்ற ஆசை ராமனுக்கு ரொம்பவும் இருந்து வருகிறது?'' என்று ஜனக மஹாராஜனுக்கு ஸகல வ்ருத்தாந்தங்களையும் சொல்லிவிட்டு விச்வாமித்ர மஹர்ஷியானவர் ராஜ ஸபையில் மௌனமாக இருந்தார்.

விச்வாமித்ர மஹர்ஷியானவர் லோகத்திற்கும், விசேஷமாக ராம லக்ஷ்மணர்களுக்கும் பரம ஆசார்யனானதினால் ஆசார்யனுடைய வைபவத்தை அறிந்துகொள்ளவேண்டிய தவச்யமான காரணத்தைக் கொண்டு, ஜனக ராஜனுக்கு புரோஹிதராயும் கௌதம மஹர்ஷியின் புத்ரனாயுமுள்ள சதானந்தர் என்ற மஹர்ஷியானவர், யக்ஞ சாலையில் ராஜ ஸபையில் விச்வாமித்ர மஹர்ஷியினுடைய வைபவத்தை சொல்வதற்கு ஆரம்பித்தார்.

விச்வாமித்ர மஹர்ஷியினுடைய வார்த்தையைக் கேட்டு மஹாதபஸ்வியான சதானந்தர் பரம ஸந்தோஷத்தை அடைந்தார். ஸ்ரீராமனுடைய தர்சனத்தால் ஜன்ம ஸாபல்யத்தையும் அடைந்தார். மேலான ஆஸனத்தில் உட்கார்ந்திருக்கும் ராஜபுத்ரர்களான ராம லக்ஷ்மணர்களையும், விச்வாமித்ர மஹர்ஷியையும் பார்த்து ஸந்தோஷத்துடன்

விச்வாமித்ர மஹர்ஷியினிடம் "மஹர்ஷே! என்னுடைய மாதாவான அஹல்யை, ராமன் பார்க்கும்படி தங்களால் காண்பிக்கப்பட்டாளா? ராமபாத ஸ்பர்சத்தால் என்னுடைய தாயானவள் பரிசுத்தமாக ஆகி ராமனுக்கும் லக்ஷ்மணனுக்கும் விதிவத்தாக பூஜை செய்தாளா? என்னுடைய மாதாவின் வ்ருத்தாந்தத்தை ராமனுக்குச் சொன்னீர்களா? இந்த்ரனுடைய அக்ரமத்தையும் சொன்னீர்களா? என்பிதாவான கௌதம மஹர்ஷியும் கோபத்தை விட்டு விட்டு என மாதாவை ஸ்வீகரித்துக்கொண்டாரா? ராமனேயும் என் பிதா பூஜித்தாரா? ராமனும் என் பிதாவை அபிவந்தனுதிகளால் ஸத்காரம் செய்தாரா?" என்று கேட்டார். விச்வாமித்ர மஹர்ஷியும் "சதானந்தரே! எக்கார்யத்தை எப்படி நடத்தவேண்டுமோ, அக்கார்யத்தை குறைவில்லாமலும், மேல் போகாமலும் சாஸ்த்ர ஸம்மதமாகும்படி நடத்திவிட்டேன். ஜமதக்னி மஹர்ஷி ரேணுகையுடன் சேர்ந்ததுபோல், உமது பிதாவான கௌதமரும், உமது மாதாவான அஹல்யையோடு சேர்ந்துவிட்டார்" என்று சொன்னுர். இதைக் கேட்ட சதானந்த மஹர்ஷி பரம ஸந்தோஷத்தை அடைந்து ராமனேப் பார்த்து "ராமா! உன் வரவு நல் வரவே, இங்குள்ள ஜனங்களின் பாக்ய வசத்தால் உன் தர்சனம் கிடைத்தது. அதிலும் மஹாதபஸ்வியான விச்வாமித்ர மஹர்ஷியை முன்னிட்டுக் கொண்டு நீ வந்தது எங்களுடைய பாக்யந்தான். விச்வாமித்ர மஹர்ஷியால் அனுஷ்டிக்கப்பட்ட தபஸ்ஸை அன்யர்களால் மனதால்கூட நினைக்கமுடியாது. தபோமஹிமையினுல் ப்ராம்மண்யத்தை அடைந்தவர். லோகத்திற்கே அவர் ஹிதத்தைச் செய்வதற்காக அவதரித்த மஹாபுருஷன் என்பதை நீ அறிந்திருப்பாய். இந்த விச்வாமித்ர மஹர்ஷி உன்னுடைய விஷயத்தில் ஸர்வப்ரகாரத்திலும் ஈடுபட்டு அஸ்த்ர வித்யைகளேயும், பலை, அதிபலை என்ற வித்யைகளேயும் உனக்கு உபதேசித்து உனக்கு ரக்ஷகனுக இருந்து வருவது உன் பாக்யமே. உனக்கு ஸமானமான தன்யன் லோகத்தில்

ஒருவருமில்லை. விச்வாமித்ர மஹர்ஷியைப்போல் மஹா புருஷர்களுடைய ஸம்ச்ரயணம் எந்த மனிதனுக்கு ஏற்படுகிறதோ அவனல்லவா தன்யனாகுவான். அதனால் நீ பரம தன்யன். இம்மஹர்ஷியின் வைபவத்தைக் கொஞ்சம் சொல்கிறேன் கேள்.

இம்மஹானுபாவன் முன்பு க்ஷத்ரியனாக இருந்தார். தர்ம ஸ்வரூபத்தை நன்றாக அறிந்தவர். குருகுலத்தில் அநேக காலம் வாஸம்செய்து வித்யையை ஸம்பாதித்தவர். ப்ரஜைகளை புத்ரனைப்போல் பாவித்து பரிபாலனம் செய்துவந்தார். ப்ரும்மாவினுடைய மானஸ புத்ரன் குசன் என்ற மஹானுபாவன்; குசனின் புத்ரன் குசநாபன்; குசநாபனின் புத்ரன் காதி; காதியின் புத்ரன் இந்த விச்வாமித்ர மஹர்ஷி. வெகுவருஷ காலம் நீதியை அனுஸரித்து ராஜ்ய பரிபாலனம் செய்துவந்தார். ஒரு ஸமயத்தில் அநேக அக்ஷௌஹிணிகளால் சூழப்பட்டு ரதாரூடனாக இப்புண்ய பூமியில் ஸஞ்சாரம் செய்துவந்தார். அநேக ராஜ்யங்கள், நதிகள், மலைகள், ஆச்ரமங்கள் இவைகளைப் பார்த்துவிட்டு க்ரமமாக வஸிஷ்ட மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திற்கு வந்தார். வஸிஷ்ட மஹர்ஷியினுடைய ஆச்ரமமோ, அழகான அநேக வ்ருக்ஷங்களாலும், ஹம்ஸ காரண்டவம் முதலான பக்ஷி விசேஷங்களாலும், ஸித்த சாரணர்கள், தேவதானவ கந்தர்வர்கள் முதலானவர்களாலும், அலங்கரிக்கப்பட்டு மிகவும் மேன்மையாக விளங்கிவந்தது. ப்ரும்ம ரிஷிகளும், தேவ ரிஷிகளும், ஸித்த புருஷர்களும் அக்னிக்கு ஸமானமான தேஜஸ்ஸோடு கூடினவர்களாகக் கொண்டு ஆச்ரமத்தைச் சுற்றி நாலாபக்கங்களிலும் சூழ்ந்துகொண்டு தபஸ்ஸைச் செய்து வந்தார்கள். அதில், சில மஹர்ஷிகள் ஜலத்தை மாத்ரம் பக்ஷித்துக்கொண்டு தபோநிஷ்டர்களாக இருந்துவந்தார்கள். சிலர்கள் வாயுவை பக்ஷிப்பவர்கள்; சிலர்கள் காய்ந்த சருகுகளைப் பக்ஷிப்பவர்கள்; சிலர்கள் கிழங்குகளையும் பழங்களையும் பக்ஷிப்பவர்

கள். காமக்ரோதாதிகளைவிட்டு ஜிதேந்த்ரியர்களாக எல்லா ரிஷிகளும் விளங்கிவந்தார்கள். சில ரிஷிகளுடைய கூட்டங்களில் ஜபங்களும், சில கூட்டங்கிளில் ஹோமங்களும் நடைபெற்றுவந்தன. வஸிஷ்டருடைய அருகில், வைகானஸாள், வாலகில்யாள் என்று இரண்டுவிதமான ரிஷிகளுடைய ஸங்கங்கள் விளங்கிவந்தன. ஆதிஸ்ருஷ்டியில் ப்ரும்மாவினுடைய நகங்களிலிருந்தும் உண்டான ரிஷிகள் வைகானஸாள் என்றும், ப்ரும்மாவினுடைய ரோமகூபத்திலிருந்தும் உண்டான ரிஷிகள் வாலகில்யாள் என்றும் சொல்லப்படுவார்கள்,

ये नखाः ते वैखानसाः ; ये वालाः ते वालखिल्याः

யெ நவாஃ தெ வெவாநஸாஃ ; யெ வாஓாஃ தெ வாஓவிஓ்யாஃ

யேந நகா: தே வைகாநஸா: ; யே வாலா: தே வாலகில்யா:

என்ற ச்ருதிகளே அதில் ப்ரமாணமாகும். அந்த மஹர்ஷிகள் வஸிஷ்டருடைய ஸமீபத்தில் உட்கார்ந்துகொண்டு தபஸ்ஸைச் செய்துவந்தார்கள். இவ்வித மஹிமையுள்ள வஸிஷ்டருடைய ஆச்ரமத்தைப் பார்த்தால் இது வேருன ப்ரும்மலோகமோ என்று விளங்கி வந்தது. விச்வாமித்ர மஹர்ஷியானவர் அரசனுக இருக்கும்பொழுது இந்த ஆச்ரமத்தை அடைந்தார். ஆச்ரமத்திற்குள் சென்று வஸிஷ்டருக்கு ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்துவிட்டு வணக்கத்துடன் அஞ்ஜலிபந்தத்துடன் நின்றுவந்தார். வஸிஷ்ட பகவானும் नाविष्णुः पृथिवीपतिः (நாவிஷ்ணுஃ வ்ரயிவீவதிஃ) (நாவிஷ்ணு: ப்ரதிவீபதி:) என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து ஒரு தேசத்தை ஆளும் அரசன் விஷ்ணுவென்று அறிந்ததினுல் மிகவும் வெகுமானத்துடன் வரவேற்று ஸ்வாகத ப்ரச்னம் செய்து, ம்ருதுவான வ்யாக்ராஸனத்தைக் கொடுத்து அதில் உட்காரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். விச்வாமித்ரர் என்ற அரசனும் வஸிஷ்டருடைய ப்ரார்த்தனைக் கிணங்கி ஆஸனத்தில் உட்கார்ந்தார். உடன்

வஸிஷ்டருடைய சிஷ்யர்கள் திவ்யமான கனிகள், கிழங்குகள் முதலியவற்றை விச்வாமித்ரருக்கு ஆஹாரமாகக் கொணர்ந்து கொடுத்தார்கள். விச்வாமித்ரரும் அபூர்வமான, கிழங்குகளையும் கனிகளையும் புஜித்துவிட்டு பரம த்ருப்தியுடன் வஸிஷ்டபகவானைப் பார்த்து 'தபஸ், அக்னிஹோத்ரம் முதலிய ஸத்கர்மாக்கள் ஸரியாக நடந்துவருகின்றனவா? சிஷ்யர்கள் இருக்கவேண்டியநிலையுடன் இருந்து வருகிறார்களா? ஆச்ரமத்தின் அருகில் நாலாபக்கங்களிலும் சூழ்ந்திருக்கும் வ்ருக்ஷங்கள் யாதொருவிதமான குறைவுமில்லாமலிருந்து வருகிறதா? தயவு செய்து எனக்குச் சொல்லவேண்டும். நான் அவ்விடத்து கிங்கரன். ஏதாவது செய்யவேண்டியதிருந்தால் ஆக்ஞாபனம் செய்யலாம்'. என்று வணக்கமாகத் தெரிவித்துக்கொண்டார். வஸிஷ்டமஹர்ஷியும் 'தங்களைப்போலொத்த தர்மபராயணர்களான அரசர்கள் இருக்கும்வரை எங்களுக்கு ஒன்றிலும் ஒருவிதமான குறைவும் ஏற்படாது. எல்லாவற்றிலும் குசலம் தான். எல்லாம் ஒழுங்காக நடந்துவருகிறது. சிஷ்யர்களும் ஸத்சிஷ்யர்களாகவே இருந்துவருகிறார்கள். தங்களுடைய ராஜ்யத்தில் க்ஷேமந்தானே. தர்ம விரோதமில்லாமல் ப்ரஜாபரிபாலனம் செய்துவருகிறீர்களா? ந்யாயமாக ப்ரஜைகளிடமிருந்து வரிகளை வாங்கிக்கொண்டு கஜானவை வ்ருத்தி செய்துகொண்டு வருகிறீர்களா? ஸத்பாத்ரத்தில் ப்ரதி தினம் தானம் நடந்துகொண்டு வருகிறதா?

न्यायेनार्जनमर्थस्य, वर्धनं पालनं तथा ।
सत्पात्रे प्रति पत्तिश्च, राजवृत्तं चतुर्विधं ॥

𑌨𑍍𑌯𑌾𑌯𑍇𑌨𑌾𑌰𑍍𑌜𑌨𑌮𑌰𑍍𑌥𑌸𑍍𑌯, 𑌵𑌰𑍍𑌧𑌨𑌂 𑌪𑌾𑌲𑌨𑌂 𑌤𑌥𑌾 ।
𑌸𑌤𑍍𑌪𑌾𑌤𑍍𑌰𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌚, 𑌰𑌾𑌜𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌂 ॥

ந்யாயேநார்ஜநமர்தஸ்ய, வர்தநம் பாலநம் ததா ।
ஸத்பாத்ரே ப்ரதிபத்திச்ச, ராஜவ்ருத்தம் சதுர்விதம் ॥

என்ற சாஸ்த்ரமானது ப்ரஜைகளிடமிருந்து ந்யாயவிருத்தமில்லாமல் வரிகளை வஸூல் செய்வதும், வஸூல் செய்த

பொருளை வ்ருத்தி செய்வதும், ப்ரஜைகளுக்கு ஏற்பட்ட குறைகளை நிவ்ருத்தி செய்து பரிபாலனம் செய்வதும், தினந்தோறும் ஸத்பாத்ரத்தில் தானம் செய்து வருவதும் என்று நான்கு ப்ரகாரங்களாக ராஜ தர்மத்தைச் சொல் வதினுல் அந்த நான்குவிதமான தர்மமும் நன்ருக பரி பாலிக்கப்பட்டு வருகிறதா? உம்முடைய ஸேனைகள் நாளுக்கு நாள் உம்மிடத்திலேயே அதிகமான ப்ரீதி உள்ள வர்களாக இருக்கும்படி நீர் நடந்துகொண்டு வருகிறீரா? சத்ருக்கள் உமக்கு அடங்கி இருக்கும்படி அவர்களை அலக்ஷ்யம் செய்யாமல் ஜாகரூகனுக இருந்துவருகிறீரா? மற்ற மூலஸேனைகள், கோசங்கள், யானை குதிரை வர்கங் கள், ஸ்நேஹிதர்கள், புத்ர பௌத்ரர்கள் முதலான பந்து வர்கங்கள் எல்லாவற்றிலும் க்ஷேமந்தானு" என்று ராஜ னிடம் வஸிஷ்டர் குசல ப்ரச்னம் செய்தார். விச்வாமித்ர ரும் பரம விநயத்துடன் அஞ்ஜலிபந்தம் செய்துகொண்டு "தங்களுடைய அனுக்ரஹத்தால் ஒன்றும் குறைவில்லை; எல்லாம் க்ஷேமந்தான்" என்று சொன்னுர்.

இவ்விதம் ராஜனுன விச்வாமித்ரரும், ப்ரும்மரிஷியான வஸிஷ்டரும் வெகுகாலம் வரையில் பேசிக்கொண்டிருந் தார்கள். பரம ஸந்தோஷத்தையும் அடைந்தார்கள். விச்வா மித்ரருடைய நடத்தையில் வஸிஷ்டருக்கு ஏற்பட்ட ஆனந் தத்தையும், வஸிஷ்டருடைய மஹத்வத்தில் விச்வாமித்ரர் என்ற அரசனுக்கு ஏற்பட்ட வெகுமான புத்தியையும் அளவிடமுடியவில்லை. பரஸ்பரம் ப்ரீதி அப்படி ஏற்பட்டு விட்டது. கடைசியாக வஸிஷ்டபகவான் ராஜனைப் பார்த்து "ராஜனே தாங்கள் மஹாவிஷ்ணுவின் அம்சம். தங்களைப் போலொத்தவர்கள் எங்களுடைய குடிசைக்கு வருவது ரொம்பவும் அபூர்வமாகும். அதிதி ஸத்காரத்தை மிகவும் மேலான தர்மமாக नकञ्चनत्रसतौ प्रत्याचक्षीत (ந கஞ்ச ந வஸ தௌ ப்ரத்யா சக்ஷீத) (நகஞ்சநவஸதௌ ப்ரத்யாசக்ஷீத) என்ற ச்ருதி யானது சொல்கிறது. ஆகையால் தங்களுக்கும், தங்களு

டைய பரிவாரத்திற்கும் நான் கொஞ்சம் ஆதித்யம் செய்ய வேண்டுமென்று இச்சிக்கிறேன். ஒரு பெரிய அரசனுன தங்களுக்கு நான் ஒரு ரிஷி ஆதித்யம் செய்கிறேன் என்று சொல்வது சிலர்களுக்கு பரிஹாஸமாகத்தானிருக்கும். ராஜோபசாரத்தை ரிஷியால் எப்படிச் செய்யமுடியும்? ஆகிலும் ராஜ கௌரவத்தை முன்னிட்டு என் ஆச்ரமத்திற்கு வந்த தங்களுக்கு ஏதோ என் சக்தியை அனுஸரித்து ஸத்காரம் செய்கிறேன். அதை அங்கீகாரம் செய்துகொள்ளவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். விச்வாமித்ரரும் சிரஸில் இரண்டு கைகளையும் தூக்கி கும்பிட்டுக்கொண்டு,

क्रतमित्य ब्रवीत् राजा प्रियवाक्येन मेत्वया

க்ருதமித்யப்ரவீத் ராஜா ப்ரியவாக்யேந மேத்வயா

க்ருதமித்யப்ரவீத் ராஜா ப்ரியவாக்யேந மேத்வயா

என்று "மஹர்ஷே! என்னிடத்தில் பரம அனுக்ரஹ புத்தியோடு எனக்கு ஆதித்யம் செய்கிறேன் என்று ப்ரியமான வார்த்தைகள் சொன்னீர்களே; அதனுலேயே நான் பரம த்ருப்தியை அடைந்துவிட்டேன். எனக்கு ஆதித்யம் செய்தாகிவிட்டதாகவே தாங்கள் நினைத்துக்கொள்ளவேண்டும். என் ராஜதானியில் கிடைக்காததான அபூர்வமான கனிவர்கங்களையும், கிழங்குகளையும் எனக்குக் கொடுத்து புஜிக்கச்செய்தீர்களே. அது எனக்கு எத்தனை ஜன்மாவில் தவம் செய்தாலும் கிடைக்குமா? பவபந்தத்தை ஒரு க்ஷணத்தில் நிவ்ருத்தி செய்துவைக்கக்கூடிய பெருமையோடு கூடின தங்களுடைய தர்சனத்தைக் காட்டிலும் மற்ருெரு மேலான ஆதித்யம் இருக்கிறதா? தங்களை நான் என் ராஜதானிக்கு அழைத்துச் சென்று ஆதித்யம் செய்யவேண்டும்; தங்களால் நான் ஸர்வ ப்ரகாரத்தாலும் பூஜிக்கப்பட்டவனே, கருணம்ருதத்தால் நிறப்பப்பட்டதாயும் ஸ்நேஹத்துடன் கூடினதாயுமுள்ள த்ருஷ்டியினுல் என்னைப் பார்த்து 'இம்

மனிதன் முக்தனுக ஆகவேண்டும்' என்று ஆசீர்வதிக்க வேண்டும். நான் சென்றுவருகிறேன். இவ்வளவு காலம் என்னுல் தபஸிற்கு விக்னம் ஏற்பட்டுவிட்டது. மன்னிக்க வேண்டும்'' என்று சொல்லிவிட்டு விச்வாமித்ரர் என்ற அரசன் எழுந்திருந்தார். இவ்விதம் சொன்ன விச்வாமித்ரரை வஸிஷ்டபகவானே, "தாங்கள் இவ்விதம் சொல்லக் கூடாது. நான் செய்யும் ஆதித்யத்தைப் பெற்றுக் கொண்டுதான் போகவேண்டும்'' என்று திரும்பி வற்புறுத்திஞர். ராஜனுக்கு இனி மஹர்ஷி வாக்யத்தை உல்லங்கனம் செய்யக்கூடாது; செய்தால் அபசாரம் ஏற்பட்டு விடும் என்ற பயம் ஏற்பட்டு "மஹர்ஷே, எவ்விதம் தங்களுக்கு இஷ்டமோ, அவ்விதமே நடக்கட்டும். நான் இருந்து ஆதித்யத்தைப் பெற்றுக்கொண்டே போகிறேன்'' என்றுர். உடன் வஸிஷ்ட பகவானும் அநேகவிதமான வர்ணமுள்ள பசுவை (காமதேனு) 'ஹே! சபலே' என்று கூப்பிட்டார். அதாவது வஸிஷ்ட மஹர்ஷியினுல் செய்யப்பட்ட தபஸ்ஸினுடைய கூட்டமே அந்த காராம்பசு ரூபமாக சரீரத்தை எடுத்துக்கொண்டு வஸிஷ்டருடைய எதிரில் ஆவிர்பவித்தது; அதை தர்ம தேவதை என்றே அறியவும். அதைப் பார்த்து வஸிஷ்டர் "ஹே! சபலே? விச்வாமித்ர ராஜன் வந்திருக்கிருர். பரிவாரத்துடன் அந்த அரசனுக்கு விலைமதிக்க முடியாததான போஜனம் செய்வித்து ஸத்காரம் செய்வதாக உத்தேசித்திருக்கிறேன். அதற்கு உன் ஸஹாயம்தான் எனக்கு வேண்டும். ஆகையால் ராஜனே, ராஜனைச் சேர்ந்த ப்ரஜைகளோ, யார் யாருக்கு மதுர, ஆம்ல, லவண, கடு, கஷாய, திக்தம், என்ற ஆறு விதமான ரஸங்களுக்குள் எந்தெந்த ரஸத்தில் ப்ரீதி ஏற்படுகிறதோ, அந்தந்த ரஸத்தால் நிறப்பப்பட்ட பதார்த்தங்களை ஸ்ருஷ்டிக்க வேண்டும். அவர்களுடைய இஷ்டத்தை நீ கொடுக்கிற காரணத்தால்தான் உனக்கு காமதேனு என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. அன்னமோ, பானீயமான தீர்த்தமோ, லேஹ்ய சோஷ்யாதிகளோ, மலை மலையாக குவிந்து

கிடக்கும்படி ஸ்ருஷ்டிக்கவேண்டும். திவ்ய பாயஸாதி களும், பக்ஷய விசேஷங்களும் ஏற்படவேண்டும். ராஜன் பரமாச்சர்யத்தை அடையவேண்டும். 'நாம் ஓர் அரசன் என் றிருக்கிறோமே; நம்மால் இவ்விதம் ஒருவனுக்கு ஆதித் யம் செய்யமுடியுமா காட்டிலுள்ள ஸர்வ ஸங்கபரித்யாகி யான ஒரு ரிஷி இவ்வளவு ஆதித்யம் செய்திருக்கிறாரே. தபஸ்ஸிற்கு மஹிமையுண்டு; ப்ராம்மண்யம் உயர்ந்தது என் பதில் என்ன ஆக்ஷேபணை?' என்று ராஜன் நினைக்கும்படி அன்ன பர்வதத்தை ஸ்ருஷ்டிக்க வேண்டு"மென்று காம தேனுவிற்குக் கட்டளையிட்டார். வஸிஷ்ட மஹர்ஷியின் வார்த்தையைக் கேட்டு சபலா என்ற காமதேனுவானது விச்வாமித்ர ராஜனுடைய பரிவாரங்களில் யார் யாருக்கு எது எது இஷ்டமோ அவைகளை மலை மலையாக ஸ்ருஷ்டித் தது. கரும்பு ரஸங்கள், தேன், பொரிகள், மத்யங்கள் பானீய விசேஷங்கள், ச்ரேஷ்டமான ஆஸன விசேஷங்கள், உயர்ந்த விலையுள்ள பக்ஷயங்கள் முதலியவைகளை ஸ்ருஷ்டித்தது. உஷ்ணமான அன்னங்களும், ஸூபங்களும் (பருப்பு) மலை மலையாக ஸ்ருஷ்டிக்கப்பட்டு குவிந்துகிடந்தன. ஆடைத் தயிர் ஸமுத்ரம்போல் ஓடிற்று. அநேகவிதமான ருசியுள்ள பக்ஷ்ய விசேஷங்களும் தித்திப்பு முதலான ஆறுவிதமான ரஸங்களையும் அனுபவிக்கக்கூடிய அபூர்வமான பக்ஷயங்க ளும், க்ருதத்தால் நிறப்பப்பட்ட சர்க்கரைப்பொங்கல், முதலான விசேஷமான பதார்த்தங்களும் மலைபோல் குவிந்து கிடந்தன. போஜன பாத்ரங்களும் தங்கமயமாயும் வெள்ளி மயமாயும் விளங்கிவந்தன. விச்வாமித்ரர் என்ற ராஜனு டைய பரிஜனங்கள் இந்த அபூர்வமான விருந்தை புஜித்து பரமஸந்தோஷத்தை அடைந்தார்கள். இதற்கு முன்பு இவ் விதமான த்ருப்தி ஏற்பட்டதில்லை. பிறகும் ஏற்படப்போவ தில்லை. விச்வாமித்ரர் என்ற ராஜனும் தனது ராஜதானியி லுள்ள அரண்மனையில் இதுபோலொத்த போஜனத்தை ஒரு நாளும் செய்துவந்தவனல்ல. மந்த்ரி வர்கங்களோ டும், புரோஹித கணங்களோடும் அந்தப்புர ஜனங்களோ

டும், ப்ருத்யவர்க்கங்களோடும், ராஜன் திவ்ய போஜனத்தை புஜித்துவிட்டு தேவதாஸிகளுடைய ஸங்கங்களால் சத்ர சாமராதிகளால் வீசப்பட்டு பரமானந்தத்தோடு வஸிஷ்ட பகவானைப் பார்த்து "மஹர்ஷே! நாங்கள் இவ்விதம் ஸத் காரம் செய்யாதபோனாலும் தங்களால் ஸத்கரிக்கப்பட்ட வர்களாக ஆகிறோம். ஒரு ரிஷியினுடைய ஆச்ரமத்திலும் இதுபோலுள்ள பூஜையை நான் அடைந்தவனல்ல. தங்க ளுடைய தபோ மஹிமையினால் சபலா என்ற காமதேனு தங்கள் வசத்தில் இருந்துவருவதே தங்களுடைய பெரு மையைக் காட்டுகிறது. ஆனால் லோகத்தில் எங்தெந்த பதார்த் தங்களுக்குள் எது ச்ரேஷ்டமானதோ அது அரசனைச் சேர்ந்தது என்ற ந்யாயம் தங்களுக்குத் தெரியும். கோக் களுக்குள் ச்ரேஷ்டமான காமதேனுவோ தங்கள் வசத்தில் இருந்து வருவது ந்யாயமில்லை. ராஜனுடைய என் வம்சத் தில் இருந்துவரவேண்டும். रत्नहारीच पार्थिवः (ரத்நஹாரீச பார்திவ:) என்ற ந்யாயத்தைத் தாங்கள் அறியாமலிருக்கமுடியுமா? ச்ரேஷ்டமான வஸ் துவை தன் வசமாக்கிக்கொள்ள உரிமையுள்ளவன் அரசன் என்றல்லவா இந்த ந்யாயத்தின் தாத்பர்யமாகும். ஆனால் நான் ராஜா என்ற தோரணையில் என் வசத்தில்தான் இந்த காமதேனு இருக்கவேண்டுமென்று பலாத்காரமாகத் தங் களை நிர்பந்தம் செய்யவில்லை. தங்களைப்போலொத்த ப்ரும்மநிஷ்டர்களை நான் அவ்விதம் செய்வது ந்யாயமுமில்லை. யாசிக்கின்றேன்; உயர்ந்த ஜாதியிலுள்ள லக்ஷம் கோக்களை இந்த ஒரு பசுவிற்கு மூல்யமாகத் தருகிறேன்; இந்த சபலை என்ற காமதேனு ஒன்றை எனக்குக் கொடுக்கவேண்டும். நீதி சாஸ்த்ரத்தையும் தர்ம சாஸ்த்ரத்தையும் கவனித் தால் இந்த காமதேனு என்னுடைய ஸொத்துத்தான்" என்று சொன்னார்.

வஸிஷ்டபகவானோ இதைக்கேட்டு "லக்ஷம் கோக்களை நீ கொடுத்தாலும், கோடி, அல்லது நூறு கோடி கோக்களை

கொடுத்தாலும், பணத்தால் ஆச்ரமத்தை நிறப்பினாலும், ஸுவர்ணத்தை மலை மலையாகக் கொண்டுவந்து கொட்டினாலும் இந்த சபலை என்ற காமதேனுவை நான் கொடுக்க மாட்டேன்.

न परित्यागमर्हेयं मत्सकाशादरिंदम ।
शाश्वती शबला मह्यं कीर्तिरात्मवतो यथा ॥
अस्यां हव्यं च कव्यं च प्राणयात्रा तथैव च ।
आयत्तमग्निहोत्रं च बलिर्होमस्तथैव च ॥
स्वाहाकारवषट्कारौ विद्याश्च विविधास्तथा ।
आयत्तमत्र राजर्षे सर्वमेतन्न संशयः ॥
सर्वस्वमेतत्सत्येन मम तुष्टिकरी सदा ।
कारणैर्बहुभी राजन्न दास्ये शबलां तव ॥

𑌨 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌮𑌰𑍍𑌹𑍇𑌯𑌂 𑌮𑌤𑍍𑌸𑌕𑌾𑌶𑌾𑌦𑌰𑌿𑌂𑌦𑌮 ।
𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍀 𑌶𑌬𑌲𑌾 𑌮𑌹𑍍𑌯𑌂 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌰𑌾𑌤𑍍𑌮𑌵𑌤𑍋 𑌯𑌥𑌾 ॥
𑌅𑌸𑍍𑌯𑌾𑌂 𑌹𑌵𑍍𑌯𑌂𑌚 𑌕𑌵𑍍𑌯𑌂𑌚 𑌪𑍍𑌰𑌾𑌣𑌯𑌾𑌤𑍍𑌰𑌾 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌆𑌯𑌤𑍍𑌤𑌮𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌂𑌚 𑌬𑌲𑌿𑌰𑍍𑌹𑍋𑌮𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥
𑌸𑍍𑌵𑌾𑌹𑌾𑌕𑌾𑌰𑌵𑌷𑌟𑍍𑌕𑌾𑌰𑍌 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌆𑌯𑌤𑍍𑌤𑌮𑌤𑍍𑌰 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑍇 𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌤𑌨𑍍𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌮𑍇𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑍇𑌨 𑌮𑌮 𑌤𑍁𑌷𑍍𑌟𑌿𑌕𑌰𑍀 𑌸𑌦𑌾 ।
𑌕𑌾𑌰𑌣𑍈𑌰𑍍𑌬𑌹𑍁𑌭𑍀 𑌰𑌾𑌜𑌨𑍍𑌨 𑌦𑌾𑌸𑍍𑌯𑍇 𑌶𑌬𑌲𑌾𑌂 𑌤𑌵 ॥

ந பரித்யாகமர்ஹேயம் மத்ஸகாசா தரிந்தம ।
சாச்வதீ சபலா மஹ்யம் கீர்த்திராத்ம வதோயதா ॥
அஸ்யாம் ஹவ்யம்ச கவ்யம்ச ப்ராணயாத்ரா ததைவச ।
ஆயத்தமக்நிஹோத்ரம்ச பலிர் ஹோமஸ்ததைவச ॥
ஸ்வாஹாகாரவஷட்காரௌ வித்யாச்ச விவிதாஸ்ததா ।
ஆயத்தமத்ர ராஜர்ஷே ஸர்வமேதந்ந ஸம்சய: ॥
ஸர்வஸ்வமே தத்ஸத்யே ந மம துஷ்டிகரீ ஸதா ।
காரணைர்பஹுபீ ராஜந்ந தாஸ்யே சபலாம் தவ ॥

ராஜனே! மஹாஞானிகளுடைய லோகப்ரஸித்தமான கீர்த்தியானது அந்த வித்வானை விட்டு எப்படிப் பிரிக்க

முடியாதோ, அதுபோல் இக்காமதேனுவை என்னைவிட்டுப் பிரிக்கமுடியாது. வெகுகாலமாக ப்ரும்மாவினால் கொடுக்கப்பட்டு என்னிடம் விளங்கிவருகிறது, இந்த காமதேனுவினுடைய அதீனமாகத்தான் தேவகார்யமோ, பித்ருகார்யமோ, ப்ராணாக்னிஹோத்ரமென்ற ஹோம விசேஷமோ, ஸாயங்காலத்திலும், ப்ராதக் காலத்திலும் செய்யவேண்டிய அக்னிஹோத்ர விசேஷமோ, தர்ச பௌர்ணமாஸ இஷ்டியோ, வைச்வதேவம் என்ற பஞ்ச மஹாயக்ஞமோ, பூதபலியோ, ஸ்வாஹா என்ற மந்த்ரமோ, வஷட்காரமோ, நான்கு வேதங்களும் ஆறு அங்கங்களுமோ, ஸமஸ்தமும் இக்காமதேனுவினுடைய அதீனமாகத்தான் என் விஷயத்தில் இருந்துவருகிறது. இவ்விஷயத்தில் கொஞ்சமேனும் ஸம்சயம் வேண்டாம். எனக்கு ஸந்தோஷத்தை உண்டு பண்ணுவது இந்த சபலைதான்; ராஜனே! ஸத்யமாகச் சொல்கிறேன். முன்சொன்ன காரணங்களால், நீ ராஜ்யத்தைக் கொடுத்தாலும் இந்த காமதேனுவை உனக்குக் கொடுக்க மாட்டேன்'' என்று சொன்னார்.

இவ்விதம் சொன்ன வஸிஷ்டருடைய வார்த்தையைக் கேட்டு, விச்வாமித்ரர் என்ற அரசன், மிகவும் காமதேனுவினிடத்தில் அபிநிவேசத்தை வைத்துக்கொண்டு, காமதேனுவைத் தான் க்ரஹித்துக்கொள்ள, வஸிஷ்ட மஹர்ஷியை மறுபடியும் ப்ரலோபப்படுத்தினார். "மஹர்ஷே! நல்ல மத்தகஜங்கள் தருகிறேன். ஸுவர்ணத்தால் அக்கஜங்களுடைய கழுத்தில் கட்டக்கூடிய கயிறுகளையும் தருகிறேன். ரத்னங்களால் இழைக்கப்பட்ட அங்குசங்களையும் தருகிறேன். 16,000 யானைகள் தருகிறேன். நான்கு வெள்ளைக் குதிரைகள் கட்டிய தங்கமயமான ரதங்களில் 800 ரதங்கள் தருகிறேன். ஸிந்துதேசத்திலுண்டான நல்ல குதிரைகளில் 11,000 குதிரைகள் தருகிறேன். ஒரு கோடி கோக்களும் தருகிறேன் அல்லது எவ்வளவு ரத்னம் வேண்டுமென்று கேட்கிறீர்களோ, அல்லது ஸுவர்ணம்வேண்டுமென்று கேட்கிறீர்களோ, அவ்வளவையும் தருகிறேன். இந்த ஒரு பசுவை

(காமதேனுவை) என்னிடம் கொடுக்கவேண்டும்" என்று கேட்டார். வஸிஷ்டமஹர்ஷியோ,

एतदेव हि मे रत्नमेतदेव हि मे धनम् ।
एतदेव हि सर्वस्वमेतदेव हि जीवितम् ॥
दर्शश्च पूर्णमासश्च यज्ञाश्चैवाप्तदक्षिणाः ।
एतदेवहि मे राजन्विविधाश्च क्रियास्तथा ॥
अदोमूलाः क्रियाः सर्वा मम राजन्नसंशयः ।
बहुना किं प्रलापेन न दास्ये कामदोहिनीम् ॥

𑌏𑌤𑌦𑍇𑌵 𑌹𑌿 𑌮𑍇 𑌰𑌤𑍍𑌨𑌮𑍇𑌤𑌦𑍇𑌵 𑌹𑌿 𑌮𑍇 𑌧𑌨𑌮𑍍 ।
𑌏𑌤𑌦𑍇𑌵 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌮𑍇𑌤𑌦𑍇𑌵 𑌹𑌿 𑌜𑍀𑌵𑌿𑌤𑌮𑍍 ॥
𑌦𑌰𑍍𑌶𑌶𑍍𑌚 𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑌶𑍍𑌚 𑌯𑌜𑍍𑌞𑌾𑌶𑍍𑌚𑍈𑌵𑌾𑌪𑍍𑌤𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌃 ॥
𑌏𑌤𑌦𑍇𑌵𑌹𑌿 𑌮𑍇 𑌰𑌾𑌜𑌨𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌶𑍍𑌚 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 ॥
𑌅𑌦𑍋𑌮𑍂𑌲𑌾𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌮𑌮 𑌰𑌾𑌜𑌨𑍍𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 ।
𑌬𑌹𑍁𑌨𑌾 𑌕𑌿𑌂 𑌪𑍍𑌰𑌲𑌾𑌪𑍇𑌨 𑌨 𑌦𑌾𑌸𑍍𑌯𑍇 𑌕𑌾𑌮𑌦𑍋𑌹𑌿𑌨𑍀𑌮𑍍 ॥

எததேவஹி மே ரத்நமேததேவஹி மே தநம் ।
எததேவஹி ஸர்வஸ் வமேத தேவஹி ஜீவிதம் ॥
தர்சச்ச பூர்ணமாஸச்ச யஞ்ஞாச்சை வாப்த தக்ஷிணா: ।
எததேவஹி மே ராஜந் விவிதாச்ச க்ரியாஸ்ததா ॥
அதோமுலா: க்ரியா: ஸர்வா மம ராஜந்ந ஸம்சய: ।
பஹுநா கிம் ப்ரலாபேந ந தாஸ்யே காமதோஹிநீம் ॥

"இந்த சபலையினுடைய அதீனமாகத்தான் என் ஜீவனமும் நடந்துவருகிறது. தர்சபௌர்ணமாஸமோ மற்ற யக்ஞங்களோ இக்காமதேனு மூலமாகத்தான் ஒழுங்காக நடைபெற்று ருத்விக்குக்களான ப்ராம்மணர்களுக்கும் பூர்ண தக்ஷிணையை நான் கொடுத்துக்கொண்டுவருகிறேன். ஸமஸ்தமான க்ரியைகளும் இக்காமதேனு மூலமாகத்தான் எனக்கு நடந்துகொண்டுவருகிறது. அதிகம் சொல்வதில் என்ன ப்ரயோஜனம், இக்காமதேனுவை நான் கொடுக்கமாட்டேன்" என்று தீர்மானமாகச் சொன்னார்.

விச்வாமித்ரர் என்ற அரசன் காமதேனுவை அபஹ ரித்துக்கொண்டு போக யத்னம் செய்தாலும் வஸிஷ்ட பகவான் காமதேனுவை தன்னைவிட்டுப் பிரித்து ராஜனி டம் கொடுக்க மனம் வைக்கவில்லை. ஆகிலும், ராஜன் பலாத்காரமாக சபலை என்ற காமதேனுவை தன் வசம் பிடித்திழுத்தார். காமதேனுவும் ராஜனால் பலாத்காரமாக இழுக்கப்பட்டு ரொம்பவும் துக்கத்துடன் கதறிற்று. 'ராஜ படர்களால் நான் இழுக்கப்படுகிறேனே, நான் என்ன செய்வேன். மஹர்ஷிக்கு நான் ஒன்றும் அபசாரம் செய்ய வில்லையே! நிரபராதியான என்னை பரம தார்மிகனான வஸிஷ்டபகவான் ஒரு க்ஷத்ரியன் வசமாகும்படி செய்ய லாமா ?' என்று ஆலோசித்து பெருமூச்சுவிட்டுக்கொண்டு தன்னை இழுக்கும் ராஜபடர்களை உதறித்தள்ளிவிட்டு வாயு வேகமாக வஸிஷ்ட பகவானுடைய பாதமூலத்தை சரண மடைந்து, 'ஹா!' என்று அலறிக்கொண்டு கம்பீரமான ஸ்வரத்தோடு, 'மஹர்ஷே! பகவன்! ஹே ப்ரும்மபுத்ர! நான் என்ன அபராதம் செய்தேன்! ராஜபடர்கள் தங்களுடைய ஸமீபத்திலிருந்து என்னை பலாத்காரமாக இழுக்கிறார்களே! என்னை ரக்ஷிக்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டு கத றிற்று. வஸிஷ்ட பகவானும் காமதேனுவின் வார்த்தை யைக் கேட்டு தனது ஸஹோதரி துக்கப்பட்டால் தனக்கு எப்படி மனதில் வருத்தம் ஏற்படுமோ அதுபோலொத்த வருத்தத்தைத் தான் அடைந்து துக்கத்தால் தவிக்கும்படி செய்யப்பட்ட மனஸோடுகூடின காமதேனுவைப் பார்த்துச் சொன்னதாவது :—'ஹே! சபலே! நான் உன்னை த்யா கம் செய்யவில்லை. நீயும் எனக்கு யாதொருவிதமான அப ராதத்தையும் செய்யவில்லை. இந்த விச்வாமித்ரர் என்ற அரசன் உன்னை அபஹரிக்க இச்சிக்கிறான். அவனோ அர சன்; தபோபலத்தால் ராஜாக்களை சிக்ஷிக்கக்கூடாது. ராஜ பலமும் ப்ராம்மண பலமும் ஸமானமல்ல. அதுவும் பலிஷ் டனான ராஜா அகண்டபூமண்டலத்திற்கு அதிபதி; ஸேனை களோ அளவிடமுடியாமல் இந்த ராஜனிடம் விளங்கிவரு கின்றன,.

दुर्लभस्य च धर्मस्य जीवितस्य शुभस्य च ।
राजानो वानरश्रेष्ठ प्रदातारो न संशयः ॥
तान्नहिंस्यात् नचाक्रोशेत् नाक्षिपेत् नाप्रियं वदेत् ।
देवा मानुषरूपेण चरन्त्येते महीतले ॥

𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌸𑍍𑌯𑌚 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌜𑍀𑌵𑌿𑌤𑌸𑍍𑌯 𑌶𑍁𑌭𑌸𑍍𑌯 𑌚 ।
𑌰𑌾𑌜𑌾𑌨𑍋 𑌵𑌾𑌨𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌪𑍍𑌰𑌦𑌾𑌤𑌾𑌰𑍋 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥
𑌤𑌾𑌨𑍍𑌨𑌹𑌿𑌂𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌨𑌚𑌾𑌕𑍍𑌰𑍋𑌶𑍇𑌤𑍍 𑌨𑌾𑌕𑍍𑌷𑌿𑌪𑍇𑌤𑍍 𑌨𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑌂𑌵𑌦𑍇𑌤𑍍 ।
𑌦𑍇𑌵𑌾 𑌮𑌾𑌨𑍁𑌷𑌰𑍂𑌪𑍇𑌣 𑌚𑌰𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌤𑍇 𑌮𑌹𑍀𑌤𑌲𑍇 ॥

துர்லபஸ்யச தர்மஸ்ய ஜீவிதஸ்ய சுபஸ்ய ச ।
ராஜானோ வாநரச்ரேஷ்ட ப்ரதாதாரோ ந ஸம்சய: ।
தாந்நஹிம்ஸ்யாத் நசாக்ரோசேத் நாக்ஷிபேத் நாப்ரியம் வதேத் ।
தேவா மாநுஷரூபேண சரந்த்யேதே மஹீதலே ॥

என்ற சாஸ்த்ரப்படி ராஜாக்கள் ப்ராணிகளுடைய ஜீவிகையை கொடுக்கும் புண்யவான் ஆனதினாலும், தர்மத்தை நிலைநாட்டுகிறவன் ஆனதினாலும், ராஜாக்களை ப்ரஜைகள் அனுஸரித்தே நடக்கவேண்டும். ஹிம்ஸிக்கக்கூடாது. ராஜனிடம் அதட்டிப் பேசக்கூடாது. ராஜனை உதரித்தள்ளக் கூடாது. ராஜனுக்கு அப்ரியமான வார்த்தையை பேசக் கூடாது. தேவர்கள்தான் மனுஷ்யனைப்போல் ராஜவேஷம் போட்டுக்கொண்டு பூலோகத்தில் ஸஞ்சரிக்கிறார்கள் என்று ராஜாக்களுடைய மஹிமை ரொம்பவும் உயர்ந்ததாகத் தெரிகிறபடியால், அந்த ராஜாக்களை ப்ரும்ம ரிஷிகள் தன் தபோபலத்தால் சிக்ஷிப்பது என்பது தர்மமாக ஆகாது. அத்துடன் இன்றையதினம்தான் இந்த ராஜனுக்கு நான் ஆதித்யம் செய்திருக்கிறேன். அதிதியாக வந்த ஒரு மனிதனை ஆதித்யம் செய்துவிட்டு சிக்ஷிப்பது என்றால் அதற்கு மேலான அதர்மமே லோகத்தில் கிடையாது, ஆகையால் இந்த ஸந்தர்ப்பத்தில் ஹே சபலே! நான் என்ன செய்ய முடியும்" என்று சொன்னார்.

வஸிஷ்ட பகவானால் இவ்விதம் சொல்லப்பட்ட காம தேனுவோ வஸிஷ்டரைப் பார்த்து "மஹர்ஷே! இப்படி சொல்வது ந்யாயமில்லை,

नबलं क्षत्रियस्याहुः ब्राह्मणो बलवत्तरः
ब्रह्मन् ब्रह्मबलं दिव्यं क्षत्रात्तु बलवत्तरं ॥
अप्रमेयबलं तुभ्यं न त्वयाबलवत्तरः ।
विश्वामित्रो महावीर्यः तेजस्तवदुरासदं ॥
नियुङ्क्ष्वमां महाभाग त्वद्ब्रह्मबलसंभृतां
तस्य दर्पबलंयत्तत् नाशयामि दुरात्मनः ॥

𑌨𑌬𑌲𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯𑌾𑌹𑍁𑌃 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌬𑌲𑌵𑌤𑍍𑌤𑌰𑌃 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌬𑌲𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌤𑍁 𑌬𑌲𑌵𑌤𑍍𑌤𑌰𑌂 ॥
𑌅𑌪𑍍𑌰𑌮𑍇𑌯 𑌬𑌲𑌂𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌨 𑌤𑍍𑌵𑌯𑌾𑌬𑌲𑌵𑌤𑍍𑌤𑌰𑌃 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑍋 𑌮𑌹𑌾𑌵𑍀𑌰𑍍𑌯𑌃 𑌤𑍇𑌜𑌸𑍍𑌤𑌵 𑌦𑍁𑌰𑌾𑌸𑌦𑌂 ॥
𑌨𑌿𑌯𑍁𑌙𑍍𑌕𑍍𑌷𑍍𑌵𑌮𑌾𑌂 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗 𑌤𑍍𑌵𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌬𑌲𑌸𑌂𑌭𑍃𑌤𑌾𑌂
𑌤𑌸𑍍𑌯 𑌦𑌰𑍍𑌪𑌬𑌲𑌂𑌯𑌤𑍍𑌤𑌤𑍍 𑌨𑌾𑌶𑌯𑌾𑌮𑌿 𑌦𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥

நபலம் க்ஷத்ரியஸ்யாஹு: ப்ராஹ்மணோ பலவத்தர: ।
ப்ரஹ்மந் ப்ரஹ்மபலம் திவ்யம் க்ஷத்ராத்து பலவத்தரம் ॥
அப்ரமேய பலந்துப்யம் ந த்வயாபலவத்தர: ।
விச்வாமித்ரோ மஹாவீர்ய: தேஜஸ்தவ துராஸதம் ॥
நியுங்க்ஷ்வமாம் மஹாபாக த்வத்ப்ரஹ்ம பலஸம்ப்ருதாம் ।
தஸ்யதர்ப பலம்யத்தத் நாசயாமி துராத்மந: ॥

என்ற வசனங்களால் க்ஷத்ரியனுடைய பலம் பலத்தில் சேர்ந்ததல்ல. ப்ராம்மணன்தான் பலவான். க்ஷத்ரியனைக் காட்டிலும் ப்ராம்மணன் எவ்வளவோ விதத்தில் மேலானவன். ப்ராம்மணனுடைய பலத்தை இவ்வளவுதான் என்று அளவுக்குட்படுத்த முடியாது. தங்களைக் காட்டிலும் இந்த விச்வாமித்ரர் என்ற அரசன் மேலானவரில்லை. தங்களுடைய ப்ரும்மதேஜஸ்ஸுக்கு அருகில் யார் வரமுடியும்?

தங்களுடைய ப்ரும்மதேஜஸ்ஸின் உதவியால்தான் நானே லோகமான்யமாக ஆகிறேன். எனக்கு தாங்கள் ஆக்ஞை செய்தால் போதும். இந்த ராஜனுடைய கொழுப்பை அடக்கி விடுகிறேன்' என்று காமதேனு சொன்னாள். உடன் வஸிஷ்ட பகவானும் "ஹே சபலே! அப்படியானால் சீக்ரமாக சத்ரு பலத்தை நாசம் செய்யக்கூடிய ஸேனைகளை ஸ்ருஷ்டிக்கலாம்" என்று ஆக்ஞாபித்தார். வஸிஷ்டருடைய ஆக்ஞைக்கிணங்கி காமதேனுவானவள் ரொம்பவும் கோபத்துடன் சத்ரு பலத்தைப் பார்த்து ஹூம்காரம் செய்தாள்.

அந்த ஹூம்காரத்திலிருந்தும் விச்வாமித்ரர் என்ற அரசன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே கோடிக்கணக்கான மிலேச்சர்கள் ஸ்ருஷ்டிக்கப்பட்டு விச்வாமித்ரருடைய ஸேனைகளை அடித்து நொருக்கி விரட்டினார்கள். பப்லவாள் என்றும் சகாள் என்றும், யவனுள் என்றும் வெவ்வேறு ஜாதியாக நீக்கப்பட்டு ஸமுத்ரம்போல் அந்த மிலேச்ச ஸேனை புரண்டுவந்தது. விச்வாமித்ரர் என்ற அரசனுடைய ஸேனை முழுவதும் பெரும்பாலும் நாசமடைந்து சில ஸேனைகள் ஓடிவிட்டன. ராஜனுக்கு மஹா கோபம் ஏற்பட்டு ரதத்தில் ஏறிக்கொண்டு காமதேனுவின் ஹூம்காரத்தால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட மிலேச்ச ஸேனைகளை பாணப்ரயோகம் செய்து நாசம் செய்தான். மறுபடியும் காமதேனுவுக்கு மிகவும் கோபம் ஏற்பட்டு ஹூம்காரம் செய்தாள். அந்த ஹூம்காரத்திலிருந்தும் ஸ்ருஷ்டிக்கப்பட்ட மிலேச்ச ஸேனைகள் முன் ஸேனைகளைக் காட்டிலும் கோடிமடங்கு அதிகமாக ஆகி ஸமுத்ரத்தால் சூழப்பட்ட பூமியில் எல்லா பாகங்களிலும் மிலேச்சர்களாகவே ஆகும்படி ஆய்விட்டன. ஒவ்வொரு மிலேச்சனும் மஹா பராக்மசாலியாகவும் மஹா விநயத்தோடு கூடினவர்களாகவும் கத்தியினால் ப்ராணிகளை வெட்டிப் போடுவதில் முதன்மையான பலத்தோடுகூடினவர்களாகவும் விசித்ரமான வேஷங்களோடும் சிகப்பு உடைகளை

தரித்துக்கொண்டும், அஸிபட்டஸம் முதலான ஆயுத விசேஷங்களை கையில் வைத்துக்கொண்டு விச்வாமித்ர ராஜனுடைய ஸேனைகளை நாசம் செய்தார்கள். விச்வாமித்ரர் பின்னேடு வந்த ஸகல ஸேனைகளும் அழிந்துவிட்டன. பிறகு ராஜனும் மஹா கோபத்தை அடைந்து அபூர்வமான அஸ்த்ரங்களை மிலேச்ச ஸேனைகளின்மேல் பிரயோகம் செய்தான். அந்த அஸ்த்ரங்களால் மிலேச்ச ஸேனைகளும் சாம்பலாகச் செய்யப்பட்டார்கள். சிலர்கள் அஸ்த்ரத்தால் மோஹமடைந்து திக்திசை தெரியாமல் ப்ராந்தர்களாக நின்று வந்தார்கள். இந்த ஸந்தர்ப்பத்தில் வஸிஷ்ட பகவான் காமதேனுவைப் பார்த்து மறுபடியும் அளவற்ற ஸேனைகளை ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்று ஆக்ஞாபித்தார்.

காமதேனுவும் மறுபடியும் வஸிஷ்டபகவானுல் தனக்குபதேசம் செய்யப்பட்ட யோக மஹிமையால் ஹூம் காரம் செய்தது. அதிலிருந்தும் கோடி ஸூர்யர்களுக்கு ஸமானமான ஜ்யோதியோடு கூடினவர்களாகக் கொண்டு காம்போஜா என்ற மிலேச்ச ஜாதியில் சில விசேஷமான க்ருஹஸ்தபலத்தோடு கூடின படர்கள் உண்டானுர்கள். பால்கறக்கும் மடியிலிருந்து பப்லவர்கள் என்று சில படர்கள் ஏற்பட்டார்கள். மூத்ரஸ்தானத்திலிருந்து யவனர்கள் ஏற்பட்டார்கள். சக்ரத்ஸ்தானத்திலிருந்து சகாள் என்றவர்கள் ஏற்பட்டார்கள். மயிர்க்கால்களிலிருந்து மிலேச்சர்கள், ஹாரீதாள், சிராதாள், (கூர்கர்) ஏற்பட்டார்கள். ஸேனைகள் அளவற்றதாக ஆகிவிட்டது. விச்வாமித்ரர் என்ற அரசனுடைய ஸேனை முழுமையும் ஒரு க்ஷணத்தில் காமதேனுவின் ஸேனைகளால் வதிக்கப்பட்டதாக ஆகிவிட்டன. ரதங்கள், யானைகள், குதிரைப்படைகள், கால் படைகள் எல்லாம் த்வம்ஸமாகிவிட்டன.

இவ்விதம் வஸிஷ்டபகவானுடைய தபோமஹிமையாலும், யோகமஹிமையாலும் காமதேனு மூலமாக ஸ்ருஷ்டிக்கப்பட்ட மிலேச்ச ஸேனைகளால் விச்வா

மித்ரருடைய ஸேனைகள் மூலதோநாசமடைந்த பிற்பாடு விச்வாமித்ரருடைய நூறு பிள்ளைகள் அநேகவிதமான ஆயுதங்களோடு பரம கோபத்துடன், ஜபம் செய்துகொண்டு மௌனமாக ஆஸனத்தில் அமர்ந்திருக்கும் வஸிஷ்டரை எதிர்த்தார்கள் ; வஸிஷ்டபகவானே ஹூம்காரத்தால் விச்வாமித்ரருடைய நூறு பிள்ளைகளையும் அவர்களுடன் பின் தொடர்ந்து வந்த சதுரங்க ஸேனைகளையும் எரித்து பஸ்பமாகச் செய்துவிட்டார். விச்வாமித்ர ராஜனும் நூறு பிள்ளைகளையும் யமனுக்கு இரையாக கொடுத்துவிட்டு அளவற்ற ஸேனைகளையும் தன்னுடைய கொழுப்பால் நாசமடையும்படி செய்துவிட்டு வஸிஷ்டபகவானுடைய ஆச்ரமத்திற்கு எதிரில் ஏகாங்கி (ஒருவராக) ஆகிவிட்டார். லஜ்ஜையோ சொல்லிமுடியவில்லை. சப்தமில்லாத ஸமுத்ரம் போலும், பல்லைப்பிடுங்கின பாம்புபோலும், ராஹுவினுல் மறைக்கப்பட்ட ஸூர்யன்போலும் விளங்கிவந்தார். விச்வாமித்ரருக்கு வேகம் குறைந்தது என்பதற்கு ஸமுத்ரத்தை உபமானமாக அறியவும். தேஜஸ்ஸே போய்விட்டது என்பதற்கு உபரதனை ஆதித்யனை உபமானமாக அறியவும். இனி யுத்தம்செய்து இவர் மற்றவரை கொல்லமுடியாது என்பதில் பல்லைப்பிடுங்கின பாம்புபோல் ஆகிவிட்டது என்பதற்கு உதாஹரணமாக அறியவும். பிள்ளைகளையும் ஸேனைகளையும் இழந்து, அறுக்கப்பட்ட இறக்கைகளோடு கூடின பக்ஷியைப்போல் தீனனுக ஆகி கொழுப்பும் அடங்கி உத்ஸாஹமும் தொலைந்து விச்வாமித்திரர் ரொம்பவும் துக்கத்தை அனுபவித்தார். பிறகு மனஸை ஸமாதானப் படுத்திக்கொண்டு ராஜ்யத்திலேயே மீதமாக தங்கியிருந்த ஒரு புத்ரனை ராஜவாகச் செய்துவிட்டு அரண்யம்சென்றுர்.

ஹிமவத் பர்வதத்தின் தாழ்வரை சென்று பரமேச்வரனைக் குறித்து உக்ரமான தபஸ்ஸைச் செய்தார். இவ்விதம் சில காலம் உக்ரமான தபஸ்ஸைச் செய்துகொண்டிருக்கும்போது பரமேச்வரனும் விருஷபாரூடராக ஆவிர்ப்ப

வித்து விச்வாமித்ரருக்கு தர்சனம் கொடுத்தார். "ஹே! ராஜன்! எதற்காக நீ தபஸ்ஸைச் செய்கிறாய், உன் மனோரதத்தை சொல். வரனை நான் கொடுக்கிறேன். உன்னிஷ்டம் என்னவென்பதைப் பற்றி விவரிக்கலாம்" என்று சொன்னார். விச்வாமித்ரர் என்ற அரசனும் பரமேச்வரனுடைய வார்த்தையைக் கேட்டு பரமஸந்தோஷத்துடன் பரமேச்வரனுக்கு நமஸ்காரம்செய்து அஞ்ஜலிபந்தனம் செய்து கொண்டு "ஹே பரமேச்வரா! ஹே கங்காதரா ஹே மஹா தேவா! என்னுடைய தபஸ்ஸால் தாங்கள் ஸந்தோஷமடைந்தீர்கள் என்பது உண்மையானால் தனுர்வேதத்தை எனக்கு உபதேசம் செய்யவேண்டும். அந்த தனுர்வேதமும், ஸாக்ஷாத் தனுர்வேதத்திற்கு உபகாரகமான அங்கங்களோடும் பரம்பரையாக உபகாரம் செய்கிற உபாயங்களோடும் உபநிஷத்துக்களோடும் குரு உபதேசத்தைக் கொண்டுதான் அறியமுடியும் என்ற ரஹஸ்யபாகங்களோடும் என் மனதில் ஸ்புரிக்கட்டும். தேவர்களிடத்திலோ, தானவர்களிடத்திலோ, கந்தர்வ ராக்ஷஸர்களிடத்திலோ எங்கெந்த அம்சங்கள் ப்ரஸித்தமானவைகளோ அந்த அந்த அஸ்த்ரங்களும் எனக்கு எதிரில் ஸ்புரிக்கவேண்டும். ஹே தேவ தேவ! உன் ப்ரஸாதத்தினால் நான் எது நினைத்தாலும் அது கைகூடவேண்டும்" என்றும் பரமேச்வரனிடம் வரம் கேட்டுக்கொண்டார். கங்காதரனை பரமேச்வரனும் தன்னுடைய உபாஸனத்தினால் தானே அனுக்ரஹபூர்வமாக கொடுத்த திவ்யாஸ்த்ரங்களும் ப்ராம்மணனிடத்தில் பயனற்றதாக ஆகும் என்பதை வெளிப்படுத்தி, ப்ரும்ம பலமே மேலான பலம் என்பதை லோகத்தில் பிரகாசப்படுத்தும் உத்தேசத்துடன் விச்வாமித்ரர் என்ற அரசன் கேட்ட வரங்களையெல்லாம் கொடுத்து 'ராஜனுடைய மனம் போல் எல்லாம் நடக்கும்' என்று சொல்லிவிட்டு பரமேச்வரன் அந்தர்த்யானமடைந்தார்.

விச்வாமித்ர ராஜனும் அஸ்த்ர பலங்களை அடைந்து, வஸிஷ்டரை கட்டாயம் ஜயிக்கலாமென்ற குருட்டு தைர்

யத்தையும் அடைந்து ரொம்பவும் அஹங்காரத்தோடு கூடினவராக ஆனுர். பரமேச்வரனுடைய ப்ரஸாதம் நமக்கிருக்கும்பொழுது இனி இந்த லோகங்களிலேயே எதிரி யாரும் இல்லை என்ற எண்ணத்துடன் பர்வகாலத்தில் வ்ருத்தி அடைகிற ஸமுத்ரம்போல் வீர்யத்தால் வ்ருத்தி அடைந்து வஸிஷ்ட பகவானை ஜயித்துவிட்டதாகவே எண்ணினுர். உடன் வெகுவேகமாக வஸிஷ்ட பகவானுடைய ஆச்ரமத்திற்கு அருகில் சென்று பரமேச்வரனுடைய அனுக்ரஹத்தால் கிடைத்த திவ்யாஸ்த்ரங்களை ப்ரளயகால வர்ஷம்போல் வஸிஷ்டருடைய ஆச்ரமத்திற்கு அருகில் வர்ஷித்தார். வஸிஷ்ட பகவானுடைய ஆச்ரமத்திற்கு அருகிலுள்ள செடி, கொடி, மரங்களெல்லாம் தீப் பற்றிக்கொண்டு பஸ்பமாக ஆகிவிட்டன. விச்வாமித்ரர் மேலும் மேலும் அஸ்த்ர ப்ரயோகம் செய்துகொண்டேயிருந்தார். ஆச்ரமத்திலுள்ள மஹர்ஷிக் கூட்டங்களோ வஸிஷ்டரை நம்பி இனிமேல் நம்மால் ஒன்றும் முடியாதென்ற எண்ணத்துடன் திக்கு திக்காக ஓடிவிட்டனர். மிருக பக்ஷி கணங்களும் அரண்டு ஓடிவிட்டன. வஸிஷ்ட பகவான் ஆச்ரமம் சூன்யமாகிவிட்டது. ஒரு முஹூர்த்தகாலம் பேச்சு மூச்சில்லாமலிருந்தது. ஓடுகிற ரிஷிகளிடம் 'பயப் படாதீர்கள், விச்வாமித்ரரை ஒழித்துவிடுகிறேன்' என்று வஸிஷ்டர் கதறினுர். ஆகிலும் வஸிஷ்டருடைய வார்த்தையை லக்ஷ்யம் செய்து ஒரு ரிஷியாவது அங்கு தங்கவில்லை. வஸிஷ்டருக்கோ மஹாகோபம் ஏற்பட்டது விச்வாமித்ரரைப் பார்த்து, வஸிஷ்டபகவான் "ராஜனே! உனக்கு ஆதித்யம் செய்ததற்கு இதுதானு பலன்? இந்த ஆச்ரமத்தை வ்ருத்திசெய்ய எவ்வளவு காலம் ஆகிவிட்டது என்பதை எண்ணி முடியுமா? அதை ஒரு க்ஷணத்தில் பஸ்பமாக்கிவிட்டாய். பரமதூர்தன்; மூடா! நீ சீக்ரம் அழிந்து போய்விடுவாய்" என்று சொல்லிவிட்டு தனது யோக தண்டத்தை கையில் பிடித்துக்கொண்டு 'விச்வாமித்ரா! காட்டு உன் பலத்தை, பார்க்கலாம்!' என்று நின்ருர். அந்த ஸங்

தர்ப்பத்தில் வஸிஷ்டபகவானைப் பார்க்கும்பொழுது புகை அடங்கின ப்ரளயகாலாக்னியோ என்றும் கையில்வைத் திருக்கும் தண்டத்தை பார்க்கும்பொழுது இது மற்றொரு யமதண்டமோ என்றும் தோன்றிற்று.

முன்சொன்னபடி, நீ துராசாரன், மூடன், என்று வஸிஷ்ட பகவானால் திக்காரம் செய்யப்பட்ட விச்வாமித்ர ராஜனானவன் ஆக்னேயாஸ்த்ரத்தைக் கையில் வைத்துக் கொண்டு, "வஸிஷ்டரே, எதிரில் நில்லும், பார்ப்போம்" என்று சொன்னார். வஸிஷ்டபகவானோ ஸகலவிதமான அஸ்த்ர பலங்களால் ஸம்பூர்ணமான க்ஷத்ரியனுடைய வீர்யத் தைக் காட்டிலும் ப்ரும்ம பலமே மேலானது என்பதை ப்ர காசப்படுத்த எண்ணி காலதண்டம் போலொத்த தன் ப்ரும்ம தண்டத்தைக் கையிலெடுத்துக்கொண்டு அந்த ராஜனை பார்த்து "ஹே! க்ஷத்ரியாதம, க்ஷத்ரியகுலத்தை அழிக்கும் மூர்க்கனே, உன்னுடைய பலம் எது உண்டோ அதைக் காட்டலாம். க்ஷத்ரியபலம் எங்கே, ப்ரும்மபலம் எங்கே, உன்னுடைய பலத்தை அடியோடு ஒழித்துவிடுகிறேன்" என்று சொன்னார். விச்வாமித்ர ராஜனுடைய கோரமான ஆக்னேயாஸ்த்ரமோ வஸிஷ்டபகவானுடைய ப்ரும்மதண் டத்தால் சமனத்தை அடைந்துவிட்டது.

கோரமான அக்னியும் ஜலத்தினால் அணைவதுபோல் ராஜனுடைய அஸ்த்ரபலம் வஸிஷ்டபகவானிடத்தில் பலிக்க வில்லை. பிறகு ராஜன் வாருணம், ரௌத்ரம், ஐந்த்ரம், பாசு பதம், ஐஷீகம், முதலான அஸ்த்ரங்களை ப்ரயோகம் செய் தான். மானவம், மோஹனம், கந்தர்வம் ஸ்வாபனம், ஜ்ரும் பணம், ஸந்தாபனம், விலாபனம், சோஷணம், தாரணம், வஜ்ரம் ப்ரும்மபாசம், காலபாசம், வருணபாசம், பைநாகாஸ்த்ரம், சீதமான இடி, உண்மையான இடி, தண்டாஸ்த்ரம், பைசாசம், க்ரௌஞ்சம், தாமசக்ரம், காலசக்ரம், விஷ்ணுசக்ரம், வாயவ் யாஸ்த்ரம், மதனாஸ்த்ரம் ஹயசிரஸ், இரண்டுவிதமான சக்தி கள், கங்காளம், மௌஸலம், வைத்யாதரம், காலாஸ்த்ரம்,

த்ரிசூலம், காபாலம், கங்கணம் முதலான அஸ்த்ரங்களை வெகு கோபத்துடன் விச்வாமித்ரன் என்ற அந்த அரசன் வஸிஷ்டபகவானை குறித்து ப்ரயோகம் செய்தான்.

वसिष्ठे जपतां श्रेष्ठे तदद्भुतमिवाभवत् ।
तानि सर्वाणि दण्डेन ग्रसते ब्रह्मणः सुतः ॥

𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍇 𑌜𑌪𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍇 𑌤𑌦𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑌿𑌵𑌾𑌭𑌵𑌤𑍍 ।
𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌦𑌣𑍍𑌡𑍇𑌨 𑌗𑍍𑌰𑌸𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑍁𑌤𑌃 ॥

வஸிஷ்டே ஜபதாம் ச்ரேஷ்டே ததத்புதமிவாபவத் ।
தாநி ஸர்வாணி தண்டேந க்ரஸதே ப்ரஹ்மண: ஸுத: ॥

என்றபடி, வஸிஷ்டபகவான் தன்னுடைய ப்ரும்மதண்டத்தாலே விச்வாமித்ர ராஜனால் அனுப்பப்பட்ட ஸகல அஸ்த்ர சஸ்த்ரங்களையும் நாசம் செய்துவிட்டார். அபூர்வமான அநேக அஸ்த்ரங்களை அந்த ராஜன் ப்ரயோகம்செய்தும், ஒரு அஸ்த்ரமாவது வஸிஷ்டபகவானிடம் பலிக்கவில்லை. அதற்குக் காரணமோ वसिष्ठे जपतां श्रेष्ठे (𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍇 𑌜𑌪𑌤𑌾𑌂𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍇) (வஸிஷ்டே ஜபதாம்ச்ரேஷ்டே) என்றதினால் வெளிப்படுத்தப்பட்ட மந்த்ர ஜபத்தின் வைபவமே. பிறகு விச்வாமித்ர ராஜன் தான் அனுப்பிய ஸகல சஸ்த்ரங்களும் சாந்தமான பிற்பாடு ப்ரும்மாஸ்த்ரத்தை ப்ரயோகம் செய்தார். ப்ரும்மாஸ்த்ர ப்ரயோக காலத்தில் ஆகாசத்தில் வேடிக்கை பார்க்கவந்த ஸகல தேவர்களும், ரிஷிகளும், கந்தர்வர்களும், உரகர்களும், ரொம்பவும் பயத்தை அடைந்தார்கள். மூன்று லோகங்களும் நடுங்கின. அவ்விதமான ப்ரும்மாஸ்த்ரத்தையும் வஸிஷ்டபகவான் ப்ரும்ம வித்யாப்யாஸத்தால், அதாவது தான் ப்ரதிதினமும் அனுஸந்தானம் செய்துவரும் अहं ब्रह्मास्मि (𑌅𑌹𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑍍𑌮𑌿) (அஹம் ப்ரும்மாஸ்மி) என்ற ப்ரும்ம வித்யையின் அப்யாஸத்தால் ஏற்பட்ட தேஜஸ்ஸை அந்த தன்னுடைய ப்ரும்மதண்டத்தில் அபிமந்த்ரணம் செய்து புகவிட்டு, அந்த ப்ரும்மாஸ்த்ரத்தையும் நாசம் செய்துவிட்

டார். வஸிஷ்டபகவான் விச்வாமித்ர ராஜனால் ப்ரயோகம் செய்யப்பட்ட ப்ரும்மாஸ்த்ரத்தை தன்னுடைய தண்டத்தின் மஹிமையினால் தனக்குள் விழுங்கிவிட்டார். அவ்விதம் விழுங்கின காலத்தில், வஸிஷ்டபகவானுடைய சரீரமோ, மூன்றுலோகங்களுக்கும் பயத்தைக் கொடுக்கக்கூடியதான க்ரூரமான ரூபத்துடன் விளங்கிவந்தது. வஸிஷ்டபகவானுடைய சரீரத்திலுள்ள ரோம கூபங்களிலிருந்து அக்னி மண்டலத்திலிருந்து உண்டாகும் புகையைப்போல புகையும் ஜ்வாலையும் வெளிவந்தன. வஸிஷ்டபகவானுடைய கையிலிருக்கும் தண்டமோ, புகையற்ற ப்ரளய காலாக்னி போலும், யமதண்டம்போலும் விளங்கிவந்தது. ஸகலமான தேவர்களும் 'மந்த்ர ஜபம் செய்வதில் ச்ரேஷ்டரான வஸிஷ்ட பகவானே! ஹே, ப்ரும்மன்! இந்த தேஜஸ்ஸை உபஸம்ஹாரம் செய்துகொள்ளவேண்டும். தங்களுடைய பலமோ அமோகமானது. விச்வாமித்ர ராஜனும் தங்களால் ஜயிக்கப்பட்டவனாகவே ஆகிவிட்டான். தாங்கள் ப்ரஸன்னமான மனதோடு கூடினவராக ஆகவேண்டும். லோகமும் நிர்ப்பயமுள்ளதாக ஆகவேண்டும்' என்று ஸ்தோத்ரம் செய்து ரொம்பவும் ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார்கள்.

அவ்விதம் தேவர்கள் ரிஷிகள் முதலானவர்களுடைய ப்ரார்த்தனைக் கிணங்கி, வஸிஷ்டபகவானும் ரொம்பவும் பொறுமையை அடைந்தார். விச்வாமித்ர ராஜனும், அபஜயத்தை அடைந்து பெருமூச்சுவிட்டுக்கொண்டு,

धिग्बलं क्षत्रियबलं ब्रह्मतेजोबलं बलं ।
एकेन ब्रह्मदण्डेन सर्वास्त्राणि हतानि मे ॥

तदेतत्समवेक्ष्याहं प्रसन्नेन्द्रियमानसः
तपो महत्समास्थास्ये यद्वै ब्रह्मत्वकारणं ॥

𑌧𑌿𑌗𑍍𑌬𑌲𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌬𑌲𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍇𑌜𑍋𑌬𑌲𑌂 𑌬𑌲𑌂 ।
𑌏𑌕𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌦𑌣𑍍𑌡𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌹𑌤𑌾𑌨𑌿 𑌮𑍇 ॥

𑌤𑌦𑍇𑌤𑌤𑍍𑌸𑌮𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌹𑌂 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌨𑌸𑌃 ।
𑌤𑌪𑍋𑌮𑌹𑌤𑍍𑌸𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌸𑍍𑌯𑍇 𑌯𑌦𑍍𑌵𑍈 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌂 ॥

திக்பலம் க்ஷத்ரியபலம் ப்ரஹ்மதேஜோபலம் பலம் ।
ஏகேந ப்ரஹ்மதண்டேந ஸர்வாஸ்த்ராணி ஹதாநி மே ॥

ததேதத்ஸமவேக்ஷ்யாஹம் ப்ரஸந்நேந்த்ரிய மாநஸ: ।
தபோமஹத்ஸமாஸ்தாஸ்யே யத்வை ப்ரஹ்மத்வகாரணம் ॥

என்ற ச்லோகங்களால், 'க்ஷத்ரியனுடைய பலத்தை ஒரு பலமாக எண்ணக்கூடாது. அது நிந்திக்கத்தகுந்ததாகத் தான் ஆகும். ப்ராம்மணனுடைய பலத்தைத்தான் பலமாகச் சொல்லலாம். ப்ராம்மணன் கையில் வைத்துக் கொண்டிருக்கும் ஒரு ப்ரும்ம தண்டத்தால் நான் ப்ரயோகம் செய்த ஸகல அஸ்த்ரங்களும் பயனற்றதாக ஆனதோடுங் கூட ஸ்வரூப நாசத்தையும் அடைந்துவிட்டதல்லவா? பரமேச்வரனுல் கொடுக்கப்பட்ட ரொம்பவும் ரஹஸ்யமான அஸ்த்ர விசேஷங்கள்கூட ப்ரும்மதண்டத்தால் நாசத்தை அடைந்தன. ப்ரும்மபலமே மேலானதென்பதற்கு இதைத் தவிர ஏதேனும் நிதர்சனம் வேண்டுமா? ஆகையால், இந்த விஷயத்தை நன்கு ஆலோசித்த நான், மனது, இந்த்ரியங்கள் எல்லாவற்றையும் நிக்ரஹம் செய்துகொண்டு, ப்ராம்மண்யத்தை அடைய எவ்விதமான தபஸ் காரணமாக ஆகுமோ அவ்விதமான தபஸ்ஸை நான் செய்யப்போகிறேன். ப்ராம்மண்யத்தை அடைந்துதான் இனி வேறு கார்யம்செய்ய யத்னம் செய்கிறது' என்று விச்வாமித்ரராஜன் தீர்மானம் செய்தார். பரமேச்வரனுல் விச்வாமித்ரருக்கு கொடுக்கப்பட்ட அஸ்த்ர ரஹஸ்யங்களும், வஸிஷ்ட பகவானிடத்தில் பலிக்காதபோன காரணத்தைக் கொண்டு பரமேச்வரனுக்கு, அபகர்ஷத்தை சில மேதாவிகள் கல்பிப்பார்கள்.

அந்த கல்பனையைக் காட்டிலும், ஈச்வரனுல் கொடுக்கப்பட்ட அஸ்த்ரங்கள்கூட ஒரு ப்ராம்மணனிடத்தில் பலிக்கவில்லை என்றதினுல் ப்ராம்மணனுடைய மஹத்வம் ஆதி

சேஷனுலேயும் வர்ணிக்கமுடியாது என்று ப்ராம்மண்யத்தை ச்லாகிப்பதே மேலானதாக ஆகும். ஸர்வ வேதங்களிலும் உத்கோஷிக்கப்படுகிற ஒரு தேவதையைக் கீழாகச் சொல்கிறதற்கு காரணத்தைக் கவனிக்கிற புத்தியைக் காட்டிலும், ப்ராம்மண்யத்தை ப்ரசம்ஸை செய்வதற்கு காரணத்தைத் தேடுகிற புத்தியே மேலானது என்பதில் ஸந்தேஹமில்லை. விச்வாமித்ரராஜனும் வஸிஷ்டபகவானிடம் அவமானத்தை அடைந்து, தபிக்கிற மனதோடு கூடினவராகி, அடிக்கடி பெருமூச்சு விட்டுக்கொண்டு வஸிஷ்டபகவானிடமுள்ள வைரத்தையும் த்ருடமானதாகவும் தீர்க்கமாகவும் செய்துகொண்டு, தக்ஷிண திக்கை (தெற்கு) நோக்கிச் சென்று உக்ரமான தபஸ்ஸைச் செய்தார். என்ன தபஸ்ஸைச் செய்தாலும், மஹாப்ராம்மணுன வஸிஷ்டபகவானிடத்தில் தீர்க்கவைரியாக ஆகிவிட்டபடியால், அவருடைய தபஸ்ஸுக்கு அடிக்கடி விக்னங்கள் வந்து சேரும் என்பது நிச்சயமாகிறது.

ब्रह्मविदपचारोहि सर्वश्रेयोविनाशकः

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑌪𑌚𑌾𑌰𑍋𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌶𑍍𑌰𑍇𑌯𑍋 𑌵𑌿𑌨𑌾𑌶𑌕𑌃

ப்ரஹ்மவிதபசாரோஹி ஸர்வச்ரேயோ விநாசக:

என்ற ரீதியாக ப்ரும்ம நிஷ்டர்களுடைய அபசாரம் ஸகல விதமான ச்ரேயஸ்ஸையும் அபசாரம் செய்தவனிடத்தில் கொஞ்சங்கூட அண்டாமல் செய்துவிடும். இந்த தத்வத்தைக் கவனிக்காமலே விச்வாமித்ரர் தபஸ் செய்துவந்தார். தன்னுடைய தர்மபத்னியோடுகூட இருந்துதான் தபஸ் செய்துவந்தார். ஆனல் கனிகளையும் கிழங்குகளையும் புஜித்துக்கொண்டு மனது, இந்த்ரியங்களையெல்லாம் தன்வசமாக்கிக்கொண்டுதான் உக்ரமான தபஸ்ஸைச் செய்தார். இவ்விதமான நிலையிலும் காமனுக்கு அவஸரம் ஏற்பட்டு தனது தர்மபத்னியினிடம் ரமிக்க ஆரம்பித்து புத்ரர்களும் உண்டானர்கள். ஹவிஷ்யந்தன், மதுஷ்யந்தன், த்ருட

நேத்ரன், மஹாரதன் என்று நான்கு குமாரர்கள் பிறந்தார்கள். நான்கு குமாரர்களும் ஸத்யம் என்ற விசேஷ தர்மத்திலும் மற்ற ஸாமான்ய தர்மங்களிலும் ச்ரத்தையுள்ளவர்களாகத் தான் இருந்தார்கள். ஆயிரம் வருஷகாலம் தபஸ் செய்தார். முடிவில் ப்ரும்மாவானவர் ப்ரத்யக்ஷமாகி, 'விச்வாமித்ரரே, இதுவரை நீர் ராஜவாக இருந்தீர். உம்முடைய தபஸ்ஸால் நான் ஸந்தோஷத்தை அடைந்தேன். இனிமேல் ராஜர்ஷி என்று நானும் தேவர்கள் எல்லோரும் உம்மை அழைப்போம். ராஜர்ஷிகளுக்கு ஏற்பட்ட லோகங்களெல்லாம் உம்முடைய வசத்தில் வந்துவிட்டன' என்று சொல்லிவிட்டு ராஜர்ஷி என்ற பட்டத்தையும் அளித்துவிட்டு, ஸத்ய லோகம் சென்றார்.

விச்வாமித்ர 'ராஜனே ராஜர்ஷி என்ற பட்டத்திற்காகவா நான் தபஸ் செய்தேன். ப்ரும்மரிஷி என்ற பட்டத்திற்கல்லவா நான் தபஸ் செய்ய ஆரம்பித்தது. தேவர்களெல்லோரும் சேர்ந்து என்னையும் வஞ்சித்துவிட்டார்கள். நான் செய்த தபஸ் முற்றிலும் போதாததுபோல் தோன்றுகிறது' என்று தீர்மானம் செய்து பரமகோபத்துடனும், லஜ்ஜையுடனும் மறுபடியும் உக்ரமான தபஸ்ஸைச் செய்ய ஆரம்பித்தார்.

அந்த ஸந்தர்ப்பத்திலோ, இக்ஷ்வாகுவம்சத்தில் பிறந்த த்ரிசங்கு என்ற ஒரு மஹாராஜன் ஜிதேந்த்ரியனாகவும், ஸத்யவாதியாகவும் இருந்துவந்தான். தன் குல தர்மத்தை கொஞ்சமேனும் கைவிடாமல் காப்பாற்றிவருவதில் அந்த அரசனுக்கு ஸமானமாக மற்றொரு அரசனைச் சொல்ல முடியாது. அந்த ராஜனுக்கு இந்த மனுஷ்ய சரீரத்துடனேயே ஸ்வர்க்கலோகம் செல்லவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. பிறகு ஸசரீரமாகவே ஸ்வர்க்கலோக ப்ராப்திக்கு ஸாதனமான ஒரு யக்ஞத்தை அனுஷ்டிப்பதற்கு ஸங்கல்பம் செய்து, குலகுருவான வஸிஷ்டரையும் வரவழைத்து, தன்னுடைய அபிப்ராயத்தை வணக்கத்துடன் 'அவரிடம்

தெரிவித்தார். வஸிஷ்டபகவானே மனுஷ்ய சரீரத்துடன் ஸ்வர்க்கலோகம் போவதற்கு யக்ஞானுஷ்டானம் செய்வது என்பது உன் விஷயத்தில் அசக்யமான கார்யமாகும். ஆகையால் அவ்விதமான ஸங்கல்பத்தை விட்டுவிடு என்றார். सशरीरेण स्वर्गलोकमेति (ஸஶரீரேண ஸ்வர்கலோகமேதி) (ஸசரீரேண ஸ்வர்கலோகமேதி) என்று ச்ருதியாலேயே, மனுஷ்யர்கள் இந்த சரீரத்துடனேயே ஸ்வர்க்கலோகம் செல்லலாம் என்று சொல்லப்பட்டாலுங்கூட, இந்த இக்ஷ்வாகு வம்சத்திலேயே த்ரிசங்கு ராஜனுக்கு முன்பு இருந்த ப்ரதர்த்தனன் முதலான அரசர்கள் இந்த சரீரத்தோடேயே ஸ்வர்க்கலோகம் சென்றிருக்கிறார்கள் என்பதை வஸிஷ்டபகவான் ப்ரத்யக்ஷமாக அறிந்தவரானாலுங்கூட, த்ரிசங்கு மஹாராஜனுடைய பூர்வ கல்பத்திலுள்ள ஆசாரங்களையெல்லாம் அறியக்கூடிய ஞான சக்தி விசேஷம் வஸிஷ்டபகவானுக்கு இருந்ததினால், அதை நன்கறிந்து, த்ரிசங்கு ராஜனுக்கு அப்போர்ப்பட்ட பாக்யம் ஏற்படுவதற்கு ந்யாயமில்லை என்று நிர்ணயித்து அவ்விதம் ராஜனைத் தடைசெய்தார்.

त्रयः शंकवः सशरीरेण स्वर्गप्राप्तौ यस्यसः त्रिशंकुः

த்ரயः ஶங்கவः ஸஶரீரேண ஸ்வர்கப்ராப்தௌ யஸ்யஸः த்ரிஶங்குः

த்ரய: சம்கவ: ஸசரீரேண ஸ்வர்கப்ராப்தௌ யஸ்யஸ: த்ரிசங்கு:

எந்த மனிதனும் இந்த சரீரத்துடன் எந்த லோகமும் போகலாம். அதற்கு வேண்டிய ஸாதனத்தை அந்தந்த விதம் வேதம் சொல்கிறது. ஆனாலும் மூன்றுவிதமான பாபம் அதற்கு ப்ரதிபந்தகமாகும். (1) அதிதிகளை பஹிஷ்காரம் செய்வது; (2) அந்ருதவசனம் (பொய் சொல்வது) (3) அகாரண ஹிம்ஸை. இந்த த்ரிசங்குவானவன் முன் ஜன்மாவில் ஞானச்ருதி என்ற அரசனாக இருந்து சந்த்ர வம்சத்தை ஆண்டுவருங்காலத்தில் தேவர்களையும் ஜயிக்கக் கூடிய பலவானாக இருந்துவந்தான். தேவேந்த்ரன் ப்ராம்

மண வேஷதாரியாக, அதிலும் அதிதியாக இந்த ராஜனிடம் வந்து, அவனிடமுள்ள பலம் பூராவையும் தனக்கு தானம் செய்யவேண்டுமென்று யாசித்தான். அதற்கு ராஜன் அதை கொடுக்க ஸஹிக்காமல், உண்மையை அறிந்து அந்த தானம் செய்யாமல் தேவேந்த்ரன் என்ற அதிதியை மறுத்துவிட்டார். அது ஒரு முதல் பாபமாகும். ஆதித்ய காலத்தில் எவன் எந்த வேஷத்துடன் வந்து எதைக் கேட்டாலும் அதை அவனுக்கு அர்ப்பணம் செய்வதே அதிதி ஸத்காரம் என்று சொல்லப்படும். அதற்கு விரோதமான ஸங்கதி இந்த ராஜனிடத்தில் பூர்வஜன்மாவில் ஏற்பட்டுவிட்டது.

அத்துடன் மஹர்ஷிகள் இந்த ஞானச்ருதி மஹாராஜனுடைய அன்னத்தால் திருப்தியடைந்து இந்த ராஜனை நிவ்ருத்திமார்க்கத்தில் திருப்பவேண்டுமென்ற எண்ணத்துடன் ராஜனை பல தடவைகளில் ப்ரும்மவிசாரம்செய்ய வேண்டி வற்புறுத்தியும் அந்த ராஜனுக்கு அதில் ப்ருவ்ருத்தி வராததோடுகூட அந்த மஹர்ஷிகளை நாளை, இன்று என்று அலக்கழித்தான். அந்ருத வசனம் (பொய்சொல்வது) என்பது இரண்டாவதான பாபமாகும்.

ஒரு ஸந்தர்ப்பத்தில் வேட்டையாடும்பொழுது ஒரு ரிஷி குமாரன் தன்னை மத்தகஜங்கள் (மதம்பிடித்த யானைகள்) ஹிம்ஸிக்காமலிருப்பதற்காக தபோமஹிமையால் ஸிம்மம் போல் வேஷத்தை தரித்துக்கொண்டு ஆரண்யத்தில் ஸஞ்சரித்துவருங்காலத்தில், இந்த ராஜனுடைய ஸமீபத்தில் வந்தபொழுதுங்கூட இவனை அந்த ஸிம்மம் ஹிம்ஸிக்காமலிருந்ததிலிருந்து அந்த விஷயத்தின் உண்மை என்ன என்பதை விசாரிக்காமல் அகாரணமாக அந்த ஸிம்மத்தை ஹிம்ஸித்துக் கொன்றுவிட்டான். ஆகையால் அது மூன்றுவது பாபமாகும்.

இந்த் த்ரிசங்கு ராஜனின் விஷயத்தில் சரீரத்துடன் ஸ்வர்க்கம் செல்வதற்கு இந்த மூன்றுவிதமான

பாபங்களும் அந்த மார்க்கத்தில் மூன்று முளைகள் அடித்தது போலாகிவிட்டன. முன் ஜன்மாவிலேற்பட்ட பாபங்களை நன்ருக அறியக்கூடிய ஞானசக்தியோடுகூடின அந்த வஸிஷ்டபகவான் இதை ஸூசிப்பதற்காகவே அந்த ராஜனை த்ரிசங்கு என்ற நாமாவால் குறிப்பிட்டு அழைத்தார். அந்த பூர்வஜன்ம பாபாதிசயத்தால்தான் இந்த ஜன்மாவி லும் ஸத்குருவை திரஸ்காரம் செய்வதிலும் அவனுக்கு புத்தி ஏற்பட்டது. வஸிஷ்டரால் "இந்த கார்யம் அசக்யமானது" என்று சொல்லப்பட்ட பிற்பாடு தெற்கு திக்கில் மஹாதபஸ்விகளாக இருந்துவரும் வஸிஷ்டருடைய புத்ரர்களான நூறுபேர்களையும் சரணமடைந்து "மஹான் களே! ஸசரீரத்தோடு ஸ்வர்க்கலோகம் செல்லவேண்டு மென்ற இச்சை எனக்கு இருக்கிறது. என் குருவான வஸிஷ்டபகவானிடத்தில் தெரிவித்தேன். அதற்கு முக்ய ஸாதனமான யக்ஞத்தையும் அனுஷ்டானம் செய்யவேண் டும் என்று ப்ரார்த்தித்ததற்கு, அந்த கார்யம் உன் விஷ யத்தில் ரொம்பவும் அசக்யம் என்று சொல்லப்பட்டு குரு வால் திரஸ்கரிக்கப்பட்டேன். நீங்களோ குரு புத்ரர்கள். குருவுக்கு ஸமானமானவர்களே. குருவினுல் தள்ளப்பட்ட நான் குருபுத்ரர்களான உங்களைவிட்டு வேறு யாரை சரணமடைவது? என்னை சிஷ்யனுக ஸ்வீகரித்துக்கொண்டு இந்த சரீரத்துடன் ஸ்வர்க்கலோகத்திற்கு எந்த உபாயத்தால் ஸுலபமாக போய்ச்சேருவேனே அவ்விதம் அந்த ஸாத னத்தை எனக்கு அனுஷ்டானம் செய்துவைத்து என் மனோ ரதத்தை பூர்த்தி செய்துவைக்கவேண்டு"மென்று ப்ரார்த் தித்தான்.

குருவை த்யாகம் செய்தவர்களுக்கு ஏற்படும் அனர்த் தத்தை அடியிற் சொல்லப்படும் சரித்ரத்தின் மூலமாக அறிந்துகொள்ளவேண்டியது. த்ரிசங்கு ராஜனின் வார்த் தையைக் கேட்ட வாஸிஷ்டாள் என்ற வஸிஷ்டபகவா னுடைய நூறு குமாரர்களும் த்ரிசங்கு ராஜனைப் பார்த்து

"ஹே ராஜனே, ப்ரும்மவாதியான குருவினால் சரீரத்தோடு ஸ்வர்க்கலோகம் போவதென்பது அசக்யம் என்று சொல்லப்பட்ட பிறகு, மற்றொருவனை ஆச்ரயித்தாவது அந்த மனோரதத்தை பூர்த்திசெய்துகொள்ளலாம் என்ற உன் எண்ணமானது நீ மஹாமூடன் என்பதைத்தான் வெளியாக்குகிறது. இக்ஷ்வாகு மஹாராஜா முதல் ஸகல ராஜாக்களும் எங்கள் பிதாவான வஸிஷ்டபகவானை தெய்வமாகவே கொண்டாடி வந்தார்கள். இந்த ஸூர்ய வம்சத்திற்கே அவர் குலகுருவாகுவார். அவரோ ப்ரும்மவித், மஹாசீலன். இந்த மஹானுபாவனுடைய வார்த்தையை இவ்விதமாக அதிக்ரமம் செய்து நீ மேலும் வேறு யத்னம் செய்ய ஆரம்பிக்கிறாய். அவரால் முடியாத கார்யத்தை நாங்கள் எப்படி பூர்த்திசெய்யமுடியும்? நீ ரொம்பவும் மாலிசன். பேசாமல் ராஜதானிக்குச் சென்று ப்ரஜாபரிபாலனம் செய்து வா. எங்கள் பிதா மூன்று லோகங்களிலும் எவ்விதமான யக்ஞத்தையும் நடத்தி வைப்பதில் சக்தியுள்ளவரே. அப்பேர்ப்பட்ட மஹானுபாவனை அவமதித்து அவருடைய ஸம்பந்தமுமில்லாமல் நாங்கள் ஒரு கார்யத்தை தனியாகவே செய்வதற்கு எப்படி சக்தியுள்ளவர்களாக ஆகுவோம்" என்று சொன்னார்கள். அவர்களுடைய வார்த்தையைக் கேட்ட த்ரிசங்கு ராஜன் அந்த வாஸிஷ்டாள் என்ற நூறு ரிஷிகளைப் பார்த்து "ஹே குருபுத்ரர்களே! குருவான வஸிஷ்டபகவானால் நான் திரஸ்கரிக்கப்பட்டேன். குருபுத்ரர்களான தாங்களும் என்னைத் திரஸ்கரித்துவிட்டீர்கள். ராஜன் என்ற ஒரு வெகுமான புத்தி உங்களுக்கும் இல்லை; உங்களுடைய பிதாவுக்குமில்லை. நான் என்ன செய்யமுடியும். வேறு யாராவது ஒருவரை ஆசார்யனாக வரித்து சரீரத்துடன் ஸ்வர்க்கலோகம் போவதற்கு ஸாதனமான யக்ஞத்தை அனுஷ்டானம் செய்கிறேன். நீங்கள் க்ஷேமத்தை அடையுங்கள்" என்று பரமகோபத்துடன் சொல்லிவிட்டு த்ரிசங்கு ராஜன் அந்த ஆச்ரமத்தை விட்டு வெளியே வந்தான். வஸிஷ்ட-

புத்ரர்கள் ரொம்பவும் க்ரூரமான ராஜனுடைய வார்த்தையைக் கேட்டு, மிகவும் கோபத்தையடைந்து 'ராஜனே நீ சண்டாளனாக போகக்கடவது' என்று சபித்துவிட்டு, சண்டாளனைப் பார்ப்பது அதர்மம் ஆனதினால், அவனைப் பார்க்கக்கூடாது என்ற எண்ணத்துடன் தங்களுடைய ஆச்ரமத்திற்குள் ப்ரவேசித்தார்கள். குருசாபத்தால் த்ரிசங்கு ராஜனுக்கு க்ஷத்ரியத்வம் போய் சண்டாளத்வ ஜாதி ஏற்பட்டுவிட்டது. ஜாதிகள் கர்மமூலமானதால் க்ஷத்ரியத்வ ஜாதிக்கு மூலமான குருவினுடைய ஆராதனம் என்ற முக்யமான கர்மாவுக்கு அபாயம் வந்ததினால், க்ஷத்ரியத்வ ஜாதிக்கும் அபாயம் வந்துவிட்டது. சண்டாளத்வ ஜாதிக்கு மூலகாரணமான குருத்யாகம் என்ற பாபகர்மா இருப்பதினால் சண்டாளனாகவும் ஆகிவிட்டான்.

कारणापायात् कार्यापायः, कारणभावात् कार्यभावः ।

𑌕𑌾𑌰𑌣𑌾𑌪𑌾𑌯𑌾𑌤𑍍 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌪𑌾𑌯𑌃, 𑌕𑌾𑌰𑌣𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌕𑌾𑌰𑍍𑌯𑌭𑌾𑌵𑌃 ।

காரணாபாயாத் கார்யாபாய:, காரணபாவாத் கார்யபாவ: ।

என்ற ந்யாயமே இதில் ப்ரமாணமாகும். ஆகையால் ஸாக்ஷாத் சண்டாளனாக ஆனபடியால்,

चण्डालदर्शनं नृणां, महापातककारणं ।

𑌚𑌣𑍍𑌡𑌾𑌳𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌨𑍃𑌣𑌾𑌂, 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌕𑌾𑌰𑌣𑌂 ।

சண்டாளதர்சனம் ந்ருணாம், மஹாபாதககாரணம் ।

என்ற மனுவசனத்தால் சண்டாள தர்சனம் என்பது மஹாபாபத்தைக் கொடுக்கக்கூடியது என்று அறிந்து வாஸிஷ்டர்கள் அவனைப் பார்க்கக்கூட மனமில்லாமல் தங்களுடைய ஆச்ரமத்திற்குள் ப்ரவேசித்தார்கள். அன்று ராத்ரி கழிந்தவுடன் மறுநாள் காலையிலிருந்து த்ரிசங்கு மஹாராஜாவானவன் ராஜன் என்று சொல்வதற்கு யோக்யதையே இல்லாமல் மஹா சண்டாளனாக ஆகிவிட்டான்.

சரீரம் முழுவதும் கருப்பாக ஆகிவிட்டது. உடையும் அழுக்குப்பிடித்ததாகவும் விகாரமாகவும் ஆகிவிட்டது. குட்டையான கேசமுள்ளவனாகவும் ஆகிவிட்டான். ப்ரேதத்திற்கு அலங்காரம் செய்த மாலை, கந்தம், முதலியவைகளையே தரித்துக்கொள்வதில் ஆவலுள்ளவனாக ஆகிவிட்டான். எலும்புக்கூட்டத்தையே ஆபரணமாக தரித்துக்கொண்டவனாக ஆகிவிட்டான். சண்டாளரூபியான இந்த மஹாராஜனைப் பார்த்த மந்த்ரிகளும் கிட்டப்போகக்கூடாது என்ற எண்ணத்துடன் தங்கள் பதவியிலிருந்தே விலகிவிட்டார்கள். நகரத்திலுள்ள ஜனங்களோ, தேசத்திலுள்ள ஜனங்களோ, இந்த ராஜனை திக்காரம் செய்துவிட்டார்கள். இந்த ராஜனும் ஏகாங்கியாகவே ஆகிவிட்டான். இராப்பகலாக கஷ்டப்பட்டுக்கொண்டு தெற்கு திசையில் ப்ராம்மண்யத்தை அடைய, முக்யமாக தபஸ்செய்து வரும், வஸிஷ்டபகவானுடைய முக்ய வைரியான விச்வாமித்ரரை த்ரிசங்கு ராஜன் சரணமடைந்தான். விச்வாமித்ரரோ, வஸிஷ்டபுத்ரர்களால் இஹத்திலோ, பரத்திலோ அனுபவிக்கக்கூடிய ஸுகத்திற்கு ஸாதனமான ஸத்கர்மாக்களிலிருந்தும் பஹிஷ்காரம் செய்யப்பட்ட சண்டாளரூபியான த்ரிசங்கு ராஜனைப் பார்த்து மிகவும் கருணையை அடைந்தார்.

கருணையுடன் அவனைப் பார்த்து, "ஹே ராஜன், நீ வந்த கார்யம் என்ன? சண்டாளபாவத்தை அடைந்துவிட்டாய் என்று தோன்றுகிறதே. அதற்கு என்ன காரணம்? யார் சபித்தார்? நீ அயோத்யாதிபதி அல்லவா? உனக்கும் இவ்விதமான நிலைமை ஏற்பட்டுவிட்டதே" என்று ரொம்பவும் வருந்திக்கேட்டார். ராஜனோ விச்வாமித்ரருடைய வார்த்தையைக் கேட்டு அஞ்ஜலிபந்தத்துடன் அவரைப் பார்த்து சொல்வதாவது:—"ஹே ராஜர்ஷே! என் குருவான வஸிஷ்டரும் என்னை திரஸ்கரம் செய்துவிட்டார். வஸிஷ்டருடைய குமாரர்களும் என்னை திரஸ்கரித்துவிட்டார்கள். என்னுடைய மனோரதமும் பூர்த்தியாகவில்லை. இவ்விதம் துர்க்கதியை அடைந்ததுதான் எனக்கு முக்ய பலனாக ஆகி

விட்டது. இந்த சரீரத்துடனேயே ஸ்வர்க்கலோகம் போக வேண்டும் என்பதே என்னுடைய முக்யமான எண்ணம். நானே நூறு யாகங்களைச் செய்திருக்கிறேன். அதன் பலனைக்கூட அடைய முடியாமல் என்னை இவ்விதம் சபித்து விட்டார்கள். இவர்கள் என்னிடம் இவ்விதம் கோபத்தை அடையும்படி நான் ஒருவித அபசாரமும் இவர்களுக்குச் செய்யவில்லை. நான் பொய் சொன்னதே கிடையாது. **यज्ञो अनृते नरक्षति** (யஜ்ஞோ அந்ருதே நரக்ஷதி) (யக்ஞோ அந்ருதே நரக்ஷதி) என்ற ச்ருதியால் தீக்ஷிதனான புருஷன் பொய் சொல்லிவிட்டால், அவனை அவன் செய்த யக்ஞம் ரக்ஷிக்காது என்று தெரிகிறபடியால், அவ்விதம் நான் ஏதாவது ஒரு பொய் சொல்லிவிட்டேனோ; அந்த காரணத்தினால் நான் முன்பு செய்த நூறு யக்ஞங்களும் என்னை ரக்ஷிக்காமல் போய்விட்டதென்று சொல்வதற்கும் ஒரு காரணத்தையும் காணோம். இதற்கு முன்பும் நான் பொய் சொன்னதில்லை. இனிமேலும் பொய்சொல்லப்போவதுமில்லை. மஹத்தான ஆபத்தை அடைந்தாலும் பொய் என்பது கொஞ்சங்கூட என் வாக்கில் வராது. க்ஷத்ரியனுடைய தர்மதேவதையின்மீது நான் ஆணையிட்டு 'பொய் சொல்வதே இல்லை. இனி பொய் சொல்லப்போவதுமில்லை' என்று சொல்கிறேன். சரீரத்தோடு ஸ்வர்க்கலோகம் செல்வதற்கு புதியதாக, ஒரு யக்ஞத்தை அனுஷ்டானம் செய்ய குருவையும், குரு புத்ரர்களையும் ப்ரார்த்தித்ததற்கு முன்செய்த நூற்றுக்கணக்கான யக்ஞங்களும்கூட பலிக்காமல் போகும்படி என் விஷயத்தில் செய்துவிட்டனர். எவ்வளவோ யக்ஞங்கள் செய்தேன். ப்ரஜைகளையும் தர்மமாக பரிபாலனம் செய்தேன். குருக்களையும் என்னுடைய நல்லகுணங்களால் ஸந்தோஷிக்கச்செய்திருக்கிறேன். இப்போதும் நான் தர்மத்தில்தான் ப்ரவர்த்தித்து வருகிறேன். யக்ஞத்தைச் செய்து தேவர்களை த்ருப்தி செய்வதேதான் என்னுடைய முக்யமான உத்தேசமாக ஆகும். இந்த விஷயத்தில் என்மீது என் குருவிற்கோ, குருபுத்ரர்களுக்கோ கொஞ்சமேனும் த்ருப்தி யில்லாமற்போய்விட்டது. நான் என்ன செய்வேன்.

देवमेवपरंमन्ये पौरुषंतु निरर्थकं।
दैवेनाक्रम्यते सर्वं दैवंहि परमा गतिः॥

𑌦𑍈𑌵𑌮𑍇𑌵𑌪𑌰𑌂𑌮𑌨𑍍𑌯𑍇, 𑌪𑍌𑌰𑍁𑌷𑌂𑌤𑍁 𑌨𑌿𑌰𑌰𑍍𑌥𑌕𑌂 ।
𑌦𑍈𑌵𑍇𑌨𑌾𑌕𑍍𑌰𑌮𑍍𑌯𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌂, 𑌦𑍈𑌵𑌂𑌹𑌿 𑌪𑌰𑌮𑌾 𑌗𑌤𑌿𑌃 ॥

தேவமேவபரம்மந்யே, பௌருஷந்து நிரர்தகம் ।
தைவேநாக்ரம்யதே ஸர்வம், தைவம்ஹி பரமா கதி: ॥

என்ற ச்லோகத்தால் ஸித்திக்கும் ந்யாயத்தைத்தான் நான் தற்காலத்தில் அநுஸந்தானம் செய்துக்கொள்ள வேண்டிய தாக இருக்கிறது.''

மனிதனுடைய கர்மா **ஸஞ்சிதம், ஆகாமி, ப்ராரப்தம்** என்று மூன்றுவகையாகும். முன் ஜன்மாக்களில் மனிதனால் செய்யப்பட்டு பலத்தைக் கொடுக்காமல் கார்யத்தை எதிர்பார்த்துவரும் கர்மாக்கள் **ஸஞ்சித** கர்மா என்று சொல்லப்படும். இந்த கர்மாவை அனாரப்தபலகர்மா என்று வேதாந்திகள் சொல்வார்கள். வார்த்தமான சரீரத்தை ஆரம்பித்து அதில் ஸுக துக்கத்தைக் கொடுத்துக்கொண்டு வரும் கர்மாக்களை **ப்ராரப்த** கர்மா என்று சொல்வார்கள். ப்ராரப்தபலகர்மா என்றும் இதற்கு ஒரு பெயருண்டு. இனி பாவியாக செய்யப்படும் கர்மா **ஆகாமி** என்று சொல்லப்படும். மேற்காட்டிய ச்லோகத்தில் **தைவம்** என்ற பதத்தால் வர்த்தமான சரீரத்தை பலனாக ஆரம்பித்து அதில் ஸுக துக்கத்தைக் கொடுத்துவரும் ப்ராரப்த பலமான கர்மாவானது சொல்லப்படும். மேலே கண்ட ச்லோகத்திலுள்ள பௌருஷம் என்ற பதத்தால் இந்த ஜன்மாவிலோ, முன் ஜன்மாக்களிலோ, கர்மாக்கள் செய்யப்பட்டு, பலத்தைக் கொடுக்க ஆரம்பிக்காமல் தேச, கால, நிமித்தத்தை அபேக்ஷித்துவரும் அனாரப்த பலகர்மாவானது சொல்லப்படும். ப்ராரப்த பலகர்மா, அனாரப்த பலகர்மா இந்த இரண்டுகளுக்குள் **தைவம்** என்ற சப்தத்தால் சொல்லப்பட்ட ப்ராரப்தபலகர்மாதான் மேலானதாகும். அனாரப்த பல

கர்மாவுக்கு ப்ராரப்தபலகர்மாவை, திரஸ்காரம் செய்ய சக்தியே கிடையாது. இதில் ஒரு உதாஹரணத்தைப் பார்த்துக்கொள்ளலாம். அதாவது முன் ஜன்மாவில் செய்த பாப கர்மாவினுல் இந்த ஜன்மாவில் ரோகியாகவும், தரித்ர ணுகவும் இருந்து வருகிருன். ஆனுல் அவன் இந்த ஜன்மாவில் செய்யும் ஸத்கர்மாக்கஸ் எண்ணி முடியாது. அதனுல் சிலர் இந்த மனிதன் ஸ்நானம் முதலான ஸத்கர்மாக்கஸ் மிகவும் ச்ரத்தா பக்தியுடன் செய்துவருகிருனே, இவனைப்போல் ஈச்வ ராராதனம் செய்கிறவர்கள் மற்ருெருவர் உண்டா? ஆகிலும் இவன் மஹாரோகியாகவும், பரம தரித்ரனுகவும் கஷ்டப்படு கிருன். தர்மம் செய்வதினுல் ஸுகம் அடையலாம் என்று எப் படி நம்பமுடியும் என்று எண்ணுவார்கள். த்ரிசங்கு ராஜன் இப்பொழுது சொன்ன ச்லோகத்தை கொஞ்சம் கவனித் தால், அவ்விதமான எண்ணத்துக்கு கொஞ்சமேனும் அவ காசமே இல்லை. மனிதனுக்கு ரோகத்தையும், தரித்ரத்தை யும் கொடுத்த பாபகர்மாவோ, ப்ராரப்த பலகர்மாவாக ஆகிவிட்டது. இந்த ஜன்மாவில் இவன் செய்கிற ஸ்நான, ஸந்த்யாவந்தனம் முதலான ஸத்கர்மாக்களோ புண்ய கர் மாக்கள்தான். தாரித்ரியத்திற்கு முக்யமான காரணமான பாபகர்மாவைக் காட்டிலும் எவ்வளவோ மேலானதுதான். ஆனுல் அது அனுரப்த பலகர்மாவாக (ஆரம்பிக்காத) ஆகி விட்டது. ப்ராரப்தமான ஒரு பாப கர்மா மனிதனை தன்வச மாக்கிக்கொண்டு ரோகத்தையும், தாரித்ரியத்தையும் அனு பவிக்கும்படி அந்த மனிதனைச் செய்துவரும்பொழுது, அந்த மனிதன் செய்துவருகிற ஸத்கர்மாக்கள் எப்படி அவ னுக்கே அப்பொழுதே பலனைக் கொடுக்க முன்வரும். ப்ரா ரப்தமான கர்மாவானது பலனைக்கொடுத்து அனுபவித்து முடிந்த பிறகு, அதுவரையில் காத்துக்கொண்டிருந்து அந்த மனிதனுக்கு அவச்யம் தன் பலனைக் கொடுத்தேதீரும். ஆகையால் தர்மத்தைச் செய்தவன் அவச்யம் ஸுகத்தையே அடைவான். தர்மம் தலைகாக்கும் என்ற பெரியோர்கள் வசனமானது ஒரு நாளும் பாழாகாது.

மற்றொரு சிறு உதாஹரணத்தையும் அறியவும். ஒரு சின்ன ரயில்வே ஸ்டேஷனில் ஒரு குட்ஸ் வண்டி (ஸாமான் வண்டி) வந்து நின்றுகொண்டிருக்கிறது. அந்த ஸ்டேஷனிலோ ஒரே லைன்தான் உண்டு. இரண்டாவது கிடையாது. அந்த ஸமயத்தில் அரசன் முதலியோர் ஏறிக்கொண்டுவரும் ஒரு ஸ்பெஷல்வண்டி வருகிறது. இந்த குட்ஸ் வண்டி அந்த லைனிலிருந்து முன்னால் நகர்ந்த பிறகுதானே அந்த ஸ்பெஷல் வண்டி அந்த ஸ்டேஷனுக்குள் வரமுடியும். அதுவரை வெளியே நின்றுதானே ஆகவேண்டும். இல்லாவிடில் மேலே கிடுகிடு என்று வந்துவிடுவதாக இருந்தால், இரண்டு வண்டியும் ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டு, வண்டித்தொடர்களுக்கும் அதிலுள்ள ஆட்களுக்கும் நாசமேற்படுமல்லவா? அதுபோலவே முன் ஜன்மாவில் செய்த பாபகர்மாவினுடைய பாரதந்த்ரியத்திலிருந்துகொண்டு ஒரு ஜீவன் துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும்பொழுது பச்சாதாபத்துடனும் திவ்ய ஞானத்துடனும் அதே ஜீவன் இதே ஜன்மாவில் ஸத்கர்மாக்களைச் செய்தாலும், அந்த ஸத்கர்மாக்கள் எவ்வளவு பெரியதாகயிருந்தாலும் இப்பொழுது அந்த ஜீவனுக்கு என்ன உதவிசெய்யமுடியும்? பலத்தைக் கொடுக்க ஆரம்பித்துவிட்ட ஒரு பாப கர்மாவை தடுக்க புண்ய கர்மாவுக்கு சக்தி கிடையாது. तस्य तावदेवचिरं यावन्नविमोक्ष्ये (தஸ்ய தாவதேவசிரம் யாவந்நவிமோக்ஷ்யே) (தஸ்ய தாவதேவசிரம் யாவந்ந விமோக்ஷ்யே) என்ற ச்ருதியால் ஆத்மஞானத்திற்கே ப்ராரப்தமான கர்மாவை நாசம் செய்ய சக்தி யில்லையென்று தெரியும்பொழுது ப்ராரப்த கர்மாவை, அனாரப்தமான புண்ய கர்மாவானது எப்படி நாசம் செய்ய சக்தியுள்ளதாக ஆகும்? धर्मेण पापं अपनुदति (தர்மேண பாபம் அபநுததி) (தர்மேண பாபம் அபநுததி) என்ற ச்ருதியோ, தர்மத்தால் அதர்மத்திற்கு நாசத்தைச் சொல்கிறது. ஆகிலும் அந்த ச்ருதியானது 'அனாரப்த பலமான பாபகர்மாவை புண்ய கர்மா நாசஞ் செய்துவிடும். அதிலும் ப்ராரப்த பலமான புண்ய கர்மா

தான் நாசம் செய்யும்' என்று சொல்லவந்ததேயன்னியில், ப்ராரப்த பலமான பாப கர்மாவைக்கூட அனாரப்த பலமான புண்ய கர்மாவானது நாசம் செய்துவிடும் என்று சொல்வதில் அந்த ச்ருதிக்கு சக்தி கிடையாது. அந்த விஷயத்தில் ஒரு வேடனால் விடப்பட்ட பாணத்தை த்ருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளவேண்டியது. ஒரு வில்லாளி ஒரு லக்ஷ்யமான வஸ்துவை அடிக்க தன் வில்லை நாணேற்றி பாணத்தைப் ப்ரயோகம் செய்யும் ஸமயத்திலோ, அதற்கு முன் க்ஷணத்திலோ, அந்த பாணத்தால் அந்த லக்ஷ்யவஸ்துவை அடிக்காமலிருக்கும்படி தடுத்துவிடலாம். வில்லிலிருந்து விடப்பட்டு வெகுவேகமாகப் போகிற பாணத்தையோ ஒருவராலும் தடுக்கமுடியாது. அதுபோல் பலனைக் கொடுப்பதற்கு முன்பும் ஆரம்பிக்கும் ஸமயத்திலும் பாப கர்மாவை புண்யகர்மாவினால் நாசமாகும்படி செய்துகொள்ளலாம். புண்யம், பாபம் இரண்டையும் ஞானத்தாலேயே நசிக்கும்படியும் செய்துகொள்ளலாம். பலனைக் கொடுப்பதற்கு ஆரம்பித்து விட்டாலோ பாபத்தை புண்யத்தினால் நாசம் செய்துவிடுவது என்பதோ, புண்யம் பாபம் இரண்டையும் ஞானத்தால் நாசம் செய்துகொள்வது என்பதோ அஸாத்யமான கார்யமாகத்தான் ஆகும். ஆகையால் ப்ராரப்தகர்ம பலனை அனுபவித்தே தீரவேண்டும். இவ்வளவு அபிப்ராயத்தை அந்த த்ரிசங்கு ராஜன் தன் மனதில் வைத்துக் கொண்டுதான் விச்வாமித்ரரைப் பார்த்து "ஹே, ராஜர்ஷே! இந்த ஜன்மாவில் நான் எவ்வளவோ ஸத்கர்மாக்களைச் செய்துகொண்டுதானிருக்கிறேன். ஆகிலும் அது அனாரப்த பலகர்மாதானே. அது எவ்விதம் என்னை ரக்ஷிக்கும். காலக்ரமமாக அது என்னை ரக்ஷிக்கத்தான் போகிறது. அது வீண்போகாது. அதில் பூர்ண நம்பிக்கைதான். அதை இப்பொழுதே வேண்டும் என்று ஆத்திரப்படுவதில் பயனில்லை. முன் ஜன்மாவிலோ நான் செய்த பாபத்தினால், இப்பொழுது குருசாபத்தால் சண்டாளனாக ஆகும்படி நேர்ந்துவிட்டது. அதுவோ ப்ராரப்த பலகர்மாவாக

ஆகிவிட்டது. அதுதான் **தைவம்** என்று சொல்லப்படும். நான் இந்த ஜன்மாவில் எவ்வளவோ கர்மாக்கள் செய்தவை புண்யமானுலும் பௌருஷமாகத்தான் ஆகிவிட்டது" என்று சொன்னுன். பௌருஷத்தை காட்டிலும் தைவம் மேலாகிறது என்பதைத்தான்,

दैवमेवपरं मन्ये, पौरुषंतु निरर्थकं ।

𑌦𑍈𑌵𑌮𑍇𑌵𑌪𑌰𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇, 𑌪𑍌𑌰𑍁𑌷𑌂𑌤𑍁 𑌨𑌿𑌰𑌰𑍍𑌥𑌕𑌂 ॥

தைவமேவபரம் மந்யே, பௌருஷந்து நிரர்தகம் ।

என்ற வாக்யத்தால் த்ரிசங்கு ராஜன் தெரிவித்தார். ப்ராரப்த பலமான கர்மாவினுடைய அதீனத்தில்தான் ஸகல ஜகத்தும் இருந்துவருகிறது. ஒரு மனிதன் என்ன நல்லதைச் செய்தாலும் அவன் செய்த பாபம் ப்ராரப்தமாயிருந்தால் இவன் செய்த நல்ல கர்மாக்களுக்குள்ள பலனை இவனை அனுபவிக்கவொட்டாமல் செய்து தன்னுடைய பலனுன துக்கத்தையே அனுபவிக்கும்படி செய்து அவனை அதோ கதியில் ஆழ்த்திவிடுகிறது. **தைவம்** என்ற ப்ராரப்த பல கர்மாவுக்குத்தான் பௌருஷம் என்ற அனுரப்த பலகர்மாவை திரஸ்காரம் செய்யக்கூடிய சக்தி உண்டு என்பதன்னியில், பௌருஷம் என்ற அனுரப்த பலகர்மாவுக்கு **தைவம்** என்ற ப்ராரப்த பலகர்மாவை திரஸ்காரம் செய்யக்கூடிய சக்தியே கிடையாது. இதையும் யோஜித்துத்தான், அந்த த்ரிசங்கு ராஜன்

दैवेन आक्रम्यते सर्वं दैवं हि परमा गतिः ।

𑌦𑍈𑌵𑍇𑌨 𑌆𑌕𑍍𑌰𑌮𑍍𑌯𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌦𑍈𑌵𑌂 𑌹𑌿 𑌪𑌰𑌮𑌾 𑌗𑌤𑌿𑌃 ।

தைவேந ஆக்ரம்யதே ஸர்வம் தைவம் ஹி பரமா கதி: ।

என்ற வாக்யத்தால் நன்றுக தெரிவித்துக்கொண்டான்.

"ஹே ராஜர்ஷே! இவ்விதம் கஷ்டப்படுகிற எனக்கு சீக்ரம் தயவுசெய்து அனுக்ரஹத்தைச் செய்யவேண்டும். தங்

களைப்போலொத்த மஹான்களுடைய அனுக்ரஹம் எனக்கு இருந்தால், ப்ரதிகூலமான தைவம் என்ற ப்ராரப்தமான கர்மாவும் எனக்கு அனுகூலமாகவே ஆகிவிடும்.

மற்றொருவரையும் நான் இனி சரணமாக அடையப் போகிறதில்லை. மற்றொருவர் யாரும் எனக்கு சரணமாக இல்லை. ஏதோ நான் முன் ஜன்மாக்களில் செய்த தபஸ்ஸின் பலன்தான் தங்கள் ரூபமாக எனக்கு முன்வந்து என் மனோரதத்தை பூர்த்தி செய்து வைக்கப்போகிறதென்று நினைக்கிறேன். ஆகையால் எந்த ஸத்கர்மாவை நான் அனுஷ்டித்தால் இந்த சரீரத்துடனேயே நான் ஸ்வர்க்க லோகம் சென்று ஸுகானுபவத்தை அடைவேனோ அந்த ஸத்கர்மாவை தாங்கள்தான் என் பேரில் க்ருபைகூர்ந்து நடத்திவைத்து என்னை இந்த சரீரத்துடனேயே ஸ்வர்க்க லோகம் அனுப்பவேண்டும்'' என்று குருசாபத்தால் சண்டாள ரூபியான த்ரிசங்கு மஹாராஜாவானவன் ப்ராம்மண்யத்திற்காகவே முக்யமாக தபஸ் செய்துவரும் விச்வாமித்ரர் என்ற ராஜர்ஷியை சரணமடைந்தான்.

பிறப்பிலேயே சண்டாளனாக இருக்கிறவனுக்கு ப்ராயச்சித்தாதிகளால் அந்த தன்மையிலிருந்து நிவ்ருத்தி ஏற்படலாம். ஜாதியிலே ப்ராம்மணனாகவோ, க்ஷத்ரியனாகவோ, வைச்யனாகவோ பிறந்து, ப்ரும்மசாபத்தினாலோ, குருசாபத்தினாலோ, தர்ம வ்யதிக்ரமத்தினாலோ, சண்டாளத் தன்மையை அடைந்தவனுக்கு ப்ராயச்சித்த கர்மகோடிகளாலும் பரிசுத்தி ஏற்படவே ஏற்படாது என்பதை பின் வரும் கதையின்மூலம் அறியவேண்டும்.

முன்சொன்னபடி குருசாபத்தால் சண்டாளனாக ஆகிவிட்ட த்ரிசங்கு ராஜன் விச்வாமித்ரரை சரணமடைந்து சரீரத்துடன் ஸ்வர்க்கலோகம்போக இச்சையுள்ளவனாக இருக்கிறேன் என்ற தன்னுடைய ஆவலைத் தெரிவித்துக் கொண்ட பிற்பாடு, விச்வாமித்ர ராஜர்ஷியானவர் ராஜனைப் பார்த்து, "ஹே, அரசனே! நீ இக்ஷ்வாகு வம்சத்தி

லுதித்தவன்; பரமதார்மிகன் என்று உன்னை நான் அறிந்திருக்கிறேன். உனக்கு நான் ரக்ஷகனாக ஆகிறேன். நீ கொஞ்சமேனும் பயப்படவேண்டாம். இந்த க்ஷணத்திலேயே யாஜகாளான மஹர்ஷிகளை வரவழைத்து நீ இந்த சரீரத்துடன் ஸ்வர்க்கலோகம் செல்வதற்கு முக்ய ஸாதனமான யக்ஞத்தைச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன். ஆனால்.

गुरुशापकृतं रूपं, यदिदं त्वयि वर्तते ।
अनेन सह रूपेण, स शरीरो गमिष्यसि ॥
हस्तप्राप्तमहं मन्ये, स्वर्गं तव नराधिप ।
यस्त्वं कौशिकमागम्य, शरण्यं शरणागतः ॥

𑌗𑍁𑌰𑍁𑌶𑌾𑌪𑌕𑍃𑌤𑌂 𑌰𑍂𑌪𑌂, 𑌯𑌦𑌿𑌦𑌂 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌅𑌨𑍇𑌨 𑌸𑌹 𑌰𑍂𑌪𑍇𑌣, 𑌸𑌶𑌰𑍀𑌰𑍋 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ॥
𑌹𑌸𑍍𑌤𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌮𑌹𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇, 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌤𑌵 𑌨𑌰𑌾𑌧𑌿𑌪 ।
𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌕𑍌𑌶𑌿𑌕𑌮𑌾𑌗𑌮𑍍𑌯, 𑌶𑌰𑌣𑍍𑌯𑌂 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌃 ॥

குருசாபக்ருதம் ரூபம், யதிதம் த்வயி வர்ததே ।
அநேந ஸஹ ரூபேண, ஸசரீரோ கமிஷ்யஸி ॥
ஹஸ்தப்ராப்தமஹம் மந்யே, ஸ்வர்கம் தவ நராதிப ।
யஸ்த்வம் கௌசிகமாகம்ய, சரண்யம் சரணாகத: ॥

என்றபடி, அரசனே! உன்னிடத்திலிருக்கும் சண்டாளத்வம் குருசாபத்தால் ஏற்பட்டது. ஆகையால் நீ கர்ம சண்டாளன் ஆகிருய். கர்ம சண்டாளனை பரிசுத்தி செய்து வைக்க ப்ரும்மாவினாலேயும் முடியாது. ஆகையால் உன்னுடைய சண்டாளத்வத்தை நான் நிவ்ருத்திசெய்வதற்காக இப்பொழுது யக்ஞம் செய்யவில்லை. ஆனால் நீ ஒரு ராஜன். என்னை சரணமடைந்ததினால் அந்த சண்டாள சரீரத்துடனேயே உன்னை ஸ்வர்க்கத்திற்கு ஏற்றிவிடுகிறேன். அதற்கு முக்யமாக வேண்டிய யக்ஞத்தைத்தான் இப்பொழுது ஆரம்பிக்கப்போகிறேன். நீ ஜாதிசண்டாளன் இல்லாததினால்

யக்ஞத்தில் யஜமானனுக இருப்பதற்கு அதிகாரமுண்டு. ஆகையால் நீ யாகம் செய்ய அர்ஹறன்தான்" என்று சொல்லிவிட்டு, தனது குமாரர்களான ஹவிஷ்யந்தன் முதலிய நான்கு குமாரர்களையும் வரவழைத்து யக்ஞத்திற்கு வேண்டிய ஸாமக்ரியைகளை சேகரம் செய்யச் சொல்லிவிட்டு, அதன் பிறகு ஸகலமான ரிஷிகணங்களையும் யக்ஞத்திற்கு அழைத்துவரும்படி ஆக்ஞாபித்தார். அவருக்கு சிஷ்யர்களாகவும், புத்ரர்களாகவுமுள்ள ஹவிஷ்யந்தன் முதலானவர்கள் அவ்விதமே நாலாதிக்குகளிலிருந்தும் மஹர்ஷிகளை அழைத்து வர ப்ரஸ்தானம் செய்தார்கள். அந்த ஸமயத்தில் விச்வாமித்ரர் அவர்களைப் பார்த்து "நீங்கள் போகிற இடங்களில் யாராவது நான் ப்ரவ்ருத்திக்கிற கார்யத்தை தூஷித்துப் பேசினுல் அதை கவனமாக நினைத்துக்கொண்டு என்னிடம் தவருமல் சொல்லவேண்டும்" என்று சொல்லி அனுப்பினுர். உடனே அவ்விதமே நாலாதிக்குகளிலும் சென்று சிஷ்யர்கள் அநேக மஹர்ஷிகளிடம் தெரிவித்தார்கள். அந்தந்த திக்குகளிலிருந்தும் ப்ரும்மநிஷ்டர்களான மஹர்ஷிகள் விச்வாமித்ரருடைய ஆக்ஞைக்கு இணங்கி தன் தன் சிஷ்ய கணங்களோடு அங்கு வந்து சேர்ந்தார்கள். அந்த விஷயத்தில் மஹோதயன் என்ற ஒரு ரிஷியும், வஸிஷ்ட புத்ரர்களான வாஸிஷ்டாள் என்ற நூறுபேர்களும் மாத்திரம் விச்வாமித்ரருடைய சிஷ்யர்கள் யக்ஞத்திற்கு அழைத்தபடி வராததுடன் விச்வாமித்ரரைக் குறித்து அநேகவிதமாக அவமானவார்த்தைகளையும் சொன்னுர்கள்.

அதாவது:—க்ஷத்ரியன் யாஜகன்; யாஜ்யனுன யஜமானனும் சண்டாளன். இவ்விதமான யக்ஞத்தில் எவ்விதம் தேவர்கள் ஹவிர்பாகத்தை க்ரஹிப்பார்கள்? அந்த யக்ஞத்திற்கு வரும் ப்ராம்மணர்களோ அல்லது வேறு மஹான்களோ சண்டாளனுடைய அன்னத்தைத்தானே புஜிக்க வேண்டும். அவர்கள்தான் எவ்விதம் ஸ்வர்க்கத்தை அடைவார்களோ என்று அநேக நிஷ்டுரமான வார்த்தைகளைச்

சொன்னார்கள். விச்வாமித்ரருடைய சிஷ்யர்களும் அதை எல்லாம் அவ்விதமே அந்த விச்வாமித்ரரிடம் சொல்லிவிட்டார்கள். அதைக்கேட்ட விச்வாமித்ர ராஜர்ஷியும் கோபத்தை அடைந்து,

तेषां तेजो विशेषेण, प्रत्यवायोनविद्यते ।

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇𑌜𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣, 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌾𑌯𑍋𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।

தேஷாம் தேஜோ விசேஷேண, ப்ரத்யவாயோநவித்யதே ।

என்ற தர்ம சாஸ்த்ர வசனத்தை அனுஸரித்து, நான் த்ரிசங்கு ராஜனுக்காக இப்பொழுது ஆரம்பிக்கப்போகும் யக்ஞத்திற்கு யாஜகாளாக வந்த மஹர்ஷிகள் சண்டாள ரூபியான த்ரிசங்குவினுடைய அன்னத்தையே புஜிக்கட்டும். அவரவர்களுடைய தபோ மஹிமையே அந்த தோஷத்தை எரித்துவிடாதா? மேற்சொன்ன தர்ம சாஸ்த்ர வசனம் இந்த வாஸிஷ்டர் முதலானவர்களுக்கு தெரியாமல் போய் விட்டதா என்ன? ஒருவேளை தெரிந்தும் அஸூயையினால் இவ்விதம் சொன்னார்களோ? தவிரவும், த்ரிசங்கு ராஜன் ஜாதி சண்டாளனா? ஜாதிசண்டாளனுக்கல்லவா கர்மாவில் அதிகாரம் கிடையாது. அதையும் அவர்கள் தூஷித்தது தப்பாகும்.

तेजसा क्षत्रियस्यापि याजनं नैवदुष्यति ।
विप्राभावे जलाभावे रजसार्घ्य प्रदानवत् ॥

𑌤𑍇𑌜𑌸𑌾 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌯𑌾𑌜𑌨𑌂 𑌨𑍈𑌵𑌦𑍁𑌷𑍍𑌯𑌤𑌿 ।
𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌭𑌾𑌵𑍇 𑌜𑌲𑌾𑌭𑌾𑌵𑍇 𑌰𑌜𑌸𑌾𑌰𑍍𑌘𑍍𑌯 𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑌵𑌤𑍍 ॥

தேஜஸா க்ஷத்ரியஸ்யாபி யாஜநம் நைவதுஷ்யதி ।
விப்ராபாவே ஜலாபாவே ரஜஸார்த்ய ப்ரதாநவத் ॥

என்ற தர்மசாஸ்த்ர வசனமும் அவர்களுக்கு தெரியாமல் போய்விட்டதா! ப்ராம்மணர்களுக்கு யாஜனம் என்ற சக்தியே இல்லாமல் போனகாலத்திலோ, அந்த சக்தியுள்ள

ப்ராம்மணர்கள் இல்லாமல் போனுலோ அல்லது அவர் களே முடியாது என்று உபேக்ஷித்துவிட்டாலோ, அந்த ஸமயத்தில் ஒரு க்ஷத்ரியன் யாஜனத்தில் சக்தியோடு கூடினவனுக இருந்துவிட்டானேயானுல், ஏன் அவன் இன் னெருவனுக்கு யக்ஞத்தைச் செய்துவைக்கக்கூடாது? இல்லா விட்டால் வேறுவழி என்ன? தீர்த்தம் அகப்படாத தேசத் திலே ஸரியான காலத்தில் அர்க்யப்ரதானம் செய்வதற்கு பூமியிலுள்ள புழுதியை எடுத்து அர்க்ய ப்ரதானம் செய் யலாமென்று சொல்லப்பட்டிருக்கிறதல்லவா! அதுபோல் ப்ராம்மணன் அகப்படாதபோனுல் க்ஷத்ரியன் யாஜகனுக ஆகலாம். ஆகையால் என்னிடத்தில் யாதொருவிதமான தோஷமும் கிடையாது. இவ்விதம் சுத்தனுயுள்ள என்னை தூஷித்தவர்கள் சாம்பலாக ஆகிவிடுவார்கள். காலபாசத்தால் இழுக்கப்பட்டு யமனுடைய லோகத்திற்குப் போய்ச் சேர் வார்கள். எழுநூறு ஜன்மாக்களில் சவபக்ஷகர்களாக ஆகப் போகிருர்கள். நாய்மாம்ஸத்தையும் சாப்பிடுகிறவர்களாக ஆகப்போகிருர்கள். எதற்குக் கீழான ஜாதியேயில்லையோ அப்பேர்ப்பட்ட ஜாதியில் பிறந்து கஷ்டப்படுவார்கள். அந்த மஹோதயன் என்ற மஹர்ஷியோ மஹாதுர்புத்தி யுடையவன். நிர்துஷ்டனுன என்னை தூஷித்தான். வேட னுக பிறந்து பக்ஷிகளை அடித்து சாப்பிடுகிற துராசாரத் தோடு கூடினவனுக ஆகப்போகிருன்" என்று சொல்லி விட்டு விச்வாமித்ர மஹர்ஷியானவர் மேற்படி யக்ஞத்தை ஆரம்பித்தார். யக்ஞத்திற்காக வந்திருக்கும் ரிஷிகளுடைய மத்தியில் த்ரிசங்குவைப் பற்றி ரொம்பவும் அழகாக ப்ர சம்ஸை செய்தார்.

"மஹர்ஷிகளே! இந்த ராஜனைத் தாங்கள் அறிந் திருக்கலாம். இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்தவன். த்ரிசங்கு என்று மூன்று லோகத்திலும் ப்ரஸித்தியடைந்தவன். இந்த ராஜன் தார்மிகன். பெரிய கொடையாளி, ரொம்பவும் உதாரி. இந்த சரீரத்துடன் ஸ்வர்க்கலோகம் போகவேண்டும் என்ற இச்சையால் என்னை இப்பொழுது சரணமடைந்தான்.

ஆகையால் இந்த ராஜன் சரீரத்துடன் எப்படி ஸ்வர்க்கத்தை அடைவானோ அப்பேர்ப்பட்ட யாகத்தை அவச்யம் ஆரம்பித்து நடத்தவேண்டும்" என்று சொன்னார். அதைக்கேட்ட மஹர்ஷிகளும் ஒருவருக்கொருவர் இந்த விச்வாமித்ரர் குசிகவம்சத்தில் பிறந்தவர். அதிக கோபமுள்ளவர். அவர் சொல்கிறபடி நாம் கேட்டே தீரவேண்டும். இல்லாவிடில் நெருப்புக்கு ஸமானமான இவர் சாபத்தைக் கொடுத்தே விடுவார் என்று ரஹஸ்யமாகப் பேசிக்கொண்டு ஏதோ த்ரிசங்கு ராஜனுக்கு இந்த சரீரத்துடனேயே ஸ்வர்க்கம் கிடைக்குமானால் கிடைக்கட்டும் என்ற எண்ணத்துடன் யக்ஞத்தை ஆரம்பித்தார்கள். விச்வாமித்ரரோ, அந்த யாகத்தில் அத்வர்யுவாக இருந்தார். மற்ற ரிஷிகள் ரித்விக்குகளாக இருந்தார்கள். அவரவர்கள் அவர்களுக்கு ஏற்பட்ட ரித்விக் கர்மாவை ஒழுங்காகவே அனுஷ்டானம் செய்தார்கள். ப்ரதானமான தினத்தன்று விச்வாமித்ரர் ஹவிர்பாகம் கொடுப்பதற்கு ஸகல தேவர்களையும் ஹோதா என்ற ரித்விக்மூலமாக அழைத்தார். தேவர்களுக்குள் ஒருவராவது வரவில்லை. விச்வாமித்ரருக்கோ மஹா கோபம் ஏற்பட்டுவிட்டது. ஸ்ருலம் என்ற ஹோம பாத்ர விசேஷத்தை கையில் தூக்கிக்கொண்டு "ராஜனே! என் தபஸ்ஸினுடைய மஹிமையைப் பார். இந்த சரீரத்துடனேயே உன்னை இப்பொழுது ஸ்வர்க்கத்திற்கு அனுப்பி விடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே த்ரிசங்கு ராஜனனவன் அவருடைய தபோபலத்தால் ஸ்வர்க்கலோகம் ஏறிவிட்டான். ஸ்வர்க்கலோகமும் போய்ச் சேர்ந்துவிட்டான். அந்த லோகத்திற்கு வந்து சேர்ந்த த்ரிசங்கு ராஜனைப் பார்த்த தேவேந்த்ரன் ஸகல தேவர்களுடன்கூட "ஹே, த்ரிசங்கோ! பூலோகத்திற்கே நீ போய்விடு. குருசாபத்தால் நீ அசுத்தனாக ஆகிவிட்டாய். ஸ்வர்கலோகத்தில் வஸிக்கக்கூடிய புண்யம் கொஞ்சமேனும் உனக்கு இல்லை" என்று சொல்லி த்ரிசங்குவை கீழே தள்ளிவிட்டான். த்ரிசங்குவும் ஸ்வர்கத்தி

லிருந்து கீழே விழுகிறவனுகக் கொண்டு விச்வாமித்ரரைப் பார்த்து என்னை ரக்ஷிக்கவேண்டும், ரக்ஷிக்கவேண்டும் என்று கதறினுன் விச்வாமித்ரரும் தனது தபோபலத்தால் த்ரிசங்கு கீழே விழாமலிருக்கும்படி ஸ்வர்க்கத்திற்கு வெளி பாகத்தில் தடுத்துவைத்துக்கொண்டு, மஹா கோபத்துடன் வேறு ஸ்வர்க்கலோகத்தை ஸ்ருஷ்டிக்க ஆரம்பித்தார். ஸப்த ரிஷிகள், நக்ஷத்ரமண்டலங்கள் முதலானவைகளை விச்வாமித்ர ராஜர்ஷி ஸ்ருஷ்டித்துவிட்டார். 'வேறொரு இந்த்ரனையும் இந்த ஸ்வர்க்கத்திற்கு ஸ்தாபனம் செய்கிறேன். அல்லது இந்த்ரன் இல்லாமல் செய்துவிடுகிறேன். அல்லது இந்த த்ரிசங்குவே இந்த்ரனுக இருக்கட்டும்' என்று சொல்லி விட்டு தேவதைகளையும் ஸ்ருஷ்டிக்க ஆரம்பித்துவிட்டார்.

உடன் இந்த்ரன் முதலான தேவர்கள் பரபரப்புடன் கூடிக்கொண்டு விச்வாமித்ரரைப் பார்த்துச் "ராஜர்ஷே! இந்த த்ரிசங்குவானவன் குரு சாபத்தால் தக்ஷனுக ஆகிவிட்டான். இவனை சரீரத்துடன் ஸ்வர்க்க லோகத்திற்கு அனுப்புவது தர்மமாகுமா? தாங்களோ, மஹா தபஸ்ஸைச் செய்ய ஆரம்பித்திருக்கிறீர்கள். அதன் மத்தி யில். இப்பேர்ப்பட்ட அதர்மம் செய்வது ஒரு அழகாகுமா" என்று சொன்னுர்கள். விச்வாமித்ரரோ தேவர்களுடைய வார்த்தையைக் கேட்டு, தான் முக்யமான ப்ராம்மண்யத்தை அடையவேண்டுமென்று உத்தேசித்திருப்பதினுல் அதற்கு ஒருவிதமான விக்னமும் ஏற்படக்கூடாது என்று நினைத்து அதிகமாகக் கோபத்தை வெளிப்படுத்தாமல், தேவர்களுடைய வார்த்தைக்கிணங்கி, "ஹே தேவர்களே! நீங்கள் சொல்வது சரிதான். ஆனுலும், சரீரத்துடன் ஸ்வர்க்கலோகம் சேருவ தற்கு த்ரிசங்கு ராஜனை ஏற்றிவிட்டேன். ஏற்றிவிட்ட ராஜனை இனிக் கீழே இறக்கவே மாட்டேன். ஏறினவன் ஏறினவன்தான், ஆனுல் ஸ்வர்க்க ஸுகத்தை அவன் அனு பவிக்கவேண்டும். நான் வேறு ஸ்வர்க்கத்தை ஸ்ருஷ்டிப்ப தற்காக யத்னம் செய்து நக்ஷத்ரமண்டலங்கள் முதலான வைகளை எங்கே ஸ்ருஷ்டிக்க ஆரம்பித்தேனே அந்த இடத்தி

லேயே அவன் இருக்கவேண்டும். இந்த்ரனுக்கு ஸமானமாக எல்லா ஸௌக்யங்களும் த்ரிசங்கு ராஜனுக்கு உண்டாகவேண்டும் ஆனல் குருசாபதக்தன் என்பதை ப்ரகடனஞ் செய்ய அதோமுகனாக இருக்கவேண்டும். நீங்களும் இவ்விதம் அங்கீகரித்தே தீரவேண்டும்” என்று ப்ரார்த்தித்தார். தேவர்களும் அவருடைய இஷ்டப்படி ஒரே மனதாக அங்கீகரித்து **வைச்வாநரபதம்** என்ற ஜ்யோதிஸ் சாஸ்த்ரத்தில் ப்ரஸித்தமான அனாதியான ஜ்யோதிர்மண்டல மார்க்கத்திற்கு தெற்கு திசையில் விச்வாமித்ர ராஜர்ஷியினால், புதிதாக பாதி ஸ்ருஷ்டித்து பாதி ஸ்ருஷ்டிக்கப்படாமலிருக்கிற ஸ்தானத்தில் அந்த த்ரிசங்கு ராஜனை ஸ்தாபனம் செய்தார்கள். விச்வாமித்ரரும் தேவர்கள் சொன்னதை அங்கீகரித்து தேவர்களால் பூஜிக்கப்பட்டு யஜமானனுக்கு ப்ரதிநிதியை வைத்துக்கொண்டு ஆரம்பித்த யக்ஞத்தை ஸமாப்தி செய்தார். யக்ஞத்திற்கு வந்த ரிஷிகளும் விச்வாமித்ர ராஜர்ஷியினுடைய பூர்ண அனுமதியைப் பெற்றுக்கொண்டு அவரவர்களுடைய ஆச்ரமங்களுக்குச் சென்றார்கள்.

‘சரணாகதி அடைந்த **சுனச்யேபன்** என்ற ரிஷி புத்ரனை ரக்ஷிப்பதில் உசிதமான சக்தியுடன்கூடினவர் விச்வாமித்ரர்’ என்பதை ப்ரகாசப்படுத்த எண்ணி, சதாநந்தர் விச்வாமித்ரருடைய மற்றொருவிதமான தபஸ்ஸையும் பற்றி சொல்ல ஆரம்பித்தார். விச்வாமித்ரர் ‘தெற்கு திக்கில் தபஸ்ஸைச் செய்ததில் பெரிய விக்னம் ஏற்பட்டுவிட்டது; ஆகையால் இந்த திக்கானது தபஸ்ஸிற்கு அர்ஹமல்ல’ என்று நினைத்து தெற்கு திசையை விட்டுவிட்டு விசாலமான தபோவனத்துடன்கூடின மேற்குதிக்கில், **புஷ்கரம்** என்ற புண்யதீர்த்தத்தின் கரையில் தபஸ்ஸைச் செய்ய ஆரம்பித்தார்.

அந்த ஸமயத்திலும், அயோத்யா நகரத்திற்கு அதிபதியான **அம்பரீஷன்** என்ற அரசனானவன் ஒரு யாகத்தைச் செய்ய ஆரம்பித்தான். தேவேந்த்ரனானவன் அந்த யக்

ஞத்தைக் கெடுத்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன், யக்ஞ பசுவை அபஹரித்துக்கொண்டு போய்விட்டான். பசுவானது நஷ்டமாகப் போனபிற்பாடு யக்ஞசாலையிலுள்ள ப்ராம்மணர்கள் "ராஜன்! யக்ஞபசுவானது நஷ்டமாக ஆகிவிட்டது. அதற்கு உம்முடைய ஆலஸ்யந்தான் காரணமாகும். ஜாகரூகனுக யக்ஞத்தை ரக்ஷிக்காத தோஷம் உம்மை மூலதோஹானியாகச் செய்துவிடும். இந்த தோஷத்திற்குப் பெரிய ப்ராயச்சித்தத்தைச் நீர் செய்துவிடும். பசுவை உம்மால் இனி கண்டுபிடிக்கமுடியாது. அநேக பசுக்களால் நர பசுவை க்ரயம் வாங்கிக்கொண்டு நீர் வர வேண்டும். அதை ப்ரதிநிதியாக வைத்துக்கொண்டு யக்ஞத்தை நாங்கள் நிறைவேற்றுகிறோம். அல்லது பசுவைக் கொண்டு வரமுடியுமானுல் கொண்டுவாரும்" என்று சொன்னுர்கள். உபாத்யாயர்களுடைய வார்த்தையைக் கேட்டு ராஜனும், யக்ஞபசுவையே கொண்டுவர சக்தியில்லாததால், அநேக பசுக்களை திரள் திரளாக ஓட்டிக்கொண்டு தேசங்கள் தோறும், நகரங்களிலும், வனங்களிலும், ஆச்ரமங்களிலும், 'பசுக்களை மூல்யத்ரவ்யமாக வாங்கிக்கொண்டு புத்ரனை விற்பவர்கள் யாராவது இங்கு உண்டா' என்று விலை கூவினுன்.

அச்சமயம், ப்ருகுதுங்கம் என்ற பர்வதத்தில் ரீசிகர் என்ற ஒரு மஹர்ஷி, பார்யையோடு கூடவும், மூன்று புத்ரர்களோடும், மஹா தபஸ்வியாக விளங்கி வந்தார். அதைத் தெரிந்துகொண்டு அம்பரீஷனும் அவரிடம் சென்று ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளால் அவரை ஸந்தோஷிக்கச் செய்து விட்டு, "மஹர்ஷே! ஆயிரம் பசுக்களை மூல்ய த்ரவ்யமாகத் தருகிறேன்; ஏதாவது புத்ரனை தாங்கள் விலைக்கு விற்பீர்களா? யக்ஞ பசுவை யாரோ அபஹரித்துக்கொண்டு போய்விட்டார்கள். அதற்கு ப்ரதிநிதியாக நர பசுவை விலைக்கு வாங்கி வரவேண்டுமென்று உபாத்யாயர்கள் கட்டளையிட்டார்கள். அதுவிஷயமாக தேசந்தோறும் அலைந்து கொண்டு ,தங்களிடம் வந்து சேர்ந்தேன். கோக்களை வாங்

கிக்கொண்டு புத்ரனைத் தரவேண்டும். என்னை க்ருதக்ருத்யனாகச் செய்து என் வம்சத்தை ரக்ஷிக்க வேண்டும்" என்று ப்ரார்த்தித்தான். மஹர்ஷியோ, ராஜனைப் பார்த்து, "ராஜனே! ஜ்யேஷ்டபுத்ரனை அன்பர்களுக்கு தானரூபமாகவோ, விலைக்காகவோ கொடுக்கக்கூடாதென்று சாஸ்த்ரம் சொல்கிறது. ஆகையால், நீ எவ்வளவு பசுக்கள் கொடுத்தாலும் ஜ்யேஷ்ட புத்ரனைத் தரமாட்டேன்" என்று சொல்லிவிட்டார். அதைக் கேட்டுக்கொண்டிருந்த ரிசீக மஹர்ஷியினுடைய தர்மபத்னியானவள் ராஜனைப் பார்த்து, "அரசனே! எங்களுக்கு மூன்று பிள்ளைகள்; என் பர்த்தாவானவர் ஜ்யேஷ்ட புத்ரனைக் கொடுக்கமாட்டேன் என்று சொன்னதிலிருந்து, மற்ற இரண்டு புத்ரர்களையும் அவர் கொடுக்க ஸித்தமாக இருப்பதாக நீர் எண்ணலாம். ஆனால், தாய்களுக்குக் கடைசிப் பிள்ளையினிடம் விசேஷமான ப்ரேமையிருக்குமாதலால், கனிஷ்ட பிள்ளையான சுனகனை உம்மிடம் கொடுப்பதில் நான் ஸம்மதிக்கமாட்டேன்.

प्रायेण हि नरश्रेष्टाः ज्येष्ठाः पितृषुवल्लभाः ।
मातृणांतु कनीयांसः तस्माद्रक्षे कनीयसम् ॥

𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌹𑌿 𑌨𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾𑌃 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾𑌃 𑌪𑌿𑌤𑍃𑌷𑍁𑌵𑌲𑍍𑌲𑌭𑌾𑌃 ।
𑌮𑌾𑌤𑍃𑌣𑌾𑌂𑌤𑍁 𑌕𑌨𑍀𑌯𑌾𑌂𑌸𑌃 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍇 𑌕𑌨𑍀𑌯𑌸𑌮𑍍 ॥

ப்ராயேண ஹி நரச்ரேஷ்டா: ஜ்யேஷ்டா: பித்ருஷுவல்லபா: ।
மாத்ருணாம்து கநீயாம்ஸ: தஸ்மாத்ரக்ஷே கநீயஸம் ॥

என்றபடி லோகத்தில், அதிகமாக ஜ்யேஷ்ட புத்ரர்கள் பிதாவிற்கும், கனிஷ்ட புத்ரர்கள் மாதாவிற்கும் ரொம்பவும் ப்ரியம் என்று அனுபவத்திலிருப்பதால் நான் கனிஷ்ட புத்ரனையும் நீர் எவ்வளவு மூல்ய த்ரவ்யம் கொடுத்தாலும் தரமாட்டேன்" என்றாள்.

அந்த மஹர்ஷிக்கு ஸத்யவதீ என்ற பத்னியிடம் சுனபுச்சன், சுனச்சேபன், சுனகன் என்று மூன்று பிள்ளைகள் உண்டு.

சுனபுச்சன் என்ற ஜ்யேஷ்ட புத்ரனை தகப்பனார் கொடுக்க மறுத்துவிட்டார்; சுனகன் என்ற கனிஷ்டபுத்ரனையோ மாதாமறுத்துவிட்டாள். சுனச்யேபன் என்ற நடுப்பிள்ளையோ தனக்கு யாரும் ஆதரவு இல்லையென்று தீர்மானித்து ராஜனைப் பார்த்து, "ராஜனே! என் தகப்பனார் முதல் பிள்ளையை விரும்புகிறார்; தாயோ கடைசிப் பிள்ளையை விரும்புகிறாள்; என்னை விரும்புகிறவர்கள் ஒருவரையும் காணேம். ஆகையால் இருவர்களும் என்னை விற்று ஜீவனம் செய்ய தீர்மானம் செய்திருப்பதாக நினைக்கிறேன். உன் யக்ஞத்திற்கு நான் நர பசுவாக வருகிறேன். என் தாய் தந்தையர்கள் விரும்பும் மூல்ய த்ரவ்யத்தைக் கொடுத்து விட்டு என்னை நீ அழைத்துப் போகலாம்" என்று சொன்னான். அதற்கும் அவன் தாய் தந்தையர்கள் பேசாமலேயே இருந்தார்கள்.

புத்ரனை தானம் செய்வதோ, மூல்ய திரவ்யத்தை வாங்கிக்கொண்டு விற்பதோ, சாஸ்த்ரத்தில் கூடாது என்று சொல்லப்பட்டிருந்தாலும், தர்மத்தை ரக்ஷித்து வரும் ஒரு குலம் புத்ரனில்லாமல் அழிந்துவிடுமேயானல், தனக்கும் அநேக புத்ரர்களிருந்தால் ஜ்யேஷ்டனையும், கனிஷ்டனையும் கொடுக்காமல் நடுவிலுள்ள புத்ரர்களை ஸ்வீகாரம் கொடுக்கலாம்; ஒரு குலத்தை ரக்ஷித்த புண்யமேற்படுகிறது. அத்துடன்,

यज्ञो दानं तपश्चैव पावनानि मनीषिणां ।

யஜ்ஞோ தா³நம் தபஶ்சைவ பாவநாநி மநீஷிணாம் ।

யக்ஞோ தாநம் தபச்சைவ் பாவநாநி மநீஷிணும்

என்ற பகவத்கீதா சாஸ்த்ரப்படி, யக்ஞம் ரொம்பவும் உயர்ந்த கர்மாவாகத் தெரிகிறபடியால் அந்த யக்ஞத்தை ரக்ஷிக்கவேண்டிய நிமித்தம் யக்ஞ பசு நஷ்டமாகப் போன ஸந்தர்ப்பத்தில் தன் புத்ரனையாவது பசுவாகக் கொடுத்து உபஹரிக்க வேண்டும். அதிலும் ஜ்யேஷ்டனையும், கனிஷ்

டனையும் தவிர்த்து நடுவிலுள்ளவர்களையே கொடுக்கலாம். அதனால் பெரும் புண்யமேற்படும்—என்று சாஸ்த்ரம் அனுமதிக்கிறபடியால், அம்பரீஷருடைய யக்ஞத்தை ரக்ஷிப்பதற்காகவே, சுனச்யேபன் என்ற நடுப்பிள்ளையை அவனுடைய தாய் தந்தையர்களிருவர்களும், பசுவாக ராஜனிடம் க்ரயம் செய்வதற்கு ஸம்மதித்தார்கள். ராஜனும் ஆயிரம் பசுக்களை மூல்யத்ரவ்யமாகக் கொடுத்துவிட்டு, சுனச்யேபனையும் அழைத்துக்கொண்டு ரதத்தில் ஏற்றி வைத்துக்கொண்டு பரம ஸந்தோஷத்துடன் அயோத்திக்கு திரும்பி வந்தான்.

வரும் வழியில், விச்வாமித்ரர் மேற்கு திக்கில் எந்த புஷ்கரம் என்ற தீர்த்தக் கரையில் தபஸ் செய்து வருகிறாரோ, அந்த ஸ்தலம் ரொம்பவும் ரமணீயமான தேசம் ஆனதால் அம்பரீஷன் என்ற அரசன் ரதத்தை நிறுத்திக்கொண்டு குதிரைகளையும் அவிழ்த்துவிட்டு தண்ணீர் காட்டி, புற்களில் மேய விட்டுவிட்டு, தானும் கொஞ்சம் விச்ராந்தி செய்துகொண்டான். அந்த ஸந்தர்ப்பத்தில் இந்த சுனச்யேபன் என்ற ரிஷிகுமாரன் விச்வாமித்ரர் தபஸ் செய்துகொண்டிருப்பதைப் பார்த்து, அந்த மஹர்ஷி தனக்கு பந்து (உற்றார்) முறையில் மாமாவாக ஆகவேண்டும் என்ற தைர்யத்துடன் 'மாமா' என்று அலறிக்கொண்டுபோய் சரணமடைந்தான். அவருடைய மடியில் போய் 'ஹா' வென்று விழுந்தான். விச்வாமித்ரர் கண் விழித்துக்கொண்டு பார்த்தார் சுனச்யேபன் என்ற மருமகனை. "என்ன ஆபத்து உனக்கு?" என்று கேட்க, "எனக்கு தாயார் தகப்பனார் பந்துக்களில்லை; மற்ற ஞாதிகள் என்னை எங்கு கவனிக்கப்போகிறார்கள். என்னை நீங்கள் தான் ரக்ஷிக்கவேண்டும். அம்பரீஷராஜன் யக்ஞம் செய்தானும். யக்ஞ பசுவை யாரோ அபஹரித்துக்கொண்டுபோன ஸந்தர்ப்பத்தில் உபாத்யாயர்கள் அதற்கு ப்ரதிநிதியாக நரபசுவைக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னார்களாம்; ராஜனும் நரபசுவை க்ரயமாக வாங்கிக்கொண்டு போக கோக்களை மூலத்ரவ்யமாக வாங்கிக்கொண்டு 'யாராவது

ரிஷிகள் புத்ரனைக் கொடுப்பார்களா?’ என்று அங்காங்கு அலைந்துவிட்டு என் பிதாவிடம் வந்துசேர்ந்தான். என் பிதாவோ அண்ணா சுனபுச்சனை கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டார்; என் தாயாரோ என் தம்பி சுனகனைக் கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டாள். இருவர்களும் என்னை க்ரயத்திற்குக் கொடுப்பதில் ஸம்மதித்துவிட்டார்கள். ராஜனும், ஆயிரம் பசுக்களை மூலத்ரவ்யமாகக் கொடுத்துவிட்டு என்னை யக்ஞத்திற்கு பசுவாக க்ரயம் வாங்கிக்கொண்டு வந்துவிட்டான். அயோத்திக்கு போகும் வழி இது. ராஜன் அதோ ஸமீபத்தில் ரதத்தில் கொஞ்சம் விச்ராந்தி எடுத்துக்கொண்டிருக்கிறான். அதிசீக்ரத்தில் யக்ஞத்திற்கு பசுவாக என்னை யூபஸ்தம்பத்தில் கட்டி வதிக்கப்போகிறார்கள். என் கதி இப்படி ஆகிவிட்டது. நீங்கள்தான் என்னை காப்பாற்றவேண்டும். ஆனால் ராஜன் என் தாய் தந்தையர்களிடம் ஆயிரம் பசுக்களை கொடுத்துவிட்டதால் அவருடைய யக்ஞமும் புஷ்கலமாக பலத்தைக் கொடுக்கும்படி நிறைவேறவேண்டும்; என் உயிரையும் காப்பாற்றவேண்டும். தாங்கள்தான் எனக்குக் கதி” என்று சுனச்யேபன் மாமாவான விச்வாமித்ரரிடம் கதறினான்.

விச்வாமித்ரரும், அந்த குமாரனைத் தன் மடியில் உட்காரவைத்துக்கொண்டு ஸமாதானம் செய்துவிட்டு, தன் பிள்ளைகளை அழைத்துச் சொன்னார்.

यत्कृते पितरः पुत्रान् जनयन्ति शुभार्थिना ।
परलोकहितार्थाय तस्यकालोयमागतः ॥

𑌯𑌤𑍍𑌕𑍃𑌤𑍇 𑌪𑌿𑌤𑌰𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌨𑍍 𑌜𑌨𑌯𑌨𑍍𑌤𑌿 𑌶𑍁𑌭𑌾𑌰𑍍𑌥𑌿𑌨𑌾 ।
𑌪𑌰𑌲𑍋𑌕𑌹𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌤𑌸𑍍𑌯𑌕𑌾𑌲𑍋𑌯𑌮𑌾𑌗𑌤𑌃 ॥

யத்க்ருதே பிதர: புத்ராந் ஜநயந்தி சுபார்திநா ।
பரலோக ஹிதார்தாய தஸ்யகாலோயமாகத: ॥

ஹே, புத்ரர்களே! எதற்காக தகப்பன் புத்ரர்களை பெறுவதோ அந்த ப்ரயோஜனத்தை நீங்கள் அறிந்தீர்களா?

जीवतोर्वाक्याकरणात् प्रत्यब्दं भूरिभोजनात् ।
गयायां पिण्डदानाच्च त्रिभिः पुत्रस्य पुत्रता ॥

𑌜𑍀𑌵𑌤𑍋𑌰𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌬𑍍𑌦𑌂 𑌭𑍂𑌰𑌿𑌭𑍋𑌜𑌨𑌾𑌤𑍍 ।
𑌗𑌯𑌾𑌯𑌾𑌂 𑌪𑌿𑌣𑍍𑌡𑌦𑌾𑌨𑌾𑌚𑍍𑌚 𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑍁𑌤𑍍𑌰𑌤𑌾 ॥

ஜீவதோர்வாக்யகரணாத் ப்ரத்யப்தம் பூரிபோஜனாத் ।
கயாயாம் பிண்டதானாச்ச த்ரிபி: புத்ரஸ்ய புத்ரதா ॥

என்ற ஸ்ம்ருதியினுல், தாய் தந்தையர்கள் ஜீவிக்கும் வரையிலும் அவர்களுடைய வார்த்தையை பரிபாலனம் செய்வதற்கும், அவர்கள் மரித்த பின்பு மரித்த தினத்தில் ச்ரார்த்தம் முதலான கர்மாவைச் செய்து அவர்களை த்ருப்தி செய்துவைப்பதற்கும், தனது ஆயுள் முடிவதற்குள் மரித்த தாய் தந்தையர்களை உத்தேசித்து கயாக்ஷேத்ரத்தில் வடவ்ருக்ஷத்தின் மூலத்தில் பிண்டம் போடுவதற்கும்—இம் மூன்று கார்யங்களுக்கு மாத்ரமே தாய் தந்தையர்கள் புத்ரனை விரும்புகிருர்கள். இந்த மூன்று கார்யங்களை செய்த புத்ரன்தான் புத்ரனுக ஆகுவான். நானே இப்பொழுது ஜீவதசையில் இருந்துவருகிறேன். என்னுடைய வார்த்தையை நீங்கள் பரிபாலனம் செய்யவேண்டும். அப்படியானுல்தான் நீங்கள் என் புத்ரர்களாக ஆகுவீர்கள். அப்படி என் வார்த்தையை நீங்கள் பரிபாலனம் செய்தால் பரலோகத்தில் உங்களுக்கு நன்மையேற்படும்'' என்று சொன்னுர். விச்வாமித்ரருடைய பிள்ளைகளோ, 'என்ன நம் தகப்பனுர் இவ்வளவுதூரம் நம்மைச் சொல்கிருரே' என்று நினைத்து, "என்ன நாங்கள் தங்கள் வார்த்தையைக் கேட்காமல் இருந்தோம். எதைச் சொன்னுலும் கேட்கிருேம்'' என்று சொன்னுர்கள். விச்வாமித்ரரும் உடன் பரமஸந்தோஷத்துடன் புத்ரர்களைப் பார்த்து "ஹே, புத்ரர்களே! இதோ மடியில் உட்கார்ந்திருக்கும் பையனை உங்களுக்குத் தெரியுமா? இவன் என் மருமகன். ரிசீகரின் பிள்ளை. அவனுடைய தகப்பனுர், அம்பரீஷனுக்கு யக்ஞத்திற்கு

பசுவாக அவனை விற்றுவிட்டாராம். என்னிடம் சரண மடைந்து ரக்ஷிக்கவேண்டுமென்று விரும்புகிருன். அவனுக்கு உயிரைக் கொடுக்கவேண்டிய பொறுப்பு உங்களைச் சேர்ந் தது. நீங்கள் உங்களுக்குள் யாராவது ஒருவன் ராஜனு டைய யக்ஞத்திற்கு பசுவாகப் போகவேண்டும். ராஜ னுடைய யக்ஞமும் நிறைவேறும்; சுனச்சேபனையும் ரக்ஷித்த தாக ஆகும். தேவதைகளும் த்ருப்தி அடைவார்கள்; உங் களுக்கும் என் வார்த்தையை அனுஷ்டானம் செய்ததற்கு புண்யமும் கிடைக்கும்" என்ருர்.

விச்வாமித்ரருக்கோ, ஹவிஷ்யந்தன், மதுஷ்யந்தன் த்ருட நேத்ரன், மஹாரதன் என்று நான்கு பிள்ளைகள். நான்கு குமாரர்களும் ஒன்று சேர்ந்துகொண்டார்கள். "வழியில் போகும் பிள்ளையை ரக்ஷிப்பதற்கு ஸொந்த பிள்ளையயார் ஒருவன் யக்ஞத்திற்கு பசுவாகக் கொடுப்பான்! நீர் தகப் பனு? நல்ல சுத்தமான சால்யான்னத்தை புஜிக்காமல் நாய் மாம்ஸத்தை புஜிப்பதுபோல் உள்ளது உம் கார்யம்" என்று சொன்னுர்கள். விச்வாமித்ரருக்கு மஹாகோபம் உண்டாகிவிட்டது. புத்ரர்களைப் பார்த்து, "மூடர்களே! கொஞ்சமேனும் பயமில்லாமல் பித்ரு பக்தியுமில்லாமல்; கோரமான வார்த்தைகளைச் சொல்லுகிறீர்கள். நீங்கள் பித்ரு வசனத்தை அதிக்ரமித்ததால் ஆயிரம் வருஷம் நாய் மாம்ஸத்தை புஜிக்கக்கூடிய கீழ் ஜாதியில் பிறக்கத் தகுந்த வர்கள். வஸிஷ்டருடைய நூறு பிள்ளைகளுக்கும் எக்கதியோ அதே கதி உங்களுக்கும் ஏற்படட்டும்" என்று சபித்து விட்டு, இந்த ரிஷிகுமாரனைத் தட்டிக்கொடுத்து, "பயப் படாதே குழந்தாய்! உன்னை நான் ரக்ஷிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு, தனது கையில் விபூதியை வைத்துக்கொண்டு கொஞ்சநேரம் மந்த்ரஜபமும் செய்து அந்தக் குமாரனுடைய நெற்றியிலிட்டு, தேஹமுழுமையும் விபூதியினுல் பூசி, ரக்ஷா பந்தனம் செய்தார். பிறகு இந்த்ரனைப் பற்றியும், உபேந்த் ரனைப் பற்றியும் ருக்வேதத்திலுள்ள இரண்டு மந்த்ரங்களை உபதேசித்தார். "உன்னை யூபஸ்தம்பத்தில் கட்டினவுடன்

அக்னிக்கு அபிமுகமாக நின்றுகொண்டு இந்த இரண்டு மந்த்ரங்களையும் நீ ஜபம் செய்துவா. உனக்கு யாதொரு விதமான குறைவும் வராது. நீயும் ஜீவிக்கலாம். ராஜனுடைய யக்ஞமும் நிறைவேறும்'' என்றுபதேசித்து, ரிஷி குமாரனை, ராஜனுடன் போகும்படி அனுப்பினார்.

ராஜனும் விழித்துக்கொண்டு குமாரனைப் பார்த்தான்; காணோம். ஆகிலும் சற்றுநேரத்திற்குள் குமாரன் வந்துவிட்டான். சரீரம் முழுமையும் விபூதியினால் பூசப்பட்டிருந்தது. குமாரனை 'இதென்ன கோலம்' என்று வினவ, 'அநுஷ்டானம் செய்து வருகிறேன்' என்று குமாரனும் பதிலளித்தான். 'யக்ஞ காலம் அதிக்ரமிக்கிறது' என்று ராஜனை இந்த ரிஷிகுமாரன் துரிதப்படுத்தினான். ராஜனும் வெகு வேகமாக ரதத்தை விட்டுக்கொண்டு, ரிஷிகுமாரனுடன் யக்ஞ சாலையை அடைந்தான். அங்கு காத்துக்கொண்டிருந்த உபாத்யாய ப்ராம்மணோத்தமர்கள் நர பசுவுடன் ராஜன் திரும்பி வந்ததில் ஸந்தோஷத்தை அடைந்து, யக்ஞ கர்மாவை ஆரம்பித்தார்கள். மஹர்ஷிகளும் ராஜனுடைய ஆக்ஞை ப்ரகாரம் இந்த ரிஷி குமாரனுக்கு ஸ்னானம் செய்துவைத்து, சிகப்பு வஸ்த்ரத்தால் அலங்காரஞ் செய்து, தர்ப்பையினால் முறுக்கப்பட்ட கயிற்றால் யூபஸ்தம்பத்தில் அவனை கட்டினார்கள். இந்த பையனும், அன்யர்களுக்குக் கேட்காமல் மனதிலேயே விச்வாமித்ரர் சொல்லிக்கொடுத்த இரண்டு ரிக்வேத மந்த்ரங்களையும் சொல்லி இந்த்ரனையும், உபேந்த்ரனையும் ஸ்துதித்தான். உடன், இந்த்ரனும், உபேந்த்ரனும் யக்ஞ சாலையில் ப்ரத்யக்ஷமாக ஆவிர்பவித்து அம்பரீஷ ராஜனால் வரவேற்கப்பட்டு, ராஜனைப் பார்த்துச் சொன்னதாவது, "அரசனே! உன் யக்ஞத்தில் நாங்கள் ரொம்பவும் த்ருப்தி அடைந்தோம். அந்த பசுவை வைத்துக்கொண்டு யக்ஞம் செய்தால் யாது பலமோ, அதைவிட அதிகமான பலத்தை உன் யக்ஞத்திற்கு நாங்கள் அளிக்கின்றோம். இந்த ரிஷிகுமாரனை யூபஸ்தம்ப கட்டிலிருந்தும் அவிழ்த்துவிடுங்கள்'' என்று

சொல்லிவிட்டு இந்த்ரன், உபேந்த்ரன் இருவர்களும் தாங்களே ரிஷிகுமாரனை யூபஸ்தம்பத்திலிருந்து அவிழ்த்துவிட்டு, "நீ சிரஞ்சீவியாக இருக்கவேண்டு"மென்றும் ஆசீர்வாதம் செய்துவிட்டு ரிஷிகுமாரனை தாய் தந்தையர்கள் ஸமீபம் செல்லும்படி அனுப்பினார்கள். யக்ஞத்தையும் அவ்விரு தேவதைகளும் தாங்களே கூடயிருந்து நடத்தி ராஜனுக்கு மஹாபலத்தைக் கொடுத்தார்கள்.

விச்வாமித்ரரும் மறுபடியும் தபஸ்ஸை ஆரம்பித்து ஆயிரம் வருஷங்கள் அத்யுக்ரமான தபஸ்ஸைச் செய்தார். இவ்வளவு தபஸ் செய்தும் புத்ரனுடைய விஷயத்தில் வந்த கோபத்தால் அவருக்கு ப்ரும்மரிஷி என்ற பெயர் ஸித்திக்கவில்லை. ஆனாலும் சுனச்சேபனை அனுப்பின பின்பும், ஆயிரம் வருஷங்கள் தபஸ் செய்து, முடிவில் தேவர்கள் வந்து ரிஷி என்ற நாமகரணத்தைச் செய்துவிட்டுப் போனார்கள். விச்வாமித்ரர் மறுபடியும் "நாம் ப்ராம்மண்யத்தை அடைய வல்லவா தபஸ் செய்கிறோம். அதற்கு ப்ரும்மரிஷி என்றல்லவா தேவர்கள் நமக்கு திருநாமத்தைக் கொடுக்கவேண்டும். ரிஷி என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்களே! தபஸ் போராது போலும்! மறுபடியும் தபஸ்ஸை ஆரம்பிப்போம்" என்று அத்யுக்ரமான தபஸ்ஸைச் செய்தார். ஜிதேந்த்ரியனே ப்ராம்மணனாக ஆகுவான். இவ்வளவு தபஸ்ஸாலும் விச்வாமித்ரருக்கு ஜிதேந்த்ரியத்வம் என்பது ஸித்திக்காததால் தேவர்கள் ப்ரத்யக்ஷமாக வந்தும் ப்ரும்ம ரிஷி என்று சொல்லாமல் ரிஷி என்று மட்டுமே சொல்லிவிட்டுப் போனார்கள்—என்பதை ப்ரகாசப்படுத்த மற்றொரு கதையானது சொல்லப்படுகிறது.

அதாவது, கொஞ்சகாலம் கழித்து எந்த புஷ்கரம் என்ற தடாகத்தின் கரையில் விச்வாமித்ரர் தபஸ் செய்து வந்தாரோ அந்த தடாகத்தில் மேனகை என்ற தேவதாஸியானவள் ஸ்னானம் செய்வதற்காக வந்து சேர்ந்

தாள். மஹர்ஷி தபஸ்ஸிலிருந்து கண்விழித்த காலத்தில் இந்த மேனகையைப் பார்த்தார். மேக மண்டலத்தின் நடுவே மின்னலைப் பார்ப்பதுபோல், ஜலத்தின் மத்தியில் அவள் அழகைப் பார்த்துக் காமனுக்கு வசமாகிவிட்டார். உடன் ஆஸனத்தினின்றும் எழுந்து அவள் ஸமீபம் சென்று "யாரம்மா? நீ இங்கு வந்து ஸ்னானம் செய்வதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டுவிட்டு "உன்னழகைப் பார்த்து நான் காமவசனாக ஆகிவிட்டேன். என் ஆச்ரமத்திற்கு நீ வந்து என்னுடன் சில காலம் வஸித்து, எனக்கு ஸுகத்தைக் கொடுக்கவேண்டு"மென்று கெஞ்சினார். அந்த மேனகையும் 'ஸரி' என்று ஸம்மதித்து விச்வாமித்ர ரிஷியினுடைய ஆச்ரமத்தில் பத்து வருஷங்கள் அவருடன் வஸித்தாள். பத்துவருஷ காலங்கள் ஸுகமாக விச்வாமித்ரருக்குச் சென்றன. அந்தக் காலங்களில் தபஸ்ஸின் நினைவே அவருக்கு இல்லை. கொஞ்ச காலம் கழித்து விச்வாமித்ரருக்கு மிகவும் லஜ்ஜை ஏற்பட்டுவிட்டது. "வஸிஷ்டரைப் போல் ப்ராம்மண்யத்தை அடைய தபஸ் செய்தோம்; இவ்விதம் காமவசனாக நாம் ஆனால் தேவர்கள் எவ்விதம் நம்மை 'ப்ரும்ம ரிஷி' என்று சொல்லுவார்கள்? தேவர்களே நம்மை இவ்விதம் விக்னம் செய்து கெடுக்கிறார்கள்போலும்! ஒரு நாள்போல் பத்து வருஷங்கள் சென்றுவிட்டன" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு, மிகவும் துக்கத்தை அடைந்தார். மேனகை என்ற அப்ஸரஸ்ஸோ நடுங்கினாள். அவளை ஒன்றும் சபிக்காமல் "நீ என்ன செய்வாய்! என் தலைவிதி!" என்று அவளையும் விட்டு விட்டு மேற்கு திக்கும் தபஸ்ஸுக்கு அர்ஹமில்லை என்ற தீர்மானத்துடன் வடக்கு திக்கில் ஹிமவத் பர்வதத்தின் தாழ்வரையில் அத்யுக்ரமான தபஸ்ஸைச் செய்ய ஆரம்பித்தார். 'ப்ரும்மரிஷி' என்று தேவர்கள் சொல்லும் வரையிலும் காமத்திற்கோ, க்ரோதத்திற்கோ இடங்கொடாமல் இந்த்ரியங்களை நிக்ரஹம் செய்துகொண்டு தபஸ்ஸைச் செய்வது என்ற பிடிவாதத்துடன் ஹிமவத்பர்வதத்தினு

டைய தாழ்வரையில் ப்ரவாஹிக்கும் கௌசிகீ என்ற நதி தீரத்தில் இவர் தபஸ்ஸைச் செய்து வந்தார். அங்கும் ஆயிரம் வருஷங்கள் தபஸ் செய்தார். இவருடைய உக்ர மான தபஸ்ஸால், தேவர்களுக்கே 'என்ன ஏற்படுமோ!' என்ற பயம் வந்துவிட்டது. பிறகு தேவர்கள் ஒன்று சேர்ந்து ப்ரும்மாவிடம் வந்து, "இவருடைய தபஸ்ஸானது லோகத்தையே எரித்துவிடும்போல் தோன்றுகிறது. 'மஹர்ஷி' என்ற திருநாமத்தால் இனி இவரை அழைக்க வேண்டும்" என்று சொன்னார்கள். ப்ரும்மாவும் தேவர்களு டைய வார்த்தையைக் கேட்டு, விச்வாமித்ரரை மஹர்ஷி என்றழைத்தார். "ரிஷிகளுக்குள் நீரே முக்யமானவர்; மஹான்களுக்குள் நீரே பெரியவர். அதனால் மஹர்ஷி என்று நாமகரணம் செய்து நாங்கள் அழைக்கிறோம்" என்றார்.

இவ்விதம் சொன்ன ப்ரும்மாவினுடைய வார்த்தை யைக் கேட்டு விச்வாமித்ரர் ப்ரும்மாவைப் பார்த்து, "ப்ரும்மன்! என் தபோமஹிமையினால் என்னை மஹர்ஷி என்று நீங்கள் சொல்கிறீர்களே. அதனால் நான் ஜிதேந்த்ரியனாக ஆகவில்லையா? அப்படி ஜிதேந்த்ரியனாக ஆகிவிட்டால் ஏன் 'ப்ரும்மரிஷி' என்று என்னை சொல்லக் கூடாது?" என்று கேட்டார்.

ப்ரும்மாவானவர் "நீ இன்னமும் ஜிதேந்த்ரியனில்லை தான். உன் மனது விஷய ஸன்னிதியிலும் கலங்காமலிருந் தால் மாத்ரம் உன்னை ஜிதேந்த்ரியனென்று சொல்லலாம்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். தேவர்களும் ப்ரும் மாவும் போனபின்பு, பிறகும் விச்வாமித்ரர் தனக்கு ஜிதேந்த் ரியத்வம் ஸித்திப்பதற்காக, இரண்டு கைகளையும் ஆகாசத் தில் தூக்கிக்கொண்டு, கட்டைவிரலினுடைய நுனியால் பூமியில் நின்றுகொண்டு, காற்றை பக்ஷித்துக்கொண்டு, வெயில் காலத்தில் நான்கு பக்கங்களிலும் தீ வளர்த்துக் கொண்டு, ஸூர்யனுக்கு எதிரில் சிரஸ்ஸை வைத்துக் கொண்டு, குளிர்காலத்தில் கழுத்தளவு ஜலத்தில் நின்று

கொண்டும் மஹாகோரமான தபஸ்ஸைச் செய்தார். இவ்விதம் ஆயிரம் வருஷங்கள் தபஸ் செய்தார். ப்ரும்மா, தேவர்கள், இந்த்ரன் இவர்களுக்கே, "இவருடைய தபஸ் என்ன செய்யுமோ?" என்ற பயமேற்பட்டது. உடன் அழகில் ரொம்பவும் சிறந்தவளான ரம்பை என்ற அப்ஸரஸ்ஸை அழைத்து "விச்வாமித்ர மஹர்ஷியினுடைய தபஸ்ஸைக் கெடுத்து வரவேண்டுமென்று" ஆக்ஞாபித்தார்கள். "ஹே ரம்பே! தேவர்களுடைய கார்யத்தை நீ செய்யவேண்டும். எவ்விதமாவது விச்வாமித்ர மஹர்ஷியினுடைய தபஸ்ஸிற்கு விக்னத்தை நீ செய்துவரவேண்டும்." என்று இந்த்ரன் சொன்னான். அதைக் கேட்ட ரம்பையானவள், இந்த்ரனைப் பார்த்து "விச்வாமித்ரரோ கோரமான தபஸ்ஸைச் செய்கிருர். மஹா கோபிஷ்டர். எனக்கு ரொம்பவும் பயமாயிருக்கிறது. நான் அவருடைய தபஸ்ஸிற்கு விக்னத்தை செய்யப் போகமாட்டேன்" என்ருள். பிறகு தேவேந்த்ரன் ரம்பையைப் பார்த்து, "ரம்பே! உன்னைப்போல அழகுள்ள அப்ஸரஸ் வேறு யாருமில்லை; நீ போனுல்தான் அவர் மோஹத்தை அடைவார். நீ பயப்படவேண்டாம். உனக்கு ஸஹாயமாக மன்மதனுடன் நானும் உனது பார்ச்வத்தில் வந்து நிற்கிறேன். கோகிலமாக நான் ஸ்வரூபத்தை எடுத்துக்கொண்டு, மன்மதனை என்னுடைய அருகில் வைத்துக்கொண்டு உனக்கு ஸஹாயம் செய்கிறேன். நீ அநேகவிதமான ரூபத்தை எடுத்துக்கொண்டு கானங்களாலும், அழகான ரூபத்தாலும், அபினயங்களாலும், விச்வாமித்ர மஹர்ஷியை வசப்படுத்த வேண்டும்" என்று சொன்னுன். ரம்பையும் இந்த்ரனுடைய வார்த்தையைக் கேட்டு தைர்யத்துடன் விச்வாமித்ர மஹர்ஷிக்கு எதிரில் வந்து அநேகவிதமான ச்ருங்காராதிகளால் வ்யாமோஹப் படுத்தினுள். இந்த்ரனும் கோகிலமாக உருவத்தை எடுத்துக்கொண்டு சப்தித்தான். கோகிலத்தினுடைய சப்தத்தைக் கேட்டு விச்வாமித்ரர் தபஸ்ஸினின்றும் விழித்துக்கொண்டார். கோகிலத்தினுடைய சப்தத்தாலும்

அபூர்வமான கான வித்யையாலும், ரம்பையின் அழகாலும், விச்வாமித்ர மஹர்ஷியானவர் 'இவ்விடத்தில் இவைகள் ஸம்பவிக்கக் காரணம் என்ன? நம்முடைய தபஸ்ஸைக் கெடுக்க இந்த்ரன் செய்யும் வேலையாகத்தான் இருக்க வேண்டும்' என்று ஸந்தேஹப்பட்டு, கோபத்தால் ரம்பையைப் பார்த்து "ஹே ரம்பே! காமத்தையும், க்ரோதத்தையும் ஜயிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் அத்யுக்ரமான தபஸ்ஸைச் செய்துவரும் என்னை நீ அகாரணமாக வ்யாமோஹப்படுத்துகிறாய். அதனால் பதினாயிரம் வருஷங்கள் நீ கல்லாகப் போகக்கடவது" என்று சபித்தார். சபித்துவிட்டு, "வஸிஷ்டபகவான் மூலமாக உனக்கு சாப விமோசனம் ஏற்படட்டும்" என்று அனுக்ரஹித்தார். இவ்விதம் சொல்லிவிட்டு விச்வாமித்ர மஹர்ஷி "இங்கும் நமக்குக் கோபம் வந்துவிட்டதே! நம் தபஸ் இவ்விதம் நம்மை கஷ்டப்படுத்துகிறதே தவிர பலிக்கவில்லை" என்று தாபத்தை அடைந்தார். ரம்பையும் மஹர்ஷியினுடைய சாபத்தால் கல்லானாள். மன்மதன் வெகுதூரம் ஓடிவிட்டான். பிறகு விச்வாமித்ர மஹர்ஷியானவர் 'எவ்விதமாவது நாம் இனி காமத்தையும், க்ரோதத்தையும் அடக்கிக்கொண்டு ஒரு வார்த்தையும் ஒருவரிடமும் பேசாமல் கும்பக ப்ராணாயாமமும் செய்துகொண்டு ஜிதேந்த்ரியனாகவும் இருந்துகொண்டு எவ்வளவு வருஷமானாலும் எதிர்பார்த்த ப்ராம்மண்யம் கிடைக்கும்வரை, சரீரத்தை சோஷிக்கச் செய்யப்போகிறேன் என்றும் இவ்விதம் ஆயிரம் வருஷங்கள் தபஸ்ஸால் சரீரத்தை க்ருசம் செய்யப்போவதாயும் மஹர்ஷியானவர் ப்ரதிக்ஞை செய்தார்.

பிறகு ஹிமவத் பர்வதத்தின் தாழ்வரையான வடக்கு திக்கை விட்டு விட்டு, கிழக்கு திக்குக்குச் சென்று உக்ரமான தபஸ்ஸைச் செய்தார். ஆயிரம் வருஷகாலம் மௌனமாக இருந்துகொண்டு எவ்விதமான விக்னங்கள் வந்தாலும் அதற்கு அவகாசம் கொடுக்காமலும் காமத்திற்கோ, க்ரோதத்திற்கோ கொஞ்சமேனும்தான் விஷயமாகாமல், பட்

டுப்போன் மரம்போல் நின்றுகொண்டு உக்ரமான தபஸ்ஸைச் செய்தார். ஆயிரம் வருஷம் முடிந்தவுடன் மறு தினம் காலையில் பக்வமான அன்னத்தை பாரணை செய்ய ஆரம்பித்தார். அந்த ஸந்தர்ப்பத்திலும் தேவேந்த்ரன் ப்ராம்மணவேஷம் தரித்துக்கொண்டு, அதிதிபோல் வந்து விச்வாமித்ரர் பாரணை செய்வதற்காக பக்வம் செய்து வைத்துக்கொண்டிருந்த அன்னத்தை தனக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டான். மஹர்ஷியும் முழு அன்னத்தையும் அந்த அதிதி ப்ராம்மணனிடம் கொடுத்துவிட்டு மறுபடியும் போஜனம் செய்யாமலே ஆயிரம் வருஷகாலம் தபஸ்ஸிற்கு ப்ரதிக்ஞை செய்துவிட்டார். அப்பொழுதும் யாதொருவிதமான வார்த்தையையும் ஒருவருடனும் பேசுவதில்லை. காமமோ, க்ரோதமோ, மஹர்ஷியின் அருகில் வர முடியாமலாகிவிட்டது. மௌனவ்ரதமாக இருந்துவந்தார். உச்வாஸ நிச்வாஸமில்லாமல் கும்பக ப்ராணயாமத்தை அவலம்பித்து தபஸ் செய்தார். இவ்விதம் தபஸ் செய்துவரும் பொழுது மஹர்ஷியினுடைய சிரஸ்ஸிலிருந்தும் புகை கிளம்பி மூன்று லோகங்களிலும் வ்யாபரித்துவிட்டது. லோகங்களே அழிந்துவிடுமோ என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. ஸகல தேவர்களும் அதைப் பார்த்து மிகவும் பயத்தை அடைந்து ப்ரும்மாவிடம் சென்று "ஹே ப்ரும்மன்! தபஸ் செய்துவரும் விச்வாமித்ர மஹர்ஷியின் இந்த தேஜஸ்ஸானது விச்வாமித்ர மஹர்ஷியினுடைய சுத்த ஸத்வகுணத்திலிருந்து உண்டான அக்னியாகும். ரஜோகுணம் தமோகுணம் இவைகளை ப்ரதானமாக கை கொண்டவர்களையோ, ரஜோகுண தமோகுணத்தால் மிச்ரமான குணத்தை அவலம்பித்தவர்களையோ இந்த அக்னியானது எரித்துவிடும். இனி நாம் மௌனமாக இருக்கக்கூடாது. விச்வாமித்ர மஹர்ஷியை எவ்வளவோ காரணங்களால் தபஸ்ஸிலிருந்து நழுவச்செய்ய யத்னம் செய்தும் கொஞ்சமேனும் தபஸ்ஸிலிருந்து இம்மஹான் நழுவவில்லை. இவர் எதிர்பார்க்கும் ப்ராம்மண்யத்திற்கு விருத்தமான காமமோ, க்ரோதமோ,

லோபமோ, இம்மஹானுபாவனிடம் இல்லவேயில்லே. பரம சுத்தமாக ஆகிவிட்டார். அவர் எதிர்பார்த்த ப்ராம்மண்யத்தைக் கொடுக்காதபோனுல் இம்மஹானுபாவனுடைய தேஜஸ்ஸானது மூன்று லோகங்களேயும் எரித்துவிடும். ஸமுத்ரங்களெல்லாம் கலங்குகின்றன. பர்வதங்கள் அசைகின்றன; பூமியும் நடுங்குகிறது; வாயுவும் ரொம்பவும் பயத்துடன் வீசுகிருன்" என்ற விஷயங்களே தெரிவித்தார்கள்.

பிறகு ப்ரும்மாவை முன்னிட்டுக்கொண்டு ஸகல தேவர்களும் விச்வாமித்ர மஹர்ஷியின் ஸமீபம் வந்து சேர்ந்து ப்ரும்ம ரிஷி என்ற பெயரால் விச்வாமித்ர மஹர்ஷியை அழைத்தார்கள்.

ब्रह्मर्षे स्वागतं तेऽस्तु तपसास्म सुतोषिताः ।
ब्राह्मण्यं तपसोग्रेण प्राप्तवानसि कौशिक ॥
दीर्घमायुश्च ते ब्रह्मन् ददामि समरुद्गणः ।
स्वस्ति प्राप्नुहि भद्रं ते गच्छ सौम्य यथासुखम् ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍍𑌷𑍇 𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑌂 𑌤𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌤𑌪𑌸𑌾𑌸𑍍𑌮 𑌸𑍁𑌤𑍋𑌷𑌿𑌤𑌾𑌃 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌂 𑌤𑌪𑌸𑍋𑌗𑍍𑌰𑍇𑌣 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌵𑌾𑌨𑌸𑌿 𑌕𑍌𑌶𑌿𑌕 ॥
𑌦𑍀𑌰𑍍𑌘𑌮𑌾𑌯𑍁𑌶𑍍𑌚 𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌦𑌦𑌾𑌮𑌿 𑌸𑌮𑌰𑍁𑌦𑍍𑌗𑌣𑌃 ।
𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌹𑌿 𑌭𑌦𑍍𑌰𑌂 𑌤𑍇 𑌗𑌚𑍍𑌛 𑌸𑍌𑌮𑍍𑌯 𑌯𑌥𑌾𑌸𑍁𑌖𑌮𑍍 ॥

ப்ருஹ்மர்ஷே ஸ்வாகதம் தேஸ்து தபஸாஸ்ம ஸுதோஷிதா: ।
ப்ராஹ்மண்யம் தபஸோக்ரேண ப்ராப்தவாநஸி கௌசிக ॥
தீர்கமாயுச்ச தே ப்ரஹ்மந் ததாமி ஸமருத்கண: ।
ஸ்வஸ்தி ப்ராப்நுஹி பத்ரம் தே கச்ச ஸௌம்ய யதாஸுகம் ॥

என்ற ச்லோகங்களால் தேவர்கள் ப்ரும்மாவை முன்னிட்டுக்கொண்டு விச்வாமித்ர மஹர்ஷியைப் பார்த்து "ஹே ப்ரும்மர்ஷே! தங்களுடைய தபஸ்ஸால் நாங்கள் ஸந்தோஷத்தை அடைந்தோம். உக்ரமான தபஸ்ஸினுல் தாங்களும் ப்ராம்மண்யத்தை அடைந்துவிட்டீர்கள். தீர்க்க

மான ஆயுளேயும் தங்களுக்குத் தருகிருேம். என்றும் தங்களுக்கு பரம க்ஷேமமுண்டாகட்டும். தங்கள் இஷ்டம்போல் லோகத்தில் ஸஞ்சாரம் செய்யலாம்" என்று சொன்னுர்கள். ப்ரும்மாவினுடைய வார்த்தையைக் கேட்டு விச்வாமித்ரர் என்ற ப்ரும்ம ரிஷியோ "ப்ரும்மன், உக்ரமான தபஸ்ஸால் நான் ப்ராம்மண்யத்தையும், தீர்க்கமான ஆயுஸ்ஸையும் அடைந்தது வாஸ்தவமானுல் ஓம்காரமும் வஷட்காரமும் நான்கு வேதங்களும், என்னே ப்ரும்ம ரிஷி என்று வரிக்கட்டும். ப்ரும்ம புத்ரரான வஸிஷ்டபகவானும் என்னே ப்ரும்ம ரிஷி என்று ஒப்புக்கொள்ளவேண்டும். இவ்விதமான என் மனோரதம் பூர்த்தியாகிவிட்டால் தாங்களும் தேவர்களும் ஸ்வர்க்க லோகம் செல்லலாம்" என்று சொன்னுர். இதைக்கேட்ட ப்ரும்மாவும் ப்ரும்மஞானத்திற்கு ஸாதனமான ஓம் காரத்தையும் யக்ஞத்திற்கு ஸாதனமான வஷட் காரத்தையும் ஸாங்கோபாங்கமான வேதங்களேயும் ப்ரத்யக்ஷமாக வரவழைத்து அவர்கள் மூலமும் விச்வாமித்ர மஹர்ஷியை ப்ரும்ம ரிஷி என்று வரித்தார். ஓம்காரமும் வஷட்காரமும் வேதங்களும் விச்வாமித்ர மஹர்ஷியை 'தாங்கள்தான் ப்ரும்ம ரிஷி' என்று சொல்லி ச்லாகித்ததுகள். பிறகு தேவர்கள்மூலம் வஸிஷ்ட பகவானேயும் அழைத்து வரும்படி செய்தார். வஸிஷ்டபகவானும் வந்து விச்வாமித்ர மஹர்ஷியோடு ஸக்யம் செய்து கொண்டு, விச்வாமித்ர மஹர்ஷியை ப்ரும்ம ரிஷி என்றும் ஒப்புக்கொண்டார்.

ब्रह्मर्षिस्त्वं न संदेहः सर्वं संपत्स्यते तव

ஜூஹஷி-ஃஸ்ஃவ° ந ஸ°ஃெஹஃ ஸவ-ஃ° ஸ°வஸ்ஃதெ தவ

ப்ரஹ்மர்ஷிஸ்த்வம் ந ஸம்தேஹ: ஸர்வம் ஸம்பத்ஸ்யதே தவ

என்றும் வஸிஷ்டபகவான் 'தாங்கள் ப்ரும்மரிஷிதான். தங்களுடைய விஷயத்தில்,இனி யாஜனமோ அத்யாபனமோ, தத்வோபதேசம் செய்வதோ எல்லா தர்மங்களும் உத்தம தர்மங்களாகவே ஆகும்' என்று சொல்லிவிட்டு, வஸிஷ்ட

பகவான் விச்வாமித்ர மஹர்ஷியினுல் பூஜிக்கப்பட்டு ஆச்ர மம் சென்ருர். தேவர்களும் அவரவர்கள் தன் தன் லோகம் சென்ருர்கள். விச்வாமித்ர மஹர்ஷியும் மஹத்தான தபஸ் ஸால் ப்ராம்மண்யத்தை அடைந்துவிட்டு லோகத்தில் மஹா தபஸ்வியாக ஸஞ்சாரம் செய்துவந்தார்.

"ராமா! இவ்விதம் விச்வாமித்ர மஹர்ஷியினுல் ப்ராம் மண்யமானது அடையப்பட்டது. தபஸ்ஸே இவர் ரூப மாக உருவமெடுத்துக்கொண்டிருக்கிறது. மஹாதார்மிகன். இம்மஹானுபாவனை குருவாக அடைந்த உன் பாக்யமும் பெரிய பாக்யம்" என்று சொல்லிவிட்டு சதானந்தர் என்ற மஹர்ஷியானவர் மௌனமாக இருந்தார்.

சதானந்தரின் வார்த்தையைக் கேட்ட ஜனக மஹா ராஜன் ராமலக்ஷ்மணர்களுடைய ஸந்நிதியில் விச்வாமித்ர மஹர்ஷியைப் பார்த்து, "மஹர்ஷே, நான்தான் பரமதன்யன். தங்களால் அனுக்ரஹம் செய்யப்பட்டவனுக ஆகிறேன். ராமலக்ஷ்மணர்களுடன்கூட என் யக்ஞசாலைக்கு தாங்கள் வந்ததினுலேயே என் குடும்பமே மஹா பரிசுத்தமாக ஆகி விட்டது. நானும் பரிசுத்தனுக ஆகிவிட்டேன். தங்களு டைய தர்சனத்தால் அபூர்வமான அநேக குணங்கள் எனக்கு ஏற்பட்டது. தங்களுடைய தபோமஹிமையை என் புரோஹிதரான சதானந்தர் சொன்னதைக் கேட்டு பர மாச்சர்யத்தை அடைகிறேன். தங்களுடைய தபஸ்ஸோ, பலமோ, கல்யாண குணங்களோ, நிகரற்ற தென்பதில் ஸந்தேஹமேயில்லை. கர்ம காலம் அதிக்ரமித்துவிட்டது. ஸூர்யனே அஸ்தமனத்தை அடையப்போகிருன். யக்ஞ சாலைக்கு நான் போகவேண்டும். காலையில் ஸந்திப்போம். உத்தரவு செய்யவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். ஜனகருடைய ப்ரார்த்தனைக்கிணங்கி விச்வாமித்ர மஹர்ஷி யும் யக்ஞ கர்மாவை நடத்த உத்தரவளித்தார். ஜனக ராஜனும் விச்வாமித்ர மஹர்ஷிக்கு ப்ரதக்ஷிண நமஸ்காராதி களைச் செய்துவிட்டு யக்ஞசாலை சென்ருர். விச்வாமித்ர

மஹர்ஷியும் ராமலக்ஷ்மணர்களுடன்கூட மஹர்ஷிகளால் பூஜிக்கப்பட்டவராகக் கொண்டு தனது வாஸஸ்தானம் சென்றார்.

மறுநாள் காலையில் ஜனக மஹாராஜாவானவர் ப்ராதக்காலத்தில் செய்யவேண்டிய யக்ஞ கர்மாக்களை முடித்துக்கொண்டு விச்வாமித்ர மஹர்ஷியையும் ராமலக்ஷ்மணர்களையும் தனது யக்ஞவாடத்திற்கு அழைத்துக்கொண்டு வந்து விதிவத்தாகப் பூஜித்துவிட்டு மஹர்ஷியைப் பார்த்து "மஹர்ஷே! நான் கிங்கரன். தங்களுக்கு என்ன செய்ய வேண்டும். ஆக்ஞாபித்தால் சிரஸ்ஸால் வஹித்து நான் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றார். இவ்விதம் ராஜனுடைய வார்த்தையைக் கேட்ட மஹர்ஷியானவர் "இவர்கள் தசரதசக்ரவர்த்தியின் குமாரர்கள் என்று முன்பே நான் உனக்குச் சொல்லியிருக்கிறேன். உன்னுடைய அரண்மனையில் உள்ள சிவனுடைய வில்லைப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அதை நீ இவர்களுக்குப் பார்க்கும்படி செய்தால் பார்த்துவிட்டுப் போவார்கள்" என்று சொன்னார். இதைக் கேட்ட ஜனகராஜனும் மஹர்ஷியைப் பார்த்து "மஹர்ஷே! சைவமான தனுஸ் என்னுடைய க்ருஹத்தில் இருந்துவரும் காரணத்தைச் சொல்கிறேன். தாங்கள் கொஞ்சம் செவி கொடுத்துக் கேட்கவேண்டும். இந்த வம்சம் சந்த்ரவம்சமாகும். இந்த வம்சத்திற்கு கூட்ஸ்த புருஷன் நிமி சக்ரவர்த்தி என்று சொல்லப்படுவார். அவருடைய ஆறுவது அரசன் தேவராதன் என்று லோக ப்ரஸித்தமான அரசனாகுவான். அவனுடைய கையில் தேவர்கள் மூலம் பரமேச்வரனால் இந்த வில் ஒரு நிதியாகக் கொடுக்கப்பட்டது. தக்ஷ ப்ரஜாபதியினுடைய யாகத்தில் பரமேச்வரன் இந்த வில்லை கையில் தரித்துக்கொண்டுதான் தனக்கு ஹவிர்பாகமில்லாத யக்ஞத்தில் ஹவிர்பாகம் வாங்கவந்த தேவர்களை த்வம்ஸம் செய்ய ஆரம்பித்தார். தேவர்கள் பயந்து பரமேச்வரனை சரணமடைந்து ஸுமுகனாகச் செய்துகொண்டார்கள். அந்த வில் என்னுடைய பூர்வீகனான தேவ

ராதனிடம் கொடுக்கப்பட்டு என் அரண்மனையில் விளங்கி வருகிறது. நான் யக்ஞம் செய்வதற்காக பூமியில் தங்கக் கலப்பையினுல் உழுது சோதிக்கும்பொழுது கலப்பையினு டைய முகத்திலிருந்தும் ஸீதை என்ற ஒரு பெண் குழந்தை உண்டானுள். ஸீதை என்று கலப்பையினுடைய முகத் திற்குப் பெயர். அதிலிருந்து உண்டான காரணத்தைக் கொண்டு ஸீதை என்ற பெயரை அடைந்தாள். என் பெண் என்ற அபிமானத்துடன் நான் வளர்த்துவந்த காரணத்தால் என்னுடைய அரண்மனையில் பரமேச்வரனுல் அனுக்ரஹ பூர்வமாகக் கொடுக்கப்பட்டு விளங்கிவரும் சிவதனுஸ்ஸை யார் முறிக்கின்ருனே அந்த ராஜனுக்கு பரிணயம் செய்து கொடுப்பதென்று ப்ரதிக்ஞை செய்திருக்கிறேன்.

இந்த ஸீதையினுடைய அழகைப் பார்த்து அநேக ராஜாக்கள் கல்யாணம் செய்துகொள்ள இச்சித்தார்கள். ஆனுல் ஒருவராலும், வில்லை அசைக்கவோ, வளைக்கவோ, முறிக்கவோ முடியவில்லை. அதனுல் ராஜாக்கள் பரா பவத்தை அடைந்து திரும்பிவிட்டார்கள். பிறகு ஒரு ஸம யத்தில் பலாத்காரமாக ஸீதையை அபஹரித்துக்கொண்டு போக, மிதிலாபுரியை சுற்றிலும் தகைந்து யுத்தத்திற்கு வந்தார்கள். நான் எனது ஸேனைகளுடன் அவர்களுடன் யுத்தம் செய்து ஜயிக்க யத்னம் செய்தேன். எல்லா ராஜாக் களும் ஒன்றுசேர்ந்ததினுல் என்னுடைய ஸேனைகளுக்கு நாசம் அதிகமாக ஏற்பட நேர்ந்தது. பிறகு தேவதைகளை ஸ்தோத்ரம் செய்தேன். இந்த்ரன் தேவஸேனைகளை எனக்கு ஸஹாயமாக அனுப்பினுன். அவர்களுடைய பலத்தால் எல்லா ராஜாக்களையும் ஜயித்துவிட்டேன். ராஜாக்களும் அபஜயத்தை அடைந்து திக்கு திக்காக ஓடிவிட்டார்கள். இவ்விதமான மஹிமை உள்ள தனுஸ்ஸை தங்கள் உத்தரவு ப்ரகாரம் ராமலக்ஷ்மணர்களுக்கும் காட்டுகிறேன்.

यद्यस्य धनुषो रामः कुर्यात् आरोपणं मुने ।
सुतां अयोनिजां सीतां दद्यां दाशरथेरहम् ॥

𑌯𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌧𑌨𑍁𑌷𑍋 𑌰𑌾𑌮𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑌾𑌰𑍋𑌪𑌣𑌂 𑌮𑍁𑌨𑍇 ।
𑌸𑍁𑌤𑌾𑌂 𑌅𑌯𑍋𑌨𑌿𑌜𑌾𑌂 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌂 𑌦𑌾𑌶𑌰𑌥𑍇𑌰𑌹𑌮𑍍 ॥

யத்யஸ்ய தநுஷோ ராம: குர்யாத் ஆரோபணம் முநே ।
ஸுதாம் அயோநிஜாம் ஸீதாம் தத்யாம் தாசரதேரஹம் ॥

ராமன் இந்த தனுஸ்ஸை ஆரோபணம் செய்துவிட்டால் ஸீதையையும் நான் ராமனுக்குப் பரிணயம்செய்து கொடுக்கின்றேன்" என்று சொன்னர்,

ராஜனின் வார்த்தையைக் கேட்டு விச்வாமித்ர மஹர்ஷியும் ராமனுக்கு வில்லைக் காட்டும்படி சொன்னர்.

ஜனகமஹாராஜாவோ, 'நாம் நமது கன்னிகை என்று அபிமானத்தால் நம்மால் கொண்டாடப்படுகிற ஸீதையினுடைய ஸ்வயம்வர நிமித்தமாக சிவதனுஸ் என்ற வில்லை வரசுல்கமாக ஏற்பாடு செய்திருக்கிருேம். எவ்வளவோ க்ஷத்ரியர்கள் சூராதிசூரர்கள் அந்த வில்லை வளைக்கவோ, அசையச்செய்யவோ சக்தியற்றவர்களாக ஆகி, அவமானமடைந்து, திரும்பிப் போய்விட்டார்கள். இந்த சிறுபாலர்களுக்கு அப்பேர்ப்பட்ட வில்லைப் பார்ப்பதினுல் என்ன ப்ரயோஜனமோ? மஹர்ஷியான விச்வாமித்ரரோ, இவர்களுக்கு அந்த வில்லைக் காண்பிக்கவேண்டியதவச்யம் என்று சொல்கிருர். மஹர்ஷியின் வார்த்தையை நாம் உல்லங்கனம் செய்யக்கூடாது. தெய்வத்தின் இச்சை எவ்விதமோ. அதை நாம் எவ்விதம் அறியமுடியும்?' என்று எண்ணிக்கொண்டு, ஐயாயிரம் பேர்கள் படர்கள் மூலமாக, அந்த சிவதனுஸ் என்ற வில்லை மஹா ஸபையில் கொண்டுவந்து சேர்த்து, மஹர்ஷியான விச்வாமித்ரரிடத்திலும், 'மஹர்ஷியே, சிவதனுஸ் என்ற வில்லானது ஸபைக்கு முன்பாக வந்துசேர்ந்துவிட்டது. தங்களுடைய சிஷ்யர்களான இரு ராஜகுமாரர்களும், இந்த வில்லை நன்ருகப்பார்த்து ஆனந்திக்கலாம்' என்று ஜனகமஹாராஜாவானவர் தெரிவித்தார். உடன்,

विश्वामित्रो वचः श्रुत्वा जनकस्य तु भाषितं।
वत्स राम धनुः पश्य इति राघवं अब्रवीत् ॥

𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑍋 𑌵𑌚𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌜𑌨𑌕𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌭𑌾𑌷𑌿𑌤𑌂।
𑌵𑌤𑍍𑌸 𑌰𑌾𑌮 𑌧𑌨𑍁𑌃 𑌪𑌶𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌰𑌾𑌘𑌵𑌂 𑌅𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥

விச்வாமித்ரோ வச : ச்ருத்வா ஜனகஸ்யது பாஷிதம்।
வத்ஸ ராம தனு : பச்ய இதிராகவம் அப்ரவீத் ॥

என்று "சிவதனுஸ்" என்ற வில்லை ஜனகமஹாராஜா ஸபையில் கொண்டுவந்து ஸ்தாபனம் செய்தவுடன், ஸ்ரீ ராமலக்ஷ்மணுள் வில்லையும் பார்க்கலாம் என்று அந்த அரசன் கட்டளையிட்ட வார்த்தையும் கேட்டு, விச்வாமித்ரமஹர்ஷியானவர் "வத்ஸா" குழந்தாய், ராமா, வில்லைப்பார், என்று ரகுவம்சத்தில் ஆவிர்பவித்த ஸ்ரீராமனைப் பார்த்துச் சொன்னுர்" "வில்லைப் பார்" என்று ஸ்ரீராமனைப் பார்த்துச் சொன்ன விச்வாமித்ரமஹர்ஷியினுடைய அபிப்ராயத்தை அடியில் வருமாறு அறியவும்.

அதாவது, (1) ஸ்ரீராமன், "விச்வாமித்ரமஹர்ஷியான நமது குரு, இந்தவில்லை முறிக்கச்செய்து நமக்கு ஜனகமஹாராஜாவின் புத்ரியான ஸீதையை பரிணயம் செய்துவைக்க வேண்டுமென்ற எண்ணத்துடன்தான், நம்மை இங்கு அழைத்துவந்தார். வில்லையும் ஜனகமஹாராஜா மூலமாக ஸபையில் ஸ்தாபிக்கும்படி கட்டளையிட்டார். வில்லை நாம் பார்த்து முறிப்பது பிறகு ஆகட்டும். இதின் பலனுகிய ஸீதா தேவியானவள் நமது மனதுக்கு ப்ரீதியையுண்டுபண்ணக் கூடிய கல்யாண குணங்களால் அலங்கரிக்கப்பட்டவளாயிருக்கிருளா? என்றதைத் தெரிந்துகொண்டபிறகுதான், வில்லை முறிப்பதில் மனதைச் செலுத்தவேண்டும்" என்ற எண்ணத்துடன் அங்காங்கு தன் த்ருஷ்டியைச் செலுத்திக் கொண்டு, பகவானுன ஸ்ரீராமன் நின்றுகொண்டிருந்தார். அந்த ஸமயத்தில், ஜனகராஜனுடைய புத்ரியான ஸீதையும், ஸர்வாபரணபூஷிதையாக, மாடியின்மீது இருந்துகொண்டு ஜன்னல்வழியாக ஸ்ரீராமனையும்பார்த்து, ஸ்ரீராமனுடைய அப்

ராக்ருதமான திவ்யமங்கள விக்ரஹத்தில் வ்யாமோஹத்தை யடைந்து, "மன்மதனுக்கும் மன்மதனான இந்த ப்ரபுவை யல்லவா நான் பார்த்தாவாக அடையவேண்டும். பார்த் தாலோ ரொம்பவும் இளம்பருவமாகத் தெரிகிறதே. சிவ தனுஸ்ஸை முறிக்க இந்த இளம்வயதில் எப்படி சக்தி ஏற் படும்? அப்படி முறிக்காதபோனல், நான் எப்படி இந்த உத் தம புருஷனை பர்த்தாவாக அடையமுடியும்? நமது தகப்பனு ரான ஜனகமஹாராஜனே இந்த வில்லை முறிக்கிறவனுக்குத் தான், என்னைப் பாணிக்ரஹணம் செய்துகொடுக்கிறதென்று ப்ரதிக்ஞை செய்திருக்கிருரே. என் பிதாவின் ப்ரதிக்ஞையும் நிறைவேறவேண்டும், இந்த உத்தமபுருஷனையே நான் பர்த் தாவாக அடையவேண்டும்; இந்த இளம் பருவத்தில் இந்த மஹத்தான சிவதனுஸ்ஸை முறிக்கக்கூடிய சக்தியும் இந்தக் குழந்தைக்கு உண்டாகவேண்டும். இவைகளெல்லாம் எப் படி ஸம்பவிக்கும். ஆனல், தெய்வம் ஸம்மதித்தால் எது தான் நடக்காது" என்று தீர்மானஞ் செய்து, மேற்கூறிய ஸகல கார்யங்களும் யாதொரு விக்னமில்லாமல் நடைபெறு வதின்பொருட்டு, லக்ஷ்மீபதியான மஹாவிஷ்ணுவை, த்யா னம் செய்துகொண்டு, ஏகாக்ரசித்தமாக நின்று வருகிருள். ஸ்ரீராமனுக்கும்,

"न कुर्यान्निष्फलं कर्म" ("𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌂 𑌕𑌰𑍍𑌮") ("ந குர்யாந் நிஷ்பலம் கர்ம") "தனுர்ப்பங்கம்" (வில் முறிப்பது) என்ற கர்மாவானது நிஷ்பலமாக ஆகாமலிருப்பதற்கு அந்த தனுர்ப்பங்கம் என்ற கர்மாவுக்கு பலனுகிய, ஸீதையினுடைய பாவனுப்ரகர்ஷத்தால் (நினைவு அதிகரிப்பு)

सा पृष्ठतः सा पुरतः प्रासादे सा

𑌸𑌾 𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑌃 𑌸𑌾 𑌪𑍁𑌰𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑍇 𑌸𑌾

"ஸா ப்ருஷ்டத : ஸா புரத : ப்ராஸாதே ஸா"

என்ற ரீதியாக எங்கும் ஒரே ஸீதையாகத் தோன்றிக்கொண் டிருக்கும்போது, மாளிகையின்மீது நின்றுகொண்டிருக்கும்

ஸீதையைப் பார்த்து, உடன் அவளுடைய ஸௌந்தர்ய ஸமுத்ரத்தில் மூழ்கினதான மனதோடு கூடினவராக ஆகி விட்டார். ஸீதையினுடைய சரீர லாவண்யத்திலிருந்தும் ஸ்ரீராமனுடைய த்ருஷ்டி இப்பால் திரும்பவேயில்லை. அதைப் பார்த்த விச்வாமித்ரமஹர்ஷியும், "ராமா, தனுஸ்ஸை முறிக்காமல், ஸீதையை மட்டும் பார்த்து என்ன ப்ரயோஜனம்? தனுஸ்ஸை முறிக்காதபோனால் ஸீதையினுடைய ஸமாகமம் (வரவு) ஏற்படுவது ஸாத்யம் ஆகாதது. ஆகையால், ஸீதையைப் பார்க்கவேண்டாம், தனுஸ்ஸைப்பார்" என்ற அபிப்ராயத்துடன் விச்வாமித்ரமஹர்ஷியானவர் ஸ்ரீராமனைப் பார்த்து "वत्स राम धनुः पश्य" ("𑌵𑌤𑍍𑌸 𑌰𑌾𑌮 𑌧𑌨𑍁𑌃 𑌪𑌶𑍍𑌯") ("வத்ஸ ராம தனு: பச்ய") என்று சொன்னாரோ என்று லோக ரீதியாக ஒரு அபிப்ராயமானது வெளியாகிறது. இவ்விதம் ஒருவிதமாகவும் ராமனைப் பார்த்து விச்வாமித்ரர் சொன்னதற்கு அபிப்ராயத்தை வைத்துக்கொள்ளலாம்.

(2) அதில் உண்மையான தத்வமோ :—

प्रणवो धनुश्शरोह्यात्मा ब्रह्मतल्लक्ष्यमुच्यते ।
अप्रमत्तेन वेद्धव्यं शरवत्तन्मयो भवेत् ॥

𑌪𑍍𑌰𑌣𑌵𑍋 𑌧𑌨𑍁𑌶𑍍𑌶𑌰𑍋𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌅𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑍇𑌨 𑌵𑍇𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌶𑌰𑌵𑌤𑍍𑌤𑌨𑍍𑌮𑌯𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

ப்ரணவோ தனுச்சரோ ஹ்யாத்மா ப்ரம்ம தல்லக்ஷ்ய முச்யதே ।
அப்ரமத்தேந வேத்தவ்யம் சரவத்தந்மயோ பவேத் ॥

என்ற ச்ருதிவாக்யத்தை யனுஸரித்துப் பார்த்தால் ப்ரக்ருதத்தில் **தனுஸ்** என்றால் ப்ரணவரஹஸ்யமென்று வெளியாகிறது. ஜனகமஹாராஜாவுக்கு இந்த ப்ரணவதத்வமானது தக்ஷிணாமூர்த்தி ரூபியான பரமசிவனால் உபதேசிக்கப்பட்டதானதினால், அந்த ஜனகமஹாராஜாவிடத்திலுள்ள ப்ரணவமாகிய தனுஸ்ஸுக்கு, சிவதனுஸ் என்றும் பெயர் வந்தது. அந்த தனுஸ்ஸுக்கு லக்ஷ்யமான வஸ்துவோ பரம்பொருள்தான்,

அந்த பரம்பொருளும் ப்ரக்ருதத்தில் விச்வாமித்ரமஹர்ஷி யினுடைய சிஷ்யனைப்போல் நடனம் செய்துகொண்டுவரும் ஸ்ரீராமசந்த்ரமூர்த்தியேதானாகும்.

योगिनां मनांसि रमयतीति रामः

𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌂 𑌮𑌨𑌾𑌂𑌸𑌿 𑌰𑌮𑌯𑌤𑍀𑌤𑌿 𑌰𑌾𑌮𑌃

யோகிநாம் மநாம்ஸி ரமயதீதி ராம:

என்ற ஸமாஸத்தினாலும்,

रमन्ते योगिनोऽनन्ते सत्यानन्दे चिदात्मनि
आद्यो रा तत्पदार्थःस्यात् मकारस्त्वंपदार्थकः

𑌰𑌮𑌨𑍍𑌤𑍇 𑌯𑍋𑌗𑌿𑌨𑍋𑌽𑌨𑌨𑍍𑌤𑍇 𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑍇 𑌚𑌿𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑌿
𑌆𑌦𑍍𑌯𑍋 𑌰𑌾 𑌤𑌤𑍍𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌮𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌂𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌕𑌃

ரமந்தே யோகிநோ அநந்தே ஸத்யாநந்தே சிதாத்மநி
ஆத்யோ ரா தத்பதார்த்த: ஸ்யாத் மகாரஸ்த்வம்பதார்த்தக:

என்றது முதலான ச்ருதிவாக்யங்களாலும், ஸச்சிதானந்த ரூபமாக இருந்துகொண்டு ஞானிகளுடைய மனதை ஆனந் திக்கச் செய்யும் பரம்பொருளே ஸ்ரீராமன் என்று வெளி யாகும். ஆகையால் ஸ்ரீராமனாகிய பரம்பொருள்தான், ஜனக மஹாராஜாவினுடைய வசத்திலிருக்கிறதாயும், ஸாக்ஷாத் பரமசிவனால் கொடுக்கப்பட்ட காரணத்தால் சிவதனுஸ் என்ற பெயருடன் விளங்கிவருகிற அலௌகிகமாகிற ப்ரணவம் என்ற வில்லுக்கு லக்ஷ்யமான பொருளாக ஆகும். ஜனக ராஜனே தன் கையிலுள்ள ப்ரணவமான தனுஸ்ஸுக்கு லக்ஷ்யமான பொருளை இவ்வளவு காலம் தேடிவந்து அந்த லக்ஷ்யமான பொருள் மஹர்ஷிகளுடைய வசமாகத்தான் இருக்குமானதினால், 'எல்லா மஹர்ஷிகளுடைய ஸமாஜத்திற் குக் காரணமாக ஒரு மஹாயாகத்தை நாம் ஆரம்பித் தால் அநேக மஹர்ஷிகள் அப்போது வருவார்கள். அதில் சிறந்த மஹர்ஷிகளுடைய வசமாக நமது கையிலிருக்கும்

ப்ரணவமாகிற தனுஸ்ஸுக்கு லக்ஷ்யமான பொருள் இருக்கும். நாமும் அவர்கள்மூலம் அதை அடைந்து, ஜீவன் முக்தனுக ஆகலாம்' என்று காலத்தை எதிர்பார்த்து வந்த ப்ரகாரம் விச்வாமித்ரமஹர்ஷியினுடைய ஸமாகமனம் ஏற்பட்டு, அவ ருடன் ப்ரணவமாகிய வில்லுக்கு லக்ஷ்யமான பரம்பொருள் என்று புகழப்பட்ட ஸ்ரீராமமூர்த்தியும் வந்திருப்பதைப் பார்த்து, பரமானந்தத்தை யடைந்தார். அந்த ப்ரணவமாகிற தனுஸ்ஸில் ஸந்தானம் செய்து ஸ்ரீராமனுகிற லக்ஷ்யமான பொருளில் அடிக்கக்கூடிய பாணமோ அந்த ஜனக மஹா ராஜாவினுடைய ஜீவாத்மாவாகவே ஆகும். ஸீதை என்ற உருவமாக விளங்கிவரும் "ஸ்த்ரீதத்வமோ" ஜீவதத்வம் என்றே ஸ்ரீவால்மீகி மஹர்ஷியினுடைய அபிப்பிராயம் என்று "கோவிந்தராஜீயம்" முதலான வ்யாக்யானங்களைக் கவனித்துப் பார்த்தால் விளங்கும்.

ஸீதை என்ற சப்தத்திற்கு 'अनादि भगवत्परतन्त्रः चेतनः' (𑌅𑌨𑌾𑌦𑌿 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌰𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 𑌚𑍇𑌤𑌨𑌃) ("அநாதி பகவத்பரதந்த்ர: சேதந:") என்ற அர்த்தமானது ஸுந்தரகாண்டம் முதல் ச்லோக வ்யாக் யானத்தில், அதிலும் ஸ்பஷ்டமாக கோவிந்தராஜீய வ்யாக் யானத்தில், வித்வான்களுக்கு நன்ருக விளங்கக்கூடும். அதாவது,

कर्मणैवहि संसिद्धिं आस्थिता जनकादयः

𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵𑌹𑌿 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌆𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃

கர்மணைவஹி ஸம்ஸித்திம் ஆஸ்திதா ஜனகாதய:

என்ற கீதாவாக்யத்தால், ஜனகமஹாராஜன் மிகவும் சுத்த மான மனதுடன் கூடினவரானதினுலும், மஹா விவேகியான தினுலும், கடாகாசத்திற்கு ஸமானமான தன்னுடைய ஜீவனை, மஹாகாசத்திற்கு ஸமானமான ஸ்ரீராமனென்ற பரம்பொருளிடத்தில், உபாதிலய பூர்வகமாக லயிக்கச் செய்து, தான் நித்ய முக்தனுக ஆகவேண்டும். அதற்கு

உபாயமென்ன என்பதைத் தெரிந்துகொள்ள, பரமகுருவைத் தேடிப்போகும்போது, மஹாகைலாஸத்திற்கு அதிபதியான பரமேச்வரனே தக்ஷிணாமூர்த்தி அவஸரமாக அவருக்குத் தென்பட்டு, ஜீவனை ப்ரம்மத்தினிடத்தில் லயம் செய்வதற்கு முக்யமான உபாயம் ப்ரணவத்யானமே என்று சொல்லி, ப்ரணவமந்த்ரத்தை அவருக்கு உபதேசம் செய்து, பரமசிவன் அந்தர்த்யானத்தை யடைந்தவுடன், அதுமுதல் அந்த ப்ரணவமாகிற தனுஸ்ஸை அர்த்தஞானத்துடன் தான் தெரிந்துகொண்டு, ச்ரத்தையுடன் பூஜித்துவந்த பெருமையால், லக்ஷ்யமாகிற பரம்பொருளையும், ப்ரத்யக்ஷமாக விச்வாமித்ரமஹர்ஷி மூலமாக தர்சனம் செய்து, தனது ஆத்மாவுக்கும் ஆத்மாவான அந்த ஸீதாதேவியை அந்த பரம்பொருளிடத்தில் அர்ப்பணம் செய்து, நாம் க்ருதார்த்தனுக ஆகப்போகிறும் என்ற பரமாநந்தத்துடன் ஜனகமஹாராஜன் விளங்கி வந்தார்.

ஸ்ரீராமனுகிற பரம்பொருளுக்கு அவருடைய ஜீவதத்வமாகிற ஸீதாதேவியை தன்னேடு சேர்த்துக்கொள்ளும்படியான எவ்விதமான உபாயத்தை அந்த ஜனகமஹாராஜன் அனுஷ்டித்திருக்கிறுர் என்று ஒரு ஸந்தேஹம் ஏற்பட்டதோ என்று விச்வாமித்ரமஹர்ஷி நினைத்து “ ராமா, ஜனகருடைய ஆத்மதத்வமாகிற ஸீதாதேவியை நீ சேர்த்துக்கொண்டு அவரை க்ருதார்த்தனுகச் செய்வதில் அவர் என்ன பாக்யம் செய்தாரோ என்று நீ நினைக்காதே. ஸாக்ஷாத் பரமசிவனுலேயே உபதேசிக்கப்பட்ட ப்ரணவம் என்ற அலெளகிகமான தனுஸ் அவர் வசத்திலிருந்து வருகிறதே! அவருடைய ஜீவனை உன்னிடம் சேர்த்துக்கொள்வதற்கு அந்தக் காரணமே போதாதா! ப்ரம்மப்ராப்தியில் ப்ரணவ உபாஸநமே முக்ய காரணமென்று மாண்டூக்யம் முதலான உபநிஷத்துக்களில் முறையிடப்பட்டிருக்கிறது. தவிரவும், பலானுபவகாலம் ஏற்பட்டுவிட்டால், அந்த அதிகாரியினிடத்தில் ஸாதனத்திற்கு அவச்யதை இல்லாததினுல், அவருடைய அந்தராத்மாவான ஸீதாதேவியை உன்னிடத்தில் அர்ப்பணம்



சிவதனுர்பங்கம்.

செய்துவிட்டு, அவர் ஜன்மஸாபல்யமடையும்படியான பல காலம் அவருக்கு வந்துவிட்டபடியால், அவருடைய ரீதியாக ப்ரணவமாகிற தனுஸ்ஸுக்கு அவச்யதை இல்லாமல் போகிறபடியால், அந்த தனுஸ்ஸை நீயே முறித்துவிடலாம். ப்ரணவமாகிற தனுஸ்ஸை முறிக்கிறதென்றால், முக்த புருஷர்களிடத்தில் அதற்கு ப்ராமாண்யம் இல்லாமல் போவது என்பதுதான் அந்த தனுர்பங்கமாகும்." இவ்வித மான எண்ணத்துடன்தான், விச்வாமித்ர மஹர்ஷியானவர், "ராமா, "தனுஸ்ஸைப்பார்" என்று वत्स राम धनुः पश्य (𑌵𑌤𑍍𑌸 𑌰𑌾𑌮 𑌧𑌨𑍁𑌃 𑌪𑌶𑍍𑌯) (வத்ஸ ராம தநு: பச்ய) என்ற ச்லோகத்தால் சொன்னார். இந்த அபிப்ராயமானது, அந்தர்முகாளாயிருக் கும் மஹாவித்வான்களுக்கு நன்றாக விளங்கும் என்பது நிச்சயம்.

மஹர்ஷியான விச்வாமித்ரருடைய ஆக்ஞையை யனு ஸரித்து ஸ்ரீ ராமபிரான் ஜனக மஹாராஜாவினால் அலங் கரிக்கப்பட்ட மஹாஸபையில் சிவதனுஸ் என்ற வில்லை நாணேற்றி வளைத்தார். அந்த வில்லும் பகவானான ஸ்ரீராம னுடைய கைபட்ட மாத்திரத்தில் முறிந்து விழுந்துவிட்டது. அதனால் ஏற்பட்ட சப்தமானது உலக முழுவதும் பரவி ஸமஸ்த ப்ராணிகளுக்கும் பயத்தை உண்டுபண்ணிற்று,

रामे बाहुबलं विवृण्वति धनुर्वंशे गुणारोपणं
माभूत्केवलं आत्मना तिलकिते वंशेपि वैकर्तने ।
आकृष्टं नितरां तदेव नपरं सीता मनोपि द्रुतं
भङ्गस्तस्य नकेवलं क्षितिभुजां दोस्तम्भ दम्भस्यच ॥

𑌰𑌾𑌮𑍇 𑌬𑌾𑌹𑍁𑌬𑌲𑌂 𑌵𑌿𑌵𑍃𑌣𑍍𑌵𑌤𑌿 𑌧𑌨𑍁𑌰𑍍𑌵𑌂𑌶𑍇
𑌗𑍁𑌣𑌾𑌰𑍋𑌪𑌣𑌂
𑌮𑌾𑌭𑍂𑌤𑍍𑌕𑍇𑌵𑌲𑌂 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾 𑌤𑌿𑌲𑌕𑌿𑌤𑍇 𑌵𑌂𑌶𑍇𑌪𑌿 𑌵𑍈𑌕𑌰𑍍𑌤𑌨𑍇 ।
𑌆𑌕𑍃𑌷𑍍𑌟𑌂 𑌨𑌿𑌤𑌰𑌾𑌂 𑌤𑌦𑍇𑌵 𑌨𑌪𑌰𑌂 𑌸𑍀𑌤𑌾
𑌮𑌨𑍋𑌪𑌿 𑌦𑍍𑌰𑍁𑌤𑌂 ।
𑌭𑌙𑍍𑌗𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌨𑌕𑍇𑌵𑌲𑌂 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌭𑍁𑌜𑌾𑌂 𑌦𑍋𑌸𑍍𑌤𑌮𑍍𑌭
𑌦𑌮𑍍𑌭𑌸𑍍𑌯𑌚 ॥

ராமே பாஹுபலம் விவ்ருண்வதி தனுர்வம்சே குணாரோபணம்
மாபூத்கேவலம் ஆத்மநா திலகிதே வம்சேபி வைகர்த்தநே ।
ஆக்ருஷ்டம் நிதராம் ததேவநபரம் ஸீதாமனோபி த்ருதம்
பங்கஸ்தஸ்ய ந கேவலம் க்ஷிதிபுஜாம் தோஸ்தம்ப தம்பஸ்யச ॥

ஸ்ரீராமபிரான் சிவதனுஸ்ஸை முறித்த வைபவத்தைக் குறித்து ராஜாதி ராஜனும், பரா சக்தியினுடைய ப்ரஸாதத்திற்கு முக்ய பாத்ரமாயும், நமது பாரத நாட்டில் முன் விளங்கி வந்த போஜ மஹாராஜாவினாலியற்றப்பட்ட சம்பூ ராமாயணத்தில் மேற்கண்ட ச்லோகத்தைக் காணலாம். அதன் பொருளோ ஸ்ரீராமன் சிவதனுஸ் என்ற வில்லில் நாண்கயிற்றை தொடுத்த காலத்தில், நாண்கயிற்றுக்கு ஸம்ஸ்க்ருத பாஷையில் "குணம்" என்றும் ஒரு பெயர் இருப்பதினால், வில்லில் மட்டும் குணத்தைச் சேர்க்கவில்லை, தான் திலகம்போல் விளங்கிவரும், தன் வம்சமாகிய ஸூர்ய வம்சத்திலும் ஒரு பெரிய கீர்த்தியாகிற குணத்தையும் நாட்டினார். அதாவது இந்த சிவதனுஸ் என்ற வில்லை ஸ்ரீராமன் ஸாக்ஷாத் பகவானான பரம்பொருளா யில்லாதபோனால் ஆரோபணம் செய்யமுடியாது. எப்போது இந்த ஸ்ரீராம பிரான் இந்த வில்லை நாணேற்றினாரோ, அப்போது அந்த ராமன் பரம்பொருளாகத்தானிருக்கவேண்டும். இந்த ப்ரம் பொருளோ ஸூர்ய வம்சத்தில் திருக்குமாரனாக அவதரித் திருக்கிறது. அந்த ஸூர்ய வம்சத்தின் பெருமையை இன்னதுதான் என்று யாராலேயும் அளவிடமுடியுமா? அந்த வம்சமே வம்சம் என்று அங்காங்கு உலகத்தில் ஸகல ப்ராணிகளாலும் ஸூர்ய வம்சமானது புகழ்ந்து பேசப் பட்டது.

அத்துடன் ஸ்ரீராமன் வில்லை முறிக்கவேண்டி நாணேற்றி வில்லை இழுத்தவுடன் வில்மட்டும் இழுக்கப்பட்டதென்று எண்ணக்கூடாது. ஸீதாதேவியினுடைய மனது ஸ்ரீராமனுடைய பராக்ரமத்தால் இழுக்கப்பட்டு, அந்த ராமபிரானிடத்திலேயே லயமாகிவிட்டது. ப்ரம்மா, ருத்ரன் முதலான தேவர்களாலேகூட வளைக்கமுடியாததான வில்லை

ஸ்ரீராமபிரான் ஸுலபமாக வளைத்ததைப் பார்த்து, ஸீதா தேவி இவன் மனிதனல்ல; ஸகல வேதாந்தங்களுக்கும் பொருளாகிய பரப்ரம்மந்தான்; ஆகையால் இந்த மஹானுபாவனைத்தான் நாம் அவச்யம் பரிணயம் செய்துகொள்ள வேண்டும் என்று தீர்மானித்து ஸ்ரீராமனிடத்தில் லயித்த மனதுடன் கூடியிருந்தாள்.

தவிரவும், ஸ்ரீராமபிரான் வில்லை முறித்தவுடன், வில்லை மட்டும் முறித்தார் என்று நினைக்கக்கூடாது. லோகத்தில் அதிசூரர்களான ரதன், அதிரதன், மஹாரதன் என்று பட்டப்பெயர் அடைந்த மஹாராஜாதி ராஜாக்களுடைய புஜபல பராக்ரமங்களும் முறிந்துவிட்டன. அதிலும் முக்யமாக, ராவணனென்ற ராக்ஷஸராஜனுடைய இருபது கைகளாகிற ஸ்தம்பங்களினுடைய மதமும் அடங்கிவிட்டது. இவ்விதம் தன்னுடைய அப்ரதிஹதமான (எதிரில்லாத) பராக்ரமத்தால் ஏற்பட்ட தனுர்பங்கம் என்ற வ்யாஜத்தினால் தன்னுடைய பரதத்வத்தை ஸ்ரீராமன் ப்ரகாசப்படுத்தியவுடன் ஜனகமஹாராஜன் 'தன் ப்ரதிக்ஞையும் நிறைவேறிவிட்டது; ஸ்ரீராமனே ஸாமான்ய மனிதனல்ல, ஈச்வரன்தான்; ஆகையால் இந்த மஹானுபாவனுக்கு, நமது அபிமானத்தால் பெண் என்று வளர்க்கப்பட்ட ஸாக்ஷாத் ஸ்ரீதேவியான ஸீதாலக்ஷ்மீ என்ற கன்யா ரத்னத்தை பரிணயம் செய்து கொடுத்து, நமது ஜன்மாவை ஸபலமாகச் செய்துகொள்ளவேண்டு'மென்று தீர்மானித்து, விச்வாமித்ர மஹர்ஷியினிடத்திலும், தன் மனோரதத்தைப் பூர்த்தி செய்து வைக்கவேண்டும் என்று ப்ரார்த்தித்துக்கொண்டு, ஸ்ரீஸீதா கல்யாணம் என்ற மஹோத்ஸவத்தைக் குறித்துச் செய்ய வேண்டிய ஸமஸ்த ஏற்பாடுகளையும் செய்யும்படி ஆக்ஞாபித்தார்.

உடன் தூதர்கள் மூலமாக அழைக்கப்பட்டு, ஸ்ரீராமபிரானுடைய தகப்பனாரான தசரத சக்ரவர்த்தியும் மந்த்ரிச்ரேஷ்டர்களாகிய வஸிஷ்டர் முதலான மஹாப்ரம்மரிஷிக

ளும், மற்றுமுள்ள ஸ்ரீராமனைச் சேர்ந்த பந்துஜனங்களும், அதிவிமரிசையாக ஸேனுஸந்நாஹத்துடன், மிதிலாபுரிக்கு வந்து சேர்ந்தார்கள். கல்யாண மஹோத்ஸவ ஸம்பந்தமாக ஸகல ஸாமக்ரீகளை சேகரிப்பதின் வைபவத்தையும், விச்வ கர்மாவின் மூலமாக கல்யாண மண்டப நிர்மாண வைபவத் தையும் 56 தேசங்களின் அதிபதிகளும் தன் தன் பரிவாரங் களுடன் வகுப்பு வகுப்பாக கூட்டங் கூட்டமாக மிதிலை நகரத்திற்குள் வந்திறங்கும் வைபவத்தையும், ஆதிசேஷ பக வானுல் கூட வர்ணிக்க முடியாது. அப்படியிருக்கும்பொழுது, கேவலம் மனிதர்களான நம்மால் என்ன சொல்ல முடியும்? பிறகு தசரதசக்ரவர்த்தி முதலான வரனைச் சேர்ந்த (கல் யாணப் பிள்ளை) ஸம்பந்தி ஜனங்களும், ஜனகமஹாராஜா வைச் சேர்ந்த (மணப் பெண்ணைச் சேர்ந்த) ஸம்பந்தி ஜனங் களும் ஒருவருக்கொருவர் தன் தன் புரோஹிதர்கள் மூல மாக கோத்ர ப்ரவரங்களை வரிசையாக எடுத்துரைத்துக் கொண்டு, ஒருவருக்கொருவர் விதிவத்தான பூஜைகளாலும், அநேக வெகுமானுதிகளாலும் வரவேற்புகளாலும் பரம ஸந்தோஷமடைந்து, கல்யாண மண்டபத்தில் அவரவர் களுக்கு உசிதமான ஆஸனங்களில் அமர்ந்துகொண்டிருக் கும்போது, ஆகாச மார்க்கத்தில் தேவகூட்டங்களெல்லாம் புஷ்ப வர்ஷம் வர்ஷிக்க, தேவதுந்துபி முதலான அநேக வாத்யங்களும் கோஷிக்க, மஹர்ஷிகளும் மனது குளிர்ந்து பரமானந்தத்துடன் அநேகவிதமாக ஆசீர்வதிக்க, இவ்விதம் மஹிமை தங்கிய ஸமயத்தில், சுப முஹூர்த்தத்தில், ராஜாதி ராஜனும், மஹா பாக்யசாலியாயும், மஹாசாலனுயுமுள்ள ஜனகமஹாராஜன், அக்னி ஸாக்ஷிகமாகவும், மந்த்ரோதக புரஸ்ஸரமாகவும் விதிவத்தாக, தனது புத்ரியான ஸீதா தேவியை ஸ்ரீராமபிரானுக்கு கன்யாதானம் செய்தார்.

அவ்விதம் ஜனகமஹாராஜன் கன்யாதானம் செய்து வைத்த விமரிசையையும் ஸ்ரீஸீதாராம கல்யாண மஹோத் ஸவத்தின் தத்வத்தையும் ப்ரகாசிக்கச் செய்யும் ச்லோக மானது வால்மீகி ராமாயணத்தில் பாலகாண்டத்திலிருப்

பதை யாரும் நன்றுய் அறியக்கூடும். அந்த ச்லோகத்தின் தத்வங்களைப்பற்றி விசாரிப்பதற்காக அடியிற்கண்டபடி தெளிவாக அறியவும்.

इयं सीता ममसुता सहधर्मचरीतव ।
प्रतीच्छचैनां भद्रंते पाणिं गृण्हीष्वपाणिना ॥

𑌇𑌯𑌂 𑌸𑍀𑌤𑌾 𑌮𑌮𑌸𑍁𑌤𑌾 𑌸𑌹𑌧𑌰𑍍𑌮𑌚𑌰𑍀𑌤𑌵 ।
𑌪𑍍𑌰𑌤𑍀𑌚𑍍𑌛𑌚𑍈𑌨𑌾𑌂 𑌭𑌦𑍍𑌰𑌂𑌤𑍇 𑌪𑌾𑌣𑌿𑌂 𑌗𑍃𑌣𑍍𑌹𑍀𑌷𑍍𑌵𑌪𑌾𑌣𑌿𑌨𑌾 ॥

இயம் ஸீதா மமஸுதா ஸஹதர்மசரீதவ ।
ப்ரதீச்ச சைஞம் பத்ரம்தே பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணிநா ॥

ஸ்ரீராமனைப் பார்த்து ஜனகமஹாராஜன் தன் பெண்ணை ஸீதாதேவியைப் பாணிக்ரஹணம் செய்துகொடுக்கும் காலத்தில், சொன்ன வார்த்தையானது இந்த ச்லோகத்தால் வெளியாகிறது. இந்த ச்சோகத்தின் பதவுரையாவது :—

हे राम (𑌹𑍇 𑌰𑌾𑌮) (ஹே ராம)	= ராமனே
इयं (𑌇𑌯𑌂) (இயம்)	= ப்ரத்யக்ஷமாக எதிரிலிருக்கும் இந்த கன்னிகையானவள்
सीता (𑌸𑍀𑌤𑌾) (ஸீதா)	= யக்ஞபூமியை கலப்பையினுல் உழுதுவரும் காலத்தில் அந்தக் கலப்பையினுடைய முகத்தில் தென்பட்டு, அயோனிஜையாக எனக்குக் கிடைத்த ஸ்த்ரீ ரத்னம்
ममसुता (𑌮𑌮𑌸𑍁𑌤𑌾) (மமஸுதா)	= என் பெண் என்ற அபிமானத்தினுல், மிகவும் ப்ரியத்துடன் என்னுல் வளர்க்கப் பட்டவள்
तव (𑌤𑌵) (தவ)	= உனக்கு

सहधर्मचरी (ஸஹயஉ-ஆரீ) (ஸஹதர்மசரீ) = ஸமானமான தர்மத்தை (அதாவது) உனக்கு எந்த தர்மத்தை அனுஷ்டிப்பதில் ருசி ஏற்படுகிறதோ, அதையும் தானும் அனுஷ்டிப்பதில் அதிக ருசியுடையவளாக இருந்து வருகிறவள் (பதியை அநுஸரிப்பதில் இவளுக்கீடான பெண் இல்லவே இல்லை)

एनां (ஏநாம்) (ஏநாம்) = இந்தக் கன்னிகா ரத்னத்தை

प्रतीच्छ (ப்ரதீச்ச) (ப்ரதீச்ச) = க்ரஹித்துக்கொள்

ते (தே) (தே) = உனக்கு

भद्रं (பத்ரம்) (பத்ரம்) = எல்லாவிதத்திலும் ஸௌபாக்யம்

भविष्यति (பவிஷ்யதி) (பவிஷ்யதி) = இவள் மூலமாக ஏற்படப் போகிறது

पाणिं (பாணிம்) (பாணிம்) = இவளுடைய கையை

पाणिना (பாணிநா) (பாணிநா) = உன்னுடைய கையினால்

गृण्हीष्व (க்ருண்ஹீஷ்வ) (க்ருண்ஹீஷ்வ) = பிடித்துக்கொள்

இதன் தாத்பர்யமாவது :—ஸ்ரீராமனுக்கெதிரில் ஸீதா பிராட்டியை ஜனகமஹாராஜன் நிறுத்திவைத்துக்கொண்டு, அவளுடைய பெருமையை ஸ்ரீராமனிடம் தெரிவிக்கிறார். அதாவது, "इयम्" (இயம்) (இயம்) என்றதினால், ஸீதையினுடைய வயதைக் காட்டுகிறார். மாத்ருகாவர்ணத்தில் அகாரம் முதலான ஸ்வரத்தில் (உயிரெழுத்து) இகாரம் என்பது மூன்றுவதெழுத்து என்று எல்லோருக்கும் ப்ரஸித்தமானது. "य" ய காரமானது, (மெய்யெழுத்துக்களில்) யவர்க்கத்தில் முதலாவதான எழுத்தாகும். மந்த்ர சாஸ்த்ர

ப்ரகாரம் இரண்டு அர்த்தசந்த்ரன் சேர்ந்துதான் (म) ம பிந்துவானதினுல், அதில் இரண்டு தத்வம் அடங்கியிருக் கிறது. இதனுல் அந்த மூன்றுகளேயும் சேர்த்துப் பார்த் தால், (इ) இ என்பதினுல் மூன்று, (य) ய என்பதினுல் ஒன்று, (म) ம என்பதினுல் இரண்டு, ஆக ஆறு என்பது வெளி யாகிறது. இதனுல் ஸீதாதேவிக்கு கல்யாண காலத்தில் ஆறுவயது என்பது தீர்மானமாகிறது. இந்த தத்வத்தை வெளிப்படுத்துவதின் பொருட்டுத்தான் इयम् (ஊயழ) (இயம்) என்ற பதத்தை ஸ்ரீவால்மீகி மஹர்ஷியானவர் ப்ரயோகம் செய்திருக்கிருர். இல்லாவிட்டால், அபரோக்ஷ (ப்ரத்யக்ஷ) வாசகமான சப்தத்தை ப்ரயோகம் செய்யவேண்டிய அபிப் ராயமிருந்தாலும், “एषा, इमा, असौ” (வஷா, ஊஶா, ஊஸெள) (ஏஷா, இமா, அஸெள) என்ற சப்தங்களே ப்ரயோகித்திருக்கலாம். அந்த பதங்களிலொன்றையும் ப்ரயோகிக்காமல் इयम् (ஊயழ) (இயம்) என்ற பதத்தை ப்ரயோகம் செய்ததில், ஸீதாதேவி யின் வயதை குறித்துக் காட்டுவதற்காகத்தான் என்பது ஸ்ரீவால்மீகியின் கருத்து நன்ருக வெளியாகிறது.

முன்பு “ऊनषोडशवर्षोमे” (ஊநஷொாஶஶவஷெஷாமெ) “(ஊந ஷோட்சவர்ஷோமே”) என்ற தசரத சக்ரவர்த்தியினுடைய வாக் யத்தால், ஸ்ரீராமபிரானுக்கோ 12-வயது நடக்கிறதென்று தெரிகிறது. இதனுல்,

द्वयष्टवर्षोऽष्टवर्षां कन्यां उद्वहेत्

அயஷ்வஷெஷா உஷ்வஷாஂ கந்யாஂ உஷெஹெக

“த்வயஷ்டவர்ஷோஷ்டவர்ஷாம் கன்யாம் உத்வஹேத்”

என்ற முதலான சாஸ்த்ரங்களேக் கவனித்தால், வர னுக்கு (பிள்ளேக்கு) 16-வயது ஆனுல், கன்னிகைக்கு 8-வயது இருக்கவேண்டும் என்பது வெளியாகிறபடியால், அதுபோலவே வரனுடைய வயதில் பாதிதான் கன்னிகைக்கு இருக்கவேண்டுமென்று சாஸ்த்ர ஸம்மதமானதினுல், அதை

யனுஸரித்து ஸ்ரீராமபிரானுக்கு 12 வயதும், ஸீதாபிராட்டிக்கு 6 வயதுமானதினுல், ஸீதாராம கல்யாண மஹோத்ஸவமானது, சாஸ்த்ரங்களுக்கும், பெரியோர்களுடைய ஆசாரத்திற்கும் ரொம்பவும் ஒத்திருக்கிறதென்பது நன்கு வெளியாகிறது. இத்துடன்,

अष्टवर्षा भवेत्कन्या नववर्षातु रोहिणी ।
दशवर्षा भवेद्गौरी अत ऊर्ध्वं रजस्वला ॥

𑌅𑌷𑍍𑌟𑌵𑌰𑍍𑌷𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍𑌕𑌨𑍍𑌯𑌾 𑌨𑌵𑌵𑌰𑍍𑌷𑌾𑌤𑍁 𑌰𑍋𑌹𑌿𑌣𑍀 ।
𑌦𑌶𑌵𑌰𑍍𑌷𑌾 𑌭𑌵𑍇𑌦𑍍𑌗𑍌𑌰𑍀 𑌅𑌤 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌰𑌜𑌸𑍍𑌵𑌲𑌾 ॥

" அஷ்டவர்ஷா பவேத்கந்யா நவவர்ஷாது ரோஹிணீ ।
தசவர்ஷாபவேத் கௌரீ அத ஊர்த்வம் ரஜஸ்வலா ॥ "

என்ற சாஸ்த்ரப்ரகாரம், 8 வயது வரையிலும்தான் ஸ்த்ரீகளுக்கு கன்னிகை யென்று பெயரானதினுல், 6-வது வயதில் ஸீதைக்கு நடக்கும் கல்யாணம்தான் கன்யாவின் பிதாவான ஜனகமஹாராஜனுக்கு கன்யாதான பலத்தை அளிக்கும் என்றும் தெரிகிறது. ஸ்த்ரீகளுக்கு 9, 10-வது வயதில் கன்யாத்வம் என்ற தர்மமானது முக்யமாக விளங்காது. கௌணமாக வேண்டுமானுல் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். 10 வயதுக்கு மேல் ஸ்த்ரீகளுக்கு ஏற்படும் கல்யாணம் கன்யாபிதாவுக்கு கன்யாதான பலத்தைக் கொடுக்காது என்பது திண்ணம். 10 வயதுக்கு மேல் ஸ்த்ரீகளை ரஜஸ்வலை என்றே சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. அந்த கன்யாப் பெண் ரஜஸ்வலையாகாத போனுலும், 10 வயது வந்தவுடன் ரஜஸ்வலையாகக்கூடிய தன்மை வந்து விடுவதினுல், ரஜஸ்வலையை பாவிப்பதுபோலவே அவளையும் பாவிக்க வேண்டும்.

माताचैव पिताचैव ज्येष्ठोभ्राता तथैवच ।
त्रयस्ते नरकंयान्ति दृष्ट्वाकन्यां रजस्वलां ॥
उद्वहेद्यस्तु तां कन्यां ब्राह्मणो मदमोहितः ।
असंभाष्यो ह्यपाङ्क्तेयः सविप्रो वृषलीपतिः ॥

𑌮𑌾𑌤𑌾𑌚𑍈𑌵 𑌪𑌿𑌤𑌾𑌚𑍈𑌵 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑍋𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌤𑌥𑍈𑌵𑌚 ।
𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌤𑍇 𑌨𑌰𑌕𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌕𑌨𑍍𑌯𑌾𑌂 𑌰𑌜𑌸𑍍𑌵𑌲𑌾𑌂 ॥
𑌉𑌦𑍍𑌵𑌹𑍇𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌤𑌾𑌂 𑌕𑌨𑍍𑌯𑌾𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌮𑌦𑌮𑍋𑌹𑌿𑌤𑌃 ।
𑌅𑌸𑌂𑌭𑌾𑌷𑍍𑌯𑍋 𑌹𑍍𑌯𑌪𑌾𑌙𑍍𑌕𑍍𑌤𑍇𑌯𑌃 𑌸𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌵𑍃𑌷𑌲𑍀𑌪𑌤𑌿𑌃 ॥

"மாதாசைவ பிதாசைவ ஜ்யேஷ்டோப்ராதா ததைவச ।
த்ரயஸ்தே நரகம் யாந்தி த்ருஷ்ட்வா கந்யாம் ரஜஸ்வலாம் ॥
உத்வஹேத்யஸ்து தாம் கந்யாம் ப்ராம்மணோ மதமோஹித: ।
அஸம்பாஷ்யோ ஹ்யபாங்க்தேய: ஸவிப்ரோவ்ருஷலீபதி: ॥"

என்ற சாஸ்த்ரத்தினுல், 10 வயதுக்கு மேல்பட்ட ஸ்த்ரீ களுக்கு விவாஹம் ஆகாதிருந்தால், அந்த ஸ்த்ரீயின் தாய், தந்தை, தமயன் அந்த ஸ்த்ரீயை கல்யாணம் செய்துக்கொள் ளும் புருஷன் இவர்களுக்கு மஹத்தான தோஷத்தைச் சொல்லி யிருப்பதாலும், रजस्वलां (𑌰𑌜𑌸𑍍𑌵𑌲𑌾𑌂) (ரஜஸ்வலாம்) என்ற சப்தத்திற்கு,

"रजस्वलांवा" "रजस्वलायोग्यत्वविशिष्टांवा"
"ईषद्दशाधिकवयस्कां इतियावत्"

"𑌰𑌜𑌸𑍍𑌵𑌲𑌾𑌂𑌵𑌾" "𑌰𑌜𑌸𑍍𑌵𑌲𑌾𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑍍𑌵𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌂𑌵𑌾"
"𑌈𑌷𑌦𑍍𑌦𑌶𑌾𑌧𑌿𑌕𑌵𑌯𑌸𑍍𑌕𑌾𑌂 𑌇𑌤𑌿𑌯𑌾𑌵𑌤𑍍"

"ரஜஸ்வலாம்வா" "ரஜஸ்வலாயோக்யத்வவிசிஷ்டாம்வா"
"ஈஷத்தசாதிகவயஸ்காமிதி யாவத்"

என்று ரஜஸ்வலாம் என்ற பதத்திற்கு பெரியோர்கள் வ்யாக் யானம் செய்திருக்கிறபடியாலும், 10 வயதுக்கு மேல்பட்ட ஸ்த்ரீகளுக்கு கல்யாணமாகாமலிருந்தால், அவ்வளவு சுத்தி போதாதுதான். அவர்களுடைய கல்யாணத்தை சாஸ்த்ர ஸம்மதமாகச் செய்வதும், சாஸ்த்ரத்தை நம்பினவர்களுக் குக் கஷ்டந்தான். அப்படி 10 வயதுக்குள்ளேதான், கன் யாப் பெண்களுக்கு விவாஹம் நடக்கவேண்டும் என்று சாஸ்த்ரத்தின் கருத்து என்பதற்கு ப்ரக்ருதத்திலுள்ள ஸீதாதேவியின் கன்னிகாதானமே அத்தாக்ஷியாகும்.

தவிரவும், விவாஹம் என்று சொல்லப்பட்ட கல்யாணத்திற்கு பலன் இரண்டு. (1) தர்மாசரணம். (2) போகாநுபவம். இரண்டாவது பலனான போகமே எவர்களுக்கு முக்யமாகத் தோன்றுகிறதோ அவர்களைப்பற்றி சாஸ்த்ரங்களுக்கே சாஸிக்கும்படியான சக்தி கிடையாதென்பது திண்ணம்.

सदृशं चेष्टते स्वस्याः प्रकृतेर्ज्ञानवानपि ।
प्रकृतिं यान्ति भूतानि निग्रहः किंकरिष्यति ॥

𑌸𑌦𑍃𑌶𑌂 𑌚𑍇𑌷𑍍𑌟𑌤𑍇 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑌪𑌿 ।
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 𑌕𑌿𑌂𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

ஸத்ருசம் சேஷ்டதேஸ்வஸ்யா: ப்ரக்ருதே: ஞானவாநபி ।
ப்ரக்ருதிம் யாந்தி பூதாநி நிக்ரஹ: கிம்கரிஷ்யதி ॥

என்ற பகவத்கீதா வசனத்தினால், அவரவர்கள் பூர்வ வாஸனையை யனுஸரித்து நடப்பவர்களானதினால், பூர்வ வாஸனையை மீறி மற்றொரு மார்க்கத்தில் நடக்கும்படி செய்ய, பகவானுக்கே சக்தியில்லையென்று பகவானே சொல்லியிருப்பதினாலும், போகத்தை ப்ரதானமாக நினைக்கும் ப்ராணிகளிடம் சாஸ்த்ரம் எவ்விதம் அண்டும்? அண்டித்தான் என்ன ப்ரயோஜனம்? அவர்களுக்கு விதி நிஷேத ரூபமான சாஸ்த்ரத்தில் அதிகாரமும் இல்லை. அந்த ப்ராணிகளுடைய புத்தியை அனுஸரித்துப் பார்த்தால், வயது முதிர்ந்த ஸ்த்ரீகளே போகானுபவத்திற்கு யோக்யமானவர்களானதினால் வயது முதிர்ந்த பிறகுதான், ஸ்த்ரீகளுக்கு விவாஹம் உசிதமாகும். அதை யாராலும் தடுக்கவும் முடியாது. 8 வயதிலும், 7 வயதிலும் சிறு குழந்தைகளைக் கல்யாணம் செய்துதான் அவர்களுக்கு என்ன ஸுகம் எற்படப் போகிறது? அவர்களுக்கு போகானுபவம்தான் ப்ரதானம் என்று முன்பு சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய விஷயமாக ஆஸ்திகர்களுக்கு யாதொரு விசாரமும் வேண்டியதில்லை. இவர்களுடைய விசாரத்தில் அவர்கள் கலந்து கொள்ளவும் போகிறதில்லை.

விவாஹம் என்ற கல்யாணத்திற்கு தர்மாசரணம் என்ற பலனை முக்யமாக நினைக்கிறவர்களுக்கோ, போகம் ப்ரதான மான பலனல்ல. அதற்காக போகம் நிஷித்தமானதல்ல. தர்மாசரணத்திற்கு விரோதமில்லாமல் போகமும் சாஸ்த்ர ஸம்மதம்தான்.

धर्माविरुद्धो भूतेषु कामोस्मि भरतर्षभ

யஊ௱ாவிரு௱௸ொ ஹ௴தெஷு காமொஷி ஹரதஷ௱ஹ

"தர்மாவிருத்தோ பூதேஷு காமோஸ்மி பரதர்ஷப"

என்ற பகவத்கீதா வசனத்தை யனுஸரித்து, தர்மாசரணத் திற்கு விரோதமில்லாத காலத்தில், போகானுபவத்தை யாரா வது தடுக்கமுடியுமா? ஆகிலும் ஆஸ்திகர்களுக்கு போகா னுபம் அவாந்தர பலன்தான், தர்மாசரணம்தான் மஹா பலன். அப்படியிருக்கும்போது, தர்மம் என்பது இந்த்ரி யத்திற்கு கோசரமாகாத பொருளானதினால்

चोदनालक्षणो धर्मः (சொ஦நாலக்ஷணொ யஊ௱ஃ) (சோதனாலக்ஷணோ தர்ம:) என்ற ந்யாயத்தை யனுஸரித்து, அந்த தர்மத்தை யறிவதில் ஆஸ்திகர்களுக்கு சாஸ்த்ரம்தான் முக்ய ப்ரமாணமாயும், கதியாயும் ஆகும். சாஸ்த்ரத்தை முக்யமாக சரணமடைந் தவர்களைத்தான் ஆஸ்திகர்களென்று சொல்லவேண்டும். அந்த சாஸ்த்ரத்தைக் கொண்டுதான் தர்ம தத்வத்தை எப் படித் தெரிந்துகொள்ளவேண்டுமோ, அதுபோல் அந்த தர் மத்தை ஆதரிப்பதற்கு அந்தரங்க ஸாதனமாகிய ஸ்த்ரீயை நாம் பரிக்ரஹம் செய்துகொள்வதான விவாஹம் என்ற கல்யாணத்திற்கும் அந்த சாஸ்த்ரமானது எந்த காலத்தை குறிப்பிடுகிறதோ, அந்த காலத்தைத்தான் நாம் முக்யமான காலமாகக் கருதி, அந்தக் கார்யத்தை நடத்தவேண் டுமே தவிர, நமது இஷ்டப்படி சாஸ்த்ரத்திற்கு விரோத மாக ஒரு காலத்தைக் கல்பித்துக்கொண்டால், சாஸ்த்ரங் களையே முக்யமாக சரணமடைந்தவர்களான ஆஸ்திகர்க ளுடைய கோடியில் ப்ரதானமான மனிதர்களைப் போல்

நம்மை நாமாகவே பாவித்துக்கொண்டு, புராதனமான ஆசாரத்தையும், மஹர்ஷிகளுடைய ஸித்தாந்தத்தையும், சாஸ்த்ரத்தினுடைய மர்யாதையையும் மீறி, அதிலும் ஸமஸ்தமான தர்மங்களுக்கும் மூலபூதமான தர்மமாகிய விவாஹ தர்மத்தில் ப்ரமாணங்களை உல்லங்கனம் செய்து, நமது ஸங்கத்திலும் நமக்குத் தோன்றியபடி அநுஷ்டித்துக் கொண்டு, மற்றவர்களிடத்திலும் அதை அப்படியே அநுஷ்டிக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு அவ்விதம் நடிப்பதைக்காட்டிலும், முன் சொன்னபடி விவாஹமாகிய கல்யாணத்திற்கு போகத்தையே முக்யமான பலனாகக் கருதுகிற போக ரஸிகாளாயும், அதர்மரஸிகாளாயுமுள்ள மஹா புருஷர்களுடைய கோடியிலேயே நாமும் சேர்ந்துகொண்டிருந்து வருவதல்லவா நலமாகும். வயது முதிர்ந்த பிறகா கல்யாணத்தை ஸ்த்ரீகளுக்கு சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறது? இல்லை. ரொம்பவும் இளம் பருவத்தில்தான் ஸ்த்ரீகளுக்கு கல்யாண காலத்தை சாஸ்த்ரத்தில் விதித்திருக்கிறது. அதாவது,

यावन्नलज्जिताङ्गानि योन्यादीन्यवगूहते ।
यावत्तिष्ठति गोमार्गे तावत्कन्यां विवाहयेत् ॥

யாவந்நலஜ்ஜிதாங்காநி யொந்யாதீந்யவகூஹதெ ।
யாவத்திஷ்டதி மொமாெே தாவத்கந்யாம் விவாஹயெத் ॥

யாவந்நலஜ்ஜிதாங்காநி யோந்யாதீந்யவகூஹதே.
யாவத்திஷ்டதி கோமார்கே தாவத்கந்யாம் விவாஹயேத்

என்ற வசனத்தால் அந்த ஸ்த்ரீகளுக்குப் புருஷனைப் பார்த்து லஜ்ஜை வந்து தன் குஹ்யஸ்தானத்தை துணியால் மறைத்துக்கொள்ள வேண்டுமென்கிற அறிவுள்ள வயது வருவதற்கு முந்தியே, ராஜவீதியில் புழுதியில் விளையாடிக்கொண்டிருக்கும் பருவத்திலேயே கல்யாணத்தைச் செய்துவிட வேண்டுமென்று காலம் நிச்சயிக்கப்படுகிறது. புருஷர்களுக்கு உபநயன ஸம்ஸ்காரம் எப்படி விதிக்கப்பட்டிருக்கிறதோ,

அதுபோல் ஸ்த்ரீகளுக்கு உபநயன ஸ்தானத்தில் விவாஹ ஸம்ஸ்காரத்தை சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதினால் புருஷர்களுக்கு உபநயன காலம் எதுவோ, அது தான் ஸ்த்ரீகளுக்கு விவாஹ காலமாகும்.

गर्भाष्टमे ब्राह्मणं उपनयीत

𑌗𑌰𑍍𑌭𑌾𑌷𑍍𑌟𑌮𑍇 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌉𑌪𑌨𑌯𑍀𑌤

கர்பாஷ்டமே ப்ராஹ்மணம் உபநயீத

என்ற சாஸ்த்ரத்தினாலும்,

स्त्रीणामुपनयस्थाने विवाहं मनुरब्रवीत् ।
तस्मात् गर्भाष्टमः श्रेष्ठः जन्मतोवाष्टवत्सरः ॥

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌮𑍁𑌪𑌨𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌵𑌿𑌵𑌾𑌹𑌂 𑌮𑌨𑍁𑌰𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌗𑌰𑍍𑌭𑌾𑌷𑍍𑌟𑌮𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌜𑌨𑍍𑌮𑌤𑍋𑌵𑌾𑌷𑍍𑌟𑌵𑌤𑍍𑌸𑌰𑌃 ॥

ஸ்த்ரீணாம்உபநயஸ்தாநே விவாஹம் மனுரப்ரவீத் ।
தஸ்மாத் கர்ப்பாஷ்டம: ச்ரேஷ்ட: ஜன்மதோ வாஷ்ட வத்ஸர:॥

என்ற சாஸ்த்ர வசனத்தாலும் ஸ்த்ரீகளுக்கு, அதிலும் வேதத்தைச் சரணமாக அடைந்த வைதிகர்களுடைய ஸ்த்ரீகளுக்கு முக்யமாய் கர்ப்பத்திலிருந்து எட்டாவது வயதோ, பிறப்பிலிருந்து 8-வது வயதோ, அந்த காலம் வரைதான் விவாஹத்திற்கு முக்ய காலம் என்று தெரிகிறது. அதற்கு முன்பே 5, 6, 7-வது வயதுகளில் பரம முக்யகாலம் என்பது ஸித்தமாகிறது.

ऊनद्विवर्षा यानारी समूढा म्रियते यदि ।
खननं नैवकर्तव्यं तस्याः संस्कारमाचरेत् ॥

𑌊𑌨𑌦𑍍𑌵𑌿𑌵𑌰𑍍𑌷𑌾 𑌯𑌾𑌨𑌾𑌰𑍀 𑌸𑌮𑍂𑌢𑌾 𑌮𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌯𑌦𑌿 ।
𑌖𑌨𑌨𑌂 𑌨𑍈𑌵𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥

ஊநத்விவர்ஷா யாநாரீ ஸமூடா ம்ரியதேயதி ।
கநநம் நைவ கர்த்தவ்யம் தஸ்யா: ஸம்ஸ்காரம் ஆசரேத் ॥

என்ற சாஸ்த்ரத்தால் இரண்டு வயதுக்குமுன் சிசுக்கள் மரித்தால், கனனம் செய்து அடக்கம் செய்ய வேண்டும்

என்று சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறது. அது புருஷ சிசுவோ, ஸ்த்ரீசிசுவோ, இரண்டுக்கும் ஸமானம்தான். ஆகிலும் அந்த சிசு ஸ்த்ரீயாயிருந்து அதற்கு இரண்டு வயதுக்கு முன்பாகவே விவாஹமாகி இருந்து அது மரித்தால், அதற்கு கனனம் செய்து அடக்கம் செய்வதா, அக்னிதாஹ ஸம்ஸ்காரம் செய்வதா, என்று ஸந்தேஹம்வர, மனுவானவர் தன் ஸ்ம்ருதியில், அந்த ஸ்த்ரீ, சிசுவானாலும் கனனம் செய்து அடக்கம் செய்யக்கூடாது, அந்த ஸ்த்ரீ விவாஹம் என்ற ஸம்ஸ்காரமடைந்த ஸ்த்ரீ, அவளுக்கு அக்னிதாஹம் என்ற ஸம்ஸ்காரம்தான் செய்யவேண்டும் என்று தீர்மானம் செய்திருக்கிறார். இதனால் ஸ்த்ரீகளுக்கு இரண்டாவது வயதிற்கு முன்புகூட புராதனகாலத்தில் ஸநாதநதர்மிகள் தன் குழந்தைகளுக்கு விவாஹம் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகையால் இளம்பருவத்தில் எட்டு வயதுக்குள் அல்லது ஏதோ ராஷ்ட்ர க்ஷோபம் (ராஜ்ய நாசம்) முதலான பெரிய ஆபத்காலத்தில், 10 வயதுக்குள்ளாகவோ, ஸ்த்ரீகளுக்கு விவாஹம் செய்யவேண்டுமென்ற சாஸ்த்ரத்தை ஸந்தேஹமில்லாமல் கற்றுணர்ந்தவரானதினால், ஜனகமஹாராஜன் தனது கன்னிகையான ஸீதாதேவிக்கு ஆறுவது வயதிலேயே கல்யாணம் செய்து ஸ்ரீராமபிரானிடத்தில் விதிவத்தாக ஸீதாபிராட்டியை ஒப்புவித்தார் என்பது "इयम्" (ஊயழ) (இயம்) என்ற பதத்தால் விளங்குகிறது. "इयम्" (ஊயழ) (இயம்) என்ற பதத்தால் ஸீதாபிராட்டிக்கு கல்யாண காலத்தில் வயது ஆறுதான் என்று வெளியாகும் விவரம் முன்பே நன்றாகத் தெளிவு செய்யப்பட்டிருக்கிறது.

முன்பு इयं (ஊயம) (இயம்) என்ற பதத்தால் ஸீதாதேவிக்கு கல்யாண காலத்தில் வயது ஆறுதான் என்பது ப்ரமாண மூலமாக குறிப்பிடப்பட்டது. அத்துடன் அந்த பதத்தாலேயே ஸீதாதேவியினுடைய ஸௌந்தர்யம், ஸௌகுமார்யம், லாவண்யம் என்ற ஸ்த்ரீகளுக்கு முக்யமான மூன்று லக்ஷணங்களும் ப்ரத்யக்ஷமாக ப்ரகாசம் செய்யப்பட்டதாக

வும் அறியவும். ஸ்த்ரீ ஜாதிக்கு எவ்விதமான லக்ஷணங்கள் இருக்கவேண்டுமென்று சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றவனோ அந்த லக்ஷணங்களில் ஒன்றுகூட குறையாமல் நிறைந்து விளங்கிவருவதே ஸௌந்தர்யம் என்ற சப்தத்தால் சொல்லப்படும். ஸ்த்ரீ ஜாதிகளை புருஷர்கள் பார்த்த மாத்ரத்தில் அவர்களுடைய மனதை அபஹரிக்கக்கூடிய பாவங்களே லாவண்யம் என்ற சப்தத்தால் சொல்லப்படும். இளம்பருவமானது என்றும் குறையாமலிருக்கக்கூடிய சக்தி விசேஷமானது ஸௌகுமார்யம் என்ற சப்தத்தால் சொல்லுப்படும். இந்த ஸௌந்தர்யம், லாவண்யம், ஸௌகுமார்யம் என்ற மூன்றுகளும் ஸாமான்யமான மனுஷ்ய ஸ்த்ரீகளிடத்தில் காண்பது மிகவும் அரிதாகும். தெய்வத் தன்மையுள்ள ஸ்த்ரீயினிடத்தில்தான் இந்த மூன்றையும் காணலாம். ஸீதாபிராட்டியினிடத்திலோ இந்த மூன்றுகளையும் ப்ரத்யக்ஷமாகவே பார்த்துக்கொள்ளலாமென்று ஜனக மஹாராஜன் इयं (ஊயம்) (இயம்) என்ற பதத்தால் சொல்லுகிறபடியால் ஸீதாதேவியானவள் தெய்வத் தன்மையுள்ள ஸ்த்ரீ என்றும், அதிலும் ஸாக்ஷாத் லக்ஷ்மி தேவி என்றும் நன்ருக வெளியாகிறது. ஸ்த்ரீகளுக்கு முக்யமாக வேண்டிய அளவற்ற ஸௌந்தர்யம் ஸீதையினிடத்தில் குடிகொண்டிருக்கிறது என்ற கன்யா லக்ஷணமும் சொல்லப்பட்டதாக ஆகும். ப்ரத்யக்ஷத்தால் தீர்மானிக்கப்பட்ட ஒவ்வொரு தத்வத்தையும் அனுமானத்தால் ஸாதிக்க விரும்புகிறவர்களையே தார்க்கிகர்களென்று சொல்லப்படும். ஸ்ரீ ராமபிரானே, ஸகலவிதமான கல்விகளுலும் சிறந்த பாண்டித்யத்தை அடைந்த மஹா பண்டிதனுனலும் ந்யாய சாஸ்த்ரம் என்ற தர்க்க சாஸ்த்ரத்தில் விசேஷமான பாண்டித்யமும், அந்த சாஸ்த்ரத்தில் புதிதான ஒரு அபிநிவேசமும் ஸ்ரீ ராமபிரானுக்கு இருக்கிறது என்பது சில ப்ரமாண வசனங்களாலேயே தெரியவருகிறது.

இதற்கு ஆதாரமாக ஆநந்த ராமாயணத்திலுள்ள அடியில்கண்ட வசனத்தை ப்ரமாணமாகப் பார்க்கலாம்.

அதாவது,

गौतमो न्यायकर्ताहि तत्रावेशोऽधिकोहिनः
तस्माद्विमुच्या तत्पत्नी तत्स्पृशामिपदामुने ।

𑌗𑍌𑌤𑌮𑍋 𑌨𑍍𑌯𑌾𑌯𑌕𑌰𑍍𑌤𑌾𑌹𑌿 𑌤𑌤𑍍𑌰𑌾𑌵𑍇𑌶𑍋𑌽𑌧𑌿𑌕𑍋𑌹𑌿𑌨𑌃
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌾 𑌤𑌤𑍍𑌪𑌤𑍍𑌨𑍀 𑌤𑌤𑍍𑌸𑍍𑌪𑍃𑌶𑌾𑌮𑌿𑌪𑌦𑌾𑌮𑍁𑌨𑍇 ।

கௌதமோ ந்யாயகர்தாஹி தத்ராவேசோஅதிகோஹிந :
தஸ்மாத்விமுச்யா தத்பத்நீ தத்ஸ்ப்ருசாமிபதாமுநே ।

ஆநந்த ராமாயணத்தில் அஹல்யா சாபவிமோசன ப்ரகரணத்தில் கௌதமருடைய சாபத்தால் கல்லாக இருக்கும் அஹல்யாதேவியை சாபத்தினின்றும் விமோசனம் செய்து வைப்பதற்காக விச்வாமித்ர மஹர்ஷியானவர் ஸ்ரீராமனைப் பார்த்து, "ராமா! உன் திருப்பாதத்தால் இந்த கல்லைத் தொடவேண்டும்" என்று சொல்லும்பொழுது ஸ்ரீராமன் அதன் உண்மையை ஸர்வக்ஞனதினுல், அதை அறிந்து மஹர்ஷே! அந்த விஷயத்தில் நானும் கடமைப் பட்டவனே. ந்யாய ஸூத்ரத்திற்கு கௌதம மஹர்ஷியே ஆதிகர்த்தாவாக ஆகுவார், அந்த ந்யாய சாஸ்த்ரத்திலோ எனக்கு அதிகமான அபிநிவேசம் உண்டென்பது தங்களுக்கு தெரிந்ததே. ஆகையால் ஸர்வ சாஸ்த்ரத்திற்கும் உபகாரகமான ந்யாய சாஸ்த்ரத்திற்கு ஆதிகர்த்தாவான கௌதமருடைய தாரத்தை சாபத்தினின்று விமோசனம் செய்துவைப்பது எனது கடமை. என் பாதத்தால் கல்லாக இருக்கும் அஹல்யையைத் தொடுகிறேன்" என்று ஸ்ரீராமபிரான் விச்வாமித்ர மஹர்ஷியைப் பார்த்துச் சொன்னுர் என்ற கதையை விளக்குகிற மேல்சொன்ன ச்லோகமே ஸ்ரீராமபிரானுக்கு ந்யாயசாஸ்த்ரத்தில் அதிகமான அபிநிவேசமுண்டு என்பதற்கு ப்ரமாணமாகும்.

प्रत्यक्षदृष्टमपि अनुमानेन बुभुत्समानाः वयं

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌪𑌿 𑌅𑌨𑍁𑌮𑌾𑌨𑍇𑌨 𑌬𑍁𑌭𑍁𑌤𑍍𑌸𑌮𑌾𑌨𑌾𑌃 வயம்

ப்ரத்யக்ஷத்ருஷ்டமபி அநுமாநேந புபுத்ஸமாநா: வயம்

அதாவது 'ஸீதையினுடைய ஸௌந்தர்யமோ, லாவண்யமோ, ஸௌகுமார்யமோ, இந்த மூன்றும் அபரிச்சின்னம். அதாவது அளவுக்குட்பட்டதல்ல என்பது ப்ரத்யக்ஷஸித்தமானாலும், அநுமான ப்ரமாணத்தால் நிர்ணயம் செய்து கொள்ள இச்சையுள்ளவர்கள் நாங்கள்' என்ற அபிநிவேசமானது ஸ்ரீராமபிரானுக்கும் இருக்கிறது என்பதை அறிந்த ஜனகமஹாராஜாவானவர் ஸீதையினுடைய ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, லாவண்யங்களை அனுமான ப்ரமாணத்தாலும் அபரிச்சின்னம் என்பதை நிர்ணயம் செய்து ராமனை ஸந்தோஷிக்கச் செய்வோம் என்று நினைத்து सीता (𑌸𑍀𑌤𑌾) (ஸீதா) என்ற பதத்தையும் ப்ரயோகம் செய்தார்.

सीतालाङ्गलपद्धतिः (𑌸𑍀𑌤𑌾𑌲𑌾𑌙𑍍𑌗𑌲𑌪𑌦𑍍𑌧𑌤𑌿𑌃) (ஸீதாலாங்கலபத்ததி:) என்ற ரீதியாக ஸீதையென்றால் கலப்பையினால் உழுகிற மார்க்கம் என்று பொருள் வெளியாகிறது. गोभिः यज्ञदेशं शोधयेत् कर्षकवत् (𑌗𑍋𑌭𑌿𑌃 𑌯𑌜𑍍𑌞𑌦𑍇𑌶𑌂 𑌶𑍋𑌧𑌯𑍇𑌤𑍍 𑌕𑌰𑍍𑌷𑌕𑌵𑌤𑍍) (கோபி: யக்ஞதேசம் சோதயேத் கர்ஷகவத்) என்ற ப்ரமாண வசனத்தால் ஜனக மஹாராஜனானவர் ஸர்வஜித் என்ற யக்ஞம் செய்வதற்காக யக்ஞதேசத்தை ஆறு கோக்கள் கட்டப்பட்ட தங்கக்கலப்பையினால் உழுது சுத்தம் செய்தார். அந்த மார்க்கத்தில் ப்ரக்ருதத்தில் ராமபிரானுக்கு தர்ம பத்னியாக ஆகப்போகிற கன்யாரத்னமானது அகப்பட்டபடியால் ஸீதை யென்று இந்த பரதேவதைக்குப் பெயர் ஏற்பட்டது. அதாவது அயோநிஜை என்று இதன் பொருளாகும். கர்பவாஸ துக்கம் முதலியவை இல்லாமலே கர்ம சரீரமில்லாமலும், தனது இச்சாமாத்ரத்தினால் மாயாமயமான திவ்ய மங்கள விக்ரஹத்தை ஸ்வீகரித்துக்கொண்டு ஆவிர்பவித்ததால், மந்த்ர, தந்த்ர, யந்த்ர ரூபிணியான மஹாராக்ஞீ, பரதேவதையென்று வெளியாகிறது. இந்த பதமானது

ஸீதையினிடத்தில் அபரிச்சின்னமான ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, லாவண்யாதிகளை ஸாதிப்பதில் ஹேதுவை காட்டுவதாயும் ஆகிறது. इयम् (𑌇𑌯𑌮𑍍) (இயம்) என்றதினால் பக்ஷ நிர்தேசம் செய்துகொள்ள வேண்டும். अपरिच्छिन्न सौन्दर्य सौकुमार्य लावण्यवती (𑌅𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨 𑌸𑍌𑌨𑍍𑌦𑌰𑍍𑌯 𑌸𑍌𑌕𑍁𑌮𑌾𑌰𑍍𑌯 𑌲𑌾𑌵𑌣𑍍𑌯𑌵𑌤𑍀) (அபரிச்சின்ன ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, லாவண்யவதீ) என்ற ஸாத்யத்தை அத்யாஹாரம் செய்துகொள்ளவேண்டும். ஸீதையென்ற பதத்தால் ஹேது நிர்தேசம் செய்துகொள்ளவேண்டும். அநுமான ப்ரயோகமோ அடியில் கண்டவாறு அறியவும்.

इयं अपरिच्छिन्न सौन्दर्य सौकुमार्य लावण्यवती अयोनिजत्वात् यन्नैवंतन्नैवं यथाप्राकृतानारी

𑌇𑌯𑌂 𑌅𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨 𑌸𑍌𑌨𑍍𑌦𑌰𑍍𑌯 𑌸𑍌𑌕𑍁𑌮𑌾𑌰𑍍𑌯 𑌲𑌾𑌵𑌣𑍍𑌯𑌵𑌤𑍀
𑌅𑌯𑍋𑌨𑌿𑌜𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌯𑌨𑍍𑌨𑍈𑌵𑌂𑌤𑌨𑍍𑌨𑍈𑌵𑌂 𑌯𑌥𑌾𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌾𑌨𑌾𑌰𑍀

(இயம், அபரிச்சின்ன ஸௌந்தர்ய ஸௌகுமார்ய லாவண்யவதீ, அயோநிஜத்வாத், யந்நைவம் தன்னைவம் யதாப்ராக்ருதாநாரீ)

என்ற அநுமானப்ரயோகத்தை வித்வான்கள் ஊஹித்துக் கொள்ளவேண்டும். எந்த ஸ்த்ரீ கர்பவாஸதுக்கத்தை அநுபவித்து யோநிஜையாக உண்டாகிறாளோ, அவளுடைய ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, லாவண்யத்திற்கு ஸமானமான ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, லாவண்யத்தோடு, கூடினவளாக மற்றொரு ஸ்த்ரீயும் இருக்கலாம். அதுபோல் அந்த ஸ்த்ரீயினுடைய ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, லாவண்யத்திற்கு ஒரு ஸமயம் அதிகம் ஏற்பட்டுவிடலாம். ஒரு தேசத்தில் அவளுடைய ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, லாவண்யத்திற்கு ஒரு ஸமயம் அதிகம் ஏற்பட்டுவிடலாம். ஒரு தேசத்தில் அவளுடைய ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, லாவண்ய மிருப்பதுபோல் மற்றொரு தேசத்திலிருப்பது முடியாது. அதனால் அந்த ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, லாவண்யம், பரிச்சின்னமானது. ஸீதாதேவியிடமுள்ளதோ அபரிச்சின்னமானது.

"ஸீதை" அயோநிஜையானபடியால், அந்த ஸௌந்தர்ய, லாவண்ய, ஸௌகுமார்யத்திற்கு ஸமானமாக மற்ருரு இடத்திலும் காணமுடியாது. அதற்கு காலாந்தரத்தில் அழிவும் ஏற்படாது. தேசத்திலும் அதற்குக் குறைவு வராது. ஆகையால் ஸீதை அயோநிஜையாக இருக்குங் காரணத்தால் இவளுடைய ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, லாவண்யத்தை யாராலும் அளவிடமுடியாது. இது அபரிச்சின்னம். "ராமா! உனக்கும் இந்த ஸௌந்தர்ய, லாவண்ய, ஸௌகுமார்யம் வராது" என்பதை முன் சொன்ன அநுமானத்தால் ஜனக மஹாராஜா ஸாதித்தார்.

அத்துடன் ஸீதை யென்ற பதத்திற்கு அயோநிஜை என்று அர்த்தம் சொல்லப்பட்டது. ஸ்ரீராமபிரானே வைகுண்டத்திற்கு அதிபதியான ஸ்ரீமஹாவிஷ்ணுவானாலும் கௌஸல்யாதேவியினுடைய கர்பத்தில் பன்னிரண்டுமாத காலம் வஸித்து யோநிஜனாக அவதரித்தார் என்ற லோக வார்த்தையைத் தடுப்பது ஸாத்யமாகாதது. அது தாத்விகமா, அதாத்விகமா, என்பதைப்பற்றி இங்கு மறுபடியும் விசாரிக்கவேண்டாம். ஸ்ரீராமாவதார காலத்தில் அந்த விசாரமாகி அந்த உண்மை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகிலும் பெரும்பாலும் லோகத்தில் அக்ஞ ஜனங்களே அதிகமானதினுல் அவர்களுடைய த்ருஷ்டியை அநுஸரித்து ஸ்ரீராமன் யோநிஜனாகத்தான் அவதாரம் செய்தார் என்றதை ஒப்புக்கொண்டு ப்ரக்ருதத்தில் எழுதப்பட்டுவருகிறது. ஜனக்ராஜன் ராமபிரானைப் பார்த்துச் சொல்வதோ, "ஹே ராமா! நீ इक्ष्वाकूणां इयं भूमिः सशैलवनकानना (உக்ஷ்வாகூணாம் உயம் பூமிஃ ஸஶைலவநகாநநா) (இக்ஷ்வாகூணும் இயம்பூமி: ஸசைலவநகாநநா) என்ற ப்ரகாரம் ஸமுத்ரத்தால் சூழப்பட்ட பூமண்டலத்திற்கே அரசனாக விளங்கிவருகிற வம்சம் இக்ஷ்வாகு வம்சமாகும். அந்த வம்சத்திலோ நான் பிறந்தவன். ஜனக மஹாராஜா நம்முடைய வம்சத்திலுள்ள ராஜாக்களுக்கு கப்பங்கட்டுகிற ராஜாதானே. நமக்கு ஸமான

மான அரசனுக எப்படி ஜனகராஜன் ஆகுவான்? विवाहश्च विवादश्च समयोरेवशोभते (விவாஹஶ்ச விவாதஶ்ச ஸமயோரேவஶோபதே) (விவாஹச்ச விவாதச்ச ஸமயோரேவசோபதே) என்ற ந்யாயத்தை அநுஸரித்துப் பார்த்தால், கன்னிகையின் குலம், வரனுடைய குலம், இந்த இரண்டு குலத்திற்கும் ஸர்வவிதத்திலும் ஸாம்யம் வேண்டும் என்று தெரிகிறதே? ப்ரக்ருதத்திலோ எப்படி ஸாம்யம் ஸித்திக்கும்? ஸீதை ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, லாவண்யத்தில் நிகரற்றவள் தான். ஆகிலும் நம்முடைய பெருமைக்கு ஸமானமான பெருமையுள்ளவளாக அவள் ஆகுவாளா, என்று நீ ஆலோஜித்துக்கொண்டு கொஞ்சம் மயங்குகிருயே, ராமா, இவளுடைய தத்வம் எனக்குத் தெரியாதா, இவள் அயோநிஜை, நீ யோநிஜன். யோநிஜனுன உனக்கு அயோநிஜையான இந்தக் கன்னிகை கிடைப்பது மிகவும் அரிது. ஆகிலும் உனக்கு நான் இந்தப் பெண்ணை தானம் செய்வது என்று தீர்மானித்து விட்டேன். வேறு யாராவது வந்து என் ஸங்கல்பத்தைக் கெடுத்தாலும் கெடுக்கக்கூடும். யோநிஜனுக்கு அயோநிஜையை கொடுக்கவாவது? நான் அயோநிஜனுன வரனைக்கொண்டுவருகிறேனென்று சொல்லி என் புத்தியைப் பேதிக்கலாம்.

ஆகையால், किंतुचित्तंमनुष्याणां अनित्यम् इतिमेमति (கிம்துசித்தம் மநுஷ்யாணாம் அநித்யம் இதிமேமதி) (கிம்துசித்தம் மநுஷ்யாணும் அநித்யம் இதிமேமதி) என்றபடி என் புத்திக்கு ஒரு பேதம் ஏற்படுவதற்கு முன்பே நீ இந்த ஸ்த்ரீரத்னத்தை க்ரஹித்துக்கொள். யோநிஜனுன உனக்கு அயோநிஜையான இந்த ஸ்த்ரீ கிடைப்பது மிகவும் அரிதானது, என்றுதான் ஜனக் மஹாராஜா சொன்னுரோ என்றும் इयं सीता (இயம் ஸீதா) (இயம் ஸீதா) என்று ஜனக மஹாராஜா சொன்னதினுல் வெளியாகிறது. இதனுல் ஸீதை அயோநிஜை என்பதும் அவளுடைய ஸௌந்தர்யம், ஸௌகுமார்யம், லாவண்யம், நிகரற்றது என்பதும் விளக்கப்பட்டது.

தவிரவும், விவாஹம் என்ற தர்மத்தை ஆசரிப்பதில் ஸ்த்ரீயினுடைய மேன்மை மாத்ரம் போதாது. ஆபிஜாத்யத்தை முக்யமாக கவனிக்கவேண்டும். ஆபிஜாத்யம் என்ருல் அந்த ஸ்த்ரீ பிறந்த வம்சமும் அந்த ஸ்த்ரீயின் தகப்பனுருடைய ஆசாரமும் என்று அறியவும்.

तांवृणीथयथाकामं यस्याः स्यात् श्रोत्रियः पिता

𑌤𑌾𑌂𑌵𑍃𑌣𑍀𑌯𑌯𑌥𑌾𑌕𑌾𑌮𑌂 𑌯𑌸𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 𑌪𑌿𑌤𑌾𑌃

தாம்வ்ருணீதயதாகாமம் யஸ்யா: ஸ்யாத் ச்ரோத்ரிய: பிதா

என்ற வசனத்தால் எந்த கன்னிகையினுடைய பிதா பரம ச்ரோத்ரியனுயும், ஸஜ்ஜன அனுமதனுயுமிருக்கிருனே, அந்த கன்னிகையைத்தான் நாம் வரிக்கவேண்டும் என்ற நீதி வெளியாகிறபடியால், ஸீதையினுடைய பிதாவான ஜனக மஹாராஜாவானவர் தன்னுடைய ஆசாரத்தில் ராமனுக்கு ஏதாவது ஸந்தேகமிருக்குமோ என்று நினேத்து, "ராமா! ஆபிஜாத்யமும் சாஸ்த்ரத்தால் எப்படி அபேக்ஷிக்கப்பட்டதோ அதற்கு மேலானதாகவே நீ கருதவேண்டும்" என்றதைக் காட்ட मममसुता (𑌮𑌮𑌸𑍁𑌤𑌾) (மமஸுதா) என்றும் ராமனேப் பார்த்து ஜனகமஹாராஜா சொன்னுர். அதாவது 'என் பெண் என்ற அபிமானத்தால் வளர்க்கப்பட்டவள்' என்று அதன் பொருளாகும். कर्मणैवहि संसिद्धिं आस्थिता जनकादयः (𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵𑌹𑌿 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌆𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃) (கர்மணைவஹி ஸம்ஸித்திம் ஆஸ்திதா ஜநகாதய:) என்ற வசனத்தாலும் मिथिलायां प्रदीप्तायां नमेकिंचित् प्रदह्यते (𑌮𑌿𑌥𑌿𑌲𑌾𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌯𑌾𑌂 𑌨𑌮𑍇𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍 𑌪𑍍𑌰𑌦𑌹𑍍𑌯𑌤𑍇) (மிதிலாயாம் ப்ரதீப்தாயாம் நமேகிஞ்சித் ப்ரதஹ்யதே) என்ற வசனத்தாலும் ச்ரோத்ரியன் என்பதிலோ, ப்ரம்ம நிஷ்டன் என்பதிலோ, ஜனக மஹாராஜா நிகரற்றவர் என்று அர்ஜுனனுக்கு உபதேசம் செய்த க்ருஷ்ணுவதார ரூபியான ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவாலும், ஸஜ்ஜனங்களாலும், ஒப்புக்கொள்ளப்பட்ட என் பெண் என்று சொல்லி ஆபிஜாத்யம் என்ற விவாஹ தர்மத்தில் ஏற்பட்ட முக்ய ஸ்தானத்தையும் விளக்கினுர்.

இதனுல் ஆபிஜாத்யமும் சொல்லப்பட்டது. முன்பு ஸௌந்தர்யமும் சொல்லப்பட்டது. ஸௌந்தர்யம், ஸௌகுமார்யம், லாவண்யம், ஆபிஜாத்யம், இவைகள் ஸீதையினிடத்தில் நிறைந்ததாக இருந்தாலும், தர்மபத்னீ என்ற சப்தத்திற்கு அந்த ஸீதையானவள் பொருளாக ஆக வேண்டுமேயானுல், தர்மாசரணத்திற்கு அனுகூலமாயிருந்தால் தானே முடியும். தர்மாசரண விஷயத்தில் ஸீதையின் நோக்கம் எவ்விதமோ என்றும் ராமனுக்கு ஸந்தேஹம் ஏற்படலாம். அதையும் நிவர்த்தி செய்ய सहधर्मचरी तव (ஸஹதர்மசரீ தவ) (ஸஹதர்மசரீ தவ) என்றும் ஜனக மஹாராஜா ஸீதையினுடைய உத்தமமான ஸௌசீல்யத்தை நிருபணம் செய்தார். "ராமா! உனக்கு எந்த தர்மத்தை ஆசரிப்பது இஷ்டமோ, அந்த தர்மத்தையே உனக்கு அனுகுணமாக இருந்துகொண்டு ஆசரிக்கும் ஸ்வபாவமுள்ளவள். அவ்விதமே மஹான்களாலும் என்னுலும் உபதேசிக்கப்பட்டு பர்த்தாவினுடைய அனுவர்த்தனமே ஸ்த்ரீகளுக்கு பரம தர்மமென்பதை அறிந்துகொண்டவள், இந்த கன்னிகை" யென்றும் ஜனக மஹாராஜா சொன்னுர். அத்துடன் सह (ஸஹ) (ஸஹ) என்ற பதம் அவ்யயம் என்று சொல்லப்படும். அவ்யயமான பதத்திற்கு அர்த்தம் ஒன்றல்ல; அநேக அர்த்தங்களுண்டு. ப்ரக்ருதத்தை யனுஸரித்துச் சொல்லவேண்டும். இந்த ப்ரக்ருதத்திலோ "அதிகம்" என்று அர்த்தத்தை அறியவும். அதனுல் "ராமா! உன்னைக் காட்டிலும் இவள் அதிகமாக தர்மத்தை ஆசரிக்கிறவள்" என்று வெளியாகிறது. அதாவது ஸ்ரீராமனுக்குக்கூட தெரியாததான ஒரு தர்ம ரஹஸ்யத்தை அம்பாள் ஸீதாதேவி தெரிந்துகொண்டு ஸ்ரீராமனுக்கு அதை தெரிவித்திருக்கிருள். இந்த தத்வமானது ஸ்ரீராமாயணத்திலேயே ஆரண்ய காண்டத்தில் காணப்படுகிறது.

அதாவது ஸ்ரீராமன் ஸீதையோடும் லக்ஷ்மணனேடும் வனவாஸம் செய்கிற ஸமயத்தில் அநேக மஹர்ஷிகளு

டைய ஆச்ரமங்களில் சில நாட்களும், சில மாதங்களும், வஸித்துவிட்டு, ஸுதீக்ஷ்ணமஹர்ஷியின் ஆச்ரமம் வந்து சேர்ந்து, அந்த மஹர்ஷியினுடைய அனுக்ரஹத்தையும் பெற்றுக்கொண்டு, அங்கிருந்து அகஸ்த்ய மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திற்கு புறப்பட்டார். அந்த ஸந்தர்ப்பத்திலோ, பகவான் ஸ்ரீராமன் ஜடாதாரியாகவும், வல்கலதாரியாகவுமிருந்ததினுல், மஹர்ஷிபோல் தோன்றினுலும், அநேக பாணங்களால் நிறைந்த அம்பராத்தூணிகள் என்ற பைகளை இருபக்கங்களிலும் தொங்கவிட்டுக்கொண்டு, ஒரு கையில் கோதண்டமென்ற வில்லையும், மற்றொரு கையில் பாணத்தையும் தரித்துக்கொண்டு புறப்படும்பொழுது, யுத்த வீரனுகப் புலப்பட்டார். அப்பொழுது ஸீதாதேவியானவள் ராமனைப் பார்த்து "ராமா! ஸகல சாஸ்த்ரங்களுடைய ஸாரமானது மூன்றேதான் ஆகும். ஒன்று ப்ரம்மசர்யம், இரண்டாவது ஸத்யம், மூன்ருவது அஹிம்ஸை. இந்த மூன்றும் புருஷனிடமோ, ஸ்த்ரீயினிடமோ இருந்தால் போதுமானது. இந்த மூன்றையும் அனுஷ்டிக்க வேண்டுமென்று சொல்வதில்தான், ஸகல சாஸ்த்ரங்களுக்கும் தாத்பர்யம். அந்த மூன்றுக்குள் முதலாவதான ப்ரம்மசர்யமும் "ஸொந்ததாரத்தினிடத்தில் மேலான ஆஸக்தியுள்ளவனுகயிருப்பது" என்பதேதான் ஆகும். அது தங்களிடத்தில் இருந்துவருகிறதென்பது எனக்கு நன்ருகத் தெரியும். தங்களை அரண்யம் போகச்செய்த கைகேயிதேவியினிடம் பரதன் கேகயதேசத்திலிருந்து வந்தவுடன், எதற்காக நீ ராமனை அரண்யம் போகச் செய்தாய்? ராஜ்ய பட்டாபிஷேகத்திற்குத் தான் அர்ஹனில்லாமல் போகும்படி தர்ம சாஸ்த்ரத்திற்கோ, நீதிக்கோ விரோதமாக ராமன் எந்தக் கார்யத்தையாவது செய்துவிட்டானு? ஏதாவது பரதாராபிமர்சனமும் ஸம்பவித்து விட்டதோ என்று கேட்க அந்த பரதனுக்கு கைகேயிதேவி பதில் சொல்லும் அவஸரத்தில் न रामः परदारान्वै चक्षुर्भ्यामपि पश्यति (ந ராம: பரதாராந்வை சக்ஷுர்ப்யாமபி பச்யதி) (நராம: பரதாரான்வைசக்ஷுர்ப்யாமபிபச்யதி

என்று பதில் சொன்னாள். அதாவது பரதாரங்களை இராமன் கண்விழித்துக்கூடப் பார்க்கமாட்டான் என்பது அதன் பொருளாகும். தங்களைக் காட்டிற்கு விரட்டின கைகேயி தேவியினுடைய முகத்திலிருந்தும்கூட, தங்கள் ப்ரம்ம சர்யத்தை மெச்சிப்பேசும் வார்த்தை வருமானால் தங்களிடத்தில் ஸொந்த தாரத்தினிடத்திலேயே, பரம ஆஸக்தியோடிருப்பதென்ற ப்ரம்மசர்யமானது குடியிருக்கிறது என்பதற்கு வேறு அத்தாக்ஷியும் வேண்டுமா ?

அத்துடன் ஸத்யமும் உன்னிடத்தில் குடியிருக்கிறது. रामो द्विः नाभिभाषते (ராமோ த்வி: நாபிபாஷதே) (ராமோ த்வி: நாபி பாஷதே) என்ற ப்ரகாரம் தங்களைப்போல் ஸத்யஸந்தனை மற்றொருவனைப் பார்க்கமுடியாது. சித்ரகூடபர்வதத்தில் நாம் வஸிக்கும்பொழுது, ஜாபாலி மஹர்ஷியானவர் எவ்வளவோ நாஸ்திக வாதத்தை அவலம்பித்து தங்கள் புத்தியை பேதிக்க ஆரம்பித்தும், நீங்கள் அவருடைய ஸித்தாந்தத்தை கண்டனம் செய்து பரம ஆஸ்திக்யத்தை அந்த ஸந்தர்ப்பத்தில் உபந்யஸித்தும், ஸத்யத்தினுடைய பெருமையை விளக்கியும், பதினான்குவருஷ காலம் அரண்யத்தில் தான் வஸிப்பது என்ற தனது ஸங்கல்பத்திலிருந்து கொஞ்சங்கூட நழுவாமல் நடந்துகொண்டது ஒன்று போதாதா தங்களிடத்தில் ஸத்யம் குடியிருக்கிறதென்பதற்கு அத்தாக்ஷி. ஆகையால் ஸத்யமும் தங்களிடம் விளங்குகிறதென்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

மூன்றுவதான அஹிம்ஸை என்பதைப்பற்றி மாத்ரம் எனக்கு கொஞ்சம் ஸந்தேஹம் ஏற்படுகிறது. நமக்கோ, யத்ருச்சையாக வானப்ரஸ்தாச்ரமிகளுடைய நியமத்தை அநுஷ்டிக்கும்படியான பாக்யம் வந்து சேர்ந்தது. वनवासो महोदयः (வநவாஸோமஹோதய:) (வநவாஸோமஹோதய:) என்று தங்கள் திருவாக்கினின்றும் வனவாஸத்தில் ஏற்படும் மஹாலாபமும் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்

பொழுது अहिंसा परमो धर्मः (ஃஹிம்ஸா வரமொ யஃஃ) (அஹிம்ஸா பரமோ தர்ம:) என்ற சாஸ்த்ரத்தை அவலம்பித்து அதிலும் வனிகளுக்கு முக்யமான தர்மமான அஹிம்ஸையை நாம் அநுஷ்டிக்க வேண்டாமா? अहिंसाप्रतिष्ठायां तत्सन्निधौ वैरत्यागः (ஃஹிம்ஸாவ்ரதிஷாயாம் தத்ஸஹியள வெரதூாமஃ) (அஹிம்ஸா ப்ரதிஷ்டாயாம் தத்ஸந்நிதௌ வைரத்யாக:) என்று பதஞ்சலி மஹர்ஷி இயற்றிய யோக ஸூத்ரத்தால் அஹிம்ஸையைக் கை விடாமல் பிடித்துக்கொண்டவனுடைய ஸந்நிதியில் இயற்கையாக பரஸ்பரம் வைரமுள்ள திர்யக் ஜாதிகள் (ம்ருக பக்ஷிகள்) கூட வைரத்தை விட்டுவிடும் என்று சொல்லப்பட்டிருக்கிறதே! அஹிம்ஸைக்கு ஸமானமான வேறு தர்மம் உண்டா?

देशकालवस्तुप्रयोजनापरिच्छिन्ना अहिंसा सार्वभौमव्रतम्

தெஶகாலவஸ்துவ்ரயொஜநாவரிச்சிஹா
ஃஹிம்ஸா ஸாவஃஹளஃவ்ரதழ

தேசகாலவஸ்துப்ரயோஜந அபரிச்சின்ன அஹிம்ஸா ஸார்வ பௌமவ்ரதம்

என்று முன்சொன்ன பதஞ்சலியே தனது சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிருரல்லவா? ஒரு தேசத்திலும், ஒரு காலத்திலும், ஒரு வஸ்துவையும், ஒரு ப்ரயோஜனத்திற்காகவும் சரீரத்தாலோ, வாக்காலோ, மனதிலுலோ, ஹிம்ஸிக்கக் கூடாதென்று நினைத்து ஸர்வ ப்ரகாரத்திலும் ஹிம்ஸையை விட்டுவிடுவது என்பதுதான் வ்ரதங்களுக்குள் மேலான வ்ரதம் என்றுதானே அந்த ஸூத்ரத்தின் பொருளாகும். அதை தாங்களும் அறிந்துகொண்டவர்களேதான். அப்படி எல்லாந் தெரிந்த தாங்கள் அஹிம்ஸையை அநுஷ்டிக்க வேண்டிய ஸமயத்திலும் தாங்கள் அதற்கு அனுகுணமாக இல்லாமல், பரபீடையென்ற ஹிம்ஸைக்கு அனுகுணமாக வேஷம் தரித்துக்கொண்டிருப்பதைப் பார்க்க, அதாவது ஆயுதபாணியாக தாங்கள் புறப்படுவதைப் பார்க்க, அஹிம்ஸை ஸெயன்பது தங்களிடமிருக்கிறதோ, இல்லையோ,

என்ற ஸந்தேஹம் எனக்கு ஏற்படுகிறதே. தங்களுக்கு அதன் உண்மையை ஞாபகப்படுத்துகிறேனே தவிர, தங்களுக்கு தெரியாததைச் சொல்வதாக நினைக்கக்கூடாது. கையில் ஆயுதங்களிருந்தால் தானுகவே ஹிம்ஸை வந்து சேர்ந்துவிடும்.

தங்களுக்கும் ஒரு கதை தெரிந்திருக்கலாமே. ஒரு மஹர்ஷி அத்யுக்ரமான தபஸ் செய்துகொண்டிருக்குங் காலத்தில் தேவேந்த்ரன் இந்த மஹர்ஷி தன் தபஸ்ஸால் தன் ஸ்தானத்திற்கு வந்துவிடுவரோ என்ற அஸூயையினுல் அந்த தபஸ்ஸை கெடுப்பதற்காக ஒரு படன் (ஸேவகன்) போல் வேஷம் போட்டுக்கொண்டு ஒரு பெருங் கத்தியை கையிலெடுத்துக்கொண்டு, இந்த மஹர்ஷியினுடைய ஸமீபம் வந்து சேர்ந்து ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளால் மஹர்ஷியை ஸ்வாதீனம் செய்துகொண்டு, "மஹர்ஷே! இந்த கத்தியை இங்கு வைத்துப் போகிறேன், அதை திருடர்கள் கொண்டுபோகாமலிருக்கும்படி ஸாவதானமாக ரக்ஷிக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டு, அந்த பெருங் கத்தியை மஹர்ஷியினிடத்தில் கொடுத்துவிட்டு இந்த்ரன் வெளியில் போய் விட்டான். மஹர்ஷி அது முதல் அந்த கத்தியை ரொம்பவும் ஜாகரூகனுக ரக்ஷித்துக்கொண்டு வந்தார். ஸ்நான காலத்திலும், ஜபகாலத்திலும், ஸர்வதா அந்த கத்தியினுடைய நினைவுதான் மஹர்ஷிக்கு இருந்து வந்தது. இந்த்ரனே வரவேயில்லை. காலக்ரமேண, அந்த மஹர்ஷிக்கு தபஸ்ஸிலிருந்துவந்த புத்தி போய், ப்ராணிகளை அந்த கத்தியால் ஹிம்ஸித்து பக்ஷிக்கிற விஷயத்தில் புத்தி ஏற்பட்டுவிட்டது. அவ்விதமே செய்து மஹா பாபியாகி அந்த மஹர்ஷி நரகம் போய்ச் சேர்ந்தார் என்ற கதையை மஹான்கள் சொல்லி நான் கேட்டிருக்கிறேன். தங்களுக்கும் இந்த கதை தெரிந்திருக்கலாம். இதனுல் ஹிம்ஸைக்கு அனுகூலமான ஆயுதங்கள் கையிலிருந்தால், தானுக ஹிம்ஸை வந்துவிடுமென்று தெரிகிறது.

ஆகையால் இந்த ஆயுதங்களை இந்த மஹர்ஷியினுடைய ஆச்ரமத்தில் வைத்துவிட்டுப் போவோம். வேட்டையாடுவதில் உத்ஸாஹமிருந்தால், அரண்யவாஸமான பிறகு, அயோத்திக்குப் போய் ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து கொண்ட பிறகு, அந்த உத்ஸாஹத்தை நிறைவேற்றிக் கொள்வோம்" என்று ராமனிடம் அஹிம்ஸையினுடைய தத்வத்தை ஸீதாதேவியானவள் வெளிப்படுத்திச் சொன்னாள். இராமனும் அதற்கு பதில் சொல்லும் ஸந்தர்ப்பத்தில், "ஸீதே! உன்னுடைய வாக்கை நான் கேட்டு ரொம்பவும் ஸந்தோஷிக்கின்றேன். துஷ்ட நிக்ரஹத்திற்காகவே நமது அவதாரம் ஏற்பட்டதல்லவா? துஷ்டநிக்ரஹம் ஹிம்ஸை யாகுமா? அல்லது தோஷமாகத்தான் ஆகுமா? தண்டகாரண்ய வாஸிகளான மஹர்ஷிகள் ராக்ஷஸர்களால் ஏற்படும் பாதையை முன்பு சரபங்க மஹர்ஷியின் ஆச்ரமத்தில் நம்மிடத்தில் தெரிவித்துக் கொண்டதற்கு, ராக்ஷஸர்களை வதம் செய்து, மஹர்ஷிகளுக்கு ஸுகத்தைக் கொடுப்பதாக நான் ப்ரதிக்ஞை செய்தேனே. அதை நீ கேட்டுக் கொண்டு தானே இருந்தாய். அந்த ப்ரதிக்ஞையை நான் எப்படி விடமுடியும்? என் உயிரை விட்டாலும் விடுவேன், என் உயிருக்கு ஸமானமான லக்ஷ்மணனை இழந்துகொண்டாலும் இழந்து கொள்வேன், என் உயிருக்கு மேலான உன்னை இழந்துகொண்டாலும் இழந்துகொள்வேன், செய்த ப்ரதிக்ஞையை விடவே மாட்டேன். அதிலும் ப்ராம்மணர்களுக்கு எதிரில் செய்த ப்ரதிக்ஞையை ஒருநாளும் விடமாட்டேன்" என்று பகவான் ஸ்ரீராமன் தன் அபிப்ராயத்தை ஸீதையிடம் தெரிவித்தார். இந்த அர்த்தத்தை விளக்கும் ச்லோகம் ஆரண்யகாண்டத்தில் ரொம்ப ப்ரஸித்தமானது.

अप्यहं जीवितं जह्यां त्वांवा सीतेसलक्ष्मणां ।
नतुप्रतिज्ञां सश्रुत्य ब्राह्मणेभ्यो विशेषतः ॥

அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம்வா ஸீதேஸலக்ஷ்மணாம் ।
நதுப்ரதிஜ்ஞாம் ஸம்ச்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விசேஷத: ॥

அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம்வா ஸீதேஸலக்ஷ்மணும் ।
நதுப்ரதிக்ஞாம் ஸம்ச்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விசேஷத: ॥

(இந்த ச்லோகத்தின் விசேஷமான தத்வார்த்தங்களெல்லாம் அந்த ஸந்தர்ப்பத்தில் ப்ரசுரிக்கப்படும்.)

இவ்விதம் பகவான் ஸீதையிடம் சொல்லிவிட்டு, பிறகும் "ஸீதே! அஹிம்ஸையினுடைய பெருமையையெடுத்து நீ சொன்னதில் நான் ரொம்பவும் ஸந்தோஷத்தையடைகிறேன். அதனுடைய ஸாராம்சங்களை நீ சொன்னதுபோல் நான் அறியவில்லை.

நான் உன்னை பரிணயம் செய்யும் காலத்தில், தர்மாசரண விஷயத்தில் நீ அனுகூலமாயிருப்பாயோ என்று நான் ஸந்தேஹிக்க உன் தகப்பனுரான ஜனகமஹாராஜா உன்னை என்னிடம் அர்ப்பணம் செய்யுங் காலத்தில் "ராமா! உனக்குக்கூட தெரியாத சில தர்மரஹஸ்யத்தை இவள் தெரிந்து கொண்டு அநுஷ்டிக்கக்கூடியவள். தர்மாசரணத்தில் உனக்கு மேலானவள் இவள் என்று सहधर्मचरीतव (ஸஹதர்மசரீதவ) (ஸஹதர்மசரீதவ) என்ற பதத்தால் உன்னை அர்ப்பணம் செய்தார். அது இப்பொழுது ஸத்யமாக ஆகிவிட்டது. உன்னைப்போல் அநுகூலமானவளும் தர்ம தத்வத்தை யறிந்தவளுமான களத்ரமும் என்னைப்போல் மற்றொருவனுக்கு கிடைப்பது அரிது என்பது நிச்சயம். நானே தன்யன்" என்று சொல்லி, ஸீதையை ஆலிங்கனம் செய்துகொண்டு ராமபிரான் பரம ஸந்தோஷத்தை வெளியிட்டார். இந்த தத்வம் ஆரண்ய காண்டத்தில் வரப்போகிறது. இதைக் கல்யாண கட்டத்தில் सहधर्मचरीतव (ஸஹதர்மசரீதவ) ஸஹதர்மசரீதவ) என்ற பதமானது ஸூசிப்பிக்கிறது. இதனால் ஸீதையென்ற கன்யாரத்னமானது ஸௌந்தர்யம் ஸௌகுமார்யம், லாவண்யம், ஆபிஜாத்யம் முதலான உத்தம குணங்களால் அலங்கரிக்கப்பட்டவளாக இருப்பதினல் லோகத்திற்கு மாதாவான மஹாலக்ஷ்மியே ஸீதாதேவி என்று வெளியாகிறது.

सहधर्मचरी तव (ஸஹயஃஅசரீ தவ) (ஸஹதர்மசரீ தவ) என்று ஜனக மஹாராஜாவானவர் தன் புத்ரியான ஸீதையின் குணத்தைப் பற்றி ஸ்ரீ ராமபிரானிடத்தில் வர்ணித்த பதத்திற்கு பொருள் இன்னதென்பதை முன்பு நன்ருக எழுதப்பட்டது. அந்த பதத்தால் ஸனுதன தர்மிகளுக்கு ரொம்பவும் அவச்யமான மற்றொரு தர்மமும் வெளியாகிறது. ஸனுதன தர்மிகளுக்கு ஸகல தர்மங்களுக்கும் மூலபூதமான தர்மமோ सहधर्मचारिणीसंयोगं (ஸஹயஃஅசாரிணீஸம்யொமம்) (ஸஹதர்மசாரிணீஸம்யோகம்) என்று சொல்லப்பட்ட விவாஹம் என்ற கர்மாவேதாகுகும். அந்த விவாஹ கர்மாவில் சாஸ்த்ரத்தில் சொல்லியபடி ஸனுதன தர்மிகளுக்கு ஆதரவை உண்டுபண்ணக் கூடியதாகவும், सहधर्मचरी तव (ஸஹயஃஅசரீ தவ) (ஸஹதர்மசரீ தவ) என்ற பதமானது ஆகும். அதாவது,

ब्राह्मो दैवस्तथैवार्षः प्राजापत्यस्तथाऽऽसुरः ।
गान्धर्वो राक्षसश्चैव पैशाचश्चाष्टमोऽधमः ॥

ப்ராஹ்மொ தைவஸ்தயைவாஷ்ஃ ப்ராஜாபத்யஸ்தயா஽஽ஸுரஃ ।
மாஂயவொ ராக்ஷஸஸ்சைவ பைஶாசஸ்சாஷ்டமொ஽யமஃ ॥

ப்ராஹ்மோ தைவஸ்ததைவார்ஷ: ப்ராஜாபத்யஸ்ததாஸுர: ।
காந்தர்வோ ராக்ஷஸச்சைவ பைசாசச்சாஷ்டமோதம: ॥

என்ற ஸ்ம்ருதியினுல் மனுவானவர் விவாஹம் என்ற தர்மத்தை எட்டுவிதமாகப் பிரித்து எழுதியிருக்கிருர். அதில் 1. ப்ராம்ம விவாஹம் 2. தைவ விவாஹம் 3. ஆர்ஷ விவாஹம் 4. ப்ராஜாபத்ய விவாஹம் 5. ஆஸுர விவாஹம் 6. காந்தர்வ விவாஹம் 7. ராக்ஷஸ விவாஹம் 8. பைசாச விவாஹம்.

1. ப்ராம்ம விவாஹம் என்ருல் அநேக கல்யாணகுணங்களோடுகூடின வரனை (மணப்பிள்ளையை) மணப்பெண்ணின் தகப்பனுனவன் தன் வீட்டிற்கு அழைத்து வந்து,

புதிதான வஸ்த்ரங்களாலும் அந்த வரனை (மணப்பிள்ளையை) அலங்கரித்து, மஹாவிஷ்ணுவாகவும் பாவித்து ஷோட சோபசார பூஜைகளாலும் பூஜித்து ஸம்பூர்ணமாக வேதாத் யயனஞ் செய்து அதற்குரிய ஸதாசார ஸம்பன்னனான அந்த வரனுக்கு தனது கன்னிகையை மந்த்ரோதக புரஸ்ஸரமாக அக்னிஸாக்ஷிகமாகவும், அநேக ப்ராம்மணோத்தமர்களுடைய ஸந்நிதியிலும் தானம் செய்வதே ப்ராம்ம விவாஹமாகும்.

2. தைவ விவாஹம் என்றால் தனது கன்னிகையை அழைத்துக்கொண்டு தான் தேச ஸஞ்சாரம் செய்து மஹா யக்ஞம் நடக்கும் உத்தம ஸ்தலத்தை அறிந்துகொண்டு அங்கு சென்றோ, அல்லது மஹா வித்வான்களுடைய ஸபை நடந்துவரும் ஒரு ராஜஸ்தலத்தை அறிந்துகொண்டு அங்கு சென்றோ, யக்ஞ சாலையில் ரித்விக்காக இருந்து கொண்டு ப்ரயோகத்தை தவறாமல் நடத்திக்கொண்டுவரும் அதிசூரனையும், அஸஹாயனையுமுள்ள அந்த ப்ரம்மசாரிக்கோ அல்லது சாஸ்த்ரங்களுடைய உண்மையை வாதப்ரதிவாத ரூபமாக நன்றாக விசாரஞ் செய்து, அதில் ஜயிக்கும் வல்ல மையுள்ள மஹா வித்வானான ப்ரம்மசாரிக்கோ, தனது கன் னிகையை ஸர்வாபரண பூஷிதையாக அலங்கரித்து, அந்த ஸ்தலத்திலேயே தானம் செய்துவிடுவது தைவமான விவா ஹம் என்று சொல்லப்படும்.

3. ஆர்ஷமான விவாஹம் என்றால், மஹர்ஷிகளுடைய ஆச்ரமத்திற்குச் சென்று அங்குள்ள ரிஷிகுமாரனான உத்தம ப்ரம்மசாரிக்கு, அந்த ரிஷியினிடத்திலிருந்தும் இரண்டு கோவையோ (பசுமாடு) அல்லது நான்கு கோக்களையோ, கன்னிகைக்குப் பிதாவானவன் க்ரஹித்துக்கொண்டு, அந்த ரிஷியினுடைய ஆச்ரமத்திலேயே அந்த ரிஷிகுமாரனுக்கு விதிவத்தாக, தனது கன்னிகையை தானம் செய்து விடுவது ஆர்ஷ விவாஹமாகும்.

4. ப்ராஜாபத்யா விவாஹம் என்றால், இரண்டுபேர்களும் (வரன் வது-மணப்பிள்ளையும், மணப்பெண்ணும்) அக்னி

ஆதானம் செய்துகொண்டு (ச்ரௌதமான அக்னியை உபாஸிப்பதை ஆரம்பித்துக்கொண்டு) அக்னிஹோத்ரம் முதலான ச்ரௌதகர்மாக்களை தவருமல் அனுஷ்டிப்பதில் பரஸ்பரம் மிகுந்த ச்ரத்தையுடையவர்கள். அதாவது, எவ்வித ஸத்கர்மாக்களையும் அனுஷ்டிப்பதில் இருவர்களுடைய மனதும் ஒரேமாதிரியும் ஒத்திருப்பது என்பதை நன்ருயறிந்தபிறகு அவ்விதம் ச்ரோத்ரியனுன பிள்ளைக்கும், ச்ரோத்ரியதமா என்று சொல்லப்படும் அந்த கன்யாரத்னத்திற்கும் ஏற்படும் விவாஹமே ப்ராஜாபத்ய விவாஹம் என்று சொல்லப்படும்.

5. ஆஸுரவிவாஹம் என்ருல் கல்யாணப்பிள்ளைக்கு தனம் முதலியதுகளைக் கொடுத்து கன்னிகையை விதிவத்தாக தானம் செய்வதோ, அல்லது மணப்பிள்ளையினுடைய பந்துக்களிடமிருந்து மணப்பெண்ணுக்கு தனம் முதலானதுகளை வாங்கிக்கொண்டு அந்தப் பிள்ளைக்கு அந்தப் பெண்ணை விதிவத்தாக தானம் செய்வதோ, ஆஸுரவிவாஹம் என்று சொல்லப்படும்.

6. காந்தர்வ விவாஹம் என்ருல் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் காமவிகாரமுண்டாகும்படியான வயது வந்து, அவரவர்கள் தன் தன் தாய்தந்தைகளைக்கூட கவனிக்காமல், தனக்கு ஸம்மதமான பிள்ளையை பெண் தானே தேடிக்கொள்வதும், தனக்கு ஸம்மதமான பெண்ணை தானே பிள்ளை தேடிக்கொள்வதும் அவ்விதம் தேடிய பிறகு ஒருவருக்கொருவர் ஸ்நேஹம் அதிகரித்து, அதற்குப் பிறகு அந்த இருவர்களும் செய்துகொள்ளும் விவாஹத்திற்குப் பெயர் காந்தர்வ விவாஹம் என்பதே.

7. ராக்ஷஸ விவாஹமோ கன்னிகைகளுடைய தாய் தந்தையர்கள், ஸஹோதரர்கள், இவர்களுடைய ஸம்மதமில்லாமல், அந்த கன்னிகை ஸ்வயமாக தானெரு புருஷனை வரித்து, அந்த புருஷன் அந்த கன்னிகையை ஸ்வீகரிக்கும் காலத்தில், அந்த கன்னிகையினுடைய தாய் தந்தையர்கள், ஸஹோதரர்கள், அந்த புருஷனேடு போர்செய்ய ஆரம்பிக்க,

அந்த புருஷனும் அந்தப்போரில் ஜயத்தை யடைந்து, அந்தக் கன்னிகையை அபஹரித்துப்போவது ராக்ஷஸ விவாஹமாகும்.

8. பைசாச விவாஹமோ மணப்பெண் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுதோ, மணப்பெண்ணுக்கு சித்தம் ஸ்வாதீனமாக இல்லாமலிருக்கும்பொழுதோ, அல்லது மணப்பெண் தன் பந்துக்களை விட்டு தனியாக இருக்கும் ஸமயத்திலோ, அந்தப் பெண்ணினுடைய அழகில் மோஹத்தையடைந்து, அந்தப் பெண்ணை திருடிக்கொண்டுபோய் அனுபவித்து, அதற்குப் பிறகு விவாஹம் செய்து கொள்வது பைசாச விவாஹமாகும்.

இவ்விதம் எட்டுவிதமான விவாஹத்தில் ப்ரக்ருதத்திலுள்ள ஸீதாராம விவாஹம் எந்த வகுப்பில் சேர்ந்ததென்பதை முதலில் விசாரிக்கவேண்டும். சிலவாதிகளோ, ஸீதாராம விவாஹம் என்பது இந்த எட்டுவிதமான விவாஹங்களில் ஒன்றிலும் சேர்ந்ததாக ஆகாததினால், இந்த உத்தம தம்பதிகளுடைய விவாஹம் சாஸ்த்ர ஸம்மதமில்லையென்று ஆக்ஷேபிக்கிறார்கள். அவ்வித ஆக்ஷேபணைகளின் ப்ரகாரமாவது.

1. ஸீதாராம விவாஹம் ப்ராம்ம விவாஹமாக ஆகாது.

आहूय दानं कन्यायाः ब्राह्मो धर्मः प्रकीर्तितः

𑌆𑌹𑍂𑌯 𑌦𑌾𑌨𑌂 𑌕𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌃 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃

ஆஹூய தாநம் கந்யாயா: ப்ராஹ்மோ தர்ம: ப்ரகீர்த்தித:

என்ற மனுவசனத்தால், கன்னிகைக்குப் பிதாவானவன் மணப்பிள்ளையினுடைய வீடு சென்று, மணப்பிள்ளையை அழைத்து வந்து தனது கன்னிகையை விவாஹம் செய்து கொடுப்பதல்லவா, ப்ராம்ம விவாஹம் என்று சொல்லப்படுகிறது. ஜனக மஹாராஜா ராமனைக் கூப்பிட்டா ஸீதையைக் கொடுத்தார். ராமன் தானாக அல்லவா ஜனகமஹா

ராஜாவிடம் அதிதியாக வந்தார். அப்படியிருக்கும்பொழுது அந்த விவாஹம் ப்ராம்ம விவாஹம் என்று எவ்விதம் சொல்லப்படும்? ஆகையால் ஸீதாராம விவாஹம் ப்ராம்ம விவாஹமல்ல.

2. அவ்விதமே ஸீதாராம விவாஹம் தைவவிவாஹமும் அல்ல.

यज्ञेच वितते सम्यक् ऋत्विजे कर्मकुर्वते ।
अलंकृत्य सुतादानं दैवं धर्मं प्रचक्षते ॥

𑌯𑌜𑍍𑌞𑍇𑌚 𑌵𑌿𑌤𑌤𑍇 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌋𑌤𑍍𑌵𑌿𑌜𑍇 𑌕𑌰𑍍𑌮𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑍇 ।
𑌅𑌲𑌂𑌕𑍃𑌤𑍍𑌯 𑌸𑍁𑌤𑌾𑌦𑌾𑌨𑌂 𑌦𑍈𑌵𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌪𑍍𑌰𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 ॥

யக்ஞேச விததே ஸம்யக் ரித்விஜே கர்மகுர்வதே ।
அலங்க்ருத்ய ஸுதாதாநம் தைவம் தர்மம் ப்ரசக்ஷதே ॥

என்ற வசனத்தை அனுஸரித்து யக்ஞத்தில் ஆர்த்விஜ்யம் என்ற பதவியை விவரித்துக்கொண்டு, அதற்குறிய கர்மாவைச் செய்வதில் ஸமர்த்தனுன அந்த வரனுக்கு தன் கன்னிகையை விவாஹம் செய்துகொடுப்பதல்லவா தைவவிவாஹமாகும். ஸ்ரீராமன் க்ஷத்ரியனுனதினுல் யக்ஞத்தில் ஆர்த்விஜ்யம் என்ற பதவிக்கு அர்ஹனில்லையே? க்ஷத்ரியன் யக்ஞம் செய்யத்தானே செய்யலாம். யக்ஞத்தில் ரித்விக்காக இருக்கக்கூடாதே. அப்படி யிருக்கும்போது, ஸீதாராம விவாஹம் எப்படி தைவவிவாஹமாகும்? ஆகையால் ஸீதாராம விவாஹம் என்பது இரண்டாவதான தைவவிவாஹ கோடியிலும் சேர்ந்ததல்ல.

3. அவ்விதமே ப்ரக்ருத விவாஹம் மூன்றுவதான ஆர்ஷ விவாஹமுமல்ல.

एकं गोमिथुनंद्वेवा वरात् आदाय धर्मतः ।
कन्याप्रदानं विधिवत् आर्षो धर्मः सउच्यते ॥

𑌏𑌕𑌂 𑌗𑍋𑌮𑌿𑌥𑍁𑌨𑌂 𑌦𑍍𑌵𑍇 𑌵𑌾 𑌵𑌰𑌾𑌤𑍍 𑌆𑌦𑌾𑌯 𑌧𑌰𑍍𑌮𑌤𑌃 ।
𑌕𑌨𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑌂 𑌵𑌿𑌧𑌿𑌵𑌤𑍍 𑌆𑌰𑍍𑌷𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌸 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

ஏகம் கோமிதுநம்த்வேவா வராத் ஆதாய தர்மத: ।
கந்யாப்ரதாநம் விதிவத் ஆர்ஷோ தர்ம: ஸஉச்யதே ॥

என்ற வசனத்தால் வரனிடத்திலிருந்து கோக்களை க்ரஹித்துக்கொண்டுதான் அந்தக் கன்னிகையை வரனுக்கு விவாஹம் செய்துகொடுப்பது என்பதுதான் ஆர்ஷ விவாஹம் என்று சொல்லப்படுவதினுல், ராமனிடத்திலிருந்து ஜனக மஹாராஜா ஒரு கோவாவது வாங்கிக்கொண்டதாக ஒரு இடத்திலும் தெரியவில்லை. ராமனிடம் அந்த ஸமயம் ஒரு கோவாவது இருந்ததாகவும் தெரியவில்லை. ஆகையால் ஸீதாராம விவாஹம் ஆர்ஷ விவாஹமாக எப்படியாகும்? அதனுல் ப்ரக்ருத விவாஹம் மூன்ருவதான ஆர்ஷவிவாஹம் என்ற கோடியிலும் சேராது.

4. அவ்விதமே ப்ராஜாபத்யம் என்ற விவாஹமாகவும் ஆகாது.

सहोभौ चरतां धर्मं इतिवाचाऽनुभाष्यच ।
कन्याप्रदानं अभ्यचेर्य प्राजापत्यो विधिः स्मृतः ॥

𑌸𑌹𑍋𑌭𑍌 𑌚𑌰𑌤𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌇𑌤𑌿𑌵𑌾𑌚𑌾𑌽𑌨𑍁𑌭𑌾𑌷𑍍𑌯𑌚 ।
𑌕𑌨𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑌂 𑌅𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑍋 𑌵𑌿𑌧𑌿𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥

ஸஹோபௌ சரதாம் தர்மம் இதிவாசா அநுபாஷ்யச ।
கந்யாப்ரதாநம் அப்யர்ச்ய ப்ராஜாபத்யோ விதி: ஸ்ம்ருத:॥

என்ற வசனத்தால் தர்மாசரணத்தை முன்னிட்டு கன்னிகையைக் கொடுக்கிற விவாஹமல்லவா ப்ராஜாபத்ய விவாஹமாக ஆகும். ஜனக மஹாராஜாவோ தர்மாசரணத்தை முன்னிட்டு ஸீதையை ராமனுக்கு தானம் செய்ததாகத் தெரியவில்லையே. வீர்யசுல்கை என்றல்லவா ஸீதையை சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது 'சிவதனுஸ்ஸை முறிக்கக்கூடிய வீர்யம் யாருக்கிருக்கிறதோ அவனுக்குத்தான் என் பெண்ணைக் கொடுப்பேன்' என்று ஜனக மஹாராஜா சொன்னதினுல், வீர்யத்தைத்தான் முக்யமாக ஜனக மஹாராஜா

எதிர்பார்த்ததாகத் தெரிகிறது. ஆகையால் ஸீதாராம விவாஹம் நான்காவதான ப்ராஜாபத்ய விவாஹகோடியிலும் சேர்ந்ததல்ல.

5. அவ்விதமே ஆஸுரம் என்ற விவாஹமாகவும் ஆகாது.

ज्ञातिभ्यो द्रविणं दत्वा कन्यायै चैव शक्तितः ।
कन्याप्रदानं स्वाच्छन्द्यात् आसुरो धर्मउच्यते ॥

𑌜𑍍𑌞𑌾𑌤𑌿𑌭𑍍𑌯𑍋 𑌦𑍍𑌰𑌵𑌿𑌣𑌂 𑌦𑌤𑍍𑌵𑌾 𑌕𑌨𑍍𑌯𑌾𑌯𑍈 𑌚𑍈𑌵 𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑌃 ।
𑌕𑌨𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑌂 𑌸𑍍𑌵𑌾𑌚𑍍𑌛𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌆𑌸𑍁𑌰𑍋 𑌧𑌰𑍍𑌮𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

ஞாதிப்யோ த்ரவிணம் தத்வா கன்யாயை சைவ சக்தித: ।
கன்யாப்ரதானம் ஸ்வாச்சந்த்யாத் ஆஸுரோ தர்ம உச்சயதே ॥

என்ற வசனத்தை யனுஸரித்து பரஸ்பரம் பணத்தைக் கொடுத்து தன்னிஷ்டம்போல் ஒரு நாள் அல்லது அரை நாளில்கூட செய்துமுடித்துவிடுகிற கல்யாணத்தை ஆஸுர விவாஹம் என்று சொல்கிறபடியாலும், ப்ரக்ருதமான ஸீதாராம விவாஹத்தில் ஒருவருக்கொருவர் பணம் கொடுத்து வாங்கிக்கொண்டார்களென்றோ, சாஸ்த்ரவிதியைமீறி இச்சையை யனுஸரித்து காலநியமமன்னியில் கல்யாணம் நடைபெற்றதென்றோ, ஒரு இடத்திலும் சொல்லப்பட்டிருப்பதாக தெரியாதபடியாலும், ஸீதாராம விவாஹத்தை ஆஸுர விவாஹகோடியிலும் சேர்க்க முடியாது.

6. அப்படியே காந்தர்வ விவாஹமாகவும் ஆகாது.

इच्छयान्योन्यसंसर्गः कन्यायाश्च वरस्यच ।
गान्धर्वस्सचविज्ञेयः मैथुन्यः कामसम्भवः ॥

𑌇𑌚𑍍𑌛𑌯𑌾𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌃 𑌕𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌶𑍍𑌚 𑌵𑌰𑌸𑍍𑌯𑌚 ।
𑌗𑌾𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌸𑍍𑌸𑌚𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌮𑍈𑌥𑍁𑌨𑍍𑌯𑌃 𑌕𑌾𑌮𑌸𑌮𑍍𑌭𑌵𑌃 ॥

இச்சயாந்யோந்யஸம்ஸர்க்க: கன்யாயாச்ச வரஸ்யச ।
காந்தர்வஸ்ஸசவிக்ஞேய: மைதுன்ய: காமஸம்பவ: ॥

என்ற வசனத்தால் ஒருவருக்கொருவர் ப்ரீதி விசேஷத்தால் ஏற்படும் ஸம்ஸர்க்கமானது காந்தர்வவிவாஹமென்று சொல்

லப்படுகிறபடியால், ப்ரக்ருதத்தில் ராமனுக்கும் ஸீதைக்கும் இதற்கு முன்பாக ஒரு ஸமயத்திலும் அனுராகம் (அன்பு) ஏற்பட ந்யாயமில்லாததைக்கொண்டு, ஸீதாராம விவாஹத்தை காந்தர்வ விவாஹகோடியிலும் சேர்க்கமுடியாது.

7. அவ்விதமே ராக்ஷஸ விவாஹமும் அல்ல.

हत्वा छित्वाच भित्वाह क्रोशन्तीं रुदतीं गृहात् ।
प्रसह्यकन्याहरणं राक्षसो विधिरुच्यते ॥

𑌹𑌤𑍍𑌵𑌾 𑌛𑌿𑌤𑍍𑌵𑌾𑌚 𑌭𑌿𑌤𑍍𑌵𑌾𑌚 𑌕𑍍𑌰𑍋𑌶𑌨𑍍𑌤𑍀𑌂 𑌰𑍁𑌦𑌤𑍀𑌂 𑌗𑍃𑌹𑌾𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌸𑌹𑍍𑌯𑌕𑌨𑍍𑌯𑌾𑌹𑌰𑌣𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍋 𑌵𑌿𑌧𑌿𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

ஹத்வா சித்வாச பித்வாச க்ரோசந்தீம் ருததீம் க்ருஹாத் ।
ப்ரஸஹ்ய கன்யாஹரணம் ராக்ஷஸோ விதிருச்யதே ॥

என்ற வசனத்தால் கல்யாணகாலத்தில் பெரிய போர் ஏற்பட்டு கன்னிகையினுடைய பந்துக்களை வதம் செய்து, பலாத்காரமாக கன்னிகையை அபஹரித்துக்கொண்டு போகிறதல்லவா ராக்ஷஸ விவாஹம் என்று தெரிகிறது. ஸீதாராம விவாஹத்திலேயோ, அவ்விதம் போர் ஒன்றும் ஏற்பட்டதாகத் தெரியாதபடியால், இதை ராக்ஷஸ விவாஹ கோடியிலும் சேர்க்கக்கூடாது.

8. அவ்விதமே பைசாச விவாஹமாகவும் ஆகாது.

सुप्तां मत्तां प्रमत्तां वा रहोवा यत्नगच्छति ।
सपापिष्ठो विवाहानां पैशाचश्चाष्टमोऽधमः ॥

𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂 𑌮𑌤𑍍𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑌾𑌂 𑌵𑌾 𑌰𑌹𑍋𑌵𑌾 𑌯𑌤𑍍𑌰𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌸𑌪𑌾𑌪𑌿𑌷𑍍𑌠𑍋 𑌵𑌿𑌵𑌾𑌹𑌾𑌨𑌾𑌂 𑌪𑍈𑌶𑌾𑌚𑌶𑍍𑌚𑌾𑌷𑍍𑌟𑌮𑍋𑌽𑌧𑌮𑌃 ॥

ஸுப்தாம் மத்தாம் ப்ரமத்தாம்வா ரஹோவா யத்ரகச்சதி ।
ஸபாபிஷ்டோ விவாஹாநாம் பைசாசச்சாஷ்டமோதம: ॥

என்ற வசனத்தால், கன்னிகை தூங்கும்போதோ, சித்த ஸ்வாதீனம் இல்லாமலிருக்கும்போதோ, பந்து ஜனங்களை

விட்டுப் பிரிந்திருக்கும்பொழுதோ, அக்கன்னிகையை திருடிக் கொண்டுபோய் கல்யாணம் செய்துகொள்வ தென்பது பைசாச விவாஹம் என்று சொல்லப்படுகிறபடியால் ஸீதா தேவியினிடத்தில் மேற்சொன்ன ஸந்தர்ப்பங்கள் ஒன்றும் ஏற்படாததைக்கொண்டு, ஸீதாராம விவாஹத்தை எட்டா வதான பைசாச விவாஹ கோடியிலும் சேர்க்கமுடியாது.

ஆகையால் ஸீதாராம விவாஹமானது ப்ராம்மாகவோ, தைவமாகவோ, ஆர்ஷமாகவோ, ப்ரஜாபத்யமாகவோ, ஆஸுரமாகவோ, காந்தர்வமாகவோ, ராக்ஷஸமாகவோ, பைசாசமாகவோ, உள்ள இந்த எட்டுவிதமான விவாஹங் களுக்குள் ஒன்றிலும் சேராததினுல் ஸீதாராம விவாஹம் எவ்விதம் சாஸ்த்ரஸம்மதமாக ஆகும் என்று சிலவாதிகள் ஆக்ஷேபிக்கிறதைக் கண்டித்து ஸீதாராம விவாஹமே, தர் மங்களுக்குள் சிறந்த தர்மமாக ஆகும் என்பதை ஸூசிப்பிப் பதற்காகத்தான் ஜனகமஹாராஜாவானவர் ஸீதாதேவியின் குணங்களை வர்ணிக்குங் காலத்தில், सहधर्मचरी तव (ஸஹதர்மசரீ தவ) (ஸஹதர்மசரீ தவ) தர்மத்தில் ரொம்பவும் ச்ரத்தையுள்ளவள் என்று ஸீதையை வர்ணித்தார். இந்த பதத்திற்கு அர்த்தம் முன்பாகவே நன்ருக எழுதப்பட்டிருக் கிறது.

ஆகிலும், அதை ஒருவேளை கவனிக்காமலிருப்பவர் களுக்கு மறுபடியும் சுருக்கமாக எழுதப்படுகிறது. "ராமா! நீ எந்த தர்மத்தை ஆசரிக்கிருயோ அதை தன்னுடைய தர்மமாக இந்த ஸீதையும் நினைத்து, உனக்கு ஸமான மான தர்மத்தை ஆசரிக்கும் விஷயத்தில் அதிக உத்ஸாஹ முடையவள். அதாவது, நீ தர்மத்தை ஆசரிக்கும் விஷ யத்தில், உனக்கு ரொம்பவும் அனுகூலமான களத்ரமாகும். நீங்களிருவர்களும் அக்னிஆதானம் செய்துகொண்டு, அக்னி ஹோத்ரம் முதலான ச்ரௌத கர்மாக்களை விடாமல் ஆத ரித்துக்கொண்டு வரவேண்டும்" என்றுதான் அந்த பதத் தின் கருத்தாகும். **ஸஹதர்மாசரணம்** என்பது ப்ராஜாபத்ய

விவாஹத்திற்கு முக்யமான அங்கமானதினுல் सहधर्मचरी तव (𑌸𑌹𑌧𑌰𑍍𑌮𑌚𑌰𑍀 𑌤𑌵) (ஸஹதர்மசரீ தவ) என்றபதத்தினுல் ஸீதாராம விவாஹத்தில் ஸஹதர்மாசரணம் என்ற ப்ராஜாபத்ய விவாஹத்தின் முக்யமான அங்கத்தை குறிப்பிட்டிருப்பதை முன்னிட்டு ஸீதாராம விவாஹமானது ப்ராஜாபத்யம் என்ற விவாஹ கோடியில் சேர்ந்ததென்பது வெளியாகிறது. ஆகையால் ஸீதாராம விவாஹம்தான் ரொம்பவும் சாஸ்த்ர ஸம்மதமாக ஆகும். ப்ராஜாபத்ய விவாஹத்திற்கு ஸஹதர்மாசரணம் அங்கம் என்பதிலோ,

सहधर्मं चरतः ॥ इति प्राजापत्यः ॥

𑌸𑌹𑌧𑌰𑍍𑌮𑌂 𑌚𑌰𑌤𑌃 ॥ 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌃 ॥

ஸஹதர்மம் சரத: ॥ இதி ப்ராஜாபத்ய: ॥

என்ற ஆச்வலாயனக்ருஹ்ய ஸூத்ரமும்,

संयोगमन्त्रः प्राजापत्ये सहधर्मं चर्यतां

𑌸𑌂𑌯𑍋𑌗𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑍇 𑌸𑌹𑌧𑌰𑍍𑌮𑌂 𑌚𑌰𑍍𑌯𑌤𑌾𑌂

ஸம்யோகமந்த்ர: ப்ராஜாபத்யே ஸஹதர்மம் சர்யதாம்

என்ற கௌதமக்ருஹ்ய ஸூத்ரமும்,

आच्छाद्य अलंकृत्य एषा सहधर्मं चर्यतां इति प्राजापत्यः

𑌆𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌯 𑌅𑌲𑌂𑌕𑍃𑌤𑍍𑌯 𑌏𑌷𑌾 𑌸𑌹𑌧𑌰𑍍𑌮𑌂 𑌚𑌰𑍍𑌯𑌤𑌾𑌂 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌃

ஆச்சாத்ய அலங்க்ருத்ய ஏஷா ஸஹதர்மம் சர்யதாம் இதி ப்ராஜாபத்ய:

என்ற போதாயன ஸூத்ரமும்,

सहोभौ चरतां धर्मं इति वाचानुभाष्यच

𑌸𑌹𑍋𑌭𑍌 𑌚𑌰𑌤𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌇𑌤𑌿 𑌵𑌾𑌚𑌾𑌨𑍁𑌭𑌾𑌷𑍍𑌯𑌚

ஸஹோபௌ சரதாம் தர்மம் இதி வாசாநுபாஷ்யச

என்ற மனுஸ்ம்ருதியும், இதுபோல் இன்னும் அநேக வாக்யங்களும் ப்ரமாணமாகும். ஆகையால் ஸீதாராம விவாஹம்

ப்ராஜாபத்ய விவாஹமானதினால் சாஸ்த்ரஸம்மதந்தான் என்று அறியவேண்டும்.

ஸ்ரீ ஸீதாராம விவாஹமானது, முன் சொன்ன எட்டுவித மான விவாஹங்களுக்குள் 'ப்ராஜாபத்யம்' என்ற விவாஹத்தில் சேர்ந்ததாக முன் சொல்லப்பட்டது. ஸ்ரீராமனோ, க்ஷத்ரியனானதினால், க்ஷத்ரியனுக்கு ப்ராஜாபத்ய விவாஹத்தை கூடாது என்று சொல்லியிருப்பதினால் ஸீதாராம விவாஹத்தை, ப்ராஜாபத்ய விவாஹத்தில் எப்படி சேர்க்கலாம்? க்ஷத்ரியனுக்கு ப்ராஜாபத்ய விவாஹம் கூடாது என்றதிலோ,

षडानुपूर्व्या विप्रस्य क्षत्रस्य चतुरोऽवरान् ।
विट्शूद्रयोस्तु तानेव विद्यात् धर्म्यान् अराक्षसान् ॥
चतुरो ब्राह्मणस्याद्यान् प्रशस्तान् कवयोविदुः ।
राक्षसं क्षत्रियस्यैक आसुरं वैश्यशूद्रयोः ॥

𑌷𑌡𑌾𑌨𑍁𑌪𑍂𑌰𑍍𑌵𑍍𑌯𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌚𑌤𑍁𑌰𑍋𑌽𑌵𑌰𑌾𑌨𑍍 ।
𑌵𑌿𑌟𑍍𑌶𑍂𑌦𑍍𑌰𑌯𑍋𑌸𑍍𑌤𑍁 𑌤𑌾𑌨𑍇𑌵 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌨𑍍
𑌅𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑍍 ॥
𑌚𑌤𑍁𑌰𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌾𑌨𑍍 𑌕𑌵𑌯𑍋𑌵𑌿𑌦𑍁𑌃 ।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯𑍈𑌕𑌂 𑌆𑌸𑍁𑌰𑌂 𑌵𑍈𑌶𑍍𑌯
𑌶𑍂𑌦𑍍𑌰𑌯𑍋𑌃 ॥

ஷடாநுபூர்வ்யா விப்ரஸ்ய க்ஷத்ரஸ்ய சதுரோவராந் ।
விட்சூத்ரயோஸ்து தாநேவ வித்யாத் தர்ம்யாந் அராக்ஷஸாந் ॥
சதுரோ ப்ராம்மணஸ்யாத்யாந் ப்ரசஸ்தாந் கவயோவிது: ।
ராக்ஷஸம் க்ஷத்ரியஸ்யைகம் ஆஸுரம் வைச்ய சூத்ரயோ: ॥

என்ற சாஸ்த்ரங்களே ப்ரமாண வசனங்களாகும்.

இந்த சாஸ்த்ரத்தின் தாத்பர்யமோ: ப்ராம்மண ஜாதிக்கு ப்ராம்மம், தைவம், ஆர்ஷம், ஆஸுரம், ப்ராஜாபத்யம், காந்தர்வம் என்ற ஆறுவிதமான விவாஹமும்; க்ஷத்ரிய ஜாதிக்கு ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம் என்ற நான்குவிதமான விவாஹங்களும்; வைச்யன்,

சூத்ரன் இவ்விரு ஜாதியார்களுக்கும் ஆஸுரம், காந்தர்வம் பைசாசம் என்ற மூன்று விதமான விவாஹமுந்தான் செய்துகொள்ளவேண்டும், என்று மேற்சொன்ன சாஸ்த்ரத்தின் பொருளாகும். தவிரவும்,

तेषां चत्वारः पूर्वे ब्राह्मणस्य तेष्वपि पूर्वःपूर्वः श्रेयान् उत्तरेषां उत्तरोत्तरः पापीयान्। अत्रापि षष्ठसप्तमौ क्षत्रधर्मानुगतौ। तत्प्रत्ययत्वात् क्षत्रियस्य, पञ्चमाष्टमौ वैश्यशूद्राणां। अयंत्रितकळत्राहि वैश्यशूद्राभवन्ति। गान्धर्वमपि एके प्रशंसन्ति सर्वेषां स्नेहानुगतत्वात्।

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌤𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌃𑌪𑍂𑌰𑍍𑌵𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍 𑌉𑌤𑍍𑌤𑌰𑍇𑌷𑌾𑌂 𑌉𑌤𑍍𑌤𑌰𑍋𑌤𑍍𑌤𑌰𑌃 𑌪𑌾𑌪𑍀𑌯𑌾𑌨𑍍। 𑌅𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌷𑌷𑍍𑌠𑌸𑌪𑍍𑌤𑌮𑍌 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌗𑌤𑍌। 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯, 𑌪𑌞𑍍𑌚𑌮𑌾𑌷𑍍𑌟𑌮𑍌 𑌵𑍈𑌶𑍍𑌯𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂। 𑌅𑌯𑌂𑌤𑍍𑌰𑌿𑌤𑌕𑌳𑌤𑍍𑌰𑌾𑌹𑌿 𑌵𑍈𑌶𑍍𑌯𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌭𑌵𑌨𑍍𑌤𑌿। 𑌗𑌾𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌮𑌪𑌿 𑌏𑌕𑍇 𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌸𑍍𑌨𑍇𑌹𑌾𑌨𑍁𑌗𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍।

தேஷாம் சத்வார: பூர்வே ப்ராம்மணஸ்ய தேஷ்வபி பூர்வ:பூர்வ: ச்ரேயாந் உத்தரேஷாம் உத்தரோத்தர: பாபீயாந் । அத்ராபி ஷஷ்டஸப்தமௌ க்ஷத்ரதர்மானுகதௌ । தத்ப்ரத்யயத்வாத் க்ஷத்ரியஸ்ய, பஞ்சமாஷ்டமௌ வைச்யசூத்ராணும் । அயந்த்ரிதகளத்ராஹி வைச்ய சூத்ரா பவந்தி । காந்தர்வமபி ஏகே ப்ரசம்ஸந்தி ஸர்வேஷாம் ஸ்நேஹாநுகதத்வாத்।

என்ற போதாயன ஸூத்ரத்தாலும் ப்ராம்மணனுக்கு ப்ராம்மம், ப்ராஜாபத்யம், ஆர்ஷம், தைவம் என்ற நான்கு விதமான விவாஹமும், அந்த நான்குகளிலும், முன் உள்ளது மேலானது என்றும், க்ஷத்ரிய ஜாதிக்கு காந்தர்வம், ராக்ஷஸம் என்று இரண்டுவிதமான விவாஹந்தான் உள்ளதென்றும், வைச்யனுக்கும், சூத்ரனுக்கும் ஆஸுரம், பைசாசம் என்ற இரண்டுவிதமான விவாஹமும், அல்லது எல்லா வர்ணங்களிலும் பரஸ்பரம் ஸ்நேஹத்தை முன்னிட்டு காந்தர்வ விவாஹம் கூடுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சாஸ்த்ரங்களை பர்யாலோசனை செய்து பார்த்தால்,

ப்ராஜாபத்ய விவாஹத்தில், க்ஷத்ரியனுக்கு அதிகாரமில்லை என்று நிச்சயமாகத் தெரிகிறது.

அப்படி இருக்கும்பொழுது க்ஷத்ரியனை ஸ்ரீராமனுக்கு, ஸீதாவிவாஹத்தை ப்ராஜாபத்ய விவாஹமென்று सहधर्मचरीतव (𑌸𑌹𑌧𑌰𑍍𑌮𑌚𑌰𑍀𑌤𑌵) (ஸஹதர்மசரீதவ) என்ற வாக்யத்தால் வால்மீகி மஹர்ஷியானவர் சொல்லியிருக்கிறார் என்று சொன்னது எப்படி ஸரியாகும். ப்ராஜாபத்ய விவாஹத்தில்தான் க்ஷத்ரியனுக்கு அதிகாரம் இல்லையே. ஆகையால் ஸீதா ராம விவாஹமானது ப்ராம்மம், தைவம், ஆர்ஷம், ப்ராஜாபத்யம், ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம் என்று சொல்லப்பட்ட எட்டுவிதமான விவாஹங்களுக்குள் ஒன்றிலும் சேர்க்கமுடியாமலிருப்பதினால், ஸீதாராம விவாஹமானது சாஸ்த்ர ஸம்மதமில்லாததாகத்தான் ஆகும் என்றும், சில வாதிகள் ஸந்தேஹிக்கலாம். அதற்கு ஸமாதானமோ அடியில்கண்டவாறு அறியவும்.

அதாவது :—

पञ्चानांतु त्रयोधर्म्याः द्वौवाऽधर्म्यौ स्मृताविह ।
पैशाशश्चासुरश्चैव नकर्त्तव्यौकथंचन ॥

𑌪𑌞𑍍𑌚𑌾𑌨𑌾𑌂𑌤𑍁 𑌤𑍍𑌰𑌯𑍋𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌃 𑌦𑍍𑌵𑍌𑌵𑌾𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑍌 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌵𑌿𑌹 ।
𑌪𑍈𑌶𑌾𑌚𑌶𑍍𑌚𑌾𑌸𑍁𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌨𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑍌𑌕𑌥𑌂𑌚𑌨 ॥

பஞ்சாநாந்து த்ரயோதர்ம்யா: த்வௌவாதர்ம்யௌ ஸ்ம்ருதாவிஹ ।
பைசாசச்சாஸுரச்சைவ நகர்த்தவ்யௌ கதஞ்சன ॥

என்ற மனுஸ்ம்ருதிவாக்யத்தால் க்ஷத்ரியனுக்கும் ப்ராஜாபத்ய விவாஹத்தில் அதிகாரம் உண்டென்று தெரிகிறது. அந்த மனு ஸ்ம்ருதி வசனத்தின் அர்த்தமாவது : ஐந்துகளான (அதாவது ப்ராஜாபத்யம், ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம்) விவாஹங்களுக்குள் ப்ராஜாபத்யம், ராக்ஷஸம், காந்தர்வம் என்ற மூன்று விவாஹங்கள் சாஸ்த்ர ஸம்மதமானது. தர்மத்திற்கும் விரோதமில்லாதது. ஆஸுரம், பைசாசம் என்ற இரண்டும் சாஸ்த்ரஸம்மதமில்லாதது.

தர்மத்திற்கும் விரோதமுள்ளது. ப்ராம்மணன், க்ஷத்ரியன், என்ற இரண்டு ஜாதியாருக்கும் ஆஸுரம், பைசாசம் என்ற விவாஹம் கிடையாது. வைச்ய, சூத்ர, இருஜாதிகளுக்குத்தான் அவ்விரண்டும் உண்டு. அந்த இரண்டு ஜாதிகளுக்கும் அந்த ஆஸுரம், பைசாசம் என்று இரண்டு விவாஹங்களையும் செய்தாலும் செய்யலாம், செய்யாதபோனுலும் நல்லதுதான் என்றும் விகல்பமாகத்தான் சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ராஜாபத்யம், காந்தர்வம், ராக்ஷஸம், என்ற மூன்றுவிதமான விவாஹங்களில் ப்ராம்மணன், க்ஷத்ரியன், வைச்யன் என்ற மூன்று வர்ணங்களுக்கும் பொதுவாக அதிகாரம் உண்டு என்று மேற்சொன்ன மனுஸ்ம்ருதியின் அபிப்ராயமானது வெளியாகிறது. ராகவாநந்தீயம் என்ற க்ரந்தத்திலோ, ब्राह्मादि ब्राह्मणस्यैव (ப்ராஹ்மாதி ப்ராஹ்மணஸ்யைவ) (ப்ராஹ்மாதி ப்ராஹ்மணஸ்யைவ) என்று வர்ணங்களைப் பிரித்துக்கொண்டு, இன்னின்ன வர்ணத்தில் பிறந்தவனுக்கு இவ்விதமான விவாஹம்தான் என்று விதித்துவிட்டு, அப்படி விதிக்கப்பட்ட விவாஹத்தைச் செய்யமுடியாதபோனுல், எல்லா வர்ணத்தில் பிறந்தவனுக்கும் ப்ராஜாபத்யம், காந்தர்வம், ராக்ஷஸம், என்ற மூன்றுவிதமான விவாஹங்களும் சாஸ்த்ர ஸம்மதம்தான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சாஸ்த்ரங்களை பர்யாலோசனை செய்தால், க்ஷத்ரியனுக்கும் ப்ராஜாபத்ய விவாஹத்தில் அதிகாரம் உண்டு என்றுதான் தெரியும்.

அத்துடன் எட்டுவிதமான விவாஹத்தை சொல்லிவிட்டு, चत्वारोधर्म्याः प्रथमाः षडित्येके (சத்வாரோ தர்ம்யா: ப்ரதமா: ஷடித்யேகே) (சத்வாரோ தர்ம்யா: ப்ரதமா: ஷடித்யேகே) என்ற கௌதம ஸூத்ரத்தால் வர்ணங்களுடைய வேற்றுமையை எதிர்பார்க்காமலே எல்லா ஜாதிக்காரர்களுக்கும் பொதுவாக ப்ராம்மம், தைவம், ஆர்ஷம், ப்ராஜாபத்யம் என்று நான்குவிதமான விவாஹமோ அல்லது ப்ராம்மம், தைவம், ஆர்ஷம், ப்ராஜாபத்யம், காந்தர்வம், ராக்ஷஸம் என்று ஆறுவிதமான விவாஹமோ, சாஸ்த்ர ஸம்மதமாகத்தான் ஆகும்

என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதனாலும் க்ஷத்ரியனுக்கு ப்ராஜாபத்ய விவாஹத்தில் அதிகாரம் உண்டு என்றுதான் வெளியாகிறது. ஆபஸ்தம்ப ஸூத்ரத்திலும் तेषां त्रयः आद्याः प्रशस्ताः पूर्व पूर्वः श्रेयान् (𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍍𑌰𑌯𑌃 𑌆𑌦𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌾𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍) (தேஷாம் த்ரய: ஆத்யா: ப்ரசஸ்தா: பூர்வ பூர்வ: ச்ரேயாந்) என்று வர்ணங்களைப் பிரிக்காமலே ப்ராஜாபத்யம், ராக்ஷஸம், காந்தர்வம் என்ற மூன்றுவிதமான விவாஹங்கள் எல்லா வர்ணத்தில் பிறந்தவர்களுக்கும் ஸமானந்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ஸ்ரீராமன் க்ஷத்ரியனாயிருந்தாலும், க்ஷத்ரியனுக்கு ப்ராஜாபத்ய விவாஹத்தில் அதிகாரமிருப்பதால், ஸீதாராம விவாஹமானது ப்ராஜாபத்யமென்ற உத்தமமான விவாஹத்தில் சேர்ந்ததென்று सहधर्मचरी तव (𑌸𑌹𑌧𑌰𑍍𑌮𑌚𑌰𑍀 𑌤𑌵) (ஸஹதாமசரீ தவ) என்ற வாக்யத்தால் தெரிகிறபடியால் ஸீதாராம விவாஹமானது சாஸ்த்ர ஸம்மதந்தான்.

ஆனால், க்ஷத்ரியனுக்கு ராக்ஷஸ விவாஹத்தை ரொம்பவும் ப்ரசஸ்தமாகச் சொல்லியிருப்பதினால், அப்படி ப்ரசஸ்தமான ராக்ஷஸ விவாஹத்தை விட்டுவிட்டு, ப்ராஜாபத்ய விவாஹத்தை ஸ்ரீராமபிரான் எவ்விதம் செய்துகொண்டார்? தன் வர்ணத்திற்கு மேலானதாகச் சொல்லியிருக்கிற ராக்ஷஸ விவாஹத்தை விடலாமா! என்றும் கேட்கலாம். ஆகிலும் ஸ்ரீராமபிரான் கருணாமூர்த்தியானதினால்,

हत्वाछित्वाच भित्वाच क्रोशन्तीं रुदतींगृहात् ।
प्रसह्यकन्याहरणं राक्षसः विधिः उच्यते ॥

𑌹𑌤𑍍𑌵𑌾 𑌛𑌿𑌤𑍍𑌵𑌾𑌚 𑌭𑌿𑌤𑍍𑌵𑌾𑌚 𑌕𑍍𑌰𑍋𑌶𑌨𑍍𑌤𑍀𑌂 𑌰𑍁𑌦𑌤𑍀𑌂𑌗𑍃𑌹𑌾𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌸𑌹𑍍𑌯𑌕𑌨𑍍𑌯𑌾𑌹𑌰𑌣𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌃 𑌵𑌿𑌧𑌿𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

ஹத்வா சித்வாச பித்வாச க்ரோசந்தீம் ருததீம் க்ருஹாத் ।
ப்ரஸஹ்ய கந்யாஹரணம் ராக்ஷஸ: விதி: உச்யதே ॥

என்ற ராக்ஷஸ விவாஹத்தை மிகவும் கொடூரமாகச் சொல்லியிருப்பதினால் ராமனுடைய கருணைக்கும், அந்த கொடூர

மான விவாஹத்திற்கும் ஒத்துவராததைக்கண்டு ஸ்ரீராமன் ராக்ஷஸ விவாஹத்தை விட்டுவிட்டு, ப்ராஜாபத்ய விவாஹத்தை அவலம்பித்தார். ஸ்ரீராமபிரான் கருணாமூர்த்தி என்றதிலோ, ஸ்ரீமத் ராமாயணமே முதன்மையான ப்ரமாணமாகும். ராமாயணத்தில் யுத்த காண்டத்தில் இந்த்ரஜித் தானவன் தனது ஸாமர்த்யத்தால், சரவர்ஷமாக வர்ஷித்து, வானர சேனைகளை ஹிம்ஸித்த காலத்தில், லக்ஷ்மண ஸ்வாமிக்கு கோபம் மேலிட்டு, ப்ரம்மாஸ்த்ர ப்ரயோகத்தால் ஸகல ராக்ஷஸர்களையும் வதம் செய்துவிடுவதாக தான் ப்ரதிக்ஞை செய்தார்.

ब्राह्मं अस्त्रं प्रयोक्ष्यामि वधार्थं सर्वरक्षसां

ப்ராஹ்மம் அஸ்த்ரம் ப்ரயோக்ஷ்யாமி வதார்த்தம் ஸர்வரக்ஷஸாம்

ப்ராஹ்மம் அஸ்த்ரம் ப்ரயோக்ஷ்யாமி வதார்தம் ஸர்வரக்ஷஸாம்

என்ற லக்ஷ்மணஸ்வாமியினுடைய ப்ரதிக்ஞையைக் காட்டும் ச்லோகத்தையும் யுத்த காண்டத்தில் பார்க்கலாம். அவ்விதம் கோபத்தை அடைந்த லக்ஷ்மணனுக்கு ஸ்ரீராமபிரான் பதில் சொன்னதோ, அப்பா லக்ஷ்மணா !

नैकस्यहेतोः रक्षांसि पृथिव्यां हन्तुमर्हसि

நைகஸ்யஹேதோ: ரக்ஷாம்ஸி ப்ருதிவ்யாம் ஹந்துமர்ஹஸி

நைகஸ்யஹேதோ: ரக்ஷாம்ஸி ப்ருதிவ்யாம் ஹந்துமர்ஹஸி

என்ற வாக்யத்தால், 'என்ன லக்ஷ்மணா! இந்த்ரஜித் ஒருவன் பாபி என்றதற்காக எல்லா ராக்ஷஸர்களையும் கொல்லலாமா?' என்று சொல்லி, ஸகல ராக்ஷஸர்களையும் நாசம் செய்யும்படியான கோபத்தை அடைந்த லக்ஷ்மணனை ஸமாதானம் செய்து ப்ரம்மாஸ்த்ர ப்ரயோகம் செய்யாமலிருக்கும்படி உபதேசித்தார். இந்த ஒரு உதாஹரணம் போதாதா? ஸ்ரீராமன் பரம கருணாமூர்த்திதான். தன் கருணைக்கு கொடூரமான ராக்ஷஸ விவாஹம் இணங்காதது என்று நினைத்து ப்ராஜாபத்ய விவாஹ விதியை அனுஸ

ரித்து ஸீதாபிராட்டியை ஸ்ரீராமபிரான் விவாஹம் செய்து கொண்டார். அதனுல் ஸீதாராம விவாஹம் ரொம்பவும் சாஸ்த்ர ஸம்மதம்தான் என்பதில் யாதொருவிதமான ஆக்ஷே பணேக்கும் இடமில்லே.

தவிரவும், वीर्यशुल्कां ममसुतां सीता सुरसुतोपमां (𑌵𑍀𑌯𑌶𑍁𑌲𑍍𑌕𑌾𑌂 𑌮𑌮 𑌸𑍁𑌤𑌾𑌂 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌸𑍁𑌰𑌸𑍁𑌤𑍋𑌪𑌮𑌾𑌂) (வீர்யசுல்காம் மம ஸுதாம் ஸீதாம் ஸுரஸுதோபமாம்) என்று ஜனக மஹாராஜா வானவர் சொன்ன வார்த்தையிலிருந்து வீர்யத்தை (பராக்ரமத்தை) ஸீதைக்கு க்ரயமாக வாங்கிக்கொண்டு, ஸீதையை விலேக்கு விற்றதுபோல் ராமனுக்கு ஸீதையைக் கொடுத்த தாகத் தெரிகிறதே? அந்த விவாஹம் சாஸ்த்ரத்தில்கூடாது என்றுதானே தள்ளப்பட்டிருக்கிறது? வரனுடைய (மாப்பிள்ளே) பந்துக்களிடமிருந்தோ அல்லது நேரில் மாப்பிள்ளே யிடமிருந்தோ, ஒன்றையும் கன்னிகைக்கு பிதாவானவன் எதிர்பார்க்கக்கூடாது. அப்படி எதிர்பார்த்து தன் பெண் ணேக் கொடுத்தானேயானுல், அந்த கன்யாபிதாவானவன் சந்தையில் மாடு விற்பவன்போல், பெண்ணே விற்பவனுக ஆகிருன். அவன் மஹாபாபி என்றும் மனுவானவர் நிந் தித்திருக்கிருர். அந்த வசனமோ,

नकन्यायाः पिता विद्वान् गृह्णीयात् शुल्कमण्वपि ।
गृण्हन् शुल्कंहिलोभेन, स्यान्नरः अपत्यविक्रयी ॥

𑌨𑌕𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌃 𑌪𑌿𑌤𑌾 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍 𑌶𑍁𑌲𑍍𑌕𑌮𑌣𑍍𑌵𑌪𑌿 ।
𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍 𑌶𑍁𑌲𑍍𑌕𑌂𑌹𑌿 𑌲𑍋𑌭𑍇𑌨, 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌰𑌃 𑌅𑌪𑌤𑍍𑌯𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑍀 ॥

நகன்யாயா: பிதாவித்வாந் க்ருஹ்ணீயாத் சுல்கமண்வபி ।
க்ருண்ஹந் சுல்கம்ஹி லோபேந, ஸ்யாந்நர: அபத்யவிக்ரயீ ॥

என்ற ச்லோகமேதான் ஆகும். கன்னிகைக்கு பதிலாக ஏதாவது வரனிடமிருந்து (மாப்பிள்ளே) எதிர்பார்த்து கன்னிகையை கொடுக்கக்கூடாது என்று இந்த ச்லோகத் தின் பொருளாகும். போதாயனரும்,

शुल्केन येप्रयच्छन्ति स्वसुतां लोभमोहिताः ।
आत्मविक्रयिणः पापाः महाकिल्बिषकारकाः ।
पतन्तिनरके घोरे घ्नन्तिचासप्तमं कुलं ॥

𑌶𑍁𑌲𑍍𑌕𑍇𑌨 𑌯𑍇𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌵𑌸𑍁𑌤𑌾𑌂 𑌲𑍋𑌭𑌮𑍋𑌹𑌿𑌤𑌾𑌃 ।
𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑌿𑌣𑌃 𑌪𑌾𑌪𑌾𑌃 𑌮𑌹𑌾𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌕𑌾𑌰𑌕𑌾𑌃 ।
𑌪𑌤𑌨𑍍𑌤𑌿𑌨𑌰𑌕𑍇 𑌘𑍋𑌰𑍇 𑌘𑍍𑌨𑌨𑍍𑌤𑌿𑌚𑌾𑌸𑌪𑍍𑌤𑌮𑌂 𑌕𑍁𑌲𑌂 ॥

சுல்கேந யே ப்ரயச்சந்தி ஸ்வஸுதாம் லோபமோஹிதா: ।
ஆத்மவிக்ரயிண: பாபா: மஹாகில்பிஷகாரகா: ।
பதந்தி நரகேகோரே க்நந்திசாஸப்தமம் குலம் ॥

என்று சொல்லியிருக்கிருர். கன்னிகையின் பிதாவானவன் மாப்பிள்ளையினுடைய வீட்டிலிருந்து ஏதாவது ஒன்றை வாங்கிக்கொண்டு, தன் பெண்ணை அந்த மாப்பிள்ளைக்குக் கல்யாணம் செய்துகொடுத்தால், அவன் தன் ஆத்மாவை விற்ற பாபியாக ஆகிருன். அவனுக்கு நரகத்தில்தான் வாஸம். ஏழு தலைமுறை அப்பாபத்தால் தன் வம்சத்தில் குழந்தை யில்லாமல் செய்து குலத்தை அழிக்கிருன் என்று அந்த போதாயன ஸ்ம்ருதியினுடைய பொருளாகும். காச்யபரும்,

क्रयक्रीतातुयानारी नसापत्न्यभिधीयते ।
नसादैवेन सावित्र्ये दासीन्तां काश्यपोऽब्रवीत् ॥

𑌕𑍍𑌰𑌯𑌕𑍍𑌰𑍀𑌤𑌾𑌤𑍁𑌯𑌾𑌨𑌾𑌰𑍀 𑌨𑌸𑌾𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌨𑌸𑌾𑌦𑍈𑌵𑍇𑌨 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑍇 𑌦𑌾𑌸𑍀𑌨𑍍𑌤𑌾𑌂 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑍋
𑌅𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥

க்ரயக்ரீதாதுயாநாரீ நஸாபத்னீ அபிதீயதே ।
நஸாதைவேந ஸாவித்ர்யே தாஸீந்தாம் காச்யபோப்ரவீத் ॥

என்று சொல்லியிருக்கிருர். அதை விசாரித்தாலும், ராமனுடைய வீர்யத்தை தான் எதிர்பார்த்து, ஜனகர் ஸீதையை ராமருக்கு கல்யாணம் செய்துகொடுத்தது தப்பென்று

தெரிகிறது. ஆகையால் ஸீதை வீர்யசுல்கை என்று தெரிகிறப்படியால் அந்த ஸீதா விவாஹமானது எப்படி சாஸ்த்ர ஸம்மதமாகும் என்றும் சிலர்கள் வாதிப்பார்கள். அதற்கு ஸமாதானம் அடியிற்கண்டவாறு அறியவும். அதாவது,

विद्ययाब्राह्मणः श्रेष्ठः वीर्येणक्षत्रियः स्मृतः ।
वैश्यस्तु धान्यधनतः शूद्रश्चैवतु जन्मतः ॥

𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌵𑍀𑌰𑍍𑌯𑍇𑌣𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌧𑌾𑌨𑍍𑌯𑌧𑌨𑌤𑌃 𑌶𑍂𑌦𑍍𑌰𑌶𑍍𑌚𑍈𑌵𑌤𑍁 𑌜𑌨𑍍𑌮𑌤𑌃 ॥

வித்யயாப்ராம்மண: ச்ரேஷ்ட: வீர்யேண க்ஷத்ரிய: ஸ்ம்ருத: ।
வைச்யஸ்துதான்யதனத: சூத்ரச்சைவது ஜன்மத: ॥

என்ற சாஸ்த்ரத்தால் ப்ராம்மணனுக்கு ஞானத்தால் மேன்மையும், க்ஷத்ரியனுக்கு வீர்யத்தால் மேன்மையும், வைச்யனுக்கு பணத்தால் மேன்மையும், சூத்ரனுக்கு வயதினால் மேன்மையும் தெரிகிறது. கன்யாதானத்திற்கோ உத்க்ருஷ்டமான வரனைத் தேடவேண்டுமென்று விதித்திருக்கிறது. उत्कृष्टायवराय कन्यां दद्यात् (𑌉𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌾𑌯𑌵𑌰𑌾𑌯 𑌕𑌨𑍍𑌯𑌾𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍) (உத்க்ருஷ்டாய வராய கந்யாம் தத்யாத்) என்ற சாஸ்த்ரத்தால் வரன் என்று சொல்லப்படுகிற மாப்பிள்ளையை அவன் ஜாதிக்கு எதனால் மேன்மை வேண்டுமோ, அது இருக்கிறதா என்றதைப் பார்த்து பரிசோதிக்கவேண்டும்.

ப்ரக்ருதத்திலோ ராமபிரான் க்ஷத்ரியன். க்ஷத்ரியனுக்கோ வீர்யத்தால்தான் மேன்மை என்று சொல்லப்பட்டிருக்கிறது அந்த வீர்யமென்ற பராக்ரமமானது ராமனிடத்தில் இருந்தாலல்லவா ராமனவன் உத்க்ருஷ்டவரனாக ஆகமுடியும். அந்த ப்ரகாரம் ராமனுக்கு இருக்கிறதா என்பதைப் பரீக்ஷிக்க ஜனகமஹாராஜாவானவர் ஸீதாதேவியை வீர்ய சுல்கை என்று வைத்து ராமனை வில்லைமுறிக்கும்படி செய்தார். இதனால் ராமனிடமிருந்து அவர் பொருளை வாங்கிக்கொண்டு ஸீதையைக் கொடுத்தார் என்று ஆகுமோ? கன்

னிகையினுடைய தகப்பன் தன் குடும்பத்தின் ஜீவனநிமித்த மாகவோ, பெண் கல்யாணத்திற்கு செலவு செய்வதற்குக்கூட பணம் இல்லாத காரணத்தாலோ, மாப்பிள்ளையினிடமிருந்து பணம் வாங்கிக்கொண்டுதான், தன் பெண்ணைக் கொடுக்கி றது என்ற எண்ணத்துடன், பணத்தை வாங்கிக்கொண்டு பெண்ணைக் கொடுக்கிறதுதான் சாஸ்த்ரத்தில் நிஷித்தம் ஆகுமன்னியில், பராக்ரமத்தை பரீக்ஷித்துக்கொண்டு பெண் ணைக் கொடுத்ததற்காக அது நிஷித்தமான விவாஹமாகாது.

அத்யயனம் செய்த ப்ராம்மணனுக்குத்தான் ப்ராம்மண கன்னிகையை விவாஹம் செய்து கொடுக்கவேண்டு மென்று சொல்லியிருக்கிறது. அவன் அத்யயனம் செய் திருக்கிறுனு இல்லையா என்பதை பரீக்ஷிக்க ஒரு பஞ்சா தியை (வேத வாக்யம்) சொல் என்று சொன்னுல் மாப் பிள்ளையினிடமிருந்து ப்ரதிப்ரயோஜனத்தை எதிர்பார்த்து பெண்ணைக்கொடுத்ததாகவா ஆகும்? அவ்விதமாகாது பிள்ளையினுடைய குடும்பத்திலிருந்து பணங்களையோ, பூமி களையோ, வஸ்த்ரங்களையோ, நகைகளையோ, பெண்ணிற் குப் பதிலாக மற்ெருரு பெண்ணையோ, எதிர்பார்த்து தன் கன்னிகையை விவாஹம் செய்து கொடுப்பதைத்தான் சாஸ்த்ரத்தில் நிஷேதம் செய்திருக்கிறது. ராமனிடம், ஜனகமஹாராஜா அப்படி ஒன்றையும் எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. ஆகையால் ஸீதாராம விவாஹமானது சாஸ்த்ர ஸம்மதம்தான். அதிலும், ப்ராஜாபத்ய விவாஹ மாகும். ப்ராஜாபாத்ய விவாஹம்தான் மஹாபலத்தைக் கொடுக்கக்கூடியது என்று சொல்லியிருக்கிறது. ப்ராஜா பத்ய விவாஹ விதியை அனுஸரித்து கல்யாணம் செய்யப் பட்ட ஸ்த்ரீயினிடத்தில் பிறந்த குழந்தை 21 தலை முறை குலத்தை ரக்ஷிக்கிறுன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆச்வலாயனமஹர்ஷியோ.

सहधर्मंचरत इति प्राजापत्यः तस्यांजातः

अष्टावरान् पुनातिउभयतः इति ॥

𑌸𑌹𑌧𑌰𑍍𑌮𑌂𑌚𑌰𑌤 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌃 𑌤𑌸𑍍𑌯𑌾𑌂𑌜𑌾𑌤𑌃
𑌅𑌷𑍍𑌟𑌾𑌵𑌰𑌾𑌨𑍍 𑌪𑍁𑌨𑌾𑌤𑌿𑌉𑌭𑌯𑌤𑌃 𑌇𑌤𑌿 ॥

ஸஹதர்மசரத இதி ப்ராஜாபத்ய: தஸ்யாம்ஜாத:
அஷ்டாவராந் புநாதிஉபயத: இதி ॥

என்ற ஸூத்ரத்தால் ப்ராஜாபத்ய விவாஹத்தை ரொம்பவும் மேலானதாகச் சொல்லியிருக்கிறார். दशैवप्राजापत्यात् (𑌦𑌶𑍈𑌵𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌾𑌤𑍍) (தசைவப்ராஜாபத்யாத்) என்று கௌதமரும் ப்ராஜாபத்ய விவாஹத்தை மேலானதாக வர்ணித்திருக்கிறார். அந்த ப்ராஜாபத்ய விவாஹத்தைத்தான் ஸூசிப்பிக்கிறது, सहधर्मचरीतव (𑌸𑌹𑌧𑌰𑍍𑌮𑌚𑌰𑍀𑌤𑌵) (ஸஹதர்மசரீதவ) என்ற பதமானது. ஆகையால், ஸீதாராம விவாஹமானது, சாஸ்த்ரத்திற்கு ரொம்பவும் ஒத்ததானதினால், உத்க்ருஷ்டமான விவாஹமாகும்.

முன் சொன்னபடி, ஸ்ரீஸீதாராம விவாஹமானது, ப்ராஜாபத்ய விவாஹத்தில் சேர்ந்ததினால் சாஸ்த்ர ஸம்மதமானதென்றும், அத்துடன், ஸீதாதேவியினிடம் ஸௌந்தர்யம், ஆபிஜாத்யம், தர்மாசரணசீலத்வம், முதலான கல்யாண குணங்களும் குடியிருந்துவருவதாகவும் அறியவும். இவ்விதமான மஹிமையுடன் கூடினவளான ஸீதாதேவியை ஜனக மஹாராஜாவானவர், ஸ்ரீராமனுக்கு எதிரில் इयं सीता ममसुता सहधर्मचरी तव (𑌇𑌯𑌂 𑌸𑍀𑌤𑌾 𑌮𑌮𑌸𑍁𑌤𑌾 𑌸𑌹𑌧𑌰𑍍𑌮𑌚𑌰𑍀 𑌤𑌵) (இயம் ஸீதா மமஸுதா ஸஹதர்மசரீதவ) என்ற வாக்யத்தால் சொன்னாலும், ஸீதாதேவியானவள் ஜனக மஹாராஜனுடைய பெண்ணானதினால், அந்த ராஜனுடைய உத்தரவு இல்லாமல் அந்த ஸீதையை நாம் க்ரஹிக்கலாமா என்று ஸ்ரீராமனும் கொஞ்சம் தயங்கி நின்றார். அவ்விதம் நிற்கும் ராமனுடைய எண்ணத்தை யறிந்த ஜனக மஹாராஜாவானவர், ராமனைப் பார்த்து "ராமா! உனக்கு எதிரில் ப்ரத்யக்ஷமாக பாஸித்துவருகிற இந்த ஸீதையை நீ க்ரஹித்துக்கொள்" என்று சொன்னார்.

இந்த அபிப்ராயத்தை விளக்கும் பதமோ, प्रतीच्छचैनां (ப்ரதீச்சசைநாம்) (ப்ரதீச்சசைநாம்) என்பதேதானும். இவ்விதம் ஸீதையை க்ரஹித்துக்கொள்வதில் ராமனுக்கு ஜனக மஹாராஜாவானவர் ஆக்ஞை செய்ததும், அந்த ராஜனுக்கே தப்பென்று தோன்றிவிட்டது. அதாவது, ஸீதாதேவியோ ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மியே என்று அறியவேண்டும். ராமனே மஹாவிஷ்ணுவாகுவார். விஷ்ணுவினுடைய மார்பு ப்ரதேசத்திலேயே மஹாலக்ஷ்மியானவள் எப்பொழுதும் வஸித்துவருகிறுள் என்று சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருப்பதினுல், இந்த ஸீதாதேவியானவள் ஸ்ரீராமபிரானை விட்டு பிரிந்திருக்கும் வஸ்துவல்ல. எப்பொழுதும் ராமனேடு ராமனுடைய ஸொத்தாகவே இருந்துவரக் கூடியவள். அப்படி இருக்கும்பொழுது அந்த ஸீதாதேவியை, க்ரஹித்துக்கொள்ள ராமனுக்கு ஜனகமஹாராஜா எதற்காக ஆக்ஞை செய்யவேண்டும்? ஸ்ரீராமனும் 'என் ஸொத்தை நான் க்ரஹித்துக்கொள்கிறேன். நீரென்ன நான் ஸீதையை க்ரஹித்துக்கொள்வதில் உத்தரவு செய்வது?' என்றும் ஒரு ஸமயம் கோபித்துக்கொள்வாரோ என்று ஜனக மஹாராஜாவானவர் நினைத்து, ஸ்ரீ ராமனுக்கு அக்கோபத்தை இல்லாமல் செய்ய भद्रन्ते (பத்ரந்தே) (பத்ரந்தே) என்றும் ராஜனுனவன் சொன்னுர். "ராமா உன்னைவிட்டுப் பிரியாமல் உன்னிடத்திலேயே எப்பொழுதும் இருந்துவருகிற உன்னுடைய மஹாலக்ஷ்மியான ஸீதாதேவியை நீ க்ரஹித்துக்கொள்வதில் நான் என்ன அநுமதி கொடுப்பது? ஏதோ என் பெண் என்ற அபிமானத்தால் வளர்த்த காரணத்தைக்கொண்டு प्रतीच्छचैनां (ப்ரதீச்சசைநாம்) (ப்ரதீச்ச சைநாம்) என்று நான் சொல்லிவிட்டேன். நீ அதற்குக் கோபித்துக்கொள்ளக்கூடாது. உனக்கு க்ஷமை வேண்டும்?" என்று ஜனகமஹாராஜாவானவர் ராமன் ஸீதையை க்ரஹித்துக்கொள்வதற்கு தான் அனுமதிகொடுக்கவந்த அபராதத்தை க்ஷமித்துக்கொள்ளும்படி வேண்டிக்கொண்டார். இது

தான் भद्रन्ते (ஹஂத்ரநதே) (பத்ரந்தே) என்ற பதத்தின் பொருளாகும்.

அத்துடன், அந்த வாக்யத்தால், மற்றொரு பொருளும் ஸித்திக்கிறது ; அதாவது :

ஜனகமஹாராஜாவானவர் ஸீதாதேவியை பாணிக்ரஹணம் செய்துகொடுப்பதற்காக அநேக ராஜபுத்ரர்களை வரனாக வேஷணம் செய்த காலத்தில் தசரத ராஜகுமாரனை ஸ்ரீராமனையும் வரனாக தேர்ந்தெடுத்து அவருடைய ஜாதகத்தையும் தான் வாங்கி ஜோஸ்யர்கள்மூலம், அந்த ஜாதகத்தையும் நன்றாகப் பார்த்து அதிலுள்ள விஷயங்களையும், இந்த அரசனானவன் அறிந்துகொண்டு இருக்கிறவர். அதில், ஸ்ரீராமபிரானுடைய ஜாதகம் உத்தம ஜாதகமானாலும் அநேக சுபக்ரஹங்கள் உச்சஸ்தானங்களில் இருந்துவருங் காரணத்தால், ஸார்வபௌம பதவியை அடையக்கூடிய பாக்யம் இருப்பதாகத் தெரிந்தாலும், உச்சஸ்தானத்திலுள்ள க்ரஹங்களுக்குள், ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டிருக்குங் காரணத்தால், ஸ்ரீராமபிரானுக்கு நல்ல யௌவனமான தருணத்தில், ராஜ்யப்ரம்சனமும் வனவாஸமும், அதனால் அநேக துக்க அநுபவமும் ஏற்படக்கூடுமென்பதையும் ஜனகமஹாராஜாவானவர் அறிந்து இருக்கிறார். ஸீதாதேவியினுடைய ஜாதகத்தைக் கவனித்தாலோ, இந்த ஸீதையானவள் எந்தப் புருஷனை பர்த்தாவாக அடைகிறாளோ, அந்த புருஷனுக்கு ஸீதாதேவி மூலமாக லோகத்தில் மஹத்தான கீர்த்தியும், அந்த புருஷனுக்கு தன் ஜாதக ரீதியாக ஏற்படக்கூடிய அமங்களமெல்லாம், ஸௌபாக்ய மங்களங்களாக மாறி, பேரானந்தத்தை அப்புருஷன் அடையும்படியாகவும், அப்புருஷனுக்கு சக்தியை உண்டு பண்ணக்கூடிய பெருமையானது, இந்த ஸ்த்ரீ ஜாதகத்திற்கு இருந்து வருகிறது என்பதையும் ராஜனானவன் அறிந்தவர். அதனால் ராஜனானவர், 'ராமா! உன் ஜாதகமூலமாக உனக்கு வனவாஸ துக்கம் ஏற்படும். என்னுடைய பெண்ணான

ஸீதையை நீ மணம் செய்துகொண்டால், இவளுடைய பாக்யாதிசயத்தால் அந்த வனவாஸமானது அமங்களமாக ஆகாமல் பெரிய யசஸ்ஸை கொடுக்கக்கூடியதாக ஆகும். இவள் மூலமாக உனக்கு பெரிய ஸௌபாக்யங்களெல்லாம் உண்டாகும்' என்று ஸீதை மூலமாக ராமனுக்கு ஸௌபாக்யத்தைக்காட்டி ஸீதாதேவியானவள் மஹா புண்யவதி என்ற பொருளையும் भद्रन्ते (ஹஉஜெ) (பத்ரந்தே) என்ற பதத்தால் ஜனகமஹாராஜாவானவர் ஸூசிப்பிக்கிறார்.

அத்துடன், இந்த भद्रन्ते (ஹஉஜெ) (பத்ரந்தே) என்ற பதமானது ஒரு மங்கள ஆசீர்வாத வசனமாகவும் ஆகிறது. கல்யாண மண்டபத்தில் ஸீதையும் ராமனும், மணக்கோலங்களுடன் மணையில் அமர்ந்திருக்கும்பொழுது ராமனாகிய வரனும், ஸீதையாகிற வதூவும், ஒன்றுக்கொன்று பொருத்தமாயும், சாஸ்த்ரத்தில் சொல்லியபடி வயஸ் க்ரமத்தோடு கூடினவர்களாயும், ஸௌந்தர்யம், ஸௌகுமார்யம், லாவண்யம், ஆபிஜாத்யம், தர்மாசரண சீலத்வம் முதலான விஷயங்களில் ஒருவருக்கொருவர் நிகரற்ற மஹிமையுள்ளவர்களாயும், பார்வதி பரமேச்வரனைப்போல் ஆதி தம்பதிகளாக ஸீதையும் ராமனும் விளங்கிவந்தார்கள். அதைப் பார்க்க கல்யாண மண்டபத்திலுள்ள அநேக மஹாஜனங்களுக்கு அது ஒரு பெரிய ஆச்சர்யத்தை உண்டுபண்ணிற்று. அங்குள்ள ஸ்த்ரீ ஜனங்களெல்லாம் பரம ஆச்சர்யத்துடன் "பெண்ணுக்கும் பிள்ளைக்கும் எப்படிப் பொருத்தம் அமைந்திருக்கிறது பார்த்தீர்களா!" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். அதைக் கவனித்த ஜனக மஹாராஜாவானவர் இந்த தம்பதிகளுக்கு த்ருஷ்டி தோஷம் வராமலிருக்க வேண்டுமே என்று கவலையை அடைந்து, அந்த த்ருஷ்டி தோஷத்தை பரிகாரம் செய்வதற்காக भद्रन्ते (ஹஉஜெ) (பத்ரந்தே) என்று மங்கள ஆசீர்வாதத்தைச் சொன்னார் என்னும் மேல்கண்ட வாக்யத்தின் பொருளாகும்.

அத்துடன் ஸகல தர்மங்களுக்குள் தானத்தைமேலான தர்மமாக சாஸ்த்ரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அந்த தானங்களுக்குள் கன்யாதானம் ரொம்பவும் மேலானது தாக ஆகும். ஒரு மனிதன் தன் கன்னிகையை சாஸ்த்ரத்தின் விதிப்படி, சாஸ்த்ர ஸம்மதமான காலத்தில் வேதாத்யயனஞ் செய்த நல்ல வரனைத் தேடி, அந்த வரனை மஹாவிஷ்ணுவாக பாவித்து தானம் செய்தால், மோக்ஷம் என்ற பரமபுருஷார்த்தத்தை அடைகிறன் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதனுல் மோக்ஷம் என்ற பரமபுருஷார்த்தத்திற்கு, கன்னிகாதானம் ஒரு உபாயம் என்றும் தெரிகிறது. அதிலும், ஸாமான்ய ஒரு வரனை, விஷ்ணுவாக பாவித்து கன்யாதானம் செய்தால் அதற்கே மோக்ஷம் பலமாக ஏற்படுமானுல், ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவே ஸ்ரீ ராமனுக அவதாரம் செய்து வந்திருக்கும்பொழுது அந்த ஸ்ரீராமனிடம் ஜனகமஹாராஜாவானவர் தன் பெண்ணுன ஸீதையை விதிவத்தாக தானம் செய்தால், மோக்ஷம் என்ற பரம புருஷார்த்தம் ஏற்படுவதற்குக் கேட்கவும் வேண்டுமா? அதை அனுஸரித்துத்தான் ஜனகமஹாராஜனுனவர் "ராமா! என்னுடைய பெண்ணுன ஸீதையை நான் உனக்கு தானம் செய்துகொடுப்பதற்காக मोक्षं इच्छेत् जनार्दनात् (𑌮𑍋𑌕𑍍𑌷𑌂 𑌇𑌚𑍍𑌛𑍇𑌤𑍍 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌾𑌤𑍍) (மோக்ஷம் இச்சேத் ஜநார்தநாத்) என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து,, மோக்ஷத்தை கொடுக்கும் வல்லமை உனக்கு ஒருவனுக்குத்தான் இருப்பதாலும், உன் மூலமாக எனக்கும் भद्रं (𑌭𑌦𑍍𑌰𑌂) (பத்ரம்) என்ற சப்தத்தால் சொல்லப்பட்ட மோக்ஷமானது ஏற்படட்டும்" என்றும் கன்யாதானத்தின் மஹாபலத்தை भद्रन्ते (𑌭𑌦𑍍𑌰𑌨𑍍𑌤𑍇)(பத்ரந்தே) என்ற பதத்தால் इयं सीता (𑌇𑌯𑌂 𑌸𑍀𑌤𑌾) (இயம் ஸீதா) என்ற ச்லோகத்தில், ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் भद्रन्ते (𑌭𑌦𑍍𑌰𑌨𑍍𑌤𑍇) (பத்ரந்தே) என்ற பதத்தின் அர்த்தத்தை வாசகர்கள் அறிந்துகொள்ளவும்.

पाणिं गृण्हीष्व पाणिना (𑌪𑌾𑌣𑌿𑌂 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌷𑍍𑌵 𑌪𑌾𑌣𑌿𑌨𑌾) (பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணிநா) என்றும் ஸீதாராம விவாஹ ப்ரகரணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் கருத்தையும் அடியிற்கண்டவாறு அறியவும். அதாவது ஸீதாதேவிக்கும் ராமனுக்கும் நடந்த விவாஹமானது பாணிக்ரஹண ஸம்ஸ்காரமென்ற முக்யமான விவாஹத்தில் சேர்ந்ததாக ஆகும். "ஸீதாதேவியினுடைய பாணியை, (கையை) ராமா! உன் பாணியினுல் (கையினுல்) பிடித்து இழுத்துக்கொள்" என்று அந்த பதத்தின் பொருளாகும். வரனுடைய கையால் வதூவினுடைய கையை பிடித்துக்கொண்டு அந்த வதூவை க்ரஹித்துக்கொள்வது பாணிக்ரஹண ஸம்ஸ்காரமாகும். அதை சூசிப்பிப்பதற்காக पाणिं गृण्हीष्व पाणिना (𑌪𑌾𑌣𑌿𑌂 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌷𑍍𑌵 𑌪𑌾𑌣𑌿𑌨𑌾) (பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணிநா) என்ற வாக்யமானது ஏற்பட்டது. ஆனுல்,

शरः क्षत्रिययाग्राह्यः प्रतोदः वैश्यकन्यया वासोदशा शूद्रयातु वर्णोत्कृष्टस्यवेदने ॥

𑌶𑌰𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌯𑌾𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌤𑍋𑌦𑌃 𑌵𑍈𑌶𑍍𑌯𑌕𑌨𑍍𑌯𑌯𑌾
𑌵𑌾𑌸𑍋𑌦𑌶𑌾 𑌶𑍂𑌦𑍍𑌰𑌯𑌾𑌤𑍁 𑌵𑌰𑍍𑌣𑍋𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌯𑌵𑍇𑌦𑌨𑍇 ॥

சர: க்ஷத்ரியயாக்ராஹ்ய: ப்ரதோத: வைச்யகந்யயா வாஸோதசா
சூத்ரயாது வர்ணோத்க்ருஷ்டஸ்ய வேதனே ॥

என்ற சாஸ்த்ரத்தால் க்ஷத்ரியர்களுக்கு விவாஹ காலத்தில் ஸ்த்ரீயானவள் ஒரு பாணத்தை தன் கையினுல் எடுத்து தன் வரனிடத்தில் கொடுக்கவேண்டும். அதாவது கன்னிகையினுல் கொடுக்கப்பட்ட பாணத்தை வரனுனவன் வாங்கிக்கொள்வதே, க்ஷத்ரியனுக்கு விவாஹமாகும் என்றும், வைச்யர்களுக்கு கன்னிகையினுல் எடுத்துக் கொடுக்கப்பட்ட சாட்டைக் கழியை வரனுனவன் க்ரஹித்துக்கொள்வது கல்யாணமாகுமென்றும், சூத்ரர்களுக்கு கன்னிகையினுல் எடுத்துக் கொடுக்கப்பட்ட வஸ்த்ரத்தை வரனுனவன் க்ரஹித்துக்கொள்வது கல்யாணமாகுமென்றும் தெரிய வருகிறது. இதனுல் க்ஷத்ரியர்களுக்கு பாணிக்ரஹண ஸம்ஸ்

காரமே கிடையாது என்று ஏற்படும். ப்ராம்மண ஜாதிக்குத் தான் கன்னிகையினுடைய கையை வரனானவன் தன் கையினால் பிடித்து க்ரஹித்துக்கொள்வது என்ற பாணிக்ர ஹண ஸம்ஸ்காரமானது விதிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீராமனே க்ஷத்ரியனானதினாலும் ஸீதாராம விவாஹத்தை பாணிக்ரஹண ஸம்ஸ்காரம் என்று ஸூசிப்பிக்கிற पाणिं गृण्हीष्व पाणिना (வாணிம் க்ருஹ்ணீஷ்வ வாணினா) (பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணினா) என்ற வாக்யமானது எப்படி ஒத்துவரும்? என்று சங்கிக்கலாம். அதற்கு ஸமாதானத்தை அடியில்வருமாறு அறியவும். அதாவது:

पाणिग्रहणसंस्कारः सवर्णासु उपदिश्यते (வாணிக்ரஹணஸம்ஸ்காரஃ ஸவர்ணாஸு உவதிஸ்யதெ) (பாணிக்ரஹண ஸம்ஸ்கார: ஸவர்ணாஸு உபதிச்யதே) என்ற சாஸ்த்ரத்தால் மணப்பெண்ணும், மணப்பிள்ளையும் ஸமான ஜாதியில் பிறந்தவர்களாக இருந்தால் அவர்கள் ப்ராம்மண ஜாதியானாலும், க்ஷத்ரிய ஜாதியானாலும், வைச்ய ஜாதியானாலும், சூத்ர ஜாதியானாலும் பாணிக்ரஹண ஸம்ஸ்காரமானது சாஸ்த்ர சம்மதமாகத்தானாகும். மணப்பெண் கீழ் ஜாதியாகவும், மணப்பிள்ளை மேல்ஜாதியாகவும் இருக்கும் அஸவர்ணமான விவாஹத்தில்தான் शरः क्षत्रियया ग्राह्यः (ஶரஃ க்ஷத்ரியயா க்ராஹ்யஃ) (சர: க்ஷத்ரியயா க்ராஹ்ய:) என்ற ஸ்லோகத்தை உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். ப்ரக்ருதத்தில் ஸீதாராம விவாஹமானது ஸவர்ண விவாஹமானதினால் पाणिं गृण्हीष्व पाणिना (வாணிம் க்ருஹ்ணீஷ்வ வாணினா) (பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணினா) என்றதினால் சொல்லப்பட்ட பாணிக்ரஹண ஸம்ஸ்காரமானது சாஸ்த்ர ஸம்மதமாகத் தானாகும். அதில் யாதொருவிதமான தோஷமும் இல்லை என்பதை வாசகர்கள் அறியவும்.

அத்துடன் கல்யாணகாலத்தில் மணப்பெண்ணினுடைய கையை வரனானவன், தன் கையினால் தொட்டு இழுத்தால் அவளிடத்தில் இவனுக்கு பிறக்கும் குழந்தை பிள்ளைகளா

கத்தான் பிறக்கும். அந்த மணப்பெண்ணினுடைய கைவிரல்களை இந்த வரனுனவன் தன் விரல்களால் பிடித்து இழுத்தால் அப்பெண்ணினிடம் இவனுக்குப் பிறக்கும் குழந்தைகள் பெண்களாகத்தான் பிறக்கும் என்றும் சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு

यदि कामयेता स्त्रीरेव जनयेयमिति अङ्गुळीरेव गृह्णीयात् ।
यदिक्रामेयता पुत्रानेव जनयेयमिति पाणिं गृह्णीयात् ॥

𑌯𑌦𑌿 𑌕𑌾𑌮𑌯𑍇𑌤𑌾 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌰𑍇𑌵 𑌜𑌨𑌯𑍇𑌯𑌮𑌿𑌤𑌿 𑌅𑌙𑍍𑌗𑍁𑌳𑍀𑌰𑍇𑌵 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍 ।
𑌯𑌦𑌿𑌕𑌾𑌮𑍇𑌯𑌤𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌨𑍇𑌵 𑌜𑌨𑌯𑍇𑌯𑌮𑌿𑌤𑌿 𑌪𑌾𑌣𑌿𑌂 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍 ॥

யதி காமயேதா ஸ்த்ரீரேவ ஜனயேயமிதி அங்குளீரேவ க்ருஹ்ணீயாத் ।
யதிகாமேயதா புத்ராநேவ ஜநயேயமிதி பாணிம் க்ருஹ்ணீயாத் ॥

என்ற சாஸ்த்ரமே ப்ரமாணமாகும். வரனுக்கு தனக்கு பிள்ளை பிறக்கவேண்டுமென்று இஷ்டமிருந்தால் கல்யாண காலத்திலேயே பெண்ணினுடைய கையைப் பிடிக்கவேண்டும். தனக்கு பெண் பிறக்கவேண்டுமென்று இச்சையிருந்தால் பெண்ணினுடைய விரல்களைப் பிடிக்கவேண்டும், என்று அந்த சாஸ்த்ரத்தின் பொருளாகும். ஜனகமஹாராஜாவுக்கோ பிள்ளையில்லை. அந்த ஸீதையினிடத்தில் பிறக்கும் பிள்ளையைத்தான் அந்த ராஜன் தன் பிள்ளையாக பாவிக்கக்கூடியவர். அதனுல் ஜனக ராஜனுனவர், ஸ்ரீராமனைப் பார்த்து, 'ராமா! நீ இக்ஷ்வாகு வம்சத்திற்கு ஜ்யேஷ்ட புத்ரனுனதினுல் உனக்கும், உன் தர்ம பத்னியினிடத்தில் பிள்ளைதான் முக்யமாக பிறக்கவேண்டும். என் ராஜ்யம் வீணுக போகாமலிருப்பதற்கு எனக்கு புத்ரனில்லாததினுல் என் பெண்ணுன ஸீதையினிடம் உன்மூலம் ஒரு புத்ரனை எதிர்பார்த்திருக்கிறேன். அதற்கு விரோதமில்லாமல், என் பெண்ணினுடைய கையை உன் கையினுல் பிடித்து க்ரஹித்துக்கொள். ஏதோ மஹா ஸபையில் லஜ்ஜையினுல் விரலைத் தொடாதே. கையையே கையால் க்ரஹித்துக்கொள். அப்பொழுதுதான் என் வம்சம், உன் வம்சம் இரண்டும்

வீணுக ஆகாமல் அதை ரக்ஷிக்க ஸத் புத்ராவாப்தி ஏற் படும்' என்றதைக் காட்டுவதற்காகவே ஜனகமஹாராஜா வானவர் पाणिं गृण्हीष्व पाणिना (வாணிஂ ம்ருஹ்ணீஷ்வ வாணிநா) (பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணிநா) என்ற வாக்யத்தால் பாணிக்ர ஹண ஸம்ஸ்காரத்தை ஸ்ரீராமபிரானுக்கு போதித்தார்.

அத்துடன் ஸ்த்ரீயும், புமானும் ஸெளரதம் என்ற க்ரீ டையை அனுபவிக்குங் காலத்தில், அந்த ஸ்த்ரீயினுடைய ஸௌந்தர்யத்தின் மஹிமையினுல் வ்யாமோஹத்தை அடைந்த புருஷனுனவன், ஒருவருக்கொருவர் லீலையாகப் பேசிக்கொள்வது என்ற ப்ரணய தாரையில் புருஷன் ஸ்த்ரீ யினுடைய காலைப் பிடித்துக் கெஞ்சுகிறதும் உண்டு. ச்ருங் கார ரஸத்தில் இதுவும் ஒரு தத்வமாகும். ப்ருக்ருதத்தில், ஸீதையினுடைய ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, லாவண்யங் களுடைய மேன்மையை பார்த்து, ஸ்ரீராமனும் வ்யா மோஹத்தை அடைந்து ஸீதையினுடைய காலைக்கூட பிடித்துக்கொண்டு "என் பாக்யத்தால் எனக்கு நீ பத்னியாக ஏற்பட்டாய்" என்று தன் தைன்யத்தை ப்ரகாசப்படுத்த ஆரம்பித்துவிடுவாரோ என்று ராஜனுனவன் நினைத்து, "ராமா! பாதக்ரஹணம் ப்ரணயகலிகத்தில் ஏற்படலாம். இப் பொழுது மஹாஸபையில் பாணிக்ரஹணந்தான் சாஸ்த்ர ஸம் மதமாகும்" என்றதை ஸூசிப்பிப்பதற்காக पाणिं गृण्हीष्व पाणिना (வாணிஂ ம்ருஹ்ணீஷ்வ வாணிநா) (பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணிநா) என்ற வாக்யத்தால் ராஜனுனவர் பாணிக்ரஹணத்தின் பெருமையை எடுத்து உரைத்தார். இவ்விதம் ஸீதையி னுடைய பெருமையை வர்ணித்துவிட்டு, ஸ்ரீராமருடைய கையில் மந்த்ரத்தால் பரிசுத்தமான தீர்த்தத்தை முதலில் கொடுத்து, பிறகு தன் பெண்ணுன ஸீதாதேவியையும் ராமனிடம் அர்ப்பணம் செய்து ஜனக மஹாராஜாவான வர் பரம பாக்யத்தை அடைந்தார்.

ஸ்ரீமத் ராமாயணத்தில், इयं सीता (ஊயஂ ஸீதா) (இயம் ஸீதா) என்று ஸீதாராம விவாஹ மஹோத்ஸவத்தை ப்ர

காசப்படுத்துகிற ச்லோகத்திற்கு பொருளானது ஒருவாறு ப்ரகாசப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த ச்லோகத்தின் உண்மையான பொருளோ பின்வருமாறு :—

इयं सीता मम सुता सहधर्मचरीतव ।
प्रतीच्छचैनां भद्रंते पाणिं गृण्हीष्व पाणिना ॥

𑌇𑌯𑌂 𑌸𑍀𑌤𑌾 𑌮𑌮 𑌸𑍁𑌤𑌾 𑌸𑌹𑌧𑌰𑍍𑌮𑌚𑌰𑍀𑌤𑌵 ।
𑌪𑍍𑌰𑌤𑍀𑌚𑍍𑌛𑌚𑍈𑌨𑌾𑌂 𑌭𑌦𑍍𑌰𑌂𑌤𑍇 𑌪𑌾𑌣𑌿𑌂 𑌗𑍃𑌣𑍍𑌹𑍀𑌷𑍍𑌵 𑌪𑌾𑌣𑌿𑌨𑌾 ॥

இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீதவ ।
ப்ரதீச்சசைநாம் பத்ரந்தே பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணிநா ॥

என்ற ச்லோகத்தால் ஜனக மஹாராஜாவானவர் ஸ்ரீராம பிரானை,

दैवीह्येषा गुणमयी मम मायादुरत्यया
𑌦𑍈𑌵𑍀𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌗𑍁𑌣𑌮𑌯𑍀 𑌮𑌮 𑌮𑌾𑌯𑌾𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾
தைவீஹ்யேஷா குணமயீ மம மாயாதுரத்யயா

என்ற சாஸ்த்ரப்படி மாயைக்கும் ஸ்வாமியான மஹா விஷ்ணுவே உருவத்துடன் அவதரித்திருக்கிறார் என்பதை அறிந்தவரானதினால் அந்த பகவானிடம் தன் பெண் என்ற அபிமானத்தால் தனது க்ரஹத்தில் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்திற்கு யோக்யமாக வளர்ந்துவந்த யோகமாயையாகிற ஸீதாதேவியை அர்ப்பணம் செய்துவிட்டு தான் ஜீவமுக்தனாக ஆனார் என்பதே மேற்சொன்ன ச்லோகத்தின் உண்மையான பொருளாகும். ஸீதாதேவியானவள் மூலப்ரக்ருதி என்ற யோகமாயைதான் என்பதிலே,

मूलप्रकृति रूपत्वात् सासीताप्रकृतिः स्मृता
𑌮𑍂𑌲𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿 𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑌾𑌸𑍀𑌤𑌾𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾
மூலப்ரக்ருதி ரூபத்வாத் ஸாஸீதாப்ரக்ருதி: ஸ்ம்ருதா

என்ற ஸீதோபநிஷத்திலுள்ள வாக்யமே ப்ரமாணமாகும். அஷ்டோத்தர சதோபநிஷத்தில் நாற்பத்தேழாவதான

உபநிஷத் ஸீதாதேவியினுடைய மஹத்வத்தை வெளிப்படுத்துகிற உபநிஷத்தாக ஆகும். அந்த உபநிஷத்திற்குத் தான் ஸீதோபநிஷத் என்று பெயர். அதில் ஸீதாதேவியினுடைய உண்மையானது அநேக ப்ரகாரமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவைகளுக்குள் யோகமாயையே ஸீதை என்ற ப்ரகாரத்தையே அவலம்பித்து அந்த ரீதியாக इयं सीता (𑌇𑌯𑌂 𑌸𑍀𑌤𑌾) (இயம் ஸீதா) என்ற ச்லோகத்திற்கு பதவாரியாக பொருளானது இங்கு கூறப்படுகிறது. மூலப்ரக்ருதி என்ற யோகமாயையோ சித்ரூபமான ப்ரம்மத்தினுடைய அதீனமாக இருந்துவரும் அநிர்வசனீயமான சக்தி விசேஷமாகும். அந்த சக்தி விசேஷந்தான் சேதனம் அசேதனம் என்று இருவகையாகப் புலப்படும். அதுவே இந்த உலகமாக பரிணமித்து இருக்கிறது என்றும் வேதாந்திகளின் ஸித்தாந்தமாகும். அவ்விதமான மாயையோ அநாதி என்று

जीवईशो विशुद्धाचित् तताजीवेशयोर्भिदा ।
अविद्यातच्छिद्योयोगः षडस्माक मनादयः ॥

𑌜𑍀𑌵𑍇𑌶𑍋 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌚𑌿𑌤𑍍 𑌤𑌥𑌾𑌜𑍀𑌵𑍇𑌶𑌯𑍋𑌰𑍍𑌭𑌿𑌦𑌾 ।
𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑌚𑍍𑌛𑌿𑌦𑍍𑌯𑍋𑌗𑌃 𑌷𑌡𑌸𑍍𑌮𑌾𑌕𑌮𑌨𑌾𑌦𑌯𑌃 ॥

ஜீவஈசோ விசுத்தாசித் ததாஜீவேச யோர்பிதா ।
அவித்யாத ச்சிதோயோக: ஷடஸ்மாக மநாதய: ॥

என்ற சாஸ்த்ரத்தால் தெரியவருகிறது. அவ்விதம் அநாதியான யோகமாயைதான் ப்ரக்ருதத்தில் சொல்லப்படுகிற ஜனக மஹாராஜாவினுடைய பெண்ணென்று சொல்லப்படுகிற ஜானகியாக ஆகுவாள் என்பதை ஸீதை என்ற பதமானது காட்டுகிறது.

सीतालाङ्गल पद्धतिः (𑌸𑍀𑌤𑌾𑌲𑌾𑌙𑍍𑌗𑌲 𑌪𑌦𑍍𑌧𑌤𑌿𑌃) (ஸீதாலாங்கலபத்ததி:) என்ற வசன ரீதியாக கலப்பையினுல் உழுகிற மார்க்கத்திற்கு ஸீதை என்று பெயர் ஆனதினுல், அதினின்றும்

வெளியான இந்தப் பெண்ணிற்கும் ஸீதை என்ற பெயர் விளங்கிவருகிறது. அதாவது அயோநிஜை என்று அதன் பொருளாகும். அயோநிஜையானதினல் அநாதி என்பது ஸித்திக்கிறது. அதனுலும் அநாதியான யோகமாயையே இவள் என்பது ஸ்பஷ்டமாக வெளியாகிறது.

அத்துடன் ஸீதா என்ற பதத்தில் ஸ ஈ தா என்ற மூன்று வர்ணங்கள் அடங்கியிருக்கின்றன. माया ईकार उच्यते (ஊயா ०ஈ०காஈ உஅ்யுதெ) (மாயா ஈகார உச்யதே) என்ற வாக்யத்தால் ஈ என்ற அக்ஷரம் மாயா தத்வத்தையும் सकारः सत्य ममृतं (ஸகாஈ: ஸதூ ஊஊுதம்) (ஸகார: ஸத்ய மம்ருதம்) என்ற வாக்யத்தால் स (ஸ) (ஸ) காரமானது ப்ரம்ம தத்வத்தையும் त (த) (த) கார: தாரலக்ஷ்ம்யாச என்ற வாக்யத்தால் ஜன்ம மரண ரூபமான ஸம்ஸார மாகிய ஸமுத்ரத்திலிருந்தும் ஜீவகோடிகளை தரணம் செய்துவைக்கிற அதாவது தாண்டச் செய்துவைக் கிற வித்யா தத்வத்தையும் ஸீதோபநிஷத்தானது வெளிக் காட்டுகிறது. யோகமாயைக்கு பஹிர்முகமாயும் அந்தர்முக மாயும் இரண்டுவிதமான ஸ்வரூபம் உண்டு. அந்தர்முக மான யோகமாயையை 'துரீயோபாதி' என்றும் வேதாந்தி கள் ஸமாதியில் அனுபவிப்பார்கள். பஹிர்முகமாக இருக் குங் காலத்தில் அந்த மாயைக்கு 'அவித்யா தத்வ ரூபிணீ' என்றும் அனுபவிகளால் சொல்லப்படும். அவித்யா தத்வ ரூபிணியாகவும் அக்காரணத்தாலேயே பஹிர்முக மாகவும் இருக்கும் மாயைக்கு ஜாக்ரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளேதான் உபலப்தி அதாவது தர்சனமானது ஏற்படும். வித்யா தத்வ ரூபிணியாகவும் அக்காரணத்தால் அந்தர்முகி யாகவும் இருக்கும் மாயையை துரீய நிலையில்தான் அனு பவிக்கமுடியும். அந்த மாயையானது கண்ணுடிபோல் நிர் மலமான பதார்த்தமாகிறபடியால் அதில் ஸச்சிதானந்தரூப மான ப்ரம்மமானது கண்ணுடியில் புருஷன் ப்ரதிபிம்பிக்

கிறதுபோல் ப்ரதிபிம்பிக்கிறது. அதனுல் அந்த மாயை யானது ப்ரம்ம ப்ரதி பிம்பத்தோடு கூடினதாகவும் பாஸிக் கிறது. அதிலும் ஸத்வ குணம், ரஜோகுணம், தமோகுணம், என்ற மூன்று குணங்களுக்குள் ரஜோ குணமும் தமோ குணமும் மங்கிப்போய் ஸத்வகுணமானது மேலிட்டிருக் கும் நிலைமையில் அந்த மாயையானது வித்யாதத்வ ரூபிணி யாக ஆகிறது. அதில் பரப்ரம்மமே விஷயமாகவும் ஆகும். பரப்ரம்மத்தை விஷயமாக அவலம்பிக்கிறதாயும், ப்ரம்ம ப்ரதிபிம்பத்தோடு கூடினதாயும், ஸத்வ ப்ரதானமாயும் அந்தர்முகமாயும் உள்ள ஒரு அநிர்வசனீயமான வ்ருத்தி யைத்தான் மாயை என்றும் அதேதான் வித்யை என்றும், அதற்குத்தான் 'அஹம் ப்ரம்மாஸ்மி' என்ற அகண்டாகார வ்ருத்தியானது உருவமென்றும் வேதாந்திகள்

शुद्ध सत्व प्रधाना प्रत्यगभिन्न ब्रह्मविषया
ब्रह्मप्रतिबिंभविशिष्टा काचिदन्तर्मुखा वृत्तिः
विद्यातत्वरूपिणी तुरीयोपादिभूता मायेत्युच्यते ॥

ஶுத்3த4ஸத்வப்ரதா4நா ப்ரத்யக3பி4ந்ந ப்3ரஹ்மவிஷயா
ப்3ரஹ்மப்ரதிபி3ம்ப3விஶிஷ்டா காசித3ந்தர்முகா2வ்ருத்தி:
வித்3யாதத்வரூபிணீ துரீயோபாதி3பூ4தா
மாயேத்யுச்யதே

சுத்தஸத்வப்ரதாஞ ப்ரத்யகபிந்ந ப்ரம்மவிஷயா
ப்ரம்மப்ரதிபிம்பவிசிஷ்டா காசிதந்தர்முகாவ்ருத்தி:
வித்யா தத்வரூபிணீ துரீயோபாதிபூதா மாயேத்யுச்யதே

என்ற வாக்யத்தால் சொல்லுகிருர்கள். இதனுல் ஸீதா என்ற பதத்தால் அவித்யாதத்வரூபிணியான ஜடமான மாயாசக்தியை வால்மீகி மஹர்ஷியானவர் ப்ரகாசப்படுத்த வில்லை. வித்யாதத்வரூபிணியான அகண்டாகார வ்ருத்தி என்ற சித்சக்தியாகிய மாயையைத்தான் ஸீதா என்ற பதத்தால் மஹர்ஷியானவர் ப்ரகாசப்படுத்துகிருர். ஈ என்ற அக்ஷரத்தால் மாயையை போதித்தாலும் அந்த மாயை அவித்யாரூபிணியல்ல. வித்யாதத்வரூபிணிதான் என்றதைப்

ப்ரகாசப்படுத்த 'தா' என்ற வர்ணத்தால் வித்யாதத்வத்தையும் போதித்து, அவ்விதம் வித்யாதத்வரூபிணியான மாயையும் சித்ரூபமான ப்ரம்ம ப்ரதிபிம்பத்தோடு கூடினவள் என்பதை விளக்க ஸ என்ற வர்ணத்தால் மூன்று காலத்திலும் அழியாததான ஸச்சிதானந்த ரூபமான ப்ரம்மத்தையும் ப்ரகாசப்படுத்தி, ப்ரம்ம ப்ரதிபிம்பத்தோடு கூடின வித்யாதத்வரூபிணியான யோகமாயையே இவள். "இந்த யோகமாயைக்கு ராமா! நீ யஜமானனாக ஆகுவாய். நீ உண்மையான பரம்பொருளாக விளங்கிவருகிறாய். எந்த பரப்ரம்மத்தினுடைய ப்ரதிபிம்பத்தோடுகூடிய காரணத்தால் மாயையானவள் வித்யாதத்வரூபிணியாக பரிணமித்து சித்சக்தியாக ஆகிவிடுகிறாளோ, அந்த பரப்ரம்மம் நீயே. அந்த ஜீவகோடிகளை ஸம்ஸார ஸாகரத்தினின்றும் கரையேற்ற உத்தமகுலமான ஸூர்யவம்சத்தில் திவ்யமங்கள விக்ரஹத்துடன் ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, நிதியாக அவதரித்திருக்குங் காரணத்தால் உன்னுடைய ஆளுகைக்குள் இருந்துவருகிற யோகமாயையும் சந்த்ரவம்சமாகிற என்னுடைய குலத்தில், அதிலும் அயோநிஜையாக, அக்காரணத்தால் அளவிடமுடியாத ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, லாவண்யநிதியாக திவ்யமங்கள விக்ரஹத்தோடு திரு அவதாரம் செய்து விளங்கிவருகிறாள். அவளேதான் இவள். இவ்விதமான மஹிமை தங்கிய மஹாமாயை என்ற பராசக்தியானவள் உன்னிடம் இருக்கவேண்டியதுதான் அழகாக ஆகுமானதினால் அந்த மாயையை ஆளக்கூடிய சக்தியோடு கூடின பரப்ரம்மம் நீதான் என்பதை விச்வாமித்ர மஹர்ஷியினுடைய வாக்யத்தாலும், அனாயாஸமாக சிவ தனுஸ்ஸை நீ முறித்த உன்னுடைய அப்ரதிஹதமான பராக்ரமத்தாலும் நான் அறிந்து உன்னிடத்தில் உன்னுடைய சக்தியாகிய, அதாவது புருஷாகாரமாகிய, இந்த ஸீதாதேவி என்ற பராசக்தியாகிய யோகமாயையை அர்ப்பணம் செய்துவிட்டு, ஜன்ம ஸாபல்யத்தை அடைகிறேன்" என்ற எண்ணத்துடன் ஜனகமஹாராஜாவானவர் மாயையை பகவத்

அர்ப்பணம் செய்துவிட்டு விமுக்தனாக ஆனார் என்ற பொருள் इयं सीता (ஊயழ ஸீதா) (இயம் ஸீதா) என்ற ச்லோகத்தால் வெளியாகிறபடியாலும், அவ்விதம் அந்த ச்லோகத்திற்கு தாத்பர்யம் சொல்வதற்கு ஸீதோபனிஷத்வாக்யமே ப்ர மாணமாக ஆகிறபடியாலும், அவ்விதமே அந்த ச்லோகத் திற்கு அர்த்தம் சொல்லுவதுதான் சாஸ்த்ர ஸம்மத மாகும். இதனால் ஸீதை என்றபதத்தின் பொருளை யோக மாயாபரமாக அறியவேண்டும். அந்த பதத்திற்குமுன் इयं (ஊயழ) (இயம்) என்ற ஒரு பதம் இருந்துவருகிறது. அந்தப்பதமோ ப்ரத்யக்ஷமான பொருளைத்தான் காட்டும். ஸீதையை யோகமாயையாக வைத்தால், யோகமாயை யானவள் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்திற்கு கோசரமாக ஆகுவாளா? அதனால் ஸீதை என்ற பதத்திற்கு மாயை என்று அர்த்தம் சொன்னால் इयं (ஊயழ) (இயம்) என்ற பதம் எப்படி ஒத்துவரும் என்ற கேள்விக்கே ப்ரக்ருதத்தில் அவ காசமில்லை. ஏனென்றால், அந்த மாயைக்கு ஸ்வாமியான ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவாகிய பரப்ரம்மந்தான் இந்த ராமன் என்று முன் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த பரப்ரம்மமோ

नचक्षुषागृह्यते नापिवाचा

ந அக்ஷ¬ஷா,ம்ர ஹ்யதெ நாவிவாஅா

நசக்ஷுஷாக்ருஹ்யதே நாபிவாசா

என்ற ச்ருதியினால் இந்த்ரியத்துக்கு விஷயமாகாதது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அவ்விதம் இருந்தாலும், அந்த பரப்ரம்மமானது பரம கருணையுடன் ஸமஸ்தமான லோகங்களையும் உத்தாரணம் செய்துவைப்பதற்காக அப்ராக்ருதமான மங்களவிக்ரஹத் தோடு எல்லா ப்ராணிகளுடைய மாம்ஸசக்ஷுஸ்ஸிற்குங் கூட கோசரமாகும்படியான ஸௌலப்யத்தை அடைந்தி ருக்கும்பொழுது, அந்த ப்ரம்மத்தின் ஆளுகைக்குள் இருக்

கும். யோகமாயையும் திவ்யரூபத்தோடு ஸர்வ ப்ராணி களுடைய கண்ணுக்கும் புலப்படக்கூடிய ஸௌலப்யத்தை அடைந்திருக்கிருளென்பது ந்யாயந்தானே. மாயை எப்படி கண்ணுக்குப் புலப்படுவாள் என்ற கேள்விக்கு அவகாசம் உண்டா? ஒரு அரசனுனவன் தனது ராஜ்யத்தை சுற்றிப் பார்க்க அரண்மனையை விட்டுக் புறப்பட்டான் என்ருல், பரிவாரங்களும் புறப்பட்டது என்பது ஸித்தந்தானே. அதுபோல் பரப்ரம்மமானது மங்களவிக்ரஹத்தோடு அவ தாரம் செய்தால் மாயை அவதாரம் செய்தது என்றதோ, பரப்ரம்மம் ப்ரத்யக்ஷமாகப் புலப்பட்டால் மாயையும் ப்ரத்யக்ஷமாகப் புலப்பட்டது என்றதோ ஸித்தந்தானே. இதில் யாதொருவிதமான கேள்விக்கும் அவகாசமே இல்லை. ஆகையால் ஸீதை மாயையாலுனும் ப்ரத்யக்ஷமாக ஆகலா மென்பதைக் காட்டுவதற்கு इयं (ஊயம்) (இயம்) என்ற பதத்தை ப்ரயோகித்தார். "ராமா! இதோ எதிரில் ப்ரத் யக்ஷ ப்ரமாணத்திற்கு கோசரமாக விளங்கிவரும் இந்த கன்னிகையானவள் உன்னுடைய சக்தியாகிய யோகமாயை" என்பதைத்தான் इयं सीता (ஊயழ ஸீதா) (இயம் ஸீதா) என்ற வாக்யத்தால் ஜனக மஹாராஜாவானவர் ஸூசிப்பித்தார். பிறகு, அந்த யோகமாயையானவள் ஈச்வரனிடத்தில் இருந்தால் அது ஈச்வரனுக்கு அலங்காரமாகவும் ஆகும். அந்த ஈச்வரனுடைய க்ருத்யமாகிய ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களுக்கு அந்த யோகமாயையானவள் ஸத்வ குணம், ரஜோகுணம், தமோகுணம் என்ற மூன்று குணங்களோடுகூடின காரணத்தால் அனுகூலமாகவும் ஆகு வாள். ஜீவனிடத்தில் அந்த யோகமாயை இருந் தால் அந்த ஜீவனுக்கு அனர்த்தத்தைத்தான் கொடுத்துவரு வாள். யோகமாயையை தன் வசப்படுத்திக்கொள்ள ஜீவ னுக்கு சக்தியில்லாத கிஞ்சிக்ஞன் ஆனதினுல் தன்னுடைய அருகில் அந்த யோகமாயையை ஒரு நிமிஷங்கூட வைத் துக்கொள்ளாமல் அந்த யோகமாயையை தன் வசத்தில் அடக்கி வைத்துக்கொள்ள சக்தியுள்ள ஈச்வரனிடத்தில்

ஒப்புவித்துவிட்டு இருக்கும் ஜீவன்தான் விவேகியாக ஆகு வரின் என்று அரசனுனவர் நினைத்தார். ஜீவனிடத்தில் யோகமாயை இருப்பதினுல் ஜீவனுக்கு ஏற்படும் அனர்த் தத்தையும் ममसुता (𑌮𑌮𑌸𑍁𑌤𑌾) (மமஸுதா) என்ற பதத்தால் காட்டுகிருர். அந்த பதத்திற்கு 'என் பெண்' என்ற பொருளை வாசகர்கள் முன் படித்திருக்கலாம். இப் பொழுதோ அந்த பதத்தின் பொருளை கவனிக்கவும். मम (𑌮𑌮) (மம) என்பதற்கு ममकारः (𑌮𑌮𑌕𑌾𑌰𑌃) (மமகார:) என்றே அர்த்தமாகும். அத்துடன் மமகாரத்துக்குக் காரணமான அஹங்காரத்தையும் அந்தப் பதம் பிடித்திழுக்கிறது. அகங் காரமில்லாமற்போனுல் மமகாரமில்லை. ஆகையால் அஹங் காரம் மமகாரம் இரண்டையுந்தான் க்ரஹித்துக்கொள்ள வேண்டும். தானில்லாத ஜடமான சரீரத்தில் தான் என்று ஏற்படும் அபிமானமே அஹங்காரமாகும். அவ்விதம் தான் இல்லாத சரீரத்தை யொட்டிவந்த களத்ரம் முதலான விஷயாதிகளில் என் களத்ரம், என் பிள்ளை என்ற அபி மானமானது மமகாரமாகும். இந்த அஹங்காரம் மமகாரம் இரண்டயும்போல் ஜீவனுக்கு அனர்த்தத்தைக கொடுக்கிற சத்துரு வேறெருவரையும் சொல்லமுடியாது. அந்த அஹங்காரத்தையும் மமகாரத்தையும் உண்டுபண்ணு கிறவள் இந்த யோகமாயையேதான் என்பது ममसुता (𑌮𑌮𑌸𑍁𑌤𑌾) (மமஸுதா) என்ற பதத்தால் வெளியாகிறது. मम ममकारं सूते प्रसूते इति ममसुता (𑌮𑌮 𑌮𑌮𑌕𑌾𑌰𑌂 𑌸𑍂𑌤𑍇 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌮𑌮𑌸𑍁𑌤𑌾) (மம மமகாரம் ஸூதே ப்ரஸூதே இதி மமஸுதா) என்று பதத்திற்கு ஸமாஸத்தால் ஸமஸ்தபதமாக வைத்து குறிப்பிட்ட பொருளை அறிந்துகொள்ளவும். மமகாரத்தில் அஹங்காரம் அந்தர்பூதம் என்று சொல்லப்பட்டது. இத ஞல் யோகமாயையானவள் ஜீவனிடத்தில் இருந்தால் அந்த ஜீவனுக்கு ஸமஸ்தமான அனர்த்தத்திற்கும் விதையான அஹங்கார மமகாரத்தை உண்டுபண்ணி அந்த ஜீவனைக் கெடுத்துவிடுகிருள். மாயை ஜீவனிடத்தில் இருந்தால்

ஜீவனுக்கு அனர்த்தந்தான் விளையும் என்பதற்கு ममसुता (மமஸுதா) (மமஸுதா) என்ற வாக்யமே ப்ரமாணமாகும். அதனுல் ஜீவன் மாயைக்கு ஆச்ரயமாகவோ விஷய மாகவோ ஆகமுடியாது என்பது வெளியாகிறது.

ஈச்வரனிடத்தில் மாயை இருந்தால் அவனுக்கு அது அலங்காரமாக ஆகும். அதையும் सहधर्म चरीतव (ஸஹதர்ம சரீதவ) (ஸஹதர்ம சரீதவ) என்ற பதமானது வெளிப்படுத்து கிறது. "ராமா! நீ பரம்பொருள் ஆனதினுல் यतोवा इमानि भूतानि जायन्ते (யதோவா இமானி பூதானி ஜாயந்தே) (யதோவா இமானி பூதானி ஜாயந்தே) என்ற சாஸ்ரத்தை அனுஸரித்து ப்ர பஞ்சத்தினுடைய ஸ்ருஷ்டி, ஸ்திதி ஸம்ஹாரங்கள், உன்னு டைய தர்மமாகும். இந்த யோகமாயை உன்னிடமில்லாத போனுல் நீ அவ்விதமான தர்மத்தை அனுஷ்டித்து நிறைவேற்றமுடியாது. ஸ்ருஷ்டிக்க ரஜோகுணமும், பரி பாலிக்க ஸத்வகுணமும், ஸம்ஹரிக்க தமோகுணமும் அவச்யம் வேண்டுமானதினுல், அந்த மூன்றும் மாயையி னிடத்தில்தான் இருக்கும் ஆனதினுலும், அந்த மாயையி னுடைய ஸஹாயம் உனக்கு இல்லாதுபோனுல் ஸ்ருஷ்டி முதலான கார்யத்தில் நீ கர்த்தாவாக ஆக முடியாததினுல், நீ இந்த யோகமாயையை ஸ்வீ கரித்துக்கொள்ள வேண்டியது அவச்யமாகும். உன்னு டைய தர்மமாகிய ஸ்ருஷ்டிமுதலானவைகளுக்கு அனுகூல மாகத்தான் இந்த யோகமாயை ஆகுவாளன்னியில் ஒரு காலத்திலும் ப்ரதிகூலமாக ஆகமாட்டாள்" என்று ஜனக மஹாராஜாவானவர் ராமனைப் பார்த்துச் சொன்னுர். இதனுல் ப்ரம்மத்தினிடத்தில் யோகமாயை இருந்தால் ப்ரம்மத்துக்கு இந்த மாயையான வள் ப்ரபஞ்சத்தினுடைய ஸ்ருஷ்டி முதலான கார்யங் களில் காரணமாக ஆகும் யோக்யதையை ப்ரம்மத்தி னிடத்தில் கல்பித்துக்கொடுத்து அந்த ப்ரம்மத்தை உலகத் துக்கெல்லாம் காரணபூதமான பரம்பொருள் என்று அலங்

கரிக்கிருள். அதாவது மேன்மைப்படுத்துகிருள். ஆகை யால் ஈச்வரனுக்கு மாயையினுடைய தேவை அவச்ய மானது. அதைத்தான் सहधर्मचरी तव (ஸஹயக ஃ அரீ தவ) (ஸஹ தர்மசரீ தவ) என்ற பதமானது ப்ரகாசப்படுத்துகிறது.

அத்துடன், பகவானுன பரமாத்மாவோ தனக்கு அனு கூலமாக இருந்துவரும் பக்தனுடைய விஷயத்தில் மாயையை ப்ரயோகம் செய்து அவனை மோஹிக்கச்செய்ய மாட்டார். தனக்கு ப்ரதிகூலமான நடையில் இருந்துவரும் பக்தியில் லாத மூர்க்க ஜனங்களைத்தான் மோஹப்படுத்துவது ஸ்வபா வம். ஆகையால் ஜனகமஹாராஜாவானவர் कर्मणैवहि संसिद्धि आस्थिता जनकादयः (கூஃணெவஹி ஸ0ஸிஃ0 ஆஸ்ரிதா ஜநகா ஃயஃ) (கர்மணைவஹி ஸம்ஸித்திம் ஆஸ்திதா ஜனகாதய:) என்ற சாஸ்த் ரத்தை அனுஸரித்து பகவானுடைய ஆக்ஞாரூபமான ஸத்கர் மாவை அனுஷ்டிப்பதில் சிறந்தவரான காரணத்தால் அவரு டைய ஸமீபத்தில் இந்த யோகமாயையானவள் ப்ரகாசித்து வருவது அவச்யமில்லாததினுல் அதைத்தான் நினைத்து ராஜ ஞனவர் “ராமா! நான் உன்னுடைய ஆக்ஞையை பரிபால னம் செய்துவருகிற பக்தனுனதினுல் இந்த யோகமாயை யினின்றும் என்னை விடுபட்டவனுகச் செய்யவேண்டும். உன்னுடைய ஆக்ஞையை உல்லங்கனம் செய்து உனக்கு ப்ரதிகூலமான நடையில் இருந்துவரும் ஆஸுர ஸம்பத் தில் பிறந்தவர்களை நீ ஸம்ஹரிக்க இந்த ஸீதை என்ற யோகமாயையின் ஸஹாயமும் உனக்கு வேண்டும். ஆகை யால் நீ ஆத்மாராமனுனலும் உனக்கு ப்ரதிகூலமான ஜனங்களை வ்யாமோஹப்படுத்தி நீ ஜயிக்க இந்த யோக மாயை அவச்யமானதினுல் நீ இவளை க்ரஹித்துக்கொள்” என்ற அபிப்ராயத்துடன் प्रतीच्छचैनां (ப்ரதீச்சைநாம்) (ப்ர தீச்சசைனும்) என்று சொல்லுகிருர். एनां (ஏநாம்) (ஏனாம்) இந்த ஸீதையை प्रतीच्छ (ப்ரதீச்ச) (ப்ரதீச்ச) க்ரஹித் துக்கொள் என்ற அர்த்தமானது அந்த வாக்யத்துக்கு

வெளி அர்த்தமாகத் தோன்றுகிறது. ஆகிலும் அதனுடைய உட்பொருளை கவனிக்கவேண்டும். गृहासा (ம்ரஹாஸா) (க்ருஹாஸா) என்ற பதத்தையே ப்ரயோகம் பண்ணுமல், प्रतीच्छ (ப்ரதீச்ச) (ப்ரதீச்ச) என்று ப்ரயோகம் செய்த மஹர்ஷியினுடைய அபிப்ராயமோ, प्रति इच्छा (ப்ரதி இச்சா) (ப்ரதி இச்சா) என்ற சமாஸத்தால் உனக்கு ப்ரதிகூலமான ராவணன் முதலான ராக்ஷஸர்களை ஜயிக்கவேண்டியதற்காக இவளை அடைய நீ இச்சி. நீ அவாப்த ஸமஸ்த காமன், ஆத்மாராமன், அபரிச்சின்னமான ஆனந்தத்தை உருவமாக உடைத்தானவன். ஆகிலும் சத்துருக்களை ஜயிப்பதற்கு இவளை நீ இச்சிக்கவேண்டும் என்ற உட்பொருளானது வெளியாகிறது. இதுதான் 'ப்ரதீச்ச' என்ற பதத்தில் அடங்கிய ரஹஸ்யமாகும். ராவணனைக் கொல்வதற்காக பரப்ரம்மமாகிய ஸ்ரீராமன்யோகமாயையை ஸ்வீகரித்துக்கொண்டதேதான் ஸீதா விவாஹம் என்று தெரிகிறது. பிறகும் ராவணனுடைய ஸம்ஹாரத்தில் இந்த ஸீதாதேவியே முக்யமான காரணமானுள் என்பதை எல்லோரும் அறியக்கூடும். அவ்விதம் ஸீதையை ஸ்வீகரித்துக்கொண்டு ராவணனை ஸம்ஹரித்ததினுல் லோகத்திற்கே ஏற்படும் பயனை भद्रन्ते (பத்ரந்தே) (பத்ரந்தே) என்ற வாக்யமானது சொல்கிறது. ராமன்மூலம் லோகத்திற்கே நித்யமங்களம் ஏற்படும் என்பது அதன் கருத்தாகும். அது ராவண ஸம்ஹாரத்திற்குப் பிற்பாடுதான் ஸாத்யமாயும் ஆகும். அந்த ராவண ஸம்ஹாரமும் ஸீதாதேவியின் பரிக்ரஹத்தின் அதீனமாகத்தான் ஏற்படவேண்டும். அதற்காகத்தான் प्रती (ப்ரதீ) (ப்ரதீ) என்ருல் ப்ரதிகூலமான சத்துருவைக் காட்டுகிறதினுல் சத்ரு ஸம்ஹாரத்துக்காவது ஸீதாதேவியினிடத்தில் ராமனுக்கு இச்சை ஏற்படவேண்டியதுஅவச்யமாகும். அதைத்தான் प्रतीच्छचैनां (ப்ரதீச்சைநாம்) (ப்ரதீச்சசைனும்) என்ற வாக்யமானது விளக்குகிறது. அத்துடன் மாயையை பகவதர்ப்பணம் செய்து பிறகு மாயா கார்யமான ஸகுண

ப்ரம்ம உபாஸனம் என்ற தேவதா விக்ஞானம், அக்னி ஹோத்ர கர்மானுஷ்டானம் என்ற கர்ம கலாபம் அந்த இரண்டுகளுக்கும் மாயையினிடத்திலிருந்து விமுக்தனுக ஆனவனிடத்தில் ஸ்திதி ஏற்பட ந்யாயமில்லாததினுல், அந்த இரண்டுகளையும் சேர்த்து ஜனகமஹாராஜாவானவர் பகவதர்ப்பணம் பண்ணுகிருர் என்பதைத்தான் **पाणिं गृण्हीष्व पाणिना** (வாணிං ஗ൃஹ்ணீஷ்வ வாணிநா) (பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணிஞ) என்ற வாக்யமானது ப்ரகாசப்படுத்துகிறது. அந்த வாக்யத்தில், **पाणिः** (வாணிঃ) (பாணி:) என்ற சப்தத்துக்கு லோகத்தில் ப்ரஸித்தமான 'கை' என்பது பொருளல்ல.

यथाखे पक्षिणांपक्षौ संसारार्त्तं प्रकल्पितौ तद्वत्
ब्रह्मणिरत्यर्त्तं नराणां ज्ञान कर्मणि

யதாவெ வக்ஷிணாංவக்ஷௌ ஸංஸாராத்தං வ்ரகல்பிதௌ
தத்வத் ப்ரஹ்மணிரத்யத்தං நராணாං ஜ்ஞாநகமணி

யதாகே பக்ஷிணும்பக்ஷௌ ஸம்ஸாரார்த்தம் ப்ரகல்பிதௌ தத்வத்
ப்ரம்மணி ரத்யர்தம் நராணும் ஞான கர்மணி

என்ற சாஸ்த்ரத்தால் பக்ஷிகளுக்கு ஆகாசத்தில் ஸஞ்சரிப்பதற்கு இரண்டு இறக்கைகள் ஏற்பட்டிருப்பதுபோல் ஜீவகோடிகளுக்கும் ப்ரம்மத்தையடைய இரண்டு இறக்கைகள் உண்டு. அதில் ஒன்று ஞானம்; மற்றொன்று கர்மா என்றும், ஞானம் என்ற **தேவதோபாஸனமும்** கர்மாவென்ற அக்னிஹோத்ராதிகளும் ஜீவனுக்கு இரண்டு இறக்கைகளாகத் தெரிகின்றன. இறக்கையில்லாத பக்ஷிக்கு ஆகாசத்தில் பறப்பதற்கு சக்தியில்லாததுபோல் ஞானகர்ம சூன்யனுன புருஷனுக்கு ஈச்வர ஸாக்ஷாத்காரமில்லை என்பது தெரிகிறது. அத்துடன்,

ज्ञानन्तु दक्षिणः पाणिः वामं कर्मेतिचेरितं ।
ताभ्यां विहीनः पुरुषः पाणिभ्यां रहितोच्यते ।
पाणिभ्यान्तु विमुक्तस्तु न पाणिभ्यां वियुज्यते ॥

ஜ்ஞாநஞ்து தக்ஷிண: பாணி: வாமம் கர்மேதிசேரிதம்
தாப்யாம் விஹீந: புருஷ: பாணிப்யாம் ரஹிதோச்யதே।
பாணிப்யாஞ்து வியுக்தஸ்து ந பாணிப்யாம் வியுஜ்யதே ॥

ஞாநந்து தக்ஷிண: பாணி: வாமம் கர்மேதிசேரிதம் ।
தாப்யாம் விஹீந: புருஷ: பாணிப்யாம் ரஹிதோச்யதே ।
பாணிப்யாந்து வியுக்தஸ்து ந பாணிப்யாம் வியுஜ்யதே ॥

என்ற வசனத்தால் தேவதா விக்ஞானம் என்ற உபா ஸனத்தை வலதுகையாகவும், அக்னிஹோத்ரம் முதலான கர்மாவை இடதுகையாகவும் சொல்லப்பட்டிருக்கிறபடி யால், पाणिं गृण्हीष्व पाणिना (பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணிநா) (பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணிநா) என்ற வாக்யத்தில் पाणिना (பாணிநா) (பாணிநா) என்ற த்ருதீயா விபக்தியானது 'கூட' என்ற அர்த்தத்தில் ஏற்பட்டதினுல் "என்னுல் செய்யப் பட்ட உபாஸனு ஞானத்தோடுகூட என்னுல் அனுஷ்டிக் கப்பட்ட கர்ம கலாபங்களையும் ராமா நீ க்ரஹித்துக்கொள்" என்று ஜனகமஹாராஜாவானவர் தன்னுல் அனுஷ்டிக்கப் பட்டுவந்த தேவதா விக்ஞானம் என்ற உபாஸனத்தோடு ஸமுச்சிதமான கர்ம கலாபங்களையும் பகவதர்ப்பணம் செய் தார் என்பதும் வெளியாகிறது. प्रतीच्छचैनां (ப்ரதீச்சசைநாம்) (ப்ரதீச்சசைனும்) என்ற இடத்தில் உள்ள च (ச) (ச) காரத்தால் அவித்யை என்ற மாயையின் கார்யமாயும் கர்மோபாஸனங் களுக்குக் காரணமாயும் உள்ள கர்மத்தையும் அனுத்ம ப்ரபஞ்சமாகிய விஷயத்திலிருந்து திரும்பி ஆத்ம ஸ்வரூப மான பகவத் விஷயத்தில் அர்ப்பணம் செய்தார் என்றும் தெரிகிறது. இதனுல் ஸ்ரீராமன் என்ற பரப்ரம்மததை விச்வாமித்ர மஹர்ஷி என்ற குருமுகமாக ஜனகமஹாராஜா வானவர் ஸாக்ஷாத்கரித்துக்கொண்டு அவித்யை, காமம், கர்மா இதுகளிலிருந்தும், விமுக்தனுக ஆனுர் என்பதுதான் इयं सीता (இயம் ஸீதா) (இயம் ஸீதா) என்ற ச்லோகத்தின் உண் மையான பொருளாகும்.

इयं (ஊயம்) (இயம்) என்ற பதத்தால் ப்ரத்யக்ஷ ப்ரமாணமானது சொல்லப்படுகிறது. सीता (ஸீதா) (ஸீதா) வித்யா ஸ்வரூபிணியான யோகமாயை. ममसुता (மமஸுதா)(மமஸுதா) அஹங்கார மமகாரம் மாயா கார்யங்கள். सहधर्मचरी तव (ஸஹயமசரீ தவ) (ஸஹதர்மசரீதவ) ப்ரம்மத்திற்கு மாயையினுல்தான் ஜகத் காரணத்வம் ஏற்படவேண்டுமென்பது. प्रतीच्छचैनां (ப்ரதீச்ச சைநாம்) (ப்ரதீச்சசைனும்) இதனுல் ஸீதா பரிணயத்திற்கு ராவண வதமே முக்யமான பலம் என்பது. भद्रन्ते (பத்ரந்தே (பத்ரங்தே) ராமன் மூலமாகத்தான் லோகத்திற்கு நித்யமங்களம் ஏற்பட்டது என்பது. पाणिं गृह्णीष्व पाणिना (பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா) (பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணினு) ப்ராணிகளால் செய்யப்பட்ட தவங்களை பகவதர்ப்பணம் செய்யவேண்டுமென்பது.

இவ்விதம் ஒவ்வொரு வாக்யத்தாலும் பதத்தாலும் முமுக்ஷுக்களுக்கு அவச்யமான வேதாந்த ரஹஸ்யத்தை மேற்கண்ட ஸீதாகல்யாண ச்லோகத்தில் வால்மீகி மஹர்ஷியானவர் வ்யங்க்யமாக ப்ரகாசம் செய்திருப்பதனுல்தான் இந்த ஸ்ரீமத் ராமாயணம் என்ற காவ்யமானது ஆதிகாவ்யம் என்றும், உத்தம காவ்யம் என்றும் சொல்லப்படுகிறது.

वाच्यातिशायि व्यङ्ग्यं यत्र तदेव उत्तमं काव्यं

வாச்யாதிசாயி வ்யங்க்யம் யத்ர ததேவ உத்தமம் காவ்யம்

வாச்யாதிசாயி வ்யங்க்யம் யத்ர ததேவ உத்தமம் காவ்யம்

என்ற காவ்ய லக்ஷணப்ரக்ரியையை அனுஸரித்து ஸ்ரீமத் ராமாயணத்தில் அங்காங்கு ப்ரதானமாக வ்யங்க்யார்த்தமானது ப்ரகாசப்படுத்தப்படுகிறது. மேற்சொன்ன ஸீதோபநிஷத்தை கவனித்தால் இவ்விதந்தான் இந்த ச்லோகங்களுக்கு அர்த்தம் சொல்லவேண்டுமென்பது விவேகிகளுக்கு

நன்ருக விளங்கும். ஆகையால் இதையறிந்து ஜனக மஹாராஜாவைப்போல் மற்ற புருஷர்களும் ஸ்ரீராமனுகிய பரப்ரம்மத்தை குருமுகமாக ஸாக்ஷாத்கரித்துக்கொண்டு அவித்யை, காமம், கர்மா இவைகளிலிருந்து விமுக்தர்களாக ஆகவேண்டுமென்று ஸ்ரீஸீதாராம சரணுரவிந்தமானது ப்ரார்த்திக்கப்படுகிறது.

इयं सीता ममसुता, सहधर्मचरीतव ।
प्रतीच्छचैनां भद्रंते, पाणिं गृण्हीष्व पाणिना ॥

𑌇𑌯𑌂 𑌸𑍀𑌤𑌾 𑌮𑌮𑌸𑍁𑌤𑌾, 𑌸𑌹𑌧𑌰𑍍𑌮𑌚𑌰𑍀𑌤𑌵 ।
𑌪𑍍𑌰𑌤𑍀𑌚𑍍𑌛𑌚𑍈𑌨𑌾𑌂 𑌭𑌦𑍍𑌰𑌂𑌤𑍇, 𑌪𑌾𑌣𑌿𑌂 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌷𑍍𑌵 𑌪𑌾𑌣𑌿𑌨𑌾 ॥

இயம் ஸீதா மமஸுதா ஸஹதர்மசரீதவ ।
ப்ரதீச்ச சைநாம் பத்ரந்தே, பாணிம் க்ருண்ஹீஷ்வ பாணிநா ॥

இந்த ச்லோகத்தால் ரொம்பவும விவேகியான ஜனக மஹாராஜாவானவர், त्वं (𑌤𑍍𑌵𑌂) (த்வம்) என்ற பதத்தின் லக்ஷ்யார்த்தமாகிய கூடஸ்த ஜீவனுகிய தனது ஆத்மாவை, तत् (𑌤𑌤𑍍) (தத்) என்ற பதத்தின் லக்ஷ்யார்த்தமாகிய பரப்ரம்ம மான ஸ்ரீராமனிடத்தில் அர்ப்பணம் செய்து (அதாவது ப்ரம்மத்தோடு ஜீவனே ஒன்ருகக் கலக்கும்படி செய்து) க்ருதார்த்தனுக ஆனுர், என்ற ரஹஸ்யமான அர்த்தமும் வெளியாகிறது. பகவத் ஸ்வரூபத்தை அடையவேண்டு மென்ற ஆவலுள்ள ஜீவனே सीता (𑌸𑍀𑌤𑌾) (ஸீதா) என்ற பதத்தின் அர்த்தமாகும். सीरं (𑌸𑍀𑌰𑌂) (ஸீரம்) என்ருல் கலப்பையின் முகமாகும். அதிலிருந்தும் உண்டான வளானதினுல் ஜானகிக்கு ஸீதை என்ற பெயர் வழங்கி வருகிறது. இதை எல்லா வாதிகளும் ஒப்புக்கொள்ளத் தகுந்ததே. இதனுல் அயோநிஜத்வம் என்ற மஹிமை யானது ஸீதை என்ற பதத்தின் அர்த்தத்தில் ஸித்திக்கிறது.

அயோநிஜத்வம் உள்ள இடத்தில் அநாதித்வமும், அநா தித்வம் உள்ள இடத்தில் அயோநிஜத்வமும் ஸமவ்யாப்த

மாக இருந்து வருமானதினுல், ஸீதை என்ற பதத்தின் அர்த்தத்தை அயோநிஜம் என்று சொன்னதினுல் அநாதி என்றும் ஏற்படுகிறது. सीता (𑌸𑍀𑌤𑌾) (ஸீதா) என்ற ஸ்த்ரீ லிங்கத்தினுல் (பெண்பால்) பரதந்த்ரத்வம் என்பதும் ஸித்திக்கிறது. ஜீவனே அநாதி என்றும், பகவத்பரதந்த்ரன் என்றும் சாஸ்த்ரங்களால் தெரியவருகிறது. ஜீவன் அநாதி என்பதில்,

जीवईशो विशुद्धाचित् तथाजीवेशयोर्भिदा

𑌜𑍀𑌵𑌈𑌶𑍋 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌚𑌿𑌤𑍍 𑌤𑌥𑌾𑌜𑍀𑌵𑍇𑌶𑌯𑍋𑌰𑍍𑌭𑌿𑌦𑌾

ஜீவஈசோ விசுத்தாசித் ததாஜீவேசயோர்பிதா

என்று முன்பு ப்ரசுரிக்கப்பட்ட சாஸ்த்ரமே ப்ரமாணமாகும். ஜீவன் பரதந்த்ரன் என்பதில்,

जानामिधर्मं नचमेप्रवृत्तिः जानाम्यधर्मं नचमेनिवृत्तिः ।
केनापिदेवेन हृदिस्थितेन, यथानियुक्तोस्मि तथाकरोमि ॥

𑌜𑌾𑌨𑌾𑌮𑌿𑌧𑌰𑍍𑌮𑌂 𑌨𑌚𑌮𑍇𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌜𑌾𑌨𑌾𑌮𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌂 𑌨𑌚𑌮𑍇𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 ।
𑌕𑍇𑌨𑌾𑌪𑌿𑌦𑍇𑌵𑍇𑌨 𑌹𑍃𑌦𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑍇𑌨, 𑌯𑌥𑌾𑌨𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑍋𑌸𑍍𑌮𑌿
𑌤𑌥𑌾𑌕𑌰𑍋𑌮𑌿 ॥

ஜாநர்மிதர்மம் நசமேப்ரவ்ருத்தி: ஜாநாம்யதர்மம் நசமேநிவ்ருத்தி: ।
கேநாபிதேவேந ஹ்ருதிஸ்திதேந யதாநியுக்தோஸ்மி ததாகரோமி: ॥

என்றது முதலான சாஸ்த்ரங்களே ப்ரமாணமாகும். ஸந்த்யோபாஸனம் அக்னிஹோத்ரம் முதலான ஸத்கர்மாக்கள் ஸுக ஸாதனம் என்று அறிந்த ஜீவனும் அந்த ஸத்கர்மாக்களில் ப்ரவ்ருத்திக்கிறதில்லை. பரதாரகமனம், ஸுராபானம் முதலானது அதர்மம், அவைகள் துக்கத்திற்கு ஸாதனம் என்று தெரிந்துகொண்ட ஜீவனும், அவைகளிலிருந்து நிவ்ருத்தி அடைகிறதுமில்லை. இதனுலேயே ஜீவன் ஸ்வதந்த்ரனல்ல என்பது வெளியாகிறது. ஹ்ருதய புண்டரீகத்தில் **அந்த:**

प्रविष्टः शास्ता जनानां (அந்தஃ ப்ரவிஷ்டஃ ஶாஸ்தா ஜநாநாம்) (அந்தः ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜநாநாம்) என்ற சாஸ்த்ரத்தை யனுஸரித்து, அந்தர்யாமியாயிருந்துகொண்டு விளங்கிவருகிற அநிர்வசனீயமான மஹிமையுள்ள ஒரு மஹாபுருஷனுல் எவ்விதமாக ஏவப்படுகிருனே, அவ்விதந்தான் ஜீவனுனவன் கர்மாக்களில் ப்ரவ்ருத்திக்கின்றுன். இது லோகத்தில் அனுபவஸித்தமானது. ஆகையால் மேற்சொன்ன ப்ரமாண வசனங்களைக்கொண்டு, அநாதியாயும், பகவானுக்கு நித்யபரதந்த்ரனுயும், பகவானுடைய ஸாரூப்யத்தை அடைவதில் த்ருடமான பக்தி, ப்ரபத்தி, சரணுகதி முதலான உபாயங்களை தீவ்ரமாக அனுஷ்டித்து வருகிறவனுயும் உள்ள உத்க்ருஷ்டமான ஜீவன்தான் ஸீதை என்ற பதத்தின் பொருளென்பதை அறியவும்.

ஸீதை என்ற பதத்திற்கு ஜீவன்தான் பொருள் என்பதற்கு இந்த ஸ்ரீமத் ராமாயணத்திலேயே, ஸுந்தரகாண்டத்தில் ततो रावणनीतायाः (ததொ ராவண நீதாயாஃ) (ததோராவண நீதாயா:) என்ற ச்லோகத்தின் வ்யாக்யானமாகிய ஸ்ரீகோவிந்த ராஜீயத்தையும், ஒரு முக்யமான ப்ரமாணமாக விவேகிகள் கவனித்துக்கொள்ளலாம். அந்த ஜீவனுனவன் अहं (அஹம்) (அஹம்) என்று ப்ரத்யக்ஷானுபவத்திற்கு விஷயமானதினுல், அந்த ப்ரத்யக்ஷப்ரமாணத்தைக் காட்ட इयं (இயம்) (இயம்) என்ற பதமும் ஏற்பட்டது. अहं (அஹம்) (அஹம்) என்று ப்ரத்யக்ஷ அநுபவத்தில் விஷயமாயும், அநாதியாயும், எப்பொழுதும் பகவத்பரதந்த்ரனுயும், பகவத்ப்ராப்தியில் த்ருடமான அத்யவஸாயத்தோடு (நிச்சயம்) கூடினவனுயும் உள்ள ஜீவன்தான், इयं सीता (இயம் ஸீதா) (இயம் ஸீதா) என்ற இரண்டு பதங்களாலும் வெளியாகிறது. அந்த ஜீவாத்மாவை ஜனக மஹாராஜன் ராமார்ப்பணம் செய்தார் என்பதேதான் ஸீதாகல்யாண மஹோத்ஸவத்தின் ஸாராம்சமாகும்.

ஜீவனே, ஒரு ஸமயத்திலும் தனியாக இருப்பதில்லை. ஒன்று ப்ரம்மத்தோடு சேருகிற வழக்கம், அல்லது மனதோடு சேருகிற வழக்கம். ஜாக்ரத்திலும், ஸ்வப்னத்திலும் மனதுடன் சேர்ந்து விளையாடுகிறுன். ஸுஷுப்தியிலும் ஸமாதியிலும், ப்ரம்மத்தோடு சேர்ந்துகொண்டு விளையாடுகிறுன். ப்ரம்மத்தோடு சேர்ந்துகொண்டிருக்கும் ஸுஷுப்தியிலோ, ஸமாதியிலோ, அந்த ஜீவனுக்கு பேரானந்த அனுபவம் ஏற்படுகிறது என்பது ஸர்வலோக ப்ரஸித்தமானது. மனதோடு ஜீவன் கட்டிப்புரளும்பொழுது, மனதிற்குக் காரணமான அவித்யை என்ற ஒரு குலடா ஸ்த்ரீயின் (வ்யபிசாரீ) வசங்கதனுகி, அந்த அவித்யையினிடம் இந்த ஜீவன்ரமித்து, மமகாரம், அஹங்காரம் என்ற இரண்டு பிள்ளைகளை அடிக்கடி உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறுன். அந்த இரண்டு பிள்ளைகளாலேயோ ஜீவனுக்கு யாதொரு விதமான ஸுகலேசமேயில்லை. பெரிய அனர்த்தத்தைத் தான் அடைந்து துக்கப்படுகிறுன். இந்த கஷ்டம், மனதோடு சேர்ந்து இருப்பதினுல்தான் ஏற்படுகிறது. மனதை விட்டு ஜீவனைப்பிரித்து ப்ரம்மத்தினிடத்தில் சேர்த்துவிட்டால், ஜீவனுக்கு யாதொருவிதமான கஷ்டமுமேயில்லை. மனதோடு சேர்ந்துகொண்டிருக்கும்பொழுது, அவித்யாஸம்பந்தம் ஏற்பட்டு, தன்னையே கெடுக்கிற மமகார, அஹங்காரங்களை இந்த ஜீவன் தானே உண்டு பண்ணிக்கொள்கிறுன், என்பதை ममसुता (மமஸுதா) (மமஸுதா) என்ற பதங்கள் காட்டுகின்றன. मम (மம) (மம) என்ற பதத்திற்கு மமகாரம் என்றே அர்த்தமாகும். அது அஹங்காரத்திற்கும் உபலக்ஷணமாகும். அதாவது, மமகாரம் என்று சொன்னதினுலேயே அஹங்காரத்தையும் சேர்த்துக் காட்டும். सुता (ஸுதா) (ஸுதா) என்றதினுல், सूते प्रसूते इति सुता (ஸூதே ப்ரஸூதே இதி ஸுதா) (ஸூதே ப்ரஸூதே இதி ஸுதா) என்று அஹங்கார மமகாரத்தை உண்டுபண்ணுகிறது என்பது வெளியாகிறது.

ஜீவனுடைய பாரதந்த்ர்யத்தைக் காட்டுவதில்தான் ஸ்த்ரீலிங்கத்தினுடைய தாத்பர்யமாகும் என்பதையும்

விவேகிகள் அறியவும். இதனுல் ममसुता (𑌮𑌮𑌸𑍁𑌤𑌾) என்ற திலிருந்து மனதாகிய துஷ்ட புருஷனுடைய ஸங்கத்தால், அவித்யையாகிற குலடையினுடைய ஸம்ஸர்க்கம் ஜீவாத்மாவிற்கு வெகு நாளாக ஏற்பட்டும், அதிலிருந்து தனக்கே சத்ருவான, அஹங்காரம், மமகாரம் என்ற அளவற்ற த்வந்த்வங்களை (இரட்டைகளை) உண்டுபண்ணிக்கொண்டு அதன்மூலம் ஜன்ம மரண ரூபமான, அளவற்ற துக்கத்தை அனுபவித்துக்கொண்டு வருகிறவன் இந்த ஜீவன் என்று அறிந்து इयं सीता (𑌇𑌯𑌂 𑌸𑍀𑌤𑌾) (இயம் ஸீதா) என்ற பதங்களினுல், அந்த ஜீவனையே ஸத்கர்மானுஷ்டானங்களாலும், ஸகுணப்ரம்ம உபாஸனங்களாலும், 'நான் அநாதி பகவத் பரதந்த்ரன் பகவத் ப்ராப்தியை நான் எப்பொழுது அடையப்போகிறேன்' என்ற அத்யவஸாயம் (நிச்சயம்) உள்ளவனுகச் செய்து அவ்விதம் சுத்தமான த்வம் பதார்த்தமாகிய ஜீவனை ராமப்ரம்மார்ப்பணம் செய்யவேண்டும் என்றதையே ஸ்வானுபவத்தினுல், ஜனக மஹாராஜாவானவர் ப்ரகாசப்படுத்தினுர்.

அவ்விதம் ஜீவனுக்கு பகவத் ஸ்வரூபத்தை அடைவதில் உபாயமோ, ஸநாதன தர்மந்தான் என்பதையும், सहधर्मचरी तव (𑌸𑌹𑌧𑌰𑍍𑌮𑌚𑌰𑍀 𑌤𑌵) (ஸஹதர்மசரீதவ) என்ற வாக்யமும் விளக்கிக்காட்டுகிறது. ராமா, உனக்கு ஸமானமான தர்மத்தை ஆசரிக்கிறவள் இந்த ஸீதை என்று சொல்வதினுல், பகவத் ஸ்வரூபத்தை அடையும்பொருட்டு, யோக்யமான ஸத்தர்மங்களை, அனுஷ்டித்து, சுத்தனுக இருக்கும் ஜீவன் என்றே அந்த வாக்யத்தின் கருத்தாகும்.

कौमारे अरचेरत् प्राज्ञः धर्मान् भागवतानिह

𑌕𑍌𑌮𑌾𑌰𑍇 𑌆𑌚𑌰𑍇𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌭𑌾𑌗𑌵𑌤𑌾𑌨𑌿𑌹

கௌமாரே ஆசரேத் ப்ராக்ஞ: தர்மாந் பாகவதாநிஹ

என்ற ஸ்ரீமத் பாகவத வசனத்தினுல் பகவத் ஸ்வரூபத்தை அடைவதற்கு ஸத்தர்மம் தான் முக்யமான காரணமாகும்.

என்றும் தெளிவாகிறது. அவ்விதம் ஸத்கர்மாவால், சுத்த மான தனது ஆத்மாவை, ஸ்ரீராமனை க்ரஹித்துக்கொள் ளும்படி, ஜனகமஹாராஜனுனவர் ப்ரார்த்திக்கிருர் என் பதை प्रतीच्छचैनां (ப்ரதீச்சசைநாம்) (ப்ரதீச்சசைநாம்) என்ற பதமானது காட்டுகிறது.

பாரதந்த்ர்யத்தைக் காட்டுவதில்தான் ஸ்த்ரீ லிங்கம் என்று திருப்பி திருப்பி மேலே சொல்லப்படுகிறது. அத னுல் ஸ்த்ரீயோ என்று ப்ரமிக்கவேண்டாம். உத்தம ஜீவன்தான். இவ்விதம் லக்ஷணமுள்ள ஸ்த்ரீ ஜீவனுனுலும் ஸம்மதந்தான் அப்படி ராமப்ரம்மத்தினிடத்தில் ஜீவனை அர்ப்பணம் செய்ததினுல், ஜீவனுக்கு ஏற்படுகிற பலன் மோக்ஷம் தான் என்பதையே, भद्रन्ते (பத்ரந்தே) (பத்ரந்தே) என்ற பதத்தினுல் அறியவும். "ஸ்ரீராமா உன் மூலமாக என் ஆத்மாவுக்கு மோக்ஷம் ஏற்படவேண்டும்" என்றுதான் அதன் பொருள். ராமப்ரம்மத்தினிடத்தில் ஜீவனை அர்ப் பணம் செய்யும்பொழுது, ஜீவனுக்கு ஜாக்ரத்திலும், ஸ்வப் னத்திலும் ஸ்நேஹிதனுகயிருந்த மனதையும் சேர்த்து அர்ப் பணம் செய்யக்கூடாது. அப்படியானுல், ராமப்ரம்மத்தி னிடத்தில் போய்ச் சேர்ந்தும், அங்கும் இந்த ஜீவனை ஸம் ஸாரியாகச் செய்துவிடும். அதற்காக மனதை ஞானுக்னி யினுல் சாம்பலாகச் செய்துவிட்டு, சுத்த ஜீவனை மட்டும் ராமப்ரம்மத்தினிடத்தில் அர்ப்பணம் செய்யவேண்டும் என்பதை प्रतीच्छ च (ப்ரதீச்ச அ) (ப்ரதீச்ச) என்ற இடத்தி லுள்ள च (அ) (ச) காரம் காட்டுகிறது. ஜீவனை ராமப்ரம்மத் தினிடத்தில் அர்ப்பணம் செய்யும்பொழுது, அந்த ஜீவனைச் சேர்ந்த ஸகலமான பரிஜனங்களுக்கும் மோக்ஷலாபம் ஏற் பட்டு, பகவத் ஜனங்களாகவே ஆகிவிடுகிருர்கள்.

ஒரு ஜீவன் பரம்பொருளை அறிந்தால் அந்த ஜீவனைச் சேர்ந்த மற்ற எல்லா லோகமும் க்ருதார்த்தர்களாக ஆகி விடுகிருர்கள் என்ற வேதாந்த சாஸ்த்ரத்தின் மர்யாதையை

யும், पाणिं गृह्णीष्व पाणिना (வாணிம் க்ருஹ்ணீஷ்வ வாணிநா) (பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா) என்ற வாக்யத்தினுல் வால்மீகி மஹர்ஷியானவர் வெளியிடுகிறுர். पाणि (வாணி) (பாணி) என்ற சப்தத்திற்கு கை என்றே அர்த்தமல்ல. पणस्य इयं पाणिः (வணஸ்ய இயம் வாணிঃ) (பணஸ்ய இயம் பாணி:) என்ற ஸமாஸத்தால், ஜனகமஹாராஜாவினுல், 'சிவதனுஸ்ஸை முறித்தவனுக்கு ஸீதையைக் கல்யாணம் செய்து கொடுக்கிறது' என்று ஏற்படுத்தியிருந்த பந்தயமே पण् (வணம்) (பணம்) என்ற சப்தத்தின் பொருளாகும். அந்த பணத்தை நிறைவேற்றிவிட்டு ஸ்ரீராமன் இதை ஸம்பந்தித்த கன்னிகையை அந்வேஷணம் செய்யும்பொழுது அந்த ஸீதையைக் காட்டி "இவள்தான் அப்பா அந்த பணத்தை (பந்தயத்தைச்) சேர்ந்த ஸ்த்ரீ" என்று போதித்தார். ஆகையால் पाणिः (வாணிঃ) (பாணி:) என்ற பதத்தால் ஜானகீ என்றே அர்த்தம் வைத்துக்கொள்ளவேண்டும். மற்றொரு पाणि (வாணி) (பாணி) சப்தத்திற்கோ, அந்த பணம் என்ற பந்தயத்தை ஏற்படுத்தின புருஷன் என்று அர்த்தம். "ராமா! பணத்திற்கு (பந்தயத்திற்கு) விஷயமான ஸீதையை க்ரஹிக்கும்பொழுது அந்த பந்தயத்திற்கு கர்த்தாவான புருஷனேடு சேர்த்து க்ரஹித்துக்கொள்" என்று அறியவும். த்விதீயாந்தமான பாணி சப்தத்தை மதி சப்தம்போல் இகாராந்த ஸ்த்ரீலிங்கமாகவும், த்ருதீயாந்தமான பாணி சப்தத்தை, ஹரி சப்தம்போல் இகாராந்த புல்லிங்கமாகவும், வைத்துக்கொள்ள வேண்டும்.

ஸீதை ராமனுடைய ஜனமாக ஆனுல், ஸீதையைச் சேர்ந்த ஜனகமஹாராஜாவும் ராமனைச்சேர்ந்த ஜனமாக ஆகிறுர். ஸீதை என்றுலோ, பகவத்ப்ராப்தியில் அத்யவஸாயமுள்ள உத்தமஜீவன் என்று முன்பு சொல்லப்பட்டது. ஆகையால் ஜீவனை ராமப்ரம்மார்ப்பணம் செய்துவிட்டால், அந்த ஜீவனைச் சேர்ந்த ஸகல பரிவாரங்களும் பரப்ரம்மத்

தைச் சேர்ந்தவர்களாகவே ஆகிருர்கள் என்ற வேதாந்த சாஸ்த்ரமர்யாதையானது ஸ்பஷ்டமாக பாஸிக்கின்றது.

இதனுல் इयं सीता (உயம் ஸீதா) (இயம்ஸீதா) என்ற ச்லோகத்தால் வெளியாகும் தத்வத்தை அடியில் கண்டவாறு முமுக்ஷு ஜனங்கள் அறியவும். அதாவது, அநாதிகாலமாக இந்த ஜீவன் மனதாகிற துஷ்ட புருஷனேடு ஸ்நேஹம் செய்துகொண்ட காரணத்தினுல், அவித்யையாகிற வேசியின் ஸம்ஸர்க்கம் ஏற்பட்டு, அஹங்காரம் மமகாரம் என்ற தன்னைக்கொல்லும் ம்ருத்யுவையே தனக்குப் பிள்ளையாக உண்டு பண்ணிக்கொண்டு கஷ்டப்படுகிருன். அந்த ஜீவன் அந்த கஷ்டத்திலிருந்து, நிவ்ருத்தி அடைவதற்கு ஸத்கர்மானுஷ்டானங்களையும், ஸகுணப்ரம்ம உபாஸனங்களையும், ஒழுங்காக அனுஷ்டித்து வந்தால், துஷ்ட ஸம்ஸர்க்கங்களை விலக்கிக்கொண்டு ஸத்ரூபமான ப்ரம்மப்ராப்தியை அடைய யோக்யனுக ஆகிருன். அப்படி ஒரு ஜீவன் ஸத்ரூபமான ப்ரம்மத்தையடைந்து விட்டால், அவனைச் சேர்ந்த மற்ற எல்லா ஜீவர்களும் க்ருதார்த்தர்களாக ஆகிவிடுகிருர்கள் என்பது வெளியாகிறது. இதை ஜனகமஹாராஜாவானவர் அனுஷ்டித்துக் காட்டினுர். இதுதான் ஸீதா கல்யாணம் என்பது.

ஸாக்ஷாத் ஸ்ரீ ராமபிரானுக்கும் ஸீதாதேவிக்கும் நடந்த விவாஹ மஹோத்ஸவத்தை விளக்கும் ச்லோகத்தின் தாத்பர்யமானது, வாச்யமாகவும், வ்யங்க்யமாகவும் வர்ணிக்கப்பட்டது. ஜனக மஹாராஜாவானவர் ஸீதாதேவியை ராமனுக்கு கன்யாதான விதியை அனுஸரித்து கல்யாணம் செய்து கொடுத்ததுபோலவே, ஸ்ரீராமனுடைய தம்பியான லக்ஷ்மணஸ்வாமிக்கு ஜனக மஹாராஜா தன்னுடைய ஔரஸ (தனக்குப் பிறந்த) புத்ரியான ஊர்மிளாதேவியையும், அவ்விதமே தன்னுடைய தம்பியான குசத்வஜன் என்ற மஹாராஜாவினுடைய கன்னிககளான மாண்டவி, ச்ருதகீர்த்தி

என்ற இரண்டு கன்னிகைகளையும் பரதனுக்கும், சத்ருக்ன னுக்கும் க்ரமமாக கல்யாணம் செய்துகொடுத்தார்.

एकाह्ना राजपुत्रीणां चतसृणां महामुने ।
पाणीन् गृह्णन्तु चत्वारो राजपुत्रा महाबलाः ॥

𑌏𑌕𑌾𑌹𑍍𑌨𑌾 𑌰𑌾𑌜𑌪𑍁𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌚𑌤𑌸𑍃𑌣𑌾𑌂 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑍇 ।
𑌪𑌾𑌣𑍀𑌨𑍍 𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍𑌤𑍁 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑍋 𑌰𑌾𑌜𑌪𑍁𑌤𑍍𑌰𑌾 𑌮𑌹𑌾𑌬𑌲𑌾𑌃 ॥

ஏகாஹ்நா ராஜபுத்ரீணும் சதஸ்ருணும் மஹாமுநே ।
பாணீந் க்ருஹ்ணந்து சத்வாரோ ராஜபுத்ரா மஹாபலா: ॥

என்ற ச்லோகத்தால் ஜனக மஹாராஜன் முன்பு ப்ரதிக்ஞை செய்த ப்ரகாரம், ஸீதாதேவி, ஊர்மிளாதேவி, மாண்டவி, ச்ருதகீர்த்தி என்ற நான்கு ராஜபுத்ரிகளையும், ராமன், லக்ஷ் மணன், பரதன், சத்ருக்னன் என்ற நான்கு ராஜபுத்ரர்களும் க்ரமமாக பாணிக்ரஹண ஸம்ஸ்கார விதியை அனுஸரித்து பத்னிகளாக ஒரே தினத்தில் க்ரஹித்துக்கொண்டார்கள். அதில்,

एकस्मिंस्तु गृहेकुर्यादेकामेव शुभक्रियां ।
अनेकां यस्तु कुरुतेस नाशभधिगच्छति ॥

𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌂𑌸𑍍𑌤𑍁 𑌗𑍃𑌹𑍇𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍇𑌕𑌾𑌮𑍇𑌵 𑌶𑍁𑌭𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 ।
𑌅𑌨𑍇𑌕𑌾𑌂 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇𑌸 𑌨𑌾𑌶𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥

ஏகஸ்மிம்ஸ்து க்ருஹேகுர்யாதேகாமேவ சுபக்ரியாம் ।
அநேகாம்யஸ்து குருதேஸ நாசமதிகச்சதி ॥

என்ற ஜ்யோதிஸ் சாஸ்த்ர வசனத்தை அனுஸரித்து ஒரே க்ருஹத்தில் ஒரே தினத்தில் அநேக விவாஹம் முதலிய சுப கார்யங்களைச் செய்யக்கூடாது என்று தெரியும்பொழுது அதற்கு விரோதமாக ப்ரக்ருதத்தில் ப்ராதாக்களான நான்கு ராஜபுத்ரர்களுக்கும் ஒரே தினத்தில் விவாஹம் நடந்தது தர்மமாகுமா? என்பதையும் கொஞ்சம் ஆலோசிக்கவேண்டும்.

இவ்விவாஹம் தர்ம விரோதமல்ல.

भिन्नोदरोदयवता मुद्वाहे कल्पयेत् प्रथग्वेदिम् ।
एकगृहे जगुरार्यामण्टपमेकं पराशरेणोक्तम् ॥

𑌭𑌿𑌨𑍍𑌨𑍋𑌦𑌰𑍋𑌦𑌯𑌵𑌤𑌾 𑌮𑍁𑌦𑍍𑌵𑌾𑌹𑍇 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 𑌪𑍍𑌰𑌥𑌗𑍍𑌵𑍇𑌦𑌿𑌮𑍍 ।
𑌏𑌕𑌗𑍃𑌹𑍇 𑌜𑌗𑍁𑌰𑌾𑌰𑍍𑌯𑌾𑌮𑌣𑍍𑌟𑌪𑌮𑍇𑌕𑌂
𑌪𑌰𑌾𑌶𑌰𑍇𑌣𑍋𑌕𑍍𑌤𑌮𑍍 ॥

பிந்நோதரோதயவதா முத்வாஹே கல்பயேத் ப்ரதக்வேதிம் ।
ஏகக்ருஹே ஜகுரார்யா மண்டபமேகம் பராசரேணேக்தம் ॥

என்று தெய்வக்ஞவிலாஸம் என்ற ஜ்யோதிஸ் சாஸ்த்ர க்ரந்தத்திலேயே முன்சொல்லிய ச்லோகத்திற்கு மறுப்பாக அர்த்தம் காணப்படுகிறபடியால், ஒரே தினத்தில் ப்ராதாக்களுக்கு விவாஹம் கூடாது என்று சொல்கிற சாஸ்த்ரத்தை தாயார் ஒருவளாக இருக்கும் ஸஹோதரர்களுடைய விஷயத்தில் ஸங்கோசம் செய்துகொள்ளவேண்டும். தாய் வெவ்வேருக இருந்து பின்னேதரர்களான ப்ராதாக்களுடைய விஷயத்தில் முன்சொல்லப்பட்ட சாஸ்த்ரமானது அவகாசமுள்ளதாக ஆகாது. ஆகையால் ப்ரக்ருதத்தில் தசரத சக்ரவர்த்தியினுடைய பிள்ளைகள் பின்னேதரர்கள் ஆனதினுல் ஒரே தினத்தில் அவர்களுக்கு நடைபெற்ற விவாஹமானது தர்மமாகத்தான் ஆகும் என்பதை தர்ம சாஸ்த்ர நிபுணர்கள் அறியவும்.

ஆனுல் லக்ஷ்மணனும் சத்ருக்னனும் ஒரே தாயான ஸுமித்ரையினிடத்தில் பிறந்ததினுல் பின்னேதரர்களாக ஆகமாட்டார்களே? ஸஹோதரர்கள்தானே. ஸஹோதர ப்ராதாக்களுக்கோ,

एकमातृप्रसूतानामेकस्मिन्नेव वत्सरे ।
विवाहं मौञ्जि बन्दञ्च चूडाकर्म नकारयेत् ॥

𑌏𑌕𑌮𑌾𑌤𑍃𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍇𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌵𑌤𑍍𑌸𑌰𑍇 ।
𑌵𑌿𑌵𑌾𑌹𑌂 𑌮𑍌𑌞𑍍𑌜𑌿 𑌬𑌨𑍍𑌧𑌞𑍍𑌚 𑌚𑍂𑌡𑌾𑌕𑌰𑍍𑌮 𑌨𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ॥

> எகமாத்ரு ப்ரஸூதாநாமேகஸ்மிந்நேவ வத்ஸரே ।
> விவாஹம் மௌஞ்ஜி பந்தஞ்ச சூடாகர்ம நகாரயேத் ॥

என்ற தர்மசாஸ்த்ர வசனமானது ஒரே வருஷத்தில் விவாஹமோ, உபநயனமோ சௌள கர்மாவோ செய்யக்கூடாது என்று சொல்கிறபடியால், ஸஹோதரர்களான லக்ஷ்மணனுக்கும், சத்ருக்னனுக்கும் சேர்ந்து நடந்த விவாஹம் தர்மமாகுமா? என்பதையும் ஆலோசிக்கவேண்டும்.

தர்மந்தான் என்பதில் ஸந்தேஹமில்லை. முன் சொல்லிய நிஷேத ச்லோகத்தில் ஸஹோதர ப்ராதாக்களுக்கு ஒரு ஸம்வத்ஸரத்திற்குள் வெவ்வேறு தினத்தில் விவாஹாதிகளைச் செய்யக்கூடாதென்று அர்த்தம் சொல்லவேண்டுமே தவிர, ஒரே தினத்தில் இருவர்களுக்கும் விவாஹம் செய்யலாம்.

> भ्रातृद्वये स्वसृयुगे भ्रातृ स्वसृयुगेतथा ।
> समानाश्चक्रियाः कुर्युः मातृभेदे तथैवच ॥
> एकस्मिन् दिवसेत्वेकलग्ने भिन्नांशकेतयोः ।
> एक गर्भोदयवतोर्विवाहः शुभकृत् भवेत् ॥

> [illegible]
> [illegible]
> [illegible]
> [illegible]

> ப்ராத்ருத்வயே ஸ்வஸ்ருயுகே ப்ராத்ரு ஸ்வஸ்ரு யுகேததா ।
> ஸமாநாச்சக்ரியா: குர்யு: மாத்ருபேதே ததைவச ॥
> ஏகஸ்மிந் திவஸேத்வேகலக்நே பிந்நாம்சகேதயோ: ।
> ஏக கர்போதயவதோர்விவாஹச்சுபக்ருத்பவேத் ॥

என்ற தைவக்ஞவிலாஸத்திலுள்ள வசனமானது, அண்ணன், தம்பி இருவர்களுக்குள்ளோ; தங்கை, தமயன் இருவர்களுக்குள்ளோ, அக்கா தங்கை இருவர்களுக்குள்ளோ பின்னேதரர்களானாலும்,ஸஹோதரர்களானாலும் ஒருவருஷத்

திற்குள் இரண்டு முஹூர்த்தத்தில், அதாவது தமயனுக்கு ஒரு முஹூர்த்தத்தில் விவாஹமும், தங்கைக்கோ தம்பிக்கோ மற்றொரு முஹூர்த்தத்தில் விவாஹமோ உபநயனமோ, செய்யக்கூடாது. ஒரே தினத்தில் செய்வது தர்மந்தான். ஆனால் பின்னோதரர்களானல் ஒரே க்ருஹத்தில், ஒரே லக்னத்தில் செய்யலாம். ஸஹோதரர்களானல் ஒரே தினத்தில், ஒரே லக்னத்திலும் அம்சத்தைப் பிரித்து தமயனுக்கு ஒரு அம்சத்தில் விவாஹமும், தம்பிக்கு மற்றொரு அம்சத்தில் விவாஹமும் செய்யலாம். விவாஹ மண்டபமும் ஒன்ருக இருக்கலாம். **வேதிகள்** மாத்ரம் வெவ்வேருக ஏற்படவேண்டும் என்று தெரிகிறபடியால், தசரதசக்ரவர்த்தியினுடைய நான்கு குமாரர்களுக்கும் ஒரே தினத்தில் ஒரே மண்டபத்தில் நடந்த விவாஹம் மேலான தர்மமாகுமென்பதை அறிந்துகொண்டு இவ்விஷயமான ஸம்சயம் ப்ராணிகளுக்கு ஏற்படாமலிருக்கும்படி இவ்விசாரமும் சுருக்கமாகச் செய்யப்பட்டது.

सहधर्मचारिणी संयोगं (ஸஹயஉஆரிணீ ஸ ௦ யொ ம ௦) (ஸஹதர்மசாரிணீ ஸம்யோகம்) என்ற முக்யமான ஸம்ஸ்காரமானது சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியாலும், அந்த ஸம்ஸ்காரமும் ஸ்த்ரீகளுடைய பரிசுத்திக்கு முக்ய காரணமானதினுலும் நான்கு தினங்களில் ஸாத்யமான சுபகர்மா என்று சொல்லப்பட்டிருக்கிறபடியாலும், மிதிலா புரியிலும் ராமன், லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன், என்ற ராஜகுமாரர்களுக்கும், நான்கு தினங்கள் ரொம்பவும் விமர்சையாக விவாஹ மஹோத்ஸவம் நடைபெற்றது. விவாஹ தர்மத்தில் சில மந்த்ரங்களை நான்காவது தினத்தில்தான் ஜபிக்க வேண்டுமென்றும், நான்காவது தினத்தில் செய்யவேண்டிய சில ஹோமாதிகளையும் செய்யவேண்டுமென்று சாஸ்த்ரங்களில் சொல்லியபடி ஸீதாபரிணய மஹோத்ஸவத்தில் நடந்தன. வரன் வதூ இருவர்களுக்கும் பாணிக்ரஹணம் ஆனதினத்திலிருந்து மூன்று தினங்கள்

அலவண போஜனம் செய்துகொண்டும், ப்ரம்மசர்யத்துடன் பூமியில் சயனம் செய்துகொண்டும் இருக்கவேண்டுமென்ற நியமத்தை சாஸ்த்ரம் சொல்கிறபடியால், அவ்விதம் மூன்று தினங்களிலும் அனுஷ்டித்து, அதனல் பரிசுத்தமான வதூ வரன்கள் நான்காவது தினத்தில் சில மந்தரங்களே உச்சரிக்க வேண்டும். அவ்விதமே நடக்கவேண்டிய வைதிக கர்மாக் களுக்குக் காலத்தால் ஸங்கோசமில்லாமலும், மற்ற எவ் விதத்திலும் கர்மாக்களே ஸங்கோசம் செய்யாமலும் ரொம் பவும் விமர்சையாக நான்கு தினங்கள் விவாஹம் நடை பெற்று, ஐந்தாவது தினம் காலேயில் ப்ரம்மநிஷ்டர்களான மஹா ப்ராம்மணர்களுடைய ஆசீர்வாதம் நடைபெற்றது.

விச்வாமித்ர மஹர்ஷியானவர் தசரதசக்ரவர்த்தியின் குமாரர்களான நான்கு பேர்களுக்கும் பரிபூர்ணமான ஆசீர்வாதம் செய்துவிட்டு, தபஸ் செய்வதற்காக சென்று விட்டார்.

விச்வாமித்ர மஹர்ஷியானவர், ஸீதாபரிணயமானவுடன் தசரத சக்ரவர்த்தியினிடத்திலும் ஜனகமஹாராஜாவினிடத் திலும் சொல்லிக்கொண்டு ஹிமோத்பர்வதத்தின் தாழ் வரையில் ப்ரவாஹித்துவரும் கௌசிகீ என்ற நதீ தீரத்திற்கு தபஸ்ஸைச் செய்யவேண்டுமென்ற உத்தேசத்துடன் சென் ருர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வளவு அவஸர மாக மஹர்ஷியானவர் ராமனேவிட்டுப் பிரிந்து சென்ற தின் காரணத்தை அடியிற்கண்டபடி அறியவும் :—

விச்வாமித்ரமஹர்ஷியானவர் காயத்ரீ என்ற மஹாமந்த் ரத்திற்கு நாயகனுன மஹர்ஷியாக ஆகுவார். இது லோகப்ர ஸித்தமானது. இம்மஹர்ஷியானவர் காயத்ரீ மஹாமந்த் ரத்தை ஸித்தி செய்துகொண்டிருக்கும் ஒரு ஸமயத்தில் அந்த மந்த்ரத்தின் அதிதேவதையான காயத்ரீ என்ற தேவதையானவள் மிகவும் அழகான நவரத்னகசிதமான விமானத்தில் ஏறினவளாக இருந்துகொண்டு தனது பரி வாரங்களுடனும் சூழப்பட்டவளாகக் கொண்டு, இம்

மஹர்ஷிக்கு தர்சனம் கொடுத்தாள். இம்மஹர்ஷியோ அந்த பரதேவதையை,

मुक्ताविद्रुमहेमनीलधवलच्छायैर्मुखैस्त्रीक्षणैः
युक्तामिन्दुकलानिबद्ध मकुटां तत्वार्थवर्णात्मिकाम् ।
गायत्रीं वरदाभयङ्कुशकशाः शुभ्रं कपालं गदां
शङ्खं चक्रमथारविन्दयुगलं हस्तैर्वहन्तीं भजे ॥

𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌵𑌿𑌦𑍍𑌰𑍁𑌮𑌹𑍇𑌮𑌨𑍀𑌲𑌧𑌵𑌲𑌚𑍍𑌛𑌾𑌯𑍈𑌰𑍍𑌮𑍁𑌖𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌕𑍍𑌷𑌣𑍈𑌃
𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌮𑌿𑌨𑍍𑌦𑍁𑌕𑌲𑌾𑌨𑌿𑌬𑌦𑍍𑌧 𑌮𑌕𑍁𑌟𑌾𑌂 𑌤𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌵𑌰𑍍𑌣𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾𑌮𑍍 ।
𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀𑌂 𑌵𑌰𑌦𑌾𑌭𑌯𑌙𑍍𑌕𑍁𑌶𑌕𑌶𑌾𑌃 𑌶𑍁𑌭𑍍𑌰𑌂 𑌕𑌪𑌾𑌲𑌂 𑌗𑌦𑌾𑌂
𑌶𑌙𑍍𑌖𑌂 𑌚𑌕𑍍𑌰𑌮𑌥𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌯𑍁𑌗𑌲𑌂 𑌹𑌸𑍍𑌤𑍈𑌰𑍍𑌵𑌹𑌨𑍍𑌤𑍀𑌂 𑌭𑌜𑍇 ॥

முத்காவித்ருமஹேமநீலதவலச்சாயைர்முகைஸ்த்ரீக்ஷணை:
யுக்தாமிந்துகலாநிபத்தமகுடாம் தத்வார்த்த வர்ணாத்மிகாம் ।
காயத்ரீம் வரதாபயாங்குசகசா: சுப்ரம் கபாலம் கதாம் ।
சங்கம் சக்ரமதாரவிந்தயுகளம் ஹஸ்தைர்வஹந்தீம் பஜே ॥

என்று மஹர்ஷியானவர் ஸ்தோத்ரம் செய்துகொண்டு பரதேவதையை ஸேவித்தார். விச்வாமித்ர மஹர்ஷியானவர் தர்சனம் செய்யுங்காலத்தில் ஸாக்ஷாத் பரதேவதை ஐந்துமுகங்களோடு விளங்கிவந்தாள். ஒவ்வொரு முகங்களும் வெவ்வேறு வர்ணமுள்ளதாக இருந்தது. முத்து, பவழம், தங்கம், நீலோத்பலம், சந்த்ரகலை என்ற ஐந்துகளுடைய வர்ணங்களைப்போலொத்த வர்ணங்களால் பரதேவதையின் முகங்கள் அலங்கரிக்கப்பட்டு வந்தது. சந்த்ரகலையால் அலங்கரிக்கப்பட்ட நவரத்னமயமான க்ரீடங்களாலும் தேவியானவள் சோபித்து வந்தாள். பத்து கைகளுடனும் விளங்கிவந்தாள். அபயமுத்ரை, வரமுத்ரை, ஈட்டி, பாசம், கபாலம், கதை, சங்கம், சக்ரம் இவைகளில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கையிலும், மற்ற இரண்டு கைகளில் இரண்டு தாம்ரைப் புஷ்பமும் விளங்கிவந்தது.

இந்த தத்வங்களை தனது ஸ்தோத்ரத்தில் விளக்கி ப்ரகாசப்படுத்தினார். பிறகு காயத்ரீ என்ற பரதேவதையி னால் அனுக்ரஹிக்கப்பட்டு காயத்ரீ தேவியைப் பார்த்து “ஹே தேவி! தாங்கள் ஏறிக்கொண்டு வந்திருக்கும் ரத மானது மிகவும் அபூர்வமான விந்யாஸங்களுடன் கூடிக் கொண்டு வருகிறதே. இந்த ரதத்தினுடைய விசேஷத்தை யாரும் இதுவரை அறிந்திருக்கமாட்டார்கள் என்று தோன்றுகிறது. இந்த ரதத்தைப் பார்க்கும்பொழுது மேரு ப்ரஸ்தானம் என்று சொல்லப்படும் ஸ்ரீசக்ரம்போல் என் த்ருஷ்டிக்குப் புலப்படுகிறதே. மஹாச்சர்யத்தையும் உண்டு பண்ணுகிறது. இது தங்களுடைய ரதந்தானா? எங் கிருந்து தாங்கள் வருகிறீர்கள்” என்று மிக வணக்கமாகக் கேட்டார்.

காயத்ரீ தேவியும் “உம்முடைய மந்த்ரஜப ப்ராபவத் தால் நான் ஸந்தோஷத்தை அடைந்து, பரிபூர்ணமான அனுக்ரஹம் செய்யவந்தேன். ஆனால் இந்த ரதம் என் னுடையதல்ல. புவனேச்வரீ என்ற பெயருடன் கூடிய என் தாயாருடையது. க்ருஹமோ, அம்ருதக்கடலினுடைய நடுவி லுள்ள மணித்வீபில் சிந்தாமணி என்ற ரத்னங்களால் அமைக்கப்பட்ட மாளிகையாகும். நான் அங்கு என் ஸஹோ தரிகளான லக்ஷ்மீ, ஸரஸ்வதீ முதலானவர்களுடன் என் தாயாருடைய ஸமீபத்தில் ஐந்துவிதமான ப்ரணவத்தி னுடைய அர்த்தத்தை விசாரித்துக்கொண்டிருக்கும் ஸம யத்தில் தங்களுடைய மந்த்ர ஜபமானது என் மனதை இழுத்தது. மிகவும் அவஸரமாக தாயாரிடம் உத்தரவு பெற் றுக்கொண்டு ஸ்ரீமாதாவினுடைய ஸ்ரீசக்ர ரதத்தில் ஏறிக் கொண்டு வந்தேன். உமக்கு என்ன வரம் வேண்டுமோ அதைக் கேட்கலாம். தருகிறேன்” என்றாள்.

விச்வாமித்ர மஹர்ஷியும் அஞ்சலிபந்தம் செய்து கொண்டு “தங்களுடைய தர்சனத்தினாலேயே நான் பூர்ண னாக ஆகிவிட்டேன். ஆனால் தங்களுக்கும் மூலதேவதை ஒன்றிருப்பதாக தங்களுடைய வாக்கிலிருந்து தெரிந்து

கொண்டேன். அந்த பரதேவதையை தர்சனம் செய்ய வேண்டுமென்ற ஆவலும் எனக்கு ஏற்படுகிறது. தாங்கள் எனக்கு தர்சனம் செய்துவைத்தால் அதே எனக்கு மேலானவரன்" என்றார். காயத்ரீ தேவியும் மந்தஹாஸத்துடன் விச்வாமித்ர மஹர்ஷியை, தன் பக்தனாதினால் தானிருக்கும் ரதத்திலேயே ஏறிக்கொள்ளச்சொல்லி வெகு வேகமாக அம்ருதத்கடலை அடைந்து மணித்வீபில் சிந்தாமணி க்ருஹத்தில் சிவாகாரமான மஞ்சத்தில், லக்ஷ்மி ஸரஸ்வதி துர்கைமுதலான பரிவார தேவதைகளால் பூஜிக்கப்பட்டு பாஸித்துவரும் பராசக்தியை விச்வாமித்ர மஹர்ஷிக்கு தர்சனம் செய்துவைத்தாள். ராஜ ராஜேச்வரி என்ற பராசக்தியும் விச்வாமித்ர மஹர்ஷியினுடைய காயத்ரி ஜப மஹிமையினால் அவருக்கு ஸுலபமாக தர்சனமளித்து அவரால் வெகு ப்ரகாரமாக ஸ்துதிக்கப்பட்டு ஸந்தோஷத்துடன் "மஹர்ஷே! இந்த ஸ்தானத்திற்கு நீர் வந்ததே ரொம்பவும் துர்லபமாகும். இந்த மணித்வீபிற்கு எந்த புருஷர்கள் வந்தாலும் ஸ்த்ரீ ரூபத்தை அடைந்துவிடுவார்கள். நீர் காயத்ரீ ஜபம் செய்த மஹிமையினால் அவ்விதமாகாமல் உம்முடைய பூர்வரூபத்துடனே இருந்துவருகிறீர். சீக்ரம் இந்த இடத்தைவிட்டுச் செல்ல வேண்டும். உம்முடைய மனோபீஷ்டம் என்ன?" என்று உத்கோஷித்தாள். மஹர்ஷியும் பரமபக்தியுடன் ஸாஷ்டாங்க நமஸ்காரங்களைச் செய்துவிட்டு ஆனந்த பாஷ்பத்தையும் பெருகவிட்டுக்கொண்டு இரண்டு கைகளையும் சேர்த்து அஞ்ஜலிபந்தம் செய்துகொண்டு "அம்பிகே! என்னைப்போல் தன்யன் லோகத்தில் ஒருவருமில்லை. தங்களுடைய தர்சனம் எனக்குக் கிடைத்ததிலிருந்து காயத்ரீ மஹா மந்தரத்தின் பெருமை எனக்குத் தெரிகிறது. தாங்கள் ஸகல வித்யைகளுக்கும் மூலதேவதை. தங்களுக்கு பாஸிக்காத வித்யையே ஒன்றுமில்லை. மனிதனுக்கு பசிதாகமில்லாமலும், கிழத்தனம், சாவு இல்லாமலும், நினைத்த கார்யம் உடன் கை கூடக்கூடியதாயும், நினைத்தமாத்ரத்தில் சத்ருக்களை ஸம்ஹரிக்கக்கூடிய சக்தியைக் கொடுக்கக்கூடியதாயும்

உள்ள வித்யை எதுவோ அதை இங்கு ஸந்நிதானத்தில் உபதேசம் செய்யவேண்டுமென்று நான் ப்ரார்த்திக்கின்றேன்” என்று சரணுகதியடைந்து கேட்டுக்கொண்டார்.

பராசக்தியோ விச்வாமித்ரருடைய பக்தியினுலும், காயத்ரீ என்ற மஹாமந்த்ரத்தை ஸித்திசெய்து புரச்சரணை செய்தவரென்ற காரணத்தாலும், எவ்வித்யையையும் அவருக்கு உபதேசம் செய்யலாம், அவர் அதற்கு பாத்ரந்தான் என்று நினைத்து, பராசக்தி ஸ்வயமாகவே விச்வாமித்ரர் கோரிய பலனைக் கொடுக்கக்கூடிய இரண்டு வித்யைகளை உபதேசித்தாள். அந்த இரண்டு வித்யைகள்தான் பலை, அதிபலை என்று சொல்லப்படும். உபதேசித்துவிட்டு, “நீர் இந்த இரண்டு வித்யைகளையும் மற்ற யாருக்கும் உபதேசிக்கக் கூடாது. அவ்விதம் என்னுடைய ஸந்நிதியில் சபதம் செய்யவேண்டு”மென்று கட்டளையிட்டாள். மஹர்ஷியும் அவ்விதம் பரதேவதைக் கெதிரில் லக்ஷ்மி, ஸரஸ்வதி, காயத்ரி, ஸாவித்ரி முதலிய தேவதைகள் சூழ்ந்திருக்கும் பொழுது சபதம் செய்தார்.

विश्वामित्रः जगन्मातुः पुरतः शपतं पुरा
मणिद्वीपेकरोत् दिव्यां बलां अतिबलां तथा ।
नाहं प्रवक्ष्येकस्मैचित् सत्यं सत्यं ब्रवीम्यहं
इत्युक्तः स महेश्वर्याः पादौ नत्वा विनिर्गतः ॥

𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌃 𑌜𑌗𑌨𑍍𑌮𑌾𑌤𑍁𑌃 𑌪𑍁𑌰𑌤𑌃 𑌶𑌪𑌤𑌂 𑌪𑍁𑌰𑌾
𑌮𑌣𑌿𑌦𑍍𑌵𑍀𑌪𑍇𑌕𑌰𑍋𑌤𑍍 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌬𑌲𑌾𑌂 𑌅𑌤𑌿𑌬𑌲𑌾𑌂 𑌤𑌥𑌾 ।
𑌨𑌾𑌹𑌂 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇𑌕𑌸𑍍𑌮𑍈𑌚𑌿𑌤𑍍 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑍍𑌯𑌹𑌂
𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌦𑍌 𑌨𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑌃 ॥

விச்வாமித்ர: ஜகந்மாது: புரத: சபதம் புரா
மணித்வீபேகரோத் திவ்யாம் பலாம் அதிபலாம் ததா ।
நாஹம் ப்ரவக்ஷ்யேகஸ்மைசித் ஸத்யம் ஸத்யம் ப்ரவீம்யஹம்
இத்யுக்த: ஸ மஹேச்வர்யா: பாதௌ நத்வா விநிர்கத:

என்ற சக்திதந்த்ரமென்ற தேவீ ஸம்பந்தமான புராணத்தில் சொல்லியபடி, அம்பாளுக்கு எதிரில் “ஹே தாயே!

தங்களால் எனக்கு உபதேசிக்கப்பட்ட, பலை, அதிபலை என்ற இரண்டு வித்யைகளையும் யாருக்கும் நான் உபதேசிக்கவேயில்லை" என்று சபதம் கூறினார். தேவியும் பாவியான வ்ருத்தாந்தத்தை அறிந்து அந்த ஸமயத்தில் புன்சிரிப்புடன் லக்ஷ்மீதேவியையும் கடாக்ஷத்தால் பார்த்தாள். உடன் விச்வாமித்ர மஹர்ஷியை ஸித்தாச்ரமத்திற்கு கொண்டு விட பராசக்தியானவள் மஹர்ஷியை கண்ணைமூடிக்கொள்ளும்படி ஆக்ஞாபித்தாள். க்ஷணகாலங்கழித்து 'கண்ணைத் திறக்கலாம்' என்று ஓர் ஆகாசவாக்கு ஏற்பட்டவுடன் மஹர்ஷியானவர் கண்களைத் திறந்தார். தான் இருக்குமிடம் ஸித்தாச்ரமமாக இருந்தது. மணித்வீபையோ, அம்ருதக்கடலையோ, தேவிகளையோ காணவில்லை.

இவ்விதம் வ்ருத்தாந்தமிருக்க தன் ப்ரதிக்ஞைக்கு விரோதமாக பிறகு ராமனுக்கு இவர் பலை அதிபலை என்ற மந்த்ரத்தை உபதேசம் செய்தார். ஸீதா பரிணயத்திற்கு முன் நிமிஷம்வரையிலும் இவ்விதம் ப்ரதிக்ஞைக்கு விரோதமாகச் செய்தோமே என்ற எண்ணம் விச்வாமித்ர மஹர்ஷிக்கு தோன்றவேயில்லை. கல்யாணமண்டபத்தில் ஸீதையைப் பார்த்தவுடன் 'இவள் லக்ஷ்மீதேவியல்லவா, மணித்வீபில், அம்பாளுடைய ஸந்நிதியில் நாம் ப்ரதிக்ஞை செய்த ஸமயத்தில் நமக்கு முன் நின்று வந்தாளே' என்று நினைத்து மஹர்ஷிக்கு லஜ்ஜை ஏற்பட்டுவிட்டது. பிறகு அதே நினைவாக இருந்துகொண்டு, லக்ஷ்மீதேவியான ஸீதை ராமனிடம் இந்த வ்ருத்தாந்தத்தைச் சொல்லிவிட்டால் என்ன செய்வதென்ற எண்ணத்துடன் அந்த ப்ரஸ்தாபம் வருவதற்கு முன்பே நாம் போய்விடவேண்டும் என்று எண்ணி, 'விவாஹமோ ஆகிவிட்டது; இனி நமக்கென்ன இங்கு கார்யம்' என்ற எண்ணத்துடனும் மஹர்ஷியானவர் ஹிமோத் பர்வதம் சென்றார். இவ்விதம் மஹர்ஷியானவர் கல்யாணம் ஆனவுடன் அவஸரமாகச் சென்றதிற்குக் காரணத்தை அறியவும். இக்கதையை ஆஸ்திகர்கள் சக்திதந்த்ர மென்ற தேவீபுராணத்தில் பார்க்க

லாம். தேவிபாகவதத்திலிருந்தும் அறிந்துகொள்ளலாம். ஆனால் விச்வாமித்ர மஹர்ஷிதான் ப்ரதிக்ஞைக்கு விரோதமாக நடக்கலாமா என்று எண்ணக்கூடாது. ராமனைத் தவிர மற்றவர்களுக்கு விச்வாமித்ரர் உபதேசிக்கவில்லை. ராமனையோ, தேவீ பாகவதத்தில் பர்வதராஜனான ஹிமவானுக்கு, தேவியானவள் உபதேசம் செய்கிற ஸந்தர்ப்பத்தில் தேவீ கீதையில்,

यदा यदाहि धर्मस्य ग्लानिर्भवति पर्वत ।
अभ्युत्थानं अधर्मस्य तदा वेषान् बिभर्म्यहं ॥

𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌪𑌰𑍍𑌵𑌤 ।
𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌂 𑌅𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾 𑌵𑍇𑌷𑌾𑌨𑍍 𑌬𑌿𑌭𑌰𑍍𑌮𑍍𑌯𑌹𑌂 ॥

யதா யதாஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பர்வத ।
அப்யுத்தாநம் அதர்மஸ்ய ததாவேஷாந் பிபர்ம்யஹம் ॥

என்ற ச்லோகத்தால் "ஹே, பர்வதராஜனே! எப்பொழுது தர்மத்திற்குக் குறைவும், அதர்மத்திற்கு மேன்மையும் ஏற்படுகிறதோ, நான் அந்தந்த ஸமயத்தில் அதர்மத்தை நாசம் செய்து தர்மத்தை செழிக்கச்செய்ய ஸ்த்ரீ ரூபத்தை மறைத்துக்கொண்டு மாறுவேஷத்துடன் பூலோகத்தில் அவதரிக்கின்றேன்" என்று உபதேசிக்கின்றாள்.

அந்த புருஷ வேஷமோ, ராம க்ருஷ்ணாதிகளுடைய அவதாரமென்று தேவிபாகவத வ்யாக்யானமாகிய நீலகண்டதீக்ஷிதீயம் என்ற க்ரந்த மூலமாகத் தெரியவருகிறது. ஆகையால் விச்வாமித்ர மஹர்ஷியானவர் எந்த பராசக்தியினிடமிருந்து பலை, அதிபலை என்ற வித்யைகளை க்ரஹித்தாரோ, அதே பராசக்தி ராமனாக அவதாரம் செய்திருக்கிறாள் என்பதை அறிந்தவரானதினால், அந்த இரண்டு வித்யைகளுடைய லாபங்களைத் தான் அடைந்துவிட்டு பிறகு அவ்வித்யைகளை எங்கிருந்து தான் அடைந்தாரோ, அங்கே திருப்பி அர்ப்பணம் செய்துவிட்டார். மற்ற வேறு யாருக்கும் இவர் உபதேசம் செய்யவேயில்லை. ஆகையால் விச்வாமித்ரரும் ப்ரதிக்ஞைக்கு விரோதமாக நடந்துகொள்ள

வில்லை. ஸத்யஸந்தர்தான். ஆனால் ஸீதைக்கு எதற்காக பயந்தாரென்று நினைக்கக்கூடாது. ராமனை தேவியினுடைய ஸ்வரூபம் என்று அறியாத ஜனங்களே அதிகமானதினால் அந்த ஜனங்களுடைய புத்தியை அனுஸரித்து முன்சொன்ன கதையை நயநம் செய்துகொள்ள வேண்டும்.

விச்வாமித்ர மஹர்ஷியை அவருடைய இஷ்டப்ரகாரம் தசரத ராஜனும் ஜனக ராஜனும் பூஜை செய்து அனுப்பிய பிறகு, மறுதினம் காலையில் தசரதசக்ரவர்த்தியானவர் புத்ரர்களுடன் அயோத்யா நகரத்திற்கு ப்ரஸ்தானமானார். ஜனகமஹாராஜாவோ, தசரத சக்ரவர்த்தியினுடைய ப்ரயாணத்தை அனுமோதித்து, அளவற்ற கன்யாதனத்தையும் கொடுத்தார். கோக்கள், கம்பளங்கள், வெண்பட்டுகள், அநேக விதவிதமான வஸ்த்ரங்கள், உயர்ந்த யானை, குதிரை, ரதம் முதலியவைகள், தாஸிகள், கால்படை ஸேனைகள், ஸ்வர்ணங்கள், முத்துக்கள் இவைகள் ஒவ்வொன்றையும் கோடிக்கணக்காகக் கொடுத்துவிட்டு கொஞ்சதூரம் தசரத மஹாராஜனை அனுஸரித்துச் சென்றுவிட்டு, பிறகு அவருடைய உத்தரவு பெற்றுக்கொண்டு ஜனகமஹாராஜன் தன் மாளிகைக்குத் திரும்பினார்.

பரசுராம கர்வபங்கம்.

தசரத ராஜனும் தனது புத்ரர்களுடன் வஸிஷ்டாதிகளான மஹர்ஷிகளை முன்னிட்டுக்கொண்டு அயோத்யா நகரத்திற்கு ப்ரஸ்தானம் செய்து சென்றுகொண்டிருக்கும் நடுவில் ஆகாசத்தில் காக்கைகள் முதலிய அசுபமான பக்ஷிகள் ராஜனுக்கு பயத்தை ஸூசனம்செய்து கோரமாக சப்தித்தன. ஆனால் அதற்கு எதிரிடையாக பூமியில் அழகான மான்கள் ராஜனுடைய பரிவாரத்தை ப்ரதக்ஷிண க்ரமமாக வைத்துச் சென்றதுகள். அதனால் பரம சுபம் ஏற்படப் போகிறது என்பதும் ஸூசிப்பிக்கப்பட்டது. ஆகாசத்தில் அசுபமும், பூமியில் சுபமும் ஸூசகமாக ஏற்பட்டது. தசரத மஹாராஜாவோ அதை கவனித்து மனது நடுங்கி

வஸிஷ்டபகவானைப் பார்த்து, "ஹே மஹர்ஷே! பக்ஷிகள் ஆகாசத்தில் கோரமாக சப்திக்கின்றனவே. அதைப் பார்க்கும்பொழுது ஸமீபத்தில் பெரிய ஆபத்து ஏற்படும்போல் தோன்றுகிறது" என்று சொன்னார். ராஜனுடைய வார்த்தையைக்கேட்ட வஸிஷ்டபகவானும் "ராஜனே! பக்ஷிகளுடைய சப்தத்தால் சீக்ரத்தில் அசுபந்தான் ஏற்படும். ஆகிலும் பூமியில் அழகிய மான்கள் நமது கூட்டத்தை ப்ரதக்ஷிணமாகச் சென்றுபோகிறது பார்த்தீர்களா? அதனால், வரும் அசுபம் உடன் நிவ்ருத்தியாகி எதிர்பாராத பெரிய சுபமும் ஏற்படும், பயப்படவேண்டாம்" என்று சொன்னார்.

இவ்விதம் ராஜனும் வஸிஷ்டரும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது கோரமான பெருங்காற்று உண்டாயிற்று. பூமியை நடுங்கச்செய்துகொண்டும், பெரிய வ்ருக்ஷங்களை வேருடன் பிடுங்கிக் கீழே தள்ளிக்கொண்டும், புழுதிகளால் ப்ராணிகளுடைய கண்களை மறைத்துக்கொண்டும், மிகவும் க்ரூரமாக வீசிற்று. மேகங்களால் ஆகாசமும் சூழப்பட்டு ஸூர்யனும் மறைந்துவிட்டான். தசரத சக்ரவர்த்தியின் பரிவாரங்கள் வ்யாமோஹத்தை அடைந்துவிட்டன. வஸிஷ்டபகவான், தசரத சக்ரவர்த்தி, ராமன் முதலான புத்ரர்கள் மாத்ரம் கொஞ்சம் தைர்யத்துடன் இருந்தார்கள். அந்த ஸந்தர்ப்பத்தில் ஜடாதாரியான ஒரு பெரிய மஹா பூதம் போலொத்த புருஷனைக் கண்டார்கள். அவர்தான் ப்ருகு வம்சத்திலுதித்த ஜமதக்னி மஹர்ஷியின் பிள்ளையான பரசுராமர் என்று சொல்லப்படுவார். க்ஷத்ரியர்களை வேருடன் அழித்த பலவான். கைலாஸ பர்வதம்போல் மிகவும் பெரிய வஸ்துவாக பாஸித்துவந்தார். ப்ரளய காலாக்னியைப் போல் ஜ்வலித்துவந்த காரணத்தால் யாராலும் ஸமீபத்தில் போகமுடியாமல் கோரமாக விளங்கிவந்தார். தோளில் கலப்பை என்ற ஆயுதத்தை வைத்துக்கொண்டு, அநேக மின்னல்கள் ஒன்றாகச் சேர்ந்தால் எவ்விதம் ஜ்வலிக்குமோ, அதுபோல் ஜ்வலித்து வந்தார். கையில்

பாணத்தை வைத்துக்கொண்டு, த்ருபுராஸுரனைக்கொன்ற பரமேச்வரனைப்போல் மஹாபயத்தைக் கொடுத்துக்கொண்டு ஸாமான்ய மனிதர்களால் கண்விழித்துப் பார்க்கக்கூடமுடியாமல் ஜ்வலிக்கும் கோரமான தேஜஸ்ஸுடன் விளங்கி வந்தார். பெரிய கோபத்துடன் ஸமீபத்தில் வந்தார். வஸிஷ்டபகவான் அவரை பரசுராமர் என்று அறிந்து, மற்ற வாமதேவர் முதலிய மஹர்ஷிகளையும் சேர்த்துக்கொண்டு பரசுராமர் மூலம் தனது கோஷ்டியில் ஒருவருக்கும் ஆபத்து நேரக்கூடாதென்பதைக் கருதி, மந்தர ஜபங்களையும், ஈச்வர த்யானங்களையும் செய்துகொண்டே ஒருவருக்கொருவர் பரசுராமரைப் பற்றி பேசிக்கொண்டார்கள்.

"பரசுராமர் எதற்காக வந்தாரோ? தனது பிதாவான ஜமதக்னி மஹர்ஷியை கார்த்தவீர்யார்ஜுனன் வதித்த காரணத்தைக்கொண்டு, க்ஷத்ரிய ஜாதியையே சேஷமில்லாமல் அடியோடு அழித்தவரல்லவா! ஏதோ கோபம் அடங்கிவிட்டதென்று நினைத்தோமே. இப்பொழுது மஹா கோபிஷ்டராகத் தெரிகிறது. தசரத சக்ரவர்த்தியினுடைய வம்சம் க்ஷத்ரிய வம்சமானதினால் அதையும் மிச்சமில்லாமல் அழிக்கவேண்டுமென்றுதான் வருகிறாரோ" என்று சொல்லிக்கொண்டு அர்க்யபாத்ரத்தை கையில் எடுத்துக்கொண்டு, வஸிஷ்டர் தைர்யத்துடன் பரசுராமருடைய ஸமீபம் சென்று விதிவத்தாக பரசுராமரை அர்க்ய, பாத்ய ஆசமனீயாதிகளால் பூஜித்து ஸ்தோத்ரம் செய்தார். பரசுராமரும் வஸிஷ்ட பகவானாலும் மற்ற மஹர்ஷிகளாலும் செய்யப்பட்ட பூஜையை அங்கீகரித்துக்கொண்டு வெகுவேகமாக ராமனிடமே எதிரில் வந்து நின்றுகொண்டு மிகவும் கோபாவேசத்துடன் "ஹே ராமா! உன்னுடைய பராக்ரமங்களெல்லாம் எனக்குத் தெரியும். மிதிலாபுரியில் சிவதனுஸ்ஸை நீ முறித்துவிட்டாயாமே? நான் அதை அறிந்தேன். மற்ற உன்னுடைய வீர்யங்களும் எனக்குத் தெரியும். தாடகையை நீ ஸம்ஹாரம் செய்தது, ராக்ஷஸர்களை வதித்து விச்வாமித்ரருடைய யக்ஞத்தை ரக்ஷித்தது, அஹல்யா

தேவியை சாபத்தினின்றும் மீட்டுவைத்தது முதலிய ஸகல வ்ருத்தாந்தமும் எனக்குத் தெரியும். அவைகள் எல்லாங் கூடப் பெரிதல்ல. சைவமான வில்லை நீ முறித்தது மிகவும் ஆச்சர்யத்தைக் கொடுக்கிறது. அதைக்கேட்டுத்தான் நான் உன்னிடம் வந்தேன். என் கையிலிருக்கும் வில்லைப் பார்த்தாயா? என் பிதாவான ஜமதக்னி மஹிர்ஷிமூலம் எனக்குக் கிடைத்தது. இவ்வில்லையும் நீ வளைத்து நாண் கயிற்றைப் பூட்டி பாணத்தை ஸந்தானம் செய் பார்ப் போம். வில்லை வளைத்துவிட்டாலும் நான் உன்னை விடப் போவதில்லை. உன்னுடன் முஷ்டியுத்தம் செய்யப்போகி றேன்" என்று கடோரமான வார்த்தைகளுடன் பேசினுர்.

இவைகளை ஸமீபத்திலிருந்த தசரதசக்ரவர்த்தி கேட்டு, பரம துக்கத்துடன் மனது நடுங்கி பரசுராமரிடம் அஞ்ஜலி பந்தத்துடன் கெஞ்சிக் கதறினுர். "ஸ்வாமிந்! தங்களுக்கு க்ஷத்ரியஜாதியினிடத்தில் ஏற்பட்ட கோபம் அடங்கிவிட்ட தென்பதை நான் கேட்டிருக்கிறேன். தாங்களோ ப்ராம் மணன். ப்ராம்மணனுக்கு ஒருவரிடமும் தீர்க்கவைரமே கூடாது. என்னுடைய குழந்தைகளோ ரொம்பவும் சிறிய வயதுடன் கூடியவர்கள். தாங்கள் கருணை செய்து என் குழந்தைகளுக்கு அபயத்தைக் கொடுக்கவேண்டும். தாங் களோ ப்ருகுவம்சத்தில் உண்டானவர். அந்த வம்சத்தி லுதித்தவர்களோ வேத சாஸ்த்ரங்களில் மஹா நிபுணர்கள். ஆபத்காலத்திலும் தர்மத்திற்கு விரோதமாக நடக்கமாட் டார்கள். இதற்கு முன்பு க்ஷத்ரியர்களை தாங்கள் கொல்ல வருங்காலத்தில் தேவேந்த்ரனே தங்களுக்கெதிரில் வந்து, 'தாங்கள் இவ்விதம் கோபத்தை அடையக்கூடாது, இவ் விதம் ஜகத்தை அழிக்கலாமா? ப்ராம்மணனுக்கு இது தர்ம மாக ஆகுமா? சாந்தியைக் கைக்கொள்ளவேண்டும்' என்று ப்ரார்த்திக்கும்பொழுது, இந்த்ரனுக்கு எதிரில் பாணங் களை கீழே எறிந்துவிட்டு 'இனி நான் ஒருவரையும் ஹிம் ஸிக்கிறதில்லை' என்றும் சபதங் கூறிவிட்டு, சாந்தியையும் கைக்கொண்டு, அநேக ராஜாக்களை வதித்த காரணத்தால்

தங்கள் வசத்திலிருந்த அந்தந்த தேசங்களையும் காச்யப ப்ரஜாபதிக்கு தானம் செய்துவிட்டு, தபஸ்ஸைச் செய்வதற்காக உத்தரதேசம் சென்றுவிட்டீர்கள் என்பதை நான் அறிந்தவன். இப்பொழுது முன் செய்த ப்ரதிக்ஞைக்கு விரோதமாகக் கோபத்தை அடையலாமா? தங்களுக்கு இது அழகல்ல. தாங்கள் என் குழந்தைகளிடம் கருணையை வைக்கவேண்டும். ஆகையால் என் வம்சத்தை தாங்கள் கருணைகூர்ந்து காப்பாற்ற வேண்டு"மென்று தசரதர் ப்ரார்த்தித்தார். பரசுராமரோ, தசரதசக்ரவர்த்தியினுடைய வார்த்தைகளை லக்ஷயம் செய்யாமலே 'போமையா' என்று தள்ளிவிட்டு ராமனையே நோக்கி மறுபடியும் தன்னுடைய ஹடமான வார்த்தையைச் சொல்ல ஆரம்பித்தார்.

"ராமா! உன்னால் முறிக்கப்பட்ட வில் ஒன்று; என் கையில் பாஸித்துவரும் வில் ஒன்று; இந்த இரண்டு வில்லும் லோக ப்ரஸித்தமானது. விச்வகர்மாவினால் நிர்மாணஞ் செய்யப்பட்டு ஒன்று பரமேச்வரனிடத்திலும், மற்றொன்று விஷ்ணுவினிடத்திலும் கொடுக்கப்பட்டது. இரண்டு விற்களும் ஸமானமான பலத்துடன் கூடினவை. தேவர்களுக்கு, விஷ்ணு பலவானா அல்லது ருத்ரன் பலவானா என்று ஸந்தேஹம் ஏற்பட்டது. வராஹாவதாரம் செய்து பூமியை உத்தாரணம் செய்த கார்யத்தைக் கவனித்தால் விஷ்ணுவே பலவான் என்று தோன்றுகிறது. த்ருபுராஸுரனைக் கொன்ற காரணத்தால் பரமேச்வரனே பலவான் என்று தோன்றுகிறது.ஆகையால் இருவர்களுக்குள் பலத்தில் யார் பெரியவன் என்றதைத் தெரிந்துகொள்ள இச்சை ஏற்பட்டது. இதை ப்ரும்மாவிடம் தேவர்கள் தெரிவித்தார்கள். 'ருத்ரன், விஷ்ணு இருவர்களும் ஸமானமானவர்களா? அல்லது பலத்தில் ஒருவர் மேலானவர், மற்றொருவர் கீழானவரா? அதிலும் ருத்ரன் மேலானவர்; விஷ்ணுகீழானவர் என்றதா; அல்லது விஷ்ணு மேலானவர், ருத்ரன் கீழானவர் என்றதா? இதை நிர்ணயம் செய்து கொடுக்கவேண்டு'மென்று ப்ரும்மாவைக் கேட்டுக்கொண்

டார்கள். ப்ரும்மாவும் விஷ்ணுவினுடைய தத்வத்தையும் சிவனுடைய தத்வத்தையும் வெகுப்ரகாரமாக தேவர்களுக்கு உபதேசம்செய்து ஸமாதானம்செய்தும், தேவர்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. பிறகு ப்ரும்மாவானவர் நமது உபதேசத்தை தேவர்கள் நம்பமாட்டார்கள், கார்யத்தில் யார் மேல்; யார் கீழ் என்பதைக் காட்டவேண்டும் என்பதைத் தீர்மானித்து விஷ்ணுவிற்கும், ருத்ரனுக்கும் விரோதத்தை உண்டுபண்ண ஆரம்பித்தார்.

ப்ரும்மா ஒரு தினம் விஷ்ணுவினிடம் சென்று விஷ்ணுவைப் பார்த்து 'ஸ்வாமிந்! ருத்ரனுடைய அஹங்காரத்தைச் சொல்லிமுடியாது. 'த்ருபுராஸுரனைக்கொன்று ஜகத்திற்கு க்ஷேமத்தைச் செய்ய நான்தானே முன்வரவேண்டியிருந்தது. விஷ்ணுவால் முடியவில்லையே' என்று கைலாஸத்தில் தன்னிடம் வந்து போனவர்களிடமெல்லாம் உத்கோஷித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய கர்வத்தை சீக்ரம் அடக்கிவிடவேண்டும்?' என்று சொன்னார். இதைக்கேட்ட விஷ்ணுவிற்கு கோபம் ஏற்பட்டு விட்டது. 'ருத்ரனை இப்பொழுதே துலைத்துவிடுகிறேன்' என்று ப்ரதிக்ஞை செய்தார்.

உடன் ப்ரும்மா கைலாஸம் சென்றார். பரமேச்வரனுக்கு ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளைச் செய்துவிட்டு 'பரமேச்வரா! வைகுண்டம் சென்றிருந்தேன். தங்களைப்பற்றி விஷ்ணு மிகவும் நிந்தித்துப் பேசிக்கொண்டிருக்கிறார். சிவநிந்தையைக் காதால் கேட்கக்கூடாதென்று நான் காதைப் பொத்திக்கொண்டு ஓடிவந்துவிட்டேன். இரண்டொரு வார்த்தைகள் மாத்ரம் காதில் பட்டது. அதாவது, த்ருபுராஸுரனை பரமேச்வரன் கொன்றாரென்பது மிகவும் தப்பானது. நான் பாணமாக இல்லாதபோனால், மூன்று கண்களல்ல; ஐந்து கண்களை எடுத்துக்கொண்டாலும் முடியாது. நான்தான் த்ருபுராஸுரனைக் கொன்றவன். தேவர்கள் மூடர்கள். த்ருபுராந்தகன் என்ற திருநாமத்தை இனி

நமக்கு வைத்து அழைக்கவேண்டும்' என்று கர்ஜித்தார். என்று சொன்னார். பரமேச்வரனுக்கு ஸஹிக்கமுடியாத கோபம் ஏற்பட்டுவிட்டது. 'விஷ்ணுவை சாம்பலாகச் செய்துவிடுகிறேன்' என்று ஆரம்பித்துவிட்டார்.

இவ்விதம் ப்ரும்மாவானவர் வைகுண்டத்திற்கும் கைலாஸத்திற்கும் பலதடவை நடந்து சிவனுக்கும், விஷ்ணுவிற்கும் விரோதத்தை முற்றச்செய்துவிட்டார். இதிலிருந்து சிவனுக்கும் விஷ்ணுவிற்கும் பெரியபோர் ஏற்பட்டுவிட்டது. விஷ்ணு மஹாகோபத்துடன் வைஷ்ணவமான வில்லைக் கையில் எடுத்துக்கொண்டு சிவனோடு யுத்தம் செய்து ஹுங்காரத்தால் சிவனுடைய கையிலிருக்கும் வில்லையும் முறியச் செய்து சிவனையும் வ்யாமோஹத்தை அடையும்படி செய்துவிட்டார்.

நீ மிதிலாபுரியில் ஆரோபணம் செய்த வில் அந்த வில்தான். மிதிலாபுரியில் ஜனகமஹாராஜனுடைய கூடஸ்தனான தேவராதன் என்ற அரசன் சிவபக்தாக்ரேஸரனானதினால் தேவர்கள் மூலமாக அந்த ராஜனிடம் அந்த வில் கொடுக்கப்பட்டு பூஜிக்கப்பட்டு வந்தது. அதைத்தான் நீ முறித்தாய். விஷ்ணுவினுடைய கையிலிருந்த வைஷ்ணவமான வில் இதோ என் கையிலிருக்கின்றது பார்" என்று கர்வத்துடன் பரசுராமர் ராமனிடம் சொன்னார்.

जृम्भितं तद्धनुर्दृष्ट्वा शैवं विष्णुपराक्रमैः ।
अधिकं मेनिरे विष्णु देवाः सर्षिगणास्तदा ॥

𑌜𑍃𑌮𑍍𑌭𑌿𑌤𑌂 𑌤𑌦𑍍𑌧𑌨𑍁𑌰𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌶𑍈𑌵𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑍈𑌃 ।
𑌅𑌧𑌿𑌕𑌂 𑌮𑍇𑌨𑌿𑌰𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌦𑍇𑌵𑌾𑌃 𑌸𑌰𑍍𑌷𑌿𑌗𑌣𑌾𑌸𑍍𑌤𑌦𑌾 ॥

ஜ்ரும்பிதம் தத்தநுர்த்ருஷ்ட்வா சைவம் விஷ்ணுபராக்ரமை: ।
அதிகம் மேநிரே விஷ்ணும் தேவா: ஸர்ஷிகணாஸ்ததா ॥

என்று பரசுராமர் ஸ்ரீராமனைப் பார்த்துச் சொல்கிறார். அதாவது, " ராமா! 'ஜனகமஹாராஜாவினுடைய ஸபையில் சிவதனுஸ்ஸை முறித்தவன் நான்' என்ற அஹங்காரம்

உனக்கு வேண்டாம். முன்காலத்தில் தேவாளுக்கு, ஹரி, ஹராளுக்குள் யார் மேலான தெய்வம் என்றுதெரிந்து கொள்ள ஆவல் ஏற்பட்டது. உடன் விச்வகர்மாவை அழைத்து இரண்டு உயர்ந்த விற்களை நிர்மாணம் செய்யச் சொன்னார்கள். அந்த இரண்டில் ஒன்றை சிவனிடத்திலும் மற்றொன்றை விஷ்ணுவினிடத்திலும் கொடுத்துவிட்டு அவ் விருவர்களுக்கும் பெரிய யுத்தம் ஏற்படும்படிச் செய்து விட்டார்கள். அவ்விதம் வெகுகாலம் போர் நடந்துகொண் டிருக்கும்பொழுது, மஹாவிஷ்ணுவினுடைய ஹுங்காரத்தி னால் பரமசிவன் ஸ்தம்பித்துப்போய் அபஜயத்தை அடைந்து விட்டார். அப்போது மஹாதேவ சப்தமானது மஹாவ்ரு க்ஷம் என்ற சப்தத்திற்கு ஸமானமாக ஆகிவிட்டது. அப் போது மஹர்ஷிகள் எல்லோரும் ஒன்றுகூடிச் சேர்ந்து மஹாவிஷ்ணுதான் பராக்ரமத்திலோ, ஞானத் திலோ மற்ற ஸகலவிதமான கல்யாண குணங்களிலோ, மேலான பொருள் என்று தீர்மானம் செய்துவிட்டார்கள்." என்று பரசுராமர் ஸ்ரீராமனிடம், சொல்லியிருக்கும் வார்த்தைகளில், சிவபக்தி இல்லாதவர்களுக்கு பரம ஸந் தோஷம் ஏற்பட்டு அதை ஒன்றுக்கு பத்தாக இவர்களே வ்யாக்யானம் செய்துகொண்டு, சிவபக்தசிரோமணிகளை அல்ப புத்தியோடு கூடினவர்களாகவும் நினைத்து பரிஹாஸ மும் செய்கிறார்கள்.

அதனுடைய உண்மை எப்படியென்று விசாரிக்கவேண் டியது மிகவும் அவச்யமாக இருக்கிறது. பரசுராமர் ஸ்ரீராமனைப் பார்த்துச் சொல்லும்பொழுதோ,

त्रिपुरघ्नं नरश्रेष्ठ भग्नं काकुत्स्थयत्वया ।

த்ரிபுரக்நம் நரச்ரேஷ்ட பக்நம் காகுத்ஸ்தயத்வயா ।

த்ரிபுரக்நம் நரச்ரேஷ்ட பக்நம் காகுத்ஸ்தயத்வயா ।

என்ற வாக்யத்தால் ஸ்ரீராமனை நரச்ரேஷ்டன் என்று ஸம்போதனம் செய்துகொண்டு "ராமா! ஜனகமஹாராஜா

வினுடைய ஸபையில் உன்னால் முறிக்கப்பட்ட வில்லோ, ஸாமான்யமான தனுஸ்ஸல்ல. பரமசிவன் எந்த தனுஸ்ஸை வைத்துக்கொண்டு த்ரிபுராஸுரர்களை ஸம்ஹரித்தாரோ, அப்பேர்ப்பட்ட தனுஸ் அது" என்று சொல்கிறார். இதனால், அளவற்ற பராக்ரமசாலிகளாயும், தேவாஸுரர்களால் ஜயிக்கமுடியாதவர்களாயும் இருக்கும் த்ரிபுராஸுரர்களைக் கூட வதம் செய்து, லோகத்திற்கு க்ஷேமத்தை உண்டு பண்ணினவர் பரமசிவக்கடவுளே என்று பரமசிவனுடைய பரதத்வமும் பரசுராமருடைய வாக்கினாலேயே, ஸூசிப் பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு விரோதமில்லாமல் जृम्भितं तद्धनुर्दृष्ट्वा (ஜ்ரும்பிதம் தத்தநுர் த்ருஷ்ட்வா) (ஜ்ரும்பிதம் தத்தநுர் த்ருஷ்டவா) என்ற ச்லோகத்திற்கு அர்த்தத்தை வர்ணிக்க வேண்டும். அவ்விதம் விரோதமில்லாமலிருக்கும் அர்த் தமோ, த்ரிபுராஸுரர்களைக் கொன்றதிலிருந்து பரமசிவனை உத்க்ருஷ்டமான தெய்வம் என்று, தேவகோடிகளெல்லோ ரும் தீர்மானித்திருந்தார்கள். அதுபோல் விஷ்ணுவை உத் க்ருஷ்ட தேவதையென்று தீர்மானிக்க, வேறு ஒரு ஸமய மும் ஏற்படவில்லை. விஷ்ணுவுக்கும் சிவனுக்கும், யுத்தம் நடக்கும்பொழுது, பரமசிவனுடைய கையிலிருந்த தனுஸ் ஸானது விஷ்ணுவினுடைய ஹுங்காரத்தினால் முறிந்தவுடன், விஷ்ணுவையும் உத்க்ருஷ்டமான தெய்வம்தான் என்று தீர்மானித்தார்கள். அந்த இருவர்களுக்குள் ஒருவர் கீழ், ஒருவர் மேல் என்று தீர்மானித்தார்கள் என்று அந்த ச்லோகத்திற்கு அர்த்தம் சொல்லமுடியாது. சிவனை ஒரு ஸமயத்தில் மேலான தெய்வம் என்று தீர்மானித்தார்கள். மற்றொரு ஸமயத்தில் அவ்விதமே விஷ்ணுவையும் மேலான தெய்வம் என்று தீர்மானம் செய்தார்கள். ஆகையால் இரு வர்களும் ஸமானமான தேவதைகளே என்று தான் அறிய வேண்டும். த்ரிபுராஸுரர்களோடு பரமசிவன் யுத்தம் செய் யும்பொழுது, மஹாவிஷ்ணுவானவர் அபகர்ஷத்தை (தாழ் மையைத்தான்) அடைந்திருந்தார். பரமசிவனுக்குத்தான் உத்கர்ஷபாவம் ஏற்பட்டிருந்தது. அதை எந்த வாதிகளும்

தடுக்கமுடியாது. விஷ்ணுவுக்கு அபகர்ஷமும், சிவனுக்கு உத்கர்ஷமுமுள்ள அந்தக் கதையை நம்பாமல் சிலர்கள் முரட்டுப்பிடிவாதம் பிடித்தால், சிவனுக்கு அபகர்ஷத்தையும் விஷ்ணுவிற்கு உத்கர்ஷத்தையும் சொல்கிற இந்த ராமாயணக் கதையை யார்தான் நம்புவார்கள்?

அத்துடன் த்ரிபுராஸுரவதத்தில் பரமசிவனுடைய வில்லுக்கு மஹாவிஷ்ணுவானவர் பாணமாக இருந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாணத்திற்கு ப்ராதான்யமா? பாணத்தை தொடுக்கிற வில்லாளிக்கு ப்ராதான்யமா? இதைச் சொல்லியிருக்கும் கவியானவர் ஸாமான்யமானவரா? ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவினுடைய அம்சாவதாரமாகிய வேத வ்யாஸர்தான்.

मौर्वी मूर्ध्निरथः शरासनशिरस्संचारि चक्रद्वयं चक्रान्तर्निहितश्शरः
तदुदरे सूतः तदास्ये हयाः ।
तेषामेव शिरःपदेषु वसतिः स्वस्येति यस्यश्रुतं देवः चित्रपरिच्छदः
सभगवान् कुर्यात् सदामङ्गलम् ॥

𑌮𑍌𑌰𑍍𑌵𑍀 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌿𑌰𑌥𑌃 𑌶𑌰𑌾𑌸𑌨𑌶𑌿𑌰𑌸𑍍𑌸𑌂𑌚𑌾𑌰𑌿 𑌚𑌕𑍍𑌰𑌦𑍍𑌵𑌯𑌂
𑌚𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌨𑌿𑌹𑌿𑌤𑌶𑍍𑌶𑌰𑌃 𑌤𑌦𑍁𑌦𑌰𑍇 𑌸𑍂𑌤𑌃 𑌤𑌦𑌾𑌸𑍍𑌯𑍇 𑌹𑌯𑌾𑌃 ।
𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵 𑌶𑌿𑌰𑌃 𑌪𑌦𑍇𑌷𑍁 𑌵𑌸𑌤𑌿𑌃 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑍇𑌤𑌿 𑌯𑌸𑍍𑌯𑌶𑍍𑌰𑍁𑌤𑌂
𑌦𑍇𑌵𑌃 𑌚𑌿𑌤𑍍𑌰𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌦𑌃 𑌸𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍
𑌸𑌦𑌾𑌮𑌙𑍍𑌗𑌳𑌮𑍍 ॥

மௌர்வீ மூர்த்நிரத: சராஸநசிரஸ்ஸம்சாரி சக்ரத்வயம்
சக்ராந் தர்நிஹிதச்சர: ததுதரே ஸூத: ததாஸ்யே ஹயா: ।
தேஷாமேவ சிர: பதேஷு வஸதி: ஸ்வஸ்யேதி யஸ்யச்ருதம் தேவ:
சித்ரபரிச்சத: ஸபகவாந் குர்யாத் ஸதாமங்களம் ॥

என்று வ்யாஸாசார்யாள் பரமசிவன் த்ரிபுராஸுரர்களோடு யுத்தம் செய்யுங்காலத்திலுள்ள பெருமையை வர்ணித்திருக்கிறார். பூமிதேவியானவள் ரதமாகவும், சந்த்ர ஸூர்யர்கள் இரண்டு சக்ரங்களாகவும், மஹாமேருபர்வதம் வில்லாகவும்,

ஸூர்யமண்டலத்தின் நடுவிலுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவான வர் பாணமாகவும், ப்ரும்மாவானவர் ஸாரதியாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும், த்ரிபுரவதத்தில் பரமசிவ னுக்கு யுத்த பரிகரமாக விளங்கிவந்தது. அந்த பரம சிவன்தான் வேதாந்த வேத்யன். அந்த ப்ரபுவானவன் ஸர்வ விதமான மங்களத்தையும் கொடுக்கட்டும், என்றுதான் இந்த ச்லோகத்தின் தாத்பர்யமாகும்.

இவ்விதம் த்ரிபுராஸுரயுத்த காலத்தில் பரமசிவனுக்கு பாணமாக இருந்து அபகர்ஷத்தை அடைந்துவந்த மஹா விஷ்ணுவிற்குத் தானும் ஒரு ஸமயத்தில் அபகர்ஷத்தை அடையவேண்டும் என்று நினைத்த பரமசிவன், விஷ்ணுவி னுடைய ஹுங்காரத்தினுல் தன் கையிலிருந்த வில் முறிந்த காரணத்தினுல் விஷ்ணுவிற்குத் தானும் அபகர் ஷத்தை அடைந்து விஷ்ணுவினுடைய உத்கர்ஷத்தை யும் ப்ரகாசப்படுத்தினுர். விஷ்ணு அபகர்ஷத்தை அடைந்து பரமசிவனுக்கு உத்கர்ஷத்தை ப்ரகாசம் செய்து உபகாரம் செய்தாரல்லவா, அதுபோல் பரம சிவனும் மஹாவிஷ்ணுவிற்கு ப்ரத்யுபகாரம் செய்தார். தேவரஹஸ்யத்தை யார்தான் அறியமுடியும்! அந்தந்த புரா ணங்கள் அந்தந்த தேவதையைத்தான் மேலாகச் சொல் லும். புராணத்தின் மார்கமே அதுதான். அதனுல் ஒருவர் மேல், ஒருவர் கீழ் என்று நினைக்கக்கூடாது. எல்லா தெய்வங்களும் ஸமானமான வைபவங்களோடு கூடினவர் களே. ஒரே அகண்டமான பரப்ரம்மம்தான், வ்யவஹார தசையில் வெவ்வேறு தேவதைகளைப்போல் தோன்றுகிறது. அதில்,

त्वन्मायया संवृत चेतसस्त्वां पश्यन्ति नाना नविपश्चितोये ॥

க்வந்மாயயா ஸம்வ்ருத சேதஸஸ்த்வாம் பஸ்யந்தி நாநா
நவிபஸ்சிதோயெ ॥

த்வந்மாயயா ஸம்வ்ருத சேதஸஸ்த்வாம் பச்யந்தி நாநா நவிபச்சிதோயே ॥

என்ற ஸ்ரீமத் பாகவத வசனமே ப்ரமாணமாகும். தேவகீ யினுடைய கர்பத்தில் ஸ்ரீபகவான் வஸிக்கும்பொழுது, ப்ரும்

மாதி தேவர்கள் வந்து சேர்ந்து ஸ்துதிக்கும் ச்லோகங்களில் இந்த ச்லோகம் ஒன்ருகும். "ஹே பகவன்! உன் மாயையினுல் மூடப்பட்ட அவிவேகிகள்தான் உன்னை அநேக ரூபமாகப் பார்ப்பார்களே தவிர, எவர்கள் வித்வான்களோ அவர்கள் உன்னை ஒரே ரூபமாகத்தான் பார்ப்பார்கள்" என்று அந்த ச்லோகத்தின் தாத்பர்யத்தை அறியவும்.

ஆகையால் விஷ்ணுவோ, சிவனே இருவரும் ஒரே தத்வந்தான். த்வேஷ புத்தியே முமுக்ஷுக்களுக்கு முற்றிலும் கூடாது. தவிரவும், अधिकं मेनिरे विष्णुं (அதிகம் மேநிரே விஷ்ணும்) (அதிகம் மேநிரே விஷ்ணும்) என்ற இடத்தில் விஷ்ணுவை தேவர்களும், ரிஷிகளும், உத்க்ருஷ்டமாக நினைத்தார்கள். அந்த உத்கர்ஷதையின் நிச்சயத்திற்கு பரமசிவனுடைய கையிலிருந்த வில்லானது விஷ்ணுவினுடைய ஹுங்காரத்தினுல் முறிந்ததே காரணமாகும். அந்த உத்கர்ஷதையின் நிச்சயத்தால் இதற்குமுன் விஷ்ணுவினிடத்தில் தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் அபகர்ஷதையின் ப்ரமம் இருந்தது. இவ்விதமான உத்கர்ஷதா நிச்சயத்தினுல் மேற்சொன்ன ப்ரமம் நிவ்ருத்தி அடைந்ததே தவிர, சிவனிடத்தில் ஒரு அபகர்ஷதையை அந்த நிச்சயமானது உண்டுபண்ணுது. ஞானமானது தனக்கு விரோதியான அக்ஞானத்தைத் துலைக்குமே தவிர, மற்ெருரு இடத்தில் உத்கர்ஷதையையோ, அபகர்ஷதையையோ உண்டு பண்ணுது. அதனுல்தான் இந்த ச்லோகத்தில் விஷ்ணுவை அதிகமாக நினைத்தார்கள் என்று மட்டும் சொல்லியிருக்கிறதே தவிர, 'சிவனைக்காட்டிலும்' என்று பதம் இல்லை. தேவர்களுக்கோ, ரிஷிகளுக்கோ, இந்தமாதிரி சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் யுத்தம் ஏற்படுவதற்கு முன்பு விஷ்ணு ஒரு ஸாமான்ய தேவதை என்ற எண்ணமிருந்தது. இந்த யுத்தத்திற்குப் பிறகு, விஷ்ணுவை நாம் அவ்விதம் நினைத்தது பிசகு. விஷ்ணுவும் உத்க்ருஷ்டமான தேவதைதான் என்ற

எண்ணம் உதயமாயிற்று. இதன்னியில், சிவனை கீழான தேவதை என்று சொல்ல அந்த ச்லோகம் ஆரம்பிக்கவில்லை. விஷ்ணுவை அதிகமாக எண்ணினர்கள் என்பதற்கு 'எதைக் காட்டிலும்' என்ற கேள்வி ஒன்று ஏற்படுமே? அதற்கு ஸமாதானமாக வ்யாக்யானந்தரத்தில்,

स्वीय पूर्वज्ञानविषयस्वरूपापेक्षया अधिकं इत्यर्थः ॥

𑌸𑍍𑌵𑍀𑌯 𑌪𑍂𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑌾 𑌅𑌧𑌿𑌕𑌂
𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

ஸ்வீய பூர்வக்ஞாநவிஷயஸ்வரூபாபேக்ஷயா அதிகம் இத்யர்த: ॥

என்று ஸ்பஷ்டமாக காணப்படுகிறது. ஆனல் பரமசிவனை மேல் என்று நினைப்பதற்கு த்ரிபுராஸுரவதம் என்ற ஒரு ஸந்தர்ப்பம் நேர்ந்ததுபோல், இதுவரையில் விஷ்ணுவையும் மேல் என்று நினைக்க ஒருவித ஸந்தர்ப்பமும் ஏற்படவில்லை. ஆகையால் இந்த ஸமயம் விஷ்ணுவை மேலாக நினைத்தார்கள்.

ஆகையால் விஷ்ணுவோ, சிவனோ, இருவர்களுக்குள், ஒருவர் மேல் ஒருவர் கீழ் என்பதே கிடையாது. உண்மையில் சிவனும் விஷ்ணுவும் யுத்தம் செய்யுங் காலத்தில், சிவன் பராஜயத்தையடைந்திருந்தால், பராஜயத்தை அடைந்த பரமசிவனிடத்தில் போய், தேவர்களும் ரிஷிகளும் யுத்தத்தை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று யாசிக்க ந்யாயமில்லையே. ஜயத்தை அடைந்த விஷ்ணுவைத்தானே எல்லோரும் போய் யுத்தத்தை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்று யாசிக்கவேண்டும். அடிக்கிறவனைக் கெஞ்சவேண்டுமே தவிர, அடிபட்டவனை யாசிப்பதுண்டா? இது லோக ப்ரஸித்தமான விஷயம். ப்ரக்ருதத்திலோ,

देवैस्तदा समागम्य सर्षिसङ्घैः सचारणैः ।
याचितौ प्रशमंतत्र जग्मतुः तौसुरोत्तमौ ॥

𑌦𑍇𑌵𑍈𑌸𑍍𑌤𑌦𑌾 𑌸𑌮𑌾𑌗𑌮𑍍𑌯 𑌸𑌰𑍍𑌷𑌿𑌸𑌙𑍍𑌘𑍈𑌃 𑌸𑌚𑌾𑌰𑌣𑍈𑌃 ।
𑌯𑌾𑌚𑌿𑌤𑍌 𑌪𑍍𑌰𑌶𑌮𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌜𑌗𑍍𑌮𑌤𑍁𑌃 𑌤𑍌 𑌸𑍁𑌰𑍋𑌤𑍍𑌤𑌮𑍌 ॥

தேவைஸ்ததா ஸமாகம்ய ஸர்ஷிஸங்கை: ஸசாரணை: ।
யாசிதௌ ப்ரசமம்தத்ர ஜக்மது: தௌஸுரோத்தமௌ ॥

என்ற ச்லோகமும் ராமாயணத்திலேயே காணப்படுகிறது. தேவர்களும் ரிஷிகளும், சிவன் விஷ்ணு இருவர்களேயும் ப்ரார்த்தித்து யுத்தத்தை நிறுத்திக்கொள்ளும்படி கேட்டுக் கொண்டதிலிருந்து, தேவச்ரேஷ்டர்களான அந்த இருவர் களும் உபரதியை அடைந்தார்கள் என்று இந்த ச்லோ கத்தின் தாத்பர்யமாகும். சிவனும் விஷ்ணுவும் ஸமான மான யோக்யதை யுள்ளவர்கள்தான் என்பதற்கு இந்த ஒரு அத்தாக்ஷியே போதாதா? ஆகையால் தேவதை விஷ யத்தில் மேல் கீழ் என்ற பாவத்தை விட்டுவிட்டு, ஒரே அகண்டமான வஸ்து தான் வ்யவஹாரதசையில் பல தேவதைகளேப்போல் தோன்றுகிறது என்றதுதான் சாஸ்த்ர ஸம்மதமான ரஹஸ்யம். தவிரவும்,

जृम्भितं तद्धनुर्दृष्ट्वा शैवं विष्णुपराक्रमैः ।
अधिकं मेनिरे विष्णुं देवाः सर्षिगणास्तदा ॥

𑌜𑍃𑌮𑍍𑌭𑌿𑌤𑌂 𑌤𑌦𑍍𑌧𑌨𑍁𑌰𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌶𑍈𑌵𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑍈𑌃 ।
𑌅𑌧𑌿𑌕𑌂 𑌮𑍇𑌨𑌿𑌰𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌦𑍇𑌵𑌾𑌃 𑌸𑌰𑍍𑌷𑌿𑌗𑌣𑌾𑌸𑍍𑌤𑌦𑌾 ॥

ஜ்ரும்பிதம் தத்தநுர்த்ருஷ்ட்வா சைவம் விஷ்ணுபராக்ரமை: ।
அதிகம் மேநிரே விஷ்ணும் தேவா: ஸர்ஷிகணாஸ்ததா ॥

என்ற இந்த ச்லோகத்தால் ஸ்ரீவைஷ்ணவாளுடைய ஸித் தாந்த ப்ரகாரம் சிவனே அபேக்ஷித்து விஷ்ணுதான் மேலான தேவதை என்பதற்குள்ள அபிப்ராயமும் ப்ரகாசப்படுத்தப் படுகிறது. விஷ்ணுவினுடைய ஹுங்காரத்தால் பரமசிவன் நடுங்கி அவருடைய கையில் இருக்கப்பட்ட வில்லும் முறிந்து கீழே விழுந்தது. பரமசிவனும் வ்யாமோஹத்தை

அடைய நேர்ந்ததைக் கவனித்தால் விஷ்ணுதான் மேலான தெய்வம் என்பதை நிர்ணயிக்கக்கூடும்.

அதுபோலவே தேவர்களும் ரிஷிகளும் இந்த யுத்தத்தினின்றும் விஷ்ணுவை மேலான தெய்வமென்று நினைத்தார்கள் என்ற பொருள் வெளியாகிறதன்னியில் சிவனைக்காட்டிலும் மேலான தெய்வம் என்ற பொருளை விளக்க யாதொரு சப்தமுமில்லை; தேவர்களுக்கோ ரிஷிகளுக்கோ முன்பு விஷ்ணுவினிடமிருந்த அபகர்ஷத புத்தியானதுபோய் உத்க்ருஷ்ட புத்தியானது ஏற்பட்டது. அதனால் சிவனுடைய உத்க்ருஷ்டத்வத்தை இது குறைக்காது என்ற ஸித்தாந்தமே சைவாளுடைய ஸித்தாந்தமாகும். இவ்விதம் வைஷ்ணவர்களும் சைவர்களும் முரண்பிடிப்பது தப்பாகும்.

शिवस्य हृदयं विष्णुः विष्णोस्तु हृदयं शिवः ।
हरिरेव हरस्साक्षात् हरयेव हरिस्स्वयं ॥
तयोरभ्यन्तरं ज्ञत्वा रौरवेषु सपच्यते

𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌸𑍍𑌤𑍁 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌶𑌿𑌵𑌃 ।
𑌹𑌰𑌿𑌰𑍇𑌵 𑌹𑌰𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌹𑌰𑌯𑍇𑌵 𑌹𑌰𑌿𑌸𑍍𑌵𑌯𑌂 ॥
𑌤𑌯𑍋𑌰𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌰𑍌𑌰𑌵𑍇𑌷𑍁 𑌸𑌪𑌚𑍍𑌯𑌤𑍇

சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு: விஷ்ணோஸ்து ஹ்ருதயம் சிவ: ।
ஹரிரேவ ஹரஸ்ஸாக்ஷாத் ஹரயேவ ஹரிஸ்வயம் ॥
தயோரப்யந்தரம் ஞத்வா ரௌரவேஷு ஸபச்யதே

என்றது முதலான சாஸ்த்ரங்களால் விஷ்ணுவும் சிவனும் ஒரே தத்வம் என்று தெரிகிறபடியால், அத்வைத ஸித்தாந்தந்தான் மனஸ் ஸமாதானத்திற்கு ஹேதுபூதமான ஸித்தாந்தம் என்பதை அபிக்ஞர்கள் அறியவேண்டும்.

இது நிற்க, 'என்னுடைய வில்லையும் நீ வளைத்து நாண் கயிற்றைப் பூட்டி பாணத்தைத் தொடுத்துவிட்டால் முஷ்டி யுத்தமும் உன்னுடன் செய்யப்போகிறேன்' என்று பரசுராமர் சொன்னார்.

இவ்விதம் பரசுராமருடைய வார்த்தைகளைக் கேட்ட ஸ்ரீராமனே பரசுராமரைப் பார்த்து "ப்ராம்மணோத்தமா! உமது தகப்பனாரான ஜமதக்னி மஹர்ஷியை கார்த்த வீர்யார்ஜுனன் கொன்ற காரணத்திற்காக க்ஷத்ரியாளுடைய பூண்டையே அழிப்பதற்கு ஸங்கல்பம் செய்துகொண்டு அவ்விதம் நீர் செய்தது க்ஷத்ரியதர்மமல்லவா? அதை நானும் அனுஸரிக்கின்றேன். என்னிடத்தில் உமக்கு த்வேஷ புத்தி ஏற்படுகிறது. என்னுடைய பராக்ரமத்தையும் நீர் பார்க்க லாம். உம்முடைய கையில் இருக்கப்பட்ட வில் வைஷ்ணவ மான வில்லாகும். அதை விஷ்ணுவானவர் ரிசீகமஹர்ஷி யினிடம் கொடுத்தார். அவர்மூலம் உமது பிதாவான ஜம தக்னி மஹர்ஷியினிடம் வந்து, அது உம்முடைய கையில் பாஸித்து வருகிறது" என்று சொல்லிவிட்டு ஸ்ரீராமனும் கோபத்துடன் அவர் கையிலிருக்கும் வில்லை அனுயாஸமாகப் பிடுங்கி, பாணத்தையும் பிடுங்கி, அந்த வில்லை நாண் கயிற் றுல் வளைத்துப் பூட்டி பாணத்தையும் தொடுத்து ஸஜ்ஜ மாக நின்றுகொண்டு பரசுராமரைப் பார்த்து "நீர் ப்ராம் மணனாக இருக்கிறீர். உம்மிடத்தில் இந்த பாணத்தை ப்ர யோகம் செய்து உம்மை வதிக்க எனக்கு மனம் வரவில்லை. அத்துடன் விச்வாமித்ரருடைய ஸம்பந்தம் உமக்கிருக்கிறது. விச்வாமித்ரருடைய தங்கையான ஸத்யவதீ என்ற ஸ்த்ரீயை ரிசீக மஹர்ஷி கல்யாணம் செய்துகொண்டார். அவளிடத் தில் ரிசீக மஹர்ஷிக்குப் பிறந்த பிள்ளையே உமது தகப்ப னாரான ஜமதக்னி மஹர்ஷியாகுவார். உம்முடைய தகப்பனா ருக்குவிச்வாமித்ர மஹர்ஷி மாமாவல்லவா. நீர் விச்வாமித்ர ருக்கு மருமானுடைய பிள்ளையாக ஆகிறீர். விச்வாமித்ரரோ எனக்கு வித்யாகுரு. அவருடைய ஸம்பந்தம் உம்மிடமிருப் பதினால், உம்மிடத்தில் பாணப்ரயோகம் செய்து உம்மைக் கொல்ல எனக்கு மனம்வரவில்லை" என்று கோபத்துடன் ராமன் சொல்லிவிட்டு "உம்முடைய பாதகதியை பாண ப்ரயோகம் செய்து அழித்துவிடுகிறேன். ஸஞ்சாரம் செய் வதைப் பார்ப்போம்!" என்றும் சொன்னார்.

இந்த ஸந்தர்ப்பத்தில் ஸகலதேவர்களும், ரிஷிகளும், யக்ஷர்களும் பந்நகர்களும், அஸுரர்களும் ஆகாசத்தில் கூட்டங் கூட்டமாக வந்து இந்த ஆச்சர்யத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பரசுராமனும் நடுங்கிவிட்டார். "ராமா! என் பாதகதியை நீ தடுக்காதே. நான் இதற்கு முன்பு ராஜாக்களைக் கொன்று, இந்த பூமி முழுமையும் என்வசமானவுடன் அதை காச்யப ப்ரஜாபதிக்கு தானம் செய்துவிட்டேன். காச்யப ப்ரஜாபதியோ தானம் வாங்கிக்கொண்ட பிறகு "என் பூமியாக ஆகிவிட்டது, நீ இனி இங்கிருக்கக் கூடாது" என்று சொல்லிவிட்டார். அதனால் இந்த பூமியில் நான் வஸிப்பது ந்யாயமில்லை. என் பாத கதியை நீ தகைத்துவிட்டால் நான் வேறிடம் போகமுடியாமல் இங்கேயே இருக்கும்படி நேரிட்டுவிடும். உன்னிடம் நான் கோபத்தைக்காட்டியது தப்பிதந்தான். உன்னிடத்தில் நான் அபஜ்யத்தை அடைந்ததினால் எனக்கு யாதொரு குறைவுமில்லை. பெரிய ஸமுத்ர ஜலத்தில் நதி ஜலம் அடங்குவது ந்யாயமல்லவா! மனோவேகமாக மஹேந்த்ர பர்வதத்திற்கு தபஸ்ஸிற்குப்போய் விடுகிறேன். என்னுடைய பாத கதியை தடுக்கக்கூடாது. ஆனால் உன் கையினால் தொடுக்கப்பட்ட பாணமும் பயனற்றதாக ஆகக் கூடாது. தபஸ்ஸினால் நான் எவ்வளவோ புண்யலோகங்களை ஜயித்து வைத்திருக்கிறேன். அந்த லோகங்களை நீ தான் கொடுக்கவோ தடுக்கவோ ஸாமர்த்யமுள்ளவன். உன்னுடைய தர்சனத்தால் நான் தத்வதர்சியாக ஆகிவிட்டேன். அந்த லோகங்களால் யாதொருவித ப்ரயோஜனமும் எனக்கில்லை. ஆகையால் அந்த லோகங்களை நீ உன் பாணத்திற்கு இரையாக வைத்துக்கொண்டு என்னை விட்டுவிடு. மதுகைடபாளைக் கொன்ற ஆதி மஹாவிஷ்ணுவென்றே உன்னை நான் அறிகிறேன். இல்லாவிடில் இவ்வில்லைத் தொடமுடியாது. தேவர்கள், ரிஷிகள் முதலியவர்களும் ஆகாசத்திலிருந்துகொண்டு வேடிக்கைபார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெதிரிலேயே நான்

பராபவத்தை அடைந்தேன். பாணத்தால் என்னுடைய புண்ய லோகங்களை அழிக்க யத்னம் செய்தவுடன் நான் மஹேந்த்ர பர்வதம் போய்ச்சேருகிறேன்" என்று பரசு ராமர் வணக்கமாகக் கேட்டுக்கொண்டார்.

ராமனும் பாணத்தால் பரசுராமருடைய பரலோக ஸாதனமான புண்யகர்மாக்களைச் த்வம்ஸம்செய்து விபல மாகச் செய்தார். பரசுராமரும் ராமனிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு, தானும் விஷ்ணுவினுடைய ஏகதேச அம்ச மானதினால் இனி தன்னிடத்தில் அந்த அம்சம் இருக்க வேண்டியதில்லை என்று தீர்மானித்து தன்னிடத்திலுள்ள வைஷ்ணவமான ஏக அம்சத்தையும் ஸ்ரீராமனிடத்திலேயே அர்ப்பணம் செய்துவிட்டு, கேவலம் உபாஸகனான ஜீவ நிலையில் மஹேந்த்ர பர்வதத்திற்கு தபஸ் செய்யப் புறப்பட்டு விட்டார். பரசுராமனிடத்திலுள்ள வைஷ்ணவமான தேஜஸ் ஸ்ரீராமனிடத்தில் அந்தர்கதமாக ஆகிவிட்டது என்பதில்,

ततः परशुरामस्य देहान्निर्गत्य वैष्णवं ।
पश्यतां सर्वदेवानां तेजो रामं उपाविशत् ॥

𑌤𑌤𑌃 𑌪𑌰𑌶𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌦𑍇𑌹𑌾𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑍍𑌯 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂 ।
𑌪𑌶𑍍𑌯𑌤𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌤𑍇𑌜𑍋 𑌰𑌾𑌮𑌂 𑌉𑌪𑌾𑌵𑌿𑌶𑌤𑍍 ॥

தத: பரசுராமஸ்ய தேஹாந்நிர்கத்ய வைஷ்ணவம் ।
பச்யதாம் ஸர்வதேவாநாம் தேஜோ ராமம் உபாவிசத் ॥

என்ற ந்ருஸிம்ம புராண வசனமே ப்ரமாணமாகும். தேவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே பரசுராமருடைய சரீரத்திலிருந்து வைஷ்ணவமான தேஜஸ் வெளிக் கிளம்பி ஸ்ரீராமனுடைய ஸ்வரூபத்தில் அந்தர்த்யானத்தை அடைந்தது என்பதே மேற்சொன்ன ச்லோகத்தின் அர்த்தமாகும். ராமாயணத்திலேயே,

निर्वीर्यो जामदग्न्योऽसौ रामो राममुदैक्षत

𑌨𑌿𑌰𑍍𑌵𑍀𑌰𑍍𑌯𑍋 𑌜𑌾𑌮𑌦𑌗𑍍𑌨𑍍𑌯𑍋𑌸𑍌 𑌰𑌾𑌮𑍋 𑌰𑌾𑌮𑌮𑍁𑌦𑍈𑌕𑍍𑌷𑌤

நிர்வீர்யொ ஜாமதக்ந்யோஸௌ ராமோ ராமமுதைக்ஷத

என்ற ச்லோகத்தில் निर्वीर्यः (𑌨𑌿𑌰𑍍𑌵𑍀𑌰𑍍𑌯𑌃) (நிர்வீர்ய:) என்ற பதத்தால் வால்மீகி மஹர்ஷியும் மேற்சொன்ன தத்வத்தை ஸூசிப்பித்திருக்கின்றார்.

இவ்விதம் பரசுராமர் அபஜயத்தை அடைந்து மஹேந்த்ர பர்வதம் சென்றவுடன் திக்குகளெல்லாம் ப்ரஸந்நமாக ஆகிவிட்டன. தேவர்களும், ரிஷிகளும் ஆகாசத்திலிருந்து தேவலோக பாரிஜாத புஷ்பத்தால் ராமனை பூஜித்தார்கள். ஜயக்கொண்டாட்டமும் கொண்டாடினார்கள்.

தசரதரும் பரம ஸந்தோஷத்தை அடைந்து ராமனை ஆலிங்கனம் செய்துகொண்டு ராமனை புதிதாகப் பிறந்ததாக நினைத்து ஸந்தோஷத்தை அடைந்தார். வஸிஷ்ட பகவான் முதலானவர்களும் ராமனை பூஜித்து பரம ஆசீர்வாதம் செய்தார்கள். சதுரங்க ஸேனைகளும் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கின. தசரத ராஜனுடைய ஆக்ஞையை அனுஸரித்து ஸேனைகள் ஸந்தோஷமனதுடன் அயோத்யா நகரத்திற்கு அபிமுகமாகச் சென்றன.

பாலகாண்டத்தில் ராமாவதார கட்டத்தில்,

एतस्मिन्नन्तरे विष्णुः उपयातो महाद्युतिः····जगत्पतिः

𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌨𑍍𑌤𑌰𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌉𑌪𑌯𑌾𑌤𑍋 𑌮𑌹𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃...𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑌿𑌃

ஏதஸ்மிந்நந்தரே விஷ்ணு: உபயாதோ மஹத்யுதி:...ஜகத்பதி:

என்ற ச்லோகத்தில் जगत्पतिः (𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑌿𑌃) (ஜகத்பதி:) என்ற விசேஷணத்தால் மஹாவிஷ்ணுவே பரவஸ்து என்று சொல்லப்பட்டது. பிறகு விச்வாமித்ரருடைய ஸமாகம கட்டத்தில், अहं वेद्मि महात्मानं (𑌅𑌹𑌂 𑌵𑍇𑌦𑍍𑌮𑌿 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂) (அஹம் வேத்மி மஹாத்மாநம்) என்ற ச்லோகத்தால் விஷ்ணுவே

பரவஸ்து என்பதில் புருஷஸூக்த வாக்யமே ப்ரமாணமாகும் என்று சொல்லப்பட்டது. பிறகு விச்வாவாமித்ர மஹர்ஷியானவர் ராமனுக்கு ஸித்தாச்ரமத்தினுடைய வ்ருத்தாந்தங்களைச் சொல்லிக்கொண்டிருக்கும் ஸந்தர்ப்பத்தில் ஸாக்ஷாத் காச்யப ப்ரஜாபதியானவர் ஸித்தாச்ரமத்தில் தபஸ்ஸைச் செய்து வரும் மஹாவிஷ்ணுவை வாமனுவதாரம் செய்வதற்காக ஸ்தோத்ரம் செய்யும் அவஸரத்தில்,

शरीरे तव पश्यामि जगत्सर्वमिदं प्रभो ।
त्वं अनादिः अनिर्देश्यः त्वामहं शरणं गतः ॥

𑌶𑌰𑍀𑌰𑍇 𑌤𑌵 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌜𑌗𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑌭𑍋 ।
𑌤𑍍𑌵𑌂 𑌅𑌨𑌾𑌦𑌿𑌃 𑌅𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌃 𑌤𑍍𑌵𑌾𑌮𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌤𑌃 ॥

சரீரே தவ பச்யாமி ஜகத்ஸர்வமிதம் ப்ரபோ ।
த்வம் அநாதி: அநிர்தேச்ய: த்வாமஹம் சரணம் கத: ॥

என்ற ஸ்தோத்ர ச்லோகத்தால் ஸர்வஜகத்திற்கும் மூல காரண வஸ்து விஷ்ணுதான் என்று சொல்லப்பட்டது. அதனுல் ஸர்வ வேதாந்தங்களுக்கும் விஷ்ணுவினிடத்தில் தான் ஸமன்வயம் என்ற சாரீரகமீமாம்ஸா சாஸ்த்ரத்தின் அர்த்தமும் ப்ரகடனம் செய்யப்பட்டன. பரசுராமருடைய கர்வபங்க கதையால் ருத்ரன் விஷ்ணுவினிடத்தில் பராஜயத்தை அடைந்தார் என்று கதா தோரணையில் தெரிவதிலிருந்தும், ருத்ரனைக் காட்டிலும் விஷ்ணு மேலான தெய்வம் என்றும் தெரிகிறது. ஆகையால் விஷ்ணுவே ஸர்வஜன உபாஸ்யமான தேவதை என்பது ஸித்தமாகிறது.

அயோத்தியில் ராமனுடைய ஸுகவாஸம்

பரசுராமர் அபஜயத்தை அடைந்து மஹேந்த்ர பர்வதம் சென்ற பிறகு, ஸ்ரீராமன் பரசுராமருடைய கையிலிருந்து பிடுங்கப்பட்டு தன் கையில் விளங்கிவரும் வைஷ்ணவமான வில்லை, இந்த யுத்தத்தைப் பார்க்கவந்த தேவர்களின் நடுவில் பாஸித்து விளங்கும் ப்ரும்மஞானியான

வருணபகவானிடம், 'இதை ரக்ஷித்து வரவேண்டு' மென்று சொல்லிக்கொடுத்தார். பிறகு வஸிஷ்டர் முதலான மஹர்ஷிகளுக்கும், பரசுராமரைக்கண்ட மாத்ரத்தில் பயத்தை அடைந்த தன் பிதாவிற்கும் ஸாஷ்டாங்க நமஸ்காராதிகளைச் செய்துவிட்டு பிதாவான தசரதசக்ரவர்த்தியினிடம் "மஹாராஜனே! பரசுராமர் சென்றுவிட்டார். இனி பயம் வேண்டாம். சதுரங்க ஸேனையானது அயோத்யா நகரத்திற்குச் செல்லலாம். தங்களுடைய ஆக்ஞையை ஸேனைகள் எதிர்பார்க்கின்றது" என்று சொன்னார்.

ராமனுடைய வார்த்தைகளைக்கேட்ட ராஜனும் புத்ரனை ராமனை இரண்டுகைகளாலும் ஆலிங்கனம் செய்துகொண்டு, தலை உச்சியை ஆக்ராணம் செய்துவிட்டு, பரசுராமர் சென்றுவிட்டார் என்ற வார்த்தையைக் கேட்ட மாத்ரத்திலேயே, பரம ஆனந்த பரிதனாக ஆகி, தன்னையும் தன் பிள்ளைகளையும் புனர் ஜன்மாவை அடைந்தவர்களாக எண்ணினார். சதுரங்க ஸேனைகளையும் அயோத்யா நகரத்திற்குச் செல்லும்படி ஸேனாபதிக்கு கட்டளையிட்டார். அயோத்யா நகரத்திலோ ஒவ்வொருவீட்டினுடைய வாசலிலும் ராமனுடைய ஆகமனத்தை ஸந்தோஷமாக வரவேற்கும் ப்ராணிகளுடைய பக்தியை ஸூசிப்பிக்க உயர்ந்த கொடிகள் கட்டிப் பறந்துவந்தன. பேரி, சங்கநாதம் முதலிய வாத்யகோஷங்களும் சப்தித்தன. ராஜமார்க்கங்கள், நல்ல வாஸனையுடன் கூடின தண்ணீர் தெளிக்கப்பட்டு புஷ்பங்களாலும், சோபனுக்ஷதைகளாலும், பொரிகளாலும் அலங்கரிக்கப்பட்டும் வந்தன. தசரதசக்ரவர்த்தியானவர் புத்ரர்களுடன், அதிலும் கல்யாண கோலத்துடன் அயோத்யா நகரத்தில் ப்ரவேசிக்குங் காலத்தில், நகரத்திலுள்ள மஹாஜனங்களின் ஸந்தோஷத்தையோ, ஆங்காங்கு ராஜமார்க்கத்தில் ப்ரஜைகள் கூட்டங் கூட்டமாக நின்றுகொண்டு ராஜனை ஸ்துதிக்கும் வைபவத்தையோ, வெகு விதமான வாத்யகோஷங்களின் பெருமையையோ, ஆதிசேஷனும்

வர்ணிக்கமுடியாது. நகரத்திலுள்ள ஜனங்கள் பூர்ணகும்பத்துடன் நகரத்திற்கு வெகுதூரம் எதிர்கொண்டு சென்று ராஜனையும், ஸ்ரீராமன் முதலிய ராஜபுத்ரர்களையும் பூஜித்து ராஜனை புத்ரர்களோடும், ஸேனைகளோடும், வஸிஷ்டாதிகளோடும் நகரத்திற்குள் முன் ப்ரவேசிக்கச் செய்து ஜனங்கள் பின்தொடர்ந்து வந்தார்கள்.

தசரத மஹாராஜாவோ, ஹிமாலயத்தைப்போல் மிகவும் உயர்ந்ததான தனது திருமாளிகையை புத்ரர்களுடன், ராஜவீதிமூலம் வலமாக வந்தடைந்தார். ராஜபத்னிகளான கௌஸல்யாதேவி, கைகேயிதேவி, ஸுமித்ராதேவி, மற்ற ஸ்த்ரீகள் எல்லோரும் பரமஸந்தோஷத்துடன் தன் தன் ஸ்னுஷைகளை (புத்ரர்களுடைய மனைவிகளை) ஸந்தோஷமாக வரவேற்று க்ரஹித்துக்கொண்டு லாலனை செய்தார்கள். உடன் ராமன் முதலான ராஜபுத்ரர்களுடைய பத்னிகளான ஸீதை, ஊர்மிளை, மாண்டவி, ச்ருதகீர்த்தி முதலியவர்கள் மங்கள ஸ்நானம் செய்துவிட்டு வெண்பட்டுக்களையும் தரித்துக்கொண்டு. அரண்மனைக்குள்ளிருக்கும் குலதெய்வத்தின் ஆலயங்களுக்குச் சென்று தேவதைகளை விதிவத்தாகப் பூஜித்து, தங்கள் தீர்கஸௌமங்கல்யத்தையும் ப்ரார்த்தித்துக்கொண்டு, கௌஸல்யாதேவி முதலான மாத்ரு ஜனங்களுக்கு அபிவாதனம் செய்துவிட்டு, அவரவர்கள் தனித்தனியாக தங்களுக்கு ஏற்பட்ட அரண்மனையை அடைந்து கோதானங்கள், ஸுவர்ணதானம் முதலான உத்தமமான தானங்களால் ப்ராம்மணோத்தமர்களை பூஜித்து, ப்ராம்மணோத்தமர்களுடைய ஆசீர்வாதத்தையும் அடைந்து, தங்கள் பர்த்தாக்களோடு ஸுகமாக இருந்து வந்தார்கள்.

ராமன் முதலான ராஜகுமாரர்களும், வீர்யம் முதலிய உத்தம குணங்களில் நிகரற்றவர்களாக இருந்துகொண்டு, தனது தாய் தந்தைகளை அவ்யாஜபக்தியுடன் சிச்ருஷை செய்கிறவர்களாயுமிருந்துகொண்டு, தங்கள் பத்னிகளோடு அமானுஷ்யமான போகத்தை அனுபவித்து வந்தார்கள்.

இவ்விதம் ராஜகுமாரர்கள் ஸுகமாக வாழ்ந்து கொண்டு வரும் ஸமயத்தில் பரதனுடைய மாமாவான யுதாஜித் என்ற கேகய தேசத்தின் யுவராஜா,

यस्मिंस्तु दिवसे राजा चक्रे गोदानमुत्तमं ।
तस्मिंस्तु दिवसे शूरो युधाजित्समुपेयिवान् ॥

𑌯𑌸𑍍𑌮𑌿𑌂𑌸𑍍𑌤𑍁 𑌦𑌿𑌵𑌸𑍇 𑌰𑌾𑌜𑌾 𑌚𑌕𑍍𑌰𑍇 𑌗𑍋𑌦𑌾𑌨𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌮𑌿𑌂𑌸𑍍𑌤𑍁 𑌦𑌿𑌵𑌸𑍇 𑌶𑍂𑌰𑍋 𑌯𑍁𑌧𑌾𑌜𑌿𑌤𑍍𑌸𑌮𑍁𑌪𑍇𑌯𑌿𑌵𑌾𑌨𑍍 ॥

யஸ்மிம்ஸ்து திவஸே ராஜா சக்ரே கோதானமுத்தமம் ।
தஸ்மிம்ஸ்து திவஸே சூரோ யுதாஜித்ஸமுபேயிவாந் ॥

என்ற ச்லோகத்தில் சொல்லியபடி, அச்வபதி மஹாராஜாவினால் பரதனை அழைத்துவரும்படி ஆக்ஞாபிக்கப்பட்டு அதற்காக அயோத்திக்கு வந்து, அங்கு தசரதர் முதலானவர்களைக் காணாமல், மிதிலைக்கு கல்யாண விஷயமாகச் சென்றிருக்கிறார்கள் என்பதை அறிந்து, தானும் மிதிலைக்கே சென்றுவிட்டார். அந்த ஸமயம் தசரதசக்ரவர்த்தியானவர் மிதிலையில் ராமன் முதலான தனது புத்ரர்களுக்கு விவாஹத்திற்குப் பூர்வாங்கமான கர்மாக்களைச் செய்துவிட்டு, கோதானம் செய்துகொண்டிருக்கும் ஸமயமாகும். அதைப் பார்த்த யுதாஜித்தும் ஸந்தோஷப்பட்டார். கல்யாணத்திற்கும் பின்னோடு இருந்துவிட்டு பிறகு அயோத்யா நகரத்திற்கும் பந்துக்களோடுகூட வந்து சேர்ந்து இவ்வளவு நாள் அயோத்தியிலேயே தாமதித்துக்கொண்டிருந்தார். தசரதராஜனிடம், ஸமயத்தை எதிர்பார்த்து யுதாஜித் என்ற கேகயதேச யுவராஜா, "நான் வெகுநாளாக தாமதித்துக்கொண்டிருக்கிறேன். என் பிதாவான அச்வபதி மஹாராஜா மிகவும் வ்ருத்தராக இருந்துவருகிறார். தௌஹித்ரனான பரதனைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலுடன் அவனை அழைத்துவர என்னை இங்கு அனுப்பினார். நான் இங்கு வந்து வெகுநாட்களாகிவிட்டன. தாங்கள், கல்யாணத்திற்கு என்னை வரவழைக்காவிட்டாலும் யத்ருச்சை

யாக அதைப் பார்க்கும்படி நேரிட்டது. அதில் ஸந்தோஷந்தான். பரதனை என் பின்னேடு அனுப்பினுல் அச்வபதி மஹாராஜா ஸந்தோஷப்படுவார். உத்தரவளிக்கவேண்டும்" என்று ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார்.

உடன் ராஜனும் பரதனை அழைத்து "உன்னுடைய மாமாவானவர், உன்னை தாத்தாவினிடம் அழைத்துச் செல்வதற்காக வெகுநாட்களாக தாமதித்துக்கொண்டிருக்கிறுர். மிதிலேயிலிருந்தே அழைத்துக்கொண்டுபோக யத்னம் செய்தார். நான் பேசாமலிருந்துவிட்டேன். இனி அவரை காக்க வைப்பது உசிதமல்ல. கொஞ்சநாள் கேகய தேசம் சென்று உன்னுடைய மாதாமஹனுக்கு ஸந்தோஷத்தைச் செய்துவிட்டு நீ வரவேண்டும் என்று என்னுடைய அபிப்ராயம்" என்று சொன்னுர்.

பரதஸ்வாமியும் பிதாவினுடைய வார்த்தையை சிரஸ்ஸால் வஹித்துக்கொண்டு பிதாவிற்கு ப்ரதக்ஷிணநமஸ்காராதிகளைச் செய்துவிட்டு, ராமனுக்கும் நமஸ்காரம் செய்துவிட்டு, லக்ஷ்மணனை ஆலிங்கனுதிகளால் ஸந்தோஷிக்கச் செய்துவிட்டு, கௌஸல்யாதேவி முதலான மாத்ரு ஜனங்களுக்கும் அபிவாதனம் செய்துவிட்டு, எல்லோரிடமும் தனித்தனியாக உத்தரவுபெற்றுக்கொண்டு, யுதாஜித் என்ற மாமாவுடன் கேகய தேசத்திற்குப் புறப்பட்டார். சத்ருக்னஸ்வாமியும், பாகவதாபிமான நிஷ்டை என்ற விசேஷ தர்மத்தில் ச்ரத்தையுள்ளவரானதினுலும், பரதஸ்வாமியானவர் மஹாபாகவதோத்தமரானதினுலும், பரதஸ்வாமியை விட்டுப்பிரிய மனமில்லாமல் தானும் பரதனை அனுஸரித்து கேகய தேசம் சென்றுர்.

இவ்விதம் பரதஸ்வாமியானவர், சத்ருக்ன ஸ்வாமியுடன்கூட கேகய தேசம் சென்ற பிறகு ராமன் லக்ஷ்மணன் இருவர்களும் தேவதுல்யனுன தனது பிதாவை பூஜித்து வந்தார்கள். பிதாவினுடைய ஆக்ஞையை அனுஸரித்து ஸமஸ்தமான ராஜ்ய கார்யங்களையும் ராமனே செய்து

வந்தார். ராமன் செய்துவந்த ராஜ்யபரிபாலனமோ, தனது தாய் தந்தைகளுக்கும், ப்ரஜைகளுக்கும் இஹத்தில் ப்ரிய மாயும் பரத்தில் ஹிதமாகும்படியாகவே இருந்துவந்தது. வஸிஷ்டர் முதலான குருமார்களுடைய கார்யங்களையும் அந்தந்த காலத்தில் ஸ்ரீ ராமன் கவனித்துவந்தார்.

இவ்விதம் ஸ்ரீராமன், பிதாவினுடைய ஆக்ஞையை அனுஸரித்து ராஜ்யபரிபாலனம் செய்துவரும்பொழுது, ப்ராம்மணர்களோ, க்ஷத்ரியர்களோ, வைச்யர்களோ, மற்ற நகரவாஸிகளோ அடைந்த ஸந்தோஷத்தையும் அளவிட முடியாது. ராமனும் ப்ராம்மணர்கள் முதலான ஸகல ப்ரா ணிகளுக்கும் பரம ப்ரேமைக்கு ஆஸ்பதமாக விளங்கி வந்தார்.

இவ்விதம் அனந்தகல்யாணகுணாலங்க்ருதனும், ந்யாய மாயும், தர்மமாயும், சத்ருக்களையும் ஸ்வவசம் செய்து கொள்ளும் சக்தி உள்ளவராயும் மஹா யசஸ்வியாயும் ஸ்ரீ ராமன் விளங்கிவந்தார்.

रामस्तु सीतया सार्धं विजहार बहूनृतून् ।
मनस्वीतद्गतस्तस्या नित्यं हृदिसमर्पितः ॥
प्रियातु सीता रामस्य दाराः पितृकृता इति ।
गुणाद्रूपगुणाच्चापि प्रीतिर्भूयोभ्यवर्धत ॥
तस्याश्च भर्ताद्विगुणं हृदये परिवर्तते ।
अन्तर्जातमपिव्यक्तमाख्याति हृदयं हृदा ॥
तस्य भूयो विशेषेण मैथिली जनकात्मजा ।
देवताभिस्समारूपे सीता श्रीरिवरूपिणी ॥

𑌰𑌾𑌮𑌸𑍍𑌤𑍁 𑌸𑍀𑌤𑌯𑌾 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌵𑌿𑌜𑌹𑌾𑌰 𑌬𑌹𑍂𑌨𑍍𑌋𑌤𑍂𑌨𑍍 ।
𑌮𑌨𑌸𑍍𑌵𑍀 𑌤𑌦𑍍𑌗𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌹𑍃𑌦𑌿𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑌃 ॥
𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌤𑍁 𑌸𑍀𑌤𑌾 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌦𑌾𑌰𑌾𑌃 𑌪𑌿𑌤𑍃𑌕𑍃𑌤𑌾 𑌇𑌤𑌿 ।
𑌗𑍁𑌣𑌾𑌦𑍍𑌰𑍂𑌪𑌗𑍁𑌣𑌾𑌚𑍍𑌚𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌰𑍍𑌭𑍂𑌯𑍋𑌭𑍍𑌯𑌵𑌰𑍍𑌧𑌤 ॥

𑌤𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌂 𑌹𑍃𑌦𑌯𑍇 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌜𑌾𑌤𑌮𑌪𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌿 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌹𑍃𑌦𑌾 ॥
𑌤𑌸𑍍𑌯 𑌭𑍂𑌯𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌮𑍈𑌥𑌿𑌲𑍀 𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾 ।
𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑌿𑌸𑍍𑌸𑌮𑌾𑌰𑍂𑌪𑍇 𑌸𑍀𑌤𑌾 𑌶𑍍𑌰𑍀𑌰𑌿𑌵𑌰𑍂𑌪𑌿𑌣𑍀 ॥

ராமஸ்து ஸீதயாஸார்தம் விஜஹார பஹூந்ருதூன் ।
மநஸ்வீதத்கதஸ்தஸ்யா நித்யம் ஹ்ருதிஸமர்பித: ॥
ப்ரியாது ஸீதா ராமஸ்யதாரா: பித்ருக்ருதா இதி ।
குணத்ரூப குணச்சாபி ப்ரீதிர்பூயோப்யவர்தத ॥
தஸ்யாச்ச பர்தாத்விகுணம் ஹ்ருதயெ பரிவர்ததே ।
அந்தர்ஜாதமபிவ்யக்தமாக்யாதி ஹ்ருதயம் ஹ்ருதா ॥
தஸ்யபூயோ விசேஷேண மைதிலீ ஜநகாத்மஜா ।
தேவதாபிஸ்ஸமாரூபே ஸீதா ஸ்ரீரிவ ரூபிணீ ॥

என்ற மேற்கண்ட நான்கு ச்லோகங்களால் ஸ்ரீராமனுடைய தர்மத்திற்கு விரோதமில்லாததான காமபோகத்தை கவி யானவர் வர்ணிக்கின்றார்.

रामस्तु (𑌰𑌾𑌮𑌸𑍍𑌤𑍁) (ராமஸ்து) என்ற இடத்திலுள்ள து (𑌤𑍁) (து) சப்தத்தால், ராமன் பித்ரு சிச்ரூஷை செய்வதிலோ, வர்ணாச்ரம தர்மத்தை தான் அனுஷ்டித்து லோகத்தையும் அனுஷ்டிக்கும்படி செய்வதிலோ, தேவதாராதனம் முதலான மற்ற ஸத் விஷயங்களிலோ, எவ்வளவு பாண்டித்யமும், அனுஷ்டான சீலத்வமும், ஸ்வானுபவமும் உள்ளவராக இருப்பாரோ, அதைக்காட்டிலும் அநேக அம்சம் வாத்ஸ்யாயன தந்த்ரம் என்ற காமசாஸ்த்ரத்தில் பாண்டித்யம் உள்ளவராக, ஸீதையுடன தான் காமபோகத்தை அனுபவிக்குங்காலத்தில் பாஸித்துவந்தார் என்பது புலப்படுகிறது. அதாவது ஸீதையுடன் காமத்தை அனுபவிக்குங் காலத்தில் ஸ்ரீ ராமன் காம பரதந்த்ரனாகவே இருந்துவந்தார். அதிலும் ஸீதையுடன் இவர் ரதிஸுகத்தை அனுபவித்தார். ஸீதை என்றாலோ கலப்பையினுடைய முகத்திற்குப் பெயர். அதினின்றும் உண்டானவளானதினால் ஸீதை என்று பெயர் ஏற்பட்டதென்று

முன்பே சொல்லப்பட்டது. அதனுல் அயோநிஜை என்று ஸித்திக்கிறது. அயோநிஜையான ஸ்த்ரீகளுக்கு ஸௌந்தர்யமோ, ஆபரணங்களால் அல்ல; இயற்கையாகவே ஏற்பட்டது. அந்த ஸௌந்தர்யமும் அபரிச்சின்னமான ஸௌந்தர்யம். ஸீதையினுடைய அழகிற்கு ஸமானமாக ஒரு வஸ்துவையும் சொல்லமுடியாது. ஆகையால் போகஸ்ரோதத்திற்கு ப்ரதானமான யுவதியானதினுல், ராமனுக்கு அதில் ஈடுபட்டு தான் காமபரதந்த்ரனுக ஆகலாமா என்ற எண்ணமே ஏற்படவில்லை. தனது மஹத்வத்தையும் தான் மறந்து காமபரதந்த்ரனுகவே இருந்துவந்தார். அதிலும் கவி विजहार (விஜஹார) (விஜஹார) என்று சொன்னுர். க்ரீடித்துக்கொண்டிருக்கிருர் என்றே அதன் அர்த்தமாகும். இந்த ஸ்ரோதக்ரியையினுடைய பலத்தை இன்னமும் அடையவில்லை. போக ஸ்ரோதத்தின் உபோத்காதமான லீலையில்தான் ராமன் இன்னமும் முழுகிவருகிருர் என்பது வெளியாகிறது. அநேக ருதுக்கள் அனுபவித்தார் என்று சொன்னதினுல், நிரந்தரபோகத்திலும் போகத்தின் பலாவஸானம் ஏற்படவில்லை என்பது தெரிகிறது. அந்த ஸந்தர்ப்பத்தில் ராமனுக்கு मनस्वी (மநஸ்வீ) (மாஸ்வீ) என்று ஒரு விசேஷணம் சொல்லப்பட்டிருக்கிறது. அதனுல் ஸீதாதேவியோடு தான் ஸம்பந்தப்படும் காலத்தில் ஸீதையினுடைய ஸங்கல்பம் எவ்விதமோ, அதை தான் இங்கிதத்தால் தெரிந்துகொண்டு, அவன் எதிர்பார்த்த ஸந்தோஷத்திற்கும் மேலான ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய உதாரமான மனதோடு கூடியவர் என்பதும் வெளியாகிறது. எப்பொழுதும் ஸீதையினிடத்திலேயே ஈடுபட்ட மனதோடு கூடினவராயும் இருந்துவந்தார். ஸீதையினுடைய ஹ்ருதயத்தில் ராமன் எப்பொழுதும் இருந்துவந்தார். ஸீதையும் அநேக காலம் நிரந்தரமாக போகத்தை அனுபவித்தாலும், ராமனேடு புணருங்காலங்களில் இப்பொழுதுதான் புதிதாக ராமனைத் தொடுவதுபோல் ஆனந்தத்தை அனுபவித்துக்கொண்டு, ராமன் செய்கிற அந்தந்த

சேஷ்டைகளால் ராமனுடைய வசமாகவே ஸீதையினுடைய மனது ஆகி, தன்னுடைய மனதால் எப்பொழுதுமே ராமனை நினைக்கின்றவளாக ஆகிவிட்டாள். ராமனும் ஸீதையினிடத்தில் அர்ப்பணம் செய்யப்பட்ட மனதோடு கூடினவராகவே ஆகிவிட்டார். இவ்விதம் ராமனுக்கு ஸீதையினிடத்தில் ஒரு ப்ரேமை ஏற்பட்டதற்கு ஸீதை ப்ரியமான பத்னியாக இருந்ததேதான் காரணமாகும். दाराः पितृकृताः (𑌦𑌾𑌰𑌾𑌃 𑌪𑌿𑌤𑍃𑌕𑍃𑌤𑌾𑌃) (தாரா: பித்ருக்ருதா:) என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து, ஸாக்ஷாத் தகப்பனே விதிவத்தாக காலத்தில் தானம் செய்த கன்னிகையை பரிக்ரஹம் செய்துகொள்ளும் விவாஹம் ரொம்பவும் மேலானதென்று சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடியால், ஜனகமஹாராஜனை பிதாவே நேரில் தானம் செய்து தான் க்ரஹித்துக்கொண்ட பத்னியானதினுல், ஸீதை ராமனுக்கு மிகவும் ப்ரியமான பார்யையாக ஆனுள். அத்துடன் ஸீதையினுடைய குணம் ஒரு காரணமாக ஆயிற்று. பர்த்தாவினுடைய சிச்ரூஷையோ, பர்த்தாவினுடைய தாய் தந்தைகளைத் தன் தாய் தந்தைகளாக பாவித்துச் செய்யும் சிச்ரூஷையோ, பர்த்தாவிற்குத் தன்னிடத்தில் ப்ரேமை ஏற்படுவதற்கு முக்யகாரணம் என்று தர்ம சாஸ்த்ரத்தில் சொல்லிய குணங்களும் ஸீதாதேவியினிடத்திலிருந்து வந்ததனுல் ஸீதை ராமனுக்கு ப்ரியையானதற்கு காரணமாகும். ஸௌந்தர்யமும் மற்றொரு காரணமாகும். அத்துடன் ப்ரஸித்தமான வம்சத்தில் பிறந்தது, தர்மத்தை ஆசரிக்கும் விஷயத்தில் ஆஸக்தி, இவைகளும் காரணங்களாகும். இவ்விதம் பிதாவினுல் ஸாக்ஷாத்தாக தானம் செய்யப்பட்டது, பர்த்தாவினுடைய தாய் தந்தைகளை தெய்வமாக பாவிப்பது, ஸௌந்தர்யம், நல்ல குலத்தில் பிறந்தது, தர்மத்தை ஆசரிப்பதில் ஆஸக்தி விசேஷம், இந்த குணங்களில் ஏதாவது ஒன்றிரண்டு இருந்தாலுமே, அந்த ஸ்த்ரீ பர்த்தாவினுடைய ப்ரேமைக்கு ஆஸ்தபதமாகத்தானிருப்பாள். எல்லா குணங்களும் பரிபூர்ணமாக இருக்கும் ஸீதாதேவி ராமனுக்கு ப்ரியபார்யை என்று சொல்வதற்குக் கேட்கவும் வேண்டுமா?

ராமனுடைய மனதில் ஸீதாதேவி விளங்குவதைக் காட்டிலும் இரண்டுமடங்கு அதிகமாகவே, ஸீதாதேவியினுடையமனதிலும் ராமன் எப்பொழுதும் விளங்கி வந்தார். அதாவது ராமனுக்கு ஸீதையினிடமிருந்த ஆசையைக் காட்டிலும், ஸீதைக்கு ராமனிடமிருந்த ஆசையோ இரட்டிப்பாக இருந்தது. ராமனே, பிதாவான ஜனக மஹாராஜனுல் விதிவத்தாக தானம் செய்யப்பட்டவள் என்றதுமுதலான காரணத்திற்காக ஸீதையினிடம் ப்ரேமையைச் செலுத்தினுர். அன்னியில் ஸீதை பார்யை என்பதற்காக ப்ரீதியைச் செலுத்தவில்லை. அதை दाराः पितृकृताः (ദാരാഃ പിതൃകൃതാഃ) (தாரா: பித்ருக்ருதா:) என்பதனுல் முன்பு விளக்கிச் சொல்லப்பட்டது. ஸீதைக்கோ ராமனிடத்தில் ப்ரேமை ஏற்பட்டதற்கு ராமன் பர்த்தா என்பதுதான் காரணமாகும். அன்னியில் ராமன் பெரிய குலத்தில் பிறந்தவர், மிகவும் அழகான ராஜா என்பதெல்லாம் காரணமாக ஆகாது. இவ்விஷயத்தையே ஸீதாதேவியானவள் அனஸூயையினிடத்தில் பேசிக்கொண்டிருக்கும் ஸந்தர்ப்பத்தில்,

यद्यप्येषः भवेत् भर्ता मम आर्ये वृत्तवर्जितः ।
अद्वैदं उपवर्तव्यः तथप्येषः मया भवेत् ॥

യദ്യപ്യേഷഃ ഭവേൽ ഭൎത്താ മമ ആൎയ്യേ വൃത്തവൎജ്ജിതഃ ।
അദ്വൈധം ഉപവൎത്തവ്യഃ തഥാപ്യേഷഃ മയാ ഭവേൽ ॥

யத்யப்யேஷ: பவேத் பர்தா மம ஆர்யே வ்ருத்தவர்ஜித: ।
அத்வைதம் உபவர்தவ்ய: ததப்யேஷ: மயா பவேத் ॥

என்று சொல்கிருள். "தாயே! ஸ்த்ரீகளுக்கு பர்த்தா என்பவன் லோகத்தில் நிந்திக்கத் தகுந்த நடத்தையுடன் கூடியவனுக இருந்தாலும், தரித்ரனுகவோ, ரோகியாகவோ இருந்தாலும், நல்லவன் கெட்டவன் என்ற விபரீத பாவத்தை அடையாமலே பர்த்தாவை தெய்வமென்று பூஜிக்கவேண்டும் அதுதான் ஸ்த்ரீகளுக்கு தர்மமாகும். ராமனே எவ்வி

தத்திலும் உத்க்ருஷ்டமான பரமபுருஷனுக இருக்கும் பொழுது அம்மஹானுபாவனே நான் பர்த்தாவாக அடைந்திருக்கும்பொழுது, நான் பர்த்தாவினிடம் ஒழுங்காக நடந்துகொள்வேனு என்று ஸந்தேஹப்படுவதற்கு ந்யாயமில்லை" என்று ஸீதை, அனஸூயையினிடம் சொன்னுள். இதனுல் ராமனிடத்தில் ஸீதை வைத்திருக்கும் அனுராகத்திற்கு பர்த்தா என்பது மாத்ரந்தான் காரணமாகிறதன்னியில், குலமோ, ஐச்வர்யமோ இவைகளை முன்னிட்டு ராமனிடம் ப்ரியத்தை வைத்தாள் என்று சொல்லமுடியாது. ஆகையால் ஒரு காரணத்தை முன்னிட்டு ராமனுக்கு ஸீதையினிடம் ஏற்பட்டிருக்கும் அனுராகத்தைக் காட்டிலும், ஒரு காரணத்தையும் கவனிக்காமல், பர்த்தா என்பதற்காக மாத்ரம் ராமனிடத்தில் ஸீதைக்கு ஏற்பட்டிருக்கும் அனுராகமே மேலானது. ஸீதையானவள் தனது மனதில் மிகவும் கூடமாக உள்ள அபிப்ராயங்களையும் தனக்கு ராமனிடத்திலுள்ள ஆசையையும், தனது நடத்தையினுல் ராமனுக்கு, ப்ரத்யக்ஷமாக விளக்கி ப்ரகாசிக்கச்செய்துகொண்டு விளங்கி வந்தாள். எந்த நிமிஷத்திலும் ஸீதை தன் மனதில் என்ன நினைக்கின்ருள் என்பதை ராமன் அறிந்துவிடுவார். எப்பொழுதும் ஸீதையினுடைய மனதிலேயே விளங்கிவரும் ராமனுக்கு ஸீதையினுடைய கூடமான ஆசையை அறிவதா கஷ்டமாகும்? ஸுலபமாகவே ஆகும். அவ்விதமே ராமனுடைய மனதிலுள்ள கூடமான அனுராகத்தையும், அப்போதைக்கப்போது ஸீதை அறிந்துகொண்டு அதற்கனுகுணமாகவே நடந்துவந்தாள். ராமன் போக காலத்தில் எவ்விதமாக ஸுகத்தை அடையவேண்டுமென்று எண்ணுகிருரோ, அதை ராமன் சொல்லாமலே தான் இங்கிதத்தால் அறிந்துகொண்டு ராமன் எதிர்பார்த்த ஸுகத்தைக் காட்டிலும் அபரிமிதமான ஸுகத்தை அளித்து, அனுகுணமாக நடந்துவருவதே ஸீதையினுடைய வழக்கமாகும். இந்த சக்தி ஸீதைக்கு உண்டு என்பதை ப்ரகாசப்படுத்த கவியானவர்,

मैथिली ; जनकात्मजा ; देवताभिस्समारूपे ; श्रीरिवरूपिणी

𑌮𑍈𑌥𑌿𑌲𑍀 ; 𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾 ; 𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑌿𑌸𑍍𑌸𑌮𑌾𑌰𑍂𑌪𑍇 ;
𑌶𑍍𑌰𑍀𑌰𑌿𑌵𑌰𑍂𑌪𑌿𑌣𑍀

மைதிலீ ; ஜனகாத்மஜா ; தேவதாபிஸ்ஸமாரூபே ; ஸ்ரீரிவரூபிணீ

என்ற நான்கு விசேஷணங்களால் ஸீதையை வர்ணிக்கின்ருர்.

முதல் விசேஷணத்தால் மிதிலா தேசத்தில் பிறந்தவர்களுக்கே, இங்கிதத்தால் பரர் ஹ்ருதயத்தை அறிவது ஸ்வபாவத்தால் ஏற்பட்டது. என்று தேசஸ்வபாவத்தைக் காட்டினுர்.

இரண்டாவது விசேஷணத்தால், அதிலும் ஜனகமஹாராஜாவினுடைய வம்சத்தில் பிறந்தவர்களுக்கு, இங்கிதத்தால் பரர் ஹ்ருதயத்தை அறிவது முக்யதர்மமாகுமென்று வம்ச ஸ்வபாவத்தைக் காட்டினுர்.

மூன்ருவது விசேஷணத்தால், எல்லாவற்றையும் அறியும் சக்தி ஸீதையினிடத்தில் இருக்கிறதென்பதைக் காட்டினுர். தேவதைகள் ஸர்வக்ஞத்வ சக்தியோடு கூடினவர்கள். ஸீதையையும், தேவதைகளுக்கு ஸமானமாக வர்ணித்திருப்பதால் ஸீதை ஸர்வக்ஞை என்று வெளியாகிறது.

நான்காவது விசேஷணத்தால், ஸகல ப்ராணிகளால் பார்க்கத்தகுந்த சரீரத்தோடு கூடின லக்ஷ்மீதேவிதான் என்று வர்ணித்ததிலிருந்து, லக்ஷ்மீதேவி ஸர்வலோகத்திற்கும் தாயாரானதினுலும், குழந்தைகளுடைய ஆசயத்தை இங்கிதத்தால் அறியக்கூடிய சக்தி தாய்க்கு இருப்பதினுலும், ஸீதை பரஹ்ருதயத்தை அறிந்தாள் என்பது ஆச்சர்யமில்லை என்பதை வெளிப்படுத்தினுர்.

இவ்விதம் நான்கு விசேஷணங்களால் ஸீதாதேவியானவள் பர்த்தாவாகிய ராமனுடைய கூடமான ஆசயத்தையும் அறிந்துகொள்ள சக்தி உள்ளவள்; அவ்விதமே இங்கிதத்தால் அறிந்து ராமனுக்கு அனு

குணமாகவே நடந்துகொண்டு வந்தாள் என்று ஸீதைக்கு ராமனிடத்திலுள்ள அனுராகமானது ப்ரஸித்த மானது. மேற்சொன்னபடி ஸீதைக்கும் ராமனுக்கும் உள்ள பரஸ்பர அனுராகம் சொல்லப்பட்டது. ஸ்த்ரீ புமான்க ளுக்கு பரஸ்பர அனுராகமில்லாதபோனுல் போகத்தில் ஸுகமே ஏற்படாது. ஆகையால் அனுராகம் போக ஸ்ரோதத்தில் மூழ்க அனுகுணமானதினுல், அந்த அனு ராகத்தை ஸீதை ராமன் இருவர்களிடமும் அளவற்றதாக இருக்கிறதென்பதை மேற்சொன்ன நான்கு ச்லோகங்க ளால் கவியானவர் ப்ரகாரஞ் செய்துவிட்டு அதற்கு அனு குணமான போகத்தை ஒரு ச்லோகத்தால் வர்ணித்து, பாலகாண்டத்தை கவியானவர் ஸமாப்தி செய்கிருர். அதாவது :—

तया सराजर्षिसुतोभिरामया समेयिवानुत्तम राजकन्यया ।
अतीवरामश्शुशुभेतिकामया विभुः श्रियाविष्णुरिवामरेश्वरः ॥

𑌤𑌯𑌾 𑌸𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌿𑌸𑍁𑌤𑍋𑌭𑌿𑌰𑌾𑌮𑌯𑌾 𑌸𑌮𑍇𑌯𑌿𑌵𑌾𑌨𑍁𑌤𑍍𑌤𑌮
𑌰𑌾𑌜𑌕𑌨𑍍𑌯𑌯𑌾 ।
𑌅𑌤𑍀𑌵𑌰𑌾𑌮𑌶𑍍𑌶𑍁𑌶𑍁𑌭𑍇𑌤𑌿𑌕𑌾𑌮𑌯𑌾 𑌵𑌿𑌭𑍁𑌃 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑌿𑌵𑌾
𑌮𑌰𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥

தயா ஸராஜர்ஷிஸுதோபிராமயா ஸமேயிவாநுத்தம ராஜகந்யயா ।
அதீவராமச்சுசுபேதிகாமயா விபு: ஸ்ரீயாவிஷ்ணுரிவாமரேச்வர: ॥

என்ற ச்லோகத்தால், ராமனே ராஜபுத்ரன் என்று கவி வர்ணித்தார். மஹாராஜபுத்ரனுனதினுல் போகத்திற்கு உப கரணமான புஷ்பம், சந்தனம், திருமாளிகை, மஞ்சம், பர் யங்கம், முதலானதுகள் அளவற்றதாக இருக்கிறதென்பதை அந்த விசேஷணமானது ஸூசிப்பிக்கின்றது. ஸீதாதேவி யையும் ராஜாதிராஜனுடைய பெண் என்று வர்ணித்தார். அதனுல் ராமனிடத்திலிருக்கும் போகோபகரணங்களைக் காட்டிலும் ஸீதாதேவியானவள் தான் பிறந்த க்ருஹத்தி லிருந்தும் கொண்டுவந்த போகோபகரண ஸாமக்ரியைகளை

அயோத்யா ராஜ்யத்தில் அரண்மனையில் வைக்கக்கூட இடமில்லாமல் அதிகமாக இருந்துவருகிறதென்பது வெளியாகிறது. ராமனை रामः (ராமஃ) (ராம:) என்ற பதத்தால் இங்கு வர்ணித்தார். அதனால் ஸீதையை ஸுகத்தால் ரமிக்கச் செய்ய சக்தியுள்ள ரஸிகன் என்பது வெளியாகிறது. ஸீதைக்கும் अभिरामया (அபிராமயா) (அபிராமயா) என்ற விசேஷணத்தை அர்ப்பணம் செய்திருக்கிறார். அதனால் ராமனைக்காட்டிலும் அதிகமான போக ஸுகங்களாலும், ச்ருங்கார விலாஸாதிகளாலும் ராமனை ரமிக்கச் செய்து தன் வசப்படுத்திக்கொள்ள சக்தியுள்ள அதிஸுந்தரியான ரஸிகை ஸீதை என்று வெளியாகிறது. பிறகும் ராமனை स: (ஸஃ) (ஸ:) என்ற तच्च (தச்ச) (தச்ச) பதத்தால் வர்ணித்தார். அதனால் ராமன் காமபரதந்த்ரன் என்பது வெளியாகிறது. ஸீதாதேவிக்கும் अतिकामया (அதிகாமயா) (அதிகாமயா) என்றொரு விசேஷணம் கொடுத்தார். அதனால் ராமனைக் காட்டிலும் ஸீதைக்கு காமம் அதிகம் என்பதைக் காட்டினார்.

இவ்விதமான ஸீதையினால் ஸ்வயமாகவே தான் ஆலிங்கனாதிகள் செய்யப்படுகிறவராகக்கொண்டு, தானும் ஸீதாதேவியை ப்ரத்யாலிங்கனாதிகளைச் செய்துகொண்டு, ஸீதையைத் திருப்தி செய்துவைக்கும் விஷயத்தில் ராமன் ஸமர்த்தன் என்பது विभुः (விஹுஃ) (விபு:) என்ற பதத்தால் தெரியவருகிறது. இவ்விதம் ராமனும் ஸீதையும் அனுபவித்த போகமானது தேவர்களுக்கும், தேவனான மஹாவிஷ்ணுவானவர் வைகுண்டத்தில் லக்ஷ்மிதேவியோடு அனுபவித்த போகத்திற்கு ஸமானமாக இருந்தது என்று, ராமனே விஷ்ணுவானாலும் அவதார ப்ரஸங்கத்தில் விஷ்ணு வேறு போலவும் ராமன் வேறு போலவும் பேதத்தை கல்பித்துக் கொண்டு ஸீதாராம உபபோகத்திற்கு, லக்ஷ்மீ நாராயண உபபோகத்தை உபமானமாகச் சொல்லி, மங்களகரமாக பாலகாண்டத்தை கவியானவர் ஸமாப்தி செய்தார்.

மேற்சொன்ன ச்லோகத்தால் வித்வான்களுக்கு மற்றொரு அபிப்ராயமும் புலப்படக்கூடும். அந்த ச்லோகத்தில் राम: (𑌰𑌾𑌮𑌃) (ராம:) என்ற பதத்தால் தாரகப்ரும்மம் என்றே அர்த்தம் செய்துகொள்ளவேண்டும். எந்த ஸத்தாயும் சித்தாயும் ஆனந்தமாயுமுள்ள ப்ரும்மத்தினிடத்தில் ஞானிகள் ரமிப்பார்களோ, அந்த வஸ்துவே ராமன் என்ற பதத்தால் சொல்லப்படும்.

रमन्तेयोगिनः अनन्ते सत्यानन्दे चिदात्मनि

𑌰𑌮𑌨𑍍𑌤𑍇𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌅𑌨𑌨𑍍𑌤𑍇 𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑍇 𑌚𑌿𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑌿

ரமந்தேயோகிந: அநந்தே ஸத்யாநந்தே சிதாத்மநி

என்றது முதலிய ச்ருதிகளே அதில் ப்ரமாணமாகும். स: (𑌸𑌃) (ஸ:) என்ற சப்தத்தாலும், सो अन्वेष्टव्यः स: विजिज्ञासितव्यः (𑌸𑍋𑌽𑌨𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃 𑌸𑌃 𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌃) (ஸோ அந்வேஷ்டவ்ய: ஸ: விஜிக்ஞாஸிதவ்ய:) என்ற ச்ருதியானது மோக்ஷம் என்ற பரமபுருஷார்த்தத்தை அடையவேண்டுமென்ற தீவ்ரமான இச்சையுள்ளவன் எதைத் தேடி அறியவேண்டுமோ, அந்த வஸ்து இந்த ராமன்தான் என்பது ப்ரகாசமாகிறது. அந்த ச்ருதியிலும் स: (𑌸𑌃) (ஸ:) என்ற சப்தம் இருந்துவருகிறது; இந்த ச்லோகத்திலும் स: (𑌸𑌃) (ஸ:) என்ற சப்தம் இருந்துவருகிறது. இதை வித்வான்கள் கவனித்தறியவும். ராஜச்ரேஷ்டனுடைய பிள்ளை என்று ராமனைச் சொல்லியிருப்பதும் இந்த ராமன் உபநிஷத் ப்ரதிபாத்யமான பரம்பொருள் என்பதை விளக்கிக் காட்டுகிறது. राजन्त इति राजानः (𑌰𑌾𑌜𑌨𑍍𑌤 𑌇𑌤𑌿 𑌰𑌾𑌜𑌾𑌨𑌃) (ராஜந்த இதி ராஜாந:) என்ற ஸமாஸத்தால், ராஜபதத்திற்கு தத்வங்களை ப்ரகாசம் செய்துவைக்கும் வேதம் என்ற அர்த்தத்தை க்ரஹித்துக்கொள்ளவும். ராஜர்ஷி என்ற பதத்தால் உபநிஷத்துக்கள் என்பது ப்ரகாசிக்கிறது. அந்த உபநிஷத்துக்களுக்கு, தாய்க்கு புத்ரனிடத்தில் வாத்ஸல்யமிருப்பதுபோல், புத்ரவாத்ஸல்யத்திற்கு ஸமானமான வாத்ஸல்யம்,

ப்ரேமை, எந்த ப்ரும்மத்தினிடத்தில் பரமதாத்பர்யமோ அந்த ப்ரும்மந்தான் ப்ருக்ருதத்தில் राजर्षिसुतः (ராஜஷி-ஸுத:) (ராஜர்ஷி ஸுத:) என்ற பதத்தால் சொல்லப்படும். அதனுல் ஔபநிஷதமாயும், முமுக்ஷுக்களுக்கு அந்வேஷ்டமாயும், விஜிக்ஞாஸிதவ்யமாயும் உள்ள தாரக ப்ரும்மத்தை—அதாவது தத்மஸி என்ற மஹாவாக்யத்திலுள்ள, தத் என்ற பதத்தின் லக்ஷ்யார்த்தமான ப்ரும்மத்தை ராமன் என்ற பதத்தால் அறியவும்.

ஸீதை என்றுல் ஜீவதத்வமாகும். ஸீதைக்கும், உத்தம ராஜ கன்யா என்ற விசேஷணத்தால், உபநிஷத் ப்ரதிபாத்யை என்ற அர்த்தத்தை வைத்துக்கொள்ளவும். வேதங்களில், மஹா வாக்யம், அவாந்தர வாக்யம் என்று இருவகை சொல்லப்படும். அவாந்தர வாக்யங்களிலும் த்வம் பதார்த்தத்தை போதிக்கும் வாக்யங்கள், தத் பதார்த்தத்தை போதிக்கும் வாக்யங்கள் என்று இருவகைப்படும். योयं विज्ञानमयः प्राणेषु (யோயம் விஜ்ஞாநமய: ப்ராணேஷு) (யோயம் விஜ்ஞாநமய: ப்ராணேஷு) என்றது முதலான வாக்யங்களை த்வம் பதார்த்தத்தை போதிக்கும் அவாந்தர வாக்யங்களாகவும்,

एषसर्वेश्वरः एषभूताधिपतिः एषभूतपालः एषसेतुः विधरणः लोकानां असंभेदाय (ஏஷஸர்வேச்வர: ஏஷபூதாதிபதி: ஏஷபூதபால: ஏஷஸேது: விதரண: லோகாநாம் அஸம்பேதாய) (ஏஷஸர்வேச்வர: ஏஷபூதாதிபதி: ஏஷபூதபால: ஏஷஸேது: விதரண: லோகாநாம் அஸம் பேதாய)

என்றது முதலான வாக்யங்களை தத் பதார்த்தத்தை போதிக்கும் அவாந்தர வாக்யங்களாகவும் க்ரஹித்துக் கொள்ளவும்.

राजर्षिसुतः (ராஜஷிஸுத:) (ராஜர்ஷிஸுத:) என்ற இடத்தில் राजर्षि (ராஜஷி) (ராஜர்ஷி) பதத்தால் தத்பதார்த்தத்தை

போதிக்கும் அவாந்தரமான வேதாந்த வாக்யத்தையும், उत्तमराजकन्यया (உத்தமராஜகந்யயா) (உத்தமராஜகன்யயா) என்ற இடத்தில் उत्तमराज (உத்தமராஜ) (உத்தமராஜ) என்ற பதத்தால் த்வம் பதார்த்தத்தை போதிக்கும் அவாந்தர வேதாந்த வாக்யத்தையும் அறியவும். இதனுல் த்வம் பதார்த்தமாகிய ஜீவனுக்கு தத் பதார்த்தமாகிய ப்ரும்மத்தினிடத்தில் ஐக்யமும், அதனுல் ஏற்படும் நிரதிசய ஆனந்தானுபவமும், ஸீதையும் ராமனும் போகத்தை அனுபவித்தார்கள் என்பதினுல் வ்யங்க்யமாக சொல்லப்படுகிற தன்னியில், கேவல விஷய ஸுகத்தை மாத்ரம் சொல்லி மஹர்ஷி இக்காண்டத்தை ஸமாப்தி செய்தார் என்று சொல்வதற்கு ந்யாயமில்லை. ராமன் ப்ரும்மதத்வம், ஸீதை ஜீவதத்வம் என்று சொல்வதில் வித்வான்களுக்கு ஆக்ஷேபணையிராது. வ்யாக்யாதாக்களும் இவ்விதமே ஆங்காங்கு வர்ணித்திருக்கிறார்கள்.

இவை முன்பு அநேக இடங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. तत्वमसि (தத்வமஸி) (தத்வமஸி) என்ற மஹாவாக்யத்தினுடைய அர்த்தமாகிய ஜீவப்ரும்ம ஐக்யத்தை மேற்சொன்ன கடைசி ச்லோகத்தில் ப்ரகாசப்படுத்தி, மஹாவாக்யமும் ஸ்ரீமத் ராமாயணமும் ஒரே தத்வத்தைத்தான் போதிக்கிறதென்ற காரணத்தால், மஹாவாக்யத்திற்கு ஸமானமான கௌரவத்தை இந்த இதிஹாஸரத்னமான ராமாயணத்திற்குக் கொடுத்து ப்ராமாண்யத்தை பரிபாலனம் செய்துவருவதே வித்வான்கள் போகும் மார்கம் என்பது வ்யாக்யாதாக்களுடைய அபிப்ராயமாகும். கேவல விஷயஸுகத்தின் பரகாஷ்டையை மாத்ரம் மஹர்ஷியினுடைய வாக்யத்திற்கு அர்த்தமாகச் சொல்லி, க்ரந்தத்தை ஸமாப்தி செய்வது அவ்வளவு அழகாக இராது. வால்மீகி மஹர்ஷியே ராமனுகிய பரப்ரும்மத்தினிடத்தில் ஜீவனுகிய ஸீதைக்கு ஐக்யத்தைத் தான் போதித்திருக்கிறுர் என்பதும், ஸீதைக்கு மஹர்ஷி கொடுத்திருக்கும் ஒரு விசேஷணத்தால் ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது. அந்த விசே

ஷணமோ अतिकामया (𑌅𑌤𑌿𑌕𑌾𑌮𑌯𑌾) (அதிகாமயா) என்பதே தானு கும். கோவிந்தராஜீய வ்யாக்யானத்தில் अतिक्रान्तकामया (𑌅𑌤𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌮𑌯𑌾) (அதிக்ராந்தகாமயா) என்ற அர்த்தம் ப்ரகாசப் படுத்தப்பட்டிருக்கிறது. அதனுல் காமத்தைத் தாண்டியவள்; காமமேயில்லாதவள்; அகாமை; என்ற அர்த்தம் வெளியாகிறது. காமம் தொலேந்தவுடன் ஜீவனுக்கு ப்ரும்ம ப்ராப்தியை,

यदासर्वे प्रमुच्यन्ते कामायेस्य हृदिश्रिताः
अंथमर्त्यो अमृतो भवति अत्रब्रह्म समश्नुते

𑌯𑌦𑌾𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌕𑌾𑌮𑌾𑌯𑍇𑌸𑍍𑌯 𑌹𑍃𑌦𑌿𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃
𑌅𑌥𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑍋 𑌅𑌮𑍃𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌅𑌤𑍍𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇

யதாஸர்வே ப்ரமுச்யந்தே காமாயேஸ்ய ஹ்ருதிஶ்ரிதா:
அதமர்த்யோ அம்ருதோ பவதி அத்ரப்ரஹ்ம ஸமச்நுதே

என்ற ச்ருதியானது சொல்கிறது. மனதை ஆச்ரயித்த காமங்கள் தொலேந்த உடன் ஜீவனுக்கு ப்ரும்ம ப்ராப்தி ஏற்பட்டு விடுகிறது என்றுதான் மேற்சொன்ன ச்ருதியின் அர்த்தமாகும். அந்த ச்ருதியர்த்தத்தை வால்மீகி மஹர்ஷியானவர் अतिकामया (𑌅𑌤𑌿𑌕𑌾𑌮𑌯𑌾) (அதிகாமயா) என்ற பதத்தால் காட்டியிருப்பதினுலும், அப்பதத்திற்கு கோவிந்தராஜீய வ்யாக்யானத்தில் காமத்தைத் தாண்டினவள் என்று அர்த்தம் வர்ணிக்கப் பட்டிருக்கிறபடியாலும், ஸீதையும் ராமனும் ஒன்ருக ஆகி ஆனந்தத்தை அனுபவித்தார்கள் என்றதற்கு, ஜீவ ப்ரும்ம ஐக்யாநந்தந்தான் பொருள் என்று ஏன் சொல்லக்கூடாது? ஆகையால் ப்ரும்மத்தினிடத்தில் அடைந்த ஜீவன் எந்த ஆனந்தத்தை அனுபவிப்பானே, அந்த ஆனந்தத்தின் பெருமைதான் கடைசி ச்லோகத்தால் ப்ரகாசிப்பிக்கப் படுகிறது.

ஆனால், ஜீவனுக்குத் தானே ப்ரும்மத்தினிடத்தில் போய்ச் சேர ஆசை ஏற்படும். ப்ரும்மத்திற்கு ஜீவனிடத் சேர ஆசை ஏற்படுமா? முன்சொல்லிய ச்லோகங்களால் ஸீதைக்கும் ராமனுக்கும் பரஸ்பர அனுராகம் இருந்ததாக வெளியாகிறதே. அதெப்படி இந்த வேதாந்த அர்த்தத் திற்கு ஒத்துவரும் என்று கேட்கக்கூடும். இது ஓர் சிறிய கேள்வியாகும். ஜீவனைக் காட்டிலும், ப்ரும்மத் திற்குத்தான் ஜீவனுடன் சேரவேண்டுமென்ற ஆசை அதி கம். அதாவது ஜீவனிடத்தில் ஒரு தோஷமுமிருக்கிறது; ஒரு குணமுமிருக்கிறது. ஸம்ஸாரித்வம் என்பது தோஷமா கும்; அபரோக்ஷத்வம் என்பது குணமாகும். அபரோ க்ஷத்வம் என்றால் ப்ரத்யக்ஷமாக பாஸிக்கின்றான் என் பதே. ப்ரும்மத்தினிடத்திலும் ஒரு தோஷமும் ஒரு குணமு முண்டு. அஸம்ஸாரித்வம் என்பது குணமாகும். பரோ க்ஷத்வம் என்பது தோஷமாகும். பரோக்ஷத்வம் என்பது ஒருவருக்கும் தென்படாமலிருப்பதே. பரோக்ஷத்வம் என்ற தோஷம் தொலைந்து எல்லோருக்கும் ப்ரத்யக்ஷமாக ஆகக்கூடிய ஸௌலப்யம் என்ற குணம் தனக்கு வரவேண் டுமானால் ப்ரும்மமும் ஜீவனோடு சேர்ந்துதான் ஆகவேண் டும். ஜீவனுக்கு ஸம்ஸாரித்வம் என்ற தோஷம் தொலைந்து, அஸம்ஸாரித்வம் (நித்யமுக்தத்வம்) என்ற குணம் தனக்கு வரவேண்டுமேயானால், ஜீவன் ப்ரும்மத்துடன் சேர்ந்துதான் ஆகவேண்டும். ஆகையால் ஜீவனுக்கும் ப்ரும்மத்திற்கும் பரஸ்பரானுராகம் உண்டு என்ற அர்த்தத்தைத்தான் ஸீதைக்கும் ராமனுக்கும் உள்ள பரஸ்பரானுராகத்தால், மஹர்ஷியானவர் வெளியிட்டார். அதனால் ஜீவப்ரும்ம ஐக்யந்தான் ப்ருக்ருத ச்லோகத்திற்கு அர்த்தமாகுமென்ப தற்கு அது ஒரு பாதகமாக ஆகாது என்பதை அறியவும். மேலும், ஸ்ரீமத் ராமாயணத்திற்கு வேதஸாரமாகிய காயத்ரீ என்ற மஹாமந்த்ரமே மூலச்ருதி என்பது எல்லோருக்கும் ப்ரஸித்தமானது. வால்மீகி மஹர்ஷி காயத்ரியினுடைய அக்ஷரங்களில் ஒவ்வொரு அக்ஷரத்திற்கும் 1000 க்ரந்தங்க

ளாக ராமாயணத்தை 24,000 க்ரந்தங்களில் செய்து முடித்தார். காயத்ரிதான் ராமாயணம் என்பதற்கு அத்தாக்ஷியாக, காயத்ரியின் முதல் அக்ஷரமான त (த) (த) காரத்தால் ஸ்ரீமத் ராமாயணமானது. ஆரம்பமாகி இருக்கிறது. பாலகாண்டத்தின் முடிவிலும், கடைசி ச்லோகத்தில் त (த) (த) காரந்தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் உபக்ரம உபஸம்ஹார ஐக்யரூப்யம் என்ற லிங்கத்தால் ஸ்ரீமத் ராமாயணமும் காயத்ரியும் ஒன்றுதான் என்பது ஸித்தமாகிறது. காயத்ரியோ ப்ரும்ம பரமான மந்த்ரம். காயத்ரியை உபதேசம் செய்வதற்கு ப்ரும்மோபதேசம் என்றல்லவா லோகப்ரஸித்தம் ஏற்பட்டிருக்கிறது! ராமாயணம் மாத்ரம் ப்ரும்மபரமில்லாமல் எப்படியாகும்? ப்ரும்மபரந்தான். ஆகையால் ஸீதையும் ராமனும் அனுபவித்த ஆனந்தம் ஜீவப்ரும்ம ஐக்யானந்தந்தான். ப்ராக்ருதமான ஆனந்தமல்ல. அப்ராக்ருதமான ஆனந்தம் என்று சொல்கிறபக்ஷத்திலும் ஒன்று परमं साम्यं उपैति (பரமம் ஸாம்யம் உபைதி) என்ற ச்ருதியினால் ஸாரூப்யானந்தமாகவோ, அல்லது ब्रह्मवित् ब्रह्मैव भवति (ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி) என்ற ச்ருதியினால் ஐக்யானந்தமாகவோதான் சொல்லவேண்டும் என்பது ஸித்தம்.

यो विष्णुःभुवि सूर्यवंशतिलकः यातो मुनेश्शिष्यतां
हत्वा दुष्टनिशाचरीं मखपतिः कृत्वा शिलां चेतनाम् ।
भङ्क्त्वा शैवमहद्धनुः भगवतीं भूयेस्सुतां जानकीं
स्वीकृत्यात्मवधूं विराजति विभुः सोनस्सदा रक्षतु ॥

𑌯𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌭𑍁𑌵𑌿 𑌸𑍂𑌰𑍍𑌯𑌵𑌂𑌶𑌤𑌿𑌲𑌕𑌃 𑌯𑌾𑌤𑍋

𑌮𑍁𑌨𑍇𑌶𑍍𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑌾𑌂

𑌹𑌤𑍍𑌵𑌾 𑌦𑍁𑌷𑍍𑌟𑌨𑌿𑌶𑌾𑌚𑌰𑍀𑌂 𑌮𑌖𑌪𑌤𑌿𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌶𑌿𑌲𑌾𑌂

𑌚𑍇𑌤𑌨𑌾𑌂 ।

𑌭𑌙𑍍𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌶𑍈𑌵𑌮𑌹𑌦𑍍𑌧𑌨𑍁𑌃 𑌭𑌗𑌵𑌤𑍀𑌂 𑌭𑍂𑌮𑍇𑌸𑍍𑌸𑍁𑌤𑌾𑌂

𑌜𑌾𑌨𑌕𑍀𑌂

𑌸𑍍𑌵𑍀𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌵𑌧𑍂𑌂 𑌵𑌿𑌰𑌾𑌜𑌤𑌿 𑌵𑌿𑌭𑍁𑌃 𑌸𑍋𑌽𑌸𑍍𑌮𑌾𑌨𑍍 𑌸𑌦𑌾

𑌰𑌕𑍍𑌷𑌤𑍁 ॥

யோ விஷ்ணு:புவி ஸூர்யவம்சதிலக: யாதோ முநேச்சிஷ்யதாம்
ஹத்வா துஷ்டநிசாசரீம் மகபதி:க்ருத்வா சிலாம் சேதநாம் ।
பங்க்த்வா சைவமஹத்தநு: பகவதீம் பூமேஸ்ஸுதாம் ஜானகீம்
ஸ்வீக்ருத்யாத்மவதூம் விராஜதிவிபு: ஸோஸ்ஸதா ரக்ஷது ॥

இத்துடன்
ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில்
பாலகாண்டம்
முற்றிற்று.

சுபம் ! சுபம் !! சுபம் !!!

ஸ்ரீமத்ராமாயணம்

(பாலகாண்டம்)

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	அதற்கு	இப்படி
1	2	सुकाकृतिं	सुखाकृतिं
5	20	ரகஸ்ய	ரஹஸ்ய
,,	28	ஷை	ஷை
6	23	வ்யஞ்சனே	வ்யஞ்ஜனே
,,	25	மகிஷி	மஹிஷீ
,,	28	ஷை	ஷை
9	27	ப்ரமம்	ப்ரும்மம்
13	14	ச்ருஷ்டி	ஸ்ருஷ்டி
17	6, 11, 12	ஸம்ஹிதை	ஸம்மிதை
20	1	स्वाधाय	स्वाध्याय
27	18	ஃஷ்லோக	ஂஶஂஶ்லோக
29	9	நிரோக:	நிரோதக:
33	5	ஸுஹத்	ஸுகத்
,,	11	கரொ	கரோ
,,	17	தகாரொ	தகாரோ
,,	23	ஸுஹத்	ஸுகத்
36	1	ராமொ	ராமோ
37	2	ஸுபாகு	ஸுபாஹு
38	16	ज्येष्ट	ज्येष्ठ
,,	,,	ஜெஷ்ட	ஜ்யேஷ்ட
42	14	ஹனும்டன்	ஹனுமானுடன்

பக்கம்	வரி	அதற்கு	இப்படி
58	7	ஸகஸ்ர	ஸஹஸ்ர
,,	17	ஸமஞ்சஸ	ஸமஞ்ஜஸ
,,	25	ச்ருங்வங்	ச்ருங்வங்
61	29	ஸாஹ	ஸாக
62	17	தெக	தேக
67	22	ஜாதெ	ஜாதே
69	10	ஹெது	ஹேது
70	12	த்வெ	த்வே
73	25	சிரு	ஸ்ரு
74	1	எத்	யத்
78	24	दयति	धयति
,,	,,	𑌦𑌯𑌤𑌿	𑌧𑌯𑌤𑌿
100	12	தலெ	தலே
,,	14	ஸமெதெந	ஸமேதே
126	11	ஸ்பாவ	ஸ்வபாவ
131	27	விஞ்சி	மிஞ்சி
136	20	नक्तं	नक्त
138	7	ஸம்	ஸிம்
153	24	विघ्वां	विद्वां
155	23	अम्यु	अभ्यु
,,	25	[illegible]	𑌸𑌹𑍍𑌯
156	2	𑌅𑌮𑍍𑌯𑍁	𑌅𑌭𑍍𑌯𑍁
159	16	த்ரய	த்ரவ்ய
160	29	अह रह जनादि	अहह धनादि
,,	30	खलुषयति	कलुषयति
,,	,,	चतुष्पदाद्यभिन्नाघ	चतुष्पदाद्यभिन्नान्
161	1	𑌅𑌹 𑌰𑌹 𑌜𑌨𑌾𑌦𑌿	𑌅𑌹𑌹 𑌧𑌨𑌾𑌦𑌿
,,	3	𑌖𑌲𑍁𑌷𑌯𑌤𑌿	𑌕𑌲𑍁𑌷𑌯𑌤𑌿
,,	,,	𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌦𑌾𑌵- 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾𑌵	𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌦𑌾𑌦𑍍𑌯 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾𑌨𑍍

பக்கம்	வரி	அதற்கு	இப்படி
161	5	அஹ ரஹ ஜநாதி	அஹஹ தநாதி
,,	6	சதுஷ்பதாக பிங்நாக	சதுஷ்பதாத்யபிங்நாங்
164	1	ளுடைப	ளுடைய
,,	28	பஸ்ப	பஸ்ம
165	6	ப்ருக்ரு	ப்ரக்ரு
167	1	ஸ்திரீயனுடைய	ஸ்திரீயினுடைய
,,	18	तावर्दशिरं	तावदेव चिरं
,,	19	𑌤𑌾𑌵𑌦𑍍𑌶𑌿𑌰𑌂	𑌤𑌾𑌵𑌦𑍇𑌵 𑌚𑌿𑌰𑌂
,,	20	தாவர்த்தசிரம்	தாவதேவ சிரம்
169	13	नशिष्मन्ते	नश्लिष्यन्ते
,,	14	𑌨𑌶𑌿𑌷𑍍𑌮𑌨𑍍𑌤𑍇	𑌨𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑍇
,,	15	நசிஷ்மந்தே	நச்லிஷ்யந்தே
170	25	காதிப	காதிர
,,	29	ஸம்கமனம்	ஸம்ஞுபனம்
171	30	ரஜித	ரஜத
173	32	गधा	गदा
174	2	𑌗𑌧𑌾	𑌗𑌦𑌾
175	18	देवा	देव
,,	20	𑌦𑍇𑌵𑌾	𑌦𑍇𑌵
,,	22	தேவா	தேவ
176	15	तपः	ततः
,,	17	𑌤𑌪𑌃	𑌤𑌤𑌃
,,	19	தப:	தத:
178	15	ப்ரோடா	புரோடா
178	16	प्राविर्भूतं	प्रादुर्भूतं
,,	18	𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌂	𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑍍𑌭𑍂𑌤𑌂
,,	20	ப்ராவிர்பூதம்	ப்ராதுர்பூதம்

பக்கம்	வரி	அதற்கு	இப்படி
179	20	वेदागंश्च	वेदाँश्च
,,	21	मुमुक्षुरिह	मुमुक्षुर्ह
,,	22	വെദാഗംശ്ച	വെദാംശ്ച
,,	24	മുമുക്ഷുരിഹ	മുമുക്ഷുർഹ
,,	25	വ്യവ്യെശ്	വ്യവശെശ്
,,	26	வேதாகம்ச்ச	வேதா(கு)ம்ச்ச
,,	28	முமுக்ஷரிஹ	முமுக்ஷுர்ஹ
180	20	मया	माया
,,	21	മയാ	മായാ
,,	22	மயா	மாயா
181	1	पडयिते	प ईयते
,,	2	പഠയിതെ	പ ംഠംയതെ
,,	3	அயிதே	ஈயதே
,,	5	पिस्सन्	पि सन्
,,	,,	अव्ययात्म	अव्ययात्मा
,,	,,	इश्वरोपि	ईश्वरोपि
,,	6	अवष्टम्य	अवष्टभ्य
,,	7	വിഷ്ണു	വി ഷ്ണു
,,	7	സവ്യയത്ഥ	സവ്യയാത്ഥാ
,,	,,	ഉച്ഛ്വണാ	ംഗംച്ഛ്വണാ
,,	8	സവഷ്ഉശ്	സവഷ്ഹശ്
,,	9	பிஸ்ஸந்	பி ஸந்
,,	,,	அவ்யயாத்ம	அவ்யயாத்மா
,,	,,	இச்வரோபி	ஈச்வரோபி
,,	10	அவஷ்டம்ய	அவஷ்டப்ய
,,	18	ப்ரஜா	ப்ராஜா
182	28	बिषमे	विषम
,,	29	വിഷമെ	വിഷമ

பக்கம்	வரி	அதற்கு	இப்படி
182	30	விஷமே	விஷம
184	4	பிரதா	ப்ரதா
187	கடைசி	पुत्र	पुत्रं
196	23	याति	यति
,,	,,	யாதி	யதி
,,	,,	யாதி	யதி
197	9	தைத்ரீ	தைத்திரீ
202	11	நிரப்பினவனுயும்	நிறைந்தவனுயும்
205	9	சக்ஷுரே	சக்ஷுரி
,,	13	ஸௌலப்யத்தை	ஸௌரப்யத்தை
208	1	தபத்தை	தபஸ்ஸை
,,	12	அடைத்தாள்	அடைந்தாள்
209	1	सौ श्रेयान्	स उश्रेयान्
,,	,,	व्याय	जाय
,,	2	ஸௌ	ஸ உ
,,	,,	வ்யாய	ஜாய
,,	,,	ஸௌ	ஸ உ
,,	,,	வ்யாய	ஜாய
210	4	ஸுசிப்பி	ஸுசிப்பி
212	5	ரேந்த்ரியம்	ரிந்த்ரியம்
,,	9	ஷி	ஷி
216	12	ஸாம்ப்ரதிகி	ஸாம்ப்ரதிக
,,	கடைசி	ஆந்த்ர	ஆந்தர
219	7	வ்யங்ய	வ்யங்க்ய
,,	11	ஷி	ஷி
224	26	ப்ருக்ரு	ப்ரக்ரு
225	16	गर्भपूताः	गर्भभूताः
,,	,,	மஹூவஸு	மஹூஹஸு
,,	18	தானமாக	தனமாக
225	28	யஞ்சேந	யக்ஞேந
226	15	ராஜஜுத்கு	ராஜஜுக்கு

பக்கம்	வரி	அதற்கு	இப்படி
226	18	देवा	दैवा
,,	20	ஶெவா	ஶைவா
,,	22	தேவா	தைவா
231	1	அஞ்சலி	அஞ்ஜலி
,,	16	சுச்பே	சுசுபே
234	21	[illegible]	[illegible]
240	1	யுக்தொ	யுக்தோ
242	26	अत एष अन्त	अथ य एषोऽन्त
,,	27	[illegible]	[illegible]
,,	28	அத ஏஷ அந்த	அத ய ஏஷோந்த
245	16	மந்த்ரத்தை	மந்த்ரத்தில்
246	10	[illegible]	[illegible]
250	12	த்வேஷியே	த்வேஷியோ
,,	24	ப்திஷ்டை	ப்ரதிஷ்டை
253	12	[illegible]	[illegible]
260	1	[illegible]	[illegible]
262	29	அநந்தம்	அநந்தன்
,,	32	ஷி	ஷி
263	5	ஷி	ஷி
273	16	इच्चेत्	इच्छेत्
,,	,,	[illegible]	[illegible]
,,	17	இச்தேத்	இச்சேத்
282	26	[illegible]	[illegible]
409	13	अवष्टब्ध:	अवष्टभ्य
443	17	ப்ரச்ர	ப்ரஸ்ர
465	20	शवोभूत्	शिवोभूत्
,,	22	ஶவொ	ஶிவொ
,,	24	சவோ	சிவோ
466	25	भलीयत्वं	बलीयस्त्वं

பக்கம்	வரி	அதற்கு	இப்படி
466	25	ஹ்ரீயக்ஷ்வம்	ஸ்ரீயஸ்ஷ்வம்
,,	26	பலீயத்வம்	பலீயஸ்த்வம்
467	7	पतत	पतित
,,	8	வதத	வதித
,,	9	பதத	பதித
468	24	मेवहरि	एव हरिः
,,	25	மெவ ஹரி	ஏவ ஹரி:
,,	26	ஹர மேவ	ஹர ஏவ
470	11	மண்யத்தை	மாண்யத்தை
486	29	जायत	ऽजायत
,,	30	ஜாயத	உஜாயத
487	1	ஜாயத	அஜாயத
501	5	ததர்ச	ததர்ச ச
533	9	திஷ்டீ	திஷ்டீ
535	2	वैद	वेद
,,	,,	வெத	வெத
,,	3	வைத	வேத
536	20	अश्वः	अश्वः
,,	19	ஈச்வரனை	ஈச்வரமான
537	1	भवति	भवत्
,,	2	ஹவதி	ஹவக்
,,	3	பவதி	பவத்
538	26	லொகா	லோகா
,,	28	दिव्यत	दीव्यत
,,	,,	திவ்யத	தீவ்யத
,,	,,	திவ்யத	தீவ்யத
539	22	तद्रेश्यं	तदद्रेश्यं
,,	23	தத்ரேஶ்யம்	ததத்ரேஶ்யம்

பக்கம்	வரி	அதற்கு	இப்படி
539	24	தத்ரேச்யம்	ததத்ரேச்யம்
540	22	आत्मे	आत्मै
540	23	ஶூத்ரெ	ஶூத்ரை
,,	24	ஆத்மே	ஆத்மை
565	29	தாம	தர்ம
568	2	ஸ்தாஸெஶ்ரீ	ஸ்யாஸெஶ்ரீ
571	21	சம்கவ:	சங்கவ:
571	28	ஞான	ஜான
578	1	देव	दैव
580	16	பச்சா	பச்சாத்
586	21	साघ्यं	साघ्यं
,,	23	ஸாய-ஶ்ரீ	ஸாவ-ஶ்ரீ
,,	25	ஸார்த்ய	ஸார்க்ய
592	17	नरश्रेष्टा	नरश्रेष्ठ
,,	19	ஷா:	ஷ°
,,	21	ஷ்டா:	ஷ்ட
595	24	पुंचान्	पुत्रान्
596	1	वाक्याक	वाक्यक
610	2	ஶாஶ்வயெ	ஶாஶ்வயெ
611	3	ஶ்ரக்வா	ஶ்ருக்வா
612	26	வ்ரணாஸாஶெ	வ்ராஸாஶெ
615	21	कमणै	कर्मणैव
,,	22	ஹிஜ்ஞம்	ஹிஜ்ஞம்
622	14	செளபாக்யம்	ஸெளபாக்யம்
623	22	द्वय	द्य
,,	23	ஆய	வ்ஶ்ரீ
,,	24	த்வய	த்வ்ய
624	9	ஹவெத்ள	ஹவெஊள
635	26	இக்ஷ்வாகூணும்	இக்ஷ்வாகூணும்

பக்கம்	வரி	அதற்கு	இப்படி
636	21	मति	मतिः
,,	22	𑌮𑌤𑌿	𑌮𑌤𑌿𑌃
,,	23	மதி	மதி:
637	7	விதா:	விதா
646	30	ப்ராஜாபத்யா	ப்ராஜாபத்ய
650	15	अभ्यर्चेय	अभ्यर्च्य
651	10	உச்சயதே	உச்யதே
652	6	भित्वाह	भित्वाच
655	12	ब्रह्मण	ब्राह्मण
,,	13	यैक	यैकं
,,	17	ப்ரஹ்மண	ப்ராஹ்மண
658	25	प्रंथम	प्रथम
661	5	सीता	सीतां
663	8	லைவ	லைவ
670	13	க்ருண்ஹீஷ்வ	க்ருஹ்ணீஷ்வ
,,	1	गृण्हीष्व	गृह्णीष्व
,,	,,	ஷி	ஷி
670	15	कन्यया	कन्यया ’।
,,	,,	शूद्रयातु	शूद्रयातु,
,,	,,	वर्णोत्कृष्ठ	वर्णोत्कृष्ट
,,	17	த்ரூஷ	த்ரூஷ
671	6-23	670 ம் பக்கத்திலுள்ளதுபோல் திருத்தம்	गृह्णीष्व க்ருஹ்ணீஷ்வ
672	6	कामयेता	कामयेत
,,	7	कामेयता	कामयेत
,,	8	காமயேதா	காமயேத
,,	9	மயேதா	மயேத

பக்கம்	வரி	அதற்கு	இப்படி
672	10	காமயேதா	காமயேத
,,	11	காமேயதா	காமயேத
673	3, 22	गृण्हीष्व	गृह्णीष्व
,,	,, ,,	க்ருண்ஹீஷ்வ	க்ருஹ்ணீஷ்வ
674	5	गृण्हीष्व	गृह्णीष्व
,,	7	க்ருண்ஹீஷ்வ	க்ருஹ்ணீஷ்வ
675	16	तता	तथा
,,	17	तच्छिद्रो	तच्चितो
,,	18	ததா	தயா
,,	19	ஹூதொ	ஹூதொ
677	15	बिंभत्रिशिष्टा	बिंब त्रिशिष्टा
,,	16	पादिभूता	पाधिभूता
,,	18	பிம்ஹவிஶிஷ்டா	பிம்ப விஶிஷ்டா
,,	19	வாதிஹூதா	வாயிஹூதா
,,	20	யெத்யுஅ்யதெ	யெதயுஅ்யதெ
682	18	இல்லாது	இல்லாத
684	2	गृहासा	गृहाण
,,	,,	க்ருஹாஸா	க்ருஹாண
,,	3	க்ருஹாஸா	க்ருஹாண
,,	5	इच्छा	इच्छ
,,	,,	இச்சா	இச்ச
,,	,,	இச்சா	இச்ச
,,	6	சமாஸ	ஸமாஸ
,,	20	भदन्ते	भद्रंते
,,	,,	பதந்தே	பத்ரம்தே
,,	,,	பத்ரங்தே	பத்ரம் தே
,,	25	प्रती	प्रति
,,	,,	ப்ரதீ	ப்ரதி

பக்கம்	வரி	அதற்கு	இப்படி
684	26	ப்ரதீ	ப்ரதி
685	7	गृण्हीष्व	गृह्णीष्व
,,	,,	𑌗𑍃𑌣𑍍𑌹𑍀𑌷𑍍𑌵	𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌷𑍍𑌵
,,	,,	க்ருண் ஹீஷ்வ	க்ருஹ்ணீஷ்வ
,,	11	पक्षौ	प क्षौ,
,,	,,	संसारार्त्त	संचारार्थं
,,	,,	प्रकप्लितौ	प्रकल्पितौ ।
,,	12	रत्यर्त्त	रत्यर्थ
,,	,,	ज्ञान कर्मणि	ज्ञानकर्मणी ॥
,,	13	𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌰𑍍𑌤𑌂	𑌸𑌞𑍍𑌚𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑌂
,,	,,	𑌕𑍢𑌪𑍍𑌤𑍌	𑌕𑍢𑌪𑍍𑌤𑍌 ।
,,	14	𑌰𑌤𑍍𑌯𑌰𑍍𑌤	𑌰𑌤𑍍𑌯𑌰𑍍𑌥
,,	,,	𑌰𑌤𑍍𑌯𑌰𑍍𑌤𑌂	𑌰𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂
,,	,,	𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌣𑌿	𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌣𑍀
,,	15	ஸம்ஸாரார்த்தம்	ஸஞ்சாரார்த்தம்
,,	,,	கல்பிதள	கல்பிதள ।
,,	16	கர்மணி	கர்மணீ ॥
686	10	गृण्हीष्व	गृह्णीष्व
,,	,,	𑌗𑍃𑌣𑍍𑌹𑍀𑌷𑍍𑌵	𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌷𑍍𑌵
,,	,,	க்ருண் ஹீஷ்வ	க்ருஹ்ணீஷ்வ
,,	22	கர்மத்தை	காமத்தை
687	10	गृण्हीष्व	गृह्णीष्व
,,	,,	𑌗𑍃𑌣𑍍𑌹𑍀𑌷𑍍𑌵	𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌷𑍍𑌵
,,	,,	க்ருண் ஹீஷ்வ	க்ருஹ்ணீஷ்வ
692	26	अरचरेत्	आचरेत्
697	27	वन्दश्च	बन्धंश
700	18	ஹிமோத்	ஹிமவத்
701	3	मुक्ता	मक्ता

பக்கம்	வரி	அதற்கு	இப்படி
701	7	𑌉𑌤𑍍𑌕𑌾	𑌉𑌕𑍍𑌤𑌾
,,	11	முத்கா	முக்தா
703	29	அஞ்சலி	அஞ்ஜலி
704	18	शपतं	शपथं
,,	22	𑌭𑌵𑌤𑌂	𑌭𑌵𑌥𑌂
705	29	ஹிமோத்	ஹிமவத்
714	26	यत्वया	यत्त्वया
,,	27	𑌯𑌤𑍍𑌵𑌯𑌾	𑌯𑌤𑍍 𑌤𑍍𑌵𑌯𑌾
719	8	𑌉𑌦𑍍𑌧𑍃𑌯𑌃	𑌉𑌦𑍍𑌧𑍃𑌯𑌃
721	8	அபகர்ஷத	அபகர்ஷதா
,,	14	हरयेव	हर एव
,,	,,	हरि	हरिः
,,	17	𑌹𑌰𑌯𑍇𑌵	𑌹𑌰 𑌏𑌵
,,	,,	𑌹𑌰𑌿	𑌹𑌰𑌿𑌃
,,	,,	ஹரி	ஹரி:
723	2	யக்ஷகர்	யக்ஷர்
724	29	जामदम्नयो	जामदग्न्यो
725	26	𑌮𑌹𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃	𑌮𑌹𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃
,,	27	மஹத்யுதி:	மஹாத்யுதி:
728	12	ஸ ஷை	ஸ்நுஷை
,,	29	சிச்ரூஷை	சுச்ரூஷை
731	20	गुणाच्छा	गुणाच्चा
,,	28	𑌗𑍁𑌣𑌾𑌚𑍍𑌛𑌾	𑌗𑍁𑌣𑌾𑌚𑍍𑌚𑌾
732	17	சிச்ரூஷை	சுச்ரூஷை
734	16	ஷ்டி	ஷ்டி
,,	18	ஷ்டி	ஷ்டி
,,	31	ஆஸ்தப	ஆஸ்பத
735	20	अद्वैदं	अद्वैधं
,,	,,	उपवर्तव्यः	उपचर्तव्यः

பக்கம்	வரி	அதற்கு	இப்படி
735	20	तथप्येष:	तथाप्येष:
,,	21	யயஶ்ரீ	யஜ்ஶ்ரீ
,,	22	ஸ்வைத்தம்	ஸ்வைஷயம்
,,	,,	உவவதஷ்வ்ருஃ	உவஅதஷ்வ்ருஃ
,,	,,	தயஶெவ்ருஷஃ	தயாவெவ்ருஷஃ
,,	24	உபவர்தவ்ய:	உபசர்தவ்ய:
,,	,,	ததப்யேஷ:	ததாப்யேஷ:
738	10	ப்ரகாரஞ்	ப்ரகாசம்
739	12	तच्छ	तत्
,,	,,	தஜ்ஜு	தஸ்
,,	,,	தச்ச	தத்
		பதத்தால்	என்ற சப்தத்தால்
741	2	ப்ருக்ருத	ப்ரக்ருத
,,	6	தத்மஸி	தத்வமஸி
743	17	ச்ருதிய	ச்ருத்ய
744	27	ப்ருக்ருத	ப்ரக்ருத
745	16	ஸாம்யம்	ஸாத்ம்யம்
,,	17	உவதை	உவைதி
,,	24	भूयेस्सुतां	भूमेस्सुतां

205-ம் பக்கத்தில் 11-வது வரியில் பகவானுடைய என்ற வார்த்தைக்குப் பிறகு, "திவ்யகுணகணங்களையும், மஹிமையையும் வர்ணிக்கிற புராண ச்ரவணாநந்தானுபவமும், த்வகிந்த்ரியத்தால் பகவானுடைய" என்ற வார்த்தைகளை சேர்த்துக்கொள்ளவும்.

இந்த புஸ்தகத்தில் வந்துள்ள ச்லோக, ப்ரமாண வசனங்களின்

ஸூசிகை.

	பக்கம்		பக்கம்
अ		अप्सुर्निर्मथना	482
अग्निषोमीय	372	अभयं सर्वं	296
अजोपिस्सन्	181	अभिजनविद्या	27
अण्डजं	97	अलंकारोहि	419
अत एष	242	अशरीरं	251
अत्रपूर्वं	247	अष्टवर्षा	624
अथ राजा	266	अष्टवर्षं	147
अथविष्णु	398	असमाक्षे	392
अदृष्टवचनं	74	असज्ञात	517
अदो मूलाः	556	असौ वा	326
अधर्मे सफलं	350	असंदेशात्तु	519
अर्घो वा	277	अस्यसंकल्प	328
अधिकंमेनिरे	718	अस्यांहव्यं	554
अनादि	615	अस्वर्ग्यं	86
अन्यस्वं	401	अहल्या द्रौपदी	508
अन्तःप्रविष्टः	689	अहं नियमं	288
अपुत्रस्य	283	अहं वेद्मि	292, 298, 310, 329, 725
अप्रमत्त	510	अहं हि सर्वं	152, 309, 409
अप्रमेयबलं	559	अहिंसा परमो	641
अप्रमेयंहि	135	अहिंसाप्रतिष्ठायां	88, 641
अप्यहं	643		
अप्यहं जीवितं	306		

	பக்கம்
आ	
आकृष्टं	617
आचार्याद्वैव	18
आच्छाद्य	654
आदिराजः	108
आद्योरा	259
आयत्तमग्निहोत्रं	554
आर्यावर्ते	449
आसन्नंब्रह्मणः	21
आहूय	648
इ	
इच्छया	651
इच्छामात्रं	328, 530
इन्द्रोमायाभिः	181
इमौ कुमारौ	493, 527
इमौ मुनी	133
इयं अपरिच्छिन्न	634
इयं सीता	621, 674, 688
इहसन्तो	iii
इहैवतैर्जितः	273
इक्ष्वाकुवंश	35
इक्ष्वाकूणां	635
ई	
ईशानःसर्व	469
उ	
उत्कृष्टवन्दनं	159
उत्कृष्टाय	663
उदकं पिण्डदानं	457
उद्वहेद्यस्तु	624
उदारवृत्तार्थपदैः	105
उपश्लोक्यस्य	120
उपस्पृश्योदकं	113

	பக்கம்
ऊ	
ऊनद्विवर्षा	629
ऊनषोडश	317, 324, 325, 328, 623
ऋ	
ऋतं पिबन्तौ	528, 529
ए	
एकग्रहोच्चजातस्य	189
एकमातृ	697
एकस्मिन्	698
एकस्मिंस्तु	696
एकस्वादु न भुञ्जीत	139
एकान्हा	696
एकामूर्तिः	102
एकोदेवः	528
एकं गोमिथुनं	649
एतदेव	556
एतस्मिन्नन्तरे	142, 173, 224, 305, 725
एनां राघव	361
एवमुक्त्वा	487
एवं विष्णुः	141
एषविग्रहात्	330, 333
एषसर्वेश्वरः	741
एषह्येवा	330, 333
एषोस्त्रान्	325
ऐ	
ऐकाग्र्य	205
ओ	
ओं भगवते	245
ओमित्येतत्	214

	पक्कम्
क	
कर्कटे लग्नके	194
कथ्यते परमं	285
कर्णाभ्यां	473
कर्मणि विरोध	389
कर्मणैव हि	615, 637, 683
क्रयक्रीतात्तु	662
कविस्सुगीताः	195
कुमारसंभवश्चैन	442
कृतोद्वाहमिति	354
कृतं गुरुवचस्त्वया	410
कृतार्थोस्मि	408
कृत्स्नं	129
कोब्राह्मणैः	274
कौमारे	692
कौसल्याऽजनयत्	187, 220, 225
कौसल्याशुशुभे	208, 231
कौसल्यसुप्रजाराम	344, 350
काकन्तञ्च	126
काकपक्षं	319
काकोनकाकः	511
कान्तःप्रियवपुः	193
कामयेत्वां	16
कामार्थगुण	113
कारणापायात्	575
कार्यस्य	287
काव्यं यशसे	106
काव्यं रामायणं	126
काव्यार्थसूचनं	67
काव्यालापांश्च	119, 120
काव्याश्रय	121
किरार्थंच	493
किंतुचित्तं	636

	पक्कम्
किष्किस्तु	78
ग	
गगनस्पर्शनो	489
गच्छतस्तस्य	501
गर्भाष्टमे	629
गर्भे बिभर्ति	12
गयायां	425
गायत्र्याख्या	425
गुणाधिकैः	246
गुरुशापकृतं	584
गुरोरनुग्रहेण	233
गुशब्दः अन्धकार	29
गृहचिन्तायां	267
गृहेषु	187
गोभिः	633
गौतमो	632
ज्ञ	
ज्ञातिभ्यो	651
ज्ञानन्तु	685
ज्ञानात्पिण्डात्	75
च	
चतुर्ग्रहोच्चे	189
चतुरो	655
चतुर्थे गुण......	141
चत्वारो	658
चण्डालदर्शनं	575
चण्डालादुदकात्	457
चैत्रे मधुरभाषी	192
चोदन	627
छ	
छत्रिणो	529
छिद्रं हि	153

	பக்கம்		பக்கம்
ज		तमेतं	335, 147, 225
जन्मकर्म	203, 230	तमोद्वारं	164, 237
जरामरण......	301	तया स राजर्षि	738
जानामि धर्मं	689	तरति ब्रह्महत्यां	162
जीव ईशो	675, 689	तस्मात् न्यास	30
जीवतोः	72, 596	तस्माच्छ्रीराम	262
जृम्भितं	713, 720	तस्य चिन्तयामास	276
ज्येष्ठ भ्राता	38	तस्यतावदेवशिरं	167
ज्येष्टं रामं	253	तस्य धीराः	299
तं		तस्य भूयो	731
ततश्च द्वादशे	187	तस्य यथा	496
ततस्तु तौ रामवच	138	तस्य व्यतिक्रमात्	158
ततः परशुरामस्य	724	तस्याश्च	731
ततो रावण	690	तान्नहिंस्यात्	558
ततो वै यजमानस्य	178	तामापतन्तीं	367
तत्त्वज्ञापन	467	तां वृणीत	376
तत्रदेवर्षि गन्धर्व	464	तिर्यङ्क्ष्वमां	559
तत्प्रेम आत्मार्थं	309	तेन ब्रह्म	538
तत्त्वमसि	315, 742	तेजसो	586
तदक्षयं	517	तेजसां हि	296
तदेतत्	567	तेषां	656
तदंबुपतितं	466	तेषां जन्म	263
तदाश्रमपदं	404	तेषां तेजो	586
तद्विद्धि प्रणिपातेन	30	तेषां त्रयः	659
तप आलोचने	19	त्रयः शंकवः	571
तपः पद्मपलाशाक्षः	176	त्रिपुरघ्नं	714
तपस्वाध्याय	17	त्रीन् क्रमान्	398
तपो ब्रह्म	21	त्रैलोक्य	435
तपो ब्रह्मेति	32	त्यजत्येकं	446
तपोमयं	395	त्वन्मायया	717
तपो विद्याच	19		
तमग्निमग्निः	146		

	பக்கம்
त्वदंघ्रिस्पर्शनात्	501
त्वं गति	481
त्वं गतिः परमादेव	175
त्व चैव	412
द	
दत्वा भूमिं	400
ददर्शच महाभागां	501
दशस्वपि	209
दशैव	665
दर्शश्च	556
द्वयष्टवर्षो	623
द्वयेहिकवयः	107
द्विग्रहोप्येतु	189
दीर्घमायुः	605
दीर्घवैरी	192
दुष्करंतच्च	419
दुर्लभस्यच	558
दुर्लभंत्रयमेवै	69, 226
दुःखेन	347
दृढसौहृदः	191
देवगन्धर्वः...	143
देवैस्तदा	719
देशकाल	641
दैवमेवापरं	578, 582
दैवाधीनं	234
दैवीह्येषा	674
दैवेन	582
ध	
धर्मशास्त्र...	56
धर्मविरुद्धो	627

	பக்கம்
धिग्बलं	567
धूर्त रजस्वलां	513
न	
न कञ्चन	549
न कन्यायाः	661
न कुर्यान्	612
न चक्षुषा	679
न तद्भासयते	541
न तत्सूर्यो	541
न तत्समश्चा...	327, 528
न तस्य	296
न तेन जन्म...	167
न परित्याग	554
न प्रदोषे	254
न मे द्वेष्योऽस्ति	403
न बलं	559
न ब्राह्मणो...	247
नरश्चिरायुः	201
नरामः	639
नरं वर्षीयांसं	81
न लोका	435
न वा अरे	316
नष्टद्रव्य	282
नास्त्रियो हन्तव्यः	369
नहि ते	362
नहिंस्यात्	372
नह्येनां	361
नह्यम्मयानि	323
नारदो नाशयन्...	28
नालं वा	480

	பக்கம்
नाहं अर्थपरो	iii, 260
नाहं प्रवक्ष्ये	704
नित्ययोः	388
नित्यान्नदाता	507
नियन्ताय	296
निवेशयित्वा	280
निर्वीर्यो	724
निहतस्यच	154
निहत्य तां	368
नृशंसं	362
नैकस्य हेतोः	660
नैनं अन्यः	336
न्यायेनार्जन	548
प	
पञ्चसुगृहेषु	204, 206
पञ्चानांतु	657
पंञ्चोच्चलोकनायकः	194
पटन्द्विजो	52
पतिव्रतातु	424
पद्मदुल्य	319, 527
पद्मपत्रविशालाक्षौ	493
परमं साम्यं	542, 745
परमात्मा	468
परमार्थप्रणीतत्वं	117, 118
परस्परस्य	527
परित्राणाय	236
पश्यामि देवान्	396
पक्षीतार्क्ष्यः	339
पाणिग्रहण	671
प्रगृह्य विपुलं	180

	பக்கம்
प्रत्यक्ष	632
प्रदक्षिण समेतेन	100
प्रणवो धनुः	535, 613
प्रनष्टस्य	271
प्राचेतसेन	97
प्रायेण हि	592
प्रातर्धूतप्रसंगेन	121
प्रियातु	731
पापानां वा	128
पितापुत्रेण	177
पिता हि	417
पूर्वा सन्ध्या	349
ब	
बालो द्वादश	318
बाहुच्छायां	409
बीजबिन्दु	123
ब्रह्मविद	569
ब्रह्मवित्	745
ब्रह्मर्षे	605
ब्रह्मर्षेस्त्वं	606
ब्रह्मैवेदं सर्वं	540
ब्रह्मैव सन्	542
ब्राह्मणस्य	535
ब्राह्मणोऽस्य	486
ब्राह्ममस्त्रं	660
ब्राह्मो	645
ब्राह्मादि	658
ब्राह्ममुहूर्ते	427
भ	
भगवन्	447
भवाङ्गपतितं	47;

	பக்கம்
भवेन धृतत्वात्	467
भिक्षोदरः...	697
भूषयन्ताविमं	527
भ्रातृव्य	698
म	
मच्छन्दाने:	103
मन्त्रग्राम	341
मनो बुद्ध्याभिमाने	100
मर्त्यावतारस्त्विह	238
मत्स्यः	308
मम मद्भक्त	392
मम ममकारं	681
महतामपि	524
महद्भिःबोधितं	98
मातर्बलं	343
मातर्मैथिलि	126
माताचैव	626
मातापुत्रस्य	34
मानिषाद	62
माभूत्सकालः	417
मायां	676
मायामयीमिव	180
मित्रभावेन संप्राप्तं	136
मित्रभावेन	303
मित्रे	340
मिथिलायां	637
मुक्ताविद्रुम	701
मूलप्रकृति	674
मैथिलस्य	412
मोक्षमिच्छेत्	273, 669
मौर्वी	716

	பக்கம்
य	
य एषो अन्तरादित्ये	211, 325, 496, 534
यज्ञविघ्नकरं	317
यज्ञशिष्टा	428
यज्ञेच	649
यज्ञो अनृते	577
यज्ञो दानं	593
यज्ञो वै विष्णुः	409
यच्छौच निस्सृतं	465
यतो वा	311, 682
यत्कृते	595
यत्कृतकं	517
यत्तदद्रेश्यं	539
यदृच्छयैव	493, 527
यदेतत्	435
यद्ब्राह्मणश्च	299
यथाखे	685
यथा अमृतस्य	271, 275
यथा पुष्कर पलाशे	169
यथावर्षमनूदके	279, 282
यथा सदृशदारेषु	284
यदा हर्षो	284
यदधीतं	24
यदन्तरानुवृत्तं	124
यदा यदा हि	36, 155, 706
यदा सर्वे	743
यदि कामयेत	672
यद्यप्येषः	735
यद्यस्य	609
यमिह कारुणिकं	1
यशस्विनः	109

	பக்கம்		பக்கம்
यस्मिंस्तु	729	वरायुध धरौ	527
यस्मिन्सर्वाणि	166	वसिष्टे	560
यस्यज्ञान	19	वस्तुनः सति विच्छेदे	124
यस्यै देवतायै	385	वस्तुलाभकरो	33
यान्यस्माकं	516	वाक्पतौ	190, 206, 207
यान्ति न्यायप्रवृत्तस्य	240	वाच्यातिशायि	687
यावान्नलज्जिताङ्गानि	628	वायुभक्षनिराहारा	502
युवास्यात्	538	विधिशिव	294
ये चैनं अभि	393	विद्यया ब्राह्मणः	663, 671
ये नखाः	547	विवाहश्च	327, 636
येन जातानि	311	विशेषधर्मप्रकारक	430
योऽयं	741	विश्वामित्रो	611
यो ब्रह्माणं	142, 179, 538	विश्वामित्रः	704
यो विष्णुः	745	विष्णवंघ्रिणा	432
यो वेदादो	212	वीर्यशुल्कां	661
यो सावसौ	326	वृद्धाः	537
र		वेदवेद्ये	67, 1, 211
रमन्ते	253, 614, 740	वेदानां	23
राघवत्वे	70, 327	वेदान्तगो	57
राजीवलोचनः	319, 325	वेदान्तवित्	191
राज्यभारनियुक्तानां	362	वेदाहमेतं	294
रामस्तु	731	वैकुण्ठे तु	1
रामो द्विः	640	व्रतंमे	289
रामो बाहु बलं	617	**श**	
रामो रतिकरः	319	शक्तिर्निपुणता	107
व		शरः क्षत्रिय...	670
वचनं कौशिक	410	शराः	336
वज्रहस्तः	387, 388	शरीरे तव	395, 726
वर्तमानसामीप्ये	305, 307	शापदग्धा	501, 513
वत्स राम	615		
वनवासो	640		

	பக்கம்
शापं श्रुत्वैव	97
शिवस्य हृदयं	49, 723
शिवःशक्त्यायुक्तो	239
शुद्धसत्व	671
शुल्केन	662
शोकः श्लोकत्वं	130
श्रवणं कीर्तनं केलि	518
श्रवणं कीर्तनं विष्णोः	516
श्रावयेच्चतुरो	54
श्रियः कमलवासिन्या	262
श्रीमन्नारायणचरणं	148
श्रीरामः प्राकृतां	97
श्रीविष्णोः	141
श्रुतिशत	162
श्रोतुमिच्छामि	148

ष

षडानुपूर्व्या	655

स

स उश्रेयान्	297
सकारः	676
सकृदेव	232
सत्यमापः	300, 301
सत्येपरं	302
सत्ये समुद्र	302
सत्यंज्ञानमनन्तं	197
सत्सङ्गो	276
सत्वं	393
सदृशं चेष्टते	626
स भावः	539
तिश्रात श्रवणौ	143

	பக்கம்
समश्चायं पुरुषे	326
संकल्पादेवतु	328
समासमाभ्यां	182
सर्गप्रबन्धः	118
सर्गबन्धो	110, 118
सम्यक्ज्ञानः	112
सर्वदाप्राप्स्यसे	151
सर्वतः	537
सर्वलक्षणसंयुतं	251
सर्वासां	115
सर्वस्वमेतत्	554
सर्वं जगत्कारणत्वे	312
सर्वंखल्विदं	312
सवितृमण्डल	242
सशरीरेण	571
सहधर्मं	654, 664
सहयज्ञाः	
सहस्रशीर्षाः	537
सहिष्णुः गूढवृत्तिः	193
सहैवसन्तं	336
सहोभौ	650, 654
सा ततस्तस्य	513
सा तस्मिन्	467
सा पृष्ठतः	612
सीता	633, 675
सुतं पतन्तं	520
सुप्तां मत्तां	652
सृष्ट्वा स्वतपसा व	512
सो अकामयत...	395
सो अन्वेष्टव्यः	740
सो अङ्ग	294

	பக்கம்		பக்கம்
संयोग	654	स्वीय	719
स्त्रीचेति	370	स्वे महिम्नि	539
स्त्रीणां	629	ह	
स्त्री संज्ञिनां	238	हत्वा छित्वाच	652, 659
स्वपुत्र	290	हरिरेव	470
स्वहिंसापरां	488	हस्तप्राप्तमहं	584
स्वाध्यायप्रवचनाभ्यां	21	हृदयस्याग्रे	170
स्वाध्यायात्	20	क्ष	
स्वाध्यायान्न माप्रमद	20	क्षमादानं	419
स्वाहाकार	554	क्षान्तं क्षमावतां	419